T. 1363

# நவீன தமிழ் அகராதி

புரசைபாக்கம், தமிழ்ப்பண்டிதர்

சீ. கிருஷ்ணசாமிப்பிள்ளை அவர்கள்

தொகுத்தது

சென்னை

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1935

ஜிஸ்தர் செய்தது] [விலை 1-8-0 ரூபாய்

# முகவுரை

போராற்றல் பேரறிவு பேரருளுமுடைய முழுமுதற்கடவுள் உண்டாக்கிய ஓரறிவுமுதல் ஐயறிவு ஈருகவுடைய பல்வேறு உயிர்களனைத்திலும் ஐம்பொறி யுணர்வோடு மனவுணர்வுமுடைய மக்கள், தாமுளுற்றிய நல்வினைப்பயனுக இவ் விந்தியநாட்டின் திரு வேங்கடச்சிலம்பை வடவெல்லையாகவும், குமரியாற்றைத் தென்னெல்லையாகவும், தீம்புனற் பௌவத்தைக் குடக்கிலும் குணக்கிலும் எல்லையாகவுடைய தமிழகத்தில் தமிழராகத் தோன்றி ஒலிவடிவோடு வரிவடிவினையுமுடைய தமிழ்மொழியை வழங்கிவருகின்றனர். உலகின்கண்ணுள்ள மன்பதை பேசுமொழிகள் பல உளவேனும் அவற்றுள் மக்கள் அல்லனவற்றை ஒரீஇ நல்லனவற்றைத் தழுவித் தூய ஒழுக்கத்திலொழுகவும், தங்களறிவுக் கண்கொண்டு அறியாமையாகிற பேரிருளை யோட்டி ஆண்டவனின் உண்மைநிலையை உணரவும், இன்னும் அவர்கள் இம்மையில் அறம்பொருள் இன்பத்தோடு மறுமையில் அழியாப் பேரின்பத்தையும் எளிதிலடையச்செய்யும் வன்மையுமுடைய மொழிகளே உயர்திறத்து மொழிகளென அறிவுடையோரால் போற்றப்படுவனவாகும். அங்ஙனம் மதிப்புறும் மொழிகளுள் நமது தமிழ்மொழியொன்றே ஒப்புயர்வற்றிருக்கிறதென்பதிற் சிறிதும் ஐயுறவில்லை.

ஏனெனில் இனிமையுடையது தனித்தது என்கிற பொருள்கள் படநிற்கும் அமிழ்தினுமினிய நமது **செந்தமிழ்** என்னும் நங்கை தவத்தில் மிக்க அகத்தியர், மன்றுளாடிய கண்ணுதலோன், மஞ்ஞையூர்ந்த முருகவேள், என்று மிறவா மார்க்கண்டேயன் உள்ளிட்ட செந்நாப்புலவர்களால் சங்கமிருந்து வளர்த்தமையானும்,

இறைவனைப்போல் குற்றமறக் கிடப்பதாலும், இயல் இசை நாடகமென்னும் முத்தமிழிலக்கணங்க ளமையப்பெற்றும், வையையேட்டிலே தவழ்ந்தும், மயர்வறமதிநல மருளப்பெற்ற ஆழ்வார்கள் உலகமுய்யுமாறு அருளிச்செய்த **திருவாய்மொழி**யும் இறைவனை நேரிற்கண்டு உடலுருகப்பாடிய **தேவார திருவாசகங்கள்** என்னும் ஒத்துக்களுடைமையானும், முதலை யுண்ட சிறுவனை அழைத்தும், எலும்பைப் பூம்பாவையாக்கியும், அரவாலிறந்த பிள்ளையை உயிர்ப்பித்தும், மறைக்கதவைத் திறந்தும், ஊமைப்பெண்ணைப் பேசவும், ஆண்பனையைப் பெண்பனையாகவும், வழுதியின் வெப்புநோய் விலகியோடவும் இன்னுமிவைபோன்ற பற்பல அற்புதங்களை விளைத்தமையானும், தன்னினின்றும் தெலுங்கு மலையாளம் கன்னடம் துளுவம் முதலிய பதினெண் மொழிகளுங் கிளைத்தோங்கவும் இளமை சிறிதுங் குன்றாதாய் என்றும் கன்னியாக நின்று பாவாணர் நாவினைமணந்து பூவுலகெங்கணும் புகழ்மணங்கமழப் பொலிவுற்றிலங்குவதென்றால் இதன் பெருமை புல்லறிவினரால் உணரவும் பெறுமோ? முடிவாக, மாட்சிமையுடைய நமது செந்தமிழ் அருள்வடிவினனான ஆண்டவனைப்போல் என்றும் நிலையாயுள்ளதென்பதும், உயர்வுடைய தனிமொழியே என்பதும், விருந்தினராய் வந்த வேற்றுமொழி நங்கையர்க்குச் சொல்லமுதளித்ததென்பவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாகச் சுருக்கிக் கூறுவாம். முன்னர், சிவபிரான் பார்வதியை வெள்ளியங்கிரியின் பக்கலில் திருமன்றல் புரியுங்காட்சியைக் காண்பான் இந்திரன் உள்ளிட்ட வானோர் முனிவர் கந்தருவர் சித்தர் வித்தியாதரர்குழாம் ஒன்றுகூடவே, வடதிசை அன்னோரது பொறையாற்றாது மேலெழுந்து தென்திசையாகிய தமிழகம் தாழ்வுறவும், ஆண்டுள்ளோர் கண்டு அச்சமுறவே, கருணையங்கடலான எம்பெருமான் அவர்களை நோக்கி 'நீங்கள் அஞ்சன்மின். தவத்தில் எனக்கு நிகரான அகத்தியனைக் கொண்டு உங்கள் மனக்குறையை ஒழிப்பேன்' எனக்கூறி, உடனே ஆரியருள் தலைமைவாய்ந்த அகத்தியர்க்கு அரவணிந்தோன் தமிழறிவுச்சுடரைக் கொளுத்தி அவரைத் தென்னாட்டுக்கு விடுத்தனன். அகத்தியரும் ஆண்டவன் பணியைத் தலைமேற்கொண்டு தென்னாடு

போந்து பொதிகையில் தங்கவும் பூமி சமனுற்றது. இது வடமொழியில் வியாசரியற்றிய ஸ்கந்த புராணம் சிவரகசிய கண்டம் நவாம்சத்தில் விளக்கமாகக் கூறியுள்ளது. இதனாலே அகத்தியர் அருளப்பெற்ற தமிழின் தொன்மையும் நிறைவும் தெள்ளிதிற் புலப்படுகின்றதல்லவா! அதன்பிறகு, அகத்தியர் கடல்போலும் பரந்துள்ள தமிழினின்றும் எள்ளிலிருந்து எண்ணெயை எடுப்பது போல் பன்னீராயிரம் சூத்திரங்க ளடங்கிய அரிய பெரிய இலக்கணநூலை அகத்தியமென இயற்றினர். இன்னும் கிருதயுகத்தில் ஸ்ரீராமன் அரணியவாசம் செய்யப்புகுமுன்னரே அகத்தியர் பொதிகையி லிருந்தாரெனவும், சுக்கிரீவன் சானகியைத் தமிழ் கற்ற அகத்தியருறையும் பொதிகையில் தேடுமாறு வானரவீரர்களுக்குக் கட்டளையிட்டா னெனவும் வடமொழியில் ஆதிகாவியமாகிய வால்மீகி இராமாயணத்தில் கூறியிருப்பதும், காளிதாசன் இயற்றிய குமாரசம்பவத்திலும் தமிழகத்தை அகஸ்தியமென விதந்து கூறியதும் தமிழினது தொன்மைக்குத் தகுந்த சான்றுகளாகும். இயற்கைக்கு மாறுகப் பேசுவதற்கும் பொருத்தமிலாது பேருழைப்பும் பெருந்தொல்லையுந் தரும் உ ர த் த ஓசைகளும் கனைக்கும் ஒலிகளையும் செயற்கையா யமைத்துக்கொண்ட வடமொழிபோலல்லாது மெல்லென்னு மோசையின்பம் பயப்பதாய் இயற்கைநலன் பொருந்தியுள்ள தமிழ் தொன்மையு தென்பதற்குச் சிறிதும் இழுக்காறில்லை. இவையேயன்றி, எமது கோகுலத்தார் காக்கும் இளங்கன்று தன் தாய்ப்பசுவை நினைந்து அம்மாவென்றழைப்பதையும் கேட்டும்கூடத் தமிழின் தொன்மையை உணராதிருப்பவ ரெவரேனு முளரோ?

இனி, தமிழ் தனிமொழி யென்பதற்கு அது தன்னைச் சார்ந்த அயல்மொழிகளுக்குப் பெரிதும் துணைசெய்வதேயன்றித் தான் அம்மொழிகளுள் ஒன்றின் துணையாவது பெறுமலே தனித்து இயங்கவல்ல தென்பதொன்றே போதிய சான்றாகும். 'ற, ழ, ன' என்ற மூன்றெழுத்துக்களும் தமிழுக்கு உரியனவாகும். உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் ஒலிநூல்முறை பிறழாது முறைமை

யாயமைந்திருப்பது யாவரும் வியக்கத்தக்கதே. இவையன்றியும், தமிழ்மொழி வடமொழிக்கணில்லாத புணர்ச்சிக்கட்படுஞ் செய்கைகளும் குறியீடுகளும், வடமொழியில் சொன்னோக்கத்தால் ஏற்படுவதுபோலல்லாது பொருணோக்கத்தால் ஏற்படும் பால் வகுப்புகளும், அகப்பொருள் புறப்பொருள்களின் துறைகளும், இவ்விருவகைப் பொருள்களினியைபுகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும் என்று இவைபோன்ற பிறவற்றையும் தனக்கே உரிமையாகக் கொண்டதாலே தமிழ் வேறு வடமொழி வேறு என்பதில் எட்டுணையேனும் ஐயுறவில்லை. மூன்ருவதாக, நமது பண்டைய தண்டமிழ் ஆரியம் முதலிய மொழிகளுள் விரவியுள வென்பதைச் சிறிது ஆராய்வாம். இரண்டாயிரம் யாண்டுகளுக்கு முன்னர் இமயமலைக்கும் விந்தியமலைக்கும் நடுவேயுள்ள ஆரியாவர்த்தத்திலிருந்த ஆரியர் பிழைக்கும் வழிதேடித் தென்னாட்டில் தமிழரோடு கலந்துவாழ்கையில் தமிழிலுள்ள இலக்கண இலக்கிய அமைதிகளைத் தமது ஆரியமொழியின் நால்வழக்கிற்குத் தகுதியாகத் திருத்தி அங்ஙனம் செவ்வையாகத் திருத்தப்பட்டதென்னுங் காரணம் தோன்ற 'சமஸ்கிருதம்' என்னும் பெயரையு மமைத்தனர். அள், கள், கல், கு, சா, பண், பக், மின், வள், நல், முதலான செந்தமிழ்ப் பகுதிகளிற் பிறந்த ஆணி, அடவி, கடு, கலை, குடி, குண்டம், கூனி, குளம், கோட்டை, சலம், சாயா, பட்டினம், பாகம், மீனம், வளையம், நாரங்கம், முகம் முதலான தெளிவுடைய தமிழ்ச் சொற்கள் வடமொழியிலும், அசை, அருவி, இரும்பு, ஈன, எல்லாம், மென்மை, முகில் முதலான மொழிகள் ஆங்கிலம் இலத்தீன் கிரேக்கு முதலான மொழிகளிலும், தலை என்ற சொல் ஹீபெத்திலும், அவா, இரு, ஊர், எருமை, சினம், செவ்வை முதலியவை சாலடி ஈபுரு முதலிய மொழிகளிலும் வழங்கிவருவதை அறிவாளிகள் தெளிந்துணரல்வேண்டும். உயரிய மலையின் தலைப்பினின்றும் எஞ்ஞான்றும் வரட்சியுறுது பெருகிவரும் அருவியானது அவ்வப்போது வழியினிடையே கூடும் குளம் கூவல்களிற் சென்று அவற்றின் நீரையுந் தன்னோடு கலப்பிப்பதுபோலும், நாளடைவில் நமது தமிழ்மக்கள் பொருளீட்டும் வகைதேடிக் கடல்

கடந்து அயல் நாட்டினரோடும் கலந்து வாணிகம்செய்யும் முறையிலும், அரசுரிமையிலும், இலௌகீக வைதிக முறைகளிலும் பிறாது சொற்களேயும் தமது மொழியோடு கலந்து வழங்குவாராயினர்.

இத்துணைச் சிறப்புடைய நமது தமிழ்மொழியில் அகராதிகளும் நிகண்டுகளும் சொற்பொருளாராய்ச்சி செய்யாது குறைபாடுடையனவா யிருக்கின்றன. ஆகவே, தற்காலத்தில் பல நாடுகளிலுமுள்ள பல நூறாயிரம் மக்கள் தாங்கள் கற்கப்புகும் தமிழ் நூல்களுள் வரும் கடின மொழிகளின் பொருள்களை எளிதில் உணரும்வண்ணம் வீணில் பெருக்கியும் அழகுகுன்றச் சுருக்கியுமிராமல் இன்றியமையாத சொற்களனைத்தையும் திரட்டித் தக்க இடங்களில் மொழிகளுக்கேற்ற பொருள்களைப் பல இலக்கியங்களினின்றும் உதாரணமுகத்தால் விளக்கிக்காட்டியும், எழுத்துப் பிழையில்லாமலும், வழக்காற்றிலுள்ள மொழிகளுக்கு * உடுக்குறியும், ஒருமொழியின் பொருள்கள் உலக வழக்கிலிருப்பின் அவற்றைப் [ ] பிராக்கெட்டுக்கு முன்னதாகவும் அமைத்து இதற்கு 'நவீன தமிழ் அகராதி' என்னும் பெயரைத் தந்து பதிப்பித்தனம்.

புரசைபாக்கம்,
9-10-'35 } சீ. கிருஷ்ணசாமிப்பிள்ளை.

# நவீன தமிழ் அகராதி

## அ

அ - தமிழ் மொழியில் முதலெழுத்து, அஃறிணைப் பன்மையீறு (உ-ம்.) வாழ்ந்தன, எட்டென்னு மெண்ணின் குறி, ஆறும் வேற்றுமையின் பன்மையுருபு (உ-ம்) 'நினதாள்கள்', சாரியை, சுட்டு, எதிர்மறை இவற்றைக்காட்டுமோருபசர்க்கம் (உ - ம்) நினக்கு, அவன், அஞ்ஞானம்.

அ ஆ - அதிசய விரக்கக்குறிப்பு.

அஃகம் - தானியம், முறைமை (உ-ம்) "ஒழிகவிக் காமமோரூரிரண்டஃக மாயிற்றென்றுங்" (சீவக - சிந் - சுரமஞ்சரி. 93.)

அஃகரம் - வெள்ளெருக்கு.

அஃகல் - குறைதல், சுருங்கல்.

அஃகு - ஊறுநீர். (திவாகரம்.)

அஃகுல்லி - உக்காரி (பிட்டு), சிற்றுண்டி.

அஃகுள் - அக்குள் (கக்கம் the armpit.)

அஃது - அது.

அஃபோதம் - நிலாமுகிப்புள்.

அஃறிணை - இழிதிணை. அஃது: தேவர் நரகர் மனிதரல்லாதன.

அகக்காழ் - அகங்காழ் (உள்வயிரம்).

அகங்காரம் - அகந்தை, கருவம், [உட்கரணம் நான்கினுென்று, பிறவிக்கு வித்து.]

அகங்கை - உள்ளங்கை.

அகசியம் - ஆசியம் (அவமதிச் சிரிப்பு.)

அகசு - பகல், பொழுது.

அகஸ்மாத்து* - தற்செயல்.

அகடம்* - அநீதி, பொல்லாங்கு.

அகடவிகடம்* - குறும்பு.

அகடியம் - அநீதி.

அகடு - உள், நடு, பொல்லாங்கு, வயிறு.

அகரீ - பாம்பு (வயிற்றால் நகருவது.)

அகணி - தெங்கு, பனை முதலியவற்றினுர், உள், வயல், கடுக்காய்.

அகணிதம் - எண்ணிக்கையின்மை.

அகண்டம் - மண்விளக்கு, [எல்லாம்.]
அகண்டாகாரம் - அளவிடற்கிடாத வடிவம், விசாலம்.
அகண்டிதம் - கூறுபடாமை, முழுதும்.
அகதி - போக்கற்றவன், [தில்லைமரம், வேலமரம்].
அகதேசி - உள்ளூர் யாசகி.
அகத்தடியாள் - மனையாள்.
அகத்தி* - ஓர் மரம்.
அகத்திணை - உள்ளொழுக்கம்.
அகத்தியம் - அவசியம், [அகத்தியராலியற்றப்பெற்ற இலக்கணநூல்.]
அகத்தியன் - குடத்தில் பெருவிரலளவுடையவராய்த் தோன்றிய ஒரு முனிவன்.
அகநிலை - கடவுள், ஊர் "அரசுமேம்படீஇயவகநிலைமருங்கி."
அகந்தை* - ஆங்காரம்.(சிலப்ப.)
அகப்பா - அகழி, மதிலுண் மேடை, மதில்.
அகப்பு - தாழ்வு, ஆழம்.
அகப்பேய்சித்தன் - பதினெண் சித்தருளொருவன்.
அகப்பை* - சட்டுவம்.
அகமகிழ்ச்சி, அகமலர்ச்சி - மனமகிழ்ச்சி (ஆனந்தம்).
அகமருடணம், அகமருஷணம் - நீர்க்குள் நின்று செய்யுமோர் செபம்.
அகம் - பாவம், [இடம், உள், ஏழனுருபு (உ-ம்.) பல்லாரகத்து, பள்ளம், பூமி, மரப்பொது, மனம்]
அகம்படியார் - ஒரு சாதியார், [உள்வேலைக்காரர்.]
அகம்பிரமம்-நானே பிரமமெனக் கூறல்.
அகம்மியம் - பத்திலட்சங்கோடி கோடி கோடாகோடி.
அகம்மியை - வேசி.
அகரம் - பார்ப்பனச்சேரி, மருதநிலத்தூர், முதலெழுத்து,பாதரசம்.
அகராதி - அகரமுதலெழுத்துக்களாலாய சொற்கோவை.
அகரு - அகில் (ஓர் மரம்.)
அகலக்கட்டை* - அகலமில்லாதது.
அகலம் - விரிவு, [மார்பு].
அகலர் - சண்டாளர்.
அகலல் - நீங்கல் (விரிதல்.)
அகலிகை - பஞ்ச கன்னிகைகளுளொருத்தியான கௌதமர் பத்தினி.
அகலிடம் - பூமி.
அகலுள் - அகலம், ஊர், நாடு, பெருமை, எங்கும், தெரு (சிலப்ப.)
அகல் - தகழி, நீங்கென்னுமேவல், [வெள்வேலமரம், அல்குல்.]
அகவல் - அழைத்தல், ஆசிரியப்பா, மயிற்குரல், ஆடல்.
அகழி* - அகழ்.
அகழ்-அகழி (மதில்சூழ்கிடங்கு), தோண்டென்னுமேவல்.
அகளங்கன் - மாசிலான்,கடவுள்.
அகளம் - தாழி, மிடா.
அகளி - தாழி.

அகறல் - அகலல், கடத்தல்.
அகற்றல் - நீக்கல், [விரித்தல்]
அகன்றில் - ஆணன்றில்.
அகாதம் - வஞ்சகம், நீந்துபுனல், பள்ளம், தொளை.
அகாதன் - வஞ்சகன்.
அகாத்தியம்-பொல்லாங்கு, [வஞ் சனை].
அகாரம் - முதலெழுத்து, வீடு.
அகாரி-கடவுள், இடி, இந்திரன்.
அகாலமிருத்து - அநியாய மரணம்.
அகாலம்* - நியமமல்லாத காலம், பஞ்சகாலம்.
அகி - இரும்பு, பாம்பு.
அகிஞ்ஞன், அகிஞ்சனன் - தரித்திரன்.
அகிதம் - இதமின்மை, தீமை.
அகிம்சை - பிறவுயிர்க்குத் தீங்கு செய்யாதிருத்தல்.
அகிருத்தியம்-தவருன செய்கை.
அகிலம் - எல்லாம், பூமி.
அகிலாண்டகோடி - கணக்கற்ற லோகம்.
அகிலாண்டம் - சர்வாண்டம், பூவண்டம்.
அகிலாண்டவல்லி* - பார்வதி.
அகில் - ஓர் மரம், பஞ்சவிரையினென்று.
அகிவைரி - கருடன், மயில்.
அகிற்கூட்டு - ஏலம், கருப்பூரம், காசுக்கட்டி, சந்தனம், தேன் சேர்ந்த கூட்டு; கூந்தலினீரம் புலர்த்தப் பயன்படுவது.
அகுட்டம் - மிளகு.
அகுளுதி - வேம்பு.
அகைத்தல் - அடித்தல், அறுத்தல், எழுச்சி, ஒடித்தல், முறித்தல், வருந்துதல், தழைத்தல், பறித்தல்.
அகோசரம் - அறியொணுமை, காணப்படாமை.
அகோபிலம்-கடப்பை ஜில்லாவிலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.
அகோரம் - அழகின்மை, [உக்கிரம், சிவனைம்முகத்தொன்று].
அகோராத்திரம்* - பகலுமிரவும்.
அக்கசாலையர் - கம்மாளர், தட்டார்.
அக்கட - அவ்விடம் (தெலுங்கு).
அக்கடா* - மனவமைதியைக் குறிக்குமோ ரிடைச் சொல் (உ-ம்.)இத்தொல்லை நீங்கிஞல் அக்கடாவென் றிருப்பான்.
அக்கணம் - அதே நிமிஷம், பொரிகாரம்.
அக்கம் - தானியம், கண், கயிறு, அருகு, உருத்திராட்சம், சொக்கட்டான்காய், தானியவிலை, பாம்பு, பொன்.
அக்கரம் - எழுத்து, ஓர்நோய், வெள்ளெருக்கு.
அக்கராகாரம், அக்கிராகாரம் - ஓர் மருத்துப்பூடு.
அக்கறை* - அவசியம், காரியம்.
அக்கன் - நாய், கருடன்.
அக்கா* - முன்பிறந்தாள்.
அக்காரம் - சருக்கரை, கரும்பு, சீலை, மாமரம்.
அக்காள்* - தமக்கை.
அக்கி-அக்கினிகரப்பான், (கண், ஓர் பூச்சி, உட்டணம்).

அக்கியாதவாசம்* - மறைந்திருத்தல்.
அக்கியானம்* - ஞானமில்லாமை.
அக்கிரசம்பாவனை - முதன் மரியாதை.
அக்கிரதாம்பூலம் - முதற்றாம்பூலம்.
அக்கிரமம் - கொடுமை, (ஒழுங்கின்மை).
அக்கிராகாரம் - வட ஆப்பிரிக்காவிலுற்பத்தியாகுமொரு மருந்துப்பொருள்.
அக்கில், அக்குள் - கக்கம், (கைக்குழி).
அக்கினி - தீ, [செங்கொடுவேலி, நவக்ஷாரம், மூத்திரம், வெடியுப்பு].
அக்கினிகோத்திரம் - யாகமிருபத்தொன்றி னொன்று.
அக்கினிக்கருப்பன் - குமரன்.
அக்கினிசாந்தி - ஓமம்.
அக்கினிச்சிவம் - குப்பைமேனி.
அக்கினிச்சுவாலை* - தீக்கொழுந்து.
அக்கினிட்டோமம், அக்கினிஷ்டோமம் - சோமயாகம்.
அக்கினித்திராவகம் - ஓர் திராவகநீர்.
அக்கினிநட்சத்திரம்* - கொடிய நட்சத்திரம்.
அக்கினிப்பிரவேசம்-தீயிற் பாய்தல்.
அக்கினிப்பிழம்பு - நெருப்புச் சுவாலை.
அக்கினிமாந்தம் - ஓர் நோய்.
அக்கினிமுகம் - சேங்கொட்டை.
அக்கினிமூலை - தென்கிழக்கு மூலை.
அக்கு - எருத்துத்திமில், எலும்பு, சங்குமணி, பலகறை, எட்டி மரம்.
அக்குரன் - இடையெழு வள்ளலிலொருவன்.
அக்குரூரன் - கம்சனின் முதன் மந்திரி.
அக்குரோணி* - படையினோர் தொகை, அஃது அணிக மூன்று கொண்டது.
அக்கை - முன் பிறந்தாள், [அன்னை].
அக்கோ - அதிசயச்சொல், இரக்கச்சொல்.
அக்கோடம் - கடுக்காய்.
அக்கோலம் - தேற்றாங்கொட்டை.
அக்ரமம்* - அக்கிரமம்.
அங்கசன் - மன்மதன்.
அங்கணம் - சலதாரை, சேறு, முற்றம், வெண்காரம், கடுக்காய் மரம், இரண்டு தூணுக்கும் நடுவேயுள்ள இடம்.
அங்கதம் - தோளணி, பழிச்சொல், பாம்பு, பொய், யானை.
அங்கதன் - வாலிமகன். [யுணவு.
அங்கத்தி-பண்டாரங்களைத் தாங்களென்று பொருள்படுமொறு மரியாதையாய்க் கூப்பிடுமொரு சொல்.
அங்கத்திய* - அங்கு நிகழ்ந்த.
அங்கஙியாசம் - உடம்பி னெவ்வோர் உறுப்பையுந்தொட்டு மந்திரஞ்சொல்லுதல்.

அங்கபடி, அங்கவடி - குதிரையேறும்படி.
அங்கப்பிரதட்சணம் - சரீரத்தாலுருண்டு வலம்வருகை.
அங்கம் - அவயவம், உடல், [அடையாளம், எலும்பு, ஓர் தேசம், ஓர் பாடை, கட்டில், பாவனை, வேதாங்கம்].
அங்கயற்கண்ணம்மை - மீனாட்சியம்மையார்.
அங்கரக்கா - மெய்ச்சட்டை.
அங்கராகம் - பூசும் பரிமளம்.
அங்கர்கோமான் - கன்னன்.
அங்கலாய்த்தல் - துக்கித்தல், [இச்சித்தல்].
அங்கவீனன் - உறுப்புக் குறையுடையவன்.
அங்கனை - பெண்.
அங்காடி - கடைவீதி.
அங்காத்தல் - வாய்திறத்தல்.
அங்காரகன் - செவ்வாய், [நெருப்பு].
அங்காளம்மை* - மலையனூரில் கோயில் கொண்டிருக்கும் காளிகாதேவி.
அங்கி-சட்டை, [நெருப்பு, கார்த்திகைநாள்].
அங்கிகரி, அங்கீகரி - ஏற்றுக்கொள், சம்மதி.
அங்கிடுதத்தி, அங்கிடுதுடுப்பன் - நாடோடி.
அங்கிதம் - உடற்றழும்பு.
அங்கிநாள் - அந்நாள், கார்த்திகைநாள்.
அங்கிரி - கால், மரமூலம், மூன்றுகாலிருடி.
அங்கு - அவ்விடம்.
அங்குசபாசதரன், அங்குசபாசமேந்தி - விநாயகன்.
அங்குசபாணி-காளி, விநாயகன்.
அங்குசம்- யானைத்தோட்டி, வாழை.
அங்குட்டம் - பெருவிரல்.
அங்குஷ்டான் - விரலுறை.
அங்குரம் - முளை, குப்பைமேனி, தளிர், நீர், நங்கூரம்.
அங்குரித்தல் - முளைத்தல்.
அங்குலம்*- ஓரளவு, ($\frac{1}{12}$ அடி).
அங்குலி - விரல், துதிக்கை, ஐவிரலிச்செடி, யானைக்குக் கட்டும் மணி.
அங்குலிகம், அங்குலீகம் - மோதிரம்.
அங்குலியம், அங்குலீயகம் - மோதிரம்.
அங்கூரம் - தளிர், முளை.
அங்கை - உள்ளங்கை.
அங்கோலம் - அழிஞ்சில்.
அங்ஙனம் - அத்தன்மை, அவ்விடம்.
அசகசாந்தரம் - ஆட்டுக்கும் யானைக்கும் உள்ள பேதம்.
அசகம் - மலையாடு.
அசக்கியம் - இயலாமை, நாகமணல்.
அசக்குதல் - ஆட்டுதல்.
அசங்கதம் - ஒழுங்கின்மை, பொய்.
அசங்கியம் - சுத்தமின்மை, [அருவருப்பு].
அசங்குதல்* - அசைதல்.
அசடர் - கீழ்மக்கள்.

அசடு - இரும்பு முதலியவற்றிற் பெயரு மசடு, [பேதைமை, குற்றம்].

அசட்டை* - பராமுகம், மதியாமை.

அசதி - அயர்ச்சி, [சடுதி, மறதி, சிரித்துப்பேசல், ஔவைபிராட்டி புகழ்ந்து பாடிய ஓர் இடையன்].

அசதிக்கோவை - ஔவையார் அசதி யென்னும் ஆயன்மீது பாடிய ஒரு பிரபந்தம்.

அசதியாடல் - சிரித்துப்பேசல்.

அசத்தன் - வலிமை யில்லான், உலகப் பற்றில்லாதவன்.

அசத்தியம் - பொய்.

அசத்து - தீயது, உண்மையில்லாதது.

அசந்தர்ப்பம்* - சமயமின்மை.

அசபம் - அசவை (ஓர் மந்திரம்).

அசப்பியம்-சபைக்கடாத பேச்சு.

அசமதாகம் - ஓமம்.

அசமந்தம் - மந்தகுணம், [மலையத்தி, மலையாமை].

அசமந்தன்* - சோம்பேறி.

அசமானம் - உவமையின்மை.

அசம் - ஆடு, மூவருடநெல், ஈரவுள்ளி.

அசம்பவம்-அதிசயம், மாறுகொளக் கூறல், சூனியம்.

அசம்பாவிதம் - சம்பவிக்கக் கூடாதது.

அசம்பிரேட்சியம் - ஆராய்ச்சியின்மை.

அசரம் - நடையில்லது. [றது.

அசரீரி-ஆகாயவாணி, [சரீரமற்

அசருதல்* - அயருதல்.

அசரை* - ஓர் சிறிய மீன்.

அசர், அசறு, அயறு-தலைச்சுண்டு.

அசலம்-அசையாநிலை, பூமி, மலை.

அசலனம் - அசைவின்மை.

அசல் - அருகாண்மை, முதற்பிரதி, [உயர்ந்தது, கொசுகு, சீலை, பூமி].

அசவல் - கொசுகு.

அசறு - சேறு.

அசனம் - உணவு, சோறு, வேங்கைமரம்.

அசனி - இடி, வச்சிராயுதம்.

அசன் - பிறப்பில்லான், தசரதன் தந்தை.

அசாக்கிரதை* - விழிப்பின்மை.

அசாத்தியம்* - முடிக்கக் கூடாதது.

அசாவேரி - ஓரிராகம்.

அசி - அவமதிச் சிரிப்பு, வாள்.

அசிங்கம்* - அவலட்சணம்.

அசிதம் - கருமை, சனி, ஓராகமம்.

அசித்து - சடம்.

அசிந்தியம் - ஓரெண், சிந்தைக்கெட்டாமை.

அசிரத்தை - சிரத்தையின்மை.

அசீரணம்-செரியாமை, பசியின்

அசுசி - அசுத்தம். [மை.

அசுணமா - கேகயப்புள்.

அசுத்தம்* - அசுத்தி (தூய்மையின்மை)

அசுப்பு* - சடுதி.

அசும்பு - கிணறு, பொல்லா நிலம், வழுக்கு நிலம், சேறு, சிறு திவலை (மணிமே.).

அசுரகுரு - சுக்கிரன்.
அசுரசந்தி - இரணியவேளை.
அசுரநாள் - மூலநாள்.
அசுரர் - அவுணர்.
அசுவத்தம் - அத்திமரம், அரசமரம்.
அசுவத்தாமன் - சிரஞ்சீவியான துரோணன் மகன்.
அசுவமேதம் - குதிரையைக் கொண்டு நடத்து மொரு யாகம்.
அசுவம் - குதிரை.
அசுவினி - ஓர் நட்சத்திரம்.
அசுழம் - நாய்.
அசூயை - அவதூறு, பொறாமை.
அசேதனம் - அறிவின்மை.
அசை - அசையென்னு மேவல், [செய்யுளுறுப்பி லொன்று, அசைநிலை].
அசைதல் - ஆடல், [உலாவல், சோம்பல், தங்கல், துவளல்.]
அசைதன்னியம் - ஞானக்குருடு.
அசைத்தல் - ஆட்டல், [கட்டல்].
அசைபோடல்* - மாடு முதலியவை இரைமீட்டல்.
அசோகம் - ஓர்மரம், [சோகமின்மை, மன்மதன்கணை].
அசோகன் - அருகன், மன்மதன்.
அசோகு - அசோகமரம், வாழை.
அச்சகாரம் - முன்பணம்.
அச்சணம் - அக்கணம்.
அச்சம் - பயம், இலேசு, [அகத்தி, ஈசுரப்புல், தகடு, பளிங்கு, மகடூஉக்குணம் நான்கி னொன்று].
அச்சயன் - கடவுள்.
அச்சரம்* - நாவிலுண்டாகுமொரு நோய்.
அச்சன் - தந்தை.
அச்சாணி* - வண்டிசக்கரத்தி லிடுங் கடையாணி.
அச்சாரம்* - ஆயத்தப்பணம்.
அச்சி - ஓர் தேயம், தாசி.
அச்சு - பண்டியச்சு, [அடையாளம், தேகம், நெய்வோர் கருவியி னொன்று].
அச்சுதம் - அறுகு வெள்ளரிசிகூட்டியணிவது, [கெடுதலின்மை]
அச்சுதன் - மகாவிஷ்ணு, [அழிவில்லாதவன், கடவுள்].
அச்சுவத்தம் - அரசமரம்.
அச்சுவம் - குதிரை.
அச்சோ - அதிசயச்சொல், இரக்கச்சொல்.
அஸ்தமனம்* - சூரியன் மறையுங்காலம்.
அஸ்திசுரம் - எலும்புருக்கி ஜுரம்.
அஸ்திபாரம்,* அஸ்திவாரம் - கட்டடத்திற்கடியில் உரம்போடுதல்.
அஞர் - அறிவில்லார், துன்பம்.
அஞலம், அஞல் - கொசுகு.
அஞ்சம் - அன்னப்புள்.
அஞ்சலி - கும்பிடல், ஆடுதின்னாப்பாளை, வெளவால், சங்கங்குப்பி.
அஞ்சலிகை - வெளவால்.
அஞ்சல் - தோல்வி, பயப்படல்.
அஞ்சனக்காரன் - மந்திரக்காரன்.
அஞ்சனம் - கண்ணுக்கிடுமை, [கறுப்பு, இருள், மேற்றிசையானை.]
அஞ்சனவண்ணன் - திருமால்.
அஞ்சனாதேவி - அனுமன்றாய்.

அஞ்சனுவதி - வடகீழ்த்திசை யானைக்குப் பெண்யானை.
அஞ்சனி - காயா, நாணற்புல்.
அஞ்சனை - அனுமன்ருய், வடதிசை யானைக்குப் பெண் யானை.
அஞ்சிக்கை - பயம்.
அஞ்சிதமுகம் - வருத்தமாற்ருது இருதோள்மீது தலைசாய்த்தல்.
அஞ்சு* - ஐந்து.
அஞ்சுகம் - கிளி.
அஞ்சுதல்* - பயப்படுதல்.
அஞ்சுவர்ணத்தோன் - துத்தநாகம்.
அஞ்ஞாதவாசம், அக்கியாதவாசம்* - பகைவர் கண்ணுக்கு மறைந்து வாழ்தல்.
அஞ்ஞானம்* - அறிவின்மை.
அஞ்ஞை - அறிவில்லான், தாய் "அஞ்ஞை நீயேங்கியழ லென்று" (சிலப்ப.).
அடகு - கடன் வாங்குவதற்கு ஈடுவைத்தல், [இலேகறி].
அடக்கம்* - ஒடுக்கம், கீழ்ப்படிவு, பிரேதமடக்குகை, ஒருவகைத் தோற்கருவி (சிலப்ப. பக். 86 : வரி. 10).
அடக்கம்பண்ணுதல்* - சேமஞ் செய்தல், பிரேத முதலிய வற்றைப் புதைத்தல்.
அடங்கலர் - பகைவர்.
அடங்கலும்*-எல்லோரும், அனைத்தும்.
அடங்கல் - முழுதும் [சுருங்கல்].
அடதாளம்-சத்ததாளத்தொன்று.
அடப்பம் - அம்பட்டன் கருவிப்பை, [சாமான்பை].
அடப்பனுர் - பட்டப்பெயர்.
அடமானம்* - அடைமானம்.
அடம் - பிடிவாதம், [சஞ்சாரம்].
அடம்பு - அடம்பங்கொடி.
அடரடிபடரடி-முற்றுமழிக்கை.
அடர்-தகடு, செறிவு, நெருக்குகை.
அடர்தல் - நெருங்கல்.
அடர்த்தல் - பொருதல், நெருக்கல்.
அடர்த்தி* - நெருக்கம்.
அடர்பு - நெருக்கம், செறிவு.
அடலை - சாம்பல், போர்க்களம்.
அடல்-கொல்லுதல், சமைத்தல், பொருதல், வலி, வெற்றி.
அடவி - காடு, சோலை.
அடவிச்சொல் - கோரோசனை.
அடாசு* - மட்கிச்செத்தது.
அடாணு - ஒரிராகம்.
அடாதது - தகாதது.
அடாவந்தி-அநியாயம், துன்பம்.
அடி - அடி யென்னு மேவல், ஆதி, [கால், செய்யுளுறுப்பிலொன்று.]
அடிகள் - குரு, கடவுள், தலைவி, முனிவர், மூத்தோன்.
அடிகொள்ள - ஆரம்பிக்க.
அடிகோல-அஸ்திவாரம் போட, முயல.
அடிக்குடில் - அடிச்சேரி (கிராமம்.)
அடிக்குள்* - உடனே.
அடிசில் - சோறு.
அடிச்சி - அடியாள்.

அடிச்சுவடு - காற்சுவடு.
அடிச்சேரி - அயல்கிராமம்.
அடித்தலம் - கால்.
அடிபணிதல் - நமஸ்கரித்தல்.
அடிபிடித்தல், அடிப்பற்றுதல்* - கறி முதலிய சுண்டல்.
அடிமடி* - உள்மடி.
அடிமுகனை - துவக்கம்.
அடிமுடி - காலுந்தலையும், கீழ் மேல், வரலாறு.
அடிவயிறு* - கீழ்வயிறு.
அடிவாரம்* - மலைச்சாரல்.
அடிவானம்* - திகாந்தம், (கீழ் வானம்).
அடிவைத்தல் - நடக்கத் தொடங்கல், [தலையிடல்].
அடுகலம் - சமையல் செய்யும் பாத்திரம்.
அடுகளம் - போர் செய்யுமிடம்.
அடுக்கம் - பக்கமலை, மலைப்பக்கம், சோலை "மரம்பயிலடுக்கத்து" (சிலப்ப.).
அடுக்கல் - ஒன்றன்மே லொன்றேற்றல், [மலை].
அடுக்களை - சமையல்வீடு.
அடுக்கு - அடுக்கப்பட்டது, [ஒழுங்கு].
அடுசிலைக்காரம் - செந்நாயுருவி.
அடுதல் - கொல்லல், தீயிற் பாகமாக்குதல்.
அடுத்த - சரியான, நெருங்கின.
அடுத்தல் - சார்தல், கிட்டல்.
அடுப்பங்கரை* - அடுப்பின் பக்கம்.
அடுப்பு-அடுப்பு, [அச்சம், பரணி நாள், நிரை].
அடை - அப்பவர்க்கம், [இலை, கனம், சேர் என்பதனேவல்].
அடைகல்-பட்டடை, மதகடைக்குங்கல்.
அடைகாத்தல்* - குஞ்சு பிறப்பிக்கக் கோழி முட்டையைக் காத்தல்.
அடைகாய் - ஊறுகாய், வெற்றிலைப் பாக்கு.
அடைகுளம் - வாய்க்கா லில்லாத குளம்.
அடைகுறடு - பட்டடை.
அடைக்கலம் - அபயம் (சரண் புகல்), கையடை (பாதுகாவற் கொப்பித்த பொருள்).
அடைக்கலாங்குருவி - அடைக் கலக்குருவி (ஊர்க்குருவி).
அடைசல் - அடைசுதல், நெருக்கம்.
அடைசுதல் - ஒதுக்குதல், செருகுதல், கதுப்புக்குள் வைத்துக் கொள்ளுதல்.
அடைச்சுதல் - மலர்சூட்டல்.
அடைதல் - சேர்தல்.
அடைத்தல் - சேர்த்தல், வேலியடைத்தல்.
அடைந்தோர் - உறவோர்.
அடைப்பம் - அம்பட்ட னுயுதவுறை, வெற்றிலைப்பை.
அடைப்பன்* - மாடுகளுக்குத் தொண்டையி லுண்டாகு மொரு வியாதி.
அடைப்பு - மறைப்பு, [வேலி].
அடைமழை* - விடாமழை.
அடைமாங்காய் - மாங்காய் ஊறுகாய்.

அடைமானம் - ஈடு, [உவமை].
அடைமொழி-விசேடணமொழி.
அடையலர் - பகைவர்.
அடையாளம்-குறிப்பு, அறிகுறி, சின்னம், மாதிரி.
அடைவு-எல்லாம், வழி, முறை.
அட்சதை - சிதைவுறு மங்கல வரிசி.
அட்சபாதன் - கௌதமமுனி.
அட்சம் - உருத்திராட்சம், கண்.
அட்சய - ஓர் வருடம்.
அட்சயபாத்திரம்* - பிச்சைப் பாத்திரம்.
அட்சரம் - எழுத்து, ஓர் நோய்.
அட்சி - கண்.
அட்டகம் - எட்டின் கூட்டம், வடமொழியிலோர் பிரபந்தம்.
அட்டகாசம்* - பெருஞ் சிரிப்பு.
அட்டணை - குறுக்கே.
அட்டணைக்கால் - மடித்த கால்.
அட்டதிக்குப் பாலகர் - திக்குக் காவலர், அவர் கிழக்காதி முறையேஇந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்.
அட்டமி - எட்டாந் திதி.
அட்டமூர்த்தி - சிவன்.
அட்டம் - எட்டு, அருகிடம், ஜா திக்காய், மேல்வீடு.
அட்டவணை - வரிசைக் குறிப்பு, சேர்க்கப்பட்டது.
அட்டாங்க நமஸ்காரம் - எட்டுறுப்பு நிலந்தோய வணங்குதல்.
அட்டாதசம் - பதினெட்டு.
அட்டாதுட்டி-தாறுமாறு, துடுக்குத்தனம்.
அட்டாலை - மேல்மாடம்.
அட்டாளிகை - அட்டாலை.
அட்டி - அதிமதுரம், செஞ்சந்தனம், தடை, எட்டி, பருப்பு.
அட்டிகை* - ஓர்வகைக் கழுத்தணி.
அட்டிமை - ஓமம், சீரகம்.
அட்டில் - மடைப்பள்ளி.
அட்டு-பனுட்டு, செய்தது, சமைக்கப்பட்டது.
அட்டுப்பு - காய்ச்சியவுப்பு.
அட்டை* - நீரில் வாழுமோர் செந்து, செருப்பினடி, மிகு கனத்த தாள்.
அட்டோலகம் - ஆடம்பரம்.
அணங்கு-அச்சம், அழகு, ஆசை, கொலை, தெய்வப்பெண், தெய்வம், தேவர்க்காடுங் கூத்து, நோய், பெண்மகள், வருத்தம்.
அணங்குதல்-கொல்லுதல், வருந்துதல், விரும்புதல், அஞ்சல்.
அணம் - மேல்வாய்.
அணரி - அணம்.
அணல் - கீழ்வாய், மிடறு, தாடி.
அணவல் - கிட்டல், பொருந்தல்.
அணவு - சாரென்னுமேவல், நடு.
அணுப்புதல் - எய்த்தல்.
அணி - அணியென்னு மேவல், அலங்காரம், அழகு, ஆபரணம், ஒழுங்கு, நன்மை, படை வகுப்பு, பெருமை, மாலை.
அணிகம் - சிவிகை.
அணிகலம் - ஆபரணம்.
அணிகலன் - ஆபரணம்.
அணிஞ்சில் - அழிஞ்சில், கொடிவேலி.

அணிதல்-அலங்கரித்தல், பூணல்.
அணித்து - சமீபித்தது.
அணிநுணா - சீத்தா.
அணிந்துரை - பாயிரம்.
அணிமா-அட்ட சித்தியினொன்று அஃது ஆன்மாப்போலாதல்.
அணிமை - சமீபம், நுட்பம்.
அணியம் - படைவகுப்பு, கப்பலின் முற்பக்கம்.
அணியல் - அணிதல், மாலை.
அணில்* - அணிற்பிள்ளை.
அணு-நுண்மை,[உயிர், சிறுமை].
அணுகல் - கிட்டல்.
அணுக்கத்தொண்டர் - அந்தரங்க பக்தர்.
அணை - மெத்தை, கரைப்பொது, செய்கரை, புணரென்னேவல், வரம்பு.
அணைகயிறு* - பால் கறக்கையில் பசுவுக்குக் காலிற் கட்டுங் கயிறு.
அணைக்கட்டு* - வரம்புக்கட்டு.
அணைதல் - சேர்தல், அவிதல்.
அணைதறி - யானைகட்டுங் கயிறு.
அணைத்தல்* - அவித்தல், சேர்த்தல், தழுவுதல்.
அணோக்கம் - மரப்பொது.
அண்டகடாகம் - அண்டகோளவோடு.
அண்டகம் - குப்பைமேனி.
அண்டகோசம் - முட்டை வடிவுள்ள அண்டம்.
அண்டகோளம் - அண்ட உண்டை.
அண்டங்காக்கை - உடல்முழுதும் கரிய நிறமுடைய காகம்.
அண்டசம் - முட்டையிற் பிறப்பன, அவையாவன, அரணை, ஆமை, இப்பி, உடும்பு, ஓணான், தவளை, நண்டு, பல்லி, பறவை, பாம்பு, மீன், முதலை பிறவும்.
அண்டமுகடு - அண்டத்தினுச்சி.
அண்டம் - ஆகாயம், முட்டை, பீசம், உலகம், தலையோடு.
அண்டயோனி - சூரியன்.
அண்டரண்டபட்சி - ஒருபெரும் பறவை.
அண்டரண்டம் - தேவரண்டம்.
அண்டர் - வானோர், இடையர், பகைவர்.
அண்டல் - கிட்டுதல், சேர்தல்.
அண்டவாதம் - விரைவாதம்.
அண்டவாயு - ஓர் நோய்.
அண்டா* - பெரும்பாத்திரம்.
அண்டார் - பகைவர்.
அண்டிகம் - செந்நாய்.
அண்டில் - மாடு முதலியவற்றின் கண்ணிற் பற்றும் பூச்சி.
அண்டுதல்* - நெருங்கல்.
அண்டை - அருகிடம், முட்டு, வரம்பு, பீறலடைக்குந் துண்டு.
அண்ணாந்தாள், அண்ணுந்தாள்* - தலை நிமிர்ந்திருக்கக் காலுக்கும் கழுத்துக்கு மிணைக்குங் கயிறு.
அண்ணம் - உண்ணா, மேல்வாய்.
அண்ணல் - அருகன், மன்னன், சார்தல், தமையன், புத்தன், பெருமையிற் சிறந்தோன், முல்லைநிலத் தலைவன்.
அண்ணன்* - தமையன்.

அண்ணா-உண்ணா (உண்ணாக்கு.
அண்ணாக்கயிறு* - அரைஞாண்.
அண்ணாக்கு - உண்ணா.
அண்ணாத்தல்-மேனோக்கல், அங் காத்தல்.
அண்ணாமலை - அருணாசலம்.
அண்ணாவி - உபாத்தியாயன்.
அண்ணுதல் - சார்தல்.
அண்முதல் - கிட்டுதல்.
அண்மை - சமீபம் (அருகு).
அதகம் - மருந்து.
அதக்குதல்* - குதப்புதல்.
அதட்டம் - அரவுயிர்ப்பு, பாம்பி னச்சுப்பல்.
அதட்டுதல்* - கண்டித்தல்.
அதப்பியம் - அசப்பியம்.
அதமம்-கடைத்தரம், நீதித்தப்பு.
அதமன் - கடையானவன்.
அதம் - சங்கரித்தல், [தாழ்வு, பள்ளம், அத்திமரம்].
அதம்பல் - அதட்டுதல்.
அதரம் - கீழுதடு, உதடு.
அதரிசனன் - குருடன்.
அதரித்திரன்-தரித்திரமில்லான், கள்ளன்.
அதர் - ஆட்டதர், நுண்மணல், புழுதி, வழி.
அதர்கொளல் - வழிபறித்தல்.
அதர்வணம் - நான்காம் வேதம்.
அதலம் - கீழேழுலகத்தொன்று.
அதவம் - அத்திமரம்.
அதவிடம் - அதிவிடயம் (ஓர் மருந்துச் சரக்கு).
அதவு - அத்திமரம்.
அதழ் - பூவிதழ்
அதளி - அமளி.
அதளை-புளியதளை, வயல்வெளி யிற் கட்டுங் காவற்குடிசை.
அதள் - தோல்.
அதறுதல்-உதிர்த்தல், பதறுதல்.
அதனப்பிரசங்கி* - அகங்காரி.
அதனம்* - மிகுதி.
அதாலத்து - நியாயஸ்தலம்.
அதி - மிகுதிப் பொருளைத் தரு மடைசொல்.
அதிகண்டம் - மரணாவஸ்தை.
அதிகப்ரசங்கம் - அதிகப்படப் பேசுதல்.
அதிகம்-மிகுதி, [இலாபம், குருக் கத்தி, படை, பொலிவு].
அதிகரித்தல் - மிகுதிப்படுதல்.
அதிகன் - ஒரு வள்ளல், மேலான வன்.
அதிகாசம்-பெரு நகை.
அதிகாயன்-இராவணன் மக்களி லொருவன்.
அதிகாரம்-அதிகரித்தல், பண்பு, நூற்கூறுபாடு.
அதிகாரி* - அதிபதி.
அதிகாலை - விடியற்காலம்.
அதிக்கிரமம் - அக்கிரமம்.
அதிங்கம் - அதிமதுரம்.
அதிசயம் - அற்புதம், நூதனம், புதுமை.
அதிசயன் - அருகன்.
அதிசயித்தல் - ஆச்சரியப்படுதல்.
அதிசாக்கிரதை* - மிகு விழிப்பு.
அதிசாரணம் - மாவிலிங்கு.
அதிசாரம் - சுரத்தோடு கூடிய ஓர்வகைப் பேதி.
அதிசீக்கிரம் - மிகு சுருக்கு.
அதிட்டச்செல்வி - இந்திரபாஷா ணம்.

அதிட்டம் - நல்வினைப் பயன், மிளகு.
அதிட்டானம் - இடம், நிலை.
அதிட்டித்தல் - நிலைப்படுதல்.
அதிதனு - பொன்.
அதிதாரம் - இலந்தை.
அதிதி - காசிபப் பிரமாவின் மனைவிகளு ளொருத்தி, பரதேசி, புதியவன், விருந்தன்.
அதிதிபூசை - பரதேசிக் கன்னமிடல்.
அதிதீவிரம் - மிகக் கடுமை.
அதிதேவதை - குலதெய்வம்.
அதிநுட்பம் - மிக்க நுண்மை.
அதிபதி - தலைவன், [இராசன்].
அதிபலை - பேராமுட்டி.
அதிபன் - மன்னன், எசமான், எப்பொருட்கு மிறைவன்.
அதிபாரகம் - கோவேறுகழுதை.
அதிபாரகன் - மிகு நிபுணன்.
அதிபாவம் - பெரும்பாவம்.
அதிபானம் - மதுபானம்.
அதிபூதம் - பிரகிருதிமாயை.
அதிமதுரம் - ஓர் சரக்கு, [மிகு இனிமை, வெண்குன்றி].
அதிமலம் - மாவிலிங்கு.
அதிமுத்தம் - குருக்கத்தி.
அதியட்சன் - கண்காணி.
அதியம் - ஓர் மருந்து.
அதியாமம் - அறுகம்புல், முயற்புல்.
அதிரசம்-ஓர் பண்ணிகாரம், [இரசம், உப்பு, ஓர் பானம்].
அதிரல் - அதிர்தல், [விரிதூறு, மோசிமல்லிகை. (சிலப்ப.),

அதிராகம் - கந்தகம்.
அதிராத்திரம் - ஓர் யாகம்.
அதிராயம் - அதிசயம்.
அதிரிசம் - காணப் படாத தன்மை, குருடு, கடவுள்.
அதிரிசயம்-கலைஞான மறுபத்து நான்கி னொன்று.
அதிரிசன் - குருடன்.
அதிரிசியம் - அதிரிசம்.
அதிருஷ்டம்-பார்வைக் கெட்டாதது.
அதிரேகம்-அதிசயம், மேம்பாடு.
அதிர்ச்சி - குமுறல், ஆரவாரம்.
அதிர்தல்* - நடுங்கல்.
அதிர்த்தல் - அதட்டல், சொல்லுதல்.
அதிர்ப்பு - அச்சம், அதிரல், ஆரவாரம், நடுக்கம்.
அதிர்வெடி, அதிர்வேட்டு - ஓர் வெடி.
அதிலோகம் - உலகம், ரசகர்ப்பூரம்.
அதிவருணச்சிரமி-வருணச்சிரம தருமங்களை நிறைவேற்றுத ஆத்மஞானி.
அதிவாசம் - மிக்க மணம், [உபவாசத்துக்கு முதனாள்.]
அதிவிடம், அதிவிடயம் - ஓர் மருந்து.
அதிவிருஷ்டி - கனத்த மழை.
அதிவேதனம் - மனைவியை விட வேறொருத்தியை மன்றல் புரிதல்.
அதீதம்-கடந்தது, மேற்பட்டது.
அதீதர் - வானோர், முனிவர், மேலோர்.

அதீனம் - உரித்து.
அது - அஃது, சுட்டுச் சொல், வேற்றுமையுருபு.
அதுக்கல்* - அடைசுதல்.
அதுலம் - உவமையின்மை, ஒரெண்.
அதுலன் - கடவுள்.
அதுலிதம் - அசைவின்மை.
அதுல்லியம் - ஒப்பின்மை.
அதெந்து - பயப்படாதே.
அதைப்பு - வீக்கம்.
அதோ - படர்க்கைச் சுட்டு.
அதோகதி - நரகம், பாதலம்.
அதோமுகம் - ஆற்றுநீர்க் கழிமுகம், கீழ்நோக்கிய முகம்.
அத்தகடகம் - கைவளை.
அத்தகம் - ஆமணக்கு, கருஞ்சீரகம்.
அத்தகோரம் - நெல்லி.
அத்தநாரீசன் - அருத்தநாரீசுரன்.
அத்தப்பிரகரம் - நாலேகாழிகை கொண்டது.
அத்தமனம், அஸ்தமனம் - சூரியன் மேலைத்திசையிற் பாய்தல்.
அத்தமித்தல் - மறைதல், அற்றுப்போதல்.
அத்தம் - அருநெறி, ஓர் நாள், கண்ணாடி, காடு, கை, சொற்பொருள், பாதி, பொன், வழி.
அத்தர் - ஓர் வாசனைத் தைலம், [தேவர், முனிவர்.]
அத்தவாளம் - உல்லாசம், காடு, போர்வை.
அத்தனை* - அவ்வளவு.
அத்தன் - அருகன், கடவுள், குரு, சிவன், தகப்பன், மூத்தோன்.
அத்தன்மை - அம்மாதிரி.
அத்தாட்சி - திருஷ்டாந்தம்.
அத்தாணி - அரசிருக்கை.
அத்தான்* - அக்காள் கணவன்.
அத்தி-ஓர் மரம், [எலும்பு, கடல், கொலை, கண்ணினிற்கு மோர் நரம்பு, யானை].
அத்திகோலம் - அழிஞ்சில்.
அத்திக்கன்னி-கரிசாலை, வெருகமரம்.
அத்திசுரம் - எலும்பைப் பற்றின ஜ்வரம்.
அத்தித்திப்பிலி-யானைத்திப்பிலி.
அத்திநாத்தி - உண்டு இல்லை.
அத்திபஞ்சரம் - என்புக் கூடு, முழுவெலும்பு.
அத்திபாரம், அஸ்திபாரம்-அடிப்படை.
அத்திபேதி - ஓர் மருந்து.
அத்திமண்டை - முத்துச்சிப்பி.
அத்தியட்சன் - அதிகாரி.
அத்தியந்தம் - ஒரெண், மிகுதி.
அத்தியயனம் - வேதமோதல்.
அத்தியாசனம் - ஏகோதிட்டம் (இறந்தவன் நற்கதி யடையுமாறு பிள்ளைகளால் கருமாந்தர காலத்தில் வரும் பிராமணனை இறந்தவனுகப் பாவித்து அவனுக்கு ஓராண்டுக்குப் போதிய வளவு சாமக்கிரியை தருதல்.)
அத்தியாத்துமிகம் - தன்னாலேற்படுந் துன்பம், கடவுட் கடுத்தது.

அத்தியாபகன் - வேத முரைப் போன்.
அத்தியாயம் - சருக்கம், படலம், வேதநூலை விரித்த இலக்கியத் தின் கூறுபாடு, வேதம்.
அத்தியாரோகணம் - ஏறுதல்.
அத்தியாரோபம் - ஒன்றை யொ ன்றிலேற்றுதல். [கம்.
அத்தியான்மிகம்-அத்தியாத்துமி
அத்திர சத்திரம், அஸ்திர சஸ் திரம் - அம்பும் வாளும்.
அத்திரம், அஸ்திரம் - அம்பு, கழுதை, குதிரை, கைவிடுமாயு தப் பொது, மலை, இலந்தை, கடுக்காய்ப்பூ.
அத்திரி - உலைத்துருத்தி, ஒட்ட கம், ஓரிருடி, கணை, கழுதை, குதிரை, மலை, விண்.
அத்திரு - அரசமரம்.
அத்திலை - செருப்படை.
அத்திவாரம் - அடியுரம்.
அத்தினபுரம், அஸ்தினபுரம் - அஸ்தினாபுரம் (பாண்டவரின் இராஜதானி நகர்).
அத்தினி-நால்வகைப் பெண்ணி ணொருத்தி, பெண் யானை.
அத்து - எல்லை, [அசைச் சொல், அரைப் பட்டிகை, இசைப்பு, சாரியை (உ-ம்.) மாடத்துக்கு, சிவப்பு, செவ்வை, தைத்தல்.
அத்துணை - அவ்வளவு.
அத்துமம் - அரத்தை.
அத்துலாக்கி - கருஞ்சீரகம்.
அத்துவம் - சிவப்பு, இரண் டொன்று யிருத்தல், ஒன் றிப்பு, வழி.
அத்துவர்க்காயம், அத்துவாக்கா யம் - கருஞ்சீரகம்.
அத்துவானம்-பாழ்ங்காடு, [செவ் வானம்].
அத்துவிதம், அத்துவைதம் - பர மாத்துமாவுஞ் சீவான்மாவு மொன்றென்கை.
அத்தை-தலைவி, முன்னிலையசை ச்சொல் (உ-ம்.) சொல்லியரத் தை நின்வெகுளி, அக்காள்.
அத்தோ-அதிசய விரக்கச்சொல், இரக்கச்சொல்.
அத்தோதயம், அருத்தோதயம் - அறுபது யாண்டிற் கொரு தரம் தைமாதத்து ஞாயிற்றுக் கிழமையில் கதிரவன் மகரத் திலும் சந்திரன் திருவோண நட்சத்திரத்திலு மிருந்து ஒன் றாக உதயமாகும் ஒரு விசேஷ தினம்.
அநகம்-பாவமின்மை,மாசின்மை.
அநகன் - அருகன், கடவுள்.
அநங்கம் - உடலின்மை, இருவா ட்சி, மல்லிகை.
அநங்கன் - உடலிலான், மன்ம தன், கடவுள்.
அநந்த சதுர்த்தசி - திருமாலைப் பூசிக்கு மொரு விசேஷ நாள். இது புரட்டாசி மாதத்துச் சுக் கில பட்சச் சதுர்த்தசி திதியில் வரும்.
அநந்தசயனம் - சர்ப்பசயனம், ஓர் விஷ்ணு ஸ்தலம்.
அநந்தசயனன், அநந்தசாயி-திரு வனந்தாழ்வான்மீது பள்ளி கொண்ட திருமால்.

அநந்தஞானி - கடவுள்.
அநந்தம்-அளவின்மை, ஆகாயம், ஒரெண், பொன்.
அநந்தரம் - மேல்.
அநந்தலோசனன் - கடவுள், புத்தன்.
அநந்தன் - அருகன், கடவுள், சிவன், சேடன், திருமால், பலபத்திரன்.
அநந்தை - பார்வதி, பூமி.
அநர்த்தம் - பயனிலாச் சொல்.
அநவரதம்* - எப்போழ்தும்.
அநாதரட்சகர் - கடவுள்.
அநாதரம் - மதியாமை.
அநாதரவு - உதவியின்மை.
அநாதன் - ஆதரவில்லாதவன்.
அநாதி - கடவுள், சிவன்.
அநாதி மலமுத்தர்-இயல்பாகவே பாசங்களி னின்றும் விலகியவர்.
அநாமிகை - ஆழிவிரல்.
அநாரதம் - எப்போழ்தும்.
அநாவிருஷ்டி - மழைக் குறைவு.
அநாவிலன் - சுக்கிரன்.
அநித்தம் - அநித்தியம்.
அநித்தியம்-நிலையின்மை, பொய்.
அநிமாலினம் - சாவு.
அநியாயம்* - நியாயமின்மை.
அநிருத்தன் - ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் பௌத்திரன் (மன்மதன் மகன்).
அநிலநாள் - சோதிநாள், விசாகநாள்.
அநிலம் - காற்று, பிறப்பு.
அநிலன் - ஒரவுணன், வாயு.
அநீகம் - ஓர் படையின் தொகை.
அநீதம்* - நீதியின்மை.
அநீதர் - கீழ்மக்கள்.
அநீதி* - நியாயமின்மை.
அநு - கதுப்பு, தொடர்ச்சி, ஓர் உபசருக்கம்.
அநுகம் - செஞ்சந்தனம். [ப்பு.
அநுகரணவோசை - ஒலிக்குறி
அநுகுணம் - தகுதியானது.
அநுகூலம்* - காரியசித்தி.
அநுக்கம் - சந்தனம், சோம்பு, பயம், பாம்பு, வருத்தம்.
அநுக்கிரகம் - கிருபை.
அநுக்கிரமணிகை - பொருளட்டவணை.
அநுசரணை - இசைவு, சார்பு.
அநுசன் - தம்பி.
அநுசாசனம் - கட்டளை.
அநுசிதம்-தகுதியின்மை, பொய்.
அநுட்டானம் - ஒழுக்கம், நிலைநிறுத்தல்.
அநுதாத்தம்-வேதஸ்வரம் நான்கினொன்று.
அநுதாபம் - பின் இரங்கல்.
அநுத்தம் - பொய்.
அநுநாதம் - எதிரொலி.
அநுபந்தம் - தொடர்ச்சி, அபிப்பிராயம்.
அநுபமை - உவமை யின்மை, தென்மேற்றிசை யானைக்குப் பெண் யானை.
அநுபல்லவி - கீர்த்தனையின் இரண்டாவது உறுப்பு. [றிவு.
அநுபவம் - தானே கண்டறியும
அநுபோகம் - அனுபவம்.
அநுமக்கொடியோன் - அருச்சுனன்.

அநுமதி - சம்மதி, [பௌரணை].
அநுமந்தன், அநுமான்-அஞ்சனை யென்பவளுடைய புத்திரன்.
அநுமானம் - ஓர் பிரமாணம், சந்தேகம்.
அநுராகம் - ஆசை.
அநுலோமன் - உயர்குலத் தந்தைக்கு மிழிகுலத் தாய்க்கும் பிறந்த பிள்ளை.
அநுவசனம் - ஒத்த வாக்கியம்.
அநுவழி - புதன்.
அநுவாதம் - முன்கூறிய பொருளை ஒரு காரணத்தால் பின்னரும் கூறல்.
அநூரு - சூரியன் றேர்ப்பாகன், புதன், முடவன்.
அநேகம்* - பல.
அநேகன் - கடவுள்.
அந் - எதிர்மறையுபசருக்கை.
அந்தகன்-குருடன், [சனி, நமன், புல்லூரி, சவுக்காரம், அழிப்போன்].
அந்தகாரம் - இருள், [நரகம், மனவிருள்].
அந்தகாரி - சிவன்.
அந்தகாலம் - மரண காலம், (உ-ம்.) "அந்தகாலம் அடைவதன் முன்னம் அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்" (திருவாய்மொழி).
அந்தகோரம், அந்தகோலம், அந்தகோளம் - நெல்லி.
அந்தக்கரணம் - மனம்.
அந்தக்கேடு* - அழகின்மை.
அந்தணர் - பார்ப்பார், முனிவர்.
அந்தணர்வாக்கு - வேதம்.
அந்தணன்-அருகன், சனி, சிவன், பிரமன், வியாழன்.
அந்தணாளர் - பார்ப்பார், முனிவர், அரசர்க் குறுதிச்சுற்றத்தி னொருவர்.
அந்தஸ்து* - நிருவாகம், நிலை.
அந்தப்புரம் - அரசன் றேவியிருக்கை.
அந்தம் - அழகு, [கடை, கத்தூரி, சாவு].
அந்தரங்கம் - இரகசியம், [ஏகாந்தம், மனம், ஆலோசனை].
அந்தரச்சிந்து - கற்பாஷாணம்.
அந்தரஸ்தானம், அந்தரத்தானம்- ஆகாயநிலை.
அந்தரதுந்துபி - ஓர் வாச்சியம்.
அந்தரம் - அளவு, ஆகாயம், இடை, இருள், கூட்டம், தனிமை, தீமை, தேவர் கோயில், பேதம், முடிவு.
அந்தரவல்லி - கருடன்கிழங்கு.
அந்தரவாசி-ஆகாயகமனஞ்செய்பவன்.
அந்தராத்மா - உயிர்க்குள்ளுயிராயிருப்பவன்.
அந்தராயம் - தீமை.
அந்தராளம்-நடு, கர்ப்பக்கிருகம்.
அந்தராளன் - அநுலோமத் தந்தைக்கும் பிரதிலோமத் தாய்க்கும் பிறந்த பிள்ளை.
அந்தரி - துர்க்கை, பார்வதி, ஒருவகைத் தோற்கருவி.
அந்தரித்தல் - நிலைகெடுதல், மனந்தடுமாறல்.
அந்தரியாமி - கடவுள், சீவசாட்சி.

அந்தர் - உள், மறைவு, கீழ்மக்கள்.
அந்தர்த்தானம் - மறைவிடம்.
அந்தளம் - கவசம்.
அந்தன் - குருடன், சனி, கடுக்காய்.
அந்தாதி - ஓர் தொடை, ஓர் பிரபந்தம், கடவுள்.
அந்தாளிபாடை - ஓர் பண்.
அந்தி - பொருந்தென்னேவல், மாலைக்காலம், முத்தெருக்கூடிடம், இரா, தில்லைமரம்.
அந்திகாவலன் - மாலைக்காலத்தில் தெருக்களில் காவலாக உலாவும் தேவதை.
அந்திசந்தி - காலைமாலை.
அந்தித்தல் - பொருந்தல்.
அந்திபகல்* - இராப்பகல், [எப்பொழுதும்].
அந்திமந்தாரை - ஓர் பூமரம்.
அந்திமான் - இடையெழு வள்ளலி லொருவன்.
அந்தியகருமம் - சாச்சடங்கு.
அந்தியகாலம்* - மரணகாலம்.
அந்திரக்கண்மணி - நீலக்கல்.
அந்திரக்கொடிச்சி - கெந்தகம்.
அந்தில் - அசைச்சொல், (உ-ம்.) அந்திற்கச்சினன் கழலினன், அவ்விடம், (உ-ம்.) சேயிழையந்திற் கொழுநற்காணிய.
அந்திவண்ணன் - சிவன்.
அந்து - நெல்வண்டு, [கிணறு, பாதகிண்கிணி].
அந்துகம் - சங்கிலி, யானைச்சங்கிலி, பாதகிண்கிணி.
அந்தோ - அதிசய விரக்கச்சொல், இரக்கச்சொல்.
அந்தோர் - நெல்லி.
அந்நியபுட்டம் - குயில்.
அந்நியம் - அயல், குயில்.
அந்நியர் - பிறர்.
அப-ஓரெதிர்மறை யுபசருக்கை.
அபகடம் - அவகடம்.
அபகரி* - கொள்ளையிடு, வஞ்சனையாய்க் கவர்.
அபகாரம்* - நன்மைக்குத் தீமை செய்தல்.
அபகீர்த்தி* - நிந்தை.
அபக்கியாதி - நிந்தை, பழி.
அபசகுனம் - துர்நிமித்தம்.
அபசயம்* - தோல்வி.
அபசவ்வியம் - இடப்பக்கம் (சதுரகராதி), வலப்பக்கம்.
அபசாரம் - துற்செய்கை, துன்னடை.
அபசாரி, அபிசாரி, அவிசாரி* - வேசி.
அபதூறு* - பழிச்சொல்.
அபத்தம் - பொய்.
அபத்தியசத்துரு - நண்டு.
அபத்தியம் - பத்தியத்தவறு.
அபமிருத்தியு, அபமிருத்து - துர்மரணம்.
அபயஸ்தம் - அடியார்க்கு அஞ்சன்மின் என்று கூறுவதுபோலும் ஆண்டான் தனது கையை மார்பகத்தே அமையச் செய்தல்.
அபயம் - அடைக்கலம், [அச்சமின்மை, தயை].
அபயர் - படைவீரர்.
அபயவாக்கு - தன்னை யடுத்தவனுக்கு அஞ்சேலெனல்.

அபயன் - கடவுள், சூரன், சோழன்.
அபரசன் - தம்பி.
அபரஞ்சி - புடம்வைத்த பொன்.
அபரபக்கம், அபரபட்சம் - அமரபட்சம் (தேய்பிறை).
அபரம் - கவசம், நரகம், பிணக்கு, பின் பக்கம், முதுகு, யானைப் பின்கால்.
அபராணம் - அந்திப்பொழுது.
அபராதம் - தண்டித்தல், குற்றம்.
அபராதி* - குற்றவாளி.
அபரிமிதம் - அளவின்மை, [பெருமை].
அபரோட்சம் - கடவுளைத் தரிசிக்கை.
அபலம் - பயனின்மை.
அபவருக்கம் - முத்தி.
அபவாதம் - ஒவ்வாப் பேச்சு, பழிச்சொல்.
அபவாரணம் - மறைவு.
அபாங்கம் - கடைக்கண்பார்வை.
அபாண்டம்* - பொய்க் குற்றச் சாட்டு.
அபாநன் - தசவாயுவி லொன்று.
அபாயம் - ஆபத்து, மோசம்.
அபாரனை - உண்ணுமை.
அபாரம் - அளவின்மை, [பரம் பொருள்].
அபானம் - குதம், கடுக்காய்.
அபானவாயு - கீழ்நோக்கிச் செல்லுங் காற்று.
அபிசாரகம் - மந்திரத்தாற் கொல்லல்.
அபிசாரவோமம் - மாரணவோமம்.
அபிசாரி* - வியபிசாரி.
அபிஷேகம், அபிடேகம் - திருமுழுக்கு.
அபிதானம் - பெயர்.
அபிநயம் - கை மெய்காட்டல், காமக்குறிப்பு, கூத்து.
அபிநயர் - கூத்தர்.
அபிநயித்தல் - அபிநயஞ் செய்தல்.
அபிநவம் - புதுமை.
அபிநிவேசம் - தொழிலிற் பிரவேசிக்கை, முயற்சி.
அபிப்பிராயம் - உட் கருத்து, நோக்கம்.
அபிமந்திரித்தல் - ஒன்றிலே மந்திர வுருவேற்றல்.
அபிமன்னு - அருச்சுனன் மகன்.
அபிமாநம் - களிப்பு, [மானம்].
அபிமான புத்திரன் - ஸ்வீகார புத்திரன், அபிமான ஸ்திரீயினிடம் பிறந்த பிள்ளை.
அபிமானி - அபிமான முடையோன்.
அபிமுகம் - நேர்முகம்.
அபிராமம் - அழகு.
அபிராமி - சரச்சுவதி, பார்வதி.
அபிலாசம் - விருப்பம்.
அபிவியத்தம் - தெளிவு, வெளிப்படை.
அபிவிருத்தி - மிகுதியாய்ப் பெருகுதல்.
அபினி - ஓர் லாகிரி வஸ்து.
அபின்னம் - ஒற்றுமை.
அபின்னசத்தி - மாயை.
அபீட்டம், அபீஷ்டம் - மிகுவிருப்பம்.

அபூதவுவமை - இல்பொருளுவமம்.
அபூபம் - அப்பவருக்கம்.
அபூருவம், அபூர்வம்*- அருமை.
அபேட்சித்தல் - விரும்பல்.
அபேட்சை* - விருப்பம்.
அபேதம் - பேதமின்மை.
அபையம்* - அபயம்.
அபையன் - கடுக்காய்.
அப்சரசுக்கள் - தேவலோகத்துள்ள வேசிகள்.
அப்தம் - ஆண்டு.
அப்ப, அப்படா - ஓர திசயச்சொல்.
அப்படி - அவ்வாறு.
அப்பட்டம்* - கலப்பற்றது.
அப்பட்டா - வட்டத்திருப்பி.
அப்பணை - ஆதாரம், உத்தரவு, பிணை.
அப்பத்தாள் - அக்காள்.
அப்பம் - அடை, சிற்றுண்டி.
அப்பர் - திருநாவுக்கரையர்.
அப்பல் - அப்புதல், [அணிதல், மோதல்].
அப்பளம்*-ஓர்வகைப்பணிகாரம்.
அப்பளாகாரம்* - உறைப்பு முவர்ப்புமுள்ள ஓர் பொருள்.
அப்பன்* - தந்தை.
அப்பால்* - பிறகு, மேலும்.
அப்பியங்கம் - அப்பியங்கனம் - முழுக எண்ணெய் பூசுதல்.
அப்பியசித்தல், அப்பியாசித்தல்- பழகல்.
அப்பியாசம் - பயிற்சி, பழக்கம்.
அப்பிரகம்* - ஓர்வகை லோகக் கல்.
அப்பிரமேயம் - ஒரெண்.
அப்பிரமேயன் - கடவுள்.
அப்பிரமை - கீழ்த்திசை யானைக் குப் பெண்யானை.
அப்பிரம் - மேகம்.
அப்பிராகிருதம் - பிரதானமானது, மேலானது.
அப்பிராணி - ஏழை, உயிரில்லாதது.
அப்பு - நீர், கடல்.
அப்புதல்* - ஒற்றல், பூசுதல், கௌவல்.
அப்புது - யானையைப் பாகன் அதட்டுமோசை.
அப்புறப்படுத்தல்* - இடம் மாற்றல்.
அப்புறம்-பிறகு, [அந்தப்பக்கம்].
அப்பை - அப்பைக்கோவை, கொன்றை.
அப்பொழுது, அப்போது, அப்போழ்து - அக்காலத்தில்.
அமங்கலம் - மங்கல மில்லாதது.
அமங்கலி, அமங்கலை - கைம்பெண்.
அமச்சன் - மந்திரி, வியாழன்.
அமஞ்சி* - கூலிதராது வாங்கும் வேலை.
அமடு - பொல்லாங்கு, மடிப்பு.
அமட்டுதல் - புரட்டுதல், மேற்கொள்ளல்.
அமணம் - இருபதினாயிரம் பாக்கு, அம்மணம்.
அமணர் - சமணர்.
அமண் - சமணமதம்.
அமண்டம் - ஆமணக்கஞ் செடி.

அமரகோஷம் - அமரசிம்மன் செய்த ஓர் கிரந்த நிகண்டு.
அமரபக்கம் - தேய்பிறை.
அமரமாதர் - தெய்வமாதர்.
அமரம் - அமரகோஷம், ஓர்வித கண்ணோய், தோணியின் பிற்பக்கம், ஆயிரங் காலாட்களை யாளுகை.
அமரர் - வானோர், பகைவர்.
அமராடல் - சண்டைசெய்தல்.
அமரார் - பகைவர்.
அமராவதி - பொறுமைக் குணமுடையவள், [தேவேந்திர நகரம்].
அமராவதியோன் - தேவேந்திரன்.
அமரி-அமிழ்து, துர்க்கை, விடம், சிறுநீர்.
அமரிக்கை* - அமைதி (அடக்கம்).
அமரிதம் - கடுக்காய்.
அமரியம் - குருந்தம், செண்பகப்பூ.
அமரியுப்பு - சிறுநீரி லிருந்தெடுக்கும் உப்பு.
அமருதல்* - அடங்குதல்.
அமரேசன் - புரந்தரன்.
அமர் - போர், [மதில், மூர்க்கம், விருப்பம்].
அமர்க்களம்* - போர்க்களம்.
அமர்தல் - அடங்குதல், அமைதல், [இருத்தல், பெருமை, பொலிவு, மிகுதி].
அமர்த்தல் - அமர்த்துதல், [பொருதல்].
அமலகமலம் - கோசலம்.
அமலகம் - நெல்லி.
அமலம் - அழுக்கின்மை, அழகு.
அமலன் - அருகன், கடவுள், குற்றமில்லாதவன்.
அமலை - இலட்சுமி, பார்வதி, ஒலி, திரளை (மணிமே.), சோறு, மிகுதி, கூத்து (சிலப்ப.).
அமல், அமுல் - விசாரணை.
அமளி - ஆரவாரம், [மக்கட்படுக்கை, மெத்தை].
அமளை - கடுரோகிணி.
அமாத்தியர் - மந்திரிகள், தந்திரிகள்.
அமார் - கப்பக்கயிறு.
அமாவசி, அமாவாசி, அமாவாசியை - செங்கதிரோனும் வெண்கதிரோனுங் கூடும் நாள்.
அமானம் - அளவின்மை.
அமிசம்-பங்கு, பாகை, பின்னம்.
அமிசு - சூரியன், அணு, பிரபை.
அமிசை* - அதிர்ஷ்டம், நல்வினை.
அமிஞ்சி* - அமஞ்சி.
அமிதம் - அளவின்மை.
அமித்திரர் - பகைவர்.
அமிருதம், அமிர்தம் - பால், [அமுதம், இறவாமை, தேவ வூண், மூர்ச்சை தீர்த்துயிர் தருமருந்து, பால், இனிப்பு].
அமிர்தகலை - சந்திரகலை.
அமிர்தசஞ்சீவினி - உயிர்தரு மருந்து.
அமிர்தசாரம் - கற்கண்டு.
அமிர்தவல்லி - சீந்திற்கொடி.
அமிர்தை-அழிவின்மை, நெல்லி, வெள்ளைப்பூண்டு.

அமில்தார் - ஓரதிகாரி.
அமிழ்தம் - அமுதம்.
அமிழ்தல் - ஆழ்தல்.
அமிழ்த்தல் - அழுத்தல், தாழ்த்தல்.
அமீர் - மகம்மதிய பிரபு.
அமீனு - ஓர் உத்தியோகஸ்தன்.
அமுக்கல்* - உள்ளே யமிழப் பண்ணல்.
அமுக்கனங்கிழங்கு - அசுவ கெந்தி.
அமுக்கன்*-இரகசியத்திற் கரும முடிப்போன், தந்திரக்காரன்.
அமுக்கிரு, அமுக்குரா - அசுவ கெந்தி.
அமுங்கல் - அழுந்தல்.
அமுசம் - சிறுசெருப்படை.
அமுசு - ஒட்டறை.
அமுதகிரணன் - சந்திரன்.
அமுதகுலர் - இடையர்.
அமுததாரணை - மௌனயோகிக்குச் சிரசில் மூளையிலிருந்துண்டாகும் அனுபவம் ஆதாரணை உணவு ஆகிய அமுத மூலகாரணம்.
அமுதபார்வை - பிரியநோக்கு.
அமுதபுட்பம் - சிறுகுறிஞ்சா.
அமுதம் - பால், [இனிமை, தேவருணவு, நீர், பெருமை, முத்தி, வேண்டல்].
அமுதர் - இடையர், வாணோர்.
அமுதவல்லி - சீந்தில், இலட்சுமி.
அமுதவெழுத்து - செய்யுள் அல்லது சொல்லின் தொடக்கத்தில் வரும் சுபவெழுத்து.
அவை அ, இ, உ, எ, க், ச், த், ந், ப், ம், வ்.
அமுது-அமுதம், சுவை, சோறு, நீர், பால்.
அமுதுசெய்தல் - புசித்தல்.
அமுதுபடி* - அரிசி.
அமுதூட்டல் - சோறு அல்லது பாலுண்பித்தல்.
அமுரி - சிறுநீர்.
அமுல் - களவு.
அமேத்தியம் - அசுத்தம்.
அமை - மூங்கில்.
அமைச்சர் - மந்திரிகள்.
அமைச்சு - மந்திரி, மந்திரித்தனம்.
அமைதல் - சம்மதித்தல், பொருந்தல்.
அமைதி - அடக்கம், [சமயம், மாட்சிமை].
அமைத்தல் - சமைத்தல், செய்தல்.
அமைப்பு - விதி, [நியமிப்பு].
அமையம் - காலம், இலாமிச்சை.
அமைவு - அடக்கம்.
அமோகம் - மிகுதி, பெருகுந்தன்மை.
அம் - அழகு, இடைச்சொல், சாரியை, நீர், மேகம்.
அம்சம் - அன்னப்புள்.
அம்பகம் - கண், எழுச்சி, உத்தரவு, செம்பு, கூத்தாடிக்குப் பொருந்திய கூலி.
அம்பகன் - சீர்பந்தபாஷாணம்.
அம்பஷ்டை - வட்டத்திருப்பி.
அம்பட்டச்சி, அம்பட்டத்தி - நாவிதப் பெண்.

அம்பட்டன் - நாவிதன்.
அம்பணத்தி - துர்க்கை.
அம்பணம் - ஆமை, துலாக்கோல், நீர், மரக்கால், வாழை, தாகாளக்கு மரக்கால் 'அம்பணவளவைய ரெங்கணுந்திரிதரக்' (சிலப்ப.).
அம்பணவர் - பாணர் (சிலப்ப.).
அம்பரம் - ஆகாயம், சீலை, கடல், திசை.
அம்பரைநாதம் - அப்பிரகம்.
அம்பர் - ஓர் மருந்து, [அவ்விடம், சோழநாட்டிலோரூர்].
அம்பலக்காரன் - கள்ளச் சாதித் தலைவன், சபையின் தீர்மானம் வெளியிடுபவன்.
அம்பலக்கூத்தன், அம்பலத்தாடி - நடனசபாபதி (சிவன்).
அம்பலத்தி - தான்றிக்காய்.
அம்பலம் - சவை, சித்திரகூடம், வெளி.
அம்பலவிருட்சம் - தில்லைமரம்.
அம்பல் - சிலரறிந்து தம்முட் புறங்கூறல், பழிமொழி.
அம்பறுத்தூணி - அம்புக்கூடு.
அம்பாரம்* - அடுக்கு, குவியல்.
அம்பாரி* - யானைமேற் றவிசு (அவுதா).
அம்பாலிகை - தருமதேவதை, பாண்டுவின் தாய்.
அம்பால் - தோட்டம்.
அம்பாவனம் - சாபம் (எண்காற்புள்).
அம்பி - இறைகூடை, ஓடம், சலசூத்திரம், தாம்பணி, தெப்பம், மரக்கலம், மிடா.
அம்பிகாபதி - சிவன், கம்பநாட்டாழ்வார் புதல்வன்.
அம்பிகை - பார்வதி, காளி, தருமதேவதை, திருதராட்டிரன் தாய்.
அம்பிகைதநயன், அம்பிகைபுதல்வன் - விநாயகன், குமரன்.
அம்பிகைபாகன் - சிவன்.
அம்பு - கணை, [எலுமிச்சை, தளிர், நீர், மூங்கில், மேகம், சரகாண்டபாஷாணம்].
அம்புக்குதை - அம்பினிறகு.
அம்புசம் - தாமரை.
அம்புசாதம் - தாமரை.
அம்புதம் - நீர், மேகம், கோரைக்கிழங்கு.
அம்புதி - சமுத்திரம்.
அம்புயம் - தாமரை, இறைகூடை.
அம்புயன் - பிரமன்.
அம்புரம் - கீழ்வாயிற்படி.
அம்புராசி - கடல்.
அம்புலி, அம்புலிமான் - சந்திரன்.
அம்புவாகினி - எலுமிச்சை, பாதிரிப்பூ.
அம்புவி - உலகம்.
அம்பை - காசிராஜனது குமாரி, வெட்டிவேர்.
அம்போதரங்கம் - கலிப்பாவினோருறுப்பு, அது நாற்சீரடியு முச்சீரடியு மிருசீரடியுமாய்த் தாழிசைக்குந் தனிச்சொற்கு நடுவே யேனும் அராகத்திற்குந் தனிச்சொற்கு நடுவே யேனு நிற்பது.

அம்போதி - கடல், காற்று, பாட்டினருத்தம்.
அம்போருகம் - தாமரை.
அம்ம - உரையசைச் சொல் (உ-ம்.) பயனின்று மனறம் மகாமம்), கேளெனல் (உ-ம்.) அம்மவாழி தோழி.
அம்மட்டு - அவ்வளவு.
அம்மணம் - நிருவாணம், [சோரமார்க்கம்].
அம்மம் - முலை.
அம்மனை - அம்மானை, [தாய்].
அம்மா - அதிசயச்சொல், விளிச்சொல், தாய்.
அம்மாச்சி-தாய், தாயைப்பெற்ற பாட்டி.
அம்மாத்திரம் - அவ்வளவு.
அம்மாம்பச்சரிசி - சிற்றிலைப்பாலாவி, [சீதேவியார்].
அம்மாய் - தாயைப் பெற்றவள்.
அம்மாள் - தாய்.
அம்மானை - ஓர் விளையாட்டு.
அம்மான் - மாமன், [தகப்பன்].
அம்மி - அம்மிக்கல், [மாமி].
அம்மியம் - கள், காளம், சிறுசின்னம்.
அம்மெனல் - ஒலிக்குறிப்பு.
அம்மை - வைசூரி, [தவப்பெண், அழகு, தருமதேவதை, தாய், பார்வதி, வருபிறப்பு].
அம்மையப்பர் - உமாபதி.
அம்மையார்கூந்தல் - சவரியார்கூந்தல்.
அம்மைவார்த்தல் - வைசூரி காணல்.
அம்ருதம் - அமிர்தம்.
அயகம் - சிறுகுறிஞ்சா, வசம்பு.
அயக்காந்தம் - ஊசிக்காந்தம்.
அயக்கிரீவன் - ஓரசுரன், திருமால்.
அயசு - பொல்லாநிலம், உருக்கு, எஃகு.
அயசுபடில் - வெள்ளீய மணல்.
அயச்சிந்தூரம் - இரும்புச் சிந்தூரம்.
அயநம் - பிறப்பு, வருடப்பாதி, வழி.
அயபற்பம் - இரும்புத்தூள்.
அயமரம் - அலரி.
அயமாரணம் - அரசமரம்.
அயமுகம்-ஒரிருக்கை (சிலப்ப.).
அயம் - ஆடு, இரும்பு, குதிரை, குளம், சேறு, நல்வினை, நிலம், நீர், விழா.
அயரப்போடல் - அடரப்போடல்.
அயர் - வாட்டம், வருத்தம்.
அயர்ச்சி - பலவீனம், சோம்பு, மறதி, உணர்வழிவு.
அயர்தல் - தளர்தல், செய்தல்.
அயர்ப்பு - மறதி.
அயர்வு - தளர்வு, சோம்பு, வருத்தம், வெறுப்பு, உன்மத்தம், அகலம்.
அயர்வுயிர்த்தல் - வருத்தந் தீர்தல்.
அயலவன், அயலான் - பிறன், அண்டையிலுள்ளவன்.
அயல் - அருகிடம், அன்னியமானது.
அயவாகனன் - அக்கினி பகவான்.

அயவாரி - வசம்பு.
அயவி - சிற்றரத்தை.
அயனம் - அயநம்.
அயனுள் - உரோகணிநாள்.
அயன் - அருகன், பிரமன், தசரதன் தந்தை.
அயன்மனைவி - சரச்சுவதி.
அயா - வருத்தம் (மணிமே.).
அயாவுயிர்த்தல் - பெருமூச்சு விடல்.
அயிக்கம்* - ஐக்கியம்.
அயிச்சுவரியம் - ஐசுவரியம்.
அயிணம் - மான்றோல்.
அயிரம் - கண்டசருக்கரை.
அயிராணி - வருத்தம், [இந்திராணி, பார்வதி].
அயிராவணம், அயிராவதம் - தேவேந்திரன் யானை.
அயிரி - மீன்முள் ளரிந்திடுகத்தி.
அயிரை - ஓர் மீன், நுண்மணல், ஓர் யாறு (சிலப். 28:145.)
அயிர் - சருக்கரை, நுண்மணல், நுண்மை.
அயிர்ப்பு - சந்தேகம்.
அயிலல், அயிலுதல் - உண்ணல்.
அயிலான் - வேலாயுதன்.
அயில் - அழகு, இரும்பு, உண்ணென்னேவல், கூர்மை, கைவேல், கோரை, நாஞ்சில்.
அயிறல் - உண்டல்.
அயினி - சோறு.
அயின்றல் - உண்டல்.
அயின்றுள் - தாய்.
அயுக்தம் - பொருத்தமில்லாதது.
அயுதம் - பதினாயிரம்.
அயோக்கியதை*, அயோக்கியம்* - யோக்கியக்குறைவு.
அயோக்கியன் - நாணய மற்றவன்.
அயோத்தி - சீராமன் அவதரித்த நகர்.
அயோநிசன் - அசாதாரண தோற்றத்தை யுடையவன்.
அய்யவி - சிறுகடுகு.
அய்யோ* - துன்பச்சொல்.
அரகர - சிவசிவ.
அரக்கம் - நன்னாரி.
அரக்கர் - இராக்கதர்.
அரக்கல் - தேய்த்தல், வியங்கோண்முற்று.
அரக்காம்பல் - செவ்வாம்பல்.
அரக்கி - இராட்சதஸ்திரீ.
அரக்கு - சிவந்த மெழுகு, [சிவப்பு, சாதிலிங்கம், சாராயம், தேன்].
அரக்குமஞ்சள்* - பூசுமஞ்சள்.
அரங்க* - முற்றுக.
அரங்கம் - ஆற்றிடைக்குறை, சத்திரம், சாலை, சிலம்பக்கூடம், நாடகசாலை, போர்க்களம், சீரங்கம், சுடுகாடு (சிலப்ப. 6:36.)
அரங்கல் - அழுந்தல்.
அரங்கன் - சீரங்கத்தே பாம்பணைப்பள்ளிகொண்ட பரந்தாமன்.
அரங்கு - இடம், சூதாடற்கு வகுத்தவறை, அறை, போர்க்களம், ஒரில்.
அரங்கேற்றுதல் - சபையிலேறச் செய்தல்.
**அரசராறுதொழில்** - ஈதல், உலகோம்பல், ஓதல், படைபயிற்றல், பொருதல், வேட்டல்.

அரசனுயிர்காத்தோன் - காண்டா மிருகம்.
அரசன் - இராசா, [எப்பொருட்கு மிறைவன், வியாழம், கார்முகிற்பாஷாணம்].
அரசாட்சி - இராசாவினுளுகை.
அரசாணி - கலியாணப்பந்தருள் அரசங்கால் நாட்டும் மேடை, [இராசாத்தி].
அரசி - இராசாத்தி, தலைவி.
அரசியல் - இராசரிக முறை.
அரசிருக்கை - சிம்மாசனத்திருக்கை.
அரசு - இராசாங்கம், இராசா, ஓர் மரம், நாடு, வியாழம்.
அரட்டர் - குறும்பர், [குருநில மன்னர்].
அரணம் - கதவு, கவசம், காவற்காடு, கோட்டை, தொடுதோல், மஞ்சம், மதில், வேலி, வேல்.
அரணி - கவசம், தீக்கடைகோல், சூரியன், காடு, மதில்.
அரணியம் - காடு.
அரணை* - ஒரு செந்து.
அரண் - அழகு, காவல், காவற்காடு, கோட்டை, மதில்.
அரண்மனை, அரமனை* - இராஜக்கிருகம்.
அரண்யம் - காடு.
அரதனம் - அகன்மணி, சிலம்பணி, நவமணிப்பொது.
அரதி - வேண்டாமை.
அரதேசி - உள்ளூரில் திரிபவன் (அகதேசியென்பது இவ்வாறு சிதைந்து வந்தது).
அரத்தம் - அரக்கு, இரத்தம், கடம்பு, சிவப்பு, செங்குவளை, செம்பஞ்சு, செம்பரத்தம், செம்மை, பவளம், பொன்.
அரத்தன் - செவ்வாய்.
அரத்தோற்பலம் - செங்குவளை.
அரந்தை - துன்பம்.
அரபொடி - இரும்புத்தூள்.
அரமகளிர் - தெய்வப்பெண்கள்.
அரமனை* - இராசமனை.
அரமியம் - வீட்டின்மேலுலாவும் வெளி, பிரமிப்பூண்டு, நிலா முற்றம்.
அரம் - ஓர் கருவி, [பாதலம், குகை].
அரம்பிலம் - பாதாளம்.
அரம்பு - குறும்பு, தீமை.
அரம்பை - தெய்வப்பெண், [வாழை, அசமதாகம்].
அரம்பையர் - தேவமாதர்.
அரயன் - அரசன்.
அரரம் - கதவு.
அரலை - கடல், கழலைக்கட்டி, கொட்டை, மரல், குற்றம்.
அரவக்கொடியோன் - துரியோதனன்.
அரவணிந்தோன் - சிவன்.
அரவணைச்செல்வன் - திருமால்.
அரவம் - பேரொலி, பாம்பு, ஆயிலியம், ஒலி, சிலம்பு.
அரவாபரணன் - சிவன்.
அரவிந்தம் - தாமரை, மன்மதன் கணை.
அரவிந்தலோசனன் - திருமால்.
அரவு - பாம்பு.
அரவுநாள் - ஆயிலியநாள்.

அரவுயர்த்தோன் - துரியோதனன்.
அரளல் - பிரமித்தல்.
அரளி - பீநாறிமரம்.
அரற்றுதல்-அழுதல், ஒலித்தல்.
அரனிடத்தவள் - பார்வதி.
அரன் - சிவன், எப்பொருட்கு மிறைவன்.
அரன்மகன் - குமரன், விநாயகன், வீரபத்திரன்.
அரன்றோழன் - குபேரன்.
அரா-பாம்பு, அராவென்னேவல்.
அராகம் - ஓர் பண், அடங்காமை, பாலையாழ்த்திறம், பொன், முடுகியல்.
அராத்தல் - தேய்த்தல்.
அராபதம் - வண்டு, போர்.
அராமம் - பைங்கூழ் (பயிர்), சோலை.
அராமி* - கெட்டவள், கெட்டவன்.
அராவல்-உராஞ்சல், தேய்த்தல்.
அராவாரம் - திராக்ஷிப்பழம்.
அராவைரி - கருடன், மயில், கீரி.
அராளம் - இருவாட்சி, வெள்ளைக் குங்கிலியம்.
அரி - அரியென்னு மேவல், [அடர்பு, அரிசி, அரித்தல், ஆயுதப் பொது, ஈர்வாள், உட்டுளைப் பொருள், ஐமை வடிவு, ஒளி, கடல், கட்டில், கண்வரி, கள், காற்று, கிளிஞ்சில், குதிரை, குரங்கு, குற்றம், கூர்மை, சக்கரம், சந்திரன், சிங்கம், சிங்கவிராசி, சிலம்பின் பருக்கைக்கல், சிலம்பு, சூரியன், செம்மறியாட்டுக்கடா, சோலை, தவளை, தீ, தேர், தேவேந்திரன், நமன், நிறம், நெருக்கம், நெற்கதிர், பகை, பச்சை, படுக்கை, பறை, பன்றி, பாம்பு, புகை, பொன், மரகதம், மரவயிரம், மலை, மழைத்தாவல், மாலை, மூங்கில், வண்டு, வரி, வலி, விசி, திருமால்].
அரிகண்டபுலவர் - காளமேகப்புலவர்.
அரிகண்டம் - தொந்தரை, [கழுத்தில் கத்தி கட்டிக்கொண்டு எதிரி வினவும் கேள்விக்குத் தகுந்தவாறு விடை கூறுதல், நவகண்டத்தி லொன்று].
அரிகரபுத்திரன் - ஐயனார்.
அரிகள் - பகைவர்.
அரிகூடம் - கோபுரவாயில்.
அரிக்கண்சட்டி - அரிசி யரிக்கிற சட்டி.
அரிக்குதல் - அரித்துப் போடுதல், தினவு பிடித்தல், பேச்சினால் வருத்துதல்.
அரிசனம் - மஞ்சள்.
அரிசி - தண்டுலம்.
அரிச்சந்தனம் - ஐந்தருவிலொன்று.
அரிச்சந்திரன் - சத்தியமே ஒருருவாய்வந்த ஒரு மன்னவன் (அவன் திரிசங்குவின் புதல்வனவன்).
அரிச்சிகன் - சந்திரன்.
அரிச்சுவடி* - பாலர் கற்கப்புகும் அரிவரி யேடு.

அரிடம், அரீடம் - கடுகுரோகிணி.
அரிட்டம் - கள், காக்கை, கேடு, வெள்வெண்காயம், முட்டை, மோர்.
அரிட்டித்தல் - கொல்லல்.
அரிணம் - சிவப்பு, பொன், மான், யானை, வெள்ளை.
அரிணை - கள்.
அரிதகி - கடுக்காய்மரம்.
அரிதம் - திசை, பசும்புன்னிலம், பச்சை, பொன்னிறம்.
அரிதல் - அறுத்தல்.
அரிதாரம் - அரித்திராபம் (பொன்னிறம்), இலட்சுமி, ஓர் மருந்து.
அரிதாலம் - அரிதாரம்.
அரிதாளம் - நவதாளத்தொன்று, பொன்னரிதாரம்.
அரிதாள் - கதிரறுத்த தாள்.
அரிது - அரியது, [பச்சை].
அரித்தல் - மா முதலியவற்றைப் பிரித்தொழுக்குதல், தூசுநீக்கியெடுத்தல்.
அரித்திராபம் - பொன்னிறம்.
அரித்து - அரித்தலைச் செய்தென்னெச்சம், பச்சை.
அரித்துவாரம் - கங்காநதி உற்பத்தி ஸ்தானத்தேயுள்ள ஒரு புண்ணிய ஸ்தலம்.
அரித்தை - கிலேசம், துன்பம்.
அரிநெல்லி - ஒரு மரம்.
அரிந்தமன் - மகா விட்டுணு, வெற்றியாளன்.
அரிபாலுகம் - தக்கோலம்.
அரிப்பிரியை - இலக்குமி.
அரிப்பு - தினவு, குற்றம்.
அரிப்புக்காரன் - பொன் முதலியவற்றைத் தெரிக்கிறவன்.
அரிமஞ்சரி - குப்பைமேனி.
அரிமணல் - நுண்மணல்.
அரிமந்திரம் - சிங்கத்தின் குகை.
அரிமா - ஆண்சிங்கம், சிங்கம், சிங்கவிராசி.
அரிமுகவம்பி - சிங்கமுகவோடம்.
அரிய - அருமையான.
அரியகம் - காற்சரியென்னு மாபரணம் (சிலப்ப. 6:85.)
அரியணை - சிங்காசனம்.
அரியணைச்செல்வன் - அருகன்.
அரியம் - வாச்சியம்.
அரியல் - அரிதல், [கள், வியங்கோண்முற்று].
அரியாசனம் - சிங்காதனம்.
அரியாயோகம் - கருவிலக்காகப் புனைந்த அரைப்பட்டிகை.
அரியுண்மூலம் - கோரைக்கிழங்கு.
அரியேறி - தூர்க்கை.
அரில் - குற்றம், சிறுதூறு, பகை, பிணக்கு.
அரிவரி - எழுத்துவருக்கம் (அரிச்சுவடி).
அரிவாள்* - கூன்வாள்.
அரிவாள்மணை - கறி குறைக்குங் கருவி.
அரிவை - இருபத்தைந்து வயதுப் பெண், பெண்பொது, தெய்வப்பெண்.
அரு - உருவமற்றது, அணு, அறிவு, கடவுள்.

அருகம் - சமண்மதம்.
அருகர் - சமணர், பக்குவ நிலையி லுள்ளவர்.
அருகல் - அணைத்தல், கிட்டல், குறைதல், சாதல், வியங் கோள்முற்று.
அருகனைமுடிதரித்தாள் - தரும தேவதை.
அருகி - கள், சிறிதுசிறிதாகி.
அருகில் - சமீபத்தில்.
அருகு - சமீபம், அருகென்னே வல்.
அருகுறல் - கிட்டல்.
அருகே* - கிட்ட.
அருக்கம் - எருக்கு, குறைவு, சூரியன்.
அருக்களிப்பு* - அருவருப்பு.
அருக்கன் - சூரியன், சுக்கு.
அருக்காணி-அருமை, அழுத்தம்.
அருக்கியம்-மந்திரநீரிறைத்தல்.
அருக்கு - அருக்கென்னேவல், அருமை.
அருங்கலச்செப்பு - மணிக்கலம் வைத்த பணிப்பெட்டகம் (சிலப்.).
அருங்கிடை - பட்டினி.
அருசி - சுவையின்மை.
அருச்சகன்* - பூசைசெய்பவன்.
அருச்சனை* - ஆராதனை.
அருச்சித்தல் - மலர் முதலியவ ற்று லருச்சித்தல்.
அருச்சுனம் - எருக்கமரம், பொன், மருதமரம், வெண் மை.
அருச்சுனன்* - பாண்டுபுத்திரரு ளொருவன்.
அருஞ்சிறை - கடுஞ்சிறை, [நர கம்].
அருட்குடையோன் - அருகன், கடவுள்.
அருட்சத்தி - இரசம், சிவசத்தியி ளென்று.
அருட்சோதி - கடவுள், கவுரி பாஷாணம்.
அருட்டம் - கடுரோகிணி, மிளகு, வேம்பு.
அருட்டி - அச்சம்.
அருட்டுதல் - ஏவிவிடுதல், எழு ப்புதல்.
அருட்பா - ஆண்டவன் திருவ ருள் கைகூடியவ ரியற்றிய பாட்டு.
அருணகிரி - திருவண்ணமலை.
அருணகிரிநாதர் - திருவண்ணு மலையிலிருந்த ஒரு முருகதா சர் (திருப்புகழ் பாடியவ ரிவரேயாவர்).
அருணம் - ஆடு, எலுமிச்சை, ஓர் தேயம், பதினெண்பாடையி லொன்று, மான், மிகுசிவப்பு.
அருணவம் - கடல்.
அருணன் - சூரியன், சூரியன் றேர்ப்பாகன், புதன்.
அருணுசலக்கவிராயன் - இராம நாடகம் பாடியவர்.
அருணுசலம் - அருணகிரி.
அருணேதயம் - சூரியோதயம்.
அருத்தசாமம்* - நள்ளிரவு.
அருத்தநாரீசுரன் - உமையொரு பாகன்.
அருத்தபாகை - வேதநூற் பொ ருள்.

அருத்தம் - கருத்து, சொற்பயன், [பாதி, பொன்].
அருத்தாபத்தி - பொருட்குறிப்புள்ளது.
அருத்தி - ஆசை, உண்பித்தென்னுமெச்சம், கூத்து, பாதம், பாதி செய்யென்னேவல்.
அருநெல்லி* - ஒரு மரம்.
அருநெறி-அருகிய வழி, வாயில்.
அருந்ததி, அருந்துதி - வசிட்டரின் கற்புடைய மனைவி.
அருந்ததி காட்டல் - கலியாணப் பந்தருள் மணப்பெண்ணுக்கு நட்சத்திர வடிவாயுள்ள அருந்ததியை நினைப்பூட்ட வானைக் காண்பித்தல்.
அருந்தமிழ் - அருமையுடைய தமிழ்.
அருந்தல் - உண்டல், அருமை.
அருந்தவர் - முனிவர்.
அருப்பம் - ஊர், கள், காடு, கொலை, கோட்டை, துக்கம், நோய், பிட்டு, மருதநிலத்தார், மா, மோர், வழுக்குநிலம்.
அருப்பலம் - அனிச்சமரம்.
அருப்பு - தயிர்.
அருமந்த - அரிய மருந்தன்ன.
அருமருந்தன்ன - தேவாமிர்தம் போன்ற.
அருமலதி - ஓர் பண்.
அருமறைக்கொடியோன்-துரோணசாரி.
அருமை - அரியதன்மை, [பெருமை].
அரும்பல் - முகைத்தல், முளைத்தல்.
அரும்பாலை - ஓரிராகம்.
அரும்பு - அரும்பென்னேவல், முகை.
அரும்புதல் - பொடித்தல், முகைத்தல்.
அருவம் - உருவின்மை.
அருவருப்பு - வெறுப்பு, [அசுத்தம்].
அருவி - மலையின் வீழாறு, [கழிமுகம், தினைத்தாள்].
அருவுதல் - கண்கரித்தல்.
அருளகம் - வெள்ளெருக்கு.
அருளரசி - குடசப்பாலை, வெட்பாலை.
அருளல்- ஈதல், கிருபைசெய்யல்.
அருளாழிவேந்தன் - கடவுள், அருகன்.
அருளூறுதி - வேம்பு.
அருள் - ஈயென்னுமேவல், கிருபை.
அரூபம் - உருவமற்றது, [வெறுமை, ஆகாயம்].
அரூபி - உருவிலான், கடவுள், கருப்பூரம்.
அரேசகண்டு - கருணைக்கிழங்கு.
அரை* - அரையென்னுமேவல், பாதி, இடை, மேகலை 'அரத்தப்பூம்பட்டரைமிசையுடீஇக்' (சிலப்ப.).
அரைக்கச்சு, அரைக்கச்சை - இடைக்கச்சு.
அரைக்காணி - நூற்றறுபதிலொருபாகம்.
அரைக்கால்* - எட்டிலொன்று.
அரைசன் - அரசன்.
அரைசிலை - அம்மி.

அரைச்சல்லடம்* - இடுப்பிலிருந்து முழந்தாள்வரை இடும் சல்லடம்.

அரைஞாண், அரைநாண் - இடுப்பில் கட்டுங் கயிறு.

அரைப்பட்டிகை - மாத ரிடையணியிலொன்று.

அரைப்பு - இருப்பைப் பிண்ணாக்கு.

அரைமா - நாற்பதிலொருபங்கு.

அரைமூடி* - பெண் குழந்தையினரையிற் பூணும் ஓர் பணி.

அரையன் - மன்னன்.

அரையாப்பு* - அரையி லுண்டாகு மொரு கட்டி.

அரைவடம் - பனையேற்றுக்காரரரையிற் கட்டுமோர் கயிறு.

அரைவயிரக்கண் - கம்மாளர் கருவியிலொன்று.

அரைவாசி* - பாதி.

அரோ - அசைச்சொல் (உ-ம்.) கன்றரோ.

அரோசகம், அரோசிகம் - அருவருப்பு, ஒக்காளம்.

அரோசித்தல் - அருவருத்தல்.

அர்க்கம் - எருக்கு, நீர்க்காக்கை, பொன்.

அர்க்கியம் - அருக்கியம்.

அர்ச்சகன் - அருச்சகன்.

அர்ச்சனை - ஆராதனை.

அர்ச்சியசிஷ்டர் - பரிசுத்தவான்கள்.

அர்ஜி - விண்ணப்பம்.

அர்த்தம்* - அருத்தம்.

அர்ப்பணம்* - நிவேதிக்கை.

அர்ப்புதம் - ஒரெண்.

அலகம் - யானைத்திப்பிலி.

அலகரி, அலகிரி - மிகுதியாய்ப் பேசுபவன், [பெருக்கு].

அலகிடல் - துடைப்பத்தால் விளக்கல், [அளவிடுதல், எழுத்தெண்ணி யோசை கூட்டுதல்].

அலகு - பறவை மூக்கு, [ஆயுதப்பொது, எண், துடைப்பம், நுளம்பு, நெல்லின்மணி, பயிர்க்கதிர், பலகறை, மகிழம் விதை, பாவோட நிரைக்குந் தடி, கதுப்பு].

அலகுகட்டல் - மந்திரத்தால் வாயைக் கட்டல்.

அலகுஞ்சம்-நுளம்பு,(மின்மினி.)

அலகுபோடல் - நாவைத் துளைத்துச் செய்யும் ஓர் தவம்.

அலகை - பிசாசம், கற்றாழை, பேய்க்கும்மட்டி.

அலகைக்கொடியாள் - காளி.

அலகைத்தேர் - கானல்.

அலகைமுலையுண்டோன் - கண்ணபிரான்.

அலக்கண் - துன்பம்.

அலக்கழித்தல்* - துன்பப்படுத்தல்.

அலக்கைச்சுரம் - கீழ்க்காய்நெல்லி.

அலங்கரித்தல்* - சிங்காரித்தல்.

அலங்கல் - அசைதல், இரக்கம், ஒளிசெய்தல், தளிர், பூமாலை, கலுழ்தல்.

அலங்காரப்படுத்தல், அலங்காரஞ்செய்தல் - அலங்கரித்தல்.

அலங்காரப்பிரியன் - மகாவிஷ்ணு.

அலங்காரம் - அழகு, பேரழகு, [ஓரிலக்கணம், சிறப்பு, அணி].
அலங்கிருதம்* - அலங்காரம்.
அலங்குதல் - அலங்கல்.
அலங்கை - துளசி.
அலங்கோலம்* - ஒழுங்கின்மை.
அலசம் - ஒதம், ஓர் மரம்.
அலசல் - அலசுதல், [சோம்பல், அலைவு, இழைவிலக்கமான ஆடை].
அலசுதல்*-கழுவுதல்,[சோம்பல்]
அலட்சியம்* - அற்பமானது.
அலட்டுச்சன்னி - பிதற்றுச் சன்னி.
அலட்டுதல் - தொந்தரை செய்யல், [பிதற்றல்].
அலத்தகம், அலத்தம் - செம்பஞ்சு.
அலத்தல் - துன்பம், அங்கலாய்த்தல்.
அலத்தி - மின்மினி.
அலந்தலை - துன்பம்.
அலந்தல் - செங்கத்தாரி.
அலந்தை-துன்பம், குளம், வினைமுற்று.
அலப்பன்*, அளப்பன் - வீண் பேச்சுக்காரன்.
அலமரல் - அச்சம், துன்பம், சுழலல், வருந்தல்.
அலமாரி-ஒருவகை மரப்பேழை, [அவாவுடையவன்].
அலம் - அமையுமென்றல், அலமரல், கலப்பை, சஞ்சலம், தேள், விருச்சிகவிராசி.
அலம்பல் - ததும்பல், கழுவல், [ஒலித்தல்].
அலம்புடை, அலம்புருடை-காதிவிருக்குமோர் நரம்பு.
அலரவன் - பிரமன்.
அலரி - ஓர் மரம், [அழகு, கண்வரி, சூரியன், தேனீ, நீராவி, பூப்பொது].
அலருதல் - மலர்தல், விரிதல்.
அலர் - நீர், பலரறிந்து பழிதூற்றல், பழிச்சொல், பூமாலை, மலர்தலைச்செய், மலர்ந்த பூ, விரிதலைச் செய்யென்னுமேவல்].
அலர்தல் - அலருதல்.
அலர்மகள் - இலக்குமி.
அலவன் - ஆணண்டு, கற்கடகவிராசி, சந்திரன், நண்டு, பூனை.
அலவாங்கு - கட்டப்பாரை.
அலவாட்டு - வழக்கம்.
அலறல் - கதறல், [அழுதல், கூப்பிடல்].
அலறுதல் - அலறல்.
அலன்றல் - சாதல்.
அலாக்கு - வேருன, [நீங்கு].
அலாதம் - நெருப்புக்கொள்ளி.
அலாதா, அலாதி - வேறு.
அலாபம் - தீமை.
அலாபு - சுரை.
அலாயுதம் - கலப்பைப்படை.
அலாயுதன் - பலபத்திரன்.
அலி - பேடி, [எமன், நறுவிலிமரம், நெருப்பு, வயிரமில்லாமரம்].
அலிகம், அலீகம் - நெற்றி.
அலிப்பேடு - அல்லிய மென்னுங்கூத்து. (சிலப்ப.)

அலியன் - கடுக்காய்.
அலியெழுத்து - ஒற்றெழுத்து.
அலுக்குத்து - ஓர் காதணி.
அலுத்தல் - சலித்தல், வெறுத்தல்.
அலுப்பிணுத்தி* - குண்டூசி.
அலுப்பு * - சலித்துப்போதல், அயர்வு.
அலுமாரி - அலமாரி.
அலுவல்* - வேலே.
அலுவா* - ஓர் தின்பண்டம்.
அலேகம் - வெள்ளோடு, லோக மணல்.
அலே - அலேயென்னேவல், கடற்றிரை, [கடல், கருமணல், புனற்றிரை].
அலேக்கழித்தல்* - அலேந்து வருந்தச்செய்தல்.
அலேக்கழிவு - உலேவு.
அலேசடி, அலேசடை - தொங்தரவு.
அலேசுதல் - அலேயல், சோம்பல்.
அலேச்சல் * - உலேவு, தொந்தரை.
அலேதல் - அலேயல், [சோம்பல், துன்பம், வருந்தல்].
அலேத்தல் - அசைத்தல், வருத்துதல்.
அலேத்துவம் - மிருதி.
அலேப்பு - வருத்தம்.
அலேமகள் - திருமகள்.
அலேவாய் - திருச்செந்தூர்.
அலோமி - பொற்றலேக்கையாந்தகரை.
அல் - அல்லென்னேவல், சாரியை யிடைச்சொல் (உ-ம்.) 'தொடையல்', இராத்திரி, இருள், மதில்.
அல்கல் - இரா, குறைதல், தங்கல், தரித்திரம், நாள், வறுமை.
அல்குல் - பெண்குறியின் மேற்பக்கம்.
அல்லகண்டம் - துன்பம்.
அல்லது - அல்லாமற்போனல்.
அல்லம் - இஞ்சி.
அல்லல் - துன்பம், [முடைதல்].
அல்லவை, அல்லன - ஒழிந்தன, தீயன.
அல்லற்படல் - துயருறல்.
அல்லா*- முகம்மதியர் தெய்வம்.
அல்லாந்து - மகிழ்ந்து.
அல்லாமல்* - அன்றி.
அல்லி - ஆம்பல், [அகவிதழ், இரா, காயாமரம், பூந்தாது].
அல்லிப்பிஞ்சு - பூவிழாத பிஞ்சு.
அல்லியம் - விட்டுணுக் கூத்து, இடையரூர், கொட்டி.
அல்லியன் - தன் குழுவைப் பிரிந்த யானே.
அல்லியாமரம் - படவு வலிக்குந் தண்டு.
அல்லே - அல்லாயென்னு முன்னிலே யொருமைக் குறிப்பு வினேமுற்று, ஓர் கொடி, தாய்.
அல்லோன் - சந்திரன், ஒழிந்தோன்.
அவகடம் - தாறுமாறு, பொல்லாங்கு, வஞ்சகம்.
அவகாசம் - சமயம், [திராணி, இடம், தகுதி].

அவகிருத்தியம் - துர்ச்செய்கை.
அவகீர்த்தி, அவக்கியாதி - துர்க்கீர்த்தி.
அவகேசி - காயாத மரம்.
அவகேடு* - மிகுகேடு.
அவக்கவக்கெனல்* - அச்சக் குறிப்பு.
அவசகுனம்* - துர்ச்சகுனம்.
அவசம் - பரவசம்.
அவசரம் - மிகுதேவை, சுருக்கு, [சமயம், மழை].
அவசாரம் - பயனற்ற செய்கை.
அவசாரி - வேசி.
அவசியம்* - அவசரம், நிச்சயம்.
அவச்சேதனம் - நறுக்குதல், பகுத்தறிதல்.
அவடி - குழாய், குழி, திரைச்சீலை.
அவடு - பிடர், கிணறு.
அவணம் - அம்மணம்.
அவணன்-திண்ணியன், வீணன்.
அவணி - நன்மை.
அவண் - அவ்விடம்.
அவதரித்தல் - கருவில் புகுதல், தங்கல், பிறத்தல்.
அவதாதம் - வெண்மை.
அவதாரணம் - தாபித்தல், நிச்சயம், மண்வெட்டி.
அவதாரம் - உற்பத்தி, [தெண்டம்பிரித்தல்].
அவதாரிகை - முகவுரை.
அவதானம் - சாதுரியம், நிதானம், கிரகித்தல், நினைவு.
அவதானம்பண்ணல் - பாடம் பண்ணல்.
அவதி-வருத்தம்,[அளவு,எல்லை]
அவதிப்படல்* - துயருறுதல்.
அவதூதம் - முழுத்துறவு.
அவதூதி - முற்றத்துறந்தவன்.
அவதூறு*-பிறர்மீது பழிகூறல்.
அவத்தம் - பொய், நாய்வேளைப்பூடு.
அவத்திரியம் - ஆபத்து.
அவத்தை, அவஸ்தை* - வேதனை, ஆபத்து.
அவநம்பிக்கை * - நம்பிக்கையின்மை.
அவநாசி - கோயம்புத்தூருக்கருகேயுள்ள ஒரு சிவஸ்தலம், கலைமகள்.
அவநுதியுருபகம்-ஒரு பொருளினது உண்மையை மறுத்துப் பிறிதொன்றாக வுரைப்பது.
அவநெறி - தருமமில்லா வழி.
அவந்தரை - குழப்பம், சேதம்.
அவந்தி - ஓர் நகர், ஓர் நாடு, [காடித் தண்ணீர், அக்காள்].
அவந்திகை - கிளி.
அவந்திக்கண்ணி - மெருகன் கிழங்கு.
அவபத்தியம்* - இச்சாபத்தியம்.
அவப்பிரஞ்சம்-இழிசனர்மொழி.
அவப்பொழுது - வீண்பொழுது.
அவமதிப்பு-நிந்தனை, மதியாமை.
அவமரியாதை* - மரியாதைத் தவறு.
அவமாக்கல் - பயனுறாவாறுசெய்தல்.
அவமானம்* - இழிவு, மானக் குறைவு.
அவமிருத்து - துன்மரணம்.
அவம் - பயனின்மை.

அவயங்காத்தல்*-அடைகாத்தல்.
அவயவம் - உடல், உறுப்பு.
அவயவி - உடல், பல சினைகளை யடக்கிய ஒருமுதல்.
அவரசன் - தம்பி.
அவரி - அவுரி.
அவரை - அவரைக்கொடி, [கொள்ளு துவரை முதிரை முதலாயின].
அவரோகணம் - இறங்குதல்.
அவரோதம் - தடை, வேலி, உள் மண்டபம்.
அவர் * - உயர்திணைப் பலர்பால் படர்க்கைச் சுட்டு.
அவலட்சணம்* - அழகின்மை.
அவலம் - நோய், வருத்தம்.
அவலம்பம் - நிறுதிட்டவரி, புகலிடம்.
அவலம்பித்தல் - சார்ந்துநிற்றல்.
அவலித்தல் - வருந்தல்.
அவலோகிதன் - அனுப்பப்பட்டவன், அறியப்பட்டவன்.
அவல் - ஓர் சிற்றுணவு, [குளம், பள்ளம்].
அவளிகை - இடுதிரை (திரைச் சீலை).
அவளைதுவளை - கதம்பவுணவு.
அவள்* - அந்தப் பெண்.
அவற்கம் - கஞ்சி.
அவனி - பூமி.
அவனிபாரகன், அவனிபாலன் - மன்னன்.
அவன்* - சுட்டுச்சொல்.
அவா - அவாவென்னேவல், ஆசை, ஆசைப் பெருக்கம், [இறங்குதல்].
அவாசி - தெற்கு.
அவாந்தரம் - உதவியின்மை, [அழிவு, வெறுவெளி].
அவாய்நிலை - அருத்தம் முடிவு பெறுமல் எஞ்சிநிற்பது.
அவாவின்மை - வெறுப்பு.
அவாவுதல் - இச்சித்தல், [இறங்குதல்].
அவி - கெடு என்னுமேவல், சோறு, தேவருணவு, நெய்.
அவிசாரி* - அபிசாரி.
அவிசு - வெறுஞ்சோறு, தேவருணவு.
அவிச்சை-மனமயக்கு, வெறுப்பு.
அவிடி - திரைச்சீலை.
அவிட்டம் - ஓர் நட்சத்திரம்.
அவிதல் - கெடுதல், வருந்தல்.
அவித்தல் - வேவித்தல், தணித்தல்.
அவித்திருமம் - இலுப்பை.
அவித்தை - அஞ்ஞானம்.
அவிநயம் - கூத்து, ஓர் நூல், நாடகாங்கம்.
அவிநயர் - ஓர் நூலாசிரியர், நாடகர்.
அவிபாகம்-அனுபவியாத வினை, இளமை.
அவிப்பாகம் - தேவருணவு.
அவிமுத்தம் - காசி.
அவிமுத்தி - காசிக்கருகேயுள்ள ஒரு புண்ணியபூமி.
அவியல் - கறி முதலியன சூட்டில் அவிந்தது, [வாய்ப்புண், வெப்பம்].
அவிரி, அவுரி* - நீலிப்பூண்டு.

அவிரோதச்சிலேடை - முன்னர்க் கொண்ட சிலேடைச் சொற்பொருள்களோடு பின்வருஞ் சிலேடைச் சொற்பொருள்கள் விரோதமுறாமல் இயையத் தொடுப்பதாம் (உ-ம்.)

'சோதி யிரவி கரத்தா னிரவொழிக்கும்
மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கும் - மீதாம்
அநகமதி தோற்றிக் குமுத மளிக்குந்
தனதனிரு நிதிக்கோன் றூன்'.

அவிரோதவுந்தியார் - சாந்தலிங்க சுவாமிகள் பாடிய ஒரு நூல்.
அவிர்தல் - ஒளிசெய்தல், பிறல்.
அவிர்பாகம் - அவிப்பாகம்.
அவிழ் - சோறு.
அவிழ்தம் - அவுடதம்.
அவிழ்தல் - விரிதல், நெகிழ்தல், மலரல்.
அவிழ்த்தல் - விரித்தல், அவிழச் செய்தல்.
அவினாபூதம் - சுபாவசம்பந்தம்.
அவுசுக்காரன் - உடைப்பில் மிக்க ஆசையுடையவன்.
அவுஷதம், அவுடதம் - மருந்து.
அவுணர் - அசுரர்.
அவுணன் - அசுரன், மாவலி.
அவுதா - யானைமேற்றவிசு.
அவுத்திரிதீட்சை - சயிக்கை செய்துந் தரையில் வரிந்துங் காட்டுமோ ருபதேசம்.
அவை - அவையென்னேவல், அவ், [கூட்டம், சவை, சுட்டுச்சொல், புலவர்].
அவைத்தல் - நென்முதலிய குத்தல், [நெரித்தல், வெட்டுதல்].
அவையடக்கம் - சவைமுன் தன்னைத் தாழ்த்திப் பேசுதல்.
அவையல் - திரட்சி, குத்தலரிசி.
அவ் - அவை, சுட்டுச்சொல்.
அவ்வயின் - அவ்விடம்.
அவ்வளவு - அம்மட்டு.
அவ்வாறு - அப்படி.
அவ்வியத்தம் - விளங்கக் காணப்படாதது, கோடி கோடி கோடி கோடா கோடி.
அவ்வியத்தன் - கடவுள், மன்மதன், மூடன்.
அவ்வியம் - மனக்கோட்டம், தேவர்க்கிடப்படுவது.
அவ்வுதல் - அவாவிவிழுதல்.
அவ்வை - ஒளவையார், தவப்பெண், தாய்.
அழகர் - வெள்ளெருக்கு, மகாவிஷ்ணு.
அழகாரம் - பேச்சுச் சித்திரம்.
அழகு - வனப்பு, [சருக்கரை, ஒழுங்கு].
அழகுதுரைப்பெண் - இந்திரபாஷாணம்.
அழகுத்தேமல் - படர்சுணங்கி ஞென்று.
அழத்தியன் - பெருங்காயம்.
அழலல் - எரிதல், வெப்பங்கொள்ளல், கோபித்தல்.

அழலவன் - சூரியன், செவ்வாய், அக்கினிதேவன்.
அழலாடி, அழலேந்தி - சிவன்.
அழலுதல் - அழலல்.
அழலோன் - சூரியன், செவ்வாய், தீ.
அழல்-தீ, கேட்டைநாள், விடம், செவ்வாய், நரகம், வெப்பம், வெப்புறு என்னுமேவல்.
அழல்சேர்குட்டம் - கார்த்திகை பரணி (சிலப். 23:143.)
அழல்வண்ணன் - சிவன்.
அழற்கண்ணன் - சிவன்.
அழற்கண்வந்தோன் - வீரபத்திரன்.
அழற்காய் - மிளகு.
அழற்சி - வெப்பம், அழுக்காறு.
அழற்பால் - எருக்கு.
அழற்றல் - சுடுதல்.
அழனம், அழன் - பிணம்.
அழிகுட்டி * - வயிற்றில் செத்தது.
அழிகை - கெடுகை.
அழிஞ்சில் - ஓர்மரம்.
அழிதல்* - கெடுதல்.
அழித்தல்* - கெடுத்தல்.
அழிம்பன்* - ஊதாரி.
அழிம்பு - அழிவு, சேதம்.
அழியாதபத்தினி - திரௌபதி.
அழிவழக்கு - புரட்டுநியாயம்.
அழிவி - கழிமுகம்.
அழிவு - கேடு, [குற்றம்].
அழுகண்ணி - ஓர் பூடு.
அழுகல் - கெடுதல், அழுகினது.
அழுகள்ளன் - பொய்யாயழுகிறவன்.
அழுகுசப்பாணி-ஓர் விஷசெந்து, ஓர் விஷநோய்.
அழுகுணி-அழுபிள்ளை, ஓர் கரப்பன்.
அழுக்காறு - பொறாமை, பொய்.
அழுக்கு - மாசு, அசுத்தம், [ஆமை, மலம், ஊத்தை, பொறாமை].
அழுங்கல் - அச்சம், அலையல், அழுதல், அழுந்தல், இரங்கல், ஒலித்தல், ஒளி மழுங்கல், கெடுதல், சோம்பல், துன்பம், நோய், வருத்தம், வியங்கோண்முற்று.
அழுங்கு - அழுங்குதலைச் செய்யென்னேவல், ஆமை.
அழுங்குதல் - அலையல், ஒளி மழுங்குதல்.
அழுதல்* - இரங்கல்
அழுத்தம் - உறுதி, உலோபத்தனம், [கடினம், அடக்கம்].
அழுத்தல் - அழுந்தச் செய்தல், பதித்தல்.
அழுந்தல் - பதிதல், [வருந்தல்].
அழுந்து - அழுந்தென்னேவல், [நீராழம்].
அழுந்தூர்-ஒரு விஷ்ணு ஸ்தலம்.
அழுப்பு - சோறு.
அழுப்புகம் - தேவலோகம்.
அழுவம்-அப்பவர்க்கம், அழுக்குநிலம், கடல், துருக்கம், நடுக்கம், நாடு, பரத்தல், பெருமை, முரசு, வழுக்குநிலம், வினைமுற்று, பரப்பு (சிலப்ப. 5:8.)
அழைக்கை - கூவுகை.
அழைத்தல்* - வாவெனல்.

அளகபந்தி, அளகபாரம் - கூந்தற்பாரம்.
அளகம் - பெண்மயிர், மயிர்க்குழற்சி, பன்றிமுள், நீர்.
அளகாதிபதி - குபேரன்.
அளகு - கூகையுங் கோழியுமல்லனவாகிய பெண் பறவையின் பொது, கார்த்திகைநாள்.
அளகை, அளகாபுரி - குபேரனகர்.
அளகையாளி, அளகேசன் - குபேரன்.
அளக்கர் - உப்பளம், கடல், கார்த்திகைநாள், குழைசேறு, நீள்வழி, பூமி.
அளத்தல்-அளவிடல், மதித்தல்.
அளத்தியர் - உப்பமைப்போர் பெண்கள்.
அளத்துப்பச்சை - மருக்கொழுந்துச்சக்களத்தி.
அளபு - அளவு, [அளபெடை].
அளபெடை - எழுத்துக்கள் தத்த மாத்திரையி னீண்டொலித்தல்.
அளப்பளத்தல் - பிதற்றல்.
அளப்பன்* - வீணாகப் பேசுபவன்.
அளப்பு - அளத்தல்.
அளம் - உப்பளம், கூர்மை, நெருக்கம்.
அளவடி - நாற்சீரான் வருமடி.
அளவர் - அளப்பவர், உப்பமைப்போர்.
அளவளாவல், அளவளாவுதல் - கலத்தல்.
அளவிடுதல் - மதித்தல்.
அளவு - எண்ணல் முதலிய நான்களவுப் பிரமாணம்.
அளவை - அளவு, எல்லை, நாள்.
அளறு - குழைசேறு, நரகம்.
அளறுதல் - சிதர்தல், பிளத்தல்.
அளாவல் - துழாவி யாற்றல், கலத்தல், ஓங்கியிருத்தல்.
அளி - அளித்தலைச் செய்யென்னேவல், அன்பு, கள், காய், குளிர்ச்சி, கொடை, மது, வண்டு.
அளிகம் - கட்டழகு, நெற்றி.
அளிதல் - கனிதல், [உருகுதல்].
அளித்தல் - ஈதல், காத்தல், நெருங்கல்.
அளிந்தம் - கோபுரவாயிற் றிண்ணை, முற்றம்.
அளியர்-அன்புள்ளோர், எளியர்.
அளுக்கல் - அச்சக்குறிப்பு.
அளுங்கு - அழுங்கு.
அளை - குழை யென்னேவல், தயிர், புற்று, மலைக்குகை, மோர், வளை, வெண்ணெய்.
அளைஇ - கலந்து.
அளைதல் - கலத்தல், குழைவு.
அளைவு - குழைவு.
அள் - அள்ளென்னேவல், [கன்னம், காது, கூர்மை, நெருக்கம்].
அள்ளல் - அள்ளுதல், [குழைசேறு, நரகம், வியங்கோண் முற்று].
அள்ளுகொள்ளை* - பெருங்கொள்ளை.
அள்ளுதல் - அள்ளல், [நெருங்கல்].

அள்ளை - பிசாசம்.
அற - முற்ற.
அறக்கடவுள் - இயமன்.
அறக்கற்பு - ஆறியகற்பு.
அறக்காடு - சுடுகாடு.
அறக்கொடி - பார்வதி.
அறங்கடை - பாவம்.
அறச்செல்வி - தருமதேவதை, பார்வதி.
அறத்தின்மூர்த்தி - தருமதேவதை.
அறத்தின்மைந்தன் - தருமராசன்.
அறத்துப்பால் - திருக்குறளில் ஒருபாகம்.
அறத்தைக்காப்போன்-ஐயனர்.
அறநெறி - தருமவழி.
அறப்புறம் - அறச்சாலை.
அறம் - தருமம்.
அறல் - அறுதல், கருமணல், சிறுதூறு, நீர், புனற்றிரை.
அறவர் - பெரியோர், முனிவர்.
அறவன் - புத்தன்.
அறவாழியந்தணன் - திருமால், கடவுள், அருகன்.
அறவை-அநாதம்(ஆதரவற்றது)
அறவைத்தூரியம் - அநாதருக்கு ஆடைகொடுத்தல்.
அறவைப்பிணஞ்சுடுதல் - அநாதப்பிரேதத்துக்கு ஈமக்கடன் செலுத்தல்.
அறவோர் - துறவோர், பார்ப்பார், முனிவர்.
அறவோர்பள்ளி-அருகர்பள்ளி.
அறளை - அரிகண்டம், ஒரு வியாதி.
அறனேம்படை - தருமம்போதிக்குமிடம்.
அறன்கடை - பாவம்.
அறு - நீங்காத.
அறிகுறி - அடையாளம்.
அறிக்கை - விளம்பரம், [அறிவித்தல்].
அறிக்கைபண்ணுதல்* - அறிவித்தல்.
அறிஞர் - அறிவுடையோர், [புலவர், முனிவர்].
அறிஞன் - அறிவாளி, [புலவன், புதன், புத்தன், முனிவன்].
அறிதல் - தெரிதல்.
அறிதுயிலமர்ந்தமூர்த்தி - மகாவிஷ்ணு.
அறிதுயில் - யோக நித்திரை.
அறிப்பலம் - திப்பிலி.
அறிமடம் - அறிந்து மறியார் போன்றிருத்தல்.
அறிமுகம்* - கண்ட பழக்கம்.
அறியபலம் - திப்பிலி.
அறியாமை - அறிவின்மை.
அறிவர் - அறிஞர், கம்மாளர்.
அறிவழி - கள், பிசாசம்.
அறிவனள் - உத்திரட்டாதி.
அறிவன் - அறிவுடையோன், அருகன், உத்திரட்டாதி, செவ்வாய், புதன்.
அறிவாளி* - புத்திசாலி.
அறிவிலி - மூடன்.
அறிவீனம் - அறியாமை.
அறிவு-புத்தி, [உணர்வு, கல்வி].
அறிவுகொளுத்தல் - கற்றுக்கொடுத்தல்.

அறிவுசொல்லல் - புத்தி சொல்லல்.
அறிவுறுத்தல் - அறிவுபயிற்றல்.
அறுகால் - வண்டு.
அறுகாற்பீடம்-மதுரை மீனாட்சியம்மன்பீடம்.
அறுகு - ஓர் புல், [ஆண் புலி, சிங்கம், யாளி, யானை].
அறுகுணன் - கடவுள்.
அறுகை-அறுகம்புல் (மணிமே.)
அறுகோணம் * - ஆறு மூலைகளுள்ள வடிவு.
அறுசரம் - ஓசையாழ்.
அறுசுவை - ஆறுவித உருசி. அவை உவர்ப்பு, கார்ப்பு, தித்திப்பு, கைப்பு, துவர்ப்பு, புளிப்பு.
அறுதலி - மங்கலநாணிழந்தவள்.
அறுதி - சாவு, முடிவு, வினைமுற்று.
அறுதியிடல் - நாள்குறித்தல்.
அறுதொழிலோர் - ஆறு தொழிலையுடையவர். அவர்கள் அந்தணர், அரசர், வைசியர், சூத்திரராவர்.
அறுத்தல் - அரிதல், அறச் செய்தல்.
அறுநூறு - ஆறு நூறு.
அறுபதம் - வண்டு, கையாந்தகரை.
அறுபான் - அறுபது.
அறுப்புக்காலம் - விளைந்த தானியத்தை அறுக்குங் காலம்.
அறுமணை - அரிவாள்மணை.
அறுமர் - எண்ணெய்வாணியர்.
அறுமீன் - கார்த்திகைநாள்.
அறுமீன்காதலன், அறுமுகன் - குமரன்.
அறும்பன் - துஷ்டன்.
அறும்பு-கொடுமை, பஞ்சகாலம்.
அறுவடை * - நென் முதலிய வறுத்தல்.
அறுவாய் - கார்த்திகைநாள்.
அறுவை - சித்திரைநாள், சீலை, வினைமுற்று, உடை, தோலிவிடுமுறி (சிலப். 10 : 98).
அறை - அடி, சிற்றில், [சொல், பறையடி யென்னு மேவல், எழுத்திஞேசைச் சொல், சொல், திரை, தாக்கங்கள், பறையடித்தல், பாறை, மலையுச்சி, முழைஞ்சு].
அறைகுறை - முடியாமை, [வருத்தம்].
அறைகூவல் - பொரவழைத்தல்.
அறைக்கீரை - ஓர் கீரை.
அறைதல் - அடித்தல், சொல்லல், பறையடித்தல்.
அறைபோதல் - கீழறுத்தல்.
அற்கம் - காணிக்கை, திரவியம், நீர்க்காக்கை, விலை, வெண்ளெசி.
அற்கல் - அறிவுடைமை, நிலைபெறுதல்.
அற்காமை - அறிவின்மை, நிலையாமை.
அற்பணம் - காணிக்கைசெலுத்துகை.
அற்பம் - சிறுமை, [நாய்].
அற்பரம் - மக்கட்படுக்கை.
அற்பர் * - கீழ்மக்கள்.
அற்பிதம் - காணிக்கை, பலி.

அற்பு - அன்பு, அரிது.
அற்புதம் - அதிசயம், [ஒரெண் அது ஆயிரங்கோடி, அழகு, ஞானம்].
அற்புதர் - கம்மாளர், ஞானிகள்.
அற்புதன் - கடவுள்.
அற்றம்-அச்சம், சமயம், சோர்வு, மறைவு, மெலிவு.
அற்றவர் - தரித்திரர்.
அற்றூர் - வறியோர், முனிவர்.
அற்று-அத்தன்மைத்து, சாரியை (உ-ம்.) பலவற்றுக்கோடு.
அற்றுப்போதல் - இல்லாமற் போதல்.
அற்றை - அன்று, சிறுமை.
அனகம் - அநகம்.
அனகன் - அநகன்.
அனங்கம் - அநங்கம்.
அனங்கன் - அநங்கன்.
அனந்தசயனம் - அநந்தசயனம்.
அனந்தம் - அநந்தம்.
அனந்தரம் - அநந்தரம்.
அனந்தர்-நித்திரை, பித்து, மயக்கம், மயிர்ச்சூட்டு, கள்ளையுண்டமையாலுண்டானசெருக்கு. (மணிமே. பக். 73.)
அனந்தலோசனன் - அநந்தலோசனன்.
அனந்தல் - நித்திரை.
அனர்த்தம் - அநர்த்தம்.
அனலம் - உட்டணம், சித்திரமூலம், சிவாகமத்துளொன்று.
அனலி - சூரியன், நெருப்பு.
அனலேறு - இடி.
அனல் - அனலென்னேவல், தீ, உட்டணம், [கொடிவேலி].
அனவரதம் - அநவரதம்.
அனாகதம் - ஆருதாரத்தொன்று, அது இதயத்தானம், அறிவுக்கதீதமானது.
அனாசாரம்* - சுத்தமின்மை, ஒழுக்கமின்மை.
அனாதரம் - அநாதரம்.
அனாதரவு* - அநாதரவு.
அனாதி - அநாதி.
அனாயாசம் - சோம்பின்மை,
அனாரதம் - அநாரதம். [இலகு.
அனாவிருட்டி - அநாவிருட்டி.
அனாவிலன் - அநாவிலன்.
அனிச்சம் - அருப்பலம், விருப்பமின்மை.
அனிச்சை-அனிச்சப்பூ, ஓர் பூடு, நாகமல்லி, விருப்பின்மை.
அனிலம் - அநிலம்.
அனிலன் - அநிலன்.
அனீகம் - அநீகம்.
அனீசு - பெருஞ்சீரகம்.
அனு - அநு.
அனுகம் - அநுகம்.
அனுகரணம் - அநுகரணம்.
அனுகூலம் - அநுகூலம்.
அனுக்கம் - அநுக்கம்.
அனுக்கல் - அநுக்கல்.
அனுக்கிரகம்* - அநுக்கிரகம்.
அனுக்கிரமணிகை - அநுக்கிரமணிகை.
அனுக்கை - உத்தரவு.
அனுங்கல் - வருந்தல், வாடல்.
அனுசந்தானம் - அநுசந்தானம் (ஆராய்வு).
அனுசரணம் - அநுசரணம்.
அனுசன் - அநுசன்.

அனுசிதம் - அநுசிதம்.
அனுடம், அனுஷம் - ஓர் நட்சத்திரம்.
அனுட்டானம் - அநுட்டானம்.
அனுதாத்தம் - அநுதாத்தம்.
அனுதினம் - நாடோறும்.
அனுத்தம் - அநுத்தம்.
அனுபந்தம், அநுபந்தம் - கூடுதல், தொடர்ச்சி.
அனுபமம் - அநுபமம்.
அனுபமை - அநுபமை.
அனுபவம் - அநுபவம்.
அனுபானம் - மருந்திற் சேர்த்துண்பது.
அனுபூதி - பிரமாணங்களைக் கொண்டறிந்த அறிவு.
அனுப்புதல் - போகவிடுதல்.
அனுமதி - அநுமதி.
அனுமந்தன் - அநுமந்தன்.
அனுமரணம் - உடன்கட்டையேறுதல்.
அனுமன் - அநுமன்.
அனுமானம் - அநுமானம்.
அனுமானித்தல்-அநுமானித்தல்
அனுமேயம் - அநுமேயம்.
அனுராகம் - அநுராகம்.
அனுவழி - அநுவழி.
அனூரு - அநூரு.
அனேகம் - அநேகம்.
அனை - ஓர்வகை மீன்.
அனைத்து - அவ்வளவு, அத்தன்மையது.
அனைத்தும்* - எல்லாம்.
அனைய - அன்ன.
அனைவரும், அனைவோரும் - எல்லாரும்.
அனைவீரும் * - நீங்களெல்லீரும்.
அன் - இன்மை, பிறிது இவைகளைக் காட்டுமோ ருபசருக்கம், உயர்திணையாண்பாற் படர்க்கை யொருமை விகுதி, ஒரு சாரியை (உ-ம்.) அதன் கை.
அன்பன் - தோழன், [புருடன்].
அன்பு* - ஆசை, தயை.
அன்மை - அல்லாமை.
அன்மொழி - பிறமொழி.
அன்வயம், அன்னுவயம் - கருத்தா, கருமம், கிரியை, விசேடணம், விசேடியம் இவற்றின் சேர்க்கை.
அன்றாடம் - தினந்தோறும்.
அன்றில்-ஓர் பறவை, மூலநாள்.
அன்று - அந்நாள், [அல்ல].
அன்றெறிந்தான் - அண்ணெரிஞ்சான்பூண்டு.
அன்னக்கொடியோன் - பிரமன்.
அன்னக்கொப்பு - அன்னப்புள் வடிவம் செதுக்கின மகளிர் காதணி.
அன்னசாரம், அன்னப்பாகு, அன்னப்பால் - கஞ்சி.
அன்னசுத்தி - நெய்.
அன்னதாதா*- அன்னங்கொடுக்கிறவன்.
அன்னதாழை - அன்னுசி.
அன்னபானம் - சோறும் தண்ணீரும்.
அன்னபேதி - ஓர் மருந்து.
அன்னப்பிராசனம் - சோறூட்டல்.
அன்னமயகோசம் - பஞ்சகோசத்தொன்று அஃது உடல்.

அன்னம் - ஓர் புள், சோறு, [கவரிமா].
அன்னம்பாறல் - புலம்பல்.
அன்னரேகை - ஓர் கைவரை.
அன்னவஸ்திரம்* - சாப்பாடும் துணியும்.
அன்னவம் - கடல்.
அன்னவூர்தி - பிரமன்.
அன்னுசி* - பரங்கித்தாழை.
அன்னியோன்னியம் - ஐக்கம், ஒன்றற்கொன் றிருக்கிற சம்பந்தம்.
அன்னை - தாய், [அக்காள், தோழி].
அன்னே-அதிசயச் சொல், இரக்கச் சொல்.
அன்னேன்றி - பலமில்லாதவன்.

## ஆ

ஆ - இரண்டா முயிரெழுத்து, ஆச்சாமரம், ஆதலைச் செய்யென்னேவல், இச்சை, இரக்கம், சொல்விசை, பசுப்பொது, பெண்ணெருமை, பெண் பசு, பெண்மரை, வியப்பு, விலங்கின் பெண்பொது, வினவிடைச்சொல்.
ஆஅ - அதிசயவிரக்கச்சொல்.
ஆக-முழுவதும், [உவமையுருபு].
ஆகஸ்மீகம் - தற்செயல்.
ஆகடியம்-அநியாயம், கொடுமை, [பரிகாசம்].
ஆகண்டலன் - இந்திரன்.
ஆகமம்-முதல்வன்வாக்கு, கல்வி, மரப்பொது.
ஆகமனம் - வந்துசேருதல்.
ஆகம்-உடல், மார்பு, சுரை.
ஆகம்பிதமுகம் - சினத்தானுஞ் சம்மதியானு மேற்கீழ் தலையாட்டல்.
ஆகரம் - உறைவிடம், வீடு, சுரங்கம், மண்வெட்டி, சாலாங்க பாஷாணம்.
ஆகரி - ஓரிராகம், திப்பிலி.
ஆகருஷணம், ஆகருடணம், ஆகருடணை - இழுத்தல், அழைத்தல், ஒரு கலைஞானம், அட்டகருமத்தொன்று.
ஆகவபூமி - போர்க்களம்.
ஆகவம் - போர், சீலை.
ஆகவனீயம் - வேதாக்கினி மூன்றினென்று.
ஆகவே - ஆகையால்.
ஆகன்னம் - காதுபரியந்தம்.
ஆகா - எதிர்மறைப் பன்மைப் படர்க்கை வினைமுற்று, ஓர் கந்தருவன்.
ஆகாக்களங்கு - மிருதாரசிங்கி (ஓர் பாஷாணம்).
ஆகாசகபாலி - புரளிக்காரன்.
ஆகாசகருடன் - கொல்லன்கோவை, சீந்தில், பேயத்தி.
ஆகாசகரை - மனோராச்சியம்.
ஆகாசத்தாமரை - அந்தரத் தாமரை, கொட்டைப்பாசி, பொய்.
ஆகாசப்பொய் - பெரும்பொய்.
ஆகாசமார்க்கம் - அந்தரவழி.
ஆகாசம்* - அந்தரம், ஆகாயம், வான், வெளி.
ஆகாசவல்லி-ஓர்கொடி, சீந்தில்.

ஆகாசவாணி, ஆகாயவாணி - அசரீரிவாக்கு.
ஆகாத்தியம் - பொல்லாங்கு, எதிரிடை.
ஆகாமியம் - வருங் கன்மம்.
ஆகாயகமனம் - அந்தரமார்க்கமாய்ச் செல்லுதல்.
ஆகாயம், ஆகாசம் - வான்.
ஆகாயவீதி - நட்சத்திரவீதி.
ஆகாரம் - உணவு, [நெய், மனைப்பொது, வடிவு.]
ஆகாரி - பூனை, உயிர்.
ஆகிருதி - வடிவு, உடல், மாதிரி, அங்கம்.
ஆகிருநந்தனம் - புன்குமரம்.
ஆகு - எலி, பெருச்சாளி, கொப்புள், சாமரை.
ஆகுதி - ஓமாக்கினியில் நெய் விடுதல்.
ஆகுபுகு - பூனை.
ஆகுலம் - வருத்தம், ஒலி, ஆரவாரம்.
ஆகுலித்தல் - வருந்துதல்.
ஆகுவாகனன் - விநாயகன்.
ஆகுளி - சிறுபறை.
ஆகூழ் - நல்வினைப்பயன்.
ஆகேடகம் - வேட்டை.
ஆக்கம் - இலட்சுமி, இலாபம், எழுச்சி, கொடிப்படை, செல்வம், படைவகுப்பு, பொன்.
ஆக்கல் - சமைத்தல், [செய்தல், படைத்தல்].
ஆக்கிநேயம் - அட்டாதச புராணத்தொன்று, ஓரஸ்திரம், தென்கீழ்த்திசை.
ஆக்கியம் - நாமம்.
ஆக்கியாபித்தல் - கட்டளையிடல்.
ஆக்கியோன்-செய்தோன், படைத்தோன்.
ஆக்கிரகம் - கடுங்கோபம், சூரம், [மேற்கொள்ளுதல்].
ஆக்கிரகித்தல் - பலவந்தமாயெடுத்தல், வெல்லல்.
ஆக்கிரஷம், ஆக்கிரிஷம்* - கோபம்.
ஆக்கிரந்திதம் - குதிரையின் விரைவு நடை.
ஆக்கிரமித்தல் - ஆங்காரம் பண்ணல்.
ஆக்கிராணம் - மூக்கு, மணத்தல், திருத்தி.
ஆக்கிராணித்தல் - மணத்தல், மூக்கிற்றூளிடுதல்.
ஆக்கிஞைசக்கரம்* - ஆணை, செங்கோன்முறைமை.
ஆக்கினை - கட்டளை, தண்டனை, [ஆறாதாரத் தொன்று அஃது இலாடத்தானம்.]
ஆக்குரோசம் - கோபம், மூர்க்கமான சத்தம்.
ஆக்குவயம் - பெயர்.
ஆக்கை - யாக்கை (உடம்பு).
ஆக்கொல்லி - ஓர் புழு, தில்லைமரம்.
ஆங்காரம்* - இறுமாப்பு, கெருவம்.
ஆங்காரி* - கெருவமுடையவன்.
ஆங்கீரச - ஓர் வருஷம்.
ஆங்கீரசம் - ஒரு தருமநூல்.
ஆங்கீரசன் - சத்தவிருடிகளிலொருவன்

ஆங்கு - அசைச் சொல் (உ-ம்.) விருந்தொக்கரு னென்ருங்கு, அவ்விடம், உவமைச்சொல், (உ-ம்.) மகற்கண்டதாய் மறந் தாங்கு.
ஆங்ஙனம் - அங்ஙனம்.
ஆசங்கித்தல் - ஐயுறுதல்.
ஆசங்கை - ஐயம்.
ஆசந்தி - பாடை.
ஆசமனம் - சிறுக நீருட்கொள் ளல்.
ஆசமனீயம் - ஆசமனஞ்செய்தற் கான நீர்.
ஆசம் - சிரிப்பு.
ஆசயம் - இரைக்குடர், உறை விடம், தங்குமிடம்.
ஆசரணை - வழிபாடு.
ஆசரித்தல் - கொண்டாடுதல், வழிபடுதல்.
ஆசவம் - கள்.
ஆசனம் - இருப்பு, பீடம்.
ஆசனவாயில் - மலவாயில்.
ஆசனன் - சுக்கிரன்.
ஆஷாடபூதி-மோசஞ்செய்பவன்
ஆசாடம், ஆஷாடம் - ஆடிமா தம், பொதியமலை, முருக்கு, மரக்கொம்பு.
ஆசாபந்தம் - சிலம்பிநூல், நம் பிக்கை.
ஆசாபாசம்*-ஆசையாகிய கட்டு.
ஆசாமி* - குறிப்பிட்ட ஆள்.
ஆசாரக்கள்ளன்-முகத்துதி செய் பவன்.
ஆசாரச்சாவடி - பொதுச்சாவடி.
ஆசாரபோசன் - பெருந்தேகி.
ஆசாரம் - சுத்தம், ஒழுக்கம், [அர சிருக்கை, சீலை, பெருமழை, வழிபாடு].
ஆசாரவாசல்-தலைவாசல், வெளி வாயில்.
ஆசாரியபுருஷன்-ஆசாரியன்.
ஆசாரியன் - உபாத்தியாயன், குரு.
ஆசாள் - தலைவி.
ஆசானுபாகு - முழந்தாள்மட்டும் நீண்ட கையையுடையவன்.
ஆசான் - உபாத்தியாயன், [குரு, குமரன், அருகன், சுக்கிரன், பாலையாழ்த்திறம், மூத்தோ ன், வியாழம், புரோகிதன்].
ஆசி - வாழ்த்து.
ஆசிகூறல் - ஆசீர்வதித்தல்.
ஆசிக்கல் - காகச்சிலை.
ஆசிடை - கூட்டம், சீலை, வாழ் த்து.
ஆசிதையன் - நாவிதன்.
ஆசித்தல் - விரும்பல்.
ஆசியம் - அவமதிச்சிரிப்பு, வாய், முகம்.
ஆசிரமம், ஆச்சிரமம் - நிலை, பன்னசாலை (முனிவரிருப்பி டம்.)
ஆசிரயம் - இடம், வாசம், புகலி டம், கொள்கொம்பு.
ஆசிரயித்தல் - அநுஷ்டித்தல், கைக்கொள்ளல்.
ஆசிரியம் - ஆசிரியப்பா, கொள் கொம்பு.
ஆசிரியன் - உபாத்தியாயன், குரு.

ஆசினி - ஆகாயம், ஈரப்பலா, மரவயிரம், மரவுரி.
ஆசியம் - கருஞ்சீரகம்.
ஆசிர்வசனம், ஆசிர்வாதம் - வாழ்த்து.
ஆசீவகப்பள்ளி - சமணமுனிவர் மடம்.
ஆசீவகர் - சமணமுனிவர்.
ஆசு - அற்பம், ஓர் பாட்டு, கவசம், குற்றம், கைக்கவசம், சீக்கிரம்.
ஆசுகம் - அம்பு, காற்று, பறவை.
ஆசுகன் - காற்று, வாயுதேவன்.
ஆசுபத்திரி - ஓர் மரம்.
ஆசுமணை - நூல்சுற்றுங்கருவி.
ஆசுரம் - எண்வகை மணத்தி ளொன்று, அது பெண்ணுக் குஞ் சுற்றத்துக்கும் வேண்டுவன கொடுத்துக் கொள்ளும் மணம், இஞ்சி.
ஆசுரி - இரணவைத்தியன்.
ஆசுவினம், ஆசுவீசம் - ஐப்பசி மாதம்.
ஆசூசம் - சூதகம்.
ஆசை-விருப்பம்,[திசை,பொன்].
ஆசோதை - இளைப்பாறல்.
ஆசௌசம் - அசுத்தம், தீட்டு.
ஆச்சரியம்* - வியப்பு.
ஆச்சா - ஓர்மரம், ஆயிற்ரு.
ஆச்சி - தாய்.
ஆச்சிபூச்சி - ஓர் விளையாட்டு.
ஆச்சியம் - நெய்.
ஆச்சிரயம் - ஒருவனை யடுத்திருத்தல், பாதுகாப்பு.
ஆச்சு - ஆயிற்று.
ஆஸ்தானம் - இராஜசபை, கூடம்.
ஆஸ்தி* - சொத்து.
ஆஸ்பதம் - புகலிடம்.
ஆஞா, ஆஞீ - தந்தை.
ஆஞ்சநேயன்* - அநுமான்.
ஆஞ்சான் - மரக்கலப்பாய் கட்டுங் கயிறு, நிறுக்குங் கருவிகளின் கயிறு.
ஆஞ்சி - அலையல், ஏலம், கூத்து, சோம்பல்.
ஆஞ்சில் - சங்கஞ்செடி.
ஆஞ்ஞை - ஆணை, ஆறுதாரத் தொன்று அஃது நெற்றித் தானம்.
ஆடகத்தி - குங்குமபாஷாணம்.
ஆடகம் - துவரை, பொன்.
ஆடகி - துவரைச்செடி.
ஆடம் - ஆமணக்கு, இருபது கொத்துக் கொண்ட ஓரளவு.
ஆடம்பரம்* - இடம்பம்.
ஆடல் - விளையாடல், [குளித்தல், கூத்தாடல், அசைதல், செய்தல், சொல்லுதல், நயச்சொல், புணர்தல்,பொருதல்].
ஆடவர் - ஆண்மக்கள், இளையோர், புருடர்.
ஆடவள் - பெண்.
ஆடவை - நிருத்தசபை, மிதுன விராசி.
ஆடாதொடை - ஆடாதோடை (ஓர் செடி.)
ஆடி - ஓர் மாதம், [உத்திராடநாள், கண்ணாடி, வினையெச்சம்].
ஆடிக்கரு - கர்ப்போடகமேகம்.
ஆடிப்பட்டம் - ஆடிப்பருவத்திற் பயிரிடல்.

ஆடு - ஆடு, ஆடலைச் செய்யென் னேவல், [மேடவிராசி, வெற்றி].

ஆடுதின்னுப்பாலை, ஆடுதின்னுப் பாளை - புழுக்கொல்லி.

ஆடுதுறை - ஒரு சிவஸ்தலம்.

ஆடூஉ* - ஆண்மகன்.

ஆடை - சீலை, பால் முதலியவற் றினேடு, [சித்திரைநாள், நேத் திரப்படலம், பனங்கிழங்கி னுட்டோல்].

ஆடையொட்டி - ஒட்டுப்புல், சீலைப்பேன்.

ஆட்கொல்லி - கொலைகாரன், பணம்.

ஆட்கொள்ளுதல் - அடிமை கொள்ளுதல்.

ஆட்சி - ஆண்மை, ஆளுகை, உரிமை.

ஆட்சேபம் - தடைபண்ணல்.

ஆட்சேபித்தல்* - நிராகரித்தல்.

ஆட்டம் - விளையாட்டு, [அசைவு, தன்மை].

ஆட்டல் - அசைத்தல், [நடப்பித் தல்].

ஆட்டாங்கள்ளி - திருகுகள்ளி.

ஆட்டாம்புழுக்கை - ஆட்டின் மலம்.

ஆட்டி - தலைவி, பெண், வினை யெச்சம்.

ஆட்டுவாகனன் - அக்கினி பக வான்.

ஆட்டை - ஆண்டு (வருஷம்).

ஆட்படல் - தொண்டனுதல்.

ஆணகம் - சுரை.

ஆணங்காய்-ஆண்பனையின் காய்.

ஆணம் - அன்பு, குழம்பு, கொள் கலம்.

ஆணர்-நன்மை, பாணர், வளமை.

ஆணவமலம் - மூலமலம், அஃது உடம்பை யானென்றிருக்கை.

ஆணவம் - ஆங்காரம், [நான் பெரியவனென்கிற குணம், கோளகபாஷாணம்].

ஆணுப்பிறந்தோன் - ஆவாரை.

ஆணி - காயாணி, [எழுத்தாணி, மேன்மை, முதன்மை].

ஆணித்தரம் - முதற்றரம், [உறுதி].

ஆணிப்பூ - கண்வியாதி.

ஆணிமுத்து - வயிர முத்து.

ஆணிவேர் - மரத்தினடிவேர்.

ஆணு - இனிமை, நன்மை, நேயம் 'ஆணுப்பைங்கிளி' (சீவக. சிந். 1002)

ஆணை - சத்தியம், [அடையாளம், ஏவல், தடுத்தல், வெற்றி, ஆக்கினை].

ஆணையிடுதல்-சத்தியம்பண்ணல்.

ஆணைவழிநிற்றல் - மன்னன் கட் டளைப்பிரகாரம் நடத்தல்.

ஆண் - ஆண் மகன், [ஆண்பாற் பொது, தலைமை].

ஆண்குமஞ்சான் - குங்கிலியம்.

ஆண்டகை - மன்னன், சிறந் தோன்.

ஆண்டகைமை - ஆண்டன்மை, வீரம்.

ஆண்டலை - கோழி.

ஆண்டலைக்கொடியோன் - குமரன்.

ஆண்டவன் - கடவுள், [ஆளுகை செய்கிறவன், எசமான், அரசன்].
ஆண்டளப்போன் - வியாழன்.
ஆண்டான் - ஆள்வோன், எசமான்.
ஆண்டி - பண்டாரம், [யாசகி].
ஆண்டிச்சி* - பண்டாரத்தி.
ஆண்டு - அவ்விடம், வருடம்.
ஆண்டை-எசமான், [அவ்விடம், தேட்கொடுக்கி].
ஆண்டையர் - மனிதர்.
ஆண்டொழின்மைந்தன் - அருச்சுனன்.
ஆண்பாடு* - மனிதன் செயல்.
ஆண்பால் - ஆண்.
ஆண்பிள்ளை - கெட்டிக்காரன், [ஆண் குழந்தை, மனிதன்].
ஆண்பிள்ளைச்சிங்கம்* - வீரன்.
ஆண்மரம்-அகவயிரமுள்ள மரம், அழிஞ்சில், செம்மரம்.
ஆண்மாரி - மூர்க்கமுடையவள்.
ஆண்மை-ஆண்டன்மை, [மெய், வலி, மனமுயற்சி].
ஆதங்கம்-புயம், ஆபத்து, நோய், பறையொலி.
ஆதண் - நோய், வருத்தம்.
ஆததாயி -கொல்லவொருப்பட்டு நிற்பவன்.
ஆதபத்திரம் - வெண்குடை.
ஆதபம்- ஒளி, குடை, வெய்யில்.
ஆதபன் - சூரியன்.
ஆதம் - ஆதரவு, கூந்தற்பனை.
ஆதம்பேதி - செப்புநெருஞ்சில்.
ஆதரம் - ஆசை, ஊர், சிலம்பு, கேள்வு, (தோணிக்கூலி).
ஆதரவு-ஆதாரம், [அன்பு, உதவி, விருப்பம்].
ஆதரிசனம் - கண்ணாடி.
ஆதரித்தல்* - உதவிசெய்யல், தாபரித்தல்.
ஆதர் - குருடர்.
ஆதல் - ஆகுதல், [கல்வி நூல், கூத்து, தெரிதல், நுணுக்கம்].
ஆதவம் - ஒளி.
ஆதவன் - சூரியன், பார்ப்பான்.
ஆதளைமாதளை - வருத்தம்.
ஆதனம் - ஆசனம், சீலை.
ஆதன் - அருகன், அறிவிலான், உயிர், குரு.
ஆதாயம் - இலாபம், [நன்மை].
ஆதாரம் - காக்குதல், நிலை, [அடி, உடல், மழை, வாய்க்கால்].
ஆதாளித்தல் - ஆயாசப்படுதல்.
ஆதாளிமன்னன் - கரடி.
ஆதி - முதல், [அயன், அரன், அரி, அருகன், ஆவாயென்னுமுற்று, இறைவன், எப்பொருட்கு மிறைவன், கடவுள், சூரியன், நேரோடல், பழைமை, புத்தன், மண்டிலமாயோடல்].
ஆதிகாரணம் - முதற்காரணம்.
ஆதிகேசவன் - மகாவிஷ்ணு.
ஆதிக்கம் - உரிமை, [முதன்மை, உயர்ச்சி].
ஆதிக்கல்நாதம் - அன்னபேதி.
ஆதிக்குடி - சவர்க்காரம்.
ஆதிக்குரு - முப்பூ, அது பஞ்சலோகங்களைப் பேதிக்கச்செய்வது.

ஆதிசேஷன், ஆதிசேடன் - அநந்தனென்னும் பாம்பு.
ஆதிச்சரக்கு - சூதம்.
ஆதிச்சனி - மகநாள்.
ஆதிதைவிகம் - தெய்வத்தால் வருந் துன்பம்.
ஆதித்தர் - வானோர்.
ஆதித்தன் - சூரியன்.
ஆதித்தியம் - உபசரணை.
ஆதித்தியன் - ஆதித்தன்.
ஆதிநாராயணன் - மகா விஷ்ணு, வச்சிரக்கல்.
ஆதிபகவன் - கடவுள்.
ஆதிபத்தியம் - அதிகாரம், சுதந்திரம், தலைமை.
ஆதிபன்-இராசா, எப்பொருட்கு மிறைவன்.
ஆதிபௌதிகம் - உடம்புமூலமாய் வருந்துன்பம்.
ஆதிமகாகுரு - துரிசு.
ஆதிமூர்த்தி, ஆதிமூலம், ஆதியங்கடவுள் - கடவுள்.
ஆதியந்தம் - முதற்முடங்கிமுடியுமட்டும்.
ஆதியுகம் - கிருதயுகம்.
ஆதிரம் - நெய்.
ஆதிரன் - பெரியோன்.
ஆதிரை - திருவாதிரை.
ஆதிவருணர் - அந்தணர்.
ஆதிவாயிலார் - பரதசேனுபதிய நூலாசிரியர்.
ஆதீனம் - உரிமை, ஆளுகை, உடைமை.
ஆது - ஆறனுருபு, யானையைப் பாகனதட்டுமோசை.
ஆதுரன் - ஆசையுற்றோன், நோயுற்றோன்.
ஆதுலன் - தரித்திரன்.
ஆதுவம் - கள்.
ஆதேயம் - சுமக்கப்பட்டது.
ஆதொண்டை - ஓர் கொடி.
ஆதோரணர் - யானைப்பாகர்.
ஆத்தன் - அருகன், தோழன்.
ஆத்தா - சித்தா.
ஆத்தாள் - தாய், பார்வதி.
ஆத்தானம், ஆஸ்தானம்-கோபுரவாயில், தருமசபை, கொலு.
ஆஸ்தி* - சம்பத்து, பாக்கியம்.
ஆத்தி - ஒரு மரம்.
ஆஸ்திகன் - கடவுளொன்று உளதென்பவன்.
ஆத்திசூடி - ஔவை இயற்றிய நூல், [சிவன்].
ஆத்திரதம் - இஞ்சி.
ஆத்திரம்* - அவசரம், கோபவிரைவு.
ஆத்திரேயன் - தத்தாத்திரேய முநி, சந்திரன்.
ஆத்துமகோஷம் - காகம்.
ஆத்துமசன் - புதல்வன்.
ஆத்துமசுத்தி - பஞ்ச சுத்தியிலொன்று.
ஆத்துமசை - மகள்.
ஆத்துமஞானம் - ஆத்துமாவையறிதல்.
ஆத்துமதரிசனம் - ஆத்துமாவின் தன்மையை யறிதல்.
ஆத்துமபுத்தர் - பூனைக்காலி.
ஆத்துமபோதம் - ஆத்தும ஞானம்.
ஆத்துமம்-பிராணன், [அரத்தை].

ஆத்துமா - ஆன்மா, சீவன், பிராணன், [அறிவு, புத்தி, காற்று, தீ, சூரியன், கரடிக்குட்டி].
ஆத்துமார்த்தம் - ஆத்தும லாபத்திற்குரியது.
ஆத்துமீகம் - ஆத்துமசம்பந்தம்.
ஆத்தை - தாய், அதிசய விரக்கச்சொல்.
ஆநகம், ஆனகம்-தம்பட்டம், துந்துபி, மேளம், தேவதரு, மத்தளம், காதினுட்சவ்வு, முகில்.
ஆநநம் - முகம்.
ஆநந்தபைரவி - ஓரிராகம்.
ஆநந்தம்-சந்தோஷம்,பேரின்பம்.
ஆநந்தவல்லி - கோழித்தலைக்கந்தகம்.
ஆநந்தவாதி - கவுரிபாஷாணம்.
ஆநி - நஷ்டம் (இது ஹாநி என்பதன் திரிபு).
ஆநியம் - நாள், பருவம், பொழுது, மூலநாள்.
ஆநிலன் - அநுமான், வீமன்.
ஆநின்று - நிகழ்கால விடைநிலை, (உ-ம்.) நடவாநின்றார்.
ஆந்தனையும் - ஆமளவும்.
ஆந்திரம்-ஓர் தேசம், ஓர் பாடை.
ஆந்திரிகம் - இரகசியம், [சூடர்].
ஆந்தை*-பஞ்சபட்சியிலொன்று, இதற்குப் பகற்போதில் பார்வை கிடையாது, [ஆதன் றந்தையென்பதன் மரூஉ].
ஆந்தோளி-ஓரிராகம், ஓர்வகைப் பல்லக்கு.
ஆபச்சைவன் - அட்டவசுக்களிலொருவன்.
ஆபணம் - கடை.
ஆபணியம் - கடைவீதி.
ஆபதம் - ஆபத்து.
ஆபதோத்தாரணன் - வைரவன்.
ஆபத்சன்னியாசம் - சாகுந்தறுவாயில் பெறும் துறவு.
ஆபத்தம்பம் - ஒரு தரும நூல்.
ஆபத்து - மிகு வருத்தம், [அவசரம்].
ஆபம் - நீர்.
ஆபரணம் - அணிகலன், [சீலை].
ஆபாசம் - கெடுதல், [பொய், போலிநியாயம், மிகு விருப்பம்].
ஆபாதசூடம் - பாதாதிகேசம்.
ஆபீரன் - இடையன்.
ஆபீனம் - சிற்பர்வீதி, பசுவின் மடி.
ஆபோகம் - கீதவுறுப்புளொன்று (சிலப்.)
ஆப்தம் - ஆண்டு, நட்பு.
ஆப்தன் - நண்பன்.
ஆப்பம் - ஒரு தின்பண்டம், [கும்பவிராசி].
ஆப்பி - சாணி.
ஆப்பு - மரம் பிளக்குங் கருவி, [எட்டி].
ஆமகணம் - குழந்தைகட்கு வருமொரு சீதக்கட்டு நோய்.
ஆமசிராத்தம் - பாகஞ் செய்யப்பெறாத காய்கறிப் பதார்த்த வகைகளைப் பார்ப்பானுக்குத் தருதல்.
ஆமணக்கு - எரண்டம் (இச்செடியின் கொட்டையி லிருந்து எண்ணெய் உண்டாகிறது).

ஆமம் - ஓர் நோய், சீதம், மல வறட்சி, கடலே, துவரை.
ஆமயம் - நோய், சாணி.
ஆமலகம்-நெல்லிமரம், பளிங்கு.
ஆமல் - விஷமூங்கில்.
ஆமா - காட்டுப்பசு.
ஆமாகோளம் - கடுக்காய்ப்பூ.
ஆமாத்தியர் - தந்திரிகள், வைத்தியர்.
ஆமிரம் - மாமரம்.
ஆமிலம் - புளிப்பு, புளியமரம்.
ஆமுடையான்* - கணவன் (அகமுடையானென்பது இவ்வாறு திரிந்து வந்தது).
ஆமை - கூர்மம், [ஓர் நோய், வாசனை].
ஆமைக்கல் - தளவரிசைக்கான ஆறு மூலேக்கல்.
ஆமைப்பூட்டு - ஓர்வகைப்பூட்டு.
ஆமைமடி - சிறு மடி.
ஆமையாழ் - செவ்வழி யாழ்த் திறம்.
ஆமோதம் - மகிழ்ச்சி, நறுமணம்.
ஆம் - அசைச்சொல், ஆமெனல், இடைச்சொல், ஈரம், நீர்.
ஆம்படையான், ஆம்படியான் - கணவன் (தன்னை ஆளும்படியானவன் என்பது இவ்வாறு வழங்குகிறது).
ஆம்பல் - அல்லி, அடைவு, இசைக்குழல், ஊதிடுகொம்பு, ஒரெண், கள், சந்திரன், பண், மூங்கில், யானை.
ஆம்பி - காளான், ஒலி, இறைகூடை.
ஆம்பிரம் - புளிப்பு, புளிமா, மாமரம்.
ஆம்பிலம் - கள், புளிப்பு, புளியமரம்.
ஆம்புலம், ஆம்பூறு - சூரை.
ஆயக்கால், ஆயக்கோல்* - சிவிகை முதலியன தாங்கு கால், குத்துக்கால்.
ஆயதம்-நீளம், முட்டை வடிவம்.
ஆயத்தம் - எத்தனம்.
ஆயத்துறை - தீர்வைத்துறை.
ஆயம் - ஆதாயம், சுங்கம், சூதாடுங் கருவி, தாய், தோழி, நாணி, நீளம், மகளிர்கூட்டம், மல்லரி, பசுத்திரள் (சிலப்.)
ஆயர் - இடையர்.
ஆயர்பாடி - இடையரூர்.
ஆயனம் - வருடம், யாண்டிற் பாதி.
ஆயாசம் - இளைப்பு, சோர்வு, துக்கம்.
ஆயாள் - அன்னையை யீன்றாள், [தாய், வளர்க்குந் தாய்].
ஆயி - தாய்.
ஆயிரக்காலி - மரவட்டை, துடைப்பம்.
ஆயிரங்கண்ணன் - இந்திரன்.
ஆயிரங்கதிரோன், ஆயிரங்கிரணன் - சூரியன்.
ஆயிரஞ்சோதி - சூரியன்.
ஆயிரம் - பத்துநூறு.
ஆயிலியம் - ஓர்நாள்.
ஆயில் - ஆயிலியநாள், ஓர் மரம்.
ஆயிழை - பெண், அரிவாணுனி.
ஆயினும் - ஆனாலும் (எண்ணிடைச்சொல்.)

ஆயு, ஆயுசு - ஆயுள் (வாழ்நாள்).
ஆயுகம் - வாழ்நாள்.
ஆயுகாரகன் - சனி.
ஆயுட்டானம் - செனித்த காலை யில் சந்திரனிருந்த ஸ்தானத் திற் கெட்டாமிடம்.
ஆயுட்டோமம்-தீர்க்காயுள் பெறு வதற்குச் செய்யும் யாகம்.
ஆயுதபூசை* - புரட்டாசிமாதம் சுக்கிலபக்ஷத்து நவமியில் மக் கள் தமது ஜீவியத்துக்குரிய கருவிகளை வைத்து இலட்சுமி, சரசுவதி, துர்க்கையை நினைத் துப் பூசைசெய்தல்.
ஆயுதம் - படைக்கலம், [கூத்துப் பயிலிடம்].
ஆயுர்வேதம், ஆயுள்வேதம் - வைத்திய சாத்திரம்.
ஆயுள்வேதர் - வைத்தியர்.
ஆயோதனம் - போர்.
ஆய் - ஆய்தல், ஆராயென்னே வல், தாய், வருத்தம்.
ஆய்ச்சி - இடைச்சி, தாய்.
ஆய்ச்சியர் - இடைச்சியர்.
ஆய்தம் - அஃகேனம் (ஆய்த வெழுத்து).
ஆய்தல் - ஆராய்தல், [தேர்தல், நுண்மை].
ஆய்ந்தோர் - அறிவுடையோர், அந்தணர், புலவர்.
ஆய்ப்பாடி - இடையரூர்.
ஆய்மலர் - தாமரை.
ஆய்வு - ஆராய்தல், அகலம், நுட்பம், வருத்தம்.
ஆரகம் - இரத்தம், ஈயுமெண்.
ஆரகூடம், ஆரகூலம் - பித்தளை.
ஆரகோரம் - கொன்றை.
ஆரக்கண்ணியன் - சோழன்.
ஆரக்கம் - அகில், சந்தனம்.
ஆரஞர் - துக்கம்.
ஆரணம் - வேதத்தின் ஞான பாகை, வேதம்.
ஆரணவாணர் - அந்தணர்.
ஆரணன் - பிரமன், திருமால், அரன், அந்தணன்.
ஆரணி - காளி, பார்வதி.
ஆரணியம்*, ஆரண்ணியம்* - கானகம்.
ஆரதி - ஆலாத்தி, சேர்டசவப்சா ரத் தொன்று.
ஆரத்திரகம் - இஞ்சி.
ஆரநாளம் - காடிச்சலம்.
ஆரமாலையன் - ஆத்திமாலைசூடிய சோழன்.
ஆரம் - பூமாலை, [ஆத்திமரம், ஆப ரணம், ஓர் பாணம், கடம்பு, சந்தனமரம், நந்தனவனம், பதக்கம், பித்தளை, மாதரணி வடம், முத்து, முத்துமாலை].
ஆரம்பம் - துவக்கம், [பேரொலி, பாயிரம்].
ஆரம்பித்தல் - தொடங்கல், [ஒலி த்தல்].
ஆரலம் - பகை.
ஆரல் - ஆரால்மீன், கார்த்திகை நாள், செவ்வாய், நெருப்பு, மதில்.
ஆரவாரம்* - ஒலி, பேரொலி.
ஆரவாரித்தல்*-மிகவொலித்தல்.
ஆராகரியம் - அரசமரம்.
ஆராட்டு - தாலாட்டு.
ஆராதனை - பூசனை, வணக்கம்.

ஆராதித்தல் - பூசித்தல்.
ஆராதூரி - அழிப்புக்காரன், [ஊதாரிக்குணம்].
ஆராத்தியர், ஆராத்திரியர் - வீர சைவர், பார்ப்பார்.
ஆராமம் - சோலை, பூந்தோட்டம்.
ஆராய்ச்சி - சோதனை.
ஆராய்ச்சிமணி - மன்னன் வாயி லிலே கட்டிய அசையாமணி.
ஆராய்தல்* - தேடல்.
ஆரால்* - ஆரல்மீன்.
ஆரி - சோழன், மேன்மை, துர்க் கை, பார்வதி.
ஆரிடம், ஆரிஷம் - ஆகமம், ஓர் மணம், நூல், பூசை, வழக்கு நிலம்.
ஆரிடர் - சமணர், முனிவர்.
ஆரியக்கூத்து - பாவைக்கூத்து.
ஆரியம் - அழகு, இமயமலைக்கும் விந்தியமலைக்கும் நடுத்தேசம், வடமொழி, பண்டம்.
ஆரியர் - ஆசிரியர், புலவர், வைத் தியர், மிலேச்சர்.
ஆரியவராடி - ஓர் பண்.
ஆரியவேளாகொல்லி - கொல் லித்திறத்தினென்று(ஓர்பண்).
ஆரியன் - அறிவுடையன், ஐய னர், குரு, சூரியன், புலவன், மிலேச்சன், வைத்தியன்.
ஆரியை - காளி, துர்க்கை, பார் வதி.
ஆரியைதநயன் - வயிரவன்.
ஆருகதம் - அருகசமயம், நாவன் மரம்.
ஆருத்திரை - திருவாதிரை.
ஆருபதம் - பித்தளை.
ஆருவம் - நீர்.
ஆரூடம் - முன்னறிவிக்கை, [ஏறுவது].
ஆரூபம்-அமையாமை,நீங்காமை.
ஆரை - நீருளாரை, [புற்பாய், மதில்].
ஆரோகணம் - ஏறுதல், கற்படி, தாழ்வாரம்.
ஆரோக்கியம்* - சுகம், சௌக் கியம்.
ஆர் - யாரென் வினை, [ஆத்தி, ஆர் தலைச் செய்யென்னேவல், ஐந் துருவாணி, கூர்மை, சோதி, நிறைதல், பலர்பால் விகுதி (உ-ம்.) திணிதோளார், பாகு, பூமி, தேர்வண்டியகவாய், அருமை].
ஆர்கதி - திப்பிலி.
ஆர்கலி - கடல், மழை.
ஆர்க்கம் - இரத்தம்.
ஆர்க்குவதம் - கொன்றைமரம்.
ஆர்தல் - குடித்தல், தங்கல், நிறை தல், புசித்தல்.
ஆர்த்தர் - துயருறுவோர், பெரி யோர், யோகிகள்.
ஆர்த்தல் - அணிதல், ஒலித்தல், கட்டல், பொருதல், பொருத் தல்.
ஆர்த்தார்க்கோன் - சோழன்.
ஆர்த்தி - மகிழ்ச்சி, விருப்பம், வில்லின் நுனி, துன்பம், அனுபவம், பூஜை.
ஆர்த்திகை - துயரம்.
ஆர்த்திரகம் - இஞ்சி.
ஆர்பதம் - நீழல், வண்டு.

ஆர்ப்பு-கட்டு, சிரிப்பு, பேரொலி, போர்.
ஆர்மதி - நண்டு, கற்கடகவிராசி.
ஆர்மை - கூர்மை, மதில்.
ஆர்வம் - அன்பு, ஆசை, ஒலி, சீலை, நரகம்.
ஆர்வலன்-அன்புடையான், கணவன், நண்பன்.
ஆர்வு - ஆராய்தல், நிறைவு.
ஆலகண்டன் - சிவன்.
ஆலகாலம் - நஞ்சு, விடம்.
ஆலக்கொடிச்சி - தானகம்.
ஆலங்காடு - ஓர் சிவஸ்தலம்.
ஆலசியம்* - தாமதம்.
ஆலத்தி*, ஆலாத்தி* - அட்டமங்கலத் தொன்று, நீராஞ்சனம்.
ஆலமர்கடவுள், ஆலமர்கண்டன்-சிவன்.
ஆலமுடையோன் - துரிசு.
ஆலம்-ஆலமரம், மஞ்சளுஞ் சுண்ணம்புங் கலந்த நீர், [அம்புக்கூடு, நீர், பாம்பினஞ்சு, மலர்ந்தபூ, மழை, கலப்பை].
ஆலம்பம் - பற்றுக்கோடு, ஆதாரம், புகலிடம்.
ஆலயம்-தேவர்கோயில், [யானைக்கூடம், வீடு].
ஆலலம் - கூறை.
ஆலல் -'ஆடல், ஒலித்தல், மயிற்குரல், வியங்கோண்முற்று.
ஆலவட்டம் - விசிறி.
ஆலவாய் - தென்மதுரை.
ஆலவாலம் - வயல், சிறுபாத்தி.
ஆலாங்கட்டி - மழைக்கட்டி.
ஆலாபனம் - அலப்பு.
ஆலாபித்தல் - அலப்புதல்.
ஆலாலம் - விடம், வெளவால்.
ஆலாவர்த்தம் - ஆலவட்டம்.
ஆலானம் - யானைகட்டுங் கயிறு, யானைகட்டுந் தறி.
ஆலி - ஆலாங்கட்டி, காற்று, மழை, மழைத்துளி, கள், அமுதம், களியென்னேவல்.
ஆலிங்கனம் - தழுவல்.
ஆலித்தல் - களித்தல்.
ஆலு - நீர்க்குடம்.
ஆலும் - ஆடும் (மணிமே. பக். 35).
ஆலை - கரும்பாலை, [கள், கிட்டி.]
ஆலைபாய்தல்* - மனச்சுழற்சி.
ஆலோசனை* - யோசனை, புத்தி.
ஆலோசித்தல் - சிந்தித்தல், யோசித்தல்.
ஆலோலம் - புள்ளோச்சல், [நீரொலி].
ஆலோலிதமுகம் - ஆசையான் மலர்ந்த முகமாயொருவனை யழைத்தல்.
ஆலோன் - சந்திரன்.
ஆல்-அசைச்சொல் (உ-ம்.) நாடாமாலூராமாலென் னொருவன், ஆமெனல், ஆலமரம், வியங்கோள் விகுதி (உ-ம்.) மரீஇய தொரால், ஆலென்னேவல், வேற்றுமையுருபு (உ-ம்.) வாளால் வெட்டினன்.
ஆல்வாட்டுதல் - சிறிது காயச்செய்தல்.
ஆவசியகம் - அவசரம்.
ஆவஞ்சி - ஒருவகைத் தோற்கருவி (சில. பக். 86. வரி.32).
ஆவடுதுறை - ஒரு சிவஸ்தலம்.

ஆவட்டை - ஓர் பூண்டு.
ஆவணம் - கடை, தெரு, அடை யாளம், உரிமை, தேர்மொட்டுப் பொருந்திய பீடம், புநர் பூசம், முறிச்சீட்டு.
ஆவணி - ஓர் மாதம், [அவிட்ட நாள்].
ஆவணியம் - கடைவீதி.
ஆவநாழி - அம்புக்கூடு.
ஆவம் - அம்புக்கூடு, நாணி, குங்குமமரம்.
ஆவரணசத்தி-பசு பதி பாச மூன்றையும் பேதந்தெரியாது மறைப்பது.
ஆவரணம் - கோட்டை, சீலை, மதில், வேலி, கேடகம், ஈட்டி.
ஆவரி - அம்பு.
ஆவரை - ஆவிரை, நிலவாகை.
ஆவர்த்தகம் - மயிர்முடி, மனக் கலக்கம், சுழல்காற்று.
ஆவர்த்தம் - சத்தமேகத்தொன்று அஃது நீர்பொழிவது, சுழல் காற்று, சுழி, மயிர்முடி.
ஆவலங்கொட்டல் - வாயாலார்த் தாடல்.
ஆவலம் - கொல்லை.
ஆவலர் - காதலர், கொண்கர்.
ஆவலி, ஆவளி - ஒழுங்கு.
ஆவலித்தல்-கொட்டாவிவிடுதல்.
ஆவல் - ஆசை, [வளைவு].
ஆவா - அதிசயக்குறிப்பு, இரக் கக்குறிப்பு.
ஆவாகனம் - ஸ்தாபனம்.
ஆவாகித்தல் - ஸ்தாபித்தல்.
ஆவாரை - ஆவரை (ஆவிரஞ் செடி), நிலவாகை.
ஆவாலம் - வௌவால்.
ஆவி - நீராவி, உயிர்ப்பு, [உயிர், குளம், பிட்டு, புகை, வாசனை].
ஆவிசீவாளம் - யாவச்சீவம் (இச் சீவியத்துக் கடுத்தது).
ஆவிடையார், ஆவுடையார் - சிவ மாகிய இலிங்கத்தோடு ஒன்றித்துள சத்தியாகிய வட்ட பீடம்.
ஆவித்தல் - கொட்டாவிவிடுதல்.
ஆவிமலர் - மனம் (சீவக. சிந். 465.)
ஆவியர் - வேடர், வேளாளர்.
ஆவிரம் - இடையருர்.
ஆவிருத்தி - முழுவட்டம், சுற்று தல், வழக்கம்.
ஆவிரை - ஆவாரை.
ஆவிலம் - கலங்கனீர்.
ஆவுரிஞ்சி, ஆவுரிஞ்சுதறி - ஆதீண்டுகுற்றி.
ஆவேசம் - ஆவி, சன்னதம், மருள்.
ஆவேசனம் - சித்திரக்காரர்வீதி.
ஆவேலம் - தம்பலம்.
ஆவேலி - தொழுவம்.
ஆவோ - அதிசய விரக்கச்சொல்.
ஆழம் - தாழ்வு, [அறிதற்கரியது, கடல்].
ஆழல் - தாழ்தல், கறையான்.
ஆழாக்கு* - அரைக்காற்படி.
ஆழி - கடல், கரைப்பொது, சக்கரம், தேருருளை, மோதிரம், யானைக்கை நுனி, வட்டம்.
ஆழிக்கொடி - பவளம்.

ஆழிவித்து - முத்து.
ஆழிவெம்முரசோன்- மன்மதன்.
ஆழுதல் - அழுத்தல், தாழ்தல்.
ஆழ்தல் - அழுந்தல், தாழ்தல்.
ஆழ்த்தல் - பதித்தல், தாழ்த்தல், வருத்துதல்.
ஆழ்வார் - கருடன், [விஷ்ணு பக்தர்].
ஆளரி - சிங்கவேறு.
ஆளல் - ஆளுதல், வியங்கோண் முற்று.
ஆளன் - கணவன், [எசமான்].
ஆளாபம் - ஆலாபனம் (சீவக. சிந். **1959** உரை).
ஆளானம்-கட்டுத்தறி, கலப்பை, யானைகட்டுந் தறி.
ஆளி - யாளி, [ஆளுவோன், ஒழுங்கு, கஸ்ரப்பொது, சிங் கம், சிங்கவிராசி, செய்கரை].
ஆளியூர்தி - காளி, துர்க்கை.
ஆளிவிரை* - ஓர் விரை.
ஆளுகை*-ஆட்சி, ஆளுந்தன்மை.
ஆளொட்டி - காவற்கூடு.
ஆள்-ஆளுதலைச் செய்யென்னே வல், ஆண்மகன், [அடிமை].
ஆள்வணங்கி - அரசமரம், தொட் டால்வாடி.
ஆள்வள்ளி* - மலைச்சருக்கரை வள்ளி.
ஆள்வினை - உற்சாகம், முயற்சி.
ஆறகோரம் - கொன்றை.
ஆறலைத்தல் - வழிப்பறித்தல்.
ஆறல் - ஆறுதல்.
ஆருடி - தூர்த்தன்.
ஆருதாரம் - சடாதாரம்: அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசு த்தி, ஆஞ்ஞை.
ஆருதூறு - அவதூறு.
ஆறு - ஒரெண், நதி, [ஒழுக்கம், வழி, ஆறுதலைச்செய்யென் னேவல், தருமம் (சீவக. சிந். **2261**).]
ஆறுகட்டி - பண்டாரங்களணியு மோர் காதணி.
ஆறுகாடு - ஆற்காடு (சடாரண் ணியம்).
ஆறுதல்- ஆறியிருத்தல், ஒய்தல், குணப்படுதல், இளைப்பாறல்.
ஆறுமுகன் - முருகன்.
ஆறை - ஆற்றூர்.
ஆற்ற - மிகுதியாய்.
ஆற்றங்கரை* - ஆற்றோரம்.
ஆற்றல் - அதிகம், செய்தல், ஞானம், நிலையுடைமை, பரித் தல், பொறை, மிகுதி, முயற்சி, வலி, வியங்கோண் முற்று.
ஆற்ருக்கேடு - மிகு தரித்திரம், மிகுதேவை.
ஆற்ருப்பட்சம் - தரிக்கக்கூடா மை.
ஆற்ருர் - தரித்திரர், வருந்தினர்.
ஆற்றித்தேற்றல் - தணித்துத் திடன்சொல்லுதல்.
ஆற்றின்வித்து - கர்ப்பூரசிலா சத்து.
ஆற்று - ஆற்றென்னு மேவல், தலைக்கடை.
ஆற்றுக்காலாட்டியர்-உழத்தியர்.
ஆற்றுக்கால் - ஆற்றிலிருந்து பாயும் வாய்க்கால்.

ஆற்றுணா - கட்டுச்சோறு.
ஆற்றுநெட்டி - நீர்ச்சுண்டி.
ஆற்றுப்படை - ஓர் செய்யுள், வழிப்படுத்தல்.
ஆற்றுமா - பிராணன்.
ஆற்றுவரி - இசைப்பா வகையு ளொன்று (சிலப்ப. பக். 163. வரி 4.)
ஆற்றுவாளை* - ஓர் மீன்.
ஆற்றொழுக்கு - ஆற்றுநீரோட் டம்.
ஆனகதுந்துபி - வசுதேவன்.
ஆனத்தேர் - விடத்தேர்ச்செடி.
ஆனந்த - நாற்பத்தெட்டாவ தாண்டு.
ஆனந்தபரவசம்-ஆநந்தத்திலழுந் தித் தன்னையே மறத்தல்.
ஆனந்தபாஷ்பம் - பேரின்பக் கண்ணீர்.
ஆனந்தபைரவி - ஓர்பண்.
ஆனந்தமயம் - தன்வசமற்றிருத் தல்.
ஆனந்தமூலி - கஞ்சா.
ஆனந்தி - பார்வதி.
ஆனந்தை - கொட்டைக்கரந் தை, பார்வதி.
ஆனம் - கள்.
ஆனனம் - முகம்.
ஆனாமை-நீங்காமை,உத்திராடம்.
ஆனி - ஓர் மாதம், [உத்திராட நாள், பொருந்தநதி, கேட்டை நாள், மூலநாள், வெட்டுக்குரு த்து.]
ஆனியம் - பொழுது, மூலநாள், இரவும் பகலும் (சீவக. சிந். [359.)
ஆனிலன் - ஆநிலன்.
ஆனிலை - பசுக்கொட்டில்.
ஆனு - இனிமை, நன்மை.
ஆனை - யானை [அத்திமரம்].
ஆனைக்கால்* - வாதக்கால்.
ஆனைக்கொம்பன் - ஆனைவாழை, ஓர்வகை நெல்.
ஆனைக்கோடு - யானைக்கொம்பு.
ஆனைச்சப்பரம் - அம்பாரி.
ஆனைத்திசை - வடக்கு.
ஆனைத்தோட்டி - அங்குசம்.
ஆனைநெருஞ்சில் - பெருநெருஞ் சில். [நோய்.
ஆனைப்படுவன் - விலங்கினோர்
ஆனைப்பந்தி - யானைக்கூட்டம்.
ஆனைப்பேன் - கத்தரிச்செடியி லுண்டாகுமொரு பூச்சி.
ஆனைமயிர்க்காப்பு - யானைவால் மயிரால் செய்த கைவளை.
ஆனைமலை - மதுரையிலுள்ள ஓர் மலை.
ஆனைமுகத்தோன், ஆனைமுக வன் - விநாயகன், [கசமுகா சுரன்].
ஆனையிலத்தி* - ஆனைச்சாணம்.
ஆனையேற்றம் - ஆனையேறும் பரீட்சை.
ஆனைவணங்கி - தேட்கொடுக்கி.
ஆன் - ஆண்பால் விகுதி (உ-ம்.) வேளான், சாரியை (உ-ம்.) ஒன்பான், பசுப்பொது, பசு, வேற்றுமையுருபு (உ-ம்.) உர னென்னுந் தோட்டியானோ ரைந்துங் காப்பான்.
ஆன்கன்று - கன்றுக்குட்டி.
ஆன்மதரிசனை - ஆத்துமாவின் நிலையறிதல்.

ஆன்மா - உயிர்.
ஆன்வல்லோர் - இடையர்.
ஆன்ற - விசாலமான, மாட்சிமை யுற்ற.
ஆன்றல் - அகலம், மாட்சிமை, மிகுதி.
ஆன்றவர், ஆன்றார், ஆன்றோர் - அறிவுடையோர், புலவர்.
ஆன்றிரள் - பசுக்கூட்டம்.

## இ

இ-ஓரெழுத்து, ஓர்சுட்டு (உ-ம்.) இக்கொற்றன்.
இஃது - இது.
இக - இகவெண்ணேவல், முன்னிலையசைச்சொல் (உ - ம்.) தண்டுறையூர காணிக.
இகத்தல் - கடத்தல், போதல், மீளுதல்.
இகபரசாதனம் - இம்மை மறுமைக்கடுத்த கடமைகளை நடப்பித்தல்.
இகபரம் - பூலோக பரலோக வனுபவம்.
இகம் - இப்பிறப்பு, இவ்விடம், உலகம்.
இகரம் - ஓரெழுத்து, சந்தம்.
இகல-ஒருவமைச் சொல் (உ-ம்.) வரையிகலவளர்தோள்.
இகலல் - பொருதல், எதிர்த்தல், பகைத்தல், வாக்குவாதஞ் செய்யல்.
இகலன் - கிழநரி, நரி, பகைவன்.
இகலாட்டம் - போராட்டம்.
இகலார், இகலோர் - பகைவர்.
இகல் - பகை, பொருதென்னேவல், போர், வலி.
இகழ்ச்சி - ஈனம், நிந்தை, மறதி.
இகழ்தல் - நிந்தித்தல்.
இகழ்வு - நிந்தை.
இகளி - இடி.
இகுத்தல் - அழைத்தல், இரித்தல், ஈதல், எறிதல், குழைத்தல், கொல்லல், தாண்டல், தாழ்த்தல், துடைத்தல், மதித்தல், வருந்துவித்தல், வீழ்த்தல்.
இகும் - அசைச்சொல் (உ-ம்.) கண்டிகு மல்லமோ கொண்க நினகேளே.
இகுளை - சுற்றம், தோழி, நட்பு.
இகுள் - இடி, ஆரல்மீன், கார்த்திகைநாள்.
இகைத்தல்-கொடுத்தல்,நடத்தல்
இக்கட்டு-துன்பம், [தரித்திரம்].
இக்கிடைஞ்சல் - இக்கட்டு.
இக்கு - கரும்பு, கள்.
இக்கோ - அதிசயவிரக்கச்சொல்.
இக்ஷி - கஸ்தூரிமஞ்சள்.
இங்கண் - இவ்விடம்.
இங்கரி, இங்கிரி - கஸ்தூரி.
இங்கிசை - கொலை.
இங்கிதம் - இனிமை, குறிப்பு, எண்ணம், நினைவு.
இங்கு - இவ்விடம், [பெருங்காயம்].
இங்குமெம், இங்குமம், இங்குராமம் - பெருங்காயம்.
இங்குலிகம்-சாதிலிங்கம், சிவப்பு.
இங்குளம், இங்குளி - பெருங்காயம்.

இங்ஙனம், இங்ஙன் - இவ்விடம், இத்தன்மை.
இசகுபிசகு* - குழப்பம்.
இசங்கு - சங்கங்குப்பி.
இசி - இசியென்னேவல், [இணுங்கு, சிரிப்பு].
இசிப்பு*, இசிவு - இழுப்பு.
இசின் - இறந்தகால விடைநிலை (உ-ம்.) என்றிசினோரே.
இசை-இசைப்பாட்டு, இசைப்பு, இசையென்னுமேவல், ஒலி, சொல், புகழ்.
இசைதல் - உடன்படல்.
இசைத்தல் - ஒலித்தல், கட்டல், ஈதல், பேசல்.
இசைநாள் - உத்திரட்டாதிநாள், பூரட்டாதிநாள்.
இசைப்பு - இணக்கம், கூடிநிற்றல், சொல்லல்.
இசைமடந்தை - சரசுவதி.
இசைவு - இணக்கம், சம்மதி.
இச்சகம் - முகமன்.
இச்சாசத்தி-பஞ்சபூதமாகநின்று உயிர்க்கருணேசஞ் செய்வது.
இச்சாபத்தியம் - கடும்பத்தியமாயில்லாதிருத்தல்.
இச்சி - ஆசைப்படு, [இத்திமரம்].
இச்சை - ஆசை, [அஞ்ஞானம், இடித்தல், பொய்].
இஞ்சி - இஞ்சிக்கிழங்கு, [கேடகம், மதில், வாவி].
இஞ்சித்தேறு - இஞ்சித்துண்டு.
இடக்கரடக்கல்-மறைத்தசொல்.
இடக்கர்-குடம், தூர்த்தர், நெருங்கல், மறைவான சொல்.
இடக்கன் - தாறுமாறாய் நடப்பவன்.
இடக்கியம் - தேர்க்கொடி.
இடக்கு - முருட்டுத்தனம், ஏறுமாறு, [இழிசொல்].
இடக்கை - இடக்கரம், [உத்தமத்தோற் பெருங்கருவி].
இடங்கணி - சங்கிலி, உளி, ஆந்தை.
இடங்கம் - உளி.
இடங்கரம் - மகளிர்சூதகம்.
இடங்கர் - குடம், நீர்ச்சால், முதலை.
இடங்கழி, இடங்கழிவு - ஓரளவு, நெருங்கல்.
இடங்கழியர்-காமுகர், தூர்த்தர்.
இடங்காரம் - மத்தளத்தி னிடப்புறம்.
இடசாரி - இடமாகச் சுற்றுதல்.
இடத்தல் - தோண்டல்.
இடத்திடல் - சொலித்தல்.
இடந்தலைப்பாடு - இடந்தலைப்படுதல், [தலைவனும் தலைவியும் ஓரிடத்தே சேர்தல்].
இடபம் - எருது, சிவனூர்தி, சிவன்கொடி, மேற்றிசைப்பாலன்குறி.
இடபாரூடன் - சிவன்.
இடமாரம் - ஓர் பெரும்பறை.
இடம் - தலம், [அகலம், ஆகாயம், இடப்பக்கம், செல்வம், பெருமை, விசாலம், வீடு].
இடம்பம்* - ஆடம்பரம்.
இடம்பாடு - விரிவு, செல்வம், பருமை.
இடம்புரி - இடம்புரிச்சங்கு.

இடர்* - துன்பம்.
இடல் - கொடுத்தல், [எறிதல்.]
இடவகம் - பனம்பிசின், மாம் பிசின்.
இடவம் - பூமி.
இடவை - வழி.
இடவோட்டு - இடப்புறமாய்ச் செல்லுதல்.
இடறு - ஆபத்து, தடை.
இடன் - இடம்.
இடாகினி - காளியேவல் செய் வாள், சுடுகாட்டிற் பிணங்க ளைத் தின்னும் பேய் (சிலப். 9:21.)
இடாகு - புள்ளி.
இடாம்பீகன் - ஆடம்பரக்காரன்.
இடார் - இறைகூடை.
இடி - இடி, இடியென்னேவல், [இந்திரன்கொடி, உறுதிச் சொல், ஒலி, சிற்றுண்டி, சுண்ணம், தகரம், தினைமா, நென்மா].
இடிஞ்சில் - அகல்.
இடிதல் - ஒடிதல், நொறுங்கல்.
இடித்தல் - இடிக்குதல், [ஒலித் தல், உறுதிசொல்லல்].
இடித்துரை - உறுதிமொழி.
இடிபடல் - இடியுண்ணல்.
இடிம்பு - அவமதிப்பு.
இடியப்பம்* - ஓர் சிற்றுண்டி.
இடியேறு - இடி.
இடுகாடு - சுடுகாடு.
இடுகை - ஈகை.
இடுக்கண் - துன்பம், வறுமை.
இடுக்கம் - ஒடுக்கம், நெருக்கம், [துன்பம், வறுமை].
இடுக்கி - உலோபி, சாவணம்.
இடுக்கு - நெருக்கமானவிடம், ஒடுக்கம், சந்து, [துன்பம்].
இடுக்குதல் - அணைத்தல், நெருக் கல்.
இடுக்குமுடுக்கு - மூலைமுடுக்கு, [சங்கடம்].
இடுதல் - ஈதல், சொரிதல், எறி தல்.
இடுப்பு* - இடை.
இடுமுடுக்கு-நெருக்கமானவிடம்.
இடும்பர் - ஓர்வகை இராக்கதர்.
இடும்பன் - ஓரரக்கன், குமரனே வல்செய்வோன்.
இடும்பி-இடும்பன்தங்கை, செரு க்குடையாள்.
இடும்பிகணவன் - வீமன்.
இடும்பு - அவமதிப்பு, அகந்தை.
இடும்பை - துன்பம், அச்சம்.
இடுலி - பெண்ணுமை.
இடுவந்தி-அநீதம், நெருக்கிடை.
இடை - இடம், இடை, ஏழனு ருபு (உ - ம்.) நல்லாரிடைப் புக்கு, நடு, நிறை, நுசுப்பு, பக்கம், பௌரணை, யானை, சமயம்.
இடைகலை - இடமூக்கால்வருஞ் சுவாசம்.
இடைகழி - வாயில், (சிலப்ப).
இடைக்காடன் - ஓர் சித்தன்.
இடைக்கிடை - நடுநடுவே.
இடைசுருங்குபறை - உடுக்கை.
இடைச்சனி - பூரநாள்.
இடைச்சன் * - இரண்டாம் பேறு.
இடைச்சேரி * - இடையரூர்.

இடைஞ்சல் * - இக்கட்டு, வருத்தம்.
இடைதல் - பின்வாங்குதல், [சீலை].
இடையர்*-குறிஞ்சிநிலத்துக்கும் முல்லை நிலத்துக்கும் இடையில் உறைபவர்கள்.
இடையல் - ஒதுங்கல், [நல்லாடை].
இடையன்கால்வெள்ளி - ஓர் விண்மீன்.
இடையாந்தரம் - நடு.
இடையூறு - ஊறுபாடு, தடை.
இடையெழுஞ்சனி - பூரநாள்.
இடைவழி - நடுவழி, பாதிவழி.
இடைவள்ளல் - ஒன்றைக் கேட்டபிறகே தருபவன்.
இடைவிடாது* - ஓய்வின்றி.
இடோலி - ஓர்வகைச் சிவிகை.
இடோல் - ஓர் பறை.
இஷ்டகாமியம் - இச்சித்த பொருளைநினைந்தவாறு அடைதல்.
இஷ்டதேவதை - தான் வழிபடு தெய்வம்.
இஷ்டபோகம் - விரும்பியதை தவறாது அனுபவித்தல்.
இஷ்டம், இட்டம் - அன்பு, விடுதலை, யாகபலி, யாகம், ஆமணக்கு.
இட்டலி* - ஓர் தின்பண்டம்.
இட்டளம் - தளர்வு, துன்பம்.
இஷ்டி - யாகம்.
இட்டி - யாகம், ஈட்டி (சீவக. சிந். **341**), செங்கல்.
இட்டிகை-இடுக்குவழி, செங்கல்.
இட்டிடை - சிறுமை, தரித்திரம்.
இட்டு-அற்பம், நுண்மை, அசைச்சொல் (உ-ம்.) நெஞ்சம் பிளந்திட்டு, வினையெச்சம் (உ-ம்.) யான் இட்டுப் பார்க்கவில்லை.
இணக்கம் - இசைவு, சம்மதம், சேர்மானம்.
இணக்குதல் - உடன்படுத்தல்.
இணக்கோலை - உடன்படிக்கைப் பத்திரம்.
இணங்கல் - உடன்படல், வியங்கோண்முற்று.
இணங்கன் - வெடியுப்பு.
இணங்கி - உடன்பட்டு, தோழி.
இணங்கு - உடன்படு வென்னேவல், பிசாசம்.
இணர் - பூங்கொத்து, பூந்தாது, பூமலர்.
இணுட்டு - ஓலைத்துண்டு, ஓலைத் தளிர்.
இணுப்புதல் - எய்த்தல்.
இணி - எல்லை, ஏணி.
இணுக்கு - கைப்பிடி யளவினுக் ககப்பட்டது, [கிளை முதலியவைகளி னிடைச்சந்து, இரண்டோலைகளி னிடைவெளி, குலையினெடு].
இணுக்குதல் - கிளையிலுள்ள தளிர் முதலியவற்றை உருவிப்பறித்தல், [இசித்தல்].
இணை - இணையென்னேவல், [சோடு, இரண்டு, இச்சை, உவமை, துணை, கூந்தல்].
இணைகயல் - அட்டமங்கலத் தொன்று.
இணைத்தல் - சேர்த்தல்.

இணையாவினைக்கை - ஒற்றைக் கை (சிலப்.)
இணைவிழைச்சு - காதலன் காதலிய ரிருவருக்கு மொத்த இன்பம்.
இணைவு - கலத்தல்.
இண்டர் - இடையர், நண்பர்.
இண்டு - ஈகைக்கொடி.
இண்டை - ஈகைக்கொடி, தாமரை, ஓர்வகை மாலை.
இதணம், இதண் - பரண்.
இதம் - இனிமை [உரிமை, சொல்].
இதயம் - மனம்.
இதரம் - அன்னியம், ஈனம்.
இதரர்-அன்னியர், [கீழ்மக்கள்.]
இதலை - கொப்பூழ்.
இதல் - கவுதாரி, சிவல்.
இதவு - இதம்.
இதழி - கொன்றைமரம்.
இதழ் - பூவிதழ், [இலை, உதடு, கண்ணிமை, பனையேடு].
இதள் - இரதம், சிறுதூறு.
இதாகிதம் - நன்மைதீமை.
இதி - உறுதி, பிசாசம்.
இதிகாசம் - பூர்வகதை.
இது* - இஃது (சுட்டுச்சொல்).
இதை - இந்தப் பொருளை, [கலப்பை, காராமணி, புதுக்கொல்லை, மரக்கலப்பாய்.]
இதைப்புனம் - புதுக்கொல்லை.
இத்தி - இறலிமரம்.
இத்தியாதி - இதுமுதலானவை.
இத்தை - முன்னிலை யசைச் சொல் (உ-ம்.) நீயொன்று பாடித்தை.
இந்தம் - புளியமரம்.
இந்தளம் - ஓர் பண், தூபக்கால்.
இந்தனம்-விறகு, சுவாலை, நறும்புகை, மேல்.
இந்தா - இங்கேவா, [இதை வாங்கிக்கொள்].
இந்தி - பூனை, இலட்சுமி.
இந்திகோபம் - ஈயம்.
இந்தியம் - பொறிகள் (மணிமே. பக். **293**).
இந்திரகீலம் - மந்தரமலை.
இந்திரகோபம் - தம்பலப்பூச்சி.
இந்திரசாபம் - வானவில்.
இந்திரசாலம்* - அற்புதங்களைக் காட்டும் வித்தை.
இந்திரசித்து - இந்திரனைவென்ற இராவணன்மகன்.
இந்திரசுகந்தம் - நன்னாரி.
இந்திரசுதன்-அருச்சுனன், வாலி.
இந்திரதனு - வானவில்.
இந்திரதிசை - கிழக்கு.
இந்திரநீலம் - ஓரிரத்தினம்.
இந்திரபதம் - தேவலோகம்.
இந்திரப்பிரத்தம் - பாண்டவர் நகரம்.
இந்திரப்பிரியம் - பொதியமலைச் சந்தனம்.
இந்திரர் - தேவர் (சீவக. சிந். 3085.)
இந்திரவல்லி - முடக்கொற்றான், பிரண்டை.
இந்திரவிகடல் - அமாவாசியை.
இந்திரனாள் - கேட்டைநாள்.
இந்திரன்-தேவேந்திரன், [மிருகசிரிடநாள்].
இந்திரன்மைந்தன் - இந்திரசுதன்

இந்திராணி - இந்திரன் மனைவி, நொச்சில்.
இந்திரி - கிழக்கு.
இந்திரியநிக்கிரகம் - ஐம்புலனைத் தன்வசப்படுத்தல்.
இந்திரியம் - பொறி (புலன்), சுக்கிலம்.
இந்திரை - இலக்குமி, அரிதாரம்.
இந்தீவரம் - கருங்குவளை, கருநெய்தல்.
இந்து - சந்திரன், கரடி, கரி, எட்டி, கௌரிபாஷாணம், பச்சைக்கர்ப்பூரம்.
இந்துகாந்தம் - சந்திரகாந்தக்கல்.
இந்துசேகரன் - சிவன்.
இந்துஸ்தானி* - ஓர் பாஷை.
இந்துப்பு - ஓர் மருந்துச்சரக்கு.
இந்துழி - பெருங்காயம்.
இந்துளம் - கடப்பமரம்.
இந்துளி - பெருங்காயம்.
இந்துள் - நெல்லி.
இந்தோளம் - ஓரிராகம், ஊசல்.
இந்நாள் - இன்று.
இபங்கம் - புளிமா.
இபம் - மரக்கொம்பு, யானை.
இப்படி* - இவ்வாறு.
இப்பந்தி - பலவீனன், பேடி, உலோபி.
இப்பர் - இடையர், உழவர், செட்டிகள், வைசியர்பொது.
இப்பவம் - இப்பிறப்பு.
இப்பால் - இந்தப்பக்கம், இனிமேல்.
இப்பி - சங்கு, சிப்பி.
இமகரன் - சந்திரன்.
இமகிரி - இமயமலை.
இமம் - உறைந்த பனி, சீதளம், பொன்.
இமயகிரி - இமயமலை.
இமயம் - பார்வதி பிறந்த மலை, பொன்மலை.
இமயவல்லி - பார்வதி.
இமயவில்லி - சிவன்.
இமலம் - மரமஞ்சள்.
இமவான் - மலையரசன்.
இமாசலம், இமாலயம் - இமயமலை.
இமிசை - வருத்தம், [கொல்லுதல்.]
இமிர்தல் - ஒலித்தல்.
இமில் - எருத்துத்திமில்.
இமிழ்-இனிதா கென்னுமேவல், இனிமை, ஒலி, கயிறு (சீவக. சிந்.329.)
இமிழ்தல் - இனிதாதல், ஒலித்தல்.
இமிழ்த்தல் - ஒலித்தல், கட்டல், கொப்பளித்தல்.
இமை - கண்ணிமை, [அற்பம், இமையென்னுமேவல், கரடி, மயில்.]
இமைகொட்டல்* - இமைத்தல்.
இமைத்தல் - கண்ணிமைத்தல், [ஒளிசெய்தல்].
இமையவர், இமையோர் - வானோர்.
இம்பர் - இவ்விடம், இவ்வுலகம்.
இம்பி - கருந்தினை.
இம்பூறல் - இராமேச்சுரத்தில் விளையுமொரு சாயவேர்.
இம்மடி - யானை.

இம்மி - ஓரிலக்கம், நுண்மை, புலம், அற்பம், மத்தங்காய்ப் புல்லரிசி, பொன்மை.
இம்மெனல் - விரைவின்குறிப்பு.
இம்மை - இப்பிறப்பு.
இயக்கம்-அசைதல், நடமாடுதல், பெருமை, வழி, பிரகாசம்.
இயக்கர் - கந்தருவர்.
இயக்கர்கோமான் - குபேரன்.
இயக்கன் - இயக்கசாதியோன், குபேரன், நாய்.
இயக்கி - செலுத்தியென்னெச்சம், தருமதேவதை, ஆரியாங்கனை (சிலப்ப. பக். 365.)
இயக்குதல் - செலுத்தல்.
இயங்கல் - உலாவல், ஒளிசெய்தல், தங்கல், நடத்தல், வியங்கோண்முற்று.
இயங்குதிணை - நடையுள்ளது.
இயசுரு - இரண்டாம்வேதம்.
இயந்திரம் - ஆலை, சூத்திரம், தேர், மதிலுறுப்பு.
இயந்தை - மருதயாழ்த்திறம்.
இயமகிங்கரர்*, இயமதூதர், இயமபடர் - நமன்றூதர்.
இயமம் - அட்டயோகத்தொன்று அஃது இச்சை கொலை களவு பொய் இவற்றினீங்கிப் புலனடக்கியிருத்தல்.
இயமன் - நமன்.
இயமானன் - உயிர்.
இயம் - ஈ, ஒலி, சொல், வாச்சியம்.
இயம்பல் - எவ்வகை வாச்சியமுமுழக்கல், ஒலித்தல், சொல்லல், பழமொழி, வியங்கோண்முற்று.
இயலல் - இசைதல், கூடியதாயிருத்தல், பொருந்தல்.
இயல் - இசை, இயற்றமிழ், ஒத்து, குணம், சாயல், நடை, பொருந்தென்னேவல்.
இயல்பு - ஒழுக்கம், குணம், தன்மை, இயற்கை.
இயவர் - கீழ்மக்கள், சண்டாளர், தோற்கருவியாளர்.
இயவனர் - கம்மாளர், சித்திரக்காரர், சோனகர்.
இயவு - ஊர், காடு, வழி, செலவு (சிலப்.)
இயவுள் - புகழாளன், தெய்வம்.
இயவை - துவரை, தோரைநெல், வழி.
இயறல் - போதல், முத்தி.
இயற்கை - முறைமை, குணம், தகுதி, சுபாவம், வழக்கம்.
இயற்றமிழ் - செந்தமிழ்.
இயற்றி - முயற்சி, செய்தென்வினையெச்சம்.
இயாதம் - யானைத்தோட்டியின் பிடர்.
இயை - இசைப்பு, பொருந்தென்னேவல்.
இயைபு - இசைப்பு, செய்யுளிஞெருறுப்பு, பொருத்தம்.
இயைபுளன் - புகழாளன்.
இயைய - உவமைச்சொல்(உ-ம்.) என்றூயியைய வெடுத்தளித்தான், பொருந்தவென்னுமெச்சம்.
இயைவு-இணக்கம், பொருத்தம்.
இரகசியம்* - மறைவு, அந்தரங்கம்.

இரகு - ஸ்ரீராமனிரண்டாம்பாட்டன்.
இரகுநாதன் - ஸ்ரீராமன்.
இரகுவமிசம் - இரகுவின் சந்தியார்.
இரகுவரன் - ஸ்ரீராமன்.
இரக்கம் - மனவருத்தம், கிருபை, [துன்பம், ஒலி, பிச்சை].
இரங்கல் - பரிதபித்தல், [அழுதல், ஒலித்தல், துன்பப்படல்].
இரசகற்பூரம் - [கிண்ணிக்கற்பூரம்], ஓர் மருந்து.
இரசகன் - வண்ணான்.
இரசகுளிகை - இரும்பைப் பொன்னாக்கு மருந்து.
இரசக்கட்டு - சூதக்கட்டு.
இரசதாளி, இரஸ்தாளி - ஓர் வாழைமரம்.
இரசம் - மிளகுநீர் சாறு, [சுவை, சூதம், பூந்தாது].
இரசவாதி - இரும்பைப் பொன்னாக்குபவன்.
இரசனம் - ஓர் பொறி, பல், சுவை.
இரசனி - இராத்திரி, அவுரி.
இரசனை - சுவை, நா, சாறு, மாதரிடையணி.
இரசாதலம் - கீழேழுலகி லொன்று.
இரசாயனம் - இரசவாதம், காயசித்திமருந்து.
இரசிகம் - குதிரை, யானை, தூர்த்ததனம்.
இரசிகன் - தூர்த்தன்.
இரசிதம் - வெள்ளி.
இரச்சு, இரச்சை - கயிறு.

இரஞ்சகம், இரஞ்சிதம் - பிரியம்.
இரட்சகம், இரட்சணியம், இரட்சணை, இரட்சை - காத்தல், மீட்பு.
இரட்சகன் - காக்கிறவன், மீட்புச் செய்பவன்.
இரட்சண்ணியன் - இரட்சகன்.
இரட்சாபந்தனம் - அட்சரவியந்திரம் வரைந்த தகட்டைப் பாதுகாப்புக்குக் கட்டிக்கொள்ளல்.
இரட்சித்தல்* - காத்தல், மீட்குதல்.
இரட்சிப்பு, இரட்சை - மீட்பு.
இரட்டல் - இரட்டித்தல், அசைத்தல், ஒலித்தல்.
இரட்டி - இரண்டுபங்கு.
இரட்டியர் - வைசியர்.
இரட்டு - இரட்டென்னேவல், ஒலி, ஓர் சாதி.
இரட்டை - இரண்டொன்றானது, [மிதுனவிராசி, பாடுவிச்சி (பாடன்மகள்.)]
இரட்டையர் - இரட்டைப்பேறாகப் பிறந்து சிறப்படைந்த கவிராயர் இருவர்.
இரணகளம்* - போர்க்களம்.
இரணசூரன்* - யுத்தவீரன்.
இரணபாதகம் - கொலை, நம்பிக்கைத்துரோகம்.
இரணபாதகன்*-கொலைபாதகன்
இரணபேரி - போர்ப்பறை.
இரணம் - புண், [உப்பளம், போர், உணவு, கடன், பொன்].
இரணரங்கம் - போர்க்களம், [யானைக்கொம்பினடு].

இரணவைத்தியம் - சத்திரவைத்தியம்.
இரணியகசிபன் - நரசிங்கமூர்த்தியாற் சம்மரிக்கப்பட்ட ஓரசுரன்.
இரணியகருப்பன் - பிரமன்.
இரணியதானம் -சொர்னதானம்.
இரணியநேரம்* - இரணியன் சம்மரிக்கப்பட்ட நேரம் அது சூரியாஸ்தமனத்திற்குப் பிறகாகும் வேளை.
இரணியம் - பொன்.
இரணியன் -பிரகலாதாழ்வானைப் பெற்றவன்.
இரண்டகம் - நம்பிக்கைத்துரோகம், [இருமனம்.]
இரண்டாந்தரம்- இரண்டாம் முறை, நடுத்தரம்.
இரண்டுபடுதல்* - வேறுபடுதல்.
இரதசாரதி* - தேர்ப்பாகன்.
இரதசாரி - வேசி, தேரேற்றம்.
இரதபதம் - புரு.
இரதபந்தம் - சித்திரகவிகளிலொன்று.
இரதம் - தேர், [அரைஞாண், இனிமை, சுவை, சூதம், புணர்ச்சி, மாமரம்].
இரதனம் - அரைஞாண், கிண்கிணி, பல்.
இரதன் - கண், கிளி.
இரதி - மதன்றேவி, [ஆசைப்பெருக்கம், இலந்தைமரம், காந்தள், பித்தளை, பெண்யானை, வேண்டல்].
இரதிகாதலன் - மன்மதன்.
இரத்தபாளம் - மூசாம்பரம்.
இரத்தப்பசப்பு, இரத்தப்பசுமை- இரத்தபுஷ்டி.
இரத்தப்பிரவாகம் - இரத்தப் பெருக்கு.
இரத்தப்புடையன், இரத்தமண்டலி - கடித்ததும் கண் மூக்கு வாய் இவற்றின் வழியாய் இரத்தம் வருவிக்கும் ஒரு விஷப்பாம்பு.
இரத்தமாரணம் - காவிக்கல்.
இரத்தம் - உதிரம், [சிவப்பு, பவளம், சாதிலிங்கம்].
இரத்தல் - பிச்சை கேட்டல், வேண்டல்.
இரத்தவிந்து - ஒருவகை மாணிக்கம் (சிலப். பக். 346.)
இரத்தாட்சி - ஓர் வருடம்.
இரத்தி - இத்திமரம், இலந்தை மரம்.
இரத்திரி - இத்திமரம்.
இரத்தினக்கம்பளி - உயர்ந்த சித்திரக்கம்பளம்.
இரத்தினம்* - மாமணிப்பொது.
இரத்தினாகரம் - கடல்.
இரஸ்து - சேனையின் உணவுப் பொருள்.
இரத்துதல் - பேசலாலெழு மொலி.
இரந்திரம் - குழி, துவாரம்.
இரந்துணி, இரந்துண்ணி * - யாசிப்போன்.
இரப்பு - தரித்திரம், பிச்சை.
இரமடம், இராமடம் - பெருங்காயம்.
இரமணம், இரமணீயம் - இரம்மியம்.

இரமணன் - தலைவன், நாயகன்.
இரமித்தல் - சந்தோஷித்தல்.
இரம்பம் - ஈர்வாள், [கஸ்தூரி மிருகம்].
இரம்மியம் - பூரண சந்தோஷம்.
இரலை - அச்சுவினிநாள், ஊதிடு கொம்பு, கலைமான், புல்வாய்.
இரவணம் - ஒட்டகம், வெண்கலம், வெப்பம்.
இரவலர் - இரப்போர்.
இரவல்* - சொந்தமில்லாதது.
இரவி - சூரியன், மலை, மூக்கின் வலத்துவாரம்.
இரவிகுலம் - சூரியவமிசம்.
இரவிக்கை* - முலைக்கச்சு.
இரவிநாள் - இரேவதிநாள்.
இரவிமது - வெள்ளி.
இரவு - இராத்திரி, [இரத்தல்].
இரவுரவம், இரௌரவம் - ஓர் நரகம், சிவாகம மிருபத்தெட்டினொன்று.
இரவெரிமரம் - சோதி விருட்சம்.
இரவை - துப்பாக்கியிலிடு மீயச்சன்னம், [மணிப்பொது, வச்சிரம், அணு].
இரவோர் - இரப்போர்.
இரளி - கொன்றை.
இரா - இரவு, இருத்தலைச் செய்யாவென்னு மஃறிணைப்பன்மை வினைமுற்று.
இராகம் - இன்னிசை, [ஆசை, சிவப்பு, நிறம்].
இராகவன் - இரகுவம்சத்தில் தோன்றிய சிராமன்.
இராகி - கேழ்வரகு.
இராகு - கரும்பாம்பு, கோமேதகம்.
இராகுகாலம்-இராகுவின்காலம்.
இராக்கதம் - பெண்ணும் சுற்றமுமுடன்படாது வலிதிற் கொள்ளும் மணம்.
இராக்கதர் - அசுரர்.
இராக்கதிர் - சந்திரன்.
இராசகனி - எலுமிச்சைக்கனி.
இராசகிரி - வெள்ளைக்கிரி.
இராசசூயம் - ஏகசக்ராதிபத்தியத்துக்குக் குதிரையைக் கொண்டு நிறைவேற்றுமொரு யாகம்.
இராசதானி - தலைப்பட்டினம்.
இராசத்துவம் - அரசியல்பு.
இராசபட்டம் - இராசாதிகாரம்.
இராசபாட்டை*-இராசமார்க்கம்
இராசபிளவை-முதுகிலுண்டாகுமொரு சிலந்தி.
இராசமாநகரி - இராசபட்டினம்.
இராசமாநாகம் - கருவழலைப் பாம்பு.
இராசவாகனம் - கோவேறு கழுதை (சிலப். பக். 172.)
இராசன் - மன்னன், [இந்திரன்].
இராஜராஜேஸ்வரி - பார்வதி, துர்க்கை.
இராசாதிராசன் - சக்கிரவர்த்தி.
இராசாளி* - ஒரு பறவை.
இராசி - ஒழுங்கு, குவிதல், கூட்டம், மத்தியானம், மேட முதலிய விராசி.
இராசிக்காரன்* -அதிர்ஷ்டசாலி.
இராசிப்பொருத்தம் - மணப்பொருத்தம் பத்தினொன்று.

இராசியம் - பெண்குறி, மறைவு.
இராசிலம் - சாரைப்பாம்பு, நீர்ப் பாம்பு.
இராசீவம் - தாமரைப்பூ.
இராச்சியம் - அரசுசெல்லுமிடம், நாடு, உலகு.
இராடம் - ஓர்தேயம், கழுதை, பெருங்காயம்.
இராட்சசன்* - இராக்கதன்.
இராட்சத - ஓராண்டு.
இராட்டினம்* - நூனூற்குங் கருவி.
இராட்டினவாழை-ஒரு தண்டில் நடுவிட்டு மேலுங் கீழுஞ் சீப் பிடும் வாழை.
இராணம் - இலை, மயிற்றோகை.
இராணி* - அரசி.
இராணுவம் - படை.
இராதம் - கடைக்கொள்ளி.
இராதை-கண்ணபிரான் மனைவி, [மின்னல், விசாகம்].
இராத்திரி* - இரவு.
இராந்து - இடுப்பு, தொடைச் சந்து.
இராமகலி-மத்தியானத்தில் பாடு மொரு இராகம்.
இராமக்கிரியை - ஓரிராகம்.
இராமசந்திரன், இராமபத்திரன்- ஸ்ரீராமன்.
இராமசீத்தா - மரவகை.
இராமடம் - பெருங்காயம்.
இராமதூதன் - அநுமான்.
இராமபாணம் - சீராமன் எய்யு மம்பு, புத்தகங்களை யரிக்கும் பூச்சி.
இராமம் - அழகு.
இராமன் - தசரதகுமாரன்.
இராமாநுசன் - இலக்குமணன், வைஷ்ணவ சமயாசாரியரி லொருவர்.
இராமாயணம் - ஸ்ரீராகவனின் சரிதை.
இராயசம் - எழுத்துவேலை.
இராயன் - மன்னன்.
இராவடம் - அராவு தொழில், [அசோகு].
இராவடி - ஏலம்.
இராவணம் - விளக்கு.
இராவணன்-இலங்கைமன்னன்.
இராவணன்மீசை - ஓர் புல்.
இராவணாஸ்தம் - ஓர் வீணை.
இராவதம் - சூரியன்குதிரை, மேகலோகம்.
இராவதி - யமபுரம்.
இராவிரேக்கு - அரைமூடி, குழந் தைகள் நெற்றிமயிரில் தொங் குகிற ஓரணி.
இராவுதல்* - அராவுதல்.
இராவுத்தன்-குதிரைச்சேவகன்.
இரிஞர் - பகைவர்.
இரிதல்-அச்சம், ஓடல், கெடுதல், சாய்தல், நீங்குதல், (சிலப்ப.)
இரிபு - பகை.
இரியல் - இரிதல், நல்லாடை, வியங்கோண்முற்று.
இரீதி - பித்தளை.
இரீதிகவுளம் - ஓரிராகம்.
இரு - இரண்டு, பெரிய.
இருக்கு - முதல்வேதம், வேதம்,
இருக்கை-இருப்பிடம், [ஆசனம், இருத்தல், ஊர்ப்பொது].
இருசமயவிளக்கம் - ஓர் நூல்.

இருசி - ஓர் பெண்பிசாசு.
இருசு - வண்டியுளிரும்பு, [செவ்வை, மூங்கில்].
இருடி, இருஷி - முனிவன், [ஆந்தை].
இருடிகேசன் - திருமால்.
இருட்டு - இருள், [அறியாமை.]
இருட்பிழம்பு - இருளின்திரள்.
இருண்பாதகன் - கடன் தீர்க்காமல் மோசஞ்செய்பவன்.
இருணம்-கடன், [உவர்த்தரை].
இருணிலம் - நரகம்.
இருதயம் - உள்ளம், [உயிர்நிலை, இரத்தாசயம்].
இருதலைக்கொள்ளி- இருதலையுந் தீப்பற்றிய கொள்ளி.
இருதிணை-உயர்திணை அஃறிணை
இருது - இரண்டுமாத பருவம், மகளிர் சூதகம்.
இருதுசாந்தி - ஓர் சடங்கு, [சோபனகலியாணம்].
இருத்தல் - தங்கல், சீவித்தல்.
இருத்தி - இருத்துதலைச் செய்தென் வினையெச்சம், இருப்பாயென்னுமுற்று, சித்தி.
இருத்தை - சந்திரனுன்காம்பக்கம், நாழிகை, நாழிகைவட்டில், சேங்கொட்டை.
இருநா - உடம்பு, பாம்பு.
இருநிதிக்கிழவன் - குபேரன்.
இருந்து - அசைச்சொல் (உ-ம்.) நனவென் றெழுந்திருந்தேன், வினையெச்சம்.
இருந்து, இருந்தை - கரி.
இருபிறப்பாளர் - பார்ப்பார்.
இருபிறப்பு - சந்திரன், சிறகு, பல், பார்ப்பார், முட்டையிற் பிறப்பன.
இருப்பவல் - ஓர் பூண்டு.
இருப்பு - இருக்குந்தன்மை, மீந்திருப்பவை, [பீடம்].
இருப்புக்கொல்லி - சிவனார் வேம்பு.
இருப்புநெஞ்சு - இரக்கமில்லாத நெஞ்சு.
இருப்பை - இலுப்பைமரம், இருப்பாயென்னு முற்று.
இருமல் - இருமுதல், வியங்கோண்முற்று.
இருமுதுகுரவர் - தாய்தந்தையர்.
இருமை - இம்மை மறுமை, இருதன்மை, துக்கம், பெருமை.
இரும்பன் - காரெலி.
இரும்பிலி - ஓர் செடி, ஓரூர்.
இரும்பு - கரும்பொன், [ஆயுதப் பொது.]
இரும்பை - குடம், பாம்பு.
இருவாச்சி, இருவாட்சி - கருமுகைச்செடி, ஓர் மரம்.
இருவி - தினைத்தாள்.
இருவேலி - வெட்டிவேர்.
இருளல் - இருளுதல்.
இருளன் - மலையில் வாழுமோர் சாதியான், [ஒரு பிசாசம்].
இருளி - இருசி, கருஞ்சீரகம், பன்றி, வெட்கம், மூலையிலி.
இருளை - நாணம்.
இருள் - இருட்டு, [கறுப்பு, உந்மத்தம், நரகம், யானை].
இருள்வலி - சூரியன்.
இரெட்டி - ஒருசாதி.

இரெப்பை* - கண்மடல்.
இரேகம்* - தேகம்.
இரேகுத்தி - ஓரிராகம்.
இரேகை - வரி, [எழுத்து, சித்திரமெழுதல்].
இரேக்கு - பொற்றகடு, [பூவிதழ், ஓர்வகைச் சல்லா].
இரேசகம் - பிராணயாமத்தில் வாயுவை விடல்.
இரேசிதம் - குதிரை வட்டமாயோடல்.
இரேணு - அணு.
இரேபதம், இரேவதம் - அட்டாதச தருமநூலிலொன்று.
இரேயம் - கள்.
இரேவதி - கடைநாள்.
இரேவதிகொண்கன்-பலதேவன்
இரேவு* - இறங்குதுறை, ஆயத்துறை.
இரை - உணவு, [ஒலியென்னேவல், ஒலி, இலக்குமி, நீர்].
இரைச்சல் - ஒலி, [வீக்கம்].
இரைத்தல் - ஒலித்தல்.
இரைப்பு-ஓர்நோய், [இரைதல்].
இரைமீட்குதல் - அசைபோடுதல்.
இரையெடுத்தல் * - புசித்தல்.
இரௌத்திரம் - பெருங்கோபம்.
இரௌத்திரி - ஓராண்டு.
இரௌரவம் - ஓர் நரகம், சிவாகமத்தினொன்று.
இலகடம் - யானைமேற்றவிசு.
இலகரி - மஸ்து, வெறி, மிகுபுகழ்ச்சி.
இலகல் - ஒளிசெய்தல்.
இலகான்* - கடிவாளம்.
இலகிமா-அட்டசித்தியினொன்று அஃது கனமின்மையாகுகை.
இலகு - இலேசு, [அகில், குறிலெழுத்து, நொய்மை].
இலகுதல் - ஒளிசெய்தல்.
இலக்கணம் - தான் விவரிக்கும் பொருளின் சிறப்புத்தன்மை கூறல், அடையாளம், [அழகு, இயல், இலக்கணநூல்].
இலக்கணை - உரிய பொருளை விட்டு அப்பொருளின் சம்பந்தமுடையதை யுணர்த்துவது.
இலக்கம் - எண், ஒளி, குறிப்பு.
இலக்கர் - சீலை.
இலக்காரம் - சீலை.
இலக்கியம் - இலக்கண நூற்படி முன்னோர் பாடிய பாடல், உதாரணம்.
இலக்கினம் - இராசிகளினுதயம், முகூர்த்தம்.
இலக்கு - குறி, குறிப்பு, எண்ணம், சமயம்.
இலக்குமணன், இலட்சுமணன் - ஸ்ரீராமனுக்கிளையவன்.
இலக்குமி - இலட்சுமி, (திருமகள்).
இலங்கர்* - நங்கூரம்.
இலங்கனம் - பட்டினி, தாண்டுகை.
இலங்கு-ஒளிசெய்யென்னேவல், குளம்.
இலங்குதல் - ஒளிசெய்தல்.
இலங்கை - இலங்கைத்தீவு, [ஆற்றிடைக்குறை, தூங்குவது].
இலங்கோடு*- மறைவு ஸ்தானத்திற்குக் கட்டுமொரு உடை.

இலசுனம் - வெள்வெண்காயம்.
இலச்சினை - குறி, முத்திரை மோதிரம்.
இலச்சை-வெட்கம், தொந்தரவு.
இலஞ்சம்* - பரிதானம்.
இலஞ்சி - ஏரி, குணம், குளம், கொப்பூழ், சாரைப்பாம்பு, புன்கு, மகிழமரம், மதில், மடு (சிலப். 5:121).
இலஞ்சியம் - கீழாநெல்லி.
இலட்சணம் - அழகு, [குறி, பார்வை].
இலட்சம்* - பத்துநூறாயிரம்.
இலட்சயம் * - எண்ணத்தக்கது.
இலட்சாதிபதி* - இலட்சப்பிரபு.
இலட்சியம் - மதிப்பு, [அடையாளம், எதிர்].
இலட்டு, இலட்டுகம் - பொரி மாத்திரை, அப்பவருக்கம்.
இலண்டம் - யானையிலத்தி.
இலண்டன் - முருடன்.
இலதை - கோற்கொடி, தக்கோலம், கொடி, இலந்தை.
இலத்தி - குதிரைப்பீ, யானைக் கட்டம்.
இலந்தை - ஓர்மரம், [குளம்].
இலம்பகம் - அத்தியாயம், நுதலணிமாலை, மாலை.
இலம்படை, இலம்பாடு - தரித்திரம், வறுமை.
இலம்பாடி* - ஓர்சாதி.
இலம்பாட்டோன் - தரித்திரன்.
இலயம் - அடங்குகை, கூத்தின் விகற்பம், கூத்து, சாவு, உருக்கல்.
இலயித்தல் - சேர்ந்தொன்றித்தல்.
இலலாடம் - நெற்றி.
இலலிதம் - அழகு, மாதுரியம், ஓரிராகவிகற்பம்.
இலலிதை-பார்வதி, ஓர் இராகம்.
இலவங்கம் - வாசனைப்பண்டம்.
இலவசம் - விலையின்றிப் பெறுகை.
இலவணம் - உப்பு, உவர்த்தல்.
இலவந்தி-நீராவி (சிலப். 25:4).
இலவந்திகை - தண்ணீரிறைக்குமியந்திரம்.
இலவம் - ஓர் பஞ்சுமரம், [பூசை, அற்பம், ஓர் தீவு, கணமெட்டுக்கொண்ட பொழுது].
இலளிதபஞ்சகம் - ஓரிராக விகற்பம்.
இலளிதம் - இலலிதம்.
இலளிதை - பார்வதி.
இலாகரி, இலாகிரி - மஸ்து, வெறி.
இலாகன் - ஓர் மீன்.
இலாகை - மாதிரி.
இலாங்கலம், இலாங்கலி - கலப்பை, ஆண்குறி, செங்காந்தள், தென்னமரம்.
இலாங்கூலம் - வால்.
இலாசடி, இலாசடை - தொந்தரை.
இலாச்சம் - ஓர் நில அளவை, மரக்கால்.
இலாஞ்சனம் - புள்ளி, பெயர்.
இலாஞ்சனை - அடையாளம்.
இலாஞ்சி - ஏலம்.

இலாடம் - குதிரைக் குளம்பில் தைக்கு மிரும்பு, [ஓர் தேசம், ஓர் பாஷை, நெற்றி, புடவை, புளியமரம்].
இலாபம்* - ஆதாயம்.
இலாமச்சை, இலாமிச்சை - ஓர் வாசனைப்புல்.
இலாயம் - குதிரைப்பந்தி, [ஏலரிசி].
இலாலனை - நயஞ்செய்கை, தாலாட்டு, கெஞ்சுதல்.
இலாலி* - ஓர் வாழ்த்து, மங்கலப்பாடல்.
இலாவணியம் - அழகு.
இலிகுசம் - எலுமிச்சை.
இலிங்கங்கட்டி - இலிங்கங் கட்டிக்கொள்ளுமொரு சைவன்.
இலிங்கசூலை - ஆண்குறியில் வருமொரு மேகநோய்.
இலிங்கப்புற்று - ஓர் மேகநோய்.
இலிங்கம் - சிவலிங்கம், [அடையாளம், ஆண்குறி, இங்குலிகம் (சாதிலிங்கம்), ஓர் உபநிடதம்].
இலிங்கிகள் - முனிவர்.
இலிபி - விதி, [எழுத்து].
இலிர்த்தல் - சிலிர்த்தல், தளிர்த்தல்.
இலீக்கை - ஈர்.
இலீலை - மகளிர்விளையாட்டு, புணர்ச்சி.
இலுதை - அணில்.
இலுப்பை* - இருப்பைமரம்.
இலேககன் - எழுதுவோன்.
இலேகர் - வானோர்.
இலேகிநி - எழுத்தாணி.
இலேகியம் - பாகாகக் கிண்டிய மருந்து.
இலேகை - எழுத்து, சித்திரம்.
இலேசம் - காலவிரைவு, நொய்மை.
இலேசு* - கனமின்மை, அற்பம், நொய்மை.
இலேபனம் - தாதுவலிவிற்குப் பூசு மருந்து, புணர்ச்சி.
இலை - தழை, [உலோபம்].
இலைக்கறி - கீரை.
இலைக்கொடி-வெற்றிலைக்கொடி
இலைங்கம் - இலிங்கம், அட்டாதச புராணத்தொன்று.
இலைச்சுருளி - ஓர் பூண்டு.
இலையம் - கூத்தின் விகற்பம்.
இலையான் - ஈ.
இலையுதிர்வு - முதுகாடு.
இலௌகீகம் - உலகசம்பந்தம்.
இல் - இடம், இராசி, இல்லையெனல், உவமையுருபு (உ-ம்.) பாம்பினிற்கடிது, தேள், எழனுருபு (உ-ம்.) ஊரிலிருந்தான், ஐந்தனுருபு (உ-ம்.) மலையில் வீழருவி, சாவு, தலைவி, மனைவி, வீடு.
இல்லக்கிழத்தி - மனையாள்.
இல்லடை - அடைக்கலம், பண்டகசாலை.
இல்லம் - வீடு, [தேற்றான்மரம்].
இல்லல் - நடத்தல்.
இல்லவள் - தரித்திரி, மனைவி.
இல்லறம் - இல்லத்தில் கற்புடைய மனைவியோடு வாழ்தல்.
இல்லாச்சிரமம் - இல்லறம்.

இல்லாத்தனம், இல்லாமை-வறுமை.
இல்லாள் - தரித்திரி, தலைவி, மனைவி.
இல்லான்-தரித்திரன், கணவன்.
இல்லி - பொள்ளல், பெண்ணுறுப்பிற் குறைவுடையவள், வால்மிளகு.
இல்லிடம் - அகலம்.
இல்லெனல் - இரத்தல், இல்லையெனல், சாதல்.
இல்லை - இன்மை [சாதல்].
இல்லோன் - தரித்திரன், கணவன்.
இல்வாழ்பேய் - கற்பில்லாத மனையாள்.
இவக்காண் - இப்பொழுது, இவ்விடம்.
இவண் - இவ்விடம்.
இவரும் - உலாவும்.
இவர்தல் - ஆசை, ஆசைப்பெருக்கம், எழுச்சி, ஏறுதல், செறிவு, சேறல், நடத்தல்.
இவவு - இழிவு.
இவறல் - ஆசை, ஆசைப்பெருக்கம், மறதி.
இவறன்மை - ஆசை, உலோபக்குணம்.
இவுளி - குதிரை.
இவுளிமறவன் - மன்னனின் குதிரைவீரன்.
இவை - இவ்.
இவ் - இவை, சுட்டுச்சொல்.
இழத்தல் - இழந்துபோதல்.
இழப்பு - இழத்தல்.
இழவு - சாவு, இழத்தல்.
இழவுகாத்தல் - சாக்கருமம் முடியும்வரை வீட்டிலேயே யிருத்தல்.
இழவுவிழுதல்* - சாதல்.
இழவுவீடு* - சாவுவீடு.
இழிகடை* - மிகவும் கேவலமானது.
இழிகண் - பீளைநீர் ஒழுகுங்கண்.
இழிசனர் - கீழ்மக்கள், அறிவீனர்.
இழிசொல்* - நிந்தைவார்த்தை.
இழிச்சல்வாய் - திறந்தவாய்.
இழிஞர் - சண்டாளர்.
இழிதகவு - இழிவு, எளிமை.
இழிதல் - இறங்குதல், தாழ்தல்.
இழிதிணை - அஃறிணை, அது தேவர் நரகர் மனிதரல்லாதன.
இழித்தல் - இறக்குதல், கீழ்ப்படுத்தல்.
இழிபு-தாழ்வு, கீழ்மை, பள்ளம்.
இழிவு - ஈனம், [குற்றம், கேடு, தாழ்வு, நிந்தை, பள்ளம்].
இழுகுணி - சோம்பன், பிசுனன்.
இழுகுதல் - பிசுனித்தனம்பண்ணல்.
இழுக்கடித்தல்* - தாமதஞ் செய்யல்.
இழுக்கல் - தவறுதல், கெடல், வழுக்குநிலம்.
இழுக்கு-ஈனம், கேடு, தளரென்னேவல், பொய், மறதி.
இழுக்குதல் - இழுத்தல், [தவறுதல், பின்வாங்கல்].
இழுது - தித்திப்பு, நெய், நிணம்.
இழுதை - அறிவிலான், பொய்.

இழுபறி* - தொந்தரை.
இழுப்பாட்டம்* - தாமதம்.
இழுப்பாணி - தாமதக்காரன், [கலப்பையிஞேருறுப்பு].
இழுப்பு* - தாமதம்.
இழுமு - தித்திப்பு, களிப்பு.
இழுமெனல் - அனுகரணவோசை, இனிமை.
இழை - பஞ்சி நூல், [ஆபரணம், கலத்தலைச்செய், இழையென்னேவல்].
இழைக்குளிர்த்தி - புடவையின் மிருது.
இழைதல் - உரோஞ்சுதல், கலத்தல், உட்குழைதல்.
இழைநெருக்கம் - இழைக்குளிர்த்தி.
இழைப்புளி* - சீவுளி.
இழையூசி - மெல்லிய வூசி.
இழைவாங்கி* - இழையூசி.
இளகுதல் - மிருதுவாதல், கரைதல், குழைதல், தளர்தல்.
இளக்கம் - இளகிய தன்மை, தணிவு.
இளக்கரித்தல் - இளகிப்பின்னிடுதல், தாழ்தல்.
இளக்காரம்* - இளக்கம் (குறைவாக மதித்தல்.)
இளங்கதிர் - பயிரி னிளங்கதிர், காலையிற்றேன்றுஞ் சூரிய கிரணம்.
இளங்கலையன் - ஓர் நெல்.
இளங்கால் - வெற்றிலை யிளங்கொடி.
இளங்குரல் - மிருதுவான குரல், [பயிரினிளங்கதிர்].
இளங்கொடி - பெண்.
இளங்கோக்கள் - வைசியர் பொது.
இளசு* - முதிராதது.
இளஞ்சூல் - பயிரி னிளங்கதிர், முதிராப்பிண்டம்.
இளநீர் - தெங்கினிளங்காய், தேங்காய்க்குண்ணீர், [மணிகளின் வெள்ளொளி].
இளநெஞ்சு - இளகின மனம், [கோழைமனம்].
இளந்தண்டு - முளைக்கீரை.
இளந்தலை - இளமைப்பருவம், எளிமை.
இளந்தாரி - வாலிபன்.
இளந்தை - இளவயசு, குழந்தை.
இளந்தோயல் - தயிரினிளந்தோயல்.
இளப்பம் - கீழ்மையானது, திடமின்மை.
இளமை - பாலப்பருவம், [உன்மத்தம்].
இளம்பசி - சிறுபசி.
இளம்பிடி - பெண்.
இளம்புல்-முதிராதபுல்,[அறுகு].
இளம்பெண் - கற்றூழை.
இளவல் - இளையோன், குழந்தை, தம்பி.
இளவெயில்* - காலைவெய்யில்.
இளவேனில் - சித்திரை வைகாசியின் பருவம், வெப்பம்.
இளி - அவமதிச்சிரிப்பு, இகழ்ச்சிக்குறிப்பு, இணக்கம், சிரிப்பு, நெற்றியிற் பிறக்குமிசை, யாழிலோர் நரம்பு, இசை.
இளிச்சற்கண் - பீளைக்கண்.

இளிச்சவாயன்* - இளித்தவாயன், (பிறர் வஞ்சமொழிக்கு ஏமாந்து பல்லைக் காட்டுபவன்].
இளிவு - இழிவு, அருவருப்பு.
இளை - இளமை, இளைத்தலைச் செய்யென்னேவல், காவற்காடு, தலைக்காவல், மேகம், வேலி.
இளைஞர் - இளையோர் (சிறுவர்).
இளைத்தல்* - மெலிதல்.
இளைமை - இளையதன்மை, பாலியம்.
இளையவர் - பெண்கள்.
இளையள், இளையாள் - தங்கை, [இலக்குமி, பெண்].
இளையோன் - தம்பி.
இறகர் - இறகு.
இறகு* - சிறகு.
இறக்கம் - இறங்குந்தன்மை, சரிவு, [போகிற வழி, இறங்குதுறை, வீக்க முதலிய விறங்குதல்].
இறக்குதல் - தாழ்த்தல், சாதல், கீழ்ப்படுத்தல், தயில முதலிய வடித்தல்.
இறக்குமதி - இறக்குஞ் சரக்கு.
இறங்கமாட்டான் - ஓர்வகைக் கார் நெல்.
இறங்கர் - குடம்.
இறங்கல் - இழிதல், வியங்கோண்முற்று.
இறங்குமட்டான் - இறங்கமட்டான்.
இறடி - கருந்தினை.
இறத்தல் - சாதல், நடத்தல், மிகுதி.
இறப்பு - சாவு, போக்கு, மிகுதி, வீட்டிறப்பு.
இறலி - இத்திமரம், மருதமரம்.
இறல் - முறிதல், கிளிஞ்சில், கேடு.
இறவாணம் - ஓர் வாச்சியம்.
இறவானம்* - தாழ்வாரம்.
இறவு - இறப்பு, இறால், (சீவக. சிந். 522.)
இறவுளர் - குறிஞ்சிநில மக்கள்.
இறவுள் - குறிஞ்சிநிலம்.
இறவை - ஏணி, இறைகூடை, விரற்புட்டில்.
இறா - இறால்.
இறாஞ்சுதல் - தட்டியெடுத்தல், பட்சியறைதல்.
இறாட்டணம்* - இராட்டினம்.
இறாட்டுதல் - முரண்டுதல்.
இறாத்தல் - ஓர் நிறையளவு, [மீன் தீர்வைத்துறை.]
இறால் - இறவு, [இடபவிராசி, எருது, கார்த்திகைநாள், தேன்கூடு].
இறுகுதல் - கட்டியாதல், [அழுந்துதல், கடினமாதல், நெருங்கல்].
இறுக்கம் - கையழுத்தம், நெருக்கம், [ஒடுக்கம், கடினம்].
இறுக்கர் - பாலைநில மக்கள்.
இறுக்கல் - இறுகச் செய்தல், [உடுத்தல், ஒடுக்கல், கடிந்துகொள்ளல்].
இறுங்கு - சோளம்.
இறுதல் - அறுதல், ஒடிதல், கெடுதல்.
இறுதி - முடிவு, சாவு.

இறுத்தல் - இறையிறுத்தல், ஒடித்தல், சொல்லுதல், தங்கல், வெட்டல்.
இறுப்பு - கடன் செலுத்துகை, [குடியிறை, இறுத்தல்].
இறுமாத்தல் - மிக மகிழ்தல், அகங்கரித்தல்.
இறுமாப்பு* - மிகு மகிழ்ச்சி.
இறும்பல் - அதிசயம்.
இறும்பு - குறுங்காடு, சிறு மலை, தாமரைப்பூ, தூறு, மலை.
இறும்பூது - அதிசயம், சிறு தூறு, தாமரைப்பூ, மலை.
இறுவரையும் - சாமளவும்.
இறை - இறையென்னுமேவல், [அரசன், இறகு, உயர்ச்சி, உயர்ந்தோர், ஊழித்தீ, எப்பொருட்கு மிறைவன், கடன், காலவிரைவு, குடியிறை, கையிறை, சிவன், சிறுமை, தங்கல், தலை, பிரமன், பெருமை, மூத்தோன், வருத்தம், வீட்டிறப்பு, கை (சீவக. சிங். 200].
இறைகூடை - நீரிறைக்குங் கூடை.
இறைகொண்ட - தங்குதல்கொண்ட.
இறைச்சி - மாமிசம்.
இறைஞ்சலர் - பகைவர்.
இறைஞ்சல் - குனிதல், வணங்கல்.
இறைஞ்சி - மரவுரி, வணங்கியென்னும் வினையெச்சம்.
இறைபுரிதல் - அரசாட்சிசெய்தல்.
இறைமகன் - அரசகுமாரன், குமரன், கணபதி.
இறைமாட்சி - அரசியல்.
இறைமை - தலைமை, தெய்வத்தன்மை.
இறையவன், இறையோன் - கடவுள்.
இறையால் - ஈழதேசத்தில் வழங்கிய ஓர்வகை நாணயம்.
இறைவன் - அரசன், கடவுள், குரு, சிவன், பிரமன், மூத்தோன்.
இறைவி - தலைவி.
இறைவை-இறைகூடை, ஏணி, நீரிறைக்கு மரப்பத்தல்.
இற்புலி - பூனை.
இற்று-இத்தன்மைத்து, சாரியை (உ-ம்.) பதிற்றுப்பத்து.
இற்றை - இன்று.
இற்றைநாள் - இன்று.
இனத்தார்* - சுற்றத்தார்.
இனம்-குலம், சுற்றம், [கூட்டம், திரள், பசுக்கூட்டம், மந்திரிகள்].
இனன் - அரசன், சூரியன், சந்திரன்.
இனும்*-பயனோக்காத கொடை.
இனி - இப்போழ்து, பின்பு.
இனித்தல் - தித்தித்தல்.
இனிப்பு* - இனிமை.
இனிமை - தித்திப்பு.
இனைதல்-இரங்குதல், வருந்தல்.
இனைத்தல்-ஒலித்தல், வருத்தல்.
இனைத்து - இத்தன்மைத்து.
இன் - ஐந்தனுருபு (உ-ம்.) மலையின்வீழருவி, சாரியை (உ-ம்.) பூவின் மணம்.

இன்பம், இன்பு - அகமகிழ்ச்சி, இனிமை.
இன்பன் - கணவன்.
இன்பூறல் - மகிழ்ச்சிபொருந்தல்.
இன்மை - இல்லாமை.
இன்றியமையாமை - இல்லாது நிறையாமை.
இன்றேல் - இல்லாமல்போனால்.
இன்ன - இத்தன்மைய, உவமையுருபு.
இன்னணம் - இவ்விதம்.
இன்னல் - தீமை, துன்பம்.
இன்னா - தீமை, துன்பம்.
இன்னாங்கு - துன்பம்.
இன்னாது - தீது.
இன்னாமை - தீமை, வேண்டாமை.
இன்னார் - இத்தன்மையர், பகைவர்.
இன்னிசை - இராகம், ஏழு நரம்புள்ள வீணை.
இன்னியம் - இன்பமான வாச்சியம்.
இன்னியர் - பாடுவார்.
இன்னே - இத்தன்மையவாய், இப்பொழுது.

ஈ

ஈ - ஈ என்னும் பறவை, [வண்டு, ஓரெழுத்து, கொடுவென்னேவல், முன்னிலை யசைச்சொல் (உ-ம்.) சென்றீ பெரும நிற்றகைக்குநர்யாரே, அம்பு, சரச்சுவதி].
ஈகம் - சந்தனம்.
ஈகை - ஈதல், [இண்டங்கொடி, கற்பகம், பொன், மேகம்].
ஈகையாளன் - கொடுப்போன்.
ஈங்கு - இவ்விடம், இண்டங்கொடி.
ஈங்கை - இண்டங்கொடி.
ஈசத்துவம் - அட்டசித்தியினொன்று அது யாவர்க்குந் தேவனாகுதல்.
ஈசல்* - சிறகுள்ள கறையான், சீழ்க்கை.
ஈசனாள் - ஆதிரைநாள்.
ஈசன் - கடவுள், [அயன், அரன், அரி, மன்னன், எப்பொருட்கு மிறைவன், குரு, மூத்தோன்].
ஈசன்மைந்தன் - முருகன், விநாயகன்.
ஈசன்றூர் - கொன்றைமாலை.
ஈசானம், ஈசானியம் - சிவனைம்முகத்தொன்று, வடகீழ்த்திசை.
ஈசானன், ஈசானியன் - வடகீழ்த்திசைப்பாலன், சிவன்.
ஈசானியமூலை* - வடகீழ்த்திசையிலுள்ள மூலை.
ஈசுரமூலி - தராசுக்கொடி, பெருங்கிழங்கு.
ஈசுரவிந்து - இரசம்.
ஈசுரன், ஈசுவரன், ஈச்சுரன், ஈச்சுவரன் - கடவுள், சிவன், தலைவன்.
ஈசுவரி - பார்வதி.
ஈசுவரிபிந்து - கெந்தகம்.
ஈசெல் - சிறகுடைய கறையான்.
ஈசை - ஏர்க்கால், கலப்பை.
ஈச்சு - ஈச்சமரம்.

ஈச்சுர - பதினோராவதாண்டு.
ஈஞ்சை - இகழ்ச்சி, கொலை.
ஈஷணை, ஈடணை - புத்திரன் மனைவி பொன் இவற்றிலுண் டாகும் விருப்பம்.
ஈடழிதல் - பெருமைகுன்றல்.
ஈஷிகை, ஈடிகை - எழுதுகோல்.
ஈடு - பதில், கடன்கோடற்கு வைத்த அடகு, ஒப்பு, [பெரு மை, கைம்மாறு, குழைவு, வலி, உவமை, வருத்தம்.]
ஈடேறுதல் - கடைத்தேறுதல்.
ஈடேற்றம் - இரட்சிப்பு, மீட்பு.
ஈட்டம் - கூட்டம், தேட்டல்.
ஈட்டல் - சம்பாதித்தல், தொகுத் தல்.
ஈட்டி - சவளம், [சம்பாதித்தென னும் வினையெச்சம்].
ஈண்டல் - கூட்டம், நெருங்கல்.
ஈண்டு- இவ்விடம், சீக்கிரம், புலி தொடக்கி, ஈண்டென்னே வல், இவ்வண்ணம்.
ஈண்டை - இவ்விடம்.
ஈதல் - கொடுத்தல், சொரிதல்.
ஈந்து - ஈச்சமரம்.
ஈப்புலி - ஈயைக்கொல்லும் பூச்சி (சிலந்தி.)
ஈமத்தாடி - சிவன்.
ஈமம் - சுடுகாடு, விறகு, பிணஞ் சுடுதற் கடுக்கும் விறகடுக்கு (மணிமே. 63).
ஈம் - சுடுகாடு.
ஈயக்குழவி - நீலப்பாஷாணம்.
ஈயக்கொடி - இண்டங்கொடி.
ஈயம் - பஞ்சலோகத்தொன்று, [மிருதாரசிங்கி, பாதிரி].
ஈயல் - ஈதல், [தம்பலப்பூச்சி, ஈசல்].
ஈயை - இஞ்சி.
ஈரங்கொல்லியர் - வண்ணார்.
ஈரப்பசுமை - ஈரப்பற்று, சம் பத்து.
ஈரப்பசையுள்ளவன் - செல்வமு டையவன்.
ஈரம் - நனைவு, [அழகு, அறிவு, அன்பு, கிருபை, குளிர்ச்சி, பகுதி, பண்பு.]
ஈரல்* - ஈருள்.
ஈரவன் - சந்திரன்.
ஈரவிதைப்பு - புழுதிவிதை.
ஈரவுள்ளி, ஈருள்ளி - ஈரவெங் காயம்.
ஈரற்கருகுதல் - மிகவும் பயப் படுதல்.
ஈரற்குலை* - ஈரற்கொத்து.
ஈரித்தல்* - ஈரமாதல்.
ஈரிப்பு - ஈரம், குளிர்மை.
ஈருள் - ஈரல்.
ஈரொட்டு-சந்தேகம், [இரண்டுக் குற்றது].
ஈர் - மயிரிற் பற்றும் பேன்முட் டை, ஈர்தலைச் செய்யென் னேவல், [முன்னிலைப்பன் மை விகுதி, இரண்டு].
ஈர்கொல்லி, ஈர்க்கொல்லி, ஈர் கோலி - ஈரையுருவிக் கொல் லுவிக்குமொரு கருவி.
ஈர்க்கில் - அம்பிறகு.
ஈர்க்கு - ஓலையீர்க்கு, பற்குத்தும் குச்சு, [அம்பிறகு].
ஈர்க்குச்சம்பா* - ஒரு நெல்.
ஈர்தல் - அரிதல், பிளத்தல்.

ஈர்த்தல் - இழுத்தல், [அறுத்தல், குளிர்மையாதல், பிளத்தல்].
ஈர்வடம் - பனையீர்க்குக்கயிறு.
ஈர்வாள் - இரம்பம்.
ஈவு - பிரித்துக்கண்ட பேறு.
ஈழம் - சிங்களதேசம், கள், பொன்.
ஈழை, ஈளை - கோழை.
ஈறல் - துக்கம், நெருக்கம்.
ஈறிலி - கடவுள்.
ஈறு - பல்லிடையின் முரசு, [முடிவு, உப்பளம்].
ஈனமிலணங்கு - தெய்வப்பெண்.
ஈனம் - இழிவு, [குறைபாடு, கேடு].
ஈனனம் - வெள்ளி.
ஈஞமாடு - மலட்டுப்பசு அல்லது எருமை.
ஈனுதல்-பெறுதல், [காய்த்தல்].
ஈனை - இலைநரம்பு, ஓர் வியாதி, சித்திரக்குறிப்பு.
ஈனோர் - இவ்வுலகத்தோர் (மணிமே. 277.)
ஈன்றவள், ஈன்றாள் - தாய், பார்வதி.
ஈன்றவன், ஈன்றான் - தந்தை, நான்முகன்.
ஈன்றார் - தாய்தந்தையர்.

## உ

உ - ஒருயிரெழுத்து, ஓர் சுட்டு (உ-ம்.) உக்கொற்றன், ஓர் வினையெச்ச விகுதி (உ-ம்.) செய்து, இரண்டென்னு மெண்ணின் குறி.
உஃது - ஒன்றன்படர்க்கைச் சுட்டுப்பெயர்.
உகட்டுதல் - தேக்கெடுத்தல்.
உகத்தல் - சந்தோஷித்தல், திருத்தியடைதல், விரும்பல், மகிழ்வோடு கொள்ளல்.
உகந்தது - அங்கீகரிக்கும்படியான பொருள்.
உகப்பு - சந்தோஷம், மகிழ்வு, [உயர்ச்சி].
உகம் - யுகம், நாள், பாம்பு, பூமி, முடிவு, இரண்டு, தலைப்பாட்டு.
உகளல் - குதித்தல், கடத்தல், பாய்தல்.
உகளித்தல் - குதித்தல், பாய்தல்.
உகா - ஓர் மரம்.
உகாதி - யுகாதி.
உகாந்தம் - யுகமுடிவு.
உகிரம் - இலாமிச்சை.
உகிர் - நகம்.
உகிர்ச்சுற்று - நகச்சுற்று (இஃதை ஊர்ச்சுத்தியெனக் கொச்சையாக வழங்குகின்றனர்.)
உகுத்தல் - சிந்தல், சொரிதல், விடுத்தல்.
உகைத்தல் - எழுப்புதல், ஏறுதல், செலுத்தல்.
உக்கம் - ஆலவட்டம், இடபம், இடை, கோழி, தீ, தூக்குக் கயிறு, பசு.
உக்கரித்தல் - வாந்திபண்ணல்.
உக்கலை - மருங்கின்பக்கம்.
உக்கல் - பதனழிவு, உளுத்தது, [பக்கம்].
உக்கா* - கஞ்சாக்குடுக்கை.

உக்காரம் - சத்திபண்ணல்.
உக்காரி - பிட்டு.
உக்கிரகந்தம், உக்கிரகந்தி-வெள்ளுள்ளி, வசம்பு, பெருங்காயம், வேம்பு, கரும்பு.
உக்கிரம் - குரூரம், மூர்க்கம், கோபம், கொடுமை, [வெப்பம், வேகம், கடுமை, பரணி, தலைக்காவல், கீதவுறுப்பினுளொன்று].
உக்கிரன் - சிவன், வீரபத்திரன், துருவாசன், விசுவாமித்திரன்.
உக்கிராணம் - பண்டசாலை, களஞ்சியம்.
உக்கிரி - துர்க்கை, வசம்பு.
உக்கிருஷ்டம் - மிகுதி.
உக்குதல் - இற்றுப்போதல், [பயப்படல்].
உக்குளான் - சருகுமுயல்.
உங்காரம் - உம்மென் றாரப்பல், வண்டிடுனொலி, அதட்டுகை.
உங்கு, உங்கே - உவ்விடம்.
உங்கை - உன்றங்கை.
உசந்த* - உயர்ந்த.
உசரம்* - உயரம்.
உசரிதம் - நெருஞ்சில்.
உசருதல்* - உயர்தல்.
உஷற்காலம் - சூரியோதயம்.
உசனம் - தருமநூல் பதினெட்டினொன்று.
உசனன் - சுக்கிரன்.
உசா-உசாவென்னேவல், ஆலோசனை, ஒற்றர், உஷாதேவி.
உஷாதேவி - சூரியன்மனைவி.
உசாவல் - யோசனைகேட்டல், ஆராய்தல்.
உசி - கூர்மை, விருப்பம்.
உசிதம்-தகுதி, மேன்மை, யோக்கியம்.
உசிரம் - இடபம், இலாமிச்சைவேர், மிளகு.
உசிர்* - உயிர்.
உசிலம், உசில் - உசிலை (சீக்கிரிமரம்.)
உசீரம் - இலாமிச்சைவேர், வெட்டிவேர்.
உசு - உளு (ஓர் புழு.)
உசுப்புதல் - ஏவுதல்.
உசுவாசம் - உச்சுவாசம்.
உஷை - வாணசுரன்மகள், இரவு, காலை.
உச்சட்டம் - நேர், இலக்கு.
உச்சந்தலை* - தலையினுச்சி.
உச்சம் - கிரகவுச்சம், தலைக்குநேரிடம், நுதி, மத்தியானம், வல்லிசை.
உச்சயினி - விக்கிரமாதித்தனுக்குத் தலைநகராயிருந்தது.
உச்சரித்தல் - சொல்லுதல்.
உச்சரிப்பு - எழுத்தினோசை.
உச்சவம்* - உற்சவம்.
உச்சவீடு-உதயத்துக்கேழாமிடம்
உச்சாகம்*-உற்சாகம் (முயற்சி).
உச்சாடனம் - ஏவுதல், [அகற்றல்].
உச்சாரணம் - உச்சரித்தல்.
உச்சி - நுனி, தலை, [ஆண்மயிர், நடுத்தலை, மயிர்முடி, நாய், நடுப்பகல்].
உச்சிக்கரண்டி* - குழந்தைகளுச்சியி லெண்ணெய்விடுஞ் சிறிய கரண்டி.

உச்சிக்குழி - தலைநடு.
உச்சிக்கொம்பன் - உச்சியிற் கொம்புள்ள மாடு.
உச்சிச்சுட்டி - ஓராபரணம்.
உச்சிட்டம் - உச்சிஷ்டம் (எச்சில்.)
உச்சிதம் - அருமையானது, அழகு, மேன்மை, தகுதி, உயர்ச்சி.
உச்சிப்பொழுது* - நடுப்பகல்.
உச்சிரதம் - பிரண்டை.
உச்சிவேர்* - மூலவேர்.
உச்சினி - உச்சயினி.
உச்சுவாசம் - சுவாசத்தை உள்ளேயிழுத்தல்.
உச்சைச்சிரவம் - இந்திரனின் பரி.
உஞற்று - உஞற்றென்னேவல், ஊக்கம், முயற்சி, வழக்கோதல், தப்பு.
உஞ்சல்* - ஊஞ்சல்.
உஞ்சை - அவந்திநகர்.
உடங்கு - கூடிநிற்றல், ஒன்றிப்பு.
உடந்தை - கூட்டு, சேர்மானம்.
உடம்படிக்கை * - பொருத்தச்சீட்டு.
உடம்படுதல் * - சம்மதப்படுதல்.
உடம்பாடு - சம்மதம்.
உடம்பிடி - வேல்.
உடம்பு - உடலம், உயிருக்கிருப்பிடம்.
உடம்பெடுத்தல் - பிறத்தல்.
உடம்பை - கலங்கனீர்.
உடலம் - சரீரம்.
உடலல் - சினக்குறிப்பு, பொருதல், சினத்தல்.
உடலெடுத்தல் - பிறத்தல், சரீரந்தேறுதல்.
உடல் - சரீரம், [பொருதென்னேவல், ஒற்றெழுத்து, பொன்].
உடற்குறை - தலையற்றவுடல்.
உடற்கூறு - உடலிலக்கணம்.
உடற்கொழுப்பு - குடற்கொழுப்பேறுதல்.
உடற்றல் - சினக்குறிப்பு, பகைகொள்ளல், பொருதல், சிதறவடித்தல், அழித்தல்.
உடனே* - சம்பவித்ததும்.
உடன் - அந்நேரம், கூட.
உடன்கட்டையேறுதல்* - இறந்த நாயகனுடன் சீவியாநின்ற மனைவி தீயிற்புகுதல்.
உடன்பங்காளி* - கூடிய பங்குக்காரன்.
உடன்படல் - இசைதல், சம்மதிப்படல்.
உடன்படிக்கை - சம்மதிப்பத்திரம்.
உடன்பிறந்தார் - சகோதரர்.
உடன்றல் - கோபம், சினக்குறிப்பு, பொருதல்.
உடு - உடையைத் தரியென்னேவல், [அகழி, அம்பு, அம்பினிறகு, அம்புத்தலை, ஆடு, ஓடக்கோல், சீக்கிரிமரம், விண்மீன்].
உடுக்கை - உடுக்கு (இடைசுருங்குபறை), ஒரு கட்பறை, [சீலை].
உடுத்தல் - சீலைசுற்றல்.
உடுபதம் - ஆகாயம்.
உடுபதி - சந்திரன், மரமஞ்சள்.

உடுபம் - தெப்பம்.
உடுப்பு* - உடை (உடுக்கப்படுவது.)
உடுப்பை - உடுப்பாயென்னு முற்று, சீக்கிரிமரம், ஓரூர்.
உடும்பு* - இரண்டு நாவுள்ள ஓர் செந்து.
உடும்புநாக்கன்* - பொய்யன்.
உடுவின்வேந்தன் - சந்திரன்.
உடுவை, உடுநீர் - அகழி.
உடை - உடையென்னேவல், [உடைமை, சீலை, செல்வம், வேலமரம்].
உடைகுளம் - பூராடநாள்.
உடைதல் - கெடுதல், சாய்தல், தளர்வு.
உடைத்தல் - தகர்த்தல்.
உடைப்பு - உடைந்துவிடுதல், [தளர்வு].
உடைமை - பாக்கியம், பொருள், ஆபரணம்.
உடையவன் - சொந்தக்காரன், [கடவுள், எசமான்].
உடையார் - ஓர் ஜாதியின் பட்டப்பெயர்.
உட்கட்டு - வீட்டினுட்கட்டு.
உட்கல் - அஞ்சல், மடிதல், வெட்கல், வியங்கோண்முற்று.
உட்காங்கை* - உட்சூடு.
உட்கு - உட்கென்னேவல், அச்சம், நாணம்.
உட்கை - உள்ளுளவு, உட்பக்கம், உள்ளங்கை, இடக்கைச்சுற்று.
உட்டணம், உஷ்ணம் - வெப்பம், மிளகு.
உட்டணவாயு - உட்டணங்கண்டு உடலிற் கிளரும் வாயு.
உட்ணதிக்கம் - மிக்க வெப்பம்.
உட்படுதல் - உடன்படல், எல்லைக்குக் கீழ்ப்படிதல்.
உட்படுத்தல் - இணக்குதல், உள்ளேசேர்த்தல்.
உணக்கம் - உலர்ந்ததன்மை, வாட்டம்.
உணங்கல் - உலர்தல், காய்தல், மெலிவானது, வாடல், வற்றல்.
உணராமை-உன்மத்தம், மயக்கம்.
உணர்தல்-அறிதல், ஊடறீர்தல், எண்ணல், தெளிவு, நினைத்தல், வாடல்.
உணர்த்தல் - அறிவித்தல், கற்பித்தல்.
உணர்ந்தோர் - அறிவுடையோர்.
உணர்வு - அறிவு, [தெளிவு, நீங்கல்].
உணவு* - ஆகாரம்.
உணா - உணவு, [சோறு].
உணி - ஓர் செந்து (உண்ணியென்பதின் குறுக்கம்), [அனுபவிப்பாள் அனுபவிப்பான் அனுபவிப்பதென்னும் பொருள்பட நிற்குமோ ரொருமைப் படர்க்கை விகுதி].
உண்கலம் - போசன பாத்திரம்.
உண்கு - உண்கென்னேவல்.
உண்டல் - புசித்தல்.
உண்டாட்டு - மதுபானக்கொண்டாட்டு, மகளிர்விளையாட்டு, விளையாட்டு.

உண்டி - பொக்கசப்பெட்டி, [சோறு, பறவையுணவு, உண்டாயென்னு முற்று].
உண்டிகை - உண்டியற்சீட்டு.
உண்டியற்சீட்டு - உண்டிப்பத்திரம்.
உண்டுபடுத்து, உண்டுபண்ணு - உண்டாக்கு.
உண்டை - உருண்டை, சிற்றுண்டி, தார்நூல், [உண்டாயென்னுமுற்று, திரட்சி, படைவகுப்பு].
உண்ணல் - புசித்தல்.
உண்ணு-அண்ணம் (மேல்வாய்).
உண்ணுக்கு* - மேல்நாக்கு.
உண்ணுமுலை - பார்ப்பதி.
உண்மை - மெய், [அறிவு, உள்ளது, இயல்பு, நேர்மை].
உதகம் - நீர், பூமி, மழை, மழைத்துளி.
உதகவன் - நீ, கொடுவேலி.
உதக்கு - வடக்கு.
உதணம் - மொட்டம்பு.
உததி - கடல், முகில்.
உதப்புதல் - கடிந்துகொள்ளல், பேசுகையில் எச்சில் தெறித்தல்.
உதம்புதல் - அதட்டுதல், கடிந்துகொள்ளல்.
உதயகாலம் - சூரியோதயம்.
உதயம், உதயாதி* - விடியல்.
உதயன் - சூரியன்.
உதயாத்தமனம் - அந்திசந்தி.
உதரநாடி - இரத்தநரம்பு.
உதரபந்தனம் - புருஷர் அரைப்பட்டிகை.
உதரம் - கீழ்வயிறு, [கருப்பை].
உதவல் - காரியத்திற்காதல், [ஈதல், துணைசெய்தல்].
உதவி - சகாயம், துணை, [கொடை].
உதள் - வெள்ளாட்டுக்கடா, மேடவிராசி.
உதறிமுறிப்பான் - விஷ்ணுகரந்தை.
உதறுதல் - இடங்கொடாமற் றள்ளுதல், சிதற அசைத்து வீசுதல், நடுங்குதல்.
உதாசனம், உதாசினம் - நிந்தை.
உதாசனித்தல் - இகழ்தல்.
உதாரகுணம், உதாரத்துவம் - பெருங்கொடைத்தனம்.
உதாரணம் - துணைக்காரணம், இலக்கிய மெடுத்துக்காட்டல்.
உதாரம் - உத்தண்டம், தாராளம், வீரம்.
உதாரன், உதாரி - கொடையாளி, வீரன், பேச்சுத்தீரமுடையவன்.
உதானம், உதானன் - நாபியில் நிற்கும் வாயு.
உதி - உதித்தலைச் செய்யென்னேவல், [ஒதியமரம், உலைத்துருத்தி].
உதிட்டிரன் - தருமராசன்.
உதித்தல் - தோன்றுதல், உதயமாதல், பிறத்தல், [பருத்தல்].
உதியன் - சேரன், பாண்டியன்.
உதிரக்கட்டு - பூப்புப்படாமை.
உதிரக்கலப்பு - உறவு.
உதிரக்குடோரி-கருடன்கிழங்கு.
உதிரபந்தம் - மாதுளை.

உதிரபாசம் - இரத்தவுறவு.
உதிரம்* - இரத்தம்.
உதிரன் - செவ்வாய்.
உதிரி - உதிர்ந்தது, [சிறுகீரை, துளசி, ஓர் வாழை].
உதிர்தல்* - சிந்தல், சொரிதல்.
உதிர்த்தல் - சொரிவித்தல், பொடியாக்கல்.
உது - உஃது.
உதும்பரம் - அத்திமரம், எருக்கு, செம்பு, நெற்களம், வாயிற்படி.
உதை - உதையென்னேவல், உதைத்தல், காலா லழுத்துகை, முட்டு.
உதைசுவர் - அணைசுவர்.
உத்கிருஷ்ணம் - மேன்மை.
உத்கீதன் - சந்திரன்.
உத்தண்டமணி - பொன்மணியாலாகிய கழுத்தாபரணம்.
உத்தண்டம்-உக்கிரம், தயிரியம், வாக்குவல்லமை, வீரம்.
உத்தமதாளி - வேலிப்பருத்தி.
உத்தமபரி - சிரேஷ்ட குதிரை, கொத்தமல்லி இலை.
உத்தமபலம் - முந்திரிகைப்பழம்.
உத்தமம் - நன்மை, முதன்மை.
உத்தமாகாணி - உத்தமதாளி.
உத்தமாங்கம் - தலை, [ஆண்குறி, பெண்குறி].
உத்தமி - கற்புடையவள், [பார்வதி].
உத்தமோத்தமம் - மிகுநன்மை.
உத்தரகிரியை - அசுபக்கிரியை.
உத்தரகுரு - போகபூமியாறிறொன்று.
உத்தரபூமி - வடபூமி.
உத்தரம்-எதிர்மொழி, [வடக்கு, உயர்ச்சி, ஊழித்தீ].
உத்தரவாதம்* - வகைசொல்லுந்தன்மை.
உத்தரவாதி* - பிணையாளி.
உத்தரவு - மறுமொழி, கட்டளை.
உத்தராசங்கம் - மேற்போர்வை.
உத்தராதி - வடக்கு.
உத்தராயணம் - சூரியன் வடக்கில் தைமுதல் ஆனிமட்டும் வசிக்குங் காலம்.
உத்தரி - குதிரை.
உத்தரித்தல் - சகித்தல், சாதித்தல், மறுமொழி சொல்லுதல்.
உத்தரியம், உத்தரீயம் - மேற்போர்வை.
உத்தாமணி* - உத்தமாகாணி.
உத்தாரம் - மறுமொழி, [அடைப்பு, உயர்ச்சி, கட்டளை].
உத்தாலம் - நறுவிலி.
உத்தானபாதன் - சுவாயம்பு மனுவின் குமரன்.
உத்தானம் - அடைப்பு, இசைப்பு, உள்வளைவு, சேனை, நிமிர்ந்து கிடத்தல், ஊழித்தீ.
உத்தி - தந்திரவுத்தி, செல்வம், சொல், திருவுறுப்பு, தூக்கங்கள், தேமல், பாம்பின் படப்பொறி, சேர்த்தல், (மணிமே. 268.)
உத்தியாவனம், உத்தியானம், உத்தியானவனம் - பூந்தோட்டம்.
உத்தியோகம் - அதிகாரத்தோடு கூடிய தொழில், [உள்ளமிகுதி, முயற்சி].

உத்திரட்டாதி - ஓர் நாள்.
உத்திராடம் - ஓர் நட்சத்திரம்.
உத்தீபனம் - விகாரமூட்டல்.
உத்துங்கம் - உயர்ச்சி, மிருது, மேன்மை.
உத்துவாகிதமுகம் - தலைநிமிர்ந்து நோக்கல்.
உத்தூளனம், உத்தூளிதம் - உடம்பு முழுதும் விபூதியைப் பூசுதல்.
உத்தேசம் - மதிப்பு, விருப்பம், நோக்கம்.
உந்தரம் - வழி.
உந்தல் - உயர்ச்சி, ஏறுகை.
உந்தி - ஆறு, ஆன்கூடம், உயர்ச்சி, கடல், கொப்பூழ், தேருருளை, நடு, நீர்ச்சுழி, பரப்பு, மகளிர்விளையாட்டிலொன்று, யாழினுறுப்பு.
உந்திபூத்தோன் - திருமால்.
உந்துதல் - உயர்ச்சி, ஏறுதல், தள்ளுதல், செலுத்துதல்.
உந்துரு - பெருச்சாளி.
உந்தை - உன்றந்தை.
உந்நதம், உன்னதம் - உயர்ச்சி, மேன்மை.
உந்மத்தம், உன்மத்தம் - ஊமத்தை, மயக்கம், மன்மதாவஸ்தையினென்று.
உந்மத்தன் - பித்தன், முசுகுந்தன் என்னுமரசன்.
உபகரணம் - கருவி, எத்தினங்கள், உதவி.
உபகாரம்* - சகாயம், உதவி, ஈகை.
உபகாரி - நன்மை செய்பவன், ஈகையாளன்.
உபகேசி - உமை, பார்ப்பதி.
உபசரணை-உபசாரம், [வழிபாடு].
உபசரித்தல்* - மரியாதைசெய்தல்.
உபசருக்கம் - ஆரியமொழிகளின் அடையுருபு.
உபசல்லியம் - பறையர்சேரி.
உபசாந்தி - ஒழிவு, சமாதானம்.
உபசாரம் - உபசரணை, உபகாரம், வழிபாடு.
உபதானம் - முதற்காரணம், தலையணை, அஸ்திவாரம்.
உபதேசம் - சமயபோதகம், போதனை.
உபத்தம், உபஸ்தம் - பெண்குறி.
உபநயம், உபநயனம் - பூணூற்சடங்கு, [மூக்குக்கண்ணாடி].
உபநிஷதம்-வேதசார சாஸ்திரம்.
உபயமம் - கலியாணம்.
உபயம் - கோயிற்காணிக்கை, [இரண்டு].
உபயார்த்தம் - இருபொருள்.
உபயோகம்* - உதவி, பிரயோசனம்.
உபரசம் - கடனுரை.
உபரி-அதிகம், [ஓர் மீன், மேல்.]
உபலம் - கல், சிறுகல், எருமுட்டை.
உபலாளனம் - தூயதாக்கல்.
உபவநம் - நந்தனவநம்.
உபவாசம்* - உணவொழிதல்.
உபவீதம் - பூணூல்.
உபாதானம் - அரிசிப் பிச்சை, ஐம்புலனடக்குகை.

உபாதி - தடை, பாதை, வருத்தம்.
உபாத்தி, உபாத்தியாயன் - ஆசிரியன், [புரோகிதன்].
உபாநதியம் - ஒன்றுவிட்டயல்.
உபாயம் - தந்திரம், சொற்பம், வகை.
உபுக்கல் - பெருகல்.
உபேட்சித்தல் - அலட்சியம்பண்ணல், கைவிடல்.
உபேட்சை - அசட்டை, பிரிய
உபேந்திரன் - திருமால். [வீனம்.
உப்பக்கம் - முதுகு.
உப்பங்கழி - உப்புக்கழி.
உப்பசம் - சுவாசகாசம்.
உப்பம்பருத்தி - ஓர் பருத்தி.
உப்பரவர்* - குளமுதலிய வகழும் ஒரு ஜாதியார்.
உப்பரிகை* - மேல்மாடம்.
உப்பளம்-உப்புவிளைநிலம், கழி.
உப்பால் - மேல் (சிலப்: 12:5.)
உப்பு - இலவணம், உப்புதலைச் செய்யென்னேவல், [அராகம், இனிமை, உவர்த்தல், கடல், மகளிர்விளையாட்டு].
உப்புக்கண்டம்* - உப்புச்சேர்த்துக் காயவைத்த இறைச்சித்துண்டம்.
உப்புக்கரித்தல் - உப்பு மிகுத்தல்.
உப்புக்கீரை* - ஓர் கீரை.
உப்புக்குத்தி - ஓர் குருவி.
உப்புசம்* - வயிற்றுவீக்கம்.
உப்புதல் - வீங்குதல், பொருமுதல்.
உப்புப்பூத்தல்*-உப்புப்பற்றுதல்
உப்புமாறுதல்* - உப்புவிற்றல்.
உப்புவாணிகர்-உப்பமைப்போர்.
உப்பை - ஔவைமுதலிய பெண்பாலுல்வரு ளொருத்தி.
உமணர் - உப்பமைப்போர்.
உமல் - மீன்பிடிக்கிறவர்களின் ஓலைப்பை.
உமாபதி - சிவன்.
உமி* - உமியென்னேவல், தானியங்களின்றோல்.
உமிக்கரப்பன் - குழந்தைகட்கு வருஞ் சிரங்கு.
உமிக்காந்தல் - உமியெரிந்த துகள்.
உமிச்சிரங்கு* - சிறுசிரங்கு.
உமிதல்* - கொப்பளித்தல்.
உமிழ்தல் - கொப்பளித்தல், சத்திசெய்தல், சொரிதல், தெவிட்டல்.
உமை - பார்வதி.
உமைகரநதி - கங்கை.
உமைமகன் - வீரபத்திரன், முருகன், விநாயகன்.
உமையவள் - உமை.
உமையாள் - பார்வதி, [சவுக்காரம், மயிலிறகு].
உம் - இடைச்சொல்.
உம்பருலகு - தேவலோகம்.
உம்பரூர் - பொன்னுங்காணி.
உம்பர் - ஆகாயம், உயர்ச்சி, உவ்விடம், பார்ப்பார், மேல், வானோர்.
உம்பல் - ஆட்டினேறு, ஆண்யானை, எருது, எருமைக்கடா, எழுச்சி, குலம், கோத்திரம், முறைமை, யானை, வலி, விலங்கேற்றின் பொது.

உம்பளம் - கொடை; மன்னனாற் கிடைத்த பொருள்.
உம்பி - நும்பி (உன்றம்பி)
உம்பிளிக்கை - மானியம்.
உம்மங்காய் - கொட்டையில்லாப் பனங்காய்.
உம்மெனல் - சம்மதத்தைக்காட்டும் குறி.
உம்மை - உங்களை, [வருபிறப்பு, பழம்பிறப்பு (மணிமே. 242)].
உயக்கம் - வருத்தம்.
உயக்கல் - வருத்தல்.
உயங்கல், உயங்குதல்-வருந்தல், வாடுதல், மனந்தளர்தல்.
உயரம்-உயர்ச்சி, [மிகுதி, மேல்.]
உயர்ச்சி, உயர்த்தி - மேன்மை.
உயர்தல் - நிமிர்தல், மேற்படல்.
உயர்திணை - உயர்ந்த குலம்; அஃது மானிடர், தேவர், நரகர்.
உயர்தினம் - திருவிழா, சுபநாள்.
உயர்த்துதல் - தூக்குதல், அதிகப்படுத்துதல்.
உயர்நிலத்தோர் - வானோர்.
உயர்நிலம்-மேடு, [தேவலோகம்]
உயர்நிலை - மேன்மாடம், தேவலோகம்.
உயர்ந்தோர் - அறிஞர், பார்ப்பார், முனிவர்.
உயர்வு - உயர்தல், மேன்மை.
உயல் - உயிர்வாழ்தல்.
உயவர் - வருந்தினர்.
உயவு - வருத்தம்.
உயவை - காக்கணஞ்செடி, முகில், துன்பம்.
உயா - வினா (மணிமே. 182.)
உயிர் - ஆன்மா, [காற்று].
உயிர்க்கொலை* - சீவவதை.
உயிர்த்தல் - மூச்சுவிடல், விடுத்தல்.
உயிர்த்துணைவன் - உயிர்த்தோழன், நாயகன்.
உயிர்த்துணைவி - உயிர்த்தோழி, சரச்சுவதி, மனைவி.
உயிர்நிலை*-பிராணனிற்குமிடம்.
உயிர்ப்பு - காற்று, மூச்சு.
உயில்* - சாதனபப்த்திரிகை.
உய்தல் - உயிர்வாழ்தல்.
உய்தி - உயிர்வாழ்தல், உயிர் வாழ்வையென்னுமுற்று.
உய்த்தல்-செலுத்தல், வைத்தல்.
உய்யக்கொண்டான் - எருமைமுல்லை, கொய்யாமரம்.
உய்யானம், உய்யானனம் - சோலை, பூந்தோட்டம்.
உரகம் - பாம்பு, நாகமல்லிகை.
உரகர் - சமணர், நாகர்.
உரகன், உரகாதிபன் - ஆதிசேடன்.
உரங்கொள்ளல்-வலியுண்டாக்கல்.
உரசல் - உரிஞ்சல், தேய்த்தல்.
உரஞ்சுதல்* - தேய்த்தல்.
உரணம் - ஆட்டுக்கடா, முகில்.
உரண்டம் - காக்கை.
உரப்பம் - பெருங்காயம்.
உரப்பல் - அதட்டல்.
உரம் - ஊக்கம், ஞானம், மதில், மார்பு, வலி.
உரம்விழுதல்* - கைக்குழந்தை தரையிற் புரளுவதினாலுண்டாகும் ஒரு பிடிப்புநோய்.

உரலாணி - உரலடிக்கிடும் மரவாணி.
உரல்* - நென்முதலிய குத்துமுரல்.
உரவன் - அருகன்.
உரவு - வலி.
உரவுநீர் - உவர்நீர் (உப்புநீர்).
உரவோர் - அறிஞர், மூத்தோர், இருடிகள் (சிலப்.)
உரறல் - பெருங்கோபம்.
உரற்றல் - ஒலித்தல், பேரொலி.
உரன் - அறிவு, ஊக்கம், பலம்.
உராய்ஞ்சல்* - உரைதல்.
உராய்தல்* - உரிஞ்சல்.
உரி - உரிதலைச் செய்யென்னேவல், [அரைப்படி, தோல், மரப்பட்டை].
உரிஞுதல், உரிஞ்சுதல் - தேய்த்தல், வற்றச்செய்தல்.
உரிதல் - கழற்றல்.
உரித்தல்-உரிக்குதல், [களைதல்].
உரித்து - உரிமை, உரியது.
உரிமை- ஒவ்வொன்றிற்குத் தகுவது, சுதந்தரம், ஆட்சி, [குணம், மனைவி].
உரிமைக்கடன் - பிரேதத்திற்குரியவர்கள் செய்யுங் கடமை.
உரிமைமண் - சவக்குழியி லுரிமைக்காரர் போடும் மண்.
உரியவன், உரியோன்-கணவன்.
உரிவை - தோல், மரவுரி.
உரு - வடிவு, செபத்தினுரு, [அட்டை, உடல், உள், நிறம், நோய், அழகு, கரு, அச்சம்].
உருகம் - பிறப்பு.
உருகுதல்*-மனங்கரைதல், கரைதல்.
உருக்கம் - மனவிரக்கம், [தொடை.]
உருக்கு - உருக்கென்னேவல், [எஃகு].
உருக்குதல் - உருகச்செய்தல், தீயிற் கரைத்தல்.
உருக்குமணி - கிருஷ்ணமூர்த்தியின்றேவி.
உருக்குமம் - பொன்.
உருசிதட்டல்* - சுவைதோன்றல்.
உருசுப்படுத்தல், உருசுவாக்கல் - மெய்ப்பித்தல்.
உருட்சி - திரட்சி.
உருட்டல் - உருளச்செய்தல், புரட்டல்.
உருண்டை - உண்டை, திரட்சி.
உருத்தல் - கோபம், சினக்குறிப்பு, தோற்றல், மிகுதி, முளைத்தல்.
உருத்திதம் - உரிய பொருள், தொழிலிலாபம், வளர்தல்.
உருத்திரபஞ்சமம் - ஓர் பண்.
உருத்திரபூமி - மயானம்.
உருத்திரம் - பெருங்கோபம்.
உருத்திரன் - சிவன், பெருங்கோபி.
உருத்திராட்சம்*-உருத்திரமணி.
உருத்திராணி - பார்வதி.
உருத்திரை - பார்வதி.
உருத்திரோற்காரி - ஓராண்டு.
உருப்பசி - தெய்வப்பெண்களிலொருத்தி.
உருப்படி* - உருமுழுவதும்.

உருப்பம் - உட்டணம், தினைமா, மிகுதி.
உருப்பு - சூடு, மிகுதி, கொடுமை.
உருப்போடல் - பாடம்பண்ணல், மந்திரஞ்செபித்தல்.
உருமம்-உட்டணம்,மத்தியானம்.
உருமவேளை* - மத்தியானம்.
உருமாறுதல்* - வேற்றுருக்கொள்ளல்.
உருமு - இடி, அச்சம்.
உருமுதல் - இரைதல், குமுறல்.
உருமேறு - இடி.
உரும் - அச்சம், இடி (மணிமே. 12.)
உரும்பரம் - சர்ப்பம், செம்பு, பெருங்காயம்.
உருவங்காட்டி - கண்ணுடி.
உருவசி - உருப்பசி.
உருவம் - வடிவம், [உடல், விக்கிரகம், அழகு].
உருவாணிபற்றுதல் - தேய்ந்துபோதல்.
உருவாரம் - வெள்ளரி.
உருவிலி - மன்மதன்.
உருவு - உருவென்னேவல், ~~வடி~~ வம், [அச்சம்].
உருவுதடம் - சுருக்கு.
உருவுதல் - இலை முதலிய வருவல், வாண்முதலிய கழற்றல், புதைந்தோடல்.
உருவெளிக்காட்சி, உருவெளித்தோற்றம் - மனத்திலுள்ள பொருளின் மருட்சித்தோற்றம்.
உருவொளி - கண்ணுடி முதலிய வற்றிற் காணும் நிழல்.
உருளரிசி - கொத்துமல்லி.
உருளல் - உருளுதல்.
உருளி - உரோகணிநாள், தேருருளை, வட்டம்.
உருளை - தேர்முதலியவற்றினுருள், உரோகணிநாள்.
உருள் - உருளென்னேவல், [உரோகணிநாள், தேருருளை, பண்டி, வட்டம்].
உரூட்சை - வாழைக்கிழங்கு.
உரூபகாரம்* - அத்தாட்சி.
உரூபம் - உருவம், சாயை, நிறம்.
உரூபித்தல் - மெய்ப்பித்தல்.
உரூப்பியம் - வெள்ளி, வெள்ளை.
உரை-உரையென்னேவல், [உயர்ச்சி, ஒலி, சொல், சொற்பயன், தேய்வு, பொன், புகழ் (மணிமே. 4.)
உரைசல் - தேய்த்தல், [சீக்கல்].
உரைத்தல் - தேய்த்தல், [ஒலித்தல், சொல்லுதல்].
உரைப்பு - உரைக்கை.
உரையாணி - மாற்றறியுமாணி.
உரொக்கக்காரன் - பண இருப்புள்ளவன்.
உரொக்கம்*-கையிருப்புப்பணம்.
உரோகணி - ஓர்நட்சத்திரம், பலபத்திரன் தாய்.
உரோகணிபுதல்வன்-பலராமன்.
உரோகதி - நாய்.
உரோகம் - நோய்.
உரோகிணி - உரோகணிநாள், ஒன்பானுண்டுப்பெண், கடுக்காய், கடுகுரோகணி.
உரோங்கல் - உலக்கை.
உரோசல் - உராய்தல்.

உரோணி - உரோகணிநாள்.
உரோதநம் - அழுதல்.
உரோமகூபம் - மயிர்ச்சிலிர்ப்பு.
உரோமக்கிழங்கு - வசம்பு.
உரோமம்-புறமயிர்,மயிர்ப்பரப்பு.
உரோமாஞ்சலி - மயிர்சிலிர்க்கை.
உரோருகம் - முலை.
உலகங்காத்தான் - அவிரி.
உலகசஞ்சாரம் - உலக வாழ்வு.
உலகநீதி - நன்னெறி, நன்னெறி நூல்.
உலகநேத்திரன் - சூரியன்.
உலகமீன்றாள் - பார்வதி.
உலகமுண்டோன் - திருமால்.
உலகம் - உலகு, [உயர்ந்தோர், ஆகாயம், நன்மக்களுடைய ஒழுக்கம் (மணிமே. 9)].
உலகரட்சகன்* - திருமால்.
உலகளந்தோன் - திருமால்.
உலகாசாரம் - உலகவொழுக்கம்.
உலகாயதம் - உலகவின்பமே மேலானதென்னுமோர் நிரீச்சுர வாத சமயம்.
உலகாயிதம் - உலகாயதம்.
உலகியல் - உலகநடை.
உலகு - ஆகாயம், உயர்ந்தோர், திசை, நாடு, பூமி.
உலக்கை-குத்துமுலக்கை, [திருவோணம், கேடு, மெருகன் கிழங்கு].
உலக்கைப்பாட்டு - வள்ளைப்பாட்டு.
உலக்கைப்பிடங்கு - உலக்கைக் கணை.
உலங்கு - கொசுகு.
உலண்டு - கோற்புழு.
உலம் - கற்றிரல், திரண்டகல்.
உலர்தல் - காய்தல், வாடல்.
உலவாக்கிழி - எடுக்குந்தோறும் பொருள் குறையாது தரும் கிழிக்கட்டு.
உலவை - ஊர், ஓடைக்கொடி, காற்று, குடி, குலம், தழை, மரக்கொம்பு, மரப்பொந்து, முல்லை நிலக்கான்யாறு, வள்ளி, விலங்கின் கொம்பு.
உலறல்-காய்தல், சினக்குறிப்பு.
உலா - உலாவென்னேவல், ஓர் பிரபந்தம், சாரிவருதல்.
உலாங்கம் - மனோசிலை.
உலாங்கு - காவட்டம்புல்.
உலாத்து*-உலாத்தென்னேவல்.
உலாத்துக்கட்டை -முளையாணி, சுழியாணி.
உலாவல் - சாரிபோதல், மெல்ல நடத்தல்.
உலுக்குதல்*-குலுக்குதல், அசைத்தல்.
உலுத்தன் - உலோபி.
உலுப்பை - பெரியார்க்களிக்கு மூண்பண்டம், காய்வருக்கம், சாமான்பை.
உலூகம் - கோட்டான்.
உலூகலம் - உரல், குங்கிலியம்.
உலூதை - சிலந்திப்பூச்சி.
உலூபி - ஓர்வகைமீன்.
உலை - கொல்லனுலை, பாகஞ் செய்யவைக்கும் நீருலை.
உலைக்களம் - அடுப்பு, கொல்லனுலையிடம்.
உலைக்குறடு - கம்மாளர் கருவியி னொன்று.

உலைச்சல் - அலைவு, கலக்கம்.
உலைதல் - அழிதல், கெடுதல், வருந்துதல்.
உலைத்தல் - அலைத்தல், அழித்தல், வருந்தல்.
உலைப்பு - வருத்தம்.
உலையிற்பிணந்தின்னி - மாமிசபேதி.
உலைவு-அச்சம், நடுக்கம், அழிவு.
உலொங்குதல்* - கீழ்ப்படுதல்.
உலொடுக்கு - வெறுமை, ஒலிக்குறிப்பு.
உலொட்டி - கள்ளுக்குடுவை.
உலோகம் - பஞ்சலோகம், [ஏழுவகை லோகம், பூமி].
உலோகாயதம் - உலகாயதமதம்.
உலோகிதம் - சிவப்பு.
உலோகோயம் - இமயமலைக்குத் தெற்கு மிராமேசுரத்துக்கு வடக்கும் நிற்குந் தேசங்கள்.
உலோசனம் - கண்.
உலோபம் - ஆசை, குறைவு.
உலோபி* - பிசுனன்.
உலோமசம் - சடாமாஞ்சில்.
உலோமசன் - ஓரிருடி.
உலோமம் - வால், ஒழுங்கு.
உலோலம் - அசைவு, விருப்பம்.
உலோலன் - காமவிச்சையுடையவன்.
உலோலிதமுகம்-ஆழ்ந்த சிந்தையாலொருதோள்மேற் சாய்ந்து நிற்குமுகம்.
உலோலை - இலக்குமி, நா-
உல் - தேங்காயுரிக்குங் கட்டைப்பாரை.
உல்கு - ஆயம்.
உல்லங்கனம், உல்லிங்கனம்-அவமதிப்பு, நிந்தை.
உல்லம் - ஓர் மீன்.
உல்லரி - தளிர்.
உல்லாசம் - உள்ளக்களிப்பு, [அத்தவாளம், உத்தரீயம்].
உல்லாபம் - மழலைச்சொல்.
உல்லாபன் - நோயுற் றொழிந்தோன்.
உல்லியம் - கிணறு.
உல்லியர் - கூவநூலோர்.
உல்லோலம்-பெருங்கடற்றிரை.
உவகை - களிப்பு.
உவச்சர் - ஒச்சர், [சோனகர்].
உவட்டல் - வெறுத்தல், பெருகல், சத்திபண்ணல்.
உவட்டுதல் - குமட்டுதல், [அருவருத்தல், புரளுதல்].
உவணகேதனன், உவணமுயர்த்தோன் - திருமால்.
உவணம் - உயர்ச்சி, கருடன், கழுகு, பருந்து.
உவணன் - கருடன்.
உவணை - உவ்விடம், தேவலோ[கம்.
உவண் - உவ்விடம்.
உவதை - மலையின்வீழாறு.
உவத்தல் - மகிழ்தல், விரும்பல்.
உவப்பு - உயரம், பொலிவு, மகிழ்ச்சி, விளையாட்டு.
உவமம் - ஒன்றோடொன்றையொப்புறுத்தல்.
உவமாநிலம் - சுவர்.
உவமானம் - சமானம், [உவமிக்கும் பொருள்].
உவமேயம் - உவமிக்கப்படுபொருள்.

உவமை - உவமம்.
உவரி - கடல்.
உவர் - உவர்ப்பு, உப்பு.
உவர்க்களம் - உப்பளம்.
உவர்த்தரை - உப்பளம்.
உவர்த்தல் - ஓர் சுவை, வெறுத்தல்.
உவர்ப்பு-உப்புறைப்பு, [நிந்தை, வெறுப்பு].
உவர்மண் - உழமண்.
உவளகம் - அந்தப்புரம், இடைச்சேரி, இரண்டு, உப்பளம், ஓர் பக்கம், குளம், பள்ளம், மதில்.
உவளல் - துவளல்.
உவளித்தல் - சுத்தஞ்செய்தல்.
உவனி - வாள்.
உவன் - ஓர் சுட்டுச்சொல்.
உவா-இளையோன், கடல், தம்பி, நிறைவு, பூரணை, யானை.
உவாத்தி, உவாத்தியாயன் - கற்பிப்போன்.
உவாய் - ஓர் மரம்.
உவை - அஃறிணைப் பன்மைப் படர்க்கைச் சுட்டுப்பெயர்.
உவ் - உவை (சுட்டுச்சொல்.)
உவ்வி - தலை, தலைவி.
உவ்வு - தவம்.
உழக்கல் - கலக்கம், மிதித்தல், வருந்தல், சிலம்பம்பழகல்.
உழக்கு - காற்படி, [உழக்கென் னேவல், மிதிப்பு].
உழக்கோல் - தாற்றுக்கோல்.
உழச்சியர், உழத்தியர் - மருத நிலப்பெண்கள்.
உழப்பாளி *-முயற்சியுள்ளவன்.
உழப்பு - ஊக்கம், முயற்சி, வலி.
உழமண்*-அழுக்கெடுக்கும் மண்.
உழம்பல் - ஒலித்தல், பிதற்றல்.
உழலல் - சுழலல், ஆடுதல்.
உழலைமரம் - தொண்டுக்கட்டை.
உழல் - உழுதல்.
உழவர் - வேளாளர், படைவீரர், மருதநிலமாக்கள்.
உழவாரப்படை, உழவாரம் - உழைவாரம்.
உழவு - உழுந்தொழில், [வழிபாடு [சீவக. சிந். 905].
உழற்றுதல் - சுழற்றுதல், வருத்துதல்.
உழி - ஏழனுருபு (உ-ம்.) அவனுழிவந்தான், பக்கம்.
உழிஞை - சிறுபூளை, பகைவரது அரண்பிடிப்பார்க்குரிய மாலை.
உழிதரல் - சுழலல், திரிதல்.
உழுகை - உழுதல்.
உழுதல் - உழல்.
உழுநர் - உழவர்.
உழுந்து - உளுந்து (ஓர் பயறு.)
உழுபடை - கலப்பை.
உழுவம் - எறும்பு.
உழுவலன்பு - விடாது தொடர்ந்த அன்பு.
உழுவல் - குணமீ, அன்பு.
உழுவான் - ஓர் புழு, பிள்ளைப் பூச்சி.
உழுவை - புலி, ஓர் மீன்.
உழை-உழையென்னேவல், எழனுருபு (உ-ம்.) அவனுழைவந்தான், சிரத்தாற் பிறக்குமிசை, மான், யாழினோர்நரம்பு.
உழைத்தல் - பிரயாசப்படுதல், [பேசலாவெழுமொலி].

உழைப்பாளி * - பிரயாசப்படுபெ வன்.
உழைப்பு - பிரயாசம், முயற்சி.
உழைமண் - உழமண்.
உழையர் - ஏவல்செய்வோர், மந் திரிகள்.
உழைவாரம் - புற்செதுக்கு மாயு தம்.
உளம் - உள்ளம், கருத்து, மனம்.
உளர்தல் - சிந்தல், தடவல், இற குகோதல், அசைதல்.
உளவு - இரகசியம், [ஒற்றன்].
உளறுதல் - தடுமாறிப்பேசல்.
உளறுபடி- உளறுபிடி * - குழப் பம்.
உளி - ஓர் கருவி, [ஏழனுருபு, (உ-ம்.) அவனுளி வந்தான்.
உளியம் - கரடி, (சிலப். 13-5.)
உளு - ஓர் புழு.
உளுக்காத்தல், உளுக்கார்த்தல் - இருத்தல்.
உளுத்தல்-மரமுதலியமாவாதல்.
உளுந்து* - உழுந்து.
உளுவை* - ஓர் மீன்.
உளை - உளையென்னேவல், ஆண் மயிர், ஒலி, குதிரை முதலிய வற்றின் பிடரிமயிர், புறமயிர், சேறு, பேசலாலெழுமொலி.
உளைத்தல் - அழைத்தல், ஒலித் தல்.
உளைவு - குடைவு, வாதநோயி னென்று.
உள் - நினையென்னேவல், உட்பு றம், மனம், ஏழனுருபு (உ-ம்.) ஊருளிருந்தான்.
உள்கல், உள்குதல் - நினைத்தல்.
உள்வழிகடந்தோன் - கடவுள்.
உள்ளங்கை* - அகங்கை.
உள்ளடி - உள்ளங்கால், சமீபம், நெருங்கிய சுற்றம்.
உள்ளமிகுதி - ஊக்கம்.
உள்ளமுடையான் - ஓர் சோதிட நூல்.
உள்ளம் - கருத்து, மனம், முயற்சி.
உள்ளல் - உள்ளான் குருவி, நினைத்தல்.
உள்ளார்-உடையோர், பகைவர்.
உள்ளாளனம்-கூத்தின்விகற்பம்.
உள்ளான் - ஓர் குருவி.
உள்ளுக்குள் - உள்ளே.
உள்ளுடைவு - மனத்துயர்.
உள்ளுறையுவமம்- தோன்றுமலு வமிப்பது.
உறக்கம் - நித்திரை, [ஒடுக்கம்].
உறங்கல் - நித்திரைசெய்தல், வியங்கோண் முற்று.
உறட்டல் - உலர்த்தல்.
உறட்டுதல் - வறட்டுதல்.
உறந்தை - உறையூர்.
உறமுறை* - உறவின்முறை.
உறல் - கிட்டல், வருதல்.
உறவாடுதல் - உறவாதல்.
உறவி-உயிர், உலக்கைளம், உறவு, ஊற்று, எறும்பு, கிணறு.
உறவு - சுற்றம், [ஒற்றுமை, சேர்க்கை. சிநேகம்.]
உறவுமுறையார் * - உறவின் முறையார்.
உறவோர் - சுற்றத்தார்.
உறழ - ஒருவமையுருபு (உ-ம்.) துப்புறழ வளர்சடையான்.

உறழல்-எண்கூட்டிப்பெருக்கல்.
உறழ்தல் - உவமித்தல், எண்கூட்டிப் பெருக்கல்.
உறழ்வு - இடையீடு, உணர்வு, ஒப்பு, பகை, போர்.
உறி* - தூக்கு, உறிஞ்சென்னேவல்.
உறிஞ்சுதல், உறிதல் - உள்ளே வாங்கல்.
உறியடி - ஓர் திருவிழா.
உறு - உறுவென்னேவல், மிகுதி.
உறுகண் - தரித்திரம், துன்பம், நோய், அச்சம்.
உறுகண்ணாளர், உறுகணாளர் - தரித்திரர்.
உறுக்கல் - அதட்டல், கடத்தல், குதித்தல், கோபம், சினக் குறிப்பு.
உறுதல் - சேர்தல், வருதல், பொருந்தல், அடைதல்.
உறுதி - வலி, திடன், [கல்வி, நன்மை, முறிச்சீட்டு].
உறுதிப்பாடு* - திடம்.
உறுதியர் - தூதர், மந்திரிகள்.
உறுத்தல் - ஒற்றுதல், பயத்தல், வருவித்தல், நாட்டல், ஏற்படுத்தல்.
உறுத்தை - அணில்.
உறுபு - செறிவு, பாலையாழ்த்திறம், மிகுதி.
உறுப்படக்கி - ஆமை.
உறுப்பு - அவயவம், உடல், துறுவல், நெருக்கம், மரக்கொம்பு, மிகுதி, அங்கம், அடையாளம்.
உறுமல் - உறுமுதல், குமுறல், எழும்பல்.
உறுமாலை, உறுமால் - தலைப்பாகை, அங்கவஸ்திரம்.
உறுமி - ஓர் பறை, வினையெச்சம்.
உறுவர் - முனிவர்.
உறுவல் - உறுவேனென்னுமுற்று, துன்பம்.
உறுவன் - அருகன், முனிவன்.
உறுவை - ஔவை முதலிய பெண்பாலொருவளொருத்தி.
உறை - ஆடையழுக்ககற்றுநீர், இடம், இரை, உயர்ச்சி, உறையென்னேவல், ஓரிலக்கக் குறிப்பு, காரம், நீளம், படைக்கூடு, பண்டம் பெய்யுறை, பாலிடுபிரை, மருந்து, மழை, மழைத்துளி, வாழ்நாள், விலங்குணவு, வெண்கலம்.
உறைதல் - பால் முதலியன தோய்தல், [வசித்தல், சஞ்சரித்தல்].
உறைத்தல் - கார்த்தல், தாக்கல்.
உறைத்துளி - மழைத்துளி.
உறைப்பு - காரம், [கொடுமை].
உறைமோர்* - பாலிடுபிரை.
உறையுள் - உறைகாலம், ஊர்ப்பொது, நாடு, மருதநிலத்தூர், மக்கட்படுக்கை, வீடு.
உறையூர் - திரிசிராப்பள்ளிக்கருகிலுள்ள சோழனூர், மருதநிலத்தூர்.
உற்கடம் - செருக்கு, நன்னாரி, மதயானை.
உற்கம் - கடைக்கொள்ளி, தீத்திரள்.
உற்கரித்தல் - சினத்தார்த்தல்.
உற்கிருஷ்டம்-மிகுதி, மேன்மை.

உற்குரோசம் - நீர்வாழ் பறவை, சத்தம்.
உற்கை - கடைக்கொள்ளி, விண்மீன், விண்வீழ்கொள்ளி.
உற்சர்க்கம் - அத்திவாரம், கைவிடுதல்.
உற்சவம் - திருவிழா, [உயர்ச்சி, களிப்பு, விருப்பம்].
உற்சாகம் - சந்தோஷம், [ஊக்கம், முயற்சி].
உற்பத்தி - பிறப்பு, [தோற்றம்].
உற்பலம் - கருநெய்தல், செங்குவளை.
உற்பவம் - பிறப்பு.
உற்பாதம் - கொடுமை, துன்னிமித்தம், விண்வீழ்கொள்ளி.
உற்பீசம் - நிலத்திற் பிறப்பன.
உற்றது - தகுந்தது.
உற்றபண்புரைப்போர் - தூதர்.
உற்றளவு - சரியளவு.
உற்றார் - உறவோர், சிநேகர்.
உற்றிடம் - உற்ற சமயம், ஆபத்து.
உற்றுழி - வருத்தமான காலம்.
உன்மணி - உயர்ந்த மணி.
உன்மதம் - மதிமயக்கம்.
உன்மத்தை - ஊமத்தை.
உன்முகம் - மேனோக்கிய முகம்.
உன்மை - தசைபிடுங்குங் குறடு.
உன்னம் - அன்னப்புள், நினைவு, நீர்வாழ் பறவைப்பொது, மனம்.
உன்னலர் - பகைவர்.
உன்னல், உன்னுதல் - நினைத்தல்.
உன்னி - குதிரை, அழிஞ்சில்.

## ஊ

ஊ - ஓரெழுத்து, ஊன்.
ஊகடன் - முருங்கை.
ஊகம் - கருத்து, [குரங்கு, நினைவு, புலி].
ஊகை - யூகை (விவேகம்.)
ஊக்கம் - முயற்சி, உற்சாகம், உள்ளமிகுதி, உயர்ச்சி, வலி.
ஊக்கல் - ஏறுதல், எழுப்பல்.
ஊங்கு - மிகுதி, உவ்விடம், உயர்ச்சி.
ஊசல் - பதனழிதல், [ஊஞ்சல், அசைதல், ஓர் பிரபந்தம்].
ஊசா - மூக்குத்திக்கொடி.
ஊசி - சூசி, [இழைவாங்கி, எழுத்தாணி].
ஊசிக்காந்தம் - இரும்பிழுக்குங் காந்தக்கல்.
ஊசிக்கார் - ஓர்வகை நெல்.
ஊசித்தொண்டை - சிறுதொண்டை.
ஊசிமுனை* - ஊசிநுனி.
ஊசுதல்* - பதனழிதல்.
ஊஞ்சல்* - ஊசல்.
ஊடகம் - ஓர் மீன்.
ஊடல் - கலவியிற் பிணங்கல், பிரிவு.
ஊடறுத்தல் - நடுவறுத்தல்.
ஊடாடிப்பார்த்தல் - ஆராய்ந்து பார்த்தல்.
ஊடாடுதல் - பழகுதல்.
ஊடான் - ஓர் மீன்.
ஊடு - உள், நடு.
ஊடுருவுதல் - நுழைதல், புதைதல்.

ஊடை - நூற்றூர், புடவையின் குறுக்குநூல்.
ஊட்டம்* - உண்டி.
ஊட்டல் - ஊட்டுதல், கன்று முதலிய பாலுண்ணல்.
ஊட்டி - தொண்டை, [உணவு, பறவை யுணவு, மழை, வினை யெச்சம்].
ஊணம் - ஓர் தேயம்.
ஊணர் - ஊணதேயத்தார், பேருண்டியுண்போர்.
ஊண் - இரை, சோறு.
ஊதநாதன் - இனத்தைக் காக்கும் யானை.
ஊதல் - ஊதுதல், வீங்கல், ஆரவாரம், காற்று.
ஊதா* - மங்கனிறம்.
ஊதாரி - வீண்செலவுக்காரன்.
ஊதிகை - முல்லைக்கொடி.
ஊதியம் - இலாபம், பயன், கல்வி.
ஊதுகட்டி - சொக்கவெள்ளி.
ஊதுகாமாலை - ஓர் நோய்.
ஊதுமாந்தம் - மந்தத்தினல் வயிறுவீங்கு மொருநோய்.
ஊதுவாரம் - வெள்ளி.
ஊதுவிரியன் - ஓர் பாம்பு.
ஊதை - காற்று, குளிர்காற்று, வாதம்.
ஊத்தை - அழுக்கு, [ஊன், புலால், சுரோணிதநீர்].
ஊத்தைகுடியன் - ஓர் பிசாசம்.
ஊத்தைப்பாண்டம் - உடம்பு, [அழுக்குப் பாத்திரம்].
ஊமச்சி* - ஊமைச்சி.
ஊமணை - அந்தங்கெட்டது, ஊமை, மந்தன்.
ஊமணைச்சட்டி * - நன்ருய் வேகாத மட்சட்டி.
ஊமணைச்சி - அழகில்லாதவள்.
ஊமத்தம், ஊமத்தை - உன்மத்தை (ஒரு செடி.)
ஊமன் - ஊமை, [கூகை].
ஊமாண்டி* - ஊமை.
ஊமை - ஊமன்.
ஊமைச்சி - ஊமைப்பெண், [ஓர் நத்தை].
ஊம் - மவுனம், ஊமை (மணிமே. 114.)
ஊம்பல்* - சூப்புதல்.
ஊரல் - ஈரம், காய்ந்து வருகிற புண், [உரிஞ்சல், ஊர்தல், கிளிஞ்சில், குளுவையென்னும் பறவை, பசுமை].
ஊரன் - மருதநிலத்தலைவன்.
ஊராண்மை - மிக்க செயல்.
ஊரி - இளமை, சங்கு, மேகம்.
ஊரு - அச்சம், தொடை, அட்டை.
ஊருடைமுதலியார் - முருங்கை.
ஊருணி - ஊரெல்லா முண்ணுங் குளம், ஊரடுத்த குளம்.
ஊர் - ஊரென்னேவல், ஊர்.
ஊர்கோள் - சூரியனைச் சூழத் தோன்றும் வட்டம்.
ஊர்க்கதை - நிசமல்லாத பேச்சு.
ஊர்க்குருவி* - அடைக்கலக் குருவி.
ஊர்ச்சம் - கார்த்திகைமாதம்.
ஊர்ச்சிதம், ஊர்ஜிதம் - நிலைப்படுதல், உறுதி.
ஊர்ணம் - ஆடுமுதலியவற்றின் மயிர், புருவநடுவிலுள்ள சுழி.

ஊர்தல் - தவழ்தல், [செலுத்தல், பரத்தல்].
ஊர்தி - எருது, குதிரை, சிவிகை, தேர், யானை, பண்டி முதலிய வாகனங்கள், வினைமுற்று.
ஊர்த்துவகபுரம் - அரிச்சந்திரனுடைய நகர்.
ஊர்த்துவபுண்டரம் - மேனோக்கியிடுந் திருமண்.
ஊர்ப்புரளி - ஊர்க்குழப்பம்.
ஊர்மி - வஸ்திரமடிப்பு, வயிற்றிலுள்ள மூன்று மடிப்பு.
ஊர்மிளை - இலக்குமணர் மனைவி, கணவனால் விடப்பட்ட கற்புடைய மனைவி.
ஊர்வசி* - தேவலோகத்தாசி.
ஊர்வாரப்பன் - வெள்ளரி.
ஊலுகம் - ஆந்தை, கோட்டான்.
ஊழல் - பழுதானது, நாற்றம், நரகம்.
ஊழி - யுகமுடிவு, உறைகாலம், பூமி.
ஊழித்தீ - வடவாமுகாக்கினி.
ஊழியம் - தொண்டு.
ஊழ் - பழவினை, குணம், பகை, முறை, விதி, வெயில், பழமை, முடிவு (மணிமே. 304).
ஊழ்த்தல் - பதனழிவு, மடித்தல், நினைத்தல், ஊன், செவ்வி, புலால்.
ஊழ்த்துணை - மனைவி.
ஊழ்வினை* - பழவினை.
ஊளான் - ஆணரி, நரி.
ஊளா, ஊளி - நெடுவாய்மீன்.
ஊளை * - நரிமுதலியவோலிடுஞ் சத்தம்.
ஊறல் - சருமத்தின்மீதுண்டாகு மொரு நோய், ஊறுதல், [ஊற்று, பஞ்சலோகக்கலப்பு, வருவாய்].
ஊறு - ஊறென்னேவல், [இடையூறு, கொலை, தீண்டல், தீமை].
ஊறுகாய்* - அடைகாய்.
ஊறுகோள் - கொலை.
ஊறுதல் - நனைதல், [சாரமேறுதல், பலவழியினும் பொருள் வந்தடைதல்].
ஊறுநீர் - ஊற்றுநீர்.
ஊறுபாடு - இடையூறு, சேதம், தீமை.
ஊற்றம் - அசைவின்றி நிற்றல், அறிவுடைமை, ஆற்றல், பற்றுக்கோடு, புகழ்.
ஊற்றல் - பெய்தல்.
ஊற்றாணி- இடையூறு, கலப்பையுறுப்பினொன்று.
ஊற்றம்பெட்டி - எண்ணெயூற்றும் பெட்டி.
ஊற்றால்* - மீன்கூடு, [உரோகணிநாள்].
ஊற்று - ஊற்றென்னேவல், நீரூற்று, [ஊன்றுகோல்].
ஊற்றுதல்* - கீழே யொழுக்கல், வார்க்குதல்.
ஊற்றுமரம் - செக்குலக்கை.
ஊனக்கண் - குருட்டுவிழி.
ஊனம்-ஈனம், குறைபாடு, கேடு, தீமை, பழி (சீவக. சிந்-448).
ஊனன் - குறைவுள்ளோன்.

ஊஞங்கொடி - ஓர் கொடி.
ஊன் - தசை, மாமிசம்.
ஊன்றல் - பதித்தல், நட்டல், [தள்ளல், சார்தல், பலப்படுத்தல்].
ஊன்றி - பாம்பு.
ஊன்றிக்கேட்டல் - கருத்தாய்ச் செவிகொடுத்தல்.
ஊன்றிப்பேசல்* - பலப்படுத்திப் பேசல்.
ஊன்றுகோல் - பற்றுக்கோல்.

## எ

எ - ஒரெழுத்து, வினவெழுத்து, (உ-ம்.) எக்கொற்றன்.
எஃகம் - எறியாயுதம், கைவேல், சக்கரம், கூர்மை.
எஃகல் - தாழ்ந்தெழும்பல், [ஏறுதல், நீளல், எட்டுதல், பஞ்சு முதலிய வெஃகுதல்].
எஃகு - உருக்கு, எஃகென்னேவல், [ஆயுதப்பொது, வேல் (மணிமே. 167.), கூர்மை, படை (சீவக சிந். 157)].
எகினம், எகின் - அன்னப்புள், கவரிமா, செம்மரம், நாய், நீர்நாய், புளிமா, புளியமரம், அழிஞ்சில்.
எக்கச்சக்கம்* - ஒவ்வாமை, தாறுமாறு.
எக்கண்டம்* - முழுதும், ஒருமிக்க.
எக்கரணம் - முக்காரம்.
எக்கர் - ஏறுதல், மறைத்தசொல், மணற்குன்று.
எக்கல் - எட்டல், வயிற்றையெக்கல், [சொரிதல், பொருதல், வற்றல்].
எக்கழுத்தம் - இறுமாப்பு.
எக்களிப்பு* - மிகு மகிழ்ச்சி.
எக்காளம் - ஒருதுகுழல்.
எக்கியம் - யாகம்.
எக்கியோபவீதம் - பூணூல்.
எங்கண், எங்கு, எங்கே - எவ்விடம்.
எங்கத்து, எங்கத்தை, எங்கத்தைய - எவ்விடத்த.
எங்கும்* - எல்லாவிடத்திலும்.
எங்கை - என் தங்கை.
எங்ஙனம், எங்ஙனே, எங்ஙன் - எவ்விடம், எவ்விதம்.
எசமாட்டி, எசமானி - தலைவி.
எசமான்* - எசமானன்.
எசம் - நரம்பு.
எசலாட்டம் - இகலாட்டம்.
எசுசு, எசுர் - ஒரு உபநிடதம்.
எச்சம் - யாகம், எச்சில், குறைபாடு, சேடம், மகள், மகன்.
எச்சரிக்கை, எச்சரிப்பு* - அமைதியா யிருக்கச் சொல்லுகை, கண்டிப்பு, கவனம், முன்னதாக அறிவித்தல்.
எச்சன் - யாகமியற்றுபவன், யாகத்தி னதிதேவதையான திருமால்.
எச்சிலன் - பிசுனன்.
எச்சில் - உச்சிட்டம், [சேஷம்].
எச்சிற்கலை - எச்சிலிலை.
எச்சிற்பருக்கை - சிதறிக்கிடக்கு மன்னம்.
எச்சிற்பேய் - பெருந்தீனிக்காரன்.

எச்சு - உயர்வு, சங்கீதத்தில் நீண்ட ஓசை.
எஞ்சல் - குறைதல், சுருங்கல், சேஷமாயிருத்தல்.
எஞ்ஞான்றும் - எப்பொழுதும்.
எடார்* - வெளிநிலம்.
எடுகூலி* - சுமைகூலி.
எடுத்தல் - சுமத்தல், [தொடக்குதல், ஏற்றுக்கொள்ளல், நீக்குதல், வீடுமுதலிய கட்டல்].
எடுத்துக்காரர் - பொதிமாட்டுக்காரர்.
எடுத்துப்போடல் - தள்ளிப்போடல்.
எடுபடுதல் - நீக்கப்படுதல், அழிந்துபோதல், [வெளிவருதல்].
எடுப்பல் - எடுத்தல், தூங்கினுரையெழுப்பல், வியங்கோண் முற்று.
எடுப்பு - இறுமாப்பு, நிந்தை, உயரம், [எடுப்பென்னேவல், தூக்குகை].
எடை* - நிறையிடல்.
எட்கடை, எட்கிடை - எட்பிரமாணம்.
எட்சினி - ஓர் பெண்பிசாசு.
எட்ட* - தூரமாக.
எட்டர் - மங்கலபாடகர்.
எட்டல் - தாவுதல், வியங்கோண் முற்று.
எட்டாக்கை - தூரம்.
எட்டி - வினையெச்சம், காஞ்சிரமரம், [ஓர் சாதி, வைசியர் பெறுவதோர் பட்டம் (மணிமே. 201)].
எட்டியர் - செட்டிகள், வைசியர் பொது.
எட்டினர் - சிநேகிதர்.
எட்டு - எட்டென்னேவல், ஓரெண், [ஆசை, சாச்சடங்கினென்று].
எண் - எண்ணிக்கை, எண்ணென்னுமேவல், [எளிமை, எள், கணக்கு, சோதிடநூல், வரையறை, வலி, விசாரம்].
எண்கணன் - பிரமன்.
எண்காற்புள் - சரபப் பறவை.
எண்கு - கரடி (மணிமே. 142).
எண்குணன் - கடவுள், சிவன், அருகன்.
எண்சிறப்புள்ளோன் - அருகன்.
எண்சுவடி - கணக்கேடு.
எண்டிசை - எட்டுத்திக்கு.
எண்டோளன் - சிவன்.
எண்டோளி - காளி, துர்க்கை.
எண்ணம் - நினைவு, [குறிப்பு, மதிப்பு].
எண்ணர் - மந்திரிகள், கணிதர்.
எண்ணலர் - பகைவர்.
எண்ணல் - எண்ணுதல், நினைத்தல், [குறித்தல், தேர்ச்சி, மதித்தல்].
எண்ணூர் - பகைவர்.
எண்ணிக்கை - எண், [மதிப்பு, சங்கை].
எண்ணில்கண்ணுடையோன் - கடவுள், அருகன்.
எண்ணெய்க்காப்பு - எண்ணெயபிஷேகம்.
எண்ணெய்ப்புல்லிடுதல் - நெசவு பாவுக்கெண்ணெயிடுதல்.

எண்மர் - எட்டுபேர், கணிதர்.
எண்மை - எளிமை, இலேசு.
எதாஸ்து - அப்படியாகட்டும்.
எதாப்பிரகாரம்* -இருந்தபடியே.
எதார்த்தம்* - உண்மை.
எதிராக - முன்.
எதிராளி, எதிரி - பகைவன், பிரதிவாதி.
எதிரிடல் - எதிர்த்தல், எதிர்ப்படல்.
எதிரிடை-சமமாயிருப்பது,பகை.
எதிரூன்றல் - எதிர்த்தல்.
எதிரொலி - பிரதித்தொனி.
எதிர் - எதிரென்னேவல், முன், முரண்.
எதிர்காற்று - நேர்காற்று.
எதிர்தல் - தோன்றல், மலைதல், மாறுபாடு.
எதிர்த்தல் - அலைத்தல், சந்தித்தல், மாறுபடுதல்.
எதிர்நிற்றல் - போர்செய்யல், முன்னிற்றல்.
எதிர்ந்தோர் - பகைவர்.
எதிர்பார்த்தல் * - வரவுபார்த்தல், பிறருதவிநோக்கல்.
எதிர்ப்படுதல்* - சந்தித்தல்.
எதிர்முகம் - நேர்முகம், முன்.
எதிர்வாதி - வழக்கிற் பிரதிவாதி.
எது - யாது.
எதேச்சை - தன்னிஷ்டம்.
எதேஷ்டம், யதேஷ்டம்* - மிகுதி.
எத்தனம்* - பிரயத்தனம் (முயற்சி).
எத்தனை, எத்துணை - எவ்வளவு.
எத்துதல் - வஞ்சித்தல்.
எத்தேசகாலமும்-எப்பொழுதும்.
எந்திரம் - இயந்திரம், [தேர், மதிலுறுப்பு, ஆலை (சீவக. சிந். 473)].
எந்தை - எமது சுவாமி, என்றந்தை.
எப்பொழுதும், எப்போதும், எப்போழ்தும் - எக்காலமும்.
எப்போ, எப்போது - எப்பொழுது.
எமகிங்கரர் - நமன்தூதர்.
எமநாகம், எமநாமம் - ஊமத்தை.
எமன் - இயமன், [நம்முடையவன், நாகப்பாம்பின் நச்சுப்பல்லினொன்று].
எம்பர் - எவ்விடம்.
எம்பி - என்றம்பி.
எம்பிராட்டி - எங்கள் தலைவி, எங்கள் தேவி.
எம்பிரான் - எங்கள் தலைவன், எங்கள் தேவன்.
எம்பெருமாட்டி - எங்கள் தேவி.
எம்பெருமான் - எம்பிரான்.
எம்மட்டு, எம்மாத்திரம் - எவ்வளவு.
எம்மனோர் - எம்மோடொத்தவர்.
எம்மான் - எம்பிரான்.
எம்மை -எங்களை, [எப்பிறப்பு].
எம்மையும் - எங்களையும், [எப்பிறப்பும்].
எயில் - ஊர்ப்பொது, திரிபுரம், மதில்.
எயிறிலி - சூரியன்.
எயிறு - பல், யானைக்கொம்பு.
எயிற்றியர்-பாலைநிலப்பெண்கள்.
எயினர்-பாலைநிலமக்கள், வேடர்.

எய் - எய்யென்னேவல், முட்பன்றி.
எய்தல்-அம்பெய்தல், அடைதல்.
எய்த்தல் - இளைத்தல்.
எய்ப்பு - இளைப்பு, பலவீனம்.
எய்யாமை - அறியாமை.
எரங்காடு - பாழ்நிலம்.
எரி - எரியென்னேவல், [கேட்டைநாள், தீ, நரகம், புநர்பூசம்].
எரிகரும்பு - விறகு.
எரிகாசு - காசுக்கட்டி.
எரிக்கலகாம்போதி - ஓரிராகம்.
எரிசனம் - நரகர்.
எரிசினம் - கடுங்கோபம்.
எரிச்சல் - அழற்றல், கோபம்.
எரிதல்-அனற்றல்,பிரகாசித்தல்.
எரிநகை - வெட்சிமலர்.
எரிநாள் - கார்த்திகைநாள்.
எரிபந்தம் - தீவட்டி.
எரிப்பு - எரித்தல், பொறாமை.
எரிப்புரம், எரிப்புறம் - நரகம்.
எரிமுகி - சேங்கொட்டைமரம்.
எரியவிழித்தல் - சினத்தோடு நோக்குதல்.
எரிவந்தம்* - மிகவெரிக்குமோர் நோய்.
எரிவனம் - சுடுகாடு.
எரிவு - எரிதல், கோபம், பொறாமை.
எரு* - வயலுக்கிடுமெரு.
எருக்கலை - எருக்கு.
எருக்கல் - கொல்லல், சுமத்தல், வெட்டடல்.
எருக்கு - ஓர் செடி, [எருக்கென்னேவல்].
எருது - இடபம், [இடபவிராசி].
எருதுமறித்தல் - பசுவுடனே எருது புணர்தல்.
எருத்தம் - பிடர், தரவு.
எருத்துமாடு - எருது.
எருந்து - உரல், கிளிஞ்சில்.
எருமணம் - செங்குவளை.
எருமுட்டை - எருவறட்டி.
எருமை - காரா.
எருமைச்சுறு - ஓர் மீன்.
எருமைநாக்கி - ஓர் மீன், சாணக்கிப்பூடு.
எருமைப்பால்குடித்தவன்* - மந்தன்.
எருமையூர்தி - நமன்.
எருவை - உதிரம், கழுகு, கழுதை, கொறுக்கை, கோரை, செம்பு, யானை, பருந்து.
எலி - மூஷிகம், [பூரநாள், கள்ளிமரம்].
எலிச்செவி - சவரியார்கூந்தல்.
எலித்திசை - வடமேற்றிசை.
எலிப்பாஷாணம் - காட்டாமணக்கு.
எலிப்பிடுக்கன் - ஓர் பூடு.
எலிப்புலி - பூனை.
எலு - கரடி, தோழமை.
எலுநன் - சோழன்.
எலுமிச்சை - ஓர் மரம்.
எலும்புருக்கி - ஓர் நோய், ஓர் பூடு, ஓர் மரம்.
எலுவன் - தோழன்.
எலுவை - தோழி.
எல் - இகழ்ச்சி, இரவு, ஒளி, சூரியன், நாள், பகல், வெயில்.
எல்லரி-கைமணி (கையாலசைக்குஞ் சிறுமணி.)

எல்லவர் - எல்லாரும்.
எல்லவன், எல்லோன்-சூரியன்.
எல்லாம்* - முழுதும்.
எல்லார்-தேவர் (சீவ. சிந். 115).
எல்லி - சூரியன், இராத்திரி.
எல்லை - அளவு, கூப்பிடுதூரம், சூரியன், நாள், முடிவு.
எல்லைக்கல்* - எல்லையறிய நிறுத்துங்கல்.
எல்லைப்பிடாரி* - ஓர் தேவதை.
எல்லையின்மை - அளவின்மை.
எல்லோ-அதிசயவிரக்கச்சொல்.
எல்வை - காலம், நாள்.
எவண் - எவ்விடம்.
எவரும்* - எல்லாரும்.
எவன் - யாவன், [ஐயக்கிளவி, யாது, என்னை].
எவையும்-யாவையும் (எல்லாம்).
எவ் - எவை.
எவ்வம் - துன்பம், வெறுப்பு, (சீவக. சிந். 266), தீராத நோய், தனிமை.
எவ்வனம்-இளமை, [மதர்த்தல்].
எவ்வாறு - எவ்வழி.
எழல் - எழும்பல், துக்கம், வியங்கோண்முற்று.
எழால் - யாழ்நரம்பினோசை.
எழிலி - கடையெழுவள்ளலி லொருவன், மேகம்.
எழில் - அழகு, இளமை, வண்ணம், வலி.
எழினி - இடைச்சீலை, திரைச்சீலை, ஒருவள்ளல்.
எழு - எழுவென்னேவல், உருக்கு, [கம்பம், வளைதடி, ஏழு, உழலைமரம்].
எழுகூற்றிருக்கை - ஓர் பிரபந்தம். அஃது, எழரைத்தட்டு விளையாட்டுச் சிறப்புக் கூறுவது.
எழுகை - எழுதல்.
எழுச்சி - எழும்புதல், எறிச்செல்லல், இறுமாப்பு.
எழுதல் - எழல், எழுதுதல்.
எழுதாக்கிளவி, எழுதாமறை - வேதம்.
எழுத்தாணி* - ஓலையி லெழுதுங் கருவி.
எழுத்தாளர் - அறிஞர்.
எழுத்து - அக்கரம், தலையெழுத்து.
எழுத்துவாசனை*-எழுத்துநடை.
எழுநா - நெருப்பு, கொடுவேலி.
எழுபவம் - உயர்பிறப்பு, எழுபிறப்பு.
எழுமான்புலி - ஓர் பூடு.
எழுமை - உயர்ச்சி, எழ்பிறப்பு.
எழும்பல் - எழும்புதல்.
எழுவாயெழுஞ்சனி - மகநாள்.
எழுவாய் - ஆதி, வினைமுற்று.
எளிசு, எளிது* - எளியது (அருமையற்றது).
எளிஞர் - எளியர்.
எளிமை - தளர்வு, தனிமை.
எளியர், எளியவர்* - தரித்திரர், திராணியற்றவர்.
எள் - எள்ளு, [எள்ளென்னேவல்].
எள்கல், எள்குதல் - இகழ்தல்.
எள்ள - உவமைச்சொல், வினையெச்சம்.
எள்ளல் - நகை, நிந்தை, நகைத்தல்.

எள்ளுருண்டை, எள்ளுருண்டை* - ஓர் சிற்றுண்டி.
எள்ளோரை - எள்ளுச்சாதம்.
எறிதல் - வீசல், [அடித்தல், குத்தல், வெட்டல்].
எறித்தல் - ஒளிவீசல்.
எறிமணி - சேமக்கலம்.
எறும்பி - யானை.
எறும்பு - பிபீலிகை.
எறுழி - பன்றி.
எற்பாடு-காலை, மாலைப்பொழுதுக்குமுன் பத்துநாழிகைநேரம்.
எற்றல் - அடித்தல், அறுத்தல், எறிதல், குத்தல், கொல்லல்.
எற்றித்தல் - இரங்கல்.
எற்று - இரக்கக்குறிப்பு, எத்தன்மைத்து, எறிதல், எற்றென்னேவல்.
எற்றுதல் - எறிதல், புடைத்தல்.
எற்றோ - அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல், எத்தன்மைத்தோ.
எனது - எனது.
எனைத்து - எவ்வளவு.
எனைவன் - யாவன்.
எனைவேமும், எனைவோமும் - நாமெல்லாரும்.
எனைவோரும் - யாவரும்.
என் - எனது, [என்ன, இகழ்ச்சிக்குறிப்பு.]
என்பாபரணன் - சிவன்.
என்பிலி - புழு.
என்பு - எலும்பு, புல்.
என்மர், என்மனார்-என்று சொல்வார்.
என்றவன் - சூரியன்.
என்று - எந்நாள், [சூரியன்].
என்றும்* - எப்போழ்தும்.
என்றூழ் - சூரியன், வெயில்.
என்ன - யாவை, [உவமைச்சொல், எத்தன்மைய].
என்னே - என்னோ.
என்னை - என்ன.
என்னோ-அதிசயவிரக்கச்சொல், இரக்கச்சொல், ஐயக்கிளவி.

## ஏ

ஏ - ஓரெழுத்து, இசைநிறைச்சொல், ஈற்றசைச்சொல், எண்ணின் குறிப்பு, தேற்றக்குறிப்பு, பிரிவின் குறிப்பு, வினாக்குறிப்பு, பாணம்.
ஏககுண்டலன் - குபேரன், ஆதிசேடன், பலராமன்.
ஏகசக்கிராதிபதி - ஏகசக்கிரவர்த்தி.
ஏகசரம் - காண்டாமிருகம்.
ஏகதந்தன் - விநாயகன்.
ஏகதாளம்- சத்ததாளத்தொன்று.
ஏகதேசம் - அரிது, சிறுபான்மை, மாறுபாடு, ஒருபுடை.
ஏகதேவன் - கடவுள், புத்தன்.
ஏகநாதன், ஏகநாயகன் - கடவுள்.
ஏகபத்தினி - ஒரேமனைவி.
ஏகபாவம் - ஒரேதன்மை.
ஏகபோகம் - ஒருதன்மைத்தானவின்பம், மனத்தின்படி யனுபவிக்கை.
ஏகமாய் - ஒன்றாய்.
ஏகம் - ஒன்று, தனிமை.

ஏகம்பன் - கச்சிப்பதியிலுள்ள சிவபிரான்.
ஏகரூபன் - கடவுள்.
ஏகல் - உயர்ச்சி, நடத்தல், போகல்.
ஏகவீரன்-அருச்சுனன், கர்ணன், சீராமன்.
ஏகவேணி - ஒற்றைச்சடை, மூதேவி.
ஏகாங்கி* - சந்நியாசி, தனிமை யாயிருப்பவன்.
ஏகாசம் - உத்தரீயம், போர்வை.
ஏகாட்சி - காக்கை, சுக்கிரன், ஒற்றைக்கண்ணன்.
ஏகாண்டம் - பூர்ணம், [வெளி].
ஏகாதசி - பதினொன்றாந்திதி.
ஏகாதிபத்தியம் - தனியரசாட்சி.
ஏகாத்தியம் * - தனிச்செங் கோன்மை.
ஏகாந்தசேவை* - தனிச்சேவை.
ஏகாந்தம்* - தனித்திருக்குமிடம்.
ஏகாம்பரன் - சிவன்.
ஏகாரவல்லி - பலா, பாகல்.
ஏகாலி-வண்ணான், [சவுக்காரம்].
ஏகி - கைம்பெண்.
ஏகை-இரேகை (சிலப்ப.),உமை.
ஏகோபித்தல்*-ஒருமனப்படுதல்.
ஏக்கம்* - ஏங்குகை, கவலை.
ஏக்கறுதல் - தாழ்ந்துநிற்றல்.
ஏங்கல் - அழுதல், [அஞ்சல், இரங்கல்].
ஏசல்* - வைதல், பழிமொழி.
ஏசறுதல் - துக்கித்தல்.
ஏசாதவர் - தேவர்.
ஏசி - வினையெச்சம், [கிளி].
ஏசு - ஏசென்னேவல், [குற்றம்].
ஏச்சு - வைதல், [இகழ்ச்சி].
ஏடகம் - சீலை, தென்னமரம், பலகை, பனைமரம், பூவிதழ், ஒரு சிவஸ்தலம்.
ஏஷணை, ஏடணை - விருப்பம்.
ஏடல் - கருத்து.
ஏடன் - செவிடன், தோழன்.
ஏடா - தோழன்முன்னிலை.
ஏடாகூடம், ஏடாகோடம்* - ஒழுங்கின்மை.
ஏடி - தோழிமுன்னிலை.
ஏடு - பனையேடு, பாலாடை, [கண்ணிமை, பூவிதழ்].
ஏட்டிக்குப்போட்டி * - எதிருக் கெதிர்ஒவ்வாமை.
ஏட்டை - ஆசை, தளர்வு.
ஏட்டைப்பருவம் - வாலிபப் பருவம்.
ஏணம் - நிலைபெறுதல், மான், மான்றோல், வலி.
ஏணி - இறைவை, [எல்லை, நாடு, மான்கன்று].
ஏணை* - புடவைத்தொட்டில்.
ஏண் - நிலையுடைமை, வலி.
ஏதம் - குற்றம், கேடு, துன்பம்.
ஏதர் - குற்றமுடையோர்.
ஏதி - ஆயுதப்பொது, வாள்.
ஏதிலான் - அன்னியன், தரித்திரன்.
ஏதில் - அயல்.
ஏது - யாது, காரணம்.
ஏத்தல் - துதித்தல், வணங்கல்.
ஏந்தல் - ஏந்துதல், [அரசன், உயர்ச்சி, பெருமை, பெருமையிற் சிறந்தோன், மலை].
ஏந்திரம் - இயந்திரம், திரிகை.
ஏந்திழை - பெண்.

ஏந்துதல்* - தாங்குதல்.
ஏப்பம்* - தேக்கெறிவு.
ஏமகூடம்-அட்டமலையிற் பொன் மலை.
ஏமசிங்கி - மிருதாரசிங்கி.
ஏமத்தூரி - பொன்னூமத்தை.
ஏமம் - இரா, இன்பம், உன்மத்தம், களிப்பு, காவல், திரைச்சீலை,புதையல்,பொன்,விபூதி.
ஏமாந்தகொங்கை - விம்மியமுலை.
ஏமாப்பு- கருத்து, செருக்கு, மிகுகளிப்பு, மயக்கம்.
ஏமாறுதல்* - மோசம்போதல்.
ஏமி - உடனிகழ்வான்.
ஏமிலாந்தி - அலமந்து பார்ப்போன், மதிகேடன்.
ஏமுறல், ஏமுறுதல் - இறுமாப்புறல், களிப்புறல்.
ஏம்பலித்தல் - அங்கலாய்த்தல் (பேராசைகொள்ளுதல்).
ஏய்தல் - பொருந்தல், சேரல், இசையல்.
ஏய்த்தல் - உவமித்தல், வஞ்சித்தல், ஒப்பாயிருத்தல்.
ஏய்ப்பு - உவமைச்சொல்(உ - ம்.) முத்தேய்ப்பவெள்ளிர்முறுவல், வஞ்சகம்.
ஏரகம்-சுப்பிரமணியர் பிரதானத் தலமாறிலொன்று.
ஏரண்டம் - ஆமணக்கு.
ஏரம்பன் - விநாயகன்.
ஏரல் - கிளிஞ்சில்.
ஏராண்மை - உழவு.
ஏராளம்* - மிகுதி.
ஏராளர் - உழுநர்.
ஏரி - குளம், [புநர்பூசம்].
ஏரின்வாழ்நர் - பூவைசியர்.
ஏரெழுபது - ஏர்முதலியனவற்றைக் கம்பர் சிறப்பித்துக் கூறிய ஒருநூல்.
ஏர் - உழுபடை, [அழகு, உழுமாடு].
ஏர்க்கால்* - கலப்பையினோருறுப்பு, வண்டியினோருறுப்பு.
ஏர்நாழி- கலப்பையினோருறுப்பு.
ஏர்பு - எழுச்சி.
ஏலக்காய்* - ஓர்வாசனைச்சரக்கு.
ஏலக்குழல் - வாசனை யூட்டப்பெற்ற மயிர்ச்சிகை.
ஏலம் - விலைகூறுகை, வாசனைப் பண்டம், [மயிர்ச்சாந்து].
ஏலரிசி, ஏலவரிசி * - ஏலக்காயின் உள்ளீடு.
ஏலா - தோழிமுன்னிலை.
ஏலாதார் - இயலாதார், பகைவர்.
ஏலாதி - ஓர் நூல்.
ஏலாமை - கூடாமை, இணங்காமை.
ஏலி - கள்.
ஏலேலோ - ஏலப்பாட்டில் வருமொருசொல்.
ஏல்வை - குளம், நாள், காலம்.
ஏவம் - குற்றம், இகழ்ச்சி.
ஏவல்* - தூண்டுகை, பிசாசையேவிவிடுகை, பணிவிடை.
ஏவல்செய்தல்- தொண்டுபுரிதல்.
ஏவிளம்பி - ஓராண்டு.
ஏவு - ஏவென்னேவல், [அம்பு, வருத்தம்].
ஏழகம் - செம்மறிக்கடா, துருவாட்டேறு.
ஏழமை* - ஏழைத்தனம்.

ஏழிலைப்பாலை, ஏழிலம்பாலை - மகளிரான்மலர்மரம் பத்தி ஞென்று, அதன் மணம் களி றுகளுக்குஆகாததாம். [பெண்

ஏழை-தரித்திரன், [அறிவிலான்,

ஏழைமை - அறியாமை, பேதை மை, வறுமை.

ஏழ்பரியோன் - சூரியன்.

ஏளனம் - அவமதிச்சிரிப்பு, பரி காசம், [நீக்கல்].

ஏளிதம்* - இகழ்ச்சி.

ஏறக்கட்டுதல் - இறைந்ததானிய முதலியவற்றைக் கூட்டிச் சேர்த்தல், பலப்படுத்துதல்.

ஏறக்குறைய* - முன்பின்னுக.

ஏறங்கோட்பறை - முல்லைப் பறை.

ஏறுங்கடைசி* - அறமுடிவு.

ஏறுளர் - படைவீரர்.

ஏறிட்டுப்பார்த்தல் * - உற்று நோக்கல்.

ஏறியவீரி - சவ்வீரபாஷாணம்.

ஏறு - ஏறென்னேவல் [அச்சுவி னிநாள், இடபவிராசி, இடி, எருது, எருமை, கவரி, சங்கு, சுறு, பசு, பன்றி, புல்வாய், மரை, மானிவற்றினுண், விலங்கேற்றின் பொது.]

ஏறுநெற்றி* - அகன்ற நெற்றி.

ஏறுமாறு* - குழப்பம்.

ஏறுழவர் - படைவீரர்.

ஏறூர்ந்தோன் - சிவன்.

ஏற்க - இசைவாயிருக்க, உவப் பாக, பிச்சைவாங்க, எதிர்க்க.

ஏற்கவே, ஏற்கெனவே - முன் னமே

ஏற்கை - அங்கீகாரம், வாங்குந் தன்மை.

ஏற்பாடு - நியமம், பிரமாணம், பொருத்தம், முறை.

ஏற்பு - இரப்பு, பொருத்தம்.

ஏற்போர் - இரப்போர்.

ஏற்ற- தகுதியான, பக்குவமான.

ஏற்றக்குறைச்சல் * - ஏற்றத் தாழ்ச்சி.

ஏற்றக்கோல்* - துலாக்கொடி.

ஏற்றச்சால் * - நீர்மொள்ளும் பாத்திரம்.

ஏற்றபடி* - இசைந்தவாறு.

ஏற்றமரம்* - துலா.

ஏற்றம் - ஏற்றமரம், [புகழ், மிகுதி, மேன்மை, உயர்ச்சி].

ஏற்றல் - கொள்ளல், இரத்தல், எழுப்பல், அடுக்குதல், [உண ர்த்தல், எதிர்த்தல்].

ஏற்றுமதி - தோணியிலேற்றப் படுஞ் சரக்கு.

ஏற்றுவாகனன் - சிவன்.

ஏனம் - பாத்திரம், [எழுத்தின் சாரியை, ஓலைக்குடை, காட் டுப்பன்றி, பாவம்.]

ஏனல் - கதிர், செந்தினை, தினைப் புனம், பைந்தினை.

ஏனவும் - ஒழிந்தவும்.

ஏனுதி - தந்திரி, நாவிதன், மந் திரி, மறவன், தளகர்த்தன்.

ஏனுதிநாயனுர் - சிவனடியார் அறுபத்துமூவரி லொருவர்.

ஏனை - மற்று, ஒழிந்த, மலங்கு மீன்.

ஏன்றல் - இயலல், பொருந்தல்.

ஏன்றுகொள் - ஏற்றுக்கொள்.

## ஐ

ஐ - அரசன், அழகு, ஆசான், இரண்டனுருபு (உ - ம்.)அறத்தைச் செய்தான், ஓரெழுத்து, இருமல், கடவுள், கோழை, சாரியை (உ - ம்.) ஏற்றினோடேற்றை, சுவாமி, நுண்மை, யானையைப் பாகன் அதட்டு மோசை, தந்தை.
ஐக்கம், ஐக்கியம் - ஒன்றிப்பு.
ஐக்குரம் - கருப்பஞ்சாற்றாற் செய்யப்பட்ட கருந்தேன்.
ஐங்கணைக்கிழவன் - மன்மதன்.
ஐங்கரற்கிளையோன் - குமரன், வீரபத்திரன்.
ஐங்கரன் - விநாயகன்.
ஐங்காயம் - ஐந்துகாயம்.அஃது: உள்ளி, வெந்தயம், ஓமம், பெருங்காயம், மிளகு, தலைப் பிள்ளைக்கரு.
ஐங்குரவர் - ஐந்து குருக்கள், அவர்: மன்னன், குரு, தமையன், பிதா, உபாத்தியாயன்.
ஐங்கோல் - பஞ்சபாணம்.
ஐசுவரியம்* - செல்வம், பாக்கியம்.
ஐதிகம் * - அஷ்டபிரமாணத்தி லொன்று.
ஐது - அற்பம், அழகானது.
ஐந்தரு - பஞ்சதரு, அஃது:அரிச்சந்தனம், கற்பதரு,சந்தானம், பாரிசாதம், மந்தாரம்.
ஐந்தருநாதன் - இந்திரன்.
ஐந்தவித்தல் - ஐம்புலனடக்கல்.
ஐந்தானம் - மிருகசீரிடம்.
ஐந்திணை - அன்புடைக்காமம், ஐவகைநிலம்.
ஐந்திரம் - இந்திரனாற் செய்யப் பெற்ற ஓர் வியாகரண நூல்.
ஐந்திரன் - இந்திரன், அருச்சுனன், வாலி.
ஐந்திரி-இந்திரன் மகன்,கிழக்கு.
ஐந்துப்பு - பஞ்சலவணம்.அவை: இந்துப்பு, கல்லுப்பு, கறியுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு.
ஐந்துருவாணி - தேரகத்துச்செறி
ஐந்துறுப்படக்கி-ஆமை. [கதிர்.
ஐந்தை - சிறுகடுகு.
ஐப்பசி - ஓர்மாதம், [அச்சுவினி நாள்].
ஐமுகன் - சிவன்.
ஐமுகி - காட்டாமணக்கு.
ஐமை - அடர்பு, கூட்டம், தகட்டு வடிவு.
ஐம்படை - பஞ்சாயுதம். (இரா.)
ஐம்பால் - ஆண்பால் முதலிய வைந்துபால், ஐவகை மயிர் முடி, பெண்மயிர்.
ஐம்புலவிடையன் - இல்வாழ்வான்.
ஐம்புலனடக்கல் - சாத்துவிக குணத்தொன்று, அஃது பஞ்சபுலனடக்கல்.
ஐம்புலன் - ஐம்புலம்.
ஐம்பூதம் - பஞ்சபூதம்.
ஐம்பொன் - பொன் முதலிய ஐவகை யுலோகம். அவை: இரும்பு,ஈயம்,செம்பு,பொன், வெள்ளி.
ஐம்மீன் - அத்தநாள்.
ஐயங்கவீனம் -புதுவெண்ணெய்.

ஐயங்கன் - ஓர் பேய்.
ஐயப்பாடு - ஐயம்.
ஐயம் - சந்தேகம், [சிலேத்துமம், இரப்போர்கலம், பிச்சை].
ஐயர் - பார்ப்பார், [பெருமையிற் சிறந்தோர், முனிவர், வானோர்].
ஐயவி - கடுகு, வெண் சிறுகடுகு.
ஐயனார் - அரிகரபுத்திரன்.
ஐயன்-உபாத்தியாயன், அரசன், அருகன், குரு, தந்தை, மூத்தோன்.
ஐயானனன் - சிவன்.
ஐயுறவு - சந்தேகம்.
ஐயெனல் - விரைவின்குறிப்பு.
ஐயே - விளிக்குறிப்பு.
ஐயை - காளி, தலைவி, தவப்பெண், துர்க்கை, பார்வதி.
ஐராணி-வருத்தம், [இந்திராணி, பார்வதி].
ஐராவணம் - இந்திரன்யானை.
ஐராவணன் - இந்திரன்.
ஐராவதம் - இந்திரன்யானை.
ஐராவதி - ஓர்நதி, யமன்மனைவி.
ஐவகைமயிர்முடி - ஐவகைக்கூந்தல், அவை: குழல், கொண்டை, சுருள், பனிச்சை, முடி.
ஐவணம், ஐவணி -மருதோன்றி.
ஐவருக்குந்தேவி* - திரௌபதி.
ஐவர்-பாண்டவர், [ஐந்துபொறி]
ஐவனம் - மலைநெல்.
ஐவிரலி - ஐவேலிக்கொடி.
ஐவிரல் - அத்தநாள்.
ஐவேசு* - கையிருப்பு.
ஐவேலி - ஓர் கொடி, ஓர் சிவஸ்தலம்.

## ஒ

ஒ - ஒருயிரெழுத்து.
ஒகரம் - மயில்.
ஒக்க - ஒருமிக்க, கூட, [நிகர்க்க, பொருந்த, தகுதியாயிருக்க].
ஒக்கம் - ஊர்ப்பொது, பட்டினம்.
ஒக்கலித்தல் - சுற்றமுறைமை நடப்பித்தல்.
ஒக்கலை - மருங்கின்பக்கம்.
ஒக்கல் - இடைப்பக்கம், சுற்றம்.
ஒக்குதல் - சமானித்தல், [கொப்பளித்தல், பிற்படவிடல்].
ஒக்கொலை - அம்பர்.
ஒசிதல் - அசைதல், ஒதுங்குதல், ஒடிதல், முறிதல்.
ஒசித்தல் - அசைத்தல், ஒடித்தல், முறித்தல்.
ஒச்சம் - பழுது, வெட்கம்.
ஒச்சை - காந்தற்சோறு.
ஒஞ்சட்டை - ஒல்லி.
ஒஞ்சரித்தல்* - ஒருச்சாய்த்தல், ஒருபக்கமாய்ப்போதல்.
ஒஞ்சி - ஸ்தனம்.
ஒடி-மரவிசேடம்(மணிமே. 140).
ஒடிசில் - கவண்.
ஒடித்தல் - தகர்த்தல், [ஒளிசெய்தல்].
ஒடியெறிதல் - வலைவீசல். (இரா)
ஒடு - ஒடுக்கட்டி, ஓர்மரம், மூன்றனுருபு (உ-ம்) கையொடு காலும்.
ஒடுக்கம் - நெருக்கமான இடம், அடக்கம், [முடிவு, பதுங்கல்].
ஒடுக்குதல் - சுருங்கப்பண்ணுதல், குறைத்தல், அடக்குதல்.

ஒடுங்கல் - அடங்கல், ஒதுங்கல், பதுங்கல்.
ஒடுங்கி - ஆமை.
ஒடுவை - மரவிசேடம்.
ஒட்ட - அடியோடே, இறுக, கிட்ட.
ஒட்டகம்* - ஓர் மிருகம்.
ஒட்டங்கி - கன்ஞர் கருவியி லொன்று.
ஒட்டச்சி - ஒரு சாதிப்பெண், [பூவழலை].
ஒட்டடை, ஒட்டறை - புகை யுறை.
ஒட்டம் - ஓடு, சபதம், தோண் டலளவைத்திடர், பந்தயப் பொருள்.
ஒட்டர் - மண் வேலைக்காரர், [ஒட்டதேயத்தார்].
ஒட்டல் - ஒட்டுதல், [உடன் படல், சேர்த்தல்.]
ஒட்டாரம்* - முரட்டுத்தனம்.
ஒட்டார் - பகைவர்.
ஒட்டிக்கிரட்டி* - ஒன்றுக்கிரண்டு பங்கு.
ஒட்டியம் - ஓர்பாஷை, ஓர்தேயம், மாந்திரிகவித்தை.
ஒட்டியாணம் - மாதரிடையணி, [யோகப்பட்டை].
ஒட்டியாதேவி - சூனியக்காரர் பூசிக்குந் தேவதை.
ஒட்டு - ஒட்டென்னேவல், இணைக்கப்பட்டது, சபதம், [ஒன்றிப்பு, படைவகுப்பு] .
ஒட்டுக்கடுக்கன்* - சிறுகடுக்கன்.
ஒட்டுக்குடி* - ஒதுக்குக்குடி.
ஒட்டுடந்தை - சொற்பசம்பந்தம்.
ஒட்டுதல் - சேர்த்தல், பொருத்து தல், பொருந்துதல்.
ஒட்டுத்திண்ணை * - மிகச் சிறிய தெருத்திண்ணை.
ஒட்டுநர் - மித்திரர்.
ஒட்டுப்புதவம் - இரட்டைக்கதவு (சிலப்.)
ஒட்டுப்போடல் - சமயம்பார்த்தல்.
ஒட்டுரிமை* - உடந்தை.
ஒட்டுவியாதி - தொத்துநோய்.
ஒட்டுவைத்தல்* - ஆணையிடல்.
ஒட்டுறவு* - உரித்துறவு.
ஒட்டை - ஒட்டகம், பத்துவிரற் கிடை.
ஒட்பம் - அழகு, நன்மை, மேன் மை, பேரறிவு.
ஒண்டன் - ஆணரி, நரி.
ஒண்டி* - தனிமை.
ஒண்டொடி - பிரகாசமான வளைய லணிந்த பெண்.
ஒண்ணல் - கூடுதல், பொருந்தல்.
ஒண்மை - அழகு, அறிவு, ஒளி, நன்மை, ஒழுங்கு, மிகுதி.
ஒதி - ஒதியமரம்.
ஒதுக்கம் - பதுங்குகை, மறைவு.
ஒதுக்கல் - ஒதுங்கச்செய்தல், [தீர்த்தல்].
ஒதுஙகல் - விலகல், [பதுங்கல்].
ஒதுங்கிநடத்தல் - விலகிநடத்தல்.
ஒத்த - சரிவந்த.
ஒத்தபண்புரைப்போர் - தூதர்.
ஒத்தறுத்தல் - தாளம்போடல்.
ஒத்தாசை* - உதவி.
ஒத்துதல்* - ஒற்றிடுதல், விலகு தல்.

ஒப்ப - உவமையுருபு (உ-ம்.) மதியொப்ப.
ஒப்படி - ஓரிருக்கை (சிலப்ப.)
ஒப்படை, ஒப்படைத்தல்* - ஒப்புக்கொடுத்தல்.
ஒப்பந்தம்* - உடன்படிக்கை.
ஒப்பம் - கையெழுத்து, அதிகார பத்திரிகை, ஒப்பு.
ஒப்பரவு - ஒழுங்கு, சமாதானம்.
ஒப்பனை-உவமை,சமம், பாவனை, அலங்காரம்.
ஒப்பாரி -ஒப்புச்சொல்லியழுதல்.
ஒப்பித்தல் - ஒப்பனைசெய்தல், சம்மதித்தல்.
ஒப்பு - ஒப்பென்னேவல், அழகு, உவமை, சாயல், பொருந்தல், சமம், கவனம்.
ஒப்புக்கொடுத்தல்*-ஒப்புவித்தல்.
ஒப்புரவு - முறைமை, சமாதானம், ஒற்றுமை, உபகாரம்.
ஒம்மல்*-ஒமல் (பேச்சுப்பரத்தல்)
ஒயிலமரம் - ஆக்கினைக்கென்று நிறுத்தியமரம்.
ஒயில் - ஒய்யாரம், அலங்காரம்.
ஒய்யல் - செலுத்தல்.
ஒய்யாரம் - அலங்காரம், ஆடம்பரம், கெருவம்.
ஒய்யெனல்-விரைதல்(சீவக-சிந்.)
ஒருகாவிலி - சனி, குபேரன்.
ஒருகால் - ஒருமுறை, ஒற்றைக்கால்.
ஒருகுடி - தாயத்தார்.
ஒருக்கணித்தல் - ஒருச்சாய்த்தல்.
ஒருங்கல் - அடங்கல், கேடு.
ஒருங்கு - எல்லாம், ஒருதன்மை.
ஒருசந்தி - ஒருநேரப் போசனம்.
ஒருசார் - ஒரு பக்கம்.
ஒருசிறை - ஒதுக்கிடம், ஒருபக்கம்.
ஒருசேர* - ஒருமிக்க.
ஒருதலை - உறுதி, ஒரு பக்கம்.
ஒருதலைநோவு - ஒருத்தலைவலி.
ஒருத்தல் - எருமை, கரடி, கவரி, பன்றி, புலி, புல்வாய், மரை, மான், யானை இவற்றினாண், விலங்கேற்றின் பொது.
ஒருத்தன்* - ஒருவன்.
ஒருபடித்தாய் - பிரயாசமாய்.
ஒருபவம் - ஒருபிறப்பு.
ஒருப்படல் - ஒருமனப்படல், சம்மதித்தல்.
ஒருபிடி* - உறுதிப்பிடி.
ஒருமட்டம் - ஒரேசரி.
ஒருமரம் - செம்மரம்.
ஒருமனப்படுதல்* - ஒரெண்ணமாதல்.
ஒருமாதிரி - ஒருவிதம்.
ஒருமிக்க* - ஏகமாய்.
ஒருமிப்பு - ஒன்றிப்பு.
ஒருமை - ஒருபிறப்பு, ஒற்றுமை, தனிமை.
ஒருவந்தம் - ஒற்றுமை, சம்பந்தம், தனித்திருக்குமிடம்.
ஒருவு - ஆடு, ஒருவென்னேவல்.
ஒருவுதல் - தவிர்தல், நீங்கல், விலகல்.
ஒலி - ஓசை, [ஆரவாரம், கோஷ்டம், இடி, காற்று].
ஒலிமுகவாயில் - கோட்டையின் முன்புறவாயில்.
ஒலியல் - ஆறு, சீலை, தெரு, தோல், பூமாலை.

ஒலுங்கு - கொசுகு.
ஒல் - ஒல்லென்னேவல், முடிவிடம்.
ஒல்கல் - குழைதல், தளர்தல், துவளல்.
ஒல்லல் - இசைதல், பொருந்தல், இயலல்.
ஒல்லாமை - இகழ்தல், இயலாமை, வெறுப்பு.
ஒல்லார் - பகைவர்.
ஒல்லி - மெலிவுற்றவன், ஒடுங்கினது, மென்மை.
ஒல்லுதல் - பொருந்தல், இணங்குதல், நிறைவேற்றல்.
ஒல்லுநர் - நூலுரையுணர்வோர், மித்திரர்.
ஒல்லெனல்-அனுகரணவோசை.
ஒல்லே - கடுப்பு, காலவிரைவு, சிறுபொழுது, சீக்கிரம், பழமை.
ஒவ்வாமை - பொருந்தாமை.
ஒவ்வுதல் - இணங்குதல், பொருந்தல்.
ஒழிகடை - ஈறு.
ஒழிகை - ஒய்தல், விடுகை.
ஒழிதல் - சாதல், தவிர்தல், நீங்கல்.
ஒழித்தல்- அழித்தல், முடித்தல், கொல்லல், [எழுச்சி].
ஒழிய - தவிர.
ஒழிவு - ஒழிகை.
ஒழுகல் - நீர்முதலிய வொழுகுதல், [உயர்ச்சி, ஒழுக்கம், நீளம், முறையாக நடத்தல், நீர்முதலிய வோடல்].
ஒழுகுதல்* - நீர்முதலியவார்தல்.
ஒழுகை - வண்டி, வினைமுற்று.
ஒழுக்கம் - உயர்ச்சி, எழுச்சி, குலம், நடை, பண்பு, முறைமை, வழி.
ஒழுக்கல்-எழுச்சி, ஒழுகுவித்தல்.
ஒழுக்கு - ஒழுகல், [நடை, முறைமை].
ஒழுங்கல் - நிரல்படல்.
ஒழுங்கு - நன்னடை, முறை, நிரை.
ஒழுங்கை - ஒடுங்கியவழி.
ஒளி - பிரபை, ஒளியென்னேவல், [ஒளிப்பிடம், சந்திரன், சூரியன், நெருப்பு, புகழ், விண்மீன், விளக்கு, வெயில், அரசரிடத்துள்ள தெய்வத்தன்மை (மணிமே. 174)].
ஒளித்தல் - பதுங்கல், மறைதல்.
ஒளிப்பு - பதுங்குகை, மறைவு.
ஒளியோன் - சூரியன்.
ஒளிர்தல் - ஒளிசெய்தல்.
ஒளிவட்டம்-கண்ணாடி, சக்கிரம்.
ஒளிறல் - ஒளிகொள்ளல்.
ஒள் - ஒளி, அழகு, மேன்மை.
ஒள்ளியர் - அறிவுடையோர்.
ஒள்ளியோன் -அறிவுடையோன், ஒளிசெய்வோன், சுக்கிரன்.
ஒறுத்தல் - அலைத்தல், நோய்செய்தல், வருத்துதல், வெறுப்பு.
ஒற்கம் - வறுமை.
ஒற்றர் - தூதர், வேவுகாரர்.
ஒற்றல் - ஒற்றுதல், [உடுத்தல், நினைதல் (சிலப்ப.)].
ஒற்றி - ஈட்டடைமானம்.
ஒற்றிடம் - ஓர் பூச்சு.

ஒற்றித்தல் - ஒற்றைப்படவெண்ணல்.
ஒற்றியூர் - பட்டினத்தடிகள் சமாதியுற்ற ஸ்தலம்.
ஒற்று - ஒற்றென்னேவல், [தூதன், மெய்யெழுத்து].
ஒற்றுதல் - ஒற்றல், [அடுத்தல், உடுத்தல்].
ஒற்றுமை - மனமொன்றுகை, [ஒருமை, உரிமை].
ஒற்றை - ஒன்று, தனிமை.
ஒற்றைக்கண்ணன் - சுக்கிரன், குபேரன்.
ஒற்றைக்கொம்பன் - விநாயகன்.
ஒற்றையாழித்தேரோன் - சூரியன்.
ஒன்பான் - ஒன்பது.
ஒன்றல் - ஒன்றுதல்.
ஒன்றுய் - ஒருமிக்க.
ஒன்றார் - பகைவர்.
ஒன்றி - ஒற்றை, தனித்தது.
ஒன்றிக்காரன், ஒன்றியாள் - சமுசாரமில்லாதவன்.
ஒன்று - ஏகம், ஒன்றென்னேவல்.
ஒன்றுகை - ஒன்றுதல்.
ஒன்றுக்கிருத்தல் - சிறுநீர்விடுதல்.
ஒன்றுக்குப்போதல் * - சிறுநீர் கழிக்கச் செல்லுதல்.
ஒன்றுதல் - இசைதல், இணங்கல், பொருந்துதல்.
ஒன்றுநர் - சினேகிதர்.
ஒன்றுபடுதல், ஒன்றுபடல் - கூடுதல், பொருந்துதல்.
ஒன்றுமற்றவன்* - உபயோகமில்லாதவன்.
ஒன்றோ- அதிசயவிரக்கச்சொல், இடைச்சொல் (உ-ம்.) பொய்படு மொன்றோ புனைபூணும்.
ஒன்னப்பூ - மாதர்காதணியி னொன்று.
ஒன்னலர், ஒன்னுதார், ஒன்னார்- பகைவர்.

## ஓ

ஓ - ஓரெழுத்து, அதிசயவிரக்கச் சொல் (உ-ம்.) ஓ புதினம், இரக்கச் சொல் (உ-ம்.) ஓகெட்டேன், எதிர்மறை (உ-ம்.) யானோ செய்தது, வினு (உ-ம்.) சாத்தனோ, மடையடைக்குங் கதவு.
ஓகணம் - பேன், மூட்டைப் பூச்சி.
ஓகை - உவகை.
ஓக்கம் - உயர்ச்சி, எழுதல், பெருமை.
ஓக்காளம், ஓங்காளம் - வாந்தி செய்கை.
ஓங்கல் - அரசன், உயர்ச்சி, எழுச்சி, சத்திபண்ணல், மரக்கலம், மலை, மூங்கில், மேடு, யானை, வலியோன்.
ஓங்காரம் - பிரணவம். (பார)
ஓங்காரவுரு - கௌரிபாஷாணம்.
ஓங்கில் - ஓர் மீன்.
ஓங்குதல் - உயர்தல், [வளர்தல், மிகுதல், பெருமையுறல்].
ஓசம் - ஒளி, வலி, சமர்த்து.
ஓசரம்-நிமித்தம் (உ-ம்.) வேலைக் கோசரம் அங்கு ஓடினேன்.

ஒசனித்தல் - பறவைசிறகடித்தல்.
ஒசன் - பிடாரிகோவில் பூசாரி, [உவாத்தி].
ஒசை - ஒலி, [இசை, கீர்த்தி, வாழை].
ஒச்சல் - எறிதல், [ஓங்கல், ஒட்டல், செலுத்தல், தூண்டிவிடல்].
ஒஷதி, ஒடதி - ஒருகாற் காய்த்துப்படுமரம், கொடி, மரமுதன்மருந்து.
ஒடம் - தோணி, [செங்கருங்காலி, நெய்வோர்கருவியினொன்று].
ஒடன் - ஆமை.
ஒடாணி - ஆபரணக்கடைப்பூட்டாணி.
ஒடிகை - வனநெல்.
ஒடியம்* - சபைக்கடாப்பேச்சு.
ஒடியவோடம் - கிளிஞ்சில்.
ஒடு - வீடுவேயுமோடு, இரப்போர்கலம், [ஆமை முதலியவற்றினோடு, கொட்டைகளினுறை].
ஒடை - நீரோடை, [அகழி, ஓர்கொடி, ஓர்மரம், குலம், நெற்றிப்பட்டம், மலைவழி, யானைநுதற்பட்டம்].
ஒட்டம் - ஓடுமோட்டம், [உதடு, தோல்வி].
ஒட்டல் - ஒடப்பண்ணல், உட்செலுத்தல்.
ஒட்டாங்கிளிஞ்சில் - ஓர் மீன்.
ஒட்டாங்குச்சு* - கலவோடு.
ஒட்டாம்பாரை* - ஓர் மீன்.
ஒட்டுத்துத்தி - ஓர் பூடு.
ஒட்டை* - சில்லி.
ஒணம் - திருவோணம், யாறு.
ஒஞன்* - ஒந்தி. (சேது.)
ஒதக்கால் - பெருங்கால்.
ஒதம் - ஈரம், [கடல், கடற்றிரை, வெள்ளம்].
ஒதல் - சொல்லல், படித்தல், வாசித்தல்.
ஒதனம் - உண்டி, சோறு.
ஒதன்மை - ஒதற்றன்மை, பாடல்.
ஒதி - வினையெச்சம், அறிவு, இடங்கழிமை, ஒந்தி, கல்வி, ஞானம், பூனை, பெண்மயிர், மலை.
ஒதிமமுயர்த்தோன் - பிரமன்.
ஒதிமம் - அன்னம், கவரிமா, மலை.
ஒது - பூஞை. (சப்த).
ஒதுதல்-சொல்லுதல், படித்தல், போதித்தல்.
ஒதுவான் - ஆசான், திருப்பாட்டுப்பாடுவோன்.
ஒதை - ஒலி, பேரொலி, மதில், மதிலுண்மேடை, காற்று.
ஒத்தி - ஒந்தி.
ஒத்து - ஒரினப்பொருளை யொருவழி வைத்திருக்குமியல், வேதம், ஒதப்படுவது.
ஒத்துரைப்போர் - பொருந்தச்சொல்லுவோர், வேதமோதுவோர்.
ஒநாய்-கோநாய்(பழ.292,உரை.)
ஒந்தி - ஒஞன்.
ஒப்பலியாள் - கணவனின் தமையன் மனைவி.

ஓமகுண்டம்* - வேள்விக் குண்டம்.
ஓமப்பொடி - திருநீறு.
ஓமம்-ஓர் பூடு, யாகம், அப்பிரகம்.
ஓமல்* - ஊர்ப்பேச்சு.
ஓமான் - ஒந்தி.
ஓமை - ஓர் மரம்.
ஓம் - பிரணவம்.
ஓம்படை - காவல், கையடை, பரிகாரம்.
ஓம்பல் - பாதுகாத்தல்.
ஓயல் - ஓய்தல்.
ஓய்தல் - ஒழிதல், தளர்தல், முடிதல்.
ஓய்ப்பிடியாள் - ஓரகத்தி.
ஓய்வு - சாதல், தளர்வு, முடிதல்.
ஓய்வுகரை - அளவுமுடிவு.
ஓரகத்தி* - கணவனின் சகோதரன்மனைவி.
ஓரக்கண்* - சாய்வான பார்வை.
ஓரபட்சம்* - ஓரவாரம்.
ஓரம் - விளிம்பு, [பக்கம், பட்சபாதம், பெண்குறி].
ஓரம்பேசல் - ஒருபக்கஞ்சாயப் பேசல்.
ஓராங்கு - ஒருதன்மை. (ஞானு.)
ஓராட்டு - தாலாட்டு.
ஓரி - ஆணரி, ஆண்மயிர், ஆண்முசு, கிழநரி, மயிர், விலங்கின் படுக்கை.
ஓரிசு - சமாதானம், தீர்மானம்.
ஓரும் - அசைச்சொல் (உ - ம்.) செயற்பாலதோரு மறனே, பெயரெச்சம்.
ஓரை - இராசிப்பொது, சமயம், தோழி, மகளிர்கூட்டம், மாதர் விளையாடுங் கலன்கள், மாதர் விளையாடுங்களம், விளையாட்டு.
ஓர்குடிமணாளன் - சகலன்.
ஓர்க்கோலை - ஓர் வாசனைப்பண்டம்.
ஓர்தல் - ஆராய்தல், தெளிதல்.
ஓர்ப்பு - கருமமுடிக்குந் துணிவு, பொறுமை.
ஓலக்கமண்டபம்-சங்கமண்டபம்.
ஓலமிடுதல் - அபயமிடுதல், அழுதல்.
ஓலம் - அபயமிட்டழைத்தல், கடல், பாம்பு.
ஓலாட்டு - தாலாட்டு.
ஓலை-ஒலி, தாழையோலை, தென்னோலை, பனையோலை, [திருமுகம், ஒலி].
ஓலைக்கணக்கர்-வித்தியார்த்திகள்
ஓலைச்சுருள் - செந்திரிக்கம்.
ஓலைதீட்டும்படை - எழுத்தாணி.
ஓலைப்பூ - தாழைப்பூ.
ஓலைவாங்குதல்* - சாதல்.
ஓலைவாளை* - ஓர் மீன்.
ஓல் - ஒலித்தல், ஓலம்.
ஓவர்-ஓவியர், பாடற்கீழ்மக்கள்.
ஓவியம் - சித்திரம்.
ஓவியர் - சித்திரகாரர்.
ஓளி - ஒழுங்கு, யானைக்கூடம்.
ஓனம் - எழுத்தின்சாரியை.
ஓநாய்* - கோநாய்.

## ஔ

ஔ-ஓரெழுத்து, கடித்தல், பூமி.
ஔசீரம் - ஆசனம், கவரிமாமயிர், படுக்கை.
ஔஷதம், ஔடதம் - மருந்து.

ஔடும்பரம் - தாமிரம்.
ஔதாரியம் - உதாரம், மிகு கொடை.
ஔதாரியன் - வரையாதுகொடுப்போன்.
ஔத்தாலகம், ஔத்தாலிகம் - புற்றுத்தேன்.
ஔபத்தியம் - புணர்ச்சி.
ஔபாசனம், ஔபாசனை - வைதீகச்சடங்கு நடத்தல்.
ஔரசன் - குலமொத்த கன்னியைத் தீவேட்டுப்பெற்ற புத்திரன்.
ஔரிதம் - தருமநூல் பதினெட்டினொன்று.
ஔவியம் - அழுக்காறு, பொறாமை, தேவர்களுக்குச்செய்யும் சடங்கு.
ஔவுதல் - அழுந்தியெடுத்தல்.
ஔவை - தவப்பெண், தாய், திருவள்ளுவர் சகோதரி.

## க

க - ஓரெழுத்து, ஒன்றென்னுமெண்ணின்குறி, ஆன்மா, உடல், காற்று, பிரமன்.
கஃசு - காற்பலம்.
ககபதி, ககேசன், ககேந்திரன் - கருடன்.
ககம் - அம்பு, பறவை, சரகாண்டபாஷாணம், மணத்தக்காளி.
ககனம் - ஆகாயம், காடு, படை, புட்பொது, ஓர் கிழங்கு.
ககுஸ்தன், ககுத்தன் - இக்ஷ்வாகு கிளையில் தசரதனது புதல்வன்.
ககுபம் - திசை, மருதமரம். (சப்.)
ககோளம் - வானவட்டம்.
ககோளவித்தை - வானசாத்திரம்.
கக்கசம், கக்கிசம், கக்கிஷம் - பிரயாசம்.
கக்கம் - அக்குள், கைக்குழியின் கீழ், எண்ணெய்க்கடுகு.
கக்கரி - ஓர்காய், ஓர்கொடி.
கக்கலாத்து - கரப்பான்பூச்சி.
கக்கல் - இருமல், சத்திபண்ணல்.
கக்குரீதி - கக்கசம்.
கக்குவான்* - கக்கிருமல்.
கங்கணங்கட்டல் * - ஒருகாரியத்திலாயத்தப்படல்.
கங்கணம் - மஞ்சட்காப்பு, கைவளை, கடகம், [ஓர் நீர்வாழும் பறவை].
கங்கபத்திரம் - அம்பு, உமி, பருந்திறகு.
கங்கம் - கழுகு, சீப்பு, தீப்பொறி, மாணம், வரம்பு.
கங்கன் - ஓரரசன், பிறவிச்சீர் பந்தபாஷாணம்.
கங்காசுதன் - கந்தன், பீஷ்மன்.
கங்காதரன் - சிவன்.
கங்காளம் - முழுவெலும்பு, உண்கலம்.
கங்காளன் - சிவன், துருசு.
கங்காளி - காளி.
கங்கு - பனைமட்டையின் கவை, எல்லை, வரம்பு, [கருந்தினை,

தீப்பற்றிய துரும்பு, கழுகு, பருந்து, வரம்பின்பக்கம்].
கங்குகரை* - எண்ணிக்கை.
கங்குல் - இரா, இருள், பரணி நாள்.
கங்கை - சத்தநதிகளினொன்று, சிவன்மனைவி, [நவச்சாரம்].
கங்கைகோத்திரம் - வேளாளர் குலம்.
கங்கைக்குணன் - நவச்சாரம்.
கங்கைபெற்றோன், கங்கைமைந்தன் - வீட்டுமாசாரி, முருகன்.
கங்கையோன் - துருசு.
கங்கைவேணியன் - சிவன்.
கசகசா* - ஓர் சரக்கு.
கசக்குதல் - குழையச்செய்தல், [வருத்துதல்].
கசங்கு* - ஓலைநீங்கிய வீந்தின் மட்டை.
கசங்குதல் - குழைதல், மனநோவல், வேலையினுலிளைத்தல்.
கசடர் - கீழ்மக்கள்.
கசடு - ஐயம், குற்றம், தழும்பு, மாசு.
கசட்டைத்தயிர் - ஆடைநீக்கின தயிர்.
கசட்டைப்பிஞ்சு - கசக்குமிளம் பிஞ்சு.
கசபுடம் - இரண்டுமுழ கன அளவுக்கு ஆயிரம் எருவைத்தெரிக்கும் புடம்.
கசப்பு - கைப்பு, [வெறுப்பு].
கசம் - இரண்டுமுழ அளவு, [ஓர் நோய், தாமரை, யானை.]
கசரிபு - சிங்கம்.
கசர்* - தேங்காயின் கண்ணுள்ள கசற்பம் - மஞ்சள். [பகுதி.
கசாகூலம், கசாகூளம் - குப்பை, பலசாதிக்கலப்பு.
கசாயம் - கஷாயம்.
கசிதம்-துடிப்பு, பதித்தல், பூச்சு.
கசிதல் - ஊறுதல், [அழுதல், இரங்கல், உருகல்].
கசிவு - கசிதல், [வியர்வை, அழுகை, ஈரம், வருத்தம்].
கசுகுசெனல்* - மெதுவாகப்பேசல்.
கசுமாலம்* - அழுக்கு, கெட்டது.
கசேந்திரன் - எல்லாம்வல்ல இறைவனை ஆதிமூலமென்றழைத்து நற்கதியடைந்த ஒரு யானை.
கசை - சவுக்கு, பின்னற்கயிறு, [கவசம், குதிரைச்சம்மட்டி.]
கசைமுறுக்கி - தட்டான்குறடு.
கச்சகம் - குரங்கு.
கச்சபம் - ஆமை, மற்போர்நிலையினொன்று.
கச்சபாலயம் - காஞ்சியிலுள்ள ஒரு புண்ணியஸ்தலம்.
கச்சம் - முன்றானை, [யானைக் கழுத்திடு கயிறு, வார், அளவு, கடன், குதிரையங்கவடி, துணிவு, மரக்கால்].
கச்சல் - மிகவுமிளம்பிஞ்சு, வாழைக்கச்சல், [சிறுமை, ஒல்லியாள்].
கச்சளம்-இருள், கண்ணிலிடுமை.
கச்சன் - ஆமை.
கச்சாச்சேர்* - எட்டுப்பலம் கொண்ட நிறை.

கச்சி - காஞ்சிபுரம், [சீந்தில், சின்னிப்பூடு].
கச்சு - முலேக்கட்டு.
கச்சுரு - நெருப்பு.
கச்சூரம் - பேரீந்து, கழற்சிக் கொடி.
கச்சை - வார், [கயிறு, கவசம், கௌபீனம், தழும்பு, யானே கட்டுங்கயிறு].
கச்சைக்கொடியோன் - கன்னன்.
கச்சோணி - வாசனேப்பண்டம்.
கச்சோதம் - மின்மினி.
கச்சோரம், கச்சோலம் - கிச்சிலிக்கிழங்கு.
கஞறம் - கள்.
கஞறல் - எழுச்சி, கடுப்பு, சினக்குறிப்பு, நெருங்கல், பொலிவு, மிகுதி.
கஞன்றல் - எழுச்சி.
கஞ்சகம் - கச்சுவிடுந்தலேப்பு, முன்ருனே, கருவேம்பு.
கஞ்சகாரர் - வெண்கலக் கன்னுர் (சிலப்ப.)
கஞ்சக்கருவி - தாளமுதலிய வெண்கல வாத்தியம்.
கஞ்சம் - அப்பவர்க்கம், ஓரூர், கஞ்சா, கைத்தாளம், தாமரை, நீர், வஞ்சகம், வெண்கலம், கற்கடகபாஷாணம்.
கஞ்சரீடம் - வலியான்குருவி.
கஞ்சனம்-கண்ணுடி, கரிக்குருவி, கைத்தாளம், வலியான்.
கஞ்சனே - கண்ணுடி, கலசப்பானே.
கஞ்சன் - கிருஷ்ணமூர்த்தியின் மாமன், பிரமா.
கஞ்சா* - கோரக்கர்மூலி.
கஞ்சி - அன்னப்பால், [காஞ்சிபுரம்.]
கஞ்சிகை - இரத்தினச்சிவிகை, சீலே, திரைச்சீலே.
கஞ்சுகம் - சட்டை, பாம்பின் ரேல், முருக்கு, சீலே
கஞ்சுகன் - காவற்காரன், வயிரவன்.
கஞ்சுகி - காவலன், சட்டை, திரைச்சீலே, பாம்பு.
கஞ்சுளி - சட்டை.
கடகம்-கைவளே,கங்கணம், [கூத்தின் விகற்பம், கெண்டிகை, கேடகம், மதில், மலேப்பக்கம், யானேக்கூட்டம், வட்டம்.]
கடத்தல் - செலுத்தல், தாண்டல், நடத்தல்.
கடப்பாடு - ஈகை, முறைமை, கடமை, தகுதி.
கடப்பாரை* - ஓர் கருவி.
கடமான் - காட்டுப்பசு.
கடமை - முறை, காட்டுப்பசு.
கடம் - அருநெறி, உடல், கயிறு, காடு, குடம், தோட்டம், நீதி, மலேப்பக்கம், யானேக் கதுப்பு, யானேக்கூட்டம், யானேமதம், வான், குடமுழவு, ஒரு உபநிடதம், பாலேநிலத்துவழி, (சிலப். 11: 90).
கடம்பல் - குமிழமரம்.
கடம்பவனம் - மதுரை.
கடம்பன் - குமரன்.
கடம்பு - கன்றையீன்றதும் சுரக்கும்பால், [கடம்பமரம்].

கடம்பை - கடம்பூர், ஓர்காட்டு மிருகம்.
கடயம் - அத்தகடகம், [இந்திராணிகூத்து].
கடலகம் - ஊர்க்குருவி, பூமி.
கடலடக்கி - பேய்முசுட்டை.
கடலாடி - நாயுருவி.
கடலை* - ஓர் பயறு.
கடல்* - சமுத்திரம்.
கடல்கலக்கி - பேய்முசுட்டை.
கடல்வண்ணன் - திருமால்.
கடவல் - செலுத்தல், பிரயோகித்தல்.
கடவு - தணக்குமரம், வழி.
கடவுளர் - தேவர்.
கடவுள் - தெய்வம், [நன்மை, குரு, முனிவன்].
கடவை - ஏணி, கடவுமரம், கடத்தல், குற்றம்.
கடறு - அருநெறி, காடு, வாளுறை.
கடற்குருவி - கல்லுப்பு.
கடற்சேர்ப்பன் - நெய்தற்றலைவன்.
கடற்பச்சை - சமுத்திரப்பச்சை.
கடற்பட்சி - கிளிஞ்சில்.
கடற்பாலை - சமுத்திரசோகி.
கடற்பிணா - நெய்தனிலப்பெண்.
கடற்பிறந்தாள் - இலக்குமி.
கடன் - இருணம், கடமை, [குடியிறை, மரக்கால், முறைமை].
கடா - ஆடு எருமை இவற்றின் ஆண், [கடாவென்னேவல், வினா].
கடாசுதல்* - எறிதல்.
கடாட்சம்-[கிருபை, கடைக்கண்]
கடாட்சித்தல் - கிருபைசெய்தல்.
கடாம் - யானைமதம்.
கஷாயம்* - மருத்தூறநீர்.
கடாரம் - கொப்பரி, [ஓரூர், கருமைகலந்த பொன்மை.]
கடாரி* - ஈனுவிளமாடு.
கடாவல் - ஆணிமுதலிய கடாவல், செலுத்தல், வினவல்.
கடி - கடியென்னேவல், [அச்சம், இன்பம், ஒளி, கரிப்பு, களிப்பு, காலம், காவல், கூர்மை, கைப்பற்றல், சிறப்பு, சீக்கிரம், நந்தனவனம், நிதம்பம், பெண்பிசாசம், புதுமணம், புதுமை, பொழுது, வாசனை, விளக்கம்].
கடிகாசூத்திரம் - நாழிகைவட்டம், அரைஞாண்.
கடிகாரம்* - நாழிகைவட்டம்.
கடிகை - சமயம், கதவிடுதாழ், துண்டம், நாழிகை.
கடிகைமாக்கள் - மங்கலபாடகர்.
கடிசை - பாய்மரந்தாங்கி.
கடிஸ்நாநம் - இடைவரைக்குஞ் செய்யும் ஸ்நாநம்.
கடிஞை - இரப்போர்கலம்.
கடிதடம் - நிதம்பம்.
கடிதம் - காகிதம், [இணைவு, அடுக்கு].
கடிதல் - அறுத்தல், கோபம், சினக்குறிப்பு, வெட்டல்.
கடிந்தோர் - முனிவர்.
கடிபிடி* - சண்டை.
கடிப்பகை - வெண் சிறுகடுகு, கடுகு, வேம்பு.

கடிப்பம் - ஆபாணப்பெட்டி, காதணி, கெண்டிகை.
கடிப்பான்* - ஊறுகாய், கறி.
கடிப்பிணை - காதணி.
கடிப்பிரதேசம் - பின்பக்கம்.
கடிப்பை - சிறுகடுகு.
கடியாரம்* - நாழிகைவட்டம்.
கடிரோமம் - கோரைக்கிழங்கு.
கடிவாய்* - பற்பட்டவிடம்.
கடிவாளம் - குதிரையின் வாய்வடம்.
கடிவை - யானை.
கடினம் - வன்மை, [கடுமை, வருத்தம்].
கடீரம் - அல்குல்.
கடு-கடுகுரோகிணி, [கசப்பு, கடுக்காய்மரம், கார்த்தல், நஞ்சு, முள்].
கடுக - விரைய.
கடுகம் - கார்ப்பு, கடுகுரோகிணி.
கடுகல் - விரைதல்.
கடுகு - கடுகென்னேவல், ஐயவி.
கடுகுரோகணி, கடுகுரோகிணி - ஓர்மருந்து.
கடுக்கன்* - ஓர்காதணி.
கடுக்காய் - திரிபலையிலொன்று.
கடுக்கை - கொன்றைமரம்.
கடுக்கைக்கண்ணியன் - சிவன்.
கடுங்கண் - கொடுமை.
கடுங்காரநீர் - முட்டை.
கடுஞ்சுண்ணத்தி - சீனக்காரம்.
கடுதல் - திருடல், பறித்தல்.
கடுதாசி* - காகிதம்.
கடுத்தம் - அழுத்தம், அடர்த்தி, சோனகரின் சீதனவுடம்படிக்கை.
கடுத்தலை - வாள்.
கடுத்தல் - உவமையாதல், ஐயம், கோபம், சினம், வேகம்.
கடுபத்திரம் - சுக்கு.
கடுப்ப - உவமைச்சொல்.
கடுப்படக்கி - எருமுட்டைப்பீநாறி.
கடுப்பு-எரிவு, கொதிப்பு, [சினம், கோபம்].
கடுப்பை - வெண்கடுகு.
கடுமரம் - எட்டிமரம், கடுக்காய்மரம்.
கடுமுள் - ஆயுதப்பொது, கண்டங்கத்தரி.
கடுமை - கொடுமை, கோபம், சீக்கிரம், மிகுதி.
கடும்பகல் - மத்தியானம்.
கடும்பு - பாற்கடும்பு, [உறவு, சும்மாடு].
கடுவன்- குரங்கு, பூனை, முசுஇவற்றிறாண், விலங்கேற்றின்பொது, மாவிலங்கு.
கடுவாயன் - பாம்பு.
கடூரம்* - கொடுமை.
கடை - அங்காடி, கடையென்னேவல், [ஏழனுருபு (உ-ம்.) அவன் கடைச் சென்றான், கீழ், புறவாயில், பூணின் கடைப்புணர்வு, முடிவு, வழி, வாயில்.]
கடைகேடு - மிகவிழிவு.
கடைக்காப்பு - பதிகத்தின் கடைசிச்செய்யுள்.
கடைக்குளம் - உத்திராடநாள்.
கடைக்கோடி - அறக்கடைசி.
கடைசி* - முடிவு.

கடைச்சல்* - கடைதல்.
கடைச்சன் - கடைப்பிள்ளை, இளையமகன்.
கடைச்சி - மருதநிலத்துப்பெண்.
கடைஞர் - மருதநிலமாக்கள்.
கடைதடம் - வாயில்.
கடைதல் - குடைதல், கலக்குதல்.
கடைத்தரம்* - கீழ்த்தரம்.
கடைத்தலை - முதல்வாயில்.
கடைத்தேறுதல்* - ஈடேறுதல்.
கடைநாள் - இரேவதி.
கடைப்பிடி - கருமமுடிக்குந் துணிவு, அஃதுஆறேஉக்குணம் நான்கினொன்று, தேற்றம், மறவாமை.
கடைமீன் - இரேவதிநாள்.
கடைமுறை - கடைசிமுறை.
கடையம் - கடகம், [இந்திராணி கூத்து.]
கடையனல் - ஊழித்தீ.
கடையாணி* - பூட்டாணி.
கடையாந்தரம் - முடிவு.
கடையெழுஞ்சனி - உத்திரநாள்.
கடைவள்ளல் - பல்காலுங்கேட்க மறுத்துத் தருபவன்.
கட்கம் - வாள்.
கட்சி - பக்கம், [வழி, காடு, பறவைக்கூடு, மனிதர்படுக்கை].
கட்செவி - பாம்பு.
கட்டங்கம் - தண்டு, மாத்திரைக்கோல், மழு.
கட்டபாரை* - கடப்பாரை.
கட்டம் - துன்பம், வருத்தம், மலம், காடு, தாடி.
கட்டல் - கட்டுதல், உடுத்தல், [தடை, திருடல், தோண்டல், மூடல்].
கட்டழகு - பேரழகு.
கட்டளை - உத்தரவு, [நிறை, நிறையறிகருவி, துலாராசி, உரைகல், உவமை, உருவங் கள்வார்க்குங்கருவி, செங்கல் லச்சு.]
கட்டளைக்கல் - உரைகல், நிறைகல்.
கட்டளைச்சட்டம் - நியாயப்பிரமாணம்.
கட்டாணி-பலசாலி, [உலோபி].
கட்டாந்தரை* - வெறுந்தரை.
கட்டாயம் - கட்டுப்பாடு, பலாத்காரம்.
கட்டாரம், கட்டாரி - குற்றுவாள்.
கஷ்டார்ஜ்ஜிதம், கஷ்டார்ச்சிதம்* - வருந்தித்தேடின பொருள்.
கட்டி - கட்டி, திரண்டமாத்திரளை, கருப்புக்கட்டி, அகமகிழ்ச்சி.
கட்டியக்காரன்* - இராஜனின் கீர்த்தியைப்புகழ்வோன்.
கட்டில்* - மஞ்சம்.
கட்டிளமை - மிக்கிளமை.
கட்டு - கட்டென்னேவல், தளைதல், [உறுதி, காவல், மலைப்பக்கம், மிகுதி, மூட்டை.]
கட்டுக்காரன்-குறிசொல்வோன்.
கட்டுக்கிடை - நெடுநாளாய்க் கிடக்கிற சாமான்.
கட்டுக்கொடி - ஓர் பூண்டு.

கட்டுத்தறி - யானை முதலிய கட்டுந்தூண்.
கட்டுபடி* - வாங்கின விலைக்குச் சரியாதல்.
கட்டுமரம்* - மிதவை.
கட்டுரை - உறுதிச்சொல், பழமொழி, பொய்.
கட்டுரைத்தல் - உறுதிப்படச் சொல்லுதல்.
கட்டுவாங்கம் - மழு, தண்டு.
கட்டுவிரியன்* - ஓர் பாம்பு.
கட்டுவை - கட்டில் (சிவத).
கட்டேர் - பாசறை (வெண்).
கட்டெறும்பு* - ஓரெறும்பு.
கட்டை - மரக்கட்டை, விறகு, [உடல், பிரேதம், நீளங்குறைந்தது].
கட்டைப்புத்தி* - மந்தமதி.
கட்டையன்* - குள்ளன்.
கட்டைவிரல்* - காலின் பெருவிரல்.
கட்டோசை - பேரொலி.
கட்டோடே* - முற்றும்.
கணகணத்தல், கணகணப்பு* - உரத்த சூடு.
கணகம் - படையிலோர் தொகை.
கணக்கன் - கணக்குப் பார்ப்பவன், ஓர் சாதியான், [புதன், சண்பகமரம்].
கணக்காயர் - அறிஞர், ஒத்துரைப்போர், பொருந்தச் சொல்வோர்.
கணக்கு - எண், எழுத்து, முடிவு.
கணநாதர், கணநாயகர் - கணுதிபர்.
கணபதி - விநாயகன்.
கணம் - ஓர் நோய், நான்கு நிமிஷம் அல்லது முப்பது கலை கொண்ட கால அளவு, கூட்டம், சிறுமை, திப்பிலி, திரட்சி, பிசாசம், மாத்திரை வட்டம், விலங்கின் கூட்டம், பதினெட்டென்னுமோரிலக்கம்.
கணவம் - அரசமரம்.
கணவன் - கொழுநன், தலைவன்.
கணவாய்* - மலைகளுக் கிடைவழி.
கணவிரி - அலரி (மணிமே. 47).
கணவீரம் - அலரி. (திருமுரு.)
கணுதி - வெண்சீரகச் செடி.
கணுதிபன் - விநாயகன், சிவன், கணநாயகன்.
கணி - கணியென்னேவல், ஓர் சாதி, மருதநிலம், கணிப்போன், வேங்கைமரம், மூங்கில்.
கணிகம் - நூறுகோடி.
கணிகை - தாசி, முல்லை.
கணிசம் - மதிப்பு, அளவு, அதிகம்.
கணிச்சி - உளி, தறிகை, நமனுயுதம், மழு, வெற்றிலைமூக்கரிகத்தி, முட்கோல்.
கணிதசாஸ்திரம் - கணக்கு நூல்.
கணிதம் - எண், எண்ணிக்கை, சோதிட நூல்.
கணிதர் - சோதிடர், கணக்கறிந்தோர்.
கணித்தல் - எண்ணல், மதித்தல்.
கணீர்கணீரெனல்* - ஈரடுக்கொலிக்குறிப்பு.
கணு - மரத்தின்முளி, [மூட்டு].

கணுக்கால்*, கணைக்கால் - பரடு (முழந்தாளின் கீழ்க்கால்).
கணை - அம்பு, ஒலி, திரட்சி, நிறைவு, பூரநாள், வளைதடி.
கணையம் - காவற்காடு, அம்பு, பொன், போர், யானைக்கம்பம், வளைதடி.
கணையாழி - மோதிரம்.
கண் - நேத்திரம், அஃது ஐம்பொறியினென்று, துவாரம், [கண்ணோட்டம், இடம், ஏழனுருபு(உ-ம்.) மணிக்கணுளி, கணு, பெருமை, மயிற்றோகைக்கண்]. [ரணை செய்தல்.
கண்காணித்தல் - மேல் விசா
கண்கூடு - கண்குவளை, பிரத்தியட்சம்.
கண்கொழுப்பு* - அகங்காரம்.
கண்சாடை* - அறிந்துமறியார் போன்றிருத்தல்.
கண்டகபலம் - பலாப்பழம்.
கண்டகம் - முள், வாள், காடு, உடைவாள், நீர்முள்ளி, ஊசிமுனை.
கண்டகர் - அசுரர், கீழ்மக்கள்.
கண்டகி - காசிக்கருகேயுள்ள ஓர் நதி, முள்ளெலும்பு, இலந்தை (சிவத).
கண்டகிக்கல் - சாளக்கிராமம்.
கண்டகோடரி - ஓர் வகைக் கோடாலி.
கண்டக்காறை - பெண்கள் கழுத்திற்கணியுமோர் பணி.
கண்டங்கத்தரி* - சிறுபஞ்சமூலத்தொன்று, தசமூலத்துமொன்று.
கண்டசரம்*-கழுத்திற்கிடுமொரு பூண்.
கண்டதுண்டம் * - பலதுண்டம்.
கண்டபேரண்டபட்சி - இருதலைப்பட்சி.
கண்டப்புற்று - ஓர் நோய்.
கண்டமாலை* - ஓர் நோய்.
கண்டம்-கழுத்து, தத்து [எல்லை, எழுத்தாணி,கண்டசருக்கரை, கவசம், கைப்பிடிவாள், சிறுவாள், திரைச்சீலை, துண்டம், நாடு, மணி, மணியுளோசை, யானைக்கச்சை, வெல்லம், சாதிலிங்கம்.]
கண்டரை - இருதயத்தின் கீழறைகளிரண்டில் வலப்புறத்திலிருந்து செல்லும் பெருநாடி என்கிற பெரியகுழல்.
கண்டர் - துருசு.
கண்டல் - தாழை, நீர்முள்ளி.
கண்டறை - மலைக்குகை.
கண்டன் - சோழன், நாயகன், வீரன்.
கண்டாங்கி - ஓர் புடவை.
கண்டாமணி - வீரகழல்.
கண்டாரவம் - ஓரிசை, மணியிணோசை.
கண்டாலம் - ஒட்டகம், யுத்தம்.
கண்டாளம்- எருதின்மேற்போடு மூட்டை.
கண்டி - கண்டியென்னேவல், [இலங்கையிலோரூர், கழுத்தணியிலொன்று].
கண்டிகை - தோளணி, கடகம், பணிச்செப்பு, பதக்கம், மாதரணிவடம், உருத்திராட்சம்.

கண்டிதம் - கண்டிப்பு, உறுதி.
கண்டித்தல் - கடிந்துகொள்ளுதல், [தறித்தல், வெட்டல்].
கண்டிப்பு - கண்டித்தல், நிச்சயம்.
கண்டியர் - பாணர்.
கண்டீரவம் - சதுரக்கள்ளி, சிங்கம், புலி.
கண்டு - கற்கண்டு, கழலைக்கட்டி, கண்டங்கத்தரி.
கண்டுபாரங்கி - சிறுகாஞ்சொறி.
கண்டுமூலம் - திப்பிலி, சிறுதேக்கு.
கண்டேதி - காஞ்சொறி, தினவு.
கண்டை - நூற்கண்டை, [சீலை, பெருமணி, யானைமணி.]
கண்ணகி* - கோவலனின் மறக்கற்புடைய மனைவி.
கண்ணஞ்சல் - அஞ்சுதல்.
கண்ணடி - கண்ணாடி. (திருவி).
கண்ணடைந்தபால் - நெடுநேரம் வைத்திருந்து கெட்டுப்போன பால்.
கண்ணப்பன் - காளத்திப்பதியில் வாழ்ந்து முத்திபெற்ற ஒரு வேடுவபக்தன்.
கண்ணராவி* - காண்பவனிரங்கத்தக்கது.
கண்ணல் - கருதல், குறித்தல்.
கண்ணழற்சி - கண்ணெரிச்சல்.
கண்ணழித்தல் - பதப்பொருளுரைத்தல்.
கண்ணறை - அகலம், துவாரம்.
கண்ணன்* - ஸ்ரீகிருஷ்ணன்.
கண்ணாடி* - உருவங்காட்டி.
கண்ணாட்டி* - அன்பானவள்.
கண்ணாமண்டை - கண்மண்டை.
கண்ணாம்பூச்சி* - ஓர்விளையாட்டு, கண்மயக்கம்.
கண்ணாளர் - கம்மாளர், நாயகர்.
கண்ணாளன்* - கணவன்.
கண்ணாள் - சரசுவதி.
கண்ணி - கயிறு, தாம்பு, பாவினடி, புட்படுக்குங் கயிறு, பூ, பூங்கொத்து, பூமாலை, அரும்பு.
கண்ணிகை - தாமரைக் கொட்டை, பூவரும்பு.
கண்ணுகம் - குதிரை. [அக.]
கண்ணுக்கரசன் - தூரிசு. (மூலி.
கண்ணுதல் - கருதல், சிவன் (கண் + நுதல் = நெற்றியில் கண்ணையுடையவன்).
கண்ணுள் - கண்ணிற்குள், [கூத்து].
கண்ணுறல் - காணல், இடத்தைச் சேரல்.
கண்ணுறுதல் - பார்த்தல்.
கண்ணேணி - மூங்கிலேணி.
கண்ணேறு, கண்ணூறு - கண் பார்வையால் வருந்தோஷம்.
கண்ணோட்டம்* - கடைக்கண் பார்வை, கடாட்சம்.
கண்திஷ்டி* - கண்ணேறு.
கண்படல் - திஷ்டிபடுதல், [நித்திரைசெய்தல்].
கண்போடுதல் - மனம்வைத்தல்.
கண்மயக்கு - கண்மாயம்.
கண்மூடி-அறிவீனன், குருடன்.
கண்மை - கண்ணுக் கிடுமை, [கண்ணோட்டம்].
கண்வளர்தல் - நித்திரைசெய்தல்.

கண்வினைஞர் - கம்மாளர்.
கண்வைத்தல் - கிருபை வைத்தல், விரும்பிப் பார்த்தல்.
கதண்டு - கருவண்டு.
கதம் - கோபம், போதல், பாம்பு.
கதம்பம் - வாசனைப் பொடி, [ஆன்கூட்டம்], கடப்பமரம், வெண் கடம்பு, காணுங்கோழிக்கூட்டம்].
கதலி - காற்றாடி, தேற்றாமரம், விருதுக்கொடி, வாழை.
கதலிகம் - தேற்றாமரம்.
கதலிகை - துகிற்கொடி.
கதலிச்சி - கருப்பூரம்.
கதவம் - கதவு, காவல்.
கதவு - கபாடம், [காவல்].
கதழ்வு - உவமைச்சொல், கடுப்பு, சிறப்பு, பெருமை, மிகுதி.
கதறல் - அழுதல், கூப்பிடல், வியங்கோண் முற்று.
கதனம் - கடுப்பு, கலக்கம், போர்.
கதாயுதன் - வீமன், வயிரவன்.
கதி - அடைக்கலம், ஆதரவு, திராணி, மோட்சம், [குதிரை நடை, நடை, நாற்கதி].
கதித்தல் - எழுச்சி, ஒலித்தல்.
கதிரம் - அம்பு, ஓர் பிசின்மரம், கருங்காலி.
கதிர் - பயிர்க்கதிர், [சூரிய கிரணம், சூரியன், தேருட்பரப்பின்மரம்.]
கதிர்நாள் - உத்திரநாள்.
கதிர்ப்பகை - இராகு, கேது, அல்லி, குவளை.
கதிர்மகன் - கன்னன், சனி, சுக்கிரீவன்.
கதிர்வாங்குதல், கதிர்விடுதல் - கதிரீனுதல், [ஒளி செய்தல்].
கது - வடுப்படல், வெடிப்பு.
கதுக்குதல் - அதக்குதல்.
கதுப்பு - கவுள், பசுக்கூட்டம், பெண்மயிர், மைந்தர்மயிர்.
கதுமெனல் - சீக்கிரக் குறிப்பு.
கதுவாய் - ஓர் மோனைத் தொடை, வடுப்படல்.
கதுவுதல் - கலங்குதல், நீங்காது பற்றல், பற்றுதல்.
கதை - சரிதம், தண்டாயுதம், [காரணச்சொல், சொல், தடி].
கதைகாரன்* - வீண்பேச்சுக்காரன்.
கதைத்தல் - சொல்லுதல்.
கத்தக்காம்பு* - பாக்குவெற்றிலையோடுபோடும் ஓர்சரக்கு.
கத்தரி* - கத்தரிக்கோல், கத்தரியென்னேவல், வேனிற்காலத்துக் கடுங்கோடையாகிய சித்திரைமாதம் இருபத்து மூன்றாம் தேதிமுதல் வைகாசி மாதம் ஏழாந்தேதி வரையிலுள்ள அக்கினி நட்சத்திரம், [ஓர் பாம்பு, வழுதுணை].
கத்தரிகை - கத்தரிக்குங்கருவி.
கத்தரிக்கை - கத்தரித்தல்.
கத்தரிக்கோல்* - கத்தரிகை.
கத்தரித்தல் - அறுத்தல்.
கத்தலை* - கத்தளை (ஓர்மீன்).
கத்தல் - கூப்பிடல், பிதற்றல், முழங்கல்.
கத்தன் - கடவுள், முதல்வன், ஆக்குவோன், முதலாளி.
கத்தா - கடவுள், செய்பவன்.

கஸ்தி* - துன்பம்.
கத்தி - வாள், வினையெச்சம்.
கத்திகை - கருக்குவாளிமரம், சிறுகொடி, துகிற்கொடி, பூமாலே.
கத்தியம் - இலக்கணமின்றியிலக்கணப்பாட்டுப்போற் சொல்வது, சீலை, நல்லாடை.
கத்தியோதம் - மின்மினிப்பூச்சி.
கத்திரி - ஓர்செடி, மயிரெறிகருவி, [ஓர் பாம்பு, கண்டங்கத்திரி.]
கத்துரு - ஆதிசேடன்றாய்.
கஸ்தூரி* - மான்மதம்.
கத்தூரிப்பிள்ளை, கத்தூரிப்பூனை-நாவி (ஓர் மிருகம்.)
கத்தூரியெலுமிச்சை - ஒரெலுமிச்சை.
கத்தை - கற்றை, [கழுதை.]
கநகாட்சி - பெண்ணுந்தை.
கநிட்டன் - இளையவன், தம்பி.
கந்தகம்*-கெந்தகம் (ஓர்மருந்து.)
கந்தசாரம் - பனிநீர். (இரகு).
கந்தபொடி* - வாசனைப்பொடி.
கந்தமூலம் - கிழங்கு.
கந்தம் - வாசனை, [இந்திரியம், கருணை, கழுத்தடி, கிழங்குப்பொது, பங்கு, பஞ்சகந்தம், தூண் (மணிமே. 58).]
கந்தரக்காட்டம் - வெள்ளைப்பாஷாணம்.
கந்தரசு - சாம்பிராணி.
கந்தரம் - கழுத்து, மலைக்குகை, மேகம்.
கந்தருப்பன் - காமன்.
கந்தருவம் - எண்வகை மணத்துளொன்று அஃது கன்னியுந் தலைமகனு மொருப்பட்டுக் கலத்தல், [இசை, இசைப்பாட்டு, குதிரை, தேகம்விட்ட ஆன்மா.]
கந்தருவர் - தேவசாதியிலோர் வகையார்.
கந்தர்ப்பன் - மன்மதன்.
கந்தல் - பீறல், [கெட்டது, கெடுதல்.]
கந்தவகம் - மூக்கு.
கந்தவகன், கந்தவாகன் - காற்று.
கந்தவாரம் - அரசன்றேவியிருக்கை.
கந்தழி - பரப்பிரமம். [கை.
கந்தளம் - கவசம். [(தொல்).
கந்தனை - சிற்றரத்தை.
கந்தன் - குமரன், [அருகன், சூதபாஷாணம்.]
கந்தாயம் - வருஷத்தின் மூன்றத்தொரு கூறு, விளைவுகாலம்.
கந்தி-மணவென்னேவல், கமுகு, தவப்பெண்.
கந்தித்தல் - மணத்தல்.
கந்திரி - நாகூரில் துலுக்கருக்கு விசேஷித்த பண்டிகை, வண்டி.
கந்து - கெடுவென்னேவல், கழுத்தடி, தூண், வண்டியுளிரும்பு, பற்றுக்கோடு, யாக்கையின்மூட்டு, யானையணைதறி, மாடு பிணைக்குங்கயிறு.
கந்துகம் - குதிரை, குறுநிலமன்னர்குதிரை, பந்து.
கந்துமாறுதல் - இணைத்ததை மாற்றிவிடல்.

கந்துளம் - பெருச்சாளி.
கந்துள் - கரி.
கந்தை - பீறற்சீலை, [சீலை, நல்லாடை].
கந்தோதம் - தாமரை.
கபடஸ்தன்* - கபடன்.
கபடநாடகசூத்திரன், கபட நாடகன் - வஞ்சனைத் தொழிலன், [திருமால்].
கபடம்* - வஞ்சகம்.
கபடு* - கபடம்.
கபநாசனி - தேற்றான்வித்து.
கபந்தம், கவந்தம் - உடற்குறை, நீர்.
கபம்* - கோழை.
கபர்த்தம் - சிவன்சடை.
கபர்த்தி - சிவன்.
கபாடபுரம் - இடைச்சங்க மிருந்தவூர்.
கபாடம் - கதவு, [காவல்].
கபாய் - நிலையங்கி.
கபாலசாந்தி - ஆவிரை.
கபாலதரன் - சிவன், வயிரவன்.
கபாலபாணி - சிவன்.
கபாலம் - தலைமண்டை, [சிவன் ஐயமேற்ற பாத்திரம்].
கபாலன் - சிவன், சீர்பந்தபாஷாணம்.
கபாலி-உமை, சிவன், வயிரவன்.
கபி - குரங்கு.
கபிஞ்சலம் - காடை, ஆந்தை.
கபித்தம் - விளாமரம், கொட்டிக்கிழங்கு.
கபிலம் - கருமைகலந்த பொன்மை, பதினெண் ணுபபுராணத்தொன்று, கரிக்குருவி.
கபிலன் - திருவள்ளுவரின்தம்பி.
கபிலை - கருமைகலந்த பொன்மை, தென்கீழ்த்திசையானைக் குப் பெண்யானை, தேவப்பசு, பசு.
கபோதம் - கரும்புறா, புறா.
கபோதி* - குருடன்.
கபோலம் - கதுப்பு.
கப்பச்சு - கம்மாளர்கருவியி னொன்று.
கப்படம் - சீலை.
கப்பணம் - கழுத்திடு மிரும்புத்தகடு, [இரும்பி னியற்றிய நெருஞ்சின்முள், கைவேல்.]
கப்பம்* - அரசிறை.
கப்பரை* - இரப்போர்கலன்.
கப்பல்* - மரக்கலம்.
கப்பற்காரன் - கப்பற்றலைவன்.
கப்பி* - கயிறிழுக்குங் கருவி, தானியத்தில் தெள்ளி நீக்கியது.
கப்பிப்பிஞ்சு - கழிக்கடைப்பிஞ்சு.
கப்பு - மயிர்க்கூட்டுஞ் சாயம், [கவர்கொம்பு, கிளை].
கப்புதல் - உண்ணல், மூடிக்கொள்ளல்.
கப்புவிடுதல் - கிளைவிடுதல்.
கமகமத்தல்* - மிகமணத்தல்.
கமகமெனல் - வாசனைக் குறிப்பு.
கமடம் - ஆமை.
கமண்டலம்-கெண்டிகை, சுரைக்குடுக்கை, இஃது தவத்தினர் பஞ்ச முத்திரையி னொன்று.
கமநம் - நடை.
கமம் - நிறைவு, விளைநிலம்.
கமருதல் - அழுதல்.

கமர் - நிலப்பிளப்பு.
கமலக்கண்ணன் - திருமால்.
கமலம் - தாமரை, நீர், வைரத் தீர்ப்பு, செம்பு.
கமலயோனி, கமலவூர்தி-பிரமன்
கமலாகாரம் - தாமரைவடிவம்.
கமலாக்கினி - இரண்டு விரல் கனமுள்ள இரண்டு விறகா லெரிக்குந் தீ.
கமலாசனன் - பிரமா, அருகன்.
கமலாசனி - இலக்குமி.
கமலாலயம் - திருவாரூர்.
கமலினி - உமைசேடியரிலொரு த்தி.
கமலை - இலக்குமி, திருவாரூர்.
கமழ்தல் - மணத்தல்.
கமறுதல்-மிகக்காய்தல், [அழல்].
கமனகுளிகை - இரசகுளிகை, நினைத்தவிடத்துக்குப் போகப் பண்ணும் மருந்து.
கமாஸ் - ஒரிராகம்.
கமித்தல் - பொறுத்தல்.
கமுகு - பாக்குமரம்.
கமுக்கம்* - அடக்கம்.
கமை, க்ஷமை - பொறுமை.
கம் - ஆகாயம், காற்று, தலை, நீர், பிரமன், மேகம், வெண்மை, செயல்.
கம்பக்கூத்து - தொம்பர்கூத்து.
கம்பட்டம் - காசு.
கம்பத்தம்* - வேளாண்மை.
கம்பத்தன் - இராவணன்.
கம்பம் - தூண், [அசைவு, நடுக் கம், விளக்குத்தண்டு, தாலம் பபாஷாணம்].
கம்பலம் - கம்பளி, செவ்வாடை, மேற்கட்டி.
கம்பலை - அச்சம், ஒலி, துன்பம், நடுக்கம், மருதநிலம், வயல்.
கம்பளத்தார் - ஓர் சாதியார்.
கம்பளம் - கம்பளி, [ஓர்நாடு, செம்மறிக்கடா, செவ்வாடை, துருவாட்டேறு].
கம்பளி - ஓர்வகைச்சீலை.
கம்பன் - ஓர் புலவன்.
கம்பாநதி* - காஞ்சிக்கருகிலுள்ள கம்பையாறு.
கம்பி - இரும்பு முதலியவற்றின் கம்பி, காதணி, [வெடியுப்பு].
கம்பிதம் - அசைவு, நடுக்கம்.
கம்பித்தல் - நடுங்கல்.
கம்பியச்சு - கம்மாளரோர்கருவி.
கம்பிளி* - கம்பளி.
கம்பீரம் - ஆர்ப்பரிப்பு, [ஆழம், செருக்கு, தாமரை].
கம்பீரன் - வீர கெற்சிதமுள்ள வன்.
கம்பு - ஓர்பயிர், சிறுதடி, [சங்கு, செந்தினை, மரக்கொம்பு].
கம்புள் - சங்கு, சம்பங்கோழி, வானம்பாடி.
கம்பை - கம்பாநதி, கதவுமுதலிய வற்றின் கம்பை.
கம்மல் - மகளிரின் ஒருகாதணி, குரலடைப்பு, [மந்தாரம், மங் கலொளி].
கம்மவார்* - ஓர் சாதியார்.
கம்மாளர் - கம்மியர். அவர்கள் : தச்சர், தட்டார், சிற்பர்.
கம்மியம் - கைத்தொழில், பேறு.

கம்மியர் - கம்மாளர், நெய்பவர், தொழில்செய்வோர்.
கம்முதல்* - குரல்குன்றல்.
கம்மெனல் - வாசனைக்குறிப்பு.
கயக்கு - கசக்கென்னேவல், சோர்வு.
கயந்தலை - யானைக்கன்று.
கயமுகன் - ஓரசுரன், விநாயகன்.
கயமுனி - யானைக்கன்று.
கயம் - அகழி, ஆழம், இளமை, ஓர்நோய், கீழ்மை, குளம், கேடு, நீர், பெருமை, மேன்மை, யானை, கருமை.
கயல் - கெண்டைமீன்.
கயவர் - கீழ்மக்கள்.
கயவாய் - கரிக்குருவி, கழிமுகம்.
கயவு - கழிமுகம், களவு, பெருமை, மிகுதி, மேன்மை.
கயிங்கரியம் - சுவாமிக்குச் செய்யுந்தொண்டு, வேலை.
கயிரவம் - செவ்வாம்பல்.
கயிரை - சுற்றம்.
கயிலங்கிரி, கயிலயங்கிரி - கயிலாசம், கயிலாயம். [மலை.
கயிலை - சிவபிரானுறையும் ஒரு
கயிலாயன், கயிலையானி - சிவன்.
கயிலாயன், கயிலையாளி - சிவன்.
கயில் - ஆபரணக்கடைப்புணர்வு,
கயிறு* - வடம். [பிடரி.
கயிற்றுப்பொருத்தம்* - மணப்பொருத்தம் பத்திலொன்று.
கயினி - அத்தநாள், கைம்பெண்.
கயை - வடதேசத்திலுள்ள ஒரு புண்ணியத்தலம்.
கர - கரவென்னேவல், இருபத்தைந்தாவதாண்டு.
கரகம் - ஆலங்கட்டி, கமண்டலம், கெண்டிகை, வட்டில்.
கரகரப்பு - கார்ப்பு, தினவு.
கரசல் - புன்செய்.
கரசாகை - கைவிரல்.
கரசீகரம் - துதிக்கையுமிழ்நீர்.
கரடகம்* - வஞ்சகம்.
கரடம்-காக்கை, மதம்பாய் சுவடு, யானைமதம்.
கரடி - கரடியென்னு மிருகம், [சிலம்பம்]
கரடு - காற்பரடு, சருச்சரை, முரடு.
கரடுமுரடு* - செம்மையற்றது.
கரட்டோணன்-காட்டு நிலத்தே வாழும் ஓந்தி.
கரணம் - அந்தரிந்திரியம், உபகரணம், எண்ணிக்கை, ஐம்பொறி, கணிதம், கலவி, காரணம், கூத்தினோர் விகற்பம், பஞ்சாங்கத்தி னொன்று, செய்கை.
கரணிதம்-அந்தக்கரணம், அஃது ஆங்காரம், கலவி, கூத்தின் விகற்பம்,சித்தம்,மனம்,புத்தி.
கரணை - கொல்லறு, [ஓர் செடி, வீணைத்தண்டு.]
கரண்டகம்* - சுண்ணமுதலிய பெய்யுஞ்செப்பு, பூங்கூடை.
கரண்டம் - கமண்டலம், கரண்டகம், நீர்க்காக்கை.
கரண்டி* - சிற்றகப்பை.
கரண்டை - முநிவரிருக்கும் வாசம், கமண்டலம்.
கரதலம் - கைத்தலம்.

கரத்தல் - ஒளித்தல், கொடாமை, திருடல்.
கரந்தை - ஓர் பூடு அஃது அட்டாதசமூலத்தொன்று, பகைவரோட்டினநிரைமீட்போரணியுமாலை.
கரபத்திரம் - ஈர்வாள், கைவாள்.
கரபம் - கழுதை, யானை. (கந்.)
கரபாத்திரம் - அன்னத்தை வாங்கிப் புசிக்கக் கையையே பாத்திரமாக உபயோகித்தல்.
கரப்பான்* - ஓர் புண்.
கரப்பு - மறைவு, களவு.
கரமஞ்சரி, கருமஞ்சரி - நாயுருவி.
கரமுகன் - விநாயகன்.
கரம் - எழுத்தின்சாரியை (உ-ம்.) அகரம், கழுதை, கிரணம், குடியிறை, கை, நஞ்சு, யானைத்துதிக்கை.
கரம்பு, கரம்பை - பாழ்நிலம்.
கரவடம் - வஞ்சகம், [களவு.]
கரவடர் - திருடர்.
கரவாகம் - காக்கை.
கரவாலம் - நகம்.
கரவாளம் - கைவாள்.
கரவிந்தை - களாச்செடி. [(சப்.)
கரவீரம் - அலரிச்செடி. மயாநம்.
கரவு - உலோபம், ஒளித்தல், களவு.
கரவை - கம்மாளர் கருவியினொன்று.
கரளம் - எட்டிமரம், நஞ்சு.
கரளை - வளர்தலின்மை.
கரன் - ஓரிராக்கதன்.
கரா - ஆண்முதலை, முதலை.

கராகண்டிதம்* - சரியாய்ப் பேசு
கராக்கி* - விலையேற்றம். [கை.
கராசலம் - யானை.
கராசனம் - புலி.
கராம் - முதலை (மணிமே. 268).
கராளம், கராளி - தீக்குணம்.
கரி - இருந்தை, கருமை, [சாட்சி, யானை, நஞ்சு, மரவயிரம்.]
கரிகரம் - கலவிவிளையாட்டிலொன்று. [கருகல்.
கரிகறுத்தல் - கவலையால் முகங்
கரிகாடு - யானை திரியுங் காடு.
கரிகாலன் - ஓர் சோழன்.
கரிக்குருவி - ஓர் புள்.
கரிக்கை - கரிசாலை.
கரிக்கோலம் - அழிஞ்சில்.
கரிசம் - பஞ்சம்.
கரிசலாங்கண்ணி, கரிசலை, கரிசாலை - கையாந்தகரை.
கரிசனம், கரிசனை - அன்பு, பரிவு.
கரிக்கண்டு, கரிச்சான் - கையாந்தகரை.
கரிணி - பெண்யானை, யானை.
கரிதல்- கருகுதல், தீதல், பெருங்கோபம்.
கரிதன் - அச்சமுள்ளவன்.
கரிப்பான் - கரிசாலை.
கரிப்பு - அச்சம், கரித்தல்.
கரிமா - எண்வகைச் சித்தியினொன்று, அஃது இருப்புமலையினுங் கனத்தல்.
கரிமுகன் - விநாயகன்.
கரியவன் - கறுப்பன், [இந்திரன், கடவுள், கண்ணபிரான், சனி, சிவன், நமன், திருமால்.]

கரில் - கார்ப்பு, குற்றம், கொடுமை.
கரிவாகனன்-இந்திரன், ஐயனார்.
கரீரம் - அகத்திமரம், கும்பவிராசி, மிடா, யானை, யானைக்கொம்படி.
கரு - கருப்பம், [கருப்பொருள், நடு, நிறம், முட்டை, மேடு, அட்டகருமக்கரு, மேன்மை.]
கருகல் - கருகினது, தீதல், மாலைநேரம்.
கருகூலம் - பொக்கசம், கருப்புக்கட்டி.
கருக்கல் - இருள், [கருகினது, காய்ந்தபயிர்.]
கருக்காக்குதல்* - கூராக்குதல்.
கருக்கு* - கருக்கென்னேவல், கூர், பனைமட்டை, இலைமுதலியவற்றின் கருக்கு, வாட்கருக்கு.
கருக்குவாளி - ஓர் மரம்.
கருங்கடல்வண்ணன் - ஐயனார், திருமால்.
கருங்கண்ணி - ஓர் மீன்.
கருங்காலி - ஓர் மரம்.
கருங்குதிரையாளி - வயிரவன்.
கருங்குறுவை - ஓர் நெல்.
கருங்கை - கொலைத்தொழில்.
கருங்கொல் - இரும்பு.
கருச்சிதம் - முழக்கம், வீராவேசம்.
கருச்சித்தல் - கர்ச்சித்தல்.
கருஞ்சனம் - முருங்கை.
கருஞ்சாரை - ஓர் பாம்பு.
கருஞ்சீரகம்* - ஓர் சரக்கு.
கருஞ்செம்பை* - ஓர் செடி.
கருடகேதனன் - திருமால்.
கருடதிசை - கிழக்கு.
கருடத்துவசன் - திருமால்.
கருடபச்சை - மரகதம், ஓர் மருந்துக்கல்.
கருடபார்வை - இராஜபார்வை, விடந்தீர்க்கும் பார்வையி னென்று.
கருடர் - பதினெண்கணத்தொருவர்.
கருடன் - செம்பருந்து, விஷ்ணுவாகனம்.
கருடி* - சிலம்பம்.
கருஷித்தல் - இழுத்துக்கொள்ளுதல்.
கருணன் - கன்னன்.
கருணாகரன், கருணாநிதி, கருணாமூர்த்தி, கருணாலயன் - கடவுள்.
கருணி - குகை, வெற்பு.
கருணிகை - பூவினிற்கொட்டை.
கருணீகன் - கணக்கன்.
கருணை - கிருபை, [ஓர் செடி, பெருங்கிழங்கு, பொரிக்கறி.]
கருதலர் - பகைவர்.
கருதல் - எண்ணல், நினைத்தல், மதித்தல்.
கருத்தபம் - கழுதை.
கருத்தன் - அரன், அருகன், கடவுள், நடப்பிப்போன்.
கருத்தா - அருகன், கடவுள், செய்பவன்.
கருத்து - எண்ணம், கருதப்பட்டது, கவனம், நினைப்பு.
கருத்துரை - செய்யுட் கருத்துரைக்கு முரை.

கருநடம் - கன்னடதேயம்.
கருநந்து - நத்தை.
கருநாகம் - இராகு (கரும்பாம்பு.)
கருநாடகம் - ஓர் தேசம்.
கருநிலம் - நீரின் மலையின் வனத் திற் பயன்படா மிகுநிலம்.
கருநெல்லி - ஓர் நெல்லி.
கருநெறி - தீ. (சூடா.)
கருநொச்சி - ஓர் நொச்சி, [சுரோ ணிதநீர்.]
கருந்தாது - இரும்பு. (சேது).
கருந்திடர் - மேடு.
கருந்துகிலோன் - பலபத்திரன்.
கருந்தோளி - அவுரி.
கருப்பக்கிரகம் - மூலஸ்தானம்.
கருப்பஞ்சாறு - கரும்பிரசம்.
கருப்பட்டி - கற்கண்டு, பனங் கட்டி.
கருப்பம்-சினை, (கருப்பங்கொண் டிருத்தல்), [அரண்மனை, உப நிடத முப்பத்திரண்டினொ ன்று.]
கருப்பவதி - கருப்பந்தரித்தவள்.
கருப்பவேதனை* - பிரசவநோய்.
கருப்பாசயம் - கருத்தங்குமிடம்.
கருப்பாதானம் - ஓர் சடங்கு.
கருப்பிணி - கருப்பவதி.
கருப்பு* - குறுவிலைக்காலம்.
கருப்புக்கட்டி - பனங்கட்டி, வெல்லக்கட்டி.
கருப்புவில் - மன்மதன்வில்.
கருப்புவில்லி - மன்மதன்.
கருப்பூரம் - சூடன், [பொன், பொன்னரிதாரம்.]
கருப்பை - கருவின்பை, [கா ரெலி.]
கருமகன் - கொல்லன்.
கருமசண்டாளன் - துரோகி.
கருமணி - கண்மணி.
கருமத்தலைவர் - வருங்காரியஞ் சொல்வோர்.
கருமபாகை - வேதநூற்பொருளி னொன்று.
கருமபூமி - இருவினையியற்றற் குரிய வுலகம், சுடுகாடு.
கருமம் - கிரியை அல்லது தொ ழில், [வெப்பம், கடமை.]
கருமயிர் - கரடி.
கருமவியாதி* - மருந்தினால் நீங் காத நோய்.
கருமவேதனை* - மிக்க வருத்தம்.
கருமா - பன்றி, யானை.
கருமாதி* - அந்தியேட்டி முத லிய சடங்கு.
கருமாநுட்டானம்-நியமநிட்டை.
கருமாந்தம், கருமாந்தரம், கரு மாந்திரம் - இறந்த ஒருவனை நற்கதியடையச் செய்யுஞ் சடங்கு.
கருமாயம் - அதிகவிலை, அருமை யானது.
கருமான்-கொல்லன், [கலைமான், பன்றி.]
கருமி - தீவினையுடையோன், பாவி.
கருமுகை - இருவாட்சி, சிறு செண்பகம்.
கருமேந்திரியம்-கன்மேந்திரியம்.
கருமை - கறுப்பு, [பெருமை, வலிமை.]
கரும்பனூர் - ஓரூர்.
கரும்பாம்பு - இராகு, கருவழலை.

கரும்பிள்ளை-காக்கை.(சீவக-சிந்.)
கரும்பு - கன்னல், [புநர்பூசம்.]
கரும்புசம் - வண்டு.
கரும்புல் - மனைமரம்.
கரும்புள் - கரிக்குருவி, காகம், பெண்வண்டு, வண்டு.
கரும்புள்ளிதீட்டல் - அவமானப்படுத்த ஒருவர்முகத்தில் கரிக்கோலந்தீட்டல்.
கரும்புறம் - பனை.
கரும்பொன் - இரும்பு.
கருவடம் - மலையுமாறுஞ் சூழ்ந்த ஊர்.
கருவம் - அகங்காரம், [ஒரெண், சினை.]
கருவரி - இருள், கருவிழியின் ரேகை.
கருவல் - கரியநிறமுடையது.
கருவாடு - காய்ந்தமீன்.
கருவாப்பட்டை - இலவங்கப்பட்டை.
கருவாலி - ஓர்மரம், ஓர்குருவி.
கருவி - ஆயுதப்பொது, உபகரணம், [கவசம், குதிரைக்கல்லணை, கூட்டம், தொடர்பு, நட்பு, மேகம், யாழ், வாச்சியம், வீணை.]
கருவிப்புட்டில் - ஆயுதவுறை.
கருவிழி - கண்மணி.
கருவிளம் - இரண்டு நிரையசையாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு, ஓர் மரம், காக்கணஞ்செடி.
கருவிளை - காக்கணஞ்செடி.
கருவூர் - கோயம்பத்தூரிலுள்ள சேரனூர்.
கருவூலம் - பொக்கசம்.
கருவை - ஓரூர், வரகுவைக்கோல்.
கருளன் - கருடன். (இரா).
கருள் - இருள், கறுப்பு, நல்லாடை, மயக்கம்.
கரேணு - பெண்யானை, யானை.
கரை - கரையென்னேவல், ஓரம், [எல்லை, முடிவு, வார்த்தை.]
கரைகண்டவன்* - மிகத்தேர்ந்தவன்.
கரைகாணுப்பேரொளி - கடவுள்.
கரைதல் - உருவழிதல், [அழைத்தல், ஆரவாரம், இரங்கல், ஒலித்தல், சொல்லுதல், பேரொலி.]
கரைத்தல் - கரைக்குதல், [எழுத்திலா வோசை, சொல்லாலெழுமொலி.]
கரையார்* - வலைஞர்.
கரோடி - தலையோட்டுப் பொருத்து, முடிமாலை.
கரோடிகை - கழுதை, சூட்டுமாலை, முடிமாலை.
கரோருகம் - நகம். (சப்த.)
கர்க்கடகம் - நண்டு, ஓர்ராசி.
கர்க்கரி - கரகம், தயிர்கடைதாழி.
கர்ச்சிதம்-இடிமுழக்கம், யானைப்பிளிறொலி.
கர்ச்சித்தல்* - முழங்கல்.
கர்ச்சூரம்-பேரீந்து, கழற்கொடி.
கர்ணம் - கணக்கன்.
கர்ணன்* - கன்னன்.
கர்ணிகை - தாமரைக்கொட்டை.
கர்த்தபம் - கழுதை.
கர்த்தன் - கடவுள், செய்வோன், தலைவன்.

கர்ப்பக்கிரகம் - மூலஸ்தானம்.
கர்ப்பம் - கருக்கொள்கை, சினை, உள்.
கர்ப்பவோட்டம் - கருக்கொள்ளு மேகவோட்டம். இது மார்கழி மாதத்தில் சூரியன் தனுசில் பிரவேசித்த பதின்மூன்றே முக்கால் நாளுக்குமேல் பன்னிரண்டு தினம் ஓடுவது.
கர்ப்பூரம் - கருப்பூரம்.
கர்மபலம் - வினைப்பயன்.
கர்வம் - செருக்கு, [இலட்சங் கோடி.]
கர்னம் - கன்னம்.
கலகம் - குழப்பம், [பேரொலி, போர்.]
கலகலம் - பறவைக்குரல்.
கலகலெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.
கலக்கம் - அச்சம், ஆரவாரம், சஞ்சலம், துன்பம்.
கலக்கல் - கலங்கச்செய்தல், குழப்பல், சேருதல்.
கலங்கடித்தல் - திகைக்கடித்தல்.
கலங்கரைவிளக்கம் - கப்பலை இடங்காட்டி யழைக்கும் விளக்கு.
கலங்கல் - கலங்குதல், நீர்பாயு மதகு, [அஞ்சல், அழுதல், சேற்றுநீர்.]
கலசப்பானை - கஞ்சனை (சிறு பானை).
கலசமுனி - அகத்தியன்.
கலசம் - குடம், [பால்.]
கலணை - குதிரைக்கல்லணை.
கலதி - மூதேவி (கந்), தீவினை.
கலதை - மூதேவி, கலக்கம்.
கலத்தல் - கூட்டுதல், எழுத்திலா வோசை, புணர்ச்சி.
கலந்தை - பெருமை.
கலபம், கலாபம் - மயிற்றோகை.
கலப்பு - கலத்தல், உறவாகுகை.
கலப்பை - உழுபடை, கலம்வைத் திருக்கும் பை.
கலப்பைக்கிழங்கு - கார்த்திகைக் கிழங்கு.
கலமர் - பாணர்.
கலம்-ஓரளவு, உண்கலம், [ஆபரணம், இரேவதி, மட்கலம், மரக்கலம், யாழ்.]
கலம்பகம் - ஓர் பிரபந்தம், கலப்பு, நறுஞ்சாந்து.
கலம்பகன் - செவிட்டுமேன்.
கலயம் - கலசம், உண்கலம், பாத்திரம்.
கலர் - கீழ்மக்கள்.
கலவடை* - உரலணை.
கலவம் - மயிற்றோகை.
கலவரம்* - கலக்கம்.
கலவர் - படைவீரர், மரக்கலமோட்டுவோர்.
கலவல் - எழுத்திலாவோசை, கலத்தல்.
கலவாங்கட்டி - உடைந்தவோடு.
கலவி - புணர்ச்சி.
கலவை - சுண்ணச்சாந்து, [பரிமளச்சேறு, கலப்பு, சேறு.]
கலவைச்சேறு - பரிமளச்சேறு.
கலவோடு - மண்பாண்டச்சல்லி.
கலனை - கலப்பை, கலப்பையுறுப்பு.
கலன் - ஆபரணம், பாத்திரம், மரக்கலம், யாழ், கீழ்மகன்.

கலன்கழிமடந்தை - கைம்பெண்.
கலாசு - மரக்கலம்.
கலாதி* - கலகம்.
கலாநிதி, கலாபதி, கலாவதி - சந்திரன்.
கலாபம் - அரைப்பட்டிகை, கலாபனே, சரமணிக்கோவை, பதினாறு கோவையுள்ள மணி, பீலிக்குடை, மயிலிறகு, மயிற்றோகை.
கலாபனே* - கலகம்.
கலாபி - ஆண்மயில்.
கலாம் - ஊடல், கொடுமை, போர் (மணிமே. 14), பகை, சினம்.
கலி - ஒலி, கடல், கடையுகம், கலியென்னேவல், சனி, போர், வஞ்சகம், வலி, வறுமை.
கலிகாலம்* - கலியுகம், கொடுமையான காலம்.
கலிகை - இளம்பூவரும்பு, நாகமல்லி.
கலிக்கம்* - கண்மருந்து.
கலிங்கம் - ஊர்க்குருவி, சீலை, ஒருநாடு, ஒருபாடை, குதிரை, ஆற்றுத்தும்மட்டிக்காய்.
கலிங்கல், கலிங்கு* - ஏரிநிறைநீர் போம்வழி, மதகு.
கலிசம் - வன்னிமரம்.
கலிதம் - பாய்கை, பொருத்தம்.
கலிதி - திப்பிலி.
கலித்தல் - ஆரவாரம், எழுச்சி, ஒலித்தல், தழைத்தல், பொலிவு, கக்குதல்.
கலித்துருமம் - தான்றிமரம்.
கலிபிலி* - ஆரவாரம்.
கலிப்பு - மிகுதி, எழுச்சி, ஒலி.
கலியர் - படைவீரர்.
கலியன் - சனி.
கலியாணப்பூசினி - சாம்பல்நிறப் பூசினி.
கலியாணம் - விவாகம், [பொன்.]
கலியாணி - உமை, ஒரிராகம்.
கலிவிராயன் - ஓர் நெல்.
கலினம் - கடிவாளம்.
கலினி - திப்பிலி, இடாகினி, கைமை.
கலினே - மிளகு.
கலுக்குப்பிலுக்கு - அணிகளாரனெழுமொலி, ஆடம்பரம்.
கலுடம் - கலங்கனீர், பாவம்.
கலுவடம் - பூவரும்பு.
கலுவம்* - கல்வம் (குழியம்மி).
கலுழம் - கலங்கனீர்.
கலுழன் - கருடன்.
கலுழி - கலங்கனீர், முல்லைநிலக் கான்யாறு.
கலுழ்தல் - அழுதல், கலங்கல்.
கலை - கலையென்னேவல், [அரைப்பட்டிகை, ஆண்மான், துர்க்கைவாகனம், எட்டு விநாடி அல்லது முப்பதுகாட்டைகொண்ட ஓர்கால நுட்பம், கல்வி, சந்திரன், சீலை, சுறுமீன், மகரமீன், மகரராசி, மரக்கொம்பு, வயிரம், விலங்கேற்றின்பொது, சரீரம்.]
கலைக்கியானம்* - கல்விநூல்.
கலைஞர் - புலவர்.
கலைஞானம் - கலைக்கியானம்.
கலைதல்* - குலைதல்.

கலைத்தல் - நீக்கல், குலைத்தல்.
கலைநாதன் - அருகன்.
கலைநாயகன் - புத்தன்.
கலைமகள், கலைமடந்தை - சரச்சுவதி.
கலையானத்தி - துர்க்கை.
கலையுணர்த்துவோன், கலையுணர் புலவன் - முருகன்.
கலையூர்தி - சரச்சுவதி, துர்க்கை.
கலைவல்லோர் - அறிஞர், புலவர்.
கல் - படியென்னேவல், கல்லு, [மலை, ஒலிக்குறிப்பு, இரத்தினம்.]
கல்நாதம் - அன்னபேதி.
கல்நார்* - ஓர் மருந்து.
கல்பனை - கற்பனை (இல்லாதை உள்ளதாக உண்டுபண்ணல்).
கல்மஷம்* - குற்றம்.
கல்மடி - காய்மடி.
கல்லகம் - மலை.
கல்லகாரம் - செங்குவளை, நீர்க்குளிரி.
கல்லக்காரம் - பனங்கற்கண்டு.
கல்லணை - குதிரைமேற்றவிசு.
கல்லல் - தோண்டல், பேசலாவெழுமொலி.
கல்லறை - கல்வீடு, குகை, பிரேதக்குழி.
கல்லாடர் - கல்லாடநூல் செய்த புலவர்.
கல்லாந்தலை* - ஓர் மீன்.
கல்லாரம் - செங்குவளை, நீர்க்குளிரி.
கல்லார் - கீழ்மக்கள், மூடர்.
கல்லால் - ஓராலமரம்.
கல்வி - ஆமை, ஊர்க்குருவி.
கல்லியம் - கள்.
கல்லு - கல், [மலை].
கல்லுப்போடல் - காரியத்தைத் தடைசெய்யல்.
கல்லூரி - கல்விபயிலிடம்.
கல்லெடுப்பு* - மரணச்சடங்கிற்ருபித்த கல்லையெடுத்தல்.
கல்லெறி - கவண்.
கல்லெனல்-அனுகரணவோசை.
கல்லை - இலைக்கலம் (சீகா), பாதகுறட்டின்குமிழ்.
கல்லோலம் - புனற்றிரை.
கல்வளை - மலைப்பிளப்பு.
கல்வி - அறிவு, கற்றல், வித்தை.
கல்விப்பொருள் - கல்விச்செல்வம்.
கல்விமான்* - அறிஞன்.
கல்வெட்டு - சிலாசாசனம், அழியாதசொல்.
கவசகுண்டலன் - கவசத்தோடும் குண்டலத்தோடும் பிறந்த கன்னன்.
கவசம் - இரும்புமுதலியவற்ருற் செய்த சட்டை, தோல், சீலைமண், காவற்பண்ணுமந்திரம்.
கவடி - ஓர் விளையாட்டு, பலகறை.
கவடு - கபடம், [மரக்கொம்பு, யானைகட்டுங்கயிறு, பிரிவு.]
கவட்டுதல் - மெல்லுதல், சப்புதல், வளைத்தல்.
கவணை - கவண்.
கவண்* - கல்லெறிகயிறு.
கவண்டர் - ஓர்சாதியார் (பகைவர்மீது கவண்கொண்டு சமர் புரிபவர்), [சண்டாளர்.]

கவண்டி, கவண்டு - கவண்.
கவந்தம் - உடற்குறை, நீர்.
கவந்தன் - ஓரரக்கன்.
கவயம் - காட்டுப்பசு. (சேது).
கவரம் - சாமரம், சினம்.
கவராசம் - தமரூசி.
கவரி - சாமரை, [கவரிமா, எருமை, தேர்.]
கவரிமான்* - ஓர் மிருகம்.
கவரிறுக்கு - கடவுமரம்.
கவர் - கவரென்னேவல், [மரக்கப்பு, வாழை, பிளவு].
கவர்தல் - வாருதல், திருடல், கொள்ளையிடல், கடைதல், ஆசைப்பெருக்கம்.
கவலல்-வருந்தல், பேசலாலெழுமொலி, வியங்கோண்முற்று.
கவலை - விசாரம், அக்கறை, துன்பம், நீரிறைக்குந்தோற்கூடை, [ஓர்கொடி, ஓர் மீன், கவர்வழி, சந்தி, செந்தினை, நோய், மரக்கொம்பு].
கவவு - அகத்திடுதல், முயங்கல்.
கவழிகை - திரைச்சீலை.
கவளம் - சோற்றுத்திரளை, வாயளவு கொண்டவுணவு.
கவளி* - வெற்றிலைக்கட்டு.
கவறல் - துக்கித்தல், வருந்தல்.
கவறு - தாயக்கட்டை, பனம்பட்டை.
கவறை* - வடுகர்.
கவற்சி - வருத்தம்.
கவனம் - கருத்து, மிகுகவலை, கலகம், காடு, குதிரைநடை, [விரைவு, படை, கடுப்பு].
கவனன் - வேகமுள்ளோன்.
கவாடக்காரன் - புல்லுவெட்டுவோன்.
கவாடம் - கதவு, புல்லுச்சுமை.
கவாய் - ஒருடை.
கவாளம்- குதிரைப்பேதிமருந்து, புண்ணாற்றுமருந்தினென்று.
கவான் - தொடை, மலைப்பக்கம்.
கவி-கவியென்னேவல், [பாடல், புலவன், குரங்கு, சுக்கிரன்.]
கவிகை - கவிதல், ஈதல், குடை.
கவிசனை - உறை.
கவிச்சக்கிரவர்த்தி - கம்பன்.
கவிச்சு - நிணநாற்றம், [புலால்.]
கவிஞர் - புலவர்.
கவிதல் - வளைதல், [விருப்பமாயிருத்தல்.]
கவிதை - பாட்டு.
கவித்தல் - மூடுதல்.
கவிப்பர் - செட்டிகள்.
கவிப்பு - குடை, மூடுதல், உட்டுளை.
கவியம் - கடிவாளம்.
கவிரம் - அலரிச்செடி.
கவிர் - முண்முருக்கு. (சேது).
கவிவாணர் - புலவர்.
கவிழ்தல் - தலைகீழாதல், [குனிதல், இறத்தல், கெடல்.]
கவிழ்த்தல்* - அகம்புறமாக்கல்.
கவின் - அழகு.
கவீனம் - பசுமேய்ந்த இடம், வெண்ணெய்.
கவுசி - குழைவு, வருத்தம்.
கவுசிகன் - விசுவாமித்திரன், இந்திரன். [(இரா).
கவுடி - ஓர் பண், பறையலகு
கவுதாரி* - ஓர் பட்சி.

கவுல் - தூர்க்கந்தம், [உடன்படிக்கை.]
கவுளி - பல்லி, ஓர்விததெங்கு.
கவுள் - கதுப்பு, யானைக்கதுப்பு, யானைமதம்பாயிடம்.
கவுனி - வாசல், குதிரைப்பற்பாஷாணம்.
கவை - தேவை, வேலை, [மரக்கப்பு, காடு, கோட்டை, கவர்வழி, ஆயிலியம், எள்ளிளங்காய்.]
கவைத்தாள் - நண்டு.
கவைநா - பாம்பு.
கவ்வாணம் - ஓர் பண்.
கவ்வியம் - பசுப்பால் முதலியன.
கவ்வு - கவ்வென்னேவல், பெருமை.
கவ்வுதல்* - கடித்துப்பிடித்தல், வாயினுற்கொள்ளல்.
கவ்வை - எள்ளிளங்காய், ஒலி, கள், துன்பம், பழிமொழி.
கழகம் - கல்விமுதலிய பயிலிடம், சூதாடுமிடம், மல்பயிலிடம்.
கழங்கம் - சூதாடுகருவி.
கழங்கு - கழற்சிக்கொடி, வெறியாட்டாளனுடல், ஓராடல்.
கழஞ்சு - பன்னிரண்டு பணவெடைகொண்ட நிறை.
கழப்பன் - வேலைக்கள்ளன்.
கழலல் - நெகிழ்தல், விலகல்.
கழலை - கழலைக்கட்டி, புரைகுழல்.
கழல் - கழலென்னேவல், கழற்சிக்கொடி, கால், செருப்பு, ஆடவர்கொடையாலும் வீரத்தாலுமணியும் பூண்.
கழறல் - உறுதிச்சொல், சொல்லல், நெருங்கல்.
கழற்சி - கழலுதல், கெச்சக்காய்ச்செடி.
கழற்றல் - கழலப்பண்ணல், [விலக்கல்.]
கழனி - வயல், [சேறு, திரைச்சீலை, மருதநிலம்.]
கழனியடுத்தவர் - வேளாளர்.
கழாயர் - கழைக்கூத்தாடிகள்.
கழாய்-மூங்கில்(சீவ.சிந்.),கழுகு.
கழி - கழியென்னேவல், கோல், கொம்பு, [மிகுதி, உப்பளம், உப்பாறு.]
கழிகடை - முற்றுங்கெட்டது.
கழிச்சல்* - வயிறு பேதியாதல்.
கழிதல் - கடத்தல், சாதல், நடத்தல், மிகுதல், தீர்தல்.
கழித்தல் - நீக்குதல், விலக்கல், தீர்த்தல்.
கழிநிலம் - உப்பளம், உவர்த்தரை.
கழிபிறப்பு - முற்பிறப்பு.
கழிப்பு - தோஷந்தீர்க்குமோர்சடங்கு, [கழித்தல், குற்றம்].
கழிமுகம் - ஆற்றுநீர்க்கழிவு.
கழிமுட்டான் - ஓர் புல்.
கழியர் - நெய்தனிலமாக்கள்.
கழிவு - உள்ளதின்மிகுதல், சிறத்தல், கழிதல்.
கழு - கழுவென்னேவல், கழுமரம், [சூலம்.]
கழுகு* - ஓர் பறவை.
கழுக்கடை - சிற்றீட்டி, சூலம்.
கழுக்காணி-சோம்பேறி,குறளன்

கழுக்குன்றம் - திருக்கழுக்குன்ற மலை.
கழுது - காவல், பரண், பிசாசம், வண்டு.
கழுதை - கழுதை, [வடமேற்றி சைப்பாலன்குறி.]
கழுதைக்குடத்தி - கழுதைப்புலி.
கழுதைவாகனி - மூதேவி.
கழுத்தடி - தோண்மேல்.
கழுத்து* - கண்டம்.
கழுநீர் - அரிசிகளைந்தநீர், [ஆம்பல்.]
கழுந்து - தேய்வு, கழுத்து, பொருத்து.
கழுமரம்* - கழு.
கழுமலம் - சீகாழி.
கழுமல் - இணைத்தல், நிறைதல், பற்றுதல், மயக்கம், மிகுதி.
கழுமுள் - ஆயுதப்பொது, ஈட்டி, கழுமரம், சூலம், மாதுளை.
கழுவல்* - சுத்திபண்ணல்.
கழுவன் - மிகுதுட்டன்.
கழுவாய் - பிராயச்சித்தம்.
கழை - கரும்பு, புனர்பூசம், மூங்கில்.
கழைக்கூத்தர் - கம்பக்கூத்தர்.
கள - களாச்செடி.
களகண்டம் - குயில்.
களகம் - பெருச்சாளி.
களகளம் - பேரொலி.
களகளெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.
களக்கர் - புலையர், வேடர்.
களங்கம் - குற்றம், மாசு, [அடையாளம், களிம்பு, கறுப்பு.]
களங்கன் - சந்திரன், மாசுள்ளோன்.
களஞ்சியம்* - பண்டகசாலை.
களதவுதம் - வெள்ளி, பொன்.
களத்திரம் - மனைவி, நிதம்பம்.
களந்தை - களத்தூர்.
களபம் - கலப்பு, கலவைச்சாந்து, சுட்டசாந்து, யானை, யானைக் கன்று. [பலி.
களப்பலி*-யுத்தவீரர் செலுத்தும்
களமர் - உழுநர், சூத்திரர், பூவைசியர், மருதநிலமாக்கள்.
களம் - நெற்களம், [இடம், கழுத்து, கறுப்பு, போர்க்களம், மனைவி, மிடறு, விடம்.]
களரவம் - காட்டுப்புறா, புறா.
களரி - போர்க்களம், [கருமை, களர்நிலம், காடு, கூட்டம், பாழ்நிலம், மிடறு, ஆயுதஞ் சூதுகூத்துப் பயிலிடம்.]
களர்நிலம் - உப்புநிலம்.
களவம் - கலப்பு, கலவைச்சேறு.
களவர் - கள்வர்.
களவன் - கர்க்கடகவிராசி, கள்வன், நண்டு.
களவாணி - களவாளி.
களவாளி - கள்வன்.
களவு - திருட்டு, [உன்மத்தம், களாச்செடி.]
களன் - இடம், உன்மத்தம், ஒலி, கழுத்து, சிநேகம், மருதநிலம்.
களா - களாச்செடி, கறுப்பு.
களி - மாவாற்கிண்டிய களி, [களியென்னேவல், கள், குழம்பு, செருக்கு, மயக்கம், களிப்பு, களிப்புள்ளவன்.]

களிகூருதல் - களிப்புமிகுதல்.
களிகை, கலிகை - இளம்பூ வரும்பு.
களிக்கண் - தட்டார் கருவியி ஞென்று.
களிதம் - வழுக்கல்.
களித்தல்- இன்புறல், மதர்த்தல்.
களித்துயில் - இன்பத்துயில்.
களித்துறை - இலங்கைத்தீவி லோர் நகர்.
களிப்பு - இன்பம், மகிழ்ச்சி, செழிப்பு.
களிமண் - பசைமண்.
களிமம் - எலி.
களிம்பு - துரு, [குற்றம், மலி னம்.]
களிறு - அத்தநாள், ஆண்சுறு, ஆண்பன்றி, ஆண் யானை, யானை, விலங்கிஞண்பொது.
களேபரம் - உடம்பு, எலும்பு, பிணம்.
களை - அயர்வு, அழகு, களையென் னேவல், [குற்றம், காந்தி, தாளப்பிரமாணம் பத்திஞெ ன்று.]
களைகட்டல்* - களைபிடுங்கல்.
களைகண் - ஆதரவு, உதவி, புகல்.
களைகொட்டு - களைகோல்.
களைஞர் - சண்டாளர்.
களைதல் - விலக்குதல், [களைகட் டல், கொல்லல்.]
களைதீர்தல்* - சோகந்தீர்தல்.
களைத்தல்* - இளைப்புறல்.
களைபறித்தல்* - களைபிடுங்கல்.
களையாறுதல்* - சோகநீங்குதல்.
கள் - மது, [மலர்த்தேன், களவு, கள்ளென்னேவல், பன்மை விகுதி, பொய்.]
கள்வன் - கள்ளன், கரியவன், கர்க்கடக விராசி, குரங்கு, நண்டு, முசு, யானை.
கள்ளச்சாதி* - ஓர் சாதியார்.
கள்ளச்சி - திருடி, [பூநீறு, பூவ ழலை.]
கள்ளத்தனம்* - கபடம்.
கள்ளப்புருஷன்* - சோரபுரு ஷன்.
கள்ளமனம் - வஞ்சகமனம்.
கள்ளம் - களவு, குற்றம், பொய், வஞ்சகம்.
கள்ளல் - களவுசெய்தல்.
கள்ளன் - திருடன், [ஓர் சாதி யான்.]
கள்ளி - திருடி, [ஓர் மரம்.]
கள்ளிக்காக்கை* - செம்போத்து.
கள்ளிக்கோட்டை - ஓரூர்.
கள்ளிமடையான், கள்ளிமந் தாரை,கள்ளிமுளையான்-ஈழத் தலரி (ஓர் அலரி.)
கள்ளுதல் - கள்ளல்.
கள்ளுண் - வண்டு.
கறங்கல் - ஒலித்தல், சுழலல், பேய், வளைதடி.
கறங்கு-கறங்கென்னேவல், காற் றூடி, சுழற்சி.
கறட்டுக்கறட்டெனல் - கோழை கொண்டிழுத்தல்.
கறத்தல்* - பால்முதலிய பிதுக் கல்.
கறல் - விறகு.
கறவை - கறக்கும் பசு.

கறளை-குள்ளன்,வளர்ச்சியற்றது
கறு - காடைக்குரல்.
கறுக்கி, கறுர் - வரையறை.
கறி - கறி, [கறியென்னேவல், மிளகு.]
கறித்தல் - கடித்தல், புசித்தல்.
கறிமசாலை* - கறிக்கிடும்சரக்கு.
கறுக்காய்-இளநீர்க்கயர். [தல்.]
கறுத்தல் - கறுப்பாதல், [சினவு
கறுத்தவன் - கரியவன், [பகைவன்.]
கறுநாகம் - காரீயம்.
கறுப்பன் - கரியன், [ஓர் தேவதை, கார்நெல்.]
கறுப்பி - கரியவள், [வெடியுப்பு, காகநிமிளை, மீனம்பர், கருவண்டு.]
கறுப்பு - கருநிறம், [கறை, கோபம், சினக்குறிப்பு.]
கறுப்புக்கட்டுதல் - பயிர் கறுத்துண்டாதல், மழைக்கோலங்கொள்ளல்.
கறுவம் - ஆங்காரம், சினம்.
கறுவல் - கரியது, [சினக்குறிப்புகாட்டல்.]
கறுவாப்பட்டை* - இலவங்கப்பட்டை.
கறுவுதல்* - பகைசாதித்தல்.
கறுழ், கறுள் - கடிவாளம்.
கறேறெனல்* - கருமைநிறக்குறிப்பு.
கறை - உதிரம், உரல், கருங்காலிமரம், கறுப்பு, குடியிறை, குற்றம், நிறம், மாசு, கடமை (சிலப். **23: 128**), நஞ்சு.
கறைமிடற்றோன் - சிவன்.
கறையடி - யானை.
கறையான்* - சிதல்.
கற்கசர் - கீழ்மக்கள், உலோபிகள், கடினநெஞ்சினர்.
கற்கடகசிங்கி - கடுக்காய்ப்பூ.
கற்கடகம் - ஓரிராசி, நண்டு.
கற்கண்டு* - கருப்புக்கட்டி.
கற்கம் - பலவகைகூடிய மருந்து.
கற்கரி-கரகம், தயிர்கடைதாழி.
கற்கா - கொடுந்தமிழ்நாட்டிஞென்று.
கற்காணம் - கருஞ்சீரகம்.
கற்கி - குதிரை, திருமாலவதாரத்திலொன்று, தேவர்கோயில்.
கற்கோவை - கருடன்கிழங்கு.
கற்சிறை - மதகு. (சீவ. சிந்.)
கற்சூரம் - பேரீந்து, கழற்கொடி.
கற்பகம் - ஐந்தருவினொன்று. அஃது, வேண்டிற்றெல்லாந்தருமரம், [புளியாரை.]
கற்படை - கோட்டையிற் சுரங்கவழி.
கற்பம் - மூப்புவராமற்செய்யும் மருந்து, [ஆயிரங்கோடி, உலகமுடியுங்காலம், தேவலோகம், பிரமனாயு.]
கற்பனை - இல்லதையுள்ளதாய் உண்டுபண்ணல், சாதுரியம், புனைந்துரை, கல்வி, கற்பிப்பு.
கற்பாட்டி - கற்புடையவள்.
கற்பாந்தம் - உறுதியாயிருப்பது, [கற்பமுடிவு.]
கற்பிதம் - அலங்கரிப்பு, பாவனை.
கற்பித்தல் - படிப்பித்தல், உண்டாக்கல், கட்டளையிடல்.

கற்பு - மகளிர்நிறை, [கல்வி, கற்பனை, மதிலுண்மேடை, மதில், முல்லைக்கொடி.]
கற்பூரம் - கருப்பூரம், பொன்னுங்காணி.
கற்பூரவள்ளி - ஓர் பூண்டு.
கற்றச்சன் - கற்சிற்பன்.
கற்றல் - படித்தல், பழகல்.
கற்று - இளங்கன்றுப்பசு.
கற்றோர் - புலவர், அறிஞர்.
கற்றுக்குட்டி* - படிக்கும்பிள்ளை.
கற்றை - கதிர்த்தொகுதி, மயிர்த்தொகுதிபோல்வன, கூட்டம்.
கனகக்கொடியோன்-கன்னன்.
கனகதண்டிகை - பொற்சிவிகை.
கனகதப்பட்டை - ஓர் வாச்சியம்.
கனகதம் - ஒட்டகம்.
கனகதர் - சண்டாளர், புலையர்.
கனகம் - பொன், முண்முருக்கு.
கனகரசம் - அரிதாரம்.
கனகன் - இரணியன்.
கனகாமிரதம் - வெள்ளி.
கனசாரம் - கருப்பூரம்.
கனதண்டி - கனமுள்ளது.
கனத்தல் - பாரங்கொள்ளல்.
கனபுடம் - நூறு எருப்புடம்.
கனப்பு - தடிப்பு, அழுத்தம், பாரம்.
கனமழை - பெருமழை.
கனம் - பாரம், பெருமை, [அகலம், கூட்டம், கோரைக்கிழங்கு, சீர்மை, செறிவு, பருமை, பொன், மேகம், வட்டம்.]
கனரசம் - நீர், மழை.
கனருசி - மின்னல்.
கனலி - கொடுவேலி, சூரியன், நெருப்பு, பன்றி.
கனலுதல் - எரிதல், காய்தல்.
கனல் - கனலென்னேவல், நெருப்பு, உட்டணம்.
கனவட்டம்-பாண்டியன்குதிரை.
கனவான் - கனிசவான்.
கனவிரதம் - நீர்.
கனவு - கனா, [நித்திரை, மயக்கம்].
கனனம் - புதைத்தல்.
கனன்றல் - சினக்குறிப்பு.
கனா* - கனவு.
கனி-பழம், [கனியென்னேவல், தித்திப்பு, நிரசவஸ்துக்கள் பிறக்குமிடம், செறிவு(இரா)].
கனிகரம் - அன்பு.
கனிஷ்டம், கனிட்டம் - கடைவிரல், சிறுமை.
கனிட்டர் - கீழ்மக்கள், பின்பிறந்தோர்.
கனிட்டன் - பின்னோன் (தம்பி).
கனிட்டை - பின்பிறந்தாள்.
கனிதல் - இரங்கல், பழுத்தல், பெருங்கோபம்.
கனித்திரம் - மண்வெட்டி.
கனிவு - அன்பு, இரங்குகை, முதிர்வு.
கனை - கனையென்னேவல், ஒலி, நிறைவு, நெருக்கம்.
கனைகதிர்ச்செல்வன் - சூரியன்.
கனைத்தல் - குதிரைமுதலியவனுமானித்தல், [ஒலித்தல், ஆரவாரித்தல்.]
கனைப்பு - கனைத்தல்.
கனையிருள் - மிக்கவிருள்.

கனேபலம் - ஆலங்கட்டி.
கன் - கல். சிறுதராசுத்தட்டு.
கன்மஷம் - அழுக்கு, பாவம்.
கன்மத்துரோகி* - சண்டாளன்.
கன்மபரிபாகம்-கன்மத்தொலைவு.
கன்மம் - செய்தொழில், தீவினை, பாவம்.
கன்மவியாதி - தீராத நோய்.
கன்றல் - கன்றினது, [கடுப்பு, சினக்குறிப்பு].
கன்று - கன்றென்னேவல், இள மரம், எருமை ஒட்டை கட மை கவரி காட்டா குதிரை பசு மரை மான், யானை யிவற் றின் குட்டி, [அற்பம், கை வளையல்.]
கன்றுதல் - நைதல், [இரங்கல், பதனழிதல்].
கன்னகரேம் - காதால் கேட்கப் படாத கொடியது.
கன்னகம் - கன்னக்கோல்.
கன்னக்கிரந்தி, கன்னப்புற்று - கன்னத்தில் வரும் ஓர் நோய்.
கன்னக்கோல்* - சுவரகழ் கருவி.
கன்னங்கரியது - மிகக் கரியது.
கன்னடகவுளம் - ஓர் பண்.
கன்னடம் - ஓரிராகம், ஓர் பா டை, ஐம்பத்தாறு தேயத்தி ஞென்று.
கன்னடியர்* - ஓர் சாதியார்.
கன்னத்தட்டு - தராசுத்தட்டு.
கன்னபாரம்பரியம், கன்னபாரம் பரை - தொன்றுதொட்டு வா க்குமூலமாய் வழங்குவது.
கன்னப்பூ*-பெண்களணியுமோர் காதணி.
கன்னமலம் - குறும்பி.
கன்னமூலம் - காதினடி, காது.
கன்னம்-கதுப்பு, கன்னக்கோல், [காது, தராசு, பொற்கொல் லன், யானைச்செவி.]
கன்னல் - கரகம், கரும்பு, சருக் கரை, நாழிகை, நாழிகைவட் டில்.
கன்னவேதனம், கன்னவேதை - காதுகுத்தல்.
கன்னன்-குந்திதேவிக்கு முதலில் பிறந்தவன். அவன் இடை யேழுவள்ளலி லொருவன்.
கன்னு - ஓர் வாச்சியம்.
கன்னுபின்னுவெனல் - வாயில் வந்தவாறு உளறுதல்.
கன்னுர் - ஓர்சாதி, [ஓர் மருந்து].
கன்னுவதங்கம் - காதணிவகுப்பு.
கன்னி-குமரி, [அத்தநாள், அழி வில்லாள், அழிவின்மை, இள மை, ஓராறு, ஓரிராசி, கற்று ழை, காக்கணஞ்செடி, தவப் பெண், துர்க்கை, தெய்வப் பெண், பார்வதி.]
கன்னிகம் - மணத்தக்காளி.
கன்னிகாசலம் - மேரு.
கன்னிகாதானம்* - கன்னியை ஒருவனுக்குத் தானமென மணமுடித்துக்கொடுத்தல்.
கன்னிகாரம்-கோங்கு (ஓர்மரம்).
கன்னிகை - கலவியறியாதவள், குமரி, [தாமரைப்பொகுட்டு, பூவரும்பு.]
கன்னித்திங்கள், கன்னிமாதம் - புரட்டாசி மாதம்.
கன்னிநாடு - பாண்டிநாடு.

கன்னிப்பழி - கன்னிகையின் கற்பையழித்தலாலேற்பட்ட பாவம்.
கன்னிமுத்திரை - கன்னித்தன்மை.
கன்னிமை - கன்னிப்பருவம்.
கன்னியாகுமரி - இந்தியாவின் தென்கோடி முனை, ஓர் யாறு.
கன்னியாப்பிரதானம் - கன்னிகாதானம்.
கன்னுவர் - கன்னர்.
கன்னேக்கோல் - நெய்வார் கருவியினென்று.

கா

கா - ஓரெழுத்து, அசைச்சொல் (உ-ம்.) இவளிவட்காண்டிகா, காத்தல், காவடி, காவென்னேவல், சோலை, துலாக்கோல், பூந்தோட்டம்.
காகங்கரைதல் - காகங்கூவல்.
காகதாலியம் - காக்கைபனம்பழத்தின்மீது உட்காரப் பழம்விழுதல், தற்செயல்.
காகதுண்டம் - அகில்.
காகத்துரத்தி - ஆதொண்டை.
காகத்துவசத்தாள் - மூதேவி.
காகநதி - காவிரிப்பூம்பட்டினம், காவேரி நதி.
காகபட்சம் - பக்கக்குடுமி.
காகபுட்டம் - குயில்.
காகப்புள் - காக்கை, அவிட்டநாள்.
காகம் - காக்கை, [வடகீழ்த்திசைப்பாலன்குறி, கிரி.]
காகரி - திப்பிலி.
காகவாகனன் - சனி.
காகளம் - எக்காளம், புள்ளோசை.
காகாபிசாசு - இரத்தமுண்ணும் வாவற்பறவை, ஓர்பேய்.
காகிதம்* - கடுதாசி.
காகுத்தன் - சீராமன்.
காகுளி - இசை, தவிசு, மந்தவிசை, மிடற்றெழுமோசை, மெத்தை.
காகொடி - எட்டிமரம்.
காகோடியர் - நாடகர்.
காகோதரம் - பாம்பு.
காகோலம் - அண்டங்காகம்.
காகோளி - அசோகமரம், தேட்கொடுக்கி.
காக்கட்டான், காக்கணம் - கருவிளைக்கொடி.
காக்கன்போக்கன் - துஷ்டன்.
காக்காய் - காகம், [அவிட்டம்].
காக்காய்ச்சோளம் - ஓர் சோளம்.
காக்காய்ப்பொன்* - போலிப்பொன்.
காக்காய்மூக்கி - கருமுகிற்பாஷாணம்.
காக்காய்வலி - ஓர் நோய்.
காக்கை - காகம், [அவிட்டநாள், காக்குதல்.]
காக்கைக்கொடியாள் - மூதேவி.
காக்கைவேலி - உத்தாமணி.
காங்கேயம் - பொன்.
காங்கேயன் - குமரன், பீஷ்மர்.
காங்கை* - வெப்பம்.
காசம் - ஈளைநோய், [கோழை, தேயமைம்பத்தாறி னென்று, கற்பாஷாணம், பொன், கண்வியாதி.]

காசறை - கத்தூரிமிருகம், மணி, மயிர்ச்சாந்து.
காசனம் - கொலை.
காசனன் - கொலைசெய்வோன்.
காசா - காயாசெடி, நாணல்.
காசாண்டி - ஓர்வகைச் செம்பு.
காசாம்பாரை - ஓர் மீன்.
காசாம்பூமேனியன் - திருமால்.
காசாம்பூவண்ணன் - திருமால், காய்ச்சற்பாஷாணம், துருசு.
காஷாயம்* - காவிச்சீலை.
காசி - ஓர்பட்டணம், [சீரகம்.]
காசிபன் - மரீசி மகாரிஷியின் புதல்வனுன ஓரிருடி.
காசிரம் - வட்டம்.
காசினி - பூமி.
காசு - நாணயம், [காசுக்கட்டி, குற்றம், கோழை, பொன், மணிப்பொது, மாதரணிவடம், வெண்பாவிறுதிச் சீருளொன்று.]
காசுக்கடை* - பொன் விற்கிற கடை.
காசுக்கட்டி* - ஓர் மருந்து.
காசை - கயரோகம், காயா, நாணற்புல்.
காச்சக்கீரை, காச்சுரை - புளிச் சக்கீரை.
காஸ்மீரம்-ஐம்பத்தாறுதேயத்தி னென்று, [குங்குமப்பூ.]
காஞ்சனம் - புன்கமரம், பொன்.
காஞ்சனி - மஞ்சள்.
காஞ்சா* - கஞ்சா.
காஞ்சி - எண்கோவைமணி, ஓர் பண், காஞ்சீவரம், நிலையின் மை, ஓர் மரம், திரண்டு முன் னெதிருன்றுஞ் சேவகர்க்கு மாலை.
காஞ்சிகா, காஞ்சிரம், காஞ்சிரை - எட்டிமரம்.
காஞ்சினி - மஞ்சிட்டி.
காஞ்சுகம், காஞ்சுகி - சட்டை.
காஞ்சொறி, காஞ்சோன்றி - ஓர் செடி.
காடகம் - சீலை.
காடவிளக்கு * - ஓர்வகை விளக்கு.
காடாக்கினி - பெருந்தீ.
காடாந்தகாரம் - பேரிருள்.
காடாற்றுதல் - பிரேதத்தின் தீயைத் தணித்தல்.
காடி - ஓர் மருந்து, புளித்தநீர், [ஊறுகாய், கஞ்சி, கள், நெய், கழுத்து (கந்). ]
காடிகம் - சீலை.
காடு - ஆரணியம், [இடம், ஊர், எல்லை, சுடுகாடு, செத்தை, பாணிநாள், நெருக்கம். (இரா)].
காடுகாள் - வடுகன்றாய்.
காடுவெட்டி - சிறுமண்வெட்டி, மரம் வெட்டுகிறவன், மூாடன்.
காடேறி - ஓர் பிசாசம்.
காடை* - ஓர் பட்சி.
காடைக்கண்ணி - ஓர் தினை.
காடைக்கழுத்தன்* - ஓர் நெல்.
காடைப்புடம் - மூவெருப்புடம்.
காட்சி - பார்வை, தரிசனம், வேடிக்கை, தோற்றம், அறிவு.
காட்சியர், காட்சியவர், காட்சியார் - அறிஞர்.

காட்டம், காஷ்டம் - விறகு, [வெண்கலம்.]
காட்டல்* - காண்பித்தல்.
காட்டா - காட்டுப்பசு.
காட்டாள் * - நாகரிகமில்லாதவன், காண்பிக்கமாட்டாள்.
காட்டிலுமிழி - நாகரவண்டு.
காட்டுதல் - காண்பித்தல், [அத்தாட்சிபண்ணுதல்.]
காட்டுமாவிரை - சாரபருப்பு.
காட்டுமிருண்டி * - பாங்குபாவனையறியாதவன்.
காட்டுவெள்ளரி - பேய்க்கொம்மட்டி.
காட்டெருமை - ஒரெருமை, [எருக்கு, கூகைநீறு, சதுரக்கள்ளி.]
காட்டேரி*-ஓர் துட்டதேவதை.
காட்டை - எல்லை, பதினெட்டிமைப் பொழுதுகொண்ட காலம், திசை, நுனி, மேன்மை.
காணம் - ஓரளவு, கொள்ளு, செக்கு, பொற்காசு, பொன்.
காணல் - குறித்தல்.
காணன் - ஒருகண்குருடன்.
காணுக்காட்சி - முன் பார்த்தறியாத காட்சி.
காணி - நிலம், மனையிருபத்துநான்குகொண்ட ஓர் நிலவளவு, [உரிமை, பொன்னுங்காணி.]
காணிக்கை - தட்சணை, [வெகுமானம்.]
காண்டகம் - ஊர், காடு, கெண்டிகை, நோய், நிலவேம்பு.
காண்டம் - அம்பு, நூற்கூறுபாட்டிஞென்று, அணிகலச்செப்பு, ஆயுதம், எல்லை, கமண்டலம், காடு, குதிரை, கோல், சீலை, திரட்சி, திரைச்சீலை, நீர், தூண், வாச்சியம்.]
காண்டல் - காணுதல், [தோற்றுவித்தல், பெறுதல், வணங்கல்.]
காண்டவம் - காண்டாவனம்.
காண்டாமிருகம்* - ஓர் மிருகம்.
காண்டாவனமெரித்தோன் -அருச்சுனன்.
காண்டிபம், காண்டீபம், காண்டீவம் - அருச்சுனன்வில்.
காண்டீபன், காண்டீவன்-அருச்சுனன்.
காதகம் - கொலை.
காதகன் - கொலையாளி, இசைபாடுவோன்.
காதணி - குண்டலம்.
காதம் - காவதம், [கள், கொலை, நாற்சதுரத்துரவு.]
காதம்பம் - இனிதாகப் பாடுமன்னம், கான்கோழி.
காதம்பரி - குயிற்பேடை, சரஸ்வதி, கள், நாகணவாய்ப்புட்பேடை, ஒரு வடமொழிக் காவியம்.
காதரம், காதரவு - அச்சம், தீவினைத்தொடர்பு, அமைவு.
காதலன் - சிநேகிதன், தலைவன், தோழன், மகன், கணவன்.
காதலி - காதலியென்னேவல், தோழி, மகள், மனைவி.
காதலித்தல் - விரும்பல், நேசத்திலழுந்தல்.

காதல் - ஆசை, விரகம், ஆந்தை கௌளி முதலியவைகளி ஞெலி, கொல்லல், மகன்.
காதற்பரத்தை - சேரிப்பரத்தை.
காதி - விசுவாமித்திரன் தந்தை.
காதிவென்றோன் - அருகன்.
காது - செவி, ஊசியின் துவாரப்பக்கம், [காதென்னேவல், கொலை.]
காதுதல் - கூறுசெய்தல், கொல்லுதல், தறித்தல்.
காதேயன் - விசுவாமித்திரன்.
காதை-கதை, கொலை, சொல்.
காத்தல் - பாதுகாத்தல், [அரசாளுதல், அளித்தல்.]
காத்தவராயன், காத்தான் - ஓர் தேவதை.
காத்தியாயனம் - காத்தியாயன முனிவன் செய்த ஒரு தரும நூல், ஒரு உபநிடதம்.
காத்தியாயனி - காஷாய வுடை தரித்தவள், துர்க்கை.
காத்திரம் - கோபம், [உடம்பு, உறுப்பு, கீரி, சினம், பருமம், யானைமுன்கால்].
காத்திரவேயம் - பாம்பு.
காத்திரன் - பருத்தவன்.
காத்திரி - கீரி, படைக்கலம்.
காத்திரை - ஆயுதம்.
காந்தக்கல் - ஊசிக்காந்தம், சூரிய காந்தம், சந்திரகாந்தம்.
காந்தசத்துரு - நவச்சாரம், வெடியுப்பு.
காந்தம் - காந்தக்கல், பதினெண் புராணத்தொன்று, அழகு.
காந்தருவம் - எண்வகை மணத்தி ஞென்று, அது கன்னியுந் தலைமகனுந் தங்களிற் கூடுவது.
காந்தருவர் - கந்தருவர்.
காந்தல் - தீய்ந்துபோனது, [சினக்குறிப்பு.]
காந்தள் - கார்த்திகைப்பூ, சவக்காரம்.
காந்தன் - கணவன், எப்பொருட்குமிறைவன், தலைவன்.
காந்தாரம் - இசை, இசைப்பாட்டு, ஓர் தேசம், ஓர் பண், காடு, குறிஞ்சியாழ்த்திறம்.
காந்தாரி* - தசநாடியிலொன்று, கொடியவள், துரியோதன னின்தாய், ஓர்பண்.
காந்தாளம்* - எரிச்சல், கோபம்.
காந்தி - ஒளி, [அழகு, உட்டணம், விருப்பம், வைரீயம்.]
காந்திமதி - குபேரன்பட்டணம்.
காந்துகம் - வெண்காந்தள்.
காந்தை - பெண், மனைவி.
காபரா* - சந்தடி.
காபாலம் - சிவன்கூத்து.
காபாலன் - சிவன், சீர்பந்தபாஷாணம்.
காபாலி - சிவன்.
காபி - ஓரிராகம்.
காபிலகாலயூபம் - சிற்பநூல்முப்பத்திரண்டி ஞென்று.
காப்பியம் - பொருட்டொடர்நிலைச் செய்யுள், அது பெருங் காப்பியம் சிறு காப்பியமென இருவகையுண்டு.
காப்பியன் - சுக்கிரன், (கங்.)

காப்பு - கையணியி லொன்று, [ஆடை, கதவு, காவல், திரு நீறு, மதில், காப்பது, நூல் களிற் கடவுள் வணக்கச்செய் யுள்.]
காமகாண்டம் - காமனின் பூவில்.
காமகாரம், காய்மகாரம்* - பொறுமை. (கந்.)
காமக்கிழத்தி - வேசை.
காமக்கோட்டத்தி, காமக்கோட்டி - பார்வதி.
காமசரம் - மாமரம்.
காமசன் - மன்மதன்.
காமதகனன் - சிவன்.
காமதேனு - தெய்வப்பசு.
காமத்துப்பால் - திருக்குறளில் அகப்பொருட்பால்.
காமத்துரோகி-காமங்கடிந்தோன்
காமநாசன் - சிவன்.
காமபாலன் - பலதேவன்.
காமப்பூ - மதனகாமியப்பூ.
காமப்பேய் - காமாதுரன்.
காமம்-காமநோய், [ஆசை, ஊர், நிறைவு, சம்மதி, வீரியம்.]
காமரம் - அடுப்பு, அத்தநாள், இசைப்பாட்டு, வண்டு, ஆலமரம், சோலை.
காமரூபி - பச்சையோணன்.
காமர் - விருப்பு, அழகு.
காமவதி - மரமஞ்சள்.
காமவல்லபம் - மாமரம்.
காமவல்லபை - நிலவு.
காமவல்லி - கற்பகத்திற் படர் கொடி.
காமற்காய்ந்தோன்-சிவன், அருகன்.
காமன் - மன்மதன், [திப்பிலி, வண்டு.]
காமன்மைத்துனன் - விநாயகன்.
காமாட்சி* - பார்வதி.
காமாட்சிப்புல் - காவட்டம்புல்.
காமாட்டி - மூடன், [மண்வெட்டுவோன்.]
காமாதுரன் - காமி.
காமாந்தகன் - காமமிக் குடையோன், சிவன்.
காமாரி - சிவன்.
காமாலே, காமாளை - கண்ணோயு ளொன்று.
காமி - காமவெறியன், [உவர் மண், பொன்னிமிளை.]
காமிகம் - சைவாகமத்தொன்று.
காமியக்கல் - கோமேதகம்.
காமியம் - இச்சிக்கும் பொருள், கன்மமலம்.
காமுகம் - அசோகமரம்.
காமுகர் - தூர்த்தர், நாகரிகர்.
காமுறல் - ஆசைப்படல்.
காம்பி - நீரிறைக்குங் கருவிகளு ளொன்று.
காம்பீரம், காம்பீரியம்* - மேன்மை, ஆழமுடைமை.
காம்பு - இலை முதலியவற்றின் காம்பு, [பட்டுச்சீலை, பூந்தாள், மரக்கொம்பு, மூங்கில்.]
காம்போசம் - ஓர் தேசம், பதி னெண்பாடையிலொன்று.
காம்போதி - ஓர் பண்.
காயகம் - மருட்டுவித்தை, ஓர் மருந்து, பாடுதல்.
காயசித்தியானேன் - சூதபாஷாணம்.

காயத்திரி - ஒருவேத மந்திரம், சரஸ்வதி.
காயம்-உடல், [ஆகாயம், பெருங் காயம், கார்ப்பு, மிளகு, வெண் காயம், வயிரம், மூலதனம்].
காயல் - சுரவியாதி, [உப்பளம், கழிநிலம்.]
காயா - காசாமரம்.
காயாபுரி - சரீரம்.
காயாம்பூமேனியன் - திருமால்.
காயிகம் - காயத்தாற் செய்யப் படும் புண்ணியம். (திருவி.)
காய் - காயென்னேவல், காய்.
காய்சினவழுதி-தலைச்சங்கம் நிறு விய பாண்டியர்களுள் முதல் வன்.
காய்ச்சிறக்கு, காய்ச்சுரை-புளிச் சைக்கீரை.
காய்ஞ்சொறி - ஓர் செடி.
காய்தல் - உலர்தல், [கோபம், சினக்குறிப்பு, பிரகாசித்தல், கெடுதல், வெறுத்தல்.]
காய்ப்பறங்கி - கோழிக்கு வரு மொருநோய்.
காய்ப்பு - காய்த்தல், தழும்பு, வெறுப்பு.
காய்வேளை - ஓர் பூடு.
காரகம் - காரணத்துவம், செயல், வினைகொண்டு முடிவது.
காரகன் - செய்பவன். (சிவத.)
காரடம் - செப்படிவித்தை.
காரணம்-எது, கருவி, நோக்கம், கருத்தாமுதற் பல காரணம்.
காரணன் - கடவுள், அரசன், நிமித்தகருத்தா, மிரதபாஷா ணம்.
காரணி - உமை.
காரணிகன் - பரீட்சகன்.
காரண்டம், காரண்டவம் - நீர்க் காக்கை.
காரம்-உறைப்பு, எழுத்தின் சாரி யை (உ-ம்.) ஆகாரம், அக்கிரா காரம், யுத்தம், துணியினழு க்கு நீக்குங் காரம், பொரிகா ரம், பொன், மரவயிரம்.
காரல் - காருதல், ஒரு மீன்.
கார்வல்லி - பாகற்கொடி.
காரா - எருமை.
காராகாரம், காராக்கிருகம்-சிறை ச்சாலை.
காராடு - வெள்ளாடு.
காராமணி* - ஓர் பயறு.
காராம்பசு* - மறுநிறங்கலவாத கறுத்த பசு.
காராம்பி - நீரிறைக்கும் பூட்டை.
காராளர் - வேளாளர்.
காரான்-எருமை. (சிலப். 10:12).
காரி-கடையெழுவள்ளலிலொரு வன், இந்திரன், ஐயனர், கரி க்குருவி, கருநிறப்பொருள், களர்நிலம், காக்கை, ஓராறு, சனி, நஞ்சு, வயிரவன்.
காரிகம் - காவிக்கல்.
காரிகை - அமுதசாகரனியற்றிய ஓர் யாப்பு நூல், அழகு, ஓர் ஆரியச் செய்யுள், கலித்துறை, பெண்.
காரிக்கம் * - சலவைசெய்யாத வெள்ளைத்துணி.
காரிதாய் - வடுகி.
காரிப்பிள்ளை - கரிக்குருவி.

காரியகாரன், காரியஸ்தன்* - வேலையிலே திறமையுடையவன்.
காரியசாதகம், காரியசித்தி - காரியானுகூலம்.
காரியம் - பயன், செய்கை.
காரியாறு - ஓர் யாறு.
காரிரத்தம் - ஆடுதின்னாப்பாளை.
காரீடம் - உலர்ந்த சாணி.
காரீயம்* - கரியவீயம்.
காருகபத்தியம் - வேதாக்கினி மூன்றினொன்று.
காருகர் - ஓவியர், நெய்வார்.
காருடம் - அட்டாதச புராணத்தொன்று, ஒரு உபநிடதம், கலைஞான மறுபத்து நான்கினொன்று, கறிப்புடோல், மருக்காரை, கருடப்படை.
காருணி - கிருபையுடையவன், வானம்பாடி.
காருணிகம், காருணியம் - கிருபை.
காருண்ணியம்* - காருணியம்.
காரூடம் - காருடம்.
காரை - சுண்ணச்சாந்து, [ஓர் செடி, ஓர்மீன், சிறைச்சாலை.]
காரைக்காலம்மை - சிவனடியார் அறுபத்துமூவரிற் சேர்ந்த ஒரு தவப்பெண்.
காரோடர் - உறைகாரர்.
கார்-எரிற்பூட்டிய விரும்பாணி, கார்நெல், [ஆவணி புரட்டாசியின் பருவம், இருள், கருங்குரங்கு, கருமை, காரென்னேவல், நீர், மேகம், வெள்ளாடு.]
கார்கோணி - தேள்கொடுக்கி.
கார்கோளி - கடல், கோரைப்புல், முத்தக்காசு.
கார்கோள் - கடல், சனி.
கார்க்கோடகன், கார்க்கோடன்- அட்டநாகத்தொன்று, கருடக்கல்.
கார்க்கோழி - கருங்கோழி, கருஞ்சீரகம், கருங்கொள்.
கார்த்தபம் - கழுதை.
கார்த்தவீரியார்ச்சுனன் - அறுவகைச் சக்கரவர்த்திகளிலொருவன்.
கார்த்திகேயன் - முருகன்.
கார்த்திகை - ஓர்மாதம், ஓர்நாள், [காந்தள், துர்க்கை.]
கார்த்திகைக்கிழங்கு - கலப்பைக்கிழங்கு.
கார்த்திகைப்பூ - காந்தள்மலர்.
கார்நாற்பது - ஒரு நூல்.
கார்புகாவரிசி - கார்ப்போகரிசி.
கார்ப்பண்ணியம்- நற்செயலிலும் பொருளை விடாது காக்கவிரும்பல், உலோபம், வறுமை.
கார்ப்பாசம் - பருத்திநூற்சீலை.
கார்ப்பு - உறைப்பு, துவர்ப்பு.
கார்ப்போகரிசி* - ஓர் சரக்கு.
கார்மலி - கடல்.
கார்முகம் - வெண்கருங்காலி, வில்.
கார்முகில் - கார்காலத்து மேகம்.
கார்வண்ணர் - அசுரர்.
கார்வண்ணன் - திருமால்.
காலகம் - சேங்கொட்டை.
காலகரணம் - காலதாமதம்.
காலகாலன் - சிவன்.
காலகூடம் - காளகூடம் (நஞ்சு).

காலக்கணிதர் - சோதிடர்.
காலசம் - காற்று, பேராலவட்டம்.
காலசேயம் - மோர்.
காலட்சேபம் - காலங்கழித்தல், சீவனம்.
காலதண்டம் - நமனாயுதம், மரணம்.
காலதர் - பலகணி. (சிலப்.)
காலத்திரயம் - முக்காலம்.
காலநேமி - ஓர் மன்னன்.
காலபரிச்சேதம் - ஒருகாலத்துண்டு ஒருகாலத்தின்றென்பது.
காலபாசம் - நமன்கயிறு.
காலம் - பொழுது, விடியல், சமயம்.
காலயுத்தி - ஓர் வருடம்.
காலல் - கொப்பளித்தல், ஒலி முதலிய வீசல், சத்திபண்ணல்.
காலவம் - நெருப்பு.
காலன் - சனி, நமன், நீலபாஷாணம்.
காலா* - ஓர் மீன்.
காலாகாலம் - அந்தந்தக் காலம், தக்கசமயமும் தகாதசமயமும்.
காலாடி - திரிவோன், [முயற்சியுடையோன்.]
காலாந்தகன் - சிவன், நமன்.
காலாந்தரம்* - காலநடை.
காலாயுதம் - கோழிப்பறவை.
காலாழி* - காலின் மோதிரம்.
காலாழ் - குழைசேறு. (சூடா.)
காலாள் - கால்நடைகாரன்.
காலாறுதல்* - ஓய்தல்.
காலி - கழிவுநாள், கன், பசக்கூட்டம்.
காலியம் - விடியல்.
காலியாங்குட்டி* - ஓர் பாம்பு.
காலிலி - அருணன், காற்று, பாம்பு, மீன்.
காலூரம் - தவளை.
காலேகம் - கலவைச்சாந்து.
காலேயம் - கஸ்தூரிமஞ்சள், பசுக்கூட்டம், மோர், கள்.
காலை - விடியற்காலம், [பொழுது, சமயம்.]
காலோலம் - அண்டங்காகம்.
கால் - பாதம், காற்பங்கு, வாய்க்கால், [ஏழனுருபு (உ - ம்.) ஊர்க்கானிவந்த பொதும்பர், காலன், காற்று, குறுந்தறி, கையூன்றுகோல், தூண், தேருருள், பூந்தாள், பொழுது, மகன், மரக்கால், முளை, வழி.]
கால்கட்டு - தடை, சமுசாரபந்தம்.
கால்கழுவுதல்* - மலங்கழுவுதல்.
கால்செய்வட்டம் - விசிறி.
கால்நடை* - ஆடுமாடுகள்.
கால்மாடு* - காற்புறம்.
கால்வழி - சந்ததி, [சிறுவழி.]
கால்வாங்குதல் - எழுத்துக்களின் காலிழுத்தல், சாதல், பின்னிடுதல்.
கால்வாய் - வாய்க்கால்.
காவடி* - காவுதடி.
காவணம் - பந்தல், மண்டபம். [ம்.
காவதம் - ஏழரைநாழிகை வழிதூரம்.
காவலர் - அரசர், கணவர், காவற்காரர்.
காவலன் - அரசன், தலைவன், மெய்காப்பாளன்.

காவல் - காத்தல், சிறைச்சாலை, [மதில், கவசம்.]
காவற்கடவுள் - திருமால்.
காவாரம் - நீர்ப்பாசி.
காவாலி - வீண்பிதற்றன், வஞ்சகன்.
காவாளை - காய்வேளை, காட்டு மல்லிகை.
காவி - காவிக்கல், பற்காவி, கருங்குவளை.
காவிதியர்-மந்திரிகள், கணக்கர்.
காவியங்கிரி - தணிகைமலை.
காவியம் - காப்பியம்.
காவிரி - காவேரி.
காவிரிப்பூம்பட்டினம்* - ஓரூர்.
காவிளை - காய்வேளைப்பூடு.
காவு* - பலி.
காவுதல்- தோட்சுமையெடுத்தல்.
காழகம் - சீலை, கடாரமென்னு மூர், கருமை, சோறு.
காழி - சீகாழி.
காழியர் - வண்ணார், பிட்டுவாணிகர்.
காழியர்கோன் - திருஞானசம்பந்தன்.
காழ் - காழென்னேவல், ஒளி, பரற்கல், மணிவடம், பளிங்கு, வயிரம், வித்து, கருமை.
காழ்த்தல் - உறைத்தல், வயிரங்கொள்ளல், முற்றுதல்.
காழ்ப்பு - உறைப்பு, மரவயிரம்.
காளகண்டன் - சிவன்.
காளகந்தரி - பார்வதி.
காளகம்-எக்காளம், மருக்காரை.
காளகூடம் - ஆலகாலவிடம்.
காளத்தி, காளஸ்தி, காளாஸ்திரி - ஒரு புண்ணிய க்ஷேத்திரம்.
காளபதம் - மாடப்புறா.
காளமுகி - கல்பொழியு மேகம்.
காளமேகம் - கருமுகில், ஓர் புலவன்.
காளம் - எட்டிமரம், கருமை, சிறுசின்னம், சூலம், நஞ்சு, மேகம், அவுரி, கழு.
காளவனம் - சுடுகாடு.
காளவாய் - நீறுசுடுங்காளவாய், [கழுதை.]
காளாஞ்சி - எச்சிற்படிக்கம்.
காளாத்திரி - பாம்பின் நச்சுப் பல்லிலொன்று.
காளாமுகர் - ஒருசார் சைவர்.
காளாம்பி - காளான். (சிறு.)
காளி - பார்வதி, [அட்டாதசவுபபுராணத்தொன்று, சிங்கம், பாம்பின் நச்சுப் பல்லிலொன்று, எட்டிமரம், நஞ்சு, கக்கரி, கருநிறத்தி.]
காளிங்கமர்த்தனன் - கிருஷ்ணமூர்த்தி.
காளிங்கன் - ஓர் பாம்பு.
காளிதாசன் - ஓர் புலவன்.
காளிந்தம் - ஏலம்.
காளிந்தி - கண்ணன் மனைவியரிலொருத்தி, சகரன்றாய், தேக்கின் விசேடம், நீர்ப்பசு, யமுனையாறு, வாகைமரம்.
காளிமம், காளிமை - கறுப்பு.
காளியன் - ஓர் பாம்பு.
காளை - இளவெருது, கட்டிளமையோன், [இளையோன்,

ஆண்மகன், பாலைநிலத்தலைவன்.]
காறல்* - கார்ப்பானது.
காறுக்கருணை - ஓர் கிழங்குச்செடி.
காறு - அளவு, கொழு.
காறுதல்* - நெய் முதலிய காறுதல்.
காறை - பெண்கள் கழுத்தணியிலொன்று, நிலச்சாந்து.
காறையாடுதல்* - சாந்திடுதல்.
காறையெலும்பு - பூணாரவெலும்பு.
காற்குளம் - பூசநாள்.
காற்சீப்பு - சந்தெலும்பு.
காற்பாசம் - பருத்தி, பருத்திப்பஞ்சு.
காற்புத்தி - தாளகம்.
காற்றண்டை - ஓர் காலணி.
காற்றூடி - காற்றிற்பறக்கும் பட்டம், [நிலையில்லாதவன்.]
காற்றின்சகாயன் - தீ.
காற்றுநாள் - சோதிநாள்.
காற்றுமுந்துநாள் - விசாகம்.
காற்றுவாக்கு, காற்றுவாட்டம்* - காற்று வீசும் பக்கம்.
கானகச்சங்கம் - நாகரவண்டு.
கானகதட்டான் - செவ்வட்டை.
கானகநாடன்-குறிஞ்சி நிலத்தலைவன்.
கானகம் - காடு, [கால்நகம், கருஞ்சீரகம்.]
கானக்குதிரை - மரை.
கானக்குறத்தி - முலைப்பால், தேன்.
கானநாடன் - முல்லைநிலத் தலைவன்.
கானம் - இராகம், கீதம், [காடு, சோலை, வாசனை, வானம்பாடி, மிகுதி.]
கானல் - காடு, சூரியகிரணம், பேய்த்தேர், [உப்பளம், ஒளி, கடற்கரைச்சோலை, கழி.]
கானல்வரி - இசைப்பாவகையுளொன்று.
கானவர் - குறிஞ்சிநிலமாக்கள், முல்லைநிலமாக்கள், வேடர்.
கானவன் - வேடன், குரங்கு.
கானனம் - காடு.
கானு - சுக்கானிற் கைப்பிடி.
கானுங்கெளிறு - ஓர் மீன்.
கானுங்கோழி - கோழியிலோர் பேதம்.
கானிலிந்திரன் - கொடுவேலி.
கானீனன் - கன்னன், கன்னி பெற்ற பிள்ளை.
கான்-எழுத்தின் சாரியை (உ-ம்.) ஐகான், காடு, மணம், செறிவு.
கான்மரம் - ஆலமரம்.
கான்மா - பன்றி.
கான்முளை - பிள்ளை.
கான்யாறு - முல்லைநிலத்தாறு.
கான்றல் - சத்திசெய்தல்.
கான்றை - ஓர் முட்செடி.

## கி

கிகிணி - காக்கணஞ்செடி, வலியான்.
கிக்கிரி - மீன்குத்திப்புள்.
கிங்கரர்-ஏவல்செய்வோர், தூதர், ஓர்சாதி.
கிங்கரி - தாசி, வேலைக்காரி.

கிங்கிணி - சிறு சதங்கை, கிலுகிலுப்பைச்செடி.
கிங்கிலியர் - குற்றேவல் செய்வோர்.
கிசம், கிசலம், கிசலயம், கிசலை, கிசாலம் - தளிர்.
கிசில் - ஓர் பிசின்.
கிசுகிசுத்தான் - வாலில்லாக்காற்ருடி.
கிச்சடி* - ஓர் உணவுப்பொருள்.
கிச்சலாட்டம்* - தொந்தரை.
கிச்சிலி* - ஓர் நாரத்தை.
கிச்சிலிக்கிழங்கு - ஓர் வாசனைக்கிழங்கு.
கிச்சு - நெருப்பு. (இரா.)
கிஞ்சம் - சிறுமை, புளிமாமரம்.
கிஞ்சன் - தரித்திரன்.
கிஞ்சிதம், கிஞ்சித்து - அற்பம், புளிமாமரம்.
கிஞ்சுகம் - சிவப்பு, கேகயப்புள், கிளி, முண்முருக்கு.
கிஞ்சுபம் - அசோகு. (இரா.)
கிடக்கை - கிடத்தல், பூமி, படுக்கை.
கிடங்கு-பொக்கிஷவீடு, [அகழி, குளம், சிறைச்சாலை, குழி.]
கிடாசுதல்* - அப்புறமெறிதல்.
கிடாரம் - கொப்பரை.
கிடாரி* - கடாரி.
கிடி - பன்றி, மருட்பன்றி.
கிடுகிடுத்தல் - அசைதல், அஞ்சல், நடுங்குதல்.
கிடுகு - தேரின் மரச்சுற்று, பன்னுங்கு முடைந்த வோலைக்கீற்று, [கேடகம், சட்டப்பலகை, ஓர்பறை.]
கிடுபிடி - ஓர் வாச்சியம்.
கிடுமுடி - ஓர் பறை, சந்தடி.
கிடை - கிடையென்னேவல், [உவமை, சடை, படுக்கை, வேதம் பயிலிடம், வேதவொலி.]
கிடைச்சரக்கு - அநேகநாட் கிடந்த சாமான்.
கிட்கிந்தை - மைசூர் ராஜ்ய வடபாகத்தில் பம்பாநதி உற்பத்தி ஸ்தானத்தேயுள்ள மலை: இங்கு வாலி சுக்கிரீவன் அரசு புரிந்தனர்.
கிட்டங்கி - விலைச்சரக்குக ளிருக்குமிடம்.
கிட்டம் - இருப்புக்கிட்ட முதலியன, [சமீபம், மலம்.]
கிட்டலர், கிட்டார் - பகைவர்.
கிட்டி - இடுக்குத்தடி, [கைத்தாளம், தலையீற்றுப்பசு, நாழிகைவட்டில், பன்றி, சிறுவர் விளையாட்டுக்கருவியிலொன்று.]
கிட்டிக்கயிறு - பூட்டுக்கயிறு.
கிட்டிக்கிழங்கு- சின்னிக்கிழங்கு.
கிட்டிக்கோல்* - கைக்கிட்டி.
கிட்டிணம்-கறுப்பு, மான்றேல்.
கிட்டிணன் - கண்ணபிரான்.
கிட்டிணி - கிருஷ்ணாநதி.
கிட்டியடித்தல்-ஓர் விளையாட்டு.
கிட்டினன் - திப்பிலி.
கிட்டுமானம் - சமீபம்.
கிணகர் - அடிமைகள்.
கிணறு - கூவல், கேணி.
கிணுட்டு - ஓலைத்தளிர்.
கிணி - கைத்தாளம்.

கிணிதம் - வாயுதேவன்வில்.
கிணின்கிணினெனல்-ஈரடுக்கொலிக்குறிப்பு.
கிணே - மருதப்பறை, தடாரிப்பறை, உடுக்கை. (புறநா.)
கிணைமகள் - விறலி.
கிண்கிணி - சதங்கை.
கிண்டல் - தோண்டல், ஆராய்தல்.
கிண்டன்* - உரப்புத்துணி.
கிண்டுதல் - களி சமைத்தல், கிளறுதல், தோண்டுதல், பகையெழுப்பல்.
கிண்ணம் - சிறுவட்டில், [நாழிகைவட்டில்.]
கிண்ணரம் - ஓர் வீணை.
கிண்ணி - கிண்ணம், [கத்தியின் கைப்பிடியுறை, குதிரைமேற் குளம்பு, நண்டின் சிறுகால்.]
கிதவம் - வஞ்சகம். (சப்த.)
கிதி - பத்துலட்சங் கோடா கோடி. [கோ.)
கித்தம்-செய்யப்பட்டது. (திருக்
கித்தான்* - ஓர்வகை உரப்புத்துணி.
கிஸ்தி*-நிலமுதலியவற்றின்வரி.
கிந்துதல் - நொண்டி நடத்தல், படங்குந்தி மிதித்தல்.
கிமித்துக்கினம் - புழு, புழுக்கரணம்.
கிம்புரி - தோளணி, முடியுறுப்பு, யானைக்கொம்பிற் பூண்.
கிம்புருடர் - கந்தருவர்.
கியாதம் - புகழ், மேன்மை.
கியாதி - புகழ், மேன்மை, [பிருகுவின் மனைவி.
கியாபகம்* - நினைவு.
கியால்*-ஓர்வகை யிசைப்பாட்டு.
கியானம்* - ஞானம்.
கிரகசாரம்* - கிரகநடை.
கிரகணம் - சூரியசந்திரர்களுக்கு இராகு கேதுக்களால் வரும் பீடை, கட்டுதல், பற்றுகை.
கிரகத்தன், கிரகஸ்தன் - இல்வாழ்க்கையினன்.
கிரகபதி - சூரியன்.
கிரகமாலிகை - கிரகவொழுங்கு.
கிரகம்-கோள், தாளப்பிரமாணம் பத்தினொன்று, பற்றுதல்.
கிரகித்தல் - உணர்ந்துகொள்ளல், ஏற்றுக்கொள்ளல், கற்றல், வெளவல்.
கிரஞ்சனம் - முருங்கை.
கிரணமாலி - சூரியன்.
கிரணம் - ஒளி, சூரியகிரணம்.
கிரது - யாகம், சங்கற்பம். (சப்.)
கிரந்தம் - ஆரியம், சாத்திரம்.
கிரந்தி - மேகவூறல், [ஏலத்தோல், நெல்லிப்பருப்பு.]
கிரமம்* - முறைமை, ஒழுங்கு.
கிரயம்* - விலை.
கிரவுஞ்சம் - ஒரு மலை, அன்றில்.
கிராகம் - ஆமை, பற்றுதல்.
கிராக்கி* - அரியவிலை.
கிராடம் - ஓர் தேசம்.
கிராணம் - கிரகணம், [சிறுவட்டில், மூக்கு.]
கிராணி - ஓர் கழிச்சல்நோய்.
கிராதர் - மிலேச்சர், வேடர்.
கிராதி - மரத்தினாலாய தடுப்பு.
கிராமணி - சாணருட் பெரியவன், [கிராமமுற்றோன்.]

கிராமதேவதை* - ஊர்காக்குந் தேவதை.
கிராமம் - நூறுகுடியுள்ளவூர், மருதநிலத்தூர், நீர்வாழ்பறவை
கிராமியம் - கிராமத்தி லுள்ளது, இழிசனர்வழக்கு, நாட்டுச் சொல்.
கிராமியன் - கிராமவாசி, மூடன்.
கிராம்பு*-கராம்பு(இலவங்கப்பூ).
கிராய் - புற்பொழி, வயிரநிலம்.
கிராய்த்தல் - சுவர் முதலியவற்றைத் தேய்த்துத் துலக்கல்.
கிராவணம், கிராவம் - கல், மலை.
கிரி - மலை, பன்றி, பிணையாளி.
கிரிகன்னி-வெள்ளைக்காக்கணம்.
கிரிகை - கிரியை.
கிரிசம் - இளைப்பு.
கிரிசரம் - மலையிற்பிறந்த யானை.
கிரிசு, கிறீசு - குற்றுவாள்.
கிரிதசாக்கிரி - ஓர் பண்.
கிரிமல்லிகை - மலைமல்லிகை, வெட்பாலை.
கிரிமா - கரிமா (அட்டயோகத் தொன்று.)
கிரியாத்துச்செடி - நிலவேம்பு.
கிரியாபாதம் - கிரியைநிலை.
கிரியை - தொழில், சைவசமய நிலை நான்கிளென்று, பூசை.
கிரீசன் - சிவன். (பிங்.)
கிரீசை - பார்வதி.
கிரீடம் - முடி, [வேலிப்பருத்தி.]
கிரீடாரத்திநம் - இரதிதேவி.
கிரீடி - கிரீடியென்னேவல், மன்னன், அருச்சுனன்.
கிரீடித்தல் - புணர்தல், விளையாடுதல்.
கிரீடை - புணர்ச்சி, மகளிர்விளையாட்டு.
கிரீட்டி - பிரண்டை.
கிரீபம், கிரீவம் - கழுத்து.
கிருகம் - வீடு, மனைவி. (சப்)
கிருகரன் - கவுதாரி, சிவன்.
கிருஷி - பயிர், பயிர்செய்கை.
கிருஷிகன் - பயிரிடுபவன்.
கிருட்டி - ஓரீற்றுப்பசு, பன்றி, பிரண்டை.
கிருட்டிணபக்கம், கிருஷ்ணபட்சம் - அபரபக்கம்.
கிருட்டிணபானம் - எட்டிமரம்.
கிருட்டிணம், கிருஷ்ணம் - கறுப்பு, சந்திரன் பின்பக்கம், மான், மிளகு, காகம், குயில்.
கிருட்டிணவல்லி - நன்னாரி.
கிருட்டிணவேணி - ஓர் நதி.
கிருட்டிணன் - அருச்சுனன், கண்ணன், வியாசன்.
கிருட்டிணசைனம், கிருட்டிணஞ்சனம் - மான்றோல்.
கிருட்டிணி - காக்கணஞ்செடி.
கிருட்டிணை - ஓர் யாறு, கருவட்டை, திரௌபதி, வால்மிளகு, கடுகு.
கிருதம் - செய்யப்பட்டது, நெய், முதல்யுகம், நீர்.
கிருதரன் - சினமுந் தும்மலும் வெம்மையும் விளைக்கும் வாயு.
கிருதன் - கிருஷ்ணன்மாமன், பிலுக்கன்.
கிருதார்த்தர் - கருமமுடித்தோர், பேறுபெற்றோர்.
கிருது - செருக்கு, [யாகம்.]

கிருத்தி - தோல், அறிவு, ஓர் தேவதை.
கிருத்திகை* - கார்த்திகை.
கிருத்திமம் - தோல், பூதகணம், பொய், வஞ்சனை.
கிருத்தியம் - தொழில், நித்திய கருமம்.
கிருத்திரமம், கிருத்திரிமம் - பொய், வஞ்சனை.
கிருத்துவம்* - செருக்கு.
கிருபணன் - உலோபன்.
கிருபன், கிருபாசாரியன் - குரு குலத்தாரின் ஒரு வில்லாசிரியன்.
கிருபாகரன், கிருபாமூர்த்தி, கிருபாலு, கிருபாளு - தயையுடையவன்.
கிருபி - துரோணன்மனைவி.
கிருபை* - அருள், இரக்கம்.
கிருமி - புழு.
கிருமிசத்துரு - புரசம்விரை.
கிருமிநாசம் - ஓமம், குராசானி யோமம், பலாசம்விரை, வேப்பீர்க்கு, பங்கம்பாலை.
கிலம் - அற்பம், பழுதானது.
கிலி* - பயம்.
கிலியம்பறை* - சீர்கேடு.
கிலீவம் - நபுஞ்சகம்.
கிலுகிலுப்பை - ஓர் செடி, ஓர் விளையாட்டுக்கருவி.
கிலுகிலெனல் - ஒலிக்குறிப்பு.
கிலுங்குதல் - கிலுகிலுத்தல்.
கிலுத்தம் - முன்கைச்சந்து.
கிலேசம்* - கவலை, துன்பம்.
கில்லம் - கழுத்து. (பிங்.)
கிழக்கதை - வீண்கதை, பழங்கதை.
கிழக்கு - கீழ்த்திசை, கீழ்.
கிழக்குவெளுத்தல்* - கீழ்த்திசை வெளுத்துவிடுதல்.
கிழங்கான்* - ஓர் மீன்.
கிழங்கு* - கந்தம்.
கிழடு - முதிர்வயதுள்ளது.
கிழட்டுப்பிணம்* - முதிர்வயதாகிச் சாகுந்தறுவாயி லிருக்குஞ் சீவன். [வி.
கிழத்தி-உரியவள், தலைவி, மனை
கிழமை - வாரம், [உரிமை, கடமை, குணம், சம்பந்தம், மாட்சிமை, மூப்பு.]
கிழம்* - கிழத்தன்மை.
கிழவன்-மூப்புடையோன், [உரியவன், கணவன், தலைவன், பரணிநாள்.]
கிழார் - நீரிறைக்கும் பூட்டை. (சிலப்.) உரியவர், தோட்டம்.
கிழான் - உரியோன், சூரியன், தயிர்.
கிழி-கிழியென்னேவல், [எழுது படம், கீற்று, நிதிப்பொதி, கிழிந்த துண்டு.]
கிழிதல் - பிளத்தல், பீறுதல்.
கிழித்தல் - கிழிக்குதல், [கீறல்.]
கிழியல் - கிழிந்த சீலை.
கிழிவு - கிழிதல், காரியக்கேடு.
கிளத்தல் - எழுப்பல், [சொல்லுதல்.]
கிளப்பல்-எழுப்பல், உயர்த்தல், கிண்டுதல், ஏவிவிடுதல்.
கிளம்பல் - எழும்பல், வளர்தல்.
கிளருதல் - கிளர்தல்.

கிளர் - கிளரென்னேவல், [ஒளி, பூந்தாது.]
கிளர்ச்சி - மேலோங்குகை, இறுமாப்பு, எழுச்சி.
கிளர்தல் - ஒளிர்தல், வளர்தல்.
கிளவி - சொல்.
கிளறுதல் - கிண்டுதல், கிளப்புதல், வெளியாக்கல்.
கிளி* - கிள்ளை.
கிளிச்சிறை - நால்வகைப்பொன்னிலொன்று.
கிளிஞ்சிலாறு - கிளியாறு (புதுவைக்குத் தெற்கிலுள்ள ஓர் நதி.]
கிளிஞ்சில் - ஏரல்.
கிளிமூக்கன் - கற்றாழை.
கிளுவை - ஓர் பறவை, ஓர் மீன்.
கிளை - மரக்கிளை, கிளையென்னேவல், [உறவு, ஒரு பண், யாழிசை. (பிங்), மூங்கில்.]
கிளைகூட்டல் - ஆந்தைகள் கூச்சலிடுதல்.
கிளைஞர் - உறவோர், தோழர்.
கிளைத்தல்-நெருங்கல், நிறைதல், கிண்டல், கிளைவைத்தல்.
கிள்ளல் - கிள்ளுதல்.
கிள்ளாக்கு - உண்டியற்சீட்டு.
கிள்ளி - சோழன்.
கிள்ளுக்கீரையாயெண்ணல்-அற்பமாய் மதித்தல்.
கிள்ளை - கிளி, குதிரை. (சேது)
கிறி - பொய், வழி.
கிறீச்சனம் - ஓர் நோய்.
கிறுகிறுப்பு* - தலைச்சுழற்சி.
கிறுக்கு* - அகம்பிரமம்.
கிறுக்குதல் - எழுதல், கிறுக்கல்.
கிறுது* - குறும்பு.
கின்னம் - உபத்திரவம், கீழ்மை.
கின்னரம்-வீணை, [ஆந்தை, இசையின் குணகுணமறியு மொரு பறவை.]
கின்னரர் - கந்தருவர்.
கின்னரர்பிரான், கின்னரேசன் - குபேரன்.
கின்னி - மழைக்கிளி.

## கீ

கீ - ஓரெழுத்து, கிளிக்குரல்.
கீகசம் - எலும்பு. (சேது)
கீசகம் - குரங்கு, தலைத்திராணம். (பிங்), மூங்கில்.
கீசகன் - ஓரரசன்.
கீசகாரி - வீமன்.
கீசபர்ணம், கீசபர்ணி-நாயுருவி.
கீசன்-சூரியன், போர்வல்லோன்
கீச்சான் - ஓர் மீன், குழந்தை, [ஓர் விளையாட்டு, ஓர் புள்.]
கீச்சிடுதல் - கத்துதல்.
கீச்சுக்கிட்டம் - இருப்புக்கறள்.
கீச்சுக்கீச்சுத்தம்பலம*-ஓர் விளையாட்டு.
கீச்சுக்கீச்செனல் * - ஒலிக்குறிப்பு.
கீச்சுக்குரல்* - மெல்லிய குரல்.
கீடமணி - மின்மினிப்பூச்சி.
கீடம் - கோற்புழு, புழு, வண்டு.
கீணம், க்ஷீணம் - குறைபாடு, கேடு.
கீணர் - அற்பர், வறியர்.
கீண்டல் - கிண்டுதல், கிழித்தல்.
கீதம் - இசைப்பாட்டு, [வண்டு.

கீதவம் - ஊமத்தை.
கீதவேதம் - சாமவேதம்.
கீதாரி - இடையன்.
கீதி-கருங்காலி, கீதம்பாடுபவன்.
கீதை - பாட்டு, பூருவசரித்திர மெடுத்துக் காட்டல், இஃது பகவற்கீதை, பிரமகீதை, உத்தரகீதை, இரிபுகீதை, சிவகீதை யெனப்படும்.
கீரந்தையார் - இடைச்சங்கப்புலவருளொருவர்.
கீரம் - கருங்கிளி, கிளி, பால்.
கீரன்- சோமசுந்தரக்கடவுளோடு வாதாடிய ஒரு தெய்வப்புலவன்.
கீரி, கீரிப்பிள்ளை* - நகுலம்.
கீரிப்பாம்பு, கீரிப்பூச்சி - வயிற்றிலுள்ள ஒரு செந்து.
கீரை* - இலைக்கறிப்பொது.
கீர் - ஒலிக்குறிப்பு, வார்த்தை.
கீர்த்தனம், கீர்த்தனை - புகழ்.
கீர்த்திப்பிரதாபம் - மிகுகீர்த்தி.
கீர்த்திமான் - புகழாளன்.
கீர்வாணம் - வடமொழி.
கீலக-நாற்பத்தெட்டாவதாண்டு.
கீலகம் - தந்திரம், பொருத்து, ஆணி.
கீலம் - ஆப்பு, சுவாலை, கிழிவு.
கீலாலம் - உதிரம், அமுதம், நீர்.
கீலுதல் - கீண்டுதல், [கிழித்தல், பிளத்தல்.]
கீல் - கதவின்கீல், யாக்கையின் சந்து, [நுண்மை, கிசில்.]
கீழண்டை* - கிழக்குப்புறம்.
கீழறை - கீழ்வீடு.
கீழாநெல்லி-கீழ்க்காய்நெல்லி.
கீழுலகம், கீழுலகு - நரகு, பாதலம்.
கீழேபோதல்* - வரவரக் குறைதல்.
கீழைத்திசை - கீழ்த்திசை.
கீழைப்புறம் - கிழக்குப்புறம்.
கீழோர்-கீழ்மக்கள், சண்டாளர்.
கீழ்-கீழிடம், [ஈனம், ஏழனுருபு, (உ-ம்.) ஆலநீழற்கீழன்றொரு நால்வருக் கருநெறி, கடிவாளம், கிழக்கு, பள்ளம்.]
கீழ்தரம்* - இழிந்ததரம்.
கீழ்தல் - பிளத்தல், (சீவ. சிந்.)
கீழ்த்திசை - கிழக்கு.
கீழ்த்திசைப்பாலன் - இந்திரன்.
கீழ்ப்படிதல்*- அடங்கிநடத்தல்.
கீழ்ப்படிவு - அமைவு.
கீழ்மகன் - ஈனன், சனி.
கீழ்மடை* - கடைமடை.
கீழ்மை - ஈனம், தாழ்மை.
கீழ்வாய் - சிற்றெண், தாடி.
கீளுதல் - கிழித்தல். (கந்.)
கீறல் - கீறுதல், [எழுதல், கிழித்தல்.]
கீறுதல்-கிறுக்குதல், தேய்த்தல்.
கீற்று - கீறல், பிளவு, வரி.
கீற்றுமதி - மூன்றாம்பிறைச் சந்திரன்.
கீனம் - இழிவு, குறைபாடு.
கீன்றல் - கிழித்தல்.

## கு

கு - ஓரெழுத்து, நான்கனுருபு (உ-ம்.) அறத்திற்குப் பொருள், சிறுமை, பூமி, இகழ்ச்சி, பாவம், தடை.

குகம் - மலைக்குகை, நுட்பம்.
குகரம்-ஒரெழுத்து, மலைக்குகை, நிலவறை.
குகன் - சிராமனோடு சிநேகம் பூண்ட ஒரு செம்படவர் தலைவன், முருகன், குகையிலுறைபவன்.
குகு - அமாவாசை.(பிங்), குய்யம் பற்றியிருக்கும் நரம்பு, கூகையொலி.
குகுரம் - ஓர் தேசம்.
குகூகம், குகூமுகம் - குயில்.
குகை - மலைமுழை, முனிவர் வாசம், பஞ்சலோகங்களையுருக்கும் பாத்திரம்.
குகைக்காமன் - கல்நார்.
குக்கல், குக்கன் - நாய்.
குக்கி - வயிறு, மருங்கு.
குக்கில் - செம்போத்து, குங்கிலியம்.
குக்குடசர்ப்பம் - பறவைநாகம்.
குக்குடம்-கோழி, கானுங்கோழி.
குக்குலு - குங்குலியம்.
குங்கிலியக்கலையர் - அறுபத்துமூன்று நாயன்மாரிலொருவர்.
குங்கிலியம், குங்குலியம், குங்குலு - கடவுள் பூசைக்குரிய வாசனைவர்க்கத்தொன்று.
குங்குதல் - குறைதல்.
குங்குமச்சம்பா* - ஓர் நெல்.
குங்குமப்பூ* - ஓர் சரக்கு.
குங்குமம்-ஓர் மரம், செஞ்சாந்து, குங்குமப்பூ.
குங்குமவர்ணிச்சி - தாளகம்.
குசக்கணக்கு*-தவறுன கணக்கு.
குசத்தனம் - மூடத்தனம்.
குசத்தி - குசப்பெண், [பூநீறு.]
குசந்தனம் - செஞ்சந்தனம்.
குசபலம் - மாதுளைமரம்.
குசப்புத்தி* - மடமை.
குசமசக்கு - வீண்மயக்கு, பொய்.
குசம் - தருப்பைப்புல், நீர், மரப்பொது, முலை, வெறும்புறங்கூறல், கடிவாளம்.
குசலம் - நன்மை, சாமர்த்தியம்.
குசலர் - அறிஞர், மிகவல்லோர்.
குசலவர் - சிராமன்புதல்வர்.
குசவர்* - குயவர்.
குசன் - செவ்வாய், சிராமன் புதல்வன், பாவி.
குசாக்கிரபுத்தி - மிக நுண்ணிய புத்தி.
குசால்* - மனோற்சாகம்.
குசு* - அபான வாயு.
குசுமம் - பூ, பலம். (சப்)
குசும்பா - ஓர் புடைவை, செந்திருக்கம்பூ, வெண்மைகலந்த சிவப்பு.
குசும்பை - குசும்பாமரம்.
குசேசயம் - தாமரைப்பூ.
குசை - கடிவாளம், குதிரை கட்டுங்கயிறு, குதிரையின் பிடரிமயிர், தருப்பை.
குச்சம்-பூங்கொத்து, [நெற்குஞ்சம், வெறும்புறங்கூறல், நாணற்புல்.]
குச்சரம் - ஓர்தேயம்.
குச்சரி - ஓர் பண்.
குச்சலியர் - குச்சரியர் (ஓர் சாதியார்.)
குச்சி - கூர்ச்சு, [பாவாற்றி.]
குச்சிதம் - அரோசிகம்.

குச்சில் - சிறுகுடில்.
குச்சு-சிறுகம்பு, தலைமயிர்க்குச்சு, [பாவாற்றி. (சீவ. சிந்), சிறு குடில்.]
குச்சுக்காரி* - விபசாரி.
குஞ்சம் - [ஈயோட்டி, குறள், குன்றிக்கொடி, குறுமை, குறுணியி லெட்டிலோர் பங்கு, கோட்சொல்லல், பூங்கொத்து, நாழி,புளி நறளை.].
குஞ்சரம் - யானை, உச்சிதம், மருள், கருங்குவளை.
குஞ்சராசனம் - அரசமரம். (பிங்)
குஞ்சரி - பெண்யானை.
குஞ்சன் - குறளன் (குள்ளன்.)
குஞ்சி - பறவைக்குஞ்சு, [ஆண்மயிர், குடுமி, குன்றிக்கொடி].
குஞ்சிச்சடை - சிறு சடை.
குஞ்சிதம் - ஒருகாறூக்கி நிற்றல், வளைவு.
குஞ்சித்தல்-குந்துதல். (சீவ.சிந்).
குஞ்சியாயி - சிறிய தாய்.
குஞ்சிரிப்பு - புன்னகை.
குஞ்சு* - பறவைக்குஞ்சு, ஆண்குறி.
குஞ்சுறை - பறவைக்கூடு.
குடகம் - ஓர் தேசம், ஓர் மலை, மேற்கு.
குடகன் - சேரன், குடகநாட்டவன்.
குடகு - ஓர் தேசம்.
குடக்கு - மேற்கு.
குடக்கூத்து - விநோதக் கூத்தாறினுளொன்று.
குடக்கூலி - வாடகை.
குடக்கோன் - சேரன். (திருவி.)
குடங்கர் - குடம், கும்பவிராசி, குடிசை.
குடங்கை - உள்ளங்கை.
குடசம் - மலைமல்லிகை, வெட்பாலை. (சிலப். 13.157.)
குடஞ்சுட்டு - பசு. (கலி)
குடதிசை - மேற்கு.
குடத்தியர் - இடைச்சியர். (பிங்)
குடநாதன் - சேரன்.
குடந்தம் - குடம், திரட்சி, கைகூப்பி உடம்பை வளைத்துநிற்றல். (தணிகை)
குடந்தை, குடமூக்கு - கும்பகோணம்.
குடமணம் - கருஞ்சீரகம்.
குடமாடல் - மாயோனாடல்.
குடமுருட்டி - காவிரிநதியின் ஓர் கிளை.
குடமுழா - ஓர் முழவு.
குடமுனி - அகத்தியன்.
குடம் - கும்பம், [கும்பவிராசி, சேரனூடு, கைகொட்டிக்குவித்தல், சருக்கரை, பசு, பூசம், மருதநிலத்தூர், திருமாலாடிய கூத்து].
குடம்பை - பறவைக்கூடு. (பிங்), முட்டை, உடம்பு.
குடர் - குடல்.
குடலை - பூக்கூடை முதலியன, [கிணற்றுக்குடலை, ஓலைக்கூடு.]
குடல்* - குடர்.
குடல்வாதம் - ஓர் நோய்.
குடவர் - இடையர்.
குடவிளக்கு* - திருமணத்தீபம்.

குடவு - குடவென்னேவல், குமரனுடல், வளைவு.
குடவுதல் - வளைதல்.
குடாது-மேற்குள்ளது, மேற்கு.
குடாரம் - கோடாலி, தயிர்கடைதறி, தயிர்கடைதாழி.
குடாரி-கோடாலி, யானைத்தோட்டி, திப்பிலி.
குடாவடி - கரடி.
குடி - குடியென்னேவல், [ஊர், குலம், கோத்திரம், குடியானவன், நெற்றிப்புருவம்.]
குடிகாரன்* - சுராபானி.
குடிகேடன் - துட்டன்.
குடிகேடி - விபசாரி.
குடிக்காடு - ஊர்ப்பொது.
குடிக்கூலி* - வாடகை.
குடிசை* - சிறுவீடு. (பிங்)
குடிஞை - யாறு, சிற்றில், மருதநிலத்தார், பறவை, பேராந்தை. (சிலப்ப).
குடித்தல்* - பருகுதல்.
குடித்தனக்காரன் - இல்லாச்சிரமி, பயிரிடுவோன்.
குடித்தனம்* - இல்வாழ்க்கை.
குடிபுகுதல் - புது வீட்டிற் சேர்தல்.
குடிமக்கள் - பணிசெய்யும் பதினெண்வகைச்சாதியார், அவர் இலைவாணிகன், உப்பு வாணிகன், எண்ணெய் வாணிகன், ஓச்சன், கற்றச்சன், கன்ஞன், குயவன், கொல்லன், கோவிற்குடியான், தச்சன், தட்டான், நாவிதன், பள்ளி, பாணன், பூமாலைக்காரன், வண்ணான், வலையன் என்பவர்.
குடிமை - குடியினியல்பு.
குடியரசு*- குடியாட்சி.
குடிலகதி - வளைந்துபோதல்.
குடிலச்சி - கருவண்டு.
குடிலம் - ஆகாயம், குராமரம், வஞ்சகம், சடை, வளைவு.
குடிலை - பிரணவ மந்திரம்.
குடில் - ஆகாயம், சிற்றில், குடிசை.
குடு - கள்.
குடுகுடுகிழவன்-கூனற் கிழவன், தளர்ந்த வயதினன்.
குடுகுடுப்பை - அறக்காய்ந்து வற்றலானது, சிற்றுடுக்கை, மரமணி.
குடுக்கை - தேங்காய் முதலிய வற்றின் குடுக்கை, [கமண்டலம்.]
குடுமி - ஆண்மயிர், [கதவிற் குடுமி, மயிர்முடி, உச்சி, வெற்றி, பாம்புபிடிப்பவன்.]
குடும்பம்- ஒரு குடியிலுள்ளோர், [மனைவி "பாகத்தார் குடும்ப நீக்கி". (சீவக. சிந். 1437.)]
குடும்பி - சமுசாரி.
குடும்பினி - மனைவி.
குடும்பு - பூங்கொத்து.
குடுவை - சிறுபானை, [கமண்டலம். (கந்த)]
குடை - குடை, குடையென்னேவல், [குமாரனுடல், பாதகுறட்டின்குமிழ், வேலமரம், உட்டுளைப்பொருள்.]
குடைக்கிழங்கு - சிற்றரத்தை.

குடைச்சல்-குடைவு, [வருத்தம்]
குடைதல் - கடைதல், துளைத்தல், தோண்டல், நீராடுதல், நோவுபடுத்தல்.
குடைவு - குவிதல், வளைவு.
குடோரி - கீறி மருந்து பதித்தல், கீறுதல்.
குட்டநாசனம் - வெண்கடுகு.
குட்டநி - கோட்சொல்பவள்.
குட்டம் - குட்டநோய், [ஆழம், குளம், கொடுந்தமிழ் நாட்டினொன்று.]
குட்டரி - மலை.
குட்டன் - ஆட்டுக்குட்டி, குட்டரோகி, சிறுவன்.
குட்டாரம் - கம்பளம், பர்வதம்.
குட்டான் - சிறு ஓலைப்பெட்டி.
குட்டி - குழந்தை, சிறுபெண், ஆடு - கீரி - குதிரை - நரி-நாய்-பன்றி, புலி, பூனை - மரக்கோட்டில் வாழ்விலங்கு - மான் - முதலியவற்றின் பிள்ளை, வினையெச்சம்.
குட்டிச்சாத்தான் - ஓர் பேய்.
குட்டிச்சுவராய்ப்போதல்*-கெட்டுப்போதல்.
குட்டிச்சுவர்*- சிறுசுவர், மடையன்.
குட்டிப்பை* - சிறுபை.
குட்டிமம் - கற்படுத்த இடம்.
குட்டியம் - சுவர்.
குட்டினி - சோரநாயகனையுஞ் சோரநாயகியையுஞ் சேர்ப்பவள். (சப்த), சங்கம் வாங்குபவள்.
குட்டுணி - சுணைகெட்டவன்.
குட்டுவன் - சேரன்.
குட்டை - சிறுகுளம், குள்ளம், [தொழுமரம்.]
குணகண்டி - சிவதை.
குணகு - பிசாசம்.
குணக்கு - கிழக்கு, கோணல்.
குணக்குதல் - பின்னிற்றல், வளைத்தல்.
குணங்கர் - பிசாசம்.
குணங்குதல் - வளைதல்.
குணசாலி* - நற்குணன்.
குணட்டு - கதிரின்குலை.
குணஷ்டை - குணதோஷம், தொந்தரை.
குணதிசை - கிழக்கு.
குணத்தொனி-நாணியின் சத்தம்.
குணநிதி - கடவுள்.
குணபத்திரன் - கடவுள், அருகன், மண்டலபுருடனின் [குரு.
குணபம் - பிணம்.
குணபாசி - பிசாசம்.
குணம்-இராசத முதலிய குணம், [குடம், சீர்மை, வில்நாண், நிறம், நூல், பண்பு.]
குணலை - வீராவேசத்தாற் கொக்கரித்தல், ஓர் கூத்து.
குணதீதன் - கடவுள்.
குணுலம் - ஓர் தேசம், ஓர் புள்.
குணுலயன் - கடவுள்.
குணி - ஊமை, குணியென்னேவல், முடவன், வில்.
குணித்தல் - எண்பெருக்கல், மதித்தல்.
குணில்-கவண், குறுந்தடி, பறையடிக்குங் குறுந்தடி.
குணு - புழு.

குணுகுணுப்பு - மூக்காலொலியெழப்பேசல்.
குணுகுதல் - சிணுங்குதல்.
குணுக்கு - வலையின் முடிந்திருக்குமீயம், மாதர் காதணியினொன்று, வெள்ளி.
குணுங்கர் - தோற்கருவியாளர், சண்டாளர், பிசாசர்.
குணுங்கு - பிசாசம்.
குண்டகன் - தலைவனைப் பிழைத்தீன்ற சோரபுத்திரன்.
குண்டக்கிரியம் - ஓர் பண்.
குண்டணி - பின்புறணி.
குண்டம் - குடுவை, குளம், பானை, குழி.
குண்டலகேசி - ஓரிலக்கிய நூல்.
குண்டலம் - காதணியினொன்று, தவத்தோர் காதணி, [ஆகாயம், வட்டம்.]
குண்டலன் - பலபத்திரன்.
குண்டலி - ஓர்வாயு, இசங்கு, காளி, சீந்தில், பாம்பு, மூலாதாரம்.
குண்டலிசத்தி - வல்லபசத்தி.
குண்டனி - குறளை, வசவி.
குண்டன் - அடிமை, குண்டனி சொல்லுபவன்.
குண்டான்* - பெருஞ் சட்டி.
குண்டி - ஆசனபக்கம், [ஈரல், மீன்சினை.]
குண்டிகை - கமண்டலம்.
குண்டிக்காய்* - ஈரல்.
குண்டியம் - பழிச்சொல், பொய்.
குண்டில் - சிறுபாத்தி, முதுகு.
குண்டினபுரம் - தமயந்தி பிறந்த இடம்.

குண்டு - உருண்டை, [ஆண் குதிரை, ஆழம், தாழ்வு, நிறைக்கல்.]
குண்டுச்சட்டி - குழிச்சட்டி.
குண்டுச்சம்பா - சொரிகுரும்பை நெல்.
குண்டுசி* - கொண்டையுள்ள ஊசி.
குண்டை - எருது, இடபவிராசி, ஈகைக்கொடி, சட்டி.
குண்டோதரன் - ஒரு பூதன், [பெருந்தீனிக்காரன்.]
குண்ணியம் - பெருக்கப்படுந்தொகை, குணம்.
குதக்குதல் - வாயில் ஆகாரம் அடைத்தல்.
குதட்டுதல்* - மெல்லல்.
குதப்புதல்* - அதக்குதல்.
குதம் - தருப்பை, மலவாயில், வெங்காயம்.
குதம்புதல் - கொதித்தல், [சினத்தல், அலைசுதல்.]
குதம்பை - கடிப்பு என்னுங் காதணி. (சீவ. சிந்), ஓர் பூடு.
குதரம் - மலை.
குதர் - பிரிவு.
குதர்க்கம் - முறைகெட்ட தருக்கம்.
குதர்தல் - கோதிவகிர்தல், குதறுதல், சிதறுதல்.
குதலை - மழலைச்சொல், மாதருடைய மொழி, மூடன்.
குதறுதல்-உதறுதல், கிண்டுதல்.
குதவை - துப்புக்கேடு, சாதுரியமின்மை.

குதி - குதியென்னேவல், [அடிப்புறத்துமூலை.]
குதிகொள்ளல் - பெருகல், பொலிதல்.
குதிக்கால், குதிங்கால்-காற்குதி.
குதித்தல் - கடத்தல், பாய்தல்.
குதிரை - பரிமா, [துப்பாக்கியிஞெருறுப்பு, கயிறுமுறுக்குங் கருவி, மாமரம்.]
குதிரைகொடுத்தல்* - தோற்றோர்வென்றோரைச்சுமத்தல்.
குதிரைக்கல்லணை - சேணம்.
குதிரைக்குளம்பு - நீர்க்குளிரி.
குதிரைப்பந்தி - குதிரைச்சாலை.
குதிரையாளி - வயிரவன்.
குதிரையேறல்* - தோற்றோர்மேலேறல்.
குதிரைவாய்வடம்-குசைக்கயிறு.
குதிரைவாலிச்சம்பா*-ஓர் நெல்.
குதிர் - தானியம்வைக்குங் கூடு.
குதிர்தல், குதிர்படுதல்* - செவ்வைப்படுதல்.
குதுவை* - அடைவு, ஈடு.
குதூகலம்*- முன் காணுப்பொருளைக் காண்பதால் வரும் மகிழ்ச்சி.
குதை - பசி, பணிப்பூட்டு, பாசி, மூனை, அம்பினடிப்பாகம்.
குத்தகை* - மதியத்துக்கு விற்றல்.
குத்தல் - குத்துதல், வாயுமுதலிய வடைதல், [அடித்தல், நெறித்தல், பறித்தல்.]
குத்தி - அடக்கம், சிறுகுடுவை, மண்.
குத்திரம் - சீக்கிரம், மலை, வஞ்சகம், இழிவு, அற்பம்.
குத்திரன் - வஞ்சகன்.
குத்து - குத்தென்னேவல், உலக்கை முதலியவற்ருற் குற்றல், வாயுக்குத்து, நிறுதிட்டமானது.
குத்துக்கால் - தேரினிறுத்துங் கால்கள், நிறுதிட்டமாய் நிற்குங்கால்.
குத்துணி - ஓர் புடவை, தழுக்கு
குத்துவிளக்கு-ஓர் விளக்கு.[ணி.
குந்தகம் - தடை, குழப்பம்.
குந்தம் - கண்ஞேய், குதிரை, குருந்தமரம், கைவேல், சிறுசவளம், அலரிமரம்.
குந்தளம்-ஓர் தேசம், பெண்மயிர், பாநபாத்திரம், மயிர்ப்பொது.
குந்தனம் - மணியழுத்தல்.
குந்தா - துப்பாக்கியின் அடி, கப்பலின் பின்புறம்.
குந்தாணி* - பருவுரல்.
குந்தாளம் - மண்வாருங் கருவி.
குந்தி - வினையெச்சம், பாண்டவர்தாய், [கள்.]
குந்திமுதற்புதல்வன் - கன்னன்.
குந்துருக்கம்-குங்கிலியம். (தணி)
குபங்கம் - அருவருத்த சோறு.
குபதம் - தீயவழி. (திருநூ).
குபேரகம் - சின்னிப்பூடு.
குபேரன் - நிதிக்கோன், [சந்திரன். (பார).]
குப்பக்காடு* - காட்டிலுற்றகிராமம்.
குப்பம் - கிராமம், திடர், குப்பம்.
குப்பலை, குப்பளை - ஓர் செடி.

குப்பல் - குவியல், கூட்டம்.
குப்பாமணி* - குப்பைமேனி.
குப்பாயம் - சட்டை. (சீவ.சிந்.)
குப்பி-ஓர் பாண்டம், [மாதர்தலை யணியிலொன்று, வீணையின் முறுக்காணி.]
குப்பிலவண்ணம் - வளையலுப்பு.
குப்புறக்கிடத்தல் - அதோமுக மாய்க் கிடத்தல்.
குப்பெனல் - ஒலிக்குறிப்பு, சீக் கிரக்குறிப்பு.
குப்பை - குவிவு, கூட்டம், மேடு.
குப்பைக்கீரை* - முட்கீரை.
குப்பைப்பருத்தி-உப்பம்பருத்தி.
குப்பைமேனி* - ஓர் பூடு.
குமஞ்சான் - ஓர் சாம்பிராணி.
குமடு - கன்னம்.
குமட்டுதல் - குடலைப்புரட்டல், [அருவருத்தல், தேக்கெடுத் தல்.]
குமரகண்டம் - ஓர் வலி.
குமரகம் - மாவிலிங்கு.
குமரம் - ஓரிலக்கணநூல், கொம் பிலா விலங்கு.
குமரன் - இளையோன், [மகன், முருகன், வயிரவன்.]
குமரி - பருவமுடையவள், [புத ல்வி, அழிவின்மை, கற்ற ழை, காளி, சத்தமாதர்களி லொருத்தி, துர்க்கை, சத்தி சாரணை, குமரிநதி.]
குமரிச்சேர்ப்பன் - பாண்டியன்.
குமல் - அரிவாள்.
குமாரத்தி - புத்திரி.
குமாரன் - மகன்.
குமாரி - பத்துவயது துவக்கிப் பன்னிரண்டு வயதுப்பெண், சுவர்ணபேதி, துர்க்கை.
குமிகை - வெள்ளெள், எள்ளு.
குமிதம், குமிதிகம் - தேக்கமரம்.
குமித்தல் - குவித்தல்.
குமிலம் - பேரொலி. (பிங்)
குமிழி - மிதியடிக்குமிழ், நீர்க் குமிழி.
குமிழ் - குமிழி, எருத்துத்திமில், நாணல்.
குமுக்கு - உதவி, [திரட்சி.]
குமுணன் - முதலெழுவள்ளலி லொருவன்.
குமுதசகாயன், குமுதநண்பன் - சந்திரன்.
குமுதம்-அடுப்பு, தருப்பை, தெ ன்மேற்றிசையானை, படையி லோர் தொகை, பேரொலி, வெள்ளாம்பல், வெள்ளைப்பா ஷாணம்.
குமுதன் - குரங்குப்படைத் தலை வரிலொருவன்.
குமுலி - துளசி.
குமுறல் - ஒலித்தல், பேரொலி, பேசலாலெழுமொலி, முழக் கம்.
குமைஞ்சான் - குமஞ்சான்.
குமைத்தல் - மிதித்தல், குழை யப்பண்ணல்.
கும்பகம் - பிராணாயாமத்தொ ன்று, அஃது கும்பித்தல்.
கும்பகன்னன்-இராவணன்தம்பி.
கும்பகாம்போதி - ஓர் பண்.
கும்பகாரன் - குயவன்.

கும்பகோணம் - ஓர் பட்டணம், [மோசம்].

கும்பசம்பவன், கும்பசன், கும்பயோனி - அகத்தியன், துரோணசாரியன்.

கும்பமுனி - அகத்தியன்.

கும்பம் - குவியல், குடம், [ஓரிராசி, நெற்றி, யானையின் மத்தகம்.]

கும்பல்* - குவியல், கூட்டம்.

கும்பளம் - பூசணி.

கும்பளா* - ஓர் மீன்.

கும்பன் - ஓரரக்கன், தூர்த்தன்.

கும்பா* - ஓர் பாத்திரம்.

கும்பி - சுடுசாம்பல், [கும்பியென்னேவல், சேறு, சிவதை, தாலம்ப பாஷாணம், நரகம், நெற்றி, மண்பாத்திரம், யானை, வயிறு.]

கும்பிடல்* - வணங்கல், கைகூப்பல்.

கும்பித்தல் - பிராணவாயுவைச் சமப்படுத்தி யடக்கல்.

கும்பீரம் - முதலை.

கும்பு* - கூட்டம்.

கும்புதல்* - அடிப்பற்றுதல்.

கும்மட்டம் - விளக்கேற்றக் காகித முதலியவற்றாற் கட்டுங் கூடு, கோவிலின் தூபி, வளைவு, ஓர் வாத்தியம்.

கும்மட்டிக்காய் - ஆற்றுத் தும்மட்டிக்காய்.

கும்மல் - அடித்தல், [அரிவாள்].

கும்மாயம் - புழுக்கிய பச்சைப் பயற்றோடு சருக்கரை முதலியன கூட்டி ஆக்கப்படுவதொரு சிற்றுண்டி. (மணிமே. 259).

கும்மாளங்கொட்டுதல் * - குதித்துக் கையோடு கைதட்டல்.

கும்மி* - மகளிர்கூத்து.

கும்முதல்* - அலைசுதல்.

குயம் - இளமை, கொடுவாள், தருப்பை, மூலை, அரிவாள், சௌரக்கத்தி.

குயவரி - புலி.

குயவர் - கும்பக்காரர்.

குயவு - தேர்.

குயிலல்-இழைத்தல், சொல்லல்.

குயிலன் - தேவேந்திரன்.

குயிலாயம் - சுவரறை, பறவைக்கூடு, மட்கலம் வனையுங்கூடம்.

குயிலுவம் - நரப்புக் கருவியாற் பாடல்.

குயிலுவர் - தோல்வினைஞர், நரம்புக்கருவியாளர்.

குயில் - ஓர் புள், [குயிலென்னேவல், சொல், துளையுடைப் பொருள்.]

குயிற்றல் - செய்தல், பதித்தல், சொல்லுதல்.

குயின் - மேகம்.

குயின்மொழி - குயிலின் குரல், [அதிமதுரம்.]

குய் - தாளிப்பு, நறும்புகை.

குய்யகர் - ஓர் தேவகணம்.

குய்யதீபகம் - மின்மினி.

குய்யம் - பெண்குறி, மறைவு, வஞ்சகம், நிந்தை.

குரகதம் - குதிரை, குதிரைப்பற்பாஷாணம்.

குரகம் - நாகணவாய்ப்புள், நீர் வாழ்பறவை.
குரக்கன் - கேழ்வரகு.
குரங்கம் - மான், விலங்கின் பொது, எட்டிமரம்.
குரங்கல் - தாழ்தல்.
குரங்கன்சுறு - ஓர் மீன்.
குரங்கி - சந்திரன்.
குரங்கு - வானரம், [குரங்கென்னேவல், விலங்கின்பொது.]
குரங்குதல் - வணங்குதல், தாழ்தல், வளைதல்.
குரங்குப்பிடி*-விடாதுபிடித்தல்.
குரச்சை - குதிரைக்குளம்பு.
குரஞ்சி - ஓர் பண்.
குரண்டகம் - பச்சைப்பூவுள மருதோன்றிமரம்.
குரண்டம் - கொக்கு.
குரத்தம் - ஆரவாரம்.
குரத்தி - தலைவி, குருவின் மனைவி, ஐயை.
குரப்பம் - குதிரைமயிர் கோதுஞ் சீப்பு.
குரமடம் - பெருங்காயம்.
குரம் - குதிரைக்குளம்பு, தருப்பை, ஒலி, பாகற்கொடி, பசு.
குரம்பு - செய்கரை, வரம்பு.
குரம்பை - உடம்பு, சிறுகுடில், பறவைக்கூடு, முட்டை.
குரல் - மிடற்றுற் பிறக்குமிசை, [இறகு, ஒலி, தினை, பயிர்க்கதிர், பெண்மயிர், மிடறு, யாழ்நரம்பினோசை, யாழ்நரம்பு, கொத்து.(சிலப். 14-87.)
குரல்வளை* - மிடறு.

குரவகம் - மருதோன்றிமரம், வாடாக்குறிஞ்சி.
குரவம் - கோட்டம், பேரீந்து, நறுமணம்.
குரவர் - தந்தை, தாய், குரு, அரசர், மூத்தோர்.
குரவன் - குரு, தந்தை, பிரமன், மூத்தோன்.
குரவு - குராமரம், நறுமணம்.
குரவை-ஓர் மீன், [கடல், கூத்து, கைகோத்தாடல்.]
குரா - குராமரம்.
குராசானிஓமம் - ஓர் பூடு.
குரால் - கபிலநிறம், கோட்டான், பசு.
குரிசில் - ஆண்மகன், மன்னன், பெருமையிற் சிறந்தோன்.
குரு - ஆசான், [ஓர் தேசம், ஓர் வியாதி, நிறம், இருமாத்திரை, பாரம், பெருமை, இரும்பு - செம்பு - ஈயம் முதலிய வுலோகங்களைப் பொன் - வெள்ளியாகப் பேதிக்குஞ் சிந்தூரம், வியாழம்].
குருகு - இளமை, உலைமூக்கு, குருக்கத்தி, கைவளையல், கோழி, நாரை, பறவைப்பொது, மூலநாள், வெண்மை.
குருகுலவேந்தர் - கௌரவர்.
குருகூர், குருகை - ஆழ்வார் திருநகரி.
குருக்கண் - முலை.
குருக்கத்தி - ஓர் மரம்.
குருக்கன்- மெலிவிக்கு நோய்.
குருக்கு - இக்கிரி, பிரமதண்டுச் செடி.

குருசந்திரயோகம் - வியாழனுஞ் சந்திரனுங் கூடியிருக்கும் யோகம்.

குருசூரியன் - வயிரமணி.

குருடன் - கண்ணில்லான், [சுக்கிரன், திருதராட்டிரன்.]

குருடு - பார்வையின்மை, [அறிவின்மை.]

குருட்டடி* - முன்னதாக நினையாதிருத்தல்.

குருணி-ஒரு மரக்காலளவுள்ளது.

குருதி - இரத்தம், சிவப்பு, செவ்வாய்.

குருத்து - மர முதலியவற்றின் குருத்து, [இளமை, வெண்மை, மூளை.]

குருத்தோலை* - இளவோலை.

குருநாதன் - பரமகுரு, [குமரன், துருசு.]

குருநாள் - பூசநாள்.

குருநோய் - வைசூரி.

குருந்தக்கல் - வச்சிரக்கல்.

குருந்து - காட்டுநாரத்தை, குருத்து, வச்சிரக்கல்.

குருபரன் - பரமகுரு, [குமரன்.]

குருபாரம்பரை - குருவமிசவழி.

குருப்பு - பரு.

குருமன், குருமான் - குழந்தை, சிறுவுரு.

குருமித்தல் - முழங்குதல்.

குருமூர்த்தம் - தேவன் குருவாக வருதல்.

குருமை - பெருமை, நிறம்.

குரும்பம் - வலை.

குரும்பி - புற்றுஞ்சோறு.

குரும்பை-காதுக்குரும்பை, பனை தெங்கினிளங்காய், [புற்றுஞ்சோறு.]

குருவண்டு - துவரைச் செடிமீதிருக்கிற வண்டு.

குருவாரம்* - வியாழக்கிழமை.

குருவி - சிறு பறவை, [குன்றிமணி, மூலநாள்.]

குருவிக்கார்* - ஓர் நெல்.

குருவிச்சை - புல்லுருவி.

குருவிந்தம்-சாதிலிங்கம், கோரைக்கிழங்கு, செம்மணி, பதுமராகமணி, முத்தக்காசு.

குருவுக்காதி-பச்சைக்கருப்பூரம்.

குருளை - இளமை, நரி - நாய் - பன்றி - புலி - மான் - முசு - முயல் - யாளி யிவற்றின் குட்டி, ஆமை.

குருள் - பெண்மயிர், முன்கொண்டை, குட்டி.

குரூபம் - விகாரரூபம்.

குரூரம் - கொடுமை.

குரை அசைச்சொல் (உ-ம்.) அது 'பெறலருங்குரைத்தே', ஒலி, குதிரை, குளம்பு.

குரைத்தல் -எழுத்திலாவோசை, குலைத்தல், ஒலித்தல்.

குரோசம் - கூப்பிடுதூரம்.

குரோட்டம் - நரி, பன்றி.

குரோட்டன் - ஆணரி.

குரோட்டு - பன்றி.

குரோதம்* - சினம்.

குரோதன - ஓராண்டு.

குரோதன் - வீரபத்திரன்.

குரோதி - ஓராண்டு, பகைவன், பகையென்னேவல்.

குலகுரு - சாதிக்குரு.
குலக்கொடி - குலஸ்திரீ.
குலக்கொழுந்து - குலத்துக்கு முதன்மையாயிருக்கும் அரிய பிள்ளை.
குலசேகராழ்வார்-பன்னிரு ஆழ்வார்களி லொருவர்.
குலதருமம் - குலாசாரம்.
குலத்தம் - கொள்.
குலபத்தினி - கற்புடையவள்.
குலமகள் - குலப்பெண்.
குலம் - வமிசம், [அரமனை, இரேவதி, கூட்டம், மனை.]
குலவுதல் - கொண்டாடல், [நட்புறல், வளைதல், பொருந்தல்.]
குலாசாரம் - குலநடை.
குலாபு* - முட்செவ்வந்தி.
குலாலன் - குயவன்.
குலாவுதல்-கொண்டாடல்,[வளைதல்.]
குலிகம் - இலுப்பைமரம், சாதிலிங்கம், சிவப்பு.
குலிங்கம் - ஊர்க்குருவி, ஓர் தேசம், காக்கை.
குலிசபாணி - கந்தன், தேவேந்திரன்.
குலிசம் - வச்சிராயுதம், வன்னிமரம், இலுப்பைமரம், இடியேறு.
குலிஞன் - குலமுள்ளோன்.
குலிந்தம் - ஓர் தேசம்.
குலிரம், குளீரம் - நண்டு.
குலுக்கி* - பிலுக்கி.
குலுக்குதல் - அசைத்தல், [கெருவங்காட்டுதல்.]
குலுங்குதல் - அசைதல், [நடுங்கல்.]
குலுத்தம் - கொள், கணுக்கால்.
குலுமமூலம் - இஞ்சி.
குலுமம் - படைத்தொகை, கோட்டை, புறகற்றை.
குலை - மரம் முதலியவற்றின் குலை, கொத்து, [அம்பின்குதை,குலையென்னேவல், செய்கரை.]
குலைச்சல் - குலைதல், குலைத்தல், வெறுத்துப்பேசல்.
குலைத்தல் - கலையச்செய்தல்.
குலையெரிவு* - ஓர் நோய்.
குலோத்துங்கன் - குலசிரேஷ்டன், சோழன்.
குலோமி - வெள்ளறுகு.
குலோமிசை - வசம்பு.
குல்மம் - குன்மம்.
குல்லம் - முறம்.
குல்லரி, குல்வலி - இலந்தை.
குல்லா* - தலைக்கோலம்.
குல்லை - கஞ்சா, துளசி, வெட்சி.
குவடு - சிறுமலை, திரட்சி, மரக்கொம்பு, மலை, மலையுச்சி.
குவலம் - அவுபலபாஷாணம்.
குவலயம் - கருங்குவளை, பூமி.
குவலயாபீடம் - கண்ணனைக் கொல்லமுயன்ற ஒரு யானை.
குவலிடம் - ஊர்.
குவலை - கஞ்சா, துளசி.
குவவு - குவிதல், திரட்சி, பெருமை.
குவளை - ஓர்வகைப் பாத்திரம், [ஒருநீர்ப்பூ, மன்மதன்கணையிலொன்று, விழி, கண்மடல்.]

குவளைத்தாரான் - தருமன்.
குவளையச்சு* - தட்டாரினுேர் கருவி.
குவா - ஓர் கிழங்கு.
குவால் - கூட்டம், மேடு.
குவிதல் - சேருதல், திரளுதல், கைகுவிதல், ஒடுங்குதல்.
குவித்தல் - கூட்டுவித்தல், ஒடுங் குவித்தல், ஒளித்தல்.
குவில்-அறுத்தல், கைப்பிடியரி.
குவிவு - குப்பை, குவிதல்.
குவேணி - மீன்புட்டில்.
குவை - கூட்டம், மேடு.
குழகன் - முருகன், சிவன்.
குழகு - இளமை, அழகு.
குழந்தை* - சிறுபிள்ளை.
குழப்படி, குழப்பம்* - மனக்கலக் கம், தாறுமாறு, கொந்தளிப்பு.
குழப்புதல் - கலத்தல், குழப்பம் பண்ணுதல்.
குழம்பல் - கலங்கல்.
குழம்பு - குழம்பலான உணவுப் பொருள், [குழம்பென்னே வல், கஞ்சி, குழைசேறு.]
குழல் - இசைப்பாட்டு, ஊதிடு குழல், ஆண்மயிர், உட்டுளைப் பொருள், பெண்மயிர்.
குழவி - அம்மிக்குழவி, [இளமை, இளம்பிறை, ஒட்டகம் - கட மை-பன்றி-மான்-முசு-யாளி - யானை இவற்றின்குட்டி, குழ ந்தை, மரக்கன்று, மரக்கோட் டில்வாழ் விலங்கின்பிள்ளை.]
குழவு - இளமை.
குழற்சிகை-ஒருவகை மயிர்முடி.
குழாம் - கூட்டம், திரள்.
குழாய் - துளையுடைப்பொருள்.
குழி - ஒருகோல் நீளமு மொரு கோலகலமு முட்கொண்டத ரை, பள்ளம், [கிணறு, குளம், வயிறு.]
குழிசி-பானை, வண்டியின் குடம். (சீவ. சிந்)
குழிசீலை* - கௌபீனம்.
குழிச்சட்டி - ஓர் பண்ணிகாரச் சட்டி.
குழித்தல் - குழியாக்கல்.
குழிநாவல்* - ஓர் மரம்.
குழிப்பு - குழிசெய்கை, பிரபந்த வுறுப்பி னென்று.
குழிமிட்டான் - நத்தைச்சூரி.
குழியச்சு*-தகட்டைக் குழியாக் குங்கருவி.
குழியம்- திரட்சி, பாராவலயம்.
குழியம்மி*-மருந்தரைக்குங் குழி யுள்ளவம்மி.
குழு - குழுவென்னேவல், கூட் டம், மகளிர்கூட்டம்.
குழுமல் - கூட்டம், கூடுதல்.
குழுவுதல் - கூடுதல்.
குழூஉ - கூட்டம்.
குழூஉக்குறி - அவ்வக்கூட்டத் தார் வழங்குஞ் சொல்.
குழை - குண்டலம், குழைசேறு, குழையென்னேவல், தளிர், துளையுடைப் பொருள்.
குழைதல்- நெகிழ்ந்தொன்றுதல், வாடல், வளைதல்.
குழைத்தல்-இளகுவித்தல், ஒன் ருய்க் கலத்தல்.
குழைவு - வளைவு, சோர்வு, சேர் மானம்.

குளகம்-பலகவிகளாய் ஒரு வினை கொண்டு முடிவது, மரக்கால், புற்று.
குளகு - தழை. (நாலடி)
குளகுளெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.
குளக்குருவி - நண்டு.
குளஞ்சி - கிச்சிலி, சருக்கரை.
குளம் - தடாகம், [நெற்றி, வெல்லம்.]
குளம்பு* - குரம்.
குளவி - ஓர் வண்டு, [மலைப்பச்சை, காட்டுமல்லிகை.]
குளறுதல்* - உளறுதல்.
குளறுபிடி* - குழப்பம்.
குளன் - குளம்.
குளிகன் - அட்டநாகத்தொன்று, கரந்துறை கோளினொன்று.
குளிகை - மாத்திரை.
குளிசம் - சக்கரம் வரைந்த தகடு.
குளிசிலை* - கௌபீனம்.
குளித்தல் - நீராடல், மறைதல்.
குளிப்பாட்டுதல்* - குளிக்கச் செய்தல்.
குளியம் - உண்டை, மருந்து.
குளிரி-பீலிக்குஞ்சம், வெற்றிலை மூக்கரிகத்தி, கல்லாரம்.
குளிர் - குளிர்ச்சி, [அச்சக்குறிப்பு, கற்கடகவிராசி, கவண், சூலம், நண்டு, பனிக்காற்று, மழு, மீனெழுங்கு, முழவு, வெற்றிலைமூக்கரிகத்தி, கிளிகடிகருவி.]
குளிர்காய்ச்சல்* - சீதசுரம்.
குளிர்ச்சி - குளிர்மை, திருத்திகரம்.
குளிர்த்தி - ஓராராதனை, குளிர்மை.
குளிர்ந்தநிறம் - நன்னிறம்.
குளிர்ந்தபேச்சு - மதுரவசனம்.
குளிர்ந்தமணம் - நறுநாற்றம்.
குளிர்ந்தமனம் - நல்ல இருதயம்.
குளிர்ந்தவேளை - சாயந்திரம்.
குளிர்மை - சீதளம், அன்பு.
குளிறல் - எழுத்திலாவோசை, ஒலித்தல்.
குளிறுதல் - அலறுதல், சத்தமிடல்.
குளீரம் - நண்டு.
குளுகுளுப்பை, குளுப்பை* - காமாலை.
குளுத்தி, குளுமை* - குளிர்மை.
குள்ளக்கெண்டை* - ஓர் மீன்.
குள்ளம் - குறுமை, [வஞ்சகம்.]
குறங்கு - தொடை.
குறங்குசெறி - தொடையாபரணம்.
குறஞ்சனம் - வெண்காரம்.
குறஞ்சி - செம்முள்ளிச்செடி.
குறடு - ஒட்டுத்திண்ணை, [மரத்துண்டு, மிதியடி, நண்டு.]
குறட்டுவாதம் - ஓர் வலிப்பு.
குறட்டை-காக்கணங்கொவ்வை, குறுகுறுப்பு.
குறண்டி - ஓர் பண், ஓர் முட்செடி.
குறண்டுதல் - சுருண்டுகூனுதல்.
குறத்தி - குறிஞ்சிநிலப்பெண், [நிலப்பனை.]
குறம் - ஓர் சாதி, குறி.
குறம்பார்த்தல் - குறிபார்த்தல்.

குறவஞ்சி - ஓர் பிரபந்தம், குறத் தலைவி.
குறவன் - ஓர் சாதியான், [பாத ரசம்.]
குறவை* - ஓர் மீன்.
குறளடி - இருசீரடி.
குறளன் - குள்ளன்.
குறளி - ஓர் பிசாசு, வசவி, குறி யவள்.
குறளை - குள்ளம், கோட்சொல் லல்.
குறள் - ஓர்பா, சிறுமை, திருவள் ளுவரியற்றிய ஒரு நூல், பூதம்.
குறுவுதல்-ஒடுங்குதல்,மெலிதல்.
குறி - அடையாளம், குறியென் னேவல், [எண்ணம், ஆண் பெண்குறி, சகுனம்.]
குறிக்கோள் - ஒற்றுமை, பிறர் குறிப்பறிதல்.
குறிச்சி - குறிஞ்சிநிலத்தூர், சிற்
குறிஞ்சா - ஓர் கொடி. [றூர்.
குறிஞ்சி - ஓரிசை, ஓர்பண், குறி ஞ்சி நிலத்திராகம், குறிஞ்சி மரம், செம்முள்ளி, மருதயா ழ்த்திறம், மருதோன்றிமரம், ஐந்நிலத்தொன்று,அஃது மலைசார் நிலம்.
குறிஞ்சிலைக்கல் - ஈரற்கல்.
குறிஞ்சிவேந்தன் - குமரன்.
குறிது - குறுமையுடையது.
குறித்தல்-சுட்டுதல், நியமித்தல், கருதல், மதித்தல்.
குறிப்பிடம் - சுருக்கம்.
குறிப்பு - சைகை, கருத்து, [விரு ப்பம், ஒற்றுமை.]
குறியர் - குள்ளர்.
குறில் - குற்றெழுத்து, நீட்டற் றது.
குறுகல் - குறைதல், அணுகல்.
குறுகுறுப்பு - சினக்குறிப்பு.
குறுகுறுப்பை - குறட்டை.
குறுக்கடி - குறுக்கு நியாயம்.
குறுக்கம் - குறுக்கினது, கவுரி பாஷாணம், சுருக்கம்.
குறுக்கல் - குறைத்தல்.
குறுக்களவு* - நடுஅளவு.
குறுக்கிடுதல் - இடையே செல் லல்.
குறுக்கையர்-ஓர் வேளாளர், திரு நாவுக்கரையர்.
குறுங்கண் - பலகணி.
குறுங்கலி - பாலையாழ்த்திறம், மருதப்புறம் அது தலைமகன் முன்னின்று மாதர்பழிகூறல்.
குறுங்குடியாள் - தாளகம்.
குறுஞ்சிரிப்பு - புன்னகை.
குறுணி* - ஓரளவு, அது எட்டு படி கொண்டது.
குறுணை - சிறு நொய்.
குறுநகை - புன்சிரிப்பு.
குறுநறுங்கண்ணி - குன்றிப்பூ.
குறுநிலமன்னர் - குறும்பர், சிற் றரசர்.
குறுநொய்* - சிறுநொய்.
குறுந்தடி - பறைமுதலிய வடிக் குந்தடி, குறிய தடி.
குறுந்தறி-குறுந்தடி, போதிகை.
குறுமாக்கள் - சிறுவர்.
குறுமுனி - அகத்தியன்.
குறுமை - சிறுமை, பாவம்.

குறும்பர் - குருநிலமன்னர், துர்ச் சனர், வேடர்.
குறும்பாடு* - பள்ளையாடு.
குறும்பி* - காதழுக்கு.
குறும்பிடி - உடைவாள்.
குறும்பு - பொல்லாங்கு, [அரணி ருக்கை,பாலைநிலத்தார்,போர்.]
குறும்புள், குறும்பூழ் - காடை.
குறும்பொறி - உதரபந்தம்.
குறும்பொறை - குறிஞ்சி நிலத் தார், காடு, சிறுமலை, மலை.
குறும்பொறைநாடன் - முல்லை நிலத்தலைவன்.
குறுவாழ்க்கை - வறுமை.
குறுணுத்தகடு,குறுணுப்பட்டை*- மலாம்பூசின தகடு.
குறை - நிறைவற்றது, மிச்சம், மன்ருட்டு, குறையென்னே வல், அரசிறை, குற்றம், வறு மை.
குறைகோள் - இரத்தல்.
குறைச்சல்* - தாழ்ச்சி.
குறைதல் - கெடுதல், சிறுகல்.
குறைபாடு - ஈனம், குறைவு, வறுமை.
குறையாற்றல் - குறைதீர்த்தல்.
குறைவிலி - கடவுள்.
குறைவு - ஈனம், வறுமை.
குருேட்டை - காக்கணம்.
குற்சிதம் - அருவருப்பு.
குற்றப்பாடு - மானம்.
குற்றம் - பிழை, [குறை, நோய்.]
குற்றல் - குற்றுதல், இடித்தல்.
குற்றி - தறி.
குற்றுடைவாள்-சிறுஉடைவாள்.
குற்றுயிர்* - குறைப்பிராணன்.
குற்றேவல் - அடித்தொண்டு.
குனட்டை, குனஷ்டை-துடுக்கு.
குனி-குனியென்னேவல், [வில்.]
குனிதல் - தாழ்தல், வளைதல்.
குனித்தல் - ஆடுதல், வளைத்தல்.
குனிவு - வளைவு.
குனுகுதல் - சிணுங்கிப்பேசல்.
குனே - கூர்ப்பக்கம்.
குன்மம் - ஓர் நோய், [பெரும் பற்றை. (சூடா), படைத்தொ குன்மவாயு*- ஓர் நோய். கை.]
குன்றம் - மலை.
குன்றல் - கெடுதல், குறைதல்.
குன்றவர், குன்றவாணர் - குறி ஞ்சிநிலமாக்கள், வேடர்.
குன்றவில்லி - சிவன், துருசு.
குன்றி-ஓர்கொடி, வினையெச்சம், மஞ்சேசிலை.
குன்றிவேர் - அதிமதுரம்.
குன்று-குன்றென்னேவல், சதய நாள், சிறுமலை, மலை.
குன்றெடுத்தோன், குன்றேந்தி - கிருஷ்ணபகவான்.
குன்றெறிந்தோன் - முருகன்.

## கூ

கூ - ஒரெழுத்து, கூவென்னே வல், பூமி.
கூகம்- ஆந்தை, கூகை, மறைத்த சொல்.
கூகு - எட்டுவயதுப் பெண்.
கூகை - ஓர்பருந்து, கோட்டான், ஒருவகைக் கொடி.
கூகைக்கட்டி - பொன்னுக்கு வீங்கி.

கூகைநீறு - ஓர் மருந்து, காட்டெருமைப்பால்.

கூக்குரல்-கூப்பிடுமொலி, முறையீடு.

கூசம் - மூலை.

கூசல் - அச்சக்குறிப்பு, அச்சம், நாணுதல்.

கூசனம் - மறைத்த சொல்.

கூசா* - ஓர் மட்பாத்திரம்.

கூசுதல் - கண் பல் முதலிய கூசுதல், [நாணுதல், பயப்படல்.]

கூச்சம் - கண் பல் முதலியவற்றின் கூச்சம், நாணம், வெட்கம், [அச்சம்.]

கூச்சல்* - இரைச்சல்.

கூச்சிதம், கூச்சிரம்-கடம்பமரம்.

கூச்சு - கூர்ச்சு.

கூஷ்மாண்டம்-கலியாணபூசனி.

கூடகம் - வஞ்சனை.

கூடகாரகன்-கள்வன், வஞ்சகன்.

கூடசதுர்த்தம் -ஒரு சித்திர கவி.

கூடசன், கூடன் - சோரபுத்திரன்.

கூடணை - மயிற்றோகைக்கண்.

கூடத்தன், கூடஸ்தன் - நிருவிகார சைதந்நியன், முதன்மையானவன்.

கூடபதம் - பாம்பு. (சப்த)

கூடம் - வீட்டினுளொரு பகுதி, [கொல்லன்சம்மட்டி, புதைத்தல், பொய், மலையினுச்சி, மறைவு, வஞ்சகம், யானைப்பந்தி.]

கூடலர் - பகைவர்.

கூடல் - கூடுதல், புணர்தல், [அடுத்தல், இயலல், கழிமுகம், ஓர்விளையாட்டு, மதுரை.]

கூடற்கோமான் - பாண்டியன்.

கூடனாயகன் - சோமசுந்தரப்பெருமான்.

கூடாங்கம் - ஆமை.

கூடாரம் - படாம்வீடு, வண்டிக்கௌசனை, [பெருங்காயம்.]

கூடார் - பகைவர்.

கூடிலி - தசைதின்போன்.

கூடு-கூடென்னேவல், பறவைக்கூடு, [உடம்பு, உறை.]

கூடுவிட்டுக் கூடுபாய்தல் - ஒருடம்பைவிட்டான்மா மற்றோருடம்பிற் புகுதல்.

கூடை - பிரம்பு முதலியவற்றிற் செய்த கூடை, [கூத்தின்விகற்பம்.]

கூட்டம் - சங்கம், தொகுதி, திரள், [இனம், பிண்ணாக்கு, புணர்ச்சி, போர்.]

கூட்டரவு - கூட்டம்.

கூட்டாளி*-தோழன், பங்காளி.

கூட்டு - கறிக்கூட்டு, கூட்டென்னேவல், [கலப்பு, சம்பந்தம், மண்திரள்.]

கூட்டுப்பயிர்*-கூடிப் பயிரிடுதல்.

கூட்டுறவு - இணைந்த உறவு.

கூண்டு* - பறவைக்கூடு.

கூதல் - குளிர்.

கூதளம் - கூதாளிச் செடி, தூதுளை, வெள்ளரி.

கூதாளம், கூதாளி - வெள்ளரி.

கூதிர் - ஐப்பசி கார்த்திகையின் பருவம், காற்று, பனிக்காற்று.

கூதை - காற்று, குளிர்காற்று.

கூத்தரிசி* - குத்திவிற்குமரிசி.

கூத்தன் - நாடகன், [உயிர், சிவன், துருசு].
கூத்தன்குதம்பை- மூக்கொற்றிப் பூண்டு.
கூத்தி, கூத்திச்சி - நாடகக்கணிகை, [பார்வதி.]
கூத்து - நடனம், நாடகம்.
கூந்தல் - கமுகோலை, குதிரை மயிர், கூந்தற்பனை, பனையோலை, பெண்மயிர், மயிற்றோகை.
கூந்தற்பனை* - ஓர் மரம்.
கூபம் - கிணறு, குழி.
கூபரம் - முழங்கை.
கூப்பல் - கூப்புதல்.
கூப்பிடல்* - அழைத்தல்.
கூப்புதல் - குவியச்செய்தல்.
கூம்பல் - ஒடுங்கல், குமிழமரம், குவிதல்.
கூம்பு - கூம்பென்னேவல், தேர்க்கொடிஞ்சி, பாய்மரம். (மணிமே. 36.)
கூரம்-கொடுமை, பாகல், கோடகசாலை, பொறாமை.
கூரல் - புள்ளிறகு, பெண்மயிர்.
கூரன் - நாய்.
கூரை-வீட்டின் மேற்புறம், [சிற்றில்.]
கூர் - கூர்மை, [கூரென்னேவல், நுனி, மிகுதி, இலைக்காம்பு.]
கூர்ச்சகன் - தையற்காரன்.
கூர்ச்சம்-தருப்பை, புருவமத்தி, மாய்மாலம்.
கூர்ச்சரம் - ஓர் தேயம்.
கூர்ச்சிகை - ஊசி, பூவரும்பு.
கூர்ச்சு - கூருள்ள தடி.
கூர்தல் - ஆராய்தல், மிகுதல்.
கூர்த்தல் - உவர்த்தல், மிகுத்தல்.
கூர்த்திகை - ஆயுதப்பொது.
கூர்ந்தபுத்தி - கூரிய விவேகம்.
கூர்ப்பம் - புருவமத்தி.
கூர்ப்பரம் - முழங்கை.
கூர்மம் - ஆமை, பதினெண்புராணத்தொன்று.
கூர்மன்-உரோமம் புளகித் திமைப்பிக்கும் வாயு.
கூர்மை - நுண்மை, கூர்.
கூலம் - குவியல், [கடற்கரை, கடைவீதி, கரை, காராமணி, பசு, பலபண்டம், பாகல், மந்தி, மரை, முசு, வரம்பு, விலங்கின்வால்.]
கூலி - நாட்கூலி.
கூலிப்பாடு - கூலிப்பிழைப்பு.
கூவம் - கிணறு, கூகைநீறு.
கூவரம் - ஏர்க்கால்.
கூவலர் - கீழ்நீர்க்குறியறி சாத்திரக்காரர்.
கூவல் - அழைத்தல், [சொல்லுதல், கிணறு, பள்ளம்.]
கூவிடை - கூப்பிடுதூரம்.
கூவியர் - உணவமைப்போர், அப்பவாணிகர்.
கூவிரம் - தேரிடக்கியம், தேர், தேர்க்கொடிஞ்சி, வில்வமரம்.
கூவிரி - தேர்.
கூவிளம் - வில்வமரம். (சேது)
கூவிளி - ஆரவாரம், கூப்பிடுதூர[ம். (திரு)
கூவை-ஓர் கிழங்கு.
கூழம் - எள்ளு.
கூழன் - ஓர் பலா.
கூழாங்கல்* - ஓர் கல்.

கூழாமட்டி* - அறிவிலான்.
கூழை - இறகு, கடையின்மை, சேறு, நடு, படைவகுப்பு, படைப்பின்னணி, பெண்மயிர், பொன், மயிற்றோகை.
கூழைக்கடா - ஓர் கொக்கு.
கூழ் - சோறு, பயிர், பொன்.
கூழ்முட்டை - கருக்கெட்டமுட்டை.
கூழ்வரகு - கேழ்வரகு. [டை.
கூளம் - குப்பை, திப்பி.
கூளி - பெருங்கழுகு, [உறவு, எருது, குற்றம், தொகுதி, பூதம், பேய், பொலியெருது, வலி.]
கூளியர் - ஆறலைகள்வர். (புற), ஏவலாளர், படைவீரர்.
கூறு - பங்கு, [கூறென்னேவல், பாதி, தன்மை, பிரிவு.]
கூறுதல் - சொல்லுதல், விற்றல்.
கூறை - மணவாட்டி யுடுக்கும் புதுப்புடைவை, சீலை.
கூற்றம் - சொல், நமன்.
கூற்றன் - நமன்.
கூற்று - சொல், நமன்.
கூற்றுதைத்தோன் - சிவன்.
கூற்றுவன் - நமன், கொடிய பகைவன்.
கூனல்-கோணல், சங்கு, பிறை.
கூனன்-கூனுள்ளோன், [ஆமை, சங்கு.]
கூனி - கூனுடையவள் [சிற்றிறால், மந்தரை, வசவி.]
கூனிக்குயம், கூனிரும்பு - அரிவாள்.
கூனை - கருப்பஞ்சாறு காய்ச்சும் பானை, [வேள்விக்குண்டம்.]
கூன்-வளைவு, [ஆந்தை, நத்தை.]

## கே

கெ - ஒருயிர் மெய்யெழுத்து.
கெக்கட்டம் - மிகச் சிரித்தல்.
கெக்கலி* - மகிழ்வு.
கெசகர்னம், கெசகன்னம்-யானை செவியை யசைப்பதுபோற் காதை யசைவிக்கும் வித்தை.
கெசம் - இரண்டுமுழ அளவு, [யானை.]
கெச்சங்கெட்டவன்* - நாணமில்லோன்.
கெச்சை* - சிறுசதங்கை.
கெஞ்சுதல்* - மன்றாடுதல்.
கெடலணங்கு - மூதேவி.
கெடவரல் - மகளிர்விளையாட்டு.
கெடாரம் - கடாரம், கடியாரம்.
கெடி - ஊர், பயம்.
கெடிலம்- கூடலூருக்கருகிலோர் நதி, ஆழமான ஓடை, குகை.
கெடு* - கெடுவென்னேவல், தவணை.
கெடுதலை* - கேடு.
கெடுதல்-பதனழிதல், பழுதாதல்.
கெடுதி* - அழிவு, கேடு, நட்டம்.
கெடுத்தல் - அழித்தல்.
கெட்டாரகெட்டி*-மிகு கெட்டி.
கெட்டி* - உறுதி.
கெட்டிக்காரன்* - சமர்த்தன்.
கெட்டித்தல் * - கெட்டிபண்ணுதல்.
கெண்டம் - கண்டம்.
கெண்டன்* - மிண்டன்.
கெண்டி - கெண்டிகை.
கெண்டுதல் - வெட்டல், கிண்டுதல். (தணி)

கெண்டை* - சேல் (ஒரு மீன்).
கெண்டைக்கால் * - முழந்தாளின்கீழ்.
கெதி - கதி.
கெத்து* - உபாயம்.
கெந்தகம்-கந்தகம், [நாய்வேளைப்பூடு.]
கெந்துதல் - புழு முதலிய நெளிதல்.
கெபி - குகை, [குழி, பள்ளம்.]
கெம்பத்து - இடம்பம்.
கெம்பரை - கூடை, நெற்கூடை.
கெம்பல் - எழும்பல்.
கெம்பீரம் - வீரம், மேன்மை, [நீராழம்.]
கெம்பு* - ஓரிரத்தினக்கல்.
கெம்புதல் - கிளர்தல், கொந்தளித்தல்.
கெரடி, கெருடி* - கருடி (சிலம்பம்.)
கெருடன்* - கருடன்.
கெர்வம்* - கர்வம்.
கெலித்தல் - வெல்லல், [அஞ்சுதல், ஆசைப்படல்.]
கெலிப்பு - வெற்றி, [அச்சம், ஆசை.]
கெல்லுதல் - கிண்டல், தோண்டல்.
கெவரி - வெள்ளைக்காக்கணம்.
கெவுடு - அட்சரக்கூடு.
கெவுரிசங்கம்* - இரட்டையுருத்திராட்சம்.
கெவுரிபாஷாணம் - ஓர் மருந்து.
கெவுளி - பல்லி, சிவந்தமுகிழுள்ள தேங்காய்.
கெவுனி - பட்டணவாசல்.
கெழீஇய - பொருந்தின.
கெழு - இடைச்சொல் (உ-ம்.) வேல்கெழுதடக்கை, நிறம்.
கெழுதகை, கெழுதகைமை - உரிமை.
கெழுமல் - அமைதல், கற்றல், நிறைதல், முளைத்தல்.
கெழுமை - கெழுமுதல், நிறம், வளமை, பிரகாசம்.
கெழுவுதல் - நிறைதல், பொருந்தல்.
கெளிதம் - பெருங்கல். (ச-து)
கெளிறு - ஓர் மீன்.
கெளுத்தி* - கெளிற்றுமீன்.
கெற்சி - சிறுவழுதலை. (சங். அக.)
கெற்பாதானம் - கருப்பந்தரித்த நாலாமாதஞ் செய்யுமோர் சடங்கு.
கெற்போட்டம்* - மார்கழிமாதப் பிற்பகுதியில் கருக்கொண்ட கொண்டலின் தென்சார்பான ஓட்டம்.

## கே

கே - ஒருயிர்மெய்யெழுத்து.
கேகம் - வீடு, மயிற்குரல்.
கேகயம்-ஓர்தேசம், கேகயப்புள் (அசுணமா), மயில்.
கேகயன் - கைகேயன்.
கேகாபலம், கேகி - மயில்.
கேகுந்தம் - கொழுக்கட்டை.
கேசகன் - நாவிதன்.
கேசபாரம் - பெண்மயிர்.

கேசமார்ச்சனம் - சீப்பு.
கேசம் - குதிரைமயிர், மயிர்ப் பொது, அவுரி.
கேசரம் - பூந்தாது, மகிழமரம், வண்டு, பெருங்காயம், மயிர்.
கேசரர் - வித்தியாதரர்.
கேசரி - அங்கயோகாசனத்தொன்று: அது முழங்கையை முழந்தாளில் வைத்தங்குலி விரித்து நாசியைப் பார்க்குதல், சிங்கம், குதிரை, புன்னைமரம்.
கேசரிகம், கேசரீகம் - நாயுருவி.
கேசரிஜன் - அநுமான்.
கேசவம் - அட்டாதச தருமநூலிலொன்று, நிறைமயிர், பெண் வண்டு.
கேசவற்றேழன் - அருச்சுனன்.
கேசவன் - நிறைமயிருள்ளோன், திருமால், சோழன்.
கேசாதிபாதம் - முடிமுதலடியளவும்.
கேசி-நிறைமயிருள்ளோன், கிருஷ்ணன், சிங்கம்.
கேசிநிசூதநன் - திருமால்.
கேடகம் - பரிசை, பாசறை, மலைசெறிந்தவூர்.
கேடம் - கிளியாறு.
கேடயம்* - பரிசை.
கேடிலுவகை - மோட்சம்.
கேடு*-அழிவு, கெடுதல், பொல்லாங்கு.
கேடையம் - கேடயம்.
கேட்டை - ஓர்நாள், மூதேவி.
கேணி - அகழி, கிணறு, குளம், தரவு.
கேண்மை - உறவு, கண்ணோட்டம், நட்பு, உரிமை. (வெண்.)
கேதகம், கேதகி, கேதகை - தாழை.
கேதம் - துன்பம், குற்றம்.
கேதனம் - பெருங்கொடி, விருதுக்கொடி, இடம், வேலை.
கேதாரகவுளம் - ஓர் பண்.
கேதாரம் - ஓர் நகரம், மயில், வயல், பாத்தி (சப்).
கேது-ஓர் கோள், விருதுக்கொடி, அடையாளம், ஒளி.
கேதுதல் - அழைத்தல்.
கேதுப்பிரியம், கேதுரத்திநம் - வைரீயம்.
கேத்திரபாலன் - வயிரவன்.
கேத்திரம் - க்ஷேத்திரம், விளைநிலம், மனைவி, உடம்பு.
கேநிபாதம் - நாவாய்த்துடுப்பு.
கேந்திரம் - வட்டத்தின் மத்தி.
கேப்பை - கேழ்வரகு.
கேயம் - இசைப்பாட்டு, அகழி.
கேயிகம் - செங்கல்.
கேயூரம் - தோளணி.
கேரண்டம் - காகம்.
கேரளம்-ஓர் தேசம், ஓர் பாஷை, சோதிடநூலினொன்று, வாய்விளங்கம்.
கேரளன் - சேரன். (பிங்.)
கேரளை - இசைப்பாட்டு.
கேருதல் - கோழிகத்துதல், குரல்கம்முதல்.
கேலகன் - வாள்மேல் நடனஞ்செய்வோன்.
கேலம் - மகளிர்விளையாட்டு.
கேலி* - பரிகாசம், விகடம்.

கேவணம் - மணியழுத்துங்குழி.
கேவலம் - அற்பம், [ஒருங்கு, தனிமை, மோட்சம், இன் மை, நிச்சயம்.]
கேவு - வெண்கடுகு.
கேவுதல் - மூச்சுத்திணறல்.
கேழல் - பன்றி, குளநெல்.
கேழ் - உவமை, ஒளி, நிறம்.
கேழ்வரகு - குரக்கன்.
கேளன் - தோழன்.
கேளார் - பகைவர். (வள்)
கேளி - தெங்கு, மகளிர்விளையாட்டு.
கேளிக்கை*-மகளிர்விளையாட்டு.
கேளிர் - சுற்றத்தார், நண்பர்.
கேள்-கேளென்னேவல், [உறவு, சிநேகம், கணவன்.]
கேள்வன் - தலைவன், அன்பன்.
கேள்வி - கல்வி, காது, கேட்டல், யாழ். (பெரும்)
கேள்வு - தோணிக்கூலி.
கேனோபநிடதம் - தசோபநிடதத் தொன்று.

## கை

கை - கரம், [ஓரெழுத்து, ஒழுக்கம், செயல், சிறுமை, படைவகுப்பு, யானைத் துதிக்கை, அலங்காரம், கைம்மரம்.]
கைகண்டது - சித்தியுள்ளது.
கைகலத்தல்*-போர்தொடங்கல்.
கைகழுவுதல்*-முற்றவும்ஒழித்துவிடல்.
கைகாட்டு - சைகைகாட்டல்.
கைகுவித்தல் - கும்பிடல், வணங்கல்.
கைகூடுதல்* - சித்தியாதல்.
கைகூப்பல் - கும்பிடல், வணங்கல், கொப்பிக்கொட்டல்.
கைகேசி, கைகேயி-பரதன்தாய்.
கைகேயன் - கேகயநாட்டுமன்னன்.
கைகொடுத்தல்*-உதவிசெய்தல்.
கைகொட்டல் - கொம்மைகொட்டல்.
கைகொட்டிக்குவித்தல் - குடந்தம்.
கைகோத்தாடல்-குரவையாடல்.
கைகோள்-ஒழுக்கங்கொள்ளுதல்.
கைக்கட்டி, கைக்கவசம் - கைச்சட்டை.
கைக்கிளை - அண்ணத்தாற் பிறக்குமிசை, ஒருதலைக்காமம், யாழிலோர் நரம்பு.
கைக்குட்டை* - கையிற்பிடிக்கும் துணித்துண்டு.
கைக்குழந்தை - இடுக்குப்பிள்ளை.
கைக்குன்று - யானை.
கைக்கை - கசப்பு.
கைக்கோளன், கைக்கொளவன் - செங்குந்தன்.
கைங்கரன் - அடிமை.
கைங்கரியம்,* கைங்கிரியம்* - தொண்டு, ஏவல்செய்தல்.
கைசலித்தல்-தொய்ந்துபோதல்.
கைச்சட்டை - கையிலிடுங்கவசம்.
கைச்சரசம்-இலீலை விளையாட்டு, கைச்சேட்டை.
கைச்சி - சிரட்டை, கமுகு.
கைச்சிமிட்டு - தந்திரம், செப்படி வித்தை.
கைச்சீப்பு - தோட்பட்டை.

கைடவன் - ஓரரக்கன்.
கைதருதல் - உதவுதல், கைகூடு தல்.
கைதவம் - துன்பம், சூது, பொய், வஞ்சகம்.
கைதவன் - பாண்டியன், வஞ்சகன்.
கைதாரம் - செந்நெல்.
கைதூவாமை - ஒழியாமை.
கைதை - தாழை. (இரா), வயல்.
கைதைச்சுரிகையன் - மன்மதன்.
கைதொடல்* - சோறுண்ணல்.
கைதொழல் - கையினால் கும்பிடல்.
கைத்தலம் - கை.
கைத்தல் - கசத்தல், அலங்கரித்தல், வெறுத்தல்.
கைத்தாய் - வளர்க்குந் தாய்.
கைத்து - பொன், வெறுப்பு, திரவியம்.
கைத்தொழில் - கைவேலை.
கைநாட்டு* - கைக்கீறல்.
கைந்நனைத்தல்* - கைகழுவல்.
கைந்நாகம் - யானை. (கந்)
கைந்நீட்டுதல் * - அடிக்கமுந்துதல், களவாடுதல்.
கைந்நொடி-மாத்திரைப்பொழுது
கைபடிதல்* - கைதிருந்துதல்.
கைபாகம்* - கைப்பழக்கம்.
கைபுனை, கைபுனைதல் - அலங்கரித்தல், பூத்தொடுத்தல்.
கைபோடுதல்* - வாக்குப்பண்ணல்.
கைப்பட்டை - தோட்பட்டை.
கைப்பதட்டம்* - கள்ளம்.
கைப்பழக்கம் - கைப்பரிட்சை.
கைப்பற்றல் - கைவசமாக்குதல், கலியாணம்.
கைப்பாடு - கைவேலை.
கைப்பிடி - கைபிடித்தபிடி, [கலியாணம்.]
கைப்பு - கசப்பு, வெறுப்பு.
கைப்புடை - கைக்கவசம்.
கைப்புட்டில் - விரலுறை.
கைப்புலி - யானை.
கைமை, கைம்பெண் - அமங்கலி.
கைம்மணி - கையாலசைக்குஞ் சிறுமணி, சேமக்கலம், கைத்தாளம்.
கைம்மலை, கைம்மான் - யானை.
கைம்மாறு - பிரதியுபகாரம்.
கைம்மாறுதல் - விற்றல்.
கைம்மாற்று - உடன்மாற்று.
கைம்மிகல் - அதிகப்படல், கைகடத்தல்.
கைம்மீன் - அத்தநாள்.
கைம்மூலம் - அக்குள்.
கைம்மை - விதவைவிரதம்.
கையடக்கம் - கைக்கு இலேசானது.
கையடை - அடைக்கலம்.
கையரிக்கொளல் - தேடுதல், அரித்துக்கொள்ளல்.
கையர் - கீழ்மக்கள், வஞ்சகர்.
கையறல் - ஒழுக்கமின்மை, செயலறல், இறத்தல்.
கையறவு - வருத்தம். (பெரிய)
கையறுநிலை - ஓர்பிரபந்தம்; அது வாட்போரிலிறந்த மன்னனைக்கண்டு யாழ்ப்பாணருஞ் சுற்றத்தாரும் அவன் பட்ட பாட்டைக் கூறி இரங்குதல்.

கையாந்தகரை - கரிசாலை.
கையாள் - குற்றேவலாள்.
கையாறு - ஒழுக்கம், செயலொழிந்தயர்தல், துன்பம்.
கையான் - கரிசாலை.
கையிகத்தல் - அகன்றுநிற்றல், கடத்தல்.
கையிருப்பு*-கையிலுள்ள பணம்.
கையுறை - கைக்கவசம், கையிற்றரும்பொருள். (திருவி)
கையேந்தல்*-இரந்துவாங்குதல்.
கையை - தங்கை.
கையொப்பம்* - கையெழுத்து.
கையொழியாமை - ஒழியாவொழுக்கம்.
கையோடே* - உடனே, கைவிடாமல்.
கைரவம் - குமுதம், வஞ்சகம், வெள்ளாம்பல்.
கைரிகம் - பொன், காவிக்கல்.
கைலாகு - உபசரணையாகக் கைகொடுத்தல்.
கைலாசம், கைலாயம், கைலை* - கயிலைமலை.
கைவலம் - முத்தி.
கைவல்லியம் - மோட்சம், ஒரு வேதாந்தநூல், தனிமை.
கைவளை - கடகம்.
கைவாசி* - கைச்சித்தி.
கைவாரம் - வாழ்த்து.
கைவிடுதல் - கைவிட்டுவிடுதல்.
கைவிலங்கு - கைக்கிடும் விலங்கு, யானை. (திருவி)
கைவிளக்கு - ஒரு சிறுவிளக்கு.
கைவினை - கைத்தொழில்.
கைனி-கைம்பெண், அத்தநாள்.

## கோ

கொக்கட்டி - குறண்டற் பனங்கிழங்கு.
கொக்கரித்தல் - குணலையிடல், கோழி முதலிய பறவையினொலி விசேடம்.
கொக்கரை - பாம்பு, வலம்புரிச் சங்கு, வலை, வில்.
கொக்கறை - பனை தெங்கு முதலியவற்றின் பிள்ளைமடல்.
கொக்காம்பாளை - ஓர் செடி.
கொக்கி, கொக்கை - கொழுவி.
கொக்கு - ஓர் புள், [குதிரை, செந்நாய், மாமரம், மூலநாள்.]
கொக்குமந்தாரை - காட்டாத்தி மரம்.
கொக்கோகம் - காமநூலிலொன்று.
கொங்கணம் - ஓர் தேசம், பதினெண்பாடையிலொன்று.
கொங்கணன் - ஓர் சித்தன்.
கொங்கணி - சம்பங்கூடு, ஓர் தென்னோலைக்கூடு.
கொங்கணியான் - ஓர் மீன்.
கொங்கன் - சேரன். (பிங்)
கொங்காரம் - குங்குமமரம்.
கொங்கு - சேராசனுண்ட தேசம், கள், தேன், பூந்தாது, வாசனை.
கொங்கை - முலை, மாக்கணு, கம்புமி.
கொசு, கொசுகு* - நுளம்பு.
கொசுவம் - கொய்சுவனம் (உடுக்கையில் முன்விடுந் தலைப்பு.)
கொசுறு* - பிசுக்கு.

கொச்சகம் - ஓர் கவி.
கொச்சாளை* - ஓர் மீன்.
கொச்சி - ஓர் தேசம், [நெருப்பு, மிளகாய்ச்செடி.]
கொச்சிக்குழந்தை - வைப்பரி தாரம்.
கொச்சை - ஆட்டின்பொது, வெள்ளாடு, இகழ்வு, திருந்தாத பேச்சு.
கொஞ்சம் - சிறு அளவு.
கொஞ்சல்* - செல்வமாய்ப்பேசுதல், மழலைச்சொல்.
கொஞ்சி* - ஓர் செடி.
கொடி - படர்கொடி, துகிற்கொடி, இஃது அட்டமங்கலத்தொன்று, [அவிட்டநாள், காக்கை, கீழ்த்திசைப்பாலன் குறி, குமரனுடல், நீளம், ஒழுங்கு.]
கொடிகட்டிநிற்றல் * - அவசரப்படுதல்.
கொடிக்கள்ளி - ஓர் கள்ளி.
கொடிக்கால் * - வெற்றிலைக் கொடி.
கொடிச்சி - இடைச்சி, காவட்டம்புல், சித்திரமூலம், புற்ருஞ்சோறு, குறிஞ்சிநிலப் பெண்.
கொடிச்சியர் - குறிஞ்சிநிலப் பெண்கள்.
கொடிஞ்சி - தேர், தேர்மொட்டு.
கொடித்தீ - சித்திரமூலம்.
கொடிப்படை - முன்னணிப் படை.
கொடிப்பாலை-ஓரிசை, ஓர்செடி.
கொடிப்பிள்ளை -காக்கைக்குஞ்சு.
கொடிமாதளை - ஓர் மாதளை.
கொடிமுந்திரிகை - திராட்சைக் கொடி.
கொடியமன்னன் - கோடாசொரி பாஷாணம்.
கொடியன் - துட்டன், [கேது.]
கொடியாள்கூந்தல் - அம்மையார்கூந்தல்.
கொடியேற்றம்- திருவிழாத்தொடக்கம்.
கொடிவழித்தீர்த்தம் - வேங்கடமலையிலுள்ள ஒரு தீர்த்தம்.
கொடிவேலி - கொடுவேலி.
கொடிறு - கபோலம், பூசநாள், யானைக்கதுப்பு.
கொடுகொட்டி - குமரனுடல், சிவனுடிய கூத்து.
கொடுக்கி - கதவின்கொடுக்கி, பணிப்பூட்டு.
கொடுக்கு - கவைத்தாள்.
கொடுங்கண் - கொடுமை,கொடும் பார்வை.
கொடுங்கை - உள்வளைந்த கை, வீட்டின் வெளிப்பக்கம்.
கொடுத்தல்* - ஈதல்.
கொடுநுகம் - மகநாள், மேழி.
கொடுப்பனை, கொடுப்பினை * - பெண்ணை மணஞ்செய்து தருதல்.
கொடுப்பை - பொன்னுங்காணி.
கொடுமரம் - வில், தனுராசி.
கொடுமுடி - மலையினுச்சி.
கொடுமை - பொல்லாங்கு, [கொடுங்கோன்மை, வக்கிராந்த பாஷாணம்.]

கொடும்பாவி - அநீதன், [மழையில்லாத காலத்தில் வைக்கோற்புரியாற் கட்டியிழுக்கு மோருரு.]
கொடும்புலி-சிங்கம், சிங்கவிராசி.
கொடும்பை - ஓர் பச்சிலை, ஓர் பூடு, மதகு, குளம், மலையருவி.
கொடுவரி - புலி. (புறநா)
கொடுவாட்கத்தி * - வளைவான கத்தி.
கொடுவாய் - ஓர் மிருகம், ஓர் மீன், வெறும்புறங்கூறல்.
கொடுவாள்* - அரிவாள், மழு.
கொடுவேலி - ஓர் செடி.
கொடூரம் - கடுமை, குரூரம்.
கொடை - ஈகை. [டுத்தல்.
கொடைமடம் - வரையாதுகொ
கொடையாளன் - ஈகையாளன்.
கொட்குதல்- சுழலுதல். (வெண்)
கொட்டகம், கொட்டகை, கொட்டம், கொட்டில்-தொழுவம்.
கொட்டடி* - சாமானறை.
கொட்டாங்கச்சி*-தேங்காயோடு.
கொட்டாப்பிடி, கொட்டாப்புளி* - மரச்சுத்தியல்.
கொட்டாய்* - கொட்டகம்.
கொட்டாரம் - யானைப்பந்தி, முதல் வாசல், தானியக்களஞ்சியம்.
கொட்டாவி * - வாயால் விடும் நெடுஞ்சுவாசம்.
கொட்டாறு - உப்பளம்.
கொட்டி - ஓர் கிழங்கு, சிவனுடிய கூத்து, தாளம். 'கொட்டியளந்தமையாப் பாடலும்' (திரிகடு), வாயில், கூட்டம்.
கொட்டியம் - எருது.
கொட்டில் - பசுக்கொட்டில், [ஒதுக்கிடம், வில்பயிற்றுமிடம் (சீவக. சிங். 995.]
கொட்டு - கொட்டென்னேவல், அடி, [மண்வெட்டி, துளையுடைப்பொருள், தாளம்.]
கொட்டுக்கிணறு - சங்களைக்கிணறு.
கொட்டுதல் - குட்டுதல், தேள் முதலிய கடித்தல், பறையடித்தல், சிந்துதல்.
கொட்டுமேளம் - நட்டுவமேளம்.
கொட்டுவாய் - சிறு செந்துக்கள் குற்றின குற்றுவாய்.
கொட்டை-வித்து, [ஓர் காதணி, நூற்குங் கொட்டை, பாத குறட்டின் குமிழ், தலையணை.]
கொட்டைக்கரந்தை-ஓர்கரந்தை.
கொட்டைநூற்றல் - நூல்நூற்றல்.
கொட்டைப்புளி * - கொட்டையெடாத புளி. [முத்து.
கொட்டைமுத்து - ஆமணக்கு
கொட்டைமுந்திரிகை-ஓர் மரம்.
கொட்டையாடுதல் - பஞ்சு சுகிர்தல்.
கொட்டையூர் - ஒரு சிவஸ்தலம்.
கொட்பு - சுழற்சி, திரிதல், வளைவு, கொள்கை. (இரா)
கொணர்தல் - கொண்டுவரல்.
கொண்கன் - கணவன், தலைவன், நெய்தனிலத்தலைவன்.
கொண்டகுளம் - எட்டிமரம்.
கொண்டக்காரர் - கரையாரிலோர் வகையினர்.

கொண்டக்கிரி - ஓர் பண்.
கொண்டலடித்தல் - மகளிர்விளை யாட்டின்ஒன்று.
கொண்டலாத்தி* - ஓர் குருவி.
கொண்டல் - கீழ்காற்று, முன் பனிப் பருவத்தின் காற்று, மேகம்.
கொண்டல்மிதித்தல் - தீமிதித் தல்.
கொண்டல்வண்ணன்- திருமால்.
கொண்டவன், கொண்டான்* - மணஞ்செய்த கணவன்.
கொண்டாடல்* - மெச்சல்.
கொண்டாட்டம்* - சந்தோஷம், பொழுதுபோக்கு.
கொண்டானடித்தல்* - கொண்ட லடித்தல்.
கொண்டான் - ஓர் விளையாட்டு.
கொண்டி - கொழுமாட்டுமிரும்பு, [கொள்ளை, உணவு.]
கொண்டிமாடு - பட்டிமாடு.
கொண்டியம் - புறங்கூறுதல்.
கொண்டேசன் - சுக்கு.
கொண்டை - ஐம்பாலின்ஒன்று அஃது பக்கன் முடித்தல், பட் சியின் சிகை, ஆணி முதலிய வற்றின் தலை, மயிர்முடி, [இலந்தைக்கனி.]
கொண்டைக்கரிச்சான் - கரிக் குருவி.
கொண்டைக்காரன் - மயிர்முடி யுள்ளோன், [மேன்மையுடை யவன், செருக்கன்.]
கொண்டைசாணிக்கிழங்கு - நஞ் சறுப்பான்.
கொண்டைமுசு - ஓர் குரங்கு.
கொண்டையூசி - குண்டூசி.
கொண்டோன் - நாயகன்.
கொண்மூ - முகில், ஆகாயம்.
கொதித்தல் - நீர் முதலிய பொங் குதல், [கோபித்தல்.]
கொதிப்பு - சூடு, [துடிப்பு, மூர்க் கம்.]
கொதுகு - கொசுகு.
கொதுகொதெனல் - கொதித்தெ ழும்புதல்.
கொத்தடிமை - பழவடிமை.
கொத்தமல்லி, கொத்துமல்லி* - ஓர் சரக்கு.
கொத்தம் - எல்லை.
கொத்தல் - கொத்துதல்.
கொத்தவால்* - சந்தை விசார ணைக்காரன்.
கொத்தளம் - மதிற்புறம்.
கொத்தளி - ஒரு பாய்.
கொத்தளை - ஓர் மீன்.
கொத்தான்* - ஓர் செடி.
கொத்து - கொத்தென்னேவல், கொல்லத்துக்காரன், திரள், உணவு, [குடும்பம், நாழி என் னும் அளவை.]
கொத்துச்சரப்பணி, கொத்துச் சரப்பளி - ஓர் ஆபரணம்.
கொத்துதல் - இரைகொத்தியெ டுத்தல், மண்வெட்டுதல், தறி த்தல்.
கொத்துத்தாழ்வடம் - சிறு ருத் திரமணிக்கோவை.
கொத்தை - சொத்தை, பழுது.
கொந்தல் - அணில் முதலியவற் றாற் கொந்தப்பட்டது, [சினக் குறிப்பு, பெருங்கோபம்.]

கொந்தளம் - கூத்தின் விகற்பம், பெண்மயிர், மயிர்க்குழற்சி, சமுத்திராப்பழம்.
கொந்தளித்தல் - கிளம்பல், மும்முரங்கொள்ளுதல்.
கொந்தாலி - கல்லுவெட்டுமோர் கருவி.
கொந்து - கொந்தென்னேவல், [பூங்கொத்து, கோபம். (ஞாஞ)]
கொப்பம் - யானைபடுகுழி.
கொப்பரி, கொப்பரை*-கிடாரம்
கொப்பரைத்தேங்காய்* - நீர்வற்றிய தேங்காய்.
கொப்பளம், கொப்புளம்* - குமிழ்ப்பு, சீழ்ப்பிடி.
கொப்பளித்தல், கொப்புளித்தல் - வாயால் நீரை யலசிக்கக்கல், கொப்புளமாதல், [குமிழ்த்தல்.]
கொப்பி* - கொம்மை.
கொப்பிகொட்டல் - கொம்மைகொட்டல் (அகங்கை விரித்துக்கொட்டல்.)
கொப்பு - மாதர் காதணியினென்று, [மயிர்முடி, மரக்கொம்பு.]
கொப்புள் - குமிழி, கொப்பூழ், கொப்புளம்.
கொப்பூழ் - உந்தி, (சீவ. சிந்).
கொம்பரக்கு - பொன்மெழுகு.
கொம்பர் - மரக்கொம்பு, விலங்கின்கொம்பு.
கொம்பன் - ஆண்யானை.
கொம்பு - மரக்கொம்பு, விலங்கின் கொம்பு, [ஊதிடுகொம்பு, ஏறிக்கோடி, நீரைவீசுங்கருவி. (மணிமே. **267**), மேன்மை.]
கொம்பூதி - நத்தை. (சங். அக.)
கொம்பேறிமூர்க்கன்*-ஓர்பாம்பு.
கொம்மட்டி-தும்மட்டி,ஓர்கொடி
கொம்மெனல் - அனுகரணவோசை.
கொம்மை - அகங்கை விரித்துக் கொட்டல், அழகு, இளமை, திரட்சி, முலை, வட்டம், ஒலி, பெருமை, திடர்.(பிங்.),மார்பு.
கொம்மைகொட்டல் - கைதட்டியழைத்தல். (சீவ- சிந்.)
கொய் - கொய்யென்னேவல், ஓர் மீன்.
கொய்சகம் - உடுக்கையில் முன்னர்விடுந் தலைப்பு.
கொய்தல் - அறுத்தல், எஃகிவாங்குதல், [கத்தரித்தல், ஆய்தல்.]
கொய்யடி - ஓர் நாரை.
கொய்யா - ஓர் மரம், [நெய்வார் கருவியினென்று.]
கொய்யுளை-குதிரை. (பிங்), குதிரைப் பிடரிமயிர்.
கொலு - உல்லாச வீற்றிருப்பு, சேவை, இராஜசமுகம்.
கொலுசு* - காலணியினென்று.
கொலை*-கொல்லுதல்.
கொலைஞர் - கொலைபாதகர், சண்டாளர், வேடர்.
கொல் - கொல்லென்னேவல், அசைச்சொல் (உ-ம்.) வருவர் கொல் வயங்கிழாஅய், ஐயக்கிளவி (உ-ம்.)இவ்வுருக்குற்றி கொல் மகன்கொல், வருத்தம்.]

கொல்லம் - ஓர் தேயம்.
கொல்லர் - கம்மாளர், கருமார்.
கொல்லறு* - கரணை.
கொல்லன்கோவை - காக்கணங்கொடி.
கொல்லாவிரதியர் - கொல்லாவிரதம்பூண்டவர், அருகசமயத்தார்.
கொல்லாவேதன் - அருகன்.
கொல்லி - ஓர் பண், ஓர் மலை.
கொல்லிடம், கொள்ளிடம்* - ஓர் யாறு.
கொல்லிப்பாவை - கொல்லிமலைக்கண் கண்டார் மனத்தைக் கவர்ந்து காமம் விளைவிக்குந் தன்மையுடைய ஒரு பாவை. (தணி)
கொல்லியர் - வண்ணார்.
கொல்லிவெற்பன் - சேரன்.
கொல்லுலை - கம்மாளருலைமுகம்.
கொல்லெனல் - ஒலிக்குறிப்பு.
கொல்லை - புறக்கடை, தோட்டம், [பூந்தோட்டம், சோலை.]
கொல்லைப்பல்லி - ஓர் பூடு.
கொவிந்தம் - செம்முள்ளி.
கொவ்வை - ஓர் கொடி.
கொழிஞ்சி - ஓர் நாரத்தை, [பூவாது காய்க்குமரம்.]
கொழித்தல் - வாருதல், [ஆராய்தல், கொள்ளுதல்.]
கொழிப்பு-குற்றம், கொழித்தல்.
கொழியல்*-தவிடெடுபடாத வரிசி.
கொழுகொம்பு - கொடியேறு கொம்பு, தஞ்சம், நடுக்கொம்பு.
கொழுக்கட்டை * - ஓர் பண்ணிகாரம்.
கொழுங்கிரி - மல்லிகை.
கொழுஞ்சி - கொழுமிச்சை, கொள்ளுக்காய்வேளை.
கொழுத்தல் - சரீரந் தெளிந்து பருத்தல், மதத்தல்.
கொழுநன் - எப்பொருட்குமிறைவன், நாயகன்.
கொழுந்தன் - கணவனின் சகோதரன்.
கொழுந்தி-கணவனின்சகோதரி.
கொழுந்து - இளங்கிளை, [மருக்கொழுந்து, தீச்சுவாலை.]
கொழுப்பு - நிணம், [செழுமை, மதர்ப்பு.]
கொழுமை - கொழுப்பு, செழுமை, வளமை, அழகு.
கொழும்புகை - நறும்புகை.
கொளகொளெனல் - ஈரடுக்கொலிக்குறிப்பு.
கொளுச்சொல் - கருத்து.
கொளுத்து - கொளுத்தென்னேவல், [சந்து, மூட்டு.]
கொளுத்துதல் - தீப்பற்றுவித்தல், [கலைகற்பித்தழுத்தல், வீணை முதலிய வாசித்தல்.]
கொளுவி - கொக்கை.
கொளுவுதல் - அகப்படுத்துதல், கொளுவிவிடுதல், தொடுத்துக் கொள்ளல், மிதியடி முதலிய தொடுதல்.
கொளை - இசைப்பாட்டு, கோட்பாடு. (கலி)
கொள் - ஓர் தானியம், கொள்ளென்னேவல்.

கொள்கலம் - அணி - ஆடை - சாந்து - மாலை முதலிய பெய்கலம், பாத்திரம், பிழார் (இறைகூடை.)
கொள்கை - குணம், கோட்பாடு, விரதம், செய்கை.
கொள்விலை - கொண்ட விலை.
கொள்ளம் - குழைசேறு.
கொள்ளல் - ஒன்றனுள் அடங்குதல், வாருதல்.
கொள்ளாகொள்ளை - மிகுதி.
கொள்ளார் - பகைவர்.
கொள்ளி - நெருப்புறு விறகு, [எருமைநாக்கி.]
கொள்ளிக்காற்குதிரை - ஒருகால் வெள்ளையான குதிரை.
கொள்ளிவாய்ப்பேய் - நெருப்புக் காலுமாவி.
கொள்ளிவைத்தல் - பிணஞ் சுடல், [தீங்குசெய்தல்.]
கொள்ளை * - கொள்ளை யெடுத்தல், கொள்ளையிட்ட பொருள், மிகுதி, கொலை. (இரா)
கொறடா - சவுக்கு.
கொறட்டை - ஓர் செடி.
கொறி - கொறியென்னேவல், [ஆடு, செம்மறியாடு, மேடவிராசி.]
கொறிக்குதல்*-பல் முதலியவற்றாற் கோதுதல்.
கொறிதலை - நிலவேம்பு.
கொறு - கன்று பாலூட்டாதபடி முகத்திற் கட்டுமியற்று.
கொறுக்கச்சி - நாணல், எருவை.
கொறுக்கை - உயிர்ப்பு, குறட்டை, நாணல்.
கொற்கை - மதுரைக்கருகில் ஓரூர்.
கொற்றம் - அரசியல், வலி, வெற்றி.
கொற்றவள்ளை - பகைவர்நாடழித்தல்.
கொற்றவன் - அரசன், முடக்கொத்தான்.
கொற்றவி - தலைவி. (சீவ. சிந்)
கொற்றவை - துர்க்கை. (சேது)
கொற்றி - துர்க்கை, பசுவிளங்கன்று, வடுகி.
கொற்றியார் - பிரசவத்துக்குரிய தேவதை.
கொன் - அச்சம், காலம் (உ-ம்.) கொன்வரல்வாடை, பயனின்மை (உ-ம்.) கொன்னே கழிந்தன்றிளமை, பெருமை(உ-ம்.) கொன்னூர் துஞ்சினும் யாந் துஞ்சிலமே.
கொன்றை - கடுக்கைமரம், ஒரு பண்.
கொன்றைசூடி - சிவன்.
கொன்றைவேந்தன் - ஔவை இயற்றிய நீதிநூல்.
கொன்னித்தல், கொன்னுதல் - பேசநாத் திரும்பாதிருத்தல்.
கொன்னை - திருத்தமற்ற பேச்சு.

## கோ

கோ - பசு, [அரசன், அம்பு, ஆகாயம், ஆண்மகன், இரக்கக்குறிப்பு, கண், திசை, தேவலோகம், நீர், பூமி, மலை, வச்சிராயுதம், சூரியன், சந்திரன், சொல், மயிர்.]

கோகத்தி - பசுக்கொலை.
கோகநகம், கோகநதம் - செந்தாமரை.
கோகம் - சக்கரவாகப்புள், செந்நாய், மலைப்புளிச்சை.
கோகரணம், கோகர்ணம், கோகருணம், கோகன்னம் - ஓர்வித்தை, அஃது பசுவின் செவிபோலிரண்டு கையையு மடித்துச் சுகாதனமாய்ச் செவி கண் மூக்கு எல்லாம் புதைந்திருப்பது.
கோகழி - திருவாவடுதுறை.
கோகனதம் - செந்தாமரை, செவ்வாம்பல். (சப்)
கோகனதை - இலட்சுமி.
கோகனம் - கரிசாலை, நிலக்கடம்பு, மலையாளக்கரையிலுள்ள ஒரு சிவஸ்தலம், நிலவேம்பு.
கோகிலம் - குயில், பல்லி, குரங்கு, சிறு குறிஞ்சா, இலந்தை, கலப்பை.
கோகீலம் - கலப்பை, உலக்கை.
கோகிலோற்சவம் - மாமரம்.
கோகு - கழுதை, புயம்.
கோகுடி - ஓர்வகைப்பூ.
கோகுலம் - குரங்கு, இடையரூர், துளையுடைப்பொருள், ஆன் கொட்டில், குயில், காலிவருக்கம், பல்லி.
கோக்கள்-பசுக்கள், [சிறந்தோர், அரசர்.]
கோங்கு - ஓர் மரம்.
கோசம் - ஆண்குறி, உறை, கருகூலம், சாதிக்காய், செல்வம், தெரு, பொக்கிஷசாலை, புத்தகம், மதிலுறுப்பு, முட்டை, அரும்பு, கூட்டம், பொன்.
கோசரம் - அடங்கல், அறியத்தக்கது, ஊர், மகிழமரம், விஷயம்.
கோசலம்-ஓர் தேசம், பதினெண் பாடையிலொன்று, பசுமூத்திரம்.
கோசலை - இராமன்றாய், ஓர் தேசம்.
கோசனை - பேரொலி, கோரோசனை.
கோசன் - செம்படவனுக்கும் புலைச்சிக்கும் பிறந்த மகன், சீர்பந்தபாஷாணம்.
கோசாதகி - புடோலை. (பிங்)
கோசாரம் - இராசி.
கோசிகம் - பட்டுச்சீலை, சாமவேதம்.
கோசிகன் - விசுவாமித்திரன்.
கோசு - இரண்டு காததூரம், தெரு, தோல்வி.
கோடகம் - குண்டிகை, குதிரை, நாற்சந்தி, புதுமை, முடியுறுப்பிறென்று.
கோஷணை, கோடணை - ஒலி, பேரொலி, கொடுமை, வாச்சியப்பொது.
கோடம் - இரைச்சல், எல்லை, குதிரை, கமுகமரம்.
கோடரம் - எட்டிமரம், குதிரை, குரங்கு, சோலை, தேர்மொட்டு, மயிர்ச்சாந்து, மரக்கொம்பு, மரப்பொது, மரப்பொந்து.
கோடரி, கோடாரி, கோடாலி* - நவியம் (ஓராயுதம்).

கோடல் - கொள்ளல், மனங்குன்றல், வளைதல், வெண்காந்தள்.
கோடவதி - வீணை.
கோடா - சாராயவண்டல்.
கோடாங்கி, கோடங்கி - வருங்காரியமுரைப்போன்.
கோடாய் - வளர்க்குந் தாய்.
கோடி - நூறிலட்சம், புதுச்சீலை, பிரார்த்தி யென்னுமேவல், முனை, [இருபதுகொண்டது, புதுமை, முடியுறுப்பு, கொள்தி, மூலை.]
கோடிகம் - அணிகலச்செப்பு, கெண்டிகை, சீலை, பூந்தட்டு.
கோடிக்கரை - ஓரூர்.
கோடிதீர்த்தம் - தனுக்கோடி.
கோடித்தல் - அலங்கரித்தல்.
கோடியர் - நாடகர், சிவிகையின் கொம்பிற்கு முன்னும் பின்னும் நிற்போர்.
கோடிரவம் - சதுரக்கள்ளி.
கோடிலம் - கோட்டம்.
கோடீரம் - சடைமுடி, இந்திரன் வில்.
கோடு - கீற்று, [அரணிருக்கை, ஊதிடுகொம்பு, சங்கு, நீர்க்கரை, மரக்கொம்பு, மலையினுச்சி, யானைக்கொம்பு, எழுத்தின் கொம்பு, வஞ்சனை, வரம்பு, விலங்கின்கொம்பு.]
கோடை - காற்று, குதிரை, செங்காந்தள், முதிர்வேனிற் பருவத்தின் காற்று, மேற்றிசைக் காற்று, வெண்காந்தள், வெயில், வேனிற்காலம்.
கோடைக்காற்று - மேல்காற்று.
கோடைக்கிழங்கு - சிற்றரத்தை.
கோட்டகம் - குளம், கோயில், நீர்க்கரை.
கோஷ்டம் - ஆரவாரம், ஓர் மருந்துப்பூடு, வாசனைப் பண்டம், [தேவலோகம், கூட்டம், கோயில், ஆன்கொட்டில்.]
கோட்டம் - அழுக்காறு, ஆன்கொட்டில், இடம், ஓர் மருந்து அது பஞ்சவிரையி னொன்று, குராமரம், கூட்டம், வளைவு, கோயில், சுடுகாடு, தேவலோகம், நாடு, பசுக்கூட்டம், மருதநிலத்தூர், வயல், வாசனைப் பண்டம், வீணை, சிறைச்சாலை, வஞ்சகம்.
கோட்டரவு - துக்கம், வாட்டம்.
கோட்டாரம் - நாற்சதுரத்தூரவு, கிணறு.
கோட்டாலை - துன்பம். (பிங்.)
கோட்டான் - ஓர் புள், [கூகை.]
கோட்டி, கோஷ்டி - கூட்டம், [நகரவாயில், நிந்தை, பரிகாசம்.]
கோட்டியாழ் - நால்வகை யாழி னொன்று.
கோட்டுதல்-வளைத்தல். (பெரிய)
கோட்டுமா - பன்றி, யானை.
கோட்டை - அரண், [இருபத்துநாலு மரக்கால்கொண்ட அளவை, பரிவேடம்.]
கோட்படுதல் -கொள்ளப்படுதல்.
கோட்பறை - நெய்தற்பறை.
கோட்பாடு - கொள்கை, கொண்டிருக்குந்தன்மை.

கோட்பு - கொள்கை. (இரா)
கோணங்கித்தாசரி* - தேகத்தைக் கோணலாக வளைத்து நடிக்கு மொரு வைணவன்.
கோணம் - மூலை, [குதிரை, முடுக்குத்தெரு, மூக்கு, யானைத் தோட்டி, வளைந்த வாள், வளைவு.]
கோணல் - வளைவு, கூன்.
கோணன் - கூனன்.
கோணமலை - திரிகோணமலை.
கோணமுகம் - சூழ்கழியிருக்கை.
கோணய்-ஆணரி, தோண்டான்.
கோணி - ஓர் தானியப்பை, வளைந்தெனனும் வினையெச்சம், [பதினாயிரங் கோடாகோடி, பன்றி, பூமி.]
கோணை-வளைவு, [அழிவின்மை, கொடுமை.]
கோண் - கோணென்னேவல், வளைவு, கொடுங்கோன்மை.
கோண்டம் - குறிஞ்சா, நெருஞ்சில்.
கோண்டை - இலந்தைக்கனி.
கோண்மா - புலி. (சீவக. சிந். 1153.), சிங்கம். (இரா.)
கோதண்டபாணி - தசரத புத்திரனை சீராமன்.
கோதண்டம் - சீராமன் வில், பள்ளிச் சிறுவர் தண்டனையிலொன்று, புருவம்.
கோதமம் - ஓர் தீவு.
கோதமன் - கௌதமன். [கு.
கோதம் - குரோதம், பொல்லாங்
கோதனம் - பசுவின் கன்று. (சேது.)
கோதா - உடும்பு.
கோதாட்டல் - சீராட்டுதல்.
கோதாவரி, கோதாவிரி - சத்த நதிகளினொன்று.
கோதி - கோதுமை, நெற்றி.
கோதித்தல் - கோபித்தல்(உ-ம்.) கோதித்த நெஞ்சினன். (பார)
கோது - மயிர்வகிரென்னுமேவல், சக்கை, [ஒடு, குற்றம்.]
கோதுகுலம் - சீராட்டு.
கோதுமை, கோதும்பை - ஓர் தானியம்.
கோதை - ஒழுங்கு, காற்று, கௌதமநதி, சேரன், நெற்சுமை, பூமாலை, பெண், பெண்மயிர், முன்கைத் தோற்கட்டு.
கோத்தல்* - தொடுத்தல், நுழைதல். (இரா.)
கோத்தனி - முந்திரிகைக்கொடி.
கோத்திரம் - குலம், [பூமி, மலை, வர்க்கம், நெட்டிப்புல், வரகு.]
கோத்திரவம் - வரகு. (சூடா.)
கோத்திரி - கோத்தனி.
கோத்திரை - பூமி, மலை.
கோநாய் - தோண்டான்.
கோந்தளங்காய் - சமுத்திராப் பழம், குறுந்தேங்காய்.
கோந்தி* - குரங்கு.
கோந்து* - பிசின்.
கோபகுண்டம் - எட்டிமரம்.
கோபதாபம்* - பெருங்கோபம்.
கோபதி - இடபம், இந்திரன்.
கோபத்திரம் - தாமரைநூல்.
கோபம் - சினம், [தம்பலப்பூச்சி, துத்தபாஷாணம்.]
கோபன்-இடையன்,காப்போன்.

கோபாலகன், கோபாலன்-இடையன், கிருஷ்ணமூர்த்தி.
கோபாலி - சேலத்தில் வழங்குமொரு நாணயம்.
கோபி-கோபியென்னேவல், சினமுள்ளோன், வைஷ்ணவரணியும் வெள்ளைமண், [கருநொச்சி, கௌரிபாஷாணம்.]
கோபிகாஸ்திரீ, கோபிகை - இடைச்சி.
கோபியர் - கோவியர்.
கோபுரம் - கோயிலின்வாயில், [நகரின்வாயில்.]
கோப்பழித்தல் - சீரழித்தல்.
கோப்பு - உல்லாசம், பெருமைக்குணம், கோத்தல்.
கோமகள்-இராசபுத்திரி, தலைவி.
கோமகன்-மன்னவன், தலைவன்.
கோமட்டி, கோமுட்டி* - ஓர் சாதி. இவர்கள் கலியாணகாலத்தில் சக்கிலிகளுக்கு மரியாதை செய்கின்றனர்.
கோமணம், கோவணம்* - கௌபீனம்.
கோமதி, கோமதை* - அயோத்தியிலோராறு.
கோமயம் - ஆப்பி, ஆவிற்குரிய பொருள்.
கோமலம்- மிருது, அழகு, சிவன் கையிலுள்ளமான், நீர், பேய்த்தேர்.
கோமளம் - இளமை, மிருது, அழகு, பசு.
கோமாட்டி - தலைவி.
கோமாயு - நரி. (சேது)
கோமாரி - பசுவுக்கு வருமொரு நோய்.
கோமாளம் - கொண்டாட்டம், பரிகாச விளையாட்டு.
கோமாளி - பரிகாச விளையாட்டுக்காரன்.
கோமாள் - தலைவி.
கோமான் - அரசன், குரு, சிறந்தோன், பன்றி, மூத்தோன்.
கோமி - சரஸ்வதி.
கோமுத்திரி - ஒரு சித்திரகவி.
கோமேதகம்-நவமணியிலொன்று
கோம்பல் - தணியாக்கோபம்.
கோம்பி - பச்சோந்தி, ஓணன்.
கோம்புதல் - கோபித்தல்.
கோயில் - தேவாலயம், [அரசன்மனை, விபூதிப்பை, சிதம்பர சீரங்கஸ்தலம்.]
கோய் - பரணி, பரிமளச் சாந்திடுங்கலம்.
கோரகம் - இளம்பூவரும்பு, வட்டில், சிவல்.
கோரகை-இளம்பூவரும்பு,குயில்.
கோரக்கர்மூலி - கஞ்சா.
கோரங்கி - ஒரு துறைமுகப்பட்டணம், [ஏலம், ஓர் பூண்டு, ஓர் மருந்து.]
கோரசம் - கவுதாரி.
கோராணி - ஆசியம்,[கோளாறு.]
கோரண்டம் - பெருங்குறிஞ்சி, மருதோன்றிமரம்.
கோரபுட்பம் - வெண்கலம்.
கோரப்பல்* - விகாரமானபல்.
கோரம் - கொடுமை, அச்சம், [உட்டணம், குதிரை, வட்டில், சீக்கிரம், சோழன்குதிரை.]

கோரம்பர் - கழைக்கூத்தர்.
கோரவாரம் - சந்தனம்.
கோரன் - சிவன்.
கோரி* - துருக்கரது பிரேதக் குழிமீதுள்ள ஒரு கட்டடம்.
கோரிகை - அகப்பை.
கோரிக்கை*-விருப்பம், வேண்டுகோள்.
கோரை - ஓர் கிழங்கு, ஓர் புல்.
கோரைப்பாய்* - புற்பாய்.
கோரோசனை* - ஓர் மருந்து.
கோலகம் - திப்பிலி.
கோலச்சங்கம் - முட்சங்கு.
கோலம் - மா முதலியவற்றால் இடுங் கோலம், [அழகு, இலந்தைக்கனி, ஒப்பனை, தெப்பம், நீரோட்டம், வளைவு, பறவை, பன்றி, பாக்கு, பீர்க்கு, மருட்பன்றி, வேடம், விநதைநகர், குவளைப்போது.]
கோலரம் - முளை.
கோலல் - கோலுதல்.
கோலவேர் - நிலப்பனை.
கோலா* - பறவைமீன்.
கோலாகலம் - சம்பிரமம், [பேரொலி, விலங்கிளுலெழுமொலி.]
கோலாங்கூலம் - முசு.
கோலாச்சி* - ஓர் மீன்.
கோலி - விளையாட்டுக் குண்டு, [இலந்தைமரம், மயிர்.]
கோலுதல்- இடங்கொள்ளப்பண்ணல், சூழ்ந்திடல், வளைத்தல்.
கோல்-தடி, ஊன்றுகோல், மரக்கொம்பு, [அஞ்சனக்கோல், அம்பு, அளந்திடுகோல், இலந்தை, எழுதுகோல், குதிரைச்சம்மட்டி, செங்கோல், துலாம், துலாராசி, தூண்டில், தெப்பம்,யாழினரம்பு,அழகு.]
கோவணன் - சிவன், வசிட்டன்.
கோவதை - கோகத்தி.
கோவம் - கோபம், [பொன்.]
கோவர் - இடையர்.
கோவர்த்தனம் - கிருஷ்ணபகவான் இந்திரன் பெய்வித்த கன்மாரிக்குப் பசுக்கூட்டத்தைக் காப்பதற்குச் சுண்டுவிரலாலெடுத்த மலை.
கோவர்த்தனர்,கோவலர்- இடையர்.
கோவலன் - இடையன், கிருஷ்ணமூர்த்தி.
கோவிதன் - வித்துவான். (சப்)
கோவிந்தர் - இடையர்.
கோவிந்தன் - கண்ணன், [இந்திரன், பிரமன்.]
கோவியர் - இடைச்சியர். (பார.)
கோவெனல் - அனுகரணவோசை.
கோவேட்கள்-குயவர் (மணிமே. 270.)
கோவேறுகழுதை - கோவரகழுதை.
கோவை - ஓர் பிரபந்தம், அணிவடம், கோத்தமாலை, கோத்தல், வரிசை.
கோவைசியர் - வைசியரிலோர் வகையினர்.
கோழி - ஓர் புள், [உறையூர்.]
கோழிக்குறுமான்* - ஓர் பூடு.

கோழிக்கொடியோன் - குமரன், ஐயனர்.
கோழித்தலைக்கந்தகம் - சிவந்த கந்தகம்.
கோழிப்புடம் - பத்தெருப்புடம்.
கோழிமுளையான் - முக்குளிக் கொடி.
கோழிவேந்தன் - சோழன்.
கோழை - கபம், நாணம், [கொடு மை, சிலேற்பனம், காசம்.]
கோழைத்தனம்- அச்சத்தன்மை.
கோளகம் - பட்டுச்சீலை, மண்ட லிப்பாம்பு, மிளகு, திப்பிலி.
கோளகன் - கைம்பெண் பெற்ற பிள்ளை.
கோளகை - மண்டலிப்பாம்பு, வட்டம், பூண், கவசம்.
கோளம் - உண்டை, வட்டம்.
கோளரி - ஆண்சிங்கம், சிங்கம்.
கோளன்* - கோளுரைப்போன்.
கோளாறு* - குழப்பம்.
கோளி - அத்திமரம், ஆலமரம், கொழிஞ்சிமரம், கொள்வோ ன், பூவாது காய்க்குமரம்.
கோளிகை - பெட்டைக்குதிரை.
கோளிப்பாகல் - பலாமரம்.
கோளேசம் - குங்குமப்பூ.
கோள்-புறங்கூறல், [இடையூறு, குணம், கொலை, கொள்ளல், கிரகம், தீமை, நட்சத்திரம், பொய், வலி, கொள்கை.]
கோறணி - கோரணி.
கோறல் - கொல்லுதல்.
கோறின்னல் - பல்விளக்கல்.
கோறை-துளை, பழுது, பொந்து.
கோற்கொடி - இலந்தை, சுரை.
கோற்றேன் - கொப்பாந்தேன்.
கோனர்* - இடையரின் சங்கைப் பேர்.
கோனிச்சி - இடைச்சி.
கோன் - அரசன், எப்பொருட்கு மிறைவன், இடையன்.

## கௌ

கௌ - ஒருயிர்மெய்யெழுத்து, கௌவென்னேவல்.
கௌசலம்-ஓர் தேசம், வாழ்த்து.
கௌசலை, கௌசல்யை - ஸ்ரீரா மன்தாய்.
கௌசனை - உறை, கோவணம்.
கௌசிகபலம் - தெங்கு.
கௌசிகம் - ஓர் பண், கூகை, சாமவேதம், பட்டுச்சீலை, ஒரு பாஷை, விளக்குத்தண்டு, பா ம்பு, குங்கிலியம்.
கௌசிகன் - விசுவாமித்திரன், இந்திரன், பாம்பாட்டி.
கௌசிகாத்மஜன் - அர்ச்சுனன்.
கௌசிகை - கிண்ணம், தகழி.
கௌடம் - ஓர் தேயம், ஓர் பா ஷை, ஓர் கொடி, வஞ்சகம்.
கௌடி - ஓர் பண், பலகறை.
கௌடிலம் - வளைவு. (மணிமே. 272.)
கௌணியர் - பூமியிலுள்ளார்.
கௌண்டர், கவுண்டர்-ஓர் சாதி யார், [சண்டாளர்.]
கௌண்டிகர் - தோல்வினைஞர்.
கௌதமநதி, கௌதமைநதி - கோதாவரி.

கௌதமன் - ஆதிபுத்தன், சத்த விருடிகளிலொருவன்.
கௌதமி, கௌதமை - ஓர் பசு, கோதாவரி, கோரோசனம்.
கௌதம் - சிச்சிலிக்குருவி.
கௌஸ்துபம், கௌத்துவம் - திருமாலின் மார்பணி, [துளசி மணி, பதுமராகம், மாணிக்கம், அத்தநாள்.]
கௌதுகம் - சந்தோஷம், மங்கலம், நூதனம்.
கௌதூகலம் - பெருமகிழ்ச்சி.
கௌந்தி - குந்திதேவி, தவப் பெண், வால்மிளகு.
கௌந்தேயன் - குந்திபுத்திரன்.
கௌபம் - கிணற்றுநீர்.
கௌபீனம் - கச்சைச்சீலை.
கௌப்பு - பெருமை.
கௌமாரம் - ஓர் சமயம், அட்டாதச கீதபுராணத்தொன்று, ஆடவர்க்கு ஒன்றுமுதற் பதினாறுவரையுமாகிய பருவமும் பெண்களுக்குப் பதினாறு வயதிற்குமேல் முப்பத்திரண்டு வயதிற்குள்ளுமாகிய பருவம்.
கௌமாரி - சத்த மாதர்களிலொருத்தி, பார்வதி.
கௌமுதி - திருவிழா, நிலா.
கௌமோதகி - திருமாலின் தண்டாயுதம்.
கௌமோதம்- கார்த்திகைமாதம்.
கௌரம் - வெண்மை, அச்சம், கீர்த்தி, சுத்தம், செம்மை.
கௌரவம்* - மேன்மை, [பாரமுடைமை.]
கௌரவர் - குருகுலவேந்தர்.
கௌரி - காளி, துர்க்கை, பத்தாண்டுப்பெண், பார்வதி, கடுகு, மஞ்சணிறம், சரஸ்வதி.
கௌரிசங்கம், கௌரிசங்கரமணி- இரட்டையுருத்திராட்சம்.
கௌரிசிப்பி, கௌரிபாத்திரம் - சங்கு வடிவுடைய பாத்திரம்.
கௌரியன் - பாண்டியன்.
கௌருதற்பிகன் - குருபன்னி கற்பழித்தோன்.
கௌவல், கௌவுதல் - பற்றல்.
கௌவியம்-கோரோசனை, பால்-தயிர்-நெய் -கோசலம் - ஆப்பி, பிதுர்கருமம்.
கௌவை - ஆயிலியநாள், எள்ளிளங்காய், கள், துன்பம், பழிச்சொல், ஒலி.
கௌளம் - ஓரிராகம்.
கௌளி - வெற்றிலைக்கட்டு, ஓர் இராகம், பல்லி.

## ங

ங - ஓரெழுத்து, குருணிக்குறி.
ஙனம் - இடம் (உ-ம்.) அங்ஙனம், தன்மை. (உ-ம்.) எங்ஙனம்.

## ச

ச - ஒருயிர்மெய்யெழுத்து.
சஃகுல்லி- அப்பவர்க்கம், மோட்சம்.
சககமனம் - உடன்கட்டையேறுதல்.

சகசண்டி - முருடன், நாணமில்லான்.
சகசம் - இயற்கை, உண்மை, ஒற்றுமை, உடன்பிறந்தது, வட்டில்.
சகசரி - பொன்னிறங்கலந்த கரும்பூவுள மருதோன்றிமரம்.
சகசன் - உடன்பிறந்தான்.
சகசாட்சி - சூரியன்.
சகசாலம் - உலகமாயம்.
சகசை - சகோதரி.
சகசோதி - மிகு பிரபை.
சகடக்கால் - வண்டியுருள்.
சகடம் - வண்டி, பாண்டில் பூண்டவூர்தி, ஊர்க்குருவி, உரோகிணி, வட்டில், தமரத்தை.
சகடயோகம் - குருவுக்கு ஆறு எட்டு பன்னிரண்டிற் சந்திரன் நிற்பது.
சகடு - உரோகிணி, வண்டி, சந்தேகம்.
சகடை - வண்டி, முரசு, ஒரு வாச்சியம்.
சகண்டை - முரசு, வாச்சியம்.
சகதண்டம் - உலகமுழுதும்.
சகதி - சேறு, பொல்லாநிலம்.
சகதேவன், சகாதேவன் - பாண்டவரில் இளையவன்.
சகதேவி, சகமாது - பூமாதேவி.
சகத்திரம், சகஸ்திரம் - ஆயிரம்.
சகத்து-உலகம், பிராணி. (சப்த)
சகநாதம் - வடக்கேயுள்ள ஒரு புண்ணியஸ்தலம்.
சகநாதன் - கடவுள், திருமால்.
சகநாயகன் - காந்தம்.
சகமார்க்கம் - யோகமார்க்கம்.
சகம் - உலகம், [சட்டை, பாம்புச்சட்டை, ஓர் தேசம், மார்கழிமாதம், பூமி.]
சகரர் - சகரபுத்திரர்.
சகரன் - முதலெழு வள்ளலிலொருவன்.
சகரிகம் - நாயுருவி.
சகலகம் - வெள்ளாட்டுக்கடா.
சகலகலாவல்லி - சரஸ்வதி.
சகலகுணசம்பன்னன் - பல நற்குணமுள்ளவன்.
சகலபாசனம் - அருகன் முக்குடையினென்று.
சகலபாடி, சகலப்பாடி, சகளப்பாடி, சகலன், சகளன்*-மனைவியின் சகோதரிகணவன்.
சகலமங்கலை - பார்வதி.
சகலமும், சகலம் - எல்லாம்.
சகலவியாபி - கடவுள்.
சகலாத்து* - சிவப்புக்கம்பளி.
சகலி* - ஓர் மீன்.
சகல் - கொசுகு.
சகவாசம்* - உற்ற சிநேகம்.
சகளம் - மாயாரூபம்.
சகனம் - ஆசனம், தொடையினுட்பக்கம், பொறுமை.
சகன் - கூட்டாளி, தோழன்.
சகன்மோகினி - உலகமெல்லாம் மயக்கும் மோகினி.
சகா-தோழன், பாம்புகொல்லிப் பூண்டு.
சகாயம்*-உதவி, துணை, நன்மை.
சகாயன் - தோழன்.
சகாரு - ஓரிராகம்.
சகிதம் - ஒற்றுமை.

சகித்தல் - பொறுத்தல், மன்னித்தல்.
சகுடம் - சேம்பு. (பார), நாய், பொதியமலை.
சகுடை - சிற்றகத்தி.
சகுட்டம் - ஆடுதின்னுப்பாளை.
சகுந்தம் - கழுகு, பறவை, ஓர் நீர்ப்புள்.
சகுந்தலை-விசுவாமித்திரனுக்கும் தேவதாசியான மேனகைக்கும் பிறந்த பெண்.
சகுலி - மீன், ஒலி.
சகுனம்-நன்மை தீமைகளை அறிவிக்கும் நிமித்தம், [கிழங்கு, பறவை, பேராத்தை.]
சகுனி - துரியோதனன்மாமன், [நிமித்தம்பார்ப்போன், பறவை.]
சகுன்மம் - கருணைக்கிழங்கு.
சகோா - பண்டசாலை.
சகோடம் - நால்வகையாழினொன்று.]
சகோதரர் - உடன்பிறந்தார்.
சகோத்திரம் - வமிசம்.
சகோரம்-சக்கரவாகப்புள், நிலாமுகிப்புள்.
சக்கட்டம்* - பரிகாசம், நிந்தை.
சக்கட்டை - இளப்பம்.
சக்கரதரன், சக்கரதாரி - திருமால்.
சக்கரபாணி-திருமால், துர்க்கை.
சக்கரம் - தேர்ச்சில்லு, வட்டம், [கடல், சக்கரவாகப்புள், பிறப்பு, பூமி, பெருமை, மலை, காசு, இயந்திரம், மலைமல்லிகை.]
சக்கராயூகம் - ஓர் படையணி.
சக்கரவர்த்தி - மற்றொருவரைப் பணியாது தனியாள்வோன்.
சக்கரவாகம் - சக்கரவாகப் புள்.
சக்கரவாளம் - சக்கரவாளகிரி, வட்டவடிவு.
சக்கரன் - இந்திரன், திருமால்.
சக்கராயுதத்தி - துர்க்கை.
சக்கராயுதன் - திருமால்.
சக்கரை* - சருக்கரை.
சக்கல் - சாரம்வடித்தது.
சக்களத்தி* - மாற்றுடிச்சி.
சக்காரம் - தேமாமரம்.
சக்கிமுக்கி* - சக்கைமுக்கி - நெருப்புக் காலுங்கல்.
சக்கிரதரன், சக்கிரபாணி - திருமால்.
சக்கிரநாயகம் - புலிநகம்.
சக்கிரமுகம் - பன்றி.
சக்கிரம்-சக்கராயுதம், தண்டசக்கரம், [சுழல்காற்று, திசை.]
சக்கிரவர்த்தினி - சக்கரவர்த்தி மனைவி, சடாமாஞ்சி, செம்பஞ்சு.
சக்கிராதம் - பன்றி.
சக்கிரி - அரசன், குயவன், சக்கரவாகப்புள், செக்கான், திருமால், இந்திரன், மண்டலிப்பாம்பு.
சக்கிரிகை - முழந்தாள்.
சக்கிரீவதம் - கழுதை.
சக்கிலி, சக்கிலியன் - செம்மான்.
சக்கிலிச்சி - செம்மாத்தி, [சத்திசாரம்.]
சக்கு - கண். (சப்த), பூஞ்சு.

சக்கை - கோது, [கானல்பலாக் காய், தக்கை.]
சங்கக்குழையோன் - சிவன்.
சங்கங்குப்பி - பீச்சுவிளாத்திச் செடி.
சங்கஞ்செடி - இயங்கஞ்செடி.
சங்கடம் - தொந்தரவு, [ஒடுக்க வழி, ஓர்வகை மிதவை.]
சங்கடை, சங்கட்டம் - மரணவேதனை.
சங்கதம் - சம்பந்தம், தேவர் மொழி, நட்பு, பொருத்தம், முறைப்பாடு.
சங்கதி - வரலாறு, [இயைபு, ஆரியமொழி.]
சங்கநாதம் - சங்கின்முழக்கம்.
சங்கநிதி - சங்குருவாய்க் கிடக்கும் பொருள், வட்டக்கிலுகிலுப்பை.
சங்கபதம் - அட்டாதச தரும நூலினொன்று.
சங்கபாஷாணம் - தாலம்பபாஷாணம்.
சங்கபாலன் - அட்டமாநாகத்தொன்று.
சங்கமம் - இயங்குதிணைப்பொருள், [கலத்தல், யாறுங் கடலுங் கூடுமிடம், புணர்ச்சி.]
சங்கமன் - இலிங்கதாரி, [பண்டாரம்.]
சங்கமேந்தி - திருமால்.
சங்கம் - கூட்டம், சபை, [ஓர் நிதி, கணைக்கால், கூடுதல், சங்கு, நூறு கோடாகோடி, நெற்றி, நெற்றியெலும்பு, சமுத்திரம் மூன்று கொண்ட படையின் தொகை, புலவர்.]
சங்கரம் - கலப்பு, போர், நஞ்சு.
சங்கரர் - போர்செய்வோர்.
சங்கரன் - சிவன், [பல வருணக் கலப்பாய்ப் பிறந்தோன்.]
சங்கராசாரியர் - ஓர் வேதாந்த குரு.
சங்கராபரணம் - ஒரிசை.
சங்கரி - சங்கரியென்னேவல், பார்வதி.
சங்கரித்தல்* - அழித்தல்.
சங்கருடணன் - பலபத்திரன்.
சங்கலிதம் - கலப்பு, எண்கூட்டல்.
சங்கலீகரணம், சங்கரீகரணம் - ஒழுங்கு தவறுன புணர்ச்சி.
சங்கலைக்கிணறு - பலகைக் கட்டுக்கிணறு.
சங்கலுப்போர் - வளைபோழ்நர்.
சங்கற்பம் - எண்ணம், மனப்பொருத்தனை, விருப்பம், நியமம்.
சங்கன்னம் - நரம்பு.
சங்காசம் - உவமை.
சங்காதம் - அழித்தல், ஐந்துதரமீரடிகளையு மொருங்கெடுத்து வைத்து நடித்தல், ஓர் நரகம், கூட்டம், சமூகம்.
சங்காத்தம் - இணக்கம், சிநேகம்.
சங்காத்தி - கூட்டாளி.
சங்காயம் - கரும்புச்சருகு
சங்காரம்* - அழித்தல்.
சங்கிதை - சரித்திரம். (திருவி.)
சங்கியை - எண், ஆராய்வு.
சங்கிரகம் - சுருக்கம், திரட்டல்.
சங்கிரந்தனன் - இந்திரன்.

சங்கிரமம் - கலப்பு, கிரகநடை.
சங்கிரம் - காடு.
சங்கிராந்தம், சங்கிராந்தி - ஒரு கோள் ஒன்றிலிருந்து வேறொன்றிற்குப் போதல், மாதப் பிறப்பு.
சங்கிராமசூரன் - போர்வீரன்.
சங்கிராமம் - போர்.
சங்கிலி - ஓராபரணம், விலங்கு.
சங்கினி - நால்வகைப் பெண்களு ளொருத்தி.
சங்கீதம் - வாச்சியத்தோடே பாடுதல், இராகசாத்திரம், [கிச்சிலிக்கிழங்கு.]
சங்கீரணம் - கலப்பு.
சங்கீரதம் - புணர்ச்சி.
சங்கீர்த்தனம் - புகழ்ந்துபாடுதல்.
சங்கு - பணிலம், [கணைக்கால், கூடுதல், கைவளை, நெற்றி, பூடைக்கலம், ஆணி, தூண்.]
சங்குபுட்பம் - ஞாழல்.
சங்குமணி* - சங்காற்செய்த மணி.
சங்குமதம் - சவ்வாது.
சங்கூபிலம் - அட்டசங்கீத புராணத்தொன்று.
சங்கேதம் - ஏற்பாடு, குழூஉக்குறி, குறிப்பாலறிவிப்பு.
சங்கை - ஐயம், [அச்சம்.]
சங்கோசம் - வெட்கம், கூச்சம், [அடக்கம், குங்குமம், மூடமாதல்.]
சசம் - முயல். (கந்த).
சசம்பரி - ஆமணக்கஞ்செடி.
சசி - இந்திராணி, இந்துப்பு, கருப்பூரம், சந்திரன்.
சசிதரன் - சிவன், கணேசன்.
சசிமணாளன் - இந்திரன்.
சசியம் - கனி, நிலப்பனை, ஆச்சாமரம், மராமரம், பயிர், விளைவு.
சசுபம் - அசோகமரம்.
சசேலம் - உடை.
சச்சடம் - தாமரை.
சச்சம் - மெய்.
சச்சரவு* - கலகம்.
சச்சரி - ஓர் வாத்தியம்.
சச்சரை - சண்டை.
சச்சிதானந்தன் - ஓர் முனிவன், கடவுள்.
சச்சு - நீர்ச்சுண்டி, பறவைமூக்கு.
சஞ்சம் - பூணூல்.
சஞ்சயம் - திரட்டுதல், ஐயம்.
சஞ்சயனம் - காடாற்றுதல்.
சஞ்சயன் - வியாசனின் சீடனும் பாண்டவர்க்குப் புரோகிதனுமானவன், தூதரிற் றலையாயவன். (சிலப். 26:137.)
சஞ்சரிகம் - வண்டு.
சஞ்சலம் - மனக்கவலை, துன்பம், [அசைவு, காற்று, மின்னல்.]
சஞ்சலை - மின்னல், திப்பிலி, இலக்குமி.
சஞ்சாயம் - வாரப்பங்கு.
சஞ்சாரம் - சஞ்சரித்தல், வாசம், [யானைக்கூடம்.]
சஞ்சாரிகன் - தூதன்.
சஞ்சாரிகை - தூதி.
சஞ்சாளிகம் - வண்டு.
சஞ்சிதம் - ஈட்டியது, கட்டுப்பட்ட வினை, திரட்டியது.
சஞ்சீவகரணி - மூர்ச்சைதீர்த்துயிர் தருமருந்து, புளியமரம்.

சஞ்சீவனி, சஞ்சீவனை, சஞ்சீவி, சஞ்சீவினி - மூர்ச்சைதீர்த்து உயிர்தரு மருந்து.
சஞ்சீவன் - மாமரம்.
சஞ்சு-பறவைமூக்கு, ஆமணக்கு.
சஞ்சேபம் - சுருக்கம்.
சடகம் - ஊர்க்குருவி, குடிக்கும் பாத்திரம், சாராயம், வட்டில்.
சடக்கடை - ஒன்பது.
சடக்கோதன் - வசம்பு.
சடங்கம் - ஆறு சாஸ்திரம், மூட்டைப்பை, ஆறு தாக்குகொண்ட ஓர் நிறை.
சடங்கு* - செய்முறை, கிரியை.
சடசடெனல் - ஈரடிக்கொலிக் குறிப்பு.
சடசீதி - ஓர் யோகம், எண்பத்தாறு.
சடபதார்த்தம் - அசித்துப்பொருள்.
சடப்பால் - முலைப்பால்.
சடம்-உடம்பு, [ஆறு, கொடுமை, பொய்.]
சடம்பு - தழையுள்ள ஒரு செடி.
சடரம் - வயிறு, (கந்.)
சடரூபம் - அறிவற்ற பொருள்.
சடர் - மூடர்.
சடலம்* - சரீரம்.
சடவுப்பு - சமாதியுப்பு.
சடாடவி - சடைத்திரள்.
சடாட்சரி-உமை, சத்திமந்திரம்.
சடாதரம் - அருநெல்லி.
சடாதரன் - சிவன், இருடி, [வீரபத்திரன், அருநெல்லி.]
சடாதரி - சடாதாரி.
சடாதாரம் - ஆறுதாரம், அஃது மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனகதம், விசுத்தி, ஆஞ்ஞை.
சடாதாரி - சடையுள்ளோன், [சிவன், பார்வதி, கொடியாள் கூந்தற்கொடி.]
சடாமகுடன் - சிவன்.
சடாமாஞ்சி, சடாமாஞ்சில்*- ஓர் சரக்கு.
சடாயு - அருணன் மக்களிலொருவன், ஓர் கழுகரசன்.
சடாரணியம் - ஆறுகாடு.
சடாரி - கவசம், நம்மாழ்வார்.
சடாரெனல் - ஒலிக்குறிப்பு.
சடாலம் - ஆலமரம், தேன்கூடு.
சடிதி* - சீக்கிரம்.
சடிலம் - குதிரை, சடை, நெருக்கம், சடாமாஞ்சில், சிங்கம்.
சடு - ஆறு என்னுமெண்.
சடுகுடெனல்-தீவிரகதியின் குறிப்பு.
சடுதி* - சீக்கிரம்.
சடுலம் - அசைவு, மின்னல்.
சடை - பின்னல்மயிர், [ஆணியின் கொண்டை, சடாமாஞ்சில், சடையென்னேவல், வேர்.]
சடைச்சி- சடையையுடையவள், [பார்வதி, நெட்டிப்புல், பாசி, புளியாரை].
சடைத்தல் - கிளைத்து நெருங்குதல்.
சடைநாகம் - ஓராபரணம், [பாம்பு.]
சடைப்பயறு - ஓர் பயறு.
சடைப்பில்லை* - ஓர் தலையாபரணம்.

சடையன், சடையோன் - சடையுடையவன், [சிவன், வீரபத்திரன்.]
சட்சு - கண்.
சட்டகம் - உடம்பு, மக்கள் படுக்கைப்பொது, சட்டம், வடிவு.
சட்டகல்வி, சஷ்டகல்வி* - வீண் பேச்சு.
சட்டதிட்டம் - ஒழுங்கு, கட்டளைச்சட்டம்.
சட்டம் - கட்டில் முதலியவற்றின் சட்டம், கட்டளைத்திட்டம், [நாவிச்சட்டம், எழுதுமோலை.]
சட்டம்பிப்பிள்ளை, சட்டம்பிள்ளை, சட்டாம்பிள்ளை - பள்ளியில் தலைமையான பிள்ளை.
சட்டி - ஓர் பாண்டம், [ஆருந்திதி, சட்டியென்னேவல், ஆறு.]
சட்டித்தல்-அழித்தல்,கொல்லல்.
சட்டிபூர்த்திசாந்தி - அறுபதுவயதிற் செய்யுமோர் சடங்கு.
சட்டுவம் - அகப்பை.
சட்டை-அங்கி, [பாம்பின்றோல், சிறகு, தைவேலைப்பூண்டு.]
சட்டைக்காரன் - அரையிலாடையணியாது காற்சட்டையே உடுத்துமொரு சாதியான்.
சட்டைநாதன்-சிவன், வயிரவன்.
சட்டைபண்ணல்* - கனம்பண்ணல்.
சட்பதம் - வண்டு, அறுகால்.
சட்பம் - அறுகு, மயிர், பசும்புல்.
சணகம், சனகம் - புளியாரைக்கீரை.
சணப்பு, சணல்* - ஓர் பயிர்.
சணற்பனர்* - சணற்றும்பு.
சணுத்தல் - காமங்கொள்ளல், சணைத்தல்.
சணைத்தல் - கொழுத்தல், விரிந்துண்டாதல்.
சண்டப்பிரசண்டம்-மிகுவேகம்.
சண்டப்பை - கருப்பை.
சண்டமாருதம் - பெருங்காற்று.
சண்டம் - கொடுமை, சீக்கிரம், பேடு, கருப்பம், மிக்கவலி.
சண்டன் - அசுரன், காலன், சிவன், சூரியன், பேடி, சண்டேசன்.
சண்டாளன் - துரோகி, [புலையன்.]
சண்டி - உரோசமில்லாதவன், [துர்க்கை, கோபமுள்ளவள்.]
சண்டிகை - காளி, துர்க்கை.
சண்டித்தனம் - நாணயக்கேடு.
சண்டிவாளம் - முன்தீர்த்த விலையையழிக்கும்படி தரும்பணம்.
சண்டை - போர், பிணக்கு.
சண்ணித்தல் - விபூதியை உத்தூளனமாக அணிதல்.
சண்பகம் - செண்பகம்.
சண்பனி - யோகினி, காளி.
சண்பையர்கோன் - சம்பந்தன்.
சண்முகன் - ஆறுமுகன்.
சதகம் - நூறு செய்யுட்கொண்ட ஓர் பிரபந்தம், தான்றிமரம்.
சதகுப்பி, சதகுப்பை - ஓர் பூடு.
சதகோடி - நூறுகோடி, வச்சிராயுதம்.
சதக்கல் - சேறு.

சதக்கிருது, சதக்கிருதன் - இந்திரன்.
சதங்கை - சலங்கை, காலணியுளொன்று.
சதசதப்பு - நொதுநொதுப்பு.
சதசு - சபை, பிராமணசபை.
சததம் - எப்போழ்தும்.
சததளம், சதபத்திரி - தாமரை.
சதபத்திரம் - தாமரை, கிளி, மயில், வெண்ணாரை, தச்சன் குருவி.
சதமகன், சதமகத்தான் - இந்திரன்.
சதமுனை - வச்சிராயுதம்.
சதமூலை - தண்ணீர்விட்டான் கிழங்கு.
சதம் - நிலைத்தது, [அறுபடுபயிர், இலை, இறகு, நித்தியம், நிலைமை, நூறு, போதல்.]
சதயம் - ஓர்நாள்.
சதவீரியம் - வெள்ளருகு.
சதனம் - இலை, இறகு, தோல், வீடு.
சதா-எப்போழ்தும், [மரக்கலம்.]
சதாகதி - ஓயாநடை, காற்று.
சதாக்கினி - தேள்.
சதாசாரம் - நல்லொழுக்கம்.
சதாசிவம் - முடியா நன்மை.
சதாசிவன் - பஞ்சகர்த்தாக்களிலொருவன்.
சதாநந்தன் - கடவுள், பிரமன்.
சதாஸ்தி - எப்போது மிருத்தல்.
சதாபதி - நித்தியன், மரவட்டை.
சதாபலம் - எலுமிச்சை, வில்வமரம், அத்திமரம், தெங்கு.
சதாபுசம் - வண்டு.
சதாபுட்பம் - வெள்ளெருக்கு.
சதாப்பு - ஓர் பூண்டு.
சதாமூர்க்கம் - பாம்புகொல்லிப் பூண்டு.
சதாரம் - இடி.
சதி - வஞ்சனை, [உரோகிணி, கற்புடையாள், சோறு, தாளவொத்து, பார்வதி, வட்டம்.]
சதிகாரன்* - வஞ்சகன்.
சதித்தல் - அழித்தல். (பார.)
சதிபதி - சிவன்.
சதிரிசம் - உவமை.
சதிர் - நாட்டிய சபை, [குறைந்த விலை, இலேசு, எல்லை.]
சது - நான்கு.
சதுக்கம் - சதுரம், [நாற்றெருக்கூடுமிடம், திண்ணை, தலை உறுமால்.]
சதுக்கல் - வழுக்கல்.
சதுட்டயம் - நான்குமடங்குகொண்டது.
சதுப்பு - சதசதப்பான நிலம்.
சதுமுகன் - பிரமன், அருகன்.
சதுரகிரி - திருவனந்தபுரத்தருகிலுள்ள ஓர் மலை.
சதுரங்கசேனை - காலாள் - தேர் - பரி - யானையாகிய நால்வகைச் சேனை.
சதுரங்கம் - ஓர்வகைச் சூதாடு கருவி, நாற்கோணம்,
சதுரப்பாடு - விவேகம்.
சதுரம் - அகல நீளமொத்த நாற்கோணம், [சமர்த்து, விவேகம்.]
சதுரர் - நகரப்பதியோர், நாகரிகர், அறிஞர்.

சதுரன் - காரியசமர்த்தன்.
சதுரித்தல் - சதுரமாக்கல்.
சதுரை - சதுரங்கபட்டணம்.
சதுர் - சபை கூடிச் செய்யு நடனம், [நான்கு, திறம், புத்தி.]
சதுர்த்தசி - பதினான்காந்திதி.
சதுர்த்தர் - சமர்த்தர், சூத்திரர்.
சதுர்த்தல் - அப்புதல்.
சதுர்த்தி - நான்காந்திதி.
சதுர்ப்புயன் - திருமால்.
சதை - தசை, பழத்தின் சதை, [பாலைமரம், முன்னைமரம்.]
சதைத்தல் - கொல்லல். (கந்த.)
சதையம் - சதயநாள்.
சத்தகன்னிகை - அபிராமி, இந்திராணி, கவுமாரி, காளி, நாராயணி, மயேசுவரி, வராகி என்னும் ஏழு மாதர்கள்.
சத்தசமுத்திரம் - உவர்நீர், கருப்பஞ்சாறு, தயிர், தேன், நன்னீர், நெய், பால் எனும் ஏழு கடல்.
சத்ததாது - உடல், அது: இரசம், இரத்தம், சுக்கிலம், மூளை, சதை, எலும்பு, தோல் எனும் ஏழ்தாது.
சத்ததீர்த்தம் - கங்கை, யமுனை, சரச்சுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி, எனும் ஏழு தீர்த்தம்.
சத்தபுரி - அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை என்னும் ஏழுதலம்.
சத்தமன் - யாவரினு மிக்கவன்.
சத்தமேகம் - ஆவர்த்தம், சம்வர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் எனும் ஏழு மேகம்.
சத்தம் - ஒலி, வாடகை, [ஏழு எனும் எண், குரல்.]
சத்தரிஷிகள் - அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன்.
சத்தார்* - மூலயோட்டம்.
சத்தி - வலிமை, [கக்கல், குடை, வேற்படை, சிவதத்துவமைந்தினொன்று, அஃது கிரியை நாடல், சுரோணிதம், சூலம், தேரிடக்கியம், நீர்முள்ளி, பார்வதி, விருதுக்கொடி, வெண்குடை.]
சத்திகம் - குதிரை.
சத்திகுருநாதன் - கஞ்சா.
சத்திசாரணை - மூக்கிரட்டை.
சத்திதரன் - முருகன்.
சத்திநிபாதம்-சத்தியின் வீழ்ச்சி.
சத்திநிபாதர்-மனத்தை யடக்கித் தெய்வம் வழிபடுவோர்.
சத்தியபாமை - கிருஷ்ணன் மனைவியரிலொருத்தி.
சத்தியம் - ஆணை, சபதம், உண்மை, அரசமரம். (சப்த.)
சத்தியவான்* - மெய்யன்.
சத்தியோசாதம் - சிவனைம்முகத் தொன்று.
சத்திரம்-அன்னசாலை, [கைவிடாப்படை, கைவேல், பாணம்,

மடம், யாகம், வெண்குடை, கத்தி.]
சத்திரம்வைத்தல் - ஆயுதத்தாற் புண்ணேயறுத்தல்.
சத்து - சாரம், [உள்ளது, பலன், அறிவு, நன்மை, மாவு.]
சத்துராதி, சத்துராளி, சத்துரு*- பகைவன்.
சத்துவம் - வலி, சாத்துவிக குணம்.
சத்துவாரி - சாலேசரம் (பார்வை மங்கல்.)
சத்தை - உளதாந்தன்மை.
சநகன் - சீதையின் தந்தை, [தந்தை.]
சநநம் - பிறப்பு.
சநநி - தாய்.
சநலோகம் - மேலேழுலகினென்று.
சநற்குமாரம் - அட்டாதச வுபபுராணத்தொன்று.
சநாதநன்-அழியாதவன், கடவுள்.
சநார்த்தனன்-திருமால். (சேது.)
சநி - ஓர் கிரகம், சநியென்னேவல், ஓர் வாரம்.
சநிப்பு - பிறப்பு.
சநிமூலே - வடகிழக்கு.
சந்தசு - ஆரிய யாப்பிலக்கணம்.
சந்தடி* - இரைச்சல்.
சந்தணி - சந்தனம்.
சந்தணுகி - பாம்பு.
சந்ததம் - எப்போழ்தும்.
சந்ததி - வமிசம், [பிள்ளே.]
சந்தப்பா - இருபத்தாறெழுத்து நான்கடியாக வரும் பா.
சந்தம் - அழகு, கவியின் வண்ணம், சந்தனம், நிறம், வடிவு.
சந்தர்ப்பம்* - தருணம்.
சந்தனக்காப்பு - சந்தனபிஷேகம்.
சந்தனக்குடம்* - துலுக்கரின் ஓர் திருவிழா.
சந்தனுசலம், சந்தனுத்திரி - பொதியமலே.
சந்தனுதி - வேங்கை.
சந்தனு - பீஷ்மன் தந்தை.
சந்தாபம் - வெம்மை, துன்பம்.
சந்தானகரணி - முறிந்தவுறுப்புக்களே யிணேக்குமருந்து, இலுப்பை.
சந்தானகுரவர் - சைவசித்தாந்தாசாரியர்.
சந்தானதீபிகை - ஒரு சோதிட நூல்.
சந்தானம் - ஐந்தருவிலொன்று, சந்ததி.
சந்தி - இசைப்பு, சந்தியென்னேவல், பல தெருக்கூடுமிடம், மாலேநேரம், மூங்கில், பகுபதவுறுப்பிலொன்று.
சந்திப்பு - எதிர்தல், பல வழிகூடுமிடம்.
சந்திமான்-இடையெழு வள்ளலிலொருவன்.
சந்தியாகாலம் - சாயங்காலம்.
சந்தியாவந்தனே - திரிகால கருமம்.
சந்திரகம் - பொன்வண்டு, மயிற்றேகைக்கண், செந்திருக்கம், நகம், மிளகு.
சந்திரகாசம் - வாள். (சப்த.)

சந்திரகாந்தம் - சந்திரமுகத்து நீர் விடுங்கல்.
சந்திரகாந்தி - ஓர் பூச்செடி.
சந்திரகாவி - செங்காவிமண், ஓர் நிறம்.
சந்திரகுத்தன் - யமன்கணக்கரி லொருவன், ஓரரசன்.
சந்திரகுரு - வெண்முத்து. (சில. 14:195.]
சந்திரசம்பவன் - புதன்.
சந்திரசேகரன் - சிவன்.
சந்திரசைலம் - ஓர் மலை.
சந்திரதிலகம் - சந்தனப்பொட்டு.
சந்திரபாகை - ஓர் யாறு.
சந்திரமதி* - அரிச்சந்திரன் மனைவி.
சந்திரம்-கருப்பூரம், பொன், நீர், மயிற்றோகைக்கண், அழகு.
சந்திரவலயம், சந்திரவளையம் - ஓர் விளையாட்டுக்கருவி.
சந்திரன் - நிலவு.
சந்திரிகாபாயி - சகோரப்புள்.
சந்திரிகை - சந்திரகிரணம்.
சந்திரோதயம் - நிலவினுதயம், ஒரு மலை, ஒரு நகர்.
சந்தில் - சனி.
சந்து - நாற்றெருக் கூடுமிடம், பொருத்து, [சந்தனமரம், தூது, தூதன், சமயம்.]
சந்துஷ்டம், சந்துஷ்டி* - மகிழ்ச்சி.
சந்துவாதம் - ஓர் நோய்.
சந்தேகம் - ஐயம், [நிலையாமை.]
சந்தேசம் - தூது. (சப்த.)
சந்தை - பலவூர்மனிதரோரூரி லோர்தினத்திற்கொள்ளல் விற்றற் பொருட்டுக்கூடுங் கூட்டம், [வேதமோதுமிடம்.]
சந்தோகம் - சாமவேதம்.
சந்தோஷம், சந்தோடம் - மனமகிழ்ச்சி.
சந்நத்தன் - போருக் காயத்தமா [னோன்.
சந்நாகம் - கவசம்.
சந்நிதானம், சந்நிதி* - மூலஸ்தானம், [சமீபம்.]
சந்நிபம் - உவமை.
சந்நியம் - போர், மரமஞ்சள்.
சந்நியாசம் - துறவு.
சந்நியாசி*-முற்றத்துறந்தோன்.
சந்மம் - பிறப்பு.
சந்மானம் - வெகுமானம்.
சபதம் - பிரதிக்கினை, ஆணை, [மெய், ஒட்டம்.]
சபதரித்தல் - ஆதரித்தல்.
சபதி - விரைவு.
சபம் - செபம், [ஆலம்வீழ் முதலிய, மூங்கில்.]
சபரம் - கெண்டைமீன்.
சபரியை - பூசை. (திருவி.)
சபலம் - இரதம், இலாபம், நிறைவேறல், மின்னல், நடுக்கம்.
சபலை-மின்னல், வேசி, திப்பிலி.
சபாநாயகன், சபாபதி - சபைத்தலைவன், சிவன்.
சபிண்டர் - பிதிர்கள்.
சபிண்டீகரணம் - பிதிர்பூசை.
சபித்தல்*-சாபமிடல், திட்டுதல்.
சபினம், சபீனம் - வசம்பு.
சபை - சங்கம், புலவர்கூட்டம்.
சப்ஜா* - செந்திருக்கம்விதை.
சப்பட்டை-தோட்பட்டை, [தட்டையானது, சிறகு.]

சப்பணங்கூட்டுதல் - அட்டணைக் காலிடுதல்.
சப்பரமஞ்சம், சப்பிரமஞ்சம்-அலங்கரித்த கட்டில்.
சப்பளாத்தி - பருத்த வுடலன், சமர்த்திலாதவன்.
சம்பன்னம் - ஐம்பத்தாறு.
சப்பாணி* - நடக்கக்கூடாதவன்.
சப்பாத்து* - ஓர் தொடுதோல், ஓர் முட்செடி.
சப்பியம் - சபைக்கேற்ற சொல்.
சப்பிரம், சப்பரம் - ஓர்வகைச் சித்திரவிருக்கை.
சப்புதல்* - பல்லானருக்கல், குதப்புதல்.
சப்பை - தட்டை, வலியின்மை, [ஆட்டின் முன்தொடை.]
சமங்கை - ஆடுதின்னுப்பாலை, வறட்சுண்டி.
சமஸ்காரம் - மந்திரத்தினாலே தூய்மை செய்யுங் கிரியை, அறிந்ததை நினைவூட்டுதல்.
சமஸ்கிருதம் - ஆரியமொழி.
சமஷ்டி - சுருக்கம்.
சமஸ்தம் - எல்லாம்.
சமட்டி - எல்லாம்.
சமணர் - அமணர்.
சமண் - சமணமதம்.
சமதக்கினி - பரசிராமன்தந்தை.
சமதன் - சங்காத்தி.
சமத்தானம், சமஸ்தானம் - அரசசபை.
சமபந்தி - ஒத்தவர்களிருக்கும் போசன பந்தி.
சமபாகம் - சரிபங்கு.
சமப்பால் - நெய்தனிலம், முல்லைநிலம்.
சமம் - மேடுபள்ளமின்மை, ஒப்பு, [நடுநிலைமை, போர், உவமை, தாளப்பிரமாணத்தொன்று.]
சமயத்தறுவாய் - உற்ற சமயம்.
சமயபேதம் - காலவிகற்பம், மதவிகற்பம்.
சமயம் - காலம், தருணம், [மார்க்கம்.]
சமயாசமயம் - சமயத்தறுவாய்.
சமரசம் - சமாதானம், வித்தியாசமின்மை.
சமரம் - போர்.
சமரி - துர்க்கை, பாம்பு.
சமர் - போர், [முட்பன்றி.]
சமர்ச்சனம் - துடைத்தல்.
சமர்த்தன்* - வல்லவன்.
சமர்த்தித்தல் - பூரணப்படுத்தல்.
சமர்த்து - பலம், வீரம்.
சமர்ப்பகம், சமர்ப்பணம், சமர்ப்பணை, சமற்பனை - உயர்ந்தோர்க்குக் கொடுத்தல்.
சமர்ப்பித்தல்-ஒப்புக்கொடுத்தல்.
சமலை - ஆன்மசத்தி. (சிவத.)
சமவாசி - நடுத்தரம்.
சமவாயம் - ஒற்றுமை.
சமவிருஷ்டி - மத்திம மழை.
சமழ்த்தல் - நாணுதல், வருந்துதல்.
சமழ்ப்பு - நாணம், வருத்தம்.
சமனுதம் - உவர்மண்.
சமன் - காலன், நடு, நமன்.
சமாசம்-தொகைப்பட்டு நிற்பது.
சமாசாரம், சமாச்சாரம் - செய்தி.
சமாதானம் - இணக்கம், [உபாதி நீக்கியுள்ளொளிகருதல்.]

சமாதி - அட்டயோகத்தொன்று; அஃது ஒரே மனமாய்க் கடவுளைத் தியானித்தல். (சப்த.), சாவு, பிரேதக்குழி.
சமாது - ஊமத்தை.
சமாப்தம், சமாத்தி - முடிவு.
சமாராதனை-பிராமணபோசனம்.
சமாலம் - பீலிக்குஞ்சம்.
சமாவருத்தனம்-பிரமசரியவிரதம் முடிக்கும் கிரியை. (சீவ. சிந்.)
சமாளித்தல், சமாலித்தல்*-சரிக்கட்டி நடத்தல்.
சமானகரணி - இரணத்தழும்பு தீர்க்கும் மருந்து.
சமானஸ்தர்* - தன்னொத்தவர்.
சமானம் - சமம், உவமை.
சமானன் - தசவாயுவினொன்று அஃது நாபியினின்றெழும் வாயு.
சமானோதகர் - பிதிர்களுக்கு நீர் விடுதற்குரியோர்.
சமி - சமியென்னேவல், அருகன், வன்னிமரம், தணக்குமரம்.
சமிக்கை - சாடை, [சீரணிக்கை.]
சமிஞ்ஞை - குறி.
சமிதம் - அமைதி. (குற்ற. தல - 50.)
சமிதி - சபைக்கூட்டம், போர்.
சமிதை, சமித்து* - ஓமவிறகு; அவை அத்தி அரசு ஆல் இத்தி கருங்காலி நாயுருவி பலாசுமா வன்னி என ஒன்பதுவிதம் கூடியது, விறகு.
சமித்தம் - ஓமமண்டபம்.
சமித்தல் - பொறுத்தல், சீரணித்தல்.
சமியன் - அருகன்.
சமிராட்டு - அரசர்க்கரசன்.
சமீபம்* - அருகு.
சமீரணன்-காற்று, வாயுதேவன், வழிப்போக்கன்.
சமீரணி - வீமன், அனுமான்.
சமீரம் - போர்.
சமு - படையிலோர் தொகை.
சமுகம், சமூகம் - முன்னிலை.
சமுக்காளம் - நூற்கம்பளம்.
சமுசயம், சமுச்சயம்-*சந்தேகம்.
சமுசாரம்* - இல்வாழ்க்கை, குடும்பம், மனைவி.
சமுசாரி - இல்லாச்சிரமத்துக்குட்பட்ட ஆள், கற்புடையாள்.
சமுஸ்காரம் - சமஸ்காரம்.
சமுதாடு - ஓராயுதம்.
சமுதாயம் - கூட்டம், சங்கம், போர்.
சமுதாய்த்தல்* - சமாளித்தல்.
சமுத்தி - பாடும்படி எதிரிகொடுக்கு முள்ளுறை வசனம்.
சமுத்திரகோஷ்டம் - கடனுரை.
சமுத்திரசோகி-வட்டத்திருப்பி.
சமுத்திரநவநீதம் - சந்திரன்.
சமுத்திரபகவான் - வருணன்.
சமுத்திரப்பச்சை - ஓர் பூண்டு.
சமுத்திரப்பாலை - கடம்புமரம்.
சமுத்திரம் - கடல், [பத்து லட்சங் கோடாகோடி, மூன்றுபிரளயங்கொண்ட படையினோர் தொகை.]
சமுத்திராந்தம் - சாதிக்காய், சிறுகாஞ்சொறி, பருத்திச்செடி.
சமுத்திராப்பழம் - கொந்தளப் பழம்.

சமுற்கம் - ஓர் மிறைக்கவி.
சமூலம் - அனைத்தும், வேர்முத லிலையீருக.
சமேதம் - கூடியிருத்தல்.
சமை-சமையென்னேவல், [பொறுமை, வருடம்.]
சமைதல்-இருதுவாதல், எத்தனமாதல்,
சமைதார், சமேதார்* - ஓர் இராணுவ உத்தியோகஸ்தன்.
சமைத்தல் - உணவு சமைத்தல், [உண்டாக்கல், அமைத்தல்.]
சமையம்* சமயம்.
சம்-அழகு, கூட, சுகம், நன்மை, வெற்றி, பூரணம்,அன்பு.
சம்பகம்* - சண்பகம்.
சம்பங்கியெண்ணெய்* - ஒரு வாசனைத்தைலம்.
சம்பங்கூடை* - சம்பம் புல்லாற் செய்த கூடை.
சம்பங்கோரை - ஓர் புல்.
சம்படம் - சீலை, சோம்பல்.
சம்பத்து* - செல்வம்.
சம்பந்தங்கலத்தல் - விவாக வழியாற் கலத்தல்.
சம்பந்தர் - சிவனடியாரி லொருவர்.
சம்பந்தி* - மாப்பிள்ளை மணப்பெண்ணின் பிதா.
சம்பம் - மரவயிரம், வச்சிராயுதம், மேட்டிமை, இடி.
சம்பரம் - நீர், எண்காற்புள், மேன்மை, மேகம், செல்வம்.
சம்பரன் - ஓரசுரன்.
சம்பராரி - இந்திரன், மன்மதன்.
சம்பவம் - நிகழ்ச்சி.
சம்பவித்தல்* - நடந்தேறுதல்.
சம்பளம் - உழைப்பிற்குக் கூலி, [எலுமிச்சை, கரை, களஞ்சியம், வழியுணவு, வழிச்சோற்கு வேண்டும் பொருள்.]
சம்மளி, சம்பிளி - அடைப்பை, சாமான் பை.
சம்பன்னன் - நிறைவுள்ளவன்.
சம்பா-ஓர்வகை நெல், [ஓர் விளையாட்டு, நால்விரலளவை.]
சம்பாஷணம், சம்பாஷணை * - கூடிப்பேசல், தர்க்கம்.
சம்பாதனை, சம்பாத்தியம், சம்பார்த்தனை-*சேகரித்த பொருள்.
சம்பாதி - சம்பாதியென்னேவல், [அருணன் மகன்.]
சம்பாரம் - சாமான், கூட்டுவர்க்கம், [கைமரந்தாங்கி.]
சம்பாவனம், சம்பாவனை - வெகுமானம், [சங்கை, மதிப்பு.]
சம்பாவிதம் - சம்பவிக்கக் கூடியது.
சம்பான் - படகு.
சம்பிரதம் - சித்து.
சம்பிரதாயம் - குலாசாரம், [சாதுரியம், பாரம்பரிய வாக்கு.]
சம்பிரதி - தலைமைக்கணக்கன்.
சம்பிரமம் - இடம்பம், சந்தோஷம், செல்வாக்கு, [வேகம், விரைவு.]
சம்பிரேட்சியம் - ஆராய்ந்தறிந்தது.
சம்பீரம் - எலுமிச்சை.
சம்பு - எலுமிச்சை, ஓர் தீவு, ஓர் புல், கடவுள், சிவன், நரி, நாவல்மரம், பிரமன், திருமால், அருகன், சூரியன்.

சம்புகம் - நரி, வருணன்.
சம்புகேச்சுவரம் - திருவானைக்கா வல் எனுந் தலம்.
சம்புடம் - ஒரிருக்கை. (சிலப்ப.)
சம்புரோட்சணம், சம்புரோட்சணை - ஆலயப்பிரதிஷ்டை.
சம்பூகம் - சங்கு, நரி, நாவல்.
சம்பூதம் - பிறப்பு.
சம்பூரணம்-போதுமான அளவு.
சம்பேசன் - கன்னன்.
சம்பை - சத்த தாளத்தொன்று, [ஒரிராகம், சம்புக்கோரை, மின்னல், மீன்பொது.]
சம்போகம் - புணர்ச்சி.
சம்மட்டி - கூடம், குதிரையோட்டுங் கருவியினென்று, ஓர் பூடு.
சம்மணம் - அட்டணைக்கால்.
சம்மதம் - அங்கீகாரம், உத்தரவு, [கோட்பாடு, உடன்பாடு.]
சம்மதி* - சம்மதியென்னேவல்.
சம்மாரம்* - அழிவு.
சம்மானம் - உபசரிப்பு.
சம்முகி - கண்ணுடி.
சம்யமனி - யமனகர். (பிங்.)
சம்யோகம் - புணர்ச்சி.
சம்ரட்சணை* - பரிபாலனம்.
சம்வர்த்தம் - மணி பொழியுமேகம், ஒரு தருமநூல்.
சம்வற்சரம் - வருடம்.
சம்வாகம்-மலைமேலேற்றிய ஊர்.
சம்வாதம் - தர்க்கம்.
சய - ஓராண்டு, போற்றி.
சயகண்டை - பரந்த வட்டிகை.
சயகம் - பூவரும்பு.
சயசய - போற்றி போற்றி.
சயத்திரதன் - ஓரரசன்.
சயந்தம் - நாடகத்தமிழ்நூல்.
சயந்தனம் - தேர்.
சயந்தன் - இந்திரன்குமாரன், சந்திரன்.
சயந்தி - இந்திரன்மகள், கருஞ்செம்பை, துர்க்கை, வாதமடக்கி.
சயபாளம் - நேர்வாளம்.
சயமகள் - துர்க்கை, மிதுனவிராசி, விநதை.
சயமடந்தை - துர்க்கை, விநதை.
சயம் - வெற்றி, [ஆம்பல், கூட்டம், கை, சருக்கரை, சூரியன், மாலை.]
சயம்பு - அருகன், சிவன், தானுகவாதல்.
சயனம் - படுக்கை, [நித்திரை.]
சயனித்தல் - படுத்தல், [நித்திரைசெய்தல், புணர்தல்.]
சயிக்கம் - மென்மை.
சயிக்கினை, சயிக்கை - சாடை.
சயித்தல்* - வெல்லுதல்.
சயித்தி - அரசமரம்.
சயித்தியம்* - குளிர்ச்சி.
சயித்திரம் - சித்திரைமாதம்.
சயிந்தவம் - இந்துப்பு, குதிரை.
சயிரேகம் - மேகவண்ணப்பூவுளமருதோன்றிமரம்.
சயிலாதி - கைலாசமலை.
சயை-சந்திரன் மூன்றும்பக்கம், பார்வதி.
சய்யோகம் - சையோகம்.
சரகம் - தேனீ, வண்டு.
சரகன் - தூதாள்.
சரகாண்டம் - அம்புக்கூடு, ஓர் பாஷாணம்.

சரகூடம் - அத்திரத்தாற் ரொடுக்கும் பின்னற்செறிவு.
சரக்கு* - வியாபாரப்பொருள்.
சரசம் - பரிகாசம், [இனிய குணம், தேக்கமரம், தடாகம், வெண்ணெய்.]
சரசாத்திரம் - சுவாசக்குறி யறியுமோர் சாத்திரம்.
சரசு - குளம்.
சரசுவதி - பிரமன்தேவி, ஓர் நதி, மஞ்சிலே, குணவதி.
சரடம் - ஓணான், குசும்பாமரம்.
சரடு - நூல், பொன் முதலியவற்றாற் செய்யுங் கொடி, [நிரைபடவிருப்பது.]
சரணம் - வணக்கம், அபயம், [கால், சிந்து முதலிய செய்யுளடி, மயிற்ருேகை, மருதநிலத்தூர், வீடு.]
சரணுகதம், சரணுகதி* - அடைக்கலம்.
சரணுயுதம் - கோழி.
சரணுரவிந்தம் - பாததாமரை.
சரண் - அடைக்கலம், கால்.
சரண்புகல் - அடைக்கலம்புகுதல்.
சரதம் - உண்மை.
சரபம் - எண்காற்புள், குறும்பாடு, வரையாடு, தத்துக்கிளி.
சரப்பணி, சரப்பளி* - ஓராபரணம்.
சரமகவி - இறந்தவர்பேரிற் பாடும் பாட்டு.
சரமணி - அரைப்பட்டிகை.
சரமண்டலம் - ஓர் வாச்சியம்.
சரமம் - அந்தியம், மேற்கு.
சரம் - மணிவடம், [அம்பு, ஐந்தெனுமெண், கொறுக்கை, சுவாசநடை, திப்பிலி, நடை, நாணல், மாலே, அசைவு.]
சரம்பார்த்தல் - சுவாசநடை பார்த்தல்.
சரயு - அயோத்திக்கண் ஓராறு, காற்று.
சரலம் - ஓர்வகைத் தேவதாரு.
சரவட்டை - அற்பம்.
சரவணபவன், சரவணேற்பவன் - கந்தன்.
சரவணம் - இமயமலைக்கருகேயுள்ள ஒரு தடாகம், கொறுக்கை, நாணல்.
சரவீணை - கருவண்டு.
சரவை - மாலே, எழுத்துப்பிழை.
சரளம் - ஒழுங்கு, தேவதாரு, நேர்மை.
சரளி - சத்தசுரப்பயிற்சி.
சரற்காலம் - மாரிகாலம்.
சராகம் - வண்டு, நேர்வழி, போர்.
சராகை - வட்டில்.
சராசந்தன் - மகதநாட்டினேர் மன்னன்.
சராசரம் - நடையுள்ளதுமில்லதும், பிரபஞ்சம், ஆகாயம்.
சராசரி* - சரிபங்கு.
சராசனம் - அரசமரம், வில்.
சராயு - கருப்பாசயம்.
சராவம் - அகன்மணி, சலாகை.
சரி - ஒப்பு, கூட்டம், கைவளை, சமன், சரியென்னேவல், மலைச்சாரல், வழி.
சரிகமபதநி - சத்தசுரங்களி னட்சரம்.
சரிகை - பொன் முதலியவற்றின் சரிகை, [சரிதல்.]

சரிதம் - சரித்திரம்.
சரிதல்* - சாய்தல்.
சரிதை - வரலாறு, சிவபூசை யியல்பிெனன்று, ஒழுக்கம்.
சரித்தல் - சரியச்செய்தல்.
சரித்திரம் - கதை, [ஒழுக்கம், இயல்பு.]
சரிபங்கு* - அரைவாசி.
சரிபாதி* - சரிபங்கு.
சரிப்படுத்தல்*- இணக்கமாக்கல், நேர்ப்படுத்தல்.
சரியை - சைவசாசனத்தி ென ன்று, ஒழுக்கம், பிச்சை, பொன்முதலியவற்றினால்.
சரிவயது* - ஒத்தபிராயம், நடு வயது.
சரிவு - சாய்வு.
சரீரம் - உடம்பு.
சரு - சோறு, தேவருணவு.
சருகட்டை - மரவட்டை.
சருகு - உலர்ந்த இலே.
சருக்கம் - இலக்கியச் செய்யுட் கூறுபாடு.
சருக்கரை - சர்க்கரை, [துண்டு.]
சருக்கரைவள்ளி* - ஓர் கிழங்கு.
சருச்சரை - எண்வகையூறிென ன்று, அஃது ஒப்பரவின்மை.
சருச்சை - இகழ்ச்சி.
சருத்தி - தேரிடக்கியம், விருதுக் கொடி.
சருப்பகுண்டலன் - சிவன்.
சருப்பம் - பாம்பு.
சருப்பராசி - நாணல்.
சருப்பராச்சியம் - சங்கங்குப்பி.
சருப்பாபரணன் - சிவன்.
சருமகரணன் - செம்மான்.
சருமகாரகன் - சக்கிலியன்.
சருமம் - தோல், தோற்பாய்.
சருமன் - சக்கிலியன், ஒருவகை வேதியனின் பட்டப்பெயர்.
சருவக்கியன், சருவஞ்ஞன் - கட வுள்.
சருவசங்கபரித்தியாகம் - முற்றத் துறத்தல்.
சருவசங்காரமூர்த்தி - உருத்தி ரன்.
சருவசாட்சி - கடவுள், சூரியன்.
சருவசீவதயாபரன் - ஆண்ட வன்.
சருவஞ்ஞத்துவம் - எல்லாவற் றையு மறியுந் தத்துவம்.
சருவதா - எப்போழ்தும்.
சருவதாரி - ஓராண்டு.
சருவத்தியாகம் - முற்றத் துறத் தல்.
சருவத்திரம் - எல்லாம்.
சருவம் - எல்லாம், பித்தளே முத லிய வுலோகங்களாற் செய் யும் பாத்திரம்.
சருவரி - இருள்,பெண், மஞ்சள்.
சருவல் - சருவுதல்.
சருவவியாபி - கடவுள்.
சருவாங்கம் - முழுச்சரீரம்.
சருவாணி - பார்வதி.
சருவாந்தரியாமி - சருவத்திலும் வியாபித்திருக்குங் கடவுள்.
சருவுதல் - கிட்டுதல், கொழுவிப் போதல், மருவுதல்.
சருவேசுவரன் - கடவுள்.
சரேந்திரன் - வில்வல்லவன்.
சரேலெனல் - ஒலிக்குறிப்பு.

சரை - கிழத்தன்மை, சருகினுற் கட்டுங்கவசம், ஓரரக்கி, வைக்கோல் முதலியவற்ருற் செய்யும் பொருள்.
சரோசம், சரோருகம் - தாமரை.
சர்க்கம் - சருக்கம்.
சர்க்கார்* - துரைத்தனத்தார், தாழ்வாரம்.
சர்ச்சை - சருச்சை.
சர்ப்ப - விரைய. (திருவி.)
சர்ப்பனே - வஞ்சகம்.
சர்வக்ஞத்துவம் - பேரறிவு.
சர்வதா - சருவதா.
சர்வம் - சருவம்.
சர்வாணி - சருவாணி.
சலகண்டகம் - முதலே, ஓர் நீர்ப் [பூடு.
சலகண்டம் - மிருவியர்வை.
சலகந்தி - சகத்திரபேதி.
சலகம், சலக்கம்* - நீராடல்.
சலகாமி - நீர்மேனடக்குங் குதிரை. [பம்.
சலகை - ஓர் தானிய அளவு, தெப்
சலக்கிரீடை* - நீர்விளையாட்டு.
சலக்கோவை - விஷநீரேற்றம்.
சலங்கு - கட்டுப்படவு.
சலங்கை* - சதங்கை.
சலசம் - தாமரை.
சலசரம் - மீனவிராசி, மீன்.
சலசர்ப்பிணி - அட்டை.
சலசலோசனன் - தாமரைக்கண்ணன், திருமால்.
சலசாயி - திருமால்.
சலசூகரம் - கடற்பன்றி.
சலசை - இலக்குமி.
சலஞ்சலம் - வலம்புரியாயிரஞ் சூழ்ந்த சங்கு.
சலணி - வால்மிளகு.
சலதம் - முகில்.
சலதரம் - குளம், கடல், முகில்.
சல்தாரை - நீர்க்கால், மதகு.
சலதி - சமுத்திரம், பொய்சொல்வோன்.
சலத்தம்பனம் - நீரினியல்பைத் தடுத்தல்.
சலநிதி, சலபதி - கடல்.
சலபத்திரம் - அரசமரம்.
சலபம் - விட்டிற்பறவை.
சலபுட்பம் - மீன்.
சலம் - நீர், [அசைவு, சலஞ்சாதித்தல், தணியாக்கோபம், பன்றிமுள், பொய்.]
சலராசி - கடல்.
சலலம், சலலி - முட்பன்றிமுள்.
சலவர் - நெய்தனிலமாக்கள்.
சலவாதி - சிறுநீர்விடுதல், [மூரண்டன், கோபி, சாவோலை கொண்டு செல்பவன்.]
சலவாதை - சிறுநீர்விடுதல்.
சலவாழைக்காய் - மீன்.
சலவியாழம் - நீர்ப்பாம்பு.
சலவை - துணி முதலியவற்றினழுக்கை நீக்கி வெண்மையாக்கல், பிசுக்கு, [விதையெடுத்தல், சீதளம்.]
சலனம் - அசைவு, காற்று, சஞ்சலம், போதல், கால்.
சலனன் - காற்று.
சலன் - கால்.
சலாகு, சலாகை - நாராசம், [ஊசிக்காந்தம், அகன்மணி, ஈட்டி, முட்பன்றிமுள்.]
சலாஞ்சலி - தத்தநீர்.

சலாஞ்செய்தல்* - வணங்கல்.
சலாபம் - முத்துக்குளித்தல்.
சலித்தல் - இளைத்தோய்தல், சல்லடையாற் கொழித்தல், துக்கப்படுதல், அசைவுகொள்ளுதல்.
சலிப்பு* - இளைப்பு, துக்கம்.
சலினம் - நீர்.
சலினி - திப்பிலி.
சலுப்பு - சலதோஷம், [துண்டு, நுனிக்கிளை.]
சலூகை - அட்டை.
சலேந்திரன் - வருணன்.
சலோர்க்கம், சலோர்ச்சம் - குங்கிலியம்.
சல்லகி - ஆத்திமரம், கருவாப்பட்டை, கொசுகு, தளிர், இலவமரம்.
சல்லக்கடுப்பு - சரீரநோய்.
சல்லடம்* - குறுங்காற்சட்டை.
சல்லடை - தானிய முதலியவற்றைச் சல்லுங்கருவி, துவாரம்.
சல்லபம் - முட்பன்றி.
சல்லரி - பம்பைமேளம், கைத்தாளம், ஓர் கைமணி.
சல்லா* - ஓர்வகைச்சீலை.
சல்லாபம் - வினவும் விடையுங் கூடிய சொல், கூடிப் பேசுகை, நாடகவகைப் பத்திலொன்று. [தாளம்.
சல்லாரி - வேஷக்காரன், கைத்
சல்லி - கலவோடு, தகட்டுக்கல், மூன்று சின்னங்கொண்ட காசு, [தூக்கங்கள், பொய்.]
சல்லிகை - ஓர்வகைத் தோற்கருவி.
சல்லியகரணி- ஆயுதத்தாற்பட்ட காயமாற்று மருந்து.
சல்லியம் - ஆயுதநுனி, முள், எலும்பு, செஞ்சந்தனம், பாணம், முட்பன்றி, மாயவித்தை, கலக்கம், பாவம்.
சல்லியர் - ஓர் சாதியார்.
சல்லியன் - நகுலசகாதேவருக்கு அம்மானாகிய ஒரு மன்னன், சுக்கிரன்.
சல்லுதல் - அரித்தல், நீர்தெளித்தல்.
சவக்காமியம் - நாய்.
சவக்காரம், சவுக்காரம்* - ஓர் வகைச் சரக்கு.
சவங்கன் - மழுங்கன்.
சவங்குதல் - உடம்புமெலிதல், மனமெலிதல், சோம்புதல்.
சவடி - ஓராபரணம், காறையெலும்பு.
சவடு - உவட்டுமண், வண்டல்.
சவட்டல் - அழித்தல், துவட்டல், மெல்லல், மிதித்தல்.
சவண்டலை - ஓர் மரம்.
சவதம் - சபதம், விலைக்குறைவு.
சவதரித்தல்* - சம்பாதித்தல்.
சவதலை - பின்முன்ருனை.
சவம் - பிணம், [சீக்கிரம், பிசாசம்.]
சவரட்சணைசெய்தல்* - காப்பாற்றல்.
சவரம் - ஓர்பொற்காசு, [சாமரம், மயிர், நீர்.]
சவரம்பண்ணுதல் - மயிர்கழித்தல்.
சவரர் - வேடர், கீழ்மக்கள்.

சவரி - சாமரம், குறட்டைப்பூடு.
சவரிலோத்திரம் - குறட்டைப் பருப்பு.
சவர்நிலம் - உவர்த்தரை.
சவலம் - பிரயோசனம், நீர், அவு பலபாஷாணம்.
சவலை-இளமையுள்ளது,மெலிவு.
சவளம் - ஈட்டி, ஓர் மீன், சங்க பாஷாணம்.
சவளிக்கடை - புடவை துணி விற்குங் கடை.
சவளுதல் - துவளல், வளைதல்.
சவள் - தோணியோட்டுங்கோல்.
சவாசு* - வியப்பிடைச்சொல்.
சவாது*-ஓர் வாசனைப்பொருள்.
சவாப், ஜவாப்* - பிரதியுத்தரம்.
சவாரி* - வாகனமூர்ந்துபோதல்.
சவால்* - ஓர் பாட்டு.
சவான், ஜவான்* - சேவகன், பலசாலி.
சவி - அழகு, ஒளி, சரமணிக் கோவை, செவ்வை, மிளகுக் கொடி.
சவிதா - சூரியன்.
சவிஸ்தாரம் - விரிவு, விரிவுரை.
சவுகந்தி - வசம்பு.
சவுகரியம்* - சௌகரியம்.
சவுக்கம்-சதுக்கம்,தலைக்குட்டை.
சவுக்கியம்* - சுகம்.
சவுக்கு* - அடிக்குங் கயிறு.
சவுக்கை - ஆயத்துறை, சதுர மான திண்ணை, விலைநயம்.
சவுங்குதல் - சோம்புதல்.
சவுசம் - தூய்மை.
சவுசன்னியம் - பட்சம்.
சவுண்டி - திப்பிலி.
சவுண்டிகர் - கள்விற்போர்.
சவுதரித்தல்* - ஆயத்தமாக்கல், சம்பாதித்தல், தாங்கல்.
சவுந்தரம் - அழகு.
சவுந்தரி - பார்வதி.
சவுபாக்கியம் - ஐசுவரியம்.
சவுரம் - சௌளம்.
சவுரிக்கயிறு - தென்னைநார்க் கயிறு.
சவுளம் - மயிர்கழிக்கை. [வர்.
சவை - அம்பலம், கூட்டம், புல
சவ்வரிசி* - ஓர் மரச்சோற்றி யரிசி.
சவ்வியசாசி - அருச்சுனன்.
சவ்வியபலம் - யானைத்திப்பிலி.
சவ்வியம் - வலப்பக்கம், மிளகு.
சவ்வீரம் - ஒரு தேசம், பறங்கிப் பாஷாணம்.
சவ்வு* - தசை முதலியவற்றை மூடிய வெண்மையான தோல்.
சழக்கு - குற்றம், அறியாமை, பொய்.
சழுக்கம், சழுங்கல் - தளர்ச்சி.
சளப்புதல் - பிதற்றுதல்.
சளி - கோழை, சலதோஷம்.
சளுகம், சளூகம் - அட்டை.
சளுக்கு - டம்பம், [திரிகையினே ருறுப்பு.]
சளுக்குவேந்தர் - சாளுவர்.
சள்ளல் - அபானவாயுபறிகை, சேறு, சாரமற்றது.
சள்ளை - தொந்தரவு, [வயிற்ற ருகு, இடுப்பு.]
சறசறெனல் - சீக்கிரக்குறிப்பு.
சறுக்குதல் - வழுக்குதல், [பலப் படாமற் போதல்.]

சற்கரித்தல் - உபசரித்தல்.
சற்கருமம் - நற்கருமம்.
சற்காரித்தல் - சங்கித்தல்.
சற்சலம் - தெளிநீர்.
சற்சனன் - நற்குணன்.
சற்பம் - சருப்பம்.
சற்பனே - சதி.
சற்புத்தி - நற்புத்தி.
சற்று - அற்பம், கொஞ்சநேரம்.
சனகந்தம் - வசம்பு.
சனகம் - புளியாரை.
சனம் - மனுஷர்கூட்டம், இனம்.
சனனபூமி - சென்மபூமி (பிறந்த விடம்.)
சனனமரணம் - பிறப்பிறப்பு.
சனுசாரம் - நன்னடை.
சனுதன் - பிரமபுத்திரர் நால்வரி லொருவன்.
சனித்தல் - உண்டாதல், பிறத் தல்.
சன்மப்பகை* - பிறவிப்பகை.
சன்மவாரம்* - பிறந்தநாள்.
சன்மாந்தரம்* - பிறவிதோறும், மறுமை.
சன்மார்க்கம் - நல்லொழுக்கம்.
சன்மானம் - வெகுமானம்.
சன்மித்தல் - பிறத்தல்.
சன்னக்காறை, சன்னகாரை - அறைச்சாந்திடுதல்.
சன்னதம் - ஆவேசம், தெய்வங் கூறல்.
சன்னராட்டகம், சன்னராஷ்ட கம்* - சிற்றரத்தை.
சன்னுகம் - போர்க்கவசம்.
சன்னுசி* - துறவி.
சன்னி* - சீதநோய்.
சன்னிநரம்பு - கால்பெருவிரலிற் றொட்ட நரம்பு.
சன்னிநாயகம், சன்னிநாயன் - கருஞ்சீரகம், தும்பைப்பூண்டு.
சன்னிபம் - உவமையுருபு.
சன்னியாசி* - முற்றத்துறந் தோன்.
சன்னே - சமிக்கை, சரசம், தேரி யக்குமரம்.

## சா

சா - ஓரெழுத்து, சாவென்னே வல்.
சாகசம் - மெய்ம்மை, யானே, வீரம், கொடுமை.
சாகம் - ஆடு, கீரை, சிறுகீரை, தேக்கமரம், வெள்ளாட்டுக்க டா, ஓர் தீவு.
சாகரம் - கடல், [துயிலொழி தல், பதினுயிரங்கோடிகோடா கோடி, கவசம்.]
சாகரி - ஓரிராகம்.
சாகாடு - உரோகிணி, வண்டி.
சாகாதுண்டம் - அகில்.
சாகாமிருகம் - குரங்கு, அணில்.
சாகாமூலி - சீந்தில்.
சாகித்தியம் - கூட்டம், புலமை.
சாகினி - சிறுகீரை, வெள்ளாடு.
சாகுருவி, சாக்குருவி - ஆந்தை.
சாகேதம் - அயோத்திநகர்.
சாகை - இலை, சாதல், மரக்கொ ம்பு, வட்டில், வேதம், தங்கு மிடம்.
சாக்கடை* - சாலகம்.
சாக்காடு - சாவு.

சாக்கி* - சாட்சி.
சாக்கிபாக்கி* - கொசுறு.
சாக்கியம் - புத்தமதம்.
சாக்கியர் - புத்தர்.
சாக்கிரதை* - கவனிப்பு.
சாக்கிரம் - விழிப்பு.
சாக்கு - பை, [பொன், சாட்டு.]
சாக்கை - கருமத்தலைவன், புரோகிதன்.
சாங்கியம் - கபிலர்மதம், கபிலர் செய்த நூல்.
சாங்கோபாங்கம் - அவயவங்களுமணியப்பட்டதும்.
சாசனம் - உறுதிப்பத்திரம், தானபத்திரிகை, அரசாணை, ஆணை, இறையிறுக்காதவூர், தண்டனை, வலையர்சேரி.
சாசிபம் - தவளை.
சாசுவதம் - நிச்சயம், [அசையாநிலை.]
சாடா, ஜாடா - முழுமையும்.
சாடி-தாழி, [கும்பவிராசி, ஆண்மயிர், சீலை, திப்பிலி.]
சாடிலி-மனிதர்தசைதின்போன்.
சாடு - அடி, கொல்லென்னுமேவல், [சாதுரியம், வண்டி, மணிமுற்றுத சோளம்.]
சாடுமாலி - குப்பையை வாருபவன்.
சாடை - சாயல், சமிக்கை, அற்பம், சாய்வு.
சாட்சாது - நிலைபெற்றமகிமை.
சாட்சாத்காரம் - கருவிகரணதிகட்கெல்லாஞ் சாட்சியாயிருப்பது, சுயம்பு.
சாட்சியம் - சான்று. (தாயு)
சாட்டாங்கம், சாஷ்டாங்கம் * - எட்டுறுப்பும் நிலத்திற் றோயவணங்குதல்.
சாட்டி-சவுக்கு, [பயிரிட்டறுத்த நிலம்.]
சாட்டித்தரை-பயிர்செய்த நிலம்.
சாட்டியம் - வஞ்சகம், வருத்தம்.
சாட்டுக்கூடை* - ஓர் பெரிய கூடை.
சாட்டுதல்* - சாரப்பண்ணுதல்.
சாட்டுவலம் - பசும்புற்றரை, நாவல்மரம், அறுகு.
சாட்டை - பம்பரஞ் சுற்றுங் கயிறு, [ஓர்விதப்பலகை.]
சாணகம், சாணகம் - சாணி.
சாணங்கி - துளசி.
சாணம் - சாணி, அம்மிக்கல், சாணைக்கல்.
சாணக்கி - எருமைநாக்கிப்பூடு, மயிர்மாணிக்கம்.
சாணன்* - ஓர் சாதியான்.
சாணிக்கெண்டை* - ஓர் மீன்.
சாணை - சாணைக்கல், [சிறு குழந்தைக்கிடும் படுக்கைச்சீலை.]
சாண்* - பன்னீரங்குலவளவு.
சாதகபுட்பம் - கடலுரை.
சாதகப்புள் - வானம்பாடி.
சாதகம் - ஒருவன் பிறந்த போதிற்குத் தக்கவாறு நவக்கோள்களமர்ந்ததைச் சோதிட நூற்படி குறிப்பிட்டது, பிறவிக்குணம், [துணைக்காரணம், பூதகணம், வானம்பாடி, பேய்.]
சாதகருமம், சாதகர்மம், சாதகன்மம்-பிறந்தகாலை செய்யுமோர் சடங்கு.

சாதகும்பம் - பொன்.
சாதம் - சோறு, [உண்மை, சந்தோஷம், பூதம், பிறப்பு, இளம்புல்.]
சாதரூபம்-நால்வகைப்பொன்னினொன்று, பொன்.
சாதரூபி - அருகன், கந்தகம்.
சாதல் - இறத்தல்.
சாதவாகனன் - ஐயனார்.[வேலி.
சாதவேதா - நெருப்பு, கொடு
சாதனம் - துணைக்காரணம், அடையாளம், இடம், ஊர், பயிற்சி, முயற்சி, சித்தியாதல்.
சாதனை-சலஞ்சாதித்தல், பொய், பயிற்சி.
சாதா* - உயர்வில்லாதது.
சாதாரண - ஓராண்டு.
சாதாரணம் - பொது, [இலேசு, பழக்கம்] [திராகம்.
சாதாரி - ஓர் பண், முல்லைநிலத்
சாதி-குலம், சாதியென்னேவல், [கள், சிறு சண்பகம், தேக்கமரம், பிரம்பு, மரப்பொது, உயர்வானது.]
சாதிக்காய்-பஞ்சவாசத்தொன்று
சாதிப்பதங்கம் - சாதிலிங்கம்.
சாதிமான்* - நற்குலத்தோன்.
சாதிமை - பெருமை. (இரா)
சாதிரிசியம் - திருஷ்டாந்தம், பிரத்தியட்சம்.
சாதிரேசம் - குங்குமப்பூ.
சாதிலிங்கம்* - ஓர் சரக்கு.
சாது - சற்குணத்தோன், [அருகன், தயிர், மேன்மை,அழகு.]
சாதுரங்கம் - சதுரங்கசேனை, ஓர்வித மாணிக்கம்.
சாதுரியம்* - சாமர்த்தியம், கல்வித்திறம், நாகரிகம்.
சாதுர்ப்பாகம் - நாலிலொன்று.
சாதேவம் - குழிநாவல்.
சாதேவன் - பஞ்சபாண்டவரிளையோன்.
சாத்தல் - ஆடையணிமாலை முதலியன சாத்தல், அப்புதல்.
சாத்தன் - அருகன், ஐயன், தண்டிப்போன், வயிரவன்.
சாத்தானி* - ஓர் வைணவன்.
சாத்தியம் - சாதிக்கத்தக்கது, [அனுகூலம், பூரணம்.]
சாத்தியவதேயர் - வியாசர்.
சாத்திரம், சாஸ்திரம் - நூல், [சோதிடம், வேதம்.]
சாத்துதல்-அணிதல், அடித்தல், அப்புதல், மூடுதல்.
சாத்துப்படி - மாலை முதலிய சாத்தி யலங்கரித்தல்.
சாத்துவிகம் - முக்குணத்துள் முதன்மையானது. இதனையுடையவர் திருமாலேயாவர்.
சாத்மீகம் - சாந்தகுணம்.
சாஸ்திரீகம், சாஸ்திரீயம் - சாஸ்திர சம்பந்தமானது.
சாந்தகம், சாந்தகைமை-சாந்தம், மெத்தெனவு.
சாந்தம் - பொறுமை, [குளிர்ச்சி, சந்தனம், சாணி.]
சாந்தனையும் - சாமளவும்.
சாந்தன் - தண்ணெனவானவன், [அருகன், புத்தன்.]
சாந்தாற்றி - கால்செய்வட்டம், சிற்றாலவட்டம், பீலிக்குஞ்சம்.

சாந்தி - பரிகாரம், [தணிவு, கழிப்பு, சாந்தம்.]
சாந்திரமானம் - சந்திரன் சுற்றி வருவதினுலுண்டான மாதங்களில் வரும் வருடம்.
சாந்திரம் - நெருக்கம், நிறைவு, மிருது.
சாந்திராயணம் - ஓர் திங்களுள் விரதம், இது பௌர்ணமிதொடங்கி அமாவாசைமட்டும் ஒவ்வொரு பிடிசோறு குறைவாகவும் அமாவாசை தொடங்கி ஒவ்வொரு பிடிசோறு மிகுதியாகவும் உண்டு அனுஷ்டித்து வருவது.
சாந்து - கலவைச்சாந்து, [சந்தனம், சாந்தகுணம், பராகம், பூந்தாது.]
சாந்துக்கறை - சுண்ணத்தளம்.
சாந்தை - சாந்தமானவள், [கங்கை, பூமி.]
சாந்தோக்கியம் - உபநிடதத்தொன்று.
சாபத்திரி* - சாதிபத்திரி.
சாபம் - சபிப்பு, [வில், தனுவிராசி, குட்டி.]
சாபலம் - அநித்தியம்.
சாபலன் - ஆட்டுவாணிபன்.
சாபல்லியம் - அநித்தியம், அனுகூலம்.
சாபறை - பிணப்பறை, [நெய்தனிலப்பறை.]
சாபனே, சாபினே - சபிப்பு.
சாபிதா, ஜாப்தா*-அட்டவணே.
சாப்பா* - முத்திரை.
சாப்பாடு* - உணவு.
சாப்பு - ஓர் தாளம்.
சாப்பை - புற்பாய்.
சாமக்கிரி, சாமக்கிரிகை* - பலபண்டம்.
சாமந்தம் - ஒரிராகம், அயல்.
சாமந்தர் - அமைச்சர், தானேத்தலைவர், தோழர்.
சாமந்தி*-சிவந்தி (ஓர் பூஞ்செடி)
சாமம் - பாதியிரா, [ஒருபாயம், கருமை, சமாதானம், பச்சை, மூன்றும்வேதம், யாமம், பொன், எழரை நாழிகைகொண்டகாலம்.]
சாமரம், சாமரை - கவரி இஃது அட்டமங்கலத்தொன்று, [சிவதைக்கொடி.]
சாமரி - குதிரை.
சாமரீகரம் - பொன்.
சாமர்த்தியம்* - சாமார்த்தியம் - சமத்து (வீரம்).
சாமளம் - பச்சை. [பார்வதி.
சாமளாதேவி, சாமளே - காளி,
சாமன் - காமன்றம்பி, புதன்.
சாமானியம்* - பொது, சாதாரணம்.
சாமான்* - சரக்கு, தளபாடம்.
சாமி-கடவுள், [அருகன், கந்தன், குரு, தலைவன், மூத்தோன், பொன், கற்புடையாள்.]
சாமிநாதன் - முருகன்.
சாமிபோகம் - மேல்வாரம்.
சாமிமலை - குடந்தைக்கருகிலோரூர், பழனிமலை.
சாமீகரம் - பொன்.
சாமீபம், சாமீப்பியம் - கடவுளுக்குச் சமீபத்திருக்கும் பதவி, சமீபம்.

சாமீன், ஜாமீன்* - பிணை.
சாமுண்டி - காளி, [நாணல், பொன்னுவிரை, அவுரி.]
சாமுத்திரிகம் - அங்கலட்சணம்.
சாமை* - ஓர் பயிர்.
சாமோபாயம் - இணக்குமுபாயம். இது நான்கு உபாயத்தினொன்று.
சாம்பர் - சாம்பல்.
சாம்பல் - சாம்பர், [ஒடுங்கல், பழம்பூ, நாவல்மரம்.]
சாம்பல்மொந்தன் - ஓர் வாழை.
சாம்பவம் - அட்டாதசவுப புராணத்தொன்று, சம்புநாவல், பொன்.
சாம்பவன் - ஸ்ரீராமன் படைத்தலைவரி லொருவன், சிவன், சிவனை வழிபடுவோன்.
சாம்பவி - பார்வதி, பெருநாவல்.
சாம்பவிவிந்து - கௌளரி பாஷாணம்.
சாம்பற்பூசுணி - நீற்றுப் பூசுணி.
சாம்பான் - பறையன்.
சாம்பிராச்சியம் - ஆளுகை, பாக்கியம், மேன்மை. [ருள்.
சாம்பிராணி*-ஓர் வாசனைப்பொ
சாம்பு-சாம்பென்னேவல் பறை, நாவல்மரம்.
சாம்புதல் - ஒடுங்குதல், கூம்புதல், அடித்தல்.
சாம்புநதம் - மேருகிரிக்குத்தெற்கேயுள நாவல்ரச ஆறு.
சாம்புவந்தன், சாம்புவான்-தாசரதியின் சேனைத்தலைவரி லொருவன்.
சாம்புவன் - சுடலைகாப்பவன்.
சாம்பூநதம் - நால்வகைப் பொன்னினொன்று, பொன்.
சாயகம் - அம்பு, வாள்.
சாயங்காலம், சாயந்திரம்* - அந்திப்பொழுது. [அம்பு.
சாயம் - நிறம், [அந்திநேரம்,
சாயரட்சை* - அந்திப்பொழுது.
சாயரி - ஓர் பண்.
சாயல் - மாதிரி, [அழகு, ஒப்பு, சாய்தல், நிறம், நுண்மை, மக்கட்படுக்கை, மென்மை, நிழல்.]
சாயவேளாகொல்லி - கொல்லித்திறத்தினொன்று.
சாயனம் - கள், கிரகபுடம்.
சாயாகவுளம் - ஒரிசை.
சாயாக்கிரகம் - இராகு, கேது.
சாயாதனயன் - சூரியனுக்குச் சாயாதேவியிடம் பிறந்த சனி.
சாயாபதி - சூரியன்.
சாயாபுத்திரன் - சாயாதனயன்.
சாயானதம் - ஒந்தி. (சூடா)
சாயுச்சியம் - கலத்தல், ஆண்டவனோடு ஐக்கியப்பட்டிருத்தல், முத்தி.
சாயை - நிழல், [சூரியன்மனைவி, நிறம்.]
சாய் - சாயென்னேவல், [ஓர்வகைக்கோரை.]
சாய்தல்-இரிதல், சரிதல், [நுண்மை, அசைதல், அழிதல்.]
சாய்த்தல்-சாயத்தள்ளல், [அசைத்தல், சரித்தல்.]
சாய்ப்பு - தாழ்வு, [சார்மானம், இறப்பு, தாழ்வாரம், வெற்றிலை.]

சாய்மானம் - சார்வு, சாய்தற்கிடு மணை.
சாய்வு - தாழ்வு, [சாய்தல்.]
சாரகுமாரன் - திலோத்தமை புதல்வனை இவன் சிகண்டிமுனிவரிடம் இசைநூல் கற்றான்.
சாரங்கதரன் - ஓரரசன்.
சாரங்கபாணி, சாரங்கன் - திருமால்.
சாரங்கம் - ஓரிசை, சாதகப்புள், மான், மேகம், யானை, வண்டு, திருமால்வில், வானம்பாடி, சிறுகுறிஞ்சாச்செடி, மயில், கருப்பூரம்.
சாரங்கி - ஓர் யாழ்.
சாரசம்-இனியவோசை, [குருகு, தாமரை, வெண்ணாரை, அவுபலபாஷாணம்.]
சாரசனம் - மாதரிடை யணியிலொன்று.
சாரசன் - சோரபுத்திரன்.
சாரசியம்* - இனிமை.
சாரணர் - மன்னனிறொற்றர், சமணமுனிவர்.
சாரணை - ஓர் பூடு.
சாரதம் - பூதம், இனிய பண், ஓர்வகைப்பாட்டு.
சாரதா, சாரதாம்பாள்-சரசுவதி.
சாரதி - தேர்ப்பாகன், புலவன்.
சாரதை - சரசுவதி, ஓர் வீணை, துர்க்கை.
சாரத்தியம்* - தேரோட்டுந்தொ
சாரத்துவம் - விபசாரம். [ழில்.
சாரமேயன் - நாய்.
சாரம் - சத்து, [இனிமை, நடை, நிலாமுகிப்புள், மரவயிரம், மேடு, ஓர் மருந்து, பாலடை, கிரகசாரம், வெண்ணெய்.]
சாரர் - வேவுகாரர்.
சாரலம் - எள்.
சாரல் - மலைப்பக்கம், தூறல், [கிட்டல், மருதயாழிசை.]
சாரி - உலாப்போதல், சூதாடு கருவி, சூறைக்காற்று, பரதவுறுப்புளொன்று.
சாரிகை - கவசம், சங்கம், சுழல் காற்று, சூதாடுகருவி, நாகணவாய்ப்புள், வட்டமாயோடல்.
சாரிதம் - சாரீரம், ஒழுக்கம்.
சாரித்திரம் - ஒழுக்கம், வரலாறு.
சாரிபம், சாரிபை, சாரியம் - நன்னாரி.
சாரியை - சார்ந்துவரு மிடைச்சொல்.
சாரீரம் - இன்னிசை, சரீரசம்பந்தமானது, ஓர் உபநிடதம்.
சாரு - கிள்ளை, அழகு.
சாருகன் - கொலைசெய்வோன்.
சாருலோசனம் - மான்.
சாரூபம் - நாலு பதவியிலொன்று அது ஈசுவரனதுருப் பெற்றிருக்குதல். [தல்.
சாரூப்பியம்-ஒரேதன்மை, இசை
சாரை* - ஓர் சாதிப்பாம்பு.
சாரையோட்டம் - நேரே யோடுகை.
சாரோலை - முதிர்ந்த குருத்தோலை.
சார் - சாரென்னேவல், [அழகு, இடம், கடலுண்மேடு, அணைக்கரை, திண்ணை, பக்கம், வகை.]

சார்ங்கம் - திருமால்வில்.
சார்ச்சி - சாருதல், கூடுதல், அடைதல்.
சார்தல் - கிட்டல், கலத்தல்.
சார்த்தல் - மதகு முதலியவற்றை யணைத்தல், சாரச்செய்தல்.
சார்த்தூலம் - புலி, ஓர் பட்சி, ஓர் பண்.
சார்ந்தார், சார்ந்தோர்-உறவினர்.
சார்பறுத்தல் - துறவு.
சார்பிலார் - பகைவர், முனிவர்.
சார்பு - உதவி, கிட்டுகை, குணம், தயவு, தன்மை, பற்று.
சார்மணை* - சாருதற்கிடுமணை.
சார்மானம் - சார்பு.
சார்வதா - எப்போழ்தும்.
சார்வபூமம் - வடதிசையானை.
சார்வபூமன் - ஒருவனைப் பணியா துலகாள்வோன்.
சார்வரி - ஓராண்டு. [ன்று.
சார்வாகம் - புறச்சமய மாறிணொ
சார்வாரம் - கச்சின் கடைகயிறு, முன்றானை.
சார்வு - சார்பு, ஆசைப்பெருக்கம், இடம், இளவேரலை.
சால - மிகுதி.
சாலகடங்கடர் - இராக்கதர்.
சாலகம் - சலதாரை, பலகணி, [அதலலோகம், இளம்பூவரும்பு, சிலந்திப்பூச்சி, பறவைக் கூடு, வலை, உபாயம்.]
சாலகிரி - அழுக்ககற்றுமிடம்.
சாலக்காரன்* - மாயவித்தைக்காரன்.
சாலக்கிராமம் - ஓர் விஷ்ணுஸ்தலம், ஓர்வகைச்சிலை.
சாலம் - மாயவித்தை, [அரண், ஆச்சாமரம், இளம்பூவரும்பு, கூட்டம், சபை, செடி, பலகணி, மரப்பொது, விலங்கின் கூட்டம், விகற்பம், வலை.]
சாலர் - தொங்கல்கள், [நெய்தனிலமாக்கள்.]
சாலாமிசரி* - ஓர் சரக்கு.
சாலாரம் - ஏணி, படி, பறவைக் கூடு.
சாலி - அருந்ததி, கவசம், கள், நெல், நாவி, புழுகுசட்டம், மராமரம் (சேதுவந். 9)
சாலிகை - கவசம், சட்டை.
சாலியர், சாலிகர் - நெய்வோர்.
சாலிவாகனன் - ஒரு மன்னன்.
சாலினி - தேவராட்டி (சிலப்: 12:7.)
சாலுகம், சாலூகம் - சாதிக்காய்.
சாலூரம் - தவளை, மேன்மை.
சாலேகம் - சந்தனம், சிந்தூரம், பலகணி, பூவரும்பு.
சாலேசரம் - சத்துவாரி.
சாலேயம் - நெல் விளையும் நிலம், சிறுதேக்கு.
சாலை-இருமருங்கும்விருட்சங்கள் நிறைந்த பாதை, [அரசன் மனை, அறத்தின் சாலை, குதிரைப்பந்தி.]
சாலோகம், சாலோக்கியம் - கடவுளது உலகத்திருக்கும் பதவி.
சால் - தண்ணீர் மொள்ளும் பாத்திரம், நீர்ச்சால், [சாலென்னேவல், மிகுதி, படைச்சால், அமைதி.]

சால்பு - ஊக்கம், கல்வி, குணம், மாட்சிமை, மேன்மை, நிறைவு, அமைதி.
சால்வம் - சாலவம், ஒருதேசம்.
சால்வை* - ஒருடை விசேடம்.
சாவகம் - பதினெண்பாடையி லொன்று.
சாவகர் - ஓர் பாடைக்காரர், சமணர்.
சாவகன் - சனி.
சாவகன்குறிஞ்சி-குறிஞ்சித்திறத் தினொன்று.
சாவகாசம்* - வசதி, அவகாசம்.
சாவடி* - வழிப்போக்கர் தங்கு மிடம்.
சாவணம் - ஓர் கருவி, குழாய், நாணல்.
சாவதானம் - கவனம், விழிப்பு.
சாவரம் - இதழ், பாவம்,குற்றம்.
சாவறுதி - மரணகாலம்.
சாவாக்கிழங்கு-கருடன்கிழங்கு.
சாவாசம்* - சகவாசம் (உற்ற சிநேகம்.)
சாவாளை - ஓர் மீன், மெலிந்தது.
சாவி - திறவுகோல், பயிர்ச்சாவி.
சாவித்திரம் - பூணூல்.
சாவித்திரி - சத்தியவானின் மனைவி. இவ்வம்மையார் இறந்த தனது நாயகனுயிரை யம னிடமிருந்து திருப்பிக்கொண் டார், [சரசுவதி, உமை, சூரிய கிரணம், பூ ணூ ல ணி யா த வன்.]
சாவு - மரணம், [பிசாசு.]
சாவேரி - ஒரிராகம்.
சாழல் - மகளிர் விளையாட்டினொன்று, கரடி.
சாழை - குடிசை, கைகொட்டடல்.
சாளக்கிராமம் - சாலக்கிராமம்.
சாளரம்* - பலகணி.
சாளா - ஓர் மீன். [வண்டு.
சாளிகை - சாடி, ப ண ப் பை,
சாளுவர் - சளுக்குவேந்தர், சாளுவதேசத்தார்.
சாளேசுரம் - குறும்பார்வை, வெள்ளெழுத்து.
சாளைக்கெண்டை - ஓர் மீன்.
சாறடை, சாறணத்தி, சாறணை - ஓர் பூடு.
சாறு - சாரம், [கள், குலை, பூங் கொத்து, திருவிழா.]
சாறுவேளை - சாறணை.
சாற்சமந்தம் - மலையாத்திமரம்.
சாற்றுதல் - சொல்லுதல்.
சானகம் - வில்.
சானகி-சீராமன் பத்தினி, [பொன்னுங்காணி, மூங்கில், ஓராக் கன், கொடிக்கொத்தான்.]
சானவி - கங்காநதி.
சானி - வேசி.
சானித்தல் - தியானித்தல். (சேது)
சானித்தியம் - கிட்டுதல்.
சானு - முழந்தாள், மலைச்சாரல், வில்.
சானுக்கிரகம் - தேவர்மொழி.
சான்மலி - இலவமரம், ஓர் தீவு.
சான்றவர் - அறிஞர்.
சான்றாண்மை-ஊக்கம், ஞானம்.
சான்று - உதாரணம், சாட்சி.
சான்றோராட்சி-கற்றோர்வழக்கு
சான்றோன் - அறிஞன்,சூரியன், சா ணு னெ னு மொ ரு சாதி யான்.

சி

சிகண்டம் - மயிற்றோகை, உச்சிச்சிகை.
சிகண்டி - துருபதன்மகள், பேடு, [அலி, ஒரெண், ஆமணக்கு, மயில், அங்கிரரிஷி, சேவல், இசைநுணுக்க நூலாசிரியர்.]
சிகண்டிகை- கருங்குன்றிச்செடி.
சிகரம் - உயர்ச்சி, மலையுச்சி, [காக்கை, கவரிமா, தலை, திரை, சுக்கு, கோபுரமுடி, மலை, வட்டில், வீடு, நீர்த்துளி.]
சிகரி - எலி, கருநாரை, கோபுரம், புல்லுருவி, மலை, சிகரம்.
சிகல் - கெடுதல், குறைதல்.
சிகழிகை - மயிர்முடி, தொடுத்த மாலை, வாசிகை. [வன்.
சிகாமணி - சிரேஷ்டன், முதல்
சிகாரி, ஷிகாரி* - வேட்டை.
சிகாவலம் - பாசி.
சிகாவளம் - மயில்.
சிகி - கேது, தீ, மயில், அம்பு, சேவல், மலை, சிலம்பு.
சிகிகண்டம், சிகிக்கிரீவம் - மயில் துத்தம்.
சிகிச்சை*-நோய்க்குப் பரிகாரம்.
சிகில் - ஆயுதங்களைத் துலக்குகை.
சிகிவாகனன் - குமரன்.
சிகுரம் - மயிர்ப்பொது.
சிகுவாசன்னி - நாக்கு இழுத்துக் கொள்ளும் ஓர் நோய்.
சிகுவை - கண்ணில் நிற்கும் நரம்பு, நாக்கு, வாக்கு.
சிகை - குடுமி, மயிர்முடி, சுவாலை, மயிர்சூடு.
சிகைதாடு - தலைமயிர் கட்டுங் கயிறு, கொண்டையணியிலொன்று.
சிக்கடி - அவரை, சிக்கு.
சிக்கம் - உறி, [குடுமி, சீப்பு, சிறைச்சாலை, பின்னல், மெலிவு, வண்டு.]
சிக்கர் - கள்.
சிக்கல் - சிக்குதல், [ஓரூர், கிடைத்தல், காக்கைக்கல்.]
சிக்கனம் - இறுக்கம்.
சிக்கு - தடை, எண்ணெய்ப்பற்று முதலியன, கண்ணி.
சிக்குதல் - அகப்படுதல், பின்னப்படுதல்.
சிக்குப்பாடு, சிக்குமுக்கு - பிசகு, தொந்தரை.
சிக்குரு - நல்லமுருங்கை.
சிக்குவை - நா, தண்ணீர்விட்டான்கிழங்கு.
சிங்கத்தோலுடையோன் - வீரபத்திரன்.
சிங்கநாதம் - வீராவேசத்தாலார்த்தல், [சிங்கத்தின் கெர்ச்சனை, ஓர் தொளைக்கருவி.]
சிங்கப்பெருமாள் - துளசி.
சிங்கமதாணி - திக்குவிசயஞ்செய்த மன்னர் மார்பிலணியுஞ் சிங்கமுகப்பதக்கம்.
சிங்கமுகி - பொன்னூமத்தை.
சிங்கம் - ஓர் மிருகம், [ஓரிராசி, ஆடாதோடை.]
சிங்கல் - குறைதல், கெடல், இளைத்தல்.
சிங்கவல்லி - தூதுளை.
சிங்கவாகினி-துர்க்கை, பார்வதி.

சிங்களர், சிங்களவர் - ஈழநாட்டினர்.
சிங்கன் - குறவன்.
சிங்காசனம், சிங்காதனம், சிம்மாசனம், சிம்மாதனம் - பத்திராசனம் அஃது பீசத்தின்கீழ்ச் சீவனியிடத் திருகால்பரட்டையும் வைத்தவ் விருபதத்தையு மிருகையா லிறுகப்பிடித்தசையாதிருத்தல், மன்னராசனம்.
சிங்காடி, சிங்கானி - சுண்டுவில்.
சிங்காணம் - மூக்குச்சளி.
சிங்காரம் - அலங்காரம், [நவரசத்தினொன்று.]
சிங்காரவனம் - பூந்தோட்டம்.
சிங்காரித்தல்* - அலங்கரித்தல்.
சிங்கி - நஞ்சு, குறத்தி, துட்டை, ஓர்வைப்புப் பாஷாணம், கற்கடகசிங்கி, மிருதாரசிங்கி, வல்லாரை, இராகுவின்றாய்.
சிங்கிநாதம் - நூனுதிக்கம்.
சிங்கிவேரம், சிங்குவம் - சுக்கு.
சிங்கினி - வில், வின்னாண்.
சிங்குவை, சிங்ஙுவை - நா.
சிசினம் - ஆண்குறி.
சிசு - குழந்தை, விலங்கின்குட்டி.
சிசுபாலன் - இடையெழு வள்ளலிலொருவன்.
சிசுருட்சை - கருமமுடிக்கு மபேட்சை.
சிசுவதை, சிசுகத்தி - குழந்தையைக் கொல்லல். [ப்புள்.
சிச்சிலி - சிரற்புள், பொன்வாய்
சிச்சிலிப்பான், சிச்சிலுப்பான் - வசூரி வகையினொன்று.
சிச்சீ* - இகழ்ச்சிக்குறிப்பு.
சிஞ்சம்-புளிமாமரம், புளியமரம்.
சிஞ்சிதம் - அசையுமாபரணங்களா லெழுமொலி.
சிஞ்சினி - நாணி.
சிஞ்சுகம் - கேகயப்புள்.
சிஞ்சுமாரம், சிசுமாரம் - முதலை.
சிஞ்சுரம் - புளி.
சிஞ்சை - அணிகளா னெழுமொலி, நாவொலி, புளியமரம்.
சிட்சித்தல் - தண்டித்தல், [போதித்தல்]
சிட்சை - தண்டனை, [கல்வி, வேதாங்கத்திலொன்று.]
சிட்டபரிபாலனம், சிஷ்டபரிபாலனம்*- நல்லவரைக் காத்தல்.
சிட்டம் - கிட்டம், பொறுமை, அறிவு.
சிட்டர், சிஷ்டர் - நல்லோர், பெரியோர்.
சிட்டி, சிஷ்டி - படைப்பு, கட்டளை, ஒழுங்கு.
சிட்டித்தல் - படைத்தல்.
சிட்டிலிங்கி - ஓர் மரம்.
சிட்டு - ஓர் குருவி, [அற்பம்.]
சிட்டை* - ஆடைக்குறி.
சிணுட்டல் - பிடித்தல்.
சிணுறு - மரக்கிளை.
சிணுக்குதல் - சீண்டல், பிதுக்கல், பொசியப்பண்ணல், சிக்குப்படுத்தல்.
சிணுங்குதல் - அழுதல், கொஞ்சுதல், [மழைதூறல்.]
சிண்டி, சிண்டு - தலைமயிர், குடுமி.
சிண்டுதல் - தொடுதல், நெருங்குதல்.

சிதகன் - சுக்கிரன், தூக்கணங் குருவி.
சிதடன் - அறிவில்லான், குருடன்.
சிதடி - அறிவிலாள், குருடி, சிள்வண்டு.
சிதடு - குருட்டுத்தன்மை, பேதைமை.
சிதமருசம் - வெள்ளைமிளகு.
சிதம் - வெண்மை, விண்மீன், சயமுறப்படல், ஞானம், வறுமை, புளியாரை.
சிதம்பரம்* - ஓர் சிவஸ்தலம்.
சிதம்பு - ஓர் காலணி, பதனழியென்னுமேவல்.
சிதரம் - உறி, மழைத்துளி.
சிதர் - சிதறென்னேவல், [உறி, கந்தைத்துணி, பூந்தாது, மழைத்துளி.]
சிதர்தல் - சிந்தல்.
சிதலம் - பதனழிவு.
சிதலை - கறையான், சீலைத்துணி, நோய்.
சிதல் - கறையான்.
சிதவல் - மரவுரி, தேரிடக்கியம், புரையோடு புண், குறைவுபட்டது, கந்தைத்துணி.
சிதறடித்தல் - சேதப்படுத்தல், தோற்கடித்தல்.
சிதறி - மழை, பாடலமரம்.
சிதறுதல்* - சிந்துதல்.
சிதன் - சுக்கிரன், அச்சமுடையவன்.
சிதாகாசம் - ஞானகாசம்.
சிதாக்கினி - ஈமாக்கினி.
சிதாபாசம் - மயக்கு.
சிதாபாசனம் - முக்குணங்களுளொன்றில் விவேக மழுந்தியிருத்தல்.
சிதாபாசன் - சீவன்.
சிதாரம் - தேரிடக்கியம்.
சிதார் - மரவுரி, சீரை.
சிதானனன் - கருடன்.
சிதி - கறுப்பு, வெண்மை, கோடாலி.
சிதிரம் - கோடாலி, தீ, வாள்.
சிதிலம் - சிதலம், நெகிழ்தல்.
சிதை - ஈமவிறகு, சிதையென்னேவல், கீழ்மை.
சிதைத்தல் - அழித்தல், கெடுத்தல்.
சிதையர் - கீழ்மக்கள்.
சித்தகங்கை - ஆகாயநதி.
சித்தகம் - தலைச்சீரா, மெழுகு.
சித்தகாசம் - பேரறிவு.
சித்தசன் - மன்மதன்.
சித்தசாதனம் - வெண்கடுகு.
சித்தசுத்தி - மனத்தூய்மை.
சித்தப்பிரமை - மனமயக்கம், பைத்தியம்.
சித்தமன் - ஆமணக்கு.
சித்தமுகம்-கிலுகிலுப்பைச்செடி
சித்தம் - உள்ளம், [உண்மை, உட்காணம் நான்கினென்று, முருங்கைமரம், ஓராகமம், நித்தியயோகத் தொன்று, காருண்ய மனம்.]
சித்தம்பலம் - சிதம்பரம்.
சித்தயோகம் - சுபயோகம்.
சித்தாரூடம் - விஷவாகடத்தொன்று.
சித்தர்* - சித்திபெற்றவர்கள்.

சித்தல் - சீலை.
சித்தவிலாசம் - பிரபஞ்சவிச்சை.
சித்தவேதனை - மனக்கலக்கம்.
சித்தன் - சித்திபெற்றோன், [சிவன், வயிரவன், காந்தக்கல், இலவமரம், அருகன்.]
சித்தாகாரம் - அரூபம்.
சித்தாதிகள்* - சித்தர்.
சித்தாந்தம் - ஓர் சைவசமயவிகற்பம், நிச்சயமானது.
சித்தாந்தன் - சிவன்.
சித்தாந்தி - சித்தாந்தசமயி, தருக்கமுடிவு பேசுபவன்.
சித்தார்த்தம் - கடுகு, வெண்கடுகு, தத்துவஞானம்.
சித்தார்த்தி - ஓராண்டு.
சித்தி-நிறைவேற்றம், சிறியதாய், [பலம், மோட்சம், எட்டிமரம், நிலப்பனை, சவக்காரம்.]
சித்தித்தல் - கைகூடுதல், சம்பவித்தல்.
சித்திமூலம் - நிலப்பனங்கிழங்கு.
சித்தியார் - ஓர் சைவ சித்தாந்த [நூல்.
சித்திரகடம் - காடு.
சித்திரகண்டம் - புறவு.
சித்திரகவி - நாற்கவியினொன்று.
சித்திரகாயம் - புலி.
சித்திரகிரீவன் - புறா.
சித்திரகுத்தன் - இயமன் கணக்கன்.
சித்திரகூடம் - சீராமன் தங்கிய ஒரு மலை.
சித்திரக்காலி* - ஓர் நெல்.
சித்திரக்குள்ளன் - மிகக்குறியன்.
சித்திரசேனன் - நரககணக்கரிலொருவன்.
சித்திரபானு - ஓராண்டு, [தீ, சூரியன்.]
சித்திரபுத்தனார் - சித்திரகுத் [தனார்.
சித்திரப்படாம் - எழுத்துச்சீலை.
சித்திரப்பாலடை - ஓர் பூடு.
சித்திரப்பாலாவி - அம்மான்பச்சரிசி.
சித்திரமூலம் - கொடிவேலி, [நிலப்பனங்கிழங்கு.]
சித்திரம் - சித்திரிக்கப்பட்டது, [நூதனம், ஆமணக்கு, சிறப்பு, பேரழகு, ஓர் சிற்பநூல், சிறுகுறிஞ்சா.]
சித்திரரதன் - ஓர் கந்தருவன், சூரியன்.
சித்திரரேகை - குபேரன்மனைவி, அரசமரம், ஓரிரேகை.
சித்திரவதை* - கண்டதுண்டமாய் வெட்டிக் கொல்லல்.
சித்திரவேளாகொல்லி - கொல்வித் திறத்திஞென்று.
சித்திரவோடாவி - சித்திரகாரன்.
சித்திராக்கினை - சித்திரவதை.
சித்திராங்கதன் - குருகுல மன்னரிலொருவன், நரகிலோர் கணக்கன்.
சித்திராங்கி*-தந்திரமுடையவள்
சித்திராபூரணை, சித்திராபௌர்ணமி - சித்திரையிற் பௌர்ணமி அஃது சித்திரகுத்தர் பிறந்தநாள்.
சித்திரை - ஓர் மாதம், [ஓர் நாள்.]
சித்திலி - சிற்றெறும்பு.
சித்திலிகை - எழுத்துச்சீலை.
சித்தினி -நால்வகைப்பெண்களிலொருத்தி.

சித்து - மாயவித்தை, [அறிவு, அரூபம், யாகம்.]
சித்துடுக்கை* - சிறிய உடுக்கை.
சித்தை* - தோற்றுருத்தி.
சிநேகபலம் - எள்ளு.
சிநேகம், சினேகம் - நட்பு.
சிநேசம் - சாதிக்காய்.
சிந்தகம் - தூக்கணங்குருவி, புளியமரம்.
சிந்தனை-நினைவு, [விருப்பு, தியானம், ஆராய்வு.]
சிந்தன் - குறளன், சீர்பந்தபாஷாணம்.
சிந்தாகுலம் - மனக்கவலை.
சிந்தாக்கு - சிந்தாக்கட்டிகை, ஓர் விளையாட்டு.
சிந்தாமணி - சிந்தித்ததைக்கொடுக்கும்மணி, பெருங்காப்பியத்துளொன்று, ஓர் மருந்து.
சிந்தித்தல் - நினைத்தல்.
சிந்திப்பு - நினைப்பு.
சிந்து - சிந்தென்னேவல், [ஓர் யாறு, கடல், நீர், இருவாட்சி, ஒருதேசம், ஓர்ப்பா, முச்சீரடி, யானை, யானைமதம், வைரீயம்.]
சிந்துபுட்பம் - சங்கு.
சிந்துரம்-புடமிட்ட பஸ்மம்,[சிவப்பு, புளியமரம், யானை, செவ்வியம், வெட்சி, செந்திலகம்.]
சிந்துவாரம் - கடல், வில், வெண்ணொச்சி.]
சிந்தூரம் - புடமிட்ட பஸ்மம், [செந்திலகம், சிவப்பு, புளியமரம், சேங்கொட்டை, யானை, வெட்சி.]
சிந்தை - கருத்து, மனம், குறிப்பு.
சிந்தைகூரியன் - கூர்ந்த மதியுடையோன், புதன்.
சிந்தைவிளக்கு- திரிகாலஞானம். (சிலப். 10; 197.)
சிபாரிசு* -யோக்கியதாபத்திரம்.
சிபி - சிபிசக்கரவர்த்தி.
சிப்பம்* - சிறுகட்டு.
சிப்பி - கிளிஞ்சில், [சங்கு.]
சிப்பியர் - தையற்காரர், புகழ்ந்து பாடுபவர்.
சிமட்டி - பேய்க்கொம்மட்டி.
சிமயம்-மலை, மலையுச்சி, பொதியமலை.
சிமாளம்* - களிப்பு.
சிமிக்கிப்பூ - ஓராபரணம், ஓர்பூ.
சிமிட்டு - கண்ணிமைப்பு, சிமிட்டென்னேவல், [மருட்டு.]
சிமிண்டுதல் - நுள்ளுதல் (கிள்ளுதல்) தோற்றுமலெடுத்தல்.
சிமிலம் - மலை.
சிமிலி - உறி, குடுமி, சிள்வண்டு, பூளைச்செடி.
சிமிழ்-சிமிழென்னேவல், செப்பு.
சிமிழ்தல் - சிமிட்டுதல்.
சிமிழ்த்தல் - கட்டல்.
சிமிள் - சிமிழ்.
சிமுட்டி - கீழ்காய்நெல்லி.
சிமை-கொடிமுடி. (வாண)
சிமையம் - மலை.(மணிமே. 277.)
சிம்ட்டா - மயிர்பிடுங்குங் கருவி.
சிம்பு - சிராய் (இளம்வளார்), தும்பு, நார், [இரும்புத்துகள்].
சிம்புதல் - தள்ளல், [ஒலித்தல், காவாய்க்கவருதல்.]
சிம்புரி - சும்மாடு, புரிமணை.

சிம்புளி - கம்பளி, செவ்வாடை.
சிம்புள் - எண்காற்புள்.
சிம்பை - அவரைக்கொடி.
சிம்மதம் - பாம்பு.
சிம்மம்* - சிங்கம்.
சிரகம் - கரகம், தலைச்சீரா, உறைத்துளி, மழைத்துளி.
சிரகம்பம், சிரகம்பிதம் - தலையசைப்பு.
சிரக்கொழி, சிரக்கோழி-குழலாதொண்டைக்கொடி, வசம்பு.
சிரங்காய் - சிரங்கை.
சிரங்கு - ஓர் புண், [சொறி.]
சிரங்கை - கைகொண்ட அளவு.
சிரசன் - சிர்பந்தபாஷாணம்.
சிரசாவகித்தல் - தலைமேல்வைத்தல்.
சிரசு - தலை, முதல்.
சிரச்சேதம்* - தலையையறுத்தல்.
சிரஞ்சீவி - நெடுங்காலஞ் சீவிப்போன், [காகம்.]
சிரட்டை* - தேங்காயோடு.
சிரஸ்தாதார்* - ஒருத்தியோகஸ்தன்.
சிரத்துதல் - ஒலித்தல், பேசலாவெழுமொலி.
சிரத்தை - அன்பு, [முதன்மை, விசுவாசம், விருப்பம்.]
சிரநதி - கங்கை.
சிரபுரம் - சீகாழி. (கந்.)
சிரமம் - வருத்தம், [சிலம்பம், இளைப்பு, இரைச்சல்.]
சிரமை - வருத்தம்.
சிரம் - தலை, [உயர்ச்சி, கமுகு, கூகைநீறு, நெடுங்காலம், மேன்மை.]
சிரல் - சிச்சிலிக்குருவி, முடிவிடம்.
சிரவணம் - காது, கேள்வி, திருவோணம், ஒரு உபநிடதம்.
சிரவம் - கவுதாரி, காது, யாகாக்கினியில் நெய்விடுங் கருவி.
சிரற்புள் - பொன்வாய்ப்புள்.
சிராத்தம் - இறந்தோர்க்குச் செய்யுமோர் கிரியை.
சிராபத்திரம் - விளாமரம்.
சிராய் - சிறும்பு.
சிராவணம் - ஓர் கல், [ஆவணி மாதம்.]
சிரி - சிரியென்னேவல், [அம்பு, வாள், வெட்டுக்கிளி.]
சிரிப்பாணி - சிரிப்புக்கிடம், பழிப்பு, [சிரிக்கத்தக்கவன்.]
சிரிப்பு - நகைப்பு, [பழிப்பு, பகிடி.]
சிரீ - இலக்குமி, மேன்மைக்குறிப்பு.
சிரீடம் - வாகைமரம். குன்றி.
சிரீமுகம் - ஓராண்டு.
சிருகாலன் - நரி, கடுஞ்சொற்காரன்.
சிருங்கபேரம் - இஞ்சி.
சிருங்கம் - விலங்கின்கொம்பு, கூர், மலைமுடி.
சிருங்கலம் - சங்கிலி, யானைச்சங்கிலி, விலங்கு.
சிருங்கலை - கால்விலங்கு.
சிருங்காடகம் - நாற்றெருக் கூடுமிடம்.
சிருங்காரம் - அன்பு, நவரசத்திலொன்று, கராம்பு, புணர்ச்சி.
சிருங்காரித்தல் - சிங்காரித்தல்.

சிருங்கி - பொன்.
சிருட்டி - சிருட்டியென்னேவல், படைப்பு.
சிருட்டிகத்தா, சிருட்டிகர் - பிரமன்.
சிருட்டிப்பு - படைப்பு.
சிரேஷ்டபுத்திரன்* - முதற்புதல்வன்.
சிரேஷ்டம், சிரேட்டம்* - முதன்மை, மேன்மை.
சிரேட்டாதேவி - மூதேவி.
சிரேணி - இடையர்வீதி, ஒழுங்கு, வரிசை.
சிரேயசு - கீர்த்தி.
சிரை - சிரையென்னேவல், [குரங்கு, நரம்பு.]
சிரைத்தல் - மயிர்கழித்தல்.
சிரோட்டம் - கடுக்காய், தான்றிமரம், நெல்லிமரம்.
சிரோத்திரம் - காது, கேள்வி.
சிரோநதம் - மயிர்ச்செறிவு.
சிரோபத்தியம் - கடுக்காய்.
சிரோமணி, சிரோரத்தினம் - நாகரத்தினம், முடியிலணியும் மணி, உயர்வுடையது.
சிரோருகம் - தலைமயிர்.
சிரோவேட்டம் - தலைச்சீரா.
சில* - கொஞ்சம்.
சிலகம் - சட்டுவம்.
சிலங்கம் - விளாம்பட்டை.
சிலதர் - ஏவல்செய்வோர், தோழர்.
சிலதியர் - ஏவல்செய்தோழியர்.
சிலந்தி-ஓர் பூச்சி, கிரந்திப்புண், ஓர் மரம்.
சிலந்திநாயகம் - கிரந்திநாயகப்பூடு.
சிலந்தியரிசி - பூங்கோரைப்புல்.
சிலப்பதிகாரம் - ஓர் நூல்.
சிலம்பம் - படைக்கலப்பயிற்சி, தந்திரோபாயம், பயப்படுத்துகை.
சிலம்பல் - ஒலித்தல்.
சிலம்பன் - குறிஞ்சிநிலத் தலைவன், குமரன். [தை.
சிலம்பி - சிலந்திப்பூச்சி, ஓர் பரத்
சிலம்பு - காற்சிலம்பு, பூசாலிகள் கைச்சிலம்பு, [ஒலி, சிலம்பென்னேவல், மலை.]
சிலர்* - சில பெயர்.
சிலவர் - வேடர்.
சிலாக்கியம் - முக்கியம், புகழத்தக்கது, [உரிமை.]
சிலாசத்து, சிலாசித்து-மண்ணைலம், கற்பூரச்சிலை.
சிலாசாஸநம், சிலாசாதனம் - கல்வெட்டு.
சிலாதரன்-நந்திதேவரின்தந்தை.
சிலாதலம் - கற்படி, பாறை.
சிலாத்துமசம் - இரும்பு.
சிலாப்புதல் - வீண்பொழுதுபோக்கல்.
சிலாமணி-எங்குஞ் செல்லுமணி, [கற்பூரச்சிலை.]
சிலாமதம் - கன்மதம்.
சிலாம்பு-செகிள், மரப்பொருக்கு.
சிலாவட்டம் - சாணைக்கல்.
சிலாவருஷம், சிலாவருடம்-கன்மழை.
சிலாவிந்து - கன்னூர்.
சிலியானை - முடக்கொற்றான்.
சிலிர்த்தல் - மயிர்க்கூச்சுக்கொள்ளல், [தளிர்த்தல்.]

**சிலீமுகம்** - அம்பு, மூலைக்கண், வண்டு, தேனீ, யுத்தம்.
**சிலீரிடுதல்** - குளிர்தல், [பயப்படுதல்.]
**சிலுகு** - சண்டை, போர்புரியென்னேவல், தடை, துன்பம்.
**சிலுக்கு** - வெட்டிய சிறுதுண்டு, சிலும்பு (மரச்செதும்பு), [இருப்பு மோதிரம், சண்டை, வாட்டல்.]
**சிலுசிலுத்தல்**-குளிர்விறைத்தல்.
**சிலுசிலெனல்*** - குளிர்தல்.
**சிலுப்புதல்*** - அசைத்தல்.
**சிலும்பு** - களிம்பு, மரச்செதும்பு.
**சிலுவை** - உவில்லிய மதத்தினருள் கொல்லப்படுவார்களையறையுமோர் மரம்.
**சிலேடை, சிலேஷை** - ஓரலங்காரம், அஃது இரண்டு அர்த்தத்தை யுடையது.
**சிலேட்டர், சிலேட்டியர்** - செட்டிகள்.
**சிலேட்மம், சிலேத்துமம், சிலேற்பனம்*** - கோழை, அஃது முப்பிணியிலொன்று.
**சிலேபி*** - ஓரினிப்புப் பண்டம்.
**சிலேபியர்** - செட்டிகள்.
**சிலை** - கல், மூலவிக்கிரகம்,[சிலையென்னேவல், வில், தனுவிராசி, ஒலி, ஓர் மரம், மலை, மூலநாள்.]
**சிலைத்தல்** - ஒலித்தல்.
**சிலைத்தாசி** - சாளக்கிராமம்.
**சிலைநாகம்** - சூடாலைக்கல்.
**சிலைநார், சிலையாவி, சிலைவிந்து** - கல்நார்.
**சிலோச்சயம்** - மலை.
**சில்லத்து** - சிறு சட்டை.
**சில்லம்** - துண்டு, [தேற்றுமரம்.]
**சில்லரி**-சிலம்பின் பருக்கைக்கல்.
**சில்லர்** - வேடர்.
**சில்லறை** - சொச்சம், சிதறினதொகை, ஓர்வகைக் காதணிகள், [அற்பகாரியம்.]
**சில்லா, ஜில்லா*** - ஒரு நிலப்பாகம்.
**சில்லான்** - ஓர் விளையாட்டு [ஓந்தி.]
**சில்லி** - கண்ணறை (துவாரம்), [சிள்வண்டு, சிறுகீரை, தேருருளை, வட்டம்.]
**சில்லிகை** - சிள்வண்டு, சீலை, நல்லாடை.
**சில்லிவாயன்** - பயனின்றி ஓயாது பேசுபவன்.
**சில்லை** - சிள்வண்டு, கிலுகிலுப்பை, தூர்த்த மங்கை, இழிவு (சிலப். 16:147).
**சில்வண்டு** - சிள்வண்டு (ஓர்வண்டு).
**சில்வானம்*** - சொச்சம்.
**சிவகங்கை** - சிதம்பரத்தேயுள்ள ஒரு தீர்த்தம், மதுரைக்கருகேயுள்ள ஒரூர்.
**சிவகணம்** - சிவசேவைப் பரிவாரர்.
**சிவகம்**-சாதிக்காய், நாய்ச்சீரகம்.
**சிவகரந்தை** - ஓர் பூடு.
**சிவகாஞ்சி** - ஓர் தலம்.
**சிவகாமி** - பார்வதி.
**சிவசத்தி**-பஞ்ச சத்தியிலொன்று, திருசு.

சிவசன் - சுக்கிரன்.
சிவச்சி - சாதிக்காய்.
சிவஞானம் - தெய்வஞானம், பதி ஞானம்.
சிவண - உவமைச்சொல்.
சிவணல் - கலத்தல், கிட்டல், பொருந்தல், பொருதல்.
சிவதடி - வெள்ளரி.
சிவதம் - இருக்குவேதம்.
சிவதன்மம் - தெய்வபுண்ணியம், அட்டாதச வுபபுராணத்தொன்று.
சிவதாது - பாதரசம், ஓர் கல்.
சிவதை - ஓர் கொடி.
சிவத்தம் - செம்முருங்கை.
சிவத்தல் - சிவக்குதல், [கோபம், சினக்குறிப்பு.] [பூடு.
சிவந்தவேசை - செம்பரத்தைப்
சிவந்தி - செவ்வந்தி, [கொடிப் பாலை.]
சிவபீசம் - பாதரசம்.
சிவபுரி - ஓர் ஸ்தலம், காசி, கைலாசபுரி.
சிவப்பிரகாசர் - பிரபுலிங்கலீலை முதலிய நூல்களை யியற்றிய வீரசைவாசாரியர்.
சிவப்பு - செம்மைநிறம், [சினக் குறிப்பு.]
சிவமல்லி - கொக்குமந்தாரை.
சிவம் - குறுணி, நன்மை, முத்தி, பசுவிணைதறி, பாதரசம், முற்றத்துறத்தல், உப்பு, உயர்வு, ஆண்குறி, வெண்காரம்.
சிவரசம்-மூன்றுநாளூறிய கஞ்சி.
சிவராத்திரி * - ஒரு புண்ணிய தினம்.
சிவலிங்கம்* - சிவபூசைக்கான உருவம்.
சிவலை, செவலை-செந்நிற முடையது.
சிவலோகச்சேவகன் - காந்தம்.
சிவல் - கவுதாரி, (ஒருபுள்.)
சிவவாக்கியம் - ஓர் நூல்.
சிவவிந்து - பாதரசம்.
சிவனார்கிழங்கு - கார்த்திகைக் கிழங்கு.
சிவனார்பாகல் - ஐவேலிக்கொடி.
சிவனார்வேம்பு - ஓர் செடி.
சிவனிப்பால் - கழுதைப்பால்.
சிவன் - கடவுள், உருத்திரன், வைரியம்.
சிவாகமம் - பதிநூல்.
சிவாட்சம் - உருத்திராக்கம்.
சிவாதாரம் - மரக்கொம்பு.
சிவார்ச்சனை - சிவபூசை.
சிவாலயம், சிவாலையம் - சிவன் கோயில்.
சிவானுபவம் - சிவபோகம்.
சிவிகை - தண்டிகை, பாண்டில் பூண்டவூர்தி.
சிவிங்கி - ஓர் மிருகம், ஓர் பட்சி, ஓர் மீன்.
சிவிறி - நீர்வீசுந்துருத்தி, பெருந்துருத்தி.
சிவேதை-சீந்திற்கொடி, தெற்கு.
சிவை - ஆணரி, உலைத்துருத்தி, உலைமூக்கு, பார்வதி, வேர், நெல்லிக்காய்.
சிளுசிளுத்தல், சிளுசிளுப்பு, சிளுசிளெனல் - பதனழிவு, ஒலிக்குறிப்பு.
சிள்வீடு - சிள்வண்டு.

சிறகர் - இறகு.
சிறகாற்றுதல் - சிறகு விரித்துலர்த்தல்.
சிறகு - இறகு, [பனைமடலிற் பாதி.]
சிறகுகோதுதல், சிறகுலர்த்தல், சிறகுதெரித்தல் - சிறகை யலகால் வகிர்தல், சிறகை யுலர்த்தல்,
சிறக்கணித்தல் - உபேட்சை செய்யல், சிறுமையாகவெண்ணுதல், [குறைத்தல், சுருக்குதல்.]
சிறக்கணிப்பு - கடைக்கண் பார்வை, குறைகை.
சிறங்கை - கைநிறைந்தவளவு.
சிறத்தல் - மேன்மைப்படல், மிகுதல்.
சிறந்தகற்பகம் - நாகபாஷாணம்.
சிறப்பிலாதாள், சிறப்பில்லாள் - மூதேவி.
சிறப்பு - விசேடம், [அழகு, உயர்ச்சி, மகிமை, மிகுதி, மேன்மை, ஒன்றற்கேயுரியது, வரிசை. (சிலப். 16:109.]
சிரும்பு - சிராய், சிரும்பென்னேவல்.
சிரும்புதல் - உராய்ஞ்சல், தழும்புபடுத்தல்.
சிரூர் - சிறுவர்.
சிறிசு* - சிறியது.
சிறியசிந்தையர் - கீழ்மக்கள்.
சிறியர் - கீழ்மக்கள், குறுகிய வடிவினர்.
சிறியாணங்கை* - ஓர் செடி.
சிறுக* - அற்பமாய்.
சிறுகல் - சிறுகுதல்.
சிறுகாஞ்சொறி, சிறுகாய்ஞ்சொறி - ஓர் கொடி.
சிறுகாரிடம் - சாதிக்காய்.
சிறுகாலை - சிறுவயது, விடியற்காலம்.
சிறுகால் - தென்றல், காவட்டம்புல்.
சிறுகீரை - அறைக்கீரை.
சிறுகு - சிறுகென்னேவல், [துன்பம்.]
சிறுகுடி - சிறுகுடும்பம், [சிற்றூர்.]
சிறுகுதல் - குறைதல்.
சிறுகுழி - சிறுகோனீளமகலங்கொண்டது.
சிறுக்கன் - வாலிபன்.
சிறுக்கி* - வாலிபஸ்திரீ.
சிறுசொல் - பழிச்சொல்.
சிறுதாரை - நீர்வீசுந்துருத்தி.
சிறுதுரும்பு - அற்பவஸ்து.
சிறுத்தல் - சிறிதாதல், [சினத்தல்.]
சிறுத்தை - சிறுபுலி.
சிறுத்தொண்டன் - சிவனுக்குப் பிள்ளைக் கறியமுதிட்ட ஒரு பக்தன்.
சிறுநாகம் - ஓர் மரம்.
சிறுநீர் - மூத்திரம்.
சிறுபசி - இளம்பசி.
சிறுபஞ்சமூலம் - ஓர் நூல், கண்டங்கத்தரி - சிறுமல்லி - சிறுவழுதுணை - நெருஞ்சி - பெருமல்லி.
சிறுபதம் - சிறுவழி.
சிறுபயறு - ஓர் பயறு.

சிறுபிராயம்* - இளம்பிராயம்.
சிறுபிள்ளை* - இளம்பிள்ளை.
சிறுபுறம் - பிடரி, முதுகு (சீவக. சிந். 625.)
சிறுப்பனை-எளிமை, [குறைவு.]
சிறுமணி - ஓர் நெல், [சதங்கை.]
சிறுமல்லி - சிறு பஞ்சமூலத்தும் தசமூலத்துமொன்று.
சிறுமாரோடம் - செங்கருங்காலி.
சிறுமி - புத்திரி, பெண்.
சிறுமியம் - சேறு.
சிறுமூலகம்-ஓர் கிழங்கு,திப்பிலி.
சிறுமை - தரித்திரம், துன்பம், [அற்பம், நோய், குறைவு, இளமை.]
சிறுமைப்படுதல்* - தரித்திரப்படுதல்.
சிறுமையர் - கீழ்மக்கள்.
சிறுவம், சிறுவயது* - இளம்பிராயம்.
சிறுவரை-அற்பம், காலவிரைவு, சிறுபொழுது.
சிறுவர் - மக்கள்.
சிறுவல் - இளம்பிராயமானது, குழந்தை.
சிறுவன் - இளையோன், [மகன்.]
சிறுவி - பெண், மகள்.
சிறுவிதி - தக்கன்.
சிறை - காவல், சிறைச்சாலை, [இடம், இறகு, பக்கம், மதில், நீர்க்கரை.
சிறைக்கணித்தல் - புறக்கணித்தல், [கடைக்கண்ணுற் பார்த்தல்.]
சிறைக்களம், சிறைக்கூடம் - சிறைச்சாலை.
சிறைச்சாலை* - மறியல்வீடு.
சிறைப்படுதல் - அடிமைப்படுதல், [தடைப்படுதல்.]
சிறைமீட்குதல் - இட்டமாக்குதல்.
சிறையெடுத்தல் - பெண்ணைத் தன்வசத்தே சேர்த்தல்.
சிறைவைத்தல்* - காவலில்வைத்தல்.
சிற்குணம் - பரிசுத்த குணம்.
சிற்குணன் - கடவுள்.
சிற்சத்தி-பஞ்சசத்தியி லொன்று. அஃது உயிர்க்கொளியாய் நிற்பது.
சிற்சபை - ஞானசபை.
சிற்பம் - சிற்பசாஸ்திரம் (கோயில் முதலியன கட்டுவதைத் தெரிவிக்கும் நூல்), நுண்மை.
சிற்பரன் - கடவுள்.
சிற்றண்டம் - கோழிமுட்டை, உடம்பு.
சிற்றப்பன்-தந்தைக்கிளையோன்.
சிற்றம்பலம் - சிதம்பரம்.
சிற்றரத்தை - ஓர் செடி, ஓர் மருந்து.
சிற்றறிவு - புல்லறிவு.
சிற்றன்னை, சிற்றாத்தாள் - சிறிய தாய்.
சிற்றாமுட்டி - ஓர் செடி.
சிற்றாலவட்டம் - விசிறி.
சிற்றாள் - ஏவலாள்.
சிற்றி - சிறிய தாய்.
சிற்றிலக்கம் - கீழ்வாயிலக்கம்.
சிற்றில் - குடிசை, [சிலை.]
சிற்றினஞ்சேர்தல் - துன்மார்க்கருடன் கூடுதல்.

சிற்றின்பம் - இலௌகிகவின்பம்.
சிற்றுணவு, சிற்றுண்டி - பலகார வகை.
சிற்றுயிர் - அற்ப சீவபிராணி.
சிற்றுளி - சிறிய உளி.
சிற்றூர் - குறிஞ்சிநிலத்தூர்.
சிற்றூறல் - சின்ன நீரூற்று.
சிற்றெறும்பு - ஒரெறும்பு.
சினகரம் - தேவர்கோயில்.
சினத்தல் - கோபித்தல்.
சினந்தவிர்ந்தோன் - அருகன்.
சினப்பு, சினம் - கோபம்.
சினவரன் - அருகன், புத்தன்.
சினவுதல் - கோபித்தல், [சினக் குறிப்பு, பொருதல்.]
சினன் - அருகன், புத்தன்.
சினுடி, சினுடிகா-மூக்கிரட்டை.
சினிவாலி - அமாவாசிக்கு முதனாளிரா.
சினேகம் - நட்பு, [பட்சம், எண்ணெய்.]
சினேகிதம் - நட்பு.
சினேகிதி - அன்புள்ளவள்.
சினேந்திரன் - அருகன்.
சினை - கருப்பம், முட்டை, [உறுப்பு, சினையென்னேவல், பூவரும்பு, மரக்கொம்பு, மூங்கில்.]
சினைகொள்ளல், சினைத்தல், சினைப்படுதல் - கருக்கொள்ளல்.
சினைப்பு - கொழுப்பு, சினைத்தல், வியர்க்குரு.
சின் - அசைச்சொல் (உ-ம்.) கண்ணும்படுமோ வென்றிசின் யானே, ஞானம்.
சின்மயம் - ஞானமயம்.
சின்மாத்திரம் - ஆன்மாவின் சுயதன்மை.
சின்முத்திரை - ஞானமுத்திரை.
சின்மை - சிறுமை, (மணிமே. 208.)
சின்ன* - சிறிய.
சின்னக்காசு* - ஓர்காசிலெட்டிலொன்று.
சின்னஞ்சிறியது-மிகச் சிறியது.
சின்னத்தனம்* - எளியதன்மை.
சின்னபின்னம் - கண்டதுண்டம்.
சின்னப்படுதல்* - பங்கப்படுதல்.
சின்னப்பூ - ஓர் பிரபந்தம்.
சின்னமுத்து, சின்னம்மை* -ஒரு அம்மை நோய்.
சின்னம் - அடையாளம், காளம், சிறுமை, தட்டு, பராகம், பெண்குறி, முறம், துண்டு.
சின்னுபின்னம்* -பொடிப்பொடியானது.
சின்னாயி - சிறிய தாய்.
சின்னுருகம் - சீந்தில்.
சின்னி - இலவங்கம், ஓர் செடி.
சின்னீர் - அற்பநீர், சிறுநீர், நிலையாமை.

## சீ

சீ - இகழ்ச்சிக்குறிப்பு, சீயென்னேவல், [இலட்சுமி, காந்தி, சம்பத்து, சரஸ்வதி, பார்வதி, நஞ்சு, விந்து.]
சீகண்டன் - சிவன்.
சீகம் - தமரத்தஞ்செடி.
சீகரம் - கடற்றிரை, அழகுசெய்வது, கரகம், கவரி, திவலை,

புனற்றிரை, மழை, மழைத் துளி, மழைத்தூவல்.
சீகரி, சீகர் - நீர்த்திவலை.
சீகாரம் - ஓர் பண்.
சீகாழி* - ஓர் சிவஸ்தலம்.
சீக்காய் - அரைப்புக்காய்,[பழாத பனங்காய், ஈசற்கொட்டுகை.]
சீக்கிரம் - விரைவு, [அம்பு, காரம், கோபம்.]
சீக்கிரான், சீக்கிரி - உசிலமரம்.
சீக்கு - செத்தை.
சீக்குரு - முருங்கை.
சீக்கூட்டுதல்-சிதல்கொள்ளுதல்.
சீக்கை - ஒரு நூல்.
சீசகம், சீசம் - ஈயம்.
சீசா* - ஓர் குப்பி.
சீசீ, சீச்சீ* - இகழ்ச்சிக்குறிப்பு.
சீஷப்பிள்ளை, சீஷன், சீடன் - மாணக்கன்.
சீடு* - நூற்சீடு.
சீடை-ஓர் பணிகாரம், [சடைவு.]
சீட்டு - பத்திரிகை, திருவுளச் சீட்டு, உண்டிச்சீட்டு.
சீட்டுவாங்குதல் - சாதலைக்காட்டுங் குறிப்புச்சொல், சீட்டுப் பெறுதல்.
சீட்டைக்கதிர் - முதைக்கொல்லையில் விளைகதிர், விடுகதிர்.
சீணித்தல், க்ஷீணித்தல் - பதனழிதல்.
சீண்டறம்* - ஊழல்.
சீண்டிரம் - ஈனவார்த்தை.
சீண்டுதல் - தொடுதல், சருவுதல்.
சீதகம் - ஈயம், குளிர்ந்தகாலம்.
சீதகரன் - சந்திரன்.
சீதகன் - சுக்கிரன், சோம்பன், சந்திரன்.
சீதக்கடுப்பு - வயிற்றுக்கடுப்பு.
சீதக்கட்டு - சீதப்பற்று.
சீதசம்பகம் - கண்ணாடி.
சீதபேதி* - ஓர் நோய்.
சீதமண்டலி - ஓர் பாம்பு.
சீதமரீசி - சந்திரன்.
சீதம் - குளிர்ச்சி, சீதக்கட்டு, [கொடுந்தமிழ் நாட்டிலொன்று, நீர், மேகம், சந்தனமரம், நறுவிலிமரம், பனி.]
சீதரன் - திருமால்.
சீதளகாலம் - மழைகாலம்.
சீதளங்காய் - கொடிமாதளை.
சீதளம் - குளிர்ச்சி, [ஈரம், சந்தனம், பச்சைக்கருப்பூரம், கோடகசாலை, முத்து, தாமரை.]
சீதளி - பொன்னாங்காணி.
சீதனம் - மகட்குக் கொடுக்கும் பொருள்.
சீதன் - சந்திரன்.
சீதாதேவி* - சீராமன்பத்தினி.
சீதாபதி - சீராமன்.
சீதாரி - கேதுருமரம், நகரி.
சீது - கருப்பங்கள்ளு.
சீதேவி* - இலட்சுமி.
சீதேவியார்செங்கழுநீர்-ஓர் பூடு.
சீதை - சீராமன்மனைவி, [உழுபடைச்சால்,பொன்னாங்காணி.]
சீத்தலைச்சாத்தன் - சங்கப்புலவரிலொருவன்.
சீத்தல் - சீக்குதல், [செப்பம்பண்ணல், நீக்கல்.]
சீத்தா* - ஓர் மரம்.
சீத்தை - கீழ்மக்கள், பதனழிவு.

சீந்தல் - தளிமழை, கோபித்தல். (சீவ. சிந்.)
சீந்தில்* - ஓர் படர்கொடி.
சீந்துதல் - விரும்புதல், [மூக்கு சீறுதல்.]
சீபதி - அருகன், கடவுள், திரு [மால்.
சீபலம் - வில்வமரம். (சிவத)
சீப்பாய்தல்* - சிதல்வடிதல்.
சீப்பால், சீம்பால்* - ஈன்றவணி மைப்பால்.
சீப்பு - மயிர்சீவுஞ் சீப்பு, வாழைக் குலைச் சீப்பு, [கதவின்ருள், தோளெலும்பு.]
சீப்புப்பணிகாரம்* - அப்பவருக் கத்தொன்று.
சீமங்கலி - நாவிதன்.
சீமந்தபுத்திரன் - தலைமகன்.
சீமந்தம் - கருப்பந்தரித்த ஆரு மாதம் உச்சிவகிர்ந்து முதுகு நீரிடு மொருசடங்கு.
சீமந்தனி - ஓர் கற்புடைய பெண்.
சீமாட்டி, சீமாள் - செல்வமுடை யவள், [தலைவி.]
சீமான் - தனவான், [தலைவன், அருகன்.]
சீமுக - ஓராண்டு.
சீமூதம் - நீருண்ட மேகம், பெண் யானை, மலை.
சீமூதன் - இந்திரன், உழவன், நரகாசுரன், சாரதி, துன்புறு வோன், சிவன்.
சீமூதை - இரவு, கொடிமுந்திரி கை.
சீமை - தேசம், [எல்லை, கரை, தோண்மேல், வயல்.]
சீயகங்கன் - ஓரரசன்.
சீயக்காய்* - அரைப்புக்காய்.
சீயம் - சிங்கம், சிங்கவிராசி, தென்றிசைப்பாலன்குறி, எரு க்கம்பால்.
சீயாள் - பாட்டி.
சீயான் - ஓர்வகைப்பூரான், மூன் ரும் பாட்டன்.
சீரகச்சம்பா* - ஓர் நெல்.
சீரகத்தாரோன் - குபேரன்.
சீரகம் - ஓர் சரக்கு, [பன்றி.]
சீரங்கம்* - திரிசிராப்பள்ளியிலு ள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.
சீரணம் - சமித்தல், [ஒரு சிவாக மம், பதனழிவு.]
சீரணி - சீரணியென்னேவல், [காடு, ஓமச்செடி, சிறந்த வழகு, கூத்திஞேர் பேதம்.]
சீரம் - மரவுரி, காட்டெருமைப் பால், முடி, மாலை, இலாமிச் சை, கலப்பை.
சீராட்டல்* - கொண்டாடல், சிறப்புப்பண்ணல்.
சீராளன் - சிறுத்தொண்டநாய ஞர் மகன்.
சீரிடம் - தலை, வாகை.
சீரியர் - அறிஞர், நல்லோர், புல வர், சிறந்தோர்.
சீருணம் - செம்பு(சேது), பழுது.
சீருள் - ஈயம், செம்பு, பஞ்சலோ கம்.
சீரை - மரவுரி, சீலை, மரத்துலாம்.
சீர் - அழகு, செல்வம், [தண்டா யுதம், தாளவொத்து, செய்யு ளுறுப்பு, துலாராசி, நன்மை, புகழ், சித்திரம், காற்றண் டை, ஒழுங்கு.]

சீர்காரம், சீர்க்காரம்-எதிரொலி.
சீர்கேடி - மூதேவி.
சீர்கேடு - கேடான நிலைமை.
சீர்ணபத்திரம் - வேம்பு.
சீர்ணம் - சீரகம், பழுத்தது, வயோதிகம்.
சீர்தூக்கல் - ஆராய்தல்.
சீர்த்தி - மிகு புகழ்.
சீர்பண்ணுதல்* - ஒழுங்காக்கல்.
சீர்பதி - கடவுள்.
சீர்பாதம் - திருவடி.
சீர்மரம்* - நெய்வார் கருவியி ளென்று.
சீர்மை - சிறப்பு, செம்மை, நன்னடை, எண்வகை யூறினொன்று அஃது ஒப்பம்.
சீர்வண்டு - நெய்வார் கருவியி ளென்று.
சீலசம்பன்னன் - நற்குணன்.
சீலம் - நல்லொழுக்கம், [சரித்திரம், குணம், சீந்தில், தருமம்.]
சீலவான், சீலன்-நற்குணமுடையவன்.
சீலா - ஓர் மீன், இறைகூடை, [ஓர் பறவை.]
சீலை* - வஸ்திரம்.
சீலைப்பாம்பு - விஷமுடைய ஒரு பாம்பு.
சீலைப்பேன்* - சீலையிற் பற்றும் பேன்.
சீலைமண் - மருந்து எரிக்கும் பாத்திரங்களைச்செய்யும் மண்சீலை.
சீவகர் - புத்த சமயத்தார்.
சீவகளை - உயிர்ப்பு.
சீவகன்-ஓரரசன்,சீவன்முத்தன், தருமம் வாங்கியுண்போன்.
சீவகாருண்ணியம் - பிறவுயிர்களின்மீது வைக்கும் இரக்கம்.
சீவசாட்சி - அறிவுக்காதாரமானது.
சீவசெந்து - உயிருள்ளவைகள்.
சீவதயாபரன் - உயிர்வகைமீது அன்புடைய ஆண்டவன்.
சீவதிசை - பிராணதிசை.
சீவநாடி* - பிராணவாயு உலாவும் நரம்பு.
சீவந்தி - சீந்திற்கொடி, பாலைமரம், கடுமரம்.
சீவபிராணி* - உயிர்ப்பிராணி.
சீவபேதம் - உயிர்ப்பேதம்.
சீவம் - சீவன்.
சீவரட்சை - சீவபரிபாலனம்.
சீவரம் - துவரூட்டின சீலை.
சீவரர் - புத்தர்.
சீவல் - சீவப்பட்டது, சீவுதல், மிருதுவானது.
சீவனம் - உத்தியோகம், [உயிர் வாழ்தல், நீர், மூளை, வெண்ணெய்.]
சீவனார்த்தம் - உயிர்வாழ்வதற்குரியது.
சீவனி - சீவநாடி, பாலைமரம், சீந்திற்கொடி, மந்தாரச்சிலை.
சீவனியம், சீவனீயம் - நீர்.
சீவனோபாயம்-சீவனத்துக்கடுத்த வுபாயம்.
சீவன்-உயிர், [வியாழன், சீந்தில், காந்தம், முயற்சி,வைரீயம்.]
சீவன்முத்தன் - சீவிக்கையிற்றானே உலகப்பற்றுநீங்கினவன்.
சீவாத்துமா - சீவனோடிருக்குமான்மா.

சீவாந்தம் - சீவியமுடிவு.
சீவாளம் - வீணையின்சீர்.
சீவி - உயிருடைய ஆள்.
சீவிதம் - உயிர்வாழ்க்கை.
சீவிமுடித்தல்* - கோதிக்கட்டல்.
சீவியகாலம்* - ஆயுணாள்.
சீவியம் - சீவனம், வாழ்நாள்.
சீவினி - சஞ்சீவி, யாழிறேரோசை.
சீவுதல் - செதுக்குதல், மயிர் கோதுதல்.
சீவுளி - இழைப்புளி.
சீவோற்பத்தி - உயிர்த்தோற்றம்.
சீழ் - சிதல், [சீழ்க்கைவிடுதல்].
சீழ்க்கை-வாயாலூதுமொருவகை ஒலி. (சீவ.சிங்)
சீறடி - சிற்றடி.
சீறல் - கோபித்தல், அதட்டல், இரைதல், சினக்குறிப்பு.
சீறுதல் - சீறல்.
சீறுமாறு* - குழப்பம்.
சீறூர் - குறிஞ்சிநிலத்தூர்.
சீற்காரம் - சீர்காரம்.
சீற்றம் - கோபம், சினம்.
சீனக்காரம் - படிகாரம்.
சீனப்பட்டை - பறங்கிப்பட்டை.
சீனம் - ஓர் தேயம், ஒரு பாஷை, மலைப்பாம்பு.
சீனவெடி - ஓர் வெடி.
சீனன் - சீனதேயத்தான், மூர்க்கன்.
சீனு - ஒரு தேசம்.
சீனி - ஓர்வகைச் சருக்கரை, குதிரைக்கல்லணை, [மரநங்கூரம், பித்தளைமணல்.]
சீனை - வன்னிமரம்.

சு

சு - ஓரெழுத்து, நன்மை, சுகம் முதலியவற்றைக் காட்டுமோர் உபசருக்கம், அதட்டுமோசை.
சுகசரீரி - சவுக்கியதேகி.
சுகசன்னி* - ஸ்திரீதோஷம், ஓர் சன்னி.
சுகசீவி* - சுகவாழ்வினன்.
சுகட்டான் - முடக்கறுத்தான், நாணற்புல்.
சுகண்டி - ஓரிரத்தினம்.
சுகதாதை - வியாசன்.
சுகதாரு - கடம்புமரம்.
சுகதுக்கம்* - இன்பதுன்பம்.
சுகந்தபரிமளம் - மிகுவாசனை.
சுகந்தம் - நறுமணம், [ஈரவெண்காயம், வாழைமரம், அரத்தை, சந்தனம், சீரகம்.]
சுகந்திக்கல் - ஓரிரத்தினம்.
சுகபோகம் - சுகானுபவம்.
சுகப்பிரியை - சம்புநாவல்.
சுகம் - இன்பம், வருத்தமின்மை, [கிளி, தருமம், நன்மை, மூலைக்கண், புளிகரைத்தநீர்.]
சுகவாழ்வு - நல்வாழ்வு.
சுகன் - சுவர்க்கமுற்றோன், வியாசன்மகன், ஓர் கந்தருவன்.
சுகாசம் - வெள்ளரி.
சுகாதீதம் - மேற்பட்ட சுகம்.
சுகாந்தம் - ஈரவெண்காயம்.
சுகானுபவம் - நல்லனுபவம்.
சுகிர் - உட்டுளை, சுகிரென்னேவல், உட்டுளைப்பொருள்.
சுகிர்தகுணம் - நற்குணம்.

சுகிர்தம் - புண்ணியபலன், [அறம், இன்பம், நன்மை, நெய்.]
சுகிர்தல் - நார் முதலிய வகிர்தல்.
சுகிர்தவசனம் - மெய்வாக்கு.
சுகிர்லாபம் - நட்புப்பேறு.
சுகுமாரம் - மென்மை, இனியது.
சுகுர்தம் - சுகிர்தம்.
சுக்கங்காய்* - மிதக்கங்காய்.
சுக்கங்கீரை* - ஓர் கீரை.
சுக்கம்வைத்தல் - களவாயபகரித்தல்.
சுக்கல்* - துண்டு, அற்பம்.
சுக்கானி - கப்பலோட்டி.
சுக்கான் - கப்பலை நடத்துங் கருவி, [ஓர் கல்.]
சுக்கான்கீரை* - புளிக்கீரை.
சுக்கிரபகவான் - வெள்ளி (ஓர் கோள்.)
சுக்கிரம் - ஆனிமாதம், கள், வெண்ணிறம், நீர், புண்ணியம்.
சுக்கிரவாரம் - வெள்ளிக்கிழமை.
சுக்கிரன் - அசுரர்குரு, ஒரு கண்ணனன், தீ, வெள்ளி.
சுக்கிராக்கினே-கொடிய இம்சை.
சுக்கிரிகை - புளியாரை.
சுக்கிரீவன் - கிட்கிந்தை மன்னனை ஒரு குரங்குத் தலைவன்.
சுக்கில - ஓராண்டு.
சுக்கிலபட்சம், சுக்கிலபக்கம் - பூருவபக்கம்.
சுக்கிலம் - இந்திரியம், [வெண்மை, சந்திரன் முதற்பக்கம், புளி.]
சுக்கிலே - புளியமரம்.
சுக்கு - வேர்க்கொம்பு அஃது திரிகடுகத்தொன்று, [சுண்டி.]
சுக்குச்செட்டுக்காரன் - உலுத்தன்.
சுக்குவற்றல்* - சுக்குபோலும் சத்தில்லாது வாடிப்போதல்.
சுக்கை - மாலை, நட்சத்திரம், கப்பற்கேழ்வு.
சுங்கம் - இறை, [வரி, ஆடுதின் ஞெப்பாளே, களவு.]
சுங்கன் - சுக்கிரன், ஓர் மீன்.
சுங்கான்-புகைகுடிக்கிறகுழல்.
சுங்கி - ஆலமரம், வன்னிமரம்.
சுங்கு* - மடிப்பு.
சுசனம் - காற்று.
சுசி - ஆடிமாதம், சுத்தம், நெருப்பு, மாசின்மை, வெண்குடை, வெண்மை, சுக்கிரன், கொடுவேலி, கோடைகாலம்.
சுசிகரம் - சுத்தம், [மேன்மை.]
சுசிதம் - பால்.
சுசிருஷை, சுசிரூஷை - பணிவிடை.
சுசீலம் - நற்குணம், [காற்று.]
சுசீலன் - நற்குணன்.
சுசுகம், சுசூகம் - முலைக்கண்.
சுசுந்தரி - மூஞ்சூறு, நாவி.
சுசுமை - சுக்கிரன்மனைவி.
சுச்சு - சுக்கு, சுண்டி, பறவைமூக்கு.
சுஞ்ஞானம் - பரமஞானம்.
சுடரோன் - சூரியன்.
சுடர் - தீச்சிகை, [சூரியன், சந்திரன், ஒளி, விளக்கு.]
சுடர்க்கொடி-பெண், கருப்பூரம்.
சுடர்தல் - ஒளிசெய்தல்.
சுடர்நிலை - விளக்குத்தண்டு, தகழி.

சுடர்மௌலியர் - வானோர்.
சுடர்விழியோன் - வீரபத்திரன்.
சுடலை - சுடுகாடு, [சவுக்காரம்.]
சுடலையோன் - துரிசு.
சுடாரி - கவசம்.
சுடிகை - உச்சி, கள், சடாமுடி, நெற்றிச்சுட்டி, மயிர் முடி, கிரீடம்.
சுடுகலம் - குயக்கலம், செங்கல்.
சுடுகாடு - ஈமம்.
சுடுகோல் - சூட்டுக்கோல்.
சுடுசுடெனல் - வெடுவெடுத்தல்.
சுடுசுண்ணம் - சுட்ட சாந்து.
சுடுநிலம் - சுடுகாடு.
சுடுநீர் - வெந்நீர்.
சுடுமண்-ஓடு, செங்கல்லு.(சிலப்)
சுடுவல் - இரத்தம். (திவா)
சுடுவனம் - சுடுகாடு, இரத்தம்.
சுடுவான் - படகிற் சமையல் பண்ணுமிடம்.
சுடுவு - சும்மாடு. (சூடா)
சுட்கம் - உலர்ந்தது.
சுட்குதல் - வறளல்.
சுட்டல் - குறித்தல், காட்டுதல், சுடுதல்.
சுட்டி, சுட்டிகை - நுதலணி, நெற்றிச்சுட்டி, உச்சிவெள்ளை
சுட்டு - சுட்டென்னேவல், எண்ணம், குறிப்பு, நல்லது.
சுட்டுக்கோல் - உலையாணிக் கோல், [தீயோன்.]
சுட்டுவிரல்* - ஆட்காட்டிவிரல்.
சுணக்கம் - சோர்வு, தாமதம்.
சுணக்கன் - நாய்போலலைபவன், நீசன். [தல்.
சுணங்கல் - சோர்தல், தாமதித்
சுணங்கன் - நாய்.
சுணங்கு - சுணங்கென்னேவல், தேமல்.
சுணை - கூர்மை, [தினவு, சுரணை (உணர்ச்சி).]
சுண்டக்காய்தல்* - இறுகக்காய் தல்.
சுண்டங்காய் - சுண்டிக்காய்.
சுண்டம்-கள், யானைத்துதிக்கை.
சுண்டல் - சுண்டின கடலைப் பயறு, [சுண்டற்கறி, வற்று தல், இறுகல், தெறித்தல்.]
சுண்டற்கறி* - தீயற்கறி.
சுண்டன் - அறிவிலி, சதயநாள், மூஞ்சூறு.
சுண்டாங்கி - துவையல், [அற்பம், குறைவு.]
சுண்டாலம், சுண்டாலி - யானை, யானைத்துதிக்கை.
சுண்டி - கள், சுக்கு, தொட்டால் வாடி, நீர்ச்சுண்டி.
சுண்டிகை - உண்ணாக்கு.
சுண்டியுண்டை - சதுரக்கள்ளி, சீரகம்.
சுண்டு - அடிப்பற்றியது, [அற்பம், ஓர் சிறு அளவுபடி.]
சுண்டுகட்டை - நெய்வார் கருவியிலொன்று.
சுண்டுவிரல்* - சின்ன விரல்.
சுண்டுவில் - கல் முதலிய செலுத்தும் வில்.
சுண்டெலி* - ஓரெலி.
சுண்டை - கள், சுண்டைச்செடி, யானையின் கை, கிணறு.
சுண்ணப்பொடி - வாசனைப் பொடி.

சுண்ணம் - சுட்ட சாந்து, சுண்ணப்பொடி, சதயம், புழுதி.
சுண்ணாம்பு - சிப்பி முதலியவற்றின் சுண்ணம்,[குழைசாந்து.]
சுண்ணித்தல்-நீற்றுதல், பூசுதல்.
சுதந்தி - வடமேற்றிசையானைக்குப் பெண் யானை.
சுதந்திரம், சுதந்தரம்* - உரிமை, இட்டமான வாளுகை.
சுதந்திரன் - உரிமைக்காரன்.
சுதந்திரியம் - இட்டம்.
சுதம் - கேடு, முறைமை, நெருஞ்சில், மலத்துவாரம்.
சுதரிசனம் - சக்கிராயுதம், கண்ணாடி, சம்புநாவல், வலியான்.
சுதருமம் - நற்கிரியை.
சுதர்மன் - ஓர் சாதி.
சுதலம் - கீழேழுலகிலொன்று.
சுதனம் - ஆயுதப்பொது.
சுதன் - மகன், அறிவாளி.
சுதன்மம், சுதன்மை - தேவேந்திரன் சபாமண்டபம்.
சுதாகரன் - சந்திரன், கருடன்.
சுதாதாரன், சுதாநிதி - சந்திரன்.
சுதாரித்தல்* - தைரியங்கொள்ளல், மேற்கொள்ளல்.
சுதாவாக, சுதாவிலே* - தானாய்.
சுதி - யாழினரம்பு, [சுருதி, பெண், குதத்துவாரம்.]
சுதினம் - நல்லநாள்.
சுதுப்புநாங்காரை* - ஓர் மீன்.
சுதும்பு - ஓர் மீன்.
சுதேசம் - சொந்த தேசம்.
சுதை - அமிழ்து, உதைகாற்பசு, சுண்ணச்சாந்து, சுண்ணாம்பு, சுவை, பால், மகள், மருந்து, வெண்மை, நீர், பூந்தேன்.
சுத்தசலம்* - தெளிநீர்.
சுத்தசூனியம் - முழுப்பாழ்.
சுத்தசைதன்னியம் - சுத்தசுரூபஞானம்.
சுத்தப்பொய் - முழுதும்பொய்.
சுத்தம் - கலப்பற்றது, குற்றமற்றது, [உண்மை, சுயம்.]
சுத்தன் - மெய்யன், வருணச்சிரமமில்லாத ஞானி, கடவுள், அருகன், அயன், அரன், அரி.
சுத்தி - சுத்தியல், [சங்கு, கிளிஞ்சில், நெய்க்குத்தி முதலிய பாத்திரம், அரைப்பலம், தலையோடு.]
சுத்திகரித்தல் - சுத்தமாக்குதல்.
சுத்திகை - அகல், கிளிஞ்சில்.
சுத்தியல் - சிறு சம்மட்டி.
சுநகன், சுனகன் - நாய்.
சுநச்சேபன் - ருசீகமுனிபுதல்வன்.
சுநந்தை - துஷ்யந்தன் புத்திரனை பரதனின் மனையாள்.
சுநாசீரன் - இந்திரன்.
சுநி - பெண்ணாய்.
சுநீதி - உத்தானபாதன் மனைவி.
சுந் - சனி.
சுந்தரபாண்டியன் - ஓர் பாண்டியன், ஓர் நூல்.
சுந்தரமூர்த்தி - அறுபத்துமூன்று நாயன்மாரிலொருவர்.
சுந்தரம் - அழகு,[நிறம்,நன்மை.]
சுந்தரவல்லி - தெய்வயானை.
சுந்தரன் - அழகன், [காமன், சுந்தரமூர்த்தி.]

சுந்தரி - அழகுள்ளவள், [இந்திராணி, பெண், துர்க்கை, மூஞ்சூறு, பார்வதி, சிறுசெருப்படை.]
சுந்தன் - ஓரரக்கன்.
சுபகருமம், சுபகாரியம், சுபகிரியை - மங்கலகாரியம்.
சுபகிருது - ஓராண்டு.
சுபக்கம், சுபட்சம் - பொருளிருக்கும் பக்கம், சித்தியாரிலோரத்தியாயம்.
சுபசகுனம் - நன்னிமித்தம்.
சுபசெய்தி - நற்செய்தி.
சுபதினம் - நல்லநாள்.
சுபத்திரை - அருச்சுனன்மனைவி.
சுபமங்களம் - வாழ்த்து.
சுபமஸ்து - மங்கலச்சொல்.
சுபமுகூர்த்தம்-நல்வேளை.
சுபம் - மங்களம், நன்மை, அழகு, முத்தி. (பிங்), பேறு.
சுபன்னன் - கருடன், சேவல்.
சுபாங்கி - இரதி, குபேரன் மனைவி, அழகுடையவள்.
சுபாசுபம் - நன்மைதீமை.
சுபாலம் - உபநிடதத்தொன்று.
சுபாலிகை - அடுப்பு.
சுபாவம் - இயல்பு, [உபநிடதத்தொன்று.]
சுபானு - ஒரு வருஷம்.
சுபிட்சம், சுபிக்ஷம் - செழிப்பு.
சுபுத்தி - நற்புத்தி.
சுபேதார்* - ஒரு ராணுவ உத்தியோகஸ்தன்.
சுபை-நியாயஸ்தலம், அரசாட்சி, தேவகூட்டம், மூங்கில்.
சுப்பல், சுப்பி - விறகுசுள்ளி.
சுப்பியம் - விளாம்பட்டை.
சுப்பிரசுதை - காட்டெருமைப்பால்.
சுப்பிரதந்தி - வடமேற்றிசையானையின் பெண்யானை.
சுப்பிரதீபம் - மிக்கவொளி, வடகீழ்த்திசையானை.
சுப்பிரமணி - வச்சிரம்.
சுப்பிரமணியன்* - குமரன்.
சுப்பிரம் - மிக்கவொளி, வெண்மை, [நித்தியயோகத்தொன்று, வெள்ளி, சந்தனம்.]
சுப்பிரயோகம் - மன்மதன் பஞ்சபாணத்துளொன்று அது சொல்லும் நினைவுமாயிருத்தல்.
சுப்பிராங்கி - இந்திரன்குதிரை.
சுப்பெனல் - நீர்வற்றல்.
சுமங்கலி, சுமங்கலை - கற்பழியாது கணவன்கீழ் வாழ்பவள். [உமை.]
சுமங்கை - ஆடுதின்ஞப்பாளை, வறட்சுண்டி.
சுமடர் - அறிவிலார், கீழ்மக்கள்.
சுமடி - அறிவிலாள்.
சுமடு - அறிவின்மை, சுமை, சும்மாடு.
சுமதி - நற்குணமுடையாள், அறிஞன், நற்புத்தி.
சுமத்தல் - தாங்குதல், பாரமேற்றல்.
சுமத்திரை - பாண்டுவின் மனைவியரிலொருத்தி.
சுமம் - பூ.
சுமரணை - சுவரணை.
சுமலி - கள்.
சுமனசம் - பூமலர்.

சுமாலி - ஓரரக்கன், [கள்.]
சுமித்திரை - தசரதன்மனைவி.
சுமை* - பாரம்.
சுமைதாங்கி* - சுமையை யிறக்கி வைக்குமிடம்.
சுமையடை - சும்மாடு.
சும்பகம் - ஊசிக்காந்தம், தீத்தட்டிக்கல், முத்தஞ்செய்தல்.
சும்பகன், சும்பன் - காமாதுரன்.
சும்பனம் - சூப்புதல், முத்தம்.
சும்பித்தல் - முத்தமிடல்.
சும்புதல் - வாடிச்சுருங்குதல்.
சும்புளித்தல் - சுருங்கல்,கூசுதல்.
சும்புள் - கடம்புமரம்.
சும்மா - இலவசம், விருதா.
சும்மாடு* - பாரத்தைத் தாங்கப் பயனுறும்படி தலையில்வைக்கும் சுமையடை.
சும்மை - ஒலி, சுமை, ஊர், நகர், நாடு, நெற்போர், தொகுதி.
சுயசாதி* - கலப்பற்ற சாதி.
சுயஞ்சோதி - இயற்கையொளி, கடவுள்.
சுயபாஷை* - சொந்தப்பாஷை.
சுயபுத்தி* - இயற்கையறிவு.
சுயம் - கலப்பற்றது, [சொந்தம், இயல்பு.]
சுயம்பாகி - சமையற்காரன், [சவுக்காரம்.]
சுயம்பிரகாசம் - கலப்பற்ற வொளி.
சுயம்பு - தானுகவாதல், கடவுள்.
சுயம்புலிங்கம் - தானேயான லிங்கம்.
சுயம்வரம் - சுவயம்வரம் (தானுக வரித்து மணமாலையிடல்.)
சுயாதிபத்தியம் - சுயவதிகாரம்.
சுயாதீனம் - தன்னிட்டம்.
சுயேச்சை - தன்னிச்சை.
சுயோகி - கள்.
சுயோதனன் - துரியோதனன்.
சுரகுரு - வியாழன்.
சுரங்கம் - தோன்றும வுள்ளறுக்குந் துவாரம், [கீழறை, சாதிலிங்கம், தோடம்பழம், தேன்.]
சுரசம் - மருந்துக்குடிநீருக்காகச் சில வஸ்துக்களினின்று முறித்த சாறு, [சுகிர்தசாரம், சாறு, சிறுகிழங்கு, துளசி, பாதரசம், நொச்சில்.]
சுரசை - சிற்றரத்தை.
சுரஞ்சனம் - கமுகு.
சுரடி - ஓர் பண்.
சுரணை, சுவரணை - உணர்ச்சி.
சுரண்டல் - கவருதல், சீண்டுதல், தூண்டுதல், விபசாரஞ்செய்யல்.
சுரதநூல் - காமநூல்.
சுரதமங்கை - வேசி.
சுரதம் - புணர்ச்சி, பாதரசம், மருந்திழிசாரம்.
சுரதலீலை - புணர்ச்சிவிளையாட்டு.
சுரத்தல் - ஊறுதல், [உண்டாதல், பயத்தல்.]
சுரநதி - ஆகாயகங்கை, கங்கை.
சுரபி - பசு, வாசனை, பிரமிப்பூடு, கந்தகத்தூள், சாதிக்காய், மது, மல்லிகை, அழகு, பொன், மகிழமரம்.
சுரபிபத்திரை - சம்புநாவல்.
சுரபுன்னுகம், சுரபுன்னை - ஒரு மரம்.

சுரப்பு* - சுரத்தல்.
சுரமண்டலம் - ஓர் வாத்தியம்.
சுரமதி - சிலந்தி.
சுரமலி, சுரமலிகம் - செந்தீக்கரப்பன்.
சுரம் - காய்ச்சல், [அருநெறி, இசை, கள், ஒருப்பு, பாலைநிலம், உட்டுளை, கொம்பினுட்குருத்து, நகத்தடி, காடு.]
சுரம்போக்கு - பாலைநிலத்தே செல்லல்.
சுரரிடம், சுரருலகு, சுரலோகம் - தேவலோகம்.
சுரர் - வானோர்.
சுரர்பகைவர் - அசுரர்.
சுரழ் - இலவம்பிசின்.
சுரளிகை - பாலைமரம்.
சுரன் - சூரியன், அறிஞன்.
சுரா - கள்.
சுராட்டு - இந்திரன், நல்லஅரசன். (சப்த)
சுராட்புருடன் - சிவன், வாஸ்துபுருடன், திருமால்.
சுராபானி - கட்குடியன்.
சுராலயம் - கள்விற்குமிடம், தேவலோகம், மேரு.
சுராலை - சாம்பிராணி.
சுரி - சுரியென்னேவல், ஆணரி, சங்குச்சுரி, சுழற்சி, சேறு.
சுரிகுழல் - அளகம், கவசம், பெண்.
சுரிகை - உடைவாள், கவசம்.
சுரிதகம் - கலிப்பா வுறுப்பாறனுளொன்று.
சுரித்தல் - சுழித்தல், சுருங்கல்.
சுரிப்புறம் - சங்கு, துவாரமுள்ள பக்கம், நத்தை.
சுரிமண் - சேறு.
சுரிமுகம் - சங்கு, நத்தை.
சுரியல் - இளைஞர்மயிர், சுழலல், நீர்ச்சுழி, பெண்மயிர்.
சுரியூசி - தமரூசி.
சுரீரெனல் - ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு.
சுருக்கம் - அடக்கம், சுருங்கல், வஸ்திரத்தின்சுருக்கு, குறைவு.
சுருக்கல் - அடக்கல், கட்டல், சுருங்கச்செய்தல்.
சுருக்கி - தொட்டாற்சுருங்கி, சிறுகீரை, ஆமை.
சுருக்கு - சுருங்கச்செய்யென்னேவல், கயிற்றுச்சுருக்கு, மடிப்பு, [கண்ணி, நெய்த்துடுப்பு.]
சுருக்குப்பை* - சுருக்கிவிடும் பை.
சுருக்குப்போடுதல்* - உருவுகயிறிடுதல்.
சுருங்கப்பிடித்தல்* - குறைத்தல்.
சுருங்கல் - சுருங்குதல், [குறைதல், நுழைவாயில், மாலை.]
சுருங்கு - சுருங்கென்னேவல், [சலதாரை.]
சுருங்கை - கோட்டையிற் கள்ளவழி, நுழைவாயில், பலகணி.
சுருசுருப்பு - அதிதீவிரம்.
சுருட்டி - சுருளச்செய்து என்னும் வினையெச்சம், [ஆலவட்டம், ஓரிராகம், மயிற்சிகைப்பூடு.]
சுருட்டு - சுருட்டென்னேவல், புகையிலைச்சுருட்டு, உபாயம்.

சுருட்டை - மயிர்ச்சுருள், [ஓர் பாம்பு.]
சுருணி - யானைத்தோட்டி.
சுருணை-சுருண்டது, நூல் முதலி யவற்றின் பந்து.
சுருதகீர்த்தி - காண்டீபனுக்குப் பாஞ்சாலியிடம் பிறந்த புத்தி ரன்.
சுருதி - வேதம்,ஒலி,இசை,காது, சுதி, கேள்வியறிவு, மந்திரம்.
சுருதிகூட்டுதல் - சுதியெடுத்தல்.
சுரும்பர், சுரும்பு - ஆண்வண்டு, வண்டு.
சுரும்பாயன் - மன்மதன்.
சுருவம், சுருவை - நெய்த்துடுப்பு.
சுருளி - தொழுகண்ணி (ஒரு பூடு.)
சுருளை - நூற்சுருள் முதலியன.
சுருள் - சுருளென்னேவல், [ஐம் பாலினொன்று அஃது பின் னே செருகல், பெண்மயிர், தாமரையுட்சுருள்.]
சுரூபம் - நல்லுருவம், உருவம்.
சுரூபவதி - அழகி.
சுரேசன் - இந்திரன், குமரன்.
சுரேசுவரி - உமை, முசுமுசுக் கைச்செடி.
சுரேந்திரன் - இந்திரன்.
சுரேந்திரன்மைந்தன் - அருச் சுனன்.
சுரை - சுரைக்கொடி, [அம்புத் தலை, உட்டுளை, கள், பசு, வில ங்கின்முலை, பூண், பொய். (சீவ. சிந்)]
சுரைக்கந்தகம் - ஒரு கந்தகம்.
சுரோணி - நிதம்பம்.
சுரோணிதம் - உதிரம், மகளிர் சூதகம், சிவப்பு. (சங். அக)
சுரோத்தமன் - சூரியன்.
சுரோத்திரம் - காது, கேள்வி.
சுரோத்திரியம் - கற்றோர்க்குத் தந்த மானிய நிலம்.
சுலபம்* - இலேசு, அற்பம்.
சுலவல், சுலவுதல் - சுழலல்.
சுலாவல், சுலாவுதல் - சுற்றிவரு தல், சுற்றுதல்.
சுலு* - இலேசு.
சுலோகம் - ஆரியச்செய்யுள், பழ மொழி, புகழ், வசனம்.
சுலோகி - கள்.
சுலோசனம், சுலோசனை - மூக் குக்கண்ணாடி.
சுலோபம் - அற்பம், எறும்பு, மூதுரை.
சுல்லி - அடுப்பு, மடைப்பள்ளி.
சுல்லு - வெள்ளி. (சூடா)
சுல்வம் - தாமிரம். (சேது)
சுவச்சிரகம் - ஸ்ரீராமன்வில்.
சுவடி* - எட்டுப் புத்தகம்.
சுவடு-அடித்தடம், அடையாளம், தழும்பு,வச்சிராங்கி, உபாயம், அங்கவடி.
சுவணகாரர் - தட்டார்.
சுவணம்-கருடன், கழுகு,பொன்.
சுவதந்திரம், சுவதந்திரியம், சுத ந்திரியம் - தன்னிஷ்டப்பிரகா ரம் செய்கிற காரியம்.
சுவத்தம் - நோயின்மை.
சுவத்திகம்- மங்கல வடையாளம், மேழி. (திருவி)
சுவத்திகாமண்டலம் - தீட்சா மேடை.

சுவப்பிரம் - நரகம், வளை.
சுவயம் - சுயம்.
சுவரகழ்கருவி - கன்னக்கோல்.
சுவரணை - உணர்ச்சி.
சுவரொட்டி - ஆட்டின் மண்ணீரல், [அணைசுவர், சுவர்முள்ளங்கிப்பூடு.]
சுவர் - பித்திகை (மதில்), [தேவலோகம், ஆகாயம், காயத்திரியிலோருறுப்பு, அலங்காரம்.]
சுவர்க்கம்-தேவலோகம், [முலை.]
சுவர்க்கர் - வானோர்.
சுவர்க்கோழி* - ஓர் வண்டு.
சுவர்ணம் - பொன்.
சுவலை - அரசமரம்.
சுவலோகம் - மேலேழுலகிலொன்று.
சுவல் - குதிரைக்கழுத்தின்மயிர், தோண்மேல், மேடு, முதுகு, பிடரி.
சுவவு - சுவர்க்கம், பறவையின் மூக்கு, மூஞ்சூறு.
சுவறுதல் - உறிஞ்சுதல், காய்தல், வற்றுதல்.
சுவற்பம் - சொற்பம், [நெற்றி.]
சுவா - நாய்.
சுவாகதம்-கிளி, நல்வரவு.
சுவாகா-மந்திர முடிவிலொன்று, அக்கினிதேவன்மனையாள்.
சுவாசகம் - கிளி, சவட்டுமண்.
சுவாசகாசம் - ஓர் நோய்.
சுவாசம்-உயிர்ப்பு, [சவட்டுமண், நல்லிருப்பிடம்.]
சுவாதந்திரியம் - சுதந்திரம்.
சுவாதி - சோதிநாள்.
சுவாதிஷ்டானம் - ஆறாதாரத்தொன்று அஃது குய்யத்தானம்.
சுவாதீனம் - சுயாதீனம் (தன்வசமானது.)
சுவாது-இனிமை,ஆடாதோடை.
சுவாதுகண்டம் - நெரிஞ்சில்.
சுவாஸ்தியம் - இன்பம், திருப்தி.
சுவாந்தம் - மனம்.
சுவாபம் - இயல்பு.
சுவாமி - கடவுள், [எசமானன், அருகன், குரு, சிவன், முருகன், பொன்.]
சுவாமிநாதன் - குமரன்.
சுவாயம்புவம் - சிவாகமத்துளொன்று.
சுவாரசம் - சாரசியம், வெள்ளிலோத்திரம்.
சுவாரி - கப்பலின் பின்னணியம்.
சுவார்ச்சிதம்*-தன்சம்பாத்தியம்.
சுவாலித்தல் - பற்றியெரிதல்.
சுவாலை - சொலிப்பு.
சுவானுபவம் - சுயவனுபோகம்.
சுவானுபூதி - தெய்வவருள், தெய்வவறிவு.
சுவி - இத்திமரம், துளசி.
சுவிகரித்தல் - அனுபவித்தல்.
சுவிகாரம், சுவீகாரம் - தனதாக்குதல், அங்கீகாரம்.
சுவிகை - கள். (பிங்)
சுவிசேஷகன் - நற்செய்தி சொல்வோன்.
சுவிசேஷம் - நற்செய்தி.
சுவீரியம் - இலந்தைக்கனி.
சுவேச்சை, சுயேச்சை* - தன்னிச்சை.

சுவேதகம் - சவரிலோத்திரம்.
சுவேதசம் - வேர்வையிற் பிறப்பன.
சுவேதசாரம் - நாணற்புள்.
சுவேதமூலம் - சாரணை(ஓர் பூடு.)
சுவேதம் - வெண்மை, வெள்ளி, வேர்வை, நாணற்புள், மாவிலிங்கமரம், வஞ்சிமரம்.
சுவேதவராகமூர்த்தி - திருமால்.
சுவேதவனம் - திருவெண்காடு எனுமொரு சிவஸ்தலம்.
சுவேதவாகனன் - அருச்சுனன்.
சுவை - இனிமை, [சுவையென்னேவல், இரசம், ஓரலங்காரம், சித்திரைநாள்.]
சுவைத்தல் - உருசித்தல், [உண்டல்.]
சுழங்குதல் - சுழலுதல்.
சுழலமாடுதல் - சுற்றுதல்.
சுழலன் - எத்தன்.
சுழலுதல் - சுற்றுதல்.
சுழல் - சுழலென்னேவல், [சுழல் (சுற்று), காற்றூடி, வஞ்சனை.]
சுழல்படை - வளைதடி.
சுழல்வு - சுற்று.
சுழற்றல்* - சுற்றியாட்டல்.
சுழாரை - பொன்னுவிரை.
சுழி - மயிர்ச்சுழி, நீர்ச்சுழி, அட்சாரச்சுழி, சுழியென்னேவல்.
சுழிகுளம் - ஒரு சித்திரகவி.
சுழிக்காற்று, சுழல்காற்று-சூறைக்காற்று.
சுழிக்குணம், சுழித்தனம், சுழிப்புத்தி - கபடபுத்தி.
சுழிக்குதல், சுழித்தல் - வட்டமிடுதல்.
சுழிமாந்தம் - ஓர் நோய்.
சுழிமுனை, சுழுமுனை, சுழுனை - இடை நாடிக்கும் பிங்கலை நாடிக்கும் இடையிலுள்ள ஒரு நுண்ணியநாடி. (சப்த.)
சுழியச்சு - பொன்னை உருக்கி வார்க்கும் அச்சு.
சுழியல் - ஒரு சிவஸ்தலம், சுருள்.
சுழியன் - வஞ்சகன், புத்திசாலி.
சுழியாணி - கதவுக் குடுமியின் முள்ளாணி.
சுழுத்தி - மயக்கமான நித்திரை, மூன்றுமவத்தை அஃது இதயத்தானம்.
சுளகு - முறம், விசாகநாள்.
சுளி - புளியாரை.
சுளிகை - முருங்கை.
சுளித்தல் - கோபித்தல், சினக்குறிப்பு.
சுளிப்பு, சுளிவு - சினக்குறிப்பு, சினம்.
சுளுகு - அற்பம், சிறுமை.
சுளுக்கு* - நரம்புப்புரட்சி.
சுளுவு* - இலேசு, சுலபம்.
சுளை - பலாப்பழ முதலியவற்றின் சுளை.
சுள்-கருவாடு, மெல்லியது. [கந்]
சுள்ளக்கம் - கோபம், மேட்டிமை, வேர்க்குரு.
சுள்ளக்கன் - கோபி.
சுள்ளக்காய் - மிளகாய்.
சுள்ளாணி - மெல்லிய ஆணி.
சுள்ளாப்பு - பழிச்சொல், வெப்பம், உறைப்பு, தீவிரம்.
சுள்ளி - சிறுவிறகு, [அனிச்சமரம், ஆச்சாமரம், ஞாழல், மாமரம், மயிர்க்கொன்றை.]

சுள்ளிடுவான் - ஓர் பூச்சி, மிளகு, மிளகாய்.
சுள்ளெறும்பு-கொள்ளியெறும்பு
சுள்ளை - காளவாய், மட்கலஞ் சுடு சூளை.
சுறட்டன் - முரடன்.
சுறட்டுத்தனம் - முரட்டுத்தனம்.
சுறட்டை - பசையின்றி வறண்டது.
சுறண்டி - ஓர் கரண்டி, கவர்பவன், தாண்டிவிடுபவன்.
சுறண்டுதல் - நகம் முதலியவற்றாற் பிறுண்டுதல், கவர்தல், [தாண்டிவிடுதல்.]
சுறவம், சுறவு - சுறு.
சுறு - மகரமீன், தேக அழுக்கு, [மகரராசி.]
சுறுளம் - கோபம், வேகம்.
சுறீரெனல் - விரைவுக்குறிப்பு.
சுறுசுறுப்பு - விரைவு, வேகம்.
சுற்பம் - செம்பு.
சுற்றத்தார்-இனத்தார்,பரிவாரம்
சுற்றம் - உறவு, [மன்னர்க்குத் துணையினென்று, உற்றார்.]
சுற்றல் - சுற்றுதல்.
சுற்றளவு - புறஅளவு.
சுற்றுக்கட்டு-வீட்டின்புறக்கட்டு.
சுற்றுதல் - நூல் முதலிய சுற்றுதல், சூழ்தல், அலைதல், சுருட்டுதல், வட்டமாயோடல், [கவர்தல்.]
சுற்றுப்பட்டு, சுற்றுப்புறம் * - அயலிடம்.
சுற்றுப்பிராகாரம்-கோயின் முதலியவற்றின் பிராகாரம்.
சுற்றுமுற்றும் - நாலுபக்கமும்.
சுற்றுவழி* - நேரற்ற பாதை.
சுற்றுவாரி - சுவர்ப்புறத்துள நீண்ட கூரை, [கல்வியூரி.]
சுனக்குடம், சுனுக்கு - சதுரக்கள்ளிமரம்.
சுனம் - வெள்ளுள்ளி.
சுனுசீரன் - இந்திரன்.
சுனி - பெண்ணாய்.
சுனிசனம் - புளியாரை.
சுனை - நீரூற்று, நீரடுத்தவிடம், உரோசம், கூர், [பசும்புற்றரை, தினவு.]
சுனைதல் - குழைதல், வாடல்.
சுனைவு - பேய்க்கடலை.
சுன்னத்து* - விருத்தசேதனம்.
சுன்னம்* - பூச்சியம், சுழி.
சுன்னிதம் - நுண்மை.

## சூ

சூ - ஓரெழுத்து, மிருகங்களை யோட்டுங் குறிப்பு.
சூகம் - நெல்வால், ஊர்வன, காற்று.
சூகரம் - பன்றி, ஒருவகை மான்.
சூகை-ஒரெறும்பு, யானை, தலைச்சுழற்சி.
சூக்கம் - நுண்ணியது. (திருவி)
சூக்குமசரீரம், சூக்குமதேகம் - நுட்பவடிவுடைய உட்சரீரம்.
சூக்குமம்-நுண்மை, அணு, நுண்ணியவறிவு, [அற்பம், வஞ்சகம், சிந்தில், சிவாகமத்தொன்று.]
சூக்குமித்தல்- நுட்பமாயிருத்தல்.
சூக்குமில் - சிலந்திப்பூச்சிக்கூடு.

சூக்குளி - வெற்றிலை.
சூங்குமம் - வேலிப்பருத்தி.
சூசகம் - உளவு, தருப்பைப்புல்.
சூசகவாயு, சூசிகாவாயு - சூதக வாயு.
சூசகன் - உவாத்தி, ஒற்றன்.
சூசம் - துருவாட்டேறு.
சூசனம் - அறிவித்தல், அபிநயம்.
சூசனை - குறிப்பு, நுண்மை, விவேகம், போதனை.
சூசி - ஊசி, தருப்பை. (சப்த)
சூசிகன் - தையற்காரன்.
சூசிகை-ஊசி, குறிப்பு, யானைத் துதிக்கை.
சூசியம் - சூட்டிறைச்சி.
சூசுகம் - முலைக்கண்.
சூடகம் - கைவளையல்.
சூடம் - சிவன்சடை, தலை.
சூடல் - சூடுதல்.
சூடன் - கருப்பூரம், ஒரு மீன்.
சூடாமணி - முடிமணி, ஓர் தேவ மணி, ஓர் நூல்.
சூடி - சீலை, வினையெச்சம்.
சூடிகை - முடி.
சூடு - வெப்பம், சூட்டுக்குறி, [சூடென்னேவல், முடி, உச்சிக் கொண்டை, எருத்துத்திமில், குடுமி, அரிக்கட்டு.]
சூடுதல் - அணிதல்.
சூடை-தோளணி, ஓர் மீன், முடி, கிணறு. (சப்)
சூட்சம் - உபாயம், தந்திரம், யூகம், [நுட்பம், சுருக்கம், அற்பம்.]
சூட்சாதிசூட்சம்*- அதிசூக்குமம்.
சூட்சி - உபாயம், ஆலோசனை.
சூட்சுமபுத்தி*- நுண்ணியவறிவு.
சூட்சுமம் - கூர்ந்தவறிவு.
சூட்டல் - அணிவித்தல்.
சூட்டிக்கை* - கூரிய வறிவு.
சூட்டிறைச்சி - சுட்டவிறைச்சி.
சூட்டு - சூட்டென்னேவல், [நுதலணி, நுதலணிமாலை, மாலை.]
சூட்டுக்கோல்* - சுடுங்கோல்.
சூட்டுதல் - அணிதல், முடித்தல்.
சூதகசத்துரு - காந்தம்.
சூதகசன்னி - ஓர் சன்னி.
சூதகம் - ஒருவரிறந்ததினாலேற்படும் ஆசௌசம், மாதவிடாய் விலக்கம், பழமை, சிறு கிணறு, மாமரம் முலைக்கண். (பிங்)
சூதகவாயு* - இருதுநீர்க்கட்டும் வாயு.
சூதடி - வஞ்சகம்.
சூதநதி - பொருந்தநதி.
சூதபாஷாணம் - இரசத்திலுண்டாகும் பாஷாணம்.
சூதமாமுனி - ஓரிருடி.
சூதம் - சூது, மாமரம், பவளமல்லிகை, பாதரசம், புளிமா, வண்டு, மன்மதன் கணையினொன்று, பாவம்.
சூதராட்சசன் - பொன்னம்பர்.
சூதர்-சூதாடுபவர், [தேர்ப்பாகர், பாணர், புகழ்வோர், நின்றேத்துவார்.]
சூதவம் - வண்டு.
சூதன் - சூதாடுவோன், வஞ்சகன், [தேரோட்டுபவன், சூதமாமுனி, தச்சன், சமையற்காரன், பாணன், புகழ்வோன், சூரியன்.]

சூதி, சூதிகை - பிள்ளைபெற்றவள்.
சூது - சூதாட்டு, வஞ்சகம், [ஓரிதழ்த்தாமரை, தாமரை.]
சூதுகாரன்* - தந்திரகாரன்.
சூதுபோர் - சூதுவிளையாட்டு.
சூத்திரதாரி - பதுமையாட்டி, கடவுள்.
சூத்திரப்பதுமை, சூத்திரப்பாவை, சூத்திரப்பிரதிமை, சூத்திரப்பொம்மை - கயிற்றினலாட்டும் பாவை.
சூத்திரம்-உபாயம், சூட்சவேலை, [இயந்திரம், நூல், பஞ்சினூல், இரகசியம், இலக்கணச் சூத்திரம், ஒழுங்கு, பூணூல்.]
சூத்திரர்-முப்புரிநூலணிந்தோர், ஏவல் செய்பவர், தச்சர், சதுர்த்தர்.
சூத்திரன் - முப்புரிநூலணிந்தோன், புஷ்பராகம், வைரீயம், தச்சன்.
சூத்திரிச்சி - சூத்திரப்பெண்.
சூத்து* - மலவாயில், பிருஷ்டபாகம்.
சூத்தை-கெடுதல், புழுக்குற்றல்.
சூநர், சூனர் - ஊன்விற்போர்.
சூநியன், சூனியன் - முடவன்.
சூநு, சூனு - மகன், சூரியன்.
சூபகன் - சமையற்காரன்.
சூப்பி - திரிந்துவாங்கித்தின்பவன், உச்சிட்டவூணன், ஓர் சிற்றுண்டி.
சூப்பிக்கலியாணம் - சுன்னத்துச் [சடங்கு.
சூப்பு* - கறிரசம்.
சூப்புதல் - சும்பனம்பண்ணல்.
சூம்புதல் - சுண்டிச் சிறுத்துப் போதல்,முகம்வாடிப்போதல்.
சூரசுதன் - சனி.
சூரசூதன் - அருணன், புதன்.
சூரசேனம் - ஒருதேசம்.
சூரசேனன் - ஸ்ரீகிருஷ்ணன் பாட்டன்.
சூரணம் - பஸ்மம் (தூள்), கருணைக்கிழங்கு.
சூரணிகை - கருத்துப்பொருள்.
சூரணித்தல் - பொடிசெய்தல்.
சூரத்து - வீரம், ஒரு தேசம்.
சூரத்துவம் - வீரம்.
சூரபதுமன், சூரபற்பன், சூரபன்மன் - முருகனுக்கு ஒரு பாதி மஞ்ஞையும் மற்றொரு பாதி கோழிக்கொடியுமான ஓரரக்கன்.
சூரம் - வீரம், [அச்சம், கடலை.]
சூரரமகளிர் - தெய்வப்பெண் [கள்.
சூரர் - படைவீரர்.
சூரல் - பிரம்பு, சூரைப்பூ.
சூரன்-வீரன், [வீரபன்மன், சூரியன், தீ, நாய், கரடி, சேவல், கௌரி பாஷாணம், நவச்சாரம்.]
சூரி - மடக்குக்கத்தி, [வீரமுடையவள், காடுகாள், காளி, புலவன், எருக்கு, நத்தைச்சூரி, புளிச்சக்கீரை.]
சூரியகரந்தை - ஒரு பூடு.
சூரியகலை - பிங்கலை (வலதுநாசியோடுஞ் சுவாசம்).
சூரியகாந்தம் - ஓர் பூ, [சூரியனொளிபட்டதும் தீக்காலுமொரு கல்.]

சூரியகாந்தி - ஓர் பூமரம், சூரியப் பிரபை.
சூரியகிரகணம் - சூரியகிராணம்.
சூரியகிரணம் - ஆதித்தன்கதிர்.
சூரியபகவான் - சூரியன்.
சூரியபுடம்* - வெய்யிற்புடம்.
சூரியபுத்திரன் - கன்னன், சனி, சுக்கிரீவன், சமன், வருணன்.
சூரியமூர்த்தி* - சூரியன்.
சூரியன் - சூரியபகவான், [செவ்வெருக்கு, செம்புமலே, சோழன்.]
சூரியாஸ்தமனம், சூரியாஸ்தம் - சூரியன் மேலைத்திசையில் பாயும் அந்திப்பொழுது.
சூரியை - புதுமணப்பெண்.
சூரியோதயம் - உதயகாலம்.
சூரை - ஓர் செடி, ஓர் மீன், கள், நெற்றிப்புல், தூதுளை.
சூர்-கொடுமை, அச்சம், தெய்வப்பெண், தெய்வம், நோய், வனதேவதை, மிளகு.
சூர்த்தநோக்கு - கொடுங்கண், கொடுமை.
சூர்த்தல் - சுழலல், சினத்தல்.
சூர்ப்பகைவன் - முருகன்.
சூர்ப்பநகி, சூர்ப்பநகை - இராவணன் தங்கை.
சூர்ப்பம் - சுளகு, ஓரளவு.
சூர்ப்பு - பயம், கொடுந்தொழில், சுழற்சி.
சூர்மகள் - தெய்வப்பெண், யோகினி.
சூலக்குறடு - ஓராயுதம்.
சூலதரன், சூலபாணி - அரன், வயிரவன்.
சூலம் - ஓராயுதம், [சூலே, கழு, இரேவதிநாள், துகிற்கொடி, சதுரக்கள்ளி, நித்தியயோகத்தொன்று.]
சூலல் - சூலுதல் (குடைதல்).
சூலவேல் - கழுமுள்.
சூலி - காளி, துர்க்கை, சிவன், கருப்பவதி.
சூலே - ஒரு நோய்.
சூலேசத்துரு - ஆமணக்கு.
சூல்-கருப்பம், பயிர்க்கரு, சூலென்னேவல்.
சூவனக்காரன் - சுயம்பாகி.
சூவாரை - ஓர் மீன்.
சூவானம் - அடுக்களை.
சூழல் - ஆராய்தல், இடம், கருத்து, சுற்றுப்புறம்.
சூழி - உச்சி, உச்சிக்கொண்டை, கடல், நீர்நிலே, யானைமுகபடாம்.
சூழிகை - கள்.
சூழியற்கம்பு - வீட்டிறப்புத்தாங்குங் கம்பு.
சூழ்ச்சம்* - உபாயம்.
சூழ்ச்சி - ஆலோசனை, உபாயம், நுண்ணறிவு.
சூழ்தல் - சூழ்ந்திடல், [ஆலோசனைபண்ணல்.]
சூழ்ந்தோர், சூழ்வோர் - உறவினர், சூழ்ந்துநிற்பவர், மந்திரிகள்.
சூளாமணி - முடிமணி.
சூளி - ஆண்மயிர்.
சூளிகை-யானைச்செவியடி, செய்குன்று, வீட்டினுச்சி.
சூளுறல் - சத்தியஞ்செய்தல்.
சூளை - சுடுசூளை, [வேசை].

சூள் - ஆணை, சத்தியம், சபதம்.
சூறல் - தோண்டுதல்.
சூறன் - மூஞ்சூறு.
சூறுவளி,சூறுவாரி-சுழல்காற்று.
சூறை - கொள்ளை, [சுழல்காற்று, ஆறலைத்தல் (வழிப்பறித்தல்.)]
சூறையிடுதல், சூறையாடுதல் - கொள்ளையிடுதல்.
சூனம் - பூமலர், மான், வயிற்று வீக்கம்.
சூனியகாரன்* - மாரணவித்தைக்காரன்.
சூனியதிசை - தென்கீழ்த்திசை.
சூனியம் - மாரணவித்தை, இன்மை, [பாழ், குறைவு.]
சூனியவாதம் - கடவுளில்லையென்னுமோர் சமயவாதம்.
சூனை - சொத்தை, குற்றம், மகள்.
சூன்றல் - தோண்டுதல்.
சூன்றிடல் - குடைதல்.

## சே

செ - ஓருயிர்மெய்யெழுத்து.
செகசோதி* - மிக்கவொளி.
செகதகுரு - கம்மாளன்.
செகநாதன் - ஆண்டவன்.
செகம் - உலகம்.
செகில் - தோள். (பொரு).
செகிள் - கேழ்வரகின்கப்பி, மீன்செதிள்.
செகுத்தல் - அழித்தல், கொல்லல்.
செக்கச்சிவத்தல்* - மிகச்சிவத்தல்.
செக்கர் - சிவப்பு, செவ்வானம்.
செக்கர்வானம், செக்கர்வான் - செவ்வானம்.
செக்கர்வானிறத்தோன் - சிவன், வீரபத்திரன்.
செக்கல் - செவ்வானம், மாலை நேரம்.
செக்கான்* - எண்ணெய்வாணியன்.
செக்கு - எண்ணெயாட்டும் எந்திரம், [சதயநாள்.]
செக்குக்கீரை - ஓர் கீரை.
செங்கடம்பு - ஓர் கடம்பு.
செங்கணன் - திருமால்.
செங்கண்ணி* - ஓர் மீன்.
செங்கண்மா - கரடி. (உரிச்).
செங்கண்மாரி - கண்ணோய்.
செங்கதிரோன், செங்கதிர் - சூரியன்.
செங்கதிர்நாள் - உத்திரநாள்.
செங்கமலம் - செந்தாமரை.
செங்கமலை - இலக்குமி.
செங்கரப்பன் - ஓர் நோய்.
செங்கரா* - ஓர் மீன்.
செங்கரும்பு* - ஓர் கரும்பு.
செங்கல் - சுட்ட மண்கல், [காவிக்கல், மாணிக்கம்.]
செங்கழல்நாரை - செங்காலுரை.
செங்கழுநீர் - செங்குவளை.
செங்களம் - போர்க்களம்.
செங்களை - குதிரைப்பற்பாஷாணம்.
செங்கற்பட்டு* ஓரூர்.
செங்கற்றலை - ஓர் மீன்.
செங்காடு - திருச்செங்காட்டங்குடி என்ற ஒரு சிவஸ்தலம்.

செங்காய்* - பழுக்கும் பருவத்துள்ள காய்.
செங்கார் - ஒருவித நெல், [கருஞ்சிவப்பு.]
செங்கிரந்தி - ஒரு கிரந்திநோய்.
செங்கீரை - பிள்ளைக்கவியிலோருறுப்பு, அது குழந்தையின் இருகையுமுழங்கால்களுமூன்றித் தலைநிமிர்த்தியாடல்.
செங்குங்கிலியம் - ஒரு சரக்கு.
செங்குட்டுவன்-சீறிய கற்புடைய கண்ணகியின் உருவை ஸ்தாபித்து உற்சவம் நடத்திய ஒரு சேரநாட்டு மன்னவன்.
செங்குத்து - நேரேநிமிர்ந்தது.
செங்குந்தம் - கண்ணோயுளொன்று.
செங்குந்தர் - கைக்கோளர்.
செங்குமுதம் - செவ்வாம்பல்.
செங்குவளை - ஒரு நீர்ப்பூ.
செங்குளவி - ஓர் குளவி.
செங்குன்று - ஒரு புண்ணியஸ்தலம்.
செங்கை - சிவந்த கை, [ஆதிரைநாள்.]
செங்கையான் - ஓர் பூடு.
செங்கொடிவேலி, செங்கொடுவேலி - ஓர் கொடி.
செங்கொல் - பொன். (சீவ. சிந்).
செங்கொல்லர் - தட்டார்.
செங்கோடு-ஒரு மலை, [செருந்திமரம்.]
செங்கோடுபாய்தல் - மலையுச்சியிலிருந்து பாய்தல்.
செங்கோட்டம் - ஒரு மருந்துப்பூடு.
செங்கோட்டியாழ் - நால்வகையாழ்களுளொன்று.
செங்கோலம் - செம்புமணல்.
செங்கோல் - செவ்விய கோல், நீதி.
செங்கோற்கடவுள் - இயமன்.
செச்சை - செங்காடு, செஞ்சாந்தின் குழம்பு, சோடு, நீறு, வெட்சிமரம், வெள்ளாட்டுக்கடா, இலிங்கம், செந்துளசி.
செஞ்ச - நிறைய.
செஞ்சடையோன் - சிவன், வயிரவன், வீரபத்திரன், காசுமீரப்படிகம்.
செஞ்சாந்து - குங்கும முதலான சிவந்த பரிமளத்தாற் கூட்டுகிற கூட்டு.
செஞ்சாலி - செந்நெல்.
செஞ்சி* - தேசிங்குமன்னன் வாழ்ந்த ஒரு மலைக்கோட்டையூர்.
செஞ்சுடர் - சூரியன், தீ.
செஞ்சொல் - வெளிப்படையான மொழி, செந்நெல்.
செஞ்சோறு - இரத்த மூட்டிய சோறு.
செடி - புதர், பூண்டு, [ஒளி, அற்பம், பதனழிவு, பாவம்.]
•செடில்-பிரார்த்தனைக் காலத்தில் ஒருவனைக் கழையில் மாட்டித் தூக்கியாட்டுங் கருவி.
செட்டி - வணிகன், [குமரன்.]
செட்டிச்சி* - செட்டிப்பெண்.
செட்டு-சிக்கனம், [வியாபாரம்.]
செட்டை - இறகு, [கைப்பட்டை.]

செண்டாயுதன் - ஐயனார்.
செண்டு - பூஞ்செண்டு, [குதிரை வையாளிவீதி, பந்து, பந் தெறிவீதி.]
செண்ணம் - வடிவு, நுண்டொ ழில்.
செண்பகம்* - சண்பகம்.
செதில் - மீனின் மேலேயுள்ள பிராலுறுப்பு, [தோல், பொரு க்கு, மரப்பட்டை.]
செதிள் - தாள். (சீவ. சிந்), தோல்.
செதுக்கு - செதுக்கென்னேவல், [உடற்றழும்பு, சேறு, பூதம், மந்தி]
செதுக்குதல் - புல் முதலிய செ துக்கல், [சீவுதல்].
செதுக்கை - உடற்றழும்பு.
செதும்பு-சேறு, பொல்லாநிலம்.
செத்தல் - சாகுதல், [அறக்காய்ந் தது, பசுமையற்றது, மெலிந் தது.]
செத்தை* - அறக்காய்ந்த இலை முதலியன.
செந்தட்டு - தன்மீது படும் அடி யைத் தடுத்தல்.
செந்தணற்கொடி - பவளம்.
செந்தண்டு - செந்தண்டுக்கீரை, சிவந்த தாள், செங்குருத்து.
செந்தமிழ் - இயற்றமிழ்.
செந்தமிழ்க்குரியோன் - வயிர வன், அகத்தியன்.
செந்தமிழ்நாடு - தமிழ் வழங்கு மிடம், [பாண்டிநாடு.]
செந்தருப்பை - நச்சுப்புல்.
செந்தலைவிரியன் - ஓர் பாம்பு.
செந்தழல் - தீ, தீத்தழல், கேட் டைநாள்.
செந்தளிர் - இளந்தளிர்.
செந்தளிர்ப்பு - செஞ்செழிப்பு, மகிழ்ச்சி.
செந்தாது - பொன். (இரசு).
செந்தாழை - ஓர் தாழை, [ஒரு கண்ணோய்.]
செந்தாழைநோய் - உதடு வெடி த்து வாய்நாறுமோர் நோய்.
செந்தி - திருச்செந்தூர்.
செந்திரிக்கம், செந்துருக்கம், செந்திருக்கம்-ஓலையை யடை க்குஞ் சுருள்.
செந்திரு - இலட்சுமி, தாளகம்.
செந்திருக்கை - ஓர் மஞ்சள்.
செந்தில் - செந்தி.
செந்திறம் - குறிஞ்சியாழ்த்திறம், சிவப்பு.
செந்தினை - கம்பு, சிவந்த தினை.
செந்தீ - அக்கினி, ஓர் சிலந்தி.
செந்தீவண்ணன் - அரன், செவ் வாய்.
செந்தீவளர்ப்போர் - அந்தணர்.
செந்து - சீவப்பிராணி, [கிழநரி, சடாமாஞ்சில், நரகம், பெருங் காயம், அணு, உயிர்.]
செந்துத்தானம் - ஓர் நரகு.
செந்துத்தீ - சடாமாஞ்சில், பெ ருங்காயம்.
செந்துருதி-ஓர் நரகம், ஓர் பண்.
செந்துருத்தி - ஓர் பண்.
செந்துறை - ஆடற்கேற்கும் பா ட்டு, ஓர் வெண்பா.

செந்தூக்கு-நேராக ஒரு கையால் இலேசாகத் தூக்குகை, [ஓர் வகைப்பாட்டு.]
செந்தூரத்தாசி - கந்தகம்.
செந்தூரம் - பொன் முதலியவற்றாலான சுண்ணம், [இலிங்க பாஷாணம்.]
செந்தாள் - மிருதுவான தாள்.
செந்தொடை - மோனைமுதலிய ஒவ்வாத்தொடை.
செந்தொடையன் - சிவன், வயிரவன்.
செந்தோட்டி - சிறுகாஞ்சொறி, பெருகாஞ்சொறி.
செந்தோன்றி - செங்கழுநீர்.
செந்நல் - ஓர் மீன்.
செந்நாகம் - கேது.
செந்நாடிக்கா - மூக்கிரட்டை.
செந்நாயுருவி - ஓர் நாயுருவி.
செந்நாய்* - ஓர் நாய்.
செந்நீர்-இரத்தம், புதுநீர். (சீவ. சிந்).
செந்நெல் - நல்நெல்.
செந்நெறி - நல்வழி.
செபத்தியானம் - மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டே கடவுளை நினைந்திருத்தல்.
செபமாலை - செபஞ்செய்வதற்குரிய மாலை.
செபம்* - மந்திரமுச்சரித்தல்.
செபித்தல்* - உருவேற்றுதல்.
செப்படிவித்தை, செப்பிடுவித்தை - ஓர் தந்திரவித்தை.
செப்பட்டை - தோட்பட்டை, பறவையின் சிறகு.
செப்பமிடுதல், செப்பனிடுதல் - செவ்வைபண்ணுதல்.
செப்பம் - செவ்வை, மனஒற்றுமை, நடுநிலை, மார்பு, வழி, வீதி.
செப்பல் - சொல்லுதல், [ஓரோசை.]
செப்பிடில் - சடாமாஞ்சில்.
செப்பிலை - தும்பை.
செப்பு - சிமிழ், [செப்பென்னேவல், விடை.]
செப்புநெரிஞ்சி - சிவப்புநெரிஞ்சிப்பூடு.
செப்புப்பட்டயம், செப்பேடு - செப்புத்தகட்டி லெழுதிய சாஸனம்.
செம் - சிவப்பு, செம்மை.
செம்பகை - தாழ்ந்த இசை.
செம்பஞ்சு - சிவந்த பஞ்சு.
செம்பஞ்சூட்டுதல் - செம்பஞ்சமுத்தல்.
செம்படத்தி * - செம்படவப் பெண்.
செம்படவர்* - மீன்பிடிப்பவர்.
செம்படாம் - சிவப்புச்சீலை.
செம்படை, செம்பட்டை* - சிவந்த மயிர்.
செம்படைச்சி - செம்படத்தி, [சிவந்த மயிருடையவள்.]
செம்பரத்தை - சப்பாத்துச்செடி.
செம்பருத்தி - ஓர் செடி.
செம்பாகம்-சரிபாகம், செவ்வையானது, நடுநிலை.
செம்பாதி - சரிபாதி.
செம்பாம்பு - கேது.

செம்பாலை - மிடற்றினின்றிசை க்குமிசை.
செம்பால் - இரத்தம்.
செம்பாளை* - செந்நெல்.
செம்பி-கருவண்டு, மருதோன்றி.
செம்பியன் - முதலெழுவள்ளலி லொருவன், சோழன்.
செம்பிரால் - ஓர் மீன்.
செம்பு - தாம்பிரம் அஃது பஞ்ச லோகத்தொன்று.
செம்புக்குள்வேதை - கற்பரிபா ஷாணம்.
செம்புலம் - சுடுகாடு, பாலைநிலம், போர்க்களம்.
செம்புரு - ஓர் மீன்.
செம்பொருள் - உண்மைப்பொ ருள், கடவுள்.
செம்பொன் - சுத்தப்பொன்.
செம்மணத்தி - செம்புளிச்சை.
செம்மணி - குருந்தக்கல், குருவிந் தம், மாணிக்கம், கெம்பு, பதும ராகம்.
செம்மண் - சிவந்த மண், [காவி மண்.]
செம்மரம்-ஒரு மரம், அழிஞ்சில்.
செம்மலை - ஆவிரை (ஓர் செடி.)
செம்மலைப்பாலை - ஓரிசை.
செம்மல்-அரசன், எப்பொருட்கு மிறைவன், பெருமையிற் சிற ந்தோன், பழம்பூ, புதல்வன், தலைவன், வலி.
செம்மறியாடு - ஓர்வகையாடு.
செம்மாத்தல் - அகந்தையாயிருத் தல், நிமிர்ச்சியாயிருத்தல்.
செம்மாத்தி - சக்கிலிச்சி.
செம்மாப்பு - இறுமாப்பு.
செம்மாளி - செம்படவர் தரிக்கு மொரு பாதகுறடு.
செம்மானம்*- சிவந்த மேகம்.
செம்மான் - சக்கிலியன்.
செம்மீன்வயிரம் - மீனம்பர்.
செம்முதல் - மூடுதல். (இரா.)
செம்மேவுதல் - இணங்குதல்.
செம்மை - சிவப்பு, தலைமை, செவ்வை, அழகு, பெருமை.
செம்மைப்படுதல்-நற்சீரடைதல்.
செம்மையாதல் - நேராதல்.
செம்மொழி - இயற்றமிழ் வச னம், நயவசனம்.
செயசெயவெனல் - போற்றுதல்.
செயசேதி - உப்பு.
செயநீர் - நவச்சார முதலியவற் றிலிருந்தெடுக்கும் ஒரு திரா வகம்.
செயநீர்க்கருத்தன் - நவச்சாரம்.
செயபரம் - மரமஞ்சள்.
செயபீதம் - கௌரிபாஷாணம்.
செயம், சயம் - வெற்றி.
செயலறல் - உதவியற்றுப்போ தல், தத்துவமற்றுப்போதல்.
செயலறவு - உதவியின்மை.
செயலறுநிலை - கையறுநிலை.
செயலை - அசோகமரம்.(திருமு).
செயல் - செய்கை, [ஒழுக்கம், காவல், தொழில், சேறு.]
செயற்கை - செய்கையாலேற்ப டுவது.
செயித்தல்* - சயித்தல்.
செயிரியர் - வீணை முதலியவியக் குவோர், பாடன்மாந்தர்.
செயிர் - செயிரென்னேவல், குற் றம், கோபம், சினம், துன்பம்.

செயிர்த்தல் - சினத்தல்.
செயிர்ப்பு - சினம், குற்றம்.
செயிற்றியம் - ஒரு நாடகத்தமிழ் நூல்.
செய் - சேய்யென்னேவல், [சிவப்பு, வயல்.]
செய்கடன் - முறைமை, நித்திய கருமம், பிதிர்க்கடன்.
செய்கை - தொழில், ஒழுக்கம்.
செய்தல்* - செய்குதல்.
செய்தவம்-செய்யப்பெற்றதவம்.
செய்தி - சமாசாரம், [ஒழுக்கம், சரித்திரம், செய்கை, செய்வாயென்னுமுற்று.]
செய்நன்றி* - செய்த நன்றி.
செய்பவன் - கருத்தா.
செய்ய-அழகிய, சிவந்த, சிறந்த.
செய்யல் - சேறு, ஒழுக்கம்.
செய்யவள் - இலட்சுமி, சீதை.
செய்யவன்-செம்மையுடையான். (கந்), சூரியன், செவ்வாய்.
செய்யாள் - செய்யமாட்டாள், [இலக்குமி.]
செய்யான் - செய்யமாட்டான், ஓர் பூரான்.
செய்யுள் - பாட்டு, [விளைநிலம்.]
செய்யோன் - அருகன், செந்நிறமுடையான், செம்மையுடையோன், அங்காரகன்.
செரித்தல் - சீரணித்தல், [சினத்தையடக்கல்.]
செரு - சண்டை, போர்.
செருகுபூ - இடையிடை வைக்கும் பூ.
செருக்கல் - செருக்குதல்.
செருக்களம் - போர்க்களம்.
செருக்கு - செருக்கென்னேவல், அகங்காரம், களிப்பு.
செருக்குதல் - அகங்கரித்தல், களிக்குதல்.
செருத்தல்-மூலமடி. (சீவ. சிந்)
செருத்தி - விருதுக்கொடி.
செருநர் - படைவீரர்.
செருந்தி - ஓர் மரம், மணித்தக்காளி, வாட்கோரைப்புல்.
செருந்து - செருந்தி. (வாண)
செருப்படி, செருப்படை* - ஓர் பூடு.
செருப்பு* - கழல்தொடுதோல்.
செருமல், செருமுதல் - விலங்குகளிருமுதல், திணித்தல்.
செலகம் - மல்லிகை.
செலக்குரு - நவச்சாரம்.
செலக்கூபம் - நண்டு.
செலதம் - கோரைக்கிழங்கு.
செலம் - இலாமிச்சை.
செலவயர்தல் - போதல்.
செலவழுங்கல்-போக்கொழிதல்.
செலவாளி* - செலவுகாரன்.
செலவிடல் - செலவழித்தல், [அனுப்புதல், விடுதல், எறிதல்.]
செலவு - செலவிடுதல், உத்தரவு, [போக்கு, முடிவு, வழி.]
செலியம் - இலாமிச்சை.
செலு-நறுவிலிமரம்,மீன்செதிள்.
செலுத்தல் - அனுப்புதல், கொடுத்தல், நடத்துதல், விடுதல்.
செலுவன் - மெலிந்தவன்.
செல் - செல்லென்னேவல்,கறையான், [இடி, மேகம், கையொப்பம், வேல்.]

செல்லம்* - செல்வம்.
செல்லல் - போதல், துன்பம்.
செல்லாக்காசு - வழங்காத காசு.
செல்லியம் - கோழி.
செல்லு* - கையொப்பம்.
செல்வச்சிரிப்பு - புன்முறுவல்.
செல்வநடை - மிருதுநடை.
செல்வம் - ஐசுவரியம், [இன்பம், கல்வி, சீர், சுவர்க்கம்.]
செல்வன் - செல்வமுள்ளோன், [அரசன், கடவுள், மகன்.]
செல்வாக்கு - ஐசுவரியம், [மதிப்புறும் பேச்சு.]
செல்வி - ஐசுவரியமுடையவள், [தலைவி, மகள், இலட்சுமி.]
செல்விக்கை - ஐசுவரியம், செல்வாக்கு.
செவி - காது, கேள்வி.
செவிகொடுத்தல், செவிசாய்த்தல் - உற்றுக்கேட்டல்.
செவிக்கெட்டுதல்* - கேள்விப்படுதல்.
செவிடர் - செவிப்புலனற்றவர் (காது கேளாதவர்.)
செவிடு - செவிப்புலனற்றது அஃது உறுப்புக்குறையெட்டினுென்று.
செவிட்டல் - அழித்தல். (பிங்)
செவிதின்றல் - இரகசியம்பேசுதல்.
செவிப்புலன் - கேள்வி.
செவிமடுத்தல் - கேட்டல்.
செவிமலர் - ஓர்வகைக்காதணி.
செவியம் - செவ்வியம்.
செவிரம் - ஒருவிதப் பாசி.
செவிலி-வளர்த்ததாய், அக்காள்.
செவுடு - செவிடு.
செவுள் - செகிள், (மீன் சுவாசித்தற்கான ஒருறுப்பு.)
செவ்வந்தி - ஓர் பூச்செடி.
செவ்வந்திக்கல் - ஓர் கல்.
செவ்வரத்தை - செம்பரத்தை.
செவ்வல் - செம்மண் பூமி.
செவ்வல்லி - செவ்வாம்பல்.
செவ்வழி - ஓர்பண் அஃது நெய்தனிலத்திராகம்.
செவ்வழிப்பாலை - ஓரிராகம்.
செவ்வள்ளி - ஓர் கொடி.
செவ்வன் - செவ்வை.
செவ்வாப்பு-குழந்தையின் தலையிலுண்டாகும் சிவப்புக் கட்டி.
செவ்வாய் - ஓர் நாள், [ஓர் கிரகம், சிவந்த வாய்.]
செவ்வானம் - சிவந்த மேகம்.
செவ்வி - அழகு, பருவம், காலம், சித்திரைநாள்.
செவ்வியம் - மிளகுகொடி.
செவ்வியருமை - சமயம்பெறுமருமை.
செவ்விளநீர்* - சிவந்த தோலுள்ள இளநீர்.
செவ்வு - செம்மை, நேர்மை, முத்துக்களின் அளவுவகை.
செவ்வெண்ணெய் - பிறந்த சிசுவின்வாயில்தடவும் தேன்கூட்டிய ஆமணக்கெண்ணெய்.
செவ்வேள் - முருகன்.
செவ்வை - செம்மை, சுத்தம்.
செழிச்சி* - செழிப்பு.
செழிப்பம்,செழுப்பம்-செழுமை.
செழிப்பு* - செழுமை, ஐசுவரியம், வளர்ச்சி.

செழியன்-பாண்டியன். (திருவி)
செழுமை* - அழகு, கொழுப்பு, நிறைவு, மாட்சிமை, வளமை.
செளிம்பன் - குணக்கேடன்.
செளிம்பு - களிம்பு.
செள்ளு* - தெள்ளுப்பூச்சி.
செறல் - கொலை, கோபம், பகை.
செறிஞர் - உறவர். (இரா)
செறிதல் - குளித்தல், நெருங்கல், பொருந்தல், மிகுதல்.
செறித்தல் - அழித்தல், கொல்லல், நெரித்தல், மூழ்கல், சேர்த்தல், காத்தல்.
செறிவு - நிறைவு, நெருக்கம், மிகுதி, அடங்குதல்.
செறு - வயல், குளம், சினம்.
செறுத்தல் - கொல்லல், கோபித்தல், நெருக்குதல், வெறுத்தல்.
செறுநர் - பகைவர்.
செறும்பு - தணியாக்கோபம், பொருக்கு. (இரா), பனஞ்சிறும்பு.
செறுவு - வயல்.
செற்றம் - தணியாக்கோபம், சினம், சலஞ்சாதித்தல்.
செற்றலர் - பகைவர்.
செற்றல் - கொல்லல், வெறுத்தல், நெருக்கல்.
செற்றூர் - பகைவர், கொலைசெய்வோர்.
செற்று - நெருக்கம், செடி.
செற்றுதல் - நெருங்குதல், பின்னுதல்.
செனகன் - பிதா. (பார)
செனனம் - பிறப்பு.
செனனி - தாய். (பார)
செனித்தல் - பிறத்தல்.
சென்மசாபல்லியம் - செனனமெடுத்ததின் பலன்.
சென்மாந்திரம்* - ஒரு பிறப்பின் முடிவுகாலம்.
சென்மித்தல் - பிறத்தல்.
சென்றுதேய்ந்திறுதல் - நூற்குற்றம் பத்திலொன்று அஃது வர வரச் சொன்னயம் பொருணயங் குறைதல்.
சென்னக்கூனி - கூனிப்பொடி, இஃது ஒரு சலசெந்து.
சென்னல் - தேன்கெண்டை.
சென்ஞக்கூனி* - இறால்.
சென்னி - தலை, முடி, அச்சுவினி நாள், சோழன், பாணன்.
சென்னியர் - பாணர்.
சென்னை - சென்னைபட்டினம் (இது சின்னப்ப நாயகனிடமிருந்து ஆங்கிலேயருக்குக் கிடைத்தது), கதுப்பு.

## சே

சே - ஓரெழுத்து, சிவப்பு, சேவென்னேவல், எருது, இடபவிராசி, சேரான்மரம், விலங்கேற்றின்பொது, அழிஞ்சின் மரம்.
சேகண்டி - சேமக்கலம், தெருக்காவல்.
சேகரம் - சேகரித்தல், தலை, தலையில் முடிக்கப்படுவன, சம்பாத்தியம், முடி, மாமரம்.
சேகரித்தல் - கூட்டுதல், சம்பாதித்தல்.

சேகிலி - வாழைமரம்.
சேகு - மரவயிரம், தழும்பு.
சேகை - சிவப்பு. (கந்)
சேக்கரித்தல் - கொக்கரித்தல்.
சேக்கு - முலைப்பால்.
சேக்கை - மக்கட்படுக்கை, விலங்கின் படுக்கை, உடற்றழும்பு, கற்கடகவிராசி, நண்டு, முலை.
சேங்கன்று - நாம்பன்கன்று.
சேங்கொட்டை - சேரான்கொட்டை.
சேடகம் - கேடகம்.
சேடகன் - வேலைக்காரன்.
சேஷசாயி - திருமால்.
சேடம், சேஷம் - எச்சில், மிச்சப்பொருள்.
சேடர் - அடிமைமக்காரர், ஏவல்செய்வோர், பெரியோர் "சேடரிற்சென்று புல்லிச் (சீவக. சிந். 852.)
சேடன், சேஷன் - அநந்தனென்கிற ஆதிசேடன், அடிமைக்காரன், இளையோன், ஏவல்செய்வோன், தோழன், பலதேவன்.
சேடாத்திரி - திருவேங்கடமலை.
சேடி - ஏவல்செய்வாள், அடிமைக்காரி, [இளையவள், அழகுள்ளவள், இடையர்வீதி, தோழி, வித்தியாதரருலகு.]
சேடியர் - ஏவற்பெண்கள், பாங்கிமார்.
சேடு - அழகு, இளமை, திரட்சி, நன்மை, பெருமை.
சேடை - மாக்காப்பு, நிர்மாலியமாலை.
சேடையரிசி - அறுகரிசி.
சேட்சி - தூரம்.
சேட்டம், சேஷ்டம் - முதன்மை, மேன்மை, [ஆனிமாதம், திறம்.]
சேட்டன், சேஷ்டன் - தமையன்.
சேட்டாதேவி - மூதேவி.
சேட்டுமம் - சிலேட்டுமம்.
சேட்டை, சேஷ்டை - குணங்கெட்ட தொழில், [அக்காள், கேட்டைநாள், முறம், மூதேவி, பெருமையிற் சிறந்தவள், விசாகநாள்.]
சேட்படைநிலை - தலைவன் தலைவியோடு சேராவாறு தோழி தடுத்தல்.
சேணம் - கல்லணை, மெத்தை.
சேணுடர் - வானிலுள்ளார்.
சேணி - ஏணி, வித்தியாதரருலகு.
சேணிச்சி* - சேணியப்பெண்.
சேணியர்* - நெய்வாரிலோர் பிரிவினர்.
சேண் - ஆகாயம், தூரம், நீளம், உயர்ச்சி, அகலம்.
சேண்டிரவர்* - நெய்வார்.
சேதகம் - செந்நிறம், சேறு.
சேதம் - நஷ்டம், கேடு, அழிவு, இடையூறு, துண்டு, பிரிவு.
சேதனம் - அறிவுடைப்பொருள், வெட்டுதல்.
சேதனன் - ஆத்துமா.
சேதா - சிவப்புப்பசு, செயிப்பவன்.
சேதாரம் - பொன்னுரைதேய்மானம், கேடு, [தேமாமரம்.]
சேதி - செய்தி, [ஓர் நாடு.]
சேதித்தல் - வெட்டடல், அறுத்தல்.
சேதிமம் - தேவர்கோயில்.

சேது - இராமேச்சுவரம், [சிவப்பு, செய்கரை, ஓர் தீர்த்தம், நீர்தடுக்கும் வரம்பு.]
சேதுபந்தனம் - அணைக்கட்டு.
சேத்தல் - சிவத்தல், துயிலல்.
சேத்திரஞ்ஞன் - சரீரத்திரயத்தை யறிபவன், ஆன்மா.
சேத்திரம் - தலம், [உடம்பு, காற்று, வயல்.]
சேத்து - மிகுசிவப்பு, நெருக்கம், வயல், உவமைச்சொல், கருத்து, ஐயம், உறுப்பு.
சேந்தன் - திவாகர நிகண்டு இயற்றியோன், கந்தன்.
சேந்தி - கள்.
சேந்து - அசோகமரம், சிவப்பு, நெருப்பு, வினையெச்சம்.
சேந்தை - மேற்படாம்.
சேபாலம் - சேங்கொட்டை.
சேபாலிகை - கருநொச்சிமரம்.
சேப்பு* - சிவப்பு.
சேமக்கலம் - எறிமணி.
சேமம் - நன்மை, [காவல், சவச்சேமம், புதையல், அரண்.]
சேமரம் - அழிஞ்சில், சேரான்.
சேமாளைச்சம்பா - ஓர் நெல்.
சேமித்தல் - புதைத்தல், காவல் பண்ணிவைத்தல்.
சேமை, சேம்பு, சேம்பை - ஒரு கிழங்குச்செடி.
சேயவன், சேயான், சேயோன் - முருகன், சிவன்.
சேயா - கடுக்காய்.
சேயார் - பகைவர், தூரத்திலுள்ளார்.
சேயிலம் - இலுப்பைமரம்.
சேயிழை - அணிகலன், மங்கை.
சேய் - இளமை, குமரன், குழந்தை, சிவப்பு, செவ்வாய், தூரம், நீளம், மகன், மூங்கில்.
சேய்த்து - தூரத்தது, நீளம்.
சேய்மை - தூரம், நீளம்.
சேர* - ஒன்றாய்.
சேரங்கை - செரங்கை.
சேரமண்டலம் - சேரநாடு.
சேரமான் - அறுபான்மூன்று நாயன்மாரிலொருவன்.
சேரலர் - பகைவர்.
சேரலன் - சேரன், பகைவன்.
சேரன் - சேரநாட்டுமன்னன்.
சேரா - கள்.
சேராங்கொட்டை - சேரான்கொட்டை.
சேரான் - சேரமாட்டானென்னும் வினைமுற்று, [சேங்கொட்டைமரம், பகைவன்.]
சேரி - ஊர், தெரு.
சேரிப்பரத்தையர் - வேசையர்களி லொருவகையினர்.
சேருகம் - நாகணவாய்ப்புள்.
சேருதல் - சேர்தல்.
சேரை - சிறங்கை.
சேர் - சேரென்னேவல், ஓர் நிறை, [தானியப்பெயர், ஓரேர்மாடு, பிணையல்.]
சேர்க்கை - சேர்க்குதல், புணர்ச்சி, [சேருமிடம்.]
சேர்தல் - அடுத்தல், கூடுதல், அடைதல், புணர்தல்.
சேர்த்தல் - சேகரித்தல், சேரப்பண்ணுதல், கூட்டுதல், இணைத்தல், [சமைத்தல்.]

சேர்த்தி - சேர்மானம்.
சேர்ந்தார் - உறவினர், [சிநேகிதர்.]
சேர்ந்தார்க்கொல்லி - நெருப்பு.
சேர்பந்து - கசை.
சேர்பு - சேர்மானம், வீடு.
சேர்ப்பன் - நெய்தனிலத்தலைவன்.
சேர்மானம்* - ஒன்றிப்பு, கலப்பு.
சேர்விடம் - சேருமிடம், [மனிதர்படுக்கை.]
சேர்வு - கூட்டம், திரட்சி, மருதநிலத்தார், வீடு.
சேர்வை - கலத்தல், கூட்டம், சேர்மானம், சேனை.
சேலகம் - முத்தக்காசு (கோரைக்கிழங்கு.)
சேலம் - ஓரூர், [மயிற்றோகைக்கண், புடவை.]
சேலியால் - இலாமிச்சைப்புல்.
சேலேகம் - சந்தனம், சிந்தூரம்.
சேலை - புடவை, [அசோகமரம்.]
சேல் - கெண்டைமீன்.
சேவகம் - வேலை, [துயில், பேயுள்ளி, யானைதுயிலிடம், வணக்கம், வீரம்.]
சேவகனர் - ஐயனர்.
சேவகன் - பணிவிடைகாரன், [பேயுள்ளி, வீரன், சிற்றுமுட்டி, ஐயன்.]
சேவடி - சிவந்த பாதம்.
சேவலங்கொடியோன், சேவற்கொடியோன் - முருகன்.
சேவல்-கோழியினுண், [காவல், சேறு, மயிலொழிந்த பறவையினுண்.]
சேவனை - சேவிப்பு, வணக்கம்.
சேவாலங்கொட்டை-நேர்வாளம்.
சேவாலிகம் - கருநொச்சி.
சேவிதம் - சேவகம்.
சேவித்தல் - வணங்கல், ஊழியஞ்செய்தல்.
சேவியம் - வெள்ளைவெட்டிவேர்.
சேவை* - ஊழியம், வழிபாடு.
சேவையூர் - சிதம்பரம்.
சேறல் - எழுச்சி, நடத்தல்.
சேறு - அளறு, [இனிமை, கள், தேன், திருவிழா, தித்திப்பு.]
சேற்கண்ணி - அரிதாரம்.
சேற்பனம், சேற்றுமம் - சிலேட்டுமம்.
சேனம் - பருந்து. (திருவி.)
சேனம்பாம்பு - ஓர் மீன்.
சேனு - விலாங்குமீன், ஒரு பூடு.
சேனுசமுத்திரம் - பெருஞ்சேனை.
சேனுதிபதி, சேனுதிபன், சேனுபதி - படைத்தலைவன்.
சேனுதிபன், சேனுதிராயன்-கந்தன்.
சேனுமுகம் - படையிலோர்தொகை அஃது பதர்தி மூன்றுகொண்டது.
சேனுவரையர் - தொல்காப்பிய உரையாசிரியர்.
சேனை - படை, [ஆயுதம், கடைவீதி, மிகுதி.]

## சை

சை - ஒரெழுத்து, இகழ்ச்சி.
சைகதம் - மணல், ஆற்றங்கரை.

சைகை, சைக்கினை - சாடை.
சைங்கம், சைங்கியம் - சிங்கம்.
சைசவம் - பதினாறு வயதிற்குட்பட்ட இளம்பருவம்.
சைதன்னியம் - தத்துவஞானம், ஆத்துமா, கடவுள்.
சைதியமுகம் - கமண்டலம்.
சைத்தியம் - சீதத்தன்மை, [இறப்புக்கல்வெட்டு, பலிபீடம்.]
சைத்திரகம் - சித்திரைமாதம்.
சைத்திரம் - சித்திரைமாதம், சித்திரவேலை, வெற்றி.
சைத்திரரதம் - குபேரனின் நந்தவனம்.
சைத்திராவலி - சித்திரைமாதத்துப் பௌர்ணமி.
சைத்திரி - சித்திரைமாதம், யாகமிருபத்தொன்றினொன்று.
சைத்திரியம் - தெளிவு.
சைநிகன் - சேனைத்தலைவன்.
சைந்தவி - சயிந்தவிப்பண்.
சைந்யம் - சதுரங்கபலம்.
சைமினி - ஒரிருடி, யமலோகம்.
சைமினிநகரோன் - நமன்.
சைம்மினி - இயமன்பட்டணம்.
சையம் - மலை, கல், செல்வம், குடகுமலை.
சையெனல் - இகழ்ச்சிக்குறிப்பு.
சையோகம் - ஆண் பெண்கூட்டம்.
சைரிகன் - உழவன், ஏர்மாடு.
சைரிபம் - எருது, எருமை.
சைலபித்தி - கல்லுளி.
சைலம் - கல்லுள்ளது, மலை.
சைவபூடணம் - ஓர் நூல்.
சைவம் - புலால் தின்னாமலிருக்கை, [சிவசமயம், பதினெண்புராணத்தொன்று, இளமை.]
சைவரல் - இகழ்வுறல். (சங்கற்.)
சைவர் - சிவசமயத்தார்.
சைவலம்-பாசி, தாமரைத்தண்டு.
சைவாசாரம்-சிவசமயவொழுங்கு
சைனர் - சமணர்.
சைனன் - அருகசமயத்தவன், அருகன், புத்தன்.
சைனியம்*, சைன்னியம்-சேனை.

## சொ

சொகுசா - உயர்ந்த செம்பு, தம்பாக்கு.
சொகுசு* - அழகு, நாகரிகம்.
சொக்கட்டான்* - ஓர் சூது.
சொக்கட்டான்பந்தல் - சொக்கட்டான்மனைபோற் செய்த பந்தல்.
சொக்கதேவன் - பொன்னுக்கு வீங்கி இஃது மக்களின் கன்னமிரண்டையும் வீங்கப்பண்ணுமொரு நோய்.
சொக்கநாதன், சொக்கலிங்கன் - சோமசுந்தரக்கடவுள்.
சொக்கப்பனை* - விளக்கீட்டிலெரிக்குமோர் செய்கைவிருட்சம்.
சொக்கம் - கலப்பின்மை, தூய்மை, மேன்மை, நன்மை, அழகு, ஓர் கூத்து.
சொக்கரை - சிறிய அடைப்பு, மதில் முதலியவற்றின் துவாரம்.

சொக்கலி - மூக்கிலிச்செடி.
சொக்கறை - சொக்கரை.
சொக்கா, சொக்காய் - ஒருவித அங்கி.
சொக்காவி, சொக்காளி - சிறு பூளைப்பூடு.
சொக்கு - சொக்கென்னேவல், அழகு, கண்தூக்கம், சோர்வு, மயக்கு, பொன்.
சொக்குதல் - நினைவுமயங்கல், சோர்வெய்தல், கண்ணுறக்கமாதல்.
சொக்குப்பொடி* - மயங்கிக் கண்ணுறங்குமாறு பிறன்மீது தூவும் பொடி.
சொச்[illegible] - மிச்சம், [குறை, மா[illegible] ணவட்டி.]
[illegible] - சுகம், சௌக்கியம்.
[illegible]னம் - சரியிடம்.
[illegible]கு - கடுகு, கிலுகிலுப்[illegible]ச்செடி, சோம்பற்றன்மை.
[illegible]டுகு - சொறி, பொடுகு.
[illegible]ாடுதலை - போகணி.
[illegible]சாட்டா - ஓர் வகைப்பட்டையம்.
[illegible]சாட்டு - குட்டு, சொட்டென்னேவல், திவலை, குற்றம், [துண்டு.]
சொட்டை - பள்ளம், கோணல், [பரிகாசம், ஓராயுதம்.]
சொண்டி - வேர்க்கொம்பு.
சொண்டு - தலையழுக்கு, [பறவை மூக்கு, உதடு, ஆயுதநுனி, கனத்தவிளிம்பு, நிந்தை.]
சொதை - ஐசுவரியம்.
சொத்தி - நொண்டி, முடம்.
சொத்தியன் - முடவன்.
சொத்து - உடைமை, பொருள், [குறை, பசை.]
சொத்தை - புழுவண்டு முதலியன அரித்தது, [சீர்கேடு, கதுப்பு.]
சொந்தம்* - உரியது.
சொப்பனம்* - கனா.
சொம் - உரிமைப்பொருள்.
சொம்மானி - உரிமைக்காரன்.
சொயம், சொயம்பு* - சுயம்.
சொரங்கம் - கச்சோலம் (கிச்சிலிக்கிழங்கு), ஏலத்தோல்.
சொரடு-கொடுக்கி, வளையற்றடி.
சொரணை, சொருணை - சுவரணை.
சொரிகுரும்பை - ஓர் நெல்.
சொரிதரல்-பொழிதல், சுழலல்
சொரிதல் - உதிர்தல், பொழிதல், மிகுதியாக ஈதல்.
சொருகுதல் - செருகுதல்.
சொரூபம் - அழகு, உடம்பு, வடிவு, விக்கிரகம், சாயல்.
சொரூபி - உருவுடையவன்.
சொர்க்கம்* - சுவர்க்கம்.
சொர்ணம்* - பொன்.
சொர்ப்பனம்* - கனவு.
சொர்னம்* - சொர்ணம்.
சொர்ன்னசீரம் - கரும்பு.
சொர்ன்னம்* - சொர்ணம்.
சொலித்தல், சொலித்திடல் - சுவாலித்தல், பிரகாசித்தல், இடந்திடல்.
சொலிப்பு - சுவாலை, பிரகாசம்.
சொலியன் - முடக்கொத்தான்.
சொல் - சொல்லென்னேவல், பேச்சு, [எழுத்தி னேசைச்

சொல், கள், செங்நெல், நெல், செங்நெற்கதிர், புகழ்.]
சொல்லறிபுள் - கிளி.
சொல்லாடல் - சொல்லல்.
சொல்லின்பம் - சொற்சுவை.
சொல்லுறுதி - மெய்வார்த்தை.
சொல்லேருழவர் - புலவர், மங்திரிகள்.
சொல்வன்மை - சொற்சாதுரியம், வாக்குவல்லமை.
சொல்விளம்பி - கள்.
சொள்ளை - பழுதுபட்டது, சொட்டு, புழுவரித்தது.
சொறி - சொறியென்னேவல், தினவு, [காஞ்சொறிச்செடி.]
சொறிக்கல் - சுக்கான்கல், தவளைக்கல், மஞ்சட்கல்.
சொறிதல் - பிருண்டல்.
சொறிமண்டலி - ஓர் பாம்பு.
சொறியன் - தவளை.
சொர்க்கம் - சுவர்க்கம், [மூலை.]
சொற்குறி - சூதபாஷாணம்.
சொற்சாதுரியம் - வாக்குவிற்பன்னம்.
சொற்சோர்வு - சொல்விழுக்கு.
சொற்பம்* - அற்பம், சிறியது.
சொற்பனம் - சொப்பனம்.
சொற்றல் - சொல்லல்.
சொற்றுணை - சொல்லுதவி.
சொனகு - பெரும்புல்.
சொனுகம் - உத்தாமணி.
சொன்றி - சோறு.
சொன்னகாரர் - தட்டார்.
சொன்னசீரம் - கரும்பு.
சொன்னபேதி - ஓர் மருந்து.
சொன்னமயம் - பொன்னிறம்.
சொன்னமாக்கி - பவளபாஷாணம்.
சொன்னம் - பொன்.
சொன்னல் - சோளம், இரும்பு.

## சோ

சோ-ஓரெழுத்து,மதில் (விநாய), வாணாசுரன்நகர்.
சோகம்-துன்பம், சோர்வு, [உண்டை, சோம்பல், தொடை, பஞ்சபாணத் தவத்தையினென்று அஃது வெதுப்புந் தின்பனதெவிட்டலுமாயிருத்தல்.]
சோகரியம், சோகரீயம் - சௌகரியம்.
சோகாக்கினி - மி[illegible]
சோகாப்பு - துயரம்.[illegible]
சோகாரி - கடம்பு.
சோகி - பலகறை, பிடா[illegible]
சோகித்தல் - துயரப்படுத[illegible]
சோகு - பிசாசம்.
சோகை* - ஓர் நோய்.
சோங்கம் - கிச்சிலிக்கிழங்கு.
சோங்கு - ஓர் மரக்கலம், குருகு, மறத்தல், மலையின்கண் சோலை.
சோசியம்* - சோதிடசாத்திரம்.
சோச்சி - சோறு (இது பாலகர் கூறுவது.)
சோடசம் - பதினாறு.
சோடசவுபசாரம், சோடசோபசாரம் - பதினாறுவகை வழிபாடு அஃது அடைகாய்தரல், அமுதமேந்தல், ஆசமனநீர்தரல், ஆடைசாத்தல், கருப்பூர

தீபமேந்தல், கால்கழுநீர்தரல், கைகழுநீர்தரல், தவிசளித்தல், தேய்வைபூசல், நறும்பு கைகாட்டல், நீராட்டல், மஞ்சளரிசிதூவல், மந்திரமலரானருச்சித்தல், மலர்சாத்தல், முப்புரிநூறரல், விளக்கிடல்.
சோடன் - சோம்பன், மூடன்.
சோடித்தல்* - அலங்கரித்தல்.
சோடிப்பு, சோடினை - அலங்காரத்திற்கு வேண்டுவன.
சோடு - இரண்டு, கவசம்.
சோடை - வறட்சி. (தணி.)
சோஷை - சோர்வு, வறட்சி.
சோட்டா* - வளைதடி.
சோணகிரி, சோணசைலம்-திருவண்ணாமலை.
சோணங்கி - ஒருவகை நாய்.
சோணநதி - கங்கையினொரு உபநதி.
சோணம் - சிவப்பு, தீ, இரத்தம், ஓர் யாறு.
சோணாடு - சோழநாடு.
சோணிதம் - சுரோணிதம், இரத்தம், சிவப்பு.
சோணை - சோணைநதி, காதினருகு, சோணசைலம், அருணைமாநகர், புகையிலை முதலியவற்றி னடிப்புறம்.
சோதரன் - சகோதரன்.
சோதரி - சகோதரி.
சோதனம் - சோதித்தல், சுத்தஞ்செய்தல்.
சோதனி - துடைப்பம். (சேது).
சோதனை - ஆராய்வு, சோதிப்பு, பிரமாணம், புடமிடுகை.
சோதி - பிரகாசம், ஒளி, சோதியென்னேவல், [கடவுள், கருப்பூரம், சுவாதிநாள், சூரியன், தீ, பூநாகம், வரன்மீன், இரவெரிமரம்.]
சோதிடம் - சோதிடசாஸ்திரம்.
சோதிடர் - சோசியர்.
சோதித்தல் - ஆராய்தல், [இணங்கல், பிரகாசித்தல்.]
சோதிப்பிழம்பு - ஒளிப்பிழம்பு, கடவுள்.
சோதிமயம் - ஒளியுருவம், வாலுளுவை.
சோதிரூபம் - ஒளிவடிவு.
சோத்தம் - அஞ்சலி. (திருக்.)
சோத்தியம் - அதிசயம், சுத்தம், தவறு.
சோத்திரம் - காது.
சோத்திரியம்* - தக்கோர்க்களித்த நிலம்.
சோத்து - அஞ்சலி. (தேவா.)
சோபகிருது - ஓராண்டு.
சோபம்-சோர்வு, ஆயாசம், சோம்பல், [ஒளி, பத்துக்கோடி, கோடாகோடி.]
சோபலாங்கி* - சோம்பன்.
சோபனம் - முகூர்த்தம், அழகு, சுபம், தாமரை, வாழ்த்து, ஒளி.
சோபாலிகை-அடுப்பு, விரிதூறு, வெண்ஞெச்சி.
சோபானம் - கற்படி, தாழ்வாரம், நன்னிமித்தம், வசதி.
சோபித்தல் - ஒளிசெய்தல்.
சோபை - அழகு, ஒளி.
சோப்பளாங்கி - சோம்பன்.
சோமசம் - பால்.

சோமசுதன் - புதன்.
சோமசுந்தரன், சோமசேகரன், சோமதாரி, சோமநாதன், சோமேசன், சோமேசுரன் - சடையில் சந்திரனை யணிந்த சிவன்,
சோமதாரி - இந்துப்பு.
சோமநாதி - ஓர் பெருங்காயம்.
சோமபானம் - மதுபானம்.
சோமம் - ஆகாயம், நீர், வாயு, அமுதம், கள், ஆட்டாங்கொடி.
சோமலிங்கன் - சோமாரணியேசுரன்.
சோமவல்லரி - பொன்னுங்காணி.
சோமவல்லி - சீந்தில்.
சோமவாரம் - திங்கட்கிழமை.
சோமன் - சீலை, [ஓர் வள்ளல், காற்று, சந்திரன், கருப்பூரம், சவக்காரம், அட்டவசுக்களி லொருவன், சிவன்.]
சோமாரணியம் - ஓர் வனம்.
சோமாறி* - சோறு + மாறி = தனது வீட்டுச்சோற்றை நீக்கி ஊரார் சோறு தின்பவன்.
சோமாறுதல் - இரவல்வாங்குதல், திருடுதல், ஒருத்தியைப் பலர் கூடுதல்.
சோமுகன் - வேதங்களைக் கவர்ந்த ஓரசுரன்.
சோம்பலம் - சேங்கொட்டை.
சோம்பல் - மந்தம், மயக்கம்.
சோம்பாகி - சமையற்காரன்.
சோம்பு - பெருஞ்சீரகம், [தாமதகுணத்தொன்று, சோம்பென்னேவல், மந்தம்.]
சோம்புதல் - தாமதித்தல், வாட்டங்கொள்ளுதல்.
சோம்பேறி - சோம்பலாயிருப்பவன், [சுவர்ணபேதி.]
சோரஸ்திரீ - விபசாரி.
சோரபுருஷன் - கள்ளநாயகன்.
சோரம் - விபசாரம், களவு.
சோரவிடுதல் - கவனியாது விட்டுவிடுதல், தவறவிடுதல்.
சோரன் - திருடன், [ஆட்டுக்குட்டி.]
சோராவாரி - கொள்ளை.
சோரி - இரத்தம், மழை, சிறுசெருப்படை.
சோர்தல் - தளர்தல், பொசிதல், வடிதல், வாடல், தவறுதல்.
சோர்வு - அயர்ச்சி, தளர்வு, மறதி, மெலிவு, வதக்கம், நிறையழிவு.
சோலி* - காரியம், தொந்தரவு, மார்க்கச்சு.
சோலை* - தோப்பு, மரச்செறிவு.
சோலைமலை - மதுரைக்கருகேயுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.
சோவெனல்* - ஒலிக்குறிப்பு.
சோழகம் - தெற்கு, தென்காற்று.
சோழங்கன் - சோழன்.
சோழமண்டலம் - சோழதேசம்.
சோழன் - தமிழ்நாட்டு மூவேந்தரிலொருவன்.
சோழியக்கூடை - சாட்டுக்கூடை, மண்ணள்ளுங்கூடை.
சோழியர் - ஒரு வேளாள சாதியார்.
சோழியன் - ஓர் வேளாளன், மண்வெட்டி.

சோளம் - ஓர் பயிர், சங்கஞ்செடி.
சோளனு - ஒருவிதப் பை.
சோளிகை - ஓர் கூடை, பிச்சைக் காரர் பை.
சோறு - அன்னம், கற்றாழை முதலியவற்றின் சோற்றி, [பரணிநாள்.]
சோறுகொல்லி - அன்னபேதி, பெருந்தீனிக்காரன்.
சோற்றி - கற்றாழை முதலியவற்றின் சோறு.
சோற்றுக்கற்றலை* - ஓர் மீன்.
சோனகம்-ஐம்பத்தாறு தேசத்து ளொன்று, பதினெண்பாடையிலொன்று.
சோனகர் - துலுக்கர்.
சோனுமாரி, சோனுவாரி*-பெருமழை, விடாமழை.
சோனை - விடாமழை, திருவோணநாள்.

## சௌ

சௌகதன் - சூனியவாதி, புத்தன்.
சௌகந்தி - கந்தகபாஷாணம், ஒருவகை மாணிக்கம் (சிலப்ப)
சௌகந்திகம் - கருங்குவளை, செங்குவளை, பதுமராகமணி.
சௌகரியம்* - சுகம், வசதி.
சௌக்கியம்*-சுகம், சந்தோஷம்.
சௌசம் - சுத்தம்.
சௌசன்னியம் - பட்சம், அன்பு.
சௌசிகன் - தையற்காரன்.
சௌசேயன் - வண்ணான்.
சௌடு, சவுடு - வண்டல்.
சௌண்டி - ஓர் பிதிர், திப்பிலி.
சௌண்டிகாணம் - சிரார்த்தக்கிரியையினொன்று.
சௌண்டிகர் - கள்விற்போர்.
சௌதம் - மலிவு, அரமனை.
சௌதாகிரி - குதிரைவியாபாரி.
சௌதாமினி - மின்னல்.
சௌதாயம் - நன்கொடை, பந்தயப்பொருள், சீதனம்.
சௌத்தி-சக்களத்தி, [சதுர்த்தி.]
சௌநந்தி - பலதேவன்.
சௌந்தரம் - அழகு.
சௌந்தரலகிரி - பார்வதியை வியந்து கூறுமொரு நூல்.
சௌந்தரன், சௌந்தரியன்-அழகன்.
சௌந்தரி - அழகி, பார்வதி.
சௌந்தரியம், சௌந்தரீகம் * - பேரழகு.
சௌபத்திரேயன் - அபிமந்யன்.
சௌபம் - அரிச்சந்திரன்பட்டணம்.
சௌபலன் - சகுனி. (பார).
சௌபன்னம் - சுக்கு, மரகதம்.
சௌபாக்கியம் - மிகுபாக்கியம், நித்தியயோகத்தொன்று.
சௌபாஞ்சநம் - முருங்கைமரம்.
சௌமன் - புதன்.
சௌமிய - ஓராண்டு.
சௌமியத்துவம், சௌமியம் - அழகு, சாந்தம், மனவொடுக்கம்.
சௌமியநாராயணன் - திருமால்.
சௌமியம் - அழகு, சாந்தம்.
சௌமியர் - சாந்தர், முனிவர்.

சௌமியன் - அருகன், சாந்தன், புதன், சிவன்.
சௌமேசகம் - பொன்.
சௌரகன் - நாவிதன்.
சௌரப்பியன் - குபேரன்.
சௌரமானம் - சூரியமாதம்.
சௌரம் - அட்டாதசவுப புராணத்தொன்று, சூரம், சூரியமாதம், மயிர்கழிக்கை.
சௌராஷ்டிரம் - ஓரிராகம், ஒரு தேசம்.
சௌரி-கருடன், கன்னன், சனி, நமன், தர்க்கை, திருமால்.
சௌரியம் - வீரம், [களவு.]
சௌரியவான், சௌரியன் - சூரன், பலசாலி.
சௌரு - சவர். (உவர்ப்புடைய சுவை.)
சௌவஸ்திகன் - புரோஹிதன்.
சௌவீரகம் - இலந்தைமரம்.
சௌவீரம் - இலந்தைக்கனி, ஒரு மருந்து.
சௌளகம், சௌளம் - குடுமி வைத்தல்.
சௌளாம்பரம் - பட்டாடை.
சௌனகீயம் - சௌனக ரிஷி செய்த ஒரு உபநிடதம்.
சௌனிகன் - ஊன்விற்போன்.

## ஸ்

ஸ்கந்தன் - கந்தன்.
ஸ்கலிதம் - விழுகை.
ஸ்காந்தம் - கந்தபுராணம்.
ஸ்தம்பம் - தம்பம்.
ஸ்தம்பனம் - தம்பனம்.
ஸ்தலம் - தலம்.
ஸ்தனம் - முலை.
ஸ்தாபனம் - தாபனம்.
ஸ்தாபிதம் - நிலைநிறுத்துகை.
ஸ்தாபித்தல் - நிலைநிறுத்தல்.
ஸ்தாவரம் - தாவரம்.
ஸ்தானம்* - இடம்.
ஸ்தானிகர் - கோயிற்றலைமையாளர்.
ஸ்திதி* - இருப்பு.
ஸ்திரம்* - திரம்.
ஸ்திரீ - பெண்.
ஸ்துதி - துதி.
ஸ்தூபி - தூபி.
ஸ்தூலம் - தூலம்.
ஸ்தோத்திரம்* - தோத்திரம்.
ஸ்நானம்* - முழுக்கு.
ஸ்நேகம்* - சிநேகம்.
ஸ்பஷ்டம் - தீர்க்கம், வெட்டவெளிச்சம்.
ஸ்படிகம் - படிகம்.
ஸ்பரிசம் - பரிசம்.
ஸ்பரிசனம் - தொடுதல்.
ஸ்மசானம் - மசானம் (சுடுகாடு.)
ஸ்மரித்தல் - நினைவுகூறல்.
ஸ்மார்த்தன் - ஸ்மிருதி சம்பந்தமுடையவன்.
ஸ்மிருதி - தருமசாஸ்திரம்.
ஸ்வஸ்தி - சுவஸ்தி.
ஸ்வதந்திரம் - சுவதந்திரம்.
ஸ்வதர்மம் - கடமை.
ஸ்வபாவம் - சுபாவம்.
ஸ்வயம் - சுயம்.
ஸ்வயம்வரம் - சுயம்வரம்.
ஸ்வரம் - சுரம்.
ஸ்வரூபம் - சொரூபம்.

ஸ்வர்க்கம் - சுவர்க்கம்.
ஸ்வர்ணம், ஸ்வர்னம்-சுவர்ணம்.
ஸ்வல்பம் - சொற்பம்.
ஸ்வாதந்திரியம் - சுதந்தரம்.
ஸ்வாபாவிகம் - சுபாவம்.
ஸ்வாமி - சுவாமி.

## ஜ

ஜடம் - உடல்.
ஜடாமுனி - சடைதரித்த முனி.
ஜம்பம் - இடம்பம்.
ஜலபாதை - சலபாதை.
ஜலம் - சலம்.
ஜலவாதி - சலபாதை.
ஜனம் - சனம்.
ஜாக்கிரதை - சாக்கிரதை.
ஜாதகம் - சாதகம்.
ஜாதி - சாதி.
ஜாமம் - சாமம்.
ஜாலம் - சாலம்.
ஜீவனம் - சீவனம்.
ஜீவன் - சீவன்.
ஜெகம் செகம் (பூமி.)
ஜெந்து - செந்து.
ஜெபம் - செபம்.
ஜெயம் - செயம்.
ஜென்மம் - சென்மம்.
ஜோதி - சோதி.

## க்ஷ

க்ஷணம் - கணம்.
க்ஷத்திரியர் - இரண்டாம் வருணத்தார்.
க்ஷமித்தல் - பொறுத்தல்.
க்ஷயம்* - ஓர் நோய்.
க்ஷாத்திரம் - குரோதம்.
க்ஷாமம் - பஞ்சம்.
க்ஷீணம் ஈனம் (கேடு.)
க்ஷீணித்தல் - கெட்டுப்போதல்.
க்ஷீராப்திநாதன் - பாற்கடலிற் றுயின்ற ஸ்ரீமந்நாராயணன்.
க்ஷேத்திரக்கியன், க்ஷேத்திரக்ஞன் - ஆத்துமா.
க்ஷேத்திரம்.- ஸ்தலம்.
க்ஷேமம்* - சுகம்.

## ஸ்ரீ

ஸ்ரீ - இலட்சுமி, பாக்கியம்.
ஸ்ரீகண்டன் - சிவன்.
ஸ்ரீகரம் - இலட்சுமீகரம், பாக்கியம்.
ஸ்ரீதரன் - மகாவிஷ்ணு.
ஸ்ரீபதி - மகாவிஷ்ணு.
ஸ்ரீமான் - சீமான்.
ஸ்ரீவச்சம் - மகாவிஷ்ணுவின் மார்பிலுள்ள ஓர் மறு.

## ஞ

ஞஃகான் - ஞகரம்.
ஞண்டு - நண்டு, கற்கடகவிராசி.
ஞமலி - நாய், மயில், கள்.
ஞமன் - நமன்.
ஞயம் - நயம்.
ஞரலல் - முழங்கல்.
ஞலவல் - மின்மினிப்பூச்சி.
ஞரு - மயிற்குரல்.

## ஞா

ஞாங்கர் - இடம், இனி, பக்கம், முன், மேல், கைவேல்.

ஞாஞ்சில்-கலப்பை, மதிலுறுப்பு.
ஞாட்பு - கூட்டம், படை, சுமை, சமர், சமர்க்களம், வலி.
ஞாண் - கயிறு, வின்ஞண்.
ஞாதம் - அறியப்பட்டது.
ஞாதா - அறிவாளி.
ஞாதி - தாயத்தான்.
ஞாதியர் - பிதாவழியுறவினர்.
ஞாதிரு - அறிபவன்.
ஞாத்தல் - கட்டுதல்.
ஞாபகம் - நினைவு, [அரும்பொருள், அறிவு, இலக்கியமெடுத்துக் காட்டுதல்.]
ஞாபிதம், ஞாபிதை-அறிவித்தல்.
ஞாயம் - நியாயம்.
ஞாயர் - தாயர். (கலி).
ஞாயில் - மதிலுறுப்பு, குருவித்தலை. (சிலப்ப.)
ஞாயிறு - ஆதிவாரம், [சூரியன்.]
ஞாயிறுவணங்கி - கொழுஞ்சி.
ஞாய் - தாய். (கலி).
ஞாலமுண்டோன் - திருமால்.
ஞாலம் - பூமி, ஊமத்தை.
ஞாலல், ஞாலுதல் - தொங்குதல்.
ஞாழல் - குங்குமமரம், குங்குமம், கோங்குமரம், பலினிமரம், மயிர்க்கொன்றை, சங்குபுட்பம், பொன்னுவிரை.
ஞாழி - வள்ளைக்கொடி.
ஞாளி - கள், நாய்.
ஞாளிகம் - வள்ளைக்கொடி.
ஞாளியூர்தி - வைரவன்.
ஞாற்சி - தொங்குதல்.
ஞானசமாதி - ஞானநிட்டையினென்று.
ஞானசரிதர் - ஞானிகள்.
ஞானசாதனம், ஞானசாதனை - ஞானப்பயிற்சி.
ஞானதிருட்டி, ஞானதிருஷ்டி - ஞானவன்மையால் வருங்காரியத்தை முன்னரே உணர்தல்.
ஞானதீட்சை - ஞானோபதேசம்.
ஞானஸ்நானம் - மனத்தூய்மை செய்வதற்கு உவில்லிய நூலாரியற்றுமொரு சடங்கு.
ஞானநாயகன், ஞானபரன் - கடவுள், குரு.
ஞானபாகை - வேதநூற்பொருள்களினென்று.
ஞானபாரகன் - ஞானவறிவிலே தெளிவடைந்தவன்.
ஞானபுத்திரன் - சீஷன்.
ஞானமார்க்கம் - ஞானநிலை.
ஞானமூர்த்தி-கடவுள், சரசுவதி.
ஞானம் - அறிவு, [கல்வி, தெளிவு, நல்லொழுக்கம்.]
ஞானவல்லி - பார்வதி.
ஞானவாசிட்டம் - சீராமனுக்கு வசிட்டனுபதேசித்த ஒரு வேதாந்த நூல்.
ஞானவான் - ஞானி.
ஞானவிரல் - ஆழிவிரல்.
ஞானகாயம் - பரவெளி.
ஞானார்த்தம் - உட்பொருள்.
ஞானனந்தன் - கடவுள்.
ஞானி - பேரறிவுடையோன், [அருகன், பிரமன், கோழி.]
ஞானோபதேசம் - ஞானபோதகம் (ஞானசிரியரிடத்தே உபதேசம் பெறுகை.)
ஞான்று - ஓரிடைச்சொல், நாள், காலம்.

## ஞி

ஞிமிர் - ஒலி, நிமிரென்னேவல்.
ஞிமிறு-வண்டு, பொன்வண்டு.

## ஞெ

ஞெகிழம் - பொற்சிலம்பு.
ஞெகிழி-சிலம்பணி, சிலம்பு, தீ, தீப்பொறி, நெருப்புறுவிறகு, கொடுவேலி.
ஞெகிழ்தல் - அலேயல், அவிழ் தல், வாடுதல்.
ஞெண்டு-நண்டு, கற்கடகவிராசி.
ஞெப்தி - ஞாபகம், அறிவு.
ஞெமிர்தல் - ஒடிதல், பரத்தல்.
ஞெமுங்குதல் - அழுந்தல்.
ஞெரேலெனல் - அச்சக்குறிப்பு, ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு.
ஞெலிகோல் - தீக்கடைகோல்.
ஞெலிதல்-கடைதல், குடைதல்.
ஞெளிர் - உள்ளோசை, ஒலி.
ஞெள்ளல் - உடன்படல், ஒலித் தல், சீக்கிரம், பள்ளம், மிகுதி, மேன்மை, வீதி, சோர்வு. [சை.
ஞெள்ளெனல் - அனுகரணவோ

## ஞே

ஞேயம் - நெய், அன்பு, அறியப் படுவது, சினேகம்.
ஞேயர்-அறிவுடையோர், நேயர்.

## ஞை

ஞைஞையெனல் - இகழ்ச்சிக் குறிப்பு.

## ஞொ

ஞொள்கல்-அச்சக்குறிப்பு, இளை த்தல், அலேதல், சோம்புதல்.

## த

தகசு - ஓர் மிருகம்.
தகடு-மண்படை, [அடர்பு, இலே, ஐமைவடிவு, கம்மாறுவெற் றிலே.]
தகட்டரிதாரம் - ஓர் மருந்து.
தகண் - தடை. (சீவ. சிந்)
தகதகெனல் - ஒளிக்குறிப்பு.
தகப்பன் - தந்தை.
தகமை - குணம்.
தகம் - உட்டணம், எரித்தல், வேகம், நித்திரை.
தகாடி - சிதறவடிக்குமடி.
தகரம் - இரும்பின்மீது பூசும் ஓர் லோகம், [ஈயம், ஒரெழுத்து, தகரமரம் அது பஞ்சவிரையி னென்று, மயிர்ச்சாந்து, வாச னேப்பண்டம்.]
தகரார்*, தகராறு - தடை.
தகரை* - ஓர் சிறுசெடி.
தகர் - தகரென்னேவல், சுரூ, செம்மறியாட்டுக்கடா, துரு வாட்டேறு, பராகம், பூமி, மேடவிராசி, யாளியினண், மேட்டுநிலம், (புற), பலாசு.
தகர்த்தல் - உடைத்தல், அடித் தல், குட்டுதல்.
தகல்பாசி* - மோசக்காரன்.
தகவல்* - திருஷ்டாந்தம்.

தகவு - அறிவு, உரிமை, உவமை, ஒழுக்கம், குணம், தெளிவு, கிருபை, தகுதி, நீதி.
தகழி - அகல்.
தகழிகை - உண்கலம்.
தகளி - தகழி.
தகனக்கிரியை - ஈமச்சடங்கு (பிணத்தைச் சுட்டெரித்தல்.)
தகனப்பிரியை - சுவாகாதேவி.
தகனம் - சுடல்.
தகனன் - நெருப்பு.
தகனை - உலோகக்கட்டி.
தகன் - அக்கினி, பூரான்.
தகா* - தந்திரம், மோசம்.
தகாதது - ஒழுங்கற்றது.
தகாதா* - வழக்கு.
தகாமை - தகுதியின்மை.
தகித்தல் - சுடுதல்.
தகுணிச்சம் - ஒருவகைத் தோற்கருவி.
தகுணிதம் - வாச்சியம்.
தகுதல் - உரிமை, ஏற்குதல்.
தகுதி - உரிமை, [அறிவு, ஒழுக்கம், குணம், பொறுமை, நடுநிலைமை.]
தகுதியோர் - அறிஞர், தமர், பெருமையிற் சிறந்தோர்.
தகுவர் - அசுரர்.
தகுளம் - மகளிர்விளையாட்டு.
தகை - அழகு, அன்பு, கவசம், குணம், தகையென்னேவல், தளர்வு, பெருமை.
தகைதல் - ஆணையிடல், இளைத்தல், தடுத்தல்.
தகைத்தல் - வாட்டுதல்.
தகைப்பு - இளைப்பு, மதிற்சுற்று.
தகைமை - அழகு, குணம், பெருமை, தன்மை.
தகையணங்குறுத்தல் - களவுப் புணர்ச்சி செய்த தலைவியைக் குறிப்பினாலச்சுறுத்தல்.
தகைவிலான் - அடைக்கலாங்குருவி.
தக்க - தகுதியான.
தக்கடி - வஞ்சனை, குதர்க்கம்.
தக்கடை - தராசு.
தக்கணம் - தெற்கு, வலப்பக்கம்.
தக்கணக்கினி - வேதாக்கினி மூன்றினொன்று.
தக்கணயனம், தக்கிணயனம் - (சூரியனது தென்வீதி; அது கடக முதலாறுமாத காலம்.
தக்கணை - தெட்சணை (காணிக்கை.)
தக்கம் - ஓர் விளையாட்டு, ஒரு தரும நூல்.
தக்கராகம் - பாலைப்பண்ணின் திறமைந்தனுளொன்று.
தக்கர் - சாடி, காரியம் முடிக்குந் திறலோர்.
தக்கன் - நவப்பிரமாவிலொருவன், அட்டநாகத்தொன்று.
தக்காரி - தழுதாழை.
தக்கார் - அறிஞர், பெருமையிற் சிறந்தோர், தகுதியுடையோர்.
தக்காளி* - ஓர் செடி.
தக்காளிப்பிள்ளை - பிள்ளைப்பூச்சி.
தக்கிணம் - தெற்கு, வலப்பக்கம்.
தக்கிரம் - மோர்.
தக்கேசி - ஓர் பண்.
தக்கை - காதிடுதக்கை, [தெப்பம், பம்பைவாச்சியம், பலவகைப்பறை.]

தக்கோர் - அறிஞர்.
தக்கோலம் - வாசனைப்பண்டம், சிறுநாவற்பூ, வால்மிளகு.
தங்கச்சி* - தங்கை.
தங்கம் - உயர்ந்தபொன், பயம்.
தங்கல் - தங்குதல்.
தங்காள்-தங்கமாட்டாளென்னும் வினைமுற்று, [தங்கை.]
தங்கான் - தங்கமாட்டானென்னும் வினைமுற்று, [அரையென்னுமெண்.]
தங்குடித்தமர் - தாயத்தார்.
தங்குதல் - இருத்தல், தாமதித்தல், தடைபடல்.
தங்கை, தங்கைச்சி* - இளையாள், குவளைமலர்.
தங்கையைக்கொல்லி - சிறியாணங்கை.
தசகண்டன் - இராவணன்.
தசக்கிரீவன் - தசகண்டன்.
தசமபாகம் - பத்திலொருபங்கு.
தசமஸ்கந்தம் - பாகவதத்தில் பத்தாவது பாகம்.
தசமி - பத்தாந்திதி.
தசமுகன் - இராவணன்.
தசமூலம் - பத்துவகை மருந்துவேர் அவை கண்டங்கத்திரி, சிறுமல்லிகை, சிறுவழுதுணை, தழுதாழை, நெரிஞ்சி, பாதிரி, பெருங்குமிழ், பெருமல்லிகை, வாகை, வில்வம்.
தசம் - பத்து, சிவிகை.
தசரதன் - சீராமன்தந்தை.
தசவாயு - தேகத்தினிற்கும் பத்துவாயு அவை அபானன், உதானன், கிருகரன், கூர்மன், சமானன், தனஞ்சயன், தேவதத்தன், நாகன், பிராணன், வியானன்.
தசனப்பொடி - பற்காவி (தசனம்=பல்) இது தாசிணுப்பொடி என வழங்குகிறது.
தசாங்கம் - மன்னர்க்குரிய பத்துறுப்பு அவை ஊர்-கரி-கொடி-செங்கோல் - நாடு - பரி - மலைமாலை - முரசு - யாறு
தசாவதாரம் - திருமாலவதாரம் பத்து அவை ஸ்ரீராமன், கிருஷ்ணன், கற்கி, கூர்மம், நரசிங்கம், பரசிராமன், பலராமன், மச்சம், வராகம், வாமனம்.
தசானனன் - இராவணன்.
தசிரம் - உட்டுளை.
தசும்பர் - குடம்.
தசும்பு-குடம், கொப்பரி,பொன்.
தசை - நிலைமை, [ஊன், புலால்.]
தசைநார் - தசைநரம்பு.
தஸ்கரம் - களவு.
தஸ்தாவேஜு* - பத்திரம்.
தச்சன் - மரவேலைக்கம்மியன், [சித்திரைநாள்.]
தச்சிச்சி - தச்சப்பெண்.
தச்சு - தச்சன்றொழில், தச்சன்.
தஞ்சம் - அடைக்கலம், [துணை, பற்றுக்கோடு, எளிமை, தாழ்வு, பெருமை.]
தஞ்சு - பற்றுக்கோடு. (இரா)
தஞ்சை - தஞ்சாவூர்.
தடக்கம் - தடை.
தடக்கை - விசாலமான கை.
தடங்கண் - பெரிய கண்.

தடங்கல் - தடை, [தாமதம், அடைப்பு.]
தடதடத்தல் - நாக்குத்தட்டல்.
தடதடெனல் - தள்ளாடுதல்.
தடஸ்தன் - ஞானி, பாரபட்சமி ல்லான்.
தடபுடல்* - சந்தடி.
தடம் - விசாலம், ஓமகுண்டம், கரை, குளம்,தராசு,துலாராசி, பெருமை, மலை, மலைப்பக்கம், வரம்பு, வழி.
தடயம், தடையம்*-தட்டுமுட்டு, பலபண்டம்.
தடவல் - தடவுதல், [வீணைவாசி த்தல், அருமை, ஆறென்னு மெண்.]
தடவற்புலு - அறுபது.
தடவு - தடவென்னேவல், [தூப க்கால், பெருமை, வளைவு, ஓமகுண்டம். (பிங்)]
தடவுதல் - வருடல், [பூசுதல், வீணைவாசித்தல்.]
தடவை* - தரம், முறை.
தடறு - ஆயுதவுறை.
தடா - பானை, மிடா, பெருமை.
தடாகம் - குளம். [(சேது)
தடாரி - தடாரியென்னேவல், பம்பை, பேரிகை, மத்தளம், வாச்சியப்பொது, உடுக்கை.
தடாரித்தல் - அடித்தல், ஊடுரு வுதல்.
தடி - வளைதடி, [தண்டு, தடியெ ன்னேவல், உடம்பு, உலக்கை, ஊன், சிறுவயல், மின்னல், வயல், வில், பற்றுக்கோடு.]
தடிதல் - அறுத்தல், தறித்தல், வெட்டல், மின்னுதல்.
தடித்தல் - கனத்தல், [புடைத் தல், மின்னுதல்.]
தடித்து - கனத்து என்னும் வினை யெச்சம், [மின்னல்.]
தடிப்பு - கனப்பு, பருமை, [வீக் கம், தழும்பு.]
தடிமன்-பருமை, [சலதோஷம்.]
தடிமிண்டன், தடியன்-முரடன், அறிவிலான்.
தடினி, தடிநி - யாறு.
தடுக்கு - சிறுபாய், தவிசு.
தடுத்தல் - மறித்தல், விலக்கல், [ஆணையிடல்.]
தடுப்பு - தடுத்தல்.
தடுமாற்றம்-கலக்கம்,மாறுட்டம்.
தடை - மறியல் (தடுத்தல்), [கவ சம்.]
தட்சகன் - அட்டநாகத்தொன்று, தக்கன், விசுவகர்மன்.
தட்சணம் - உடனே, [தெற்கு, வலப்பக்கம்.]
தட்சணக்கினி - வேதாக்கினி.
தட்சணமூர்த்தி - சிவன், அகத் தியன்.
தட்சணயனம் - சூரியன் தெற் கில் சஞ்சரிக்கும் ஆடிமுதல் மார்கழி ஈருன ஆறுமாதகா லம்.
தட்சணை,தட்சிணை*-காணிக்கை.
தட்சப்பிரசாபதி - தக்கன்.
தட்சாரி - வீரபத்திரன்.
தட்சிணசைலம் - பொதியமலை.
தட்சிணவர்த்தம் - வலம்புரிச் சங்கு.
தட்டம் - தட்டையான பாத்தி ரம், உண்கலம், பல், பாம்பி

னச்சுப்பல், மக்கட்படுக்கை, நீர்நிலை, யானைசெல்புறவழி.
தட்டல் - அடித்தல், [ஆணையிடல், கிட்டல், தடுத்தல், தாளம்போடல், வீணைவாசித்தற்றொழிலின்னுமு.]
தட்டழிதல் - நிலைகுலைதல்.
தட்டற்புலு - ஐம்பது.
தட்டாத்தி* - தட்டாரப்பெண்.
தட்டாரப்பூச்சி - ஓர் பூச்சி.
தட்டாரப்பொட்டு* - வெளிவேஷம்.
தட்டான் - பொற்கொல்லன், ஓர் பூச்சி, [கோஷ்டம், புடோல், கிழக்குரங்கு. (விறலி. 890).]
தட்டி - படல், வினையெச்சம், [காவல், கேடகம், பலகை.]
தட்டு - தட்டென்னேவல், தராசு முதலியவற்றின் தட்டு, [கம்பு முதலிய சில புன்பயிர்த்தாள், குற்றம், திரிகை, தேர்நடு, பரிசை, மரவட்டணை, முறம், வட்டம், வளைவு.]
தட்டுக்கிளிபாய்தல் - ஓர் விளையாட்டு.
தட்டுண்டுபோதல்* - அடிப்பட்டுப்போதல்.
தட்டுப்பாய்தல்-ஓர் விளையாட்டு.
தட்டுமாறுதல்* - நிலைமாறுதல்.
தட்டுமுட்டு* - தளபாடம் (பலசாமான்.) [ரை.]
தட்டுவாணி - வேசி, [சிறு குதி
தட்டை - பரந்த வடிவுள்ளது, [கவண், கிளிகடிகோல், தினைத்தாள், மூங்கில், மொட்டை.]
தட்டைக்காரை* - ஓர் மீன்.
தட்டையம்மை* - ஓர் வைசூரி.
தட்டோடு* - தட்டையோடு.
தட்பம் - குளிர்ச்சி.
தணக்கு - தணக்கமரம், நுணமரம், வால். (சீவக. சிங்.)
தணத்தல் - நீங்கல், பிரிதல், போகல்.
தணலம் - எருக்கமரம்.
தணல் - தழல்.
தணல்விழுங்கி - தீக்குருவி.
தணவம் - அரசமரம்.
தணிகை - திருத்தணிகைமலை (சுப்பிரமணியர் ஸ்தலம்.)
தணிசு - குறைவு, தாழ்ச்சி.
தணிதல் - ஆறுதல், குளிர்தல், குறைதல், பருத்தல்.
தணித்தல் - அவித்தல், சாந்தப்படுத்தல், இளக்குதல், குறைத்தல்.
தணியல் - கள்.
தணிவு - ஆறுதல், குறைவு, கீழ்மை, சாந்தம்.
தண் - குளிர்ச்சி.
தண்கதிர், தண்சுடர் - சந்திரன்.
தண்டகநாடு - காஞ்சிபுரம்.
தண்டகமாலை - முந்நூறு வெண்பாக்களால் பாடுமொரு பிரபந்தம், புணர்ச்சிமாலை.
தண்டகம் - ஓர் வனம், தொண்டைமண்டலம், ஆபரணம், வடமொழியினோர் செய்யுள், கரிக்குருவி, குறுந்தறி.
தண்டகன் - ஓர் மன்னன், ஓர் அரக்கன்.
தண்டகாரணியம்- தண்டகவனம்.

தண்டதரன்-தண்டேசன், நமன், வீமன், குயவன், மன்னன்.
தண்டநாயகன் - நந்தி, சேனுபதி, அரசன்.
தண்டபாணி - தண்டேசன், யமன், திருமால்.
தண்டமிழ் - இனிய தமிழ்.
தண்டம் - தண்டனை, தெண்டம் (வணக்கம்), அரசன் கொடுங்கோன்மையா னிறை யிறுத்தல், [ஒரு புருடப்பிரமாணக்கோல், வளைதடி, நாடு, யானை செல்வழி, யானைத்துதிக்கை, குடைக்காம்பு, படை, திரவிய சாலை, பற்றுக்கோடு.]
தண்டலை - ஓரூர், [சோலை, பூந்தோட்டம்.]
தண்டல் - பணச்சேகரிப்பு, [தோணித்தலைவன் [Tendal.]
தண்டவாளம்* - உருக்கிரும்பு.
தண்டனை* - ஆக்கினை.
தண்டன் - வணங்கல், [அரசன், நமன், குலாலன்.]
தண்டாச்சிறப்பினள் - சரஸ்வதி.
தண்டாமை - நீங்காமை.
தண்டாயுதபாணி - முருகன்.
தண்டாரம் - குலாலசக்கிரம், மதயானை, வில்.
தண்டி - மிகுதி, தண்டியென்னேவல், [ஓர் புலவன், தண்டேசுரன், நமன், வாயில்காப்போன், தண்டற்காரன்.]
தண்டிகை - சிவிகை, ஓர் கழுத்தணி.
தண்டித்தல் - சிட்சித்தல், [வெட்டடல்.]
தண்டியலங்காரம் - ஒரு நூல்.
தண்டிலம்-திண்ணை, ஹோமம்பண்ணுதற்குக் கற்பித்த இடம். (சீவக. சிந்.)
தண்டு - பணம் வசூல் செய்யென்னேவல், வளைதடி, வாழைத்தண்டு, சேனை, ஆண் குறி, [ஓந்தி, சிவிகை, தண்டாயுதம், துளையுடைப்பொருள், நமனுயுதம், பூவிதழ், மிதுனராசி, மூங்கில், வரம்பு, வீணை.]
தண்டுக்கீரை - ஓர் கீரை.
தண்டுலம்- அரிசி, வாயுவிளங்கம்.
தண்டெலும்பு - முதுகெலும்பு.
தண்டேசுரன் - ஓர் சிவதொண்டன்.
தண்டை - மாதர்காலணியிலொன்று, [பிரப்பங்கேடகம், வால், தொந்தரை.]
தண்டோரா* - பறைசாற்றல்.
தண்ணடை - நாடு, மருதநிலத்தூர், பச்சிலை.
தண்ணம் - ஒரு கட்பறை, காடு, குளிர், பறைப்பொது, மழு.
தண்ணவன் - சந்திரன்.
தண்ணளி - கிருபை.
தண்ணியகுலம் - கீழ்ச்சாதி.
தண்ணீர் - குளிர்ந்தநீர்.
தண்ணீர்மாறுதல் * - நீர்பாய்ச்சுதல்.
தண்ணுமை - உடுக்கை, உறுமிமேளம், ஒரு கட்பறை, பேரிகை, மத்தளம்.
தண்மை - சாந்தம், இகழத்தகு பொருள், எளிமை, குளிர்ச்சி, தாழ்வு, புல்லறிவு.

ததம் - அகலம், விரிவு.
ததல் - நிலே.
ததாகதன் - புத்தன்.
ததாஸ்து - அப்படியாகட்டும்.
ததி - தயிர், பருவம், கூட்டம்.
ததிசாரம் - வெண்ணெய், தயிர் கடைதறி.
ததிசி, ததீசி - ஓரிருடி.
ததிமுகன் - சுக்கிரீவன்மாமன், மதுவனங்காவலன்.
ததியோதனம், தத்தியோதனம்-* தயிரன்னம்.
ததும்பல் - மூடிப்பாய்தல், வழிதல், அசைதல், நிறைதல்.
ததைதல் - நெருங்கல், வெளிப்படாதிருத்தல்.
தத்தம் - ஈகை, சுவீகாரம்.
தத்தல் - தாண்டல், பாய்தல்.
தத்தளித்தல் - தடுமாறுதல், முட்டுப்படுதல்.
தத்தாங்கி - மகளிர்விளையாட்டு.
தத்தாத்ரேயன் - அத்திரிக்கு அநசூயையிடம் பிறந்த ஓர் இருடி.
தத்திகாரம் - பொய்.
தத்தியம் - மெய்.
தத்து - தத்தென்னேவல், சுவீகாரம், கண்டம், [மோசம், கிரகவொழுங்கு.]
தத்துதல் - பாய்தல், கடத்தல்.
தத்துவப்பிரகாசம் - ஓர் நூல்.
தத்துவம் - பலம், உண்மை, புத்தி, சுபாவம், பரமான்மா.
தத்துவன் - கடவுள், உண்மையுள்ளோன், அருகன், உருத்திரன்.
தத்துவாதீதன் - கடவுள்.
தத்தை-கிள்ளே, முன்பிறந்தாள்.
தநயன், தனயன் - மகன்.
தநயை, தனயை - மகள்.
தந்தக்காரி - வாதமடக்கி.
தந்தக்குறி - பற்குறி.
தந்தசடம் - எலுமிச்சை, விளாமரம்.
தந்தசடை - புளியாரை.
தந்தசுத்தி - பல்விளக்கல்.
தந்தசூகம் - பாம்பு.
தந்தபலம் - விளாமரம்.
தந்தபலே - திப்பிலி.
தந்தம் - யானேக்கொம்பு, [பல், மலேமுடி,]
தந்தவக்கிரன் - இடையெழுவள்ளலிலொருவன்.
தந்தாவளம் - யானே.
தந்தி - கம்பி, [யாழ்நரம்பு, ஆண்யானே, யானே, நெய்பவன்.]
தந்திபீசம் - நேர்வாளம்.
தந்திமுகன் - விநாயகன்.
தந்தியுரியோன் - சிவன்.
தந்திரகம் - சீந்தில், நூதன ஆடை.
தந்திரம் - உபாயம், [கல்விநூல், பஞ்சினூல், படை, வஸ்திரம், யாழ்நரம்பு.]
தந்திரர் - கந்தருவர்.
தந்திரவாயன் - சிலம்பி, நெய்வோன்.
தந்திரி - தந்திரக்காரன், மந்திரி, யாழ்நரம்பினேசை, யாழ்நரம்பு, குழலின்துளே. (பெரியபு. ஆனய)
தந்திவீழரியோன் - சிவன்.

தந்து - கல்விநூல், பஞ்சினூல், தந்தென்னெச்சம், தந்திரம்.
தந்துகடம், தந்துவாயன் - சிலம்பிப்பூச்சி.
தந்துகம், தந்துபம் - கடுகு.
தந்துரம், தந்துலம் - தாமரைக் கொடி.
தந்துவர், தந்துவாயர் - நெய்வோர்.
தந்தை - தகப்பன்.
தபசி* - தவசி.
தபசு* - தவம்.
தபதியர் - கம்மாளர், தச்சர்.
தபம் - தவம், [மாசிமாதம், வெப்பம்.]
தபலை - சருவக்குடம்.
தபனம் - தாகம், வெப்பம், வெய்யிற்காலம்.
தபனன் - சூரியன், நெருப்பு, கொடுவேலி.
தபனீயம் - பொன்.
தபன் - சூரியன்.
தபா* - தடவை.
தபால்* - அஞ்சல்.
தபித்தல் - தவித்தல்.
தபுதல் - கெடுதல், சாதல்.
தபுதாரநிலை - மனைவிக்காகப் புலம்பல்.
தபோதனர் - முனிவர்.
தபோநிதி - தவச்செல்வன்.
தபோபலம்* - தவப்பலன்.
தபோபுத்திரன் - தவத்தினுற் பெற்ற பிள்ளை.
தபோமகிமை* - தவமேன்மை.
தப்பட்டை* - ஓர் பறை.
தப்பவைத்தல் - தீங்கிற்கு விலக்கிக்காத்தல்.
தப்பளை - தவளை, ஓர் மீன்.
தப்பிதம், தப்பு - குற்றம்.
தப்புதல் - சீலைதப்புதல், விலகுதல், பிழைத்தல், தவறுதல்.
தப்புமேளம் - ஓர் பறை.
தப்பை - முரிந்தவென்பு பொருந்தவைத்துக் கட்டுமட்டை, மூங்கிற்பற்றை.
தமக்குதல் - தணித்தல், நிரப்புதல்.
தமக்கை - அக்காள்.
தமசு - இருள், தாமசம்.
தமதம் - தன்னையடக்கல், பாவம், இருள், சேறு, இராகு.
தமப்பன் - தகப்பன்.
தமம் - இராகு, இருள்.
தமயந்தி, தமையந்தி* - நளமன்னனின் தேவி.
தமயன், தமையன் - அண்ணன்.
தமரகம் - உடுக்கு, வங்கம்.
தமரகவாயு - நெஞ்சடைப்பு.
தமரத்தை - ஓர் மரம்.
தமரம் - அரக்கு, பேரொலி.
தமரல் - பெரிதொலித்தல்.
தமராணி - துளையாணி.
தமருகம் - உடுக்கு.
தமரூசி - துளையூசி.
தமர் - உறவோர், துளை.
தமள் - தம்மவள்.
தமனகம் - மருக்கொழுந்து
தமனி - வன்னிமரம்.
தமனியம் - பொன்.
தமனியன் - இரணியன், சனி, பிரமன்.
தமன் - தம்மவன்.
தமாசு* - கேலி, பரிகாசம், வேடிக்கை.

தமாலம் - இலை, பச்சிலைமரம்.
தமி - தனிமை, ஒப்பின்மை, இரவு.
தமிசு - வேங்கைமரம்.
தமியம் - கள்.
தமிழத்தி, தமிழிச்சி - தமிழப் பெண்.
தமிழர் - ஒரு மொழியினர்.
தமிழ் - இனிமை, ஓர் மொழி, நீர்மை.
தமிழ்நாடன் - பாண்டியன்.
தமிழ்நாடு - பாண்டி.
தமிழ்மலை - பொதியமலை.
தமிழ்முனி - அகத்தியன்.
தமிழ்வாணர் - தமிழ்ப்புலவர்.
தமிழ்வேதம் - திருக்குறள், நாலாயிரப்பிரபந்தம், திருவாசகம், தேவாரம்.
தமுக்கம் - யானையைப் போருக்கனுப்புமிடம்.
தமுக்கு* - ஓர் பறை.
தமையம் - அரிதாரம்.
தமோகரன் - சந்திரன்.
தமோமணி - மின்மினி.
தம் - அசைச்சொல், சாரியை (உ-ம்.) எல்லார் தம்மையும், கொடை, மகாவாக்கியம் நான் கின்னென்று, மனைவி.
தம்பட்டம்* - ஓர் பறை.
தம்பட்டை* - ஓரவரை.
தம்பதி - ஸ்திரீபுருடன்.
தம்பம் - தூண், [யானைத்தறி, கவசம், சங்கீதம், நிலை, பற்றுக்கோடு.]
தம்பலடித்தல் - பயிருழவுழுதல்.
தம்பலப்பூச்சி - இந்திரகோபம்.
தம்பலம் - வெற்றிலைச்சாறு, இந்திரகோபம்.
தம்பலாடுதல் - சேறுக்குதல்.
தம்பல் - சேறு, தம்பலம்.
தம்பாக்கு* - தங்கமும் செம்புங் கலந்த லோகம்.
தம்பி - பின்பிறந்தோன், [நிறுத் தென்னேவல்.]
தம்பித்தல் - வாயு முதலிய வடக்கல், அசைவற நிறுத்தல்.
தம்பிராட்டி - உடன்கட்டையேறுபவள், தலைவி.
தம்பிரான் - திருக்கூட்டத் தலைவன், [கடவுள், கட்டளைப்படி நடத்துபவன்.]
தம்புரு, தம்பூரு - ஓர் வீணை.
தம்மவன் - சுற்றத்தான்.
தம்மனை - தாய். (மணிமே.)
தம்மில்லம் - மயிர்முடி. (சூடா))
தம்முன் - தமையன். (பார)
தம்மை - அன்னை.
தயக்கம் - கலக்கம், [அசைவு, ஒலிதரல்.]
தயங்கல் - திகைத்தல், [அசைதல், ஒளிசெய்தல்.]
தயரதன் - தசரதன்.
தயவு* - தயை.
தயாசீலன் - மனவுருக்கமுடையவன்.
தயாபரன், தயாமூர்த்தி - கடவுள் (கிருபையுடையவன்).
தயார்* - ஆயத்தம்.
தயாலு - தயாளன்.
தயாலுத்துவம் - மனவுருக்கம்.
தயாளம், தயாளத்துவம்* - கிருபை.

தயாளன், தயாளு - ஆன்மாக்க ளிடம் கிருபையுடையவன்.
தயிரை - ஓர் செடி.
தயிர்* - உறைந்த பால் அஃது பஞ்சகௌவியத்தொன்று.
தயிர்வேளை - தைவேளைப்பூடு.
தயிலம் - எண்ணெய்.
தயினியம் - எளிமை.
தயை* - கிருபை.
தயைதாட்சண்ணியம்* - உருக்க மான விரக்கம்.
தரகரி, தரகன்* - விற்பனைகொ ள்வனை பொருத்துவோன்.
தரகு, தரவு* - விற்பனைகொள் வனை பொருத்துதல்.
தரக்கு - புலி.
தரங்கம் - நீர்த்திரை, கடல், கல க்கம்.
தரங்கன்பாடி* - கடலைச்சார்ந்த ஒரு பட்டினம்.
தரங்கிணி - யாறு.
தரங்கு - வழி, ஈட்டிநுனி.
தரணம் - தரித்தல், தாண்டல்.
தரணி - பூமி, சூரியன், மலை, மருத்துவன், ஓடம்.
தரணிதரன் - மன்னன், விஷ்ணு.
தரம் - முறை, வகை, [அச்சம், கூட்டம், சமானம், பக்குவம், மலை, வலி.]
தரவாய், தருவாய், தறுவாய் - உற்றசமயம்.
தரவு - விற்பனை கொள்வன பொருத்துதல், [கலிப்பாவி னேருறுப்பு, தலைவன்கட்ட ளை, பிடரி, தண்டற்காரன்.]
தரளம்-அசைவு, திரட்சி, முத்து.
தரா - ஓர் கசப்புக்கீரை, சங்கு, பூசநாள், பூமி, பொன்னுதி யேழுலகத்தொன்று.
தராசு - நிறைகோல், [துலாராசி, பரணிநாள், வெள்ளெருக்கு.]
தராசுநா, தராசூசி* - தராசுமுள்.
தராதரம்* - யோக்கியதை, உய ர்வுதாழ்வு, [மலை].
தராதலம் - கீழேழுலகிலொன்று, பூமி.
தராபதி - மன்னன்.
தராமரன் - வேதியன். சப்த)
தராய் - பிரமி. (சீவ. சிந்.)
தரிசனபேதி, தரிசனவேதி-காட் சியி லிரும்பைப் பொன்னுக்கு மருந்து.
தரிசனம், தரிசனை - காட்சி, [கண்ணாடி.]
தரிசித்தல்* - காண்டல்.
தரிசு* - சாகுபடி செய்யாதநிலம்.
தரிஞ்சகம் - அன்றில்.
தரித்தல் - அணிதல், [சுமத்தல், தங்கல், சகித்தல்.]
தரித்திரம், தரித்திரியம் * - வறு மை.
தரித்திரி - வறியவள், [பூமி.]
தரிப்பு - கைப்பணம், ஞாபகம், தரித்தல், இருப்பிடம்.
தரியலர், தரியலார் - பகைவர்.
தரு - ஓர் சந்தம், மரம்.
தருகை - ஈகை.
தருக்கம் - வாது, [நியாயம்.]
தருக்கித்தல், தற்கித்தல்* - வாக் குவாதம்பண்ணல்.
தருக்கு - தருக்கென்னேவல், அகங்காரம், களிப்பு, எழுச்சி.

தருசு - இழையொத்திருக்கை.
தருணம் - சமயம், [இளமை, புதுமை, ஆமணக்கு.]
தருணி - பதினாறுவயது தொடங்கி முப்பது பிராயத்திற்குள்ளான மங்கை, கற்றாழை, தெப்பம்.
தருதல் - கொடுத்தல், [உண்டாக்கல்.]
தருப்பசயனம் - ஓர் புண்ணியஸ்தலம், தவத்தோர் தவிசின்ஒன்று.
தருப்பணம், தர்ப்பணம் - மந்திர நீரிறைத்தல், [இன்பநிறைவுறச்செய்தல், ஓர் தாளம், கண்ணாடி, ஓமவிறகு.]
தருப்பு, தறுப்பு - ஓர் கல்.
தருப்பை, தெர்ப்பை, தெற்பை- ஹோமாதிகாரியத்துக்குக் கை விரலி லணிவதற்கான ஒருவிதக் காய்ந்த புல்.
தருமக்கட்டை - அநாதப்பிள்ளை, ஆவுறிஞ்சுதறி.
தருமக்கருத்தர் - நீதிதீர்க்குநடுவர்.
தருமசங்கடம்* - காரியமுட்டுப்பாடு.
தருமசபை - நீதித்தலம்.
தருமசாஸ்திரம் - தருமநூல், ஸ்மிருதி.
தருமசாலி, தருமசீலன்* - தருமஞ்செய்பவன்.
தருமதேவதை - அம்பாலிகை, இயக்கிதேவி, நந்தி.
தருமநந்தனன்* - தருமபுத்திரன்.
தருமநாள் - பரணிநாள்.
தருமநியாயம்* - தருமநீதி.
தருமபத்தினி* - தெய்வத்துக்கு அஞ்சிக் கணவனுக்குக் கீழ்ப் படிந்து நடப்பவள்.
தருமபுத்திரன் - பாண்டவரில் மூத்தவன், பெற்றோரை முதுமையில் காப்பாற்றுபவன்.
தருமபுரம் - இயமலோகம், ஒரு ஸ்தலம்.
தருமம் - நல்லொழுக்கம், நியாயப்பிரமாணம், நல்வினை.
தருமராசன், தருமன் - குந்தியின் முதற்பிள்ளை, நமன், சன்மார்க்கன், புத்தன், பாலைமரம்.
தருமவாட்டி - தருமசீலி.
தருமாத்துமா*-தூயமனத்தினன்.
தருமி - தருமகுணமுடையவன், ஒரு வேதியத்தொண்டன்.
தருமிஷ்டன் - நன்மைப்பிரியன்.
தருவாய் - தறுவாய்.
தருவி - அகப்பை. (சீவ. சிந்.)
தருவிராசன் - பனைமரம்.
தரை * - பூமி.
தரோபஸ்து* - முழுமையும்.
தர்காஸ்து, தற்காஸ்து* - சர்க்காருடன் ஒப்பந்தம்.
தர்க்கம்* - தருக்கம்.
தர்ச்சனி - சுட்டுவிரல்.
தர்பார்* - சபாமண்டபம்.
தர்ப்பகன், தருப்பகன்-மன்மதன்.
தர்ப்பணம் - தருப்பணம்.
தர்ப்பீத்து - தேர்ச்சி.
தர்மம் - தருமம்.
தலகாணி, தலைகாணி- தலையணை.
தலம் - இடம், [இலை, உலகின் பொது, பூமி, பனைமரம்.]

தலன் - தலம்.
தலாடம் - அணில்.
தலாதலம்-கீழேழுலகத்தொன்று
தலாதிபதி - மன்னன், அதிகாரி.
தலாமலம் - தவனம்.
தலை - சிரசு, [ஆதி, இடம், ஆகாயம், தலைமை, நுனி, பெருமை, முதல், எழுனுருபு.]
தலைகட்டுதல் * - மயிர்முடித்தல்.
தலைகவிழ்தல் - அதோமுகமாதல், நாணுதல்.
தலைக்கடை - முதற்பிரதான வாயில்.
தலைக்குடி - முதற்குடி.
தலைக்குத்து* - தலைஇடி.
தலைக்கொம்பு - பல்லக்கின் முன்கொம்பு, முதன்மையானவன்.
தலைக்கோலம் - தலையணி.
தலைசாய்தல் - நாணமுறல், வணங்கல்.
தலைசீவுதல் - மயிர்கோதுதல், [கழுத்தையறுத்தல்.]
தலைச்சன்* - முதற்பிள்ளை.
தலைச்சாத்து - தலைப்பா.
தலைச்சுருளி - ஈசுரமூலி. (பிங்)
தலைச்சுழற்சி - ஒரு நோய்.
தலைச்சேரி - ஓர் பட்டினம்.
தலைதடவுதல்* - கெடுத்தல்.
தலைதடுமாறுதல் - ஒழுங்கு தவறுதல்.
தலைதொட்டபிள்ளை - சுவிகாரபுதல்வன்.
தலைத்திராணம் - தலைச்சீரா.
தலைநாள் - அச்சுவினிநாள்.
தலைநீட்டுதல்* - முன்னிடுதல்.
தலைநோ - தலைக்குத்து.
தலைப்படல் - தொடங்கல், வளர்தல், வாழ்தல்.
தலைப்பந்தி - பந்தியின்முதலிடம்.
தலைப்பா*, தலைப்பாகை* - தலையிற் கட்டும் சீலை.
தலைப்பாளை - ஓரணி.
தலைப்பிரட்டு* - தொந்தரை.
தலைப்பிரட்டை - கடற்றவளை.
தலைப்பிள்ளை* - முதற்பிள்ளை.
தலைப்பு* - நுதி.
தலைப்புரட்டு* - தலைப்பிரட்டு.
தலைப்புறம்* - முற்புறம்.
தலைப்பெயல் - கார்காலத்தில் பெய்யும் முதல் மழை.
தலைப்பெய்தல் - ஒன்றுய்க் கூடுதல்.
தலைமகள் - தலைவி, முதற்புத்திரி, மனைவி.
தலைமகன் - நாயகன், முதற்புதல்வன், பெருமையிற் சிறந்தோன், வீரன்.
தலைமக்கள் - மேன்மக்கள்.
தலைமடை - வாய்க்காற்றலை.
தலைமண்டை* - தலையோடு.
தலைமயங்குதல் - கலத்தல், கூடுதல், தலைதடுமாற்றம்.
தலைமாடு* - தலைப்புறம்.
தலைமுழுக்கு - சருவாங்க ஸ்நானம், [மகளிர்சூதகம்.]
தலைமுறை* - ஒருவருயிர் வாழுங்காலம்.
தலைமூச்சினை*, தலைமூர்ச்சனை* - தீராக்கலக்கம்.
தலைமேற்கொள்ளுதல் - பயபக்தியொடு ஏற்றுக்கொள்ளுதல்.
தலைமை - முதன்மை, அதிகாரம்.

தலையணை* - தலகாணி.
தலையல் - புதுநீர்வரவு, மழை பெய்துவிடுதல், மிகுதி, புதுப் [புனல்.
தலையளி - பேரன்பு.
தலையளித்தல் - காத்தல்.
தலையாயார் - பெரியோர்.
தலையாரி* - காவற்காரன்.
தலையிலெழுத்து, தலையெழுத்து* - விதி.
தலையில்லாச்சேவகன் - நண்டு.
தலையீற்று* - முதலீற்று.
தலையுவா - அமாவாசி.
தலையெடுத்தல் - ஆட்படுதல், தலைநிமிர்தல்.
தலையோடு - தலைமண்டை.
தலைவலி* - தலைக்குத்து.
தலைவன் - நாயகன், அரசன், எப்பொருட்கு மிறைவன், அண்ணன், குரு, மூத்தோன்.
தலைவார்தல்* - மயிர்சீவுதல்.
தலைவி - எப்பொருட்கு மிறைவி, மனைவி.
தலைவிரிகோலம்*-அலங்கோலம்.
தலைவிரிச்சான் - தலைமயிர் முடியாதவன், [சாரணைப்பூடு, செருப்படை].
தல்லம் - நீர்க்குண்டு, குழி.
தல்லி* - தாய்.
தவ - குன்றல், மிகுதி.
தவக்கம் - தேவை, வாட்டம், விருப்பம், தடை.
தவக்களை* - தவளை.
தவங்குதல் - துக்கித்தல், வாடுதல், தடையாகுதல்.
தவசப்பிள்ளை* -விருந்தினர்க்குப் பலபண்டங்கள் கொண்டு பாகஞ்செய்து அன்னம் பரிமாறுபவன்.
தவசம் - பலபண்டம்.
தவசி - தவஞ்செய்பவன்.
தவசிப்பிள்ளை - குருவுக்குப்பணிவிடை புரிபவன்.
தவசு* - தவம்.
தவடை* - தாடை.
தவணை - கெடுவு, நீந்துவோர்ச் கிடுமிதவை.
தவண்டை - ஓர்வாத்தியம், தவிப்பு.
தவண்டையடித்தல் - தவித்தல்.
தவதாயம்* - உபத்திரவம், நிலைகலங்கல்.
தவத்தர் - முனிவர்.
தவநிலை - தவவேடம்.
தவம் - தவசு, [தீ, காடு.]
தவராசம் - வெள்ளைச்சருக்கரை.
தவர்தல் - துளைத்தல். (திருவா. 9,9,1.)
தவலை* - தபலை (சருவக்குடம்).
தவலோகம் - மேலேழுலகிலொன்று.
தவல் - குறைதல்.
தவழ்தல்* - நகருதல்.
தவளச்சத்திரம் - வெண்குடை.
தவளம் - வெண்மை, அழகு.
தவளாம்பரம் - வெள்ளைவேட்டி.
தவளிதம் - வெண்மை.
தவளை* - தப்பளை.
தவளைக்குறங்கு - ஆபரணத்திஞோர் பூட்டு.
தவளோற்பலம் - வெள்ளாம்பல்.
தவறல், தவறுதல் - வழுவுதல், சாதல், [கடத்தல், குறைதல்].

தவறு* - தவறென்னேவல், குற்றம், நெறிகடக்கை.
தவனகம் - மருக்கொழுந்து
தவனம்-தாகம், வெப்பம், ஆவல்.
தவனன் - சூரியன், நெருப்பு.
தவன் - தவசி, புருஷன் .
தவாநிலை - வழுவாநிலை.
தவாவினை - மலை, முத்தி.
தவிசம் - சமுத்திரம், மோட்சம்.
தவிசு - தடுக்கு, பாய், மெத்தை.
தவிடு*, தவுடு* - அரிசியின்றுகள்.
தவிட்டுக்கிளி* - ஓர் தத்துக்கிளி.
தவிட்டுப்புறு* - ஓர் புறு.
தவித்தல் - தாகப்படல், இளைத்தல்.
தவிப்பு - இளைப்பு, தாகம்.
தவிர்தல் - ஒழிதல், விலகுதல், வற்றுதல்.
தவிர்த்தல் - விட்டுவிடுதல், விலக்குதல்.
தவில் - ஒரு பறை.
தவிழ்தல் - தவிர்தல்.
தவ்வி - சட்டுவம்.
தவ்வுதல் - குந்திநடத்தல், [கெடுதல், ஒடுங்குதல்.]
தவ்வை - அக்காள், செவிலித்தாய், மூதேவி.
தழங்கல் - ஒலித்தல்.
தழலல் - அழலல்.
தழல் - தழலென்னேவல், தீ, [கிளிகடிகோல், கவண், கார்த்திகைநாள், கொடுவேலி].
தழற்சி - அழற்சி.
தழிஞ்சி - சாய்ந்தார்மேற் படாமை.
தழுதணை - படர்மேகத்தடிப்பு.
தழுதாழை - ஓர்மரம் அஃது தசமூலத்தொன்று.
தழும்பு - வடு, நாத்தழும்பு, [காயம், குற்றம்.]
தழுவுதல் - கட்டியணைத்தல், [ஏற்றுக்கொள்ளுதல், சூழ்தல்.]
தழூஉ - குரவைக்கூத்து. (மது)
தழை - தழையென்னேவல், தளிர், [இலை, பீலிக்குடை, மயிற்றோகை].
தழைதல் - தளிர்த்தல், [செழித்தல், வாழ்தல்.]
தழைத்தல் - தளிர்த்தல், [வளர்தல், வாழ்ந்திருத்தல்.]
தளதளெனல்-சோபைக்குறிப்பு.
தளப்பம் - தளர்வு.
தளம் - உப்பரிகை, வீட்டின்றளம், படை, [இலை, சாடி, சாந்து, பூவிதழ், சாணைபிடியாத கெம்பு, கூட்டம்.]
தளம்பல் - ததும்பல், அசைதல், [நிலைகுலைதல், நடுங்கல்.]
தளம்பு - மதகு, அசைவு. (பார.)
தளர்ச்சி - சோர்வு, [சோம்பல்.]
தளர்வு - சோர்வு.
தளவம்-முல்லைக்கொடி, முல்லை.
தளவாடம் - தட்டுமுட்டு.
தளவாய் - படைத்தலைவன்.
தளி - கோயில், நீர்த்துளி, விளக்குத்தண்டு, குளிர்.
தளிகை - புற்கைக்கட்டி, [உண்கலம்.]
தளித்தல் - பூசுதல். (சீவ. சிந்.)
தளிமம் - அழகு, மெத்தை.

தளிரடி, தளிரியல் - பெண்.
தளிர் - தளிரென்னேவல், தழை.
தளிர்த்தல்* - துளிர்த்தல்.
தளுக்கு - மினுக்கம், மூக்குத்தி.
தளும்புதல் - தளம்புதல்.
தளை - வரம்பு, [ஆண்மயிர், கால் விலங்கு, காற்சிலம்பு, யாப்புறுப்பு.]
தளைதட்டுதல் - யாப்பிற்றளை பிழைத்தல்.
தளைதல் - பிணித்தல்.
தளைப்படுதல் - சிறைப்படல்.
தள்ளம்பாறுதல் - தள்ளாடுதல்.
தள்ளல் - தள்ளுதல், [பொய்.]
தள்ளாடுதல்* - தத்தளித்தல்.
தள்ளாட்டம் - தடுமாற்றம்.
தள்ளாமை-தளர்ச்சி, இயலாமை.
தள்ளாவாரம் - சோம்பல். (பிரபு)
தள்ளிச்சி - பூநீறு.
தள்ளுபடி* - நீக்கம், விலக்கு.
தள்ளுமட்டம் - யானைக்கன்று.
தள்ளை - அன்னை.
தறி - நெய்வார்தறி, தறியென்னேவல், [கட்டுத்தறி, ஆப்பு.]
தறிகை - உளி, தறி, மழு.
தறித்தல் - வெட்டல்.
தறுகணாளன், தறுகண்ணன் - படைவீரன், குரூரன்.
தறுகண், தறுகண்மை-கொடுமைக்குணம், அஞ்சாமை, மறம்.
தறுகல் - தடைபடல், தவறுதல்.
தறுகுறும்பு - துட்டத்தனம், வணக்கமின்மை.
தறுசு - இழைக்குளிர்த்தி.
தறுதலை, தறுதலையன் - தறுகுறும்பன் (வணக்கமில்லாதவன்.)
தறுவாய் - உற்றசமயம்.
தறை - தரை.
தற்கம் - தர்க்கம்.
தற்காலம் - தற்சமயம்.
தற்கித்தல்* - வாக்குவாதம்பண்ணல்.
தற்கிழமை-ஒற்றுமையாயுரியது.
தற்சணம் - உடனே.
தற்சமம் - வடமொழிக்கும் பிறமொழிக்கும் பொதுச்சொல்.
தற்சனி - சுட்டுவிரல்.
தற்பகீடம் - மூட்டுப்பூச்சி.
தற்பணம் - தருப்பணம், [முதுகெலும்பு, பளிங்கு, யானைமுதுகு.]
தற்பம்-மக்கட்படுக்கை, மனைவி, மெத்தை, மேனிலை, அகந்தை.
தற்பரன் - கடவுள்.
தற்பரை - ஒரு மாத்திரையில் முப்பதிலொன்று, சிவசத்தி.
தற்பவம் - வடமொழியிற்றிரிந்த சொல்.
தற்புருடம் - சிவனைம்முகத்தொன்று.
தற்போதம் - தன்னறிவு.
தற்றல் - இறுக்குதல். (வள்.)
தனகு - உள்ளக்களிப்பு. (சூடா.)
தனஞ்சயன் - அருச்சுனன், உயிர் நீங்கினும் நீங்காமலுடலை வீக்கித் தலைகிழித்து விலகும் வாயு, நெருப்பு.
தனதன்-ஈகையாளன், குபேரன்.
தனபதி - குபேரன்.
தனபாரம்* - கொங்கை.
தனம் - சம்பத்து, [பொன், முலை, தன்மை.]

தனவந்தன், தனவான் - செல்வன்.
தனவைசியர் - செட்டிகள்.
தனுதிபதி - குபேரன், பொக்கிஷக்காரன்.
தனுது - தன்னுடையது.
தனி - தனிமை, [ஒப்பில்லாதது, கலப்பின்மை.]
தனிகம், தனிகா, தனியா - கொத்தமல்லி.
தனிகன் - தனவான்.
தனிகை - இளம்பெண்.
தனிக்குடை - தனியரசாட்சி.
தனிசு - கடன்.
தனிட்டை - அவிட்டநாள்.
தனிநிலை - ஆய்தவெழுத்து.
தனிமுதல் - கடவுள்.
தனிமை - ஏகாந்தம், உவமையின்மை.
தனியரசாட்சி - ஏகாதிபத்தியம்.
தனியன் - ஒன்றி, [தனிப்பாட்டு.]
தனிவலிப்பெருமாள் - குப்பைமேனி.
தனு - உடல், சிறுமை, வில், ஓரிராசி, காசிபர்மனைவி.
தனுக்கோடி* - சேதுதீர்த்தம்.
தனுசர் - அசுரர்.
தனுசன் - மகன்.
தனுசு, தனுர் - வில், தனுவிராசி.
தனுரசம் - வியர்வை.
தனுர்வாதம் - ஓர் வாயு.
தனேசன் - குபேரன்.
தனை - அளவு.
தன்பாடு* - தன் உழைப்பு.
தன்மம் - தருமம், வேதம். (பிங்)
தன்மன் - தருமன், யமன், திப்பிலி.
தன்மாத்திரை - ஐம்பொறிகளின் மூலம், விடயம்.
தன்மிட்டன் - தருமவான்.
தன்மூப்பு - இறுமாப்பு.
தன்மை - குணம், சுபாவம், மரியாதை, மூவிடத்தொன்று.
தன்வந்தரி - திருப்பாற்கடல் கடையும்போதுண்டான ஒரு தேவர் மருத்துவன்.
தன்வினை - தன்னாலேற்பட்ட கருமம்.
தன்னந்தனி - மிகுதனி.
தன்னம் - சிறுமை, மான்கன்று, பசுவின்கன்று.
தன்னிச்சை - எதேச்சை.
தன்னியம் - முலைப்பால்.
தன்னியன் - தீவினையினின்றும் நீங்கினவன், தனவான்.
தன்னியாசி - ஓரிராகம்.
தன்னினி - வேங்கைமரம்.
தன்னை - அன்னை, தமக்கை, மூத்தோள்.

## தா

தா - தாவென்னேவல், [ஒரெழுத்து, கேடு, தாண்டுதல், பகை, வருத்தம், வலி, பரப்பு.]
தாகசாந்தி* - விடாய்தணித்தல்.
தாகமடக்கி - புளியாரை.
தாகம் - நீர்விடாய் அஃது உயிர் வேதனையினென்று, [ஆசை, எரிவு, வெம்மை.]
தாக்கணங்கு - இலட்சுமி.
தாக்காயணி - உமாதேவி.

தாக்கீது - கட்டளைப்பத்திரம், பயமுறுத்துகை.
தாக்கு - தாக்கென்னேவல், அதிர்ச்சி, [போர், அடி, வேகம், வயல், உள்ளத்திற்றைக்கை.]
தாக்குதல் - அடித்தல், எதிர்த்தல், தள்ளுதல், பாய்தல், முட்டுண்டல்.
தாங்கல் - சுமத்தல், தாங்குதல், (ஆதரித்தல்), [மனக்குறை, குளம், பூமி.]
தாங்கி - பணிகளின் கடைப்பூட்டு, பூண்.
தாங்குகோல் - தோணி தாங்கு மரக்கோல்.
தாசத்துவம் - தொண்டுபுரிதல்.
தாசநந்தினி - வியாசனின் தாய் (சத்தியவதி.)
தாசநம்பி - சாத்தாதவன் இது வைஷ்ணவர் கூறுவது.
தாசரதி - தசரத புத்திரனை சிராமன்.
தாசரி - தாதன், மலைப்பாம்பு.
தாசன் - ஊழியஞ் செய்பவன், தாதன், பக்தன், நெய்தனிலத்தவன்.
தாசி, தாசிகை - நாடகக்கணிகை, [தொண்டுபுரிபவள், பரணிநாள், மேகவண்ணப்பூவுள மருதோன்றிமரம்.]
தாசியம் - அடிமைத்தனம்.
தாசினப்பொடி* - பல்மினுக்குத்தூள்.
தாசு - சூதாடுகருவி, இரண்டரை நாழிகை கொண்டகாலம், நாழிகைவட்டில்.
தாசேரகம், தாசேரம் - ஒட்டகம்.
தாச்சி - சோனைப்புல்.
தாடகை - ஒரு இராட்சசி, [மானமில்லாதவள்.]
தாடங்கம் - காதணி, தோடு.
தாடபத்திரம் - ஓர் காதணி.
தாடனம் - அடித்தல், தட்டுதல்.
தாடாண்மை - முயற்சி.
தாடாளன்-முயற்சியுடையோன்.
தாடி - மோவாய்மயிர், ஆடு முதலியவற்றின் கழுத்தாரம், ஆசு (விரலுறை.) சிவ. சிங்.
தாடிமஞ்சம் - சத்திக்கொடி.
தாடிமம் - தாதுமாதளை.
தாடை - கன்னம், [விருப்பம்.]
தாட்கோரை - ஓர் புல்.
தாட்சணம், தாட்சணை, தாட்சண்ணியம்* - இரக்கம், தயை.
தாட்சம் - கொடிமுந்திரிகை.
தாட்சாயணி - உரோகணி, துர்க்கை.
தாட்சாயணீபன் - சந்திரன், சிவன்.
தாட்சிணியம், தாட்சிணை*-இரக்கம், இணக்கம்.
தாட்சேயன்-பாணினிமுனிவன்.
தாட்டன் - தலைவன், பெருமைக்காரன், ஆண்குரங்கு.
தாட்டி-தடவை, பருமன், [ஆண்மாரி, தைரியம், தலைவி.]
தாட்டிகம், தாஷ்டிகம், தாஷ்டீகம் - பலம், [அகந்தை.]
தாட்டோட்டம்* - எத்து.
தாட்படுத்தல் - கீழாக்கல்.
தாட்பாள், தாழ்ப்பாள் - கதவடைக்குந்தாள்.

தாணி - தாணியென்னேவல், தான்றிமரம்.
தாணித்தல் - துப்பாக்கியில் மருந்திடுதல், பலப்படுத்தல், குற்றமேற்றல்.
தாணு - சிவன், தூண், நிலைபேறு, புகலிடம், மலை, குறுந்தறி.
தாணையம் - பாளயம்.
தாண்டகம் - இருபத்தாறெழுத்தின் மிக்கவடியான் வரும்பா.
தாண்டல் * - தாண்டுதல்.
தாண்டவம்-சிவன்கூத்து,கூத்து.
தாண்டவராயன் - நடராஜன் (சிவன்.)
தாண்டுதல்-பாய்தல், [கடத்தல்.]
தாதகி - ஆத்திமரம், ஒரு தீவம். (சீவக. சிந்.)
தாதமார்க்கம் - சரியைநிலை.
தாதன் - வைணவப் பரதேசி, [அடிமைக்காரன், ஈகையாளன், தொண்டன், தந்தை.]
தாதா - பாட்டன், [ஈகையாளன், தந்தை, பிரமன்.]
தாதாத்மியம் - தாதான்மியம், பேதமின்றியிருத்தல்.
தாதி - தோழி, செவிலித்தாய், [அடியவள்.]
தாது - சுக்கிலம், கைநாடி, ஒரு வருஷம், [காவிக்கல், தாதுமாதளை, நரம்பு, பூந்தாது, பொன்னுதியேழு, மண்ணுதியைந்து, சொன்மூலம், தேன்.]
தாதுபார்த்தல் - கைநாடியறிதல்.
தாதுமாதளை - பூமாதளை.
தாதுவாதம் - அறுபான்நான்கு கலைஞானத்துளொன்று.
தாதுவைரி - கந்தகம், ஏலம், கடுக்காய்.
தாதை - தகப்பன், பாட்டன், பிரமன், பேய்க்கொம்மட்டி.
தாதைதன்றாதை, தாதைதாதை-[பாட்டன்.
தாத்தாரி - நெல்லி.
தாத்திரம் - கோடாலி.
தாத்திரி - நெல்லி, பூமி, அன்னை, ஆடுதின்னுப்பாளை.
தாத்துதல் * - தாற்றுதல் (கொழிக்குதல்).
தாநகம் - கொத்துமல்லி.
தாந்திரிகம் - தந்திர நியாயத்துக் கடுத்தது, உபாயம்.
தாபகம் - நிலைநிறுத்தல்.
தாபசுரம் - நீர்வேட்கையோடு உடம்பு காய்தல்.
தாபதநிலை - விதவைவிரதம்.
தாபதர் - முனிவர்.
தாபநன் - சூரியன்.
தாபநீயம் - உபநிடதத்தொன்று.
தாபந்தம், தாபந்திரியம்* - வேதனை.
தாபம் - வெப்பம், துன்பம் (உ-ம்) "என்ன கோபதாபமிருந்தாலும் இதை நீர் பொறுத்துக் கொள்ளவேண்டும்", [தாகம், காடு, பிரயாசம்.]
தாபரம் - நிலைத்திணைப்பொருள், [ஆதாரம், கோயில், பூமி.]
தாபரன் - கடவுள்.
தாபரித்தல் - தாங்குதல்.
தாபனம் - சூரியகிரணம், வெப்பம், நிலைநிறுத்தல்.

தாபிஞ்சம் - பச்சிலைமரம், ஆமணக்கு.
தாபிதம் - சூடு, தாபித்தல்.
தாபித்தல் - நிலைநிறுத்துதல்.
தாப்பணிவார் - கலணைக்கச்சை.
தாப்பிசைப்பொருள்கோள் - நடுவேயுள்ள மொழியை ஏனையிரிடத்துங் கூட்டிப் பொருள் கொள்வது.
தாப்புக்கொள்ளுதல்* - சமயம் பார்த்திருத்தல்.
தாமசம்* - தாமதம்.
தாமணி - பசுக்கட்டுங்கயிறு.
தாமதம் - தாமதித்தல், முக்குணத்திலொன்று, மந்தகுணம்.
தாமதித்தல்* - தடைபடல்.
தாமநிதி - சூரியன்.
தாமம் - அணைகயிறு, இடம், உடல், ஒழுங்கு, ஒளி, கிரணம், கீர்த்தி, கொன்றைமரம், சுகம், பிரபை, பிறப்பு, பூ, மணிவடம், மாலை, முடியுறுப்பு, மூவாறுகோவையுள்ள மாதரிடையணி, வீடு, நகரம்.
தாமரசம் - தாமரை, பொன்.
தாமரை* - கமலம்.
தாமரைக்கண்ணன் - திருமால்.
தாமரைநண்பன் - சூரியன்.
தாமரைமணி - தாமரைவிதை. (மலை)
தாமரையாசனன், தாமரையான்- பிரமன்.
தாமரையாசனி, தாமரையாள் - இலட்சுமி, அரிதாரம்.
தாமலை - புன்னை.
தாமன் - சூரியன்.
தாமான் - கப்பலின் பிறப்பக்கத்துக் கயிறு.
தாமிச்சிரம் - பேரிருள்.
தாமிரபருணி-பொதியமலையாறு, [மேற்றிசை யானைக்குப்பெண் யானை.]
தாமிரபல்லவம் - அசோகமரம்.
தாமிரபீசம் - கொள்.
தாமிரம், தாமிரை - செம்பு.
தாமோதரன் - கிருஷ்ணமூர்த்தி (தாமம் + உதரன் = ஆய்ச்சியர் பிணித்த கயிற்றை இடுப்பிலுடையவன்), ஆமை.
தாம் - அசைச்சொல் (உ-ம்.) நீர் தாம், சாரியை (உ-ம்.) எல்லோர்தாமும், தானென்பதன் பன்மை, தாகம். (கலித்.12,5.)
தாம்பணி - தாம்புக்கயிறு.
தாம்பாளம்* - ஒருவகைத்தட்டு.
தாம்பிரகம் - செம்பு.
தாம்பிரகருப்பம் - துரிசு.
தாம்பிரபத்திரம் - செப்புப்பட்டயம்.
தாம்பிரம் - செம்பு, சிவப்பு.
தாம்பிரவன்னி - ஓர் யாறு.
தாம்பு - பசுக்கயிறு.
தாம்பூரவல்லம் - வாழை (மலை).
தாம்பூலம்* - வெற்றிலை அஃது அட்டபோகத்தொன்று.
தாம்பூலவல்லி, தாம்பூலி - வெற்றிலைக்கொடி.
தாயகம் - பிறந்தகம், ஈகையுடைமை, அடைக்கலம்.
தாயக்கட்டை* - சூதாடுகருவி.
தாயத்தார் - ஞாதிகள் (தங்குடிச் சுற்றத்தார்.)

தாயபந்து - சகோதரன்.
தாயபாகம் - தந்தையின் பொருளைப் பங்கிட்டுக்கொள்ளுதல்.
தாயம் - ஓர் சூது, [தந்தைவழிச் சுற்றம், துன்பம், சூதாடு கருவி, உரிமை, பங்கு, இடம்.]
தாயவிபாகம் - உரிமைப்பொருள் பிரித்தல்.
தாயாதன் - பிதிர்வழியான்.
தாயாதிகள் - தாயத்தார்.
தாயான் - ஒன்பது.
தாயான்புலு - தொண்ணூறு.
தாயித்து* - மந்திராட்சரம் எழுதிப் பொதிந்த கூடு.
தாயுமானவர், தாயுமானார் - ஓர் ஞானி, செவ்வந்தியீசர்.
தாயைக்கொல்லி - மாபாவி, வாழை.
தாயோலை - முதலோலை.
தாய் - அன்னை, [தாவியென்னும் வினையெச்சம்.]
தாய்ச்சி - கருப்பிணி, முலைகொடுக்குந்தாய்.
தாய்பெற்றமேனி - நிருவாணம்.
தாய்மாமன் - தாயின்சகோதரன்.
தாய்வழியார் - மாதாவைச்சேர்ந்த சுற்றத்தார்.
தாரகத்தான் - பன்றிக்கொம்பு.
தாரகம் - பிரணவமந்திரம், ஆதாரம், உச்சவிசை, வெள்ளி, கண்மணி.
தாரகன் - நடப்பிப்பவன், கண்ணன்தேர்ச்சாரதி, மகன்.
தாரகாகணம் - விண்மீன்கூட்டம்.
தாரகாபதி - சந்திரன், வியாழம்.
தாரகை - விண்மீன், கண்மணி.
தாரண - ஓராண்டு.
தாரணம் - தரித்தல், நிலை, தெப்பம்.
தாரணி - பூமி.
தாரணை - மனத்தினை ஒருவழி நிறுத்துதல், நியாயநெறி, நிச்சயம்.
தாரதம்மியம், * தாரதன்மியம் - ஏற்றத்தாழ்ச்சி, வித்தியாசம், ஒப்பு.
தாரம் - மனைவி, [அரும்பண்டம், சாதிலிங்கம், நா, பச்சைப்பாம்பினஞ்சு, பாதரசம், பிரணவம், மூக்காற் பிறக்குமிசை, வீணைநரம்பிலொன்று, வெண்கலம், வெள்ளி, அரிதாரம், தேவதாரம்.]
தாரா - ஓர் புள், நாரை, விண்மீன், ஓர் வினைமுற்று.
தாராகணம்-நட்சத்திரக்கூட்டம்.
தாராட்டு - தாலாட்டு.
தாராட்டுதல் - ஓராட்டுதல்.
தாராதரம் - மேகம், வாள்.
தாராபதி - சந்திரன், வியாழம்.
தாராளம்-மிகுதி, விசாலம், [உதாரம், உற்சாகம், தெளிவு.]
தாரி - வழி, உடையோன், தரிப்பவர், அரிதாரம்.
தாரிகை - பனஞ்சாறு.
தாரிணி - பூமி, இலவமரம்.
தாரித்திரம், தாரித்திரியம்* - தரித்திரம்.
தாரு - மரப்பொது, மரக்கொம்பு.
தாருகவிநாசனி, தாருகற்செற்றாள் - காளி.
தாருகற்செற்றோன் - குமரன்.

தாருகன் - காளியால் கொலையுண்ட அசுரன், கந்தன்கொன்ற ஓரரக்கன்.
தாருகாரி - குமரன்.
தாருகாவனம் - ஓர் வனம்.
தாருணம் - அச்சம், கூச்சம்.
தாருண்ணியம் - இளம்பருவம்.
தாரை - தேவகுருவின் மனைவி (இவளோடு சேட்டனை சந்திரன்சேர்ந்தான்), [தத்தம் பண்ணுநீர்," பெருமழை, ஒழுங்கு, கண், கண்மணி, வாலியின் மனைவி, காளம், கூர்மை, கொடிப்படை, சிறுசின்னம், சீலை, திகிரி, நா, நேரோடல், மழை, வலி, வழி, விண்மீன்.]
தாரைவார்த்தல்* - தத்தம்பண்ணி நீர்விடுதல்.
தார் - கிண்கிணிமாலை, கொடிப்படை, படை, படைவகுப்பு, பூ, பூவரும்பு, மாலை.
தார்க்கிகன் - தருக்கசாத்திரி.
தார்க்கியன் - கருடன்.
தார்மிகன் - தருமசீலன்.
தாலகி - கள்.
தாலகேதனன், தாலத்துவசன் - பலதேவன், பீஷ்மன்.
தாலபத்திரம் - பனையோலை.
தாலபத்திரி - மரமஞ்சள்.
தாலப்புல்-பனை. (சிலப். 16:35.)
தாலமூலி - நிலப்பனை.
தாலமேழுடையோன் - அக்கினி பகவான்.
தாலம் - உண்கலம், கூந்தற்பனை, நா, பனை, பூமி, யானைச்செவி.
தாலம்பபாஷாணம் - ஓர்மருந்து.
தாலவட்டம்-பூமி, யானைச்செவி' யானைவால், விசிறி.
தாலவிருந்தம் - விசிறி.
தாலாட்டு - ஓராட்டு.
தாலி - மங்கலநாண், [கீழ்காய் நெல்லி.]
தாலிக்கொடி, தாலிச்சரடு - மங்கலநாண்.
தாலிப்பெட்டி - பொன்னத்துப் பெட்டி.
தாலு - மேல்வாய், [நா.]
தாலுக்கா, தாலூகா* - சர்க்கார் குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதி.
தாலூரம் - சுழல்காற்று.
தால் - தாலாட்டு, பிள்ளைக்கவியுறுப்பினொன்று.
தாவடம் - உருத்திரமணிமாலை, கழுத்தணிமாலை, [இருப்பிடம்.]
தாவடி - பிரயாணம், போர்.
தாவணி - பெண்பிள்ளைகளினுடை விசேடம், [மாட்டைப் பிணிக்குந் தாம்பு, கண்டங்கத்திரி.]
தாவந்தம் - இடுக்கண். [நரகம்.]
தாவம் - காடு, காட்டுத்தீ, மருதநிலத்தூர், வெப்பம்.
தாவரம் - நடையில்லாதது, இடம், உடல், நிலை, பூமி, மரப்பொது, மலை.
தாவரித்தல் - காப்பாற்றுதல்.
தாவல் - தாண்டல், பாய்தல்.
தாவளமாடு - பொதிமாடு.
தாவளம் - இருப்பிடம், கடை, மருதநிலத்தூர், தாங்கல்.
தாவளி - கம்பளி.

தாவாரம்* - தாழ்வாரம்.
தாவிளை - சகாயம், நன்மை.
தாவு - தாவென்னேவல், உறைவிடம், [குதிரைநடை, பகை, பற்றுக்கோடு, வருத்தம், வலி.]
தாவுதல் - தாண்டல், எட்டிப்பிடித்தல், [பரத்தல், நீட்டல், அழிதல்.]
தாழக்கோல் - தாழ்ப்பாள்.
தாழஞ்சங்கு - வாயகன்ற சங்கு.
தாழம் - தாமசம். (தொல்)
தாழி - குடம், சாடி, பரணிநாள்.
தாழிசை - ஓர் கவி.
தாழை - தாழைமரம், [தென்னமரம்.]
தாழ் - தாழென்னேவல், [திறவுகோல்.]
தாழ்குழல் - பின்சாய்ந்த கூந்தல், பெண்.
தாழ்க்கோல் - தாழ்ப்பாள்.
தாழ்சடை - நீண்ட சடை.
தாழ்ச்சி - குறைவு, தவறு, தாழ்மை, கீழ்மை.
தாழ்தல் - தொங்குதல், வணங்கல், ஆசை, ஆசைப்பெருக்கம், குறைதல், தங்கல்.
தாழ்த்தல் - தாழ்த்துதல், குறைத்தல், கீழ்ப்படுத்தல்.
தாழ்ப்பம் - ஆழம்.
தாழ்ப்பாள்* - கதவு செறிக்குந் தாழ்.
தாழ்மை - மனவொடுக்கம், கீழ்மை, பணிவு.
தாழ்வடம்* - முத்துக்கோவை முதலியன.
தாழ்வாரம்* - வீட்டிறப்பு.
தாழ்வு - சாய்வு, [கீழ்மை, குறைவு, தவறு, பள்ளம், மலையடி. (சீவக. சிந்.)]
தாளகம் - அரிதாரம்.
தாளம் - ஓர் வாச்சியம், [பனை, ஒரு கலைஞானம்.]
தாளன்* - கனவீனன்.
தாளாண்மை - ஊக்கம், முயற்சி.
தாளி - தாளியென்னேவல், [பனைமரம், அனுடநாள், ஓர் கொடி.]
தாளிசபத்திரி - ஓர் மருத்திலை.
தாளிசம் - ஒரு செடி.
தாளிதம் - தாளிப்பு.
தாளிப்பு - மதர்ப்பு.
தாளுதல்* - பொறுத்தல்.
தாள் - ஒற்றைக்காகிதம், திறவுகோல், ஆதி, கால், முயற்சி, கதவுறுதாள், அலகு, விளக்குத்தண்டு, விற்குதை.
தாறு - கமுகு வாழை முதலியவற்றின் குலை, [தூறுழி, விற்குதை, இருப்புமுள், அங்குசம்.]
தாறுமாறு* - விரோதம், குழப்பம்.
தாற்பரியம்-கருத்து, கொள்கை.
தாற்றுக்கோல்* - முட்கோல்.
தாற்றுதல்* - புடைத்தாற்றிக் கழித்தல்.
தாற்றுப்பூ-கொத்தாய்நிற்கும் பூ.
தானகம் - பரதவுறுப்புளொன்று.
தானக்கை - உயிர்நிலை, பொறுப்பிடம்.
தானபத்திரம் - நன்கொடையுறுதி.

தானம் - ஈகை, [இடம், யானை மதம், வலி, தேவலோகம்.]
தானவர் - அசுரர், வித்தியாதரர். (சீவக. சிந்.)
தானவன் - அசுரன், சந்திரன்.
தானுதிபதி, தானுபதி - படைத்தலைவன்.
தானிகம் - கொத்துமல்லி.
தானிகன் - கோயில்பூசாரி.
தானியதவசம் - தானிய சம்பத்து.
தானியப்பொட்டு - பயிரையழிக்கும் அந்துப்பூச்சி.
தானியம்* - நெல் முதலிய விளை பொருள்.
தானியராசன் - கோதுமை.
தானூரம் - சுழல்காற்று.
தானை - ஆயுதப்பொது, சேனை, சீலை.
தானைத்தலைவன் - சேனுபதி.
தான் - அசைச்சொல் (உ-ம்.) நீ தான்.
தான்றி - தான்றிமரம்.
தான்றிக்காய் - ஓர் மருந்துக்காய் அஃது திரிபலையிலொன்று.
தான்றோன்றி - ஒருவராலுண்டாக்கப்படாதது, வலியமுளைத்தது.

தி

திகசம் - ஓமம்.
திகதி - தேதி.
திகந்தம் - திகாந்தம்.
திகம்பரம் - நிருவாணம்.
திகம்பரன் - நிருவாணி, சமண முனிவன், அருகன், சிவன்.
திகம்பரி - நிருவாணி, துர்க்கை, பார்வதி.
திகரம் - ஒரெழுத்து, இளைப்பு, சோர்வு.
திகழல் - ஒளிசெய்தல்.
திகழ் - திகழெனேவல், ஒளி.
திகழ்ச்சி - ஒளி, விளக்கம்.
திகழ்தல் - பிரகாசித்தல், விளங்கல்.
திகனு - கொடுவேலி.
திகாந்தம் - திக்கின்முடிவு.
திகிரி - உருளை, சக்கராயுதம், வட்டம், வண்டியுருளை, தேர், மூங்கில், மலை, தண்டசக்கரம்.
திகில்* - பயம்.
திகிற்படுதல் - பயப்படுதல்.
திகு - தாளக்குறிப்பு.
திகுதிகெனல் - ஒலிக்குறிப்பு.
திகை - திகையென்னேவல், [திசை, தேமல்.]
திகைத்தல்* - மயங்கல்.
திகைப்பு - திடுக்காட்டம், மயக்கம்.
திகைப்பூடு*-மிதித்தவர்களை மயங்கச்செய்யுமொரு பூண்டு.
திக்கங்கம் - அட்டபாலர் குறி: அஃது கிழக்காதி முறையே கொடி, புகை, சிங்கம், நாய், எருது, கழுதை, யானை, காகம்.
திக்கசம், திக்கயம் - அஷ்டதிக்கிலுமுள்ள யானை. அவை: ஐராவதம் புண்டரீகம் வாமனம் குமுதம் அஞ்சனம் புட்பதந்தம் சார்வபூமம் சுப்பிரதீபம்.
திக்கற்றவன்* - ஆதரவில்லான்.
திக்காரம் - நிந்தித்துத்தள்ளல்.

திக்கு - திசை, பேச்சுத்தடக்கு, ஆதரவு, [கொடுவேலி.]
திக்குக்கட்டு, திக்குபந்தனம் - அஷ்டதிக்கு தேவதைகளால் துன்பம் விளையாதபடி தன்னைக் காத்துக்கொள்ளல்.
திக்குக்கெடுதல் - உதவியற்றுத் திரிதல்.
திக்குப்பாலகர் - அட்டபாலகர்.
திக்குமாறுட்டம்-திசைமாறுதல்.
திக்குமுக்கு* - மூச்சுத்தடை.
திக்குவாயன்* - வாய்தெற்றிப் பேசுபவன்.
திக்குவிசயம் - அஷ்டதிக்கிலுமிருந்து எதிர்த்து வருபவரை வெல்லுதல்.
திங்கட்குடையோன் - காமன்.
திங்களுள் - மிருகசீரிடம்.
திங்கள் - ஓர் தினம், [சந்திரன், மாதம்.]
திசை - திக்கு, நிலை.
திசைச்சொல் - அயல்நாடுகளிலிருந்து வழங்குஞ்சொல்.
திசைத்தல் - திகைத்தல். (இரா)
திசைமுகன் - பிரமன்.
திடசித்தம்-உறுதியான மனம்.
திடஞ்சொல்லுதல் - தேற்றுவித்தல்.
திடபத்தி - நிலைத்தபக்தி.
திடபரம் - மனவலி, உறுதி.
திடப்படுதல்* -தைரியமடைதல்.
திடம் - தைரியம், மெய், வலி.
திடர், திடல் - மணற்குன்று, மேடு, மலை.
திடாரிக்கம் - திடம்.
திடீரெனல்* - சீக்கிரக்குறிப்பு.
திடுக்கம் - அச்சம்.
திடுக்கிடுதல்* - அச்சத்தால் மனங்கலங்குதல்.
திடுக்குத்திடுக்கெனல் - அச்சக்குறிப்பு.
திடுமல், திடுமன்* - திண்மை.
திட்டம் - சரி கணிசம், ஒப்புரவு, கட்டளை, செவ்வை.
திட்டல்* - வைதல்.
திட்டாந்தம், திஷ்டாந்தம் - அத்தாட்சி, உதாரணம்.
திஷ்டி - கண்ணெச்சில், [கண், பார்வை, ஞானம்.]
திட்டி - ஞானம், கண், பார்வை, மேடு, நுழைவாயில்.
திஷ்டிக்கல் - ஓரிரத்தினம்.
திட்டிவிடம் - கண்ணில் விடமுடைய பாம்பு. (சீவ. சிந்.)
திட்டு - நிந்தனை, திட்டென்னேவல், மேடு, [ஆற்றிடைக்குறை, கணையச்சுவர்.]
திட்டுதல்* - வைதல்.
திட்டை - மேடு, உரல், திண்ணை.
திட்பம் - திண்மை, காலநுட்பம்.
திணறுதல்* - மூச்சுத்தடுமாறல்.
திணி - திணியென்னேவல், திண்மை.
திணிகம் - போர்.
திணித்தல் - அடைத்தல், துறுத்தல்.
திணுக்கம் - நெருக்கம்.
திணுங்கல் - நெருங்கல்.
திணை - உயர்திணை, அஃறிணை, ஒழுக்கம், இடம், குடி, குலம், அகத்திணை, புறத்திணை, பூமி.
திண்டகம் - கிலுகிலுப்பை.

திண்டாடுதல்* - அலேக்கழிதல், நெருக்கப்படல்.
திண்டாட்டம் - அலேக்கழிவு, கலக்கம்.
திண்டி - உணவு, [ஓரசுரன், யானே, தம்பட்டம், பசலேக் கொடி.]
திண்டிமம் - தம்பட்டம்.
திண்ணகம் - தட்டார் கருவியி ஞென்று, செம்மறிக்கடா, துருவாட்டேறு.
திண்ணம் - மெய்மை, வலி.
திண்ணன் - கண்ணப்பநாயஞர், வலியுடையோன்.
திண்ணியன் - வலியன்.
திண்ணே* - வேதிகை.
திண்மை - உறுதி, மெய்ம்மை, வலி.
திதம், ஸ்திதம் - அசைவின்மை.
திதலே, திதனி - தேமல்.
திதி - சிரார்த்தம் (இறந்தோர்க் குச் செய்யுமோர் சடங்கு), [காசிபப்பிரமாவின் மனேவிய ரிலொருத்தி, காத்தல், சந்திர ஞள் அஃது பஞ்சாங்கவுறுப் பிஞென்று, நிலேபேறு ]
திதிகர்த்தா - திருமால்.
திதித்தல் - நிலேபெறுத்தல்.
திதிமைந்தர் - அசுரர்.
தித்தகம்-நிலவேம்பு, மலேவேம்பு.
தித்தம் - கசப்பு, நிலவேம்பு, மலேவேம்பு, நச்சம்பு.
தித்தா - தாளக்குறிப்பு, பீதரோ கிணி.
தித்தி - தித்தியென்னேவல், தித் திப்பு, தின்னற்குரியன, வேள் விக்குண்டம், ஒரு துகுழல், குரவம் (ஒரு மரம்.)
தித்தித்தல்* - இனித்தல்.
தித்திப்பு* - இனிப்பு.
தித்திரி - ஒரு ரிஷி, சிச்சிலிக் குருவி.
தித்துப்பாடு* - திருத்தம்.
திந்திடி, திந்திருணி-புளியமரம்.
திப்பியம் - மேன்மை.
திப்பிலாட்டம் - தொந்தரை.
திப்பிலிக்கட்டை * - கண்டதிப் பிலி.
திப்பை - மேடு, பருத்தது.
திமிங்கிலகிலம் - யானேயை விழு ங்கு மீன்.
திமிசம், திமிசு - வேங்கைமரம்.
திமிதம் - பேரொலி, அசைவின் மை.
திமிதிமி - யானேயை விழுங்கு மீன், தாளக்குறிப்பு.
திமிதிமியெனல் - தாளக்குறிப்பு.
திமிரம் - இருள், நரகம்.
திமிராரி - சூரியன். [ள்ளுதல்.
திமிரேறுதல்* - விறைப்புக்கொ
திமிர்* - விறைப்பு, சோம்பு, மய க்கம், செருக்கு.
திமிர்தம் - ஒலி.
திமிர்தல் - பூசுதல், வளர்தல்.
திமிர்ப்பூச்சி* - வயிற்றுப்புழு.
திமிர்வாதம், திமிர்வாயு - ஓர் நோய்.
திமிலம் - பேரொலி, யானேமீன்.
திமிலர் - நெய்தனிலமாக்கள்.
திமிலே - பம்பைமேளம்.
திமில் - எருத்தின்முரிப்பு, தோ ணி, மரக்கலம், வேங்கைமரம்.

திமிறல் - மீறுதல், துலுக்குதல் (குலுக்கல்), [வளர்தல், பறித்தல்.]
திமைத்தல் - கிளப்புதல்.
திம்மலி - தடித்த சரீரமுடையவள்.
திம்மன்* - இகழுஞ்சொல், ஆண் குரங்கு.
திம்மை - சுருணை, பிரமை.
தியக்கம், தியக்கு - சஞ்சலம், மயக்கம், சோர்வு, அசைவு.
தியங்குதல் - சோர்வெய்தல்.
தியாகம் - கொடை, கைவிடல்.
தியாகராயன், தியாகேசன் - திருவாரூர் கோயிலாக்கொண்ட சிவபெருமான்.
தியாகன், தியாகி - உபகாரி, கொடையாளன்.
தியாச்சியம் - ஒவ்வொரு நாளிற் கழிவாகிய மூன்றேமுக்கானுழிகை, தள்ளற்பாலது.
தியானம்-சிந்தித்தல், அட்டாங்கயோகத்தொன்று அஃது ஐம்புலனடக்கி ஆண்டவனை நினைத்தல்.
தியானவான் - யோகி.
தியோதம் - வெயில்.
திரக்கரித்தல், திரஸ்கரித்தல் - நிந்தித்தல்.
திரஸ்காரம் - நிந்தை.
திரங்கல் - சுருங்கல், மிளகு.
திரங்குதல்-உலர்தல். (மலை), சுருளுதல் 'திரங்கு செஞ்சடை' (இரா.)
திரட்சி - திரண்டதன்மை, கூட்டம், முத்து.
திரட்டல் - கூட்டல்.
திரட்டு - திரட்டென்னேவல், சேர்த்தொன்றாக்கி யிருப்பது, திரளை, முழுமை, இருது.
திரட்டுக்கலியாணம் - இருதுசாந்தி.
திரட்டுப்பால் - திரளக் காய்ச்சிய பால்.
திரணபதி - வாழை.
திரணம் - அற்பம், துரும்பு, புல்.
திரணை-திரண்டது, உருண்டை.
திரபு - பித்தளை. (சிவத)
திரப்படுதல் - உறுதிப்படல்.
திரமாக்குதல் - நிலைப்படுத்தல்.
திரமிடம் - திராவிடம்.
திரம் - உரம், உறுதி, பூமி, மலை, நிலைபேறு.
திரயம் - மூன்றன்கூட்டம்.
திராசி - ரிஷபம், கும்பம், விருச்சிகம், சிங்கம்.
திரவிடம் - திராவிடம்.
திரவியசம்பன்னன் - சம்பாத்தியக்காரன்.
திரவியம் - பாக்கியம், பொருள், பொன்.
திரவியவான் - செல்வன்.
திரளுதல் - கூடுதல், திரட்சியாதல், உருட்சியாதல்.
திரளை - உருண்டை, கட்டி.
திரா - ஓர் மரம்.
திராட்சை* - கொடிமுந்திரிகை.
திராணி, திராணிக்கம், திராணிக்கை - பலம், தகுதி
திராமரம் - பவளமல்லிகை.
திராய் - ஒரு கீரை,
திராவகம் - செய்நீர், காந்தக்கல்.
திராவிடம் - தமிழ்.

திரி - விளக்குத்திரி, திரியென்னேவல், [மூன்று, பெண்.]
திரிகடுகம், திரிகடுகு - சுக்கு, திப்பிலி, மிளகு.
திரிகாலம்* - முக்காலம்; அவை உச்சி, காலை, மாலை, அன்றியும் இறப்பு எதிர்வு நிகழ்வு.
திரிகை - குயவன் வனையுஞ் சக்கிரம், இடக்கைமேளம், எந்திரம், திரிதல்.
திரிகோணம் - முக்கோணம்.
திரிசங்கு - அரிச்சந்திரன் தந்தை.
திரிசங்குமண்டலம் - தென்திசையிலுள்ள வானமண்டலம்.
திரிசடை - விபீஷணன்மகள்.
திரிசாரம் - யவட்சாரம், சத்திச்சாரம், நவச்சாரம்.
திரிசிகம் - வில்வம்.
திரிசிகை - சூலப்படை. (இரா)
திரிசியம் - காணப்படுவது.
திரிசிரபுரம், திரிசிராப்பள்ளி - ஓர் பட்டினம்.
திரிசூலம் - முத்தலைவேல்.
திரிசூலி - சிவன்.
திரிச்சல்* - திரிதல்.
திரிஞ்சில் - துரிஞ்சில்.
திரிதராட்டிரன், திருதராட்டிரன் - துரியோதனன் தந்தை.
திரித்தல் - மாறுபடுத்தல், முறுக்குதல். (சிவன்.)
திரிநேத்திரன் - முக்கண்ணன்
திரிபங்கி - ஒன்றற்கொன்று சம்பந்தமான பொருள்கள்.
திரிபதகை - கங்கை.
திரிபதை - இசைப்பாவகையுளொன்று. (சிலப்ப)
திரிபலம் - திரிபலை.
திரிபலை - கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்.
திரிபு - வேறுபாடு.
திரிபுடம் - மல்லிகை. (சப்த)
திரிபுடி-ஞாதுருஞானம்,ஞேயம்.
திரிபுடை - சத்ததாளத்தொன்று.
திரிபுண்டரம்-மூன்று வரியாய்ப் பூசும் விபூதிப்பூச்சு.
திரிபுரசுந்தரி - திரிபுரசுந்தரன் மனைவி (பார்வதி.)
திரிபுரம் - முப்புரம்.
திரிபுராந்தகன், திரிபுரதகனன் -
திரிபுரி - சாறணை. [சிவன்.
திரிபுரை - பார்வதி.
திரிமணை - புரிமணை.
திரிலோகம் - திரிபுவனம் அஃது பூமி, பாதலம், சுவர்க்கம்.
திரிவிக்கிரமன் - மகாவிஷ்ணு.
திரிவு - தவறு. (வெண்)
திரு - இலட்சுமி, செல்வம், தெய்வீகம், மேன்மை.
திருகணி, திருகாணி - அணியின் திருகுமரை.
திருகுதல் - திரும்புதல்,முறுக்குதல், பறித்தல்.
திருகூசி-தமரூசி (திறப்பணம்.)
திருக்கடைக்காப்பு - கோயிற்கதவு மூடுதல், திவ்வியப் பிரபந்தத்தின் ஈற்றுச்செய்யுள்.
திருக்கடையூர் - தஞ்சைக்கருகேயுள்ள ஒரு சிவஸ்தலம்.
திருக்கழுக்குன்றம் - செங்கற்பட்டுக்கருகேயுள்ள ஒரு சிவஸ்தலம்.

திருக்காளத்தி - ஒரு சிவஸ்தலம்.
திருக்கு-வளைவு, கண், வஞ்சகம்.
திருக்கூட்டம் - தேவனடியார் கூட்டம்.
திருச்சிற்றம்பலம் - சிதம்பரம்.
திருடமூலம் - தேங்காய்.
திருடன் - கள்வன், [விஷ்ணு
திருடி - கள்ளி. [கரந்தை.]
திருடு* - களவு.
திருட்டாந்தம், திருஷ்டாந்தம், திருட்டாந்தரம் - அத்தாட்சி, உதாரணம்.
திருட்டி - கண், பார்வை, அறிவு
திருணம் - திரணம்.
திருதி - துணை, உறுதி.
திருத்தம் - ஒழுங்கு, தீர்த்தம்.
திருத்தி, திருப்தி - மனரம்மியம்.
திருத்து - சீர்திருத்து, செவ்வைபபடுத்து, நிலமுதலியவற்றைப் பண்படுத்து.
திருத்தொண்டு - தேவதொண்டு.
திருநாமக்கத்திரி - ஓர் பாம்பு.
திருநாமச்செடி, திருநாமப்பாலை - ஓர் பூடு.
திருநாமம் - வைணவர் தரிக்கும் ஊர்த்துவ புண்டரம்.
திருநாளைப்போவார் - நந்தனர்.
திருநாள்* - விசேஷ காரியத்தைக் கொண்டாடுந் தினம்.
திருநீறு* - விபூதி.
திருநீற்றுக்கோவில் - திருநீற்றுப்பை.
திருநீற்றுப்பச்சை* - திருநீற்றுப் பத்திரி - உருத்திரசடைப்பூடு.
திருநீற்றுப்பழம் - திருநீற்றுருண்டை.
திருந்தலர் - பகைவர்.
திருந்துதல் - திருத்தமாதல்.
திருப்பணி - திவ்வியதொண்டு.
திருப்பம்* - திரும்புகோடி.
திருப்பள்ளி - சயனதலம்.
திருப்பள்ளியெழுச்சி - ஈச்சுவரனைத் துயிலெழுப்பப் பாடிய ஒரு பிரபந்தம்.
திருப்புதல் - திரும்பச் செய்தல், மாறவைத்தல், மீட்குதல்.
திருமகள் - இலக்குமி.
திருமங்கைமன்னன் - ஆழ்வார் பதின்மருளொருவர்.
திருமஞ்சனம் - அபிஷேகம்.
திருமடந்தை - திருமகள்.
திருமணி - நீலமணி. (சிலப். 22: 97.)
திருமண் - திருநாமம்.
திருமரம் - அரசமரம்.
திருமலர் - தாமரை.
திருமலை - திருப்பதி.
திருமறுமார்பன் - திருமால், அருகன்.
திருமாது - இலட்சுமி.
திருமானகரம் - வைகுண்டம்.
திருமுகம்-வரைந்தனுப்புமோலை
திருமுதல் - திரும்புதல்.
திருமுழுக்கு-திவ்வியாபிஷேகம்.
திருமுன் - பெரியோர்முன்பு.
திருமேனி - திவ்விய தேகம்.
திருவலகு - கோவில்விளக்குமாறு.
திருவள்ளுவர் - திருக்குறளிறைசிரியர்.
திருவாக்கு, திருவாசகம் - திவ்விய வாக்கு.

திருவாசி - வாகனப்பிரபை முதலியன.
திருவாசிகை - ஓர் மாலை.
திருவாட்சி - திருவாசி.
திருவாய்மொழி - பெரியோரது சொல், பன்னிரு ஆழ்வார்களருளிச் செய்த நாலாயிரப் பிரபந்தம்.
திருவாளன் - செல்வன்.
திருவிருந்து - திவ்விய விருந்து அஃது உவில்லிய நூலார் உடன்படிக்கையினென்று.
திருவுளச்சீட்டு* - தெய்வசித்த மறியுஞ் சீட்டு.
திருவுறுப்பு - நுதன் மேலணி.
திருவேங்கடம் - திருப்பதி.
திருவொற்றுடை - விக்கிரகங்களுக்குச் சார்த்துமாடை.
திருவோலக்கம் - மகா திவ்விய சபை.
திரேகம்* - தேகம்.
திரேதாயுகம் - சதுர்யுகத்தில் இரண்டாவது.
திரை - திரைச்சீலை, அலை, கடல், ஆறு, வெற்றிலை. (சீவ. சிந்.)
திரையல் - வெற்றிலைச்சுருள், (சிலப். 15.55.)
திரோதகம் - மறைப்பது. (சிவ.)
திரோதாநகரி - பஞ்ச சத்தியினென்று.
திரோபவம் - மறைப்பு, மயக்கம்.
திலகம் - பொட்டு, சிந்தூரம், மஞ்சாடிமரம் (சிலப். 13.)
திலதண்டுலம் - எள்ளுடன் கலந்த அரிசி.
திலதம் - நெற்றித்திலதம், பொட்டு, சுட்டி.
திலதர்ப்பணம் - எள்ளுந் தண்ணீரு மிறைத்தல்.
திலம் - எள், மஞ்சாடிமரம்.
திலுப்புலு - முப்பது.
திலோத்தமை - ஒரு தேவதாசி.
தில் - அசைச்சொல், ஒழியிசை, காலம்.
தில்லம் - காடு. (இரகு)
தில்லாணு* - தாளக்குறிப்பு.
தில்லுப்பில்லு, தில்லுமுல்லு - தர்க்கம், சண்டை, மாறுபாடு.
தில்லை - ஓர் மரம், சிதம்பரம்.
தில்லைநாயகம் - ஓர் நெல்.
தில்லைமூவாயிரவர் - சிதம்பர க்ஷேத்திரவுரிமைப்பார்ப்பனர்.
திவசம்* - சிரார்த்தம் (ஒருவர் இறந்த திதி), [நாள்.]
திவலை - துளி, மழை, மழைத் துளி.
திவளுதல் - துவளுதல், மெலிதல்.
திவா - பகல். (இரகு)
திவாகரன் - ஒரு நிகண்டாசிரியன், சூரியன்.
திவாந்தம் - ஆந்தை, மாலை.
திவாமணி - சூரியன்.
திவ்வியது - திவ்வியமானது.
திவ்வியம் - இனிமையானது, தெய்வீகமானது, ஓர்வகைச் சந்தனம்.
திளைத்தல் - அனுபவித்தல், பெருகுதல், நெருங்கல்.
திறத்தல்-விரித்தல், விளக்குதல்.
திறத்தார் - பக்கத்தார்.
திறத்தி - மருத்துவச்சி.
திறப்பணம் - தமரூசி.

திறமை - சமர்த்து, வலிமை.
திறம் - சாமர்த்தியம், திறமை, உறுதி, குறைநரம்புளவீணை, காரணம், வலி, மேன்மை.
திறம்புதல் - தவறுதல்.
திறல் - பகை, போர், வலி.
திறவுகோல் - சாவி.
திறனில்யாழ் - நெய்தல்யாழ்த் திறம்.
திறன் - காரணம், குணம், கூறுபாடு.
திறை - அரசிறை.
திற்றி - தின்னற்குரியன.
தினகரன் - சூரியன்.
தினகாலம்* - நித்தமும்.
தினந்தினம் - நாளுக்குநாள்.
தினமணி - சூரியன்.
தினமானம் - நித்தமும்.
தினவு - சொறி.
தினுசு* - வகை.
தினை - ஓர் தானியம், [சிறுமை.]
தின்றி - உணவு.
தின்மை - தீமை. (இரா)
தின்னுதல் - உண்ணல்.

## தீ

தீ - நெருப்பு, [தீயென்னேவல், அறிவு, இனிமை, ஓரெழுத்து, தீமை, தித்திப்பு, நரகம், கோபம் 'மன்னர் தீயீண்டுதங் கிளையொடு மெரித்திடும்' (சீவக. சிந் )]
தீக்கடன் - ஈமக்கடன்.
தீக்கதர் - தீட்சதர்.
தீக்கல் - நெருப்புக்காலுங்கல்.
தீக்காய்தல் - குளிர்காய்தல்.
தீக்காலி - துடைகாலி.
தீக்குணர் - கீழ்மக்கள்.
தீக்குண்டம் - அக்கினி வளர்க்குங் குழி.
தீக்குதல் - தீயச்செய்தல்.
தீக்குதித்தல், தீப்பாய்தல்*- ஆவேச முதலியவற்றாற் றீயில் நடத்தல்.
தீக்குறி - தூர்க்குறி.
தீக்கை - உபதேசம்பெறுதல், விரதநியமம், மயிர்களையாதிருக்கை.
தீக்கையோன் - அரன், குரு, தீட்சைபெற்றவன்.
தீங்கு - தீமை, [குற்றம், கேடு.]
தீச்சட்டி* - நெருப்புச்சட்டி.
தீச்சனம் - மிளகு.
தீச்சொல் - சாபம், பழிச்சொல்.
தீஞ்சுவை - நற்சுவை.
தீஞ்சொல் - இனிய சொல்.
தீட்சணதண்டுலம் - திப்பிலி.
தீட்சணபுட்பம் - கராம்பு.
தீட்சணம், தீட்சணியம்*- உக்கிரம், கூர்மை, வெப்பம்.
தீட்சதர் - சிதம்பரப்பார்ப்பார், [தீட்சை பெற்றோர்.]
தீட்சை - உபதேசம்பெறுதல், விரதநியமம். [தரல்.
தீட்சைபண்ணுதல் - உபதேசந்
தீட்டம் - மகளிர்சூதகம்.
தீட்டலரிசி - தவிடுபோகப் புடைத்தவரிசி.
தீட்டல் - தீட்டுதல்.
தீட்டு* - கூர்மையாக்கு, மகளிர் சூதகம், ஆசூசம், [எழுத்து.]

தீட்டுக்கல்-சாணைக்கல், மாக்கல்.
தீட்டுதல் - கூராக்கல், [எழுதுதல், சித்திரித்தல், மினுக்குதல்.]
தீட்டுப்படுதல் - அனுசாரப்படுதல், சூதகநீர் பாய்தல், [குற்றப்படுதல்.]
தீண்டல்* - தொடல்.
தீதல் - தீந்துபோதல்.
தீது - தீமை, குற்றம், மரணம் 'திருந்திய நின்மகன் றீதினீங்கினுயின்' (சீவக. சிந்.)
தீத்தல் - எரித்தல். (இரா)
தீத்தாங்கம் - மயில். (யாழ். அக)
தீத்தாட்சம் - பூனை, மயில்.
தீத்திரள் - ஊழித்தீ.
தீநாற்றம் - முடை.
தீபகம் - ஓரலங்காரம் அஃது ஓரிடத்தே நிற்குஞ் சொல் பலவிடத்தும் நின்று பொருள் தருவது, சந்திரகிரணம், பறவையைப் பிடிப்பதற்கான வேறொரு பறவை, விளக்கு.
தீபதூபம் - விளக்கும் நறும்புகையும்.
தீபபுட்பம் - சண்பகப்பூ.
தீபம் - விளக்கு, [சோதிநாள், தீவு.]
தீபவதி - யாறு.
தீபவராடி - வராடித்திறத்தினென்று.
தீபனம் - பசி, மிகப்பிரகாசம்.
தீபாராதனை - விளக்காலாத்தி.
தீபாவலி, தீபாவளி, தீபாளி - தீபவரிசை.
தீபிகை - விளக்கு.
தீமிதித்தல் - நெருப்பினடத்தல்.
தீமுகம் - நெருப்பெரியுமிடம்.
தீமை - பொல்லாங்கு, கேடு.
தீம்பர் - தீங்குசெய்வோர், கீழ்மக்கள்.
தீம்பு - தீது, கீழ்மை.
தீம்புகை - நறும்புகை.
தீய - இனிமையுள்ள, கொடிதான, புனிதமான.
தீயகம் - நரகம்.
தீயது - இனியது, தீங்குள்ளது.
தீயம் - இனிப்பு.
தீயர் - கீழ்மக்கள், வேடர்.
தீயளி - காய்.
தீயன - இனிமையுடையவை, புனிதமானவை, தீங்குள்ளன.
தீயாக்கிரை - பொன்னுங்காணி.
தீயார் - தீயோர், பொல்லார், [மூடர், வேடர்.]
தீர* - முழுமையும்.
தீரத்துவம் - தைரியம்.
தீரம் - உறுதியான மனநிலை, [நீர்க்கரை, அறிவு, சிறுவரம்பு, வலி.]
தீரன்* - தைரியசாலி.
தீரிக்கை - ஒழிந்தவேளை.
தீர்கடை - முடிவு.
தீர்க்கசந்தி - எழுத்து விகாரமுற்றுப் புணரும் புணர்ச்சியினென்று.
தீர்க்கதண்டம் - பூரணவணக்கம் (சாட்டாங்க நமஸ்காரம்), [ஆமணக்கு].
தீர்க்கதரிசி - முக்கால நிகழ்ச்சியை உணர்பவன்.
தீர்க்கதரு - பனைமரம்.

தீர்க்கம் - நிச்சயம், தெளிவு, நீளம், பூரணம், உச்சரிப்பின் திறம், நெட்டெழுத்து.
தீர்க்கவசனம் - உறுதிச்சொல்.
தீர்க்காயு, தீர்க்காயுசு * - நீடிய ஆயுள், [காகம், மார்க்கண்டன்.]
தீர்க்காயுள் - நீண்ட ஆயுள்.
தீர்தல் - முடிதல், [நடத்தல், நீளம், விடுதல், எழுதல், வெட்டல்.]
தீர்த்தகர் - சமணமுனிவர், பெரியோர்.
தீர்த்தம் - நீர், புண்ணிய தீர்த்தம், [திருவிழா, சுத்தம், பெண்குறி, யாகம்.]
தீர்த்தர் - கடவுளர், பரிசுத்தர்.
தீர்த்தல் - தீர்ப்புச்செய்தல், முடித்தல், நீக்கல், விடுத்தல்.
தீர்த்தவாசி* - யாத்திரைகாரன்.
தீர்த்தன் - பரிசுத்தன், உபாத்தியாயன், குரு, அருகன், சிவன்.
தீர்த்திகை - யாறு, தீர்த்தம்.
தீர்ந்தவள் - கள்ளி, விபசாரி.
தீர்ந்தவன் - தேறினவன், [துறவி, தைரியசாலி.]
தீர்ப்பு, தீர்மானம்-நியாயமுடிவு, [நியமம், நிவர்த்தி, தாளத்தீர்ப்பு.]
தீர்வை - சுங்கம் (வரிப்பணம்), [கிரி, தீர்மானம்.]
தீவட்டி, தீவத்தி, தீவர்த்தி - எரிபந்தம்.
தீவலஞ்செய்தல் - கலியாணச் சடங்கினென்று அஃது அக்கினிப்பிரதட்சணம்பண்ணல்.
தீவாந்தரம் - தீவு, வெளி.
தீவி - புலி.
தீவிகை - தீபம்.
தீவிதிராட்சம் - கொடிமுந்திரிகை.
தீவிரம் - சடுதி, [சூரியகிரணம், பெருங்கோபம், கொடுமை, உறைப்பு, நரகம்.]
தீவிளி - பசுங்காய்.
தீவினை* - பாவம்.
தீவு - கடலிடைக்குறை, சுவை, தீவாந்தரம், தூரதேசம்.
தீவேட்டல் - கலியாணம், யாகம் பண்ணல்.
தீவேள்வி - கலியாணம்.
தீற்றுதல் - சுத்தம்பண்ணுதல், சுவர் முதலிய மெழுகுதல்.
தீனபந்து - கடவுள்.
தீனம் - துயர், வறுமை.
தீனர் - இரப்போர்.
தீனன் - யாசகன், தரித்திரன், பெருந்தீனி யுண்பவன்.
தீனி,* தீன் - உணவு.

## து

து - ஒரெழுத்து, துவ்வென்னேவல் (அனுபவி, புசி).
துகள் - குற்றம், பராகம், புழுதி, பூந்தாது.
துகிதா - மகள். (சப்த)
துகிர் - பவளம். [ரம்.
துகிலிகை - எழுதுகோல், சித்தி
துகில் - சீலை, விருதுக்கொடி, வெண்பட்டு "பைந்துகில் கவர்ந்து" (சீவக. சிந். 2063).

துகினம் - பனி, சந்திரகிரணம்.
துகூலம் - நுண்ணியசீலை.
துகைத்தல் - இடித்தல், நசுக்கல், [வருந்துதல், வருத்தல்.]
துகையல்* - துகைத்தபொருள்.
துக்கங்கொண்டாடுதல் - ஒருவ ரிறந்ததற்குப் புலம்புதல்.
துக்கசாகரம் - பெருந்துயர்.
துக்கம் - துன்பம், [நரகம்.]
துக்காணி * - இரண்டு தம்பிடி கொண்ட ஒரு செம்பு நாணயம்.
துக்கிதம் - வருத்தம்.
துக்கு - உதவாதது, கீழ்மை.
துக்குணி - அற்பம்.
துங்கபத்திரி, துங்கபத்திரை - ஓர் யாறு.
துங்கம் - உயர்ச்சி, பரிசுத்தம், பெருமை, மலை.
துங்கி - இரவு.
துங்கீபதி - சந்திரன்
துசகம் - கொம்மட்டிமாதளை.
துசம் - கொடி, [இருபிறப்புள்ளன, உமி, பல், குங்கிலியம்.]
துசன் - பார்ப்பான்.
துச்சம் - கீழ்மை, பதர், பொய், பேய்க்கொம்மட்டி, வெறுமை.
துச்சவனன் - இந்திரன்.
துச்சன் - கேவலமானவன்.
துச்சாசனன், துச்சாதனன் - துரியோதனன்தம்பி.
துச்சில் - ஒதுக்கிடம், சரீரம், தங்குமிடம்.
துஞ்சல் - உறங்கல், சாதல், சோம்புதல், நிலைபெறுதல்.
துடக்கம் * - தொடக்கம்.
துடக்கு - மகளிர்சூதகம், சிக்கு, கட்டு.
துடங்குதல்* - தொடங்குதல்.
துடப்பம்* - துடைப்பம்.
துடர்தல்* - தொடர்தல்.
துடவை - உழவுகொல்லை, பூந்தோட்டம், சோலை.
துடி-துடியென்னேவல், [அகில், உடுக்கை, உதடு, ஏலம், காலநுட்பம், குமரனுடல், குறிஞ்சிநிலப்பறை, சத்தகன்னிகைகளாடல், பாலைநிலப்பறை.]
துடிதுடிக்குதல்* - துடிக்குதல்.
துடிதுடிப்பு - துட்டத்தனம்.
துடித்தல் - துள்ளுதல், [அசைதல், உருக்கங் கொள்ளுதல், மின்னுதல்.]
துடியடி - யானைக்கன்று.
துடியானவன் - பலசாலி.
துடியிடை - பெண்.
துடுக்கன்* - துஷ்டன்.
துடுக்கு* - குறும்பு, தீக்குணம்.
துடுப்பாற்றி - ஓர் மீன்.
துடுப்பு - நெய்த்துடுப்பு முதலியன, ஒடமியக்குங் கருவி, [அகப்பை, பூங்கொத்து.]
துடுமெனல் - ஒலிக்குறிப்பு.
துடுமை-ஓர்வகைத் தோற்கருவி.
துடுவை - நெய்த்துடுப்பு.
துடை - துடையென்னேவல், தொடை, [சுவர்ப்புறத்து நீண்ட வுத்திரம்.]
துடைகாலி * - குடும்பத்துக்குக் கேட்டை விளைவிக்குந் தன்மையுடையவள்.

துடைத்தல் - சீய்த்தல், [அழித்தல், வீழ்த்தல்.]
துடைப்பம்* - வாருகோல்.
துடைவாசி - விஷமூங்கில்.
துட்கல் - அச்சக்குறிப்பு.
துட்சணத்துவம் - பொல்லாங்கு.
துட்சணன் - பொல்லாதவன்.
துட்டதேவதை * - கொடியது விளைக்குந் தேவதை.
துட்டநிக்கிரகம் - துட்டரை யழித்தல்.
துட்டன் - தீயன், தேள்.
துட்டு - நாலு தம்பிடிகொண்ட நாணயம், [தீமை.]
துட்டை - வசவி (கற்பில்லாள்.)
துணங்கறல் - இருள், திருவிழா.
துணங்கு - இருள்.
துணங்கை - இருகையு முடக்கிப் பழுப்புடை யொற்றியாடல், கூத்து, திருவிழா.
துணர் - பூ, பூந்தாது, பூங்கொத்து.
துணவு - சீக்கிரம்.
துணி - சீலை, [ஒளி, சோதிநாள், துண்டு, தாக்கங்கள், தெளிவு, தேரிடக்கியம், துணியென்னேவல்.]
துணிகரம் - தைரியம், துணிவு.
துணிக்கை, துணுக்கை*-துண்டு.
துணிச்சல்* - துணிகரம்.
துணிதல் - திடன்கொள்ளல், [தெளிதல, முயலல், வெட்டுண்ணல்.]
துணித்தல் - அறுத்தல், வெட்டல்.
துணிபு - தீர்ப்பு, தெளிவு.
துணிவு - திடன், தெளிவு, நம்பிக்கை, வெட்டு, துண்டு.
துணுக்கம் - அச்சம், உள்ளோசை.
துணுக்கிடுதல் - பயப்படுதல்.
துணுக்கு - துண்டு, அச்சம்.
துணுக்கெனல் - அச்சக்குறிப்பு.
துணை - ஆதரவு, [அளவு, இணை, ஒப்பு, சோடு.]
துணைக்காரணம் - உபகாரணம்.
துணைவர் - தோழர், [சகோதரர், மந்திரிகள்.]
துணைவன் - தோழன், உதவிசெய்பவன், [தலைவன், மந்திரி.]
துணைவி - தோழி, [சகோதரி, மனைவி.]
துணைவு - விரைவு.
துண்டம் - துண்டு, [சாரைப்பாம்பு, பறவைமூக்கு, முகம், மூக்கு, யானைத்துதிக்கை]
துண்டரிக்கம்* - குரூரம்.
துண்டன் - கொலைஞன். (சேது)
துண்டாதுண்டரிக்கம்* - கொடுமையாய்த் துண்டித்துவிடல்.
துண்டி - துண்டியென்னேவல், [துண்டு, கழி, கொப்பூழ்.]
துண்டிகை - கொப்பூழ்.
துண்டித்தல் - வெட்டல், அறுத்தல், தறித்தல், கிழித்தல்.
துண்டு - துணிக்கை, [துணி, நஷ்டம்.]
துண்ணெனல் - அச்சக்குறிப்பு.
துதமுகம் - வேண்டாமைக்குத் தலையசைத்தல்.
துதம் - அசைவு.
துதி - துதியென்னேவல், தோத்திரம்.

துதிக்கை - யானைத்துதிக்கை, [துதிக்குதல்.]
துதியை - இரண்டாந்திதி.
துதைதல் - நெருங்குதல்.
துத்தநாகம்* - சத்தலோகத்தொன்று.
துத்தம் - கண்மருந்து, சமனிசை, நாய், நாவினுற் பிறக்குமிசை, பால், யாழினோர்நரம்பு, வயிறு, நாய்ப்பாகல், ஏழிசையினொன்று.
துத்தாரி - ஓர்வித சீலை, ஊதுகுழல்வகை.
துத்தி - ஓர்செடி, [தேமல், உண்ணற்குரியன, பாம்பின் படப்பொறி].
துந்தம் - வயிறு. (சப்த)
துந்தி, துந்திகை - கொப்பூழ், வயிறு.
துந்துபி - துந்துமி (பேரிகை).
துந்துமாரி - முதலெழுவள்ளலிலொருவன்.
துந்துமி - ஓராண்டு, பறைப்பொது, பேரிகை, ஓரசுரன், பேரொலி.
துந்துளம் - காரெலி. (சூடா)
துபாக்கி, துப்பாக்கி - போர் வீரர்க்குரிய ஓராயுதம்.
துபாஷி, துவிபாஷி - இரண்டு பாஷையை அறிபவன்.
துப்பகம் - நெய்.
துப்பட்டா, துப்பட்டி*-ஓர் சீலை.
துப்பரவு, துப்புரவு - முழுமை, சுத்தம், அலங்காரம், ஐம்பொறிநுகர்ச்சி, ஒப்புரவு, மேன்மை.
துப்பு-துப்பென்னேவல், அறிவு, கறை, [அரக்கு, அனுபோகம், ஆயுதப்பொது, வலி, ஆராய்ச்சி,உணவு, குற்றம், சகாயம், சாமர்த்தியம், சிவப்பு, சுத்தம், துணை, துணைக்காரணம், நெய், பகை, பவளம், பானம், பொலிவு, மிகுதி, மேன்மை.]
துப்புக்கேடு* - சீர்கேடு.
துப்புதல்* - உமிழ்தல்.
துமி - சிறுதிவலை, மழைத்துளி.
துமிதம் - மழைத்துளி. (இரா)
துமித்தல் - வெட்டல், அறுத்தல்.
தும்படைசி - நாடாவிலோருறுப்பு. (யாழ். அக)
தும்பராஷ்டகம், தும்புராஷ்டகம் - பேரரத்தை.
தும்பல், தும்மல்* - தும்முதல்.
தும்பன் - துட்டன்.
தும்பி - கருவண்டு, தும்பிமரம், ஓர் மீன், [வண்டு, யானை, கரும்பு, துட்டை, சுரை.]
தும்பிக்கை* - துதிக்கை.
தும்பிச்சி - துட்டை.
தும்பு - கயிறு, சிம்பு, [நார், நெருஞ்சி, கரும்பு. (மலை)]
தும்புரு - ஓர் கந்தருவன், [வீணை].
தும்பை - ஓர் செடி, [ஓர் பூடு, ஓர் மீன், வெற்றிமாலை, கறவைப்பசு, வெற்றிலை.]
தும்மட்டி - சிறு கொம்மட்டி.
தும்மல் - தும்முதல், [உயிர்ப்பு, விடுதல்.]

தும்மு - தும்மென்னேவல், [கொசுகு].
துயக்கம், துயக்கு - தளர்ச்சி.
துயங்குதல் - சோர்தல்.
துயரம், துயர்* - துன்பம், கிலேசம்.
துயரி - யாழ்நரம்பு "கோதை தொடுத்த துயரிமுலையாத்" (சீவக. சிந். 921).
துயலுதல் - அசைதல்.
துயிலெடை - துயிலெழுப்பல்.
துயில் - நித்திரை, மரணம். (வெண்)
துய் - அறிவின்திரிபு, பஞ்சிற்றொடர்நுனி, உணவு, பஞ்சு.
துய்த்தல் - அனுபவித்தல்.
துய்யன் - பரிசுத்தன்.
துரகதம், துரகம், துரங்கமம், துரங்கம் - குதிரை.
துரட்டன் - துன்மார்க்கன்.
துரதிட்டம் - துர்ப்பாக்கியம்.
துரத்துதல்* - ஓட்டுதல்.
துரந்தரன் - பொறுப்பாளன்.
துரப்பணம் * - கம்மக்கருவியி ஞென்று.
துரவு* - பெருங்கிணறு.
துராகதம் - துன்னடை.
துராகிருதம்* - தீயசெய்கை.
துராசை - நீதியற்ற ஆசை.
துராத்துமா* - தீம்பன்.
துராலோசனை* - தீய எண்ணம்.
துரால் - செத்தை, துரும்பு, துன்பம்.
துரிசி, துருசி * - ஓர் மருந்துச் சரக்கு.
துரிசு - துருசி, [குற்றம், துன்பம்.]
துரிஞ்சில் - வவ்வால், [சீக்கிரி மரம்.]
துரிதம் - சீக்கிரம், [கலக்கம், கேடு, துன்பம்.]
துரியம் - நான்காமவத்தை, சுமத்தல், பொதியெருது.
துரியாதீதம் - ஐந்தாமவத்தை (ஆன்மா தூய்மையாய் நிற்கும் நிலை.)
துருக்கம் - மலைமேற்கோட்டை, ஒடுக்க வழி, மான், கஸ்தூரி, குங்குமமரம், கலக்கம்.
துருக்கர்* - ஓர் பாஷைக்காரர்.
துருக்கல் - கீச்சுக்கிட்டம்.
துருக்கி - துருக்கதேயம்.
துருசி - களிம்பு, ஓர் மருந்து.
துருசு - சீக்கிரம், மயிற்றுத்தம், மாசு.
துருத்தி - ஊதுந்துருத்தி, நீர்த்துருத்தி, மட்டத்துருத்தி, [தோல், ஆற்றிடைக்குறை.]
துருந்தல்* - நுழையச்செய்தல்.
துருபதன் - திரௌபதியின்றந்தை.
துருப்பிடித்தல் - கறைபிடித்தல்.
துருமம் - மரப்பொது, குங்குமமரம், பாரிசாதமரம்.
துருமோற்பலம் - கோங்கமரம்.
துரும்பர் - பறையர் முதலான வர்க்கு வண்ணர்.
துரும்பு* - திரணம்.
துருவண்ணம் - வெள்ளி.
துருவமண்டலம் - வானிடத்துள்ள துருவபதம்.

துருவம் - துருவ நட்சத்திரம், வட்டத்தின் முனை, [அசையா நிலை, கிரகநடையின் தூரம், நித்தியயோகத்தொன்று, சத்த தாளத்தொன்று, நிச்சயம், ஒப்பு.]

துருவல் - துருவிய பொருள், ஆராய்தல், துளைத்தல், தேடுதல், கடைதல்.

துருவன் - அட்டவசுக்களிலொருவன், முனையினிற்கு நட்சத்திரம்.

துருவாசன் - ஓரிருடி, [கோபமிக்கவன்.]

துருவுமணை - தேங்காய் துருவுமோர் கருவி.

துருவை - செம்மறியாடு, கீதவுறுப்புளொன்று. (சிலப்ப.)

துரூஉ - செம்மறியாடு. (அக)

துரை, துரைமகன் - மேன்மகன், அதிகாரி.

(இது தற்காலம் தவறாக அங்கிலேயர்க்கே பொதுவாக வழங்குகிறது.)

துரைசாணி, துரைசானி, துரைப்பெண், துரைமகள் - மேன்மகள்.

துரைச்சி - உலோகநிமிளை.

துரைத்தனம்* - அதிகாரம்.

துரோகம்* - இரண்டகம்.

துரோகி - இரக்கமற்றவன், கொடும்பாவி.

துரோட்டி - துறட்டுக்கோல்.

துரோணம் - எண்காற்புள், காக்கை, தனுவிராசி, பதக்கென்னுமோரளவை, தும்பைச்செடி, சத்தமுகிலினொன்று அஃது மண்பொழிவது.

துரோணாசாரி - குருகுலத்தரசரின் பிராமண வில்லாசிரியன்.

துரோணி - தோணி. (சப்த)

துரோபதை - திரௌபதி (பாண்டவர் மனைவி.)

துர்க்கந்தம்* - கெட்ட நாற்றம்.

துர்க்கை - காளி, [பூரநட்சத்திரம்.]

துர்த்தூரம் - ஊமத்தை.

துர்ப்பலம், துற்பலம் - பயனின்மை.

துர்மதி-கெட்ட புத்தி, ஓராண்டு.

துர்லபம் - அடைதற்கரியது.

துலக்கம் - பிரகாசம், பளபளப்பு, தெளிவு.

துலக்குதல் - மினுக்குதல்.

துலங்குதல் - பிரகாசித்தல், தெளிதல், சிறத்தல்.

துலம் - கனம், துலா, நிறை.

துலா - ஏற்றமரம், [வண்டியின் ஏர்க்கால், நிறைகோல்.]

துலாக்கட்டை* - திராவி.

துலாக்கொடி - ஏற்றமிழுக்குங் கயிறு.

துலாக்கோல் - நிறைகோல்.

துலாபாரமேறுதல் - தன் நிறைக்குப் பொன்னைத்தராத் தான் தராசுத் தட்டிலேறுதல்.

துலாம் - ஏற்றமரம், நூறு பலம் கொண்ட நிறை, [ஓரிராசி, நிறைகோல்.]

துலாம்பரம்-பிரகாசம், [தெளிவு, விளக்கம்.]

துலிதம் - அசைவு ஒப்பு.

துலுக்கப்பூ* - ஓர் பூ.
துலுக்காணம் - துருக்கிஸ்தான மென்ற தேயம்.
துலுக்குதல் - குலுக்குதல்.
துலை - தூரம், [கனம், துலாராசி, நிறை, ஏற்றமரம்.]
துல்லபம் - அருமை.
துல்லியம் - சுத்தம், [உவமை.]
துவக்கம்* - ஆரம்பம்.
துவக்கு - துவக்கென்னேவல், [உடல், சங்கிலி, சம்பந்தம், தோல், பிணக்கு.]
துவக்குதல், துவங்குதல் - தொடங்குதல்.
துவசங்கட்டுதல் - முயற்சியாய் நிற்றல், [கொடிகட்டுதல்.]
துவசம் - விருதுக்கொடி, அடையாளம்.
துவசர் - கள்விற்போர்.
துவட்டர் - கம்மாளர்.
துவட்டல் - நெருப்பிற் புலர்த்தல், துவட்டற்கறி.
துவட்டுதல் - துவளச்செய்தல்.
துவரை-ஓர் பயறு, [துவாரகை.]
துவர் - துவர்ப்பு, [பகை, சிவப்பு, பவளம், விறகு.]
துவர்க்கட்டி - காய்ச்சுக்கட்டி.
துவர்க்காய் - பாக்கு.
துவர்ப்பு - அறுசுவையினொன்று.
துவலை - மழை, மழைத்தூவல்.
துவல் - துவலென்னேவல், சீக்கிரம்.
துவளுதல், துவள்தல் - வாடல், [ஒட்டுதல், அசைதல்.]
துவறல்-மழைதூவுகை, விரைவு.
துவன்றல் - சாதல், நிறைதல், நெருங்கல், குவிதல்.
துவாதசான்மா - சூரியன்.
துவாதசி - ஏகாதசிக்கு அடுத்த திதி.
துவாந்தம் - இருள், நரகம்.
துவாரகை - ஓர் பட்டினம்.
துவாரம்* - தொளை.
துவி, துவிதம் -இரண்டு.
துவேசம், துவேஷம் - பகை, வெறுப்பு.
துவைத்தல் - துவைக்குதல் (தோய்க்குதல்.)
துவையல்* - சுண்டாங்கி.
துழனி - ஒலி, பறவைக் கூட்டத்தொலி.
துழாய் - துளசி, துழாவி "நிழறுழாய்க்குனிந்து குத்து"(சீவக. சிந். 2220)
துழாவுதல் - கிளறுதல், [கலத்தல், வெட்டல்.]
துளக்கல் - ஒளிசெய்தல்.
துளங்கல் - ஒளிசெய்தல், அசைதல், கலங்கல்.
துளங்கொளி - கேட்டைநாள், மிக்கவொளி.
துளசி* - திருமாலுக்குகந்த ஒரு பச்சிலை.
துளசிமணி - ஓர்மணி.
துளபம், துளவம் - துளசி.
துளித்தல் - துளியாய்விழுதல்.
துளிர்* - தளிர்.
துளிர்த்தல் - தளிர்த்தல், செழித்தல்.
துளும்பல் - எழும்பல், துள்ளுதல், திமிர்தல்.

துளை - துவாரம், [மூங்கில்.]
துளைத்தல் - துளைக்குதல்.
துள்ளல்*- பாய்ந்தெழுதல், குதித்தல்.
துறக்கம் - தேவலோகம்.
துறடு, துறட்டி - சிக்கு, அங்குசம், காய் முதலியன பறிக்குந் துறட்டுக்கோல்.
துறட்டிச்செடி - ஓர் முட்செடி.
துறத்தல் - வெறுத்துவிடுதல்.
துறப்பணம்*- துளைக்கு மூசி.
துறவி - சன்னியாசி.
துறுத்தல் - திணித்தல், [நெருக்குதல், அமுக்கல்.]
துறுபவம் - நெருக்கம்.
துறுமல் - திரட்சி, நெருக்கம்.
துறுவல் - புசித்தல். (ஞானு)
துறை - நீர்த்துறை, இறங்குதுறை, [இடம், பாவினத்தொன்று, ஒதுங்குமிடம், தங்குமிடம், வழி.]
துறைமுகம் - சரக்கை ஏற்றுமதி இறக்குமதி செய்யுமிடம்.
துறைபோதல் - முழுமையுங் கற்றுத்தெளிதல்.
துறைவல்லோர் - கற்ரேர்.
துறைவன் - நெய்தனிலத்தலைவன்.
துரேட்டி-தோட்டி (அங்குசம்.)
துற்று - துற்றென்னேவல், சோறு, உணவு, நெருக்கம்.
துற்றுதல் - குற்றுதல், [நெருங்கல், உண்டல், கவ்வுதல்.]
துனி - அச்சம், ஆறு, கோபம், வெறுப்பு, துன்பம், நோய், புலவிமுதிர்வு.
துனித்தல் - வெறுத்தல். (சீவ. சிந்.)
துனைவு - விரைவு. (வாண)
துன்பு - துன்பம்.
துன்முகி - ஓராண்டு, ஓராக்கி.
துன்றல் - நெருங்கல்.
துன்னகாரர் - தையற்காரர்.
துன்னம் - தையல், கிழிவு.
துன்னர் - தோல்வினைமாக்கள், தையற்காரர்.
துன்னலர், துன்ஞர் - பகைவர்.
துன்னு - துன்னென்னேவல், இறைச்சி, முதுகு.
துன்னுதல் - நெருங்குதல், நிறைதல், தைத்தல்.
துன்னுநர் - சிநேகிதர்.
துன்னூசி - தையலூசி.
துன்னெறி - கெட்ட வழி.

## தூ

தூ - ஒரெழுத்து, சுத்தம், தசை, தூவென்னேவல், பகை, பற்றுக்கோடு, புள்ளிறகு, வெண்மை.
தூக்கணங்குருவி, தூக்கணுங் குருவி - ஓர் குருவி.
தூக்கணம் - உறி, தூக்கணங் குருவி, தொங்கல்.
தூக்கம் - நித்திரை, [ஆபரணத் தொங்கல், காதணி, சல்லியம், வாட்டம்.]
தூக்கல் - தூக்குதல், எழுப்பல்.
தூக்கிரிமேரை - காவலாளுக்குத் தருந்தானியம்.

தூக்கு - தூக்கென்னேவல், காற்றுலாம்கொண்ட ஓர் நிறை, [ஆராய்வு, உயர்ச்சி, உவமைச் சொல், தூக்கங்கள், துலாராசி, நிறைகோல், பாட்டு, உறி, கூத்து, தூக்கணங்குருவி.]

தூக்குதல் - உயர்த்துதல், [ஆராய்தல், நிறுக்குதல், உதவிசெய்தல்.]

தூக்குமரம்* - தூக்குத் தண்டனைக்கமைந்த மரம்.

தூக்குவிளக்கு*-தொங்குவிளக்கு

தூங்கல் - உறங்கல், [ஆடல், கூத்து, சோம்பல், தாழ்வு, யானை, ஓரோசை.]

தூங்குமூஞ்சி * - தூக்கமுடையோன்.

தூசம் - யானைகட்டுங் கயிறு (சீவக. சிங். 1602.)

தூசரம் - மங்கலானவெண்மை.

தூசர் - வண்ணார்.

தூசி - புழுதி, [குதிரை, கொடிப்படை, படைவகுப்பு.]

தூசிகம் - புளியாரை.

தூசியம் - கூடாரம்.

தூசு-புழுதி, [சீலை, யானைகட்டுங் கயிறு, சித்திரைநாள், பஞ்சு, "தீயினிற்றூசாகும்"(திருப்பாவை.)]

தூஷணம், தூடணம், தூஷணை- நிந்தனை.

தூஷணித்தல், தூஷித்தல் - நிந்தித்தல்.

தூடியம் - படங்குவீடு.

தூட்டி - சீலை.

தூணம் - தூண், அம்புக்கூடு, பகை.

தூணி - நாலுமரக்காலளவு, [அம்புக்கூடு.]

தூணிகர் - செட்டிகள்.

தூணியங்கம் - அத்திப்பிசின்.

தூணீரம் - அம்புக்கூடு.

தூண் - தம்பம், [பற்றுக்கோடு.]

தூண்டாவிளக்கு* - தானேயெரியுந்தீபம்.

தூண்டில்* - மீன்பிடிக்குமொரு கருவி.

தூண்டுகோல்* - திரிதள்ளு மீர்க்கு.

தூண்டுதல் - ஏவுதல், நினைப்பூட்டுதல்.

தூதளை, தூதுணை, தூதுளை - தூதுவளைக்கொடி.

தூதன், தூதுவன் - தூதுசெல்வோன், [புதன்.]

தூதி, தூதுவள் - தூதுசொல்பவள்.

தூது - காரியம்பேசி யிணக்குமாள், [ஓர் பிரபந்தம், காரியம், "தூது பிறசொல்லிப்" (சீவக. சிங். 1876), வார்த்தை, "கன்னியர் தூதொடு காமர் பைங்கிளி" (சீவ. சிங். 1022.)]

தூதுணம் - தூக்கணங்குருவி, புறாப்பொது.

தூத்துக்குடி * - தெற்கேயுள்ள ஒரு பட்டணம்.

தூபக்கலசம்,* தூபமுட்டி - தூபங்காட்டுங் கலசம்.

தூபரதண்டி * - சிக்கனமில்லாதவள்.

தூபரம் - கொம்பிலா விலங்கு.
தூபி - சிகரம்.
தூபிகை - கோவிலினுச்சி.
தூபிதம் - சூடு.
தூமகேது - வால்நட்சத்திரம், (இரா) தீ, கொடுமை.
தூமம் - புகை, மட்கலச்சூளை.
தூமலம் - கருமைமிக்கசிவப்பு.
தூமான் - பீடிகை (ஆசனம்), ஆபரணச்செப்பு.
தூமிரம் - கருஞ்சிவப்பு.
தூமை - மகளிர்சூதகம், [தூய்மை, வெண்மை].
தூம்பா, தூம்பை - பாடை.
தூம்பிரம் - கருமைமிக்கசிவப்பு.
தூம்பிராஷ்டகம் - ஓர் குளிகை.
தூம்பு - ஏரிமதகு, சலதாரை, இடுக்குவாயில், வழி, மரக்கால், மூங்கில்.
தூயவர் - முனிவர், பரிசுத்தர்.
தூயாள் - சரஸ்வதி.
தூய்தன்மை - அசுத்தம், தீட்டு.
தூய்தாக்கல் - சுத்தமாக்குதல்.
தூய்து, தூய்மை - சுத்தம்.
தூரதிஷ்டி, தூரதிருஷ்டி - தூரப்பார்வை.
தூரதிருஷ்டிக்கண்ணாடி - தொலைவிலுள்ள பொருளை அருகே காட்டுமோர் கருவி.
தூரத்தான் - அன்னியன்.
தூரம்* - சேய்மை.
தூராதூரம்* - வெகுதூரம்.
தூரி - தூரிக்கோல், பலகறை, பெருவலை, ஊசல், எருது.
தூரிகை, தூரிக்கோல் - எழுதுகோல்.
தூரியம் - உவகைப்பறை, எருது, எழுதுகோல், எறிபடைப்பொது, கைவேல், நல்லாடை, பறைப்பொது, முரசு.
தூர் - சேறு, [மண்டி, வேர்.]
தூர்க்கை - பூரநாள்.
தூர்த்தல் - நிரப்புதல்.
தூர்த்தன் - காமுகன், வஞ்சகன்.
தூர்த்தை-காமவெறிபிடித்தவள்.
தூர்வகம் - சுமக்கை, பொதியெருது.
தூர்வாசம் - அட்டாதசவுபபுராணத்தொன்று.
தூர்வாசன் - ஓரிருடி.
தூர்வை - கிணற்றைச் சார்ந்த நிலம், மிருதுவான நிலம், அறுகம்புல்.
தூலசரீரம், தூலதேகம் - புறவுடல்.
தூலம் - பருமை, வீட்டுத்திரம், [பஞ்சு].
தூவத்தி - வாள்.
தூவல் - சிந்தல், [மழை, அம்பினிறகு, மழைத்துளி, மழைத்தூவல், அழிதல் 'தூவலொலியலார்' (சீவ. சிந்.), தூரியக்கோல்.]
தூவானம்-காற்றுற் சிதறுமழை, [அருவிப்புனல் வீழிடம்.]
தூவி - மிகச்சொரிந்து, [அன்னப்புள்ளிறகு, இறகு, மயிற்றோகை.]
தூவு - தூவென்னேவல், [ஊன்].
தூவுதல்*-தெளித்தல், சிந்துதல்.
தூளி - குதிரையினுர்ப்பு, பராகம், புழுதி.

தூளிதம் - தூள்.
தூள்-பொடி, புழுதி, [பூந்தாது.]
தூறல் - மழை, மழைத்துளி, [பழிச்சொல்].
தூறு - மழைபெய்யென்னேவல், [பழிச்சொல், சிறுசெடி, கூட்டம்.]
தூறுதலை - சிலும்பியமயிர்த்தலை.
தூறுபேசுதல்*-பழிசொல்லுதல்.
தூற்றுதல்* - நென்முதலியவற்றைத் தூற்றுதல், பழிகூறல், கோட்சொல்லல்.
தூற்றுத்தலையன் - பிராய்மரம்.
தூனம் - அசைவு, துன்பம்.

## தெ

தெகிடி - சூது விளையாட்டுவகை, புரட்டு.
தெகுட்டல் - தெவிட்டல் (உவட்டல்).
தெகுளம் - நிறைவு, பெருக்கம்.
தெகுளல் - நிறைதல், பெருகல்.
தெக்கணம் - தெற்கு.
தெக்கு - தெற்கு. (பிங்)
தெங்கணம் . ஐம்பத்தாறு தேயத்திலொன்று.
தெங்கு - தென்னமரம்.
தெசகண்டன் - இராவணன்.
தெட்சணை - காணிக்கை.
தெட்சிணம் - தெற்கு, வலப்பக்கம்.
தெட்டுதல் - வஞ்சித்தல்.
தெட்பம் - முதிர்ச்சி, தெளிவு.
தெட்பு - தெளிவு. (இரா)
தெண்டம்* - வணக்கம், அபராதம்.
தெண்டனை*-தண்டனை.
தெண்டன்* - வணக்கம்.
தெண்டிரை - கடல்.
தெண்ணீர் - தெளிநீர்.
தெத்து* - வாய்த்தெற்று.
தெந்தனு - தாளக்குறிப்பு.
தெப்பம், தெப்பல்* - மரக்கலம்.
தெம்பல் - சேறு.
தெம்பாங்கு* - ஓர்வகைச் சந்தம்.
தெம்மாடி* - அறிவீனன் (இதைத்தெம்மாண்டி அல்லது தெம்மாண்டை எனவும் வழங்குவர்).
தெய்ய - ஓரிடைச்சொல்.
தெய்வசோதனை - தெய்வ பரிசோதனை.
தெய்வச்செயல் - தெய்வத்தின் செய்கை.
தெய்வதம் - தெய்வம்.
தெய்வதூஷணம் - தேவதூஷணம்.
தெய்வம் - கடவுள், [ஊழ், வருடம், ஒரு மணம், ஓர் யாகம்.]
தெய்வயானை* - கந்தனிளொரு மனைவி.
தெய்வவிரதன் - பீஷ்மன்.
தெய்வாதீனம்* - தெய்வத்திற் கடங்கியது.
தெய்விகம், தெய்வீகம் - தெய்வத்தன்மை.
தெரிசம் - அமாவாசை.
தெரிசனம்* - தரிசனம்.
தெரிமா - சிங்கம்.
தெரியப்படுத்து, தெரியப்பண்ணு, தெரியவை - அறிவி.

தெரியலர் - அறிவீனர், பகைவர்.
தெரியாத்தனம், தெரியாமை* - அறியாமை.
தெரிவை - இருபத்தாறு முதல் முப்பத்தொருவயதிற் பெண், பெண்.
தெரு,* தெருவு - வீதி, [வழி.]
தெருட்சி - அறிவு, தெளிவு.
தெருட்டல் - உறுதிப்படுத்தல், வற்புறுத்தல்.
தெருண்டபெண் - இருதுவான பெண்.
தெருண்டமேலவர் - அறிவிற் பெரியார்.
தெருமரல், தெருமருதல் - சுழற்சி, நம்பிக்கையற்றிருத்தல்.
தெருவிலழகி - குப்பைமேனி.
தெருளல் - தெளிதல்.
தெருள் - தெருளென்னேவல், தெளிவு, அறிவு.
தெலிங்கம் - ஓர் தேயம்.
தெலுங்கு* - ஓர் பாஷை.
தெல்லாட்டம் - இழுபறி, குழப்பம்.
தெவிட்டல் - உணவின்மீது அருவருத்தல், [உமிழ்தல், ஒலித்தல், நிறைதல்,அசையிடுதல்.]
தெவிளல் - நிறைதல்.
தெவு - கொள்ளுகை (உ-ம்.) நீர் தெவு நிரைத்தொழுவர்.
தெவுட்டல் - அடைத்தல், மறைதல், கொப்புளித்தல், தங்குதல், நிறைதல், தேக்கிடுதல்.
தெவுளல், தெவுளுதல் - பெருகுதல்.
தெவ் - பகை, போர்.
தெவ்வர் - பகைவர்.
தெவ்வினை - போர்.
தெவ்வு - சந்திரன், பகை, போர்.
தெவ்வுதல் - கவர்தல். (தணி).
தெழித்தல் - பிரித்தல், சினக்குறிப்புக் காட்டல், துவைத்தல், பேரொலி.
தெளிஞன் - அறிஞன்.
தெளிதல் - ஆராய்தல், அறிதல், சுத்தமாதல், தேறுதல்.
தெளித்தல் - கொழித்தல், தூவல், விதைத்தல்.
தெளிர் - உள்ளோசை.
தெளிவித்தல் - தெரியப்பண்ணல்.
தெளிவு - மனத்தேற்றம், [தெளித்தெடுப்பது, அறிவு, வெளிச்சம்.]
தெள்ளத்தெளிதல் - நன்றாய்த் தெளிதல்.
தெள்ளி-வினையெச்சம், [யானை.]
தெள்ளியர் - அறிவுடையோர்.
தெள்ளுதமிழ் - செந்தமிழ்.
தெள்ளுதல் - கொழித்தல்.
தெள்ளேணம் - மகளிர் விளையாட்டினொன்று.
தெறிக்குதல், தெறித்தல் - சிந்தல், [முறிதல்].
தெறுக்கால் - தேள், [விருச்சிக விராசி.]
தெற்கித்தி* - தெற்கேயுள்ளது
தெற்கித்தியான்* - தென்னாட்டிலுள்ளவன்.
தெற்பை* - தருப்பைப்புல்.

தெற்றல் - அலைத்தல், மாறுபடல், தடைபடல்.
தெற்றி - திண்ணை.
தெற்றியம்பலம் - சித்திரகூடம்.
தெற்றுவாய்* - திக்குவாய்.
தெனுது - தெற்குள்ளது.
தென் - தெற்கு, [அழகு, இசை, கறுப்பு, தென்னமரம்.]
தென்கயிலை - பொதியமலை.
தென்கலை - தமிழ்மொழி.
தென்கால் - தென்றற்காற்று.
தென்கீழ்த்திசை- அக்கினிமூலை.
தென்கீழ்த்திசைப்பாலன் - அக்கினிபகவான்.
தென்சார், தென்பால், தென்புறம் - தெற்குப்பக்கம்.
தென்படுதல்* - கிடைத்தல்.
தென்பாண்டி - கொடுந்தமிழ்நாட்டிஞென்று.
தென்பாரிசம் - தென்றிசை.
தென்புலத்தார் - பிதிரர்.
தென்மதுரை - சோமசுந்தரப்பெருமான் வீற்றிருக்கும் ஆலவாய்.
தென்மலை - பொதியமலை.
தென்றமிழ் - செந்தமிழ்.
தென்றல் - தென்காற்று (முன்பனிப் பருவத்தின் காற்று.)
தென்றற்றேரோன் - மன்மதன்.
தென்றி - தென்றல், தெற்கு.
தென்றிசைக்கோன் - நமன்.
தென்னங்குரும்பை - தென்னம்பிஞ்சு.
தென்னம்பிள்ளை * - தென்னங்கன்று.
தென்னவன் - பாண்டியன், இயமன்.
தென்னன் - பாண்டியன்.
தென்னை - தெங்கமரம்.

## தே

தே - ஓரெழுத்து, கடவுள், கிருபை, நாயகன். (கந்த)
தேகசம்பந்தம் - சரீரசேர்க்கை.
தேகம் * - உடல்.
தேகயாத்திரை - மரணம்.
தேகலி - வாயிற்படி. (சப்த)
தேகனி - மஞ்சள்.
தேகாபிமானம் - சரீரத்தின்மீதுள்ள பற்று.
தேகி - சீவான்மா.
தேக்கிடுதல் - தெவிட்டல், நிறைந்துவழிதல்.
தேக்கு - ஓர் மரம், [கமுகு, தித்திப்பு, தேக்கென்னேவல்.]
தேக்குதல் - தெவிட்டுதல், நிறைதல்.
தேக்கெறிதல் - ஏப்பமிடல், நிறைந்துவழிதல்.
தேங்காய்* - தெங்கங்காய்.
தேங்காய்ப்பாரை - ஓர் மீன்.
தேங்காய்மொத்தி - மாட்டின் முன்காலூடே யிருக்குந் திரட்சி.
தேங்குதல் - குலைதல், நிறைதல்.
தேசகாலம் - இடமும் நேரமும்.
தேசசு - அழகு, ஒளி, விந்து.
தேசவழக்கம் - நாட்டின் நடபடி.
தேசனி - மஞ்சள், மருள். (மலை)
தேசா - ஒரு பண்.

தேசாசாரம்* - நாட்டினர் வழக்கம்.
தேசாதி - கவரைசாதித்தலைவன்.
தேசாதிபத்தியம் - தேசத்தை யாளு மதிகாரம்.
தேசாந்தரி* - பரதேசி.
தேசாவரம் - கண்டதிப்பிலி.
தேசி - எலுமிச்சை, ஓரிராகம், பெருங்குதிரை.
தேசிகம் - திசைச்சொல், அழகு, ஒளி, ஓர் கூத்து, பொன்.
தேசிகன்-குரு, தேசாந்தரி, வேத மோதுவிப்போன், வேதாந்த தேசிகன். [கம்.
தேசியம் - திசைச்சொற் பிரயோ
தேசு - அழகு, ஒளி, பொன், "புகழ்"திருவுந்தேசுநோக்கு" (சீவக. சிந்.), வீரம்.
தேசோபிந்து - ஒரு உபநிடதம்.
தேசோமயம் - ஒளிவடிவம்.
தேடி - அதிவிடயம் "தேடித் தீந்தேன்" (சீவக. சிந். 2703.)
தேடுதல் - சம்பாதித்தல், விசாரித்தல், நாடுதல்.
தேட்கடை - மூலநாள்.
தேட்கெண்டை - ஓர் மீன்.
தேட்கொடுக்கிலை - ஓர் செடி.
தேட்டம் - சம்பாத்தியம்.
தேதி - திகதி.
தேத்தடை - தேன்கூடு.
தேமல்* - பட்சுணங்கு.
தேமா - தித்திப்புள்ள மாமரம்.
தேம் - எழனுருபு, (உ-ம்.) 'கோடாய்தேத்து', கள், தித்திப்பு, வாசனை.
தேம்பல் - விம்மியழுதல், [பழம் பூ, மெலிதல், வாடல்.]
தேயம் - நாடு, இடம், உடல், களவு.
தேயன் - திருடன், (சிவத)
தேயு - தீ, மயக்கம்.
தேய்கடை* - தேய்ந்தது.
தேய்தல் - உரைதல், குறைதல், மெலிதல்.
தேய்பிறை - கிருஷ்ணபட்ச சந்திரன்.
தேய்ப்பு - தேய்த்தல்.
தேய்மானம் - பொன்னுரைதேய்மானம்.
தேய்வு - குறைபாடு, மெலிவு.
தேய்வை - பரிமளச்சாந்து.
தேரகன் - தேர்ப்பாகன்.
தேரடி* - தேர்நிலை.
தேரலர் - பகைவர்.
தேரன் - ஆயுள்வேதமுணர்ந்த ஒரு புலவன், பௌத்தன்.
தேரார் - கீழ்மக்கள், பகைவர்.
தேரை* - ஒரு தவளை.
தேரைபாய்தல்* - நோய்ப்பட்டு உடல்மெலிதல்.
தேர் - இரதம், தேரென்னேவல், [உரோகிணிநாள்.]
தேர்கடை - தீர்மானம்.
தேர்க்கால், தேர்ச்சில் - தேர்ச்சக்கரம்.
தேர்க்குடம் - தேர்முடி.
தேர்ச்சி - தெளிவு, கல்வி.
தேர்ச்சித்துணைவர் - மந்திரிகள்.
தேர்தல் - ஆராய்தல், அறிதல், தெளிதல்.
தேர்த்தட்டு - தேர் நடு.

தேர்நிலே - தேர் நிற்குமிடம்.
தேர்ப்பாகன் - சாரதி, புதன்.
தேலிக்கை - இலேசு.
தேவகாந்தாரி - ஓரிராகம்.
தேவகி - ஸ்ரீகிருஷ்ணன்தாய்.
தேவகிநந்தனன் - கண்ணபிரான்.
தேவகுண்டம் - தானுயுண்டான ஊற்று. (யாழ் அக)
தேவகுலம் - கோயில். (ஆசார.)
தேவசபை - தேவகூட்டம்.
தேவசாட்சி - ஆணை.
தேவசிருட்டி - சராசரம்.
தேவசேனுபதி - கந்தன்.
தேவடியாள் - தேவதாசி, வேசி.
தேவதத்தன் - ஓர் வாயு.
தேவதாசன்-அரிச்சந்திரன்மகன்.
தேவதாரம் - ஓர் மரம், செம்புளிச்சைமரம், ஐந்தருவிஞென்று.
தேவதை* - தெய்வம்.
தேவரம்பை - தேவப்பெண்.
தேவராசன் - இந்திரன்.
தேவராட்டி - படிமத்தாள்.
தேவலன் - கூலிக்குப் பூசை செய்பவன்.
தேவவாக்கியம் - தேவவசனம்.
தேவவிரதன் - வீடுமன்.
தேவளம் - கோயில்.
தேவாங்கம் - நற்பணிப்புடவை.
தேவாங்கு - ஒரு மிருகம்.
தேவாத்துமா - அரசமரம்.
தேவாமுதம் - தேவர்கள் பருகுமமுதம்.
தேவாரம்* - ஓர் திருப்பாடல்.
தேவாலயம் - திருக்கோயில்.
தேவி - பார்வதி, காளி, தலைவி, மனைவி, அரசி, தேவப்பெண்.
தேவிகோட்டம் - ஓரூர்.
தேவிபட்டினம் - ஓரூர்.
தேவு - தெய்வம் "மற்றெருதேவுமறியேன்."
தேவேந்திரன்* - தேவராசன்.
தேவை - வேண்டப்படுவது, [ஓரூர்.]
தேளி * - ஒருவகைத் தேங்காய், ஒரு மீன்.
தேள் - விருச்சிகம், [விருச்சிகவிராசி, அனுடநாள்.]
தேறலர் - பகைவர்.
தேறல் - கள், தேன், தெளிவு.
தேறு - தேறென்னேவல், [தேற்றுமரம்.]
தேறுகடை - தீர்மானம்.
தேறுதலே* - ஆறுதல், தைரியம்.
தேறுதல் - தெளிதல், நிச்சயம்.
தேற்றம் - தெளிவு, திடன், நிச்சயம்.
தேற்றரவு - திடப்படுத்துகை.
தேற்றூர் - அறிவிலார், பகைவர்.
தேனர் - திருடர், அசுரர்.
தேனிருட்டு, தேனிருல் - தேன்கூடு.
தேனீ - தேன்கூட்டுமீ.
தேனு - களவு, பசு.
தேனுகன் - ஓரசுரன்.
தேனெய் - தேன் "தேனெய் வார்சுனையுண்டு" (சீவக. சிந். 3067.)
தேனெறும்பு - பெரிய எறும்பு.
தேன் - மது, கள், பெண்வண்டு, வண்டு, வாசனை.

தேன்குழல், தேங்குழல் - ஓர் பண்ணிகாரம்.

தேன்மரம் - துணைமரம்.

தேன்வதை - தேனிறால்.

## தை

தை - ஓர் மாதம், தையென்னேவல், [ஓரெழுத்து, பூசநாள், மகரராசி.]

தைசதம் - மகரராசி, மூவாங்காரத்தொன்று, அக்கினிசம்பந்தம்.

தைதல் - அலங்கரித்தல்.

தைதுலம், தைதுலை - கழுதைக்கரணம்.

தைத்தல்* - தையல்செய்தல், பொருத்துதல்.

தைத்தியகுரு, தைத்தியபுரோகிதன், தைத்தியமந்திரி - சுக்கிரன்.

தைத்தியர் - அசுரர்.

தைத்திரியம் - இரண்டாம் வேதம்.

தைப்பான் - ஊசி, தையற்காரன்.

தைப்பூசம் - தைமாதத்துப் பூசத்திருநாள்.

தையல் - தைப்பு, [அழகு, பெண்.]

தைரியம் - திடம், [குதிரையின் பெருமித நடை.]

தைரியலட்சுமி* - அஷ்டலட்சுமிகளிலொருத்தி.

தைலசௌரிகை - வெளவால்.

தைலபிபீலிகை - செவ்வெறும்பு.

தைலபீதம் - அத்திப்பிசின்.

தைலமாட்டுதல் - எண்ணெயபிஷேகம் பண்ணல், பிரேதாலங்காரம் செய்யல்.

தைலமிறக்குதல் - எண்ணெய் வடித்தல்.

தைலம் - சாரம், [எள்ளெண்ணெய்.]

தைலாங்குருவி - தகைவிலான் குருவி.

தைலாம்புகை - துரிஞ்சில்.

தைலிகன் - வாணியன்.

தைவகருமம் - தகனப்பலி.

தைவதம் - தெய்வதம்.

தைவதீபம் - கண்கள்.

தைவரல், தைவருதல் - அடிவருடல்.

தைவிகம், தைவீகம் - தெய்வச்செயலாய் நேரிடுவது, தெய்வத் தன்மை.

தைவிளை, தைவேளை-ஓர் பூண்டு.

தைனியம் - கீழ்மை, பொருளாசை, எளிமை.

## தோ

தொகம் - மதிப்பு.

தொகுதி - கூட்டம், திரட்சி, பகுதி, வரிசை, சாதி, மந்தை.

தொகுத்தல் - கூட்டல், சுருக்குதல், அளவுபடுத்தல்.

தொகுப்பு - தொகுத்தல்.

தொகை - பணம், எண்ணினுறுப்பு, கூட்டம், மொத்தம், தொக்குநிற்றல், சுருக்கம்.

தொகைக்காரன் - பணக்காரன்.

தொகைமோசம் - மறதியினால் நேர்ந்தபிழை, பணநஷ்டம்.
தொக்கடம் - மிதித்தல் முதலி
தொக்கடை - தரித்திரம். [யன.
தொக்கி - சமுத்திராப்பச்சை(ஓர் பூண்டு).
தொக்கு - அற்பம், உடல், தோல் அஃது பஞ்சவிந்திரி யத்தொன்று, மரப்பட்டை.
தொங்கல் - தொங்குதல், [ஆண் மயிர், ஆபரணத்திற் றொங் கணி, காதணி, தூக்கங்கள், பீலிக்குடை, பூமாலை, மயிற் றோகை, வெண்குடை.]
தொங்கன்* - கள்வன்.
தொங்கி - கள்ளி.
தொடக்கம் - ஆதி, ஆரம்பம்.
தொடக்குதல் - ஆரம்பித்தல்.
தொடங்கல்* - துவக்கல்.
தொடரி - புலிதொடக்கிப்பூடு.
தொடர் - பின்செல்லென்னேவல், [சங்கிலி, பஞ்சினூல், பழமை, பிசின், பூமாலை, விலங்கு].
தொடர்ச்சி - தொடர்பு, பூங்கொத்து, மலர்த்திரள், பற்றுதல்.
தொடர்ந்தார், தொடர்ந்தோர் - மித்திரர்.
தொடர்பு, தொடர்வு - தொடர்ச்சி, உறவு, சினேகம், பழமை, பாட்டு, முறைமை.
தொடலை - மகளிர்விளையாட்டு, மாலை, விளையாட்டு.
தொடல் - தீண்டல், [சார்தல், தோண்டல், பிடித்தல், புசித்தல்.]
தொடி - ஒருபலம், கங்கணம், கைவளை.
தொடு - தொடுவென்னேவல், [தோட்டம், மருதநிலம், வயல், வஞ்சகம்.]
தொடுக்கம் - பொன்.
தொடுசு - சம்பந்தம்.
தொடுதல் - தீண்டல், [தோண்டல், அணிதல்.]
தொடுதோல் - செருப்பு.
தொடுத்தல் - கோத்தல், பிணைத்தல், [பற்றல், தொடங்கல், வில்வளைத்தல்.]
தொடுபதம் - சோறு.
தொடுப்பு - சேர்க்கை, [கலப்பை, தொடுத்தல், வெறும்புறங்கூறல், பாதரட்சை.]
தொடுவழக்கு - கள்ளவழக்கு.
தொடுவிலங்கு - இருவரைத் தொடுக்கும் விலங்கு.
தொடுவு - கொல்லை.
தொடுவை - புது யானையைப் பழக்கும் யானை, தொடுத்திருப்பது, கூட்டாளி.
தொடை - துடை, [அம்பு, சுவர்ப்புறத்து நீண்டவுத்திரம், செய்யுளுறுப்பிலொன்று, நாணி, பூமாலை, மதிற்சுற்று, தாறு, " தீந்தேன்றொடை கீறி " (சீவக. சிந். 3)].
தொடைதட்டிவெள்ளாழர்-நாவிதர்.
தொடையல் - தொடுத்தமாலை, மாலை.
தொடைவாழை - ஓர் நோய்.

தொட்டப்பன் - தலைதொட்ட பிதா.
தொட்டராயன் * - தலைமையுடைய மன்னன்.
தொட்டல் - தீண்டல், [தோண்டல், உண்டல்.]
தொட்டவிரல்தறித்தான் - பெருங்குறிஞ்சாக் கொடி.
தொட்டாட்மெணியம் - குற்றேவல்.
தொட்டால்வாடி, தொட்டாற்சிணுங்கி,* தொட்டாற்சுருங்கி - ஒரு பூடு.
தொட்டி - நீர்த்தொட்டி, [தொட்டில், கள், அம்பாரி, சிற்றூர்.]
தொட்டிக்கால்* - படப்புக்கால்.
தொட்டிச்சி- தொட்டியப்பெண்.
தொட்டிமை - ஒற்றுமை "தொட்டிமையுடைய வீணை" (சீவக. சிந். 2047).
தொட்டியம் - ஓர் தேசம், ஓர் பாடை, ஓர் கருநூல்.
தொட்டில் - சிறுகட்டில், [தொட்டி.]
தொண்டகம் - ஆகோட்பறை. (சீவ. சிந்.)
தொண்டமான் - ஓரரசன்.
தொண்டரடிப்பொடியாழ்வார் - ஓர் வைணவ சமயாசாரியர்.
தொண்டலம்- யானைத்துதிக்கை.
தொண்டன் - அடியான்.
தொண்டி - துவாரம், [ஓரூர், நெல்லாலாக்கின கள், கலப்பைக்கிழங்கு, தேவடியாள்.]
தொண்டிச்சி - அடியாள்.
தொண்டியோர் - சோழகுலத்தோர், சேரர்.
தொண்டு - பணி, [அடிமை, ஒன்பது, பழமை.]
தொண்டை - கழுத்து, குரல், [ஆதொண்டைச்செடி, கோவைச்செடி, யானைத்துதிக்கை.]
தொண்டைகம்முதல் * - குரல் கம்முதல்.
தொண்டைகாட்டல்* - உரத்துப் பேசல்.
தொண்டைநாடு - தொண்டைமண்டலம்.
தொண்ணூறு - ஒன்பதுபத்து.
தொத்து - ஒட்டு, [அடிமை, பழமை, பூங்கொத்து].
தொத்துதல் - ஒட்டுதல், படர்தல், தொடர்தல்.
தொந்தம் - தொடர்பு, அன்னியோன்னியம், [இரண்டு, பழமை, சலஞ்சாதித்தல்.]
தொந்தரவு, தொந்தரை - வருத்தம்.
தொந்தி - தொந்தியென்னேவல், வயிறு, தொப்பை.
தொந்தித்தல் - தொடர்தல், இரட்டித்தல்.
தொப்பி - தலைக்குல்லா, [நெல்லாற்சமைத்த கள்.]
தொப்புத்தொப்பெனல்* - ஒலிக்குறிப்பு.
தொப்புள்* - கொப்பூழ்.
தொப்பை - தொந்தி, [திண்மையின்றிப்பருத்தது.]
தொம்பம்- கம்பக்கூத்திலொன்று

தொம்பர், தொம்பரவர்*-கம்பத்தின் உச்சியிலேறிக் கூத்தாடுபவர்.
தொம்பறை - களஞ்சியம்.
தொம்பாரம் - பேரில்லம்.
தொம்பைக்கூடு* - தானியஞ்சேர்க்குங் கூடு.
தொம்மனை, தொம்மை - மிகப்பருத்தது.
தொய் - குற்றம் "தொய்வறப்பெய்த தாரீர்" (சீவக. சிந். 2474)
தொய்யகம்-தலையணியிலொன்று
தொய்யல் - அகமகிழ்ச்சி, இன்பம், உழவு, சேறு, துன்பம்.
தொய்யில் - உழுநிலம், சாந்தினுடலி லிடுங்கோலம், அழகு, கிளர்ச்சி.
தொய்வு - இளைப்பு.
தொலி - பழத்தோல், உமி, தொலியென்னேவல்.
தொலித்தல் - உமிபோகக் குத்துதல், பழத்தின்தோ லுரித்தல்.
தொலை - தூரம், சேதப்படுத்தென்னுமேவல், [உவமை, கொல்லை "தொலைப்பருஞ் சுற்றத்தாரோ" (சீவக. சிந். 2884.)]
தொலைதல் - ஒழிதல், நீங்குதல், சாதல், கெடுதல், முடிதல்.
தொலைத்தல் - கொல்லல், சேதப்படுத்தல்.
தொலைவு - தூரம், [தோல்வி.]
தொல்காப்பியக்குடி - மதுரைக் கருகேயுள்ள ஓரூர்.
தொல்காப்பியம் - பண்டைக் காலத்திய ஓரிலக்கண நூல்.
தொல்லை-தொந்தரவு, [பழமை.]
தொல்வினை - பழவினை.
தொழல் - தொழுதல்.
தொழில் - உத்தியோகம், [செயல், தந்திரம் "அவற்றது தொழிலுந் தோன்றவே" (சீவக. சிந். 1217.)]
தொழு - தொழுவென்னேவல், தொழுமரம், [இரேவதிநாள், பசுக்கொட்டில், குட்டநோய்]
தொழுகண்ணி - அரவாட்டிப் பச்சை. (ஒரு செடி)
தொழுகள்வர் - மாசாலக்காரர்.
தொழுகுலத்தோர் - பிரமஞானியர்.
தொழுகை - தொழுதல்.
தொழுதல் - கும்பிடுதல், வணங்கல்.
தொழுதி - கூட்டம், திரட்சி, பறவைக்கூட்டத்தொலி.
தொழுத்தை - பணிப்பெண்.
தொழுநோய் - குட்டநோய்.
தொழுப்பு - உழுதொழில்வலைப்பு.
தொழும்பர் - அடிமைகள், குற்றேவல் செய்பவர்.
தொழும்பு - அடிமை, அடிமை வேலை.
தொழுவம் - மாட்டுக்கொட்டில்.
தொழுவர் - தொழில்செய்வோர், மருதநிலமாக்கள்.
தொழுனை - யமுனையாறு.
தொளதொளெனல்*-நெகிழ்தல்.
தொளாயிரம், தொள்ளாயிரம் - ஒன்பது நூறு.
தொளி - சேறு.

தொளுக்குதல் - தளரக்கட்டுதல்.
தொளை - உட்டுளை, துளை, [மூங்கில்.]
தொள்கு - வலை, சேறு. (இரா.)
தொள்ளம் - சேறு, தெப்பம்.
தொள்ளல் - துளைத்தல், துளை.
தொள்ளாமணி - தொளைக்காத முழுமணி.
தொள்ளி - குழைசேறு.
தொள்ளை - துளை, துளையுடைப் பொருள், மரக்கலம்.
தொள்ளைக்காது* - பெருந்துளையுள்ள காது.
தொறு, தொறுவு - அடிமை, செய்தொழில், பசுக்கூட்டம், பொலிவு, இடைச்சாதி "நலத்தகுதொறுவினுள்ளேனுமங்" (சீவக. சிந். 477.)
தொறுத்தி, தொறுவி-இடைச்சி.
தொறும் - தோறும்.
தொறுவர் - இடையர்.
தொறுவியர் - இடைச்சியர்.
தொற்றுதல்*-ஏறுதல், ஒட்டல், பற்றுதல்.
தொனி - ஒலி, தொனியென்னேவல்.
தொனித்தல் - ஒலித்தல்.
தொனு - உக்கிரசத்தம்.
தொனுப்புதல் - அலப்புதல்.
தொன்மரம் - ஆலமரம் "வாவலுறை தொன்மரங்களென்ன" (சீவக. சிந். 498.)
தொன்மை - பழமை, பாவினெண்வகை வனப்பினென்று.
தொன்று - பழமை.
தொன்னீர் - கடல்.
தொன்னூல் - ஓரிலக்கண நூல்.
தொன்னை* - இலை முதலியவற்றாற் செய்த கலம்.

## தோ

தோகதம் - வயாநோய், விருப்பம்.
தோகம் - சிறுமை, சிசு, பால்.
தோகை - மயிற்றோகை, [இறகு, மயில், முன்றானை, வால், பெண்மயிர், பெண்.]
தோக்கை-சீலை, மேற்போர்வை.
தோசம் * - தோஷம் (குற்றம்) "தோசமறத் துதிகொண் மனத்தோதித் தொழுதிருந்தாள்" (சிந்தா. 13:223)
தோசி, தோஷி* - குற்றப்பட்டாள், பாவி.
தோசை * - அப்பவர்க்கத்தினொன்று.
தோடகச்சிரங்கு-கொப்புளமான சிரங்கு.
தோடகம்-தாமரை, கொப்புளம்.
தோடம்,தோஷம் - குற்றம், [ஓர் சுரம், இரவு.]
தோடயம், தோடையம் - நாடகச் சிறப்புப் பாயிரக்கவி.
தோடா* - கைவளை.
தோடி - ஓரிராகம்.
தோடு-காதணியினொன்று, [கூட்டம், தாழை, தெங்கு, பூவிதழ், குடுமி (இரா.)]
தோடை - குளஞ்சிமரம், சலாபக் குளியிலோர் குழூஉக்குறி.
தோட்கோப்பு - வழியுணா.

தோட்சுமை - காவடி.
தோட்டம்* - கொல்லை.
தோட்டா* - வெடிமருந்துச் சுருள்.
தோட்டி - சுத்திசெய்வோன், [வெட்டியான், அழகு, கதவு, யானைக்குடாரி, சூழ்கழியிருக்கை, வாயில், நெல்லிமரம்.]
தோட்டிமை - வெட்டியான்வேலை, ஒற்றுமை.
தோட்பட்டை* - கைச்சிப்பு.
தோணுமுகம் - கழியிருக்கை.
தோணி - மரக்கலம், [அம்பு, இரேவதிநாள், மதிலுறுப்பு.]
தோணிபுரம் - சீகாழி.
தோணிவிடல் - தோணியோட்டல்.
தோர்ணோக்கம் - ஒருவரிக்கூத்து. (சிலப்.)
தோண்டல் - அகழ்தல் (தோண்டுதல்), [முகத்தல், குடைதல்]
தோண்டான் - தோண்டமாட்டான், [ஓநாய்.]
தோண்டி - வினையெச்சம், சிறுபானை, [வறட்சுண்டி (ஆடு தின்னுப்பாளை.)]
தோண்மேல் - பிடர். (திவா.)
தோதகத்தி - நூக்கமரம், மரியாதையில்லாதவள்.
தோதகம் - வஞ்சகம், மரியாதையின்மை, வருத்தம்.
தோத்திரம் - துதித்தல், [யானைத்தோட்டி, தொட்டிபாஷாணம், ஆவோட்டுங்கோல்.]
தோத்திரித்தல் - துதித்தல்.
தோப்பாடி, தோய்ப்பாடி - துஷ்டன்.
தோப்பு* - சோலை.
தோப்புக்கண்டம், தோப்புக்கரணம் - இருகைமாறிக் காதைப் பற்றி இருகால் முடக்கித் தெண்டனிடல்.
தோமரம் - எறியாயுதம், கைவேல், பெருஞ்சவளம், இருபபுலக்கை.
தோம் - குற்றம், தீமை.
தோம்பு* - சிவப்பு.
தோயதம், தோயதரம் - மேகம்.
தோயம் - நீர், பூராடம். (சப்த)
தோயல் - தோய்த்தல், கலத்தல், குளித்தல்.
தோய்தல் - இரும்பைக் காய்ச்சி நனைத்தல், உறைதல், [புணரல், முழுகல்.]
தோய்த்தல்* - துவைத்தல், நனைத்தல்.
தோரணம் - மாவிலை முதலிய வற்றுற்செய்து தெருவில் கட்டுந்தோரணம், [தலைவாசலின் வாயில், கோபுரவாயில்.]
தோரணி, தோரணிக்கம் - ஒழுங்கு, வழிவகை, வரலாறு.
தோரணை - நடை.
தோரி - சோறு.
தோரியமடந்தையர் - ஆடிமுதிர்ந்தவர்.
தோரை-இரத்தம், குளநெல், சரமணிக்கோவை, மூங்கிலரிசி, விரலிறை, வெண்மை கலந்த சிவப்பு, ஒரெண், பொன்வடம் "பொற்றோரை மின்னச்" (சீவக. சிந். 2132.)

தோலா* - ரூபாயெடை.
தோலாமை - தோல்வியின்மை.
தோலாவழக்கு - முடிவு பெறாத வழக்கு.
தோலான்*- அற்பன்.
தோலி - ஒரு மீன், அரக்கு.
தோல் - சருமம், [அழகு, எண்வகை வனப்பிலொன்று, சொல், துருத்தி, தோலினாற் செய்த கேடகம், தோலென்னேவல், யானை, தோல்வி.]
தோல்வி*- அபசெயம்.
தோல்வு - தோல்வி.
தோவத்தி* - சோமன்.
தோழமை - நண்பு.
தோழம் - தொழுவம் (பசுக்கொட்டில்), கடல்.
தோழன் - பாங்கன், நண்பன்.
தோழி - பாங்கி, பணிசெய்பவள்.
தோழ்-தொழுவம் "தாழிதொருவுந் தோழும்போன்று"(சீவக. சிந். 487.])
தோளாமணி - துளைக்காத முழு [மணி.
தோளி - அவுரிப்பூண்டு.
தோளுதல் - துளைத்தல்.
தோள் - புயம், [கை "தோளுற்றோர் தெய்வந்துணையாய்த."]
தோள்கொடுத்தல் - இறந்தவனைக் கிடத்திய பாடையைத் தூக்கத் தோள்தருதல், [உதவுதல்.]
தோறும் - பன்மைப்பொருடருமோரிடைச்சொல்.
தோற்கட்டு - கோதை.
தோற்கருவி - தோலால் மூடப்பெற்ற வாச்சியம்.
தோற்பரம் - தோலாற் செய்த கேடகம்.
தோற்பாடி - வேசி, இழிஞன்.
தோற்பு* - தோல்வி.
தோற்றம் - பிறப்பு, எற்றமொழி, சொல், மகன், வலி, காட்சி, எண்ணம், ஒளி.
தோற்றரவு - தோற்றுதல்.
தோற்றல் - தோல்வி, [பிறத்தல், தோன்றல், முளைத்தல்.]
தோற்றுங்கொள்ளி - அஞ்சிப் புறங்கொடுத்தோடுபவன்.
தோற்றுருத்தி - உடம்பு "நிறைந்ததோற் றுருத்தி தன்னைப்" (சீவக. சிந். 1885.)
தோற்றுவித்தல் - உண்டாக்கல்.
தோற்றுன்னர் - சக்கிலியர்.
தோன்றல்-வெளிப்படல், ஆண்மகன், மன்னன், தமையன், பெருமையிற்சிறந்தோன், மகன், முல்லைநிலத்தலைவன்.
தோன்றாத்துணை - அந்தரங்கத் துணை, கடவுள்.
தோன்றி - இரத்தம், செங்காந்தள், காந்தள், வினையெச்சம்.
தோன்றிகர் - செட்டிகள்.
தோன்றுதல் - கண்காண வெளிப்படல், பிறத்தல், விளங்குதல், முளைத்தல்.

## தௌ

தௌகித்திரன் - புதல்வியின் மகன்.
தௌதம் - வெள்ளி.
தௌதிகம் - முத்து.

தௌத்தியம் - வணககம், தூது.
தௌரிதகம் - குதிரை வட்டமாய்த் திரும்பல்.
தௌரிதம் - குதிரைநடை, துரிதம்.
தௌர்ப்பல்லியம் - பலஹீநம்
தௌர்ப்பாக்கியம் - நிர்ப்பாக்கியம்.
தௌலிகன் - சித்திரகாரன்.
தௌவல் - குந்திநடத்தல், கெடுதல்.
தௌவை - அக்காள், மூதேவி, தாய்.
தௌர்ப்பல்லியம் - துர்ப்பலம்.

## ந

ந - ஒரெழுத்து, இன்மை எதிர்மறை பிறிது என்னும் பொருள்களோடு நன்மைப்பொருளையுங் காட்டுமோர் ருபசருக்கம்.
நகக்கண் * - நகத்தினடி.
நகக்காளான் * - நகத்தில் முளைக்குங் காளான்.
நகக்குறி - நகத்தின் தழும்பு.
நகச்சுற்று - நகக்கண்ணில் வருமோர் நோய்.
நகதாஜாமீன்-உரொக்க ஜாமீன்.
நகம் - உகிர், [பூமி, மரம், மலை.]
நகரம் - பட்டணம், [இராசமனை, ஒரெழுத்து, மருதநிலத்தூர்.]
நகரா * - ஓர் பறை.
நகரி-இராசமாநகரம், நகரியெனுமோரூர்.
நகருதல் * - நகர்தல்.
நகரை - ஓர் மீன், [ஒரு மரம், ஒருவகை அரிசி.]
நகர் - நகரம், தவழென்னேவல், [மருதநிலத்தூர், வீடு, கோயில்.]
நகர்தல் - தவழ்தல், [மறைவாய்ப்போதல்.]
நகர்த்தல் - தள்ளல்.
நகாசு * - நுண்ணியவேலை.
நகாயுதம் - சிங்கம்.
நகார் - எயிறு. (சிறு.)
நகிலம் - நகில் (முலை.)
நகுடன், நகுஷன் - ஓர் பாம்பு, நூறு அசுவமேத யாகஞ்செய்து பிறகு அகத்தியரால் சபிக்கப்பட்ட சந்திரகுலத்தோரரசன்.
நகுதல் - சிரித்தல், இகழ்தல், ஒளிவிடுதல்.
நகுதா * - கப்பலோட்டி.
நகுலம் - கீரி, குங்குமம். [(சப்த.)
நகுலன் - பஞ்சபாண்டவரிலொருவன், [பரிமாவுகைப்போன்]
நகை - ஆபரணம், [நகையென்னேவல், இகழ்ச்சி, எயிறு, ஒளி, களிப்பு, சிரிப்பு, பல், பூவரும்பு, மலர்ச்சி, முத்து. (சீவ. சிந்.)]
நகைச்சொல் - பரிகாசப்பேச்சு.
நகைத்தல் - நிந்தித்தல், [சிரித்தல்.]
நகைப்பு - சிரிப்பு, பரிகாசம்.
நகையாமல் - பகன்றைச்செடி.
நக்கபாரம் - சில தீவுகள் The Nicobar Islands.
நக்கரம் - முதலை. (இரா.), தேள்.

நக்கல் - நக்குதல், எச்சில், [சிரித்தல்.]
நக்கனத்துவம் - நிருவாணம்.
நக்கன் - நிருவாணி, அருகன், சிவன், நரி.
நக்கீரன் - சிவனோடு இலக்கண வாது புரிந்த ஒரு தெய்வக் கவிஞன்.
நக்குணி-ஓர் பாம்பு, சிறுபிள்ளை.
நக்குதல் - நாவாலெடுத்துண்ணல், (உ-ம்.) நக்குநாயினுங் கடையெனப்புகலு நான்மறையே (திருநாவு. தேவா.)
நங்கு* - பரிகாசம்.
நங்குரம், நங்கூரம்* - கப்பலை நிறுத்தச் செய்யுங் கருவி.
நங்கை - பெண்ணிற் சிறந்தாள், [ஓர் பூடு.]
நசனை, நசினை* - இரத்தினத்தின் குற்றத்தொன்று.
நசித்தல் - அழித்தல், கெடுத்தல்.
நசியம் - மூக்கிலிடும் மருந்து.
நசிருணி - உலோபன்.
நசுக்கான்* - சிறியது.
நசுக்குதல்*-பெலன்கெடச் செய்தல்.
நசுங்குதல் - நசுக்கப்படுதல், நெருக்கிடைப்படுதல்.
நசுநசுப்பு - ஈரம், மெதுமெதுப்பு.
நசுநசெனல் - மழைதூறற்குறிப்பு, மெதுமெதெனல்.
நசுபிசெனல் - குழைந்தொட்டுதல்.
நசை - குற்றம், ஆசை, ஈரம், ஒழுக்கம், பரிகாசம்.
நசைநர் - நண்பர்.
நச்சல் - விரும்பல்.
நச்சறுப்பான் - கழுதைப்பாலைக் கொடி.
நச்சினார்க்கினியர் - ஒருரையாசிரியர்.
நச்சு - விடம், [நச்சென்னேவல், விருப்பம்.]
நச்சுக்காற்று - விஷக்காற்று.
நச்சுக்கொடி, நஞ்சுக்கொடி* - கொப்பூழ்க்கொடி.
நச்சுதல் - விரும்புதல்.
நச்சுநச்செனல்* - அலட்டுதல்.
நச்சுமரம் - எட்டிமரம்.
நச்சுவாக்கு* - தீச்சொல்.
நச்செழுத்து - நஞ்சுத்தன்மையுள்ள எழுத்து, அவை யா, யோ, ரா, ரே, லா, ளா, லோ, ய், ர், ல் இவைகளும் ஏழு நெட்டெயிரும் ஆயுதமுமாம்.
நஞ்சறுப்பான் - படவங்கீரை.
நஞ்சு - விஷம், தீமை.
நஞ்சுணி - சிவன்.
நஞ்சை* - நன்செய் (விளைநிலம்.)
நடக்கை, நடத்தை* - ஒழுக்கம்.
நடந்தேறுதல் - நிறைவேறல், சம்பவித்தல்.
நடபடி* - ஒழுக்கம்.
நடப்பு-கருமாந்தரத்துக்கு முதல் நாளில் கல்நடுஞ்சடங்கு, [போக்கு, நடத்தை, செல்லுதற்குரிய இடம் (சீவக. சிந். 770 உரை.]
நடமாடுதல் - கூத்தாடுதல், வழங்குதல்.
நடமாட்டம் - பழக்கம்.
நடம் - ஓரிராகம், கூத்து.

நடராஜன் - சிவன்.
நடலம் - ஒய்யாரம், பொய், வஞ்சனை.
நடலை - பொய், கபடம், வஞ்சனை, துன்பம், நடுக்கம்.
நடவடி, நடவடிக்கை - நடபடி.
நடவு - நாற்றுநடுகை.
நடவை - கடவுமரம், வழங்குமிடம் (உ - ம்.) தமிழ்நடவை, வழி.
நடனர் - கூத்தர்.
நடனியர் - நாட்டிய ஸ்திரீகள்.
நடாத்துதல் - நடத்துதல்.
நடி - நடியென்னேவல், நாடகக்கணிகை, பெருமை.
நடு - நடுவென்னேவல், இடை, [நீதி, பூமி.]
நடுதல் - நாட்டல்.
நடுத்தாம் - இடைத்தாம்.
நடுநாள் - சித்திரைநாள்.
நடுப்பகல் - மத்தியானம்.
நடுமையம் - உச்சி, நடு.
நடுவன் - இயமன், மத்தியஸ்தன்.
நடுவாந்தரம்* - இடை.
நடுவு* - இடை.
நடுவெலும்பு - முதுகெலும்பு.
நடேசன் - சிவன்.
நடை - வாயிற்கடை, [ஒழுக்கம், நடத்தை,செலவு, முறைமை.]
நடைக்கலம் - மரக்கலம்.
நடைத்தேர் - சிறுதேர்.
நடைபாவி* - வழிக்கிணறு.
நடைப்பாவாடை* - நடப்பதற்கு வழியில் விரிக்குமாடை.
நடைமலை - யானை.
நடைமொழியாதோன் - காற்று.
நட்சத்திரம்* - விண்மீன்.
நட்டணை - பரிகாசம், கொரேம், வெறுப்பு.
நட்டபாடை - ஓரிராகம்.
நட்டம் - சேதம், கூத்து.
நட்டார் - சிநேகிதர்.
நட்டாறு * - நடு ஆறு.
நஷ்டி - நஷ்டம்.
நட்டுவக்காலி - ஓர் விஷசெந்து.
நட்டுவன்* - நாட்டியம்பழக்குவோன்.
நட்டுவிழுதல்* - தலைகீழாய் விழுதல்.
நட்பு - சிநேகம், உறவு.
நணுகலர் - பகைவர்.
நண்டுத்தெறுக்கால், நண்டுவாய்க்காலி - நட்டுவக்காலி.
நண்ணலர், நண்ணார் - பகைவர்.
நண்ணல் - கிட்டல், சார்தல்.
நண்ணுநர் - மித்திரர்.
நண்பன் - தோழன், [குறிஞ்சிநிலத்தலைவன், புருடன்.]
நதி - யாறு, பெண்யாறு.
நதிபதி - கடல்.
நத்தமாலம் - புன்கமரம்.
நத்தம் - இரவு, இருள், ஊர், சங்கு, நத்தை, புன்கமரம்.
நத்து - மூக்கணி, [சங்கு.]
நத்துதல் - விரும்பல்.
நத்தை - ஒருபூண்டு, கருநந்து.
நத்தைச்சூரி - ஓர் செடி.
நத்தைப்படுவன் - கண்கட்டி.
நந்தகோபன் - கண்ணனை வளர்த்த பிதா.
நந்தகோபாலர் - இடையர்.
நந்தநந்தனன் - கண்ணன்.

நந்தம் - சங்கு, பெருமகிழ்ச்சி.
நந்தர் - இடையர்.
நந்தல் - ஆக்கம், கெடுதல், வளர்தல், நிந்தை.
நந்தனம் - இந்திரன்பூந்தோட்டம், ஓராண்டு, பூந்தோட்டம்.
நந்தனவனம், நந்தவனம் - பூந்தோட்டம்.
நந்தனன் - மகிழ்விப்போன்.
நந்தனி, நந்தனை - மகள்.
நந்தன் - அரசுபுரிந்த ஓர் சக்கிலியன், நந்தகோபன், சீர்பந்த பாஷாணம், புத்திரன்.
நந்தி - நந்திதேவன், [அட்டாத சவுப புராணத்தொன்று, எருது, இடபவிராசி, ஓரரசன், சிவன், சிறுபறை, செக்கான்.]
நந்திப்பூசுணி - சாம்பற்பூசுணி.
நந்தியம்பெருமான்-நந்திதேவன்.
நந்தியாவட்டம், நந்தியாவட்டை, நந்தியாவர்த்தம் - ஓர் பூச்செடி.
நந்துருணி* - கோட்காரன்.
நந்தை - பிரதமை, ஒரு தெய்வப்பசு, கலப்பையை நுகத்தொடு பிணைக்குங் கயிறு, கொத்தான் கொடி.
நந்நான்கு - நான்குநான்காக.
நபம் - கார்காலம், ஆகாயம்.
நபுஞ்சகன் - பேடி.
நமஸ்கரித்தல்* - வணங்கல்.
நமஸ்காரம்* - வந்தனம்.
நமருதல்* - ஊறுதல்.
நமன் - இயமன், [சுற்றத்தான், நம்மவன்.]
நமிடு, நமுடு* - ஈர்.
நமுட்டுச்சிரங்கு* - சிறுசிரங்கு.
நமூது - சாட்சி.
நமை-சொறி, தினவு, [ஒருமரம்.]
நமைச்சல்* - தினவு.
நம்பன் - கடவுள், சிவன், திருமால்.
நம்பி - புருடரிற் சிறந்தோன், ஓர் வேடுவமன்னன்.
நம்பிக்கைத்துரோகி - விசுவாசமில்லாதவன் (இரண்டகன்).
நம்புதல் - விசுவாசித்தல்.
நயக்கன் - நாய்.
நயந்தோர் - சிநேகிதர்.
நயப்பு - விலைமலிவு, [ஆசை, அன்பு.]
நயமொழி - பணிவான சொல்.
நயம் - விலைமலிவு, [இன்பம், உபசாரம், நன்மை, நீதி.]
நயனம் - கண்.
நயன்-நன்மை, பலன், மகிழ்ச்சி, இன்பம், அருள் (கலி.)
நயிட்டிகம் - நியமநிட்டை.
நயினர் - சைனர், நாயனர், ஐயனர், எசமான்.
நரகம், நரகு - பாவலோகம்.
நரகரி - நரசிங்கம்.
நரகர் - பாதாளலோகத்தார்.
நரகலோகம் - பாவிகள் சேருமுலகு.
நரகல்* - மலம்.
நரகாசுரன் - ஓரசுரன்.
நரசிங்கம்* - திருமாலின் பத்தவதாரத்தொன்று.
நரசீவன் - மனிதன்.
நரதேவன், நரபதி - மன்னன்.
நரந்தம் - கத்தூரிமிருகம், காக்கை, நாரத்தை, வாசனை.

நரபலி - மனிதபலி.
நரப்புக்கருவி - வீணை முதலிய வாச்சியம்.
நரமேதம் - நரபலியிட்டுச் செய்யு மொரு யாகம்.
நரம்பன் - நரம்பு புடைத்த சரீர முடையவன்.
நரம்பு-நாடி, இலை முதலியவற்றி னரம்பு, [இசை, வின்னாண்.]
நரம்புச்சிலந்தி* - ஒரு புண்.
நரர் - மனிதர்.
நரலை - கடல்.
நரல் - செத்தை.
நராந்தம் - காக்கை.
நராலை - நரகம். (சது.)
நரிப்பயறு - மின்னிப்பயறு.
நரிப்புத்தி - தந்திரபுத்தி.
நரிப்புறம் - மிருகசீரிடம்.
நரிமருட்டி - கிலுகிலுப்பை.
நரியன் - குள்ளன், சூதன்.
நருக்கல் - நொருக்கல்.
நருக்கெனல்* -விரைவுக்குறிப்பு.
நருநரெனல்* - சருச்சரைக் குறிப்பு.
நருமதை - ஓராறு.
நருமுதல், நரும்புதல் - துண்டாக்கல், பற்கடித்தல்.
நரேந்திரன் - அரசன்.
நரை - சரை, வெண்மை, எருது, நாரை, சாமரம், இடபவிராசி.
நரையான் - செங்காலுநாரை, மீன் குத்திப்புள், சின்னது, காகம்.
நலக்குதல்* - கசங்கச்செய்தல்.
நலங்கு* - ஓர் கலியாணச்சடங்கு.
நலங்குதல் - அழுக்காதல், வதங்குதல்.
நலம் - நன்மை, பயன், உயர்வு, உபகாரம், அழகு, கண்ணோட்டம்.
நலம் - இன்பம்.
நலம்பொலம்* - நன்மையுந் தின்மையும்.
நலி - நோய்.
நலிதல் - மெலிதல், வருந்தல்.
நலிவு அழிவு.
நல்குதல் - ஈதல்.
நல்குரவு - தரித்திரம்.
நல்கூர்தல் - தரித்திரப்படல்.
நல்லதனம்* - சினேகத்தன்மை.
நல்லபாம்பு* - நாகப்பாம்பு.
நல்லம் - கறுப்பு.
நல்லம்மான்-தாயின் சகோதரன்.
நல்லவெல்லம்* - கருப்பங்கட்டி.
நல்லவேளை - நற்சமயம், [நல்வேளைப்பூடு.]
நல்லறிவு - பேரறிவு.
நல்லாச்சி - சிற்றன்னை.
நல்லார் - உத்தமர், [அறிஞர், பெண்கள்.]
நல்லாள் - நற்குணமுடையவள், [பெண்.]
நல்லோர் - உத்தமர், [அறிஞர்.]
நல்லெண்ணெய்* - எள் நெய்.
நல்வாழ்வு - சுகவாழ்க்கை.
நல்வினை - தருமம்.
நவகண்டம் - ஒன்பது கண்டம் அஃது, கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்னிரேபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டம்.

நவக்கிரகம் - ஒன்பது கோள்: அவை ஞாயிறு, கரும்பாம்பு, செம்பாம்பு, திங்கள், சனி, வெள்ளி, செவ்வாய், புதன், வியாழன்.

நவச்சாரம் - ஓர் மருந்து.

நவதானியம்* - ஒன்பது தானியம்: அவை உளுந்து, எள்ளு, கடலை, கொள்ளு, சாமை, தினை, துவரை, நெல்லு, கோதுமை.

நவதி-தொண்ணூறு, பொடுதலை.

நவத்தம் - சடாமாஞ்சில்.

நவத்துவாரம் - ஒன்பது வாயில்: அவை கண், காது, மூக்கு, வாய், குதம், குய்யம்.

நவநாதசித்தர் - ஒன்பது சித்தர்: அவர் அஞ்ஞதிநாதர், ஆதிநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர், சதோகநாதர், சத்தியநாதர், மச்சேந்திரநாதர், மதங்கநாதர், வகுளிநாதர்.

நவநிதி - கச்சபநிதி, கற்பநிதி, சங்கநிதி, நந்தநிதி, நீலநிதி, பதுமநிதி, மகாநிதி, மகாபதுமநிதி, முகுந்தநிதி.

நவநீதசோரன் - வெண்ணெய் களவாடின கிருஷ்ணன்.

நவநீதம் - புதுவெண்ணெய், புதுமை.

நவமணி - ஒன்பதிரத்தினம்: அவை கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வைடூரியம்.

நவமேகம் - ஒன்பது முகில்: அவை ஆவர்த்தம், சம்வர்த்தம், புட்கலம், துரோணம், காளம், நீலம், வாருணம், வாயுவம், தமம்.

நவம் - ஒன்பது, கார்காலம், கேண்மை, சிநேகம், புதுமை.

நவரத்தினம் - நவமணி.

நவராத்திரி* - புரட்டாசித் திங்களில் இலட்சுமி, சரஸ்வதி, துர்க்கையாகிய சத்திகளைப் பூசிக்கு மொன்பதுநாள்.

நவரோசு - ஓரிராகம்.

நவாங்கிசம், நவாமிசம் - இராசியை ஒன்பதாய் வகுத்தல்.

நவியம் - கோடாலி, மழு, புதியது, புதுமை.

நவிரம் - ஆண்மயிர், உச்சி, தலை, புன்மை, மயில், மருதயாழ்த்திறம், மலை, வாள்.

நவிலல் - சொல்லல், கற்றல்.

நவிழ்த்தல் - அவித்தல்.

நவிறல் - சொல்லல்.

நவீனம் - புதுமை.

நவுந்துபோதல்-இற்றுப்போதல், [தளரல்].

நவுரி - எக்காளம்.

நவை - இகழ்ச்சி, குற்றம்.

நவ்வி - மான், அழகு, இளமை, அத்தநாள், தோணி.

நவ்வியம் - புதியது, புதுமை.

நவ்வு - மரக்கலம்.

நழுங்கல் - மழுங்கல், வழுவுதல்.

நழுவமிழ்து - கூழ்.

நழுவல்* - விலகல், வழுவுதல்.

நள - ஓராண்டு.

நளகூபரன் - குபேரன்மகன்.
நளம் - அகலம், தாமரை.
நளன் - தமயந்தியின் கணவன். இவன் முதலெழுவள்ளல்களி லொருவன், [ஸ்ரீராமர் பொருட்டுச் சேதுவி லணைகட்டிய ஒரு குரங்குவீரன்.]
நளி - அகலம், பெருமை, குளிர்ச்சி, கூட்டம், செறிவு, தேள்.
நளிர் - குளிர், நண்டு, பெருமை.
நளினம் - பரிகாசம், தாமரை, நீர்.
நளினி - இலட்சுமி, ஓர்பண், தாமரைப்பொய்கை.
நளுத்தை - ஓர் பண்.
நளை - ஏலத்தோல்.
நள் - நள்ளென்னேவல், உச்சிப்பொழுது, நடு, திருவோணம்.
நள்ளல் - நட்புக்கொள்ளுதல்.
நள்ளார் - பகைவர்.
நள்ளி - கடையெழுவள்ளலி லொருவன், உறவு, நண்டு, கர்க்கடகவிராசி.
நள்ளிருள்* - செறிந்த இருள்.
நள்ளுநர் - நண்பர்.
நறவம், நறவு - கள், தேன், வாசனை, குங்குமமரம்.
நறா* - கள், வாசனை, தேன்.
நறுக்குதல்* - துண்டித்தல்.
நறுக்குத்திப்பிலி - தேசாவரம் எனும் சரக்கு.
நறுநறெனல்* - வாய்க்குக் கடினமாயிருத்தல்.
நறுநுதல் - மணங்கமழ்நெற்றி.
நறுநெய் - பசுநெய்.
நறுமருப்பு - இஞ்சி.
நறுமை - நன்மை, வாசனை.
நறும்புதல் - நரும்புதல் (பற்கடித்தல்.)
நறுவிலி*, - ஒரு மரம்.
நறை - கள்ளு, தேன், வாசனை, குற்றம், நறும்புகை.
நற்கதி - மோட்சம்.
நற்கந்தம் - சுகந்தம்.
நற்சமயம் - நற்றருணம்.
நற்செய்தி - சுகசெய்தி.
நற்றமிழ் - இனிய தமிழ்.
நனந்தலை - உச்சி, நடுவிடம்.
நனவு - சாக்கிரம், நித்திரை மயக்கினின்றுநீங்கல், தெளிவு.
நனை - பூவரும்பு, கள், தேன்.
நனைத்தல்* - ஈரமாக்கல்.
நன்காடு - சுடுகாடு.
நன்கு - அழகு, நன்மை, மிகுதி.
நன்மார்க்கம் - நன்னெறி.
நன்மை* - உபகாரம், உதவி, சுபம், நற்குணம், நல்வினை.
நன்மையானபெண் * - பருவமடைந்த பெண்.
நன்றி - உபகாரகுணம், நன்மை.
நன்றிகெட்டவன் - செய்ந்நன்றியை மறந்தவன்.
நன்றிகோறல் * - செய்ந்நன்றி கெடுத்தல்.
நன்று - நன்மை, சுகம், பெருமை.
நன்னடை - நல்லொழுக்கம்.
நன்னயம் - உபசாரச்சொல், நன்மை.
நன்னர் - நன்மை.
நன்னலம் - அழகு, மேன்மை.
நன்னாரி* - ஒரு பாற்கொடி.
நன்னி - சிற்றுருவானது.
நன்னிலை - நல்லொழுக்கம், சுகம்.
நன்னிறம் - வெண்மை.

நன்னுதல் - பெண்.
நன்னூல் - நல்ல நூல், [ஓரிலக்கண நூல்.]
நன்னெறி - நல்வழி, [ஒரு நீதி நூல்].

நா

நா - நாக்கு, [ஓரெழுத்து, நடு, சொல் "நாவினுளுலகமெல்லாநடக்கு" (சீவக. சிந் 316), சுவாலை.]
நாககங்கணன் - சிவன்.
நாககற்பம் - செவ்வீயம்.
நாககன்னிகை - நாகலோகத்துப் பெண்.
நாகசரம்*, நாகசுரம் - ஒருது குழல்.
நாகணம், நாகந்தி - நேர்வாளம்.
நாகணவாய்ப்புள் - ஓர் பறவை.
நாகதாளி* - ஓர் மரம்.
நாகதீபம் - ஐந்தலைவிளக்கு.
நாகதேவன் - ஆதிசேடன்.
நாகநாடு - பவணலோகம்.
நாகநாதன் - ஆதிசேடன், இந்திரன்.
நாகபடம் - ஓர் காதணி, பாம்பின் படம்.
நாகபட்டினம்* - ஒரூர்.
நாகபந்து - அரசமரம்.
நாகபாசம் - பாம்புருவான ஒரு படைக்கலம், [வருணனாயுதம்.]
நாகப்பச்சை - ஓரிரத்தினம்.
நாகப்பூச்சி - நீண்ட புழுவினொரு வகை.
நாகமல்லி - அனிச்சமரம்.
நாகமாதா - துளசி.
நாகம் - ஓர் பாம்பு, [ஆகாயம், ஒலி, கருங்குரங்கு, காரீயம், குரங்கு, ஞாழல், தேவலோகம், நற்புடைவை, புன்னைமரம், மலை, யானை.]
நாகம்மா* - சர்ப்பதேவதை.
நாகரத்தினம்* - நாகத்தின் தலையிலுள்ள மணி.
நாகரம் - ஓர் பாஷை, [சுக்கு, ஓர் வண்டு, தேன்றுடை.]
நாகராசன் - அனந்தன்.
நாகரி - குருக்கத்திமரம்.
நாகரிகம், நாகரீகம் * - [நகரத்திற்குரியது, கண்ணோட்டம், சாதுரியம், விநோதம்.]
நாகர் - சற்பசாதியார், தேவர்.
நாகலதை - ஆண்குறி.
நாகலோகம் - கீழுலகத்தொன்று, தேவலோகம்.
நாகவராளி - ஓர் பண்.
நாகவல்லி* - கலியாணப் பூர்த்திச் சடங்கினொன்று, [வெற்றிலைக்கொடி, வெற்றிலை.]
நாகவள்ளி - ஓர் கிழங்குக்கொடி, வெற்றிலைக்கொடி.
நாகன்-தசவாயுவினொன்று :அது விக்கல் முதலியவற்றை உண்டுபண்ணுவது.
நாகாசனன்- கருடன். (நாமதீப.)
நாகாத்திரம், நாகாஸ்திரம்* -நாகபாணம்.
நாகாபரணன், நாகபூஷணன் - சிவன்.

நாகு - பெண்ணெருமை, [இளமை, இளமரம், சங்கு, நத்தை, புற்று, பெண்மீன்.]
நாகூர்* - ஓரூர்.
நாகேசுரம் - குடந்தைக்கருகேயுள்ள ஓரூர், [சிறுநாகப்பூ.]
நாகை - நாகபட்டினம்.
நாக்கரளை - நாவில் வருமோர் நோய்.
நாக்கு* - நா.
நாக்குத்தவறுதல்* - சொற்றவறுதல்.
நாக்குப்புற்று - ஒரு நோய்.
நாக்குப்பூச்சி * - மலப்பையின் சிறுபுழு.
நாக்குமீன்* - ஓர் மீன்.
நாக்குழிஞ்சான் - ஓர் செடி.
நாங்கூழ் - நாக்குப்பூச்சி.
நாசகாரி* - கேடுசெய்பவள்.
நாசகாலம்* - அழிவுகாலம்.
நாசம், நாசனம் - அழிவு, [மரணம்].
நாசயோகம் - மரணயோகம்.
நாசாக்கிரம் - மூக்குநுனி.
நாசிகாசூரணம் - மூக்குப்பொடி.
நாசிகேது - அக்கினி.
நாசிகை - மூக்கு, கதவுநிலையின் மேற்சட்டம்.
நாசியம் - மூக்காங்கயிறு.
நாசுவன் - அம்பட்டன்.
நாச்சிமார் - சத்ததேவிகள்.
நாஞ்சிநாடு - மலையாளம்.
நாஞ்சில்-கலப்பை, மதிலுறுப்பு.
நாஞ்சிற்படையோன் பலதேவன்.
நாடகத்தமிழ் - நாடகவழக்குத் தமிழ்: அது, முத்தமிழினொன்று.
நாடகம்* - கதைதழுவி வருங் கூத்து.
நாடகர், நாடகியர் - கூத்தர்.
நாடல் - தேடல்.
நாடன் - கார்த்திகைநாள், சோழன்.
நாடா - ஓர் கயிறு, நூனுழி.
நாடான்* - சாணுருக்குரிய பட்டப் பெயர்.
நாடி - தாது, [நரம்பு, ஆண்மயிர், உட்டுளை, மூக்கு, யாழினரம்பு, தேடியென்னும் வினையெச்சம்.]
நாடிநரம்பு*-நாடியோட்டநரம்பு.
நாடிப்பரிட்சை - தாதறியுமறிவு.
நாடியோடுதல்* - நாடியியங்குதல்.
நாடிவிழுதல் - நாடியொடுங்குதல்.
நாடு - ஊர், [இடம், ஊர், நாடென்னேவல், பக்கம், பூமி, பூவுலகப்பொது.]
நாடுதல் - தேடுதல், விரும்புதல்.
நாடுரி - $1\frac{1}{2}$-நாழிகொண்ட அளவை.
நாடோடி* - நிலையில்லாதவன்.
நாடோறும் - நாள்தோறும்.
நாட்டம் - நோக்கம், [கண், ஓர் பண், வாள், அழகு "நாட்டமுடை நகரமெமதாகு" (சீவக. சிந். 1788.]
நாட்டாண்மை* - ஊரதிகாரம்.
நாட்டார் - ஊரார்.

நாட்டியம் - கூத்து, [கருத்து, குறிப்பு.]
நாட்டுப்பெண்- மருமகள்.
நாட்டுவளப்பம் - நாட்டின்சீர்.
நாட்டை - ஓர் பண்.
நாட்பட்டது*-நீண்டநாளானது.
நாட்பு - போர், வலி.
நாணகம் - நாணயம்.
நாணம்* - வெட்கம் இஃது மகடூ உக்குணம் நான்கினுென்று.
நாணயம், நாணையம்* - வாக்குப் பிசகாமை, உண்மை, உயர்வு.
நாணயவான் - உண்மைதவருத வன்.
நாணல்-நாணற்புல், [நாணுதல்.]
நாணி - வில்லினுண், [நாணமு டையாள், வினையெச்சம்.]
நாணுகம் - குதிரை.
நாணேற்றுதல் - வில்வளைத்தல்.
நாண் - வெட்கம், [நாணென்னே வல், கயிறு.]
நாண்மலர் - அன்றலர்ந்த பூ.
நாதக்குடம் - சங்கு.
நாதம் - ஓசை, [பாதிவட்டம், இந்திரியம், சிவதத்துவம்.]
நாதன் - தலைவன், கணவன், [அரசன், அருகன், எப்பொ ருட்குமிறைவன், கடவுள், குரு, சிவன், மூத்தோன்.]
நாதாக்கள் - பெரியோர், ஞானி யர்.
நாதாந்தசோதி - கடவுள்.
நாதாந்தம் - ஞான நெறிகளினெ ன்று.
நாதாந்தி - பொன்னிமிளை.
நாதார்* - ஏழைக்குடிகள்.
நாதித்தல் - ஒலித்தல்.
நாதேயம் - சீந்தில், இந்துப்பு.
நாத்தழும்பேறுதல் - நாவப்பியா சப்பட்டிருத்தல்.
நாத்தனர், நாத்தி* - கணவன் சகோதரி.
நாத்திகம், நாஸ்திகம் - தெய்வ மின்மை.
நாத்தாண் - மைத்துனி (சேது.)
நாந்தகம் - திருமாலின் வாள், வாள்.
நாந்தல்* - ஈரம்.
நாந்தி - ஒருவனைப் புகழ்ந்துபா டிய செய்யுள், சிறப்புப்பாயி ரம், பதினறு கருமத்தொன்று.
நாபி - ஒரு விஷமூலிகை, கொப் பூழ்.
நாப்பண் - நடு, தேர்நடு.
நாப்புற்று* - நாவறளை.
நாமகரணம் - பெயரிடுதல்.
நாமகள் - சரஸ்வதி.
நாமக்கட்டி* - வைணவரணியுந் திருமண்கட்டி.
நாமசேடம் - மரணம். (சப்த.)
நாமஞ்சாத்துதல்-நாமந்தரித்தல்.
நாமடந்தை - கலைமகள்.
நாமதாரி* - நாமந்தரித்தவன்.
நாமதேயம் - பெயர்.
நாமம் - வைணவரிடுநாமம், [பெ யர், புகழ், அச்சம், தும்பை.]
நாமோச்சாரணம் - பெயரைச் சொல்லுதல்.
நாம்* - தன்மைப்பன்மை, [அச் சம்.]
நாம்பல்* - இளைத்தல்.
நாம்பு* - மெலிவு.

நாயகச்சி, நாயகத்தி - தலைவி, மனைவி, தேவி.
நாயகம் - தலைமை, நடத்துந்தன்மை.
நாயகன் - தலைவன், கணவன், [எப்பொருட்கு மிறைவன், கடவுள், சிவன்.]
நாயகி - மனைவி, [தலைவி, பார்வதி.]
நாயம் - நீதி. (இரா.)
நாயனார், நாயன் - பெருமையிற் சிறந்தோன், தலைவன்.
நாயில் - மதில்.
நாயிறு - ஓர் கிழமை, [சூரியன்].
நாயிறுவணங்கி-கொழுஞ்சிமரம்.
நாயுருவி* - ஓர்பூடு.
நாய்-னுமலி, [தென்மேற்றிசைப் பாலன்குறி, சூதாடுகருவி.]
நாய்கர் - வணிகர்.
நாய்க்கடுகு - நாய்வேளைப்பூடு.
நாய்க்கரந்தை - குன்றிச்செடி.
நாய்ச்சி - எசமாட்டி.
நாய்த்திசை - தென்மேற்கு.
நாய்த்துளசி - கஞ்சாங்கோரை.
நாய்நாக்கி - இலைக்கள்ளிப்பூடு.
நாரங்கம் - நாரத்தை.
நாரசிங்கம் - அட்டாதசவுபபுராணத்தொன்று, நரசிங்கம்.
நாரணன், நாராயணன்* - திருமால்.
நாரணி - துர்க்கை.
நாரதம் - பதினெண்புராணத்தொன்று, முகில்.
நாரதன் - கலகஞ்செய்பவன், [ஓரிருடி.]
நாரதீயம் - அட்டாதசவுபபுராணத்தொன்று.
நாரத்தம் - வசம்பு, சடாமாஞ்சி.
நாரம் - அன்பு, கயிறு, சனத்திரள், நீர், பாசி, நாரத்தை.
நாராசம்-இருப்பாணி, சலாகை.
நாராயணகவுளம் - ஓரிராகம்.
நாராயணகோபாலர் - திருமாலுருவுடையோர்.
நாராயணம் - ஒருபநிடதம், அரசமரம், மச்சம்.
நாராயணன் - பாற்கடற்றுயின்ற திருமால், சந்திரன், வருணன்.
நாராயணி - நாராயணனின் தங்கையான துர்க்கை, [இலக்குமி, ஓரிராகம், கங்கை, சத்தமாதர்களிலொருத்தி, தண்ணீர்விட்டான்கிழங்கு.]
நாரி - பெண், [பார்வதி, நாணி, பன்னாடை, வாசனை, நன்னாரி, தேன், கள்.]
நாரிகேளம், நாரிகேரம் - தேங்காய், தென்னமரம்.
நாரிபாகன் - சிவன்.
நாரை* - நீர்வாழ் ஓர் புள்.
நார் - மட்டை முதலியவற்றினார், [அன்பு, கயிறு.]
நார்ச்சீலை - மரவுரி.
நாலடியார் - ஒரு நீதிநூல்.
நாலல் - தாழ்தல், தொங்கல், விழுதல்.
நாலாகாரியம்* - பல தொழில்.
நாலாவிதம்* - பலவிதம்.
நாலி - முத்து, கார்த்திகைப்பூ.
நாலிகம் - எருமை, காகம், முத்து.
நாலு, நால்* - நான்கு.

நால்வர் - நான்குபேர், [சம்பந்தர் முதலிய நான்கு சமயாசாரியர்.]
நால்வாயன் - இந்திரன், விநாயகன்.
நால்வாய் - யானை.
நாவணம் - உண்ணுக்கு.
நாவரணை - நாப்புற்று.
நாவரையர் - திருநாவுக்கரசுநாயனர்.
நாவலந்தீவு - சத்ததீவினொன்று.
நாவலர் - அமைச்சர், புலவர்.
நாவல் - ஓர் மரம், [இரக்கக்குறிப்பு, நெற்போர் தெழிக்கும் பகட்டினங்களைத்துரப்பதோர் சொல், சத்ததீவினொன்று.]
நாவறட்சி* - நீர்த்தாகம்.
நாவாய் - மரக்கலம், இரேவதிநாள்.
நாவி - ஓர் மருந்து, கத்தூரிமிருகம், புழுகுப்பூனை, மரக்கலவிசேடம் (மணிமே. 246.)
நாவிகன் - கப்பற்காரன்.
நாவிச்சட்டம் - கத்தூரி.
நாவிதச்சி - அம்பட்டத்தி.
நாவிதன் - அம்பட்டன், [கார்த்திகைநாள், பூரநாள்.]
நாவித்தண்டை - எருமுட்டைப்பீநாறிப்பூண்டு.
நாவிப்பிள்ளை - ஓர் மிருகம்.
நாவியம் - கார்த்திகைப்பூ.
நாவு* - நாக்கு.
நாவுதல் - நோம்புதல்.
நாவுரி நாழியுரி என்பதன் குறுக்கம், அது ஒன்றரைப்படி கொண்டது
நாவேறு - நாத்தோஷம்.
நாவை - கலப்பையினுறு, படைவாள்.
நாழி - நாழிகை, [அளக்கும் ஒரு படி, உட்டுளைப்பொருள், பூரட்டாதி.]
நாழிகை-விநாடி யறுபதுகொண்டது, [உத்திரட்டாதி.]
நாழிகைவட்டம் - காலவளவைக் காட்டுமொரு சூத்திரம்.
நாளகம் - இலாமிச்சம்புல்.
நாளந்தி - விடியற்காலம்.
நாளம் - உட்டுளை, பூந்தண்டு.
நாளறுதி - நாள்வட்டம்.
நாளி - கள், நாய்.
நாளிகம் - வள்ளைக்கொடி.
நாளிகேரம், நாளிகேளம் - தென்னமரம்.
நாளினி - புளிப்புடைய மாமரம்.
நாளுக்குநாள்* - தினந்தினம்.
நாளைநின்று - நாளைவிட்டு மற்றைநாள்.
நாளோலை - சாதகம், சீதனக்குறிப்பு.
நாள் - இராப்பகல்கொண்டபொழுது, காலம், [அச்சுவினி முதலிருபத்தேழு நாண்மீன்.]
நாறணு, நாறனு - சடைச்சிச்செடி.
நாறல் - பதனழிந்தது, [தோன்றல், மணத்தல், முளைத்தல்.]
நாறு - நாறென்னேவல், பயிர்முளை. (நாற்று.)
நாற்கதி-தேவர், நரகர், மனிதர், விலங்கு.

நாற்கவி - ஆசு, சித்திரம், மதுரம், வித்தாரம்.
நாற்காலி - ஒருவித ஆசனம், [நாற்கான்மிருகம்.]
நாற்குணம் - ஆடவர்க்குணம் நான்கு: அவை அறிவு ஓர்ப்பு கடைப்பிடி நிறைவு, மகளிர்க் குணம் நான்கு அவை அச்சம் நாணம் பயிர்ப்பு மடம்.
நாற்கோணம்* நாலுமூலை.
நாற்சந்தி-நாற்றெருக்கூடுமிடம்.
நாற்பான் - நாற்பது.
நாற்பொருள் - அறம்பொருள் இன்பம் வீடெனப்படுபவை.
நாற்பொன்-ஆடகம் கிளிச்சிறை சாதரூபம் சாம்பூநதம்.
நாற்றங்கால்* - நாற்றுப்போட் டிருக்குமிடம்.
நாற்றமெடுத்தல்* - துர்க்கந்தம் வீசுதல்.
நாற்றம் - துர்க்கந்தம், [வாசனை, கள், தோன்றுதல்].
நாற்றிசை - கிழக்கு தெற்கு வடக்கு மேற்கு.
நாற்று* - முளைப்பயிர்.
நாற்றுப்பாவுதல் - தானியம் முதலிய பதிபோடுதல்.
நானம்-கத்தூரி, கவரிமா, குளித்தல், நெய் (சிலப்),வாசனை.
நானுவிதம்* - அநேக வகை.
நானிலம் - நால்வகை நிலம்: அவை குறிஞ்சி நெய்தல் மருதம் முல்லை.
நான்* - யான்.
நான்கு - நாலு.
நான்மருப்பியானை - ஐராவதம் (இந்திரன்யானை.)
நான்மறையோன் - பிரமன், முனிவன்.
நான்முகன் - பிரமன், [அருகன்].
நான்முகன்கிழத்தி, நான்முகன் றேவி - சரஸ்வதி, மனோசிலை.

## நி

நிகடம் - சமீபம்.
நிகணம் - ஓமப்புகை.
நிகண்டு - சொற்பயன் விளக்கும் நூல், [நிச்சயம், வேதாங்க மாறினொன்று.]
நிகமம் - நகரம், வேதம், வழி, வியாபாரம், கடைவீதி, நிச்சயம்.
நிகர - ஒருவமைச்சொல்.
நிகரம் - ஒரெழுத்து, கூட்டம்.
நிகர் - சமானம், [உவமை, ஒளி, நிகரென்னேவல்.]
நிகர்த்தல் - ஒப்பாதல், பொருதல்.
நிகர்ப்பு - ஒப்பு, போர்.
நிகர்வு - ஒப்பு.
நிகலம் - தோளின் மேற்பக்கம்.
நிகழ்ச்சி - சம்பவம், ஒளி.
நிகழ்தல் - நிறைவேறல், நடத்தல், ஒளிசெய்தல்.
நிகழ்த்துதல் - நடப்பித்தல், சொல்லுதல்.
நிகளம் - கால்விலங்கு, சங்கிலி.
நிகற்பம் - நூறு கற்பங்கொண்ட ஒரு கால அளவு.
நிகா* - கருத்து.

நிகாசம் - உவமை.
நிகாதன் - வஞ்சனையாளன்.
நிகாயம் - கூட்டம், மருதநிலத்தூர், வீடு.
நிகாரணம் - கொலை.
நிகாரணன் - கொலைசெய்பவன்.
நிகாரம் - பனி, ஆகாயசரூபமறிதல், விரோதம்.
நிகிதம் - படை.
நிகிலம் - எல்லாம்.
நிகுஞ்சம்-மலைக்குகை, புதல்வீடு.
நிகும்பம்- நேர்வாளக்கொட்டை.
நிகும்பலை, நிகும்பிலை - இலங்கையில் இந்திரசித்து யாகம் பண்ணின இடம்.
நிகும்பன் - கும்பகர்னன்மகன்.
நிகேதம் - வீடு, கோயில்.
நிகேதனம் - தேவர்கோயில், மருதநிலத்தூர், வீடு.
நிக்கிரகம் - நாசம், கொலை, தண்டித்தல், வெறுப்பு.
நிக்கிரகானுக்கிரகம்- தண்டனையு மிரக்கமும்.
நிசம் - மெய், நிச்சயம்.
நிசா - இரவு.
நிசாகசம் - வெள்ளாம்பல்.
நிசாகரன் - சந்திரன், சேவல்.
நிசாகேது - சந்திரன்.
நிசாசரம் - கூகை, பாம்பு.
நிசாசரன்-அசுரன், இராக்கதன், கள்வன்.
நிசாசரி - கூகை, அரக்கி, வேசி.
நிசாதனம் - இடம், மெய், வீடு.
நிசாந்தம் - விடியற்காலம், வீடு.
நிசாபதி - சந்திரன்.
நிசாமணி - மின்மினி, சந்திரன்.
நிசாரி - சூரியன். (பார.)
நிசார், நிசாறு* - ஒருவிதக் காற்சட்டை.
நிசார்த்தம் - நிச்சயம், உண்மை.
நிசாளம் - ஒரு கட்பறை.
நிசி - இரா, இருள், பொன், மஞ்சள்.
நிசிசரர் - அசுரர், இராக்கதர்.
நிசித்தண்ணீர் - காலையில் நீராகாரத்திற்குதவஇரவில் சோற்றுப்பானையில் ஊற்றிய நீர் (இதைத் தவறாக நீசத்தண்ணீரென வழங்குகின்றனர்.)
நிசுவாசம் - வெளிக்குவிடும் சுவாசம். (தக்கயாகப். **648**,உரை.)
நிச்சயதாம்பூலம் - பெண்ணை மணஞ்செய்து தருவதற்கு உறுதிப்படுத்த மாப்பிள்ளை வீட்டார்க்குத் தரும் வெற்றிலைபாக்கு.
நிச்சயம்* - மெய், உறுதி.
நிச்சலம் - அசைவின்மை,நிலை.
நிச்சலும் - என்றும்.
நிச்சிதம் - நிசம்.
நிச்சிதார்த்தம்* - மணம் நடக்க வேண்டியதற்கு உறுதிபண்ணிக்கொள்ளுதல்.
நிச்சிந்தன் - கடவுள், அருகன், எண்ணமில்லான்.
நிச்சிந்தை - நினைவற்றிருத்தல்.
நிச்சியம் - வெள்ளுள்ளி.
நிச்சுவாசம் - மூச்சடக்குகை. (சி.சி. 4.8,ஞானப்)
நிஷதம், நிடதம் - தேயமைம்பத்தாறி னொன்று, அட்டபனும் பதத்தொன்று.

நிடலம் - நெற்றி.
நிடலாட்சன் - அரன்.
நிடாதன் - கீழ்மகன். (சூத. சிவ மா. 12).
நிடேதனன் - கொலைசெய்வோன்.
நிஷ்கபடம் - மனச்சுத்தம்.
நிஷ்கருஷம், நிஷ்கருஷை - நிச் சயம்.
நிஷ்களங்கம் - சுத்தம்.
நிஷ்களம், நிட்களம் - கலப்பின் மை, உருவின்மை.
நிஷ்காமியம் - விருப்பின்மை.
நிஷ்காரம் - நிந்தை.
நிட்சேபம் - துடைத்தல், விடு தல், புதையல்.
நிஷ்டூரம், நிட்டூரம் - கொடுமை.
நிஷ்டை - மனமசைவற்றிருத் தல், சாதகம், நம்பிக்கை.
நிஷ்பலம் - பலமின்மை.
நிணத்தல் - கொழுத்தல், பிணித் [தல்.
நிணம் - கொழுப்பு.
நிண்டுதல் * - நிமிண்டுதல்.
நிண்ணயம் - நிச்சயம், உறுதி.
நிதம் - நித்தியம்.
நிதம்பம் - பெண்குறி, மலைப்பக் கம், கரை.
நிதரிசனம் - உதாரணம்.
நிதனம் - சாவு, அழிவு.
நிதார்த்தம் - உண்மை, நீதி.
நிதானம் - உத்தேசம், நோக்கம், [ஆதிகாரணம், பொற்காசு.]
நிதானித்தல்* - மதித்தல்.
நிதி - திரவியம், பொன், பொக் கிஷம், நிறைவு.
நிதிக்கிழவன், நிதிபதி, நிதி யோன், நிதீசன் - குபேரன்.
நிதியம் - கடவுண்மணி, பொன் முதலிய பன்னொன்குவகைப் பொது, திரவியம்.
நித்தம்* - அனவரதம்.
நித்தன் - கடவுள், ஆத்துமா.
நித்தியகருமம் - நியமநிட்டை.
நித்தியகலியாணி - பார்வதி.
நித்தியப்படி - தினமும் நடக்குங் கட்டளைப்படி, [நாடோறும்.]
நித்தியம் - நாடோறும்.
நித்தியவிதி - ஓமகுண்டம், நித் தியக்ருமம்.
நித்திரை* - தூக்கம்.
நித்திலம் - முத்து.
நிநதம், நிநாதம் - ஒலி.
நிந்தனை, நிந்திப்பு, நிந்தை - இக ழ்ச்சி.
நிந்தாஸ்துதி - இகழ்தல்போற் புகழ்தல்.
நிந்து - சாப்பிள்ளைபெற்றவள்.
நிபத்தி - உண்மை, நிச்சயம்.
நிபந்தனை-கட்டுப்பாடு, ஏற்பாடு.
நிபம் - உவமை, காரணம்.
நிபிடம் - நெருக்கம்.
நிபுணத்துவம் - விவேகம்.
நிபுணர் - கலைவல்லோர், விவே கிகள்.
நிமலன் - கடவுள், சுத்தன்.
நிமி-சூரியகுலத்தொரு மன்னன்.
நிமிஷம் - காலநுட்பம் அஃது காட்டையெட்டுக்கொண்டது.
நிமிட்டல், நிமிண்டுதல்-கிள்ளல்.
நிமித்தம் - காரணம், அடையா ளம், சகுனம்.
நிமித்தர் - வருங்காரியஞ் சொல் வோர்.

நிமித்திகன் - புரோகிதன்.
நிமித்தியம்* - நிமித்தம்.
நிமிர்ச்சி - இறுமாப்பு, மேட்டிமை, நிமிர்தல்.
நிமிர்தல் - உயர்தல், வளைவுமாறல், வளர்தல்.
நிமிர்த்துதல்-உயர்த்துதல், வளைவைமாற்றல்.
நிமை - இமை.
நிம்பத்தாரோன் - பாண்டியன்.
நிம்பம் - வேம்பு.
நியக்குரோதம் - ஆலமரம்.
நியதம் - நிதம், செய்கடன், உறுதி.
நியதி - ஊழ், செய்கடன், முறைமை, நியமநிட்டை.
நியமநிட்டை*-சந்தியாவந்தனம்.
நியமம் - நித்தியகருமம், நிச்சயம், இடம், கடைவீதி, முறைமை, செய்கடன், தெரு, தேவர் கோயில், நகரம்.
நியமனம் - கட்டளை, முறை.
நியமித்தல் - நிலைப்படுத்தல், பிறப்பித்தல்.
நியர்ப்புதம் - பதினாயிரங்கோடி.
நியாசம் - வேம்பு, வைப்பு.
நியாதம் - வேம்பு.
நியாமகன் - சாரதி, கட்டளையிடுவோன்.
நியாயக்கேடு - சரிகெட்ட தீர்மானம்.
நியாயதுரந்தரன் - நியாயம்பேசுவோன்.
நியாயத்தலம் - நியாயசபை.
நியாயத்தவறு - நியாயக்கேடு.
நியாயப்பிரமாணம்-நீதிச்சட்டம்.
நியாயம் - நீதி, [இடம்.]
நியாயாதிபதி - நீதிபதி.
நியுதம் - நூறுயிரம்.
நியோகம் - கட்டளை, தொழில்.
நிரஞ்சனம் - நிறைவு, இருளின்மை.
நிரஞ்சனன் - கடவுள், அருகன்.
நிரந்தரம் - எப்பொழுதும்.
நிரந்தரன் - கடவுள்.
நிரந்தரி - பார்வதி.
நிரபராதி - குற்றமற்றவன்.
நிரபேட்சை - விருப்பின்மை.
நிரப்பு - நிரப்பென்னேவல், [தரித்திரம், நிறைவு, குறைபாடு.]
நிரப்புதல் - நிறைத்தல், பரப்புதல்.
நிரம்பரன் - கடவுள், அருகன்.
நிரம்பாமென்சொல் - மழலைச்சொல்.
நிரயம், நிரையம் - நரகம்.
நிரல் - ஒழுங்கு.
நிரவல், நிரவுதல்-சரிக்கட்டுதல், நிரப்புதல்.
நிராகம் - உடலின்மை.
நிராகரித்தல் - தள்ளுதல், மறுத்தல்.
நிராகாரம் - அரூபம், உணவின்மை.
நிராசை - விருப்பின்மை. [மை.
நிராதாரம், நிராத்ரம் - ஆதரவின்மை, ஆசையின்மை.
நிராமயன்-கடவுள், நோயிலான்.
நிராயுதன் - ஆயுதமில்லாதவன்.
நிராலம்பம் - ஆதாரமின்மை.
நிரியாசம் - பிசின் "நேர்கட்டி செந்தேனிரியாசங் கற்பூர" (சீவ-சிந். 534 உரை.)

நிரியாணம்-சாவு, யானைக்கடைக் கண், மோட்சம்.
நிருணயம் - ஆராய்வு, நிச்சயம், நியமிப்பு.
நிருதர் - இராக்கதர்.
நிருதாட்சணியம், நிருதாட்சிணியம் - பாரபட்சமின்மை.
நிருதி - தென்மேற்றிசைப்பாலன், முதலெழுவள்ளலிலொருவன், அரக்கி.
நிருத்தம் - கூத்து.
நிருபம் - கடிதம், கட்டளை.
நிருபன் - அரசன்.
நிருமலன் - மலத்துடக்கில்லாதவன், கடவுள்.
நிருமாணம் - ஏற்பாடு.
நிருமிதம் - நிருமாணம்.
நிருமித்தல் - சிருஷ்டித்தல்.
நிருவகி - தாங்கு, ஒழுங்காக நடத்து, நிலைப்படுத்து.
நிருவாகம், நிர்வாகம் - நிலைமை, பொறுப்பு, பராமரிப்பு.
நிருவாணம் - அம்மணம், [மோட்சம், ஒய்வு.]
நிரூபம் - உருவமின்மை.
நிரூபித்தல் - ஆராய்தல்.
நிரை - ஒழுங்கு, பசுக்கூட்டம், படைவகுப்பு, ஓரசை.
நிரோட்டம் - இதழ்குவியாமை.
நிர்க்குணன் - கடவுள்.
நிர்க்குண்டி - வெண்ணொச்சி.
நிர்ணயம் - நிருணயம்.
நிர்த்தூளி* - சருவநாசம்.
நிர்ப்பந்தம்* - தொந்தரை.
நிர்ப்பாக்கியம் - வறுமை.
நிர்ப்புதம் - ஒரெண்.
நிர்மாணம் - நிருமாணம்.
நிர்மூடன் - அறிவில்லான்.
நிர்மூலம் - முற்றுமழித்தல்.
நிர்விகற்பம் - வேறுபாடின்மை.
நிலக்கடலை-வேர்க்கடலை. [403]
நிலப்பனை - செடிவகை. (பதார்.
நிலப்பாவாடை - நிலத்தினடக்க விரிக்கும் புடவை.
நிலப்பிளப்பு - கமர்.
நிலமகள் - பூமிதேவி.
நிலமகன் - செவ்வாய்.
நிலமட்டம் - தரைமட்டம்.
நிலம் - பூமி, [இடம்.]
நிலம்பி - கொசுகு.
நிலயம் - பூமி, மருதநிலம், வீடு, தங்குமிடம், கோயில்.
நிலவல் - ஒளிசெய்தல்.
நிலவாசி - நிலப்போக்கு.
நிலவீரியம் - பூநீறு.
நிலவு-நிலா, நிலாவென்னேவல்.
நிலவுகாய்தல்* - நிலவெறித்தல்.
நிலவுதல் - ஒளிசெய்தல், பரவுதல், நிலைபெறல்.
நிலன் - நிலம்.
நிலா - நிலவு (சந்திரப்பிரபை), சந்திரன், ஒளி.
நிலாமணி - சந்திரகாந்தம்.
நிலாமுகி - சகோரப்புள்.
நிலாமுற்றம் - வீட்டின்மேல் வெளியாயிருக்கும் முற்றம்.
நிலாவிரை - ஓராவிரை.
நிலுவை* - இறுத்து மிஞ்சின தொகை.
நிலை - நிற்குந்துணை, நிலைபரம், நிலைபேறு, நிச்சயம், இடம்,

பூமி, குணம், ஆபரணத்திற் றொருங்கணி, காலம்.
நிலைகலங்குதல், நிலைகுலைதல், நிலைகெடுதல் - தடுமாறல்.
நிலைதடுமாறு - நிலைகலங்கு.
நிலைதவறு - நிலைகெடு.
நிலைத்தல் * - நிலைபெறுதல்.
நிலைபரம் - உறுதி.
நிலைபேறு-அசையாமை, உறுதி, நிச்சயம், மானம், மோக்கம்.
நிலைமாறுதல் - இடமாறுதல்.
நிலைமை - இயல்பு, நிலை, மெய்.
நிலையகம் - இருப்பிடம்.
நிலையம் - இருப்பிடம், பிரதான ஸ்தானம், பூமி, வீடு.
நிலையாடி-நெய்வார்கருவியுளொன்று.
நிலையாநீர் - பெருகுநீர்.
நிலையின்மை - உறுதியின்மை.
நிலைவரம் * - நிலைபரம்.
நிவத்தல் - உயர்தல், வளர்தல்.
நிவர்த்தனம் - திரும்புதல்.
நிவர்த்தித்தல் - விட்டுநீங்குதல்.
நிவறுதல் - கூடுதல், சுருங்குதல்.
நிவாசம் - இருப்பிடம், சார்பு. (சப்த.)
நிவாரணம் - தடை, நீங்கல்.
நிவிர்த்தி - ஒழிப்பு, பிராயச்சித்தம்.
நிவேசம் - வீடு, கலியாணம்.
நிவேசனம் - இடம், வீடு, ஊர்.
நிவேதனம் - தேவர்க்குச் சமர்ப்பிக்கும் நைவேத்தியம், அறிவித்தல்.
நிவேதித்தல் - நைவேத்தியஞ் செய்தல்.
நிவேத்தியம் - நைவேத்தியம்.
நிழலி - காற்று.
நிழல் - சாயை, [கிருபை, ஒளி, தஞ்சம், செல்வம், நோய்.]
நிழற்றல் - நிழல்செய்தல், ஒளிவிடல்.
நிறம் - வருணம், [ஒளி, குணம், மார்பு, நினைவு.]
நிறுதிட்டம் - நேரேநிற்றல்.
நிறுத்தல் - நிறுக்குதல், கொடாமை, நிலைப்படுத்தல்.
நிறுப்பான் - தராசு, துலாராசி.
நிறுவல் - நிலைபெறுத்தல்.
நிறை - முறையினிலைமை, [அழிவின்மை, துலாராசி, நிறையென்னேவல், நீர்ச்சால், நூறுபலம், மாட்சிமை, கற்பு.
நிறைகோல் - தராசுக்கோல்.
நிறைசெல்வன் - குபேரன்.
நிறைத்தல் - நிறையச்செய்தல்.
நிறைபாரம்* மிகுதி.
நிறைமொழி-பெரியோர் வாக்கு, மந்திரம்.
நிறைமொழியாளர் - பெரியோர், சான்றோர்.
நிறைவு - மாட்சிமை, பூரணம்.
நிறைவேற்றம் - முடிவாதல்.
நிற்காரம், நிஸ்காரம் - இகழ்ச்சி.
நிற்குணன் - ஆண்டவன்.
நிற்றல் - நிலைநிற்குதல்.
நினதம் - ஒலி.
நினைதல் - நினைக்குதல்.
நினைத்தல்* - மனத்திற்கொளல்.
நினைப்பு* - நினைவு.
நினைப்பூட்டுதல்*-நினைப்பித்தல்.

நினைவு - நினைப்பு, எண்ணம், வருத்தம் (சீவக. சிந். 333.)
நினைவுகூர்தல் - நினைத்தல்.
நின் - உனது.
நின்மலன் - சுத்தன், கடவுள்.
நின்மூடன், நிருமூடன்* - முழுமூடன்.
நின்றநிலை* - பிடித்தபிடி, ஒரு நிலை.
நின்று - அசைச்சொல் (உ-ம்.) "அழலடைந்த மன்றத்தலந் தயராநின்றூர்," வினையெச்சம்.

## நீ

நீகம் - தவளை, மேகம்.
நீகாசம் - உவமை.
நீகாமன், நீகான் - மீகாமன்.
நீகாரம் - பனி.
நீக்கம் - நீக்கல், நீளம்.
நீக்கல் - அகற்றல், [கொல்லல், மாறுபாடு, மாற்றல்.]
நீக்குப்போக்கு* - வழிவகை, உபாயம்.
நீங்கல் - நீங்குதல், பிரிதல், போகல், மாற்றல்.
நீசக்கிரகம் - இராகு கேது, உச்சத்திற் கேழாமிடக்கிரகம்.
**நீசத்தானம்** - உச்சத்திற் கேழா**மிடம்.**
நீசம் - ஈனம்.
நீசர்* - கீழ்மக்கள்.
நீச்சல் - நீந்தல்.
நீச்சு - மீன்கவிச்சு, [நீந்துதல்.]
நீஞ்சுதல்* - நீந்துதல்.
நீடம் - குருவிக்கூடு.
நீடாணம் - குழம்பு.
நீடூழி - ஊழிகாலம்.
நீட்டம் - நீட்சி (நீளம்.)
நீட்டல் - நீட்டுதல், ஈதல்.
நீட்டுப்போக்கு - அகலநீளம், நெடுமை, செல்வமுதலியவற்றின் விசாலம்.
நீண்டோன் - திருமால்.
நீதம் - நீதி, [தானியம், பாக்கியம்.]
நீதி - நியாயம், முறைமை.
நீதிநெறி - சன்மார்க்கம்.
நீதிபரன் - கடவுள்.
நீதிமான்* - நீதியுள்ளவன்.
நீதியதிபதி - நியாயாதிபதி.
நீத்தம் - வெள்ளம்.
நீத்தல் - நீக்கல், துறத்தல்.
நீத்தார், நீத்தோர் - துறவிகள்.
நீந்தல் - நீரினீந்தல், [கடத்**தல்.**]
நீபம் - கடம்பு, வெண்கடம்பு, உத்திரட்டாதிநாள்.
நீமம் - ஒளி. (பிங்.)
நீம் - நீர் (முன்னிலைப்பன்மை) "நீமே-செல்வது வேண்டுமென்றான்" (சீவக. சிந். 1932.)
நீரடைப்பு - ஓர் நோய் (மூத்திரம் வெளிவராதிருத்தல்.)
நீரம் - நீர், இரசம். (சபத.)
நீராகாரம்* - சோற்றிலூறிய நீர்.
நீராட்டுதல் - முழுக்காட்டுதல்.
நீராழிமண்டபம்* - குளத்தினடுவே கட்டிய மண்டபம்.
நீரோருகம் - தாமரை.
நீர் - புனல், [குணம், முன்னிலைப்பன்மை, பூராடநாள்.]

நீர்க்கழிவு - நீரிழிவு. Diabetes.
நீர்க்குதல்* - நீராகுதல்.
நீர்க்கோத்தை - ஒருவிதத் தண்ணீர்ப்பாம்பு.
நீர்ச்சாவி - மிகுநீரால்வரும்பதர்.
நீர்ச்சீலை - குளிசீலை.
நீர்ச்சோறு - பழஞ்சோறு.
நீர்நாய் - நாய்மீன்.
நீர்நாள் - பூராடநாள்.
நீர்நிலை - மடு, தண்ணீரின்மட்டு.
நீர்ப்படுவன் - ஓர் நோய்.
நீர்ப்பனை - புல்லாமணக்கு.
நீர்மட்டம்* - சரிமட்டம்பார்க்குங் கருவி.
நீர்முகம் - நீர்ப்பெருக்கின்முனை.
நீர்மேனெருப்பு - கல்லுருவி.
நீர்மை - குணம், ஒப்புரவு, ஒளி.
நீர்மோர் - ஓர் பானம்.
நீர்வாரம் - குளநெல்.
நீர்வாழைக்காய் - மீன்.
நீர்விடுதல் - பதனழிந்து நீராதல்.
நீர்விளையாட்டு - சலக்கிரீடை.
நீலகண்டன் - சிவன், துருசி, திருநீலகண்டநாயனர்.
நீலகண்டி - பொல்லாதவள்.
நீலகந்தி - ஓர்வகைக்கெம்பு.
நீலகாசம் - கண்ணோயுளொன்று.
நீலக்கட்டு - பெரும்பொய்.
நீலக்காரம் - துருசி.
நீலக்காலி - அவுரி.
நீலங்கட்டுதல் - நீலந்தீர்தல்.
நீலந்தீர்தல் - நீலநிறம்போடுதல்.
நீலபத்திரம் - கருங்குவளை.
நீலபுட்பம் - அவுரி, எட்டிமரம், விஷ்ணுகரந்தை.
நீலமார்க்கம் - கரிசாலை.
நீலமேகம் - நீருண்ட மேகம்.
நீலம் - ஓர் நிறம், [கருங்குவளை, துருசி, நஞ்சு, காற்று, நவமணியிளென்று, பனைமரம்.]
நீலவண்ணன் - திருமால்.
நீலன் - ஓர் வானரப்படைத்தலைவன், குரூரன், சனி, நீலிகொன்ற ஒரு வாணிபன்.
நீலாஞ்சனம் - கல்லீயம், கறுப்புக்கல், துருசி.
நீலாம்பரன் - பலராமன்.
நீலாம்புரி - ஓர் பண்.
நீலி - அவுரி, காளி, துட்டை, துருசி, ஒரு வணிகனைக்கொன்ற பெண், பைசாசம், மருதோன்றிமரம், கருநிறப்பெண்
நீலோற்பலம் - கருங்குவளை.
நீல் - காற்று, நீலம்.
நீவரம் - நீர், சேறு, நாடு.
நீவாரம் - குளநெல்.
நீவி - கொய்சகம், சீலை.
நீவுதல் - பூசுதல், தடவுதல், துடைத்தல்.
நீழல் - நிழல், ஒளி.
நீளம் - தூரம், நெடுமை.
நீளிடை - காடு. (சிலப். 13:12.)
நீளுதல் - நீளமாதல், அதிகப்படுதல்.
நீள் - நீளென்னேவல், உயர்ச்சி, ஒளி.
நீள்சடையோன் - கொன்றை.
நீறு - விபூதி, சுண்ணம், துகள்.
நீறுபடுதல் - அழிதல், நீறுதல்.
நீறுபூத்தல் - சாம்பற்பொடித்தல், அழுக்குப்படிதல்.
நீற்றுதல் - நீறுக்குதல்.

நீற்றுப்பெட்டி - எண்ணெயூற்றுங் கூடை, மாவவிக்கும் பெட்டி.

## நு

நுகம் - நுகத்தடி, வலி, பாரம்.
நுகம்புரட்டி - ஒழுங்குதவறுகிறவன், கட்டுக்கமையாத எருது.
நுகர்ச்சி, நுகர்வு - அனுபவம், உணவு.
நுகர்தல் - அனுபவித்தல், புசித்தல், விழுங்கல்.
நுகும்பு - பனையினிளங்காய்.
நுக்கு - எட்டிமரம், நுக்கென்னேவல்.
நுக்குதல் - பொடியாக்கல்.
நுங்கு - பனையினிளங்காய், [நுங்கென்னேவல்.]
நுங்குதல் - விழுங்குதல்.
நுங்கை - உன்றங்கை, உன்றாய்.
நுசுப்பு - இடை.
நுடக்கம் - நுட்பம், வளைவு.
நுடங்குதல் - துவளல் (அசைதல்), முடங்கல், ஆடல்.
நுட்பம் - சூட்சம், [சொற்பம், நுண்மை.]
நுணங்கு - தேமல், நுண்மை.
நுணங்குதல் - நுண்மையாதல், வளைதல், வாடல்.
நுணலை, நுணல் - தவளை.
நுணவு - தணக்கமரம், நுணாமரம்.
நுணவை - தணக்கமரம்.
நுணா* - ஒரு மரம்.
நுணவுதல் - தடவித்தெரிதல்.
நுணுக்கம் - சூட்சம், [நுண்மை, கூர்மை, அடக்கம்.]
நுணுக்கு - அற்பம், நுணுக்கென்னேவல்.
நுணுக்குதல் - சிறிதாக்குதல்.
நுண்ணிடை-சிற்றிடை, பெண்.
நுண்ணியர் - அறிவுடையோர், பெரியோர், மந்திரிகள்.
நுண்மை - கூர்மை, நுட்பம்.
நுதம்புதல் - நனைந்திளகுதல்.
நுதலணி - சுட்டி.
நுதலல் - கருதல், குறித்தல்.
நுதல்-நெற்றி, புருவம்.
நுதி - முனை, வணக்கம்.
நுதுத்தல்-தணித்தல், அழித்தல்.
நுந்துதல் - தள்ளுதல், [தாண்டுதல்.]
நுந்தை - உங்கடந்தை.
நுமன் - உம்மவன்.
நும்மோர் - உம்மவர்.
நுரை - நீர் முதலியவற்றினுரை, [குமிழி, வெண்ணெய்.]
நுரைத்தல்* - நுரைக்குதல்.
நுவணம், நுவணை - கல்விநூல், பஞ்சினூல், தினைமா, நுண்மை.
நுவல் - சொல், நுவலென்னேவல்.
நுவற்சி - சொல்லுகை.
நுழுந்துதல் - நழுவுதல், பதுங்குதல், திருடுதல்.
நுழை - நுழையென்னேவல், [பலகணி, நுண்மை.]
நுழைத்தல்* - நுழைவித்தல்.
நுளம்பு - கொசுகு, மின்மினி.
நுளும்புதல்-அசட்டைபண்ணல்

நுளை - ஈனம், [குருடு.]
நுளைச்சி - செம்படத்தி.
நுளையன் - செம்படவன்.
நுள்ளான் - ஓர் சிற்றெறும்பு.
நுள்ளுதல் - கிள்ளுதல்.
நுனி, நுனை - முனை.
நுனித்தல் - கூர்மைசெய்தல்.
நுன் - உனது.

## நூ

நூ - ஒரெழுத்து, எள்ளிளங்காய்.
நூக்கம் - ஒரு மரம்.
நூக்கல் - தள்ளல், நெய்வார் கருவியினொன்று.
நூக்கு - நொய், [தள்ளு.]
நூங்கு - பெருமை, மிகுதி.
நூதனம்* - புதுமை.
நூபம் - எருக்கு, எருது.
நூபுரம் - பாதகிண்கிணி, காற்சிலம்பு.
நூலச்சு - கம்பியிழுக்குமச்சு.
நூலாதாரம் - முதல்புத்தகம்.
நூலான்புடை - ஒட்டடை.
நூலிழைத்தல் - நூனூற்குதல்.
நூலுருண்டை* - நூற்சுருள்.
நூலுறிஞ்சி - நெய்வார் கருவியினொன்று.
நூல் - பஞ்சினூல், [பூணூல், கல்விநூல், ஆண்குறி.]
நூல்வல்லோர் - அறிஞர், மந்திரிகள்.
நூவு - எள்.
நூழில் - கொலை, யானை, படர்கொடி, கொடிக்கொத்தான்.
நூறு - ஒரெண், [சுண்ணம்பு "கமழுநூறுங்காழ்க்கும்வெள்ளிலையுங்" (சீவக. சிந். 2474.)]
நூறுகோடி - வச்சிராயுதம்.
நூறுதல் - அழித்தல்.
நூறை - மலங்குமீன்.
நூற்கழி - நூற்பந்து.
நூற்குதல்* - நூற்றல்.
நூற்சுருளை - நூற்பந்து.
நூற்படுகு - நெசவுபா.
நூற்பா - அகவல், சூத்திரப்பா.
நூற்றல்* - நூற்குதல்.
நூற்றுறு - நூனுழிகை.
நூனம் - குறைவு, நிச்சயம்.
நூனுதிக்கம் - அருமைபெருமை.
நூனுழிகை - நாடா.
நூன்முகம் - பாயிரம்.

## நெ

நெகிடி - நெருப்புக்குவை.
நெகிழம் - பாதச்சிலம்பு.
நெகிழ்ச்சி - இளக்கம், தளர்ச்சி.
நெகிழ்தல் - அவிழ்தல், இரங்குதல், இளகுதல், உருகுதல், குழைதல், தளரல், நழுவல்.
நெக்குதல் - கிளப்புதல், தள்ளல், [உருகுதல், கனிதல்.]
நெசவு* - நெய்குதல்.
நெச்சி - கடுக்காய்.
நெஞ்சம்* - மனம், மார்பு.
நெஞ்சழிதல் - ஏங்கல்.
நெஞ்சறிதல் - மனமறிதல்.
நெஞ்சாங்கட்டை - பிணஞ்சுடுவதற்கு நெஞ்சில் வைக்குங் கட்டை, நெஞ்செலும்பு.

நெஞ்சு - மனம், [துணிவு, தைரியம், மார்பு.]
நெஞ்செரிச்சல் - பொருமை.
நெடி - மிளகாயின்காரம், [சிள் வண்டு "நெடிபடுகோன்."]
நெடியோன் - திரிவிக்கிரமனை திருமால், மூக்கிரட்டை.
நெடில் - நீளம், நெட்டெழுத்து, மூங்கில்.
நெடுக்கு* - நீட்சி.
நெடுங்கழுத்தன் - ஒட்டகம்.
நெடுங்குரலன் - கழுதை.
நெடுநீர் - கடல்.
நெடுந்துயில் - சாவு.
நெடுந்தூரம் - வெகுதூரம்.
நெடுமி - நீளிய பெண், பனை.
நெடுமூச்சு - பெருமூச்சு.
நெடுமை - நீளம், உயரம், பெருமை.
நெடும்பயணம் - நெடும்பிரயாணம், மரணம்.
நெட்ட - தள்ள.
நெட்டாயம்,நெட்டாரம்*-நீளம்.
நெட்டி - ஓர் புல்.
நெட்டிலிங்கு - அசோகமரம்.
நெட்டில் - மூங்கில்.
நெட்டு - இணுக்கு, காம்பு, குலை.
நெட்டுரு - மனப்பாடம்.
நெட்டேதி - ஓர்விதச் சங்கு.
நெட்டை - நெடுமை, [தசைகழிந்த முழுவெலும்பு.]
நெட்டைச்சி* - நெடுமி.
நெட்டையன் - நெடுவல்.
நெண்டுதல்* - நெளிதல்.
நெதி, நெதியம் - திரவியம்.
நெத்தலி, நெத்திலி*-ஓர் பொடிமீன்.
நெம்பு - ஏணிப்பழு, ஏற்ற மடலாணி, விலாவெலும்பு.
நெம்புதல் - கிளப்பல், உயர்த்துதல்.
நெய் - நறுநெய், நெய்யென்னேவல், [இரத்தம், சித்திரைநாள், நிணம், புழுகு 'நெய்யொடு குங்கும நிறைந்த'; தேன் "தேனெயூன்கிழங்கு" நேயம் "நெய்பொதி நெஞ்சின்" (சீவக. சிந். 80:1201: 3049.]
நெய்க்கொட்டை-பூவந்திப்பழம்.
நெய்ச்சிட்டி - சிற்றிலைச்செடி.
நெய்தல் - ஆடை முதலிய நெய்தல், [கடலுங்கடல் சார்ந்த இடமும்,ஆம்பல், சாப்பறை.]
நெய்தை - பெருமை.
நெய்த்தோர் - இரத்தம்.
நெய்த்தோலி - ஓர் பொடிமீன்.
நெய்ப்பீர்க்கு - நுரைப்பீர்க்கு.
நெய்ப்பு - கொழுப்பு.
நெய்யரி - பன்னடை.
நெய்விளக்கு* - நெய்வார்த்தெரிக்கும் விளக்கு.
நெரடு - வாசிக்கக் கடினமானது.
நெரிசல்-மனக்குறை, வெறுப்பு.
நெரிஞ்சி, நெரிஞ்சில்* - ஓர் முட்பூண்டு இஃது தசமூலத்தொன்று.
நெரித்தல் - நிமிட்டல், நொறுக்குதல், நசுக்குதல், வருத்தல்.
நெரியல் - மிளகு. (பெரும்)

நெருக்கடி - இக்கட்டு, வருத்தம், பலவந்தம்.
நெருக்கம் - நெருங்குதல், [கொடுமை, இடைஞ்சல்.]
நெருக்கிடை - தரித்திரம், நெருக்கம்.
நெருக்குதல் - ஒடுக்குதல், பலவந்தம்பண்ணுதல், நெருங்கச்செய்தல்.
நெருக்கெனல் - சீக்கிரக்குறிப்பு.
நெருங்குதல்* - கிட்டுதல்.
நெருஞ்சி - நெருஞ்சில்.
நெருடல் - உறுத்தித்தடவல்.
நெருடன் - வஞ்சகன்.
நெருடு - இழையின்பொருத்து.
நெருநல் - முன்னைநாள்.
நெருநெரெனல் - ஒலிக்குறிப்பு, சீக்கிரக்குறிப்பு.
நெருப்பு - அக்கினி.
நெருப்புக்கண் - சிவனது நெற்றிக்கண்.
நெருப்புக்கோழி* - தீக்கோழி.
நெருப்புத்திராவகம் - நெருப்புத் தண்ணீர் (**Nitric acid**).
நெருப்புப்பிடித்தல் - தீப்பற்றல்.
நெல்* - நெல்லு (ஓர் பயிர்.)
நெல்லி - ஓர் மரம்.
நெல்லிக்கந்தகம் - நெல்லிக்காய்க்கந்தகம்.
நெல்லிமுள்ளி - பெருநெல்லி வற்றல்.
நெளி - ஓர்வகை மோதிரம், நெளியென்னேவல்.
நெளிதல் - புரளுதல், வளைதல்.
நெளித்தல் - இறுமாப்புக்காட்டல், நெளிக்குதல்.
நெளிப்பு - இறுமாப்பு, பரிகாசம்.
நெளிர் - பேசலாலெழுமொலி.
நெறி - ஒழுங்கு, கற்பு, நீதி, முறை, வழி, சன்மார்க்கம்.
நெறிகேடன் - நெறிகெட்டவன்.
நெறித்தல் - சிலிர்த்தல், செவ்வே நிற்றல்.
நெறிநீர் - கடல்.
நெறிமை - நீதி.
நெற்குறி - நெற்கொண்டு சொல்லுமோர் சோசியம்.
நெற்பழம் - மதர்ப்பினால் வெடித்த நெல்.
நெற்றி - நுதல், [உச்சி, படைவகுப்பு.]
நெற்றிக்கண்ணன் - சிவன்.
நெற்றிச்சுட்டி - சுடிகையென்னுமாபரணம்.
நெற்றிச்சுழி* - நெற்றியிற் சுழிப்பு.
நெற்றிப்பட்டம்* - ஓராபரணம்.
நெற்றிமுட்டு - சரிநேர், முன்புறம், கைமரத்தினடி.
நெற்றியில் கல்வைத்தல் - ஓராக்கினை.
நெற்று* - உலர்ந்த பழம்.
நென்பு - பழு, மராஅப்பு.
நென்னல் - முன்னைநாள்.

## நே

நேசகன் - வண்ணான்.
நேசம் - அன்பு.
நேசன் - சினேகன்.
நேசித்தல்* - அன்புவைத்தல்.
நேடுதல் - தேடுதல், விரும்பல்.

நேத்திரப்படலம்-ஓர் கண்ணோய்
நேத்திரம் - கண், [பட்டாடை.]
நேத்திரயோனியோன் - இந்திரன், சந்திரன்.
நேத்திராம்பு - கண்ணீர். (சப்.)
நேத்திரோற்சவம் - கண்ணுக்கு விருப்பமானது.
நேபாளம் - ஓர் தேசம், [ஓர் நச்சு மரம்.]
நேமகம் - நியமம் (ஏற்பாடு.)
நேமநிட்டை* - நியமநிட்டை.
நேமம் - நேரம், பங்கு.
நேமனம் - நியமனம்.
நேமி - கடல், சக்கரவாகப்புள், வட்டம், சக்கராயுதம், பூமி, மூங்கில், தேருருள்.
நேமித்தல் - நியமித்தல்.
நேமிநாதம் - ஓரிலக்கண நூல்.
நேமிநாதன் - அருகன், கடவுள்.
நேமிப்புள் - சக்கரவாகப்புள்.
நேயம் - நேசம், நெய், நன்மை, உறவு, எண்ணெய்.
நேர - உவமைச்சொல்.
நேரங்கெட்டநேரம் - ஒவ்வாத காலம்.
நேரம் - சமயம், காலம்.
நேரலர், நேரார் - பகைவர்.
நேரி - விந்தமலை. (கல்லா)
நேரிசம் - எறிபடை, அம்பு.
நேரிடுதல் - சம்பவித்தல்.
நேரியன் - சோழன்.
நேரிழை - பெண்.
நேரேடம், நேரேடு-நாவல்மரம்.
நேர் - நீளம், செவ்வை, [உடன்பாடு, உவமை, ஓரசை, நீதி, செவ்வை, கற்பு, தகுதி.]
நேர்காற்று* - வளமான காற்று.
நேர்ச்சி - தகுதி, நேர், சம்மதம்.
நேர்தல் - சம்பவித்தல், ஈதல், உடன்படல், பொருதல், எதிர்த்தல்.
நேர்த்தி* - சிறப்பு, திருத்தமுள்ளது.
நேர்ந்தபடி - எதிரிட்டபடி.
நேர்படுதல் - சந்தித்தல், சம்மதி [த்தல்.
நேர்பு - எழுச்சி, நீளம்.
நேர்முகம் - எதிர்முகம்.
நேர்மை - செவ்வை, நிதானம், நுண்மை, உண்மை.
நேர்மையம்* - சரிநடு.
நேர்வளம் - செவ்வழியாழ்த்திறம், பாலையாழ்த்திறம்.
நேர்வாளம் - நேபாளங்கொட்டை (ஓர் மருந்துச்சரக்கு.)
நேர்வான் - சித்திரைநாள்.
நேற்று - முதனாள்.

## நை

நைகரம் - துயர், வருத்தம்.
நைசிகம், நைசியம் - நாசியிற் புகுத்து மருந்து, காகம்.
நைச்சிகம், நைச்சியம் - தாழ்வு.
நைடதம் - ஓர் நூல், ஓர் நாடு.
நைட்டிகபிரமசாரி - விவாகஞ் செய்யாமல் நிஷ்டை கூடியிருப்பவன்.
நைதல் - தளர்தல், துன்புறல், வாடல், கெடுதல், இரங்கல்.
நைதிசை - முல்லைக்கொடி.
நைத்திகம், நைத்தியம் - நித்தியாராதனை.

நைபத்தியம் - வேஷம். (சப்த.)
நைமிசாரணியம் -ஒரு புண்ணிய வனம்.
நைமித்திகம் - விசேடாராதனை.
நையல் - துன்பம், மெலிவு.
நையாண்டி-பரிகாசம், இகழ்ச்சி.
நையாயிகன் - நியாய சாத்திர முறைகொண்ட ஒரு சமயி.
நைவளம் - குறிஞ்யாழ்த்திறம்.
நைவேதனம் - நிவேதனம்.
நைவேத்தியம் - தேவர்க்குச் சமர்ப்பிக்கும் பொருள்.

## நொ

நொ - துன்பம், நோய்.
நொசிதல் - துவளல், வாடல், நுண்மையாதல், வருந்தல்.
நொச்சி - ஓர் செடி, [சிற்றூர், மதில், தன்னரண்காப்பார்க்கு மாலை.]
நொடி - காலநுட்பம், சொல், நொடியென்னேவல்.
நொடிப்பு - கையால் நொடித்தல்.
நொடுநொடுப்பு - பரபரப்பு.
நொடை - விலை, விற்றல்.
நொண்டி* - கால்முடவன்.
நொண்டுதல்* - கால் முடக்கப் பட்டுக் குந்தி நடத்தல்.
நொதி - அருவருத்த சேறு.
நொதுநொதுத்தல், நொதுநொதுப்பு - இளக்கக்குறிப்பு.
நொதுமலர் - அயலோர்.
நொதுமல் - அயல்.
நொந்தலை - பலவீனம், வறுமை.
நொப்பு - ஆட்டின் மூலையிற்சுற்றிய ஓலை.
நொய் - குறுணை, [நொய்மை.]
நொய்து - விரைவு, மிருது.
நொய்மை - எளிமை, தளர்வு, மென்மை, மிருது, வறுமை.
நொய்யரிசி* - குறுணை.
நொய்வு - நொய்மை.
நொரு - பயிரினடியில் முளைப்பது, காய்ப்புமாறினபின் அரும்பும் பிஞ்சு.
நொருக்குதல் - அடித்தல், நருக்குதல்.
நொருங்குதல் - நருங்குதல்.
நொருவல்* - தின்பதற்கான நொருங்குண்ட தாள்.
நொளுநொளெனல் - நொளநொளத்தல்.
நொள்ளை-குருடு, [நாகரவண்டு.]
நொறுக்குதல் - நருக்குதல், பொடியாக்கல்.
நொறுங்குதல் - நொய்தாதல்.
நொற்பம் - நொய்து.
நொன்னை - சரசம்.

## நோ

நோ-நோவென்னேவல், வியாதி, இன்மை.
நோக்கம் - எண்ணம், கண், பார்வை, விருப்பம், காவல்.
நோக்காடு* - நோதல்.
நோக்கு - கண், பார்வை, விருப்பம்.
நோஞ்சல் - மெலிந்தது.
நோஞ்சை* - பிணியால் மெலிந்த ஆள்.
நோட்டம் - கண்ணோடியறிதல்.

நோட்டம்பார்த்தல்* - தருதியறிதல்.
நோண்டுதல் - தோண்டுதல், கிள்ளுதல், நிமிண்டல்.
நோம்பு, * நோன்பு - உபவாசம், விரதம், தவம்.
நோம்புதல்* - நுணுவுதல்.
நோய்முகன் - சனி.
நோலுதல் - நோற்றல், பொறுத்தல்.
நோலை - எள்ளுருண்டை.
நோவாளி, நோயாளி* - வியாதிஸ்தன்.
நோவு - நோய், வருத்தம்.
நோழிகை* - நூற்பந்து.
நோற்பு* - விரதம்.
நோற்றல்* - நோன்பு அனுஷ்டித்தல், பொறுத்தல்.
நோனுமை - பொறுமை.
நோன்பு - நோம்பு.
நோன்மை - தவம், பொறுமை, வலிமை.
நோன்றல் - பொறுத்தல், தள்ளல்.

## ப

பஃறி - ஓடம், மரக்கலம், இரேவதிநாள்.
பகடி - அகசியக்காரன், விகடம்.
பகடு - பொதிஎருது, ஆண்யானை, பெருமை, இடபம், எருமைக்கடா, ஓடம், தெப்பம், பிரகிருதி. (திருநூ.)
பகடை - சூதுதாயங்களினொன்று, சக்கிலிச்சாதி.
பகட்டு - பார்வை, மினுக்கம், வெளிவேடம், [இறுமாப்பு.]
பகண்டை - சிவப்பட்சி.
பகம் - கொக்கு, ஞானம் ஈச்சுரத்தன்மை கீர்த்தி செல்வம் அவாவின்மைவீரியமென்னும் ஆறுகுணம், பெண்குறி.
பகரம் - அலங்காரம், [மினுக்கம்.]
பகர்ச்சி - சொல்.
பகர்தல் - சொல்லல், விற்றல் (மணிமே. 271.)
பகலவன், பகலோன் - சூரியன்.
பகல் - மத்தியானம், [தினம், ஒளி, சூரியன், மதியாணி, பகுத்தல், பிளத்தல், பிரிதல்.]
பகல்வேஷம்* - பகற்காலத்துருமாற்றல்.
பகவதி - துர்க்கை, பார்வதி, தருமதேவதை.
பகவதிநாள் - பூரநாள்.
பகவற்கீதை - பாரதப்போரில் கிருஷ்ணன் அருச்சுனனுக்கு உபதேசித்த நூல்.
பகவன் - அயன், அரன், அரி, கடவுள், புத்தன், அருகன்.
பகவான் - கடவுள், [சூரியன், துவாதசாதித்தரிலொருவன்.]
பகழி - அம்பிற்குதை, அம்பு.
பகன் - பகாசுரன், துவாதசாதித்தரிலொருவன்.
பகன்றை - கிலுகிலுப்பைச்செடி, சிவதை, சீந்திற்கொடி.
பகாசுரன் - கொக்குருவாய்க் கிருஷ்ணனைக் கொல்லமுயன்ற ஓரசுரன்.
பகாலம் - கபாலம்.

பகாலி - சிவன்.
பகிடி - பரிகாசம், விகடம்.
பகிரங்கம்* - மறைப்பின்மை.
பகிரண்டம் - அண்டத்தின் வெளி.
பகினி-உடன்பிறந்தாள், பெண்.
பகீரதன்- சூரியகுலத்தரசரிலொருவன்.
பகீரதி - கங்கை.
பகீரெனல்* - அச்சக்குறிப்பு.
பகுதிகட்டுதல் - இறைகொடுத்தல்.
பகுத்தல் - பங்கிடல், ஈதல்.
பகுத்தறிதல் - பிரித்தறிதல்.
பகுப்பு - பிரிவு.
பகுளம் - கிருஷ்ணபக்கம்.
பகை - விரோதம், வெறுப்பு.
பகைஞன், பகையாளி, பகைவன்* - சத்துரு.
பகோளம் - வானவட்டம்.
பக்கசூலை* - பக்கத்திலே வருஞ் சூலைநோய்.
பக்கச்சொல்* - துணைச்சொல்.
பக்கணம் - வேடர்வீதி, கிராமம்.
பக்கப்பிளவை - முள்ளந் தண்டருகில்வரும் பிளவை.
பக்கம் - அருகு, இடம், இறகு, சந்திரனுள், செட்டை, பட்சம், பதினேந்துநாள்.
பக்கரை - அங்கவடி, சேணம்.
பக்கவாதம் - பாரிசவாயு.
பக்கி - பறவை.
பக்கு - புண்ணசறு, பிளவு, மரப்பட்டை.
பக்குப்பக்கெனல் * - அச்சக்குறிப்பு.
பக்குவம் - தகுதி, திராணி, பருவம்.
பக்தன்* - பத்தன்.
பக்தி* - பத்தி.
பங்கம் - வெட்கம், ஈனம், குற்றம், [பின்னம், குழைசேறு, தோல்வி, முடம், குளம், துண்டு, பாவம், வேறுபாடு.]
பங்கம்பாலை, பங்கம்பாளை - ஆடு தின்னுப்பாளை.
பங்கயம், பங்கஜம் - தாமரை.
பங்கயன் - பிரமன், சூரியன்.
பங்கயாசனன் - பிரமன்.
பங்கா* - காற்றசைக்கு மொரு கருவி.
பங்காரு - ஓர்வகைப்பொன்.
பங்காலி-வெளவால் (யாழ்.அக.)
பங்காளம்-ஓர் தேயம், [ஓர்பண்.]
பங்காளி - பங்குக்காரன், கூட்டாளி.
பங்கி-கஞ்சா, பிரிவு, ஆண்மயிர்.
பங்கிடுதல் - வகுத்துத்தருதல்.
பங்கு - கூறு, [சனி, பாதி, முடவன்.]
பங்குரை - அதிவிடயம்.
பங்குவீதம் - பங்கின்படி.
பங்குனி - ஓர் மாதம், [உத்திர நாள்.]
பங்கேருகம் - தாமரை, நாரை.
பசண்டை - ஈரம், பச்செனவு.
பசந்து,* பசுந்து - அழகு.
பசபசத்தல் - தினவெடுத்தல்.
பசபசப்பு - அலஅலப்பு.
பசப்பு - ஏய்ப்பு, பச்சைநிறம்.
பசப்புதல்* - மயக்கல்.
பசலை - காமமுதலியவற்றாலுண்டாகும் பசப்பு.

பசளை - ஓர் கீரை, எரு முதலிய வுரம்.
பசறு - பச்சிலைச்சாறு.
பசாரி* - நாணமிலாது வாயாடு பவள்.
பசி* - பசித்தல்: இஃது உயிர் வேதனையின்றென்று.
பசிதம் - சாம்பல், விபூதி.
பசு - ஆன், [உயிர், கடவுள், எருது, இடபவிராசி.]
பசுக்கன்று - பசுவின்கன்று.
பசுங்கதிர்-இளங்கதிர், சந்திரன்.
பசுங்காய் - செங்காய்.
பசுஞானம் - தத்துவஞானம்.
பசுத்துவம் - ஆத்மதத்துவம், மிருகத்தன்மை.
பசுநரம்பு - பச்சைநிற நரம்பு.
பசுநா - பராய்மரம்.
பசுபதி - சிவன்.
பசுமை-ஈரம், குளிர்மை, சாரம், செல்வம், பச்சை, பொன்னிறம்.
பசும்பயறு - பாசிப்பயறு.
பசும்பிடி - பச்சிலைமரம்.
பசும்புல் - பச்சைப்புல், [பயிர்.]
பசும்பொன்* - உயர்ந்த பொன்.
பசேரெனல்* - பச்சை நிறமாயிருத்தல்.
பசை - ஒட்டும்பிசின், சாரம், ஈரம், பற்று, விருப்பம், இலாபம்.
பசைந்தார் - சினேகிதர்.
பச்சடி* - துவையற்கறி.
பச்சரிசி* - அவியாமற் குத்தின அரிசி.
பச்சாத்தாபம்* - செய்த குற்றத்துக்கு மனந்திரும்புதல்.
பச்சிமம் - மேற்கு, முதுகு.
பச்சிலை - பச்சையிலை.
பச்சிறைச்சி - பச்சையிறைச்சி.
பச்சுடம்பு - குழந்தையினுடல், தாய்க்குப் பிரசவமானபிறகு இருக்கும் புண்ணுடல்.
பச்சை - ஓர் நிறம், [பசுமை, ஓர் புதர், தோல், புதன், மரகதம், அரி, ஈரம்.]
பச்சைக்கருப்பூரம் - ஓர் கருப்பூரம்.
பச்சைக்கல் - மரகதம்.
பச்சைக்கிளி* - பசுங்கிளி.
பச்சைக்கொம்பு - இஞ்சி.
பச்சைச்சடையன் - வயிரவன்.
பச்சைப்பயறு* - பசும்பயறு.
பச்சைப்பாலன் - சிறு குழந்தை.
பச்சைப்பெருமாள் - ஓர் நெல், திருமால்.
பச்சைமண் - எருவிடா மண், வேகாமண்.
பச்சையுடல் - பச்சுடம்பு.
பச்சைவடம் - ஓர்வகைச் சேலை.
பச்சைவெண்ணெய்*- உருக்காத நெய்.
பஸ்பம், பஸ்மம் - பற்பம் (நீறு).
பச்சைநாபி - ஒரு விஷமூலிகை.
பஞ்சகலியாணி - பஞ்சகதியுள்ள குதிரை.
பஞ்சகவ்வியம் - கோமயம் கோமூத்திரம் தயிர் நெய் பால் என்பன.
பஞ்சகாலம்* - கருப்புக்காலம்.
பஞ்சகோசம் - அன்னமுதலிய வைந்தினலாய கூடு; அவை அன்னமயகோசம் ஆனந்தமய

கோசம் பிராணமயகோசம் மனோமயகோசம் விஞ்ஞான மயகோசம்.

பஞ்சகௌவியம்-பஞ்சகவ்வியம்.

பஞ்சசத்தி - இச்சாசத்தி கிரியா சத்தி சிற்சத்தி ஞானசத்தி பராசத்தி.

பஞ்சசயனம் - ஐவகையாலாய மெத்தை; அவை அன்னத் தூவி இலவம்பஞ்சு செம்பஞ்சு மயிற்றூவி வெண்பஞ்சு.

பஞ்சசுத்தி - ஐவகைச் சுத்தி; அவை ஆத்துமசுத்தி இலிங்க சுத்தி திரவியசுத்தி பூதசுத்தி மந்திரசுத்தி.

பஞ்சடைதல் - கண்பஞ்சாடுதல்.

பஞ்சணை*-பஞ்சாலாய மெத்தை.

பஞ்சதந்திரம்-ஐவகைத் தந்திரம்: அவை அசம்பிரேட்சியகாரித் துவம், அர்த்தநாசம், சந்திவிக் கிரகம், சுகிர்ல்லாபம், மித்திர பேதம்.

பஞ்சதன்மாத்திரை - பஞ்சபூத மூலம்.

பஞ்சதாரை* - சருக்கரை.

பஞ்சத்துவம் - மரணம்.

பஞ்சநகம் - ஆமை, யானை.

பஞ்சநதம், பஞ்சநதி - திருவை யாறு.

பஞ்சபட்சி - எழுத்துப்பொருத்த மறியுமைந்து பட்சி: அவை வல்லூறு ஆந்தை காகம் கோழி மயில். அவைகட்கு முறையே எழுத்து அ இ உ எ ஒ.

பஞ்சபாணம் - மன்மதாத்திரம் ஐந்து: அவை முல்லை அசோகு தாமரை சூதம் நீலம்: அவை முறையே தைக்குமிடம் உச்சி நெற்றி நெஞ்சு முலை குய்யம்.

பஞ்சபாணன்* - மன்மதன்.

பஞ்சபாதகம்* - ஐந்துதுரோகம்: அவை களவு கள்ளருந்தல் குருநிந்தை கொலை பொய்.

பஞ்சபூதம் - ஐந்துபூதம்: அவை மண் விண் அனல் புனல் கால்.

பஞ்சமகதி - மோட்சம்.

பஞ்சமம் - சத்ததாளத்தொன்று, ஓர் பண், அழகு, ஐந்து.

பஞ்சமி - ஐந்தாந்திதி.

பஞ்சமூலம்-ஐவகைமூலி; அவை சிறுபஞ்சமூலம் பெரும்பஞ்ச மூலம் என இருவகைப்படும்.

பஞ்சம்-கருப்புக்காலம், [ஐந்து.]

பஞ்சரம் - புள்ளின்கூடு, உடல், கழுகு, செருந்திமரம்.

பஞ்சலோகம்* - ஐந்துலோகம்; அவை இரும்பு ஈயம் செம்பு பொன் வெள்ளி.

பஞ்சவடி-ஒரு புண்ணியஸ்தலம். (இங்கு ஐந்து ஆலமரங்களுண்டு.), மயிரினாலாய பூணூல்.

பஞ்சவர் - பாண்டுமக்கள்.

பஞ்சவாசம் - ஐவகைவாசம்: அவை இலவங்கம் ஏலம் கருப் பூரம் சாதிக்காய் தக்கோலம்.

பஞ்சா* - மகமதியர் தொழுவதற் கான ஒரு சின்னம்.

பஞ்சாக்கினி - ஐந்து அக்கினி; அவை இராகம் காமம் சினம் சடம் தீபனம்: மற்றது தவசி

நிற்பதற்கு நாற்றிசைக்கு நான்கு தீக்குண்டமும் மேலே சூரியனுமாம்.
பஞ்சாங்கம் - சோதிடத்திற்குரிய ஐந்துறுப்பு: அவை கரணம் திதி நட்சத்திரம் யோகம் வாரம்.
பஞ்சாங்கி - குதிரைக்கடிவாளம்.
பஞ்சாடுதல் - கண்பஞ்சடைதல்.
பஞ்சாமிர்தம்* - ஐந்தமுதம்; அவை சருக்கரை தேன் நெய் தயிர் பால்.
பஞ்சாயத்தார்* - நியாய சங்கத்தார்.
பஞ்சாயுதபாணி - மகாவிஷ்ணு.
பஞ்சாயுதம் - ஓராபரணம், மகாவிஷ்ணுவினாயுதம்; அவை சக்கரம் சங்கு தண்டு வில் வாள்.
பஞ்சாய் - கோரை.
பஞ்சானனம் - சிங்கம்.
பஞ்சானனன் - சிவன்.
பஞ்சி - பஞ்சு, வெண்டுகில்.
பஞ்சிதம் - விண்மீன்.
பஞ்சு - பருத்திப்பஞ்சு முதலியன, [தூறு, சீலை, பருத்தி.]
பஞ்சுரம் - பாலைநிலத்திராகம்.
பஞ்சுருட்டான், பஞ்சுருத்தான் - ஓர் குருவி.
பஞ்சேந்திரியம் - ஐம்பொறி: அவை கண் காது தோல் நா மூக்கு.
பஞ்சை - யாசகன், வறியன்.
படகம் - இரணபேரி, தம்பட்டம், திரைச்சீலை, பரண், படாம்வீடு, கவரிமான்.
படகு* - தெப்பம்.
படக்குப்படக்கெனல் - அச்சக்குறிப்பு.
படங்கன் - ஓர் மீன்.
படங்கு - கூடாரம், பெருங்கொடி, பெருவரிச்சல், மேற்கட்டி, மெய்போற்பேசுதல்.
படபடப்பு - துடிதுடிப்பு, விரைவு.
படப்பம் - மருங்கிலூர்சூழ்பதி.
படப்பு - கொல்லை, வைக்கோற்போர்.
படப்பை - கொல்லை, பசுக்கொட்டில், மருதநிலத்தூர்.
படமரம்* - நெய்வார் கருவியினொன்று.
படம் - எழுதினபடம், அரவின்படம், [விருதுக்கொடி, திரைச்சீலை, யானை முகபடாம், சீலை.]
படர் - ஏவல்செய்வோர், படைவீரர், செலவு. நோய், பகை, மேடு, வழி.
படர்தல் - பரவுதல், விரிதல், நடத்தல்.
படர்தாமரை* - ஓர் கரப்பன்.
படலம்-நேத்திரப்படலம், படல், அடுக்கு, கூட்டம், அதிகாரிப்பு, செய்யுட்கூறுபாடு.
படலிகை - பூந்தட்டு, வட்டவடிவு, கைம்மணி, இளைப்பு, பெரும்பீர்க்கு, பெட்டி.
படலை - பூமாலை, கோத்தமாலை, வெளிக்கதவு, தழை, கூட்டம், பரந்த இடம், வாயகன்ற பறை.

படல் - தட்டி, அகப்படுத்தல், உண்டாதல், கெடுதல், சாதல், ஓலைக்கதவு.
படன் - படைவீரன்.
படாகை - விருதுக்கொடி.
படாடோபம்* - உடைப்பகட்டு.
படாந்தரம் - முழுப்பொய், கட்டுக்கதை, கோள்.
படாபஞ்சனம்* - தீர்க்கநாசம்.
படாம் - திரைச்சீலை, பெருங்கொடி, சீலை.
படாம்வீடு - கூடாரம்.
படி - நிறையறிபடி, வாயிற்படி, சோபானம், சம்பளம், குணம், பூமி, பகை, நூறுபலம்.
படிகம் - ஓர் மருந்து, பளிங்கு, பிச்சை, கூத்து.
படிகொடுத்தல்* - சேவகம் செய்பவர்க்கு வேண்டிய செலவு கொடுத்தல்.
படிக்கம் - தம்பலந்துப்பும் பாத்திரம்.
படிக்காசு - படியாகக் கொடுக்கும் பணம், இரகுநாதசேதுபதி சமஸ்தான வித்துவான்.
படிக்காரம்* - சீனக்காரம்.
படிதல் - அமருதல், அமைதல், திருந்தல், குளித்தல்.
படித்தரம் - கட்டளை.
படித்தல் - வாசித்தல், பழகுதல்.
படித்திரம் - சூட்டிறைச்சி.
படிப்பனை* - படிப்பு.
படிப்பாளி* - கற்றோன்.
படிப்பினை - படிப்பு, [வங்க மணல்.]
படிப்பு - வாசிப்பு, கல்வி, [பழக்கம், புத்தி.]
படிமக்கலம் - கண்ணாடி.
படிமத்தோன் - தேவராளன்.
படிமம் - கண்ணாடி, விரதம், வெண்மை, பாவை, வெறியாட்டு.
படிமானம் - கீழ்ப்படிதல், திருத்தம், விலைகுறைதல்.
படிமை - தவவேடம்.
படியளந்தோன் - திருமால்.
படியாள்* - இடுவதையுண்டு சொல்லியவாறு ஏவல் செய்பவன்.
படிவம் - வடிவு, சித்திரரூபம், உடல், நோன்பு.
படிவர் - சடைமுடியோர்.
படிறர் - திருடர், பொய்யர், வஞ்சகர், தூர்த்தர்.
படிறு - களவு, பொய், வஞ்சகம்.
படீரம் - சந்தனம், கருங்காலி.
படுகர் - குளம், பள்ளம், வயல்.
படுகளம் - போர்க்களம்.
படுகுழி - யானை முதலிய படுகிடங்கு.
படுக்கை* - மக்கள் விலங்கின்படுக்கை.
படுசூரணம்* - முழுநாசம்.
படுதல் - அகப்படுதல், இல்லாமை, சாதல், உண்டாதல்.
படுதா* - திரைச்சீலை.
படுபழி - மிகுபழி.
படுபொய் - முழுப்பொய்.
படுமோசம்* - முழுமோசம்.
படுவர் - கள்விற்போர்.
படுவான் - அழிவான்.
படுவி - வசவி.

படுவை - தெப்பம்.
படை - ஆயுதம், போர்ப்படை, சேனை, [கலப்பை, கல்லணை.]
படைக்கலம் - ஆயுதப்பொது.
படைச்சால் - உழவுசால்.
படைத்தலைவன் - சேனுபதி.
படைத்தல் - சிருட்டித்தல், சோறு முதலிய உண்கலத்திடுதல்.
படைப்பு - சிருட்டிக்கப்பட்டது.
படைமரம்* - நெய்வார் கருவியி னென்று.
படையாச்சி* - ஓர் சாதி.
படையெடுத்தல் - சேனை புறப்படுதல்.
படையெழுச்சி - படையெழும்பல்.
படைவாரம் - குதிரைச்சேணம்.
படைவாள் - கலப்பையினேருறுப்பு.
படைவீடு-ஆயுதசாலை, பாசறை.
படோல் - பேய்ப்புடல்.
பட்சணம் - உணவு, பலகாரம்.
பட்சபாதம்* - ஓரவாரம்.
பட்சம் - உருக்கம், நேசம், பதினைந்துநாட்கொண்டது.
பட்சவாதம் - பட்சபாதம்.
பட்சி - பறவை.
பட்சித்தல் - உண்ணல்.
பட்டஞ்சூட்டுதல்* - அரசர்க்கு இராஜ உரிமைதர அபிஷேகம் பண்ணுவித்தல்.
பட்டடை - அடைகல், தலைதாங்கி, தாங்குபலகை, தானியவுறை.
பட்டடைக்கழனி- தண்ணீரிறைத்துப் பயிரிடுங் கழனி.
பட்டணத்துப்பிள்ளையார் - முற்றும் துறந்த ஒரு ஞானி.
பட்டணம் - பட்டினம்.
பட்டணவர் - செம்படவர்.
பட்டத்தியானை* - இராசயானை.
பட்டஸ்திரீ, பட்டத்துத்தேவி*- இராசாத்தி.
பட்டத்துரை - இராசன்.
பட்டப்பகல்* - நடுப்பகல்.
பட்டம் - நெற்றிப்பட்டம், ஆதிக்கப்பெயர், குளம், காற்றூடி, எழுதும்தகடு, ஆயுதம், கவரிமா, குளம், சீலை, வழி, மணிதர்படுக்கை.
பட்டயம் - வாள், சாதனம்.
பட்டவர்த்தனர் - பட்டந்தரித்த மன்னர்.
பட்டறை* - கண்டத்தணியுமோராபரணம்.
பட்டாக்கத்தி* - வாள்.
பட்டாங்கி-உண்மையுடையவள்.
பட்டாங்கு - மெய், ஊழ்.
பட்டாசு* - சீனவெடி.
பட்டாணி - ஓர் செடி, ஓர் சாதியான்.
பட்டாபிஷேகம்*- முடிசூட்டல்.
பட்டாரகன் - அருகன், குரு.
பட்டி - ஆட்டுக்கிடை, அட்டவணை, [களவு, விக்கிரமாதித்தன் மந்திரி, வெற்றிலைச்சுருள், சிற்றூர், சீலை, தெப்பம்.]
பட்டிகை - அரைநாண், சீலை, தெப்பம், தோணி, மூலைக்கச்சு, சீந்தில்.
பட்டிக்காடு * - காட்டுக்குள்ளூர்.

பட்டிமண்டபம் - ஓலக்க மண்டபம், (சங்கமண்டபம்.)
பட்டிமரம் - கள்ளமாட்டின் கழுத்திற் கட்டுமரம்.
பட்டிமாடு* - பயிரழிக்கும் மாடு.
பட்டிமை - களவு, வஞ்சகம்.
பட்டினம் - நெய்தனிலத்தூர்.
பட்டினி * - உணவற்றிருத்தல், [பார்ப்பனத்தி, இராணி.]
பட்டு - பட்டுநூல், [உல்லாசம், பட்டுச்சீலை, சிற்றூர்.]
பட்டுப்பூச்சி* - ஓர் சிலம்பி.
பட்டை - மரப்பட்டை, [தோள் மூட்டு, நீரிறைக்குங் கூடை.]
பட்டைக்காறை* - ஓர் கழுத்தணி.
பட்டைக்கொடி - துலாக்கொடி.
பட்டைச்சாராயம் - வெள்வேலம்பட்டையைக் காய்ச்சி இறக்கும் ஒரு பானம்.
பட்டையம் - வாள்.
பணதரம் - பாம்பு.
பணதி, பணிதி - ஆபரணம்.
பணம் - காசு, [பாம்பின்படம், பருமை, சூதாடுபந்தயம்.]
பணயம், பணையம் - பொருத்தப் பணம்.
பணவம் - தம்பட்டம்.
பணவெடை - வராகனி லொன் பதினொருபங்கு.
பணவை - கழுகு, பரண்.
பணுடவி - ஆதிசேஷன்.
பணி-கட்டளை, ஏவல், தொழில், ஆபரணம், பாம்பு, வார்த்தை.
பணிகாரம்* - அப்பவருக்கம்.
பணிக்கம் - திருத்தம்.
பணிக்கன் - உபாத்தியாயன், கொற்றர்தலைவன், நாவிதன், யானைப்பாகன், விஷவைத்தியன், நாடகம்பயிற்றுபவன்.
பணிக்கை - நேர்த்தியான செய்கை, பணித்தல்.
பணிதல் - வணங்கல், வளைதல்.
பணித்தல்-கட்டளையிடல், ஈதல், சொல்லல்.
பணிப்பெண்* - குற்றேவற்காரி.
பணியாரம்* - பணிகாரம்.
பணிலம்-சங்கு, வலம்புரிச்சங்கு.
பணிவிடை - குற்றேவல்.
பணிவு - வணக்கம்.
பணை-அரசமரம், கிளை, பருமை, பெருமை, மரக்கொம்பு, முரசு, பிழைத்தல், குதிரைப்பந்தி, பறைப்பொது, மூங்கில், மருதநிலம், மருதநிலப்பறை.
பணைத்தல் - பருத்தல்.
பண் - பண்ணென்னேவல், [இசைப்பாட்டு, செவ்வை, சீர், தகுதி, குதிரைக்கல்லணை, நிறைநரம்புள்ள வீணை.]
பண்டகசாலை, பண்டசாலை-களஞ்சியம், பொக்கிஷசாலை.
பண்டம் - உணவுப்பொருள், [பண்ணிகாரம், தானியம், பொன், மெய்யறிவு, பழம் "தீம்பண்டம்பெய்தொழுகும் பண்டியும்" (சீவக. சிந். 62.]
பண்டர் - பாடற்கிழ்மக்கள்.
பண்டாரசன்னிதி - ஆதீனத்துப் பெரியோரின் சாத்திர விசாரணைத்தலம்.
பண்டாரத்தி*-பண்டாரப்பெண்.

பண்டாரத்தோப்பு - இராசதோட்டம்.
பண்டாரம்-சிவனடியான், [பொக்கசம், பலபண்டம், துரைத்தனம், மஞ்சட்பொடி.]
பண்டி - வண்டி, [வயிறு, உரோகணிநாள்.]
பண்டிகை* - பெருநாள்.
பண்டிதன் - புலவன், [வைத்தியன், புதன், சுக்கிரன்.]
பண்டு - பழமை.
பண்டை - பண்டு (பழமை), ஞானம்.
பண்ணவன் - அருகன், ஆசிரியன், குரு, தேவன், முனிவன், பாடகன்.
பண்ணிகாரம் - அப்பவருக்கம்.
பண்ணியம் - பலகாரம், பலபண்டம்.
பண்ணுதல்* - செய்தல்.
பண்ணுவர் - குதிரைப்பாகர், யானைப்பாகர்.
பண்ணை - ஓர் கீரை, [வயல், தோட்டம், நீர்நிலை, மரக்கலம், மகளிர்விளையாட்டு, மகளிர் கூட்டம், விலங்கின்படுக்கை.]
பண்ணைக்காரன், பண்ணையாள்* - வயலில் வேலைசெய்பவன்.
பண்படுதல் - சீர்திருந்தல், உதவுதல், அமைதல்.
பண்படுத்தல் - சீர்ப்படுத்தல்.
பண்பு - குணம், தகுதி, விதம்.
பண்புரைப்பார் - தூதர்.
பதகம் - பாதகம் என்பதின் குறுக்கம், பறவை.
பதகன் - கீழ்மகன், பாதகன்.
பதக்கம்* - மார்பணியினொன்று.
பதக்கு* - இரண்டு குறுணிகொண்டது.
பதக்குப்பதக்கெனல் * - அச்சக்குறிப்பு.
பதங்கமம் - பறவை.
பதங்கம் - பாதரசம், சந்தனம், விட்டில்பறவை, திராவகம்.
பதங்கன் - சூரியன்.
பதங்கு - ஒட்டுவரிசை, [குழி, பிளவு.]
பதஞ்சலி - ஓர் இருடி.
பதடி - பதர்.
பதட்டம் - பதற்றம் (பதறல்).
பதணம்-மதிலுண்மேடை, மதில்.
பதத்திரி - பறவை.
பதப்படுதல் - சீர்ப்படுதல், பக்குவமாதல்.
பதமை - தாழ்மை, மிருது, இணக்கம், அமைதி.
பதம் - பக்குவம், [பதவி, இன்பம், அழகு, அறுகு, உண்டல், காலம், சோறு, நாழிகை, வரிசை, அடையாளம், கால், சொல், வழி.]
பதரி - இலந்தைமரம்.
பதரிகாச்சிரமம் - ஓர் தபோவனம், ஒரு விஷ்ணுஸ்தலம்.
பதர்-அற்பம், பலனற்றது, அறிவீனன்.
பதலை - வாயகன்ற பறை, மரக்கலம், தாழி, சிறுமலை, மத்தளம்.
பதவி - முத்தி, செல்வம், [ஒழுங்கு, வழி.]
பதவியகுணம் - மெத்தெனவு.

பதவை - வழி.
பதறல் - திடுக்கிடல், நடுங்கல், விரைதல்.
பதனம் - பத்திரம், பேணல்.
பதனழிதல் - ஊழ்த்தல்.
பதனி, பதநீர்*-பனைநீர் (பனஞ் சாறு.)
பதனிடுதல்* - மிருதுவாக்கல்.
பதன் - பக்குவம்.
பதாகினி - சேனை.
பதாகை - விருதுக்கொடி, கூத்தினோர்விகற்பம்.
பதாதி - காலாள், சேனைத்தொகை. ஏதுமற்றவன்.
பதார்த்தம்-கறி, போசனவஸ்து, பொருள், பதப்பொருள்.
பதி - கடவுள், கொழுநன், தலைவன், பட்டினம், ஊர், இடம், பூமி, வீடு.
பதிகம், பதியம்* - பத்துச்செய்யுளான் முடியுமொருபிரபந்தம்.
பதிதல் - ஊன்றல், அழுந்துதல், தங்குதல், பள்ளமாதல்.
பதிதன் - சமயாசாரந் தவறினவன்.
பதித்தல் - அழுத்தல், தாழ்த்தல், பள்ளமாக்கல்.
பதித்திரி - உலைத்துருத்தி.
பதிநிச்சயம் - கடவுளினிருப்பு அறிதல்.
பதிமை - பிரதிமை.
பதியம் - பதிகம், பதிக்கப்பட்ட நாற்று, பாசி.
பதிரன் - செவிடன்.
பதில்* - மாறுத்தாரம்.
பதிவிரதாதருமம் - கற்புநெறி.
பதிவிரதை* - கற்புடையாள்.
பதிவிருத்தல் - மறைந்திருத்தல்.
பதிற்றுப்பத்து - நூறு.
பதினுலுலோகம் - கீழேழுலகு மேலேழுலகு: அவை அதலம் விதலம் சுதலம் தாாதலம் இரசாதலம் மகாதலம் பாதலம் இவை ஏழுங் கீழேழுலகு; பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகலோகம், சத்தியலோகம் இவை யேழும் மேலேழுலகு.
பதினெண்கணம் - பதினெண் கூட்டம்; அவர் அசுரர், அந்தரர், அமரர், ஆகாயவாசிகள், இயக்கர், உரகர், கருடர், கந்தருவர், கிம்புருடர், கின்னரர், சித்தர், நிருதர், பூதர், பைசாசர், போகபூமியர், முனிவர், விஞ்சையர், வித்தியாதரர்.
பதினெண்குடிமக்கள் - ஓடாவி (ஓடஞ்செய்பவன்), கன்னர், குயவர், கொல்லர், கோவியர் (இடையர்), ஒச்சர், தச்சர், தட்டார், நாவிதர், பள்ளர், பாணர், பூமாலைக்காரர், மூவாணிபர், வண்ணார், வலையர், வெட்டியான்.
பதினெண்பாடை - பதினெண் தேசத்தார்க்குரிய பாஷை; அவை அங்கம், அருணம், கலிங்கம், காம்போசம், கொங்கணம், கோசலம், கௌசிகம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திரவிடம்,

துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம்.

பதினெண்புராணம் - இந்து சமயத்துக்குரியபதினெட்டுப்புராணம்; அவை லிங்கம், காந்தம், கூர்மம், சைவம், பிரமாண்டம், பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், வராகம், வாமனம், காருடம், நாரதீயம், பாகவதம், வைணவம், பதுமம், பிரமம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம்.

பதுக்குதல் - மறைத்தல்.

பதுக்கை - சிறுதிட்டை, சிறுதூறு, பாறை.

பதுங்குதல் - ஒளித்தல் [பின்னிற்றல்.]

பதுமநாபன் - மகாவிஷ்ணு.

பதுமநிதி - இந்திரபுரியில் தாமரை யுருவாய்க் கிடக்கும் நிதியம்.

பதுமம் - தாமரை, ஈயம், ஓர் குளிகை, கோடாகோடி, ஒரு புராணம், சோதிநாள், முடியுறுப்பு,ஒருவகை மாணிக்கம். (சிலப்ப.)

பதுமராகம் - செம்பு (நவமணியி ளொன்று.)

பதுமனார் - நாலடியாரின் உரையாசிரியர்.

பதுமன் - அட்டநாகத்தொன்று, பிரமன்.

பதுமாசனம்- இருதொடைமேலு மிரண் டுள்ளங்காலையு மாறித் தோன்றவைத்திருக்கும் யோகநிலை.

பதுமினி - நால்வகைப் பெண்களில் முதலாமவள்.

பதுமுகம் - ஓரிருக்கை. (சிலப்.)

பதுமை - பதிமை, [ஓரிதழ்த்தாமரை, இலக்குமி, காளி.]

பதைப்பு - பதறுதல், [இரக்கம்].

பத்ததி - கருமங்களை விதிக்கிற ஒரு நூல், ஒழுங்கு, சொற்பயன், வழி.

பத்தம்-நன்றியறிகை, உண்மை, உணவு.(நா.12,6,வ்யா)கட்டு.

பத்தர் - தட்டார்க்கான பட்டப்பெயர், [தேவதொண்டர்.]

பத்தல்-நீரிறைக்குஞ்சால், யாழிஞேருறுப்பு.

பத்தன்* - அன்புடையோன்.

பத்தா* - கணவன்.

பத்தி - வழிபாடு, அன்பு, விசுவாசம், தொண்டு, ஒழுங்கு, முறைமை, வரிசை, படைத்தொகை, ஆராதனை.

பத்திமார்க்கம் - பத்திநடை.

பத்திமை - தேவபக்தியுடைமை, ஒழுக்கமுடைமை.

பத்தியம் - மருந்திற்கிசைந்த புசிப்பு, [ஆரியம் தெலுங்கு இவற்றின் பிரபந்தம், இதம்.]

பத்திரம் - உறுதிப்பத்திரம், சாக்கிரதை, [இலை, திருமுகம், பூவிதழ், இறகு, அம்பு, அம்பிறகு, உடைவாள், முடியுறுப்பு, நன்மை.]

பத்திராசனம் - ஓர் ஆசனம்.

பத்திராட்சம் - வீரபத்திரமணி, ஓர் கொட்டை.

பத்திரி - அம்பு, இலை, காளி, குதிரை, பறவை.
பத்திரிகை*- திருமுகம்.
பத்திரை - அவுரி, கங்கை, காளி, நற்பசு, மஞ்சள், ஒரு பூடு.
பத்திவான்* - பத்தன்.
பத்திவிசுவாசம் - திடமான நம்பிக்கை.
பத்திவைராக்கியம் - தெய்வபக்தியிற் பிடிவாதம்.
பத்தினி* - கற்புடையவள்.
பத்தினித்தனம் - கற்புக்குணம்.
பத்தினிப்பிள்ளை - கற்புடையவள் பெற்றபிள்ளை.
பத்து - ஓரெண், [பக்தி.]
பத்தை - வகிர்.
பஸ்மம், பஸ்பம் - பற்பம்.
பந்தகம் - கட்டு.
பந்தம் - தீக்கொளுத்தும்பந்து, [உறவு, கட்டு, மதில், கொண்டை, முடிச்சு, விலங்கு, அழகு, கயிறு, தொடர்பு, பெருந்துருத்தி, மலம், மதில்.]
பந்தயம், பந்தையம்* - சூதாடவைக்கும் பொருள்.
பந்தர் - ஓர் பட்டினம், [பந்தல், நிழல்.]
பந்தனை - கட்டு, நிருணயம், மகள்.
பந்தன் - ஔவையாரால் பாடல்பெற்ற ஒரு வணிகன், சீர்பந்தபாஷாணம்.
பந்தி - கூட்டம், சபை, [பந்தியென்னேவல், குதிரை யானை முதலிய நிற்குஞ் சாலை, ஒழுங்கு.]
பந்தித்தல் - கட்டல்.
பந்திபோசனம்* - பலருஞ் சேர்ந்து புசித்தல்.
பந்திப்பாய் * - மிக வொடுங்கி நீண்ட பாய்.
பந்து - உறவு, எறியும்பந்து, [சிநேகன், மட்டத்துருத்தி, திரிகை, திராட்சி.]
பந்துக்கட்டு - வமிசத்தார்.
பந்துத்துவம் - இனச்சேர்வு.
பந்துரம் - அழகு.
பந்துவராளி - ஓரிராகம்.
பப்படம் - அப்பளம்.
பப்பரம் - ஓர் பாடை, ஒரு தேயம், பருப்பம்.
பப்பரவாகனன், பப்புருவாகனன் - அருச்சுனனுக்குச் சித்திராங்கதையிடம் பிறந்த பிள்ளை.
பப்பளி* - ஓர் மரம்.
பப்பளிச்சேலை - ஒருவகை நிறமுடைய சேலை.
பப்பாதி* - பாதிபாதி.
பப்பு - பரப்பு, ஒப்பு.
பம்பரத்தி - காமாதுரமுள்ளவள்.
பம்பரமாட்டுதல் - அலைக்கழித்தல்.
பம்பரம் - ஓர் விளையாட்டுக் கருவி, [மந்தரமலை, வேசி.]
பம்பல் - பரந்தவடிவு, எழுச்சி, வலி, ஆரவாரம் .
பம்புதல் - ஆரவாரித்தல், நெருங்கல், பரவல், பொலிதல்.
பம்பை - ஓர் வாச்சியம், [சுருண்ட மயிர், பம்பாநதி].

பம்மல் - மந்தாரம், மூடுதல், பொருத்திக்கட்டுகை.
பயங்கரம்* - அச்சம்.
பயசம், பயசு - நீர், பால்.
பயணம்* - பிரயாணம்.
பயத்தல் - பிறப்பித்தல், கொடுத்தல், சித்தியாகுதல்.
பயந்தாள் - தாய்.
பயந்தோன் - தகப்பன்.
பயபக்தி* - ஒடுக்கவணக்கம்.
பயப்படு* - அஞ்சு.
பயப்பு - கிருபை, நிறம், பசப்பு.
பயம் - அச்சம், [பால், நீர், அமிர்தம், பயன், குளம்.]
பயம்பு - பள்ளம், யானைபடுகுழி.
பயல் - பையல்.
பயறு - ஓர் தானியம், [சித்திரை நாள்.]
பயற்றங்காய்* - ஓர் காய்.
பயன் - பலன், [நீர், பால், அகலம், சொல்லுரை.]
பயிக்கம் - பிச்சை.
பயித்தியம்* - மதிகேடு.
பயிரவி - முடக்கொத்தான்.
பயிர் - இடும்பயிர், [பறவைக்குரல், ஒலி, அருவருப்பு "பயிரிலா நரம்பிற்", பயில் (சைகை).]
பயிர்ப்பு - குற்சிதம். இது மகடூஉக்குணம் நான்கினொன்று, அசுத்தம்.
பயில் - சைகை, சொல், பழக்கம்.
பயிறல் - கூடுதல், சொல்லுதல், பேசலாலெழுமொலி.
பயிற்சி - பழக்கம்.
பயிற்றுதல் - படிப்பித்தல்.
பயின் - உட்படுகுருத்து, பிசின் "பல்கிழியும் பயினும் (சீவக. சிந். 235).
பயோததி - பாற்கடல்.
பயோதரம்-கடல், கரும்பு, பால், முலை, மேகம்.
பரகதி - மோட்சம்.
பரகாயப்பிரவேசம் - கூடுவிட்டுக்கூடுபாய்தல்.
பரசமயம் - பிறசமயம்.
பரசிராமன்-சமதக்கினிக்கு இரேணுகாதேவியிடம் தோன்றிய புதல்வன். (இவர் திருமாலவதாரத்தி லொன்றுவர்).
பரசு - கோடாலி, மழு, துதியென்னேவல்.
பரசுபாணி - சிவன்.
பரஞ்சுடர் - சுயம்பிரகாசக் கடவுள்.
பரஞ்சோதி - பரஞ்சுடர்.
பரட்டை, பறட்டை*-(சடைவு, வளர்ச்சி யற்றது).
பரணம் - கவசம், பட்டுச்சீலை.
பரணர் - ஓர் சங்கப்புலவர்.
பரணி - ஒரு நட்சத்திரம், அணிகலச்செப்பு, [அடுப்பு, ஓர் பாத்திரம், கூத்து, மதகு, ஓர் பிரபந்தம்.]
பரண் - இதணம்.
பரண்டை - கணைக்கால்.
பரதகண்டம் - நவகண்டத் தொன்று (பரதனுண்ட பூமி).
பரதசாத்திரம், பரதநூல் - நடனநூல்.
பரதம் - கோடாகோடி, கூத்து, பரதநூல், பரதபூமி.

பரதர், பரதவர் - நெய்தனில மாக்கள்.
பரதவித்தை - பரதசாத்திரம்.
பரதன் - ஸ்ரீராமன் தம்பி, சந்திர குலத்தோரரசன், பரதநூலி யற்றினவன்.
பரதாரகமனம், பரஸ்திரீகமனம்- பிறன்மனையாளைச் சேர்தல்.
பரதேசி - யாசகி, [வெளி நாட்டான்.]
பரத்தன்-பரத்தையைநுகர்பவன்
பரத்துவம் - கடவுட்டன்மை.
பரத்துவாசன் - துரோணாசாரி யன்றந்தை, கரிக்குருவி.
பரத்தை - வேசி, ஓர் செடி.
பரந்தாமன் - திருமால்.
பரபரெனல்*-விரைவுக்குறிப்பு.
பரபிருதம் - காக்கை, குயில்.
பரபுட்டம் - குயில்.
பரப்பிரமம் - கடவுள்.
பரப்புதல்* - பரவச்செய்தல்.
பரமபதம் - வைகுண்டம், மோட்சம்.
பரமாகாயம் - வெறுவெளி.
பரமார்த்தம் - தேவவறிவு, உண்மை, மெய்ம்மை.
பரமானந்தம் - பேரின்பம்.
பரமேசன், பரமேசுரன், பரமேசுவரன்-கடவுள்,மகாவிஷ்ணு, சிவன்.
பரமேசுவரி - இலட்சுமி, பார்வதி.
பரமேட்டி - கடவுள், சிவன், பிரமன், திருமால்
பரமேட்டி - அயன், அரன், அரி, அருகன்.
பரம் - உடல், கவசம், குதிரைக் கல்லணை, கடவுள், தனிமை, பழமை, பாரம், மிகுதி, முன்பு.
பரம்படித்தல் - பலகையடித்தல்.
பரம்பரை-தொன்றுதொட்டது, தொடர்பு, சம்பிரதாயம்.
பரம்பு - கழனிதிருத்தும்பலகை, வரம்பு, விசாலம்.
பரர் - அந்நியர், பகைவர்.
பரலோகம்-தேவலோகம்,மோட்சம்.
பரல் - பருக்கைக்கல், விதை.
பரவசம் - பிரமை, மிகுகளிப்பு, தன்வசமற்றிருத்தல்.
பரவல், பரவுதல் - துதித்தல், பரப்புதல், வணங்கல், சொல்லுதல்.
பரவெளி - மாயாசூனியம், பராகாயம்.
பரவை - கடல், சுந்தரர்மனைவி, பரப்பு, இலக்குமிகூத்து.
பரன் - கடவுள்.
பராகம் - வாசனைத்தூள், தூளி, பூந்தாது, மகரந்தம்.
பராகாசம் - பரவெளி.
பராக்கிரமசாலி - பலவான், வீரன்.
பராக்கிரமம்* - வீரம், வலி.
பராக்கு* - அசட்டை, பொழுது கழித்தல், விளையாட்டு.
பராசத்தி-பஞ்ச சத்தியினொன்று அ ஃ து பிராணன்முதலிய வாயுவாக நிற்பது.
பராசரம் - பராசரன் இயற்றிய ஒரு தருமநூல்.

பராசரன் - வியாசன் தந்தை.
பராசனன் - கொலைசெய்வோன்.
பராடம் - பாலைநிலம்.
பராதீனம் - சுதந்தரமற்றது.
பராபத்தியம் - அதிகாரம், மேல் விசாரணை.
பராபரக்கண்ணி - ஓர் பாடல்.
பராபரவஸ்து - கடவுள்.
பராமரித்தல் - ஆதரித்தல், நடத்தல், பத்திரப்படுத்தல், வளர்த்தல், ஆராய்தல்.
பராமரிப்பு - விசாரிப்பு.
பராமுகம்* - அசட்டை.
பராய் - பிராய்மரம்.
பராரை - மருமரத்தடி, உள்ளோசை.
பரார்த்தம் - பிறர்க்குபகாரமானது, ஆயிரங்கோடாகோடி.
பராவுதல் - துதித்தல்.
பரி - குதிரை, அச்சுவினி, அன்பு, பாதுகாத்தல், உயர்ச்சி, சுமை, பெருமை, வழி, துன்பம், விரிவு, விரைவு, பருத்தி, கறுப்பு.
பரிகம் - அகழ், மதில், மதிலுண்மேடை, வளைதடி, வெளிக்கதவு, நீர்ச்சாடி, நித்தியயோகத்தொன்று.
பரிகரணம் - விடுதல், பிடித்தல்.
பரிகரம்-நாற்புறத்தும் தொழில் செய்வோர் தொகுதி. (சீவக. சிந். 2099 உரை).
பரிகரித்தல் - குணமாக்கல், பிராயச்சித்தம்செய்தல், நீக்கல், காத்தல்.
பரிகலம் - மகாத்துமாக்களுண்ணும் பாத்திரம், சேனை, பரிவாரப்பேய்.
பரிகாசம்* - பரிநகை, கேலி.
பரிகாரம் - பிராயச்சித்தம், மாற்று மருந்து, வைத்தியம், [பராமரிப்பு, பெண்மயிர்.]
பரிகாரி, பரியாரி - வைத்தியன், நாவிதன்.
பரிகை - அகழி, உருக்கம், மதிலுண்மேடை.
பரிக்கிரகம் - ஏற்றுக்கொள்ளுதல், சபதம்.
பரிசதன்மாத்திரை - பரிசவுணர்வின் மூலம்.
பரிசம் - தொடல், தொடுதலையறியுமறிவு இஃது பஞ்சபுலனிலொன்று, மாப்பிள்ளை பெண்ணின் தாய்தந்தையர்க்குத் தரும் வெகுமானம் (இதைப் பரியமெனவும் வழங்குவர்.)
பரிசனம் - உறவு, ஏவல்செய்வோர், தொடுதல்.
பரிசனவேதி - இழிந்த லோகங்களைப் பொன்னாக்குமருந்து.
பரிசனன் - வாயு.
பரிசன்னியம் - பொன்மலை.
பரிசாரகன் - ஏவல்செய்வோன்.
பரிசாரம் - பரிவாரம் (தன்னைச் சூழ்வோர்), [பெண்மயிர்].
பரிசில் - வெகுமதி.
பரிசு - ஈகை, [பண்பு, விதம்.]
பரிசுத்தம்* - முழுதுஞ்சுத்தம், மாசின்மை, தூய்மை.
பரிசை - கேடகம்.

பரிச்சயம்*, பரிச்சிதம், பரிச்சியம்- பழக்கம்.
பரிச்சித்து - அருச்சுனன் பௌத்திரன், ஓரரசன்.
பரிச்சேதம் - பகுத்தறிகை, நூற் கூறுபாடு, துண்டிப்பு, எல்லை.
பரிச்சேதனம் - முற்றும், இன்மை, செய்யுளின் கூறுபாடு.
பரிச்சை* - பரிச்சியம்.
பரிஞ்சு - வாட்பிடி.
பரிஷ்காரம் - முடிவு, துலக்கம், சமயாசாரத்துட் படுத்தல்.
பரிட்சை* - சோதனை, பழக்கம்.
பரிணமித்தல் - வேறுபடல்.
பரிணயம் - கலியாணம்.
பரிணாமம் - வேறுபாடு.
பரிதபித்தல் - இரங்குதல், வருந்தல்.
பரிதாபம்* - இரக்கம், துயரம்.
பரிதாபி-நாற்பத்தாறுவ தாண்டு, துயருறுவோன்.
பரிதானம் - கைக்கூலி, பொருள் தந்து பொருள் வாங்குதல்.
பரிதி - சூரியன், வட்டத்தின் சுற்றளவு, சக்கராயுதம், ஒளி, யாகமேடை, யூபஸ்தம்பம்.
பரித்தல் - சுமத்தல், காத்தல்.
பரித்தியாகம் - முற்றும்விடுதல்.
பரித்தியாகி - சன்னியாசி.
பரிபக்குவம் - தக்க சமயம்.
பரிபவம் - வியாகுலம், இழிவு, எளிமை, தோல்வி.
பரிபாகம் - ஏற்றபக்குவம், சமர்த்து, முதிர்வு.
பரிபாஷை - குழூஉக்குறி, சங்கேதம்.
பரிபாலனம் - காவல், ஆளுகை, அருளுதல், சமாளித்தல்.
பரிபாலித்தல் - அருளுதல், காத்தல்.
பரிபுடம் - நூற்றெருப்புடம்.
பரிபுரம் - காற்சிலம்பு, பாதகிண்கிணி.
பரிபூதம் - அவமானம்.
பரிபூரணம் - திருத்தி, மிகுதி.
பரிபூரணன் - கடவுள் (எங்கும் நிறைந்தவன்).
பரிபூரணி - இலட்சுமி, பார்வதி.
பரிமளகந்தி - வியாசன் தாய்.
பரிமளதயிலம், பரிமளத்தைலம்- நறுமணமுடைய எண்ணெய்.
பரிமளம் - மிகுமணம்.
பரிமளவருக்கம்-பரிமளத்தைலம்
பரிமளிப்பு-வாசம், சந்தோஷம்.
பரிமா - குதிரை.
பரிமாணம் - அளவு.
பரிமாறுதல் - பங்கிடுதல், கொடுத்துமாறுதல்.
பரிமாற்றம் - கலப்பு, நடத்தை.
பரிமித்தல் - அலங்கரித்தல்.
பரிமுகம்-அச்சுவினிநாள், கணைக்கால், காலிற்றேல்.
பரிமேயம் - அளவுபட்டது.
பரிமேலழகர் - திருக்குறளின் உரையாசிரியர்.
பரியகம் - காற்சரி, கைச்சரி, பாதகிண்கிணி.
பரியங்கம் - கட்டில், படுக்கை.
பரியந்தம் - எல்லை.
பரியம்-பரிசம்(சீவக.சிந்.1047).
பரியவம் - பலர் செல்லுநெறி.
பரியாசம்* - பரிகாசம்.

பரியாயச்சொல் - ஒரு பொருள் குறித்த மறுசொல்.
பரியாயம் - ஒழுங்கு, ஒன்றற் குரியன.
பரியாரி - நாவிதன்.
பரியாளம் - பரிவாரம். (சீவக. சிந். 949).
பரியானம் - சேணம்.
பரிவட்டம் - நெய்வார் கருவியி னொன்று, தலையிற் கட்டுஞ் சீலை, விக்கிரகத்தினுடை.
பரிவருத்தம் - உலகமுடிவு, சுற் றுதல், பொருள்தந்து பொ ருள் பெறல்.
பரிவருத்தனம் - சுற்றுதல், அதி கப்படல், மாற்றுதல்.
பரிவருத்தனை - பொருள்தந்து வேறொருபொருள்வாங்குதல்.
பரிவாதம் - பழிச்சொல், வீணை வியக்கும்வில்.
பரிவாரம் - படை, தன்னைச் சூழ் ந்திருப்பவர்.
பரிவிருத்தம் - பரிவருத்தம்.
பரிவு - அன்பு, இன்பம், துன் பம்.
பரிவேடம் - சந்திர சூரியரைச் சூழத்தோன்றும் வட்டம், சுற் றளவு, சூழ்தல்.
பரிவேதனம் - சம்பாத்தியம், விவாகம், ஆராய்வு.
பரீட்சித்தல் - ஆராய்தல், பழகு தல், சோதித்தல்.
பரீட்சை-அப்பியாசம், ஆராய்வு.
பரு - சிலந்திநோய், [பருமை, பருவென்னேவல், கடல்.]
பருகுதல் - குடித்தல், புசித்தல்.
பருக்கன் - மிருதுவில்லாதது.
பருக்கை - சோறு, பருக்கைக் கல், பளிங்கு.
பருஷம் - கடுஞ்சொல்.
பருணிதர் - புலவர்.
பருதி - சூரியன்.
பருத்தல் - பெருத்தல்.
பருத்தி* - ஓர் செடி.
பருந்து* - ஓர் பறவை.
பருப்பதம் - மலை.
பருப்பதி - பார்வதி.
பருப்பம் - பருத்தல், பருமை.
பருப்பு - பயறு, வித்தின்பருப்பு, [அதிகப்படல், பருமை "பரு ப்புடைப்பவளம் போலக்" சீவக - சிந் - 2273.]
பருமட்டம், பருமட்டு - செவ் வையின்மை.
பருமம் -குதிரைக்கல்லணை, மூவாறு கோவைமணி, பருப் பம், கவசம், நிதம்பம்.
பருமன்* - பருத்தது.
பருமை - பரும்படியான தன்மை.
பருவகாலம் - பக்குவகாலம்.
பருவதம் - மலை, [ஓர் மீன்.]
பருவம் - பருவகாலம், பூரணை, [வயது, அமாவாசியை, இள மை, கணு, காலம், பக்குவம்.]
பருவயோனி - கரும்பு.
பருவரல் - துன்பம்.
பருவு* - பரு.
பரை - ஐந்துமரக்கால் கொண்ட ஓரளவு, [பார்வதி.]
பரோட்சஞானம் - கட்புலனுக் குத் தென்படாத பிரமமொன் றுண்டென்று கேட்டறிதல்.

பரோபகாரம் - பிறர்க்குபகாரம்.
பர்க்கன் - சிவன், சூரியன், அரி.
பர்ணசாலை* - இலைகளால் வேய்ந்த குடில்.
பர்ணம் - பன்னம் (இலை.)
பர்த்தா - கணவன்.
பர்ப்படாகம், பர்ப்பாடகம், பற்பாடகம் - ஓர் மருந்துப்பூடு.
பர்வதம்* - பருவதம்.
பல* - அநேகம்.
பலகணி - சாளரவாயில்.
பலகறை* - கவடி.
பலகாரம் - அப்பவருக்கம், [யானைமேற்றவிசு. (சீவக. சிந். 2237. உரை.]
பலஹீனம், பலகீனம்* - பலக்கேடு.
பலகை-மரப்பலகை முதலியன, [கேடகம், நெற்றியெலும்பு.]
பலகைமரம்* - நெய்வார் கருவியினொன்று.
பலசாலி* - பலவான்.
பலசூதனன் - இந்திரன்.
பலட்சயம் - பலவீனம்.
பலண்டுறுகபாஷாணம் - விளைவு பாஷாணவகையினொன்று.
பலதானம் - கருப்பதானம்.
பலதேவன் - பலபத்திரன்.
பலபலெனல் - விடியற்குறிப்பு, [ஒலிக்குறிப்பு, ஒளிக்குறிப்பு.]
பலப்படுதல்* - பலமடைதல்.
பலப்பம்* - மாக்கல்.
பலமுறை - பலதரம், [நானாவிதம்.]
பலம் - வலிமை, நிறையளவினொன்று, [ஆதாயம், பயன், செல்வாக்கு, நிறைகல், பழம், பருப்பம், பொன், நெற்றி.]
பலராமன் - பலபத்திரன்.
பலர் - பல்லோர்.
பலவந்தம்* - நிர்ப்பந்தம்.
பலவான் - பலமுடையவன்.
பலவிதம்* - நானாவிதம்.
பலவு - பலாமரம்.
பலன் - இலாபம், பிரயோசனம், [புண்ணியம், ஈரவெங்காயம், பலராமன், பழம்.]
பலா* - பலாமரம்.
பலாகம் - கொக்கு.
பலாக்கன் - குறும்பார்வையன்.
பலாக்கினி - பித்தம்.
பலாங்கம் - ஓர் மீன்.
பலாசம் - பலாமரம், புனமுருக்கு, இலை, பச்சைநிறம்.
பலாசு - புனமுருக்கமரம்.
பலாட்டியம் - பலம், பலவந்தம்.
பலாண்டு - ஈரவெங்காயம்.
பலாத்காரம்* - பலாற்காரம்.
பலாபலன்* - நயநஷ்டம்.
பலாரெனல் - விடிதற்குறிப்பு.
பலாலம் - வைக்கோல்.
பலாற்காரம் - வலோற்காரம்.
பலி - ஓர் சக்கரவர்த்தி, காகம், சாம்பல், சோறு, தேவருணவு, நீறு, பிச்சை, பூசை, காய்த்திருந்த மரம்.
பலிதம் - பலிப்பது, வெம்மை, மயிர்நரை, சேறு.
பலிதை - கிழவி.
பலித்தல் - சித்தியாதல், [இலாபம்.]
பலினம் - காய்த்திருந்த மரம்.

பலினி-காய்த்திருந்தமரம், கோங்குமரம், ஞாழல்.
பலுகல், பலுகுதல் - பெருகுதல்.
பலோத்தமை - திராக்ஷைப்பழம்.
பலோற்காரம் - வலோற்காரம்.
பல் - பல்லு, [ஆயுதக்கருக்கு, நங்கூரநாக்கு.]
பல்காயனர் - ஓர் இலக்கண ஆசிரியர்.
பல்குதல் - பலுகுதல்.
பல்லக்கு* - சிவிகை.
பல்லங்குழி - பல்லாங்குழி.
பல்லணம் - குதிரைக்கல்லணை.
பல்லம் - குதிரைக்கல்லணை, ஓரெண், கரடி, சேரான்மரம், அம்பு.
பல்லவம் - இலை, தளிர், ஒருதேயம், கையணி, கிளை.
பல்லவர் - பலர், தூர்த்தர், கீழ்மக்கள், பல்லவ அரசர்கள்
பல்லாக்கு - பல்லக்கு.
பல்லாங்குழி* - பன்னாங்குழி (பதினான்கு குழியுள்ளவோர் விளையாட்டுத் தட்டு.)
பல்லாண்டு - பலவருஷம், ஓர்வகை வாழ்த்துக்கவி.
பல்லாதகி - சேரான்மரம்.
பல்லார் - பலர்.
பல்லி - கௌளி, சிற்றூர்.
பல்லிக்கை - சேங்கொட்டை.
பல்லிப்பூடு - ஓர் பூண்டு.
பல்லியம் - வாச்சியப்பொது.
பல்லு* - தந்தம்.
பல்லுகம், பல்லூகம் - கரடி.
பல்லூழி - அநேக யுககாலம்.
பல்வலம் - குளம்.
பவ - எட்டாவதாண்டு.
பவணந்தி - நன்னூலிலக்கணஆசிரியன்.
பவணம் - நாகலோகம்.
பவணை - கழுகு.
பவந்தம் - சூது.
பவபூதி - ஒரு வடமொழிப் புலவன்.
பவமானன் - வாயுதேவன்.
பவம் - பாவம், பிறப்பு, அழிவு, உலகம், மேன்மை, சுத்தம்.
பவர்க்கம் - நரகம்.
பவழம்* - பவளம்.
பவளக்காலி - ஓர் பூடு, ஓர் புள்.
பவளநெடுங்குஞ்சியோன் - வயிரவன்.
பவளமல்லிகை - ஓர் மல்லிகை.
பவளம்* - நவமணியினொன்று.
பவனகுமாரன் - அக்கினி.
பவனசுதன் - ஆஞ்சநேயன், வீமன்.
பவனம் - அரமனை, தேவலோகம், நாகலோகம், பூனை, வீடு, பூமி, பாவனை, காற்று, கொழித்தல், இராசி, பாம்பு.
பவனசனம் - பாம்பு.
பவனி - உலாப்போதல்.
பவன் - கடவுள் (தானுண்டானவன்.)
பவானி - கோயம்புத்தூருக்கருகேயுள்ள ஓரூர், காவேரியின் கிளைநதி, பார்வதி.
பவி - வச்சிராயுதம்.
பவிசி, பவிஷி, பவிஷ்ணு, பவுஷிமானம், பெருமை.

பவிஷியம் - ஓர் புராணம், செல்வம், எதிர்காலம்.
பவித்திரமோதிரம்* - பவித்திர முடிச்சாய்ச்செய்த மோதிரம்.
பவித்திரம் - தருப்பைப்புல்லாற் செய்த ஓர் முடிச்சு, காணிக்கைப்பாத்திரம், நெய், தருப்பை, தூய்மை, பூணூல்.
பவுண்டரம்-வீமன்கையிற் சங்கு.
பவுதிகம் - பௌதிகம்.
பவுரி - கூத்தின்விகற்பம்.
பவுரிசம் - போலியான நடை.
பவுர்ணிமி, பவுரணை* - பௌரணை.
பவ்வீ - பீ. (அமேத்தியம்.)
பழகுதல் - இணக்கமாதல், கற்றல், ஊடாடுதல்.
பழக்கம் - அறிமுகம், பயிற்சி, வழக்கம், சமர்த்து.
பழக்கம்பண்ணுதல் - அப்பியாசித்தல், அறிமுகப்படுத்தல்.
பழக்காய் - செங்காய்.
பழக்குதல் - அறிமுகப்படுத்தல், பயிற்றல்.
பழங்கண் - துன்பம், மெலிவு.
பழங்கதை* - பூருவகதை.
பழங்குடி - ஆதிகாலத்தேறிய குடி, தொன்மரபு.
பழசு, பழைசு* - நாட்பட்டது.
பழமலை - விருத்தாசலம்.
பழமை - பூருவம்.
பழமொழி - முதுசொல், ஓர் நீதிநூல்.
பழம் - கனி, பலன்.
பழம்பொருள் - பழைய பொருள், [கடவுள்.]

பழயபடி* - முந்தினபிரகாரம்.
பழவடியார் - வழித்தொண்டர்.
பழவினை* - ஊழ்வினை.
பழனம் - வயல், மருதநிலம்.
பழனி - திருவாவினன்குடி.
பழி - நிந்தை, பொய், பொல்லாங்கு, விரோதம்.
பழிகாரன் - பழிவாங்குவோன், பழிக்காளானவன்.
பழிகூறல் - தூற்றல்.
பழிசுமத்துதல்* - பிறன்மீது பழி சாட்டல்.
பழிச்சுதல் - துதித்தல்.
பழிதேடுதல் - பொல்லாங்கு செய்தல்.
பழிப்பு - நிந்தை.
பழிமொழி - நிந்தனை.
பழிவாங்கல்* - தீமைக்குத்தீமை செய்தல்.
பழு-எணிப்பழு, விலாவெலும்பு.
பழுக்கச்சுடுதல் - பொன்னணியைப் பழுப்பாக்கல்.
பழுக்காய் - பாக்கு, தேங்காய்.
பழுது - குற்றம், சேதம், பொய், பொல்லாங்கு.
பழுதுபடல்* - சீர்கெடல்.
பழுதுபார்த்தல் * - திருத்துதல்.
பழுதை- கயிறு, வைக்கோற்புரி, பாம்பு.
பழுத்தபழம்* - விருத்தன்.
பழுப்பு - முதிர்ந்து மஞ்சணிற முற்ற இலை, [ஓர் நிறம், அரிதாரம், "பந்தியாப்பழுப்பு நாறிற்" (சீவ. சிந் 1287.)]
பழுமணி - மாணிக்கம் (சிலப் 21:23.)

பழுமரம் - ஆலமரம்.
பழுவம் - காடு.
பழைசு, பழைது* - பழையது.
பழைமை - தொன்மை.
பழையது - நாட்பட்டது, பழஞ் சாதம்.
பழையர் - தொல்லோர், கள்விற் போர்.
பளகு - குற்றம்.
பளபளப்பு - ஒளிக்குறிப்பு.
பளிங்கு - கண்ணாடி, படிகம், தோணிக்கயிறு, சுக்கிரன், கருப்பூரம் "முப்பழநீர்ப் பளிங்களைஇக்" (சீவ. சிங். 2356.)
பளிச்சிடுதல்* - ஒளிமின்னுதல்.
பளிதம் - கருப்பூரம், ஒரெண்.
பளீரெனல்* - ஒளிக்குறிப்பு.
பளுவு* - பாரம்.
பள், பள்ளு - ஓர் சாதி, உழத்திப்பாட்டாகிய பிரபந்தம்.
பள்ளத்தாக்கு* - இரண்டு மேட்டுக்குக் குறுக்கேயுள்ள நிலம்.
பள்ளம் - தாழ்ந்த நிலம், [ஆழம்.]
பள்ளர் - ஓர் சாதியார், [உழவர்.]
பள்ளாடு - பள்ளையாடு.
பள்ளி-ஓர் சாதி, பள்ளிக்கூடம், [நித்திரை, கோவில், சிற்றூர், முனிவர்வாசம், அறச்சாலை, இடைச்சேரி.]
பள்ளிகொண்டபெருமாள் - திருமால்.
பள்ளிகொள்ளுதல் * - நித்திரை செய்தல்.
பள்ளிப்பிள்ளை - கற்போன்.
பள்ளியெழுச்சி - துயிலெழுப்புகை, ஓர் பிரபந்தம்.
பள்ளை - குள்ளம், வெள்ளாடு.
பள்ளையம்-படைக்கப்பட்ட பலி, உண்கலம், தாம்பாளம்.
பறக்கடித்தல்* - துரத்துதல்.
பறக்காளி - பறைக்காளி.
பறங்கிக்காய் - பூசினிக்காய்.
பறங்கிக்காரன் - வெள்ளைக்காரனுக்கும் பறைச்சிக்கும் பிறந்தவன்.
பறங்கிக்கிழங்கு - சீனக்கிழங்கு.
பறங்கிச்சாம்பிராணி* - ஓர் மருந்து.
பறங்கிப்பேட்டை* - ஒரூர்.
பறட்டை - செழிப்பற்றது, வளர்ச்சியற்றது.
பறண்டுதல்* சுறண்டுதல்.
பறத்தல் - அவசரம்பண்ணல், விரைவாயோடல்.
பறந்தலை-சுடுகாடு, போர்க்களம்.
பறபறெனல்*-விரைவுக்குறிப்பு.
பறப்பன் - அவசரக்காரன், [விருச்சிகவிராசி, தேள்.]
பறம்பர் - தோல்வினைஞர்.
பறம்பு - மலை, மாதர்தனம்.
பறவை - பட்சி, [அவிட்டநாள், புள்ளிறகு.]
பறவைமாநாகம்-குக்குடசர்ப்பம்
பறழ் - மரக்கிளையில் வாழுமணிலாதி விலங்கின் பிள்ளை, ஆடு, கீரி, நரி, நாய், பன்றி, பாம்பு, புலி முதலியவற்றின் குட்டி.
பறளிகை, பறளை - பற்றிரும்பு.
பறுண்டுதல்* - பிருண்டுதல்.
பறி-மீன்படுக்குங்கருவி, பொன்.
பறிகொடுத்தல் - களவுகொடுத்தல், அழியக்கொடுத்தல்.

பறிக்குதல் - கொய்தல், பிடுங்குதல், வலாற்காரமாய்க் கவர்தல்.
பறிதலையர் - சமணரி லொருவகையார்.
பறிவை - சீந்திற்கொடி.
பறை - ஓரளவு கருவி, வாச்சியப்பொது, இறகு, சொல், பறையென்னேவல்.
பறைக்காலி, பறைக்காளி - ஓர்வித புடவை.
பறைசாற்றுதல்* - பறையடித்துத் தெரிவித்தல்.
பறைச்சி * - பறைப்பெண்.
பறைப்பருந்து - கரும்பருந்து.
பறைப்புடையன் - ஓர் பாம்பு.
பறைமுழக்குதல், பறைதட்டுதல் - பறையடித்தல்.
பறையலகு - பலகறை. (சீவ. சிந்.)
பறையன்* - பறையடிப்பவன்.
பற்குனன் - அருச்சுனன்.
பற்குனி-பங்குனி, உத்திரநாள்.
பற்சர் - பகைவர்.
பற்படகம், பற்படம்-ஓர் பூண்டு.
பற்பம், பஸ்மம் - தூள், நீறு, விபூதி, தாமரை.
பற்பாடகம் - பற்படகம்.
பஸ்மீகரித்தல்-சாம்பராக்குதல்.
பற்மராகம் - பதுமராகம்.
பற்றம் - கற்றை. (சீவக. சிந். 1707 உரை.)
பற்றலர், பற்றார் - பகைவர்.
பற்றவைத்தல்* - தீமூட்டல்.
பற்றாக்கை - அம்புகட்டுங் கயிறு.
பற்றாசு - உலோகம் பொருத்தும் அற்பதுண்டம்.
பற்றினர்-சினேகிதர், உறவினர்.
பற்று - அன்பு, ஆசை, சம்பந்தம், சேர்வை, தொடர்ச்சி, பசை, திரளுகை, மண்டி.
பற்றுக்கோடு, பற்றுக்கோல் - ஊன்றுகோல், தஞ்சம்.
பற்றுவரவு * - கொடுக்கல் வாங்கல்.
பற்றை-சிறுதூறு, செங்காந்தள்.
பனங்கட்டி* - பனைவெல்லம்.
பனங்கிளி - அன்றில், ஓர் கிளி.
பனசம் - பலாமரம்.
பனசை - ஓர் பட்டினம், ஓர் பாம்பு, ஓர்விதக் கொப்புள அம்மை.
பனத்தி - பார்ப்பனத்தி.
பனம்பாரனார் - அகத்தியர் மாணக்கரிலொருவர்.
பனவன் - பிராமணன்.
பனாட்டு - பனங்களியிலட்டது.
பனி - பெய்யும்பனி, [அச்சம், குளிர், நடுக்கம், துன்பம்.]
பனிக்கதிர் - சந்திரன்.
பனிக்காற்று* - குளிர்காற்று.
பனிச்சை - பின்னிமுடிக்கு மயிர்ச்சுருள், காட்டத்திமரம்.
பனித்தல் - துளித்தல், நடுங்கல்.
பனிநீர் - உறைந்த நீர்.
பனிப்பகை - சூரியன்.
பனிப்பயறு* - ஓர் பயறு.
பனிப்பூங்காரம் - பனிமங்குளம்.
பனிமலை - இமயமலை.
பனுவலாட்டி - சரஸ்வதி.

பனுவல் - கல்வி, சொல், நூல், பஞ்சினூல், ஆகமம், ஆராய்ச்சி. (சீவக. சிந். 464.)
பனை - ஓர் மரம், [அனுடநாள்.]
பனைக்கொடியோன் - பலபத்திரன், வீடுமன்.
பனைமடல் - பனைமட்டை.
பனையன்-ஓர் நோய், ஓர் பாம்பு, ஓர் மீன்.
பனையேறி - ஓர் பாம்பு, [ஓர் குருநோய்.]
பனைவட்டு, பனைவெட்டு*- பனைவெல்லம்.
பனைவாரை - பனைமரக்கீற்று.
பன்மை - பலவாகிய தன்மை.
பன்றி - ஒரு மிருகம், [கொடுந்தமிழ் நாட்டிலொன்று.]
பன்றிக்கிளி - ஓர் மீன்.
பன்றிக்குறும்பு - நிலப்பனை.
பன்றிவெட்டுதல் - ஓர் விளையாட்டு.
பன்னகசாலை - புல்வீடு.
பன்னகம் - பாம்பு.
பன்னகவயிரி - கருடன்.
பன்னகாசனன் - மகாவிஷ்ணு.
பன்னகாபரணன் - சிவன்.
பன்னக்காரன்* - பன்னவேலை செய்பவன்.
பன்னத்தண்டு* - நெய்வார் கருவியிலொன்று.
பன்னம் - ஓலை முதலியவற்றாற் பின்னும் வேலை, இலை.
பன்னல் - சொல்லுதல், நெருங்கல், பருத்தி.
பன்னாங்கு - முடைந்த தென்னோலை, தண்டிகைமேல்விதானம்.
பன்னாங்குழி - பல்லாங்குழி.
பன்னாசி - ஓர் துளசி.
பன்னாடை* - நெய்யரி.
பன்னி - குருபத்தினி, சணல்.
பன்னீர் - ஓர் வாசனைநீர், [கருப்பைநீர்.]
பன்னீர்க்குடம் - கருப்பத்தைச் சூழ்ந்த நீர்ப்பை.
பன்னீர்ச்செம்பு*- பன்னீர்தூவுங் கருவி.
பன்னீர்மரம்* ஓர் பூமரம்.
பன்னொன்று - பதினொன்று.

## பா

பா - நெசவுபா, [பஞ்சிநூல், பாட்டு, பாவென்னேவல்.]
பாகசன் - ஓரிராக்கதன்.
பாகசாதனன் - இந்திரன்.
பாகசாதனி - அருச்சுனன்.
பாகசாலை - மடைப்பள்ளி.
பாகதம் - வடமொழிச்சிதைவு.
பாகம்-சமைத்தல், பங்கு, [பாதி, ஓர்வகைத் தோற்கருவி, பிச்சை, புயம், அச்சம், பக்கம், பக்குவம்.]
பாகலம் - யானைநோய்.
பாகலன் - உன்மத்தன்.
பாகல் - பாகற்கொடி, [பலா.]
பாகவதம் - பதினெண்புராணத்தொன்று.
பாகவதர்* திருமாலடியவர்.
பாகன் - யானைநடத்துவோன், [புதன்.]
பாகி - நாய், பக்குவன்.
பாகிடுதல் - பங்கிடுதல்.

பாகித்தல் - பங்கிடுதல்.
பாகியேந்திரம் - புறவுறுப்பு.
பாகீரதி - கங்கை.
பாகு - குழம்பு, [சருக்கரை, பாக்கு, புயம், பிச்சை, பரணி நாள், பங்கு, பாகன்.]
பாகுடம் - அரசிறை.
பாகுபாடு* - பகுப்பு.
பாகுலம் - கார்த்திகைமாதம்.
பாகை - தலைப்பா, [பகுதி, வட்டத்தின் முந்நூற்றறுபதிலொருபங்கு.]
பாக்கம்-ஊர்ப்பொது, நெய்தனிலத்தார், மருதநிலத்தார்.
பாக்கல், பாக்கல்லு - பாவுகல்.
பாக்கன் - பூனை.
பாக்கானுல் - பாவினுல்.
பாக்கி* - நிலுவை.
பாக்கியசாலி - அதிர்ஷ்டசாலி.
பாக்கியத்தானம் - சென்மத்துக்குப் பத்தாமிடம்.
பாக்கியம் - செல்வம், தனம், பேறு, சித்தி.
பாக்கியவதி - செல்வி.
பாக்கியவான்* - செல்வன்.
பாக்கு - துவர்க்காய், எதிர்கால விடைச் சொல் (உ-ம்.) உண்பாக்கு வந்தான்.
பாக்குவெட்டி - பாக்குச் சீவுங் கருவி.
பாங்கர் - பக்கம், தோழர், இடம்.
பாங்கன் - தோழன்.
பாங்கி-தோழி(பக்கத்திற் பிரியாதிருப்பவள்.)
பாங்கு - அழகு, இணக்கம், உரிமை, மாதிரி, பக்கம், தகைமை.
பாசகம் - மடைத்தொழில்.
பாசகரன்-நமன், வருணன், கணபதி.
பாசகன் - சமையற்காரன், தீ.
பாசக்கயிறு - நமன் வீசியெறியுமாயுதம்.
பாசடம் - வெற்றிலை.
பாசடை - பச்சிலை.
பாசண்டம் - வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளாதபுறமதம்.
பாசண்டர்-பாசண்ட மதத்தினர்.
பாசதரன் - நமன், வருணன், கணேசன்.
பாசபந்தம் - மலபந்தம்.
பாசம் - அன்பு, [கயிறு, கட்டு, நமனெறியுமாயுதம், கவசம், ஆணவமலம், ஊசித்துளை, இருள், பிசாசம்.]
பாசவர் - இலையமுதிடுவோர், கயிறு திரித்து விற்போர், சூட்டிறைச்சி விற்போர்.
பாசறை - பகைமேற் சென்றோருறைவிடம், துபாம், மணியாசிப்பலகை.
பாசனம் - பாத்திரம், மட்கலம், உண்கலம், உறவு, அக்கினி.
பாசன்-சீவன், நமன், வருணன்.
பாசாங்கு - மாரீசம் (இல்லதை உள்ளதாய்க் காட்டல்.)
பாசாங்குசன் - விநாயகன்.
பாசாபந்தம்-மாயையால் மறைக்கப்படுதல்.
பாசானபேதி-செப்புநெருஞ்சில்.
பாசி - நீர்ப்பாசி, [வருணன், நமன், நாய், கரியமணி, நெட்டிப்புல்.]

பாசித்தீர்வை - மீன்றீர்வை.
பாசிபடர்தல் - பாசிபிடித்தல்.
பாசிபந்து* - ஓர் கையணி.
பாசிப்பயறு - ஓர்வகைப்பயறு.
பாசிமணி - கரியமணி.
பாசிலை - பச்சிலை.
பாசு - பசுமை, மூங்கில், பச்சை.
பாசுபதம்-உட்சமய மாறினுென்று, பசுபதிபாணம்.
பாசுபதாத்திரம் சிவன்பாணம்.
பாசுரம்-பாட்டு, பாவசனம், வேய்ங்குழலோசை.
பாச்சல்* - எழுச்சி, பாய்தல்.
பாச்சி* - பால் (குழந்தைகள் இவ்வாறு கூறும்.)
பாச்சிகை* - சூதாடுகருவி.
பாச்சுருட்டி, பாச்சுற்றி* - தறிமரம்.
பாச்சை* - ஓர் வண்டு.
பாஷாந்தரம் - வேறுமொழி, பலபாஷை.
பாஷிதம் - பேச்சு.
பாஷியகாரர் - யதிராஜன்.
பாஞ்சசன்னியம்-கிருஷ்ணமூர்த்தியின் சங்கு (அதன் முழக்கத்தால் பகைவர் அழிவார்கள்.)
பாஞ்சராத்திரம் - ஐந்து நாளளவும் நான்முகனுக்குத் திருமாலுபதேசித்த ஓர் சமயம்.
பாஞ்சாலபுருஷன் - இலட்சணமுடையவன்.
பாஞ்சாலம் - ஓர் நாடு.
பாஞ்சாலி - திரௌபதி.
பாடகம் - காலணியி னென்று, [கிராமத்திற்பாதி, கரை, ஓர் நீட்டலளவை.]
பாடகன் - பாடுவோன், மாணாக்கன்.
பாடணம், பாஷணம் - சம்பாஷணை, போதனை.
பாடம் - ஓதும் பாடம், [அழுத்தம், இரத்தின முதலியவற்றி னொளி, இடையர்வீதி, விரிவு.]
பாடலம் - பாதிரிமரம், இளஞ்சிவப்பு, குதிரை, சேரன் குதிரை.
பாடலி - கள், பாதிரிமரம்.
பாடல் - பாட்டு, சங்கீதம், செய்யுள்.
பாடவம் - களிப்பு, பெருமை, சமர்த்து, வடவாமுகாக்கினி.
பாடவள் - பாடுபவள், மிதுன விராசி.
பாடவன் - மிதுனவிராசி, பாடுபவன்.
பாடவை - மிதுனவிராசி.
பாடன்மகடூஉ - பாணர்பெண், பாடுவாள்.
பாடாணம், பாஷாணம் - நச்சுச்சரக்கு, [கல்.]
பாடாண்டினை - புறப்பொருட்டிணையிலொன்று.
பாடி - ஊர், சேரி, நகரம், நாடு, பாசறை, பாடுபவள், முல்லை நிலத்தூர், ஓரிராகம்.
பாடியம், பாஷியம், பாஷ்யம் - உரை.
பாடிரம், பாடீரம் - ஓர் கிழங்கு, சந்தனம், துத்தநாகம், மூங்கில், மூங்கிலரிசி, முகில்.
பாடிலம் - நாடு.

பாடிவீடு - பாசறை.
பாடினி - பாடுவாள்.
பாடு-வருத்தம், வேலை, [கடமை, பக்கம், பெருமை, குணம், ஓசை, உண்டாகுகை.]
பாடுபடுத்துதல்* - வருத்துதல்.
பாடை - ஆசந்தி, [பாஷை, வட்டத்திருப்பி.]
பாடைகுலைத்தான்-பாகற்கொடி
பாட்டம் - பாட்டாசாரியமதம், அச்சல்மழை, பலகாரம்.
பாட்டன் - மூதாதை, [பாட்டமதத்தான்.]
பாட்டாசாரியம்-பாட்டாசாரியர் வேதமே கடவுளென்று ஏற்படுத்திய கொள்கை.
பாட்டி-மூதாய், [பாடுவாள், நரி நாய்பன்றி இவற்றின்பெண்]
பாட்டியமி*, பாட்டியம்* - பிரதமை.
பாட்டியல் - ஓர் இலக்கண நூல்.
பாட்டில், பாட்டீல்* - தட்டைக் காப்பு.
பாட்டு - இசைப்பாட்டு, செய்யுள்.
பாட்டை* - வழி.
பாட்டைசாரி*-வழிப்போக்கன்.
பாட்பம், பாஷ்பம் - கண்ணீர்.
பாணபத்திரன் - மதுரை வரகுண பாண்டியனின் மந்திரி.
பாணம் - அம்பு, [பூம்பட்டு, மழைவண்ணக்குறிஞ்சி, திப்பிலி.]
பாணர் - புகழ்ந்துபாடுவோர், தையற்காரர்.
பாணன் - காட்டாமணக்கு.
பாணு - வயிறுபருத்தபானை.
பாணுத்தடி* - சிலம்பக் கம்பு.
பாணுவு - சூதிலோர்தாயம்.
பாணி - கள், பழரசம், இலைச்சாறு, சங்கீதம், இசைப்பாட்டு, நீர், காலம், தாமதம், கை, சொல், கூத்து.
பாணிக்கிரகணம் - கைப்பற்றல் (விவாகம்.)
பாணித்தல் - தாமதஞ் செய்தல்.
பாணிபாத்திரம் - கமண்டலம்.
பாணினி - ஒரு வடமொழி இலக்கண நூலாசிரியன்.
பாண் - இசைப்பாட்டு, கள், பாணர்சாதி, தாழ்ச்சி "பணிந்து பாண் செய்ததன்றே"(சீவக. சிந். 1624.)
பாண்டம் - பாத்திரப்பொது, [மட்கலம், உடம்பு.]
பாண்டரங்கம் - சிவன்கூத்து.
பாண்டரங்கன் - சிவன்.
பாண்டரம் - வெண்மை, மல்லிகை.
பாண்டல், பாண்டை*-ஊழ்த்த நாற்றம்.
பாண்டவர்முன்பிறந்தோன் - கன்னன்.
பாண்டி - ஓர் தேயம், ஓர் பண், வாகைமரம், பன்னுங்குழிப்பலகை, ஓர் விளையாட்டு.
பாண்டிகன் - பள்ளியெழுச்சி பாடுவோன்.
பாண்டித்தியம் - கல்வித்திறம்.
பாண்டிமண்டலம், பாண்டியம் - பாண்டியன்தேயம்.

பாண்டில்-தேர்வட்டை, வாகை மரம், ஓர் வாத்தியம், எருது, அகல், கைத்தாளம், வண்டி, கட்டில், மூங்கில், நாடு.
பாண்டரம் - ஆல், வெண்மை.
பாண்டு - ஓர்நோய், [பாண்டவ ரின் பிதா, வெண்மை.]
பாண்டுகம்பலம் - யானைமேற்ற விசு, வெண்கம்பலம், ஓர் கல்.
பாண்டுரம் - வெண்மை.
பாண்டுரேட்சு - வெண்கரும்பு.
பாண்மகள் - பாடுவாள்.
பாதகம்* - துரோகம்.
பாதகர் - கீழ்மக்கள்.
பாதகாணிக்கை-பாததெட்சணை.
பாதகாப்பு - செருப்பு.
பாதகி* - துரோகி.
பாதகுறடு* - மிதியடி.
பாதசரம் - ஓர் காலணி.
பாதசாரம் - கிரகம் அன்றன்று நிற்கும் நிலை.
பாதசாரி* - காலாள்.
பாதசேவை - அடித்தொண்டு.
பாதச்சனி - வாக்குத்தானத்துச் சனி.
பாதஞ்சலம், பாதஞ்சலியம் - பதஞ்சலி செய்த நூல்.
பாததரிசனம்-பெரியோர்காட்சி.
பாததாடனம் - உதை.
பாததூளி - திருவடித்துகள்.
பாதபம் - மரப்பொது.
பாதம் - கால், [நாலிலொன்று, மரவேர், செய்யுளினடி, அடி வாரம், சரியை முதலிய நிலை]
பாதரசம்* - இரதம் (சூதம்.)
பாதரட்சை*-செருப்பு, மிதியடி.
பாதராயணன் - வேதவியாசன்.
பாதரோகணம் - அரசமரம்.
பாதலத்தம்பி - நிலக்காளான்.
பாதலம் - பாதாளம் (கீழேழுல கத்தொன்று.)
பாதவம் - மிதியடி, மரம், கொல்லை, மலை.
பாதன் - சூரியன், தீ.
பாதாக்கிரம் - கானுதி.
பாதாக்கிராந்தன் - அடிவணங்கு வோன்.
பாதாதிகேசம் - பாதமுதற் சிகை பரியந்தம்.
பாதாரவிந்தம்* - சீர்பாதம்.
பாதாளமூலி - ஆடுதின்னாப் பாளை, சிறுநெருஞ்சில், கோரைக்கிழங்கு, கறையான், சீந்தில்.
பாதாளம்* - பாதலம்.
பாதி-அரைவாசி, [பங்கு, கூறு.]
பாதித்தல் - வருத்துதல், [கூறு செய்தல்.]
பாதுகம்-மிதியடி, தொடுதோல்.
பாதுகாப்பு, பாதுகாவல்-காவல்.
பாதேயம் - கட்டுச்சோறு.
பாதை - வழி, வேதனை, [மரக் கலம்.]
பாத்தல் - பங்கிடுதல்.
பாத்தி - பயிரிடுமேடை, [பங்கு, வீடு, சிறுசெய்.]
பாத்தியஸ்தன்,* பாத்தியன் - சுதந்தரமுடையவன்.
பாத்தியம் - சம்பந்தம், [உரிமை, பங்கு, காலலம்பக் கொடுக்கும் நீர்.]

பாத்தியா* - மகம்மதியரின் கல் லறைத் தொழுகைச் சடங்கு.
பாத்திரபதம் - புரட்டாசிமாதம், உத்திரட்டாதிநாள்.
பாத்திரம் - உண்கலம், இரப் போர்கலம், [தகுதி, உடல், கருவிவகை, புரட்டாசிமாதம்.]
பாத்திரவாளி, பாத்திரன், பாத் திரவான் - தகுதியுடையவன்.
பாத்திரீயம் - பலிப்பாத்திரம்.
பாத்திரீரம் - காணிக்கை.
பாத்தில் - வீடு.
பாத்து - கஞ்சி, சோறு, நான்கு, பங்கு, பாதி.
பாத்துப்புலு - நாற்பது.
பாந்தம் - அடியாறு, ஒழுங்கு, பகாவீறு.
பாந்தல் - பதுங்கல்.
பாந்தள் - பாம்பு, பெரும்பாம்பு.
பாந்தன் - வழிச்செல்வோன்.
பாந்து - வளை (உ-ம்.) பாந்தடை.
பாந்தை - பொள்ளல்.
பாபகிரகம் - இராகு, சனி, செவ் வாய்.
பாபத்தி - வேட்டை.
பாபம்* - தீவினை.
பாபிஷ்டன், பாபிஷ்டி* - பாவ காரியம் செய்பவன்.
பாபிஷ்டை - பாவசெய்கை நடத்துபவள்.
பாப்பாச்சி* - ஓர்வகைத் தொடு தோல்.
பாப்பாத்தி* - பார்ப்பனத்தி.
பாப்பான்* - பார்ப்பான்.
பாப்புரி-பாம்புச்சட்டை, அகழி.
பாமகள், பாமடந்தை - சரஸ் வதி.
பாமம் - கோபம், தினவு, ஒளி, பரப்பு.
பாமரம் - அறிவின்மை, இழிமை.
பாமரர் - அறிவில்லார், [மன் னர்க்குத் துணைவர்.]
பாமன் - சூரியன், மைத்துனன்.
பாமினி - பெண்.
பாமுதல்வி - சரஸ்வதி.
பாம்பு - அரவு, [ஆயிலியநாள், வரம்பு, நீர்க்கரை.]
பாம்புக்கண்ணி - சங்கங்குப்பி.
பாம்புரி - பாம்புச்சட்டை, அகழி.
பாயசம் - பால், பாற்சோறு, பாற்சொற்றிச்செடி.
பாயல் - மக்கட்படுக்கை.
பாயிரம் - முகவுரை, பொழிப் புரை, வரலாறு.
பாயு, பாயுரு - குதம்.
பாய் - படுக்கும்பாய், [கப்பற் பாய், பாயென்னேவல்.
பாய்ச்சல் - பாய்தல், கீழ்ப்படி யாமை.
பாய்ச்சிகை * - சூதாடுகருவி.
பாய்ச்சை - தத்துப்பூச்சி.
பாய்தல் - உருவுதல், ஒடல், குதித்தல், தாண்டல். பரவுதல்.
பாய்மா - குதிரை, புலி.
பாய்மாலி* - வெள்ளச்சேதம்.
பாய்விரி - பசிரிக்கீரை.
பாரகம் - பூமி, கடக்குதல், திரைச் சீலை, தோணி.
பாரங்கதன் - கல்விகரை கண்ட வன்.
பாரசிகை - பருந்து.

பாரசீகம் - ஒரு தேயம்.
பாரச்சுமை* - தூக்கமுடியாத பாரம்.
பாரணம், பாரணை - உபவாசமிருந்துண்ணல்.
பாரதகண்டம், பாரதவருடம் - நவகண்டத்தொன்று.
பாரதம் - பாண்டவர் சரித்திரம், [பாதரசம், பாரதப்போர், மிக விரிவுடைய செய்தி.]
பாரதர் - குருகுலமன்னர்.
பாரதி - சரஸ்வதி, மரக்கலம், பைரவி.
பாரத்துவாசம் - கரிக்குருவி, காடை, எலும்பு.
பாரத்துவாசன் - துரோணசாரி.
பாரபட்சம்* - ஓரவாரம்.
பாரபத்தியம் - மேல்விசாரணை, அதிகாரம்.
பாரமேச்சுரம் - சிவாகமத்தொன்று.
பாரம் - சுமை, கடமை, துலா மிருபத்தெட்டுக் கொண்டது, [பாதரசம், காவுதடி, குதிரைச் சேணம், கவசம், வருத்தம், கரை, தோணி, வரம்பு, பூமி.]
பாரம்பரியம், பாரம்பரை- ஐதீகம், கிரமங்கிரமமாய் வருவது.
பாராசாரி - பெரிய குதிரை, [வியாசன்.]
பாராட்டுதல் - உபசரித்தல், உரிமைபாவித்தல், புகழ்தல்.
பாராயணம் - நியமமாகப் படித்தல்.
பாராயணி - சரஸ்வதி.
பாராவதம் - கருங்காலி, கரும்புறு, மலை, குரங்கு.
பாராவலையம், பாராவளையம் - வளைதடி.
பாராவாரம் - கடல், கடற்கரை.
பாரி - மனைவி, பருத்தது, [கட்டில், நல்லாடை, இராக்காவல், பெரியோன், கடையெழு வள்ளலிலொருவன், பூமி.]
பாரிகத்து* - பாரீகத்து (விடுதலைப்பத்திரம்.)
பாரிசம் - திசை, பக்கம், உடற்பக்கம்.
பாரிசவாயு * - ஓர் நோய் (பக்கவாயு)
பாரிசாதம் - ஐந்தருவினொன்று, பவளமல்லிகை.
பாரிடம் - பூமி, பூதம்.
பாரித்தல் - பருத்தல், பரப்பல், காத்தல், உண்டாக்கல், தோற்றல்.
பாரிபத்திரம் - வேம்பு.
பாரிப்பு - வீக்கம், பருப்பம்.
பாரியாள் - மனையாள், [பருத்தவன்.]
பாரியை - மனைவி.
பாருஷியம் - கடுஞ்சொல், கொடுமை, நிந்தை, அகில்.
பாரை - ஓர்மீன், கடப்பாரை, இருப்புலக்கை.
பார் - பாரென்னேவல், வண்டிப்பார், [பூமி, தேசம், அடுக்கு, உரோகிணிநாள், கரை.]
பார்க்கடம் - சாம்பர்.
பார்க்கம் - வட்டம்.
பார்க்கவன் - சுக்கிரன், பரசுராமன்.
பார்க்கவி - இலட்சுமி, பார்வதி.

பார்க்குனம் - பாற்குநம் (பங்குனிமாதம்.)
பார்த்தசாரதி - ஸ்ரீகிருஷ்ணன்.
பார்த்தன் - அருச்சுனன்.
பார்த்திப - பத்தொன்பதாவதாண்டு.
பார்த்திவம் - பூமி.
பார்த்திவன் - அரசன்.
பார்ப்பதி - உமையாள்.
பார்ப்பனச்சேரி - பார்ப்பார் குடியிருக்குமிடம்.
பார்ப்பனத்தி, பார்ப்பனி - பிராமணத்தி.
பார்ப்பான் - பிராமணன், யமன்.
பார்ப்பு - பறவைக்குஞ்சு, கோட்டில்வாழ் விலங்கின்பிள்ளை, மான்கன்று, தவழ்சாதிப்பிள்ளை.
பார்வணம் - பூரணை, யாகமிருபத்தொன்றிலொன்று.
பார்வதி - உமை, [இடைச்சி, காவிமண்.]
பார்வை - கண், கவனம், மதிப்பு, பார்த்தல், சூனியமயக்கு.
பாலகன், பாலன் - குழந்தை, [புத்திரன், காப்போன்.]
பாலகி - புத்திரி.
பாலங்கம் - குதிரை, பறவை.
பாலசூரியன் - உதயாதித்தன்.
பாலடை - குழந்தைக்குப் பாலூட்டுகிற சங்கு, [பாலடைச்செடி, பாலுறட்டி (ஓர் தின்பண்டம்.)]
பாலம் - ஆற்றுப்பாலம், [நெற்றி, மாக்கொம்பு, பூமி, மழு.]
பாலரசம் - பொன்னிறம்.
பாலரதி-இளமைப்பருவப்பெண்.
பாலர் - பிள்ளைகள், [இடையர்.]
பாலலீலை - குழந்தைவிளையாட்டு.
பாலனம் - காத்தல், பாற்சோறு.
பாலன் - ஏழுவயதுக்குட்பட்டவன், [காப்போன், இடையன்]
பாலாடை - பாலிற் பிடிக்குமாடை.
பாலி - ஓர்பாஷை, பாற்பசு, கள்.
பாலிகை - முளைப்பாலிகை, [வட்டம், ஆயுதமுனை, பாற்கரண்டி, பெண்பிள்ளை, உதடு.]
பாலிதம் - பெருந்தேக்கு.
பாலித்தல் - அருளுதல், ஈதல்.
பாலியம்* - ஏழுவயசுக்குட்பட்ட பருவம்.
பாலுகம் - கருப்பூரம்.
பாலுறட்டி - வெள்ளுறட்டி.
பாலேடு* - பாலாடை.
பாலை - ஓர் கொடி, ஓர் மரம், ஓர் மீன், பாலைநிலம், ஓர் பண், கடல், புனர்பூசம், பதினாறு வயதிற் குள்ளான பெண், மிருகசீரிடநாள்.
பாலைக்கிழத்தி - துர்க்கை.
பாலைநிலப்பூ-கள்ளி, பாலை, பூளை.
பாலைநிலவிலங்கு - செந்நாய்.
பாலைவனம் - சுரம்.
பால் - பசுவின்பால் முதலியன, மரத்தின் பால், முலைப்பால், [வெண்மை, பக்கம், பாதி, குணம், விதி, பங்கு, உரிமை.]
பால்கறத்தல்* - பால்பிதிர்த்தல்.
பால்தோய்த்தல் - பாலுறைவித்தல்.

பால்பிடிபதம் - பயிர்க்கதிர் பாலடையும் பதம்.
பால்மாறுதல் * - சோம்பலாயிருத்தல்.
பால்முட்டான் - ஓர் மீன்.
பால்மோடிக்கா - ஓர் பூடு.
பால்வெடித்தல் * - நெற்பயிர் பாலடையாது கெட்டுப்போதல்.
பாவகம் - மனத்தோற்றம், அன்பு வெளிப்படுத்துகை, இயல்பு, கருத்து, உருவு, சேங்கொட்டை, தூய்மை, கொலை.
பாவகன் - அக்கினி, சுத்தமானவன், கற்றோன்.
பாவகாரி - பாவஞ்செய்தோன்.
பாவகி - முருகன்.
பாவட்டா, பாவ்ட்டா* - கொடி.
பாவட்டை - ஆடாதோடை.
பாவநாசம் - ஓர் நதி, [பாவநீக்குகை.]
பாவநிவாரணம் - பாவ நீக்குதல்.
பாவமூர்த்திகள் - கீழ்மக்கள், வேடர்.
பாவம் - தீமை, தீவினை, கருத்து, பாவனை.
பாவலர் - புலவர், கவிகள்.
பாவனம் - தூய்து, தூய்மைசெய்வது, தியானம்.
பாவனி - கங்கை, துளசி, பசு.
பாவனை - எண்ணம், தியானம், ஒப்பு, அடையாளம், நடத்தை, மாதிரி.
பாவாடம் - பாவடம் (நாவறுத்தல்.)
பாவாடை - பெண்களாடை, [நிலத்தில் விரிக்குஞ்சீலை.]
பாவாடைப்பூ - இலுப்பைப்பூ.
பாவாணர் - புலவர்.
பாவாத்துமா - பாவி.
பாவாற்றி - நெய்வார்க்குச்சு.
பாவி - தீயோன், பாவியென்னேவல்.
பாவிகம் - ஓரலங்காரம்: அது, சென்றதையும் வரப்போவதையும் அப்பொழுது நிகழ்வதாகச் சொல்லுவது.
பாவித்தல் - பாவனைசெய்தல்.
பாவுகல்* - வரிசைபடப் பரப்பினகல்.
பாவுதல் - தாண்டல், நடுதல், பரப்புதல், விரித்தல், பற்றுதல்.
பாவை - சித்திரப்பாவை, பதுமை, [பெண், மதில், இலக்குமிக்கூத்து.]
பாவோடுதல் - நெய்வார் தொழிலினொன்று.
பாழாக்குதல்*-அழித்தல், கெடுத்தல்.
பாழி - குகை, சிறுகுளம், பகைவரூர், சயனம், முனிவர்வாசம், வலி, தேவர்கோவில், விலங்கின்படுக்கை, அகலம், பெருமை.
பாழ் - சேதம், நஷ்டம், கெடுதி, அழிவு, வீண், சூனியம், வெறுமை, ஆகாயம்.
பாழ்ங்கிணறு-நீரில்லாக் கிணறு.
பாழ்மூலை - நடமாட்டமில்லாத மூலை.

பாழ்வெளி - அந்தரவெளி, சூனியவெளி.
பாளச்சீலை* - மருந்துபூசிக் காய வைத்தசீலை.
பாளபந்து - தேவநாகர எழுத்து.
பாளம் - சீலையின் கிழிவு, வெடிப்பு, உலோகக்கட்டி.
பாளயம், பாளையம் - கூடாரம், [குறுநிலமன்னரூர், படை.]
பாளாசக்கயிறு - குதிரையின் காலுக்குக் கட்டுங்கயிறு.
பாளி - அடையாளம், பாசறை.
பாளிதம் - கண்டசருக்கரை, கருப்பூரம், பாற்சோறு, பட்டுச்சீலை, குழம்பு.
பாளை* - கமுகு தெங்கு பனை முதலியவற்றின் பாளை.
பாளையகாரன் - அரசர்க்குக் கீழ் சில சேனையோடு ஒவ்வோர் நிலப் பிரிவுக்கு அதிகாரியாயிருப்பவன், படைத்தலைவன்.
பாறு - பருந்து, மரக்கலம்.
பாறை - கற்பாறை முதலியன, திட்டை.
பாற்கடற்பிறந்தோள் - இலக்குமி.
பாற்கரம் - ஒரு உபநிடதம், பொன், வீரம்.
பாற்கரன், பாஸ்கரன்-சூரியன், தீ, வீரன்.
பாற்காரன்* - பால்விற்போன்.
பாற்குனம், பாற்குனி - பங்குனி மாதம், உத்திரநாள்.
பாற்கெண்டை - ஓர் மீன்.
பாற்சொற்றி, பாற்சோற்றி-ஓர் பூண்டு.
பானகம்* - ஓர்வகை நீர்மோர்.
பானம்பண்ணுதல் - குடித்தல்.
பானல்-கருங்குவளை, கள், கடல், குதிரை, வயல், மருதநிலம்.
பாஞள் - பாதிநாள்.
பானீயம் - நீர், பருகுவன.
பானு - சூரியன், ஒளி, கிரணம்.
பானுபலை - வாழை
பானுமைந்தன் - கன்னன், சனி, சுக்கிரீவன், நமன்.
பானுவாரம் -ஞாயிற்றுக்கிழமை.
பானை* - மிடா.
பான்மடை - பாற்சோறு (சிலப். 15 : 117).
பான்மை - குணம், தகுதி, தன்மை.

## பி

பிகபந்து - மாமரம்.
பிகம் - குயில்.
பிகு, பிகுவு* - பெலன், இறுக்கம், பெருமை (கர்வம்.)
பிக்கு - பிசகு, குழப்பம்.
பிங்கதிருட்டி - சிங்கம்.
பிங்கம் - பொன்மை கலந்த சிவப்பு.
பிங்கலந்தை - பிங்கலன் செய்த நிகண்டு.
பிங்கலம் - அரிதாரநிறம், பித்தளை, பொன், பொன்மை நிறம், ஆந்தை, குரங்கு, பிங்கலந்தை, வடக்கு.
பிங்கலன் - ஓர் நிகண்டாசிரியன், குபேரன், சிவன், சூரியன், தீ.

பிங்கலை - தசநாடியினொன்று அஃது வலமூக்கில் நிற்பது, ஆந்தை, பார்வதி.
பிங்கள - ஐம்பத்தோராவதாண்டு.
பிங்கலை - தென்றிசையானைக் குப் பெண்யானை.
பிங்காசம் - ஓர்வகைப்பொன்.
பிங்காசி - அவுரி.
பிசகு* - தப்பிதம், ஒவ்வாமை.
பிசகுதல் - தவறுதல்.
பிசங்கம் - பொன்மைகலந்த சிவப்பு.
பிசங்கல் - நலங்கல்.
பிசண்டம், பிசிண்டம் - மிருகத் தின்முதுகு, வயிறு.
பிசம் - இறகு.
பிசல் - எருத்துத்திமில்.
பிசறுதல்* - கலத்தல்.
பிசனம் - செஞ்சந்தனம்.
பிசாசம், பிசாசு - பேய்.
பிசாசன் - பேய்க்குணமுடையோன்.
பிசாச்சி - சடாமாஞ்சில்.
பிசான் - அழுக்கு, பிசுபிசுப்பானது.
பிசி - அரும்பொருள், சோறு, பொய்.
பிசிதம் - ஊன், நீர், வேம்பு.
பிசிர் - துளிமழை.
பிசினம் - கோட்சொல்லல்.
பிசினன், பிசினறி - உலோபி.
பிசின்-மரப்பிசின், [சாம்பிராணி, வெட்டுக்குருத்து,பஞ்சினூல்]
பிசுக்கு - இலவசமாகச் சிறிது பொருளைப் பெறுதல்.
பிசுமந்தம் - வேம்பு.
பிசுனம், பிசுனித்தனம் - உலோபத்துவம்.
பிசுனன்*-உலோபன், கோளன், பொய்யன்.
பிசைதல்* - சேர்த்துக்கலத்தல்.
பிச்சடம் - ஈயம், துத்தநாகம்.
பிச்சப்பழம் - வத்தகுப்பழம்.
பிச்சம் - குடுமி, பீலிக்குஞ்சம், முடி, இறகு, வெண்குடை.
பிச்சர் - பித்தர்.
பிச்சாடனம் - இரக்குதல்.
பிச்சாடிக்கயிறு - பாளாசக்கயிறு.
பிச்சாபாத்திரம்* - இரப்போர் கலம்.
பிச்சி - ஓர் மல்லிகை, சிறுசண்பகம், ஒரு பெண்பேய்.
பிச்சு - பித்து.
பிச்சை, பிட்சை - இரப்பு.
பிஞ்சகம் - கொலை, தலைக்கோலம், இறகு.
பிஞ்சகன்-சிவன், கொலைகாரன்.
பிஞ்சம் - இறகு, கொலை.
பிஞ்சரம், பிஞ்சலம் - அரிதாரம்.
பிஞ்சனம் - நூலெஃகும் வில்.
பிஞ்சு - இளங்காய், முற்றாமை.
பிஞ்சை - பஞ்சு, மஞ்சள்.
பிஞ்ஞகம் - தலைக்கோலம்.
பிஞ்ஞகன் - சிவன்.
பிஞ்ஞை - நப்பின்னை.
பிடகம் - நூல், புத்தகமம், பெட்டி, பிச்சை.
பிடகன் - புத்தன், வைத்தியன்.
பிடங்கு - ஆயுதங்களின் பிற்பக்கம்.

பிடரி, பிடர், பிடர்த்தலை - புறங்கழுத்து.
பிடவம், பிடவு - ஓர் செடி, முதுகு.
பிடாரன் - பாம்புபிடிப்போன், [குறவன், வைத்தியன்.]
பிடாரி* - காளி.
பிடாரிச்சி - குறப்பெண்.
பிடி - பிடியென்னேவல், கைப்பிடி, பற்றுகை, நால்விரல் கொண்ட அளவு, [ஒட்டகம், யானை, கவரி இவற்றின் பெண்.]
பிடிகம் - பிள்ளைக்கைவளை.
பிடிகொடுத்தல் - இடம்கொடுத்தல்.
பிடிச்சராவி* - கம்மாளர்கருவியி ெனென்று.
பிடித்தபிடி* - விடாப்பிடி.
பிடித்தம் - பிடிக்கும் காசு.
பிடித்தல் - உடன்படல், பூ காய் முதலிய பற்றல், சார்தல், பற்றல், வசமாக்கல்.
பிடிபடுதல்* - அகப்படுதல்.
பிடிப்பு - பிடித்தல், சேர்மானம்.
பிடிமானம் - அன்பான பற்று, உறுதி, சேர்மானம்.
பிடிவாதம்* - கொண்டது விடாமை, வைராக்கியம்.
பிடுக்கு - பீசம், [பனம்பூ.]
பிடுங்குதல் - கவர்தல், பறித்தல்.
பிட்குதல்* - பிள்ளச்செய்தல்.
பிட்சாடனம் - இரத்தல்.
பிட்டம் - சகனம், [இடித்தமா, சிற்றுண்டி.]
பிட்டல் - பிட்குதல்.
பிட்டி - சிறுகூடை.
பிட்டு - சிற்றுண்டி, [தினைமா.]
பிட்டை-அண்டவாதம், இலத்தி.
பிணக்கம் - மாறுபடல்.
பிணக்காடு-சுடுகாடு, [யுத்தகளம்.]
பிணக்கு - சண்டை செய்தல், நெருங்கல், மாறுபடல்.
பிணந்தின்னி - மாமிசபேதி.
பிணம் - சவம், [பிசாசம்].
பிணர் - சருச்சரைவடிவு, கோங்கு.
பிணவு, பிணா - விலங்கின் பெண் பொது, நாய், பன்றி, புல்வாயிவற்றின் பெண்.
பிணி - நோய், [ஊடை நூலைப் பிணிக்கு நூற்படை, பிணியென்னேவல், கட்டு, துன்பம்.]
பிணித்தல் - கட்டல்.
பிணிமுகம் - மயில், அன்னம், பறவைப் பொது.
பிணியாளி - நோயாளி.
பிணை - உடன்பாடு, [பூமாலை, மான், பிணையென்னேவல், ஈடுப்பொருள், ஆசை.]
பிணைத்தல்-இணைத்தல், கட்டல்.
பிணைப்படுதல் - கட்டுப்பாட்டிற் குள்ளாதல்.
பிணையல் - கதவு முதலியவற்றி விடுமிணைப்புச்சலாகை, இரட்டைக்கை, பின்னியமாலை.
பிண்டகருமம் - பிதிர்பூசை.
பிண்டகாப்பு - சோறு.
பிண்டதானம் - பிண்டமிடுதல்.
பிண்டம்-கருப்பத்திலுள்ள பிண்டம், சோறு,[ உடல், உருண்டை, கவளம், கூட்டம், தொ

கை, பிச்சை, போசனம், மூல பதம், விலா, வெண்ணெய்.]
பிண்டம்விழுதல்-கருப்பம் விழுதல்.
பிண்டாரி - கொள்ளைக்காரன்.
பிண்டி - அசோகமரம், குவிக்கப்பட்டது, கூட்டம், தினைமா, தொகுக்கப்பட்டது, நென்மா, பிண்ணாக்கு, புனர்பூசம், ஒற்றைக்கை.
பிண்டிகரணம், பிண்டீகரணம் - உருண்டையாக்கல்.
பிண்டிகை - ஆசனம், சில்வினுட்சுருள்.
பிண்டித்தல் - தொகுத்தல்.
பிண்டிபாலம், பிண்டிவாலம் - எறியாயுதம்.
பிண்ணாக்கு* - எள் முதலியவற்றினரைப்பு.
பிண்ணாக்குமாடன் - மதியீனன்.
பிதற்றல்* - பலகாற்பேசல்.
பிதா - தந்தை, [கடவுள், அருகன், சிவன், பெருநாரை.]
பிதாமகன் - பிரமன், பாட்டன்.
பிதிர் - தந்தை வழியின் மூதாக்கள், திவலை, நொடி, பராகம், பிதிரென்னேவல், கதை.
பிதிர்கடன், பிதிர்கருமம் - சிராத்த முதலிய தென்புலத்தோர் கடன்.
பிதிர்தல் - உதிர்தல், சிதறல்.
பிதிர்த்துரோகம் - பிதிர்கடமை செய்யாதுவிடல்.
பிதிர்நாள் - அமாவாசி, இறந்தோர்நாள், மகநாள்.
பிதிர்பிண்டம் - இறந்தோர்க்கிடு மமுது.
பிதிர்வழி - பிதாவமிசம்.
பிதிர்வாக்கியபரிபாலனம் - தந்தையின் சொல்லைத் தவறாது நடத்துதல்.
பிதுக்குதல்* - பிதுங்கச்செய்தல்.
பிதுங்குதல் - உள்ளடக்காமற் புறப்படல்.
பிதுரு, பிதுர் - பிதிர்.
பித்தகம் - நவமணிகுற்றத்தொன்று : அது கிளிநிறம்.
பித்தகாசம் - ஒரு காசநோய்.
பித்தகாமாலை* - ஓர் நோய்.
பித்தசாந்தி - பொன்னாங்காணி.
பித்தசூடு - பித்தகாரகம் (பித்தகாங்கை.)
பித்தநாடி - நடுவிரனாடி.
பித்தமயக்கம் - கிறுகிறுப்பு
பித்தம் - மயக்கம், முப்பிணியிலொன்று, கூத்தின்விகற்பம்.
பித்தலாடகம், பித்தலாட்டம்* - மோசமான செய்கை.
பித்தவாயு - உஷ்ணவாயு.
பித்தன்-பைத்தியகாரன், [சிவன், வைரவன், கள்ளன்.]
பித்தாதிகாரம், பித்தாதிக்கம் - பித்தமேலீடு.
பித்தி-சுவர், துண்டு, ஒதுக்கிடம்.
பித்திகை - சிறுசண்பகம், சுவர்.
பித்து - பித்தம்.
பித்தை - ஆண்மயிர்.
பிந்து - புள்ளி, விந்து.
பிந்துசாரம் - ஓர் விஷவைத்திய நூல்.

பிந்துதல் - பிற்படுதல்.
பிபீலி, பிபீலிகை - எறும்பு.
பிப்பலம் - அரசமரம்.
பிப்பலி, பிப்பிலி - திப்பிலி.
பிம்பம் - உருவின் சாயை, சந்திர சூரியாதிமண்டலம், கமண்டலம், கோவைக்கனி.
பிய்ச்சல் - பிய்த்தல்.
பிய்த்தல் - கிழித்தல், பிட்குதல்.
பிரகஸ்பதி - தேவகுரு.
பிரகடனம் - விளம்பரம்.
பிரகதாரண்ணியம்-உபநிடதமுப் பத்திரண்டினொன்று.
பிரகரணம் - முகவுரை, விஷய முடிவு, அத்தியாயம்.
பிரகலே - கீதவுறுப்புளொன்று. (சிலப். 3.150 உரை.)
பிராகசத்தி - அப்பிரகம்.
பிரகாசம் - ஒளி, [விளக்கம், விரிவு, வெய்யில், வெண்கலம்.]
பிரகாமியம் - நிறைவு, அட்டமா சித்தியிலொன்று.
பிரகாரம் - கோயில் முதலியவற்றின் வீதி, சுற்றுமதில், தன்மை, வழி, விதம்.
பிரகிருதி - பஞ்சபூதம், செனன குணம், இயல்பு, காரணம், பிரபஞ்சமூலமாயிருக்குமாயை, பெண், பகுதி.
பிரக்கியம் - அறிவு.
பிரக்கியாதம், பிரக்கியாதி* - கீர்த்தி.
பிரக்கினே - உணர்வு.
பிரசங்கம் - விரித்துப் பொருளுரைத்தல், பகிரங்கப்படுத்துகை, தெளிவு, கூட்டம்.
பிரசங்கி - வியாக்கியானி.
பிரசண்டமாருதம் - பலத்த காற்று.
பிரசண்டம் - வேகம், மிகுதி, வீரம், வலி, மிகுவெப்பம்.
பிரசண்டவேகம் - அதிவேகம்.
பிரசண்டன் - வீரன்.
பிரசம் - கள், தேன், வண்டு, தேனீ, தேன்கூடு.
பிரசவம் - பிள்ளைப்பேறு.
பிரசன்னம் - காட்சி, தோற்றப்படுதல், தெளிவு, பெண்குறி.
பிரசாதம் - நிவேதனப்பொருள், [பிரார்த்தனை, பிள்ளைப்பேறு, அமுதம், அருள்.]
பிரசாபதி - அரசன், ஆண்குறி, பிதா, பிரமன்.
பிரசாபத்தியம்-பெண்ணின் சுற்றத்தாரும் ஆண்மகனின் சுற்றத்தாரு மனமொத்துத் தீமுன்னர்க் கொடுக்கும் விவாகம்.
பிரசாரணே - பிரஸ்தாபம்.
பிரசாரம் - வழக்கம், வேங்கை மரம், நடை, போதல்.
பிரசித்தம் - அறிவிப்பு, கீர்த்தி.
பிரசித்தி* - புகழ்.
பிரசினம், பிரசினே - கேள்வி.
பிரசுரம்* - அறிவிப்பு.
பிரசுரன் - சுக்கிரன்.
பிரசூதகாலம் - பேறுகாலம்.
பிரசை - குடிசனம், பிள்ளை.
பிரசோற்பத்தி- ஐந்தாவதாண்டு.
பிரச்சனே, பிரச்சினே - கேள்வி.
பிரஞத்துவம் - அறிவு, உணர்ச்சி.
பிரஞ்ஞை - அறிவு.
பிரடை* - முறுக்காணி.

பிரஷ்டம் - தள்ளுபடி.
பிரஷ்டன் - துர்க்குணன்.
பிரட்டு * - புரட்டு.
பிரணயகலகம் - கலவியிற் பிணங்கல்.
பிரணவம் - ஓங்காரம்.
பிரண்டை* - பரண்டை.
பிரதட்சணம்* - வலம்வருதல்.
பிரதமகாலம் - விடியற்காலம்.
பிரதமம் - ஆரம்பம், முதன்மை.
பிரதமை - முதல்திதி, கடுக்காய்.
பிரதரம் - அம்பு.
பிரதாபம் - கீர்த்தி, பெருமை, மகிமை, வீரம், பிரகாசம்.
பிரதானம்* - முக்கியம்.
பிரதானி - அதிகாரி.
பிரதி - எழுதிச்சேர்த்தல், பதில்.
பிரதிகாரகன்-வஞ்சகன், வாயில் காப்போன்.
பிரதிகூலம் - கைகூடாமை.
பிரதிக்கினை - அறிக்கையிடுதல், அத்தாட்சி, வாக்குத்தத்தம்.
பிரதிட்டை, பிரதிஷ்டை - தாபனம், சடங்குமுடித்தல்.
பிரதிதினம்* - நாடோறும்.
பிரதிதொனி - எதிரொலி.
பிரதிபந்தகம், பிரதிபந்தம் - கட்டுப்பாடு, தடை.
பிரதிபிம்பம் - கண்ணாடி முதலியவற்றிற்றோன்றும்போலியுரு.
பிரதிமை - விக்கிரகம்.
பிரதியுத்தாரம் - மறுமொழி.
பிரதியுபகாரம் - கைம்மாறு.
பிரதிலோமன் - இழிவுயர்வாண் பெண்ணிற் பிறந்தோன்.
பிரதிவாதி - எதிர்வாதி.
பிரதிவேசம் - அயல்வீடு, அயல்.
பிரதீசி - மேற்கு.
பிரதேசம் - இடம்.
பிரதை - குந்திதேவி, ஈகை.
பிரதோஷகாலம் - திரயோதசித் திதியில் அஸ்தமனத்துக்கு முன்னும் பின்னும் மூன்றே முக்காலுநாழிகை.
பிரத்தல் - எழுத்திலா ஒலி.
பிரஸ்தாபம்* - வெளிப்படுத்தல், புகழ்ச்சி.
பிரஸ்தாபனை - துவக்கம், வெளிப்படுத்தல்.
பிரத்திட்சம், பிரத்தியட்சம் - காணத்தக்கது.
பிரத்தியக்கு - மேற்கு, பிரிவு.
பிரத்தியயம் - வடமொழி விகுதி.
பிரத்தியாகாரம் - உபாதியை நீக்கி யுண்ணேக்கல் இஃது அட்டயோகத்தொன்று.
பிரத்தியாபாசம் - ஓரளவை.
பிரத்தியேகம் - தனிமை.
பிரபஞ்சம் - உலகம், [விசாலம், சேனை, மாயை, கூட்டம்.]
பிரபஞ்சவியாபாரம் - இலௌகிகக் காரியம்.
பிரபஞ்சவிருத்தி - உலகச்செய்கை, மாயாகாரிய விருத்தி.
பிரபஞ்சனன் - காற்று.
பிரபந்தம் - பாமாலை.
பிரபந்நன் - சரணடைந்தவன்.
பிரபலம், பிரபலியம் - கீர்த்தி, முக்கியம்.
பிரபலன் - புகழாளன்.
பிரபாகரம் - ஆறுசாத்திரத்தொன்று.

பிரபாகரன் - சூரியன், சந்திரன், அக்கினி, ஓர் நூலாசிரியன்.
பிரபாகீடம் - மின்மினி.
பிரபாவம்*-மகத்துவம், மகிமை, கீர்த்தி.
பிரபு* - அதிகாரி, பெருமையிற் சிறந்தோன், கொடையாளி.
பிரபுத்துவம் - பெருந்தன்மை.
பிரபுலிங்கலீலை - ஓர் சைவநூல்.
பிரபை - திருவாசி, ஒளி, குபேரனகரம், தண்ணீர்ப்பந்தல்.
பிரபோதம் - அறிவு, புத்தி.
பிரப்பங்கூடை* - ஓர் கூடை.
பிரப்பு-பெருண்டி, ஒருகலத்திற் பல்லுணவின் பரப்பு.
பிரமகத்தி* - பிராமணனைக்கொன்ற பாவம்.
பிரமகற்பம் - பிரமன்வாழ்நாள் அஃது ஆயிரங்கோடாகோடி.
பிரமகாதகன் - பிராமணனைக் கொன்ற பாதகன்.
பிரமகைவர்த்தகம் - அட்டாதசபுராணத்தொன்று.
பிரமக்கியானம் * - பிரமஞானம்.
பிரமசரியம்-கற்று விரதங்காத்து விவாகமின்றியிருக்கும் நிலை.
பிரமசாரி - பிரமசரிய மனுட்டிப்போன், [வீட்மொசாரி.]
பிரமசூத்திரம் - ஓர் நூல், முப்புரிநூல்.
பிரமசைதன்னியம் - கடவுள், மூலகாரணம்.
பிரமஞானம் - தேவவறிவு.
பிரமணம் - சுழற்சி.
பிரமதண்டு - ஓர் பூடு, [பிராமணர்க்குரிய கோல்.]
பிரமதேவன்* - பிரமா.
பிரமநிருவாணம் - கடவுளூடனொன்றியிருத்தல்.
பிரமபத்திரம், பிரமபத்திரி-புகையிலை.
பிரமபுரம் - சீகாழிப்பதி.
பிரமமரிசம் - வெள்ளைமிளகு.
பிரமம் - ஆதிகாரணம், உபநிடதமுப்பத்திரண்டிலொன்று, கடவுள், முத்தி, கலக்கம், தத்துவம், ஞானம், பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க் கொடுக்கும் மணம், தவசு, மயக்கம், சுழற்சி.
பிரமரந்திரம் - சிரசினுச்சித்துவாரம்.
பிரமரம் - வண்டு.
பிரமராட்சதன்* - அகால மரணமடைந்த பிராமணனுவியெடுக்கு மிராட்சதப்பேய்.
பிரமரி - கூத்தின் விகற்பம், சுழலல்.
பிரமலிபி - பிரமாவினெழுத்து.
பிரமலோகம் - சத்தியலோகம்.
பிரமவித்து - ஞானிகளிலோர் வகையினர்.
பிரமனாள் - உரோகணிநாள்.
பிரமா - பிரமதேவன்.
பிரமாணஞ்செய்தல்* - சத்தியம் பண்ணல்.
பிரமாணம் - அளவு, எல்லை, முதல்வேதம், உண்மை, ஆணை.
பிரமாணிகம், பிரமாணிக்கம் *- ஆணை.
பிரமாண்டநாயகன் - கடவுள்.

பிரமாண்டம் - மிகப் பெரியது, [பதினெண் புராணத்தொன்று, உலகம்.]
பிரமாதம் - அசட்டை, மோசம், வருத்தம், கொல்லல்.
பிரமாதி-பதின்மூன்றாவதாண்டு.
பிரமாதீச - நாற்பத்தேழாவதாண்டு.
பிரமாத்திரம், பிரமாஸ்திரம்-பிரமபாணம்.
பிரமாநந்தம் - மோட்சவின்பம்.
பிரமாந்தரம் - உயிர்நிலை.
பிரமாயுதம் - பத்திலட்சம்.
பிரமிப்பு - திகைப்பு, அதிசயம்.
பிரமியம்-ஓர் பூண்டு, ஓர் வியாதி.
பிரமுகம் - மிக்க நல்லது.
பிரமேகம் - மேகவியாதி.
பிரமேயம் - சமுசயம், அறியப்படுதல், ஆன்மா.
பிரமை* - அறியாமை, மயக்கம்.
பிரமோதம் - உவகை.
பிரமோதூத - நான்காவதாண்டு.
பிரமோற்சவம் - கோயில்களில் வருஷத்துக்கொருதரம் நடக்கும் விசேஷ உற்சவம்.
பிரம்பு - சூரல், [வரம்பு, தேர் விமிடம்.]
பிரயத்தனம் - முயற்சி.
பிரயாகை - ஒரு புண்ணியநதி.
பிரயாசம், பிரயாசை - முயற்சி, வருத்தம்.
பிரயாணம் - பயணம்.
பிரயுதம் - பத்திலட்சம்.
பிரயோகம் - காரியம், சாதனை, முயற்சி, மூலவாக்கியம், உதாரணம், உவமானம்.
பிரயோகித்தல் - செலுத்துதல், வழங்கல்.
பிரயோசனம்* - பலன்.
பிரலம்பம் - அசைவு.
பிரலாபம் - துக்கம், புலம்புகை.
பிரவருத்தனம் - முயற்சி.
பிரவருத்தித்தல் - முயலுதல்.
பிரவாகம் - பெருக்கு, குளம்.
பிரவாலம் - இளந்தளிர், மூளை, வீணைத்தண்டம்.
பிரவாளம் - பவளம்.
பிரவிடை - பெண்பருவ நான்கினென்று;அது மத்தியபருவம்
பிரவேசம் - ஆரம்பம், முயற்சி.
பிரவேசனம் - வாயில்.
பிரளயகாலம் - உலகமுடிவு.
பிரளயம் - வெள்ளம், [படையிலோர் தொகை, அழிவுகாலம்.]
பிரளல் - புரளல், எழுத்திலாவோசை.
பிராகாமியம் - அட்டசித்தியினென்று-அஃதுகுறைவின்றியிருத்தல்.
பிராகாரம் - சுற்றுமதில்.
பிராகிருதம் - ஓர் பாஷை, அழியத்தக்கது.
பிராகிருதன் - உண்மையறிவில்லாதவன்.
பிராசம் - எதுகை.
பிராசயம் - ஆதி.
பிராசாரம் - ஒழுக்கத்தவறு.
பிராசி - கிழக்கு, முன்.
பிராசீனம் - கிழக்கு, பழமை.
பிராட்டி - பெருமாட்டி, தலைவி.

பிராணசங்கடம் - சீவன் போகத் தக்க பெருந்துயர்.
பிராணசினேகிதன் - உயிர்த்துணைவன்.
பிராணத்தியாகம் - சீவனைக்கொடுத்தல்.
பிராணநாதன், பிராணநாயகன் - கடவுள், கணவன்.
பிராணநாயகி - மனைவி.
பிராணம் - சீவன், சுவாசம், [காற்று.]
பிராணன்* - உயிர், தசவாயுவினொன்று: அஃது இருதயத்தியங்குவது.
பிராணயாமம் - அட்டாங்க யோகத்தொன்று, அஃது: பிராணவாயுவை இரேசகபூரக கும்பகஞ்செய்தல்.
பிராணி - சீவனுடையது.
பிராணேசன் - கணவன்.
பிராணேசை - மனைவி.
பிராதக்காலம் - விடியற்காலம்.
பிராதம்மியம் - முதன்மை.
பிராதா - அண்ணன்.
பிராது* - முறைப்பாடு.
பிராத்தனை* - பிரார்த்தனை (மன்
பிராந்தன் - மூடன். [ருட்டு.)
பிராந்தி - மயக்கம், நிலையின்மை, உறுதியின்மை, சுழலல்.
பிராந்தியம் - சுற்றுப்புறம்.
பிராந்து* - பருந்து.
பிராப்பியம் - பெறத்தக்கது, பேறு.
பிராமணம் - வேதப்பகுதி.
பிராமணன் - சீவன்முத்தன், பார்ப்பான்.
பிராமணி - பார்ப்பனி, சத்தமாதருளொருத்தி.
பிராமி - சரஸ்வதி.
பிராமியம் - தலைப்புறம்.
பிராயச்சித்தம் - சாந்தி, நிவிர்த்தி, தண்டனை, பரிகாரம்.
பிராயம் - வயது, [பக்குவம்.]
பிராய் - ஓர் மரம்.
பிராரம்பம் - ஆரம்பம்.
பிரார்த்தகன்மம்-அனுபவகர்மம்.
பிரார்த்தனம், பிரார்த்தனை - மன்ருட்டு, விண்ணப்பம்.
பிரார்த்துவதேகம் - வினைப்பகுதியின்படி பெற்றவுடம்பு.
பிராவம் - கொல்லை. (சது.)
பிராவிருதம் - காணிக்கை, முக்
பிராறு - நீந்துபுனல். [காடு.
பிரான் - எப்பொருட்கு மிறைவன், கடவுள், , திருமால்.
பிரிதல் - அகலல், போகல்.
பிரிதி - பிரியம் "கண்டார் மனமேவிய பிரிதியானை"(தேவா. 1208:5)
பிரித்தல் - நீக்கல்.
பிரிமணை* - புரிமணை.
பிரியகம் - கடம்பு, வேங்கை.
பிரியதரிசினி - வன்னிமரம்.
பிரியம்* - அன்பு, விருப்பம்.
பிரியன் - கணவன், பிரியமுள்ளவன்.
பிரியாது* - பிராது.
பிரியாம்பு - மாமரம். (சங். அக)
பிரியை - மனைவி, பெண்.
பிரிவினை - ஒவ்வாமை, வேறுபாடு.

பிரிவு - பிரிதல், வேற்றுமை, வெறுப்பு.
பிரீதி* - உருக்கம், பிரியம்.
பிருகதாரணியம் - உபநிடதமுப்பத்திரண்டிலொன்று.
பிருகதி - கத்தரிச்செடி.
பிருகு - பிருங்கிரிஷி, [சிவன், சுக்கிரன், இளங்கிழங்கு.]
பிருகுடி - புருவம்.
பிருங்கம் - வண்டு.
பிருங்கராஜம் - கரிசாலை.
பிருடை - சுழலாணி.
பிருட்டம் - பின்பக்கம், பிடரி.
பிருதிவி - பூமி.
பிருதிவிலிங்கம் - மண்ணுலாய லிங்கம். அது காஞ்சியிலுள்ளது.
பிருது - சூரியகுலத் தரசருளொருவன், விருது.
பிருதுமானம் - யானைக் கொம்பினடு.
பிருதாதரம் - ஆட்டுக்கடா.
பிருதை - பிரதை.
பிருத்தியர் - அடிமைகள்.
பிருந்தம் - துளசி, கூட்டம்.
பிருந்தை - சலந்தரன் மனைவி, துளசி.
பிரேதகருமம் - அபரக்கிரியை.
பிரேதம் - பிணம், [தெற்கு, பிசா
பிரேயம் - கள். [சம்.]
பிரேரகன் - காரியம் நடத்துவோன்.
பிரேரணம் - அனுப்பல், நடத்துதல், சத்தியினியக்கம்.
பிரை - உறைமோர், [அரைப் பங்கு.]
பிரைக்காற்சின்னி - அரைக்காற் படி.
பிரோகம் - முடிச்சு. (யாழ். அக)
பிரௌடம் - கம்பீரமானது.
பிர்க்கா - தாலுக்காப்பிரிவு, உடம்பை மறைக்குமொரு அங்கி.
பிலகரி - ஓரிராகம்.
பிலகாரி - பெருச்சாளி.
பிலஞ்சுலோபம் - எறும்பு.
பிலத்துவாரம் - நிலவறை, பாதாளவழி.
பிலம் - குகை, வளை, கீழறை.
பிலம்பி, பிலிம்பி - பிலிஞ்சி.
பிலவகம் - குரங்கு, தேரை.
பிலவங்க - நாற்பத்தோராவதாண்டு.
பிலவங்கம் - குரங்கு, தேரை, மான், ஒரு விஷசெந்து.
பிலன் - எறும்பு.
பிலா - பலாமரம்.
பிலாக்கு - ஓர் மூக்கணி.
பிலாச்சை* - கடற்றவளை.
பிலிஞ்சி - புளிச்சைக்காய்.
பிலிற்றல் - கொப்பளித்தல்.
பிலுக்கன் - ஆடம்பரமுடையோன்.
பிலுக்கு* - ஆடம்பரம்.
பில்கல் - கொப்புளித்தல்.
பில்லடை - இடியப்பம்.
பில்லி - சூனியவித்தை, [ஒரு துஷ்ட தேவதை, பூனை.]
பில்லை* - வில்லை.
பிழக்கடை* - கோடிப்புறம்.
பிழம்பு - தம்பம், திரட்சி.
பிழார் - இறைகூடை.
பிழி - கள்.

பிழிதல் - சாரம்வடித்தல்.
பிழுக்கை - விட்டையெரு.
பிழை - குற்றம், தவறு, [பொய்.]
பிழைத்தல் - சீவனம்பண்ணு தல், [பிழைசெய்தல்.]
பிழைபாடு - குற்றம்.
பிழைப்பு* - சீவனம்.
பிளச்சு - பிளாச்சு.
பிளப்பு* - வெடிப்பு.
பிளவை* - வெடித்த புண்.
பிளாச்சு - பனங்கிழங்கின் பிள வு, சிராய், வரிச்சல்.
பிளிர்த்தல் - கொப்புளித்தல்.
பிளிறல் - ஒலித்தல், பேசலா லெழுமொலி, கிளைக்கை.
பிளிறு - சேறு, எழுத்தில்லா வோசை, பிளிறென்னேவல்.
பிள்ளை - குழந்தை, வெள்ளாள ரில் ஓர் பட்டப்பெயர், [இள மையோன், தென்னம்பிள்ளை, நாகணவாய்ப்புள் கரிக்குருவி காகம் கிளி கீரி குரங்காதி கோட்டில்வாழ் விலங்கின் பிள்ளை.]
பிள்ளைக்கிணறு* - உட்கிணறு.
பிள்ளைத்தமிழ் - பிள்ளைக்கவி.
பிள்ளைத்தாய்ச்சி* - கருப்பஸ்திரீ.
பிள்ளைத்தேங்காய் - நாற்றுத் தேங்காய்.
பிள்ளைப்பூச்சி* - ஓர் பூச்சி.
பிள்ளைப்பேறு* - மக்கட்பேறு.
பிள்ளையாண்டான்* - வாலிபன்.
பிள்ளையார் - விநாயகன், [சம்பந் தன்.]
பிள்ளையார்சுழி - ஊமையெழு த்து.
பிள்ளைவங்கு - பாய்மரம் நிறுத் தும் குழி.
பிறகு - பின்பு, [பின்புறம்.]
பிறக்கம்-ஒளி, உயர்ச்சி, குவியல்.
பிறக்கு - வேறு. (சிலப்.)
பிறங்கல் - அரசன், ஒலித்தல், ஒளிசெய்தல், சிறுமலை, பெரு மை, நிறைவு, மிகுதி.
பிறந்தகம் - தாய்மனை.
பிறந்தகோலம் - நிருவாணம்.
பிறந்தவம் - பிறப்பு (சது.)
பிறப்பிடம்* - பிறந்தவிடம்.
பிறப்பில்லான் - கடவுள்.
பிறப்பு - உற்பத்தி, தோற்றம், அச்சம், நெருக்கம்.
பிறப்புவாசி* - சென்மசுபாவம்.
பிறர் - அயலோர், அன்னியர்.
பிறர்மனைநயத்தல், பிறர்முகம் பார்த்தல்-பரதாரம் விரும்பல்.
பிறன் - அயலவன், மற்றவன்.
பிறுண்டு - வேற்றிடம்.
பிறுண்டுதல் - நகத்தாற்கீறல்.
பிறிது - வேறு.
பிறிவு - பிரிவு. "பிறிவினையறியா நிழலதுபோல" (திருவாச. 4 : 78.)
பிறை* - இளஞ்சந்திரன்.
பிறைக்கொழுந்து - இளம்பிறை.
பிறைசூடி - சிவன். [ஞென்று.
பிறைச்சிந்தாக்கு - கழுத்தணியி
பிறைமலர் - அகத்தி. (சங். அக)
பிறையிரும்பு - அரிவாள். (சீவ. [சிந். 2320.)
பிறைவடிவு - வில்வளைவு.
பிற்பாடு - பிறகு.
பினத்துதல்* - பிதற்றுதல்.

பிநாகபாணி - சிவன்.
பிநாகம் - சிவன்வில், திரிசூலம், மண்மாரி, மணிமாலை.
பிநாகி - பெண்ணையாறு, சிவன்.
பின்காட்டுதல்* - தோற்றோடுதல்.
பின்பனி - ஆறுபருவத்தொன்று அஃது மாசி பங்குனி.
பின்பு - பின்.
பின்புத்தி * - காரிய நிகழ்ச்சிக்குப் பின்னே யுண்டாகுமறிவு.
பின்வாங்கல்* - தோற்றல்.
பின்றலை - தலையின் பின்புறம்.
பின்றை - பின்னைநாள்.
பின்னகம் - பேதம், மயிர்முடி.
பின்னடைப்பன் - பசுவுக்கு மூத்திரத்தைத் தடுக்குமொரு பிணி.
பின்னந்தண்டு - பின்காற் சீப்பு.
பின்னம் - சிதைவு, தவறு, பழுது, வேற்றுமை.
பின்னர் - பிறகு.
பின்னல் - சடை, பின்னியது, [பிசகு.
பின்னவன் - தம்பி.
பின்னிடுதல் - தோற்றல், பின்னே போதல்.
பின்னிடைதல்* - பின்னிடுதல்.
பின்னும்* - மேலும்.
பின்னை - இலக்குமி, இளையவள், பின்பு.
பின்னைகேள்வன் - திருமால்.

## பீ

பீ - மலம், [அச்சம், ஓரெழுத்து.]
பீக்கருவேல் - ஓர் மரம்.
பீக்கலாட்டம் * - பித்தலாட்டம்.
பீக்கிலாத்தி - சங்கங்குப்பி.
பீங்கான்* - ஓர் பாண்டம்.
பீசம் - விதை, மூலம், தாமரைப் பூச்சுருள், அண்டம், ஆண்குறி, சுக்கிலம், சந்ததி.
பீசாட்சரம் - மூலவெழுத்து.
பீச்சல்* - கழிச்சல்.
பீச்சாங்கத்தி - சிறிய கத்தி.
பீச்சாங்குழல், பீர்ச்சாங்குழல் - மலசலம் கழிவிக்கும் ஒரு சூத்திரக் குழல்.
பீச்சாங்கொள்ளி* - பயங்காளி.
பீச்சுவிளாத்தி - துர்மணமுள்ள ஒரு மரம்.
பீச்சைக்கால்* - இடதுகால்.
பீச்சைக்கை* - இடதுகை.
பீடணம் - அச்சம்.
பீடம் - ஆசனம், [குதம், சிம்மாசனம்.]
பீடரம் - தேவாலயம்.
பீடனம் - பீடை.
பீடிகை - ஆசனம், கடைவீதி, முனிவராச்சிரமம், முகவுரை, பூந்தட்டு, சிங்காதனம் (சிலப். 27 : 156].
பீடித்தல்* - துன்புறுத்தல்.
பீடு - குறைவு, [பீடை, பெருமை, வலி.]
பீடை* - துன்பம்.
பீடைகழித்தல்* - துன்பநிவாரணஞ்செய்தல்.
பீடைமாதம்* - மார்கழிமாதம்.
பீட்டகம்* - தொழில்.
பீட்டன் - இரண்டாம் பாட்டன்.
பீட்டி - பாட்டி.
பீட்டை - பயிரினிளங்கதிர்.

பீதகம் - அரிதாரம், சாந்து, பித்தளை, பொன்னிறம், மஞ்சள்.
பீதகன் - வியாழம்.
பீதகாரகம், பீதசாரகம், பீதசாரம் - வேங்கைமரம்.
பீததுண்டம் - பொன்வாய்ப்புள்.
பீதபத்திரம் - மலைக்காசினி.
பீதபீசம் - வெந்தயம்.
பீதம் - அச்சம், அரிதாரம், சிவப்பு, சந்தனம், பொன், பொன்னிறம், மஞ்சள், பருமை.
பீதாம்பரம் * - கனகவஸ்திரம் (பொன்னுடை).
பீதாம்பரன், பீதாம்பரதாரி * - திருமால்.
பீதி* - அச்சம், பயம்.
பீதிகை - செம்மல்லிகை, மஞ்சணிறம்.
பீதை - மஞ்சள், பொன்னிறப் பூவுள மருதோன்றிமரம்.
பீத்து - வீம்பு.
பீத்தை - நாடா.
பீத்தோல்* - மேற்றோல்.
பீநாறி* - ஒரு மரம்.
பீப்பா* - ஓர் மரப்பாத்திரம்.
பீமசேநன்* - பீமன்.
பீமநாதம் - சிங்கம், பேரொலி.
பீமபாகம்- பாகவகையினொன்று.
பீமம் - அச்சம், பருமை.
பீமன் - பீமசேநன், [விதர்ப்ப நாட்டு மன்னன்.]
பீமாதேவி - துர்க்கை.
பீயாக்குதல்* - கெடுத்தல்.
பீரங்கி* - பெருவெடிக்குழாய்.
பீரம்-வீரம், பூவரசமரம், பீர்க்கு.
பீராய்தல் - பொறுக்கல், [ஆராய்தல்.]
பீரிடுதல் - கம்பிபோலப் பாய்தல்.
பீரு - அச்சமுடையோன், புருவம், வெள்ளாடு.
பீருதந்தி - தண்ணீர்விட்டான் கிழங்கு.
பீர் - பீர்க்கு, [முலைப்பால், அச்சம், பசலைநிறம்.]
பீர்க்கு* - ஒரு கொடி.
பீர்ச்சுதல் - பீரிடச்செய்தல்.
பீலகம் - எறும்பு.
பீலி - மாதர் காலணியினொன்று, [ஆலவட்டம், பத்தல், பனங்கிழங்கினுட்குருத்து, பெருஞ்சவளம், மயிற்றோகை, மயில், வாச்சியம், பொன்.]
பீலித்தண்டு-பிண்டிபாலம் (எறியாயுதம்).
பீலிப்பட்டை-பயிர்க்கு நீரிறைக்கும் பூட்டை.
பீலு - அச்சம், அணு, பூ.
பீழை - துன்பம், பிழை.
பீளல் - பெண்குறி.
பீளை* - கண்ணழுக்கு.
பீள் - பயிரினிளங்கதிர், சினை.
பீறு - கிழியல், குதம்.
பீறுதல் - கீறுதல், [கிழித்தல்.]
பீற்றல் - கிழியல்.
பீனசம், பினிசம் * - மூக்கில் வருமொரு வியாதி.
பீனம் - பருமை, வதக்கம், பாசி.

## பு

புகடு - அடுப்பின் பின்பக்கம்.
புகட்டுதல் - உட்புகச்செய்தல், அறிவுறுத்தல், பருகச் செய்தல்.
புகர்-கபிலநிறம்,குற்றம், பொறி, சுக்கிரன், ஒளி, அழகு.
புகர்முகம் - யானை.
புகலல் - சொல்லுதல்.
புகலிடம் - தஞ்சம், ஊர்.
புகல் - தஞ்சம், வெற்றி, சொல், குதிர், உடல்.
புகவு-சோறு, உணவு. (புற.)
புகழேந்தி - வெண்பா பாடுவதிற் சிறந்த ஓர் கவிஞன்.
புகழ் - கீர்த்தி, புகழென்னேவல்.
புகழ்ச்சி - கீர்த்தி, துதி.
புகழ்தல் - பாராட்டல், துதித்தல்.
புகறல் - சொல்லல், குறித்தல்.
புகா-சோறு, உணவு.(வெண்பா.)
புகார் - காவிரிப்பூம்பட்டினம், யாற்றுமுகம், கபிலம், மந்தாரம், முகில்.
புகுடி-மாதர் காதணியினொன்று, [வாயில், புருவம், கழி.]
புகுதல் - நுழைதல், உட்செல்லுதல்.
புகுதி - நுழைவாயில்.
புகுத்தல் - போகவிடல்.
புகை - தூமம், புகையென்னேவல், [தென்கீழ்த்திசைப்பாலன்குறி, யோசனை தூரம்.]
புகைக்கப்பல் - நீராவிக்கப்பல்.
புகைச்சல் - கண் மங்கலாயிருத்தல், புகையெழும்புதல், [பொறாமை, வயிற்றெரிவு, பயிர்தீய்தல்.]
புகைதல் - புகையெழல், [சினக் குறிப்பு, எரிச்சற்படல்.]
புகையாற்றி - ஒட்டறை.
புகையிலை* - ஓர் செடி.
புகையுறை - ஒட்டறை.
புகையூட்டுதல்-புகைபிடிப்பித்தல்
புகையூரல், புகையூறல் - புகைப் பற்றுதல்.
புக்ககம் - மாமியார்வீடு.
புக்கல் - புகுதல்.
புக்கில் - உடம்பு, வீடு.
புக்குப்புக்கெனல் - புகுபுகெனல்.
புக்கை - புற்கை.
புங்கம் - உயர்ச்சி, அம்பு, அம்புக் குதை, சீலை.
புங்கவர் - கடவுளர், வானோர்.
புங்கவன் - கடவுள், மூர்த்தபாஷாணம், குரு, புத்தன்.
புங்கவி - பார்வதி.
புங்கு - புங்கமரம்.
புசகம், புசங்கம் - பாம்பு.
புசம் - புயம், [தயிராடை.]
புசல் - பெருங்காற்று, [குச்சுமட்டை.]
புசித்தல் - உண்டல்.
புசிப்பு - புசித்தல், [அனுபவிப்பு, போசனப்பொருள்.]
புசுண்டன் - ஓர் யோகி.
புச்சம் - வால், [மயிற்றோகை, தேள்.]
புஞ்சம் - நூற்குஞ்சம், திரட்சி.
புஞ்சவனம், பும்சவனம் - ஓமஞ் செய்து ஆலந்தளிர், உழுந்து முதலியவைகளைப் பாகஞ்

செய்து கருப்பவதியின் நாசி யிற் பிழிந்துவிடுங்கிரியை.
புஞ்சின்னம் - ஆண்குறி.
புடமிடுதல்* - பொன் முதலிய வற்றைச் சுத்தமாக்குதல்.
புடம் - மருந்துசுத்தி, [மூடி, இடம், புறம்.]
புடல் - புடோல் (ஓர் கொடி.)
புடவி - பூமி.
புடவை* - சீலே.
புடாரமுளே - செந்நாயுருவி.
புடை - புடையென்னேவல், [இடம், பக்கம், ஒலி, பாம் பின்புற்று, திரட்சி.]
புடைத்தல் - முறத்தாற் றானிய முதலியவற்றைப் புடைத்தல், [அடித்தல், குத்தல், வீங்கு தல், பறவைச்சிறகடித்தல்.]
புடைவை* - சீலே.
புட்கரம் - சத்த தீவிஞென்று, வாள், தாமரை, நீர், நிறைவு, ஓர் குளிகை, ஆகாயம், அம்பு, யானைத்துதிக்கைநுனி.
புட்கரன் - வருணன்மகன்.
புட்கரிணி, புஷ்கரிணி - தாம ரைக்குளம், நாற்சதுரவாவி.
புட்கலம், புஷ்களம்*- நிறைதல்.
புட்கலேமஞளன் * - ஐயஞர்.
புட்டம் - ஆசனபக்கம் (குண்டி), [காக்கை, சீலே, நிறைவு.]
புட்டி, புஷ்டி - பருமை, [கொ ழுப்பு.]
புட்டில்-இறைகூடை, அம்பறுத் தூணி, விரலுறை, உறை.
புட்டிவெல்லம் - பனங்கட்டி.
புட்டுத்திருப்பி - ஓர் செடி.
புட்பகம் - புட்பகவிமானம், [இரும்புப்பாத்திரம், இரத்தி னகங்கணம், மூக்கிரட்டை.]
புட்பகவிமானன் - குபேரன், இந்திரன்.
புஷ்பகிரி - மேற்றிசைக் கடலில் வருணன் விளையாடுமோர் மலே.
புட்பகேது - மன்மதன்.
புஷ்பசயனம் - பூமெத்தை.
புஷ்பசரன், புஷ்பபாணன்- மன்மதன்.
புஷ்பசாமரம் - தாழை.
புட்பதந்தம் - வடமேற்றிசை யானே.
புஷ்பபலம் - விளாங்கனி.
புஷ்பபுரம் - பாடலிபுரம்.
புஷ்பமழை* - பூமாரி.
புஷ்பம்* - பூ.
புஷ்பாசம் - பூந்தேன்.
புஷ்பரதம் - பூந்தேர்.
புஷ்பராகம் - நவமணியி ஞென் று.
புஷ்பவதி - ரஜஸ்வலே.
புஷ்பவிமானம் - பூந்தேர்.
புஷ்பாசனன் - பிரமன்.
புஷ்பாசனி, புட்பாசனி - இலட் சுமி, சாஸ்வதி.
புஷ்பாஞ்சலி-புஷ்பஞ்சொரிந்து வந்தித்தல்.
புணரி - அலே, கடல்.
புணர் - புணரென்னேவல், [புது மை.]
புணர்ச்சி - இணக்கம், கலத்தல்.
புணர்வு - கலத்தல் உடல்.(பிங்.)
புணே - தெப்பம், மாக்கலம், மூங் கில், விலங்கு.

புணத்தல் - கட்டல்.
புண் - விரணம், [தசை.]
புண்டாம் - நெற்றிக்குறி, வெண் கரும்பு, வெண்டாமரை, கழுகு, செங்குரங்கு.
புண்டரீகக்கண்ணன் - திருமால்.
புண்டரீகம் - தாமரை, தென்கீழ்த்திசையானை, புலி, கழுகு, வண்டு, வெண்டாமரை.
புண்டரீகாட்சன் - திருமால்.
புண்ணாக்கு* - பிண்ணாக்கு.
புண்ணியசாலி* - புண்ணியவான்.
புண்ணியசுரூபி - திவ்வியரூபி.
புண்ணியதலம்* - தருமத்தை விருத்தியாக்குந்தலம்.
புண்ணியஸ்தானம் - உதயத்திற் கொன்பதாமிடம்.
புண்ணியத்திசை - வடக்கு. (சிலப். 5:94.)
புண்ணியத்தீர்த்தம்* - பாவவிமோசனநீர்.
புண்ணியபலம்* - புண்ணியப்பேறு.
புண்ணியபுருஷன்* - சற்புருஷன்.
புண்ணியமூர்த்தி - கடவுள், புத்தன்.
புண்ணியம் - நல்வினை, [நீர்த்தொட்டி, தூய்மை.]
புண்ணியலோகம் - தேவபதவி.
புண்ணியவதி* - தருமசிந்தனையுடையவள்.
புண்ணியவான்* - தருமவான்.
புண்ணியாகவாசனம்* - ஆசூசநிவாரணம்.
புண்ணியாத்துமா* - சற்சனன்.
புண்ணியை - புண்ணியவதி, துளசி.
புண்ணீர் - இரத்தம்.
புண்ணுடம்பு* - பச்சையுடம்பு.
புண்படுதல் - மனநோவுண்டாதல்
புண்வாய்* - புண்ணிற்றுவாரம்.
புதர் - தூறு, [புலவர், தேவர்.]
புதல் - பூடு, நாணல், புல்.
புதல்வன் - மகன்.
புதல்வி - மகள்.
புதவு - கதவு, ஓர் புல், கோபுரவாயிற்கதவிலுள்ள துவாரவழி.
புதன் - ஓர் நாள், [ஓர் கிரகம், புலவன், தேவன்.]
புதா - கொக்கு, கதவு. "புதாத்திறக்குந் தாளுடைய மூர்த்தி" (சீவக. சிந். 1549.)
புதிசு, புதிது - புதியது.
புதியர் - விருந்தினர்.
புதினம் - நூதனம்.
புதிஞ* - ஓர் பூடு.
புதுக்குதல் - புதுப்பித்தல்.
புதுச்சேரி* - பிரெஞ்சுக்காரரது ஒரு பட்டினம்.
புதுப்பித்தல் - புதிதாக்கல்.
புதுமை - நூதனம், [மிகுதி.]
புதுவை - புதுச்சேரி.
புதை - புதையென்னேவல், [மறைவு, அம்பின்கூடு, அம்பு, உடல், புதுமை.]
புதைத்தல் - சேமித்தல், [மறைத்தல்.]
புதையல்* - புதைத்ததிரவியம்.
புத்தகம், புஸ்தகம் - சுவடி, [சித்திரப்படாம்.]

புத்தசேடம் - உண்டமிச்சில்.
புத்தம்புதியது - மிகப் புதியது.
புத்தர் - புத்தசமயத்தோர்.
புத்தன் - போதமே வடிவான வன், புத்தப்பெருமான்.
புத்தாடை - புதிய ஆடை.
புத்தாத்திரி-அருநெல்லி. (மலை)
புத்தி - அறிவு, கிரகநடை.
புத்திகேடு* - மதியீனம்.
புத்திகூர்மை* - விவேகம்.
புத்திசாலி* - யூகி.
புத்திமயக்கம்* - அறிவுமயக்கம்.
புத்திமான்* - அறிவாளி.
புத்தியறிதல்` - பெண் புஷ்பவ தியாகுதல்.
புத்திரகாமேட்டி - புத்திரனைக் குறித்துச் செய்யும் யாகம்.
புத்திரசந்தானம் - ஆண்சந்ததி.
புத்திரசோகம்* - பிள்ளையையிழ ந்ததாலாய துன்பம்.
புத்திரத்தானம் - உதயத்துக்கு மூன்றாமிடம்.
புத்திரபாக்கியம்* - பிள்ளைப்பாக் கியம்.
புத்திரபௌத்திர பாரம்பரியம்*- பிள்ளை பாட்டப்பிள்ளை முத லாகவரும் வமிச வரிசை.
புத்திரி - மகள்.
புத்திரிகாசுதன் - மகண்மகன்.
புத்திரேடணை - புத்திரவாஞ்சை.
புத்திவான்* - புத்திசாலி.
புத்து - புற்று, [புதிது, ஓர் நர கம்.]
புத்துருக்குநெய் - உடனே யுருக் கின நெய்.
புத்தேணுடு- வானுலகு.
புத்தேள் - தெய்வம், புதுமை.
புநர்சமஸ்காரம் - திரும்பவும் விசேஷித்த சடங்குகளைச் செ ய்தல்.
புநர்தம் - புநர்பூசநாள்.
புநர்வசு - புநர்பூசம்.
புநிதம் - சன்மார்க்கம்.
புந்தி - புத்தி, புதன்.
புயகடி, புயகம் - பாம்பு.
புயங்கம் - பாம்பு.
புயம் - தோள், முன்கை.
புயல் - பெருங்காற்று, [மேகம், நீர், சுக்கிரன்.]
புயல்வண்ணன் - திருமால்.
புய்த்தல் - பயத்தல், பறித்தல்.
புரகரன் - சிவபிரான்.
புரஸ்காரம் - மரியாதை.
புரசல்* - இரகசியம், உட்டுளை.
புரசு - பலாசமரம்.
புரசை - புரோசை.
புரட்சி - கீழ்மேலாய்வருதல்.
புரட்டல்* - திருப்புதல், மாறு பாடு பண்ணல், வாந்திகொள் ளல்.
புரட்டன்* - பொய்யன்.
புரட்டு - பொய், வாந்திக்குணம்.
புரட்டுருட்டு - புரளித்தனம்.
புரட்டை - பூரட்டாதி.
புரத்தல் - காத்தல், ஈதல், நிலை பெறுதல்.
புரந்தரன் - இந்திரன்.
புரமூன்றெரித்தோன், புரமெரி த்தோன் - சிவன்.
புரம்-நகரம், ஊர், உடம்பு, இரா சதானி, முன்.
புரவலன் - காப்போன், அரசன்.

புரவி - குதிரை, அசுவினிநாள்.
புரவிவட்டம்-குதிரை வையாளி [வீதி.
புரவு - கொடை.
புரளல் - புரளுதல், [மாறுதல்.]
புரளி - பொய், குழப்பம், துடுக்கு, சண்டை.
புராணபுருஷன் - திருமால்.
புராணம் - பூருவம், பழங்கதை.
புராதலம் - பாதலம்.
புராதனம்* - பழமை.
புராரி - சிவன்.
புரி - வைக்கோற்புரி, [கயிறு, சங்கு, சுருள், ஊர், ஆசை, கட்டு, கோட்டை.]
புரிகுழல் - கடைகுழன்று சுருண்ட கூந்தல்.
புரிசை - மதில்.
புரிதல் - செய்தல், விரும்பல்.
புரிமணை - பாண்டம் வைப்பதற்கமைத்த ஒரு பீடம்.
புரிமுகம் - சங்கு, நத்தை, கோபுரம்.
புரியட்டகம், புரியட்டகாயம் - சூக்குமதேகம்.
புரியணை - புரிமணை.
புரியம் - கூத்துவகை.
புரீடம் - அழுக்கு, மலம்.
புருகூதன் - இந்திரன்.
புருஷகாரம் - ஆண்மை.
புருஷதத்துவம்* - ஆண்மை.
புருஷத்துவம் - ஆண்தன்மை.
புருடபிரமாணம் - நான்குமுழம்.
புருஷமேதம் - மனுஷபலி.
புருஷரூபம் - ஆண்வடிவம்.
புருஷன், புருடன் - ஆண்மகன், கணவன், சீவான்மா.
புருடவாகனன் - குபேரன்.
புருடா* - பொய்.
புருஷாங்கனை - புதன்மனைவி.
புருஷார்த்தம், புருடார்த்தம் - அடையவேண்டுவது, செய்யவேண்டுவது.
புருஷோத்தமன் - சிரேஷ்டன், திருமால்.
புருவமத்தியம், புருவமையம் - இலாடத்தானம்.
புருவம் - நெற்றிப்புருவம், [விளிம்பு, கரை, குதிரை.]
புருவை - ஆடு, இளமை.
புரூரவன் - தன்னைச் சரணுற்ற புறுவின்பொருட்டு வேடனுக்குத் தொடையின் மாமிசத்தைத் தந்த ஓர் மன்னன்.
புரை - உட்டுளை, குழிப்புண், [குற்றம், மடிப்பு, இரகசியம், உயர்ச்சி, மேன்மை.]
புரைசல் - இரகசியம், பொத்தல், [சச்சரவு, குழப்பம்.]
புரைசை - புரோசை.
புரைச்சல் - வெளிவருதல், தைத்தல்.
புரைய - ஒருவமையுருபு. [த்தல்.
புரையன் - வீடு, பன்னசாலை.
புரையேறுதல் - உண்டபொருள் சுவாசக்குழலில் புகுதல்.
புரையோர் - திருடர், மேலோர்.
புரோகதி-நாய், முன்னடப்பது.
புரோகிதன் -ஒரு வைதீகப்பார்ப்பான், இந்திரன்.
புரோசநன் - குபேரனுக்கு வாகனமாயிருக்கும் நரன்.
புரோசை - யானைக்கழுத்திடு கயிறு.

புரோடி - யாற்றுப்பாய்ச்சல்.
புரோட்சணம், புரோட்சணை - நீரைத் தெளித்தல்.
புரோட்சித்தல் - தெளித்தல், சுத்தஞ்செய்தல்.
புலத்தல் - புணர்ச்சிக்கமையாதது போல முறையிடல்.
புலஸ்தியன் - ஓரிருடி.
புலப்படுதல் - விளங்குதல்.
புலப்படுத்துதல் - விளங்கப்பண்ணுதல்.
புலமகள் - நாமகள் "புலமகள் புகழப்" (சீவக. சிந். 2566.)
புலமை - கல்வி.
புலம் - அறிவு, திக்கு, வயல், இடம், நுண்மை.
புலம்பல் - இரங்கல், ஒலித்தல்.
புலம்பு - துன்பம், புலம்பல், தனிமை, அச்சம், ஒலி.
புலரி - விடியல்.
புலர்தல் - காய்தல், வாடல், விடிதல்.
புலவர் - கவிவாணர், [அறிஞர், தேவர்.]
புலவன் - கவிவாணன், [அறிஞன், அருகன், போர்வீரன், கூத்தன், தேவேந்திரன், புதன், முருகன், வானவன்.]
புலவி - ஊடலின்முதிர்தல்.
புலவு - ஊன், புலால், நரகம், குருதி (சீவக. சிந். 293.)
புலன் - அறிவு, இந்திரியவுணர்ச்சி.
புலாக்கு * - பெண்ணின் மூக்கணியுளொன்று.
புலால் - ஊன்.
புலால்கட்டி - கடலின்மீன் முதலியவற்றைத் தடுப்போன்.
புலி - வியாக்கிரம், [சிங்கவிராசி, வேங்கைமரம், நால்வகைச் சாந்திளென்று.]
புலிக்கண்கல் - கோமேதகம்.
புலிக்கொடியோன் - சோழன்.
புலிங்கம் - தீப்பொறி, ஊர்க்குருவி.
புலித்தொடக்கி - கற்றாழை, தொடரி.
புலிநகக்கொன்றை - ஓர் மரம்.
புலிந்தம் - மிலேச்சதேசம், ஒரு நாடு.
புலிப்பாணி - வியாக்கிரபாதர்.
புலியூர் - சிதம்பரம்.
புலு - பத்து.
புலுட்டை - தழைவற்றது.
புலுண்டல் - கருகினது.
புலுதம் - அளபெடை, குதிரை முழுவோட்டம்.
புலை - புலால், பொல்லாங்கு, அசுத்தம் (மணிமே. 13: 28.)
புலைச்சி - பறைச்சி, [யவட்சாரம்.]
புலைஞர் - ஈனர்.
புலைத்தொழில் - கொலைத்தொழில்.
புலைப்பாடி - புலைச்சேரி (பறைச்சேரி.)
புலைமை - கீழ்மை.
புலையர் - சண்டாளர்.
புலோமசை - இந்திராணி (அவள் புலோமன் புத்திரி.)
புலோமன் - இந்திராணியின் தந்தை.

புல் - புல்லு, [அற்பம், புலி, பனைமரம், அனுடநாள்.]
புல்கல் - புணர்தல், வியங்கோண் முற்று.
புல்மரம் - தென்னமரம்.
புல்லகண்டம் - கண்டசருக்கரை.
புல்லகம் - நுதலணி.
புல்லம் - இடபவிராசி, எருது.
புல்லர் - கீழ்மக்கள், வேடர்.
புல்லல் - கூடுதல், புணர்தல், சார்தல்.
புல்லறிவாளர் - அறிவீனர்.
புல்லறிவு - அறிவின்மை.
புல்லாங்கழி, புல்லாங்குழல் * - ஒருதுகுழல்.
புல்லார் - பகைவர்.
புல்லி - பூவினிதழ், வினையெச்சம்.
புல்லிங்கம் - ஆண்பால்.
புல்லிதழ் - பூவின் புறவிதழ்.
புல்லியர் - கீழ்மக்கள்.
புல்லுநர் - நண்பர்.
புல்லூரி - குருவிச்சை.
புல்லை* - மங்கலான மஞ்சள் நிறம், வெண்மை கலந்த சிவப்பு.
புல்வாய் - கலைமான், மான், வினைமுற்று.
புல்வெட்டிப்பல் - மாட்டின் முன்வாய்ப்பல்.
புவலோகம் - மேலேழுலகிலொன்று.
புவனகோசம் - பூகோளம்.
புவனசாத்திரம் - பூமிசாஸ்திரம்.
புவனம் - பூமி, ஆகாயம், நீர்.
புவனி - பூமி.
புவனேசுவரி - பார்வதி-
புவி - பூமி.
புழக்கம் - அறிமுகம், பழக்கம்.
புழங்குதல் - வழங்குதல்.
புழல் - ஒரூர், [சலதாரை, துளையுடைப்பொருள், பண்ணியாரம்.]
புழு - கிருமி.
புழுகுசட்டம் - ஓர் வாசனைப் பொருள்.
புழுகுசம்பா - ஓர் நெல்.
புழுக்கம் - உட்டணம், பொறுமை, வன்மம்.
புழுக்கல் - அவித்தல், சோறு.
புழுக்கு - புழுக்கென்னேவல், இறைச்சி. (புற.)
புழுக்கூடு - புழுவிருக்கும் பை.
புழுக்கை - அடிமை, ஆடு முதலியவற்றினெரு.
புழுக்கைச்சி* -அடிமைப்பெண்.
புழுக்கொல்லி - ஆடுதின்னாப் பாளை, நாகமல்லி.
புழுங்கலரிசி-அவித்தநெல்லரிசி.
புழுங்கல்-உட்டணமாதல், [புழுக்கின தானியம்.]
புழுங்குதல் - காற்றில்லாது வெப்பமாயிருத்தல்.
புழுதி - துகள், [பராகம்.]
புழுதிவிதைப்பு - ஈரமில்லா விதைப்பு.
புழுது - அம்புக்குதை.
புழுத்தல் - புழுவுண்டாதல்.
புழுமேய்தல் - புழுக்கடித்தல்.
புழுவெட்டுதல் - புழுவரித்தல்.
புழை - உட்டுளை, துளையுடைப் பொருள், சிறியவழி (மணிமே. 6:22.)

புழைக்கடை* - பின்புறவாயில்.
புழைக்கை - துதிக்கை, யானை.
புளகம் - மயிர் சிலிர்த்தல், புடைப்பு, மகிழ்ச்சி, கண்ணுடி, சோறு, இன்பம்.
புளகிதம் - மகிழ்ச்சி, மயிர்ச்சிலிர்ப்பு.
புளகித்தல் - மகிழ்தல், மயிர் சிலிர்த்தல்.
புளி - ஓர் சுவை, புளியமரம்.
புளிக்கறி - புளிங்கறி.
புளிக்கீரை* - ஓர் கீரை.
புளிக்குடித்தல் - பிள்ளை பெற்றிருத்தல்.
புளிங்கறி - புளிப்புள்ள கறி.
புளிச்சை - ஓர் செடி.
புளிஞர் - வேடர்.
புளிதம் - ஊன்.
புளிந்தம்-புலிந்தம் (ஓர் தேயம்.)
புளிந்தயிர் - புளித்த தயிர்.
புளிந்தன் - வேடன்.
புளிமா - புளிப்புள்ள மாமரம்.
புளிமாதளை* - ஓர் மாதளை.
புளியறணை - ஓர் பூண்டு.
புளியோதனம் - புளிஞ்சோறு.
புளியோரை*-புளிவிட்டுத் தாளித்த சாதம்.
புளினம் - மணற்குன்று, ஆற்றிடைத்திட்டு.
புளினர் - வேடர்.
புளுகு - பொய்.
புளுகுதல்* - மெய்போற் பொய் கூறல்.
புள்-பட்சி, அவிட்டநாள், வண்டு, கைவளை "புள்ளும் யாழுங்" (சீவக். சிங். 2591.)
புள்ளம் - அரிவாள், கொடுவாள்.
புள்ளரசு - கருடன்.
புள்ளி - இலக்கப்புள்ளி, [ஓர் அடையாளம், நவமணியைங் குற்றத்தொன்று, நண்டு, பல்லி, மதிப்பு.]
புள்ளிபோடுதல் - புள்ளி வைத்தல், [மதித்தல்.]
புள்ளிவண்டு - கழுதைவண்டு.
புள்ளுவம் - வஞ்சம்.
புள்ளுவர் - வஞ்சகர், வேடர்.
புள்ளோச்சல் - பட்சிதுரத்தல்.
புறக்கட்டு - சுற்றுவீடு.
புறக்கணித்தல் -வேற்றுமைபண்ணல்.
புறக்கணிப்பு - புறக்கணித்தல்.
புறக்காவல் - வெளிக்காவல்.
புறக்கை - புறங்கை, வெளிப்புறம், வலக்கை.
புறக்கோடி - வெளிக்கோடி.
புறங்கடை - வெளிக்கதவு.
புறங்காடு - சுடுகாடு.
புறங்காட்டல் - தோற்றோடுதல், வெளிக்குக் காட்டுதல்.
புறங்கால்* - புறவடி.
புறங்கூறல் - தூற்றல்.
புறங்கொடுத்தல் - தோற்றோடுதல், பின்புறங் காட்டுதல்.
புறச்சுவர்தீற்றல் - தன்னை அடுத்தாரை விட்டு அயலார்க்குத் துணைசெய்தல்.
புறச்சேரி - வெளிச்சேரி.
புறணி-தோல், புறங்கூறல், புறம், முல்லைநிலம், மரப்பட்டை.
புறத்தவன் - ஐயனர்.
புறத்தி - புறம்பானது.

புறத்தியான்* - அந்நியன்.
புறநகர் - நகர்ப்புறம்.
புறநானூறு - ஒரு சங்கநூல்.
புறநீர்மை - ஓர் பண்.
புறந்தரல் - தோற்றல், ஓம்பல்.
புறந்தாள் - புறங்கால்.
புறப்படுதல் - பயணப்படுதல், [வெளிவருதல்.]
புறப்பாடு - புறப்படுகை.
புறம் - பின்புறம், முதுகு, மதில், வெளி, திசை, சுற்று, பக்கம்.
புறம்பு - தனியானது, புறத்தி.
புறவடை - மலங்கழிப்பிக்க அபானவாயில் வைப்பது. [நிலம்.
புறவணி - குறிஞ்சிநிலம், முல்லை
புறவம் - காடு, புறா, முல்லைநிலம், குறிஞ்சிநிலம்.
புறவாயில் - கடைத்தலை.
புறவு - புறா, குறிஞ்சிநிலம், முல்லைநிலம், காடு.
புறவுரை - பாயிரம்.
புறன் - புறம், முதுகு.
புறா* - ஓர் புள்.
புறாக்காலி - ஓர் பூடு.
புறாண்டுதல் - பிறாண்டுதல்.
புறாமுட்டி - ஓர் பூடு.
புற்கசன் - சண்டாளன்.
புற்கலம் - உடம்பு.
புற்கலன் - உயிர்.
புற்கை - ஒருவிதக் கஞ்சி, சோறு.
புற்பதி - பனை, வாழைக்கிழங்கு.
புற்புதம் - நீர்க்குமிழி.
புற்றாஞ்சோறு - கறையான்கூடு.
புற்றாளி - அனுடநாள், பனைமரம்.
புற்று - வன்மீகம், [கன்னப்புற்று முதலிய ரோகம்.]
புனஸ்காரம் - வணக்கம்.
புனமுருக்கு - பலாசுமரம்.
புனம் - கொல்லை, வயல்.
புனருத்தி - கூறியதுகூறல்.
புனர்பூசம் - ஓர் நட்சத்திரம்.
புனர்ப்பவம் - மீண்டும் பிறத்தல், நகம்.
புனர்ப்பாகம், புனற்பாகம் * - சமைத்ததைச் சமைக்கை.
புனலை - நெய்க்கொட்டான்மரம்.
புனல் - நீர், யாறு.
புனல்வேந்தன் - வருணன்.
புனவர் - குறிஞ்சிநிலமாக்கள்.
புனனாடன் - சோழன்.
புனனாடு - கொடுந்தமிழ் நாட்டிலொன்றாகிய சோணாடு.
புனிதம் - தூய்மை, புனர்பூசம்.
புனிதன் - தூயவன், அரன், அருகன், இந்திரன், புத்தன்.
புனிறு - ஈன்றணிமை, சூதகம், தோல், புதுமை.
புனிற்றா - இளங்கன்றுப்பசு.
புனுகு* - புழுகு.
புனை - புனையென்னேவல், கால் விலங்கு, சீலை, புதுமை.
புனைகுழல் - பெண்.
புனைசுருட்டு * - சதியோசனை.
புனைதல் - அணிதல், அலங்கரித்தல்.
புனைந்துரை - பாயிரம், பெரிதினைச் சுருக்கியும் சிறிதினைப் பெருக்கியும் கூறல்.
புனையிழை - பெண்.
புனைவர் - கம்மாளர்.
புன்கண் - தரித்திரம், துன்பம், நோய், மெலிவு.

புன்காலி - காயாமரம், பாதிரி மரம்.
புன்கு - புன்கமரம், [புனமுருங்கைமரம்.]
புன்குமரம்-பொன்னுங்காய்மரம்.
புன்சிரிப்பு - புன்முறுவல்.
புன்செய் - தரிசுநிலம், சிறுதானியம்விளைநிலம்.
புன்முறுவல் - மந்தச்சிரிப்பு.
புன்மை - சிறுமை, துன்பம், அற்பம், மறதி.
புன்னகை - புன்சிரிப்பு.
புன்னுகம் - புன்னைமரம்.
புன்னுகவராளி - ஓரிராகம்.
புன்னை - ஓர் மரம்.

## பூ

பூ - மலர், [பூமி, அழகு, தாமரை, ஓர் கண்ணோய், இலை, கூர்மை, பிறப்பு, பொலிவு.]
பூகதர் - புகழ்வோர்.
பூகம்-கமுகமரம், கூந்தற்கமுகு, கூந்தற்பனை, திரட்சி.
பூகம்பம் - பூமிநடுங்கல்.
பூகோளசாஸ்திரம் - புவனசாஸ்திரம்.
பூகோளம் - பூச்சக்கிரம்.
பூக்கஞ்சா - ஓர் கஞ்சாச்செடி.
பூக்குடலை, பூக்குட்டான்* - பூக்கூடை.
பூங்கஞ்சா - பூக்கஞ்சா.
பூங்கதிர் - வெண்கதிர், ஒளி.
பூங்கரும்பு - செங்கரும்பு.
பூங்காரம் - மந்தாரம்.
பூங்காவனம் - பூஞ்சோலை.
பூங்காவி - ஓர் காவி.
பூங்கோரை - ஓர் புல்.
பூசணம் - பூஞ்சு, ஆபரணம்.
பூசணி* - ஓர் கொடி.
பூசம் - ஓர் நாள்.
பூசல்-பூசுதல், [சமர், பேரொலி, வருத்தம்.]
பூசனை - ஆராதனை.
பூசாந்திரம் - ஓர் கடுக்கன்.
பூசாபலம்* - பூசையின்பலன்.
பூசாரி, பூசாலி* - கிராமதேவதைக்குப் பூசைசெய்பவன்.
பூசாவிதி - பூசைமுறை.
பூசித்தல் - பூசனைசெய்தல்.
பூசுணி* - பறங்கிக்கொடி.
பூசுதல் - தடவல், [அலங்கரித்தல், கழுவுதல். (சீவக. சிந். **1784.**)]
பூசுதன் - செவ்வாய்.
பூசுரர் - பிராமணர்.
பூசை - ஆராதனை, [பூனை.]
பூச்சக்கரம் - சூரியன் செல்லும் பாதை, பூமண்டலம்.
பூச்சாண்டி - வெருளி.
பூச்சாரம் - நிலவளம், [பூவினிரசம், பூநீறு.]
பூச்சி* - செந்து.
பூச்சிகாட்டுதல்* - சிறுவர்க்குப் பயங்காட்டுதல்.
பூச்சியம்* - வெறுமை.
பூச்சியன் - கறுப்பும் வெள்ளையுமான வண்டிமாடு.
பூச்சு - பூசுதல், வெளிக்காட்சி.
பூஞை - பூனை.
பூஞ்சக்கல் - ஒருவித நீலக்கல்.

பூஞ்சணம் - பூஞ்சு, ஒட்டடை.
பூஞ்சல்-கண்ணொளி மங்கல், மங்கல், ஒட்டடை.
பூஞ்சற்கண் - ஒளிமங்கிய கண், பீளைக்கண், குழிந்தகண்.
பூஞ்சிட்டு - ஓர் குருவி.
பூஞ்சிறகு - பட்சிக் குஞ்சின் சிறகு.
பூஞ்சு - மரத்தின்மீது ஈரத்தாலுண்டாகும் பாசி, ஒட்டடை.
பூஞ்சோலை* - புட்பக்கா.
பூஷணம், பூடணம் - ஆபரணம்.
பூஷணை - உபசாரம்.
பூஷிதம் - அலங்கரிப்பு.
பூடு - உள்ளிப்பூடு, [சிறு செடி.]
பூட்கை - யாளி, யானை, வலிமை, சிங்கம், கொள்கை.
பூட்சி-உடல், பூணல், கொள்கை.
பூட்டகம் - இளப்பமான வேலை, வஞ்சகம், இரகசியம்.
பூட்டகம்பண்ணுதல் - வீண்பெருமைபாராட்டுதல்.
பூட்டங்கம் - வில்லங்கம்.
பூட்டல்-அடைத்தல், அணிதல், தொடுத்தல்.
பூட்டாங்கயிறு - எருத்தைப் பிணைக்கும் நுகக்கயிறு.
பூட்டு - பூட்டும் பூட்டு, [நாணி.]
பூட்டை - இறைகூடை, ஏற்றமரம், செக்கு, பூட்டாங்கயிறு.
பூணாரம் - ஆபரணம்.
பூணாரவெலும்பு - மணிக்கட்டி னெலும்பு.
பூணி - எருது, இடபவிராசி.
பூணுதல்* - அணிதல்.
பூணூல்* - உபவீதம்.
பூணை - முல்லைநிலம்.
பூண் - உலக்கை முதலியவற்றிற் கிடும் பூண், [ஆபரணம்.]
பூண்டி - ஓர் ஊர்.
பூண்டு - வெள்ளைப்பூண்டு, [சிறு செடி.]
பூதகணம் - பூதசேனை
பூதகி - கிருஷ்ணனை முலைமூலமாக நஞ்சையூட்டிக் கொலைசெய்யும்படிக் கம்சனுலேவப்பட்ட ஓரரக்கி.
பூதக்கண்ணாடி * - சிறியதைப் பெரியதாகக் காட்டுங் கண்ணாடி.
பூததயை - ஆன்மாக்கள்மீது வைக்குமிரக்கம்.
பூதநாடி - மரணநாடி, பசாசம் பிடித்தவர்க்கியங்கு நாடி.
பூதநாதன் - சிவன்.
பூதநாயகி - உமையாள்.
பூதபரிணாமம் - பஞ்சபூதங்களின் விகாரம்.
பூதம் - பூதகணம், [பேய், ஐம்பூதம், உயிர், தூய்து, பரணி நாள், கமுகு, சங்கு, உடம்பு.]
பூதரம் - பொன்மலை, மலை.
பூதலம் - பூமி.
பூதவம் - ஆலமரம், மருதமரம்.
பூதவிருட்சம் - ஆலமரம்.
பூதனை - பூதகி.
பூதாத்திரி - கீழாநெல்லி.
பூதாத்துமா - சீவாத்துமா.
பூதாரம் - பன்றி.
பூதாரன் - அரசன்.
பூதாரி - பெருங்காயம்.
பூதாவேசி - வெண்ணொச்சி.

பூதி - விபூதி, கொடுமை, புழுதி, சாம்பர், செல்வம், நரகம், புலால், துர்க்கந்தம்.
பூதிகம் - சாதிக்காய், நிலவேம்பு, அகில்.
பூதியம் - உடல், பூமி.
பூதை - அம்பு.
பூத்தல் - மலர்தல், [மாதவிருது வாதல், உண்டாதல்.]
பூத்தானம்* - அருமைபண்ணல்.
பூஸ்திதி* - நிலசம்பத்து.
பூநாகம் - பூநீறு, நாங்கூழ், நாகப் பூச்சி.
பூநாதம் - வெடியுப்பு.
பூநீர்-ஒருவித மருந்துச் சூரணம்.
பூநீறு* - ஓர் மருந்து.
பூநொய்* - சிறு நொய்.
பூந்தாது - பூவிற்றுகள்.
பூந்தி - ஓரின்சுவைப் பண்டம், [பூவந்திமரம்.]
பூந்துணர் - பூங்கொத்து.
பூந்துளிர் - மெல்லிய துளிர்.
பூந்தேன் - பூவிற்றேன்.
பூந்தை - ஒரூர், பூதன் தந்தை.
பூந்தோடு - பூவிதழ்.
பூந்தோட்டம்* - நந்தவனம்.
பூபதி - அரசன், ஓர் குளிகை, மல்லிகை.
பூபன் - அரசன்.
பூபாலன் - அரசன், வேளாளன்.
பூபாளம் - ஓரிராகம்.
பூப்பு - மகளிர்சூதகம்.
பூமகள், பூமாது- இலக்குமி, பூமி தேவி.
பூமண்டலம்* - பூலோகம்.
பூமன் - செவ்வாய்.
பூமாதளை - காய்க்காமல் பூமாத் திரம் விடும் மாதளை.
பூமான் - புருஷன், அரசன்.
பூமி - பூவுலகு, நிலம், தேசம்.
பூமிசன்-அங்காரகன், நரகாசுரன்
பூமிசாரம் - பூசாரம், ஓர் நூல்.
பூமிசைநடந்தோன் - அருகன், புத்தன்.
பூமிதேவி - இலட்சுமி.
பூமிநாதம் - காந்தம், இந்துப்பு, பூநீறு.
பூமிநாயகன் - காஸ்மீரப்படிகம், நிலவேம்பு.
பூமிபாரம்* - பயனுருத சிருட்டி யால் பூமிக்குண்டான பாரம்.
பூமின் - இலக்குமி, பூமிதேவி.
பூம்பிஞ்சு* - இளம்பிஞ்சு.
பூம்பிடகை - பூங்கூடை.
பூம்புகை - நறும்புகை.
பூம்பொழில் - புஷ்பசசோலை.
பூரகம் - மூச்சுள்ளேவாங்கல்.
பூரணகருப்பிணி - நிறைந்த பிள் ளைத்தாய்ச்சி.
பூரணகலசம், பூரணகும்பம் - சலம் நிறைந்துள்ள குடம்.
பூரணசந்திரன் - முழுநிலவு.
பூரணபலன் - முழுப்பலன்.
பூரணமி, பூரணமை, பூரணை, பௌரணை - பௌர்ணமி.
பூரணம் - எல்லாம், நிறைவு, முழுமை, பெருக்கம்.
பூரணன் - கடவுள், மூர்த்தபா ஷாணம், அரன், அருகன்.
பூரணகுதி - ஒமச்சடங்கை நிறை வேற்றுங் கடைசியாகுதி.

பூரணுதிலேகியம் - ஓர் லேகியம்.
பூரணுயு - பூரணவயசு.
பூரணி - நிறைவுள்ளவள் (பார்வதி), இலவமரம். [தேவி.
பூரணை - பௌரணை, ஐயனுர்
பூரணைகேள்வன் - ஐயனுர்.
பூரம் - ஒரு மருந்து, [பூரான், தேள், நீர், பூதம், ஓர் நாள்.]
பூரவாகினி - சரஸ்வதி.
பூராடம் - ஒரு நாள்.
பூராயம்* - பூருவம், ஆராய்வு.
பூராவாக* - நிறைவாக.
பூரான் - ஒரு விஷசெந்து, [பனங்கொட்டை முதலியவற்றினுட் பருப்பு.]
பூரி - பொன், ஓர் பணிகாரம், [கலப்புநெல், மிகுதி, ஒரெண், சிரார்த்தக்கிரியையினென்று]
பூரிகலியாணி - ஓரிராகம்.
பூரிதம் - நிரம்பப்பட்டது.
பூரித்தல் - உவத்தல், [வாயுவை நிறைத்தல், பருத்தல்.]
பூரிப்பு - மிகுகளிப்பு, [பூரணம், மிகுதி.]
பூரிமாயு - ஆணரி, பழமை.
பூரியர், பூரியோர் - கீழ்மக்கள்.
பூருகம் - மரம்.
பூருவகங்கை - நருமதை.
பூருவகதை - பழங்கதை.
பூருவகருமம், பூருவகன்மம் - ஊழ்வினை.
பூருவகாலம் - முற்காலம்.
பூருவக்கியானம் - பிரார்த்தனுனம்.
பூருவசன்மம் - பழம் பிறப்பு (முன்னைய பிறவி.)
பூருவஞானம் - முன்னனுபவத்தை யறியுமறிவு.
பூருவபட்சம், பூருவபக்கம் - வளர்பிறைப்பக்கம்.
பூருவபாஷை - ஆதிபாஷை.
பூருவபுண்ணியம் - பழந்தருமம்.
பூருவம் - ஆதி, [முதன்மை, முன்பு, கிழக்கு, சந்திரன், முன்பக்கம்.]
பூருவீகம் - ஆதி, பழமை.
பூருவோத்திரம் - பூருவீகம் (பழமை.)
பூர்ணம் - பூசணம், பூரணம்.
பூர்ணுவதாரம் - நரசிங்காவதாரம்.
பூர்தல்* - நுழைதல்.
பூர்த்தி* - நிறைவு.
பூர்வம்* - பூருவம்.
பூர்வீகம் - பூருவீகம்.
பூலதை - படர்கொடி, பூநாகம்.
பூலத்தி - மருதமரம்.
பூலித்தகடு - மணியழுத்த வைக்
பூலோகம்* - பூமி. [குந் தகடு.
பூல் - பூலாச்செடி. (தொல். எழுத். 375.)
பூவணம் - மதுரைக்கருகில் ஓர் சிவஸ்தலம்.
பூவணை - பூமெத்தை.
பூவந்தி - பொன்னுங்காய்மரம்.
பூவம்பன் - மன்மதன்.
பூவரசு - ஓர் மரம்.
பூவலயம் - பூமி.
பூவல் - செம்மண், சிவப்பு, துரவு.
பூவழலை - பூநீறு.
பூவன்வாழை - ஓர் வாழை.
பூவாளி - மன்மதன்.
பூவிதழ் - பூந்தோடு.

பூவிந்து - அப்பிரகம், வீரம்.
பூவிளம்-கற்பாஷாணம். (மூ.அ.)
பூவுலகு - பூமி.
பூவை - காயாமரம், நாகணவா ய்ப்புள், பெண்.
பூவைசியர் - வேளாளர், உழவர்.
பூவைவண்ணன் - மகா விஷ்ணு (காயாம்பூ மேனியன்.)
பூழான் - கவுதாரி, காணங்கோழி.
பூழி - குழைசேறு, புழுதி, கொடுந்தமிழ் நாட்டிஞென்று.
பூழியன் - சேரன், பாண்டியன்.
பூழில் - அகிலமரம், பூமி.
பூழை - துவாரம், சிறுவழி.
பூழ்க்கை - யானை.
பூழ்தி - புழுதி, தூசி, புலால்.
பூளை - இலவம்பஞ்சு, ஓர் செடி.
பூளைக்காஞ்சொறி - ஓர் செடி.
பூளைக்காலி - ஓர் செடி.
பூளைத்திசை - தென்கிழக்கு.
பூளைப்பிடுக்கன் - ஓர் செடி.
பூளைமயிர் - செம்மைகலந்த வெண்மயிர்.

## பே

பெங்கு - வெறிதருமொரு பான
பெடை - பறவைப்பெண். [கம்.
பெட்டகம் - பெட்டி.
பெட்டல் - ஆசைப்பெருக்கம்.
பெட்டார் - நண்பர்.
பெட்டி* - பேழை.
பெட்டிக்கோரை - ஓர் புல்.
பெட்டு - பொய்.
பெட்டை - பறவைப்பெண், பெண்பொது.
பெட்டைக்கண் - ஊனக்கண், [சிறு கண்.]
பெட்டையன் - ஆண்மையற்றவன்.
பெட்பு - அன்பு, ஆசை.
பெண் - ஸ்த்ரீ, [மனைவி, விலங்கின் பெண்பொது, கற்றூழை.]
பெண்கேட்டல்* - பெண்ணை மணம்பேசுதல்.
பெண்கொடி - பெண்.
பெண்கொடுத்தல் - பெண்ணை விவாகஞ் செய்துகொடுத்தல்.
பெண்சாதி* - மனைவி.
பெண்டர்-பெண்டகர் (அலியர்.)
பெண்டாட்டி* - மனையாட்டி.
பெண்டிர் - பெண்மகள், மனைவி.
பெண்டு - பெண்மகள், மனைவி, (மணிமே. 142.)
பெண்ணரசி - செல்வமுடையாள், விவேகமுள்ளவள்.
பெண்ணலம் - பெண்ணாலுண்டாகுமின்பம்.
பெண்ணீலி - துட்டை.
பெண்ணெடுத்தல்* - பெண்கொள்ளுதல்.
பெண்ணெழுத்து - ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் நெட்டெழுத்து.
பெண்ணை - ஓராறு, [பனைமரம், அனுடநாள்.]
பெண்பழி* - பெண்துரோகம்.
பெண்பிள்ளை - சிறுமி, பெண்.
பெண்புத்தி* - பேதைப்புத்தி.
பெண்பேசல்* - பெண்ணை மணம்பேசுதல்.
பெண்போகம் - ஸ்திரீபோகம்.

பெண்மை - பெண்டன்மை.
பெண்வகை - பெண் வகுப்பு நாலு அஃது பதுமினி சித்தினி சங்கினி அத்தினி.
பெண்வழி - பெண்ணைச்சார்ந்த உறவினர்.
பெதும்பை - பதினொரு வயதுப் பெண், பெண்பொது.
பெத்தகாலம் - இலயகாலம் (ஆன்மா ஒடுங்குங் காலம்.)
பெத்ததிசை - ஆன்மபாசத்திற் குட்பட்டிருக்குங் காலம்.
பெத்தரிக்கம்* - அகந்தை.
பெத்தர் - பாசத்துக்குள்ளானவர்கள்.
பெந்தம் - சம்பந்தம், கட்டு.
பெந்தை - அவலட்சணமாய்ப் பருத்தது.
பெந்தைக்கண் - பெரிய கண்.
பெந்தைக்கயிறு - கட்டையை மேழியோ டிணைக்குங்கயிறு.
பெம்மான் - உயர்ந்தவன், பெருமான்.
பெயரன் - பேரன், பாட்டன்.
பெயரிடுதல்*- நாமந்தரித்தல்.
பெயருதல் - நிலைவிலகுதல்.
பெயரெடுத்தல்* - கீர்த்தியடைதல்.
பெயரேடு-ஆளின்இனக்கணக்கு.
பெயர் - நாமம், [பெயரென்னே வல், பெருமை.]
பெயர்தல் - எடுபடல், போதல்.
பெயர்த்தல் - கிளப்புதல், வேறுபடுத்தல்.
பெயர்த்தி - பேத்தி.
பெயர்பிரஸ்தாபம் - கீர்த்தி.
பெயர்வழி - தலைமுறை, ஆள்.
பெயர்விளங்கல்* - கீர்த்தியுண்டாதல்.
பெயலை - மழை.
பெயல் - மழை, மழைத்துளி.
பெய்தல் - சொரிதல், போடுதல், விடுதல், அணியணிதல்.
பெய்துரை - பாயிரம்.
பெரிசு, பெரிது* - கனங்கொண்டது, பருத்தது.
பெரியகுணம்* - பெருந்தன்மை.
பெரியதனம்* - பெருந்தன்மை.
பெரியது* - பெரிது.
பெரியநங்கை - பிரியாணங்கை.
பெரியநாயகி - பார்வதி.
பெரியபிராட்டி - இலட்சுமி.
பெரியபுராணம் - அறுபத்துமூன்று நாயன்மார்கதை.
பெரியபுலு - நூறு.
பெரியப்பன்* - பெரியதகப்பன்.
பெரியமனம்* - உதாரமனம்.
பெரியம்மை*-ஓர் வைசூரிநோய்.
பெரியர், பெரியவர், பெரியோர்* - வயதில்முதிர்ந்தவர், மேன்மையுடையோர்.
பெரியாணங்கை - ஓர் பூடு.
பெரியாத்தாள்* ,பெரியாயி - பெரிய தாய்.
பெருகல் - பெருகுதல்.
பெருகாஞ்சொறி - ஓர் மருத்துப் பூடு.
பெருகு - தயிர், மிகுதியாகு.
பெருகுதல் - பாய்தல், மிகுதல்.
பெருக்கம் - செல்வம், மிகுதி, விசாலம், விருத்தி.

பெருக்கல் - துடைப்பத்தாற் கூட்டுதல், [நிறைத்தல், அதி கப்படுத்தல், மிகல், விசாலித் தல்.]
பெருக்கு - பெருக்கென்னேவல், வெள்ளம், செல்வமிகுதி.
பெருங்கடல் - சமுத்திரம்.
பெருங்கலையன் - ஓர் நெல்.
பெருங்காயம்* - ஓர் மருந்து.
பெருங்காரை - ஓர் மீன்.
பெருங்கால் - பெரிய வாய்க்கால், யானைக்கால், பெருங்காற்று.
பெருங்காற்று* - உரத்த காற்று.
பெருங்கிராமம் - ஐஞ்னூறு குடி கொண்டவூர்.
பெருங்கிழங்கு - ஈசுரவேர்.
பெருங்குடல் - ஓர் குடல்.
பெருங்குருகு - சக்கரவாகப்புள்.
பெருங்குறட்டை - காக்கணங் கொவ்வை, நித்திரையில் விடு ம் உரத்த மூச்சொலி.
பெருங்கோடணை - முரசு.
பெருச்சாளி* - ஓரெலி.
பெருஞ்சீத்தனார் - ஓர் சங்கப்புல வன். [கப்படல்.
பெருத்தல் - பருமையாதல், அதி
பெருநடை - உயர்ந்த நடை.
பெருநாள் - கொண்டாட்டமான விசேஷதினம், இரேவதிநாள்.
பெருநீர் - கடல்.
பெருநெருஞ்சி - ஓர் நெருஞ்சி.
பெருநெறி - நன்மார்க்கம்.
பெருந்தகை - பெருமையுடை யோன், அரசன்.
பெருந்தன்மை - மானம், மேன் மை.
பெருந்திணை - வழுவுடைக்காமம்.
பெருந்தீன் - பேருண்.
பெருந்தேவபாணி - இசைப்பாவ கையு ளொன்று.
பெருந்தேவனார் - பாரதம்பாடிய ஒரு சங்கப்புலவர்.
பெருப்பம் - பருப்பம்.
பெருமகன்-அரசன், சிறந்தோன்
பெருமக்கள் - பெரியோர்.
பெருமல்லிகை - ஓர் மல்லிகை இது தசமூலத்தொன்று.
பெருமன்* - பருத்தது.
பெருமா - யானை.
பெருமாட்டி - தலைவி.
பெருமாள்* - திருமால்.
பெருமான் - பெருமையிற் சிறந் தோன், திருமால், அரசன், குரு, மூத்தோன்.
பெருமிதம் - களிப்பு, மிகுதி.
பெருமுத்தரையர் - செல்வர், சொந்தப்பொருட்காரர்.
பெருமூச்சு - நெடுமூச்சு.
பெருமை -மாட்சிமை, ஆங்காரங் காட்டுதல், [பருமை.]
பெருமைபாராட்டுதல் - வீம்பு பேசுதல்.
பெரும்பஞ்சமூலம் - தழுதாழை, பாதிரி, பெருங்குமிழ், வாகை, வில்வம்.
பெரும்பற்றப்புலியூர்-சிதம்பரம்.
பெரும்பனையன் - வைசூரி வகை யிலொன்று.
பெரும்பாடு - தீட்டுதிரப்பெரு க்கு.
பெரும்பாந்தள் - ஓர் பாம்பு.
பெரும்பாலும் - மிகுதியும்.

பெரும்பாவி* - மிகுபாவி.
பெரும்பாழ்வெளி-சூனியவெளி, துவாதசாந்தம்.
பெரும்பான்மை - மிகுதி.
பெரும்பூழை-கதவிலிடும்வாயில்.
பெரும்பொங்கல்* - தைப்பொங்கல்.
பெருவழக்கு - பலராலும் வழங்கப்படுவது.
பெருவாஞ்சை - பேராசை.
பெருவாரி - கொள்ளைநோய்.
பெருவாழ்வு - மிக்க செல்வம்.
பெருவியாதி* - குஷ்டம்.
பெருவெளி-பரந்த வெளியிடம்.
பெருவெள்ளை - ஒருவகை நெல்.
பெலக்குதல்* - பலத்தல்.
பெலசாலி* - பலமுடையவன்.
பெலம்* - பலம்.
பெலவந்தம்* - பலவந்தம்.
பெலன்* - உறுதி, வலிமை.
பெலன்செய்தல் - வலிமைகொள்ளுதல்.
பெறுதல் - அடைதல், பிரசவித்தல், விலைப்படுதல்.
பெறுதி - இலாபம் (மணிமே. 232.)
பெறுமானம்*-பெறத்தக்க விலை.
பெற்றம் - பசு, காற்று, எருது, இடபவிராசி.
பெற்றார், பெற்றோர்* - தன்னையீன்றோர் (தாய்தந்தையர்.)
பெற்றி - குணம், தன்மை.
பெற்றிடல்* - பெறுதல்.
பென்னம்பெரிது - மிகப்பெரிது.

## பே

பே - மேகம், நுரை.
பேகடம் - ஓர்வகை மீன்.
பேகம் - தவளை.
பேகன் - ஆண் தவளை, கடைவள்ளலிலொருவன்.
பேகி - பெண்டவளை.
பேசாமை - மௌனம்.
பேசி - தசை, நரம்பு, முட்டை.
பேச்சாளி - பேச்சில் வல்லவன்.
பேச்சி - ஓர் பெண்பேய்.
பேச்சு - சொல், பாஷை.
பேச்சுவளர்த்தல்* - நீடிக்கப்பேசுதல்.
பேச்சுவார்த்தை* - மனதார ஒரு சொல் அல்லது மொழி.
பேடகம் - கூடை.
பேடாடல் - காமனுடல்.
பேடி - அலி, [பெண்ணுடு.]
பேடிகை - கூடை.
பேடிசம் - மயக்கு.
பேடு - அலி, [பறவைப்பெண், ஊர், மன்மதன்கூத்து.]
பேடை-பறவைப்பெண், கூடை.
பேட்டி* - பெரியோரது வருகைக்குக் காத்திருத்தல்.
பேட்டை - நகரத்தருகில் சந்தைகூடுமிடம், [பட்டைக்கரை.]
பேணல் - காத்தல், விரும்பல்.
பேணார் - பகைவர்.
பேதகம்* - பேதம்.
பேதம் - பகுப்பு, பகை, திரிபு, வேறுபாடு, மனமாறுகை.
பேதலித்தல் - வேற்றுமைப்படல், ஐயமுறல்.

பேதனம் - ஒரு மாற்றுவித்தை.
பேதாபேதம் - வேற்றுமையும் ஒற்றுமையும், [வேற்றுமைப் பொருள்களின் கூட்டம்.]
பேதாணு* - ஓர் விதை.
பேதி-கழிச்சல், [பிரிப்பது, இரசம், நேர்வாளம்.]
பேதிகாரி - பேய்க்கொம்மட்டி.
பேதித்தல் - வேற்றுமைப்படுத்தல்.
பேது - இரகசியம், [உன்மத்தம், மயக்கம், வருத்தம்.]
பேதுறவு - அறிவின்றிரிவு.
பேதை - அறிவிலான், [ஏழு வயதுப்பெண், தரித்திரன், பெண், கள்.]
பேதைமை - அறிவின்மை.
பேதையர் - அறிவீனர், கீழ்மக்கள்.
பேத்தி* - பேர்த்தி.
பேம் - அச்சம்.
பேயத்தி - ஓர் மரம்.
பேயன்* - மதிகேடன்.
பேயன்வாழை* - ஓர் வாழை.
பேயாழ்வார் - முதலாழ்வார் மூவருளொருவர்.
பேயூமத்தை* - மருளூமத்தை.
பேயோடாடி* - சிவன்.
பேயோட்டுதல்-பேயையகற்றல்.
பேய் - பிசாசம், மதிகெட்டது.
பேய்க்கண் - வெருண்டபார்வை.
பேய்க்கரும்பு* - ஓர் கரும்பு.
பேய்க்குணம்* - பேய்த்தன்மை.
பேய்க்கோலம்* - கோலக்கேடு.
பேய்ச்சாளை - ஓர் மீன்.
பேய்ச்சி*-பேய்க்குணமுள்ளாள்.
பேய்த்தண்ணீர் - மதுநீர்.
பேய்த்தனம்* - அறிவின்மை.
பேய்த்தும்மட்டி* - பேய்க்கொம்மட்டி.
பேய்த்தேர் - கானல் (பொய்த்தோற்றம்.)
பேய்நாய் - வெறிநாய்.
பேய்பிடித்தல்* - பிசாசுபிடித்தல்.
பேய்ப்பார்வை - மருட்பார்வை.
பேய்ப்பீர்க்கு - ஓர் பீர்க்கு.
பேய்ப்புடல், பேய்ப்புடோல் - ஓர் புடோல்.
பேய்ப்புத்தி* - மதியீனம்.
பேய்ப்புல் - சுணைப்புல்.
பேய்ப்போக்கு - ஒழுங்கீனமான நடை.
பேய்மகன் - துஷ்டன்.
பேய்மனம் - அங்கலாய்த்த மனம்.
பேய்முகம் - அவலட்சணமுகம்.
பேய்முசுட்டை - ஓர் கொடி.
பேய்வித்தை - சூனியவித்தை.
பேரடிபடுதல்* - பெயர் எங்கும் பரவுதல்.
பேரணிகலம் - பெரும்பதக்கம்.
பேரண்டம் - உலகம்.
பேரத்தி - கரிமுள்ளி.
பேரறிவு - ஞானம், மூதறிவு.
பேரன்* - பெயரன்.
பேராசை* - மிகுவாசை.
பேராண்மை - வீரம், அருஞ்செய்கை.
பேராந்தை - ஆந்தைவகை.
பேராமல்லி* - ஓர் மல்லிகை.
பேராமுட்டி - ஒரு கொடி.
பேராழம் - மிக்கவாழம்.

பேராளன் - எப்பொருட்குந்தலை வன், மிருகசீரிடநாள்.
பேரானந்தம் - அழிவிலின்பம்.
பேரி, பேரிகை* - முரசு (ஓர் வாச்சியம்.)
பேரிடி - முழக்கம்.
பேரிடுதல்* - நாமஞ்சூட்டுதல்.
பேரிளம்பெண் - நாற்பது வய துப்பெண்.
பேரின்பம் - பேரானந்தம்.
பேரீச்சு, பேரீஞ்சு, பேரீந்து - ஓர் மரம்.
பேருண்டி - பேருணவு.
பேரூர் - மேலைச்சிதம்பரம்.
பேரெடுத்தல்* - கீர்த்திபெறுதல்.
பேரேடு* - பெயர்கணக்கேடு.
பேரொலி - பெருஞ்சப்தம்.
பேர்* - பெயர்.
பேர்த்தல் - பெயர்த்தல்.
பேர்த்தி* - பௌத்திரி.
பேர்வழி* - ஆசாமி.
பேலுதல்* - மலங்கழித்தல்.
பேழை - பெட்டி.
பேழ்வாய் - பெருவாய்.
பேறு - இலாபம், வரம், செல் வம், கொடை, தகுதி.
பேறுகாலம் - பிரசவகாலம்.
பேனம் - நுரை.
பேன்* - தலையிற்பற்றும்பூச்சி.

## பை

பை - சாக்கு, [குடர், பாம்பின் படம், பசுமை, அழகு, நிறம்.]
பைக்கம் - பிச்சை.
பைங்கண் பசியகண்.
பைங்கண்மா - நாவி (சீவக. சிந். பக். 827).
பைங்கிளி - பச்சைக்கிளி.
பைங்கூழ் - பயிர், நோய்.
பைசல்* - தீர்ப்பு.
பைசாசநிலை - ஒரு காலில் நின்று பிறிதொருகாலை முடக்கி நிற் றல்.
பைசாசமணம் - அயர்ந்து நித்தி ரைசெய்பவளோடு சேர்தல்.
பைசாசம் - பிசாசம், ஓர் மணம்.
பைசாசி - பேய்ச்சி, சடாமாஞ் சில்.
பைஞ்ஞீலம் - பசிய நீலம், மக் கட்பரப்பு.
பைஞ்ஞீலி - ஓர் பட்டினம்.
பைஞ்ஞீல் - மக்கட்பரப்பு.
பைதல் - துன்பம், குழந்தை. (இரா.)
பைதிரம் - நாடு.
பைது - பசுமை, ஈரம். (கலி)
பைத்தல் - சினக்குறிப்பு, பசுமை யாதல், பாம்பு படம்விரித்தல்.
பைத்தியம்* - பயித்தியம்.
பைத்து - பசுமை.
பைந்தொடி - பச்சைவளையல், பெண்.
பைந்நாகம் - சர்ப்பம்.
பைபீலவாதம், பைபீலிகாவாதம் - எறும்புகளின் பேச்சறிதல்.
பைபீலிகை - எறும்பு.
பைமை - தவப்பெண், பசுமை.
பைம்பொன் - பசும்பொன்.
பையபைய - மெல்லமெல்ல.
பையல், பையன்* - சிறுவன்.
பையாப்பு - துன்பம். (புற.)

பையுள் - சிறுமை, துன்பம், நோய்.
பைரவம் - உட்சமயமாறினொன்று, அச்சம்.
பைரவன் - வயிரவன்.
பைரவி - ஓரிராகம், காளி.
பைராகி* - வைராகி.

பொ

பொகுட்டு - தாமரைக்கொட்டை, சேற்றிலெழுங் குமிழி, மலை.
பொக்சம், பொக்கிஷம்* - திரவியசாலை, திரவியம்.
பொக்கணம் - சோளி (ஓர்வகைப் பை).
பொக்கணி - ஓர் பானபாத்திரம், குழியுரல், விரிந்த தொப்புள்.
பொக்கணை - குழியுரல், கல்வளை, மரப்பொந்து
பொக்கம் - பொய், பொலிவு, மிகுதி, குற்றம். (விநா.)
பொக்கல்வாய்* - பொக்குவாய்.
பொக்கிஷகாரன் - பொக்கிஷ விசாரணைக்காரன்.
பொக்கு - பொந்து. (பிங்.), குற்றம்.
பொக்குவாய் - பல்லில்லாதவாய்.
பொக்கை - சிறு துளை.
பொக்கைவாய்* - பொக்குவாய்.
பொங்கடி - யானை.
பொங்கம் - பரிமளிப்பு, பொலிவு.
பொங்கர் - சோலை, மலை, மரக்கொம்பு, பழம், இலவமரம்.
பொங்கல் - சமைத்தல், உயர்ச்சி, பொலிதல், மிகுதி, கள்.
பொங்கழி - தூற்றுநெல்.
பொங்காரம் - மிகு துக்கம்.
பொங்குசனி - இரண்டாமுறை ஏழரையாண்டு இருக்குஞ்சனி
பொங்குதல் - சாதஞ்சமைத்தல், கொதித்துக் கிளர்தல், [கோபித்தல், பொலிதல்.]
பொசிதல் - கசிதல், நீரரும்பல்.
பொசித்தல்* - புசித்தல்.
பொசுக்குதல்* - சுடுதல்.
பொசுங்குதல்* - வெம்மையாற் றீய்தல். [போதல்.
பொசுபொசெனல் - வலியற்றுப்
பொச்சம் - தேங்காய்மட்டை, குற்றம், அவா, உணவு.
பொச்சாப்பு - பொல்லாங்கு, மறதி.
பொச்சு - பயனில்லாதது.
பொச்சை - கரிகாடு, புழுக்கூடு, சிறுமலை, தொப்பைவயிறு.
பொடி - சிறிது, சூரணம், புழுதி.
பொடிபண்ணல் - மாவாக்கல், சுண்ணமாக்கல்.
பொடியன்* - சிறுவன்.
பொடிவெட்டி - பொன் வெள்ளி முதலிய வெட்டுங் கத்திரிகை.
பொடுகன் - சிற்றாள்.
பொடுகு - சிறிது, தலைச்சுண்டு, பூடுவகை.
பொடுதலை* - ஓர் பூண்டு.
பொட்டணம், பொட்டலம் * - ஒத்தடமிடும் சிறு மூட்டை.
பொட்டிலுப்பு - வெடியுப்பு.
பொட்டு - தாலிப்பொட்டு, தானியப்பொட்டு, நெற்றித்திலகம், [ஓர் புழு, நுழைவழி.]

பொட்டுத்தாலி* - பொட்டு வடிவான மங்கலநாண்.
பொட்டெனல் - சீக்கிரக்குறிப்பு.
பொட்டை - கூசியகண், குருடு.
பொதி - மூட்டை, அம்பலம், ஓலைக்குடை, கரிகாடு, பூவரும்பு. பருமன், நிதி.
பொதிகாரன் - பொதிமாடு செலுத்துவோன்.
பொதிகை - பொதியம் (அகத்தியருறைவிடம்.)
பொதிசோறு - கட்டுச்சோறு.
பொதிதல் - திணித்தல், மூடுதல்.
பொதியமுனி - அகத்தியன்.
பொதியம் - தென்மலை.
பொதியவெற்பன் - பாண்டியன்.
பொதியில் - பொதியமலை, சபை.
பொதியெருது* - பொதியெடுக்கு மெருது.
பொதிர்தல் - மிகுதல், நடுங்கல்.
பொதிர்ப்பு - அச்சம், நடுக்கம்.
பொது - சாதாரணம்.
பொதுக்கட்டுதல் - நடுக்கட்டுதல்.
பொதுஸ்த்ரீ, பொதுப்பெண், பொதுமகள் - வேசி.
பொதுபொதெனல் - ஒலிக்குறிப்பு.
பொதும்பர் - மரச்செறிவு, மரப்பொந்து.
பொதுவர் - இடையர்.
பொதுவியர் - இடைச்சியர்.
பொதுவில் - அம்பலம்.
பொத்தல்* - துவாரம்.
பொத்தாறுகட்டை - ஏர்க்கால்.
பொத்திக்கரப்பன் - தண்டுக்கிரந்தி.
பொத்துதல் - அடித்தல், மூடுதல்.
பொத்துப்பொத்தெனல் - ஒலிக்குறிப்பு.
பொத்தை - பருமை, துவாரம்.
பொத்தைக்கால் - யானைக்கால்.
பொத்தையன் - நீர்ப்பிடியான தேகமுடையவன்.
பொந்தர் - ஓர்வகை நீர்ப்புள்.
பொந்தி - சரீரம், [மரவாள்.]
பொந்து* - மரப்பொந்து.
பொம்மலாட்டம்* - பாவைக்கூத்து.
பொம்மல் - சோறு, பொலிவு, மிகுதி.
பொம்மை* - பிரதிமை.
பொய் - அசத்தியம், [வேஷம், மரப்பொந்து. (பிங்.)]
பொய்கை - குளம், கோட்டான்.
பொய்கையார் - ஓர் புலவன்.
பொய்கையாழ்வார் - வைணவத்தில் முதலாழ்வார் மூவருளொருவர்.
பொய்க்கதை - கட்டுக்கதை.
பொய்க்கால் - போலிக்கால்.
பொய்க்குதல் - பொய்யாய்ப்போதல்.
பொய்க்குழி - நாற்று நட்டகுழி.
பொய்க்கூடு - பொய்ச்சரீரம்.
பொய்க்கை - போலிக்கை.
பொய்க்கோலம் - போலிவேஷம்.
பொய்ச்சத்தியம் - பொய்யாணை.
பொய்ச்சாட்சி - கள்ளச்சாட்சி.
பொய்தல் - தோழி, மகளிர்கூட்டம், மகளிர்விளையாட்டு.
பொய்ப்பத்திரம் - கள்ளச்சீட்டு.

பொய்ப்பூ - பிஞ்சுபிடியாதபூ.
பொய்முயக்கம் - அன்பிலாக்கூட்டம்.
பொய்ம்மை - பொய், போலி.
பொய்யடி - பகட்டு.
பொய்யாமை - பொய்மொழி கூறாமை.
பொய்யாமொழிப்புலவர் - திருவள்ளுவ நாயனார்.
பொய்யுடல் - நிலையற்றவுடல்.
பொய்வாழ்க்கை - அநித்திய வாழ்வு.
பொய்வேஷம் - போலிக்கோலம்.
பொரி - நெற்பொரி முதலியன, பொரியென்னேவல், [எருமைக்கன்று. (நன். (387, மயிலை), கரிந்த காடு.]
பொரிகாரம் - வெண்காரம்.
பொரிக்கறி - பொரியல்.
பொரிதல் - பொருக்கு வெடித்தல், தீதல்.
பொரித்தல் - பொரியச்செய்தல், வறுத்தல், குஞ்சுபிறப்பித்தல்
பொரிமா* - பொரியரிசிமா.
பொரியரிசி* - பொரித்தஅரிசி.
பொரியல் - பொரிக்கறி.
பொரிவிளங்காய் - பொரிமாவால் செய்த உருண்டை.
பொருகளம் - போர்க்களம்.
பொருகு - சோறு.
பொருக்கு - செதிள், சீக்கிரத்தின் குறிப்பு.
பொருட்சுவை - அருத்தரசம்.
பொருட்செல்வம் - திரவிய சம்பத்து.
பொருட்செல்வி - இலக்குமி.
பொருட்டு - காரணம், நிமித்தம்.
பொருட்பெண்டீர் - வேசிகள்.
பொருணி - கள். [மை.
பொருண்மை - பொருளின்தன்
பொருதல் - போர்செய்தல், ஒப்புதல், தடவுதல். (சீவக. சிந். 1495.) [கைக் கடிதம்.
பொருத்தக்கடுதாசி - உடம்படிக்
பொருத்தம் - இணக்கம், தகுதி.
பொருத்தல் - பொருந்தச்செய்தல், போர்மூட்டல்.
பொருத்தனை - பொருத்தம்.
பொருத்து - இணைப்பு, உடல், மூட்டு, மரக்கணு, ஒப்பந்தம்.
பொருநர் - படைவீரர், கூத்தர்.
பொருநை - தாம்பிரபர்ணிநதி.
பொருந்தர்-நெய்பவர்,மேதரவர்.
பொருந்தல் - சம்மதித்தல், அமைதல், கலத்தல்.
பொருப்பு - மலை, கொல்லிமலை.
பொருமல் - வீங்கல், அழுதல்.
பொருவ - உவமைச்சொல்.
பொருவாய் - ஓர் மீன்.
பொருவுதல் - ஒப்பாதல்.
பொருளாசை - திரவியவாசை.
பொருள் - பலபண்டம், [பிள்ளை, பொன், வாய்மை, சொற்பொருள்.]
பொலம், பொலன் - பொல்லாங்கு, அழகு, பொன், பொன்னி
பொலி - தூற்றுநெல். [றம்.
பொலிகடா - பட்டிக்கடா.
பொலிசை - இலாபம். (சீவக. சிந். 2546.)
பொலிதல் - புணர்தல், [எழுச்சி, மிகுதி.]

பொலிவு-அழகு, பொன், மிகுதி.
பொல்லம் - துண்டம், தைத்தல்.
பொல்லர் - சக்கிலியர், செம்மார், தையற்காரர்.
பொல்லாங்கு - தீங்கு, [மறதி.]
பொல்லாது - பொல்லாதது.
பொல்லாப்பு* - பொல்லாங்கு.
பொல்லாமணி - பொள்ளாமணி (துளையாமணி).
பொல்லார்* - தீயோர்.
பொல்லு - ஊன்றுகோல், (யாழ். அக), தடி, பதர்.
பொழிதல் - சொரிதல், ஈதல்.
பொழிப்பு-சுருக்கம், சிறப்புடையது.
பொழில் - சோலை, பூமி, நாடு, பெருமை, பூந்தோட்டம், உலகப்பொது.
பொழுது - காலம்.
பொழுதுசாய்தல்*, பொழுதுபடுதல் - சூரியனத்தமித்தல்.
பொழுதுபோக்குதல் - பராக்காகப் பொழுதுகழித்தல்.
பொழுதுவிடிதல்* - சூரியனுதித்தல்.
பொளிதல் - உளியாற் கொத்துதல், துளைத்தல்.
பொள்ளல் - பொளிதல், துவாரம், அம்மைவடு, குற்றம், மரப்பொந்து, அப்பவர்க்கம்.
பொள்ளெனல் - அனுகரணவோசை, சீக்கிரக்குறிப்பு
பொறுமை - மனஞ்சகியாமை, பொறையின்மை.
பொறி - அனற்பொறி, [அடையாளம், அறிவு, இலக்குமி, எழுத்து, ஐம்பொறி, செல்வம், தேமல், தோணி, புள்ளி, பொலிவு, பொறியென்னேவல், மதிலுறுப்பு, மூத்திரை, விரலிறை, இயந்திரம்.]
பொறிக்குதல் - பொறித்தல், எழுதல்.
பொறியறை - திருவிலி. (திரிக.)
பொறியிலி - அறிவிலி.
பொறுத்தல் - மன்னித்தல், [சுமத்தல்.]
பொறுப்பாளி, பொறுப்புக்காரன்-உத்தரவாதமுடையோன்
பொறுப்பு - தகுதி, பாரம், பொறுத்தல்.
பொறுமை - பொறுத்தல்.
பொறை - பொறுமை, சுமை, பூமி, மலை.
பொறையன் - சேரன், தருமன்.
பொற்காசு - பொன்னுணயம், [கொள்ளு.]
பொற்காரை - ஓர் கழுத்தணி.
பொற்கொல்லன் - கம்மாளன்.
பொற்சீந்தில் - ஓர் சீந்தில்.
பொற்பு - அழகு, அலங்கரிப்பு, மிகுதி, பொலிவு, தன்மை
பொற்றகடு - பொன்னின்தகடு.
பொற்றாமரை - மதுரையிலோர் தீர்த்தம்.
பொற்றை - சிறுதூறு, சிறுமலை, மலை, கற்பாறை, கரிகாடு.
பொற்றொடி - பொன்னாலாகிய தோள்வளை, பெண்.
பொன்-ஓர்நாணயம், [இலக்குமி, சூரியன், அழகு, பொலிவு, வியாழன், இரும்பு, செல்வம்.]

பொன்காத்தபூதம்* - புதையல் காத்த பூதம்.
பொன்செய்கொல்லர், பொன் வினைமாக்கள் - தட்டார்.
பொன்மயம்* - பொற்பிரகாசம்.
பொன்மலாம்* - பொற்பூச்சு.
பொன்மலை - திரிசிராப்பள்ளியில் தாயுமானவர் மலை, மேரு மலை.
பொன்மை - பொன்னிறம்.
பொன்வண்டு* - பொன்னிற வண்டு.
பொன்வண்ணத்தந்தாதி - சேரமான்பெருமானியற்றிய ஒரு நூல்.
பொன்வாய்ப்புள் - சிச்சிலிக் குருவி.
பொன்விலை* - அரியவிலை.
பொன்விலைமகளிர் - வேசையர்.
பொன்றல் - அழிதல், சாதல்.
பொன்னகர், பொன்னுலகு - தேவலோகம்.
பொன்னத்துப்பெட்டி - தாலி கூறை வைத்துச் செல்லுமொரு பெட்டி.
பொன்னப்பிரகம் - ஓரப்பிரகம்.
பொன்னம்பர் - ஓர் மருந்து.
பொன்னரிமாலை- ஓர் ஆபரணம்.
பொன்னவன் - இரணியன், வியாழன்.
பொன்னன் - பொன்னுடையவன், அருகன், வியாழன்.
பொன்னாங்கண்ணி, பொன்னாங்காணி* - ஓர் கீரை.
பொன்னாங்கொட்டை - பூவந்தி.
பொன்னாந்தட்டான் - ஓர் பட்சி.
பொன்னாவிரை* - ஓர் செடி.
பொன்னி - காவேரி, எட்டாம் பாட்டன்.
பொன்னித்துறைவன்-சோழன்.
பொன்னிமிளை - ஓர் கல்.
பொன்னுக்குவீங்கி - கூகைக் கட்டி.
பொன்னூமத்தை - ஒருமத்தை.
பொன்னெயிற்கோன் - அருகன்.

## போ

போகணி* - ஓர் பாத்திரம்.
போகஸ்திரீ - வேசி.
போகபூமி - கருமபலபூமி, விளைநிலம், தேவலோகம்.
போகபோக்கியம்* - அனுபவவின்பம்.
போகம் - இன்பம், அனுபோகம், செல்வம், சரீரம். (சப்த), பாக்கியம், விளைவு, [பாம்பினுடல்]
போகம்பண்ணுதல்* - சேர்தல்.
போகர் - ஒரு சித்தர்.
போகவதி - நல்லனுபவமுடையவள், நாகலோகம்.
போகவான்* - இன்பத்தை யனுபவிப்போன்.
போகி - ஓர் பண்டிகை, சுகமனுபவிப்பவன், [இந்திரன், கார் போகி விதை, பாம்பு, போகி யென்னேவல்.]
போகில் - பூவரும்பு, கொப்பூழ், பறவை.
போகு - நெடுமை. (சிலப்ப).
போக்கடி - அழிவு, நஷ்டம்.

போக்கடித்தல்- அழித்தல், இழத்தல்.
போக்கற்றவன்* - திக்கற்றவன்.
போக்கன் - துஷ்டன், வழிச்செல்வோன்.
போக்கிடம்* - ஒதுங்குமிடம்.
போக்கியம்- அனுபவப்பொருள், அனுபவம்.
போக்கிரி * - நாணய மில்லாதவன்.
போக்கிலி - கதியற்றவன்.
போக்கு - போகுதல், ஏதேனுமொன்று செல்லுந் துவாரம், வழி, விதம்.
போக்குக்காட்டுதல்* - தப்பித்தோட வழிதேடுதல்.
போக்குநீக்கு - பழக்கம், விவரம்.
போங்காலம்* - அழிவுகாலம்.
போசக்கை - வெளியலங்காரம்.
போசனகஸ்தூரி - நாரத்தங்காய்.
போசனக்குறடா - மிளகாய்.
போசனப்பிரியன் - மிகுதியாய்த்தின்பவன்.
போசனம் - உணவு, புசித்தல்.
போசன் - ஓர் மன்னன், [செல்வன்.]
போஷணம், போஷணை, போஷாப்பு* - பராமரிப்பு.
போஷித்தல் - ஆதரித்தல்.
போஷிப்பு* - பேணுதல்.
போஸ்தக்காய் - ஓர் மருந்துச்சரக்கு.
போடகம்-அம்மைக்கொப்புளம்.
போடம் - ஒரு தேசம்.
போடல் - அடித்தல், போடுதல், வைத்தல், எறிதல்.
போடுதல் - அணிதல், ஈனுதல்.
போட்டி* - எதிரிடை.
போணி* - போகணி, முதல் விக்கிரயம்.
போதகம் - உபதேசம், யானை, இளமை, சிங்கக்குட்டி, மரக்கன்று, யானைக்கன்று.
போதகன் - உபதேசி, உவாத்தி.
போதம்-ஞானம், யானைக்கன்று, பரணிநாள், மரக்கலம்.
போதரல் - போகுதல்.
போதல் - நீளப்போகல், திருப்தியாதல், அழிதல்.
போதனை* - கற்பனை.
போதன் - அறிவுடையோன், பிரமன், அருகன்.
போதா - பெருநாரை.
போதாக்குறைச்சல்*-இன்னமும் மிகுதியான குறைவு.
போதாந்தம் - ஞானமுடிவு.
போதாந்தன் - கடவுள்.
போதாமை - குறைவு.
போதி - அரசமரம், மலை, போதியென்னேவல்.
போதிகை - குறுந்தறி.
போதிகைக்கட்டை - தாழ்வாரந்தாங்கி.
போதித்தல் - புத்திசொல்லுதல், கற்பித்தல்.
போதிவேந்தன் - புத்தன், மலையரசன்.
போது - காலம், பூ, பூவலரும் பருவத்தரும்பு.
போதுகாலம்* - பிள்ளைபெறுங்காலம்.
போதை - மயக்கம், [மூதறிவு].

போதைப்புல் - காவட்டம்புல்.
போத்திரி - பன்றி.
போத்து - எருமைக்கடா, மரக்கன்று, விலங்கின்படுக்கை.
போந்தின்ரூரோன் - சேரன்.
போந்து, போந்தை-அனுடநாள், இளம்பனை, பனை.
போம் - அச்சம், ஓரசைச்சொல்.
போராடுதல் - மலைதல்.
போராட்டம் - தொந்தரவு செய்தல், போர்பண்ணல்.
போரிடுதல்* - சண்டைபிடித்தல்.
போரேறு - செவ்வாய்.
போர் - யுத்தம், நெற்போர், [சதயநாள்.]
போர்க்கதவு - இரட்டைக்கதவு.
போர்க்களம் - யுத்தகளம்.
போர்க்கறைகூவல் - போருக்கழைத்தல்.*
போர்க்கோலம் - போர்க்குரிய உடைதரித்தல்.
போர்த்தல்* - மூடுதல்.
போர்ப்பறை - இரணபேரிகை.
போர்மடந்தை - துர்க்கை.
போர்முகம், போர்முனை - படைமுகம்.
போர்வீரன்* - சமரில் வல்லான்.
போர்வை - மேற்போர்வை, [தோல், மூடுதல்.]
போலி - சாயல், கள்ளத்தன்மை, ஒட்டகம்.
போல் - பொந்து, மூங்கில், ஓர் உவமைச்சொல், பதர்.
போழ்தல் - பிளத்தல்.
போழ்து - பொழுது, காலம்.
போழ்முகம் - பன்றி.
போழ்வு - பிளப்பு.
போளம் - ஓர் வாசனைப்பண்டம்.
போளி* - அப்பவருக்கத்தொன்று.
போறை* - பொந்து.
போற்றலர், போற்றார் - பகைவர்.
போற்றுதல் - புகழ்தல், காத்தல், வணங்கல், துதித்தல்.
போனகச்சட்டி - சாதமெடுக்கும் பாத்திரம்.
போனகம் - சோறு.
போனபோக்கு * - நேரிட்டபடி.
போனு, போன்* - எலிபிடிக்குங் கூடு.
போன்ம்-போலும். (மணிமே.92)

## பௌ

பௌஞ்சு - சேனை.
பௌஷம் - தைமாதம்.
பௌடிகம் - இருக்குவேதம்.
பௌடியம், பௌஷியம் - அட்டாதசபுராணத்தொன்று.
பௌண்டிரம் - ஓர் தேயம்.
பௌதிகம் - பூதியத்துக்கடுத்தது.
பௌதீகம் - உலகம்.
பௌத்தம் - புத்தமதம்.
பௌத்தர் - புத்தர்.
பௌத்தன் - புத்தசமயத்தினன்.
பௌத்தி - மரணம்.
பௌத்திரர் - பெயரமார்.
பௌத்திரன் - மகன்மகன்.
பௌத்திரி - பெயர்த்தி.
பௌமன் - செவ்வாய்.

பௌரணமி, பௌர்ணிமி* - பூரணை.
பௌரணை - பூரணை, மரக்கன்று.
பௌரவர் - குருகுலவேந்தர்.
பௌருஷம் - புருஷத்தன்மை.
பௌலோமி - இந்திராணி.
பௌவம் - கடல், நீர்க்குமிழி, நுரை, பூரணை, மரக்கனு.
பௌளி - ஓரிராகம், பூபாளன் மனைவி.

ம

ம - யமன், சிவன், பிரமன். திருமால்.
மக - இளமை, மகன். [மால்.
மகடூஉ - பெண்.
மகடூஉக்குணம் - பெண்டன்மைக்குரியகுணம்.
மகண்மா - சிறுபெண் வடிவம் போலத் தோன்றும் ஒரு மிருகம். (தணிகை)
மகதம் - தேயமைம்பத்தாறி ஞென்று, பதினெண்பாடையி ஞென்று.
மகதி - நாரதன்வீணை, திப்பிலி.
மகத்து - பெரியது, அதிகமானது, பெரியவர்.
மகத்துவம்* - மேன்மை.
மகப்பால்வார்த்தல் - அனுதபிள்ளைக்குப் பாலூட்டல்.
மகமது* - மக்காஸ்தலத்திருந்த மகமதியரின் ஆதிகுரு.
மகமாரி* மகாமாரி - துர்க்கை.
மகமேரு - மகாமேரு.
மகமை - தருமக்கொடை.
மகம் - ஓர் நாள், யாகம்.
மகரகண்டிகை - மகரதோரணம்.
மகரகுண்டலம் - மகர வடிவாய்ச் செய்த ஒரு காதணி.
மகரகேதனன், மகரக்கொடியோன், மகரத்துவசன் - மன்மதன்.
மகரதோரணம் - மகரமீன் வடிவம்போன்ற தோரணம்.
மகரந்தம் - தேனீ, தேன், கள், பூந்தாது, தேமாமரம்.
மகரப்பகுவாய் - சுறுவினது வாய்போலச்செய்யப்பட்ட ஒரு தலைக்கோலம். (கந்த.)
மகரமாதம் - தைத்திங்கள்.
மகரம் - ஓரிராசி, சுறுமீன், தேவருலகு, பூந்தாது, முதலை.
மகரயாழ் - நால்வகையாழி ஞென்று.
மகரயூகம் - ஒரு படைவகுப்பு. இது மகரரூபமாக வகுக்கப்படுவது.
மகரவாய்மோதிரம் - கால்விரலணி.
மகராசன்* - பாக்கியவான்.
மகராசி* - பாக்கியவதி.
மகராலயம், மகராலயம் - கடல்.
மகரிகை - மகர தோரணம், தந்தப்பூண்.
மகரிஷி - பெரியரிஷி.
மகலோகம் - மேலேழுலகிஞென்று.
மகவான் - இந்திரன்.
மகவு - மகன், கோட்டில்வாழ் விலங்கின் பிள்ளை.
மகளிர், மகளீர் - பெண்கள்.
மகள் - புத்திரி, [பெண்].
மகன் - புதல்வன், [புருஷன்.]

மகன்றில் - நீர்வாழ் பறவைகளு ளொன்று. (சீவ. சிங்.)
மகா - பெருமையான, உயர்ந்த, மிகுந்த, அளவிலாத.
மகாகபித்தம் - வில்வமரம்.
மகாகர்வம் - பத்திலட்சங்கோடி.
மகாகிதி - கோடிகோடாகோடி.
மகாகோணி - இலட்சங்கோடா கோடி.
மகாசங்கம் - ஆயிரங்கோடா கோடி, எலும்பு, நெற்றி.
மகாசேனன் - முருகன், புத்தன்.
மகாசைவம் - ஓர் சைவம்.
மகாசோபம்- நூறுகோடி கோடா கோடி.
மகாதலம் - கீழேழுலகிலொன்று.
மகாதேவன் - கடவுள், சிவன்.
மகாதேவி - துர்க்கை, பார்வதி.
மகாத்துமா* - அறிஞன், உன் னத புருஷன்.
மகாநதி - கங்கை.
மகாநாடு* - பெரியோர் பலருங் கூடுஞ்சங்கம்.
மகாநுபாவன்* - மகாத்துமன்.
மகாபகை - பெருநதி.
மகாபதுமம் - பத்துக்கோடாகோ டி, குபேரனவநிதியிலொன்று.
மகாபதுமன் - அட்டநாகத் தொன்று.
மகாபலம் - தெங்கு, கொளிஞ்சி.
மகாபலி - பலிச்சக்கரவர்த்தி.
மகாபிரபு* - சீமான்.
மகாபுருஷன் - உத்தமபுருஷன்.
மகாமகம்- பன்னீராண்டிற்கொரு முறை மாசிமகத்தில் வரு மொரு புண்ணியதினம்.
மகாமாயி - துர்க்கை.
மகாமாயை - பஞ்சமாயையிலொ ன்று, பார்வதி.
மகாமுனி - அகத்தியன், வசிட் டன், வியாசன்.
மகாமேரு - பொன்மலை.
மகாயுகம் - நாலுயுகங்கூடின நாற் பத்துமூன்றிலட்சத் திருபதி னாயிரம் வருடம்.
மகாரதன் - பதினோராயிரந் தேர் க்குத் தலைவன்.
மகாராசன் - குபேரன், யானை கட்டி வாழ்பவன், கவலையி லான்.
மகாராட்டிரம் - ஓர் தேசம், ஓர் பாடை.
மகார் - பிள்ளைகள்.
மகாலட்சுமி* - ஸ்ரீமந்நாராயணனி ன் பிராட்டியார்.
மகாலிங்கன்* - சிவன்.
மகாலோகம் - மேலேழுலகிலொ ன்று.
மகாவீரன் - அக்கினி, வீரருள் தலைவன், கருடன்.
மகி, மகீ - பூமி.
மகிடமர்த்தினி - துர்க்கை.
மகிடம், மகிஷம் - எருமை.
மகிடற்செற்றாள் - துர்க்கை.
மகிடாசுரன் - ஓர் அசுரன்.
மகிதலம் - பூமி.
மகிபதி, மகிபன் - அரசன்.
மகிமா - மிகவும் பருத்தல் அஃது அட்டசித்தியிலொன்று.
மகிமை* - பெருமை, [கனம்.]
மகிழ் - ஓர் மரம், களிப்பு, மகி ழென்னேவல்.

மகிழ்ச்சி* - களிப்பு, இன்பம்.
மகிழ்நன் - புருடன், மருதநிலத் தலைவன்.
மகிழ்வு - இன்பம், சந்தோஷம்.
மகீசுதை - சீதை.
மகீதலம் - பூமி.
மகீபதி, மகீபன் - அரசன்.
மகுடபங்கம் - கிரீடாவமானம்.
மகுடம் - தலையணி, முடி.
மகுடராமக்கிரியம் - ஓர் பண்.
மகுடவர்த்தனர் - முடிதரிக்கு மன்னர்.
மகுடாதிபதி - கிரீடதாரி.
மகேசன், மகேசுவரன், மகேச்சுரன், மகேச்சுவரன் - எல்லாம்வல்ல கடவுள்.
மகேசுவரி, மகேச்சுவரி - இலட்சுமி, பார்வதி.
மகேந்திரசாலம்-ஓர் மாயவித்தை அது அறுபத்துநான்கு கலைஞானத்துளொன்று.
மகேந்திரம் - ஓர் நகரம், ஓர் மலை.
மகேந்திரன் - இந்திரன்.
மகைசுவரியம் - பெருஞ்செல்வம்.
மகோததி - கடல்.
மகோதரம் - ஓர்நோய், பெருவயிறு, பூதம். (பிங்.)
மகோதரன் - இராவணன் மந்திரிகளிலொருவன்.
மகோற்சவம் - திருவிழா.
மகோன்மதம் - மருள்வெறி.
மக்கம்* - நெய்வார்தறி.
மக்களித்தல் - திரும்புதல், புரளுதல்.
மக்களிப்பு - மக்களித்தல்.
மக்கள் - மனிதர், பிள்ளைகள்.
மக்கன் - அறிவிலாது பருத்திருப்பவன்.
மக்காச்சோளம்- பெரியசோளம்.
மக்கு* - அடைமண், மந்தகுணம்.
மங்கலஸ்நானம் - மங்கலகாரியத்திற்கு முழுகுதல்.
மங்கலமொழி - சுபவார்த்தை.
மங்கலம் - சுபம், [தருமம், பொலிவு, தகனபலி, சந்தனம்.]
மங்கலவாரம் - செவ்வாய்க்கிழமை, நல்ல நாள்.
மங்கலன் - செவ்வாய், நாவிதன்.
மங்கலியம்* - தாலி.
மங்கலை - இலட்சுமி, கற்புடையவள், உமை, அம்பட்டத்தி.
மங்கல் - ஒளியின்மை, கெடுதல்.
மங்களம் - சுபகாரியம், வாழ்த்து.
மங்களாதேவி - இலட்சுமி.
மங்கிணி - மண்ணுணி (மந்தன்).
மங்கிலியம்* - மங்கலியம் (தாலி).
மங்குங்காலம் - துன்பகாலம்.
மங்குசனி - முதன்முறை ஏழரையாண்டு மட்டுமுள்ள சனி.
மங்குதல்-கெடுதல், மழுங்குதல்.
மங்குலம், மங்குளம் - கலக்கம், மந்தாரம், இருள்.
மங்குல் - இரவு, இருள், மேகம்.
மங்கை - பதின்மூன்று வயதுப் பெண், [கற்றாழை.]
மங்கைபங்கன், மங்கைபாகன் - சிவன்.
மங்கையர்க்கரசியார் - சீர்நெடுமாறநாயனாரின் தேவியாராகிய சிவனடியார்.
மசகம் - கொசுகு.
மசக்குதல்* - மயக்குதல்.

மசக்கை* - கருப்பமசக்கு.
மசக்கைக்காரி* - கருப்பஸ்திரீ.
மசங்குதல் - மயங்குதல்.
மசமசெனல்*-தினவுகொள்ளல்.
மசாலை* - சம்பாரம்.
மசால், மஷால்* - தீவர்த்தி.
மசானம்* - மயானம்.
மசி, மஷி* - மை.
மசிதல்* - நசிந்துகுழைதல்.
மசிர்* - மயிர், [அறுகு.]
மசீது* - பள்ளிவாசல்.
மசூதி* - மசீது.
மச்சகந்தி - வியாசன்தாய் இவள் நுளையர்குலத்துப்பெண்.
மச்சதேசம் - விராடபுரம்.
மச்சம் - ஒரு புராணம், ஒரு தேயம், மாற்றுநிதானமறிய வெட்டி வைத்திருக்கும் பதிற்பொன், மீன், மீனராசி.
மச்சான்* - மைத்துனன்.
மச்சி - மச்சுனி, [பூனைக்காலி.]
மச்சிகை* - மோர்.
மச்சினச்சி, மச்சினி, மச்சினிச்சி* - மைத்துனி.
மச்சினன், மச்சுனன்* - மைத்துனன்.
மச்சு - மேனிலை, [சுவர்க்குமேல் வெளியடைப்பு, குற்றம்.]
மச்சுவீடு* - மச்சடைத்த வீடு.
மச்சுனி - மைத்துனி
மச்சை - மூளை, மீனம்பர், எலும் பின்சாரம்.
மஸ்டு* - வண்டல்.
மஸ்தகம், மத்தகம் - யானையின் நெற்றி.
மஸ்தான்* - ஞானவெறியன்.
மஞ்சட்காப்பு - மஞ்சட்பொடிச் சாந்து.
மஞ்சட்காமாலை - கண்ணில் வருமொரு வியாதி.
மஞ்சட்டி, மஞ்சிட்டி-ஓர் கொடி, ஓர் சாயவேர்.
மஞ்சட்பூச்சு - மஞ்சட்குளிப்பு.
மஞ்சணீர்ச்சீட்டு - வளர்ப்புப் பிள்ளையைச் சுதந்தரத்திற்கு உரித்தாக்குஞ் சீட்டு.
மஞ்சணீர்ப்பிள்ளை - சுதந்தரத்திற்குரிய வளர்ப்புப் பிள்ளை.
மஞ்சம் - கட்டில், சப்பரம்.
மஞ்சரி - பூங்கொத்து, பூமாலை, தளிர், மலர்க்காம்பு, நாயுருவிச்செடி, துளசி. (சப்த)
மஞ்சலிக்கான், மஞ்சிலிக்கான் - உருத்திரசடைப்பூடு.
மஞ்சளாலாத்தி* - ஆலாத்திகளிலொன்று.
மஞ்சனச்சாலை - குளிக்குமறை.
மஞ்சாடி - ஓர் மரம், இரண்டு குன்றிமணிகொண்ட நிறை.
மஞ்சாளி* - வயிர நிறுக்குநிறை.
மஞ்சி - பேழை, சிறுவரம்பு, படகு.
மஞ்சிகம்-பெட்டி, தாளிக்கொடி.
மஞ்சிகன் - நாவிதன்.
மஞ்சிகை - பேழை, குண்டலம், தாளிக்கொடி, கரிசாலை.
மஞ்சிட்டி - நுணுவேர்ப்பட்டை.
மஞ்சில் - பழைய வரம்பின்வழி.
மஞ்சு - அழகு, மேகம், பனி, களஞ்சியம், வலி, இளமை, கட்டில், யானை, முதுகு, ஆபரணம்.

மஞ்சுகம் - கொக்கு.
மஞ்சுலம் - நீர்ப்பாய்ச்சல்.
மஞ்சுளம் - அழகு, மிருது.
மஞ்சூடை - பேழை, கூடை.
மஞ்சூரம் - கடலை.
மஞ்ஞை - மயில்.
மஞ்ஞையூர்தி - முருகன்.
மடக்கடி* - தந்திரம்.
மடக்கு - முடக்கு, மடிப்பு, தடு வென்னேவல், [மட்பாத்திரம், மாறிமாறிவருதல்.]
மடக்குதல் - மடக்கல்.
மடக்குமடக்கெனல் - ஒலிக்குறிப்பு.
மடக்கொடி - பெண்.
மடங்கடித்தல்* - தோற்றோடச் செய்தல்.
மடங்கலர் - பகைவர்.
மடங்கல் - முடங்கல், [வியாதி, சிங்கம், இடி, இயமன், தாழை, ஊழித்தீ, யுகமுடிவு.]
மடங்கு - அளவு, [பங்கு, இழைக்கயிறு, வியாதி.]
மடத்தனம்* - அறியாமை.
மடநடை - பதவிய நடை.
மடநல்லார் - பெண்கள்.
மடந்தை - பெண், [பத்தொன்பது வயதுப் பெண்.]
மடப்பம் - ஐஞ்ஞூறு கிராமத்துக்குத் தலைக்கிராமம்.
மடப்பளி* - சமையல்வீடு.
மடமடெனல்* - ஒலிக்குறிப்பு.
மடமை - அறிவின்மை.
மடம் - முனிவர்வாசம், தருமசாலை, சத்திரம், வேதம்படிக்குமிடம், [அறிவின்மை, அழகு. (சிலப்.)]
மடலூர்தல், மடலேறுதல் - பனைமட்டைக் கங்குவாற் செய்த குதிரைமேலேறித் தெருத்தெருவாய்ச் சுற்றுதல்.
மடல் - ஓலைமடல், காதின்மடல், சிறுவாய்க்கால், ஈந்து கமுகு தாழை தெங்கு பனை வாழையிவற்றின் பூமுடி, பனைமட்டைக்கங்கு, ஓர் பிரபந்தம்.
மடவரல் - இளம்பெண்.
மடவாமீன்* - ஓர் மீன்.
மடவார் - பெண்கள், அறிவீனர்.
மடவை - ஓர் மீன், [துடுப்பு.]
மடவைக்கெண்டை* - ஓர் மீன்.
மடன் - அறிவிலான், உன்மத்தம்.
மடாதிபதி - மடத்துத் தலைவன்.
மடாரெனல்* - ஒரொலிக்குறிப்பு
மடி - மடியென்னேவல், முலை மேற்றிரள், வயிறு, வஸ்திரம், [சோம்பல், பொய், மடிந்தது, கேடு, தாழை, விழுது.]
மடிக்குதல் - மடக்குதல், கொல்லுதல்.
மடிதல் - சாதல், கெடுதல்.
மடித்தல் - மடிக்குதல்.
மடிபிடி - மடிச்சீலையிற்பிடிக்கும் பிடி.
மடிப்பிச்சை * - மடிச்சீலையில் வாங்கும் பிச்சை.
மடிப்பு - மடித்திருப்பது, மடக்கு, மோசம்.
மடிமாங்காய்போடுதல் - பொய்க்குற்றஞ் சார்த்துதல்.
மடிமை - சோம்பு.
மடியில் - கூடாரம். (சேது.)

மடிவிடுதல்* - மடி தளர்தல் அது பசு முதலியவற்றின் சினைக் குறிகாட்டல்.
மடிவு-கேடு, தரித்திரம், சோம்பு.
மடு - ஆற்றினுட் பள்ளம், நீர் நிலை,[உட்புகுவென்னேவல்.]
மடுத்தல் - நிறைத்தல், உட்கொள்ளல்.
மடை - நீர்பாயும் வழி, [மதகு, வாய்க்கால், துவாரம், ஆபரணக் கடைப்பூட்டு, சோறு.]
மடைத்தலை - மடைமுகம்.
மடைத்தனம் - அறிவீனம்.
மடைபரவுதல் - நிவேதனஞ்செய்தல்.
மடைப்பள்ளி - அடுக்களை.
மடைமாற்றுதல் * - மற்றொரு பக்கமாக மடையை வெட்டி விடுதல்.
மடைமுகம் - ஆற்றுவரம்பு.
மடையசாம்பிராணி * - அறிவீனன், ஒரு வாசனைப்பொருள்.
மடையன் - அறிவிலான், [பாகஞ்செய்பவன்.]
மடையான்* - ஓர் பறவை.
மட்கலம்* - மண்பாண்டம்.
மட்கல் - மட்குதல்.
மட்குதல் - அழுக்கேறல், [ஒளி மழுங்கல்.]
மட்டக்கோல் - மட்டங்கட்டுங் கோல்.
மட்டங்கட்டுதல் - சரியாய் நிறுத்தல், நிதானம்பண்ணல்.
மட்டத்துருத்தி - ஓர் விசிறி.
மட்டப்பலகை* - சமனறிகருவி.
மட்டம்-வாலக்குதிரை, [அளவு, எல்லை, ஒப்புரவு, குறைவு, உத்தேசம், கேடகம், மூன்றொத்துடையதாளம். (சிலப்)]
மட்டி - மதிகேடன், பரும்படி, [ஒழுங்கின்மை, படைக்கலம்]
மட்டித்தையல்- பருக்கன்தையல்
மட்டியம் - ஓர் தாளம்.
மட்டு - அளவு, [எல்லை, கள்.]
மட்டுத்திட்டம் - சரிநிதானம்.
மட்டுப்படாமை - அடங்காமை.
மட்டுப்படுதல் - அளவுபடுதல்.
மட்டுப்படுத்தல் -அளவுபடுத்தல்.
மட்டுமரியாதை* - ஆசாரவுபசாரம்.
மட்டுமிஞ்சுதல் - அளவுமீறுதல்.
மட்டை - கமுகு தெங்கு வாழை பனை யிவற்றின் மட்டை, [உடற்குறை, முட்டாள்.]
மட்டைத்தேள் - பிள்ளைத்தேள், திருநீலகண்டன்.
மட்பாண்டம் - மண்ணாற்செய்த பாத்திரம்.
மணக்கோலம் - கலியாணவலங்காரம்.
மணங்கல் - பானை, மிடா.
மணங்கு - ஓர் நிறை, [ஆட்டுக்குட்டி, இருவாட்சி.]
மணத்தக்காளி* - ஒரு செடி.
மணத்தல் - கமழ்தல், [கூடல், கலியாணம்பண்ணுதல்.]
மணப்பு - வாசனை.
மணப்பொருத்தம் - விவாகத்திற்குரியபொருத்தம்பத்து அவை இராசி, இராசித்தலைவர், இரைச்சு, கணம், திரிதீர்க்கம்,

தினம், மாகேந்திரம், யோனி, வசியம்,வேதம்.
மணமகள் - கலியாணப்பெண்.
மணமகன்- கலியாணமாப்பிள்ளை
மணம் - வாசனை, [கூட்டம், கலியாணம்.]
மணலி-ஒரூர், [மருக்கொழுந்து.]
மணலை - ஒரு மீன்.
மணல்* - வெள்ளைமண்.
மணல்வாரி - ஓர் நெல், [மணல் நீக்குங் கருவி.]
மணவாளன் - நாயகன், [ஆண் மகன்.]
மணவினை - விவாகச்சடங்கு.
மணவை - அடுப்பு.
மணற்குன்று - மணற்றிட்டை.
மணாளன்-நாயகன், [ஆண்மகன்.]
மணி - அடிக்குமணி, இரண்டரை நாழிகைகொண்ட நேரம் = அறுபது நிமிஷப்போது, உருத்திராக்கம், கண்விழி, நவமணிப்பொது, நென் முதலிய தானியம், [அழகு, முத்து, கறுப்பு, தாமரைக்கொட்டை, ஓசை, பெண்குறியினுருப்பு, பறவையின் கழுத்தாரம்.]
மணிகண்டன் - சிவன்.
மணிகர்ணிகை, மணிகன்னிகை- காசியிலுள்ள ஒரு தீர்த்தம்.
மணிகாசம்-கண்ணோயுளொன்று
மணிகூடம் - ஓர் பர்வதம்.
மணிக்கட்டு* -கையினுருப்பு.
மணிக்கிரீவன் - குபேரனினொருமகன்.
மணிக்குடர்* - சிறுகுடல்.
மணிக்கூடு - கடிகாரக்கூடு.
மணிச்சட்டி - பெருஞ்சட்டி.
மணித்தக்காளி - ஓர் செடி.
மணிநீர் - சந்திரகாந்தநீர்.
மணிபத்திரன் - ஓர் ஜைனபோதகன்.
மணிபிடித்தல் - தானியம்பிடித்தல்.
மணிபூரகம் - ஆறுதாரத்துளொன்றாகிய நாபித்தானம்.
மணிபூரம் - உந்தி.
மணிப்புறா* - ஓர் புறா.
மணிமங்கலம் - ஒரூர்.
மணிமண்டபம் - இரத்தினமண்டபம்.
மணிமாலை - கழுத்தணிமாலை, முத்துவடம், ஒரு பிரபந்தம்.
மணிமேகலை - பஞ்சகாவியத்தொன்று, மாதவி வயிற்றிற் பிறந்த ஒரு தவமாது
மணியகாரன்*-விசாரணைகாரன்.
மணியம்* - மணியவேலை.
மணியாசம் - மணியாசப்பலகை.
மணியாசிக்கட்டை* - சாந்தழுத்தும் பலகை.
மணியீரல்* - ஓரீரல்.
மணிவடம் - இரத்தினமாலை, முத்துமாலை, [வீரக்கழல்.]
மணிவேர் - மணிபோலிடையிடை திரண்டுள்ள வேர்.
மணீசகம் - சந்திரகாந்தம்.
மணை - சிறுபீடம், [மழுங்கலாயுதம், மழுங்கல், பருத்திமணை.]
மண் - தூள், பூமி, முழவின் மார்ச்சனை, [சுட்டசாந்து,

அணு, மாட்சிமை, ஒப்பனை, மண்ணென்னேவல்.]
மண்கவண - குடமுழவு.
மண்கலம் - மட்பாண்டம், ஓடு.
மண்கிணறு*-கற்பாரற்றகிணறு
மண்கும்பம் - மண்மேடு.
மண்சீலை* - குகையைச் சுற்றுவதற்கு மண்தோய்த்த சீலை.
மண்டகம் - சர்க்கரை போடாத கோதுமைப் பூரி.
மண்டகாரகன் - சாராயம் வடிப்போன்.
மண்டக்கம், மண்டக்கு - முத்துக்குளிப்பவர்களை யிழுக்குங் கயிறு.
மண்டபப்படி - திருவிழாவில் சுவாமி தங்குமிடம், திருநாட் சிறப்பு.
மண்டபம் - கோயில்மண்டபம், [சத்திரம்.]
மண்டம்-தயிரேடு, அலங்காரம், ஆமணக்கு, தலை.
மண்டயிலம் * - மண்ணிலூறுந் தயிலம்.
மண்டலபுருடன் - சூடாமணி நிகண்டு இயற்றியவன்.
மண்டலமாக்கள் - அரசர்.
மண்டலமிடுதல் - சுற்றிச்சுற்றி வருதல், வட்டமிடுதல்.
மண்டலம்-சூரியமண்டலம் முதலியன, நாற்பதுநாள் கொண்டது, [வட்டம், உண்டை, [இருகாலும் பக்கல் வளைய நிற்குநிலை, தேயம், நாடு, பூமி, இயந்திரம், நகக்குறி.]
மண்டலாகாரம் - வட்டவடிவு.
மண்டலாதிபதி,மண்டலாதிபன்- ஏகசக்கராதிபதி.
மண்டலி - ஒருவகைப் பாம்பு, பூனை, நாய், பூமி, கூட்டம்.
மண்டலிக்க - வட்டமிட.
மண்டலீகர் - அவ்வத்தேசத்தை யாளுமரசர்.
மண்டலேசன், மண்டலேசுவரன் - மண்டலாதிபதி.
மண்டல் - நெருங்கல், மிகல்.
மண்டா - இரட்டைக் கருவீட்டி (இது பன்றி முதலியவற்றைக் குத்த உதவும்.)
மண்டி-இருகால்முடக்கி நிற்கும் நிலை, பெரியகடை, [கள் முதலியவற்றி னடிவண்டல்.]
மண்டிகை - அப்பவர்க்கம்.
மண்டிபோடுதல்,மண்டியிடுதல்*- இருகால் முடக்கிநிற்றல்.
மண்டிலம் - வட்டம், [குதிரை, நடனம், நாடு, போர், ஆதித்தன். (சிலப். 14 : 104.)]
மண்டுகம், மண்டூகம் - தவளை.
மண்டுதல் - நெருங்கல், மிகக் குடித்தல், மிகுதியாதல்.
மண்டூகர் - ஓரிருடி.
மண்டூரம் - இருப்புக்கறள்.
மண்டெரி - பெருந்தீ.
மண்டை - தலையோடு, [இரப்போர்கலம்.]
மண்டைக்கரப்பான் - ஓர் நோய்.
மண்டைக்குடைச்சல் * - தலைக் குத்து.
மண்டைசூலை - ஓர் நோய்.
மண்டைப்பீனசம் - ஓர் நோய்.
மண்டையோடு* - தலையோடு.

மண்டோதரி - இராவணன் மனைவி.
மண்ணம் - சுட்டசாந்து.
மண்ணரிவான் - குயவன்.
மண்ணவர் - மனிதர்.
மண்ணன் - மதிகேடன்.
மண்ணு - ஓர் மீன்.
மண்ணுங்கட்டி* - மண்கட்டி.
மண்ணி - மந்தன்.
மண்ணினுதம் - உவர்மண்.
மண்ணீடு - வேயாமாடம், திண்ணை.
மண்ணீட்டாளர் - சிற்பாசிரியர்.
மண்ணீரல் - மண்ணிறவீரல்.
மண்ணுடையான் - அரசன், குயவன்.
மண்ணுணி - மந்தன், ஓர் பாம்பு.
மண்ணுதல் - கழுவுதல், அலங்கரித்தல்.
மண்ணுலகு - பூமி.
மண்ணை - அறிவிலான், [பசாசு, வாலுளுவை, இளமை.]
மண்ணைத்தனம் - அறியாமை.
மண்பாண்டம்* - மட்கலம்.
மண்மகள் - பூமிதேவி.
மண்மாரி* - புழுதிமழை.
மண்வெட்டி - ஓராயுதம்.
மதகரி - ஆண்யானை.
மதகரிக்கணை - யானைத்திப்பிலி.
மதகு - சலதாரை.
மதக்கம் - மயக்கம், ஆயாசம்.
மதங்கம் - யானை, மத்தளம், ஓர் மலை, முகில்.
மதங்கர் - ஓர் முனி, [பாணர்.]
மதங்கி - பதினறு வயதுப்பெண், பாடன்மகளே., பார்வதி.
மதத்தல் - கொழுத்தல், மயங்குதல்.
மதஸ்தன், மதத்தன்*-சமயவாதி.
மதநகோபாலன்* - ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி.
மதநன் - மன்மதன்
மதப்பு - செருக்கு, மயக்கம்.
மதப்பூ - மராட்டிமொக்கு.
மதமதப்பு - மிகுகொழுப்பு.
மதமதெனல் - மதமுறல், ஒலிக்குறிப்பு.
மதமத்தகம் - கஞ்சாச்செடி.
மதமத்தம்பூ - ஊமத்தை.
மதமத்தன் - மதத்தினல் மயங்கிக் கிடப்போன்.
மதமொய் - யானை.
மதம்-கொழுப்பு,செருக்கு, யானைமதம், வெறி,[சமயம், கருத்து, நாவிச்சட்டம், நோக்கம், வலி, விருப்பம், தேன்(சீவக. சிந்தா. 2584.)]
மதர்த்தல் - செழித்தல், [களித்தல்.]
மதர்வு - மயக்கம், செழுமை.
மதலை - மழலை, [தூண், கொன்றைமரம், கொடுங்கை, மகன், மரக்கலம்.]
மதவெறி - காமவெறி, [குடிவெறி, மார்க்கவெறி,அகங்காரம்.]
மதனகாமியப்பூ - ஓர் சரக்கு.
மதனசாஸ்திரம், மதனநூல் - இலீலைநூல்.
மதனம்-கடைதல், காமம், தேன் மெழுகு, மருக்காரைச் செடி, மனக்கலக்கம், மௌனம்.
மதனலீலை - காமவிளையாட்டு.

மதனன் - காமன்.
மதனலயம் - தாமரை, குய்யம்.
மதனி - மைத்துனி.
மதன் - காமன், அழகு, வலிமை, வளமை, கலக்கம், மாட்சிமை, செருக்கு (மணிமே.பக்.6.-7.)
மதாணி - பதக்கம், ஆபரணம்.
மதாநுசாரம் - சமயத்தைக் கைக்கொள்ளுதல்.
மதாபிமானி - தன்சமயக் கொள்கையினின்றும் விலகாதவன்.
மதாமத்தன், மதாமஸ்தன்* - மதோன்மத்தன்.
மதாமஸ்து* - மிகவெறி.
மதாவளம் - யானை.
மதாளித்தல்* - செழித்து வளர்தல்.
மதி - மதியென்னேவல், அறிவு, [மாதம், சந்திரன், கற்கடகவிராசி, மிருகசீரிடம்,முன்னிலையசைச்சொல் "சென்மதி பெரும".]
மதிகேடன்* - மூடன்.
மதிகேடு - அறிவின்மை.
மதிதம் - மோர்.
மதிதிசை - வடக்கு.
மதித்தல் - கணித்தல், கருதல், கடைதல்.
மதிநாள் - மிருகசீரிடம்.
மதிப்பகை - இராகு, கேது.
மதிப்பு* - மதித்தல்.
மதிமகன் - சந்திரனுக்கு உரோகணியிடம் பிறந்த புதன்.
மதிமயக்கம்* - புத்திமயக்கம்.
மதிமயங்குதல்*-புத்திகெடுதல்.
மதியம் - சந்திரன், மத்தியானம், மாதம்.
மதியாணி, மதியாணிக்கட்டை*- நுகத்தடியினடுவாணி.
மதியீனம் - புத்திக்குறைவு.
மதியுள்ளான் - ஞானியாயிருந்த ஓரரசன்.
மதிரம், மதிரை - கள்.
மதில்* - மதிள் (சுற்றுச்சுவர்.)
மதிற்புறம் - மதிற்சுற்று.
மதினி - மைத்துனி.
மது - இலுப்பைப்பூத்திராவகம், உருசி, கள், தேன், பால், ஓராக்கன், சித்திரைமாதம், மகரந்தம், வசந்தகாலம்.
மதுகந்தம் - இலுப்பைமரம், மகிழமரம்.
மதுகம் - அதிமதுரம், எட்டிமரம், தித்திப்பு, இலுப்பைமரம்.
மதுகரம் - தேனீ, ஆண்வண்டு, வண்டு, கள்.
மதுகை - வலிமை, வெற்றி.
மதுகோஷம் - குயில்.
மதுக்கெண்டை* - ஓர் மீன்.
மதுசகன் - மன்மதன்.
மதுசூதனன் - திருமால்.
மதுஸ்மிகி - பறங்கிச்சக்கை.
மதுதிருணம் - கரும்பு.
மதுத்துருமம் - இலுப்பைமரம்.
மதுபம் - வண்டு, கள்.
மதுபானம்* - சுராபானம்.
மதுபானி - கட்குடியன்.
மதுபீஜம் - மாதுளை.
மதுமாமிசம் * - கள்ளும் இறைச்சியும்.

மதுரகவி - திருமால் தொண்டரி லொருவர், சொற்சுவை பொருட்சுவை முதலிய நிரம்பிய பாட்டு.
மதுரபாஷணம், மதுரபாடணம் - சாதுரியம்.
மதுரம் - இனிப்பு, [அதிமதுரம், செஞ்சந்தனம், கொடிமுந்திரிகை,நஞ்சு,ஓர்கவி, சமனிசை.]
மதுரவசனம்* - நயமொழி.
மதுரவல்லி - சர்க்கரைவள்ளி.
மதுரவள்ளி - வத்தாலைக்கொடி.
மதுராபுரி*- மதுரைப்பட்டினம்.
மதுரித்தல் - தித்தித்தல்.
மதுரிப்பு - உருசி.
மதுரை - ஓர் நகர், [கள்.]
மதுரைப்பாலாசிரியனார்- ஓர் சங்கப்புலவர்.
மதுரைமாதேவி - மீனாட்சியம்மையார்.
மதூகம் - இலுப்பைமரம், வண்டு.
மதோன்மத்தன்*-மிகுவெறியன், மிகுகளிப்புடையோன்.
மத்குணம் - மூட்டைப்பூச்சி,யானை.
மத்தகம், மஸ்தகம் - யானை மத்தகம், நெற்றி, பொல்லாநிலம்.
மத்தங்காய்ப்புல் - ஓர் புல்.
மத்தம் - ஊமத்தஞ்செடி, களிப்பு, உன்மத்தம், மத்து.
மத்தவாரணம் - அர்த்த சந்திர வடிவுள்ள தலையணை, மதயானை.
மத்தளம்* - ஓர் பறை.
மத்தனம் - கடைதல்.
மத்தாப்பு* - ஓர் வாணம்.
மத்தி* - நடு.
மத்திகை - குதிரைச்சம்மட்டி, விளக்குத்தண்டு, பூமாலை.
மத்திக்காய் - ஓர் காதணி.
மத்தித்தல் - கடைதல்.
மத்திபம் - குறை, மத்திமம்.
மத்திமபட்சம் - நடுத்தரம்.
மத்திமம் - நடு, குறைவு, சமனிசை.
மத்தியட்சம், மத்தியஸ்தம் - நடுநியாயம்.
மத்தியமாவதி - ஓரிராகம்.
மத்தியம் - இடை, நடு, கள்.
மத்தியலோகம் - பூலோகம்.
மத்தியவிருத்தம் - உந்தி.
மத்தியானம்* - உச்சிப்பொழுது.
மத்திரிப்பு - சினம்.
மத்து - தயிர்முதலிய கடையும் மத்து, [ஊமத்தை.]
மத்துமலை - மந்தரமலை.
மத்துவம் - மத்துவமதம்.
மத்துவாசாரியர் - மத்துவமதஸ்தாபகர்.
மத்தை - ஊமத்தை.
மந்தகதி - தாமதநடை.
மந்தகாசம்* - புன்னகை.
மந்தப்படுதல் * - அசீரணமாகுதல்.
மந்தப்புத்தி* - குறைவான யோசனை.
மந்தமா - யானை.
மந்தமாருதம் - சிறுதென்றல்.
மந்தம் - அசீரணம், சோம்பல், [அற்பம், மத்து, கூர்மையின்மை, மந்தவிசை.]
மந்தரம் - ஓர் மலை, தயிர்கடைதறி, சோம்பு, தடை, தேவ

லோகம், அறிவின்மை, மந்தாரம், மாலை, வெண்ணெய்.
மந்தரன் - ஒற்றன், சோம்பன்.
மந்தரை - கைகேசியின் வேலைக்காரி. (அவள்கூன்முதுகினள்.)
மந்தனம் - ஆலோசனை, யானைமுகபடாம், கடைதல்.
மந்தனி - தயிர்கடைதாழி.
மந்தன்-அவிவேகி, [சனி,யமன்.]
மந்தாகினி - கங்கை, அறுபதாண்டுள்ளவள்.
மந்தாரகாசம் - ஓர் நோய்.
மந்தாரங்கட்டுதல்* - மந்தாரம்போடுதல்.
மந்தாரச்சிலை - ஓர் மருத்துக்கல்.
மந்தாரம்-பூங்காரம் (மப்பு), [ஐந்தருவிலொன்று, செவ்வரத்தை, முண்முருக்கு.]
மந்தாரித்தல்-பூங்காரம்போடல்.
மந்தாரை* - ஒரு பூச்செடி.
மந்தானம் - மத்து.
மந்தி - பெண்குரங்கு, குரங்கு, வண்டு, மந்தியென்னேவல்.
மந்திட்டி - மஞ்சிட்டி.
மந்தித்தல் - மந்தமடைதல்.
மந்திரகஷாயம், மந்திரகாவி - ஓர் காவிச்சீலை.
மந்திரக்கூறை - கலியாணப்புடவை.
மந்திரசத்தி* - மந்திரப்பலன்.
மந்திரசெபம் - மந்திரோச்சாரணம்.
மந்திரஸ்நானம் - மந்திரநீர்ப்புரோட்சணம்.
மந்திரப்பிரயோகம் - மந்திரத்தாற் பிரயோகித்தல்.
மந்திரம் - நாப்புடைபெயராதுஉச்சரித்தல், [ஆலோசனை, கோயில், வீடு, வேதம், ஓர் தேயம், கள், கடல், குதிரைப்பந்தி, குகை.]
மந்திரவாதி* - மந்திரவித்தைக்காரன்.
மந்திரவாள் - அரசியற்குரியவாள்.
மந்திரவித்தை - மந்திரசாஸ்திரம்.
மந்திராலோசனை - இரகசியாலோசனை.
மந்திரி - அரசனின் தேர்ச்சித்துணைவன், [வருங்காரியஞ்சொல்வோன், சுக்கிரன், புதன், வியாழன், குபேரன்.]
மந்திரித்தல் - செபித்தல்.
மந்திரோச்சாரணம் - மந்திரவுச்சரிப்பு.
மந்துரம் - குதிரைப்பந்தி.
மந்தை* - ஆடுமாடிவற்றின்தொகுதி.
மந்தையன் - கூர்ந்தபுத்தியிலான்.
மந்தைவெளி* - மேய்ச்சனிலம்.
மந்தோதரி - மண்டோதரி.
மப்பன்* - முட்டாள்.
மப்பு* - மந்தாரம், மந்தம்.
மமகாரம் - அகந்தை.
மமகாரன் - ஓரரசன்.
மமதை* - அகந்தை, பெருமை.
மம்மட்டி* - மண்வெட்டி (ஓர் இருப்புக்கருவி.)
மம்மர் - துன்பம், மயக்கம்.
மயக்கடி - மயக்கம்.
மயக்கம், மயக்கு - சோம்பு, உன்மத்தம், [கலப்பு.]

மயக்குதல் * - அறிவைக்கெடுத்தல்.
மயங்குதல் - புத்திகலங்குதல்.
மயம் - அழகு, ஒரு சிற்பநூல்.
மயர்வு - மயக்கம்.
மயல் - மயக்கம், [பிசாசம், உன்மத்தம், செத்தை.]
மயன் - ஓர் தேவதச்சன், [கின்னரன்.]
மயானம் - சுடுகாடு.
மயானவைராக்கியம் - பிறர் மரித்தபோது சுடலைக்குப் போகும்வரை உண்டாகும் வைராக்கியம்.
மயிடம் - எருமை.
மயிரொழுங்கு - உரோமரேகை.
மயிரோசனை - ஓர் மருந்து, மயிர் மாணிக்கம்.
மயிர்* - உரோமம்.
மயிர்கழித்தல் - சிரைத்தல்.
மயிர்க்கடை - மயிர்க்கிடை.
மயிர்க்கால்* - உரோமத்துவாரம்.
மயிர்க்கிடை - உரோமவளவிடை.
மயிர்க்குச்சு - கொண்டைக்குச்சு, துகிலிகை.
மயிர்க்குட்டி - கம்பளிப்பூச்சி.
மயிர்க்குழற்சி - மயிர்க்குழைவு.
மயிர்க்கூச்செறிதல் - மயிர் சிலிர்த்தல்.
மயிர்க்கொன்றை* - ஓர் பூமரம்.
மயிர்சிலிர்த்தல் - மயிர் பொடித்தல்.
மயிர்மாட்டி* ஓராபரணம்.
மயிர்மாணிக்கம் - பற்படாக மெனும் பூடு, கோரோசனை.
மயிர்வினைஞன் - நாவிதன்.
மயிலடி - மாதர்காலாழியினொன்று.
மயிலம்-ஓர் ஊர், [குப்பைமேனி, மயிலிறகு.]
மயிலாப்பூர்* - பார்வதி மயிலுருவெடுத்துச் சிவனைப் பூசித்த தலம்.
மயிலெண்ணெய்* - ஓர் மருந்தெண்ணெய்.
மயிலெள் - ஒரெள்.
மயிலை - கருமைகொண்ட வெள்ளை நிறம், [மீன், இருவாட்சி, மயிலாப்பூர், மீனராசி, கொடிமல்லிகை (சிலப்.)]
மயில் - மயூரம் (பஞ்சபட்சியினொன்று), [செங்கத்தாரி.]
மயில்வாகனன் - முருகன்.
மயிற்பிச்சம் - மயிலிறகுக்குடை.
மயிற்பீலி - மயில்விசிறி.
மயிற்றுத்தம் - துருசு.
மயிற்ரேகை - மயில்வால்.
மயூரகம் - துருசு, நாயுருவி, மயில்.
மயூரம் - நாயுருவி, மயில், மயிர்க்கொன்றை, குரோசானி.
மயேசன், மயேசுரன், மயேசுவரன் - சிவன்.
மயேசுவரி - பார்வதி.
மயேந்திரசாலம்* - மகேந்திரசாலம் (இந்திரன் கள்ளத்தனமாய்க் கௌதமர் மனைவியான அகலியையைச் சேர்வதற்கு அவ்விருவரிடத்தும் முறையே செய்த தந்திரவித்தை.)
மயேந்திரபுரி, மயேந்திரம் - ஓர் பட்டினம்.

மரகதப்பச்சை-நாகப்பச்சை (ஒரி ரத்தினம்.)
மரகதமேனியன் - திருமால்.
மரகதம் - பச்சைமணி (இது நவ மணியிலொன்று),பச்சைநிறம்.
மரகதவல்லி - உமையாள், தரும தேவதை.
மரகதன் - குபேரன்.
மரக்கலம் - கப்பல்.
மரக்கறி* - காய்கறி.
மரக்காணம்* - ஓரூர்.
மரக்கால் - முகந்தளக்குங் கருவியிலொன்று, மரத்தால் செய்தபாதம், [நூர்க்கைக் கூத்து, விஷ்ணு கூத்து, சோதிநாள், ஆயிலியம், உப்பளம்.]
மரக்காளான்* - மரத்தில் முளைக்கும் காளான்.
மரங்கொத்தி - ஓர் புள்.
மரச்சக்கை* - சிராய்.
மரச்செறிவு - சோலை.
மரணகண்டி*, மரணகண்டிகை- மக்களின் ஆயுட்காலத்தை அறிவிக்குமொரு சோதிட நூல்.
மரணக்குறி - சாவடையாளம்.
மரணக்கொடி - மரணபயம்.
மரணசனி - மூன்றுமுறை உடனுயிர் பன்னிரண்டா மிராசியில் வருஞ் சனி.
மரணசாதனம் - சாகுந்தறுவாயிலெழுதும் உறுதிப்பத்திரம்.
மரணம் - சாவு.
மரணயோகம் - கெடுதியை விளைவிக்கும் யோகவகை.
மரணவேதனை- மரணவேளையிற் படுமவஸ்தை.
மரணை - சாதல், நினைவு.
மரதம் - சாவு.
மரத்தல்* - விறைத்தல்.
மரநாய்* - மரத்தில்வாழுமொரு நாய்.
மரபு - வமிசம், குணம், முறைமை, மேம்பாடு, பழமை.
மரப்பட்டை * - மரத்தோல்.
மரம் - விருக்கம்.
மரல் - அரலையென்னும் ஒரு புதர், ஒரு கற்றாழை, மருள்.
மரவடி - பாதுகை "மரவடியூர்ந்துபோகி" (சீவக. சிந். 1299).
மரவட்டை* - பூச்சிவகை.
மரவம் - குங்குமமரம், வெண்கடம்பு. (மணிமே. 33.)
மரவிடை - பயன்தரும் மரம்.
மரவினையாளர் - தச்சர்.
மரவுப்பு - ஒருப்பு.
மரவுரி* - முனிவருடுக்கும் மரப்பட்டை.
மரவை - மரப்பாத்திரம்.
மரா-ஆச்சாமரம், வெண்கடம்பு.
மராடம் - ஒரு பாஷை, ஒரு தேசம், மருக்காரை.
மராட்டம் - இடம், புறமயிர், பெண்மயிர்.
மராட்டிமொக்கு* - லாகிரி வஸ்துவிலொன்று.
மராட்டியர் - ஓர் பாஷைக்காரர்.
மராமரம்-ஆச்சாமரம், அரசமரம், கடம்பமரம்.
மராம் - கடம்பு, வெண்கடம்பு.

மராலம் - கண்ணுக்கிடுமை, குதிரை, மாதளை, தாரா.
மராளம் - அன்னப்புள், பாம்பு, மாதுளமரம்.
மரிசம், மரீசம் - மிளகு.
மரிசி - புதுவரம்பின் வழி.
மரியம்மாள் - இயேசுவின் தாய்.
மரியாதம் - நீதி.
மரியாதை - வணக்கம், ஒழுக்கம், சன்மானம் [நீதி, வரம்பு, எல்லை.]
மரீசி - ஓரிருடி, மிளகு, கிரணம்.
மரீசிகம், மரீசிகை - கானல்.
மரு - ஒரு வாசனைச் செடி, குற்றம், [வாசனை, மருவென்னேவல்.]
மருகல் - ஒரு சிவஸ்தலம்.
மருகன் - மருமகன்.
மருகி - மருமகள்.
மருகு - ஒரு வாசனைப்பூண்டு, மகரவாழை.
மருக்காரை - சிறு மரவகை.
மருக்கொழுந்து* - ஓர் வாசனைச் செடி.
மருக்கொழுந்துசக்களத்தி-அளத்துப்பச்சை.
மருங்கு - பக்கம், இடை, வடிவு, செல்வம். (சீவ. சிங். 1195 : 2924.)
மருங்குல் - இடை, பக்கம்.
மருட்சி - மயக்கம், அறிவின்மை.
மருட்டம் - கள்.
மருட்டல்* - மயக்குதல்.
மருட்டி - மயக்கந்தருவது.
மருட்பா - ஐந்து பாவிளொன்று : அது முதலில் வெண்பாவும் முடிவில் அகவலுமாய் வருவது.
மருட்பார்வை - வெருண்ட பார்வை.
மருண்மா - மதயானை.
மருதம் - ஓர் மரம், [காற்று, வயலும் வயல்சார்ந்த இடமும், மருதநிலப்பண், வயல்.]
மருதாணி - ஓர் பூடு.
மருது - மருதமரம்.
மருதூர் - ஒரு சிவஸ்தலம்.
மருதோன்றி* - ஒரு மரம்.
மருத்து - காற்று.
மருத்துவச்சி*-பிரசவம் கவனிப்பவள்.
மருத்துவநாள் - அச்சுவினிநாள்.
மருத்துவர் - வைத்தியர், அச்சுவினிதேவர்.
மருத்துவன் - வைத்தியன், இந்திரன்.
மருத்துவன்தாமோதரனார் - ஓர் சங்கப்புலவர்.
மருந்தம் - நஞ்சு.
மருந்து - ஔடதம், [அமுதம்.]
மருபுகா - வாழை.
மருப்பு - இஞ்சி, மரக்கொம்பு, விலங்கின்கொம்பு, கோடு. (சீவக. 322.)
மருப்புத்தாடி - யானைக் கொம்பாற் செய்த விரற்கவசம். (சீவக. சிங். 2279.)
மருமகள்* - மகன்மனைவி.
மருமகன்* - மகள்கணவன்.
மருமம் - இரகசியம், [மார்பு, உயிர்நிலை.]

மருமராஞ்சம் - அசையுஞ் சீலையானுமிலையானுமெழுமொலி.
மருமான் - மருமகன், மகன், வழித்தோன்றல்.
மருவலர் - பகைவர்.
மருவல் - அணைதல், கலத்தல், கிட்டல், பொருந்துதல்.
மருவு* - கலியாணத்திற்கிடும் விருந்து, [மருகு, வாசனை.]
மருளல் - மயங்குதல், [அஞ்சல், எழுத்திலாவோசை.]
மருளூமத்தை - ஒருமத்தை.
மருள் - மயக்கம், [உன்மத்தம், பிசாசம், கள், ஓர் கிழங்கு.]
மரூஉமொழி - மருவி வழங்கு மொழி.
மரை- ஓர் மான், கமலம், தவளை.
மரைக்காயர், மரைக்கார்-சோனகர். (ஒருவகைத் துலுக்கர்.)
மரைநீகம் - தவளை.
மர்க்கடம், மற்கடம் - குரங்கு.
மர்த்தனம் - கடைதல்.
மர்மம் - மருமம்.
மலகரி* - ஓரிராகம்.
மலக்கடி, மலக்கம் - கலக்கம்.
மலங்கல் - விலாங்குமீன், அசைதல், குளம். [னேவல்.
மலங்கு - ஓர் மீன், மலங்கென்
மலச்சிக்கல்,* மலச்சிக்கு - மலம் வெளிவராதிருத்தல்.
மலச்சுத்தி - மலக்கழிவு.
மலடன் - பிள்ளையில்லாதவன்.
மலடு* - கருவற்றது.
மலத்துவாரம் - அபானவாய்.
மலபரிபாகம் - பந்தபாசத்தினின்றும் நீங்கிப் பக்குவமடைதல்.
மலபாண்டம்* - உடம்பு.
மலமலெனல்* - ஒலிக்குறிப்பு.
மலம் - பவ்வீ, [அழுக்கு, பாவம், ஆர்வம்,செற்றம்,பற்றுமுதலியவை. (சீவ. சிந். 2809), வண்டல்.]
மலயக்கால் - தென்றல்.
மலயசம், மலையசம் - சந்தனம், தென்றல்.
மலயம் - பொதியமலை.
மலரவன் - பிரமன்.
மலர் - பூ, மலரென்னேவல்.
மலர்ச்சி-மலர்தல், களிப்பு, பொலிவு.
மலர்தல் - விரிதல், நிறைதல், தோன்றல், களிப்புறல்.
மலர்த்தேன் - பூந்தேன்.
மலவாசயம் - மலக்குடர்.
மலாக்கா - ஒரு தீவு.
மலாடு - மலையமானாடு.
மலார்* - வளார்.
மலாவகம் - பிண்ணாக்கு.
மலிதல் - பெருகல்.
மலிவு - நயம், மிகுதி.
மலினமுகன் - தீக்கடவுள், தீயோன், பிசாசு, முசு.
மலினம் - அழுக்கு, பாவம், குற்றம், கருமை.
மலை - பருவதம், [உவமை, மலையென்னேவல்.]
மலைகலக்கி - ஓர் பூடு.
மலைச்சாரல்* - மலையருகு.
மலைதல் - எதிர்த்தல், அணிதல், ஒருவழிப்படாது நிற்றல்.
மலைதாங்கி - பங்கம்பாளை.
மலைத்தல்*-மயங்கல், சமர்புரிதல்.

மலைத்துவரை - ஓர் துவரை.
மலைத்தேன்* - மலையில் தேனீக்கள் சேர்த்துவைத்த தேன்.
மலைநாடன் - சேரன்.
மலைநாதம்-கன்மதம்.
மலைபடுதிரவியம் - மலையி லுண்டாகுந் திரவியம் : அவை மிளகு கோட்டம் அகில் தக்கோலம் குங்குமம்.
மலைப்பச்சை - ஓர் பூடு.
மலைப்பிஞ்சு* - கல்.
மலைப்பு - திகைப்பு, [போர், கூத்தின் விகற்பம்.]
மலைமகள், மலைமடந்தை - உமை.
மலைமுழை, மலைமுழைஞ்சு-மலைக்குகை.
மலையடிவாரம்* - மலையி னடிப்பக்கம்.
மலையத்துவசபாண்டியன் - மீனுட்சியம்மையின் தந்தையான ஒரு பாண்டிய மன்னன்.
மலையமான் - சேரன்.
மலையம் - பொதியமலை, குறிஞ்சியாழ்த்திறம், மலையினுச்சி.
மலையரசன், மலையரையன்-இமையகிரிக்கு அரசன்.
மலையன் - ஒரு சாமை, சேரன், குறிஞ்சிநிலத்தலைவன்.
மலையாரம் - சந்தனம்.
மலையாளபகவதி - ஓர் தேவதை.
மலையாளி - மலையாளத்திற் பிறந்தோன், மிளகு.
மலையின்முனிவன் - அகத்தி. (மலை), மிளகு.
மலைவாணர் - வேடர்.
மலைவாழை - ஓர் வாழை.
மலைவீரியம் - அன்னபேதி.
மலைவு - மாறுபாடு, போர், மயக்கம், உவமைச்சொல்.
மலைவேம்பு - ஓர் வேம்பு.
மல் - கூத்தின்விகற்பம், திருமாலாடிய கூத்து, வலி, வளமை, மலை. (இரா.)
மல்கல் - நிறைதல், பெருகல்.
மல்லகசாலை - மல்வித்தை பயிலுமிடம்.
மல்லகசெட்டி - மல்யுத்தம் புரியுமொரு சாதியான்.
மல்லம் - ஓர் பாத்திரம், வலிமை, தட்டம், கதுப்பு.
மல்லயுத்தம் - மற்போர்.
மல்லரங்கம் - மல்லகசாலை.
மல்லரி - பம்பைமேளம்.
மல்லர் - மற்போர்செய்வோர்.
மல்லல் - மிகுதி, வலி, வளமை.
மல்லன் - மற்போர்செய்வோன், வலியோன்.
மல்லாடல்* - ஒருவனி னுயிர் நீங்க நெரித்தாடுவது.
மல்லாத்தல், மல்லாத்துதல்-மேல்முகமாகக் கிடக்கச் செய்தல்.
மல்லாய் - ஓர் பாத்திரம்.
மல்லாரி - பம்பைமேளம், சண்டைக்காரி.
மல்லி-கொத்துமல்லி, மல்லிகை, மிகவும் பருத்து உரத்தவள்.
மல்லிகார்ச்சுனம் - ஒரு சிவஸ்தலம்.
மல்லிகை - ஒரு பூச்செடி, [ஓர் பாத்திரம், விளக்குத்தண்டு.]
மல்லுக்கட்டுதல்* - போராட்டமாடுதல்.

மல்லை - இரப்போர்கலம், வட்டம், வளம், மாவலிபுரம்.
மவுட்டியம் - அறியாமை.
மவுலி - மௌலி (கிரீடம்).
மவுனி - வாய்பேசா ஞானி, [ஆமை.]
மழகளிறு - இளங்களிறு.
மழலை - நிரம்பாமென்சொல்.
மழலைப்பேச்சு * - குதலைவார்த்தை.
மழித்தல் - மொட்டையாக்கல்.
மழு - சிவனுயுதத்தொன்று, எரியிரும்பு, பரசாயுதம்.
மழுக்கம் - கூரின்மை, மங்கல்.
மழுக்குதல் - கூர்மைமழுங்கச்செய்தல், அரிசிமினுக்குதல்.
மழுங்குதல் - ஒளிமழுங்கல், கூர்கெடுதல், பொலிவழிதல்.
மழுவேந்தி - சிவன்.
மழை - மாரி, [மிகுதி, நீர், மேகம், குளிர்ச்சி.]
மழைக்காற்று - குளிர்காற்று.
மழைக்கிரகம் - சுக்கிரன்.
மழைத்தூவல்* - பிதிர்மழை.
மழைவண்ணன் - திருமால்.
மழைவறங்கூர்தல் - மழைபெய்யாதொழிதல்.
மளமளெனல்* - ஒலிக்குறிப்பு.
மளிகை * - பலசரக்குக்கடை.
மளுக்கெனல்* - ஒலிக்குறிப்பு.
மள்ளல் - வலி.
மள்ளு - கைமரம்.
மறதி * - மறப்பு: அது தாமதகுணத்தொன்று.
மறத்தல்* - பொச்சாப்பு.
மறத்தியர்-பாலைநிலப்பெண்கள்.
மறப்பு* - மறதி.
மறப்புலி - சிங்கம்.
மறம் - பாவம், வீரம், கோபம், கெடுதி, கொலை, நமன், வலி.
மறலி - நமன், மயக்கம்.
மறல் - பிணக்கு, பகை, போர், நமன், சாதல், மயக்கம், தரித்திரம், ஓர் கூத்து, எழுச்சி.
மறவர் - வேடர், படைவீரர், பாலைநிலமாக்கள்.
மறவி - ஈனம், கள், மறதி.
மருடர், மருட்டியர் - மகராட்டிரர்.
மறி - ஆடு குதிரை மான் இவற்றின் குட்டி, மறியென்னேவல், ஆடு,மான், மேடவிராசி.
மறிதரல் - மீளுகை.
மறித்தல் - காவற்படுத்தல், தடுத்தல், திருப்புதல்.
மறியல் - தடை.
மறு - மச்சம், [குற்றம், வேறு, மறுவென்னேவல்.]
மறுகல் - சுழலல்.
மறுகு - தெரு, குறுந்தெரு, மறுகென்னேவல்.
மறுகுதல் - சுழலுதல், மனங்குழம்புதல்.
மறுகை - நுங்கு, மற்றப்பக்கம்.
மறுக்கம் - சுழற்சி, மனக்குழப்பம்.
மறுக்கல் - மறுதலித்தல், மனஞ்சுழலல்.
மறுதடவை - மறுமுறை.
மறுதலித்தல் - மறுத்தல்.
மறுத்தல் - கொடாமை, நீக்கல், வெட்கம்.

மறுப்பு - மறுக்குதல்.
மறுமை - வருபிறப்பு.
மறுமொழி* - உத்தரம்.
மறுவல், மறுவி-கத்தூரி மிருகம்.
மறுவுத்தரம் - பிரதியுத்தரம்.
மறை - திருகுவகை, [மறைவு, வேதம், ஒளிப்பிடம், இரகசியம், கேடகம்.]
மறைக்காடு, மஹறசை - வேதாரணியம்.
மறைக்கொடியோன் - துரோணசாரியன், பிரமன்.
மறைதல்*-தோன்றுமற்போதல்.
மறைத்தல்* - மறையச்செய்தல்.
மறைபடல் - மறைக்கப்படுதல்.
மறைபொருள் - உட்பொருள்.
மறைப்பு* - மறைவு.
மறைமுடிவு - வேதாந்தம்.
மறையவர், மறையோர் - முனிவர், அந்தணர்.
மறையோன் - பிரமன், அந்தணன்.
மறைவு-ஒளிப்பிடம், மறைகை.
மற்குணம் - மூட்டுப்பூச்சி.
மற்கோல் - பகை.
மற்ற - அடுத்த, வேறு.
மற்றது - அடுத்தது, வேறு.
மற்றையது - மற்றது.
மற்றே - அதிசயவிரக்கச்சொல்.
மனக்கசப்பு - மனவெறுப்பு.
மனக்கலக்கம் - மனச்சஞ்சலம்.
மனக்கவலை* - மனவிசாரம்.
மனக்கனிவு - மனவுருக்கம்.
மனக்கிலேசம் - மனத்துயர்.
மனக்குருடு - அறிவீனம்.
மனக்குறிப்பு - கருத்து.
மனக்கொதி - எரிச்சல், கோபம்.
மனக்கோட்டம் - அழுக்காறு.
மனக்கோட்டரவு-மனவாட்டம்.
மனங்கசிதல் - மனமுருகல்.
மனங்கரைதல் - மனமிளகுதல்.
மனங்கனிதல் - மனதுருகல்.
மனங்குவிதல் - மனமடங்குதல்.
மனங்கொதித்தல் - மனவேதனைகொள்ளல்.
மனங்கோணுதல்* - மனம் மாறுதல்.
மனசார* - மனமறிய.
மனசு* - உள்ளம், எண்ணம்.
மனச்சஞ்சலம்* - துக்கம்.
மனச்சழக்கு - பொறாமை.
மனச்சாட்சி - பகுத்தறியுமறிவு.
மனச்சுத்தம் - மனத்தூய்மை.
மனஞ்சலித்தல்*- மனமலுத்தல்.
மனதார* - மனப்பூருவமாக.
மனது - மனம்.
மனத்தளர்ச்சி - மனமெலிவு.
மனத்தாபம், மனஸ்தாபம் - மனவிதனம்.
மனத்தாழ்மை - மெத்தெனவு.
மனத்திடன் - மனத்தைரியம்.
மனத்திருத்தி - மனப்பூரணம்.
மனத்துயர் - துக்கம்.
மனத்தூய்மை - மனச்சுத்தம்.
மனநிறை - மனந்தளம்பாமை.
மனநிறைவு - மனப்பூரணம்.
மனந்தளர்தல்- தைரியங்கெடல்.
மனந்திரும்புதல் - மனம் மாறுதல், செய்த பிழைக்கு வருத்தமுறல்.
மனப்பாடம்* - மனத்திலே பதிந்தபாடம்.

மனப்புழுக்கம் - எரிச்சல்.
மனப்பூர்வம், மனப்பூரணம் * - மனத்திருத்தி.
மனமுரிதல்* - மனம்வெறுத்தல்.
மனமுரிவு - மனவெறுப்பு.
மனம் - சிந்தை இஃது உட்கரணம் நான்கினென்று, [இந்துப்பு.]
மனம்பொங்குதல் - கோபங்கொள்ளல், [மனங்களித்தல்.]
மனவிகற்பம் - மனவேறுபாடு.
மனவிகாரம் - மனத்திரிபு.
மனவிழி - இசைப்பாட்டு.
மனவு - அக்குமணி, சங்கு, புடைவை, பலகறை.
மனவுருக்கம்* - மனமிளகுதல்.
மனவொற்றுமை - மனவொருமிப்பு.
மனவொன்றிப்பு - மனவொற்று
மனனம் - சிந்தித்தல். [மை.
மனை, மனைவு - அரைப்பட்டிகை.
மனிதர் - மானிடர்.
மனிலா - ஓரூர்.
மனிலாப்பயறு, மனிலாக்கொட்டை* - வேர்க்கடலை.
மனு - மன்ருட்டு (விண்ணப்பம்), [மந்திரம், ஒரு தருமநூல், ஒரு சக்கரவர்த்தி.]
மனுசன், மனுஷன்* - மனிதன்.
மனுஷிகம் - மனுஷசுபாவம்.
மனுநீதி - ஒரு தருமநூல்.
மனுவந்தரம் - மனுவின்காலம்.
மனுவர் - கொல்லர்.
மனை-இரண்டாயிரத்து நானூறு குழிகொண்டநிலம், [மனைவி, வீடு.]
மனைக்கிழத்தி - மனைவி.
மனைக்குயில் - தலையிலாக்குருவி. (பிங்.)
மனைமாட்சி - இல்லறத்துக்குரிய நல்லொழுக்கம்.
மனையாட்டி, மனையாள்-மனைவி.
மனைவாழ்க்கை - இல்லாச்சிரமம்.
மனைவி - பெண்டாட்டி.
மனோகதி - மனத்தின்வேகம்.
மனோகரம் - அழகு, களிப்பு.
மனோசன், மனோபு - மன்மதன்.
மனோசிலை - பிறவிப் பாஷாணத்தொன்று.
மனோபலம் - தைரியம்.
மனோபாவம் - மனநிலை.
மனோபாவனை - மனத்திற் பாவித்தல்.
மனோபீஷ்டம் - மனப்பிரியம்.
மனோபூசை - மானதபூசை.
மனோமயம், மனோமயகோசம் - பஞ்சகோசத்தொன்று.
மனோரஞ்சிதம் - ஒரு பூ, [மனத்திற்கினியது.]
மனோரதம் - இச்சை, இன்பம்.
மனோரம்மியம் - மனத்திருத்தி.
மனோராசி* - மனச்சம்மதி.
மனோராச்சியம் - வீணெண்ணம்.
மனோலயம் - மனவொடுக்கம்.
மனோவிகாரம் - மனச்சஞ்சலம்.
மனோவியாபாரம்,மனோவிருத்தி- மனத்தின் தொழில்.
மனோற்சாகம் - மனமுயற்சி.
மனோற்பவன் - மன்மதன்.
மனோன்மணி - பார்வதி.
மன்-ஓரசைச்சொல்,(உ-ம்.) அதுமற் கொண்கன்றேரே, அர

சன், ஆக்கம் (உ-ம்.)நெடியன் மன், ஒழியிசை (உ-ம்.) கூரிய தோர்வாண்மன், கழிவு(உ-ம்.) சிறியகட்பெறினேயெமக்கீயு மன்னே, பெருமை, மிகுதி (உ-ம்.) எந்தை!யெமக்கருளுமன், கணவன் (சிலப். 25-59), நிலைபேறு.

மன்பதை - மக்கட்பரப்பு.

மன்மத - இருபத்தொன்பதாவதாண்டு.

மன்மதன்-காமன், [மனங்கலக்குவிப்போன்.]

மன்வந்தரம் - மனுவந்தரம்.

மன்விருத்தம்- ஆசிரியவிருத்தம்.

மன்ற - தேற்றம் (உ-ம்.) கடவுளாயினுமாக மடவேமன்றவாழிய முருகே, அசைச்சொல்.

மன்றம்-சபை, வாசனை, வெளி, நிச்சயம், நெடுந்தெரு, அரணில்லா வீடு. (சிலப். 23: 46)

மன்றல் - கலியாணம், வாசனை, நெடுந்தெரு.

மன்றூடி - சிவன்.

மன்றூடுதல் - இரந்துகேட்டல்.

மன்றூட்டு - வேண்டுதல்.

மன்று-சபை, நீதித்தலம், வெளி.

மன்றுளாடி - சிவன்.

மன்னர் - அரசர்.

மன்னர்மன்னன் - இராசாதி ராசன், [துரியோதனன்.]

மன்னவன் - மன்னன், [உத்திரட்டாதிநாள்.]

மன்னூர்கோயில்* - ஓரூர்.

மன்னித்தல்* - பொறுத்தல்.

மன்னிப்பு* - குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளல்.

மன்னுதல் - நிலைபெறுதல்.

மன்னும் - மிகவும். (சீவ. சிந்.)

மன்னுயிர் - சீவன், ஆத்துமா.

மன்னுலகு - தேவலோகம்.

மன்னோ - அசைச்சொல்.

மன்னை - தொண்டை, [கதுப்பு.]

## மா

மா - இலட்சுமி, இடித்தமா, ஒரெண் அஃது இருபதிலொன்று, ஒரு மரம், குதிரை, செல்வம், பெரிய, மகத்துவம், அழகு, கறுப்பு, வண்டு, வலி, அறிவு, தாய், சீலை, வயல்.

மாகதர் - ஒருவன் வீரமுதலியவற்றைப் புகழ்வோர், பாடகர்.

மாகதி-திப்பிலி, மூல்லைக்கொடி.

மாகந்தம் - மாமரம். (சப்த)

மாகம் - ஆகாயம், மாசிமாதம், மகநாள், மேகம், திக்கு.

மாகவதி - கீழ்திசை.

மாகாணம் - நாடு.

மாகாணி* - ஒரெண் அது பதினாறிலொருபங்கு.

மாகாத்மியம் - பெருமை.

மாகாளி - சத்தமாதர்களிலொரு த்தி, மாவலிக்கிழங்கு.

மாகு - வலை. (பாரதம்)

மாகேசுவரி - பார்வதி.

மாகேயன் - நரகாசுரன்.

மாக்கள் - மனிதர்.

மாங்கலியதாரணம் - தாலியைப் பெண்கழுத்திற் கட்டுதல்.

மாங்கலியப்பிச்சை* - கணவனுயிரைக்காக்கத் தெய்வத்தை வேண்டுதல்.
மாங்கலியம்* - தாலி.
மாங்கல்லியசூத்திரம் - தாலிச்சரடு.
மாங்கன் - ஓர் மீன்.
மாங்காயீரல் - மூத்திராசயம்.
மாங்காய்ப்பூட்டு - ஓர் வகைப்பூட்டு.
மாங்கிசம் - மாமிசம்.
மாங்குடிமருதனார் - சங்கப்புலவரிலொருவர்.
மாசக்காய்* - ஓர் மருந்துச்சரக்கு.
மாசம்* - மாதம்.
மாசனம்* - ஒரு இலாகரிமருந்து.
மாசாதம்* - கூழ்.
மாசாத்தன் - கண்ணகிதந்தை.
மாசாலம் - ஒரு மாயவித்தை.
மாசி - ஓர் மாதம், மேகம், [புதுவரம்பு, மகநாள்.]
மாசிகம், மாசியம் - இறந்தோர்க்கு மாசந்தோறுஞ் செய்யும் சிராத்தம்.
மாசிபத்திரி - பூடு வகை.
மாசிமகம்* - மாசிமாதப் பௌர்ணமியும் மக நட்சத்திரமும் கூடிய தினம்.
மாசு - அழுக்கு, குற்றம், மறு, மேகம், கருமை.
மாசுணம் - பெரும்பாம்பு, பாம்பு.
மாசுதீர்ப்பான் - நாவிதன்.
மாசை - பொன்.
மாச்சரியம் - பொறாமை.
மாஞ்சி - வாசனைப்பண்டம்.
மாடகம் - வீணைமுறுக்காணி.
மாடக்குழி - விளக்குவைக்குஞ் சுவரறை.
மாடப்புறா* - ஓர் புறா.
மாடஹம் - உழுந்து.
மாடம் - சுவரில் வைக்குமாடம், [உப்பரிகை, உழுந்து.]
மாடன் - ஓர் பேய்.
மாடி - மேல்மேடை, [புடைவையோரம், தரித்திரம், குளிர், கோபம்.]
மாடியம் - பாதை, கவசம். (சீவ. சிந். 537.)
மாடு-மாடு, [பொன், இடம், அகன்மணி, செல்வம், பக்கம்.]
மாடை - அரைவராகனெடைப் பொன்.
மாடைக்கொம்பன் - கீழ்நோக்கி வளைந்த கொம்புள்ளமாடு.
மாட்சி, மாட்சிமை - அழகு, பெருமை.
மாட்டல் - மாட்டுதல், மூட்டல்.
மாட்டாங்கோல் - மாட்டையோட்டுங் கோல்.
மாட்டாமை - இயலாமை.
மாட்டார் - ஒரு காரியத்தைச் செய்ய முடியாதவர்கள்.
மாட்டிலையான் - பெரிய ஈ.
மாட்டுக்கொட்டில் - பசுக்கொட்டில்.
மாட்டுதல் - கடாவுதல், கட்டுதல், செருக்குதல், பூணுதல்.
மாணம் - மாட்சிமை.
மாணல் - நன்மை, மாட்சிமை.
மாணவன் - சீடன், மனிதன்.
மாணவ்வியம் - மாணவர் கூட்டம்.

மாணுக்கன் - கற்போன்.
மாணார் - பகைவர்.
மாணி - ஆண்குறி, குறள்வடிவம், பிரமசாரி.
மாணிக்கத்தாள் - வேசி.
மாணிக்கம்* - செம்மணி அது நவமணியினென்று.
மாணிக்கவாசகர் - திருவாதவூரடிகள்.
மாண் - மாட்சிமை, மாணென்னேவல். 'மாண்டார் வினைத்திட்பம்.'
மாண்டல் - மாட்சிமைப்படுதல்.
மாண்டார் - இறந்தோர், [பெரியோர்.]
மாண்பு - பெருமை, மாட்சிமை, அழகு.
மாதங்கம் - யானை, கடல்.
மாதங்கர் - சண்டாளர்.
மாதங்கி - துர்க்கை, காளி.
மாதண்டம் - இராசவீதி.
மாததூரம்* - மகளிர்சூதகம்.
மாதப்பிறப்பு* - சூரியனெருராசியிலிருந்து மற்ருெருராசிக்குப் போகும் காலம்.
மாதரி - காளி.
மாதர் - பெண்கள், [அழகு, ஆசை, அசைச்சொல்.]
மாதவம் - பெருந்தவம், [கள், வசந்தகாலம், வைகாசி மாதம்.]
மாதலி, மாதுலி-இந்திரன்சாரதி.
மாதவர் - முனிவர்.
மாதவன் - திருமால்.
மாதவி - கோவலனின் ஆசைநாயகி, [குருக்கத்திமரம், அருச்சுனன் மனைவி, துளசி, துர்க்கை, வசந்தகால மல்லிகை, நாடகக்கணிகை.]
மாதவிடாய் - மாதத்தீட்டு.
மாதளை - ஓர் மரம்.
மாதா - தாய், [பார்வதி, அறிபவன்.]
மாதாந்தம் - மாதக்கடைசி.
மாதாமகன் - தாயைப் பெற்ற பாட்டன்.
மாதாமகி - தாயைப்பெற்ற பாட்டி.
மாதிகம் - குதிரைபோம்வழி.
மாதிரம் - ஆகாயம், திசை, பூமி, மலை, யானை.
மாதிரி* - விதம், சாயல்.
மாது - பெண், [விருப்பம், அசைச்சொல் (உ-ம்.) 'விளிந்தன்று மாதவர்த்தெளிந்த வென்னெஞ்சே.']
மாதுமை - பெண்டன்மை.
மாதுரியம் - மிகுமதுரம்.
மாதுரு, மாதிரு - மாதா.
மாதுலங்கம் - கொடிமாதுளை.
மாதுலன் - மாமன்.
மாதுலி - மாமன்மனைவி.
மாதுவம் - கள்.
மாதுளங்கம், மாதுளம் - மாதளை.
மாதேவன் - சிவன்.
மாதேவி - பார்வதி.
மாதொருபாகன் - சிவன்.
மாத்தியானம் - மத்தியானம்.
மாத்திரம் - அளவு, தனிமை.
மாத்திரி - பாண்டுவின்மனைவி.
மாத்திரை - குளிகை, காலநுட்பம், அளவு, எழுத்தினளவு.

மாத்திரைக்கோல் - அளவுகோல்.
மாந்தக்கொதி - ஓர் சுரம்.
மாந்தசன்னி - ஓர் நோய்.
மாந்தம்* - அசிரணம்.
மாந்தர் - ஆண்மக்கள், மனிதர்.
மாந்தல் - குடித்தல், உண்ணல்.
மாந்தளிர்* - மாமரத்துளிர்.
மாந்தாதா - ஒரு மன்னன்.
மாந்தி - மாமரம், ஒரு கலியாணச் [சடங்கு.
மாபலி - மாவலி.
மாபுலி - சிங்கம்.
மாப்பிள்ளை * - மணவாளப் பிள்ளை.
மாப்பு - மன்னிப்பு, [மிகுதி, மீன்றிரள்.]
மாமகன் - அம்மான், மதன்.
மாமன், மாமா - அத்தை கொழுநன், மனைவியின் தந்தை.
மாமாங்கம்* - மகாமகம்.
மாமி* - தந்தையின் சகோதரி, மனைவியின் தாய்.
மாமிசபேதி - மாமிசத்தைக் கரைவிக்கும் ஓர் பூடு.
மாமிசம்* - இறைச்சி.
மாமுனி - அருகன்.
மாமை - அழகு, நிறம்.
மாயம் - வஞ்சம், [பொய், அழகு, தீமை, கறுப்பு, கனவு.]
மாயரூபம் - மெய்போலத்தோற்றும் பொய்யுருவம்.
மாயவள் - காளியேவல் செய்பவள், இடாகினி, தெய்வப்பெண்.
மாயவன் - திருமால், கரியவன்.
மாயாசத்தி - பஞ்ச சத்தியினென்று.
மாயாசீதை - போலிச்சீதை.
மாயாதேகம் - மாயையாலான தேகம் (நிலையற்ற சரீரம்.)
மாயாதேவி - புத்தன்தாய்.
மாயாபாசம் - பந்தமாயை.
மாயாபுரி - அரித்துவாரம், பித்தளை, மாயாசரீரம்.
மாயாவாதம் - ஓர் சமயம்.
மாயாவி - மாயைசெய்பவன்.
மாயூரம் - ஓரூர், [மயில்.]
மாயை - இந்திரசாலமுதலியன, பஞ்ச மாயையினென்று, மாயம், பொய், வஞ்சகம், இரதிதேவி.
மாயோனாள் - திருவோணம்.
மாயோள் - பெண்.
மாயோன் - திருமால்.
மாயோன்மருகன் - குமரன்.
மாய்தல் - சாதல், [மறைதல்.]
மாய்த்தல் - கொல்லல், வருத்தல்.
மாய்மாலம் - எத்து, மாசாலம்.
மாய்வு - சாவு, மறைவு.
மாரகம் - மரணம்.
மாரகன் - கொல்வோன்.
மாரசயன் - புத்தன்.
மாரடித்தல் * - இழவுக்கடித்தல்.
மாரடைப்பு* - நெஞ்சடைப்பு.
மாரட்டம் - மஹாராஷ்டிரம்.
மாரணம் - மந்திரத்தாற் கொல்லல், கொலை.
மாரதன் - மகாரதன்.
மாரன் - காமன்.
மாராப்பு - மாதர் தம் மார்பின் மீதிடும் சீலைப்பகுதி. (இதை மாராக்கெனவும் வழங்குகின்றனர்.)
மாராயம் - உவகை, நற்செய்தி.

மாரி - ஒரு தேவதை, [ஓர் ஒட்டு நோய், மழை, கள், நீர், மேகம், மாரணம்.]
மாரிநாள் - உத்திரநாள்.
மாரீசம் - மாயம், அட்டாதசவுப புராணத்தொன்று.
மாரீசன் - சீதைமுன் பொன் மான் வடிவெடுத்த இராவணனின் மாமன்.
மாருதம் - காற்று.
மாருதி - அனுமான், வீமன்.
மார்* - மார்பு.
மார்கழி - மார்கழிமாதம், மிருகசீரிடம்.
மார்க்கசிரம் - மார்கழிமாதம்.
மார்க்கணம் - அம்பு, தேடல்.
மார்க்கணர் - இரப்போர்.
மார்க்கண்டர், மார்க்கண்டேயர்- என்றும் பதினாறு வயதளவில் சிரஞ்சீவியாய் வாழும் ஒரு தவப் புதல்வர்.
மார்க்கம் - வழி, [சமயம், மூலம், ஒழுக்கம், மார்கழிமாதம், ஒரு கூத்து, நெடுந்தெரு.]
மார்ச்சரியம் - பொறாமை.
மார்ச்சனி - விளக்குமாறு.
மார்ச்சனை - முழவின் வாய்வார், முரசொலி.
மார்ச்சாலம் - பூனை.
மார்த்தாண்டன் - சூரியன்.
மார்பு - நெஞ்சு, [அகலம்.]
மாலதி-மல்லிகை, சிறுசண்பகம், முல்லை, சந்திர கிரகணம், விளக்குத்தண்டு.
மாலம் - குங்குமமரம், பேய்.
மாலயம் - மாளயம், [சந்தனம்.]
மாலவன் - புதன்.
மாலி - ஓரரக்கன், கள், ஆதித்தன், மாலையணிந்தவன்.
மாலிகை - மாலை, நிரல்படநிற்குங்குழூஉ, கழுத்தணி.
மாலிமி - இளமைப் பருவத்திற் செய்த நட்பு.
மாலினி - பூமாலைக்காரி, காளி.
மாலுகம் - வேம்பு.
மாலுக்கிளையாள் - துர்க்கை.
மாலுதானம் - கண்குத்திப்பாம்பு.
மாலுந்திவந்தோன் - பிரமன்.
மாலுமி - கப்பலோட்டுபவன்.
மாலூரம் - வில்வமரம், விளா.
மாலூர்தி - கருடன்.
மாலை - அந்திப்பொழுது, பூவாலேனும் மணியாலேனுந் தொடுத்த தொடை, [முறை, ஒழுங்கு, நோய், இரா, இயல்பு, அரசன்மனை.]
மாலைக்கண்* - மாலைக்காலத் திருட்பிடிக்குங்கண்.
மாலைநேரம் - அந்திப்பொழுது.
மால் - கம்மாளர் கருவியினொன்று, [திருமால், மயக்கம், இந்திரன், புதன், மேகம், பெருமை, கருமை, காற்று, சோழன்.]
மால்பு - கண்ணேணி.
மாவட்டை - செவ்வட்டை.
மாவலர் - குதிரைப்பாகர், யானைப்பாகர்.
மாவலி - ஓர் சக்கரவர்த்தி.
மாவிடை - மரச்செறிவு.
மாவிலங்கு, மாவிலங்கை, மாவிலிங்கு* - ஓர் மரம்.

மாவிளக்கு* - மாவினாற்செய்த நெய்விளக்கு.
மாவிளம் - வில்வம்.
மாவுத்தன் - யானைப்பாகன்.
மாழாத்தல் - மயங்குதல்.
மாழை - பொன், அழகு, மாமரம், அறிவின்மை, திரட்சி, உலோ கக்கட்டி, ஓலை, புளிமா.
மாழ்கல் - சாதல், மயக்கம், மேவல்.
மாழ்கு - மாழ்கென்னேவல், மிருகசீரிடம்.
மாழ்தல் - சோம்பல், மயக்கம்.
மாள - முன்னிலையசைச்சொல் (உ-ம்.) 'சிறிது தவிர்ந்தீகமாள நின் பரிசிலருய்ம்மார்', வினையெச்சம்.
மாளயம் - புரட்டாசி மாதத்தில் இறந்தவரை நினைத்து அன்னார்க்குச் செய்யும் சிராத்தம்.
மாளல் - சாதல், வியங்கோண் முற்று.
மாளவகவுளம் - ஓரிசை.
மாளவம் - ஐம்பத்தாறு தேயத்தி னொன்று.
மாளவி - ஓரிராகம்.
மாளிகை - அரசன்மனை, [வீடு.]
மாறல் - ஒன்றைத் தந்து பிறிதொன்றைப்பெறல், தவிர்தல், விடுதல். [டியன்.
மாறன் - சடகோபாழ்வார், பாண்
மாறுட்டம் - தடுமாற்றம், [மாற்றுகை, புரட்டு.]
மாறு - கைம்மாறு, சிறுகொம்பு, துடைப்பம், மாறென்னேவல், மிலாறு.
மாறுகம் - சீலை.
மாறுகூலி - மரமேறுவோர் பெறுங் கூலி.
மாறுகோள் - ஒவ்வாமை, விரோதம்.
மாறுபாடு* - விரோதம்.
மாற்சரியம் - மார்ச்சரியம்.
மாற்றம் - சொல், பகை, வேற்றுமை.
மாற்றலர் - பகைவர்.
மாற்றல் - ஒன்றுகொடுத்தொன்றுவாங்கல், ஒன்றைவேறொன்றாக்கல்.
மாற்றவள் - சக்களத்தி.
மாற்றுட்டி - மாற்றவள். (இரா.)
மாற்றுந்தாய்* - தந்தையின் இரண்டாவது மனைவி.
மாற்றார் - பகைவர்.
மாற்று - பொன் வெள்ளியின் மாற்று, [மாறுதல், உபசாந்தம்.]
மான - உவமைச்சொல் (உ-ம்.) 'கொங்கைமுகமானக் குவிமுலை', முன்னிலையசைச்சொல்.
மானக்கேடு* - மானக்குறைவு.
மானசம் - மானதம் (மனத்தாற் சிருஷ்டிப்பது), மானசவாவியெனுமொரு மடு, கருத்து.
மானசிகம் - மனத்தாற் செய்யுந் தவம். (திரு.)
மானதஸ்நானம் - சற்குருவரு ளால் மூலமலமறுத்தல்.
மானதபூசை - மனோபூசை.
மானதீபம் - ஒரு உபநிடதம்.
மானபங்கம்* - மானக்குறைவு.
மானமா - கவரிமா.

மானம் - அபிமானம், பெருமை, வெட்கம், [வலி, குற்றம், உவமை, அளவு, புலவி "மானமங்கையர்" (சீவ. சிந். 2382.)]
மானல்-ஒத்தல், ஐயம், மயக்கம்.
மானவம்-உபபுராணத்தொன்று.
மானவர் - படைவீரர், மனிதர், மானமுடையோர்.
மானவு - தெளிவு. (சது.)
மானார் - பகைவர், பெண்கள்.
மானி* - மானமுடையோன்.
மானிடச்சட்டை - தெய்வம்தாங்கும் மானிடதேகம்.
மானிடமேந்தி - சிவன்.
மானிடம் - மனுஷப்பிறப்பு.
மானிடர், மானிடவர் - மனிதர்.
மானியம் - மன்னவன் சன்மானமாக விட்ட நிலம்.
மானினி - பெண்.
மானுடம், மானுஷம் - மனிதப்பிறப்பு.
மானுடர் - மனிதர்.
மானேறு - உத்திரநாள், கலைமான்.
மான் - ஓர் மிருகம், [குதிரை, மலை, விலங்கின்பொது, மகரமீன், மகரராசி, மகான். (கந். புரா.), உருவம்.]
மான்மகன்*-பிரமன், மன்மதன்.
மான்மதச்சேறு - கஸ்தூரிக் குழம்பு.
மான்மதம் - கஸ்தூரி.
மான்மியம் - மகிமை.
மான்றலை - மிருகசீரிடம்.
மான்றல் - மயங்கல்.

## மி

மிகல் - மிகுதல்.
மிகவும் - மிகுதியும்.
மிகுதல் - அதிகப்படல்.
மிகுதி - அநேகம், மீதி, [திரட்சி, பூரிப்பு, பொலிவு.]
மிகை - மிகுதி, குற்றம், கேடு, துன்பம், வருத்தம்.
மிக்கவன் - பெருமையிற் சிறந்தோன்.
மிக்கவை - ஊண், சோறு, நியாயமல்லவை, நிறைதல்.
மிக்கோர் - அறிஞர்.
மிசிரம் - கலப்பு.
மிசை - மேல், மிசையென்னேவல், மேடு, உயர்ச்சி, சோறு, தரித்திரம்.
மிச்சம் - சேடம், மிகுதி.
மிச்சில் - ஒழிபொருள், எச்சில்.
மிச்சை-அஞ்ஞானம், தரித்திரம்.
மிஞிறு - வண்டு.
மிஞ்சல் - கடத்தல், மீதியாதல்.
மிடல் - வலி.
மிடறு - கழுத்து, தொண்டை, கீழ்வாய்.
மிடா* - பானை, மிடா.
மிடி - வறுமை.
மிடியன் - தரித்திரன்.
மிடுக்கன் - வலிமையுள்ளவன்.
மிடுக்கு - வலிமை.
மிடை - தூறு, பரண்.
மிடைதல் - நெருங்கல்.
மிட்டா - அனுபவம், சுதந்திரம்.
மிட்டாய்* - இன்சுவைப் பலகாரம்.

மினுமினுத்தல் - இரகசியம் பேசுதல்.
மிண்டல் - நெம்புதல்.
மிண்டுதல் - மதத்தா லடர்த்தல்.
மிதக்குதல்* - மேலேகிளம்பல்.
மிதப்பு - மேற்படுகை, [உயர்ச்சி, மேடு.]
மிதம்* - அளவு.
மிதலை - கொப்பூழ்.
மிதவை - சோறு, தெப்பம்.
மிதி - நெய்வார் கருவியினொன்று, அறிவு, அத்தாட்சி.
மிதித்தல்-துவைத்தல், குதித்தல்.
மிதியடி* - பாதுகை.
மிதிலை - ஜானகிவளர்ந்தவூர்.
மிதுனம் - ஓரிராசி, இரட்டை, சேர்க்கை.
மித்திரநாள் - அனுடநாள்.
மித்திரபேதம் - நட்பைப் பிரித்தல்.
மித்திரன் - சிநேகிதன், [சூரியன்.]
மித்துரு - சினேகிதன்.
மித்துருத்தானம் - சென்மத்துக்கு நாலாமிடம்.
மித்தை - பொய்.
மிரட்டுதல்* - பயமுறுத்துதல்.
மிரதம் - பாம்பு.
மிரளுதல்* - பயப்படுதல்.
மிராசி, மிராசு*- பரம்பரையாக வரும் சுதந்தரம்.
மிரியல் - மிளகு.
மிருகக்குணம் - துட்டகுணம்.
மிருகசீரிடம் - ஓர் நாள்.
மிருகண்டன், மிருகண்டு - மார்க்கண்டேயனின் தந்தை.
மிருகதரன் - சந்திரன்.
மிருகநாபி - கத்தூரி.
மிருகமதம் - கத்தூரி.
மிருகம் - விலங்கின்பொது, [மான், மிருகசீரிடம், தேடல், இரத்தல். (சப்த.)]
மிருகராசன் - சிங்கம்.
மிருகாங்கன் - சந்திரன், சிவன்.
மிருகேந்திரன் - சிங்கம்.
மிருடன் - சிவன்.
மிருடாநி - பார்வதி.
மிருடார்த்தகம்- அபாவ அளவை.
மிருண் - மண்.
மிருதகம் - பிரேதம்.
மிருதங்கம்* - முழவு.
மிருதசஞ்சீவி, மிருதசஞ்சீவினி- இறந்தவர்களை யெழுப்பும் மருந்து.
மிருதபாஷாணம் - பாஷாண மறுபத்துநான்கினொன்று.
மிருதம் - போர், மரணம்.
மிருதாரசிங்கி - ஓர் பூடு, சிங்கி பாஷாணம், ஈயம்.
மிருதி - தருமநூல், மரணம்.
மிருது - மென்மை, [சாந்தம்.]
மிருதுபாஷிதம்-மெத்தெனவான மொழி.
மிருதை - பூமி.
மிருத்திகை - மண்.
மிருத்தியு - இயமன், மரணம்.
மிருத்து-மரணம். (சேது), மண்.
மிருநாளம் - தாமரைக்கொடி.
மிலாறு* - விளாறு.
மிலேச்சர் - சோனகர், மதிகேடர்.
மிலைச்சுதல் - அணிதல்.

மிலைதல் - அணிதல், சூடுதல்.
மிழலை-எழுத்துநிரம்பாத சொல்.
மிழற்றல் - சொல்லல், நிரம்பா மென்சொல், பேசலாலெழு
மிளகரணை - ஓர் செடி. [மொலி.
மிளகாய் - காரமுள்ள ஒரு காய்.
மிளகு* - திரிகடுகத்தி லொரு சரக்கு.
மிளகுசம்பா* - ஓர் நெல்.
மிளகுசாறு* - மிளகுநீர்.
மிளிர் - பெருமை, ஒளி.
மிளிர்தல் - ஒளிசெய்தல், பெருமையடைதல்.
மிளிறு - காடி.
மிளை - காவற்காடு.
மிறல் - பெருமை.
மிறை-அச்சம், குற்றம், வளைவு.
மிறைக்கவி - சித்திரகவி.
மினவுதல் - உபசரித்தல்.
மினுக்கம் - பகட்டு, ஒளி.
மினுக்குதல்* - ஒளிகாலுதல், பகட்டுக் காட்டுதல்.
மினுங்குதல் - மிளிர்தல்.
மினுமினுத்தல் - ஒளிசெய்தல்.
மினுமினுப்பு* - ஒளிவிடுதல்.
மின் - ஒளி, மின்னல், மின்னெனேவல், பெண்மகள்.
மின்மினி - இருளில் மின்னும் ஒருவிதப் பூச்சி.
மின்னல் - மின், [ஒளிசெய்தல்.]
மின்னற்கொடி - மின்னலின் ஒளிக்கொடி.
மின்னார் - பெண்கள்.
மின்னி - நீர்ப்பயறு.
மின்னுதல் - பிரகாசித்தல்.

மீ

மீ - ஓரெழுத்து, ஆகாயம், உயர்ச்சி, மேல், மகிமை.
மீகாமன், மீகான் - மாலுமி.
மீக்குவம் - மருதமரம்.
மீக்கூர்தல் - மிகப் பெருகுதல்.
மீக்கூறல் - கொண்டாடல், புகழ்தல்.
மீக்கூறு, மீக்கூற்று - புகழ்ச்சி.
மீசை* - மேலுதட்டின்மீதுள்ள மயிர்.
மீட்குதல் - இரட்சித்தல், திருப்புதல்.
மீட்சி - மீளுதல்.
மீட்டல் - இரட்சித்தல், வீணை வாசித்தல்.
மீட்டும் - திரும்பவும்.
மீட்பர் - இரட்சகர், பாவத்தினின்று மீட்கிறவர்.
மீதி* - மிச்சம், மிகுதி.
மீது - மேல்.
மீதுரை - பலகால் விளம்பல்.
மீதூர்தல் - நெருங்கல்.
மீந்திருக்க* - மிஞ்சியிருக்க.
மீமாஞ்சை - புறச்சமயமாறினொன்று.
மீமிசை - மேல், மேலுக்குமேல்.
மீயான் - மீகாமன் (மணி. 36.)
மீள - திரும்பவும்.
மீளவும் - மறுபடியும்.
மீளாக்கதி - திரும்பிவராத மார்க்கம், [மோட்சம்.]
மீளி - மன்னன், திண்ணியன், பாலைநிலத்தலைவன், பெருமை, மேன்மகன், வலி.

மீளுதல் - மீட்டெடுத்தல்.
மீள்வித்தல் - மீளச்செய்தல்.
மீறல்* - அடங்காமற்போதல்.
மீனக்கொடியோன் - மன்மதன், பாண்டியன்.
மீனமாதம் - பங்குனிமாதம்.
மீனம் - ஓரிராசி, மீன்.
மீனம்பர் - செம்மீன்வயிரம்.
மீனவன் - பாண்டியன்.
மீனாட்சி - அங்கயற்கண்ணி, [பொன்னுங்காணி.]
மீனுண்டி - சருக்கரை.
மீனும்பூச்சி - மின்னும்பூச்சி.
மீனாய் - நீர்நாய்.
மீன் - மச்சம், [நட்சத்திரம், சித்திரைநாள், நெய்தற்பறை.]
மீன்குத்தி - ஓர் புள்.
மீன்கொத்தி* - மீன்குத்திப்புள்.
மீன்சிதள், மீன்செகிள், மீன்செதில், மீன்செதிள்- மீனின் மேற்புறத்தேயுள்ள முள்.
மீன்சினை* - மீன்முட்டை.
மீன்பிரால் - மீன்செதிள்.
மீன்முள்* - மீனெலும்பு.

## மு

முகக்கடுப்பு*-முகத்தில் காணும் கடுமைக்குறி.
முகக்கட்டை - மோக்கட்டை.
முகக்களை* - முகத்தினழகு.
முகக்குறி - முகச்சாடை.
முகங்கொடுத்தல்* - இசைதல்.
முகங்கோணுதல்* - முகத்தில் வெறுப்புக்குறி காட்டல்.
முகசோதி - எலுமிச்சை.
முகச்சாடை, முகச்சாயல்*-முகக்குறி.
முகஞ்சுண்டுதல்* - முகங்கருகுதல்.
முகடி - மூதேவி.
முகடு - வீட்டின் மேற்கூரை, உயர்வு, முக்தி, உச்சி.
முகட்டுப்பூச்சி* - மூட்டுப்பூச்சி.
முகதலை - சேலையின் முன்தானை.
முகதா - சமுகம்.
முகத்தல் - மொள்ளல்.
முகத்தாட்சணியம்* - ஒருவன் முகத்தைப் பார்த்துண்டாகிற இரக்கம்.
முகத்தாலடித்தல் * - ஒருவனை நேரில் நிந்தித்தல்.
முகத்துதி, முகஸ்துதி - முகமன்.
முகத்துவாரம்* - கழிமுகம்.
முகபடாம் - யானையின் முகத்திலிடுமொரு விசித்திர துணி.
முகப்பரீட்சை - அறிமுகம்.
முகப்பழக்கம் - முகப்பரீட்சை.
முகப்பு - தலைப்பு, முகனை.
முகமண்டலம் - முகவட்டம்.
முகமது-இஸ்லாம்மதஸ்தாபகர்.
முகமலர்ச்சி - சந்தோஷம்.
முகமறிதல்*-முகப்பழக்கமாதல்.
முகமன் - வாயுபசாரம்.
முகமாட்டம் - பாரபட்சம்.
முகம் - வதனம், [பருவின் முகமுனை, தொடக்கம், இடம், அந்தரக்கொட்டு (சிலப்ப.)]
முகராசி - முகவிணக்கம்.
முகரிமை - பேரறிவு.
முகருதல்* - மோத்தல்.
முகரை* - மூக்கினடி.

முகவங்கு - முகத்திற் படருங் கருந்தேமல்.
முகவசீகரன்* - பிறரை வசீகரிக்கும் முகக்களையுடையவன்.
முகவாசம் - வெற்றிலை (சீவக. சிந். 2474.)
முகவாட்டம்* - முகக்களையின்மை.
முகவுரை - பாயிரம்.
முகவை - இராமநாதபுரம், அகப்பை, பொலிப்பாட்டு.
முகனை* - முதல், முனை.
முகாந்தரம், முகாந்திரம் - ஏது.
முகாரி - ஓரிராகம்.
முகில் - மேகம்.
முகில்வண்ணன் - திருமால்.
முகிழம் - மலரும்பருவத்தரும்பு.
முகிழ் - அரும்பு, காம்படி.
முகிழ்த்தல் - அரும்புதல்.
முகிற்குன்றம் - வக்கிராந்தபாஷாணம், மேகமூடியமலை.
முகுந்தம் - குபேரனவநிதிகளிலொன்று.
முகுந்தன் - மகாவிஷ்ணு.
முகுரம் - கண்ணாடி, தளிர்.
முகுர்த்தம், மூகூர்த்தம்-இரண்டு நாழிகை கொண்ட நேரம்.
முகை - மலரும்பருவத்தரும்பு.
முக்கண்ணன் - சிவன், விநாயகன், வீரபத்திரன்.
முக்கண்ணி-பார்வதி, தேங்காய்.
முக்கரணம்-மனம் வாக்கு காயம்.
முக்கல் - முக்குதல்.
முக்கனி*-முப்பழம். அது:வாழை பலா மா.
முக்காடு*.- முட்டாக்கு.
முக்காணி* - சிற்றிலக்கத்தொன்று (மூன்று காணி.)
முக்காணியர் - பிராமணரிலோர் வகையார்.
முக்காரம்*-எருதினுக்கிரசத்தம்.
முக்காலம் - திரிகாலம், அஃது இறப்பு எதிர் நிகழ்வு.
முக்காலி* - மூன்றுகால்களோடு கூடிய ஒரு பீடம்.
முக்கால் - மூன்றுகால்.
முக்கியம்*-பிரதானம்.
முக்குடுமி - சூலம்.
முக்குடை - சந்திரவட்டம் சகலபாசனம் நித்தியவிநோதம்: அவை முறையே முத்துக்குடைபொற்குடைமணிக்குடை.
முக்குடைச்செல்வன் - அருகன்.
முக்குணம் - மூன்று குணம். அவை: இராசதம் சாத்துவிகம் தாமதம்.
முக்குதல்*- முட்டுப்பட்டனுங்குதல், [உண்ணல். (புற).]
முக்குவர் - ஓர்வகைச் சாதியார்.
முக்குளம் - கங்கை சரஸ்வதி யமுனை யென்னும் நதிகளைப் பொருந்தி யிருக்குமோர் கிராமம், பூராடம்.
முக்குளி - கோழிமுளையான்.
முக்குளித்தல் - அமிழ்ந்துதல்.
முக்குற்றம் - மூன்று குற்றம். அவை: காமம்வெகுளிமயக்கம்
முக்கூட்டு - பரணிநாள், அடுப்பு.
முக்கூட்டெண்ணெய் - ஓர்மருந்தெண்ணெய்.
முக்கோணம்* -மூன்றுமூலை வடிவம்.

முக்கோல் - திரிதண்டம் : அது மூன்று கோல் ஒன்று சேர்த்துக் கட்டிய தண்டு, திருவோணம்.
முக்கோற்பகவர் - திரிதண்ட சந்நியாசிகள்.
முக்தாபலம் - கர்ப்பூரம், முத்து.
முங்கி-முழுகி. (மணிமே. 284.)
முசரு, முசர்* - தயிர்.
முசலம் - உலக்கை, இருப்புலக்கை.
முசலி-முதலை, உடம்பு, ஓணான், நிலப்பனை, பலபத்திரன், மெருகன்கிழங்கு, பல்லி, தாழை.
முசலிகாசனம், முசலிகாதனம் - இருகாலு மிருகையுஞ் சம்மணமாக மடக்கி மார்பு நிலத்திலே படியக்கிடப்பது.
முசல்* - முயல்.
முசித்தல்-இளைத்தல், மெலிதல்.
முசிரன் - கொடையாளி.
முசிறு - முன்கோபி, முயிறு.
முசுகுந்தன் - ஓர் சக்கரவர்த்தி.
முசு* - ஓர்சாதிக் குரங்கு.
முசுக்கட்டைப்பூச்சி - கம்பளிப்பூச்சி.
முசுடர் - கீழ்மக்கள்.
முசுண்டர் - கீழ்மக்கள்.
முசுண்டி - ஒரு படைக்கலம்.
முசுப்பு - எருத்துத்திமில்.
முசுமுசுக்கை* - ஒரு கொடி.
முசுமுசெனல் - தினவுக்குறி.
முச்சட்டை* - அழகு.
முச்சத்தி - இச்சா ஞானக்கிரியா சக்திகள். அவை :சிருஷ்டி திதி சங்காரம்.
முச்சந்தி-முத்தெருக்கூடுமிடம்.
முச்சி-உச்சி, உச்சிக்கொண்டை, மயிர்முடி.
முச்சியர்* - வன்னக்காரர்.
முச்சிலிக்கை* - உடன்படிக்கையுறுதிப் பத்திரம்.
முச்சில்* - சிறு முறம்.
முச்சுடர் - மூன்று சுடர். அவை: அக்கினி சூரியன் சந்திரன்.
முச்சூடும்* - முழுதும்.
முச்செயல் - மூன்று செய்கை. அது : படைத்தல் காத்தல் அழித்தல்.
முஸ்கரம் - முரட்டாட்டம்.
முஸ்திப்பு* - ஆயத்தம்.
முஷ்டி, முட்டி - முடக்கிய கை, ஒரு பிடி.
முஞ்சகேசி - திருமால். (சப்த)
முஞ்சல் - சாதல், முடிவுறல்.
முஞ்சி-உபவீதத்தில் கட்டும் புல்.
முடக்கம் - தடை, முடங்குதல்.
முடக்கல்* - மடக்குதல்.
முடக்கற்றான், முடக்குற்றான்* - ஓர் பூடு.
முடக்கு - முடக்கென்னேவல், முடங்கல், [விரலணியிலொன்று, ஓலைச்சீட்டு, தாழை.]
முடங்குதல்* - மடங்குதல்.
முடத்தி* - முடப்பெண்.
முடமுடெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.
முடம்* - நொண்டி, [குற்றம். (சிலப். 89-38.), வளைவு.]
முடலை - நாற்றம், வலி, உண்டை, பெருமை.

முடவன்-நொண்டி, [சனி, அருணன்.]
முடி - முடிமயிர், முடியென்னேவல்,[கிரீடம், குடுமி,தலை, தேங்காய்முடி,நாற்று.]
முடிகாணிக்கை - நேர்ந்த சடை கழித்தல்.
முடிசூட்டுதல் - முடிதரித்தல்.
முடிச்சடைமுனிவன் - வீரபத்திரதேவன். (சீவக. சிந். 2285.)
முடிச்சு* - முடியப்பட்டது.
முடிச்சுமாறி* - திருடன்.
முடிதல்-முடிச்சுமுடிதல்,சாதல்.
முடித்தல் - முற்றுவித்தல்.
முடிநாதம் - இந்திரகோபம்.
முடிப்பு - முடிச்சு, [தீர்மானம்.]
முடிமேலழகி - கோடகசாலை.
முடிவாங்குதல் - பிறவிமயிர்கழித்தல்.
முடிவு - சாவு, அந்தம்.
முடுகல் - எதிர்த்தல், சீக்கிரம், மொய்த்தல், வலி.
முடுகியல் - கலிப்பாவிஞேருறுப்பு அது அராகம்.
முடுகு - முடுகென்னேவல், அராகம், கடமைப்பெண்.
முடுக்கர் - மலைக்குகை.
முடுக்கல் - அவசரப்படுத்தல், நெருக்கல், மொய்த்தல்.
முடுக்கன் - பலமுள்ளவன்.
முடுக்கு - ஒடுக்கம், கோணத்தெரு, நெருக்குதல், மூலை.
முடுவல் - செந்நாய், நாய், பெண்ணாய்.
முடுவற்படையோன்- வயிரவன்.
முடுவன் - ஊமை. (ஆசிரிய)

முடை-முடையென்னேவல், தீயவாசனை,புலால், ஓலைக்குடை.
முடைதல் - பின்னுதல், [இளைத்தல், நிணத்தல்.]
முடைநாற்றம் - புலால்மணம்.
முட்கீரை - ஓர் செடி.
முட்ட-நிறைய, எதிர்க்க, தாக்க.
முட்டாக்கு* - முக்காடு, [போர்வை.]
முட்டாள்* - மூடன்.
முட்டி - முடக்கிய கை, [ஓர் பிடி, எட்டிமரம், பிச்சை, ஓர் செடி.]
முட்டிகை - தட்டார்குறடு.
முட்டு - முட்டென்னேவல், [தடை, நெருக்கம், வருத்தம், குறைவு, தரித்திரம், கடிவாளம், முழந்தாள்.]
முட்டுக்கட்டை - மிண்டுதடி.
முட்டுக்கொடுத்தல்*-மிண்டுகொடுத்தல்.
முட்டுப்பாடு - தீமை, நெருக்கிடை, வருத்தம், தரித்திரம்.
முட்டை - அண்டம், [தவிடு, சிறுகரண்டி.]
முணங்கு - அடக்கம், சோம்பு.
முணங்குதல்* - குரலையடக்கிப்பேசுதல்.
முணுமுணெனல் - ஒலிக்குறிப்பு.
முண்டகம் - தாமரை, தாழை, நீர்முள்ளி, முட்செடி, கள், நெற்றி, முள்ளிச்செடி.
முண்டகன் - பிரமன்.
முண்டகாசனி - இலட்சுமி.
முண்டம் -உடற்குறை, [நெற்றி, மொட்டைத்தலை, திரட்சி,

தலை, உபநிடதமுப்பத்திரண் டிலொன்று.]
முண்டனம் - மழித்தல்.
முண்டாசு* - தலைப்பாகை.
முண்டி - நாவிதன், மொட்டைத் தலையன்.
முண்டிதம்* - மொட்டை.
முண்டு* - உள்வேட்டி, துண்டு வேஷ்டி.
முண்டுதல் - முரண்டுபண்ணல்.
முண்டை* - விதவை.
முண்டைக்கண் - பருத்த கண்.
முண்மா - முட்பன்றி.
முண்முருக்கு - ஓர் முருக்கு.
முதம் - உவகை.
முதலல் - முதலாதல்.
முதலாளி - முதன்மைக்காரன்.
முதலி - முதல்வன்.
முதலிச்சாதி* - ஓர் சாதி.
முதலை* - முதளை (வன்மீன்.)
முதலோன் - கடவுள்.
முதல் - ஆதி, வட்டிக்குக் கொடுக்கும் பணம், வியாபாரஞ் செய்யும் பணம், [முதலென்னே வல், ஏழனுருபு (உ-ம்.) சுரன் முதல்வந்தவுரன்மாய்மாலை.]
முதல்முதல்* - துவக்கம்.
முதல்வர் - வானோர்.
முதல்வன் - அரசன், கடவுள், முதலாளி.
முதல்வி - தலைவி.
முதற்காரணம் - காரணத்திற்கா தியாயிருப்பது.
முதற்பா - வெண்பா.
முதாரி, முதாரு - நிறைகன்றுத் தாய்ச்சி, முதுகன்று.
முதாருகன்று*-பால் குடிப்பதை மறந்த கன்று.
முதிஞர்,முதியர்,முதியோர்-மூத்தோர்,பெரியோர்.
முதிரை - அவரை, கொள்ளு, துவரை, காராமணி.
முதிர்ச்சி - முதிர்வு.
முதிர்தல் - காய்தல், தேறுதல், வயசாதல்.
முதிர்வேனில் - ஆனி ஆடி மாத காலம்.
முது - பழமை.
முதுகாடு - சுடலை.
முதுகு* - பின்புறம்.
முதுகுகாட்டுதல் - புறங்காட்டு தல், தோல்வியுறுதல்.
முதுகுநீர்ச்சடங்கு - சீமந்தச்சடங்கு.
முதுகுன்று - விருத்தாசலம்.
முதுக்குறைவு - பேரறிவு.
முதுமை - பழமை, மூப்பு, பழமொழி.
முதுமொழிக்காஞ்சி - ஒரு நூல்.
முத்தகம் - தனித்தனியே முற்றுப்பெறுஞ் செய்யுள், கருக்குவாளிமரம்.
முத்தமிழுரியோன்- அகத்தியன் வயிரவன்.
முத்தமிழ் - இயலிசை நாடகமென்னும் மூவகைத் தமிழ்.
முத்தம் - முத்து, பிரியம், விடுகை, உதடு, மருதநிலம்.
முத்தர் - முத்திக்குரியோர்.
முத்தலை - சூலம்.

முத்தாபலம் - முத்து, இசங்கு.
முத்தாமணக்கு - ஓராமணக்கஞ் செடி.
முத்தாரம்* - முத்துமாலை.
முத்தி - முத்தம், [மோட்சம்.]
முத்திநெறி - ஞானமார்க்கம்.
முத்திரித்தல் - முத்திரைவைத்தல்.
முத்திருக்கஞ்செடி - ஒரு பூடு.
முத்திரை - இலாஞ்சனை, அடையாளம்.
முத்தீ - உதரத்தீ உயிர்த்தீ சினத்தீ, அன்றியும் ஆகவனீயம் காருகபத்தியம் தக்கணாக்கினியம் எனும் மூவகைநெருப்பு.
முத்து - சங்கு முதலியவற்றின் முட்டை, [ஓரிரத்தினம், வைசூரிக்குரு, பிரியம், மேலானது.]
முத்துக்குமாரன் - புள்ளிருக்கும் வேளூர் முருகன்.
முத்துக்குளித்தல் - முத்தெடுக்க நீரில் முழுகல்.
முத்துக்கொட்டை* - ஆமணக்கங்கொட்டை.
முத்துச்சம்பா* - ஓர் நெல்.
முத்துவடம்* - முத்துமாலை.
முத்துவன்னச்சேலை*-ஓர் சேலை.
முத்தை - கவளம், [திரட்சி, மிகவும் தெளிவிலாள்.]
முந்த - முன்னே.
முந்தானை - முன்றானை.
முந்தி* - முன்னே.
முந்திரி - ஓர் சிற்றிலக்கம் அது முந்நூற்றிருபதி லொன்று.
முந்திரிகை - ஓர் செடி.
முந்தைநாள் - முன்னாள்.
முந்து - முந்தென்னேவல், [வெண்ணுரை, பொந்து, பழமை.]
முந்தாழ் - மூங்கில் (கந்த), பழவினை.
முந்தையோர்-முன்னோர்.
முந்நீர் - கடல்.
முப்பாட்டன் - பாட்டனுடைய பாட்டன்.
முப்பால் - முப்பகுதி. அஃது: ஆண்பால் பெண்பால் அலிப்பால்;மூன்றுவிதப் பால்.அது: காய்ச்சுப்பால் திரட்டுப்பால் குழம்புப்பால்; திருக்குறள். அது: அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பாலென மூவகைப்படும்.
முப்புரம்- திரிபுரம். அவை: இருப்புமதில் பொன்மதில் வெள்ளிமதில்.
முப்புரிநூல் - மூன்றுபுரிசேர்ந்த நூல்.
முப்புள்ளி - ஆய்தவெழுத்து.
முப்பூ - ஓர் அரிய மருந்துச் சரக்கு.
முமூட்சு-மோட்சம்பெறும்விருப்புடையன்.
மும்மரம் * - மும்முரம் (உக்கிரம்).
மும்மரித்தல்* - உக்கிரங்கொள்ளல்.
மும்மலம் - முக்குற்றம். அவை: ஆணவம் மாயை காமியம்.
மும்மீன் - மிருகசீரிடம்.
மும்முரம் - மும்மரம்.

மும்மூர்த்தி - பிரமா விட்டுணு சிவன், சுக்கு திப்பிலி மிளகு.
மும்மை -முப்பிறப்பு. அது: உம்மை இம்மை மறுமை.
முயக்கம், முயக்கு - கலவி.
முயங்கல் - தழுவல்.
முயலின்கூடு - சந்திரன்.
முயலுதல் - முயற்சிசெய்தல்.
முயல் - முசல், [முயலென்னே வல், போர்.]
முயற்கூடு - சந்திரன் "முயற் கூடுகண்டு ...... பனிக்கும் பொய்கைத்தாமரை" (சீவக. சிந். 2284).
முயற்கோடு - இன்மையுவமை.
முயற்சி - ஊக்கம்.
முயிறு - ஓரெறும்பு.
முரசக்கொடியோன் - தருமன்.
முரசம் - வாச்சியப்பொது.
முரசு - ஓர் மேளம், பல்லினீறு, உத்திரட்டாதிநாள்.
முரஞ்சுதல் - முற்றுதல். (மலை), வலிபெறல். (ஞானு).
முரடன்* - முட்டாள்.
முரடு* - கரடு, பதமையின்மை.
முரட்கை - கலிப்பா.
முரட்டாட்டம் - முரட்டுத்தனம்.
முரண் - மாறுபாடு, வலி, போர், பகை, ஓர் தொடை.
முரண்டல் - எதிர்த்தல்.
முரண்படுதல் - மாறுபடுதல்.
முரம்பு - பாறை, மேடு, பரலுடைத் துயர்ந்த நிலம், பாலைநிலம்.
முரலி, முரளி - மூக்கால் வாசிக்குங் குழல், ஊதுகுழல்.
முரல்வு - உள்ளோசை.
முரவை - தவிடு. (திருவி)
முரற்றல் - ஒலித்தல்.
முரன் - ஓரசுரன்.
முராரி - திருமால்.
முரிதல் - ஒடிதல், தோற்றல், கெடுதல்.
முரித்தல், முறித்தல் - ஒடித்தல், [தோல்வியுறச் செய்தல்.]
முரிப்பு - எருத்துத்திமில்.
முருகன் - குமரன், [இளையோன்.]
முருகு - காதணியினென்று, [இளமை, அழகு, கள், திருவிழா, தேன், வாசனை, அகில், முருகன், எழுச்சி.]
முருகேசன் - கந்தன்.
முருக்கு - கிஞ்சுகமரம், எலுமிச்சைமரம், கொலை.
முருக்குதல் - கொல்லல், அழித் [தல்.
முருங்கை* - ஒரு மரம்.
முருடர் - வேடர்.
முருடு - வெட்டிய மரத்தினடி, ஓர் வாச்சியம், பெருங்குறடு, விறகு.
முருந்து, முருந்தம் - இறகினடியிற்குருத்து, வெண்குருத்து, வெண்மை.
முலாம்* - பொன் வெள்ளிப் பூச்சு.
முலை* - கொங்கை, விலங்கின் மடி.
முலைக்கண் - முலைப்பால்வருந் துவாரம்.
முலைக்காம்பு* - முலைக்கண்.
முலைப்பால்* - பெண்கள்முலையின்பால்.

முல்லை - முல்லைக்கொடி, [ஒரி சை, கற்பு, வெற்றி, காடுங் காடு சார்ந்த இடமும்.]
முல்லைநிலமாக்கள் - ஆயர்.
முல்லையர் - இடையர்.
முழக்கம் - ஆரவாரம், குமுறுகை, ஒலி.
முழக்குதல் - தொனிப்பித்தல்.
முழக்கோல்* - ஓரளவைக்கருவி.
முழங்கல் - வானங்குமுறல், ஒலித்தல்.
முழங்கால்* - முழந்தாள்.
முழங்கை* - மணிக்கட்டின் கீழுறுப்பு.
முழந்து - முழங்கால்.
முழம்* - இருசாண்கொண்டது.
முழல் - கழற்சிக்கொடி.
முழவம் - குடமுழா, முரசு.
முழி* - விழி.
முழுகுதல்* - குளித்தல்.
முழுக்க* - முழுதும்.
முழுக்காட்டு* - நீராட்டு.
முழுங்கல்* - விழுங்கல்.
முழுதும்* - எல்லாம்.
முழுத்தம் - முகூர்த்தம்.
முழுத்தல்* - மூழ்குவித்தல்.
முழுமகன் - அறிவிலான்.
முழுமன்* - முழுதும்.
முழுமுதல் - கடவுள்.
முழுமை* - முழுவதும்.
முழுவல் - நீர்ப்பறவை விசேடம். (மணிமே. 79)
முழுவுதல் - முத்தமிடல்.
முழை - குகை, துப்பு.
முழைஞ்சு - மலையினுட்குகை.
முளரி - தாமரை, தீ, ஓமவிறகு, காடு, முட்செடி, கடைக் கொள்ளி, நுண்மை.
முளவு - முட்பன்றி.
முளி - மரமுதலியவற்றின்காடு.
முளித்தல் - காய்தல், வறத்தல்.
முளை-ஆப்பு,முளையென்னேவல், பருவின் முளை, முளையாணி, [மூங்கில், தண்டாயுதம்.]
முளைத்தல் - முளைக்குதல்.
முளையடித்தல் * - ஆப்பறைதல்.
முளையாணி*-கதவுநிற்குமிரும்பு.
முளையான்* -குழந்தை.
முள், முள்ளு - மரத்தின்முள், மீன்முள், தராசுமுள், [முட் கருவி, நுண்மை.]
முள்காத்தல்- மவுனமாயிருத்தல். (கந்த)
முள்வாயன் - ஓர் கறையான்.
முள்ளங்கி* - ஓர் கிழங்கு.
முள்ளந்தண்டு - முள்ளென்பு.
முள்ளம்பன்றி - முட்பன்றி.
முள்ளி - ஓர்வகைச் செடி.
முள்ளிலவு - ஒரு மரம்.
முள்ளெலும்பு - முள்ளந்தண்டு.
முறம் - சுளகு, [விசாகநாள்.]
முறி - முறியென்னேவல், [எழுதுமுறி, துண்டு, இலை, தளிர், அடிமை.]
முறிகரை - இடிகரை.
முறிகுளம் - உடைகுளம், பூராடம். (பிங்.)
முறிச்சி - விற்றற்குரியவடிமைப் பெண்.
முறிதல்* - ஒடிதல்.
முறித்தல்* - ஒடித்தல்.

முறியன் * - விற்றற்குரியவடி மையாள்.
முறுக்காணி* - சுரியாணி.
முறுக்கு - ஓர் பண்ணிகாரம், வீரூப்பு, [பிணக்கு, கடுமை.]
முறுக்குதல் - கோபித்தல், திரித் தல், [வலித்தல்.]
முறுமுறுத்தல்*- குறைசொல்லு தல்.
முறுவலித்தல் - சிரித்தல்.
முறுவல் - சிரிப்பு, பல்.
முறை-உறவொழுங்கு, [குணம், தரம், முறைமை, வரிசை, ஒழுக்கம், பழமை, புத்தகம்.]
முறைகேடு - தவருன நடத்தை.
முறைக்காய்ச்சல்*- ஒன்றைவிட் டொருநாள் வருங்காய்ச்சல்.
முறைப்பாடு - குறைகூறுதல்.
முறைப்பு* - விறைப்பு.
முறைமை - ஒழுங்கு, கிரமம்.
முற்கம் - கெற்சிதம், பச்சைப் பயறு.
முற்கரம் - பெரியதடி. (வான்மீ)
முற்கு - முற்கம்.
முற்குளம் - பூராடநாள்.
முற்கொழுங்கோல் - பூரட்டாதி.
முற்சனி - மகநாள்.
முற்சாமம் - முதற்சாமம்.
முற்பகல் - ஒரு பகலின் முற் பகுதி.
முற்படுதல் - எதிர்ப்படுதல், முந்துதல், பிணைப்படுதல்.
முற்ற* - எல்லாம்.
முற்றம் - முன்றில்.
முற்றல் - முதிருதல், முடிதல்.
முற்றில் - சிறுமுறம், விசாகம்.
முற்றுகை - தனது சைன்னியத் தைக்கொண்டு பகையரச னின் பட்டணத்தைச் சூழ்ந் திருக்கச்செய்தல்.
முற்றுதல் - முதிர்தல், [முடி தல்.]
முற்றும் - எல்லாம், முடிவு.
முனி - தவஞ்செய்பவன், ஞானி, அகத்திமரம், புத்தன், யானைக் கன்று, வில்.
முனிதல் - கோபித்தல், வெறுத் தல்.
முனிபுங்கவன் - முனிசிரேஷ் டன்.
முனிமூத்திரம் - கல்லுப்பு.
முனிவர் - தவத்தோர், சடை முடியர், அந்தணர்.
முனிவு - கோபம், வெறுப்பு.
முனீந்திரன் - புத்தன்.
முனை - நுனி, [முதன்மை, பகை, யுத்தம், வெறுப்பு, துணிவு, தவம். (சீவக. சிந். 707.)]
முனைதல் - போர்கலத்தல்.
முனைமடிதல் - கூர்மழுங்கல்.
முனைமுகம் - போர்முகம்.
முனைவன் - கடவுள், பகைவன், இருடி. (சீவக. சிந். 707), புத் தன்.
முனைவு - சினம், வெறுப்பு, கோபம்.
முன் - முன்பு, முதன்மை, இனி யென்பது, பழமை, பக்கம்.
முன்கட்டு*- முன்னாலே கைமடி த்துக் கட்டுதல், வீட்டின்முற் பக்கம்.
முன்கை* - கெண்டைக்கை.

முன்பக்கம்* - முன்புறம்.
முன்பிறந்தாள் - அக்காள்.
முன்பு - முன், [மேல், பழமை, பெருமை, வலி.]
முன்முனை* - முன்முகை, மேற் போர்வை.
முன்றில் - முற்றம்.
முன்னடி* - முன்னே.
முன்னணி - முற்படை.
முன்னம் - முன், [சீக்கிரம், கருத்து, மனம், குறிப்பு.]
முன்னர் - முன், [ஆதி, இடம், நெஞ்சு.]
முன்னல் - நினைத்தல்.
முன்னவள் - மூதேவி, அக்காள்.
முன்னவன் - கடவுள், அண்ணன்.
முன்னிடுதல் - நேரிடுதல்.
முன்னிருட்டு - முன்னிராவிருள்.
முன்னிலை - சமுகம் (மூவிடத் தொன்று), காரணம்.
முன்னிற்றல் - உதவுதல், முன்னே நிற்குதல்.
முன்னெற்றி* - மேல் நெற்றி.
முன்னேரம் - இளம்பகல்.
முன்னோர்* - முன்னுழவுமாடு.
முன்னை - பழமை, முன்னைமரம், அக்காள், அண்ணன், மூதேவி.
முன்னையோர், முன்னோர் - பழையோர்.
முன்னோன் - கடவுள், [தமையன், விநாயகன்.]

## மூ

மூ - ஓரெழுத்து, மூவென்னேவல், மூப்பு.
மூகம் - மௌனம்.
மூகன் - ஊமை, [ஓரசுரன்.]
மூகை - ஊமை.
மூக்கணாங்கயிறு, மூக்காங்கயிறு* - நாணயக்கயிறு.
மூக்கரட்டை,* மூக்கறட்டை - மூக்கிரட்டை (ஓர் பூடு.)
மூக்கரிகத்தி - வெற்றிலைக்காம் பரி கருவி.
மூக்கறை - நாசியறுபட்டவன்.
மூக்கறைச்சி - அரிதாரம்.
மூக்கன் - பாம்பு.
மூக்காங்கொழுந்து* - நாசிமுனை.
மூக்காந்தண்டு* - மூக்கின டுத் தண்டு.
மூக்காவளை, மூக்காவனை - ஓர் பூடு.
மூக்கிறைச்சி - ஓர் பூடு.
மூக்கு* - நாசி, பறவைமூக்கு.
மூக்குக்கண்ணாடி* - மூக்கின்மீ திடுங்கண்ணாடி.
மூக்குச்சிந்துதல்* - மூக்குச்சீறுதல்.
மூக்குத்தி* - ஓராபரணம்.
மூக்குத்தூள் * - புகையிலைப் பொடி.
மூக்கூளை - மூக்குச்சளி.
மூங்கி - சிறுபயறு.
மூங்கிலரிசி * - மூங்கிற்கொட்டை.
மூங்கிலுப்பு - ஒருப்பு.
மூங்கில் - ஒரு மரம்.
மூங்கிற்புதர்* - மூங்கிற்கிளை.
மூங்கிற்றண்டு - மூங்கிற்கழி.
மூங்கு - சிறுபயறு.
மூங்கையன் - ஊமையன்.

மூசல் - மூசுதல், [மொய்த்தல், சாதல்.]
மூசாம்பரம் - ஓர் மருந்துச் சரக்கு (இது காயத்தை யாற் [றுவது)·
மூசாலை - சோம்பு.
மூசை* - மட்குகை.
மூச்சு - உயிர்ப்பு, சுவாசம், [பலம், ஆண்மை.]
மூச்சுக்காட்டுதல்* - ஆண்மை காட்டுதல்.
மூச்சுப்பேச்சு * - அசுமாற்றம்.
மூச்சுவாங்கல்*-மூச்சை யுள்ளே யடக்கல்.
மூச்சுவிடுதல் * - சுவாசம்விடல்.
மூச்செறிதல் - மூச்சுவிடுதல்.
மூச்சை - மூர்ச்சை.
மூச்சொடுங்கல் - சாதல்.
மூஞ்சல் - மொய்த்தல்.
மூஞ்சி*-முகம், கோணியமுகம்.
மூஞ்சிசுண்டுதல் - முகங்கருகல்.
மூஞ்சுறு, மூஞ்சூறு* - சுசுந்தரி.
மூடகருப்பம் - கருப்பத்திலிறந்த பிள்ளை.
மூடத்தனம்* - அறிவின்மை.
மூடம் - அறிவின்மை, மந்தாரம், [எட்டுமரக்கால் கொண்ட ஓரளவை, குளிர், மயக்கம்.]
மூடன் - அறிவீனன், கீழ்மகன்.
மூடாத்துமா* - மதிகேடன்.
மூடி - மூடப்பெண், மேன்மூடி, [கொத்தமல்லிப்பூடு.]
மூடிகம், மூஷிகம் - பெருச்சாளி, எலி.
மூஷிகவாகனன் - விநாயகன்.
மூடுதல் - போர்த்தல், மறைக்குதல்.
மூட்டம் - மூடியிருப்பது, உலைமுகம், [கம்மாளர் கருவி, ஆயத்தம்.]
மூட்டல் - எவுதல், இசைத்தல், பற்றப்பண்ணுதல்.
மூட்டை - சாமான்பை, [ஓர் பூச்சி.]
மூண்டன் - மிளகு.
மூதணங்கு - மூதேவி, காடுகாள்.
மூதண்டகஷாயம் - அறுகும் மிளகும் சேர்ந்த கஷாயம்.
மூதண்டம் - பழையலோகம்.
மூதரித்தல், மூதலித்தல் - ஒப்புவித்தல்.
மூதறிஞன்-பேரறிவுடையோன்.
மூதறிவு - பேரறிவு.
மூதா - தம்பலப்பூச்சி.
மூதாக்கள் - முதியோர்.
மூதாட்டி - முதியவள்.
மூதாதை - பாட்டன்.
மூதிரி - எருமை.
மூதிரை - திருவாதிரைநாள்.
மூதிற்பெண்டிர் - மறக்குடி மகளிர்.(சிலப். 5: 135.)
மூதுணர்வு - பேரறிவு.
மூதுரை - பழமொழி, ஒரு நூல்.
மூதேவி - சேட்டை (இலக்குமிக்குமுன் பிறந்தாள்.)
மூதை - வெட்டிச்சுட்ட காடு.
மூத்தல் - முதிர்தல்.
மூத்தார்* - புருஷன்தமையன்.
மூத்தாள் - அக்காள், [தலைவி, மூதேவி.]
மூத்திரகிரிச்சம், மூத்திரகிரிச்சனம், மூத்திரகிறீச்சனம் - ஓர் நோய், கல்லடைசல்.

மூத்திரம்* - சிறுநீர்.
மூத்திராகாதம் - சலவடைப்பு.
மூத்திராசயம் - மூத்திரப்பை.
மூத்தோன் - முதிர்வயதுடையோன், [அண்ணன், விநாயகன்.]
மூப்பன் - முதன்மைக்காரன்.
மூப்பு - முதுமை, தலைமை.
மூய்தல் - மூடுதல்.
மூரல் - சிரிப்பு, பல், சோறு.
மூரி - பெருமை, வலி, எருது, எருமை, எருத்துத்திமில், சோம்பல், பழமை.
மூர்க்கம் - உக்கிரம், [கோபம், நாகப்பூச்சி.]
மூர்க்கன்* - ஆங்காரன்.
மூர்க்கை - ஆங்காரி.
மூர்ச்சனம், மூர்ச்சனை - நினைவு மயக்கம்.
மூர்ச்சித்தல்* - நினைவுமயங்கிக் கிடத்தல்.
மூர்ச்சை*, மூர்ச்சிதம் - நினைவு மயங்கிக்கிடத்தல்.
மூர்த்தம் - இருகடிகைப் பொழுது, [உருவுடையது, தலை.]
மூர்த்தி - தேவன், உருவம்.
மூர்த்திகரம் - தெய்வீகம்.
மூலகந்தம் - வெட்டிவேர்.
மூலகம் - கிழங்கு, முள்ளங்கி.
மூலக்கடுப்பு* - மூலநோய்.
மூலக்கிரந்தி - ஒரு நோய்.
மூலக்கிராணி - ஓர் கிராணி நோய்
மூலதனம் - மூலதிரவியம்.
மூலத்தானம், மூலஸ்தானம்* - கெற்பக்கிருகம்.
மூலபலம் - அறுவகைச் சேனைகளி லொன்று.
மூலப்பகுதி, மூலப்பிரகிருதி- (பிரபஞ்சகாரணமானமாயை.)
மூலப்படை - மூலபலம்.
மூலப்பொருள் - கடவுள், மூலதனம்.
மூலமந்திரம்- முதற்காரணமான மந்திரம்.
மூலம் - ஒரு நோய், [ஆதி, காரணம், உரையில்லாப்பாடம், ஓர் நாள், கிழங்கு, வேர்.]
மூலவிக்கிரகம் - மூலத்தான விக்கிரகம்.
மூலவியாதி* - மூலநோய்.
மூலவேர் - அடிவேர்.
மூலாக்கினி - உதராக்கினி.
மூலாதாரம் - ஆறு தாரத்தி னொன்று அது குதத்தானம்.
மூலி - வேருள்ள மரம்.
மூலிகை* - மருந்துவேர்.
மூலியம் - வசம், [கொண்ட பொருள்.]
மூலை* - கோணம்.
மூலையோட்டம் - சரிகோணமற்றது.
மூவரசர்-மூன்று மன்னர். அவர்: சேரன் சோழன் பாண்டியன்.
மூவர் - திரிமூர்த்திகள் (சிவன் பிரமன் திருமால்) ; சைவசமயாசாரியரான அப்பர் சுந்தரர் சம்பந்தர்.
மூவாசை-மூன்றாசை. அது: மண் பெண் பொன்.
மூவாணிபர்-அப்பம் இலை உப்பு விற்கும் வாணிகர்.

மூவிடம் - மூன்றிடம். அவை : தன்மை முன்னிலைபடர்க்கை.
மூவிலைவேல் - சூலம்.
மூவுதல் - முடிதல்.
மூவுலகம் - மூன்றுலகம். அவை: பூமி சுவர்க்கம் பாதலம்.
மூவுலகளந்தோன்-மகா விஷ்ணு.
மூவுலகுண்டோன் - திருமால்.
மூழி - அகப்பை, துடுப்பு, மத்து, குளம், சோறு, பாண்டவிசேடம். (சீவக. சிந். 710.)
மூழிக்களம்-ஓர் விஷ்ணுஸ்தலம்.
மூழை - அகப்பை, சோறு, துடுப்பு, மத்து.
மூழ்கல் - முழுகல், கெடுதல்.
மூழ்த்தம் - முகூர்த்தம். (சீவக. சிந். 2763.)
மூழ்த்தல் - கெடுத்துவிடுதல், [மூழ்குவித்தல், மொய்த்தல்.]
மூளி - விளிம்பற்றது, காதறை.
மூளுதல் - நெருப்பு முதலியபற்றுதல்.
மூளை * - தலை முதலியவற்றின் மூளை.
மூன்று* - ஓரெண்.

## மெ

மெச்சல், மெச்சுதல், மெய்ச்சுதல்* - புகழ்தல், துதித்தல்.
மெட்டு - இராகமெட்டு, கால்விரலணியிலொன்று, [ஆயத்துறை, கிராமத்தைச் சூழ்ந்த காடு.]
மெது* - மிருது.
மெதுமெதெனல் - மிருதுவாயிருத்தல்.
மெத்த - மிக.
மெத்து - மென்மை.
மெத்துதல் - அப்புதல்.
மெத்தெனவு - மிருதுவுடையது, சாந்தகுணம்.
மெத்தை* - மேல்வீடு, அமளி, [சட்டை.]
மெய் - உண்மை, [உடல், ஒற்றெழுத்து.]
மெய்காப்பாளர் - காவற்காரர்.
மெய்க்கவசம் - மார்ச்சட்டை.
மெய்சொல்லல் - உண்மைபேசுதல்.
மெய்ஞ்ஞானதீபம் - ஓர் நூல்.
மெய்ஞ்ஞானம் - உண்மைஞானம்.
மெய்ஞ்ஞானி - உண்மையறிந்தஞானி.
மெய்ந்நலம் - வலி.
மெய்ப்படாம் - நிலையங்கி.
மெய்ப்படுத்தல் - உண்மைப்படுத்தல்.
மெய்ப்பீரம் - மேகம்.
மெய்ப்பை - சட்டை.
மெய்ப்பொருள் - உண்மை, நற்போதனை, கடவுள்.
மெய்ம்மறத்தல்-தன்னைமறத்தல்.
மெய்ம்மை - உண்மை, கருத்து.
மெய்யறிவு - மெய்ஞ்ஞானம்.
மெய்யன் - சத்தியவான், [கடவுள், மகன்.]
மெய்யுணர்வு - உண்மையறிதல்.
மெய்யுரை - சத்தியவசனம்.
மெய்யுறை - கவசம்.
மெருகிடுதல் - மெழுக்கிடுதல்.
மெருகு - மெழுக்கு, ஒருகிழங்கு.

மெருகெண்ணெய் - மினுக்கெண்ணெய்.
மெலி - மெல்லெழுத்து.
மெலியது - மென்மையானது.
மெலிவடைதல் - வாடல், சஞ்சலப்படுதல்.
மெலிவு - இளைப்பு.
மெலுக்கு* - வெளியலங்காரம்.
மெல்ல - மிருதுவாக.
மெல்லணை - மெத்தை.
மெல்லல்* - மெல்லுதல்.
மெல்லன்-நெய்தனிலத்தலைவன்.
மெல்லிக்கை - ஒஞ்சட்டை.
மெல்லிது, மெல்லியது - மிருது.
மெல்லியர் - மாதர், மெலிந்தவர்.
மெல்லியல் - பெண், மரத்தினிளங்கொம்பு.
மெல்லிலை - வெற்றிலை.
மெல்லுதல்* - கறித்தல்.
மெழுகிடல் - தரைமெழுகுதல், மெழுகுபூசுதல்.
மெழுகு - அரக்கு.
மெழுகுசீலை - மெழுகு தோய்த்த புடைவை.
மெழுகுதல்* - நிலத்தைப்பூசுதல்.
மெழுகுபதம்* - கடுகுமெழுகு போலத்திரளும் பதம்.
மெழுகுபனையன் - ஓர் வைசூரி.
மெழுகுமண் - பசைமண்.
மெழுகுவத்தி* - மெழுகுதிரி.
மெள்ள* - மெதுவாக.
மென்பால் - மருதநிலம்.
மென்மேல் - ஒன்றன்மேலொன்று.
மென்மை - மிருது.
மென்றல் - வெற்றிலை முதலிய மெல்லுதல்.
மென்னடை-மிருதுவான நடை, [அன்னம்.]
மென்னி, மென்னை* - மிடறு.

## மே

மேககர்ச்சனம் - இடி.
மேகசாரம் - கர்ப்பூரம்.
மேகசாலம் - முகிற்கூட்டம்.
மேகசீவகம் - சாதகப்புள்.
மேகசூலை* - ஓர் சூலைநோய்.
மேகதாரி - மயிலிறகு.
மேகத்தொனி - முழக்கம்.
மேகநாதம்-சிறுகீரை, முழக்கம், மலைப்பச்சை.
மேகநாதன் - இந்திரசித்து.
மேகநீர்* - ஓர் நோய்.
மேகபச்சை - நாகப்பச்சை.
மேகபடலம் - மேகச்செறிவு.
மேகபுட்பம் - நீர். (சப்த),மழை.
மேகப்புள் - வானம்பாடி.
மேகம் - ஓர் நோய், [முகில்.]
மேகராகக்குறிஞ்சி - குறிஞ்சித் திறத்தினோர் பண்.
மேகலாபாரம்- எழு கோவையுள்ள மணிவடம்.
மேகலை - மாதரிடையி லணியுமேழு கோவைமணி, சீலை, மான்றோற் பூணூல், ஓமகுண்டத்தைச் சுற்றியிடும்வளையங்கள், மலையருகு, தேர்முடி.
மேகவண்ணன் - திருமால்.
மேகவாகனன் - இந்திரன்.
மேகவாயு* - ஓர் நோய்.
மேகவூறல் - மேகநீர்ப்பாய்ச்சல்.
மேகவெட்டை - ஓர் நோய்.

மேகாக்கினி - மீன்.
மேகாநந்தி, மேகாரம் - மயில்.
மேக்கு - மேற்கு, [உயர்ச்சி, மேல்.]
மேசகம் - இருள், மயிற்றோகை. (சப்த), முகில்.
மேசை* - ஒருவகைப் பீடம்.
மேடமாதம் - சித்திரைமாதம்.
மேடம், மேஷம் - ஆட்டுக்கடா, ஆடு, ஓரிராசி.
மேடு - உயர்ச்சி, சிறுதிட்டை, [வயிறு, பெருமை, ஊர்.]
மேடை - உப்பரிகை, [மேடு.]
மேட்டிமை* - மேன்மை, அகந்தை.
மேதகவு - மேம்பாடு. (சிலப்).
மேதகு - மேன்மையான.
மேதகையோர் - உயர்ந்தோர்.
மேதம் - கொழுப்பு, யாகம், [கொலை.]
மேதரவர்* - மூங்கில் வேலைசெய்யுமொரு சாதியார்.
மேதாரம் - மலை.
மேதாருத்திரன் - காளிதாசன்.
மேதாவி - புத்தியுள்ளவன்.
மேதி-எருமை, பொலிக்கட்டை, வெந்தயம், நெற்களம்.
மேதினி - பூமி.
மேதை - பேரறிவு, இறைச்சி, கள், தோல், நரம்பு, புதன், கரிசாலை, மேன்மை.
மேதையர் - புலவர்.
மேத்தியம் - சுத்தம், கருங்காலி.
மேநகை - மேனகை.
மேந்தலை-முதன்மை, மேன்மை.
மேந்தி, மேந்திகை - வெந்தயம்.
மேம்பாடு - மேன்மை.
மேய்ச்சல் - விலங்குண்ணுதல்.
மேய்த்தல்* - மேயச்செய்தல்.
மேய்ப்பன் - இடையன்.
மேரு - பொன்மலை, ஓர்வகைக் குப்பி, ஆசனபீடம்.
மேருவில்லி - சிவன்.
மேரை-குடிமக்கட்குக் களத்தில் தருந் தானியம், [மரியாதை.]
மேலகம் - மோட்சம்.
மேலவர் - பெரியோர், வானோர்.
மேலிடுதல் - அதிகப்படுதல், அதிகரித்தல்.
மேலுலகம் - தேவலோகம்.
மேலை - மேல், மேற்கு, வருங்காலம், மேலிருப்பது.
மேலையோர் - பெருமைமிக்கவர்.
மேலோர்-பெரியோர், வானோர், அறிஞர்.
மேல் - ஆகாயம், மேற்கு, மேற்புறம், வருங்காலம், அதிகம்.
மேல்காற்று* - கோடைக்காற்று.
மேல்வாரம்* - இறைப்பங்கு.
மேல்விசாரணை - பராமரிப்பு.
மேல்விழுதல்*-யுத்தங் கலத்தல், வலுவில் ஒருகாரியத்திற் பிரவேசித்தல்.
மேல்வீடு* - மச்சுவீடு.
மேவல் - விரும்பல், சேர்தல்.
மேழகம் - ஆடு, கவசம்.
மேழி - கலப்பை.
மேழியர் - மருதநில மாக்கள், வேளாளர்.
மேளம்* - பறைப்பொது.
மேளனம் - கூட்டம்.
மேற்கட்டு* - மேல்வீடு.

மேற்கத்தியான்* - மேற்குத் தேயத்தவன்.
மேற்கு - மேற்றிசை.
மேற்கொள்ளுதல் - வெல்லல், தலைப்படுதல்.
மேற்கோள் - உதாரணம், முன்னோர்வழக்கு, சனி, மேன்மை.
மேற்சுவாசம்* - மேனோக்கிய மூச்சு.
மேற்செல்லல் - மேலே நெருங்கிப்போதல், போர்க்குப் போதல்.
மேற்படல் - அதிகப்படல், வெல்லுதல்.
மேற்படி* - முன்குறித்தபடி.
மேற்புறம் - மேற்பக்கம்.
மேற்றட்டு - மேனிலை.
மேற்றிசை - மேற்கு.
மேற்றிசைப்பாலன் - வருணன்.
மேனகை - ஓர் தேவதாசி.
மேனுசை - பார்வதி.
மேனுதம் - பூனை, மயில், வெள்ளாடு.
மேனுத்துமசை - உமாதேவி.
மேனுமினுக்கி* - வெளிக்காட்சிக்குமட்டும் சௌந்தர்யமுடையவளாகத் தோன்றுபவள்.
மேனி - அங்கம், உருவம், நிறம், [குப்பைமேனி.]
மேனை - மலையரசன்தேவி.
மேனோக்கு* - மேற்பார்வை.
மேன்மக்கள் - அறிவிற்பெரியார்.
மேன்மாடம் - மேன்மாளிகை.
மேன்மேல், மேன்மேலும் - முன்னையதிலுமதிகம்.
மேன்மை - மேலாந்தன்மை.

## மை

மை - கண்ணுக்கிடு மஞ்சனம், எழுதுமை, [கறுப்பு, குற்றம், செம்மறியாடு, நீர், மேடவிராசி, மலடி, மேகம்.]
மைசூர்* - ஓர் பட்டணம்.
மைச்சுனன் - மைத்துனன்.
மைச்சுனி - மைத்துனி.
மைஞ்சன் - மகன்.
மைதானம்* - சமபூமி.
மைதிலி - சீதை.
மைதீட்டுதல் - மைபூசுதல்.
மைதுனம் - ஒன்றிப்பு, புணர்ச்சி.
மைதுனி - மச்சாள்.
மைத்தல் - ஒளிகெடுதல். (சீவ. சிந்)
மைத்திரம், மைத்திரியம் - சிநேகம்.
மைத்திராவருணம் - ஒரு உபநிடதம்.
மைத்திரேயன் - ஓர் முநி.
மைத்துனன், மைதுனன் - மச்சான்
மைத்துனி - மச்சாள்.
மைநா, மைனு* - நாகணவாய்ப்புள்.
மைநாகம் - ஓர் மலை.
மைநாகன் - மலையரையனுக்கு மேனகையிடம் பிறந்த புதல்வன்.
மைந்தர் - ஆண்மக்கள், [மனிதர்.]
மைந்தன் - மகன்.
மைந்து - மயக்கம், வலி, அழகு.
மைப்பு - கறுப்பு. (காஞ்.)
மைமல் - மாலைநேரம்.

மைமுகன் - முசு.
மைமை - மலடி, மலட்டெருமை, பூசை. (மேருமந். 1285.)
மைம்மா - மன்றி.
மைம்மீன் - சனி. (புற.)
மையம்* - நடு.
மையல் - மயக்கம், மோகம், [உன்மத்தம், செருக்கு.]
மையாத்தல் - மயங்குதல், ஒளி கெடுதல்.
மையிடுதல், மையுண்ணல், மை யூட்டுதல் - மைபூசுதல்.

மொ

மொகமொகெனல் - ஈரடுக்கொ லிக்குறிப்பு.
மொக்கணி - ஒரு தோற்பை; (இதில் கொள்ளைக் கட்டுவர்.)
மொக்களித்தல் - தாமதித்தல்.
மொக்கன்* - பருத்தவன்.
மொக்கு-பூமொட்டு, [மரக்கணு.]
மொக்குள் - மலரும் பருவத்தரும்பு, கொப்பூழ், நீர்க்குமிழி.
மொக்கை - கூரின்மை, பருமை, [வெட்கம்.]
மொக்கைகுலைதல்* - அவமானப் படுதல்.
மொக்கைச்சோளம்-ஓர் சோளம்.
மொக்கையாதல்* - ஆயுதத்தின் கூர்மழுங்கல்.
மொசித்தல் - தின்னல். (புற).
மொசுமொசுக்கை-முசுமுசுக்கை.
மொசுமொசுத்தல் - தினவுக்குறி
மொச்சு* - ஆட்டுமணம். [ப்பு.
மொச்சை* - ஒருவகைப் பயறு.
மொச்சையடித்தல் - மொச்சை மணம்வீசுதல்.
மொஞ்சி - ஸ்தனம்.
மொடமொடெனல்* - ஈரடுக் கொலிக்குறிப்பு.
மொடுக்குமொடுக்கெனல்* - உறி ஞ்சல் ஒலிக்குறிப்பு.
மொட்டு* - இளம்பூவரும்பு.
மொட்டை* - முண்டிதம், கூரி ன்மை.
மொட்டைக்கறுப்பர் - எமதூதர்.
மொட்டைச்சி - மொட்டந்தலை யினள், [பூநீறு.]
மொட்டைப்புத்தி - கூர்மையிலா விவேகம்.
மொண்டணி - மரக்கணு.
மொண்டி-நொண்டி, [ஓர்சாமை.]
மொண்டு - முரண்டு.
மொதுமொதெனல் - நொது நொதுப்பாயிருத்தல்.
மொத்தம் - கூட்டுத்தொகை, பரு மை, பொது.
மொத்துதல்* - அடித்தல்.
மொத்தை* - பருத்தது, [கோட் டான்.]
மொந்தணி - திரட்சி, பருமை, மரக்கணு.
மொந்தன்* - ஒரு வாழை.
மொந்தை - ஓர்வகைப்பாத்திரம், [ஒரு கட்பறை.]
மொப்பு* - வெடிநாற்றம்.
மொய் - மொய்யென்னேவல், மகமை, [கூட்டம், பெருமை, போர், போர்க்களம், யானை, வண்டு.]
மொய்கதிர் - முலை. (சது.)

மொய்த்தல்-நெருங்கல், மூடுதல்.
மொய்ப்பணம்* - நன்கொடைப் பணம்.
மொய்ம்பு - தோள், வலி.
மொரமொரெனல்* - ஒலிக்குறிப்பு.
மொழி - சொல், மொழியென்னேவல்.
மொழிபெயர்ப்பு - ஒரு பாஷையை வேறொரு பாஷையில் திருப்பல்.
மொழுக்கன்* - தடித்த ஆள்.
மொள்ளுதல்* - முகத்தல்.
மொறுமொறெனல் - மிகக் காய்ந்திருத்தல்.

## மோ

மோ - ஓரெழுத்து, முன்னிலையசைச்சொல் (உ-ம்.) 'கேண்மோ', மோவென்னேவல்.
மோகம் - ஆசை, காமம், [மயக்கம், மதியீனம், முருங்கை.]
மோகரம் - மயக்கம், ஒலி.
மோகர் - சித்திரகாரர்.
மோகனக்கல் - பூசைக்குரிய சாமான்களை வைக்கும் கல்மேடை.
மோகனமாலை - ஓராபரணம்.
மோகனம் - மயக்கம், மன்மதன் கணையிலொன்று, அட்டசித்தியிலொன்று.
மோகனாங்கினி - மோகினி.
மோகனாஸ்திரம்- மன்மதபாணம்.
மோகன் - மன்மதன்.
மோகித்தல்* - மயங்குதல்.
மோகினி* - தன்னைக் காண்பவரை மயக்கும் உருவத்தையுடைய ஒரு பெண்தேவதை.
மோகினிப்பணம் - உற்சவத்தில் தெய்வத்துக்குத் தரும் பணம்.
மோகொரம்* - மகம்மதியர் பண்டிகை.
மோக்கட்டை * - மோவாய்க்கட்டை (முகக்கட்டை).
மோக்கம் - மோட்சம், தீர்தல்.
மோசம்* - வஞ்சனை.
மோசனம் - ஓர்வகை நெல், [கிரகணம்விடுகை, தீர்தல்.]
மோடம்* - மப்புமந்தாரம்.
மோடி - வேடிக்கைக் காட்சி, கண்டதிப்பிலி, [பிணக்கு, வஞ்சகம், துர்க்காதேவி.]
மோடு - மேடு, [வயிறு, முகடு, உயர்ச்சி, பெருமை.]
மோட்சம்* - பரகதி.
மோட்சவான் - மோட்சபதவியடைதற்குரியவன்.
மோட்சவிளக்கு - வீரசைவர் தமது பிரேதத்தை வைக்கும் மண்மேடுமீது வைக்குந்தீபம்.
மோதகப்பிரியன் - விநாயகன்.
மோதகம் - தோசை, கொழுக்கட்டை சந்தோஷம், பிட்டு. (சிலப். 23: 173.)
மோதம் - மகிழ்ச்சி, வாசனை.
மோதல்* - பருத்தல், அடித்தல், இடித்தல்.
மோதிரமாறுதல் - மணமகனும் மணமகளும் கணையாழியை மாற்றிக்கொள்ளுதல்.
மோதிரம்* - விரலணி.

மோத்தை* - வெள்ளாட்டுக்கடா.
மோப்பம்* - வாசனையறிகை.
மோப்பி - கைம்பெண்.
மோப்பு - காதல்.
மோய் - தாய். (இரா.)
மோரா, மோரு* - ஓர் பொன் நாணயம்.
மோருதல்* - முகருதல்.
மோர்* - மச்சிகை.
மோலி - கிரீடம், தலை.
மோவாய் - வாயின் அடிப்பாகம்.
மோழல் - பன்றி, ஆண்பன்றி.
மோழை - கஞ்சி, கொம்பின்மை, மடமை, வெடிப்பு.
மோறை* - மோவாய்.
மோனம் - மௌனம். அது: சாத்துவிகக் குணத்தொன்று.
மோனர் - மௌனிகள்.
மோனை - முதல், ஓர் தொடை.

## மௌ

மௌகலி, மௌகுலி - காகம்.
மௌஞ்சி - நாணற்புல்லாற்செய்த அரைஞாண்.
மௌடி - பரிகாசம்.
மௌட்டியம் - அறியாமை.
மௌண்டிதம் - ஒரு உபநிடதம்.
மௌத்கல்யன் - ஓர் முநி.
மௌத்திகம் - முத்து.
மௌரவி - வின்ஞாண்.
மௌலி - மயிர்முடி, மணிமுடி, தலை, கள், சடைமுடி.
மௌவல் - வனமல்லிகை.
மௌனம்* - பேசாமை.
மௌனி* - வாய்பேசா ஞானி.

## ய

யக்கதரு - ஆலமரம். (சப்த)
யக்கர் - இயக்கர் (கந்தருவர்.)
யக்கியபுருஷன் - நாராயணன்.
யக்கியம்* - யாகம்.
யக்கியோபவீதம் - முப்புரிநூல்.
யக்ஞோபவீதம் - பூணூல்.
யசசு - புகழ்.
யசமானன்-தலைவன், [யாககுரு.]
யசனம் - யாகம். (சப்த)
யசுரு - இரண்டாம்வேதம்.
யஞ்ஞம் - யாகம்.
யஞ்ஞேசுவரன் - திருமால்.
யட்சர் - ஒரு சாதியார்.
யட்சி - குபேரன்மனைவி.
யட்சிணி - எட்சிணி.
யட்டி - ஊன்றுகோல், முத்துமாலை, அதிமதுரம்.
யதாசத்தி - இயன்றவளவு.
யதாஸ்து - முற்றும்படியாக.
யதாபூருவம் - தொன்றுதொட்டது.
யதார்த்தம் - சத்தியம்.
யதி - முநி, தாளப்பிரமாணம், மோனை.
யதிராஜன் - இராமாநுஜாசாரியர், [முநிவர் தலைவன்.]
யது - ஓரரசன்.
யதேச்சை* - இட்டப்படி.
யதேஷ்டம்-மிகுதி, [சுயேச்சை.]
யதேந்திரியம் - கற்புடைமை.
யத்தனம்*, யத்தினம் - முயற்சி.
யந்திரதாபனம் - சக்கரதாபனம்.
யந்திரம் - சூத்திரப்பொறி, [மந்திரசக்கரம், தேர், செக்கு.]

யமகண்டம் - ஓர் செய்யுள்.
யமகண்டி* - பொல்லாதவள்.
யமகம் - வந்தசொல்லே வருதல்.
யமகிங்கரன் - நமனேவற்காரன்.
யமதக்கினி - பரசுராமன்பிதா.
யமதூதன் - யமகிங்கரன்.
யமபடன் - யமகிங்கரன்.
யமவிரதம்-பட்சபாதமின்றி அரசுமுறை நடத்தல்.
யமளம் - இரட்டை.
யமன்* - நமன்.
யமாந்தகன் - சிவன்.
யமி - முனிவன்.
யமுனை - காளிந்திநதி.
யயாதி-குருகுலத்தரசர்களி லொருவன்.
யவட்சாரம் - வெடியுப்பு.
யவம்-வாற்கோதுமை, நெல்லு.
யவனம் - ஐம்பத்தாறு தேயத்தி லொன்று.
யவனர் - துலுக்கர் மிலேச்சர் முதலாயினோர், சித்திரகாரர்.
யவ்வனம் - யௌவனம்.

## யா

யா - அஃறிணைப் படர்க்கைப் பன்மை வினா, ஒரு மரம்.
யாகசாலை - வேள்விச்சாலை.
யாகசேனன் - பாஞ்சாலன்.
யாகத்தம்பம் - வேள்வித்தூண்.
யாகபத்தினி - திரௌபதி.
யாக்கை - உடல், கட்டு, முயங்குதல். (சீவக. சிந். 1362.)
யாங்கனம், யாங்கண், யாங்ஙனம்- எங்ஙனம்.
யாங்கு - எவ்விடம்.
யாசகம்-இரப்பு, [இராசயானை.]
யாசகன்-இரப்போன், [வேள்வி இயற்றுபவன்.]
யாசித்தல்* - இரத்தல்.
யாஞ்ஞவற்கியம் - வடமொழியி லுள்ள ஒரு தருமநூல்.
யாஞ்ஞவற்கியர் - யாஞ்ஞவற்கியத்தி லாசிரியர்.
யாடு - ஆடு.
யாணர் - அழகு, நன்மை, தச்சர், புதுவருவாய். (மணிமே.), வளமை, புதுமை.
யாண்டு - எவ்விடம், எப்பொழுது, காலம்.
யாதவன் - யதுகுலத்தினன்.
யாதனம் - தெப்பம், மரக்கலம்.
யாதனாசரீரம் - ஆக்கினை யனுபவிக்கத்தக்க சரீரம்.
யாதனை - நரகத்தில் கொல்லாது வருத்தும்நோய், துன்பம்.
யாதி - ஞாபகம்.
யாது - எது, ஐயுற்ற சொல், இராக்கதன், பிசாசு.
யாதுதானவர் - இராக்கதர்.
யாதும் - சிறிதும்.
யாதோ - ஐயச்சொல்.
யாத்திரை - பிரயாணம், [திருவிழா, கூத்து, வழக்கம்.]
யாப்பருங்கலம் - ஓர் யாப்புநூல்.
யாப்பு - செய்யுள், கட்டு, உறுதி.
யாமம் - மாலைப்பொழுதின் பின் பத்து நாழிகை, இடக்கை, மேளம், தெற்கு.
யாமவதி - இரவு.

யாமளம் - பச்சை, இளமை, இரட்டை.
யாமளை - காளி, பார்வதி.
யாமிகன் - நகரசோதகன்.
யாமியம் - சந்தனம், தெற்கு.
யாமினி - இராத்திரி.
யாமை - ஆமை, இரா, பரணி.
யாம் - நாம்.
யாய் - தாய். (புற.)
யாரி - கதவு. (சது.)
யாரும் - யாவரும்.
யார் - யாவர், [நத்தைச்சூரி.]
யாவகம் - செம்பஞ்சு.
யாவண் - எவ்விடம். (புற.)
யாவதும் - எல்லாம் (சீவக. சிந். 1201.), சிறிதும். (பொருந)
யாவரும் - எல்லோரும்.
யாவர் - எவர்.
யாவள் - எவள்.
யாவன் - எவன்.
யாவும் - எல்லாம்.
யாழல் - கறையான்.
யாழ் - வீணை, மிதுனவிராசி, திருவாதிரை, அச்சுவினிநாள்.
யாழ்ப்பாணம்-இலங்கையிலுள்ள ஓரூர்.
யாழ்ப்பாணர்- யாழ்வாசிப்போர்.
யாழ்வல்லோர் - கந்தருவர்.
யாழ்வல்லோன் - நாரதன்.
யாளி - சிங்கம், சிங்கராசி, யானை, யானையின் துதிக்கையும் சிங்கத்தின் முகமுமுடைய மிருகம்.
யாளியூர்தி - காளி, துர்க்கை.
யாறு - நதி.
யானம்- கள், சிவிகை, மரக்கலம்.
யானை - ஆனை, [வடதிசைப் பாலன்குறி.]
யானைக்கச்சை - யானையின் கழுத்திலிடும் கயிறு.
யானைக்கால்* - மொத்திக்கால்.
யானைத்தண்டம்- யானைசெல்புறவழி.
யானைத்தந்தம்*-யானைக்கொம்பு.
யானைத்தறி - யானைகட்டுந்தூண்.
யானைத்திப்பிலி - ஓர் திப்பிலி.
யானைமாவுத்தன் - யானைப்பாகன்.
யானைமுகவற்கிளையோன் - சுப்பிரமணியன்.
யானைமுகவன், யானைமுகன் - விநாயகன்.
யானையுரித்தோன் - சிவன்.
யானைவணங்கி - தேட்கொடுக்கி.
யானைவாழை - ஓர் வாழை.
யானைவிச்சுளி - ஓர் கழுகு.

## யு

யுகதருமம் - யுகபேதத்தினாலுண்டாகும் நடை.
யுகந்தரம்- தேர் முதலியவற்றின் நுகத்திற்பிணிக்கும்நெடுந்தறி.
யுகப்பிரளயம் - யுகாந்த வெள்ளம்.
யுகமுடிவு - உலகமுடிவு.
யுகம்-நீண்ட காலத்தளவு, [பூமி, இரட்டை, நாலு முழங்கொண்ட அளவு, நுகம்.]
யுகளம் - இரட்டை.
யுகாதி - வருஷாரம்பம், [அருகன்.]
யுகாந்தம் - யுகமுடிவு.

யுக்குமம் - இரண்டு.
யுதிஷ்டிரன் - தர்மநந்தனன்.
யுத்தகளம்* - போர்க்களம்.
யுத்தசன்னத்தன் - போர்க்கு ஆயத்தமானோன்.
யுத்தம் - போர், [தகுதி.]
யுத்தி - உபாயம், யூகை, யோசித்தல், விவேகம்.
யுவ - ஒன்பதாவதாண்டு.
யுவதி - பதினாறுவயதுப் பெண்.
யுவராசன் - இளவரசன்.

## யூ

யூகம் - யோசிப்பு, விவேகம், [படைவகுப்பு, பெண்குரங்கு, கருங்குரங்கு, காந்தி, தருக்கம், ஒருவகைப் புல்.]
யூகி - யூகியென்னேவல், விவேகி.
யூகித்தல் - ஆராய்தல், யோசித்தல்.
யூகை - கல்வி, பேன்.
யூதநாதன், யூதபம் - யானைக்கூட்டத்துக்குத் தலையானை.
யூதம் - யானைக்கூட்டம்.
யூதர் - ஓர் சாதியார்.
யூதிகம், யூதிகை - முல்லை.
யூபத்தம்பம் - வேள்வித்தூண்.
யூபம் - யாகம், யாகப்பசுவைக் கட்டுந்தறி, உடற்குறை.

## யோ

யோகக்காட்சி - தேசகால விகற்பமின்றித் தன் செயலற்றுச் சிவன்செயலிற் கூடியறியுமறிவு.
யோகசத்தி - நவச்சாரம்.
யோகசமாதி - ஆன்மா தேகத்தையும் மனத்தையும் விட்டு நீங்கி நிற்கும் யோகநிலை.
யோகசாதனை - யோகப்பரிட்சை.
யோகசேமம் - சமாசாரம்.
யோகஞ்செய்தல் - தியானம் பண்ணல்.
யோகதண்டம் - யோகியின் கையிலுள்ள கோல்.
யோகநித்திரை - அறிதுயில்.
யோகபாதம் - யோகநிலை.
யோகப்பட்டை - யோகக்கட்டுக் கேற்ற கச்சு.
யோகமார்க்கம் - யோகநிலை.
யோகம் - அதிர்ஷ்டம், நிஷ்டை, [பலன், கூடல், கூட்டம், உபசாரம், உபாயம், உற்சாகம், உயர்ச்சி, சாவு, நூல் (உ-ம்.) பசுங்கதிர்க்கடவுள் யோகம் பழிப்பற நுனித்து (சீவக. சிந். 621), மருந்து (சீவக. சிந். 1800), தவநெறி.]
யோகி - நிஷ்டைசெய்வோன், [முநி, அரன், அருகன், ஐயனார்.]
யோகினி - காளியேவல்செய்பவள்.
யோகீசுவரன்* - யோகஞ்செய்பவன்.
யோகீசுவரி - துர்க்கை.
யோகு - யோகாப்பியாசம்.
யோக்கியதை* - யோக்கியம்.
யோக்கியம் - தகுதி, ஒழுக்கம்.
யோசனவல்லி - மஞ்சிட்டிவேர், வல்லாரை.

யோசனை - ஆலோசனை, ஓரெல்லையளவு, [ஒலித்தல்.]
யோசனைகந்தி - வியாசன்தாய்.
யோசித்தல் - ஆராய்தல்.
யோதனன் - போர்வீரன்.
யோனி- பிறப்பிடம், [ஆண்குறி, [காரணம், நீர்.]
யோனிபேதம் - பிறவிபேதம்.
யோனிப்பொருத்தம் - மணப் பொருத்தம் பத்தினொன்று.

## யௌ

யௌகிகம் - பகுபதம்.
யௌதகம் - மகட்கும் மருகனுக்குந் தந்தபொருள் (சீதனம்).
யௌவனதசை - வாலிபம்.
யௌவனம் - இளமை, [அழகு, களிப்பு.]

## ர

ரகசியம்* - இரகசியம்.
ரகு - சூரியகுலத்திலோரரசன்.
ரங்கு* - வர்ணம்.
ரசதம் - வெள்ளி.
ரசம்* - இரசம்.
ரஜா* - உத்தரவு.
ரஸ்தா* - வழி.
ரஸ்தாளி* - ஓர் வாழைமரம்.
ரணகளம்* - சமர்விளைபூமி.
ரதம்* - தேர்.
ரதி* - மன்மதன்மனைவி.
ரத்தினம்* - இரத்தினம்.
ரத்து - தள்ளுபடி.
ரம்மியம் - திருப்தி.
ரவிக்கை* - முலைக்கச்சு.

## ரா

ராகம்* - இராகம்.
ராகவன் - ரகுகுலத்திலவதரித்த சீராமன்.
ராகி - ஓர் தானியம்.
ராகு - இராகு.
ராக்ஷஸன்* - அரக்கன்.
ராக்ஷஸி* - அரக்கி.
ராஜ்யம்* - இராச்சியம்.
ராணி* - அரசி.
ராணுவம்* - சேனை.
ராதை - கண்ணபிரானின் பிரிய [நாயகி.
ராத்திரி* - இரவு.
ராப்தா* - வழக்கம்.
ராமன்* - தசரதன் மகன்.

## ரி

ரிஷபம்* - எருது.
ரிஷி* - இருடி.

## ரீ

ரீங்காரம் - வண்டு முதலியவற்றி [னொலி.
ரீதி - ஒழுங்கு.

## ரு

ருக்மிணி - கிருஷ்ணபகவானின் மூத்த மனைவி.
ருசி* - சுவை.
ருசு* - அத்தாட்சி.
ருணம்* - கடன்.
ருத்ரன் - சிவன்.
ருத்ராக்ஷம்* - சைவர் அணியும் ஒரு மணி.

## ரூ

ரூபகம்-அத்தாட்சி, ஒரு தாளம்.
ரூபம்* - உருவம்.

ரூபாய்* - ஒரு வெள்ளி நாணயம்.
ரூபி* - ருசுப்படுத்து.

ரெ

ரெட்டி* - ஓர் சாதி.
ரெண்டு* - இரண்டு.

ரே

ரேகை* - இரேகை.
ரேசகம் - இரேசகம்.
ரேணுகை - பரசுராமன் தாய்.
ரேவதி - ஒரு நக்ஷத்திரம்.
ரேவு* - ஆயத்துறை.

ரொ

ரொக்கம்* - முதல்பணம்.
ரொஷ்டு - தொந்தரவு.

ரோ

ரோகம்* - வியாதி.
ரோகிணி - ஒரு நக்ஷத்திரம்.
ரோதனை* - உபத்திரவம்.
ரோந்தை* - அசங்கிதம்.
ரோமம்* - மயிர்.

ரௌ

ரௌரவம் - ஒரு நரகம்.

ல

லகிமா - எண்வகைச் சித்தியிலொன்று:. அஃது இலேசாயிருத்தல்.
லகு* - இலேசு.
லக்கம்* - எண்.
லக்நம்* - இலக்கினம்.
லங்கை-இராவணன் ராஜதானி.
லங்கோடு* - சல்லடம்.
லக்ஷணம்* - அழகு.
லக்ஷம்* - நூறுயிரம்.
லக்ஷ்மணன்* - இலக்குமணன்.
லக்ஷ்மீ* - இலக்குமி.
லக்ஷ்யம்* - குறி.
லஜ்ஜை* - நாணம்.
லதை - கொடி.
லப்பம்* - கண்ணுடிப்பற்று.
லம்போதரன் - கணபதி.
லயம் - ஒடுக்கம்.
லலாடம் - நெற்றி.
லலிதா - அம்பிகை.
லவங்கம் * - ஒருவாசனைப் பண்டம்.
லவணம் - உப்பு.
லவன் - ஸ்ரீராமர்புத்திரன்.

லா

லாகிரி - மயக்கந்தரும் பொருள்.
லாடம்* - குதிரைக்காற் குளம்பிலிணைக்கு மிரும்பு.
லாபம்* - பேறு.
லாயக்கு - தகுதி.
லாயம்* - குதிரைக்கொட்டில்.
லாவண்யம் - அழகு.

லி

லிகிதம் - கடிதம்.
லிங்கம் - குறி.
லிங்காபட்டியம்- ஒரு வடமொழி நிகண்டுக்கு உரை.
லிபி - எழுத்து.

லீ

லீலை* - விளையாட்டு.

லு

லுங்கி - மகம்மதியரின் ஆடை.
லுச்சா* - போக்கிரி.

## லோ

லோகபாலர் - பூமியைக் காப்பவர்.
லோகம்* - உலகம்.
லோகோபகாரி - உலகினர்க்கு உபகாரம் செய்பவன்.
லோடா* - நீர்குடிக்கும் பாத்திரம்.
லோபம் - பேராசை.
லோபாமுத்திரை - அகஸ்தியரின் மனைவி.

## லௌ *

லௌகிகம், லௌகீகம் - உலக சம்பந்தம்.
லௌகிகன், லௌகீகன் - உலக விஷயங்களில் ஈடுபட்டவன்.

## வ

வகம் - வாகனம், குதிரை.
வகரம், வகாரம், வஃகான் - வ எனும் எழுத்து.
வகித்தல் - சகித்தல்.
வகித்திரம் - தோணி. (சப்த.)
வகிருதல் - கோதல், பங்குசெய்தல், பிளத்தல், அறுத்தல்.
வகிர் - வார், பிளவு, நரம்பு, வழி, வகிரொன்னேவல்.
வகிர்தல் - வகிருதல்.
வகுணி - ஒலி. (திவா.)
வகுதி - வகுப்பு.
வகுத்தல் - வகைப்படுத்தல்.
வகுந்து - வழி. (சிலப்.)
வகுப்பு - அணிவகுப்பு, வரிசை, இனம், கூட்டம், பிரிவு.
வகுலி* - ஓர் மீன்.
வகுளம் - மகிழமரம்.
வகுளாபரணர் - சடகோபர்.
வகுளி - ஒலி.
வகை - உபாயம், கூறுபாடு, தரம், [பகுப்பு, இனம், முறை, குறுந்தெரு. (சீவ. சிந். 462.)]
வகைதேடுதல்* - உபாயந்தேடுதல்.
வகையுளி - மொழி சிதைந்து பிரிந்து சீராகி நிற்பது.
வக்கணம், வக்கணை - நாகரிகம், வர்ணனை, விற்பன்னம், பட்டப்பேர், நிந்தை.
வக்கரை - பக்கரை (அங்கவடி.)
வக்கா* - ஓர் பட்சி.
வக்காமணி* - ஓர் மணி.
வக்கிரதந்தம் - வளைந்த பல்.
வக்கிரதுண்டம், வக்கிரநக்கிரம், வக்கிரநாசிகம் - கிளி.
வக்கிரதுண்டன் - விநாயகன்.
வக்கிரநக்கிரன் - லோபி.
வக்கிரம் - கொடுமை, மீளமடங்குதல், கூன், வட்டம், வளைவு, பொய், பொறாமை.
வக்கிரன் - உருத்திரன், குரூரன், சனி, செவ்வாய்.
வக்கிராங்கம்-அன்னப்புள், வளைந்த சரீரம்.
வக்கிரித்தல் - திரும்புதல்.
வக்கு-வழி, [தோல்,வதங்குதல்.]
வங்கசெந்தூரம், வங்கபஸ்மம், வங்கபற்பம் - ஈயபஸ்மம்.
வங்கணம் - உற்றநேசம்.
வங்கம் - ஈயம், ஒரு தேயம், ஒரு பாஷை, மரக்கலம், கத்தரிச்செடி, வெள்ளி.

வங்கர் - சண்டாளர், ஒருதேயத் தார்.
வங்காரம் - உலோகக்கட்டி.
வங்காளப்பச்சை - ஓர் பூடு.
வங்காளம் - ஒரு தேசம்.
வங்கி - ஓர் கைவளை, [கொடு வேலி.]
வங்கிசம்* - வமிசம்.
வங்கியம் - இன்னிசைக்குழல், மூங்கில், வளைவு.
வங்கு - புற்று, துளை, குகை.
வங்குக்கட்டை, வங்குக்கால் - மரக்கலத்தறி.
வங்கூழ் - காற்று.
வசதி - இடச்சுகம், [இருப்பி டம், நல்லிடம், வீடு.]
வசநாவி, வசனுவி - நஞ்சு.
வசந்தகாலம் - சித்திரை வைகாசி மாதம்.
வசந்ததரு - மாமரம்.
வசந்ததூதம் - குயில். (சப்த), மாமரம், பாதிரிமரம், சித்திரை மாதம்.
வசந்தமண்டபம் - சிறுதென்றல் வீசுமண்டபம்.
வசந்தம் - இளவேனிற் பருவம், தென்றற்காற்று, நறுமணம், சல்லாபம். (பிங்.)
வசந்தன் - மன்மதன், குரங்கு, தென்றற்காற்று.
வசந்திகை - தேமல். (பிங்.)
வசப்படுதல் - வசமாதல்.
வசப்படுத்தல்* - வசமாக்கல்.
வசம் - கைவசம், [கீழ்ப்படிதல், நிலவரம், துரைத்தனம்.]
வசம்பு - ஓர் மருந்து.
வசலை, வசளை - பசளைக்கொடி.
வசவி - குட்டிநி (துட்டை).
வசனம் - சொல், பேச்சு, பழமொ ழி, வாக்கியம், சீலை. (சப்த).
வசனுவி* - விஷப்பூடு.
வச்னித்தல் - சொல்லல்.
வசி - வசியென்னேவல், கூர்மை, கழுமுள், சூலம், வசியம், தழு ம்பு, வாள், மழை. (சிலப். 18: 135.)
வசிகரணம் - பிறரைத் தனக் கிணக்கமாகுமாறு செய்யுமொ ரு கலைஞானம்.
வசிகரம் - வசியம், [சீந்தில்.]
வசிகரித்தல் - வசப்படுத்தல்.
வசிட்டர் - ஓரிருடி (அவர் தேவ தாசியாகிய ஊர்வசியிடம் பிறந்தவர்.)
வசித்தல் - தங்கல், வசியம் செய் யல்.
வசித்துவம் - யாவரும் தன்னை வணங்கி நிற்குமாறு செய்தல்.
வசியம் - கைவசம், ஆயத்தம்.
வசிவு - வளைவு, பிளப்பு. (மலை)
வசீகரணம் - வசியப்படுத்தல்.
வசு - அட்டவசுக்கள், நீர், நெரு ப்பு, ஓராசன், பசுவின்கன்று, பொன், பொருள், இரத்தி னம்.
வசுதேவன் - கண்ணபிரான் தந்தை.
வசுதை - பூமி. (கந்த புரா.)
வசுநாள் - அவிட்டநாள்.
வசுந்தரை, வசுமதி - பூமி.
வசூரி - அம்மைநோய்.

வசை - இகழ்ச்சிச்சொல், குற்றம், மலட்டுப்பசு, மூளை, பிணம். (சேது), மகள்.
வசைச்சொல் - இகழ்ச்சிச்சொல்.
வச்சகம் - மலைமல்லிகை.
வச்சயம் - புல்வாய். (சூடா.)
வச்சி - காயாமரம்.
வச்சிரதந்தம் - பன்றி.
வச்சிரதரன் - இந்திரன். (சப்த).
வச்சிரதேகம் * - ஊறுபாடிலாத தேகம்.
வச்சிரத்துரு - கள்ளிமரம்.
வச்சிரபாணி - இந்திரன்.
வச்சிரம் - வயிரமணி, மரவயிரம், வச்சிராயுதம், ஒருவகைப் பசை, [வெள்ளைத்தருப்பை, எட்டி, சதுரக்கள்ளி.]
வச்சிரவல்லி, வச்சிராட்சி - பிரண்டைக்கொடி.
வச்சிரன் - இந்திரன், பாலகன்.
வச்சிராயுதம் - குலிசம் (இந்திரனின் ஆயுதம்.)
வச்சிராவர்த்தம் - சீராமன்வில்.
வச்சு - குற்றம், மேனிலை.
வச்சையன் - உலோபி.
வஞ்சகன்-வஞ்சிப்போன், [நரி.]
வஞ்சந்தீர்தல்* - பழிவாங்கல்.
வஞ்சப்புகழ்ச்சியணி - ஓரலங்காரம்; அது பழிப்பினற் புகழ்ச்சியும், புகழ்ச்சியாற் பழிப்பும் தோன்றக்கூறுதல்.
வஞ்சம் - கபடம், [பொய், சிறுமை, வாள், கொடுமை.]
வஞ்சவம் - பாம்பு.
வஞ்சனம் - ஓர் மீன், [கபடம்.]
வஞ்சனி - மாயவள், காளியேவல்செய்பவள், பெண்.
வஞ்சனை - வஞ்சம், [தெய்வப்பெண்.]
வஞ்சி - வஞ்சியென்னேவல், [ஓர் கொடி, ஓர் பா, கருவூர், பெண், பகைவர்மேற் செல்லுகையிலணியுமாலை.]
வஞ்சித்தல்*- வஞ்சனைசெய்தல்.
வஞ்சிப்பா - நால்வகைப்பாவினொன்று.
வஞ்சியர் - பெண்கள்.
வஞ்சிரம் - ஓர் மீன்.
வஞ்சிவேந்தன் - சேரன்.
வஞ்சினம்* - சபதம். (மணிமே.)
வஞ்சுளம் - அசோகமரம்.
வஞ்சுளன் - கரிக்குருவி.
வடகம் - கறிமசாலையை அரைத்தமாவுடன் சேர்த்து வெயிலிலுலர்த்திய சிறிய உருண்டை, [தோல், உல்லாசம், அத்தவாளம்; உடை விசேடம். (சீவ. சிந். 462)]
வடகலை - கிரந்தநூல்.
வடகிரி - மேருமலை.
வடகீழ்த்திசை - வடகிழக்கு.
வடகு - தோல். (கம்பரா.)
வடகோடு - பிறைச்சந்திரனின் வடக்குமுனை.
வடக்கயிறு* - கனத்தகயிறு.
வடசொல் - கிரந்தமொழி.
வடதிசைப்பாலன் - குபேரன்.
வடந்தை - வாடைக்காற்று.
வடபத்திரம் - ஆலிலை.
வடபத்ரசாயி - திருமால்.
வடபாரிசம் - வடக்குப்பக்கம்.

வடபால் - வடக்குப்பக்கம்.
வடமர் - அந்தணரிலோர்வகையார்.
வடமலை - திருப்பதி, [மகாமேரு, இமையம்.]
வடமலையான் - வெங்கடேசப்பெருமாள், [ஓர் நெல்.]
வடமீன் - அருந்ததி. (பாரதம்.)
வடம் - கயிறு, [ஆலமரம், மணிவடம் ஊர், நாணி, பூவரும்பு.]
வடவாக்கினி, வடவாமுகம் - ஊழித்தீ.
வடவிருட்சம் - ஆலமரம்.
வடவேங்கடம் - திருப்பதி.
வடவை - ஊழித்தீ, [பெண்குதிரை, எருமை, அச்சுவினி.]
வடாது - வடக்கிலுள்ளது.
வடாரணியம் - திருவாலங்காடு.
வடி - வடியென்னேவல், [கள், கூர்மை, நாய், கயிறு, மாம்பிஞ்சு. (கல்லா.)]
வடிகட்டுதல்* - வடித்தெடுத்தல்.
வடிகயிறு - குதிரைவாய்க்கயிறு.
வடிக்கதிர் - நூல் முறுக்குமோர்
வடிசம் - தூண்டில். [கருவி.
வடிதல் - வற்றுதல், [நீர்முதலிய பாய்தல், நீளுதல்.]
வடித்தல்* - கூராக்குதல், [திருந்துதல், வசமாக்குதல்.]
வடிம்பு - விளிம்பு. (இரா.), நுதி.
வடிவம் - உருவம், [உடம்பு.]
வடிவு - அழகு, [உருவம், அல்குல்.]
வடு - தழும்பு, [இளங்காய், குற்றம், செம்பு, வண்டு, பிரமசாரி. (சப்த)].
வடுகன் - வடுகுபேசுபவன், [பிரமசாரி, வயிரவன், மூடன்.]
வடுகன்றாய் - காடுகாள்.
வடுகு-ஓர் பாஷை, [உபநயனம், ஒருவகைக்கூத்து. (சீவக. சிந். 672 உரை.]
வடுத்தல் - இளங்காய்தோன்றல்.
வடுவரி - வண்டு.
வடை* - ஓர் பண்ணிகாரம்.
வட்கல் - கெடுதல், நாணுதல்.
வட்கார் - பகைவர். (புற.)
வட்சஸ்தலம் - மார்பு.
வட்டக்காய்* - விருஷணம் (பீச
வட்டணம் - பரிசை. (ம்.
வட்டணித்தல் - வட்டமாக்கல்.
வட்டணை - வட்டம், தாளம்போடல்.
வட்டத்திருப்பி - ஆடுதின்னாப்பாளை.
வட்டப்பாறை - சந்தனக்கல்.
வட்டமிடுதல்* - சுற்றிவருதல்.
வட்டம் - வட்டவடிவு, சீலை, நாணயமாற்றுதலின் வட்டம், [குளம், கேடகம், கைம்மணி, தாழ்வு, திரிகை, நீர்ச்சால், பீடம், வளைதடி, சக்கரம், பரிவேடம்.]
வட்டா - வாயகன்ற பாத்திரம்.
வட்டாடல் - சூதாடல்.
வட்டாரம்* - சுற்றுப்புறம்.
வட்டி - முதற்பொருட்கு வருமூதியம், [கூடை, கடகப்பெட்டி. (புற.), பலகறை. (கந்த.)]
வட்டிகை - கூடை, கைம்மணி, எழுதுகோல், நால்வகைச்சாந்திலொன்று, பந்தயப்பொருள்.

வட்டித்தல் - அன்னம்பரிமாறுதல், [ஆணையிடல், சுழற்றுதல்.]
வட்டில் - கிண்ணம், [சூதாடு கருவி, கூடை, வழி.]
வட்டு - சூதாடுகருவி, திரட்சி, கண்டசருக்கரை.
வட்டுடை - ஒருடைவிசேடம்.
வட்டுவம்* - ஓர்வகைப்பை.
வட்டை - புலியினதுடல்வரி, வழி. (சேது.)
வணக்கம் - தொழுதல், [தாழ்வு.]
வணக்கல் - வளைத்தல், வசப்படுத்தல்.
வணங்கல் - தொழுதல், வளைதல்.
வணங்காமுடியன் - மற்றொருவரை வணங்காதவன், [துரியோதனன்.]
வணர் - வளைவு. (சேது.)
வணிகம் - வியாபாரம், செட்டு.
வணிகன் - செட்டி, வியாபாரி.
வணிசம் - எருது.
வண்களமர் - வேளாளர்.
வண்சிறை - மதில்.
வண்டத்தனம்*-குறும்புத்தனம்.
வண்டர் - கடிகையர் (சீவக. சிந். 1844), மங்கலபாடகர்.
வண்டல் - நீர் ஒதுக்கிவிட்ட மண், [மகளிர் விளையாட்டு, சேறு. (இராமா.)]
வண்டவாளம்* - நிலைமை.
வண்டனர் - முனிவர். (சீவக. சிந். 1632.)
வண்டன் - துஷ்டன், [குள்ளன், திண்ணியன்.]
வண்டாலம் - குந்தாலி.
வண்டானம்-நாரை. (சீவக. சிந்.)
வண்டி - பண்டி, [வயிறு.]
வண்டில் - பண்டி.
வண்டு - சுரும்பு, [கைவளை, சங்கு, அம்பு, பூசநாள், குற்றம்]
வண்டுணுமலர்-சண்பகப்பூ, வேங்கைமரப்பூ.
வண்டுறை-எழுத்திலாவோசை.
வண்டை* - ஓர் செடி.
வண்டோதரி - இராவணன் மனைவி.
வண்ணம் - அழகு, குணம், நிறம், வடிவு, நன்மை, சாந்துப்பொது, இசைப்பாவகையுளொன்று.
வண்ணாத்தி - வண்ணாரப்பெண், [பூநீறு.]
வண்ணாத்திப்பூச்சி - ஓர் பூச்சி.
வண்ணான்* - ஏகாலியன்.
வண்ணித்தல் - புகழ்தல். (சீவ. சிந். 2458). [விரித்தல்.]
வண்மை-ஈகை, அழகு, செல்வம், வலிமை, புகழ், மெய்ம்மை.
வதக்கம் - வாட்டம்.
வதக்குதல்* - வாட்டுதல். (கந்.
வதங்குதல்* - வாடுதல். [புரா).
வதந்தி - பிரஸ்தாபம்.
வதம் - கொலை, விரதம். (சீவக. சிந். 378).
வதரம் - இலந்தைமரம்.
வதரி-இலந்தை, பருத்தி. (சப்த.). பதரிகாசிரமம்.
வதனம் - முகம், சொல்லல்.
வதாலம் - ஓர் மீன்.
வதி - சேறு, வழி, வதியென்னேவல்.

வதிட்டன் - வசிஷ்டன்.
வதிரன் - செவிடன்.
வதிரிகாசிரமம் - ஓர் புண்ணிய ஸ்தலம்.
வதில்*, வதிள் - விடை.
வது, வதூ - புதுமணப் பெண், மகன்மனைவி, மனைவி.
வதுவர் - குதிரைப்பாகர், யானைப்பாகர்.
வதுவை - கலியாணம், வாசனை.
வதை - வதையென்னேவல், கொலை, உபத்திரவம், [தேன் கூடு.]
வத்தனை - செல்வம் (வர்த்தனை என்பதன் விகாரம்), வமிசம்.
வத்தாலை - கொம்மட்டிக்கொடி.
வத்தி* - விளக்குவர்த்தி.
வத்திரம், வஸ்திரம் - ஆடை, சீலை, [முகம், போர்க்கருவி.]
வத்து, வஸ்து* - பொருள்.
வஸ்துநிச்சயம், வஸ்து நிண்ணயம் - ஆண்டவனுளனென்னும்கொள்கையை உணர்தல்.
வந்தநம், வந்தநை - வணங்கல்.
வந்தி - மலடி, [ஏணி, வருத்தம்.]
வந்தித்தல் - புகழ்தல், வணங்கல்.
வந்தியர் - மங்கலபாடகர்.
வந்து - காற்று, ஒரு வினையெச்சம்.
வந்தை - பெருமை, மலடி.
வபு - உடம்பு. (சப்த.)
வமனம் - வாந்திசெய்தல்.
வமிசம், வம்சம்* - சுற்றம், [மூங்கில்.]
வமீ - வாந்தி. (சப்த.)
வம்பமாக்கள் - புதியவர்.
வம்பலர் - அயலோர், புதியோர்.
வம்பல் - திசை. (பிங்.)
வம்பளத்தல் * - வீண்காரியம் பேசுதல்.
வம்பன்* - துஷ்டன்.
வம்பி - துட்டை, [கருவண்டு.]
வம்பு - தீச்சொல், தீச்செயல், வீம்பு, [புதுமை, வாசனை, நிலையின்மை, மிடா, முலைக்கச்சு, கயிறு.]
வயக்கம் - விளக்கம்.
வயங்கல் - நடத்தல், ஒளிசெய்தல்.
வயசு, வயது* - ஆயுள், [யௌவனம்.]
வயசுப்பிள்ளை* - வாலிபன்.
வயணம்* - விதம், காரணம்.
வயந்தன்-மன்மதன். (கந்.)
வயப்புலி - சிங்கம்.
வயப்புள் - கருடன்.
வயமா - சிங்கம், புலி, யானை.
வயம் - வலி, வெற்றி, ஆடு, இரும்பு, குதிரை, நீர், பறவை, வசம்.
வயல் - கழனி, மருதநிலம், வெளி.
வயவரி - புலி.
வயவர் - படைவீரர்.
வயவன் - கரிக்குருவி, காதலன், திண்ணியன், வலியன்.
வயவு - ஆசை.
வயவை - வழி.
வயா, வயாவு -பிரசவநோய், வேட்கைப்பெருக்கம், கருப்பம்.
வயாவுதல் - விரும்பல். (மலை.)

வயானம் - பறவை.
வயானன் - வலியன்.
வயிக்கிராந்தம் - குமுதபாஷாண[ம்.
வயிடூரியம்* - வைடூரியம்.
வயிரமணி - வச்சிரம்.
வயிரமுத்து - வயிரித்தமுத்து.
வயிரம் - மாவயிரம், [வச்சிராயுதம், சலஞ்சாதித்தல், சினம், கூர்மை, பூணுகைக்கட்டுவது.]
வயிரவல்லி - பிரண்டை.
வயிரவன் - பைரவமூர்த்தி, சிறுகீரை.
வயிராகம், வயிராக்கியம்* - வைராக்கியம்.
வயிரி*- வன்னெஞ்சுடையவன்.
வயிரியம் - மயிர்ச்சீலை.
வயிரியர் - கூத்தர், பாணர்.
வயிர் - ஊதுகொம்பு.
வயிறு* - குக்கி.
வயிறுகழிதல் - பேதியாதல்.
வயிறுகாந்துதல்* - பசித்தல்.
வயிறுதாரி* - பேருண்ணன்.
வயிறுவளர்த்தல்* - பாடுபட்டு உணவுதேடி நாள்கழித்தல்.
வயிற்றுக்கடுப்பு - ஓர் நோய்.
வயிற்றுக்கொதி - பசி.
வயிற்றுப்பிழைப்பு* - சீவியம்.
வயினதேயன் - கருடன்.
வயினம் - பறவை.
வயின்-இடம், ஏழனுருபு (உ-ம்.) 'அவர் வயிற்செல்லாய்', வயிறு, வீடு, முறை. (புற.)
வயோதிகம் - அதிக வயது.
வயோதிகர் - கிழவர்.
வரகவி - தேவானுக்கிரகம்பெற்றுப் பாடும்புலவன்.
வரகு - ஓர் தானியம்.
வரங்கொடுத்தல் - வரமருளுதல்.
வரட்சி* - வாளுதல்.
வரதம் - வரம்தருதல்.
வரதன் - வரத்தை அருள்பவன்.
வரதை - வரம்தருபவள்.
வரத்து - வருகை, வருமானம்.
வரநதி - கங்கை.
வரபலம் - தென்னைமரம்.
வரப்பு - வயல், வரம்பு, எல்லை.
வரப்புள் - வயல். (பிங்.)
வரம்-தேவவீகை, [ஆசீர்வாதம், மேன்மை,நவநிதியிலொன்று]
வரம்பு - அணை, எல்லை, வழி.
வரம்புகட்டுதல்-அணைகட்டுதல்.
வரர் - மேலோர், வானோர்.
வரலாறு* - வருதலின்வழி.
வரவர* - மேலும் மேலும்.
வரவு* - வருகை.
வரன் - கணவன், மருமகன், சிரேட்டன்.
வரன்முறை - வரலாறு.
வரன்றல் - கொழித்தல், வாருதல். (திவா.)
வராகபுடம் - ஐம்பதெருவைத் தெரிக்கும் புடம்.
வராகம் - பன்றி, போர், ஒரு புராணம்.
வராகனெடை*-முப்பத்திரண்டு குன்றிமணி கொண்ட நிறை.
வராகன் - ஒரு பொன் நாணயம், [திருமால்.]
வராகி-ஓர் சத்தி, சத்தமாதர்களிலொருத்தி, [சிற்றரத்தை, நிலப்பனை.]
வராங்கம் - தலை.

வராடகம் - தாமரைக்காய், பல கறை.
வராடம்-பலகறை, ஒரு தேசம்.
வராட்டி - வரட்டி.
வராலி - பிரமிச்செடி.
வரால் - ஓர் மீன்.
வராளம் - பாம்பு.
வராளி - ஓர்வகை இசை.
வரி-குடியிறை, கோடு, [இசைப் பாட்டு, இரேகை, புள்ளி வடிவு, வண்டு, வழி, தேமல், எழுத்து, கடல்.]
வரிசை - சிறப்புடன் செய்யும் நன்கொடை, ஒழுங்கு [முறைமை, வெகுமானம்.]
வரிசைக்கிரமம் - நல்லொழுங்கு.
வரிச்சல் - கட்டுவரிச்சு.
வரிதல் - எழுதல், [சித்திரமெழுதல்.]
வரித்தல் - கட்டல், நியமித்தல்.
வரிப்புலி - வேங்கைப்புலி.
வரிப்புறம் - அணில்.
வரியொட்டி - ஓர் மீன்.
வரியோரா* - ஓர் மீன்.
வருகம் - மயிற்றுேகை, இலை.
வருகை - வரவு.
வருக்கம் - இனம், குலம், ஒழுங்கு, கூட்டம், வகுப்பு.
வருக்கு - கஞ்சி.
வருக்கை - ஒரு பலாமரம்.
வருச்சித்தல் - நீக்கல்.
வருஷபுட்பம் - தாழம்பூ.
வருடம், வருஷம் - ஆண்டு, [மழை.]
வருடல் - தடவல்.
வருடாந்தரம்*, வருஷாந்தரம் - வருஷ முடிவு.
வருணம் - நிறம், குலம், [நீர், எழுத்து, பிரகாசம், பொன், மஞ்சள், யானை, வாசனை, விதம், துதி.]
வருணனை - புனைவுரை, தோத்திரம்.
வருணன் - மேற்றிசைப்பாலன்.
வருணாசாரம் - சாதியொழுக்கம்.
வருணாஸ்திரம் - வருணபாணம்.
வருத்தம் - துன்பம், [முயற்சி, களைப்பு.]
வருத்தனை - பெருகுதல், தொழில், சம்பளம், வழி.
வருத்து - வரவு.
வருமானம்* - வரும்படி.
வருவாய் - வரும்படி, தோன்றுமிடம்.
வரை - அளவு, மலை, மூங்கில், விரலிறை, நீர்க்கரை, காலம், அளவு, இடம்.
வரைகம்பு* - கம்மாளர் கருவியுளொன்று.
வரைதல் - எழுதல், விவாகஞ் செய்தல், கொள்ளல், நீக்கல், நிர்ணயித்தல்.
வரைப்பு - எல்லை, மதில், உலகம், குளம்.
வரையறுத்தல் - எல்லைப்படுத்தல்.
வரையறை - அளவு, எல்லை.
வரையாடு - பள்ளாடு.
வரைவின்மாது - வேசி.
வர்க்கம் - வருக்கம்.

வர்த்தமானம் - சங்கதி, தற்கால நிகழ்ச்சி, சிற்றுமணக்கு.
வர்த்தனை - செல்வம். (சிவத).
வர்த்தி - திரிசீலை, வாசனைத்திரவியங்களைக் கூட்டியரைத்துச் செய்த வர்த்தி, இரத்தினங் களின்கீழ்ப் பதிக்குந்தகடு.]
வர்த்துலம் - வட்டவடிவு.
வர்மம் - வன்மம்.
வலக்காரம் - அதிகாரம், [வெற்றி, பொய்.]
வலங்கை-வலதுபுறம், வலக்கை.
வலங்கையார் - ஒரு சாதியார்.
வலசாரி - வலமாகச் சுற்றிப்போதல்.
வலது - வலதுபுறம், வல்லமை.
வலந்தம் - வசனம், வளைவு.
வலப்பாரிசம் - வலப்புறம்.
வலம் - வலப்பக்கம், [வலி, வெற்றி, இடம், ஏழனுருபு.]
வலம்புரி - வலம்புரிச்சங்கு, [நந்தியாவட்டம்.]
வலயம், வளையம் - கைக்கடகம், [வட்டம்,கடல்,குளம்,சுற்று.]
வலவன் - வெற்றியாளன், சமர்த்தன், தேர்ப்பாகன்.
வலவை-இடாகினி, காளி, காளியேவற்பெண், வல்லவள்.
வலன் - வலப்பக்கம், வெற்றி.
வலாகம் - கொக்கு, மேகம்.
வலாட்டிகன் - பலசாலி.
வலாரி - இந்திரன்.
வலாற்காரம் - வலோற்காரம்.
வலி - வலியென்னேவல், ஓர் நோய், [வல்லமை, குரங்கு, பற்றிரும்பு.]
வலிச்சல் - வரிச்சு, [பனையின் கடுங்காய்.]
வலிது - வலியது.
வலித்தல் - இழுத்தல், [உடன்படல், நினைத்தல்.]
வலிப்பு* - இழுப்பு.
வலிமை - வன்மை.
வலிய* - தாருக.
வலியன் - வலியுடையோன், கரிக்குருவி.
வலியான் - ஓர் பருந்து, கரிக்குருவி, வலியுடையோன்.
வலியுறுத்தல்- உறுதிப்படுத்தல்.
வலீமுகம் - குரங்கு.
வலு - பலம், [கனம், கொசுகு.]
வலுவந்தம்* - வலோற்காரம்.
வலை* - மீன் முதலிய பிடிக்குங் கருவி.
வலைக்குணுக்கு - வலையைத் தாழச்செய்யும் உருண்டை.
வலைஞர் - செம்படவர், வேடர்.
வலையன் - ஓர் சாதியான்.
வலோத்காரம், வலோற்காரம் - வலுவந்தம்.
வல் - சூதாடுகருவி, மேடு, வலி, விரைவு.
வல்சி - அரிசி, சோறு.
வல்லகி - வீணை.
வல்லடி - வலுவந்தம், வல்லபம்.
வல்லடிக்காரன் - வலுவந்தம் செய்வோன்.
வல்லடிவழக்கு*- வலுவந்த நியாயம்.
வல்லணங்கு - காளி.
வல்லபம் - வல்லமை, உத்தமமான குதிரை.

வல்லபன் - நாயகன், வல்லோன்.
வல்லபை - ஓரசுரமாது, பிரிய நாயகி, எசமாட்டி.
வல்லமை* - வல்லபம்.
வல்லம் - தஞ்சைக்கருகிலுள்ள ஓரூர்.
வல்லயம்-எறியீட்டி. (கந். புரா.)
வல்லரி - கொடி, தளிர், பூங் கொத்து.
வல்லவன் - வல்லான், புருடன், இடையன்.
வல்லவாட்டு* - மேற்போர்வை.
வல்லவி - மனைவி.
வல்லாரை - ஓர்பூடு, [கேட்டை நாள்.]
வல்லார் - சமர்த்தர், மாட்டாத வர்.
வல்லார்கொள்ளை*-பலராற் கவ ரப்படுதல்.
வல்லாளகண்டன்* - மிக்க வல் லவன்.
வல்லாளராசன் - அருணைசலேசு வரரைப் புதல்வனுயடைந்த ஒரு மன்னன்.
வல்லாளன் - வல்லான், [திண் ணியன்.]
வல்லி - படர்கொடி, ஒரு உபநி டதம், அளவு, இடைச்சேரி, கால்விலங்கு, நீங்கல், பிரிதல்.
வல்லிசம் - மிளகு.
வல்லியம் - புலி, மஞ்சள், இடை யரூர், கொல்லிமலை.
வல்லுநர் - வல்லோர்.
வல்லுளி - பன்றி.
வல்லூகம் - ஆண்குரங்கு, கரடி.
வல்லூரம்-வள்ளூரம், பாழ்நிலம்.
வல்லூறு - இராசாளி (பஞ்ச பட்சியினுளொன்று.)
வல்லை - காலவிரைவு, கடுப்பு, ஓர் நோய், மேடு, வட்டம், கோட்டை, பெருங்காடு.
வல்வாயன்* - பேச்சிற்றிறமை யுடையோன்.
வவ்வால்* - வௌவால்.
வவ்வால்மீன் - ஓர் மீன்.
வவ்வுதல் - வௌவுதல்.
வழக்கம்* - வழங்குதல்.
வழக்காடுதல்* - வழக்குச்செய் தல்.
வழக்கு - பொருள் காரணமான வியாச்சியம், [வழக்கம்.]
வழக்கோரம்-ஒருபக்கஞ் சார்ந்து பேசும் நியாயம்.
வழங்கு - ஈயென்னேவல்.
வழலிக்கை* - சோர்வு.
வழலை - ஓர் மருந்து, சவுக்காரம், ஓர் பாம்பு, கோழை.
வழலையுப்பு - சவுக்காரவுப்பு.
வழாறு - நிறைபுனல்.
வழி - இடம், காரணம், பழமை.
வழிகாட்டி - வழிநடத்துவோன்.
வழிக்குதல் * - துடைத்தெடுத் தல்.
வழிச்செலவு* - பயணச்செலவு.
வழிதல்* - ஒழுகல்.
வழித்தடை* - கெட்டசகுனம்.
வழிநடை* - பிரயாணம்.
வழிபடல் - வணங்கல்.
வழிபடுத்தல் - நேர்படுத்தல்.
வழிபாடு - ஆராதனை, வணக்கம்.
வழிப்படுத்து* - ஒழுங்காக்கு.
வழிவகை* - ஏது.

வழிவிடுதல் * - பயணமனுப்புதல்.
வழு - தப்பு, வழுவென்னேவல்.
வழுக்கு - வழுக்கென்னேவல், [மறதி, நிணம்.]
வழுக்கை* - தேங்காயிளவல்.
வழுக்கைத்தலை * - மொட்டந்தலை.
வழுதலை, வழுதுணை - கத்தரிச்செடி.
வழுதி - பாண்டியன்.
வழுது - பொய், வைக்கோல்.
வழுத்துதல் - துதித்தல்.
வழும்பு - நிணம், வழவழப்பான அழுக்கு.
வழுவல் - நழுவுதல், தவறுதல்.
வழுவு - குற்றம், தவறு.
வழுவை - யானை.
வழை - சுரபுன்னைமரம்.
வழைச்சு - இளமை. (சீவக.சிந். 1614).
வளப்பம் - செழிப்பு, நன்மை, மாட்சிமை.
வளமை - செல்வப்பொலிவு, கொழுப்பு, நன்மை.
வளம் - செல்வம், செவ்வை, பதவி, மாட்சிமை, அழகு. (சீவக. சிந். 751).
வளயம்* - வளையம்.
வளர்தல் - உயர்தல்.
வளர்த்தல்* - வளரச்செய்தல்.
வளர்த்தி* - வளர்ச்சி.
வளர்த்துதல்* - கிடத்துதல்.
வளவளப்பு - பயனில்சொல்.
வளவன் - சோழன்.
வளவி - வீட்டிறப்பு.
வளாகம் - இடம், தினைப்புனம், வளைந்தவிடம்.
வளார் - இளங்கொம்பு.
வளாவல்-*வளாவுதல்- கலத்தல்.
வளி - காற்று, சூறைக்காற்று.
வளிசம் - தூண்டில்.
வளுவளெனல் - நொளுநொளுத்தல்.
வளை - நுழைவளை, வளையென்னேவல், [புற்று, கங்கணம், கைவளை, சக்கரம், சங்கு.]
வளைக்குதல் - கோணச்செய்தல்.
வளைதல் - சூழ்தல், சுற்றுதல்.
வளைத்தல் - வளைக்குதல், [கட்டுதல், தடுத்தல், வாருதல்.]
வளையக்கொடி - அண்ணந்தாள்.
வளையம் - கைவளை, வட்டம், [எல்லை, குளம், தாமரையுட்சுருள்.]
வளையல்-கைவளை, [வளைந்தது.]
வளையாபதி-ஒரு காவியம்.
வளைவு - வளைந்தது, வட்டம்.
வள் - கூர்மை, நெருக்கம், வலி, வளம், வார், வாளுறை, காது.
வள்ளம் - வட்டில், ஓர்வகைச் சிறுதோணி, மரக்கால்.
வள்ளல் - வரையாது கொடுப்போன், வண்மை (சீவக. சிந். 36).
வள்ளன்மை - வள்ளற்றன்மை.
வள்ளி - ஓர் கொடி, சுப்பிரமணியன்றேவி, [கைவளை, ஓர் கூத்து, பிரப்பங்கேடகம்.]
வள்ளிசு - செவ்வை.
வள்ளிமணாளன் - முருகன்.

வள்ளியம் - ஊதுகுழல், மரக்கலம், மிளகு, மெழுகு.
வள்ளியின்னமுது - வள்ளிக்கிழங்கு. (சீவக. சிங். 1427).
வள்ளியோன் - வரையாது கொடுப்போன்.
வள்ளூரம், வள்ளூரம் - ஆட்டிறைச்சி, ஆவினிறைச்சி, ஊன்.
வள்ளுவர்குறள்-கடவுட்டன்மை வாய்ந்த ஒரு தமிழ்நூல்.
வள்ளுவன்-பறையறைந்து வருங்காரியம்சொல்லுவோன், புரோகிதன்.
வள்ளை - ஓர் கொடி, உலக்கை யோச்சித் தந்தலைவன்வளங் கூறி மகளிர்பாடும் பாட்டு.
வறடு - வறண்டது, மலடு.
வறட்சுண்டி-ஆடுதின்னாப்பாளை.
வறட்டி* - வறூட்டி.
வறம் - வறுமை. (மணி. பக். 125.)
வறளி - உலர்ந்த சாணி.
வறளுதல் - காய்தல், வற்றல்.
வறிஞர் - தரித்திரர்.
வறிது - வீண், அறியாமை, பயனின்மை, சிறுமை.
வறியர் - தரித்திரர்.
வறுத்தல்* - வறட்டல்.
வறுமை - தரித்திரம்.
வறும்புனம் -விளைவுகொய்புனம்.
வறையல்- துவட்டற்கறி, [பிண்ணாக்கு.]
வற்கடம் - பஞ்சகாலம்.
வற்கம்-கஞ்சி, குதிரையின் வாய் வார், மரப்பட்டை.
வற்கரி - கரகம்.
வற்கலை - மரவுரி.
வற்காலி - வெள்ளாடு.
வற்கு - அழகு, ஆடு, சந்தனம்.
வற்சதரம் - இளங்கன்று.
வற்சநாபி - ஓர் மருந்து.
வற்சம் - மார்பு, எருமை பசு இவற்றின்கன்று, குழந்தை.
வற்சரம் - வருடம்.
வற்சலம் - இரக்கம்.
வற்சலை - ஈன்றபசு.
வற்பம் - பஞ்சம்.
வற்பு - உறுதி, பஞ்சகாலம்.
வற்றம் - வறட்சி, வறுமை.
வற்றல் - அடைகாய், காய்ந்தது.
வற்றுதல்* - வடிதல்.
வனசஞ்சாரம் - வனவாசம்.
வனசம் - தாமரை.
வனசரம் - வனத்திற் பிறந்த யானை.
வனசரர் - வனவாசிகள், வேடர்.
வனசோபனம் - தாமரை.
வனபதி - பூவாது காய்க்குமரம்.
வனப்பு - அழகு, அலங்காரம்.
வனமாலி - திருமால்.
வனம் - ஊர்சூழ்ந்த சோலை, காடு, [சுடுகாடு, துளசி, நீர்.]
வனலக்ஷ்மீ - வாழை.
வனவாசம்* - காடுறைதல்.
வனாந்தரம்* - மனிதசஞ்சாரமில்லாத காடு.
வனிதை - பெண், மனையாள்.
வனைதல் - செய்தல்.
வன்கண் - கொடுமை, பொறாமை, வீரத்தன்மை.
வன்கண்ணர் - வைராக்கியர்.
வன்சொல் - கடுஞ்சொல்.

வன்பால் - குறிஞ்சிநிலம், பாலைநிலம், மேடு.
வன்பு - வன்மை.
வன்மம் - வைராக்கியம்.
வன்மனம் - கல்நெஞ்சு.
வன்மீகம் - புற்று.
வன்மீகி - வான்மீகி (புற்றிலிருந்து தோன்றினவர்.)
வன்மீன் - முதலை.
வன்மை - வலி, கடினம், பொல்லாங்கு.
வன்மொழி - கடுஞ்சொல்.
வன்னம் - நிறம், எழுத்து.
வன்னி - ஓர் மரம், [தீ, கொடிவேலி, கிளி, பிரமசாரி.]
வன்னிகருப்பம் - மூங்கில்.
வன்னிகருப்பன் - கந்தன்.
வன்னித்தல் - சிறப்பித்தல், வேண்டுதல்.
வன்னிமாரகம் - நீர்.
வன்னிமித்திரன் - காற்று.
வன்னியர் - ஓர் சாதியார், [வனவாசிகள்.]
வன்னெஞ்சன்-கடின நெஞ்சன்.

## வா

வா - வாவென்னேவல், ஓரெழுத்து.
வாகடம் - வைத்தியசாத்திரம்.
வாகரம் - கோணுய், சாணைக்கல், தடை, வடவாமுகம்.
வாகனம் - ஏறிநடத்தப்படுபவை, [சீலை, முயற்சி.]
வாகியம் - புறத்தது.
வாகினி - படை, படையிலோர் தொகை.
வாகீசன் - திருநாவுக்கரசன்.
வாகீசுவரி, வாகீசை - சரஸ்வதி.
வாகு - தோள், அழகு, ஒழுங்கு.
வாகுவலயம் - தோளணி.
வாகை - ஓர் மரம், வெற்றியுற்ற காலத்தே சூடும் மாலை, வெற்றி, ஒழுக்கம், ஈகை, மிகுதி, மாட்சிமை, தவம்.
வாக்காள் - சரஸ்வதி.
வாக்கியம் - வசனம், வாசகம், வேதநியமம்.
வாக்கியார்த்தம் - பொழிப்புரை.
வாக்கு - சொல், [மெய்ம்மை, பக்கம், வளைவு, வாய், திருத்தம் 'வாக்கணங்கார் மணி வீணை' (சீவக. சிந். 7473.)
வாக்குச்சகாயம்* - சொற்றுணை.
வாக்குச்சித்தி - சொற்படி யனுகூலமாதல்.
வாக்குதல் - வார்த்தல்.
வாக்குத்தத்தம் * - வாக்குக்கொடுத்தல்.
வாக்குத்தானம் - சென்மத்திற்கிரண்டாமிடம்.
வாக்குநாணயம்* - பேச்சுறுதி.
வாக்குமாறுதல்-பேச்சுத்தவறல்.
வாக்குமூலம்* - சொற்கருத்து.
வாக்குவாதம்* - தர்க்கம்.
வாங்கல் - பெற்றுக்கொள்ளல், [அழைத்தல், வளைவு, வளைத்தல்.]
வாங்கா* - ஒருதுகுழல்.
வாங்கு - பிச்சுவா, ஓராசனம்.
வாசகம் - வார்த்தை, வசனம்.
வாசஞ்செய்தல் - உறைதல், [மணமூட்டுதல்]

வாசஸ்தலம், வாசஸ்தானம் - இருப்பிடம்.
வாசந்தி - வசந்தகால மல்லிகை, குருக்கத்திமரம், திப்பிலி.
வாசம் - இருப்பிடம், வாசனை, ஊர், சீலை, அம்பு, நீர், இறகு, இலாமிச்சை, வாக்கு, வேகம்.
வாசரம் - நாள்.
வாசல்* - வாயில்.
வாசவன் - இந்திரன்.
வாசற்படி* - வாயிற்படி.
வாசனம் - வாசனை, அறிவு, சீலை, குரல்.
வாசனை* - மணம்.
வாசனைப்பண்டம் - கந்தவருக்கம்.
வாசா* - வாய்விசேஷம்.
வாசாமகோசரம் - வாக்குக்கெட்டாமை.
வாசாலகம், வாசாலம்*- அதிகம் பேசுதல்.
வாசாலகன், * - அதிகம் பேசுபவன்.
வாசாலை - வாக்கில் வல்லவள்.
வாசி* - நிமித்தம் (உ-ம்.) ஆன வாசி, தன்மை (உ-ம்.) அது மண்வாசி,சௌக்கியம்(உ-ம்.) வியாதி வாசியாய்ப் போயிற்று, அளவு (உ-ம்.) அரை வாசி, அதிகம் (உ-ம்.) வாசி காண, [குதிரை. அம்பு, இசைக்குழல், பாட்டு, சுவாசம், பறவை, வாசஞ்செய்கிறவன்.]
வாசிகம் - செய்தி.
வாசிகன் - தூதன்.
வாசிகை - கோத்தமாலை, மாலை.
வாசிட்டம் - ஸ்ரீராமருக்கு வசிஷ்டர் உபதேசித்த ஒரு நூல்.
வாசித்தல் - படித்தல்.
வாசினி - பெண்குதிரை.
வாசு - கடவுள், வெட்டிவேர்.
வாசுகி - திருவள்ளுவரின் கற்புடைய மனைவி, அட்டநாகத்தொன்று.
வாசுதேவன் - கண்ணபிரான்.
வாசை - ஆடாதோடை.
வாச்சல்லியம் - தயை.
வாச்சி,வாய்ச்சி - மரஞ்செதுக்கு மாயுதம்.
வாச்சியம் - வாத்தியம், வெளிப்படை, நிந்தை.
வாஞ்சனம், வாஞ்சனை* - வாஞ்சை.
வாஞ்சித்தல் - ஆசைப்படுதல்.
வாஞ்சை* - விருப்பம்.
வாடகை - குடிக்கூலி, [தெரு, வாகனசாலை.]
வாடல் - வதங்கல், மெலிதல், [சாதல்.]
வாடாமல்லிகை - ஓர் பூச்செடி.
வாடாமாலை - பொன்னரிமாலை.
வாடாவள்ளி - வள்ளிக்கூத்து.
வாடி - தொட்டால்வாடி, அடைப்பு, மதில், ஓரூர்.
வாடிக்கை* - வழக்கம்.
வாடை - வடகாற்று, வரிசை, வாசனை, [இடையர்வீதி, வடக்கு, வேடர்வீதி.]
வாடைக்காற்று - வடகாற்று.
வாட்கை - வாழ்க்கை.
வாட்கோரை - ஓர் புல்.

வாட்டம் - சாய்வு, சோர்வு, மெலிவு, வாடல், [தெரு, தோட்டம், வழி.]
வாட்டரவு - சோர்வு.
வாட்டி* - முறை.
வாட்டுதல்* - துன்புறுவித்தல், வாடப்பண்ணுதல்.
வாணகந்தி - ஓர் கந்தகம்.
வாணம்-பாணம், மத்தாப்பு முதலியன.
வாணன் - ஓரசுரன், கார்த்திகை நாள், வாழ்நன்.
வாணுக்கம்பு, வாணுத்தடி* - சிலம்பக்கோல்.
வாணுள்-வாழ்நாள், உயிர் "தெவ்வர்வாணுள் வீழ்ந்துக" (சீவக. சிந். 3079.)
வாணி - சரஸ்வதி, சொல், ஓர் கூத்து, மனேசிலை, அசமதாகம். [ரம்.
வாணிகம், வாணியம் - வியாபா
வாணிகன்-செட்டி, [துலாராசி.]
வாணிச்சி* - செட்டிப்பெண்.
வாணிதம் - கள்.
வாணிபர், வாணியர் - வியாபாரிகள், செட்டிகள்
வாணீசன் - பிரமன்.
வாணுதல் - பெண்.
வாதகரப்பன் - ஓர் நோய்.
வாதகுன்மம் - ஓர் நோய்.
வாதகேது - புழுதி.
வாதக்கடல், வாதசிரோமணி - நவச்சாரம்.
வாதசாரதி - அக்கினி.
வாதசுரம்* - வாதத்தைப்பற்றியெழுந்த காய்ச்சல்.
வாததூலம் - காற்றில் பறக்கும் பஞ்சு.
வாதநாசனம் - ஆமணக்கு.
வாதமடக்கி - தழுதாழை.
வாதம் - இரும்பு முதலிய லோகங்களைப் பொன்னுக்கும் வித்தை, தருக்கம், முப்பிணியினென்று, [காற்று, வில்வம்.]
வாதராயணன் - வியாசன்.
வாதனம் - சீலை, ஒலி.
வாதனை - வருத்தம், அழுத்தம், பயிற்சி.
வாதாடல்* - வழக்காடல்.
வாதாபி, வாதாவி - அகத்தியர் உண்டு சீரணித்த ஓரரக்கன்.
வாதாயனம் - பலகணி.
வாதாரி - ஆமணக்கு. (சபத.)
வாதி - வாதியென்னேவல், முறையிடுபவன், [தருக்கித்துப்பேசுபவன், வாதஞ்செய்வோன், காற்று.]
வாதித்தல்*-தருக்கித்தல், வருத்தப்படுத்துதல்.
வாது - தருக்கம், [சண்டை.]
வாதுமை* - ஓர் மரம்.
வாதுலம் - சுழல்காற்று.
வாதுவர் - குதிரைப்பாகர், யானைப்பாகர். [டினென்று.
வாதுளம் - சிவாகமமிருபத்தெட்
வாதை-வேதனைசெய்யும் நோய், [துன்பம்.]
வாத்தி, வாத்தியாயன், வாத்தியான் - கற்பிப்போன்.
வாத்தியம்*-கஞ்சக்கருவி துளைக்கருவி தோற்கருவி நரம்புக்கருவியெனுமிசைக்கருவிகள்.

வாத்து - ஒரு பட்சி, [வீடு.]
வாந்தி* - சத்திபண்ணல்.
வாபரம் - மதில்.
வாமதேவன் - சிவன்.
வாமம் - இடப்பக்கம், அழகு, ஒளி, குறுமை, சிவனைம்முகத் தொன்று, செல்வம், முலை, ஒரு சமயம், தொடை.
வாமலூரு - புற்று.
வாமனன் - குள்ளன், குறளுருக் கொண்ட திருமால்.
வாமன் - அருகன், சிவன்.
வாமி, வாமை - பார்வதி.
வாயசம் - காக்கை.
வாயசி - பெண்காகம். (சப்த.)
வாயடித்தல்-வாயினுலதட்டுதல்.
வாயம் - நீர்.
வாயலம்புதல் * - வாய்சுத்திபண்ணல்.
வாயல் - பக்கம், வாயில்.
வாயாடி* - வாய் வல்லவன்.
வாயில் - வாசல், [துவாரம், காரணம், தூது, ஐம்பொறி, வழி.]
வாயு - காற்று.
வாயுதாரணை-மூச்சை ஓரிடத்தே நிறுத்தல்.
வாயுத்தம்பனம்-வாயுவைத் தடுத்தல்.
வாயுமூலை - வடமேற்கு.
வாயுபுத்திரன்-அனுமன், வீமன்.
வாயுவிளங்கம்* - ஓர் மருந்து.
வாயுவேகம் - மிக்கவிரைவு.
வாயுறை - பசுமுதலியவற்றிற் குத்தரும் வாயளவுகொண்ட உணவு.
வாயூறல் - வாயினீரூறுதல்.
வாயெடுத்தல்* - பேசத்தொடங்கல்.
வாய் - வாக்கு, உண்மை, நதி, வாயில், விளிம்பு, ஏழனுருபு "குரைகடல் வாயமுதெ ன்கோ", வடு 'வெங்கணை வாயுமின்றி' (சீவக. சிந்.454).
வாய்கட்டுதல்* - மந்திரத்தால் வாய் திறவாமற்பண்ணல்.
வாய்க்கணக்கு* - எழுதாமற் சொல்லுங் கணக்கு.
வாய்க்கரிசி* - பிணத்தின் வாயிலிடுமரிசி.
வாய்க்கால் - நீரோடுங்கால், [மகநாள்.]
வாய்க்கொழுப்பு* - மதியாப்பேச்சு.
வாய்ஞானம் - வாசாஞானம்.
வாய்தா* - நிலவிறைப்பணம்.
வாய்த்தல் - கிடைத்தல், பொருந்தல்.
வாய்பாடு - வாயிலாட்சிப்பட்டு வரும் சொல்.
வாய்பிதற்றுதல்,* வாய்பினற்றுதல்* - அலப்புதல்.
வாய்பூசல் - வாய்கழுவல்.
வாய்ப்பிறப்பு* - வாய்மொழி.
வாய்ப்பு - சித்தி, தகுதி, வளமை.
வாய்ப்புள் - நன்னிமித்தம், சொற்சகுனம்.
வாய்மதம்* - வாய்க்கொழுப்பு.
வாய்மை - மெய், சொல், வலி.
வாய்விளங்கம்* - ஓர் மருந்து.
வாய்வெருவுதல் - தடுமாறிப்பேசல்.

வாரக்குடி* - நிலம்பயிரிட்டுப் பங்குபெறும் குடியானவன்.
வாரசம் - முத்து.
வாரணம்-யானை, கோழி, சங்கு, கேடகம், பன்றி, கவசம், மா விலங்குமரம், சட்டை, கடல்.
வாரணசி - காசிநகர்.
வாரம் -ஏழுகிழமைகொண்டது, [பங்கு, அன்பு, உரிமை, கடல், கரை, சமயம், மலைச்சார்பு, வாயில், தெய்வப்பாடல். (சிலப். 3: 136.)]
வாரல்* - அள்ளுதல், கொள்ளையிடல், மயிர்கோதல், முகத்தல்.
வாரவாணம், வாரவாரம்-கவசம்.
வாராகி - சத்தமாதர்களிலொரு த்தி, [பெண்பன்றி, பூமி.]
வாராணசி - காசிநகர், தடை.
வாராவதி* - பாலம்.
வாரானை - வருகை.
வாரி - நீர், கடல், இசைக்குழல், கதவு, நிறைபுனல், மதிற்சுற்று, வழி, வாயில், வெள்ளம், யானை நிற்குங்கூடம், யானை படுகுழி.
வாரிசம் - தாமரை, சங்கு, உப்பு.
வாரிசன் - திருமால், பிரமா. (சேது.)
வாரிதம் - மேகம்.
வாரிதி - கடல்.
வாரித்தல் - ஆணையிடல், தடுத்தல்.
வாரிநாதம் - கடல், முகில்.
வாரிநிதி - கடல்.
வாரீசம் - கடல், தாமரை.
வாருகோல் - துடைப்பம்.
வாருணம் - கடல், ஒருபுராணம், சலம், மேற்கு, மாவிலங்கு.
வாருணி - அகத்தியன், கள், மேற்கு, சதயநாள்.
வாருண்டம் - எண்காற்புள்.
வாருதல் - கவர்தல், திருடல்.
வாரை - மரவுத்திரம், [காத்தண்டு = சுமைதடி.]
வார் - தோல்வார், வாரென்னேவல், [கச்சு, நீர், நீளம், நுண்மை, நேர்மை, கடைகயிறு. (சீவக. சிந். பக். 219.)]
வார்க்குதல் - பெய்தல், [லோகத்தை யுருக்கி உருவமுதலிய உண்டுபண்ணல்.]
வார்த்தாகம் - கத்தரிக்காய்.
வார்த்தாவகன் - செய்தி கொண்டுபோகுபவன்.
வார்த்திகம் - கிழத்தன்மை, விருத்தியுரை.
வார்த்திகன் - தூதன்.
வார்த்தை*- வசனம், [நிகழ்ச்சி.]
வார்நாமச்சீட்டு * - ஏற்றுமதிச்சீட்டு.
வாலகில்லியர் - அறுபதினாயிரம் ரிஷிகள்.
வாலதி - வால், யானைவால்.
வாலம் - கந்தைத்துணி, [தலைமயிர், வால்.]
வாலரசம் - சாதிலிங்கத்தில் வடித்தரசம்.
வாலவயது* - இளவயது.
வாலவாயம் - வைடூரியம்.
வாலறிவு - பேரறிவு.
வாலாமை - அசுத்தம், மகளிர் சூதகம்.

வாலாயம்* - வழக்கம்.
வாலி - கிஷ்கிந்தைமன்னன்.
வாலிசன்-அறிவீனன், குழந்தை.
வாலிபம்*, வாலியம் - பாலியம்.
வாலுகம் - வெண்மணல், மணல்.
வாலுங்கி - கக்கரி.
வாலுவன் - சமையற்காரன்.
வாலுளுவை - ஓர் மருந்து.
வாலேயம் - கழுதை.
வாலை-பதினாறு வயசுக்குட்பட்ட பெண், திராவகம் வடிக்கும் பாத்திரம், ஓர் சத்தி, இளைது.
வால் - மிருகத்தின்வால், [வெண்மை, தோகை, பெருமை, சுத்தம், மிகுதி.]
வால்மிளகு* - ஒரு வாசனைச்சரக்கு.
வால்மீகம் - வால்மீக ராமாயணம், [இந்திரதனுசு.]
வால்வெள்ளி - ஓர் நட்சத்திரம்.
வாவல் - தாண்டல், வௌவால்.
வாவி - குளம்.
வாவுதல் - பாய்தல், கடத்தல்.
வாழாக்கேடி * - புருஷனோடு வாழாதிருப்பவள்.
வாழ்க்கை - சீவிப்பு, செல்வம், ஊர், மனைவி.
வாழ்க்கைத்துணை - மனைவி.
வாழ்த்தல் - துதித்தல்.
வாழ்த்து - ஆசீர்வாதம்.
வாழ்த்துதல்* - ஆசீர்வாதம்பண்ணல்.
வாழ்நாள் - சீவியகாலம்
வாழ்விழத்தல் - தாரமிழ்த்தல், புருஷனை யிழத்தல்.
வாழ்வு - வாழ்தல், [முறைமை.]
வாளமலை - வாட்கூத்து 'வாளமாலையாடிக்காட்டு' (சீவ-சிந். 783.)
வாளம் - சக்கரவாளப்புள், சக்கரவாளகிரி, வளைவு, வாள்.
வாளரி - சிங்கம்.
வாளா, வாளாங்கு - சும்மா.
வாளாண்மை - படைவலி.
வாளி - அம்பு, மாதர் காதணியி லொன்று, மண்டலமாயோடல்.
வாளுழவர் - படைவீரர்.
வாளை* - ஓர் மீன்.
வாள் - அரிவாள், கத்தி, [ஒளி.]
வாள்கைக்கொண்டாள் - துர்க்கை.
வாற்கோதுமை - ஒரு தானியம்.
வாற்சல்லியம் - மனவுருக்கம்.
வானகம் - சுவர்க்கம், வெளி.
வானசாத்திரம் - வானசோதிகளின் போக்குவரவறியும் நூல்.
வானதி - ஆகாய கங்கை.
வானநாடு - தேவலோகம், பொன்னாங்காணி. [மரம்.
வானபத்தியம் - பூவாது காய்க்கு
வானப்பிரஸ்தன் - வனத்திற்றவம்புரியும் மூன்றாமாச்சிரமி.
வானம் - ஆகாயம், [மழை, உலர்ந்தமரம், நீர்த்திரை, வாசனை.]
வானம்பாடி - ஓர் புள்.
வானரம்* - குரங்கு.
வானவரம்பன் - சேரன்.
வானவல்லி - மின்னற்கொடி.
வானவன்-சேரன், சூரியன், தேவன்.
வானவில் - இந்திரவில்.

வானுடி - தேவமாது. (இரா.)
வானி - கூடாரம், படை, மேற்கட்டி, விருதுக்கொடி, காற்ருடி.
வானுலகம் - தேவலோகம்.
வானேறு - இடி.
வானேர் - தேவர்கள்.
வானேர்கோமான் - இந்திரன்.
வான் - ஆகாயம், மழை, முகில், பெருமை, எதிர்கால வினையெச்ச விடைச்சொல்,(உ-ம்.) 'கொல்வானெழுந்தான்'.
வான்கண் - ஆதித்தன். (சிலப். 10 : 1).
வான்கோழி* - கோழியிலோர் வகை.
வான்மிகம் - இந்திரவில், புற்று.
வான்மீகம்-வான்மீகி இயற்றிய இராமாயணம், [குங்குமப்பூ.]
வான்மீகி - ஓர் முனி.
வான்மீன் - நட்சத்திரம்.
வான்மை-சுத்தமுடைமை. (வெண்பா), வெண்மை. (சேது.)

## வி

விகங்கம் - பறவை, அன்னம், அம்பு, சூரியன், முகில்.
விகசம் - மலர்ந்தது.
விகசிதம் - மலர்தல், மந்தகாசம்.
விகசித்தல் - மலர்தல்.
விகடகவி - பகிடிக்காரன்.
விகடசக்கரன்-காஞ்சிவிநாயகன்.
விகடம் - வேறுபாடு, அழகானது, பெரியது.
விகண்டிதம் - வேறுபாடு.
விகண்டித்தல் - ஆட்சேபித்தல்.
விகண்டை - துரோணம்.
விகம்பிதம் - நடுக்கம்.
விகலம் - குறைபாடு.
விகலை - காலநுட்பம், நாழிகை.
விகற்பம் - வேற்றுமை, சந்தேகம், பிழை.
விகற்பித்தல் - வேறுபடுத்தல்.
விகாசம் - விரித்தல், பிரகாசம்.
விகாதம் - விரோதம், தடை.
விகாரம் - காமக்கவலை, வேற்றுமைப்படுதல், வருத்தம்.
விகாரி - மோகியென்னேவல், இருபத்திரண்டாவதாண்டு.
விகிதம் - விழுக்காடு, விதி.
விகிர்தம் - வேறுபாடு,வெறுப்பு, அச்சம், குறைவு, முறை.
விகிர்தி - ஓராண்டு, விகுதி, வேறுபடுதல், அச்சம்.
விகுணி - கள், (சூடா.)
விகுதி -பகுபதவுறுப்பினென்று, விகாரம், பிரகிருதிமாயை.
விக்கல்* - விக்குதல்.
விக்கியாதம் - பிரசித்தம்,கீர்த்தி.
விக்கியாபனம், விக்ஞாபனம் - வெளிப்படுத்தல், விண்ணப்பம்.
விக்கியானம் - கல்வி, அறிவு.
விக்கியானி - கல்விமான்.
விக்கிரகம் - உருவம், [சாயல், உடம்பு,விரிவு, பங்கு, போர்.]
விக்கிரகாராதனை - சுரூபவணக்கம்.
விக்கிரம - ஓராண்டு.
விக்கிரமம்-பராக்கிரமம், முறைபிழைத்தல்.

விக்கிரமாதித்தன்-ஒரு மன்னன்.
விக்கிரயம்* - விற்றல்.
விக்கிராந்தம் - மகாவீரம்.
விக்கிள்* - விக்கல்.
விக்கினம் - இடையூறு, தடை.
விக்கினேசுரன் - விநாயகன், [வினைதீர்ப்போன்.]
விக்ஞாபனம் - விக்கியாபனம்.
விக்ஞானம் - விக்கியானம்.
விங்களம் - கபடம், பேதம்.
விங்களித்தல் - சூதுசெய்யல், வித்தியாசப்படுத்தல்.
விசதம் - அழகு, சுத்தம், வெளிப்படை, வெண்மை.
விசமம் - சமமின்மை.
விசய - இருபத்தேழாவதாண்டு.
விசயம் -வெற்றி, ஆராய்வு, சருக்கரை, தேவவிமானம்.
விசயன் - அருச்சுனன், திருமால் வாயில்காப்போன்.
விசயை - துர்க்கை.
விசர்க்கம் - துறத்தல், பிரிதல், போதல், மலங்கழித்தல்.
விசர்ச்சனம் - விடுதல், அனுப்புதல்.
விசலை - சட்டி.
விசனம்-துன்பம்,[மனிதரில்லாத இடம், பாவம், விசிறி.]
விசாகன் - முருகன்.
விசாதி* - நோய், [புறசாதி.]
விசாரணை - விசாரித்தல், [ஆராய்ச்சி.]
விசாரதர் - புலவர்.
விசாரம் - கவலை, [ஆராய்வு.]
விசாரித்தல்* - ஆராய்தல்.
விசாலம் - அகலம், விரிவு, [ஓர் பட்சி, ஓர் மான்.]
விசாலாட்சி - பார்வதி.
விசாலை - அவந்திநகர்.
விசி - பறையிறுக்கும்வார், கட்டு, கட்டில்.
விசிகம் - அம்பு, இருப்புலக்கை.
விசிகை - கச்சு, கருத்து, தெரு.
விசிஷ்டம் - மேன்மை.
விசிட்டாத்துவிதம் - எம்பெருமானார் செய்த ஒரு பிரபந்தம்.
விசித்தல் - வலித்துக்கட்டல்.
விசித்திரம்*-அதிசயம், பேரழகு.
விசித்திரவீரியன் - சந்திரகுலத்தரசரிலொருவன்.
விசித்திராங்கம் - அழகு, [மயில்.]
விசிப்பலகை* - வாங்குப்பலகை.
விசிராமம் - மனவமைதி.
விசிறி* - சிற்றாலவட்டம்.
விசிறுதல்* - வீசுதல்.
விசுத்தி - அடிநாத்தானம் அஃது ஆறுதாரத்தொன்று.
விசும்பு - ஆகாயம், தேவலோகம், திசை, மேகம், வீம்பு.
விசும்புதல் - அசட்டையாய் விலக்கல்.
விசுவகருமன், விசுவகன்மா - தேவத்தச்சன்.
விசுவநாள் - உத்திராடநாள்.
விசுவம் - உலகம், எல்லாம்.
விசுவம்பரன் - திருமால், சிவன்.
விசுவரூபம் - பிரபஞ்சரூபம்.
விசுவரூபன் - மகாவிஷ்ணு.
விசுவாசகாதகன் - விசுவாசத்தைக் குலைப்பவன்.
விசுவாசம்*-நம்பிக்கை, உண்மை.

விசுவாமித்திரன் - அரிச்சந்திர மன்னவனைப் பொய்புகலத் தூண்டி முடிவில் ஏமாந்த ஓரி ருடி.
விசுவாவசன் - ஓர் கந்தருவன்.
விசுவாவசு - ஓராண்டு.
விசுளி - கள்.
விசேடணம் - குணத்தை விளக் குவது, அடைமொழி, பண்பு.
விசேஷம், விசேடம்*-மேன்மை.
விசை* - சீக்கிரம், முறை.
விசைக்கம்பு*, விசைத்தடி-நெய் வார்கருவியிலொன்று.
விசைத்தல் - வேகமுறல்.
விசையன் - அருச்சுனன்.
விச்சாதரர், வித்தியாதரர் - தேவ ரிலோர் வகுப்பார்.
விச்சித்திரம் - விற்பன்னம்.
விச்சுளி - சுறுக்கன், விவேகி, ஓர் குருவி.
விச்சை - வித்தை, தெரு.
விஷமம்* - இடக்கு.
விஷம், விடம் - நஞ்சு.
விஸ்தாரம்* - அகலம்.
விஞ்சை - கல்வி.
விஞ்சையர் - புலவர், வித்தியா தரர்.
விஞ்ஞாதம் - மேலாய அறிவு.
விஞ்ஞாபனம் - விக்கியாபனம்.
விஞ்ஞானமயகோசம் - ஞானேந் திரியமும் புத்தியும் கூடியது.
விஞ்ஞானம் - அறிவு, கல்வி.
விஷகடி - விஷந்தீண்டல்.
விடகாரி - விடவைத்தியன். கா ண்டாமிருகக் கொம்பு.
விடக்கு - ஊன்.
விடங்கம் - அழகு, ஆண்மை, கொடுங்கை, நீண்ட உத்திரம், புருவின் மாடம், வீதியிற்கட் டிய கொடி.
விடங்கர் - சிறுவழி, திருவாரூர்த் தியாகராசர்.
விடதரம் - பாம்பு, மேகம்.
விடதரன் - சிவன்.
விடதாரி - மருத்துவன்.
விடத்தேர் - ஓர் மரம்.
விடநீர், விஷநீர்* - சரீரத்தூறு மோர் கெட்டநீர்.
விடந்தை - ஒரூர்.
விடபம் - எருது, சிறுதூறு, மரக் கொம்பு, தளிர், இடபராசி.
விடப்பு, விடம்பு - கமர்.
விடம் - நஞ்சு, தேள், மலை.
விடயம், விஷயம் - காணப்பட் டது, அறியப்படத்தக்கது.
விடருகம் - பூனை.
விடர் - மலைப்பிளப்பு, கமர், காடு, தூர்த்தர் (காமுகர்.)
விடலை - முப்பதுவயதிற் குட்பட் டவன், ஆண்மகன், திண்ணி யன், பாலைநிலத்தலைவன்.
விடல் - விடுதல், குற்றம், சாதல்.
விடவு - கமர்.
விடன் - தூர்த்தன்.
விடாணம் - விலங்கின் கொம்பு.
விடாப்பிடி* - பிடித்தபிடி.
விடாமழை* - ஓயாமழை.
விடாய் - தாகம், [சோர்வு, ஆசை.]
விடாய்த்தல் - தாகமடைதல்.
விடாரகம், விடாலகம் - பூனை.

விடி-விடியென்னேவல், [திரைச்சீலை.]
விடிதல்* - சூரியன் உதயமாதல்.
விடியல் - வைகறை.
விடுகாலி - கட்டிவிராத மாடு
விடுதலை - தன்னிட்டம்.
விடுதல்-ஒழிதல், நீக்கல், அனுப்புதல், எறிதல்.
விடுதி - தங்குமிடம், உத்தரவு.
விடுத்தல் - அனுப்பல், தள்ளுதல், தங்கல், நடத்தல்.
விடுவித்தல்* - விடுதலைசெய்தல்.
விடை - எதிர்மொழி, உத்தரம், இடபம், விடுதல், ரிஷபராசி.
விடைத்தல் - சினக்குறிப்பு, பெருங்கோபம்.
விடையோன் - சிவன்.
விட்கம்பம் - தடை, தூண்.
விட்சேபம் - கலக்கம், விகற்பம்.
விட்டம் - உத்திரம்.
விட்டவர் - துறவோர், பகைவர்.
விட்டில் - ஓர் பறவை, வெட்டுக்கிளி, ஓர் வண்டு, பிராய்மரம்.
விட்டுணு, விஷ்ணு - திருமால்.
விட்டுணுகரந்தை - ஓர் பூடு.
விட்டுணுப்ரியம் - துளசி.
விட்டை - இலத்தி, திரளை.
விணிகை - மூலைக்கச்சு.
விண் - ஆகாயம், தேவலோகம், இளமை, மேகம்.
விண்டலம் - ஆகாயம்.
விண்டல் - மூங்கில், அலர்தல்.
விண்டு - விஷ்ணு, விஷ்ணுகரந்தைப்பூடு, மலை, மூங்கில், காற்று, மேகம். [குதல்.
விண்ணப்பம்* - பணிவுடன்கேட்
விண்ணணம்* - நாகரிகம்.
விண்ணுலகம் - தேவலோகம்.
விண்ணேறு - இடி.
விண்மணி - சூரியன்
விண்மீன் - நட்சத்திரம்.
விதண்டாவாதம் - வாதவகையி ென்று.
விதண்டை - தன்மதம் நிறுத்திப் பேசல், அகப்பை, திருத்தம்.
விதத்தல் - மிகுத்துரைத்தல்.
விதந்து - விதவை.
விதப்பு - மதிலுறுப்பு, மிகுதி, சீக்கிரம், நடுக்கம்.
விதம் - மாதிரி, இனம், சாயல்.
விதரணம், விதரணை*-விவேகம்.
விதர்க்கம் - நியாயம், ஐயம்,எண்ணம்.
விதர்ப்பம் - ஓர் தேயம்.
விதர்ப்பு - அச்சம், நெருக்கம், போர், வெற்றி.
விதலம் - கீழேழுலகிலொன்று.
விதலை - நடுக்கம். (சப்த.)
விதவை - கைம்பெண், [பாற்சோறு. (மலை.), குழம்பு. (சிந். முத்தி.)]
விதனம் - மனத்துயர்.
விதாதா - பிரமன், அருகன்.
விதாவிதம் - பலவிதம்.
விதானம் - மேற்கட்டி, விடுதி, உபாயம், ஒழுங்கு, மாதிரி, கூட்டம், செயல், விரிவு.
விதி - ஊழ், கட்டளை, [நியமிப்பு, பிரமன், அறிவு, உண்மை, செய்தொழில், செல்வம், குணம், சூத்திரம்.]
விதிக்கு - கோணத்திசை.

விதித்தல் - நியமித்தல், [உண்டாக்கல், செய்தல், சொல்லல்.]
விதியுளி - ஓமம், தூதர், விவாகம், முறை, யாகம்.
விதியை - இரண்டாந்திதி.
விதிர்த்தல் - அஞ்சுதல், நடுங்கல்.
விதிர்ப்பு - நடுக்கம், அச்சம்.
விது - கருப்பூரம், சந்திரன், வாயு, குபேரன், திருமால்.
விதுடி - கற்றவள்.
விதும்பல் - ஆசைப்படல்.
விதுரன் - அறிஞன், திண்ணியன், கிருஷ்ணமூர்த்திக்கு விருந்தளித்த ஓரரசன், வாழ்க்கைத்துணையிழந்தோன்.
விதூடணம் - பெருந்தூஷணம்.
விதூரசம் - வைடூரியம். (சப்த.)
விதேகம் - தேகசம்பந்தமின்மை, மிதிலைநகர்.
விதேகை - மிதிலைநகரம்.
விதேயன் - ஆஞ்ஞைப்படி நடப்பவன். (சப்த.)
விதை - வித்து, விதையென்னேவல், [அறிவு, பெருமை.]
விதைத்தல்* - வித்திடுதல்.
வித்தகம் - ஞானம், அதிசயம்.
வித்தகன் - அறிஞன், சதுரப்பாடுள்ளோன், வயிரவன்.
வித்தம் - ஞானம், பொன்.
வித்தரித்தல், விஸ்தரித்தல் - விரித்துச்சொல்லல்.
வித்தாரம் - வித்தாரகவி, விற்பன்னம், அகலம், மிகுதி.
வித்தியாகரன் - அறிஞன்.
வித்தியாசம்* - வேறுபாடு.
வித்தியாதரர் - கந்தருவர்.
வித்தியாப்பியாசம் - கற்றல்.
வித்தியாரண்யசுவாமி - வேதாந்தாசிரியர்களிலொருவர்.
வித்தியார்த்தி - கற்போன்.
வித்து - விதை, விந்து, வமிசவழி, காரணம். (சீவக. சிந். 3114.)
வித்துருமம் - இளந்தளிர், பவளம்.
வித்துவாமிசன்* - புலவன்.
வித்துவேடணம், வித்துவேடம் - விரோதம்.
வித்துவேஷம் - விரோதம்.
வித்தை - கல்வி, தந்திரத்தொழில், [ஞானம்.]
வித்யாபாரங்கதன் - கல்விகரைகண்டவன்.
விநதை - கருடன்தாய், சத்தபுரியிலொன்று.
விநயம் - மரியாதை, [வணக்கம், தண்டித்தல், பயிற்றுதல்.]
விநாசம், விநாசனம் - நாசம், அழிப்பு.
விநாடி, விநாடிகை* - காலநுட்பம்.
விநாயகன் - விக்கினேசுவரன், [அருகன், குரு, கருடன்.]
விநியோகம் - செலவுசெய்தல், பிரிதல், நியமிப்பு, விடுதல்.
விநோதம் - பொழுதுபோக்குவதற்கான விளையாடல், அழகு, [சந்தோஷம், பகை, மகத்துவம், அவா.]
விந்தம் - விந்தியமலை, [ஓரெண், குதிரைப்பற்பாஷாணம், ஒருவகை மாணிக்கம்.]

விந்தர் - இடையர்.
விந்தியம் - விந்தமலை.
விந்தியவாசி - துர்க்கை.
விந்து - தாது, [நீர்த்துளி, நெற்றித் திலகம், புருவமத்தி, புள்ளி, சுத்தமாயை. (சிவஞா.)]
விந்தை - ஆச்சரியம், [துர்க்கை, வீரலட்சுமி.]
விபகாரம் - விவகாரம்.
விபசாரம், வியபிசாரம் - வேசித்தனம்.
விபசாரி, வியபிசாரி* - கற்புநெறி தவறினவள்.
விபஞ்சி, விபஞ்சிகம் - வீணை.
விபணி-விலைச்சரக்கு, கடைவீதி.
விபதம் - கெடுவழி.
விபத்தம் - காஞ்சிரை, பஞ்சம்.
விபத்தன் - வேறுபட்டோன்.
விபத்தி-வேற்றுமை, தரித்திரம், துன்பம், அழிவு, வேதனை.
விபத்து - ஆபத்து, துன்பம், [அபாக்கியம், அழிவு.]
விபரம்* - விவரம்.
விபரீதம்* - மாறுபாடு, பிரதிகூலம்.
விபவ - இரண்டாவதாண்டு.
விபவம் - மகத்துவம், வாழ்வு, வரம், செல்வம், மோட்சம்.
விபன்னன் - மெலிவுற்றவன்.
விபாகம்-பக்குவம், பங்கு, வேறுபாடு, சீரணித்தல், செல்வம்.
விபாகரன், விபாவசன், விபாவசு - ஆதித்தன், தீக்கடவுள்.
விபாவரி - இரவு, வேசி.
விபாவனை - ஆராய்வு; ஓரலங்காரம் அஃது உலகறி காரணமில்லாதிருப்பக்காரியம் பிறத்தலைச் சொல்வது.
விபீடணன் - சீராமனைச் சரண்புக்கு லங்கைக்கு மன்னனான இராவணன் தம்பி.
விபு - கடவுள், கருத்தா, வியாபகன், ஆன்மா, பரிபூரணம், ஆகாயம், நித்தியம், திருமால்.
விபுதர் - அறிஞர், கற்றோர், வானோர்.
விபுலம் - அகலம், விரிவு, பூமி, பெருமை, மேருகிரி.
விபுலை - பூமி.
விபூஷணம், விபூடணம் - அலங்காரம், ஆபரணம்.
விபூதி - திருநீறு, [செல்வம், பெருமை, உத்தமகுணம், குற்றம், கொடுமை.]
விப்பிரமம்-அழகு, பிரமை, குற்றம், மோகப்பிணக்கு, மோகலீலை, மயக்கம்.
விப்பிரயோகம் - பிரிதல், பஞ்சபாணவத்தையினொன்று அது வெய்துயிர்த்திரங்கல்.
விப்பிரலம்பம் - தலைவன் தலைவி பிரிதல்.
விப்பிரன் - பிராமணன். [யூகம்.
விமரிசனம், விமரிசை-ஆராய்வு,
விமர்த்தனம் - அரைத்தல், கிரகணம்.
விமலம் - அழுக்கின்மை, வெண்மை, ஒரு சிவாகமம்.
விமலன் - கடவுள், அருகன்.
விமலை - இலட்சுமி, சரஸ்வதி, துர்க்கை, பார்வதி, பரிசுத்தமுடையவள்.

விமானம் - ஒருவகை வாகனம், [பரிமாணம், உரோகணிநாள், தேர், இராசமாளிகை, ஏழ்நிலை மேடை, தேவலோகம்.]
விமுகம் - வெறுப்பு. (சப்த.)
விமோசனம் - விட்டுநீங்கல், ஒழிதல், நிவிர்த்தி.
விம்பம் - உருவம், சாயை, நிழல், வட்டம், கொவ்வை.
விம்பித்தல் - சாயைதோன்றல்.
விம்மல் - பருத்தல், அழுதல், இறுகிப்பொலிதல், ஒலித்தல்.
விம்மிதம் - அச்சம், அதிசயம். இது விஸ்மித மென்பதன் விகாரம்.
விய - ஒரு வருஷம்.
வியங்கியம் - குறிப்புப்பொருள்.
வியங்கோள் - ஏவல்கொள்ளல்.
வியசனம்-உபத்திரவம், [கவலை, விசிறி.]
வியஞ்சகம் - வெளிப்படுத்துவது.
வியஞ்சனம் - அடையாளம், ஒற்றெழுத்து, கறிவர்க்கம்.
வியட்டி - வேறுபிரித்துக் கூறுவது.
வியத்தம் - அறிவு, தரிசிக்கத்தக்கது, தெளிவு.
வியத்தல் - அதிசயப்படல்.
வியத்தியாசம் - வேறுபாடு.
வியந்தரம் - பிசாசம்.
வியபிசாரம் - நெறிகடந்த சேர்க்கை.
வியபிசாரி - வேசி.
வியப்பு - அதிசயம்.
வியமம் - பெருமை. (கலி.)
வியம் - அகலம், உடல், ஏவல், பறவை, பெருமை, வழி.
வியர்த்தம் - பயனின்மை.
வியர்த்தல் - வேர்த்தல்.
வியர்ப்பு - சினக்குறிப்பு.
வியர்வு, வியர்வை - வேர்வை.
வியல் - அகலம், பெருமை, விரிவு, காடு.
வியவகாரம்-முறைமை, வழக்கு.
வியன் - அதிகம், ஒற்றை, பெருமை, வேறுபாடு. (சிலப். **23 : 126**).
வியாகரணம் - இலக்கணநூல்.
வியாகுலம்* - துக்கம்.
வியாக்கியானம் - உரை.
வியாக்கியானி, வியாக்கியாதா - உரைகாரன்.
வியாக்கிரபாதன்-கௌதமரிஷி.
வியாக்கிரபுரி - சிதம்பரம்.
வியாக்கிரம் - புலி, மேன்மை.
வியாசம் - விரிவு, பகுத்தறிவு, கபடம், பொய், வழக்கு, விஸ்தாரம். (சப்த.)
வியாசன் - பராசரருக்கும் மீன்வாணிச்சிக்கும் பிறந்தவர் (அவரே வேதங்களை வகுத்தவர்.)
வியாச்சியம்* - வழக்கு.
வியாதன் - கீழ்மகன், வியாசன், வேடன்.
வியாதி* - நோய்.
வியாபகம் - எங்குமிருப்பது, சாதாரணம், சுயதன்மை.
வியாபாரம்-செட்டு, [தொழில்.]
வியாபி - எங்கும் நிறைந்தது.
வியாபித்தல் - எங்குமிருத்தல்.
வியாமம் - இக்கட்டு, இளைப்பு, வருத்தம், வழி.

வியாழம், வியாழன் - ஓர் நாள், [ஓர் கிரகம்.]
வியாளம் - துட்டயானை, பாம்பு, புலி.
வியானன் - சரீரம் முழுமையும் வியாபித்திருக்கு மொருவாயு.
வியூகம் - படைவகுப்பு, உடம்பு, விலங்கின் கூட்டம்.
வியோகம் - பிரிவு, சாவு.
வியோமசாரிபுரம் - அரிச்சந்திரன் பட்டினம்.
வியோமம் - ஆகாயம், நீர்.
வியோமயானம் - தேவவிமானம். (சப்த.)
விரகதாபம், விரகவேதனை, விரகநோய் - காமவிகாரம்.
விரகம் - காமநோய், பிரிவு.
விரகு - சமர்த்து, புத்தி, உபாயம்.
விரக்தன் - பற்றற்றவன்.
விரசுதல் - நெருங்குதல்.
விரசை, விரஜை - பரமபதத் தருகேயுள்ள யாறு.
விரட்டுதல்* - ஓடச்செய்தல்.
விரணம் - புண், விழல். (விநா.)
விரதம் - தவம், ஒய்வு, நியமம்.
விரதர் - தவத்தோர்.
விரதி - துறவி.
விரயம் - மிகுசெலவு, [பேதி.]
விரலேறு - ஒருவகைத் தோற்கருவி. (சிலப். 10: 86).
விரல்* - அங்குலி.
விரவல், விரவுதல் - கலத்தல்.
விராகம் - வெறுப்பு.
விராகன் - ஓர் பொற்காசு, [இச்சையற்றவன், அருகன்.]
விராடன் - விராட தேயத்து மன்னன்.
விராட்டு-பரப்பிரமம், புள்ளரசு, ஆண்பெண் வடிவாய்த் தோற்றியது.
விராதன் - ஓர் தைத்தியன்.
விராலம் - பூனை.
விராலி - ஓர் செடி.
விராவம் - ஒலி.
விராளி - விரகம்.
விரிசிகை - முப்பானிரண்டு மணியுள்ள மாதரிடையணி.
விரிச்சி - நன்னிமித்தம்.
விரிச்சிகம் - விருச்சிகம்.
விரிச்சிகன் - சூரியன்.
விரிஞ்சன் - பிரமன்.
விரித்தல்* - விரிவாக்குதல்.
விரியல் - பரவல், [மலர்தல், ஒளி, பூ. (சிலப். 14 : 88.)]
விரியன் - ஓர் பாம்பு.
விரிவு - அகலம்.
விரீகி - நெல்.
விருகம் - மிருகம், செந்நாய்.
விருகு - ஓர் மரம், விருகந்தண்டு.
விருக்கநாதன் - அரசமரம்.
விருக்கம் - விருட்சம்.
விருசு - விருசமரம்.
விருச்சிகம் - ஓரிராசி, தேள்.
விருஷணம் - பீசம்.
விருடபாரூடன் - சிவன்.
விருடம் - இடபம், தருமம், மயிற்றேகை, மேன்மை, எலி.
விருட்சசரம் - குரங்கு.
விருட்சம் - மரம்.
விருஷ்டி - மழை.
விருதா - பயனின்மை, வீண்.

விருது - அடையாளம், கொடி, வெற்றி.
விருத்தகங்கை - கோதாவரி.
விருத்தகிரி - விருத்தாசலம்.
விருத்தபலம் - மிளகு.
விருத்தம் - சூது தாயத்தொன்று, [கிழத்தன்மை, மூப்பு, வட்டம், பாவினத்தொன்று, நூதனம், வேறுபாடு, பழமை.]
விருத்தர் - கிழவர், மேலோர்.
விருத்தாசலம் - திருமுதுகுன்றம்.
விருத்தாந்தம் - வர்த்தமானம், செய்தி, காரியம், முழுமை.
விருத்தாப்பியம் - கிழத்தன்மை.
விருத்தி - வளர்ச்சி, இலாபம், [பலன், ஒருரை, கூட்டம், செல்வம், வட்டம்.]
விருத்திரன் - இந்திரன், ஓரசுரன், சத்துரு.
விருத்தை - கிழவி.
விருந்தம் - விலங்கின்கூட்டம்.
விருந்தினர் - அதிதியர், [புதியோர்].
விருந்து - புதிதாய் வந்தோர்க்கு உணவுகொடுத்தல், [புதுமை.]
விருந்தனை - மனைவி.
விருந்தை - சலந்தரன்மனைவி, துளசி.
விருப்பம், விருப்பு - ஆசை.
விரும்பல் - ஆசைப்படல்.
விருளை - கடிவாளப்பூண்.
விரூபாட்சன் - சிவன்.
விரேசனம் - பேதிமருந்து, மலங்கழித்தல்.
விரை - வித்து, [வாசனை, பூந்தேன், கலவைச்சாந்து.]
விரைத்தல்* - விதைத்தல்.
விரைவு - வேகம்.
விரோசனன் - பலிச்சக்கரவர்த்திதந்தை, சூரியன், தீ.
விரோதம்* - பகை, வேற்றுமை.
விரோதி - சத்துரு, [ஓராண்டு.]
விரோதிகிருது - ஒரு வருஷம்.
விரோதித்தல்* - பகைத்தல்.
விலகல்* - நீங்கல்.
விலக்குதல்* - தவிர்த்தல், மறித்தல்.
விலங்கல் - மலை, கலங்கனீர், விலகுதல்.
விலங்கு - குறுக்கிடுந்தளை, [மிருகம், குறுக்கு.]
விலட்சணம் - மேன்மை.
விலம் - அகில், பள்ளம்..
விலம்பனம், விலம்பிதம் - தாமதம்.
விலா* - விலாப்பக்கம்.
விலாங்கு* - ஓர் மீன்.
விலாசம் - பத்திரிகையின் புறவெழுத்து, [விளையாட்டு, ஆடவர் மகளிர் விளையாட்டு, வேடிக்கை, பிரகாசம்.]
விலாசினி - வேசி, பெண்.
விலாபம் - கனவுகண்டிரங்கல்.
விலாமிச்சை - ஓர் வாசனைப்புல்.
விலாலம், விலாளம் - ஆண்பூனை.
விலாழி - குதிரைவாய்நுரை, யானைக்கையுமிழ்நீர்.
விலேபனம் - பூசுதல்.
விலை - கிரயம், [விற்றல்.]
விலைஞர் - செட்டிகள்.
விலைபோதல் - விலைப்படல்.
விலைமகள் - வேசி.

விலோசனம் - கண், பார்வை.
விலோதம் - பெண்மயிர், துகிற் கொடி.
விலோதனம் - பெருங்கொடி.
விலோமம் - முறைபிழைத்தல்.
வில் - தனு, [ஒளி, மூலநாள்.]
வில்லங்கம் - தடை, [வழக்கு.]
வில்லம் - வில்வம். (திருவி.) பாத்தி. (சப்த.) குகை.
வில்லாண்மை - வில்வல்லமை.
வில்லி - மன்மதன், விசயன்.
வில்லிபுத்தூரன் - பாரதம் பாடிய ஒரு புலவன்.
வில்லியர் - வேடர்.
வில்லுவம் - வில்வமரம்.
வில்லேறுழவர் - படைவீரர்.
வில்லை - தகட்டுவட்டம்.
வில்வம்* - ஓர் மரம்.
விவகாரம், வியவகாரம்-வழக்கு, [நீதியதிபதித்துவம்,பிணக்கு.]
விவசாயம் - வேளாண்மை, முயற்சி.
விவஸ்தை - பகுத்தறிவு. [ற்சி.
விவரணம் - விபரம்.
விவரம் - வகை, விருத்தாந்தம், [உட்டுளை, குகை, பிரிவு.]
விவரித்தல்* - பகுத்துக்கூறுதல்.
விவர்த்தனம் - சுற்றிவரல்.
விவாகம் - கலியாணம்.
விவாதம் - தருக்கம்.
விவிக்தம் - இரகசியம்.
விவேகம்* - பகுத்தறிவு.
விவேகி* - அறிவாளி.
விழல் - ஓர் புல், [வீண், விழுதல்.]
விழவு - திருவிழா, மிதுனவிராசி.
விழா - திருவிழா (உற்சவம்).
விழி* -கண், விழியென்னேவல்.
விழித்தல்* - கண்திறத்தல்.
விழிப்பு - துயிலொழிவு, சாக்கிரதை.
விழுகுதல் - வீழ்தல்.
விழுக்காடு - பங்கு, விழுதல்.
விழுக்கு - நிணம்.
விழுங்கல் - நுங்குதல், [பட்சித்தல்.]
விழுதி* - ஒரு செடி.
விழுது - ஆலமரமுதலியவற்றின் விழுது, [ஆழம் பார்ப்பதற்கானகயிறு, நெய்வார்கருவியிஞென்று, வெண்ணெய்.]
விழுப்பம் - ஆசை, சிறப்பு, நன்மை, மேன்மை.
விழுப்பொருள் - மேன்மையான பொருள்.
விழுமம்-சிறப்பு,சீர்மை,நன்மை, இடும்பை.
விழைச்சு - இளமை, புணர்ச்சி.
விழைதல் - ஆசைப்பெருக்கம்.
விழைவு - ஆசைப்பெருக்கம், கலத்தல்.
விளக்கம்-தெளிவு, [சந்திரனுள்.]
விளக்கல் - அழுக்குநீக்கல், [பிரகாசிப்பித்தல்.]
விளக்கு - தீபம், [சோதிநாள்.]
விளக்குமாறு - துடைப்பம்.
விளங்கல் - ஒளிசெய்தல், தெளிதல்.
விளம்பம் - தாமதம்.
விளம்பரம்* - அறிக்கைப்பத்திரம்.
விளம்பல் - சொல்லல். [ரம்.
விளம்பி - ஓர் வருஷம், கள்.

விளரி - இளமை, நெஞ்சாற் பிறக்குமிசை, யாழிலோர் நரம்பு, வேட்கை, நெய்தனிலத்தியாழ்.
விளர் - இளமை, கொழுப்பு, வெண்மை.
விளர்ப்பு - வெளுப்பு.
விளர்விளர்த்தல் - வெளுத்தல்.
விளவு - விளவென்னேவல், [விளாமரம், கமர்.]
விளா - விளாமரம்.
விளாகம் - போர்க்களம்.
விளாசம் - விலாசம்.
விளாம்பூச்சு - ஓர் சித்திரப்பூச்சு.
விளாவல்* - கலத்தல்.
விளி - அழைப்பு.
விளிதல் - கெடுதல், சாதல்.
விளித்தல் - அழைத்தல்.
விளிம்பு - கண்ணிமை, கரை.
விளிவு - கோபம், சாவு.
விளைச்சல்* - விளைவு.
விளைஞர் - மருதநிலமாக்கள்.
விளையாட்டு* - விளையாடுதல்.
விளையாட்டுப்பிள்ளை-சிறுபிள்ளை.
விளையுள் - வயல்.
விளைவு-விளைதல்,[வயல்,மேகம்.]
விள்ளல்-சொல்லல்,வேறுபடல், தழுவல், மலர்தல்.
விறகு* - காட்டம்.
விறத்தல் - நெருங்கல்.
விறப்பு - அச்சம், நெருக்கம், பெருக்கம், போர், வெற்றி.
விறலி - பதினறுவயதுப்பெண், பாடல்மகளே.
விறலோன் - திண்ணியன், அருகன்.
விறல் - வீரம், வெற்றி, பெருமை, வலி.
விறுட்டி - எருவராட்டி.
விறுண்டுதல் - பிறுண்டுதல்.
விறுவிறுப்பு - விரைவுக்குறிப்பு, மிகுகோபம்.
விறைத்தல்* - மரத்துநிற்றல்.
விறைப்பு - திமிர், முறைப்பு.
விற்கோடி - தனுக்கோடி.
விற்பத்தி - கல்விவல்லபம்.
விற்பனை* - விற்றல்.
விற்பன்னம் - கல்வி, விந்தை.
விற்பன்னர் - கற்றோர், புலவர்.
வினவுதல் - கேட்டாராய்தல்.
வினுசம் - காணுதிருத்தல்.
வினுவுதல் - கேள்விகேட்டல்.
வினிதை - அயோத்தி.
வினை - ஊழ், வஞ்சகம், [தொழில், கருத்து, போர்.]
வினைஞர் - கம்மாளர், தொழிலாளர்.
வினைமுதல் - கருத்தா.
வினைவசம்* - கர்மவசம்.
வினோதம் -அழகு, [விளையாட்டு, பொழுதுபோக்கல், களிப்பு.]
வின்மை - வில்வன்மை.
வின்னம்*-பங்கப்பட்டது,தடை.
வின்ஞாண் - விற்பூட்டுங்கயிறு.
வின்னூல் - தநுர்வேதம்.

## வீ

வீ - சாவு, நீக்கம், பறவை, கருப்பந்தரித்தல், பூ.
வீக்கம் - ஓர் வியாதி, வீங்குதல், [பெருமை.(சீவ. சிந். 2207).]

வீக்குதல் - கட்டல்.
வீங்கல் - பருத்தல், [மிகுதல், நித்திரைசெய்தல்.]
வீங்கி - மெலிந்தஆள், பேராசையுள்ளோன், [சேங்கொட்டை]
வீசம் - ஒரெண், [நெல்லெடைப்பொன், கொட்டை, சுக்கிலம்.]
வீசல் - எறிதல், [ஈதல்.]
வீசனம் - சிற்றாலவட்டம்.
வீசை* - ஓர் நிறை.
வீச்சு - எறிதல், ஓர் நோய்.
வீடிகை - கட்டு, தாம்பூலம்.
வீடு - மனை, [முத்தி, விடுதல்.]
வீடுவிலக்கம்* - மகளிர்சூதகம்.
வீட்சணம், வீட்சணை - பார்வை, விழுதல்.
வீட்டுதல் - கொல்லல்.
வீட்டுமாசாரி-பீஷ்மாசாரி (சந்தனுவின் குமரன்.)
வீணன் - பயனில்லாதவன்.
வீணைத்தண்டம், வீணைதண்டு - முதுகெலும்பு.
வீணை - ஓசையாழ்.
வீண்* - பயனின்மை.
வீதம் - பங்கு, முறை.
வீதல்-சாதல், கெடுதல், வறுமை.
வீதி - தெரு, [கடைவீதி, ஒழுங்கு, நேரோடல், வழி.]
வீமசேனன் - தமயந்திபிதா, பஞ்சபாண்டவரிலொருவன்.
வீமம் - பயங்கரம், பருமை.
வீம்பு* - வீண்பெருமை.
வீரகண்டாமணி - வீரத்தாற்கட்டுமணி.
வீரகம் - அலரி. (சப்த).
வீரகம்பீரம்* - மிகுவீரம்.
வீரசுவர்க்கம்* - போரிலிறப்பவர் சேரும்பதவி.
வீரசூரன்* - பராக்கிரமசாலி.
வீரசேனன் - நளனின் பிதா.
வீரசைவர் - இலிங்கதாரிகள்.
வீரச்சலங்கை - ஒற்றைக்காலிலணியும் பொற்சலங்கை.
வீரச்செல்வி - துர்க்கை.
வீரட்டானம் - கூத்தின்விகற்பம், ஒரு சிவஸ்தலம்.
வீரணம் - இலாமிச்சம்வேர்.
வீரதத்துவம் - வீரத்தன்மை.
வீரதரு - மருதமரம்.
வீரபத்திரன் - உருத்திரமூர்த்திகளிலொருவன்.
வீரபானக்குழாய் - யுத்தச்சிரமம் நீங்கும்பொருட்டுப்போர்வீரர் குடிக்கும் மதுமுதலியன வைத்திருக்குங் குழல். (சீவ. சிந். நச். உரை.) இதனை மதுத்தண்டு என்பர் தமிழ்நூலார்.
வீரப்பட்டயம் - வெற்றிபெற்ற வீரர் நெற்றியிலணியும் பொற்றகடு.
வீரமார்த்தாண்டன் - நவசத்தி புத்திரரிலொருவன்.
வீரம் - ஒரு மருந்து, வீரியம், [இஞ்சிக்கிழங்கு, வலி, மலை, சிவாகமத்தினொன்று.]
வீரம்பேசுதல்* - வீம்புபேசுதல்.
வீரன் - திண்ணியன், [தீ, வீட்டுமாசாரி, அருகன்.]
வீராதனம் - முழந்தாளினிற்றல்.
வீராதிவீரன்* - சிறந்த வீரன்.
வீராப்பு - வயிற்றுப்பொருமல்.
வீராவேசம்* - வீரவெறி.

வீரி - வீரமுடையவள், [துர்க்கை, வட்டத்திருப்பி.]
வீரிடுதல்* - ஒலிக்குறிப்பு.
வீரியம் - வீரம், தைரியம், [வலி, பறைப்பொது,ஒளி,சுக்கிலம்.]
வீரை - ஒரு மரம், துன்பம், கடல், நெல்லி, முந்திரிகை.
வீவு - சாவு.
வீழி - விழுதிப்பழம். (சிகா.)
வீழ் - வீழென்னேவல், மரவி [ழுது.
வீழ்கதி - நரகம்.
வீழ்க்கை-சோதிநாள், விருப்பம்.
வீழ்ச்சி - விழுதல்.
வீழ்தல் - விழுதல், [ஆசைப்படுதல்.]
வீழ்த்தல் - விழுவித்தல்.
வீழ்பு-சுள்ளி 'சினைத்ததர் வீழ்பு' (மணிமே. 3 : 107).
வீளை - சுத்தம். (வெண்), சீழ்க்கை. (சீவ. சிந். 447.)
வீறுப்பு* - இறுமாப்பு.
வீறு - பெருமை, தனிமை, விளக்கம், புண்ணியம், வேகம், வேறொன்றற்கில்லா அழகு.
வீற்றிருத்தல் - சிறந்த ஆசனத்திருத்தல், மகிழ்ந்திருத்தல்.
வீற்று - வளைவு, வேறுபாடு.

## வெ

வெஃகல் - விரும்பல், ஆசைப்பெருக்கம்.
வெஃகா - கச்சித்திருப்பதிகளிலொன்று.
வெஃகாமை - வெறுப்பு.
வெகு - பல.
வெகுசு - மிகுதி.
வெகுட்சி - கோபம்.
வெகுண்டம் - கரும்பு.
வெகுதானிய - ஒரு வருஷம்.
வெகுபுத்திரி - கீழ்காய்நெல்லி, துளசி.
வெகுமஞ்சரி - துளசி. (சப்த.)
வெகுமதி* - வெகுமானம்.
வெகுமானம்* - சம்மானம்.
வெகுமூலம்-முருங்கை. (சப்த.)
வெகுரசம் - கரும்பு.
வெகுர் - வேர்க்குரு.
வெகுளி - சினம்.
வெக்காளம் - மழையில்லாக்காலம்.
வெக்காளித்தல் - வானந்தெளிதல்.
வெக்கை - காங்கை, நிலக்கொதிப்பு.
வெக்கைநோய்* - அம்மைநோய்.
வெங்கண்-ஒருமீன்,[பொறுமை, கொடுமை.]
வெங்களம்-போர்க்களம், கொல்லுமிடம்.
வெங்காரம் - வெண்காரம்(வெம்மையுடைய ஒருவகை உப்பு).
வெங்கிணுத்தி* - ஓர் பாம்பு.
வெச்செனல் - வெம்மையாதல்.
வெஞ்சமம் - போர், பாலைநிலப் [பண்.
வெஞ்சம் - சினம்.
வெஞ்சனம் - கறிபதார்த்தம், சுண்டற்குழம்பு.
வெஞ்சினம் - கடுங்கோபம்.
வெடி - துப்பாக்கி முதலியவற்றிற் பிறக்குமொலி, [அச்சம், வெளி, இடி, கள், நறும்புகை.]

வெடித்தல் - பிளத்தல்.
வெடிப்பு* - கமர்.
வெடியுப்பு - ஓர் உப்பு.
வெடில்* - வேட்டு.
வெடுக்கன் - கோபி.
வெடுவெடுத்தல் - கடுமையாயிருத்தல்.
வெடுவெடெனல்* - சினக்குறிப்பு.
வெட்கக்கேடு* - மானபங்கம்.
வெட்கம்* - நாணம்.
வெட்சி - பகைவர் நிரையை ஓட்டுவார்க்குரிய மாலை.
வெட்டல்* - தறித்தல்.
வெட்டவெளி* - ஏகவெளி.
வெட்டாந்தரை* - கடுந்தரை.
வெட்டி - வீண், [வழி, இருவேலிச்செடி.]
வெட்டிப்பேசல்* - கண்டித்துப் பேசுதல்.
வெட்டியான் - சவஞ்சுடுவோன், [ஓர் பூச்சி, பறையன்.]
வெட்டிரும்பு* - இரும்பைவெட்டுமோர்கருவி.
வெட்டிவேர்* - விலாமிச்சம்.
வெட்டுக்கிளி* - ஓர் பூச்சி.
வெட்டுத்தட்டு - பறையின் வாய்வார்.
வெட்டெனவு - கடுமை.
வெட்டை - ஒரு நோய், [உட்டணம், வெளி, கடினம்.]
வெட்பாலை* - ஒரு மரம்.
வெண்கடுகு - ஓர் கடுகு.
வெண்கதிர் - சந்திரன்.
வெண்கலம்* - தாமிரமும் வெள்ளீயமுங் கலந்த ஒரு லோகம்.
வெண்காசம் - கண்ணோயுளொன்று.
வெண்காயம்* - உள்ளி.
வெண்குட்டம்* - ஒரு நோய்.
வெண்குன்றி - அதிமதுரம்.
வெண்கூதாளம் - நீர்த்தாளிக்கொடி.
வெண்சாமரம், வெண்சாமரை* - வெள்ளைச் சாமரம்.
வெண்சுடர் - சந்திரன்.
வெண்டயம் - வெண்டையம்.
வெண்டலை - தலையோடு.
வெண்டளை - வெண்பாவுக்குரிய பந்தம்.
வெண்டாது - வெள்ளி.
வெண்டாமரையாள் - கலைமகள்.
வெண்டேர் - கானல்.
வெண்டைக்காய்* - ஓர் காய்.
வெண்டையம் - ஓர் சிறுமணி.
வெண்ணுயுருவி - ஒரு செடி.
வெண்ணாவல் - ஒரு நாவல்.
வெண்ணெய்* - உருக்காத நெய்.
வெண்ணெய்நல்லூர் - ஒரு சிவஸ்தலம்.
வெண்ணொச்சி - வெள்ளைநொச்[சி.
வெண்பலி - சாம்பல்.
வெண்பொன் - வெள்ளி.
வெண்மயிர் - சாமரம்.
வெண்மை - வெள்ளை, [அறிவின்மை, இளமை.]
வெதிரம், வெதிர் - செவிடு, மூங்கில்.
வெதுப்படக்கி - குப்பைமேனி.
வெதும்புதல் - வாடல்.
வெதுவெதுப்பு - இளஞ்சூடு.
வெந் - முதுகு.

வெந்தயம்* - ஓர் சரக்கு.
வெந்தை - பிட்டு. (கந்த.)
வெந்தையம்* - வெந்தயம்.
வெந்நீர்* - சுடுநீர்.
வெப்பம் - வெம்மை, ஆசை.
வெப்பர் - வெம்மை, 'வெப்பராற் றட்பமாற்றி'(சீவ. சிந். 1746.)
வெப்பு - சுரநோய், நெருப்பு. (இரா.), வெம்மை.
வெம்பல்* - வெம்பலானது.
வெம்பளிக்கை, வெம்பிளிக்கை - அகங்காரம்.
வெம்புதல் - முதிராது கனிதல், [சினத்தல், வாடுதல், விரும்புதல் 'வெம்புஞ்சுடரிற்சுடருந் திருமூர்த்தி. (சீவ. சிந். 2.]
வெம்மை - உஷ்ணம், கடுமை, ஆசை.
வெயில், வெய்யில் - சூரியகிரணம், [ஒளி, சூரியன்.]
வெய்து - வெம்மையுடையது, விரைவு. (சீவக. சிந். 117).
வெய்துயிர்த்தல் - நெடுமூச்சுவிடல்.
வெய்யது - வெம்மையானது, பொல்லாதது.
வெய்யவன், வெய்யோன் - சூரியன், கொடியவன், விருப்புற்றோன், மிருகசீரிடம்.
வெரிந் - முதுகு.
வெரு, வெருவு - அச்சம்.
வெருகம் - வாலின்கீழிடம்.
வெருகு - ஆண்பூனை, காட்டுப்பூனை.
வெருட்சி - அச்சம்.
வெருட்டல் - அச்சமுறுத்தல்.
வெருவந்தம் - அச்சம்.
வெருளி-மயக்கமுடையது, செல்வச்செருக்கு "வெருளிமாந்தர் போர்க்கொளீஇக்" (சீவக. சிந் 73.)
வெருளுதல் - அஞ்சுதல், மருளுதல்.
வெருள் - அச்சம், உன்மத்தம்.
வெரூஉ - அச்சம். (பொருந.)
வெலித்தி* - கடித்தமில்லாதது.
வெல்லம்* - கரும்பின்கட்டி.
வெல்லல் - சயித்தல்.
வெவ்வுரை - கடுஞ்சொல்.
வெவ்வேறு* - வேறுவேறு.
வெளி - மறைப்பில்லாவெளி, புறம், வெண்பா. (யாப்).
வெளிக்கட்டு* - வீட்டிற் புறக்கட்டு.
வெளிசம் - தூண்டில்.
வெளிச்சம்* - ஒளி.
வெளிது - வெண்மையுடையது.
வெளித்தோற்றம் - உள்ளொன்றுபுறம்பொன்றாயிருப்பது.
வெளிப்பகட்டு* - வெளிவெருட்டு.
வெளிப்படுத்தல்* - அறிவித்தல்.
வெளிப்படை - பிரசித்தம்.
வெளில் - அணில், வெண்மை, தயிர்கடைமத்து, யானைகட்டுந் தூண்.
வெளிவேடம் - புறக்கோலம்.
வெளிறல் - வெண்மையாதல்.
வெளிறர் - அறிவில்லார்.
வெளிறு - அறிவின்மை, வயிரமில்லாமரம், நறுவிலிமரம், வெண்மை.

வெளிற்றுரை - பொருணயமில்லாத சொல்.
வெளுப்பு* - வெண்மை.
வெள்கல் - வெட்கப்படுதல்.
வெள்வேல் - ஓர் மரம்.
வெள்ளக்காடு*- பெருவெள்ளம்.
வெள்ளடை - வெற்றிலை.
வெள்ளம் - நீர்ப்பெருக்கு, [மிகுதி, கடல், ஓரெண்.]
வெள்ளரவம் - ஆதிசேஷன்.
வெள்ளரி* - ஓர் கொடி.
வெள்ளறிவு - அறிவின்மை.
வெள்ளாடு - ஓர்வகை யாடு.
வெள்ளாட்டி* - ஏவற்பெண்.
வெள்ளாண்மை* - பயிர்த்தொழில்.
வெள்ளாவிவைத்தல்*-நீராவிபடவைத்தல்.
வெள்ளாழன்* - வேளாளன்.
வெள்ளாளன் - வேளாளன்.
வெள்ளானை - ஐராவதம்.
வெள்ளி - வெண்பொன், சுக்கிரன், [வெண்மை. (இரா).]
வெள்ளிடை-வெளியிடம். (சிவ. சிந். 1908).
வெள்ளிநகம், வெள்ளிமலை - கைலாசமலை.
வெள்ளிலோத்திரம் - விளாம்பட்டை.
வெள்ளில்-பாடை (Bier), விளாமரம்.
வெள்ளிவாயில் - ஓர் ஊர்.
வெள்ளீயம்* - ஓரீயம்.
வெள்ளுளுவை* - ஒரு மீன்.
வெள்ளுள்ளி - வெள்ளைவெங்காயம்.
வெள்ளெருக்கு* - ஓரெருக்கு.
வெள்ளெலும்பு* - தசைகழிந்த எலும்பு.
வெள்ளெழுத்து* - பார்வைக்கு வெளிதாய்க்காணுமட்சரம்.
வெள்ளேடு* - எழுதாவேடு.
வெள்ளை-வெண்மை, வெட்டைநோய்,[சுண்ணம்பு,வெண்பா, வெள்ளாடு, ஆழ்ந்த கருத்தில்லாதது, சங்கு, பலபத்திரன்.]
வெள்ளைக்காக்கணம் - ஓர்கொடி.
வெள்ளைக்காரன் * - வெள்ளை மனிதன்.
வெள்ளைக்குன்றிமணி - ஓர் குன்றிமணி.
வெள்ளைக்கொம்பன் - வெள்ளைத் தந்தத்தையுடைய கணபதி.
வெள்ளைக்கோட்டி - புல்லறிவாளர் சபை. (சிலப்.)
வெள்ளைநாவல் - ஒரு நாவல்.
வெள்ளைநிறத்தாள் - சரஸ்வதி.
வெள்ளைப்பாட்டு - வெண்பா.
வெள்ளைப்பாஷாணம் - ஒரு பாஷாணம்.
வெள்ளைப்பூண்டு* - ஒரு பூடு.
வெள்ளைப்போளம்-ஒரு மருந்து.
வெள்ளைமேனியாள் - சரஸ்வதி.
வெள்ளையடித்தல் * - சுவர்முதலியவற்றிற்கு நீறுபூசுதல்.
வெள்ளையன் - வெண்ணிறத்தினன், [ஆழ்ந்த கருத்தில்லாதவன்.]
வெள்ளைவிழி - கருமணியருகு.
வெள்ளைவெளுக்குதல் - ஆடையழுக்ககற்றல்.

வெள்ளவெளேரெனல் - மிகு வெள்ளைக்குறிப்பு.
வெள்ளோலை - எழுதாவோலை.
வெறி-அறிவுமழுக்கம், [கோபம், ஆடு 'இறும்பகலாவெறி' (மணிமே. 19 : 97), கலக்கம், நாற்றம், பிசாசம், அச்சம், வேலனுடல், கள், சீக்கிரம்.]
வெறிக்கப்பார்த்தல்* - பயமுறுத்திப்பார்த்தல்.
வெறிக்குணம் - மயக்கமுடைய குணம், மூர்க்கருணம்.
வெறிநாய்*-பித்துப்பிடித்தநாய்.
வெறியர்* - மயக்கமுடையவர், [பூதகணர்.]
வெறியாட்டாளன் - சன்னதக்காரன் (தேவர்க்காடுவோன்).
வெறியாட்டு - உன்மத்தம், சன்னதம்.
வெறுக்கை - செல்வம், பொன், விழுப்பொருள்.
வெறுத்தல் - வேண்டாமை, [கோபித்தல், மறுத்தல்.]
வெறுநுகம் - சோதிநாள்.
வெறுப்பு*-விருப்பமின்மை.
வெறுமை - இன்மை.
வெறுமபேச்சு - வீண்வார்த்தை.
வெற்பு - மலை.
வெற்றம் - வெற்றி, துர்க்கை.
வெற்றி - வென்றி.
வெற்றிலை - வெள்ளிலை.
வெற்றிலைக்கால் - வெற்றிலைத்தோட்டம்.
வெற்றிலைசுருட்டி - ஓர் புழு.
வெற்றிலைச்சுருள் - வெற்றிலை மடிப்பு.
வெற்றிலைவைத்தல்* - கலியாணத்துக்கு வரவழைத்தற் குறிப்பு.
வெற்றிவேற்கை - ஒரு நூல்.
வெற்றுரை - பயனில்லாச்சொல்.
வென் - வெற்றி 'வென்வேல் வேந்தன்' (மணி. 29 : 5), முதுகு.
வென்றி - வெற்றி (சயம்).
வென்றோர் - வெற்றியுற்றோர், ஐம்புலச் சேட்டையை யொழித்தவர்.
வென்னிடுதல் - முதுகுகாட்டல்.

## வே

வே-ஓரெழுத்து, வேவு (ஒற்று), வேவென்னேவல்.
வேகசரம், வேசரம் - ஒட்டகம்.
வேகடம், வேகடை - மணியழுக்ககற்றல், [யௌவனம், ஒரு மீன்.]
வேகடைத்தாள்-குருநாப்பட்டை
வேகம்-தீவிரம், [கடுமை, சினம், நஞ்சு. (சீவ. சிந்.)]
வேகவதி- காஞ்சியிலுள்ள கம்பாநதி, மதுரையிலுள்ள வைகையாறு.
வேகாளம்* - கோபம், [சீக்கிரம்.]
வேகி - வேகமுடையோன்.
வேகுதல் - எரிதல், [உக்கிரங்கொள்ளல், காய்தல்.]
வேக்காடு - வேகுதல், [சூடு.]
வேக்காளம் - வெக்காளம்.
வேங்கடம்-ஒரு மலை : இதுதமிழ்நிலத்தின் வடவெல்லையாகும்.

வேங்கை - புலி, ஓர் மரம், [பொன்.]
வேசகம் - யானைவாலின்நுதி, [வால்.
வேசடை - துக்கம்.
வேசரி - கோவேறுகழுதை, கழுதை.
வேசறவு - துக்கம். (காஞ்.)
வேசனம் - மருதநிலத்தூர்.
வேசாறுதல் - இளைப்பாறுதல்.
வேசி*, வேசை - விலைமகள்.
வேசிகை - வாயில்
வேடங்காட்டுதல் - கோலங்காட்டுதல்.
வேடச்சி* - வேடப்பெண்.
வேடதாரி - கபடமாய் வேஷந்தரிப்பவன்.
வேடம், வேஷம் - உடை முதலியவற்றால் வேறு வடிவாவது, [ஓர் காதணி.]
வேடன் - வேடுவன்.
வேடிக்கை* - அலங்காரவேஷம்.
வேடிதம்* - மருந்துநாற்றம்.
வேடு-மூடுசீலை, [வடிகட்டு சீலை, பொட்டணி.]
வேடுவன் - வேட்டைக்காரன்.
வேடை - வெப்பம், [அபேட்சை, காமநோய், மரக்கலம்.]
வேட்கை - ஆசை.
வேட்கோவன் - குயவன்.
வேட்டகம் - மாமியார்வீடு, தலைப்பாகை, புத்தகம்.
வேட்டம் - வேட்டை, கொலை, (பிங்.), விருப்பம். (புற.)
வேட்டல் - விவாகஞ்செய்தல், ஆசைப்பெருக்கம், விருப்பம், வேள்விசெய்தல்.
வேட்டி* - சோமன்.
வேட்டு* - வெடி.
வேட்டுவன் - வேடன், வேட்டையாளி, மகநாள், குளவி.
வேட்டை-வேட்டம், இளைப்பு, துன்பம்.
வேட்டோர், வேட்டார் - சிநேகிதர், விவாகமானோர்.
வேட்டோன் - நண்பன், கணவன்.
வேட்பு - விருப்பம். [வன்.
வேணகை - மதில்.
வேணவா ஆசைப்பெருக்கம்.
வேணன் - பார்ப்பானுக்கும் அம்பட்டத்திக்கும் பிறந்த பிள்ளை.
வேணி - சடை, மரவேர், யாறு, ஆகாயம், இடையர்வீதி.
வேணீரம் - பொன்னுங்கொட்டை.
வேணு-மூங்கில், புல்லாங்குழல், வாள், வில், உட்டுளை.
வேணுகானம் - வேய்ங்குழலூதல்.
வேணுசம் - மூங்கிலரிசி. (சப்த.)
வேணும்* - வேண்டும்.
வேண்டல் - இரத்தல், விரும்புதல், ஆசை.
வேண்டார் - பகைவர்.
வேண்டாவெறுப்பு* - வேண்டாமென்ற எண்ணம்.
வேதகம்-தன்மையை வேறுபடுத்துவது, கருப்பூரம், தானியம்.
வேதசம் - பிரம்பு.
வேதசாரம் - வேதத்திலுழ்ந்த பொருள், [நாணற்புல்.]
வேதண்டம் - மலை, யானை, கைலை, பொதியமலை.

வேதநாயகி - திருக்கழிப்பாலையிலிருக்கும் தேவியார் பெயர்.
வேதபாரகர் - வேதத்தைப்படிப்பிப்போர்.
வேதமார்க்கம் - வைதிகம்.
வேதமுதல்வி - சரஸ்வதி, பார்வதி.
வேதம் - முதனூல், [அறிவு.]
வேதவல்லி - காஞ்சிவரதராஜப்பெருமாளின் பிராட்டியார், [தக்கன்மனைவி.]
வேதவியாசன் - வேதத்தை வகுத்துக் காட்டிய ஓரிருடி.
வேதனம்-சம்பளம், கூலி, அறிவு, வேதனை.
வேதனை - வருத்தம், நோய், [அலைத்தல்.]
வேதன், வேதா - கடவுள், பிரமன்.
வேதாக்கினி-ஆகவனீயம், காருகபத்தியம், தக்கணாக்கினியம்.
வேதாங்கம்-வேதப்பகுதி அஃது சாங்தோபிசிதம், சோதிடம், நிகண்டு, நிருத்தம், மந்திரம், வியாகரணம் எனு மாறுமாம்.
வேதாத்தியயனம் - வேதமோதல்.
வேதாத்தியாபகன்- வேதமோதுவிப்போன்.
வேதாந்தசூடாமணி, வேதாந்தசூளாமணி - சிவப்பிரகாசதேசிகர்செய்த ஒரு நூல்.
வேதாந்தம்-வேதத்துட்பொருள்.
வேதாந்தி - வைதிகன்.
வேதாப்பியாசம் - வேதமோதல்.
வேதாரணியம் - திருமறைக்காடு.
வேதாளம்* - ஒரு பிசாசம்.
வேதாளி - மாகாளி.
வேதாளியர் - புகழ்வோர்.
வேதி - ஓமகுண்டம், திண்ணை, கேட்டைநாள், மதில்.
வேதிகை - திண்ணை, கேடகம், மேடை, பலிபீடம்.
வேதித்தல் - வேருக்கல், விகாரப்படுத்தல், பிளத்தல்.
வேதியர் - வேதமுணர்ந்தவர்.
வேதினம் - ஈர்வாள்.
வேது-ஆவிபிடித்தல், [வெம்மை.]
வேதை - பொன்னாக்குதல், துன்பம், துளைத்தல்.
வேத்தவை - ராஜசபை.
வேத்தியல் - அரசர்க்காடுங்கூத்து. (சிலப். 14: 148.)
வேத்திரதரன் - கட்டியக்காரன், வாயில்காவலன், நந்திதேவன்.
வேத்திரத்தாள்-பிரப்பங்கிழங்கு.
வேத்திரம் - பிரம்பு, அம்பு, இலந்தை.
வேந்தன் - அரசன், [வியாழன், சூரியன், சந்திரன், இந்திரன்.]
வேந்து - மன்னன்.
வேமம் - நெய்வார்தறி. (ஞா.)
வேம்பனம் - கள்.
வேம்பன் - பாண்டியன்.
வேம்பு* - வேப்பமரம்.
வேயர் - வேவுகாரர்.
வேயல் - மூங்கில், வேய்தல்.
வேயுள்-மாடம், வீடு, போர்வை.
வேய் - உட்டுளைப்பொருள், மூங்கில், வேயென்னேவல்.

வேய்தல் - மூடுதல், சூடுதல், அலங்கரித்தல், அணிதல்.
வேரகம் - கருப்பூரம்.
வேரம் - சலஞ்சாதித்தல், சேம்பு, கருப்பூரம் (சப்த.)
வேரல் - மூங்கில்.
வேரி - கள், வாசனை, வெட்டி வேர்.
வேர் - மரவேர். [காரணம், திப்பி விமூலம்.]
வேர்க்கடலை* - நிலக்கடலை.
வேர்க்குரு* - உஷ்ணத்தால் தோன்றும் சிறுபரு.
வேர்க்கொம்பு - இஞ்சி, சுக்கு.
வேர்த்தல் - வியர்த்தல், [கோபித்தல்.]
வேர்வை* - வியர்வை.
வேலம்* - வேலமரம்.
வேலம்பாசி - ஓர் பூடு.
வேலனுடல் - தேவர்க்காடுங் கூத்து.
வேலன் - முருகன்.
வேலாயுதன்* - குமரன்.
வேலாவலயம் - கடல், பூமி.
வேலி - நிலத்தளவையிலொன்று (ஐந்துகாணி நிலம்), மதில், [காவல், ஊர்.]
வேலிப்பருத்தி - உத்தாமணி.
வேலை - தொழில், [நிகழ்காலம், கடல், எல்லை, கடற்கரை, புனற்றிரை.]
வேல் - கைவேல். [ஓர் மரம், மூங்கில், வல்லயம். (சிலப்.)]
வேவல் - வெந்தழிதல், எரிதல்.
வேவித்தல்* - வேகச்செய்தல்.
வேவு - ஒற்று, வேவென்னேவல்.
வேழம் - யானை, மூங்கில், கரும்பு, கொறுக்கை, நாணல், விளாம்பழத்துக்கு வருவதொரு நோய்.
வேழம்பர் - கம்பக்கூத்தர்.
வேளா* - ஓர் மீன்.
வேளாண்மை - பயிரிடுதல், [ஈகை, கொடை, உபகாரம்.]
வேளாளர் - சூத்திரர், [ஈகையாளர்.]
வேளான் - குயவன், வேளாளரிலோர் பகுதியான்.
வேளிர் - குறுநிலமன்னர்.
வேளை* - காலம், ஓர் பூடு.
வேள் - மன்மதன், ஆசை, குமரன், ஆண்மகன்.
வேள்வி - யாகம், ஈகை, ஓமகுண்டம், மகநாள், ஆராதனை.
வேள்வியாளர் - ஈகையாளர், வேள்வியயற்றுபவர்.
வேள்வு - வேள்வி.
வேறல் - வெல்லுதல்.
வேறு* - மற்றது.
வேறுபடுத்தல்* - பிரித்தல்.
வேறுபாடு - விகற்பம்.
வேற்றுக்குரல்* - மாறுகுரல்.
வேற்றுபுருஷன் - அன்னிய மனிதன்.
வேற்றுமை - வேறுபாடு.
வேற்றுரு - மாறுரு.
வேனல் - வேனில். (சில.)
வேனன் - பிருதுமன்னன்பிதா.
வேனிலான் - மன்மதன்.
வேனில் - கோடை, கானல், அழகு, பொலிவு.
வேனிற்காலம் - கோடைகாலம்.

## வை

வை-வையென்னேவல்,[கூர்மை, புல், வைக்கோல், பூமி.]

வைகடிகன் - இரத்தினங்கள் சாணை தீர்ப்போன்.

வைகல் - விடியற்காலம்,தங்கல், நாள்.

வைகல்லியம் - கலக்கம்,குறைவு, தகுதியின்மை.

வைகறை - விடியல் முதற்பத்து நாழிகையளவுகாலம்.

வைகாசம்,வைகாசி - ஒரு மாதம், விசாகநாள்.

வைகாநசம், வைகானசம் - வைணவாகமத்தொன்று.

வைகுண்டம் * - திருமானகரம்.

வைகுண்டன் - திருமால்.

வைகுதல் - தங்குதல், ஏசுதல்.

வைகுந்தம்* - வைகுண்டம்.

வைகுந்தன் - வைகுண்டன்.

வைகுல்லியம் - எதிரிடை.

வைகை - மதுரையிலுள்ளயாறு, வைகுதல்.

வைகைத்துறைவன் - பாண்டியன்.

வைக்கல் - வைக்கோல், [வைக்குதல்.]

வைக்கிராந்தம்-ஒரு பாஷாணம்.

வைக்கோல்* - வைக்கல்.

வைக்கோற்புரி* - வைக்கோல் முறுக்கு.

வைசம்பாயுனன் - வியாசனின் நான்கு மாணவருளொருவன்.

வைசயந்தம் - இந்திரன்மாளிகை, இந்திரன்கொடி.

வைசயந்தி, வைசயந்திகை - துகிற்கொடி.

வைசாகம், வைசாகி - வைகாசி மாதம், விசாகநாள்.

வைசியன்-பொருளீட்டல், பயிர் செய்தல், ஆன்காத்தல் எனும் மூன்று தொழிலிலேதேனுமொன்றுவது செய்பவன்.

வைசூரி - அம்மைநோய்.

வைசேடிகம் - கணுதர் செய்த தர்க்கம்.

வைச்சிரவணன், வைச்சிராவணன் - குபேரன்.

வைட்டம்மியம், வைஷம்மியம் - பகை.

வைடூரியம்*, வைதூரியம், வைதூர்யம் - நவமணியிலொன்று.

வைணவம் - ஓர் சமயம், [மூங்கிலரிசி, வேய்ங்குழல்.]

வைணவி - அன்னையர் எழுவரிலொருத்தி, மூங்கிற்குழல்.

வைணிகன் - வீணைவாசிப்போன்.

வைணுகம் - யானைத்தோட்டி.

வைதங்கை - இரத்தினங்களைத் தொளைக்குங்கருவி.

வைதரணி - எமபுரத்தியாறு.

வைதல்* - ஏசுதல்.

வைதவ்வியம் - கைமைத்தன்மை.

வைதாளிகன் - பள்ளியெழுச்சிப் பாடுபவன்.

வைதானிகம் - ஓமப்பலி.

வைதிகம் - வேதமார்க்கம்.

வைதிகர் - வேதமார்க்கத்தையுடையவர்.

வைதேகி - ஜானகி, [திப்பிலி.]

வைதேயன் - அறிவீனன்.

வைத்தியன் - பரிகாரி, [பண்டிதன்.]

வைநதேயன் - விநதைபுத்திரனை கருடன்.

வைநம் - பிரிவு.

வைநாசிகன் - சாஸ்திரஞானம் பெற்று மோட்சாபேட்சையுடையவன்.

வைபவம்-செல்வம், [விசேடமாகத்தோன்றியது.]

வைபோகம்*-சிற்றின்பமகிழ்ச்சி

வைப்பாட்டி* - மன்றல் சடங்கில்லாமல் ஒருவனுக்கு மனைவியாயிருப்பவள்.

வைப்பு - சேமதிரவியம், [உண்டாக்கல், இடம், ஊர்.]

வைப்புச்சரக்கு - உண்டாக்கின சரக்கு.

வையகம், வையம் - பூமி, வாகனம், சிவிகை, தேர், வண்டி, உரோகணிநட்சத்திரம்.

வையாகரணன் - வியாகரணம் படித்தவன்.

வையாபுரி - பழனிமலை.

வையாளிவீதி - குதிரைநடத்தும் வீதி.

வைரம் - நவமணியிலொன்று [நீண்ட விரோதம், வீரம்.]

வைராகம்-வைராக்கியம்.

வைராகி - துறவி.

வைராக்கியம்* - வெறுப்பு.

வைரி* - சத்துரு.

வைரூப்பியம் - விகாரவடிவம்

வைரோசனன் - விரோசனன் டனை மாவலிச்சக்கரவர்த்தி.

வைரோசனி - மாவலி மகன்.

வைலுவம் - வில்வக்காய்.

வைவச்சுவதன் - ஏழாவது மநு, நமன், சனி.

வைவாகிகம் - விவாகக்கோலம்.

வைன்தேயன் - வைநதேயன்.

## வௌ

வௌவம் - தாமரை.

வௌவல் - கொள்ளையிடல், திருடல், பிடித்தல், வாருதல்.

வௌவால் - ஓர் பறவை.

வௌவி - மான்.

PRINTED AT THE 'CAXTON PRESS' MADRAS—1935. (A)